அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சரித்திர வெளியீடு—17

# இந்திய வரலாறு

(இரண்டாம் பாகம்)

இடைக்கால இந்தியா

(1200 முதல் 1707 வரை)

ஆசிரியர்கள் :

R. சத்தியநாதய்யர், எம். ஏ., எல். டி.

(பேராசிரியர், வரலாற்றுத் துறை.)

D. பாலசுப்பிரமணியன், எம். ஏ.

(மொழிபெயர்ப்பாளர்.)

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1960.

V2
NE :
365

அண்ணாமலைப் பல்கலைக்கழக சரித்திர வெளியீடு—17

# இந்திய வரலாறு

## (இரண்டாம் பாகம்)

இடைக்கால இந்தியா

(1200 முதல் 1707 வரை)

ஆக்கியோர் :

R. சத்தியநாதய்யர், எம். ஏ., எல். டி.,

(பேராசிரியர், வரலாறு, அரசியல்துறை.)

D. பாலசுப்பிரமணியன், எம். ஏ.,

(வரலாற்று விரிவுரையாளர்.)

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

1960.

முதற்பதிப்பு - 1960

பாண்டியன் அச்சகம், சிதம்பரம்.

# ஆக்கியோருரை.

தொன்மையும், நன்மையும் படைத்த தமிழ் மொழியின் பெருமையைப்பற்றி மாறுபாடான கருத்துக்கே இடங்கிடையாது என்பது யாவரும் அறிந்த உண்மை. பல சிறப்புக்களுடன் கூடிய தமிழுக்கு இக்கால வாழ்க்கைக்குரிய பிற கலைச்செல்வங்களும் இன்றியமையாத தேவையாகும். இத்தேவையினை நிறைவேற்றும் பணிகளுள் வரலாறுகளைத் தமிழ்மொழி வாயிலாக வெளியிடுதலும் ஒன்றாகும். கல்லூரி மாணவர்கள் சிறப்பாகத் தமிழிற் பயின்று தெளியும் முறையில் இந்நூல் வெளிவருகிறது. பாரதியார் கண்ட தமிழ்நாடு தோன்றுவதில் தமிழ் நாட்டினர் யாவருக்கும் ஆர்வம் உண்டு. எனினும் குறுகிய காலத்தில் சில அருஞ் செயல்களைச் சிறப்பான முறையில் செய்து காட்ட முடியுமா என்ற ஐயம் சில பேரறிஞர்களிடம் காணப்படுகிறது. தொடக்க காலத்திற்றோன்றும் நூல்களில் குறைபாடுகள் இருக்கக்கூடும். அவற்றை ஆதாரமாகக்கொண்டு ஒரு முடிபுக்கு வருவது சிறப் புடையதன்று. காலப்போக்கில் தக்கார் ஊக்கமளித்தால் தலை சிறந்த படைப்புக்களைத் தமிழன்னையின் திருவடி மலர்களில் சமர்ப்பிக்க இயலும் என்றே நம்புகிறோம். மேனாட்டு, கீழ்நாட்டுக் கலைகளை வளர்ப்பதுடன் தமிழ்க்கலைகளையும் வளமூட்டி வளர்த்து வரும் தாயகமாகத் திகழும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிடும் இத்தமிழ் நூலை. தாய்மொழியில் நாட்டம் நிலைத்து வரும் இக்காலத்தில் தமிழுலகம் வரவேற்குமென்றே நம்புகின்றோம். இப்பல்கலைக் கழகத்தின் "சிண்டிகேட்" அமைத்த பேராசிரியர் குழுவினர், இந்நூலின் கையெழுத்துப் பிரதியைப் பரிசீலனை செய்து உதவினர். அவர்களுக்கும் இந்நூல் வெளிவர உதவிய பல்கலைக்கழக அதிகாரிகள் யாவருக்கும் நூலாசிரியர்களின் நன்றி உரியதாகும். மிகக் குறுகிய காலத்தில் இதை அச்சிட்டுத்தந்த பாண்டியன் அச்சகத்தாரது பணி பாராட்டத்தக்கதாகும்.

# சிறப்புரை

பேராசிரியர் திரு. சத்தியநாத ஐயர் எழுதிய இந்திய வரலாறு, பி. ஏ., வகுப்பு மாணவ உலகில், பெரும் புகழ்பெற்று விளங்குகிறது. ஆராய்ச்சி உலகம் கண்ட முடிவுகளைத் தமிழில் தந்து உதவுவது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தொண்டு வகைகளில் ஒன்றாதலின், பேராசிரியரின் நூலையும் தமிழில் அமைக்க முன் வந்துள்ளது. பேராசிரியரும் அவருடைய மாணவர், ஆசிரியர் பாலசுப்பிரமணியமும் ஆங்கில நூலைத்தழுவி இந்நூலை ஆக்கியுள்ளனர். முதற்பகுதி முன்னரே வெளிவந்துள்ளது. இப்போது இரண்டாம் பகுதி வெளிவருகிறது மூன்றும் பகுதி மொழிபெயர்க்கப்பெற்று ஏறக்குறைய முற்றுந்தறுவாயில் உள்ளது.

இந்த இரண்டாம் பகுதியை உலகினுக்கு அறிமுகஞ் செய்யும் பெரும்பேற்றினை, ஆக்கியோர் எனக்கு வழங்கியுள்ளார்கள். இந்த மொழி பெயர்ப்பு உருவாகி வரும்போதெல்லாம் கண்டு களித்த யான் இதனை அச்சுவடிவில் காணும்போது மட்டற்ற மகிழ்ச்சிகொள்ளாமல் இருக்க முடியாது. குறை கூறுவது எளிது; குறையில்லாத நூலொன்று மனிதப் படைப்பாக அமையவும் முடியாது. தமிழன்னையின் திருவடி மலருக்கு இந்த நூலை ஆசிரியர்கள் சூட்டுகின்றார்கள். அவர்களுடைய அறிவேயன்றி, அன்பும், இங்கே ஒளிர்கின்றது. கல்லூரிக் கல்விமொழியாக தமிழ்மொழி அமையவரும் இந்நாளில் இத்தகைய நூல் ஏய்ப்பினில் வைப்பாக அமைகிறது இதனைப் பதிப்பிக்க வந்ததோடு மிகமிக விரைந்து வெளியிடும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினைத் தமிழுலகம் மனமாற வாழ்த்தும். இந்தத் தொண்டில் துணை வேந்தர் திருவாளர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்களின் ஈடுபாடு மிகமிகப் பெரிது. சிறந்ததொரு இந்திய வரலாறு தமிழில் உள்ளதென தமிழன் பெருமை கொள்ளலாம்.

அண்ணாமலைப்பல்கலைக்கழகம்,<br>
தமிழ்க்கலைத்துறை,<br>
20—5—1960.

**தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.**

# பொருளடக்கம்

## அதிகாரம் 1

## தில்லி (DELHI) சுல்தானியர் ஆட்சி
## (1206—1526)


| பகுதி | | பக்கம் |
|---|---|---|
| 1. | இந்து-முகம்மதிய வரலாற்றின் தன்மை | 1 |
| 2. | இந்தியாவில் சுல்தானரசைத் தாபித்தவர்கள் | 4 |
| 3. | இல்டுட்மிஷின் பின்வந்தோர் | 11 |
| 4. | பால்பன் (Balban) | 14 |
| 5. | அடிமைகுல ஆட்சியின் வீழ்ச்சி | 21 |
| 6. | அலாவுதீன் கில்ஜி அரசுரிமையைக் கவர்தல் | 25 |
| 7. | உள்நாட்டு இயல்முறை | 29 |
| 8. | கில்ஜி பேரரசுமுறை | 34 |
| 9. | ஆட்சித்துறையில் அலாவுதீன் ஒரு புது முயற்சியாளர் | 39 |
| 10. | அலாவுதீன் கில்ஜியின் பின்வந்தோர் | 42 |
| 11. | முஸ்லிம் வரலாற்றறிஞர்கள் | 45 |
| 12. | முகம்மதுபின் துக்ளக்கின் தன்மையும் ஆட்சி முறையும் | 48 |
| 13. | துக்ளக் பேரரசுமுறை | 54 |
| 14. | முகம்மதுபின் துக்ளக்கைப்பற்றிய நேர்மை விளக்கம் | 57 |
| 15. | பிரோஸ் துக்ளக்கின் ஆட்சிமுறை (1351-88) | 60 |
| 16. | தைமூரின் படையெழுச்சி | 69 |
| 17. | சையது குலம் | 72 |
| 18. | லோடி குலத்தினர் | 74 |
| 19. | சுல்தானியராட்சியின் தளர்ச்சியும் வீழ்ச்சியும் | 77 |


## அதிகாரம் 2

## தில்லி சுல்தானியர் ஆட்சி (தொடர்ச்சி)


| | | |
|---|---|---|
| 1. | சுல்தானியர் காலத்திய ஆட்சிமுறையின் தன்மை | 79 |
| 2. | பக்தி மார்க்கம்: ராமானந்தர், கபீர், நானக், வல்லபர் | 82 |

| பகுதி | | பக்கம் |
|---|---|---|
| 3. | பொருளாதார நிலை | 87 |
| 4. | சமூக வாழ்க்கை | 88 |
| 5. | இலக்கியம், கட்டடக்கலை, காசுமுறை | 91 |


## அதிகாரம் 3

## தில்லி சுல்தானியர் ஆட்சி (தொடர்ச்சி)


| | | |
|---|---|---|
| 1. | காச்மீரம் | 93 |
| 2. | சிந்து, மூல்தான் | 95 |
| 3. | இராசபுதனம் | 96 |
| 4. | குஜராத் | 99 |
| 5. | மாளவம் | 102 |
| 6. | ஜான்பூர் ஷார்க்கியர் | 105 |
| 7. | வங்காள சுல்தான்கள் | 106 |
| 8. | கலை, இலக்கியம், சமயம்—சைதன்யர் | 108 |
| 9. | நேபாளமும் அஸ்ஸாமும் | 111 |


## அதிகாரம் 4

## தென்னிந்தியா

## (1200—1336)


| | | |
|---|---|---|
| 1. | தேவகிரி யாதவர் | 113 |
| 2. | இலக்கியம். வடமொழியும், மராத்தியும் | 115 |
| 3. | வாரங்கல்நாட்டு காகதீயர் | 117 |
| 4. | இலக்கியம்: தெலுங்கும், வடமொழியும் | 119 |
| 5. | துவாரசமுத்திர ஹொய்சலர் | 120 |
| 6. | இலக்கியம்: வடமொழியும், கன்னடமும் | 123 |
| 7. | சோழப்பேரரசின் அழிவு | 125 |
| 8. | தமிழ் இலக்கியம்: சைவசித்தாந்தம் | 127 |
| 9. | பாண்டியப்பேரரசின் ஆதிக்கம்: வாணிகமும், காசு முறையும் | 127 |

## அதிகாரம் 5

## மாபார் நாடும் பாமனி அரசும்

## (1335—1527)


| பகுதி | | பக்கம் |
|---|---|---|
| 1. | மாபாரில் சுல்தான்யராட்சி (1335—'78) | 132 |
| 2. | பெரிஷ்டாவும் தபதபாவும் | 135 |
| 3. | பாமனி சுல்தானியராட்சியின் தோற்றம் | 137 |
| 4. | முதலாம் அலாவுதீனும் முதலாம் முகம்மதுவும் | 138 |
| 5. | முஜாஹித் சுல்தானும் அவர் பின்வந்தோரும் | 141 |
| 6. | பிரோஸ் (1397—1422) | 142 |
| 7. | அஹமுது முதல் நிஸாம் வரை | 143 |
| 8. | மூன்றும் முகம்மதுவும் முகம்மது காவனும் | 146 |
| 9. | சுல்தானரசின் சிதைவு | 150 |
| 10. | பாமனி சுல்தானியராட்சியின் தன்மை | 152 |
| 11. | காண்டெஷ் நாட்டு பருக்கியர் (Farukis) | 154 |


## அதிகாரம் 6

## விசயநகரம்

## (1336—1509)


| | | |
|---|---|---|
| 1. | விசயநகர வரலாற்றுக்குரிய அடிப்படைச் சான்றுகள் (1336—1509) | 155 |
| 2. | விசயநகரின் தோற்றம் | 157 |
| 3. | முதலாம் அரிஹரனும் முதலாம் புக்கனும் | 164 |
| 4. | இரண்டாம் அரிஹரனும் அவர்பின் வந்தோரும் | 166 |
| 5. | இரண்டாம் தேவராயர் | 169 |
| 6. | முதல் (அல்லது சங்கம) குலத்தின் சிதைவு | 172 |
| 7. | சாளுவ நரசிம்மர் | 174 |
| 8. | துளுவ குலத்தினர் அரசைக்கைப்பற்றுதல் | 177 |
| 9. | இலக்கியம்: வடமொழி, கன்னடம், தெலுங்கு, தமிழ் | 178 |
| 10. | கலை | 182 |

## அதிகாரம் 7

## கடல்கடந்த இந்திய நாகரிகம் (GREATER INDIA)
## (1200—1500)


| பகுதி | | பக்கம் |
|---|---|---|
| 1. | இலங்கை (ஈழம்) | 183 |
| 2. | சுமத்திரா | 185 |
| 3. | ஜாவா: சிங்கசாரி அரசு (1222—92) | 186 |
| 4. | மஜபாகிதப் பேரரசு (1294—1478) | 187 |
| 5. | ஜாவாவின் கலை, இலக்கியம், சமயம், சமூகம், பொருளியல் | 189 |
| 6. | பாலி: அரசியல் வரலாறு, பண்பாடு, சமயம், சமூகம் | 194 |
| 7. | போர்னியோவும் மற்றதீவுகளும் | 197 |
| 8. | மலாக்கா சுல்தானியராட்சியும், மலாயாப் பண்பாடும் | 198 |
| 9. | சையாம் | 200 |
| 10. | பர்மா: ஆவா, பெகு, தெளங்கூ | 203 |
| 11. | ஆராக்கானில் பௌத்த சுல்தானியராட்சி | 205 |


## அதிகாரம் 8

## முகலாயப் பேரரசு
## (1526—1605)


| | | |
|---|---|---|
| 1. | பாபர் (1526—'30): வாழ்க்கை வரலாறு— பானிப்பட்டு, கானுவா, கோக்ரா போர்கள் | 206 |
| 2. | பாதுஷாவின் தன்மை, பண்பாடு; இந்திய வரலாற்றில் பாபரின் சிறப்பு | 212 |
| 3. | உமாயூன் (1530—'40 & 1555—'56) | 217 |
| 4. | சூர்மரபினராட்சி: வரலாற்றுக்குரிய முதற் சான்றுகள் | 224 |
| 5. | ஷெர்ஷாவின் வீரச்செயல்கள் | 226 |
| 6. | சூர்மரபினரின் ஆட்சி முறை | 229 |
| 7. | ஆப்கானியப் பேரரசர் ஷெர்ஷா | 236 |
| 8. | ஷெர்ஷாவின் பின்வந்தோர் | 238 |

## அதிகாரம் 9

## முகலாயப் பேரரசு
(1526—1605)
(தொடர்ச்சி)


| பகுதி | | பக்கம் |
|---|---|---|
| 1. | முகலாய வரலாற்றறிஞர்கள்: அபுல்பஸல், நிஸாம் உத்தீன், பதௌனி முதலியோர் | 239 |
| 2. | அக்பர் (1556—1605): முடிசூடுதலும், ஆட்சிக்காலத்தின் முற்பகுதியும் | 244 |
| 3. | முகலாயப் பேரரசின் வளர்ச்சி | 248 |
| 4. | அக்பர் ஆற்றிய சில செயல்கள் | 252 |
| 5. | இராசா பீர்பாலும், இராசா தோடர்மாலும் | 254 |
| 6. | பேரரசு மேலும் விரிவடைதல் | 256 |
| 7. | அக்பரும் தக்கணமும் | 257 |
| 8. | இளவரசர் சலீமும் அபுல் பஸலும் | 258 |
| 9. | அக்பரின் இறுதிக்காலம் | 259 |


## அதிகாரம் 10

## முகலாயப் பேரரசு
(1526—1605)
(தொடர்ச்சி)


| | | |
|---|---|---|
| 1. | முகலாயர் ஆட்சி முறை | 260 |
| 2. | நிலவரித்திட்டம் | 266 |
| 3. | மான்சப்தாரி படை | 269 |
| 4. | அக்பரின் சமயக்கொள்கைகள்: தீன் இலாஹி | 271 |
| 5. | அக்பரின் அருளாட்சி | 278 |
| 6. | பக்திமார்க்கமும் (அன்புவழிபாட்டு முறையும்) நானக்கின் பின்வந்தோரும் | 281 |
| 7. | சமூகமும் பொருளாதாரமும் | 284 |
| 8. | வேளாண்மை, கைத்தொழில், வாணிகம் | 286 |
| 9. | பாரசீக இலக்கியமும், இந்தி இலக்கியமும் | 289 |
| 10. | கட்டடக்கலையும் ஓவியமும் | 292 |
| 11. | இசையும் காசு முறையும் | 293 |
| 12. | அக்பரைப்பற்றிய மதிப்பீடு | 294 |

## அதிகாரம் 11

## பதினாரும் நூற்றாண்டில் தென் இந்தியா


| பகுதி | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஓரிஸ்ஸாவும் காண்டேஷ் நாடும் | 300 |
| 2. | பேரார் இமாட்ஷாஹியர் | 303 |
| 3. | ஆமதுநகரத்தின் நிஸாம்ஷாஹியர் | 304 |
| 4. | பீஜப்பூர் அடில்ஷாஹியர் | 308 |
| 5. | பீடார் பரீத்ஷாஹியர் | 312 |
| 6. | கோல்கொண்டாவின் குதுப்ஷாஹியர் | 314 |


## அதிகாரம் 12

## பதினாரும் நூற்றாண்டில் தென் இந்தியா
(தொடர்ச்சி)


| | | |
|---|---|---|
| 1. | விசய நகர வாலாற்றுக்குரிய அடிப்படைச் சான்றுகள் | 315 |
| 2. | கிருட்டினதேவராயர் (1509—'30): போர் வாழ்க்கை | 319 |
| 3. | அப்பாஜி சாளுவதிம்மர் | 323 |
| 4. | மதுரை நாயக்கராட்சி | 326 |
| 5. | இலக்கியம்: சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், தமிழ் | 327 |
| 6. | கலை | 330 |
| 7. | கிருட்டினதேவராயரைப்பற்றிய மதிப்புரை | 330 |
| 8. | அச்சுதராயர் (1530—'42) | 334 |
| 9. | இராமராயரின் ஆட்சி (1542—'65) | 336 |
| 10. | தலைக்கோட்டைப்போர் (1565) | 340 |
| 11. | ஆரவீடுகுலம் அல்லது நான்காவது குலம்; (திருமலையும் முதலாம் ஸ்ரீரங்கரும்) | 347 |
| 12. | முதலாம் வேங்கடர் | 349 |

## அதிகாரம் 13

## பதினாரும் நூற்றாண்டில் தென் இந்தியா
(தொடர்ச்சி)


| பகுதி | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆட்சிமுறையும் சமயமும் | 351 |
| 2. | சமூகநிலையும் பொருளாதார வாழ்க்கையும் | 354 |
| 3. | இலக்கியம்: வடமொழி, தெலுங்கு, கன்னடம் | 357 |
| 4. | கலையும் காசுமுறையும் | 359 |
| 5. | இக்கேரி; மைசூர் | 360 |
| 6. | வேலூரும் செஞ்சியும் | 362 |
| 7. | தஞ்சாவூர் | 364 |
| 8. | மதுரை | 365 |


## அதிகாரம் 14

## பதினாரும் நூற்றாண்டில் தென் இந்தியா
(தொடர்ச்சி)


| | | |
|---|---|---|
| 1. | போர்ச்சுகீசியர் வருகை | 366 |
| 2. | அல்புகர்க் (1509—'15) | 369 |
| 3. | அல்புகர்க்கின் பின்வந்தோர் | 372 |
| 4. | போர்ச்சுகல் நாட்டின் வெற்றிச்சிறப்பு | 373 |
| 5. | இலங்கை | 376 |
| 6. | பர்மா | 376 |


## அதிகாரம் 15

## முகலாயப் பேரரசு
## (1605—1707)


| | | |
|---|---|---|
| 1. | பாரசீக வரலாற்று இலக்கியமும் ஐரோப்பியர் ஊர்ச்செலவு நூல்களும் | 377 |
| 2. | ஜஹாங்கீரும் (1605—'27) நூர்ஜஹானும் | 384 |
| 3. | ஆட்சிமுறை, கலை, காசுமுறை | 396 |

## அதிகாரம் 16

## முகலாயப் பேரரசு (தொடர்ச்சி)
## (1605—1707)


| பகுதி | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஷாஜஹான் (1628—'58) | 398 |
| 2. | அவுரங்கசீப்பின்கீழ்த் தக்கணம் | 402 |
| 3. | அரசுரிமைப் போர்கள் | 405 |
| 4. | ஷாஜஹானின் தன்மை, சமயம், ஆட்சிமுறை | 407 |
| 5. | இந்தியாவில் முகலாயர் ஆட்சியின் பொற்காலம் | 411 |
| 6. | அரசுரிமைப் போர் (தொடர்ச்சி) | 413 |


## அதிகாரம் 17

## முகலாயப் பேரரசு (தொடர்ச்சி)


| | | |
|---|---|---|
| 1. | அவுரங்கசீபின் ஆட்சித்தொடக்கமும் அவர் நிகழ்த்திய போர்களும் | 415 |
| 2. | அவுரங்கசீபின் மதக்கொள்கை | 435 |
| 3. | அவுரங்கசீபின் தன்மையும் தோல்வியும் | 438 |
| 4. | சமயம், சமூகம், பொருளாதார நிலை, கலை இலக்கியம் முதலியன | 443 |
| 5. | முகலாயப் பேரரசின் வீழ்ச்சி | 449 |


## அதிகாரம் 18

## பதினேழாம் நூற்றாண்டில் தென் இந்தியாவின் வரலாறு


| | | |
|---|---|---|
| 1. | ஆமதுநகரம், பீஜப்பூர், கோல்கொண்டா (தொடர்ச்சி) | 454 |
| 2. | மராட்டியரின் வளர்ச்சியைத் தூண்டிய காரணக் கூறுகள் | 458 |
| 3. | ஷாஜி பான்ஸ்லே | 461 |
| 4. | சிவாஜியைப்பற்றிய வரலாற்றுச்சான்றுகள் | 464 |
| 5. | சிவாஜியின் வாழ்க்கை வரலாறு | 469 |

| பகுதி | | பக்கம் |
|---|---|---|
| 6. | மராட்டியரின் படை அமைப்பு | 480 |
| 7. | பொது ஆட்சிமுறை | 486 |
| 8. | சிவாஜியின் அரசியல் திறமை, பண்பு, சிறப்பு முதலியன | 493 |
| 9. | சாம்பாஜி | 497 |
| 10. | அரசப்பிரதிநிதி ஆட்சிக்காலம் | 500 |


## அதிகாரம் 19

## 17'ம் நூற்றுண்டில் தென்னிந்தியாவின் வரலாறு

(தொடர்ச்சி)


| | | |
|---|---|---|
| 1. | விசயநகரப் பேரரசின் பிற்காலம் | 503 |
| 2. | மைசூர் (தொடர்ச்சி) | 506 |
| 3. | நாயக்கராட்சி (பெட்னூர், செஞ்சி, தஞ்சாவூர்) | 508 |
| 4. | தஞ்சாவூரில் பான்ஸ்லேக்களின் ஆட்சி; வெங்காஜியும் II-ம் ஷாஜியும் | 510 |
| 5. | நாயக்கர் ஆட்சி — (மதுரை, திருச்சிராப்பள்ளி) | 512 |


## அதிகாரம் 20

## 17'ம் நூற்றுண்டில் தென்னிந்தியா

(தொடர்ச்சி)


| | | |
|---|---|---|
| 1. | போர்ச்சுகீசியரின் தளர்ச்சி | 516 |
| 2. | கீழ்நாடுகளில் டச்சுக்காரர் | 520 |
| 3. | இந்தியாவில் டேனரும் பிரெஞ்சியரும் | 525 |
| 4. | ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கூட்டுக் குழுவின் (கம்பெனி) ஏற்றத்தாழ்வுகள் | 526 |
| 5. | சூரத்; பம்பாய் | 531 |
| 6. | செயிண்ட் ஜார்ஜ் கோட்டை; வில்லியம் கோட்டை | 534 |
| 7. | இலங்கை | 536 |
| 8. | பர்மா | 537 |

# நாட்டுப் படங்கள்.


| | | |
|---|---|---|
| 1. | வட இந்தியா (1200—1526) | 112—113 |
| 2. | தென்னிந்தியா (1200—1336) | 128—129 |
| 3. | மாபார்நாடும், பாமனி அரசும் 1335—1527) | 144—145 |
| 4. | விசயநகரப் பேரரசு (1336–1509) | 160—161 |
| 5. | தெற்கு ஆசியா (1200—1700) | 192—193 |
| 6. | வட இந்தியா (1526—1605) | 208–209 |
| 7. | 16'ம் நூற்ருண்டில் தென் இந்தியா | 376—377 |
| 8. | வட இந்தியா (1605—1707) | ,, |
| 9. | 17'ம் நூற்ருண்டில் தென் இந்தியா | இறுதியில் |

# இந்திய வரலாறு

(இரண்டாம் பாகம்)

## அதிகாரம் I

## தில்லி (DELHI) சுல்தானியர்ராட்சி

(1206—1526)

### பகுதி I

### இந்து - முகம்மதிய வரலாற்றின் தன்மை

முகம்மதிய குலங்களின் தேசீயத் தன்மை: முகம்மதியரின் இந்தியத் தொடர்புக்குக் காரணம், வடமேற்கு வழிகளின் மூலம் அவர்களுடைய பல படையெழுச்சிகளாகும். கி. பி. எட்டாம் நூற்றுண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றுண்டு வரை, இந்தியாவில், வடமேற்குக் கணவாய்கள் வழியாகப் பல படையெழுச்சிகளேற்பட்டன. தென்னிந்தியாவிலும் (பாண்டியநாடு, கேரளம், கொங்காணம்) கடல்கடந்த வாணிகம் காரணமாக அரேபியரும் அபிசீனியரும் வரலாயினர். இவற்றின் விளைவாக இந்து-முகம்மதியத் தொடர்பு ஏற்பட்டது. படையெடுத்து வந்தவர்கள் அரேபியர், துருக்கியர், ஆப்கானியர் அல்லது பட்டாணியர், மங்கோலியர் அல்லது முகலாயர், முதலிய பல இனங்களைச் சேர்ந்தோராவர். பெரும்பான்மையினர் துருக்கிய இனத்தைச் சார்ந்தவ ரென்றும் கூறலாம். சிந்துப் பகுதியின் அரேபியர், அரேபியாவிலிருந்து வந்தோராவர்; சையது குலத்தவர், தம்மை அரேபிய மரபினரென்று கூறிக்கொண்டனர். கசினிமுகம்மது, கோரிமுகம்மது, அடிமை

அரசர், துக்ளக் குலத்தினர், ஆகியோர் துருக்கிய இனத்தவராவர். கில்ஜி குலத்தினரை ஆப்கானியத் துருக்கியர் என்று சொல்லலாம். லோடி, சூர் என்ற குலங்கள், ஆப்கானியப் பிரிவைச் சேர்ந்தவை. 'முகலாயர், ஓரளவு மங்கோலிய இனத்தையும், பெரும்பான்மை துருக்கிய இனத்தையும் சார்ந்தோராவர். ஆகவே, பாபரின் கால் வழியினர், முகலாயர் என்பது பெரும்பாலும் தவறான வழக்காகும். (முகல் என்ற சொல் மங்கோலிய என்பதின் திரிபு). அடிமை அரசர்கள் அவ்வாறு அழைக்கப் படுவதற்கு அவர்கள் தொடக்கத்தில் இருந்தநிலை காரணமே அன்றி ஆட்சிக் காலத்தில் அவர்கள் அடிமைகள் அல்லர்.

முகம்மதியரின் இந்தியப் படையெழுச்சி: இஃது சிறிது சிறிதாகவும், பல இடையூறுகளிடையேயும் ஏற்பட்டது. ஆனல் இந்தியா முழுவதிலும் இதுபரவவில்லை.

இந்தியாவை, முகம்மதியப் படையெடுப்பாளர் மிகவும் எளிதில் வென்றனர் என்ற கருத்து முன்னரே நீண்டகாலமாக எதிர்க்கப்பெற்றது†. அரேபியரின் சிந்துநாட்டுப் படையெழுச்சியின் பயன்படாத்தன்மையைப் பற்றியும், ஓஹிந்த், காபூல், பகுதிகளின் ஷாஹியர் வீரத்துடன் இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்தைக் காவல் செய்ததைப் பற்றியும் முதற்புத்தகத்தில் குறிப்பிட்டோம். முகம்மதுகசினியின்வெற்றி நிலையில்லாததாயிருந்தது. அவர் மரபினர் உறுதியும் சிறப்புமற்ற நிலையில், பஞ்சாபில், படையெடுப்பாளரிடையே துயருடன் வாழ்ந்து வந்தனர். முகம்மதியர், தமது இந்தியப் படையெழுச்சியைத் தொடங்கியதிலிருந்து ஐந்து நூற்றாண்டுகள் கடந்தபின்னரே, நிலையான வெற்றியை வட இந்தியாவில் பெறமுடிந்தது. தென்னிந்தியாவிலோ, அதற்குமேல் ஒரு நூற்றாண்டு வரை முகம்மதிய இடுக்கண் தோன்றவில்லை.

தில்லி சுல்தானியராட்சி குறுகியகால அளவுக்குத் தான் (அலாவுதீன் கில்ஜி, முகம்மது பின்துக்ளக், ஆட்சிக் காலங்

---

† Sir W. W. HUNTER, A brief History of the Indian peoples (1892) p. 112

களில்) பேரரசு முறையில் அமைந்திருந்தது. அக்காலத்திற் கூட அது நிலையற்றதாகவும், பெயரளவுக்கே பெரியஅளவுடைய தாகவும் இருந்தது. முகம்மதிய அரசு சிறிது சிறிதாக இந் நாட்டில் பரவிவந்த காலம் ஒரு நூற்றுண்டு எனலாம். அதன் பின் திடீரென்று தோன்றிய பேரரசு முறை அரை நூற்றுண்டு நீடித்தது. அதற்குப் பிறகு உள்ள ஒன்றரை நூற்றுண்டு களில், வருந்தத்தக்க ஆற்றலற்ற நிலையையும் வீழ்ச்சியையும் காண்கிறோம். லோடி குலத்தினர், ஓரளவு அரசு சிறப்புறுவ தற்குக் காரணமாயிருந்தனர். முஸ்லிம் முன்னேற்றம், ஆட்சி முறையைப் பொறுத்த வரை, மிகுதியாக வரையறைக்குட்பட் டிருந்தது. முகம்மதிய அரசர்களுள், பேரரசு ஆட்சி முறைக் குப் போதுமான கருத்தைச் செலுத்திய முதல் அரசர் அலாவு தீன் கில்ஜி என்பாரே ஆகும். ஆதலால், இந்து-முஸ்லிம் வரலாறு சிறப்பாக அவர் காலத்திலிருந்தே தொடங்குகிற தென்பது சில அறிஞர் கருத்து. எனினும் தில்லி சுல்தானிய ராட்சி அயல் நாட்டுப் பண்புகள் நிறைந்த ஒரு அமைப்பே ஆகும். இந்தியப் பேரரசு என்ற சிறப்பு, முகலாயப் பேரர சுக்கே உரியதாகும். முகம்மது பின் துக்ளக்கின் தென்னிந் தியப் படையெழுச்சி மலையாளக் கரையை எட்டவில்லை. விசய நகரப் பேரரசின் தோற்றம், தென்னிந்தியாவின் பெரும் பகுதியை இந்துக்களாட்சியின் கீழ் கொண்டுவரக் காரண மாயிற்று. முகலாயப் பேரரசு, வட இந்தியாவில் ஒன்றரை நூற்றுண்டுகள் சிறப்புற்றிருந்தது. ஆனால் தென்னிந்தியாவில் முகலாயர் பல இன்னல்களைப் பெற்றனர். விசயநகரப் பேரரசு சிதைவுற்று வந்த காலத்தில் சிவாஜியின் எழுச்சி சமநிலையைச் சீர்படுத்தி அமைத்தது. 18-ம் நூற்றுண்டில் தென்னுட்டின் வலுவந்த முறைக்கு, முகலாயப் பேரரசு உட்பட்டுத் துயருற் றது. இந்துக்கள், இந்தியாவைத் திரும்பவும் பெற்றபோதிலும், அவ்வெற்றியை ஆங்கிலேயரின் ஆதிக்க முன்னேற்றம் பயனற்றதாக்கி விட்டது. ஆகவே, முஸ்லிம் ஆட்சி நிலவிய 11 நூற்றுண்டுகளில் ஏறத்தாழ இரண்டு நூற்றுண்டுகள் தான், அவர்தம் ஆதிக்கநிலை இந்நாட்டிலேற்பட்டிருந்தது. அது வருமாறு:— 13-ம் நூற்றுண்டின் முற்பாதி; 16-ம் நூற்றுண் டின் பிற்பாதி; 17-ம் நூற்றுண்டு. ஆங்கிலேயர் இந்தியாவைக்

கைப்பற்றுவதைத் தடுக்க, நீடித்ததும் வலிமை வாய்ந்தது மான எதிர்ப்பை அமைத்தவர்கள் யார்? முகலாயப் பேரரசரோ அல்லது அவரது உரிமைவாய்ந்த அரசப் பிரதிநிதிகளோ அல்லர். மராட்டியரும் • சீக்கியருமே ஆ வ ர். ஆதலால், இந்தியாவை ஆங்கிலேயர், இந்துக்களிடமிருந்து வென்றனரே யன்றி முகம்மதியரிட மிருந்து அன்று எனப் பொதுவாகக் கூறப்படுகிறது.

## பகுதி 2

### இந்தியாவில் சுல்தானரசைத் தாபித்தவர்கள்

ஐபெக் : குத்புதீன் ஐபெக் ஓர் துருக்கிய அடிமை. அவர் கேடுற்ற விரலைப் பெற்றிருந்தபோதிலும் அவருடைய கல்வி, குதிரைவீரத்திறமை, வலிமை முதலிய பண்புகளைக் கண்ட கோரி முகம்மது அவரை விலைக்கு வாங்கினர். காலப் போக்கில் கோரியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகிய ஐபெக், இரண்டாவது தரெய்ன் போருக்குப் பிறகு (1192) கோரி வென்ற நாடுகளைச் செயல்முறையில் ஆட்சிபுரியும் வாய்ப்பைப் பெற்றார். அவற்றை விரிவுறச் செய்யும் அதிகாரமும் ஐபெக்குக்குக் கிடைத்தது. அவர், 1192-3-ல் மீரட்டையும் தில்லியையும் கைப்பற்றியதுடன். சாந்த்வர் என்னுமிடத்தின் அண்மையில் செயசந்திர காகடவாலனை முறியடிப்பதில், தம் தலைவனுக்கு உதவியும் புரிந்தார். 1194-ல் ஆச்மீரம் கைப் பற்றப்பட்டது. அடுத்த ஆண்டு, அனகில்வாட் சூறையாடப் பெற்றது. பயன் யாது? முஸ்லிம் இந்தியாவுக்கு அரசப் பிரதிநிதியாக அமர்த்தப்பெற்றார் குத்புதீன் ஐபெக். 1195-ல் தம் தலைவன் நிகழ்த்திய பயனற்ற குவாலியர் படையெழுச்சியிலும் ஐபெக் பங்குகொண்டார். அடுத்த ஆண்டில் ஐபெக்கின் அனகில்வாட் படையெடுப்பு நி க ழ் ந் த து. தொடக்கத்தில் இரண்டாம் பீமதேவன் எதிரே தோற்றார் எனினும், பின்னர் அப்பீமதேவனை முறியடித்து அந்நகரைக் கொள்ளையடித்து மிகுந்த செல்வத்துடன் குத்புதீன் தம் இருப்பிடம் திரும்பினர். சிறிது காலம் அமைதி நிலவியது. பின், 1203-ல் பண்டல்கண்டில் காலிஞ்சர் ம கோ பா என்னுமிடங்களை

அவர் கைப்பற்றினர். ஆனல் இரு ஆண்டுகளுக்குப்பின்னர் காலிஞ்சரை சந்தேலர் மீட்டுக்கொண்டனர். பஞ்சாபில் ஏற்பட்ட ஒரு புரட்சிக் கலகத்தை அடக்குவதற்காக முகம்மது கோரி தொடங்கிய தமது இறுதிப் படையெழுச்சியின் வெற்றிக்கு ஐபெக்தான் சிறப்பான காரணமென்று கூறலாம். 1206-ல் கோரி கொலையுண்டார்; ஐபெக் தில்லி சுல்தானுனர். அதற்கிடையில், மிகுந்த அழிவுபாட்டினை விளைத்த தம் திபெத்தியப் படையெழுச்சிக்குப்பின், முகம்மது-பின்-பக்தியார் [பீகாரையும் வங்காளத்தையும் வென்றவர்] என்பவர் அங்கிருந்து திரும்பியவுடன் இறந்துவிட்டார். பாரசீகத்தில் ஓர் மாகாணத் தலைவராயிருந்த தாஜுதீன் யில்டீஸ் என்பார் முகம்மது கோரியின் பின் வழியினராகத் தம்மை கசினியில் முடிசூட்டிக்கொள்ள முயன்று, பஞ்சாபிலும் படையெடுத்தார். ஆனல் ஐபெக்கின் படையைக் கண்டு அவர் புறமுதுகுகாட்ட வேண்டியதாயிற்று. 1208-9-ல் கசினி நகரைக் குத்புதீன் கைப்பற்றிக் கொண்டார். இத்தகைய வீரம் வாய்ந்து முதல் தில்லி சுல்தானுகிய இவர், 1210-ல் குதிரைமீது அமர்ந்து பந்து விளையாடுகையில் தவறிக் கீழே விழுந்து உயிர்நீத்தார் முகம்மது கோரி, ஐபெக், முகம்மதுபின் பக்தியார், ஆகிய மூவருடைய முயற்சியும் சுல்தானரசை தில்லியில் நிலைநாட்டக் காரணமாயிற்று. அவ்வரசு பஞ்சாபிலிருந்து வங்காளம் (லக்னௌடி அல்லது கௌர்) வரை பரவியிருந்தது. அக்கால நிலையைக் கருத்திற்கொண்டு சிந்திப்போமானல் ஐபெக் ஓர் வெற்றிவீரர்மட்டும் அன்றி நேர்மையும் அறிவுக்கூர்மையும் வாய்ந்த ஓர் சிறந்த ஆட்சியாளருமாக இருந்தார் என்பது புலப்படும். அவராட்சி மக்களுக்கு மகிழ்ச்சி அளித்தது; சாலைகளில் கள்வர்களால் அச்சமில்லை. "நூருயிரக்கணக்கில் வழங்குபவர்" என்ற பட்டத்தை சுல்தான் பெற்றிருந்தமை நோக்கத்தக்கது. ஆனல் அவர் ஆட்சிபுரிந்த குறுகியகாலப்பகுதியான நான்குஆண்டுகளில் அவர்தம் ஆட்சிப்பகுதிகளை ஒன்று சேர்த்து வலுப்படுத்த இயலாமல் போயிற்று. மதப்பற்றுமிக்க அவர் தில்லியிலும், ஆச்மீரத்திலும் மசூதிகளை எடுத்தார்.

அவற்றை நிறுவ அழிந்த இந்துக் கோயில்களின் கட்டடப் பொருள்களைப் பயன்படுத்தினர். தில்லி மசூதி நிறுவுவதற்கு 27 இந்துக் கோயில்கள் உதவியாயிருந்தன! இம் மசூதிக ளில் பெரும்பாலும் இந்தியக் கட்டட முறையையே காண்கி றோம்.

**இல்டுட்மிஷ் (1211—'36) :** 1210-ல் ஐபெக் இறந்த பின் நாட்டிலேற்பட்ட குழப்பங்களில் மிகவும் சிறப்பாக ஒற்றுமைக் குறைவும் மாகாணத் தலைவர்களின் வரம்பற்ற அதிகாரத் தொல்லைகளும் குறிப்பிடத் தக்கன. படையெழுச் சிக்காலங்களில் பல வகையில் படையிற் பணிபுரிந்த வீரர் பலர், மண்டல அதிகாரிகளாக மட்டும் மன அமைதி பெற்றி ருக்க ஒப்பினரில்லை. இத் தொல்லை, சுல்தான்களாட்சி தில்லி யில் நீடித்திருந்த காலம் முழுவதும் அவ்வரசுக்கு இருந்து வந்தது. 1210-ல் வங்காளம், மூல்தான், கசினி ஆகிய பகுதிகள் உரிமை கோரவே, கோரி, ஐபெக் முதலியோர் செய்து முடித்த மாபெருஞ் செயல் மண்ணோடு மண்ணாகிவிடு மெனத் தோன்றியது. லாகூரில் இருந்த பெருஞ் செல்வர்களின் உதவியுடன், ஆரம்ஷா என்னும் ஐபெக்கின் மகன் (அல்லது எடுப்பு மகன்) பட்டமேற்ற செய்தியைத் தில்லிப்பெருஞ் செல்வர் வெறுத்தனர். அவர்தம் விருப்பம் ஐபெக்கின் அடி மையும் மருமகனுமான இல்டுட்மிஷை அரியணையிலமர்த்த வேண்டுமென்பதே. முடிவாக 1211-ல் ஆரம்ஷாவை தில்லிக் கருகில் தோற்கடித்துவிட்டு அடிமைக்கடிமையாயிருந்த ஷாம் சுதீன் இல்டுட்மிஷ், சுல்தானானர். தில்லி சுல்தானரசை உண்மையாக நிறுவியவர் இவரே எனலாம். பகைவரைப் பொருட்படுத்தாது இல்டுட்மிஷ் தம்மை வலிமையுறச் செய்து கொண்டதுடன் தில்லியிலிருந்து காசிவரையிலும் தம்மாட்சி யைப் பரப்பினர். அவருக்குப் போட்டியாகத் தோன்றியிருந்த யீல்டிஸை, 1216-ல் தரெய்ன் போர்க்களத்தில் இல்டுட்மிஷ் தோற்கடித்தார்.

மங்கோலிய இடர்: தில்லி சுல்தானியராட்சிக்கு 1221 ல் நீடித்ததோர் இடர் தோன்றியது. அதுவே மங்கோலிய இடர்ப்

பாடு. முகல் முதலிய சில சொற்கள், மங்கோலியச் சொல்லின் பலதிரிபுகளாம். மதநம்பிக்கை யில்லாதிருந்த மத்திய ஆசிய மங்கோலியர் 14-ம் நூற்றூண்டில் முகம்மதிய மதத்தைச் சார்ந்தனர். அடாது செய்யும் கொடியருள் கொடியராகிய அவர்கள் தம் அட்டூழியங்கள் அளவிடற்கரியன. மனச்சான்று என்ற ஒன்று அவர்களிடம் கிடையவே கிடையாது. அவர்களால் சிறிது காலம் சிறைப்படுத்தப் பெற்றிருந்த (1285'ல்) அமீர் குஸ்ரு என்னும் பாவாணர் அவர்களைப் பற்றிக் கூறி யிருப்பது, மிகைபட இருப்பினும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. "குறுகி ஊடுருவிச்செல்லும் அவர்தம் கண்கள் பித்தளைக் கலத்திற்கூட துளையிடத் தக்கன; அவர்களுடைய உடலி லிருந்து வீசும் தீய நாற்றம் அவர்தம் நிறத்தைவிட மிகக் கொடியது; அவர்களது தோற்றமோ, கழுத்தற்ற தலைகள் உடல்களில் ஒட்டவைத்தாற் போன்றது. அவர்தம் கன்னங்கள், சுருக்கமும் மடிப்பும் முடிச்சுக்களும் நிறைந்த தோற்பைகள் போன்றவை. ஒரு கன்னத்திலிருந்து மற்றொரு கன்னத்திற்கு அகன்றிருந்த மூக்கும், ஒரு கன்ன எலும்பிலிருந்து மற்றொரு கன்ன எலும்பு வரை விரிவுற்றிருந்த வாயும், மங்கோலியர் வடிவழகின் அடையாளங்களாம். சிதைந்த பிணக்குழியை ஒத்த அவர்களுடைய மூக்குத் தொளைகளிலிருந்துவரும் மயிர் அவர்தம் உதடுகள் வரை நீண்டிருக்கும்; குறைந்த தாடியும் அளவுக்கு மீறி நிறைந்த மீசையும் அவர்கள் அழகுக்கு அணி செய்தன! பாதி வெண்மையாகவும் பாதி கருமையாகவும் உள்ள மங்கோலியர்தம் மார்புப்புறத்தில் வாழ்க்கை நடாத்தும் பேன்கள், கேடுற்ற நிலத்தில் விளைந்துள்ள எள்ளைப் போல் காட்சியளித்தன. மார்புமட்டுமென்ன! அவர்கள் உடல் முழுவதுமே புழுப் பூச்சிகள் பொலியும் பூமிதான்; முரட்டுத் தன்மை வாய்ந்த அவர்கள் தோல், செருப்புச் செய்வதற்குத் தான் ஏற்றது. அருவருப்பான அவர்கள் பற்களைக்கொண்டு நாய்களையும் பன்றிகளையும் விழுங்கினர். அவர்கள் நாயிட மிருந்தே தோன்றியவர் எனலாம். ஆனல் எலும்புமட்டும் நிமிர்ந்துவிட்டது.§ மங்கோலியத் தலைவனை சிங்கிஸ்கான் (1162—1227) என்பானைப் பற்றிய ஒரு விளக்கத்தை அக்

§ The Cambridge History of India (C. H. I.), III (1928), p.81.

காலத்திய வரலாற்றறிஞர் ஒருவர் வரைகின்ருர்:— "குராசானுக்கு அவன் வரும்பொழுது (அவனுடைய) வயது, மதிய முறை கணக்குப்படி 65 ஆண்டுகளாம். வலிய உடற்கட்டும் மிக உயரமான உடலமைப்பும், உறுதியான உறுப்புக்களும், அரிதான முகமயிரும், பூனைக் கண்களும், மிகுந்த வீரியமும் கூரிய அறிவும், தனித்திறமையும், அச்சமெழுப்பும் தோற்றமும் கொண்ட அவன் கொலைக்கஞ்சாத ஒருவன்; நீதியும் மன உறுதியும் கொண்டவன்; பகைவரைப் புறமுதுகு காட்டச் செய்பவன்; யாருக்கு மஞ்சாதவன்; குருதி வெறியுள்ளவன்; கொடுமையாளன்."‡ அவன் ஒரு மாயவித்தைக்காரனென்றும் கருதப்பட்டான்.$ தனது பதின் மூன்ருவது வயதில் தந்தையை இழந்த சிங்கிஸ்கான், தன்னுழைப்பால் உயர் உயர்வடைந்து 1203-ம் ஆண்டில் மங்கோலியக்கூட்டத்தினரின் தலைவனுனன். அவன் பிறந்த இடம் ஓனேன் ஆற்றங்கரைப் பகுதியாகும். குறுகிய காலத்தில் சீனுவின் பெரும் பகுதியையும் அவன் வென்ருன். சாமர்கந்த், பொகாரா, ஹீரட், கஜினி முதலிய நகரங்களை அவன் அழித்தான். சிந்து ஆறு வரை வந்த அவன், இந்தியா, திபெத் நாடுகள் வழியாகத் தன் நாடு திரும்பக் கருதினுன். ஆனல், பின்னர் அக்கருத்தை மாற்றிக்கொண்டான். அவனது பேரரசு, சீனுவிலிருந்து காஸ்பியன் கடலின் மேற்குப் பகுதி வரை பரவியிருந்தது. "பகைவரை வென்று அவர்களைப் பின்தொடர்ந்து, அவர்தம் உடைமைகளைக் கைப்பற்றி அவர்களுடைய குடும்பத்தினர் கண்ணீர் விட்டுக் கதறக்கண்டு, அவர்களுடைய குதிரைகளில் ஏறி அமர்ந்து செல்வதும் அவர்தம் பெண்களையும் மனைவியரையும் அடைவதும் மிகமிகமகிழ்ச்சி அளிக்கும் செயல்கள்" | என்பது சிங்கிஸ்கானின் கூற்று. ஹூணர் தலைவன் அட்டிலாவை ஒத்தவனுய் இருப்பினும் சிங்கிஸ்கானின் பெருமை மறுக்கக் கூடிய ஒன்று அன்று. "அவன் ஓர் வெற்றி வீரன்; சிறந்த போர்த் தலைவன்; நடு ஆசியா மிலேச்சக் கூட்டத்தினர் பலரை ஒன்ருக இணைத்து, அவனுக்குப் பிறகு பல தலைமுறைகள்

‡ V. A. Smith, The Oxford History of India (1923), p. 226.
$ C. C. Walker, Jenghiz Khan (1939), pp. 33 & 170.
§ Sir P. Sykes, A History of Persia, II (1930) p 85.

நீடித்த சட்டங்களையும் நிலையங்களையும் நிறுவியத் தனிப் பெருந் திறமை அவனிடமிருந்தது."* சிங்கிஸ்கான், சிந்து ஆற்றைக் கடந்து வராதது, இந்தியாவின் நற்பேறு எனலாம். கீவா சுல்தானியத்தை முறியடித்தபின், அவன், அச்சுல்தான் ஜலாலுதீனைத் தொடர்ந்து விரட்டி சிந்து ஆற்றங்கரைப் போரில் தோற்கடித்து ஓடச் செய்துவிட்டு, இந்தியத் தட்ப வெப்ப நிலையின் கடுமை காரணமாக இந்நாட்டை விட்டு அகன்றான். இல்டூட்மிஷுக்கு ஏற்பட்ட பேரிடையூறும் அகன்றது. இல்டூட்மிஷ், கீவா சுல்தானுடன் உடன்பாடு செய்து கொள்ளாமலிருந்தது அவன் அறிவின் கூர்மையைக் காட்டாநிற்கும்.

வெற்றிவீரர், இல்டூட்மிஷ் : யீல்டிஸ் வீழ்ச்சி, நல்ல காலமாக மங்கோலியப் பேரிடரின் நீக்கம், முதலியன தில்லி சுல்தானியராட்சியை வலிமையுறச் செய்யும் முயற்சியில் இல்டூட்மிஷ் மீண்டும் ஈடுபட உதவின. 1225-ல் வங்காளமும் அடுத்த ஆண்டில் இரான்தம்பூரும் இல்டூட்மிஷின் கீழ் ஆட்சிக்குள் வந்தன. ஐபெக் இறந்தவுடன் இரான்தம்பூர் இழக்கப்பட்டதை ஈண்டுநாம் நினைவிற்கொள்ள வேண்டும். 1227-ல் ஊச் கைப்பெற்றப்பெற்றது. அடுத்த ஆண்டில் இல்டூட்மிஷ் இந்திய சுல்தான் என்பதை பாக்தாத் கலிபா ஏற்றுக்கொண்டார். நன்றியுள்ள சுல்தான் கலீபாவின் பெயரைத் தம்காசுகளில் பொறித்தார். 1231-ல் வங்காளத்தொல்லைகள் ஓய்ந்தன; அடுத்த ஆண்டில் குவாலியர் கைப்பெற்றப் பெற்றது. மாளவத்தில் படையெடுத்ததன் விளைவாக, சுல்தான் 1234-ல் பில்சாவையும் உச்சயினியையும் பெற்றார். உச்சயினி தாக்கப்பட்ட காலத்தில் அங்கிருந்த மகாகாளி கோயில் இடிபட்டது. இலிங்க உருவம், தில்லிக்குச் சென்றது. அதன்பின், இல்டூட்மிஷ், தில்லி மசூதியில் தொழுதுகொண்டிருக்கையில், அவரைக் கொல்ல, இஸ்மெயிலியர் என்ற முஸ்லிம் மாறுகோள் வெறியர் முயன்றது பயனுறவில்லை. 1236-ல் சுல்தான், அமைதியாக இயற்கை எய்தினர். கால் நூற்றாண்டு காலத்தில் இல்டூட்மிஷ், தமது தலைவனின் இராச்சியப் பகுதிகளை மீட்டதுடன், சிந்து, மாளவம் என்ற பகுதிகளையும் இணைத்து

* Ishwari Prasad, History of Mediaeval India (1933) p.172.

அரசைப்பெருக்கினர். வென்ற பகுதிகளை ஒழுங்காக இணைத்து தில்லி சுல்தானியராட்சிக்கு அடிகோலிய பெருமை அவருக்கு உரியது. அவர் தலைவருக்கு உதவியாயிருந்த வாய்ப்புக்கள் இட்டுட்மிஷுக்குக் கிடைக்கவில்லை. இச்சுல்தானின் வெற்றி இவர் முயன்று பெற்ற வெற்றியேயாகும். தனிப்பேர் இடையூறுகள் இவருக்கு ஏற்பட்டன. ஓரளவு நற்பேறு இவருக்கு உதவியாயிருந்தது. ஆற்றல் வாய்ந்த வெற்றி வீரராயிருந்ததுடன், வரலாற்றறிஞன் மின்ஹஜ்-உஸ்-சிராஜ் என்பாரையும் (பாக்தாத் அருகிலுள்ள) ஊஷ் என்னுமிடத்திலிருந்த குத்புதீன் என்ற துறவியையும் ஆதரித்த பெருமையும் இல்டுட்மிஷுக்கு உரியது. அவரைக் கொல்வதற்கு முயன்றமைக்குக் காரணம் அவருடைய கடவுட்பற்றும் வைதீகத் தன்மையுமே ஆம். தில்லியில் சிறிது காலம் வாழ்ந்து 1235-ல் அங்கே இறந்துபோன ஊஷ் துறவியின் நினைவுக்கு அறிகுறியாகச் சுல்தான், குதுப்மினர் எனப்படும் கட்டடத்தை நிறுவினர்.

குதுப்மினர்: தில்லிக்கு அண்மையிலுள்ள குதுப்மினர் கல்வெட்டுக்கள், குத்புதீன், முகம்மது கோரி ஆகிய பெயர்களைக் குறிப்பிடுவதைக் கொண்டு சில அறிஞர் அக் கட்டடத்தைத் தோற்றுவித்தவர் குத்புதீன் என்று கூறுவர். ஆனல் இல்டுட்மிஷ் 1231—2-ம் ஆண்டில் அதற்கு அடிகோலினர் என்னும் கருத்தே வலிவுள்ளதாகத் தோன்றுகிறது. அது ஓர் வெற்றிக் கோபுரம் எனலாம் அல்லது முகம்மதியரை வழிபாட்டுக்கு அழைப்பதற்காக ஏற்பட்ட ஓர் கோபுரம் என்றும் கூறலாம். முதலில் நான்கு அடுக்குகளைக்கொண்டு 242 அடி உயரத்துடன் அது காட்சி அளித்தது. பின்னர் பல மாறுதல்கட்கு உட்பட்டது. அக்கட்டடத்தின் அடிப்படைக் கருத்துணர்வும் அமைப்பின் முறைகளும் அணிசெய்யப்பட்டிருப்பதின் ஒவ்வொரு நுணுக்கப்பிரிவும் சிறப்பாக இஸ்லாமியத் தன்மையைக் காட்டா நிற்கும். போற்றற்குரிய பல சிறப்புக்கள் அதிலுண்டு எனினும், சித்தூர் வெற்றிக்கோபுரம்

போன்ற சில கட்டடங்களில் நாம் காணும் சில தெய்வீகத்தன்மைப் பண்புகளை மினரில்காண்பதற்கில்லை.†

## பகுதி 3

### இல்டுட்மிஷின் பின்வந்தோர்

**ருக்நுதீன் பிரோஸ்:** *(1236)* இல்டுட்மிஷ், இறக்கு முன் தம் மக்களில் ரஸியா என்ற பெண் ஒருத்தியே தமக்குப்பின் அரசுரிமை பெறத் தகுதி யுடையவள் என்ற விருப்பத்தை வெளியிட்டிருந்தார். ஆனால் பெருஞ் செல்வர்களோ, அவருடைய மூத்தமகன் ருக்நுதீன் என்பாரைச் சுல்தானாக்கினர். இவர் சிற்றின்பத் துறையில் எளியராயிருந்த படியால் இவருடைய தாய், ஷாதுர்கான் என்பாள் அரசியலை நடத்திவந்தாள். இவள், முன்னர், அரசர் உவளகத்தில் பணிப்பெண்ணா யிருந்தவள். அக்காலத்தில் இவளை அரச குடும்பச் செல்வியர்கள் வெறுத்தனர். உயர்நிலை எய்தியவுடன் அவர்கள் மீது ஷாதுர்கான் பழிதீர்த்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனள். இவளும் சுல்தானும், இல்டுட்மிஷின் ஆண் குழவி ஒன்றைக் குருடாக்கக் காரணமாயிருந்ததால், அரசியல் நிலைமை கடுமையாகியது கசினி அரசர், பஞ்சாபில் படையெடுத்து மூல்தான் வரை வந்தார். ஆனால் ஊச் மண்டலாதிபதி அவரைத் துரத்திவிட்டார். அயோத்தி இளவரசத்தலைவர் கலகம் செய்யலானார். வங்காளம் மத்திய ஆட்சியை ஏற்க மறுத்தது. மூல்தான், லாகூர் மண்டலாதிபதிகள் சுல்தானை எதிர்த்தனர். சுல்தான் நிலைமையை ஒழுங்குசெய்யத் தில்லியை விட்டுப் புறப்படவே, அத்தலைநகரில் புரட்சிக் கலகம் மூண்டது. சுல்தான் திரும்பினர் அதற்கிடையில் ரஸியாவைக் கொல்ல, தாயார் செய்த முயற்சி தில்லி நகர மாந்தருக்குச் சீற்றமூட்டியது. தாயார் சிறைப்பட்டாள். ரஸியா அரியணை ஏறினாள். சுல்தான் கொலையுண்டார். அவருடைய ஆறுமாத ஆட்சி அவலமுடிவை அடைந்தது.

---

† C. H. I., III pp 578, 9

ரஸியா (1236—'40): ரஸியா அரியணை பெறுவதை விரும்பாத லாகூர் மூல்தான் மண்டலத் தலைவர்கள் அவளை எதிர்த்தனர் அவர்களிடையே பகைமையை மூட்டித் தந்திர மாகத் தன்னிலையைக் காத்துக்கொண்டாள் ரஸியா. அவள் தன் வலிமையைப் பெருக்கிக்கொள்ளவே, சிந்துநாடும் வங்காளமும் அடங்கிவிட்டன. சுல்தான் என்ற ஆணுக்குரிய பட்டத்தையே அவள் சூட்டிக்கொண்டாள். பெண்டிற்குரிய ஆடை முறையையும் முகமூடியையும் விட்டொழித்தாள். இராணுவத் துறையிலும் பொதுத் துறையிலும் ஆண்மையுடன் ஆட்சிநடத்தலானாள். முஸ்லிம் மாறுகோள் வெறியர், வைதீக இஸ்லாமிய சமயத்தை ஒழிக்க 1237-ல் செய்த முயற்சி பயனுறவில்லை. லாகூர், மூல்தான் மண்டலத் தலைவரான அயஸ் (AYAZ) என்பார் கலகம் செய்யவே, ரஸியா படையுடன் சென்று அவரை அடக்கி, மூல்தான் பகுதிக்குமட்டும் அவர் தலைவராக இருக்குமாறு செய்துவிட்டு 1240-ல் தலைநகருக்குத் திரும்பினாள். ஜலாலுதீன் யாக்கூட் என்ற ஆப்ரிக்க இனத்தவரொருவர், ரஸியாவின் தனிப்பற்றுக்குரியராயிருந்ததைக் கண்டு தில்லிப் பெருஞ்செல்வர் பொருமை கொண்டனர். அவ்வாப்ரிக்கனின் அதிகார ஏற்றங்கண்டு சீற்றங் கொண்டனர். அதன் விளைவாக அல்தூனியா என்ற படிந்தா மண்டலத் தலைவர் அரசிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யுமாறு தூண்டப்பட்டார் கிளர்ச்சியை அடக்கச் சென்ற காவற்றலைவி ரஸியா சிறைப்பட்டாள் அவ்வம்மையின் அன்புக்குரிய 'யாக்கூட்' கொலையுண்டான். இல்டுட்மிஷின் மகன் பஹ்ராம், சுல்தானாக அமர்ந்தான். இப்புரட்சி பயனடையாத காரணத்தினாலோ அல்லது ரஸியாவின் சாகசத்திற்கு வசப்பட்டதாலோ — நாமறியோம் — அல்தூனியா அவளை மணந்துகொண்டு அவளை மீண்டும் அரசியாக்க தில்லியில் படையெடுத்தார் ஆனால் தோல்வியுற்று பின் கணவனும் மனைவியும் கொல்லப் பெற்றனர். ரஸியாவின் தோல்வியை விளக்கப்புகும் அக்கால வரலாற்றறிஞர்[1] பின் வருமாறு கூறுகிறார். "வல்லமை பொருந்திய சிறந்த அரசி; அறிவுமிக்கவள்; நீதிமான்; நலஞ்செய்யும் தன்மை வாய்ந்தவள்; கல்வியறிவாளரை ஆதரிப்பவள்; நடுநிலைமை

1. MINHAJ-US-SIRAJ, the author of TABAKAT-I-NASIRI.

உடையவள்; மக்களால் விரும்பப்பட்டவள்; பேராற்றல் வாய்ந்தவள்; சுருங்கச் சொல்லின், அரசருக்கு இன்றியமை யாததான பண்புகள் யாவற்றையும் பெற்றவள் ஆனால் அவள் ஆணாய்ப் பிறவாத காரணத்தால் ஆடவர் அக்குணங் களைப் பாராட்டவில்லை"[1]. உண்மையில் அவள் ஆண்தன்மை அவள் தோல்விக்குக் காரணமன்று. யாக்கூட்டிடம் அவள் கொண்ட தொடர்பு ஒழுக்கக் கேடானதென்று கூறவும் தக்க சான்றில்லை. ஒரு ஆப்ரிக்கன், ஆலோசனைக் குழுக்களில் அதிகாரமிக்க உயர் பதவியை எய்துதல், துருக்கிய அடிமை கட்கு பொறுத்துக்கொள்ளத் தக்கதாக இல்லை தன்னலங் காரணமாகத் துருக்கிய அடிமைகள், இல்டுட்மிஷ் காலத்தி லேயே "நாற்பதின்மர்" என்று சொல்லப்பட்ட ஒரு உட் குழுவை அமைத்திருந்தனர் என்ற செய்தி ஈண்டு சிந்திக்கத் தக்கது.

பஹ்ராம் (1240—'42) மசூத் (1242—'6): நாற்பதின் மரின் நல்லுதவியால் நாட்டுத் தலைமையை பஹ்ராம் பெற்றா ரெனினும் நாட்டின் நலிவுகள் நின்றபாடில்லை. அச்சுல்தான், உண்மையும் வீரமும் வாய்ந்தவர். அவர், அரச வாழ்வுக்குரிய ஆடம்பரங்களை அறவே வெறுத்து எளிய வாழ்க்கையை மேற் கொண்டார். ஒருசில அடிமைத் தலைவர்கள் ஆட்டியபடி யெல் லாம் ஆடும்அடிமைக்குணம் அவரிடமில்லை.மேற்கூறிய உட்குழு வைச்சேர்ந்த ஓர் உயர் அதிகாரி அரச ஆணைகளைமீறிய செருக் குக்காக அவனைச் சுல்தான் கொன்றுவிட்டார். அக்குழுவினால் மதிக்கப்பெற்ற முஸ்லிம் மதகுருவும், கொலைத்தண்டம் விதிக் கப்பெற்றார். உட்குழுவினரின் உள்ளம் கொதித்தது. 1241ல் மங்கோலியப் படையெழுச்சி ஏற்பட்டு லாகூர் கைப்பற்றப்பட்ட காலத்தில், நாற்பதின்மர், சுல்தானை எதிர்த்துப் பழிதீர்த்துக் கொண்டனர். 1242-ல் சுல்தான் தங்கிய இடம் முற்றுகை யிடப்பட்டு அவரும் கொல்லப்பட்டார்.

ருக்னுதீன் பிரோஸின் மகன் மசூத், பின் பட்டமேற்றார். 1245-ல் ஊச் பகுதிவரை உட்புகுந்திருந்த மங்கோலியர்

1. Smith, Oxford History, p. 227.

திரும்ப விரட்டப்பட்டனர். சுல்தான், குணக்கேடனாகமாறி சிற்றின்ப நாட்டத்தில் மூழ்கி நாட்டைப்பற்றி நினைக்க வில்லை. மீண்டும் பெருஞ் செல்வரின் சீற்றம்; அரசன் அரியணை இழத்தல்; பின் சிறைத்தண்டனை; (1246), பின் மரணம்; அதன்பின் இல்டூட்மிஷின் மகன் நாசிருதீன் முகம்மதுவின் முடிசூட்டு விழா. இவ்வாறு நிகழ்ச்சிகள் தோன்றின.

## பகுதி 4

### பால்பன் (BALBAN)

வாழ்க்கை நெறி : ஏறத்தாழ 1205-ல் துருக்கிய கான் ஒருவனின் மகனாய் பிறந்த பகா உத்தீன் பால்பன், இளமையிலேயே மங்கோலியரால் அடிமைப்படுத்தப்பெற்று பாக்தாதில் விற்கப்பட்டான். பின் தில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்ட இவனை, இல்டூட்மிஷ் 1233-ல் முழு விருப்பமின்றி வாங்கிக்கொண்டார். முழு விருப்பமின்மைக்குக் காரணம் பால்பனின் குட்டையான உருவ அமைப்பும் அருவருப்பான தோற்றமுமேயாம். தொடக்கத்தில் தண்ணீர் தூக்கிவரும் தொழிலிலமர்ந்த பால்பன், விரைவில் முன்னேறி "நாற்பதின்மர்" குழுவிலொருவனானன். ரஸியா ஆட்சிக்காலத்தில் வேட்டையாடும் தலைவனாக இருந்து, அவளுடைய பகைவர்களுடன் இணைந்துகொண்டு அவள் வீழ்ச்சியுறத் தன்னாலியன்றதைச் செய்தான். பால்பன் பஹ்ராமிடமிருந்துப் பரிசாகப் பெற்ற ஜாகீரை (மானியம்) த்திறமையுடனும் பெருந்தன்மையுடனும் காப்பாற்றி, மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். 1245-ல் மங்கோலியர், ஊச் பகுதியை முற்றுகையிட்டுப் பின் துறத்தப்பட்ட காலத்தில், பால்பன், அவரது பணிக்காக "உலூக்கான்" (வலிமைச் செல்வன்) என்ற பட்டத்தைப் பெற்றனர். நாசிருத்தீன், சுல்தானாக அமர்ந்த பின் பால்பன், தலைமை அமைச்சர் பதவிக்கு உயர்த்தப் பெற்றார். அரசியல் அதிகாரங்களைத் தடையின்றிப் பயன்படுத்தும் உரிமை அவருக்கு அளிக்கப்பட்டது. சுல்தான் ஓர் துறவியைப்போல, குரான் கூறும் நெறியைக் கடைப்பிடித்து நல்வாழ்க்கை வாழ்ந்துவந்தார். அழகாக எழுதும் தம் திற

மையை, குரானைப் பார்த்து எழுதுவதில் பயன்படுத்தினர். அவரது எடுத்துக்காட்டான நெறி அக்காலத்தவரின் உள்ளத்தைத் தொட்டது. தானெழுதிய குரான் புத்தகங்களை விற்றதனால் கிடைக்கும் பொருளைக் கொண்டே அவர் வாழ்க்கை நடாத்தினாரென்றும், அவர் மனைவி வேறு உதவியன்றித் தானே சமையல் வேலைகளைக் கவனித்து வந்தாளென்றும் நமக்குக் கதைகள் கிடைத்துள்ளன.

சுருங்கக் கூறின், சுல்தானின் மறுமைப்பற்று, பால்பனை உண்மை ஆட்சியாளராகச் செய்தது. இல்டுட்மிஷின் பின் போந்த ஆற்றலற்ற அரசர்கள் காலத்தில் இராசபுதனம், தோஆப் பகுதி (இரு ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதி) இந்துத் தலைவர்கள், உரிமைபெறலாயினர். அவர்களை எதிர்த்துப் பால்பன் பலமுறை படையெடுக்க வேண்டியிருந்தது. 1249-ல் அவருடைய மகள் சுல்தானை மணந்துகொண்ட பிறகு தலைமை அமைச்சரின் நிலை, பெருமை, அதிகாரம் யாவும் உயர்வுற்றன. சட்ட எதிர்ப்புக் குற்றம் புரிந்தோர் இந்துக்களாயினும் முகமதியராயினும் அவர்களை உறுதியுடன் பால்பன் அடக்கி ஒடுக்கினர். இவ்வெற்றியைக்கண்ட பெருஞ் செல்வர்கள் பொருமையுற்று அமைச்சரைக் கொலைசெய்ய முயன்று தோல்வியுற்றனர். ஆகவே 1253-ல் அவர்கள் தூண்டலின்மேல் சுல்தான் அவருடைய பழைய ஜாகீருக்கு அவரை நாடுகடத்திவிட்டார். பால்பனுக்குப்பின் நிலவிய ஆட்சிமுறை மிகவும் கேடுற்றதாயிற்று. தலைநகரிலேயே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த! இயலவில்லை. ஆதலால் அடுத்த ஆண்டில் பால்பன் திரும்ப அழைக்கப் பெற்றார். அவர் கலகங்களை அடக்கும் முயற்சியில் மீண்டும் முனைந்தார். 1257-ல் சிந்துப்பகுதியில் தோன்றிய மங்கோலியப்படை சிதறடிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகட்குப் பின்னர், நாட்டு மக்களை நலிவுறச்செய்துவந்த கொள்ளைக் கூட்டத்தினரின் கொடுமைகள் ஒழிக்கப்பெற்றன.

சுமார் 1260-ல் சிங்கிஸ்கானின் பேரனின் பிரதிநிதி ஒருவன், தில்லியில் மிகுந்த மேலான வரவேற்புடன் கொண்

டாடப் பெற்ருன். தம் மருமகனை சுல்தானின் முன்னரே ஏற்பாடு செய்திருந்தபடி 1266-ல் நசிருதீன் இறந்தவுடன் பால்பனே சுல்தாஞகப் பட்டம் பெற்ருர். வேறு மரபுரிமை யாளரில்லாத காரணத்தாலும் அந்த ஏற்பாடு இன்றியமை யாததாயிற்று. கயாஸுதீன் பால்பன் என்ற பெயர் அவ ருக்கு நிலைத்தது. இல்டுட்மிஷுக்குப் பிறகு சுல்தான்களுக்கு ஏற்பட்ட இழிநிலையை மாற்றி அவர்தம் சிறப்பை வலிமை யடையச் செய்யவேண்டுமென்பதும், அரசகுலத்தினருக்கும் பொதுவாக நாட்டுக்கும் தீமைசெய்துவந்த "நாற்பதின்மர்" குழுவை வேரறுக்கவேண்டு மென்பதும், மங்கோலியர் தாக்கு தல்களிலிருந்து நாட்டைக்காக்க நிலையான ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதும், பால்பனின் குறிக்கோள்களாம். புதிய முறையில் படை சீர்திருத்தப்பெற்று கொள்ளைக் கூட்டத்தினர் கூட்டங் கூட்டமாகக் கொலைசெய்யப்பட்டனர். இடையூறு விளையக்கூடுமிடங்களில் கோட்டைகளும், காவற்படைகளும் நிறுவப் பெற்றன. காடுகளைச் செப்பனிட்டு சாலைகளை பால் பன் அமைத்தார். 1270-ல் கொள்ளைக்காரர் இடையூறு அடியோடு நீங்கிற்று.

"நாற்பதின்மரை" நசுக்கும் முயற்சி: பால்பன் தம் படைத் தலைவர்களின் ஆற்றலின்மையை அறிந்து அக்கேட் டினைக் களைய ஆவன செய்யலாஞர். ஜாகீர்தாரின் சந்ததி யினர் மானியங்களைப் பெற்று அளவுகடந்து உலக இன்பத்தில் ஆழ்ந்து கடமை உணர்ச்சியற்றிருந்தனர் நாற்பதின்மரின் அரசியல் செல்வாக்கு அரசுக்கே இடையூறு விளைத்தது. தம் முடைய குலத்தை ஆட்சிபீடத்தில் நிலைபெறச் செய்யும் விருப்ப மும் பால்பனுக்கு இருந்தது ஆகவே மான்யங்களை ஒழிக்கும் ஆணைகளைப் பிறப்பித்தார். ஆனல் அவ்வாணைகளைப் பின்னர் அவரே தள்ளுபடி செய்யவேண்டியதாயிற்று. நாற்பதின்மருக்கு அதிகாரங்களில்லாத வகையில் ஆட்சி முறையை பால்பன் அமைக்கலாயினர். நடு அரசு மிக வலிமைபெற்று விளங்கி யது. ஆட்சி அதிகாரங்கள் யாவும் அரசனையே நடுமையமா கக் கொண்டு இயங்கின. பால்பன் தம்முடைய குமாரர்களைக் கூட தம் விருப்பப்படி நடக்க முடியாதபடி செய்தார். முறை

வழங்குவதில் அவருடைய நடுநிலைக் கொள்கை போற்றற் குரியது. அவர் தம் உறவினர் குற்றமியற்றியிருந்தாலும், அவர்களையும் தண்டிக்கத் தவறவில்லை. எழுதிவைக்கப்பெற்ற நிகழ்ச்சி ஒன்றினை இங்கே குறிப்பிடலாம். ஒரு செல்வர் தம்முடைய பணியாளனைத் தண்டித்ததின் விளைவாக அப்பணி யாள் இறக்க நேரிட்டது. அதற்காக அச் செல்வர் யாவரு மறியுமாறு பொது இடத்தில், கசையடி பெற்றார். ஒற்றர், தம் கடமையில் தவறுதல், மிகப் பெருங் குற்றமாகக் கொள்ளப் பெற்றது. முடிவாக முறை வழங்குதலில், பால்பன் நடு நிலைமையையே பேணினார்.

**மங்கோலியப் பேரிடர்.** மங்கோலியரின் இடரால் மனத் துயர் கொண்ட மன்னன், அதைத்தீர்க்க முயல்வதில் பின் வாங்கவில்லை. அவர், நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட சிறந்த படையை அமைத்திருந்தார். வடமேற்கு எல்லைப்புற மாகா ணங்களைக் கண்காணிக்கத் தம்முடைய மகனை அமர்த்தியிருந் தார். பொறுப்பு வாய்ந்த பதவிகளினின்று இந்துக்களை விலக்கினார். சிறப்பான ஒற்றர்முறை அமைப்பிலிருந்தது. மேலும் நாடுகவரும் நாட்டத்தைப் பால்பன் நீக்கிக் கொண்டார். அவர், முகம்மதுகசினியைப் பின்பற்றி ஒழுகவேண்டுமென்ற விருப்பத்தைப் பெற்றிருந்தபோதிலும், அவரை அண்டியவர்கள் அவரிடம் குஜராத், மாளவம் ஆகிய பகுதிகளைக் கைப்பற்று மாறு அறிவுரை கூறியபொழுது அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இராச்சியவாயிலில் மங்கோலியரை வைத்துக்கொண்டு மேலும் மேலும் நாடுகளைக் கைப்பற்றுதல் அறிவுடைமை ஆகாது என்பதனை அவர் உணர்ந்திருந்தார். ஆகவே சுல்தானிய ராட்சிப் பெருக்கத்திற்குத் தடையாக இருந்தது மங்கோலிய அச்சம். தென்னிந்தியாவின் பக்கமாக இராச்சியத்தைப் பரப்பவேண்டும் என்ற தக்காணக் கொள்கையைத் தோற்று வித்தவர், இவருக்குப்பின் வந்த அலாவுதீன்கில்ஜியே அன்றி இவர் அல்ல. சுமார் 1279'ல் மங்கோலியர், சட்லெஜ் ஆற்றுக்கு இப்பாலுள்ள பகுதியை அடைந்தனர். ஆனால் போரில் முடிவாகத் தோற்கடிக்கப்பட்டதால் மீண்டும் அவ் வாற்றைக் கடந்துவரும் முயற்சி எளிதன்று என்பதை உணர்ந் தனர். 1285-ல் அவர்கள் மூல்தான்மேல் படையெடுத்தனர்.

அங்கு ஆட்சியாளரா யிருந்த முகமத்கான் (பால்பனின் மகன்) சிறந்த முறையில் பகைவர்களை எதிர்த்து நின்றார். ஆனால் அவர் உயிரிழக்க நேரிட்டது. இச்செய்தி பால்பனுக்கு முதுமைப் பருவத்தில் ஓர் பேரதிர்ச்சியாயிற்று. சுல்தானின் தனிப்பற்றுக்குரிய அம்மகன் சிறந்த போர்வீரன் மட்டுமல்லன்; பண்பாட்டைப் போற்றும் புரவலனாகவுமிருந்தான். அமீர் குஸ்ரு, அமீர்ஹாஸன் முதலிய பேரறிஞர்கள் அவனாதரவைப் பெற்றிருந்தனர். அறிவாற்றல் பொருந்திய சமூகத் தலைவனாக இருந்த அவன் "அக்குல முதல்" என்று போற்றத்தக்கவன். அவனுடைய இளவல் பக்ராகான், அண்ணனுக்கு நேர் மாறான தன்மை பெற்றவன். ஆர்வம், பொறுப்பு, நேர்மை முதலிய எதுவும் அவனிடமில்லை. அதற்கு மாறாகச் சிற்றின்ப நாட்டம் நிலைத்திருந்தது. முடிவாக, அக்கால நிகழ்ச்சிகளைக் கருதுமிடத்து பால்பனின் எல்லைப்புற இயல்முறை மிகவும் போற்றற் குரியதாகும்.

துக்ரில், தண்டனை பெறுதல் (1279—'82). பால்பனின் அடிமையாக இருந்த துக்ரில்கான், வங்காளத் தலைவனாக அமர்த்தப் பெற்றிருந்தான். தன்னுடைய தலைவன், மங்கோலியப் போரில் முனைந்திருந்த காலத்தைத் தான் பயன்படுத்திக்கொண்டு 1279-ல் தன்னுரிமையுடன் இவன் செயல் நடத்தலானான். பால்பன் இவனைத் தண்டிப்பதற்கு மூன்று முறை படையெடுக்க வேண்டியதாயிருந்தது. இறுதியில் கலகக்காரன் கொல்லப்பட்டான். அவனுடைய உறவினரும் உதவியாளரும் கடுமையான தண்டனைகளைப் பெற்றனர். லக்னௌடி, கொடுங்கொலைகளின் கூடமாகக்காட்சி அளித்தது. 1282'ல் பால்பன், தமது இரண்டாவது மகன், பக்ராகானை வங்காளத்தலைவனாக அமர்த்தி, கடுமையான முன்னெச்சரிக்கைகளை விடுத்துப் பின்னர், தில்லிக்குத் திரும்பி அங்கு துக்ரில்லுடன் ஒற்றுமை உணர்வு பூண்டோரையும் தண்டனைக்குட்படுத்தினார். ஆனால் வங்கத்தில் காணப்பட்ட கடுந்தண்டனை இங்கில்லை,

பால்பனின் பெருமை. 1285-ல் முகமத்கானின் சாவு பால்பனின் ஊக்கத்தைக் குறைத்ததுடன் அவருடைய முடிவை

யும் விரைவுறச் செய்தது. பக்ராகான் என்னும் இரண்டாவது மகன், தந்தை சொல்லைப் புறக்கணித்த காரணத்தால், முகமத்கானின் பிள்ளை கெய்குஸ்ரு என்பானைத் தமக்குப்பின் சுல்தானாகும்படி பால்பன் ஏற்பாடு செய்தார். ஆனால் 1286'ல் அவரிறந்தபின், பெருஞ்செல்வர்கள் பக்ராகானின் மகன் கைக் கோபாத் என்பானை அரியணையிலமர்த்தினர். பால்பன், சுல்தானியராட்சியைத் தொடங்குகையில், ஒழுக்கம் உயரவேண்டும் என்னும் உள்ளக்கிடக்கையுடன் அரசவைக் கொண்டாட்டங்களைச் சீர்திருத்திச் சிறப்புறச் செய்திருந்தார். சிறப்பும் சீலமும் சுல்தானுக்கு இன்றியமையாதன என உணர்ந்து அரசவைச் சடங்குகளை அதற்கேற்ப சிறந்த முறையில் அவர் அமைத்திருந்தார். அவருடைய தனிமுறை ஊழியர்களின் முன்புகூட அவர் அரசபதவிக்குரிய ஆடை அணிகளுடன் காட்சியளிப்பார். கீழ்க் குலத்தவரையும் புதிதாக உயர்வுற்றோரையும் அவர் ஆதரிப்பதில்லை. "பழகப்பழகப் பாலும் புளிக்கும்" என்ற முதுமொழியை உணர்ந்த அவர் அதற்குத் தக்கவாறு நடந்துகொண்டார். வினைத்திட்பம் பொருந்திய பால்பனின் அவையில் சிரிப்பும் களிப்பும் வேடிக்கையும் விலக்கப்பெற்றன. குடி, சூது முதலிய பல இளமை இன்பச் செயல்களை அவர் அடியோடு அகற்றியிருந்தார். ஆனால் வேட்டையாடுதல் விடப்படவில்லை. முறை வழங்கலில் மன்னர் மிகவும் கண்டிப்பானவர். இஸ்லாமிய சமய உரைகளை நிகழ்த்திக் கொண்டும், மதகுருமாருடன் தொடர்புகொண்டும், அவர், வைதீக முறையில் ஆட்சி நடத்தினர். கல்வி அறிஞர் சுல்தானினாதரவைப் பெற்றனர். துவைத தத்துவப் பேரறிஞரான மத்வாச்சாரியாரை அன்புடன் வரவேற்ற சுல்தான் இவராயிருக்கலாமென்று சிலர் ஊகிக்கின்றனர்.[1] பால்பனிடம் புகலிடம் நாடிப் புகுந்த நடு ஆசிய இளவரசர் பதினைவரிடம் அவர் காட்டிய கருணை, பொதுவாகத் துயருறும் ஆட்சியாளரிடம் அவருக்கிருந்த பெருந்தன்மையைக் காட்டாநிற்கும். முதியோர், பெண்டிர், குழந்தைகள் முதலியவர்கள் சுல்தானின் அருளுக்குரியவராயிருந்தனர். மகனிறந்ததால் மாளாத் துயரடைந்த மன்னனின் தன்மை, அவரிடமிருந்த தந்தைப் பண்பைத்

1. B. A. Saletore, Ancient Karnataka, I. (1936), p. 438 n.

தெளிவாக்கும். அவர், சமயச் சொற்பொழிவுக் காலங்களில் மெய்தானரும்பி விதிர்விதிர்த்துக் கண்ணீர் ததும்புவார். ஆண்டவர்பால் அன்பால் அழல்சேர்ந்த மெழுகேபோல் மன முருகுவார். ஆனல் கலகக்காரரிடமும் பகைவரிடமும் பேய் போல் நடந்துக்கொள்வார். பக்ராகானிடம் அவர் நடந்து கொண்ட முறையினின்று, தவறு செய்தவர் தனயனுயிருந் தாலும் தரிக்கிலாத் தன்மை பெற்றவரென்பது விளங்குகிறது. கருணையின்றிக் கொலைகள் பல நிகழ்த்தியதால் இகழ்ச்சியுற்ற போதிலும், பால்பன், ஒரு தலைமுறைக்கு மேல் ஒழுங்கும் அமைதியும் நாட்டில் நிலவவும் மங்கோலியத் தாக்குதலுனின்று நாட்டைக் காப்பாற்றவும் முயற்சிகள் எடுத்துக்கொண்டது, போற்றற்குரியது. குருதி வெள்ளம் புரளும் கொடியகாட்சிகள் பலவற்றிற்கு அவர் காரணமாயிருந்தா ரென்பது உண்மை. ஆனல் தலைமை அமைச்சராகவும் சுல்தானுகவும் பதவிவகித்த காலங்களில் அவருடைய உள்நாட்டு, வெளிநாட்டு இயல் முறைகள் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவை. "அலாவுதீன் கில்ஜியின் முன்னேடி" என்ற பட்டம் அவருக்குப் பொருந்தும். அரசியல் திறமையும் செயலாற்றும் வீரமும் நிறைந்தவரா யிருந்தபோதிலும், பால்பன், ஒரு குலத்தை நிலை நிறுத்தினுரில்லை; பெரும் அமைச்சர்குழு ஒன்றை அமைத்துப் பயிற்சி அளிக்கவுமில்லை. ஆயினும் ஐபெக், இல்டுட்மிஷ் ஆகியோருடன் ஒப்பிடத்தக்க பெருமை பால்பனுக்கு உண்டு. ஐபெக், அரசப் பிரதிநிதியாக இருந்த காலத்தில் தீரச் செயல்கள் புரிந்தாரென்பதும், தம் ஆற்றலினுல் வட இந்தியா வின் பெரும் பகுதியை முஸ்லிம் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தாரென்பதும் நாமறிந்த செய்திகள். இல்டுட்மிஷ், செயல் முறையில், தம் தலைவன் கொண்டிருந்த கடமைகளை நிறை வேற்றினுர். பால்பன், புதிய நாடுகளைக் கைப்பற்றவில்லை யெனினும் அவர் முன்னேர் அமைத்திருந்த அரசைக் காப்பாற்றி உறுதிப்படுத்த உண்மையுடன் உழைத்தார். "பால்பன், எளிதில் ஏமாற்ற முடியாத ஒரு கிழ ஓநாய்" என்பது அறிஞர் பரணியின் (Barani) குறிப்பு. ஐபெக் இருபது ஆண்டுகளும், இல்டுட்மிஷ், இருபத்து ஐந்து ஆண்டுகளும் அரசாட்சி நடத்தியிருக்கையில், பால்பன், நாற்பது ஆண்டுகள்

நாட்டின் பொறுப்பை ஏற்று நாடு காவல் புரிந்தது நோக்கற்பாலது. ஐபெக், தம் ஆட்சிமுறை அமைப்பில் மிகுந்த கருத்தைச் செலுத்தவில்லை. நாட்டில் அமைதி நிலவவைத்தமையும் அவரது ஈகையும் அவருக்குப் புகழைத்தந்தன. அரசை வலிமைப்படுத்தி ஒன்றுசேர்ப்பது, இல்டுட்மிஷின் கடமையாயிற்று. ஆதலால் அவர் "சுல்தானியத்தின் உண்மைத் தாபகர்" எனப்படுகிறுர். ஆனுல் அவரமைத்த நாற்பதின்மர் குழு, நாட்டுக்கு அழிவுதரும் நிலையமாயிற்று. ஆற்றலற்ற அரசர் ஆட்சிக் காலத்தில் அமைதியை அழிக்குந் தன்மை பெற்ற அந்த சில்குழு ஆட்சியை அழிக்காவிடினும் அதனதிகாரங்களைக் களைந்த பெருமை பால்பனையே சாரும். கற்பனைத் திறம்மிக்க செழிப்பானதோர் ஆட்சிமுறைக் கொள்கையைப் புதிதாக அவர் புகுத்தாவிடினும், உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளைப் பொறுத்தவரை. சுல்தானரசின் பிற்கால முன்னேற்றத்துக்கு வழிவகுத்த பெருமை, பால்பனுக்கே உரியது. சுருங்கக்கூறின் பால்பன், அரசப் பதவியை நிலைபேறுடையதாகச் செய்து அதன் அதிகாரத் தலைமை பெற்றவரிடம் எல்லோரும் அடங்கி நடந்துகொள்ளுமாறு கற்பித்தார். போராட்ட நிலையிலிருந்த சுல்தானியத்தைப் பெருகிவரும் நிலைக்கு உயர்த்திய பெருமை அவருக்கே உரியது.

## பகுதி 5

### அடிமைகுல ஆட்சியின் வீழ்ச்சி

கில்ஜிகுலம், அரசைக் கைக்கொள்ளல். 1286-ல் கைக்கோபாத் அரியணை பெற்ற செய்தி முன் கூறப்பட்டது. அப்பொழுது அவனுக்கு வயது பதினேழுதான். பக்ராகான், பொறுப்புக்கள் வாய்ந்த தில்லி சுல்தானியத்தைவிட, உரிமை வாய்ந்த வங்காளத் தலைமைப் பதவி, சாலச்சிறந்தது என்று கருதிய காரணத்தால், அரசுரிமையைக் கோரவில்லை. பால்பன் தம் பேரனுக்கு (கைக்கோபாத்) நற்பழக்க வழக்கங்கள் புகட்டியிருந்தார். ஆனுல் அரியணையிலமர்ந்தவுடன் அவனுடைய இயற்கைக் குணங்கள் இயங்கத்தொடங்கி

விட்டன. இழிவான செயல்களை அவன் மனம் நாடத் தொடங்கியது. அவனைப் பின்பற்றி அவனவையினரும் தீநெறியில் திளைக்கலாயினர். மதுவிலும் மாதர் மையலிலும் மனத்தைப் பறிகொடுத்துத் தன்னை மறந்த சுல்தான், விரைவில் பாரிசவாயு நோயினுல் பீடிக்கப்பட்டு படுத்த படுக்கையிலிருந்தான். அரசனவையில் ஆதிக்கத்தை ஆர்வத்துடன் நாடியிருந்த கில்ஜிகுலத்தவர் (ஆப்கானித்தானத்தில் நீண்ட காலம் வாழ்ந்தவர்) துருக்கியரை வெறுத்து வந்தனர். பிரபுக்களிடையே பிளவு ஏற்பட்டது. அங்நிலையில் கைக்கோபாத்தின், மூன்று வயதுச் சிறுவனுக்கு முடிசூட்டப் பெற்றது. துருக்கியப் பெருஞ்செல்வர்கள் ஒன்றுகூடி, கில்ஜி தலைவன் ஜலாலுதீன் மீது தடைக்கட்டளை பிறப்பித்தனர். கில்ஜி குலத்தவர் வாளா இருப்பரோ? சூழ்ச்சிகள் நடந்தன. சீர்குலையும் ஆட்சி முறைக்கு அடிப்படைக் காரணமான கைக்கோபாத் கொலையுண்டான். 1290-ல் ஜலாலுதீன் கில்ஜி, அரியணை ஏறினர்.

அடிமைகுல ஆட்சி முறை. அடிமை அரசர் போற்றிய ஜாகீர் முறை, சுல்தானியராட்சியின் வலிமைக்கும் ஒற்றுமைக்கும் தீமை விளைவித்தது. முன்னேற்றத்துக்கு இன்றியமையாத அமைதியையும் ஒழுங்கையும் ஏற்படுத்துதல், அவ்வரசர்களுக்கு எளிதான செயலாக இல்லை. அத்துறையில், பால்பன் காலத்தில்தான் மிக்க வெற்றி ஏற்பட்டது. அடிமை அரசர்தம் இனச் செருக்கும் கொள்கைவெறியும் காரணமாக வெல்லப்பட்டோர் வருந்தத்தக்க நிலையில் வைக்கப்பெற்றிருந்தனர். ஆயுதந்தாங்கிய படைதான் அவர்தம் ஆட்சிமுறைக் கருவி. அடிக்கடி "புறச்சமயிகள் அவர்களுக்குரிய இடங்களுக்கு (நரகத்துக்கு) அனுப்பப்பெற்றனர்." இராணுவத் தொடர்பற்ற பொது ஆட்சிமுறையைப்பற்றிச் சிறப்பான சிந்தனை செலுத்தப்படவில்லை. குஜராத் மாளவம் ஆகிய பகுதிகளின் உரிமைநிலை, வேந்தரின் வடஇந்தியக் காவல் முறைக்கு ஊறு விளைவித்து வந்தது. பஞ்சாபில் மங்கோலியரிழைத்த அழிவுபாடுகளும், வங்கத்தலைவரின் இணங்காத் தன்மையும், வேந்தரின் வடஇந்திய ஆதிக்கத்திற்கு வரையறை

விதித்தன. மிகுதியான அளவுக்கு இந்துக்கள், சமயப்பொறை யுடன் நடத்தப்பெற்றனர் ஆட்சிமுறையில் அவர்களுதவி இன்றியமையாததாயிருந்தது. மிக உயர்ந்த பதவிகளைத் தவிர்த்து மற்ற பணித்துறை அலுவலகங்கள் யாவற்றிலும் உள்நாட்டவர் அமர்த்தப்பெற்றிருந்தனர். உழவர்நிலை, முஸ்லிம் நிலக்கிழாரின்கீழும் இந்து நிலக்கிழாரின்கீழும், ஒரே தன்மையாகவே இருந்தது. போர் விருப்பராயும் எண்ணிக்கையில் மிக்கோராயும் இருந்த அவர்களைக் கலகம் செய்யத் தூண்டும் செயலிலீடுபடுத்தல், பேரிடருக்கு வித்தூன்றுவதாகும். ஆட்சி வகுப்பினருக்கு எதிராகவும் இந்துக்கள் நீதிபெறுதல் இயலாத செயலாயிருந்ததெனக் கூறுதற்கில்லை. இந்து, முஸ்லிம் வகுப்பினரிடை போதுமான அளவு இன உறவு நிலவியது. "அடிமை அரசர்கள், இந்துக் குடிகளிடம் ஓரளவு பொறுமை அற்றும், நேசமில்லாதவரிடம் கொடுமையாகவும் நடந்துகொண்டார்கள். எனினும், பொதுவாக, இங்கிலாந்து நாட்டின் நார்மானியரை ஒப்ப நீதி நெறிகளைக் கடைப்பிடித்தனர். ஸ்பெயின், நெதர்லாந்து நாடுகளில், இரண்டாம் பிலிப் மன்னன் நடந்துகொண்டதுபோல், இவர்கள் ஆட்சி புரியவில்லை."$

அடிமை அரசர் அரசுரிமை பெறும் முறை. அடிமை குலத்தவர் அரசுரிமை பெற்றுவந்த முறை அவர்தம் ஆட்சிக்கு வலிமை அளித்து வந்தது. குலத்தின் பெருமைசால் தலைவராகிய ஐபெக், இல்டுட்மிஷ், பால்பன் ஆகிய மூவரும் தொடக்கத்தில் அடிமைகளே. இல்டுட்மிஷ், தம் மகள்மீது வைத்திருந்த நம்பிக்கையை, நிகழ்ச்சிகள் தவருகச் செய்து விட்டன. அவர் பிள்ளைகளும் சந்ததியினரும் ஆற்றலற்றவர்; ஆட்சிப் பொறுப்பை ஏற்குந் திறமையற்றிருந்தனர். பால்பனின் மூத்த மகனும் உயர் பதவிக்கு ஏற்றவனுக இல்லை. அச் சுல்தானிறந்தபின் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அவர் மரபினரின் சிறப்பை உணர்த்தவில்லை. ஆகவே, மகனின் ஆற்றலைப்பற்றி உறுதியாகக் கூறுவதற்கில்லாத நிலையில், வழிவழி அரசுரிமை பெறும் வழக்கத்தின் இயல்பான இழுக்கம் காரணமாக,

$ C. H. I. III p. 90.

ஆற்றலைப் பொறுத்து ஆட்சிப்பீடத்தில் அமரும் அடிமைத்தாய முறை சிறந்ததாயிருந்தது. அடிமைத்தாய உரிமையாளரின் சூழ்நிலை, முயற்சியுடன் அவர்கள் செயலாற்றுமாறு தூண்டுந் தன்மைபெற்றிருந்தது. 'ஓர் அடிமை, பதவியில் உயர்நிலையை எய்தி அவன் தலைவனின் மகளை மணம்புரிந்துகொள்ளும் அளவுக்குச் சிறப்பெய்தும் வாய்ப்பு, துருக்கிய அடிமை முறையில் காணப்பட்டது. இல்டுட்மிஷும் பால்பனும் அவர்களுடைய தலைவர்களின் மருமகன்மார்கள் என்பது நோக்கற்பாலது. மகனைப்பெருத முகம்மது கோரி தமது அடிமை ஐபெக், தமக்குப்பின், அரியணைக்கு ஏற்றவன் என்பதைக் கண்டுகொண்டார். ஆதலால் வட இந்தியாவில் நிலையாக முஸ்லிம் அரசு அமைந்ததற்கு, அடிமைகளாயிருந்த சிறந்த தலைவர்களின் ஊக்கமும், கடமையுணர்ச்சியுமே காரணங்களாம். ஆனல் அடிமைமுறை, அரசியலில் நிலையற்ற தன்மைக்கும் காரணமாயிருந்ததைக் காண்கிரும். நாற்பதின்மர் குழுவின் தீச்செயல்கள் ஈண்டு நினைவுகூரத்தகும். முன்னுரிமை பெறுவதற்காக முடிவிலாப் போராட்டம் நிகழலாயிற்று. கடுமையான அளவுக்குப் போட்டியிடும் உள்ளப்போக்கு ஓங்கியது. மிகமிக கடுந்துயரங்கட்குப்பிறகே வெற்றிபெறுவது சாத்தியமாயிற்று. பால்பன் அவருடைய முற்காலத்திய கூட்டாளிகளிடம் நடந்துகொண்ட கடுமையான முறையும் அவர் தம் சார்பாகவும், தம் குலத்தின் சார்பாகவும் கொண்டிருந்த பேரவாவும், அவர் தோன்றி உயர்வு எய்தக்காரணமாயிருந்த அடிமை முறையையே அடியோடு அழிக்குந்தன்மையைப் பெற்றிருந்தன. வாழ்க்கைக்கே போராடவேண்டியிருந்த நெருக்கடியான நிலையில், அறிவாற்றலும் முன்னேக்கும் பொருந்திய சிறந்த கொள்கைகளைப்பற்றிச் சிந்திப்பதற்கே இயலாததாயிற்று. வெற்றிபெற்ற அடிமை ஓர் குணக்குன்ருகச் சிறப்புறுவது இயலாத செயலாயிருந்தது. முடிவாக, அடிமை மரபுரிமை முறையின் சிறப்புக்களையும் குறைபாடுகளையும், தில்லி அடிமை அரசர்களின் ஆட்சியில் காண்கிரும்.

# பகுதி 6

## அலாவுதீன் கில்ஜி அரசுரிமையைக் கவர்தல் (1296)

ஜலாலுதீன் கில்ஜி (1290—1296). கில்ஜிகளின், தேசிய இனத்தைப்பற்றிக் கருத்துவேறுபாடு உளது. அவர்கள், துருக்கிய இனத்தவரல்லர் என்று பரணி குறிப்பிடுவதை அறிஞர்கள் ஏற்க மறுக்கின்றனர். அவர்கள், ஆப்கானியர் என்று கூறுவதைவிட, ஆப்கானியத் துருக்கியர் என்று கூறுவது சாலச் சிறப்புடையதாகும். எழுபது வயதான ஜலாலுதீன் உரிமையின்றி அரசைக் கைப்பற்றியது தில்லி மக்களுக்கும் சில பெருஞ் செல்வர்களுக்கும் வெறுப்பை உண்டாக்கியது. சுல்தான் அந்நகரில் முடிசூட்டிக் கொள்ளவில்லை. வெறுப்புற்றவர்களை அமைதி படுத்தும் வகையில் அலுவலாளர்களை அமர்த்தியும் பழைய பணியாளரைப் பதவிகளிலிருந்து நீக்காமலும் இணக்கமான கொள்கைகளைப் பின்பற்றிச் சுல்தான் தம் நிலையை வலிமைப்படுத்திக் கொண்டார். அவரது மிகுந்த அடக்கம், தேர்ச்சி பெற்ற அலுவலாளருக்கு மகிழ்ச்சியை ஈந்தது. ஆனல் மற்றவர், அவருடைய பெருந்தன்மையாலும் நற்செயல்களாலும் அரசப் பதவிக்கு இடையூறுகளேற்படுமென அஞ்சினர். எவ்வாறிருப்பினும் தொடக்கத்தில் கில்ஜி குலத்தவர் அரசுரிமையைக் கைப்பற்றியதைப் பற்றி ஏற்பட்டிருந்த மக்கள் வெறுப்பு மறையுமாறு செயல்களாற்றப் பெற்றன. 1291'ல் காரா என்ற பகுதியின் (அலகாபாத் அருகில்) தலைவனுயிருந்த மாலிக்சச்சு என்னும் பால்பனின் உறவினனொருவன், கலகம் செய்து தன்னைச் சுல்தானென்று பறைசாற்றலானன். குத்பா (பொதுவணக்கம்) அவனுடைய பெயரால் அமையவேண்டுமென்பது அவனறிக்கை. ஆனல் அக்கலகம் அடக்கப் பெற்றது. ஜலாலுதீனின் உடன்பிறந்தானின் மகனை அலாவுதீனுக்கு காரா அளிக்கப்பெற்றது. கலகக்காரர்கள் கருணையுடன் நடத்தப் பெற்றதுமட்டுமன்றிப் பழைய அரசகுலத்தவரிடம் அன்பு காட்டியதற்காகப் பாராட்டவும் பெற்றனர். இது அறிவுக் குறைவு என்று ஜலாலுதீனிடம் சிலர் தெரிவித்தபோது, அவர், அரியணையைவிட முஸ்லிம்

களின் உயிர் மிகவும் தூய்மை ஆனது என்று விடையிறுத்தாராம். அவர் குற்றம் புரிந்தோரிடமும் கடுமையாக நடந்து கொள்ளவில்லை. தக்குகள் என்ற கொள்ளைக் கூட்டத்தினரைக் கூட அவர், வங்காளத்திற்கு நாடு கடத்தினரே யன்றிக் கொலை செய்யவில்லை. பெண்டிங் பிரபு இந்தியாவில் தலைமை கவர்னராகப் பதவி வகித்த காலத்தில் (1828—1835) முடிவாக ஒழிக்கப்பெற்ற தக்குகள் என்பார், கொலை செய்வதையே தங்கள் கலையாகப் போற்றி வந்தனர். இதைப் பற்றிய குறிப்பினை "பரணி" என்னும் அறிஞரே முதன் முதலில் கூறி உள்ளவர். சுல்தானின் ஆற்றலின்மையைப் பயன் படுத்திக்கொண்டு அவரைக் கொல்லப் பல சூழ்ச்சிகள் செய்யப்பெற்றன. அரச ஆணை புறக்கணிக்கப் பெற்றது. 1290'ல் இரான்தம்பூரைக் கைப்பற்றச் சுல்தான் செய்த முயற்சி தோல்வியுற்றது. ஆனல் மங்கோலியப் படையெழுச்சி எதிர்க்கப்பட்டது. அவர்களில் இந்தியாவில் தங்கியோர் "புதிய முஸ்லிம்கள்" எனப் பெயர் பெற்றனர். நாட்டில் வறுமை ஏற்பட்டு மக்கள் துன்புற்றதைப் பற்றிச் சுல்தான் கவலை கொள்ளவில்லை.

அலாவுதீனின் தேவகிரிப் படையெழுச்சி. ஜலாலுதீனின் இராணுவ நடவடிக்கைகளின் சிறப்பின்மையை மறைக்கும் வகையில் அலாவுதீனின் தேவகிரிப் படையெழுச்சி அமைந்துள்ளது. பில்சாவைக் கைப்பற்றிச் சூறையாடிய பின் இரண்டு ஆண்டுகள் கடந்து 1294'ல் தேவகிரிப் படையெழுச்சியை அலாவுதீன் தொடங்கினர். அவர், தம் தந்தையின் உடன் பிறந்தாரும் தமது மாமனருமான ஜலாலுதீனின் உத்தரவு பெற்றுக்கொண்டு, சந்தேரியைத் தாக்கும் நோக்குடன், காராவிலிருந்து புறப்பட்டார். இராமச்சந்திரன் என்ற யாதவகுல மன்னனும் அவர் மகன் சங்கரனும், தமது தலைநகரான தேவகிரியைக் காப்பாற்றுவதற்குச் செய்த முயற்சிகள் தோல்வியுற்றன. அளவற்ற கொள்ளைப் பொருளுடன் வீர முழக்கம் செய்துகொண்டு காரா திருப்பினர் முஸ்லிம் வெற்றி வீரர். இதனைப் பற்றி பெரிஷ்டா (FERISHTA) கூறுவதாவது "திட்ட அமைப்பு, அதனை நிறைவேற்றும் துணிவு, அச்சாதனை

யின் விளைவாக ஏற்பட்ட நல்வாய்ப்புக்கள் முதலிய எல்லா வகையிலும் இவ்வீரச் செயலுக்கு இணை வரலாற்றில் காண்பதரிது''. தம் மருமகனின் வெற்றியை அறிந்த மாமனார் வீரரை வரவேற்க குவாலியரிலிருந்து தில்லிக்குச் சென்றார். அவர் அவ்வாறு செய்யவேண்டாமென்று சிலர் கூறிய அறிவுரையை அவர் பொருட்படுத்தவில்லை. அலாவுதீன் தந்திரமாக அவரைக் "காரா" வுக்குச் செல்லச் செய்து அங்கே அவர் தம்மை அன்புடன் தழுவிக் கொள்ளும்பொழுது கொலை செய்து விட்டார். நன்றிமறந்த இக்கொடிய செயலைக்கண்டு துருக்கியரே அதிர்ச்சி அடைந்தனர்.

அரசைக் கைப்பற்றுதல். கொலை செய்தபின் அலாவுதீன் தில்லிக்குச் சென்று, தாம் கொள்ளை அடித்துவந்த பொருளைப் பரிசாக வழங்கி தலைமையானவர்களைத் தம் வசப்படுத்திக்கொண்டு 1296'ல் அரியணை யேறினார். காலஞ்சென்ற சுல்தானின் குடும்பத்தினர் அரசியலில் தலையிடாமலிருக்கச் செய்யச் சிறந்த முயற்சிகளை எடுத்துக் கொண்டார். ஜலாலுதீனின் அவல முடிவுக்குக் காரணம், அக்காலத்துக்குத் தேவையான ஆற்றலும் கடுமையும் அவரிடம் இல்லாமையே எனலாம். அவருடைய முதுமைப் பருவமும் தளர்ச்சியும், கலகக்காரருக்கு நல்வாய்ப்பாக அமைந்தன. அவருடைய குறைபாடுகளைத் தந்நலத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார் அலாவுதீன். அலாவுதீனின் திறமையும் அரச தந்திரமும் தேவகிரியைக் கொள்ளையிட்டபின் அவர் பெற்ற பொருட் குவியல்களும் அவர்கொண்ட பேரவாவை வெற்றியுடன் நிறைவேற்ற உதவின. தாராளமும் கண்டிப்பும் நிறைந்த அவர் இயல்முறை அவருடைய "சுல்தான்" பதவியை வலிமைப் படுத்தியது.

அலாவுதீனின் குறிக்கோள். தில்லியில் அலாவுதீனுக்கு முற்பட்ட அரசர்கள் மிகுதியாக முயன்றும், முஸ்லிம் ஆட்சி வட இந்தியாவில் உறுதியாக நிலைபெறவில்லை. தென் இந்தியா முழுவதும் இந்து அரசர்களின் கீழிருந்து வந்தது.

சுல்தானியத்தை நிலைகுலையச் செய்யக்கூடிய மூன்று பேர் இடையூறுகள் தொடர்ந்து வந்தன. அவை வருமாறு:- (1) நடு அரசின் ஆற்றலின்மை. (2) முஸ்லிம் செல்வர்கள், இந்து சிற்றரசர்கள், இந்துத் தலைவர்கள் முதலியோரின் வலிமை; (3) அடிக்கடி கொடிய மங்கோலியப் படையெழுச்சி களேற்பட்டதின் விளைவாக வடமேற்கு எல்லைப்புறத்தின் காவலற்றநிலை. ஜலாலுதீனின் ஆட்சி, நிலைமையை மேலும் கேடுறச் செய்திருந்தது. ஆகவே, அரசைத் தகர்த்தெரியக்கூடிய இடையூறுகளை அழித்து வடஇந்தியாவில் முஸ்லிம் ஆட்சியை வேரூன்றச் செய்வதற்கான அடிப்படையை வலிமையடையச் செய்வதும், வட இந்திய தென்னிந்திய அரசர்களால் அரசுக்கு இன்னலேற்படாவண்ணம் காப்பதும் அவருடைய முக்கிய குறிக்கோளாகும். மேலும் சிறந்ததோர் ஆட்சி முறையை அமைப்பதும் அவர் கருத்தாகும். இவற்றை நிறைவேற்ற வலிமை வாய்ந்த படையும் குறைவிலாக் கருவூலமும் இன்றியமையாதனவாயிருந்தன. இனி, அலாவுதீன் தம்முடைய குறிக்கோள், தேவைகள் முதலியவற்றிற்கேற்ப எவ்வாறு தமது உள்நாட்டு, வெளிநாட்டு இயல்முறைகளை அமைத்துக் கொண்டாரென்று பார்ப்போம்.

அலாவுதீனின் செருக்குற்ற எண்ணங்கள். அலாவுதீன் அவராட்சியின் முதல் மூன்று ஆண்டுகளில் பெற்ற வெற்றி களால் மிகவும் செருக்கடைந்தார். ஒரு மதத்தை ஏற்படுத்துவதிலும் உலகை எல்லாம் வென்று தன்கீழ்க் கொண்டு வருவதிலும் தீர்க்கதரிசி முகம்மதுவையும், மகா அலெக்சாந்தரையும் பின்பற்றி ஒழுகவேண்டுமென்பதிலும் அவருக்குப் பெரு விருப்பம் இருந்தது. இதுபற்றித் தில்லி கொத்தவால் அலா-உல்-முல்க் என்பாரின் (வரலாற்றறிஞர் பரணியின் நெருங்கிய உறவினர்) கருத்தை அறிய அலாவுதீன் முற்படுகையில் அவர் துணிவாக, சமயமும் அரசியலும் தனித்தனியானவை என்றும் உலகை வெல்லும் காலம் கடந்துவிட்டது என்றும் அடக்கப்பெறுதிருந்த வட இந்தியச் சிற்றரசர்களை வெல்லுவதையும் மங்கோலியப் படையெழுச்சி ஏற்படாவண்ணம் தடைசெய்து காப்பதையும் சுல்தான் தம் கடமை

களாகக் கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தினர். சுல்தான் அச்சீரிய முடிபினை ஏற்றுக்கொண்டமை மிகவும் போற்றற் குரியது. ஆனால் அவர், தம்மை "இரண்டாவது அலெக் சாந்தர்" என்று புகழ்ந்து கொள்ளும் ஆர்வத்தை மாற்றிக் கொள்ள விரும்பாததால் அப்பட்டத்தைத் தாம் வெளியிட்ட காசுகளில் பொறிக்கச் செய்தார். பின்னர், தம் பகற்கனவை மறந்து இயன்றதில் எல்லாம் வீரத்துடன் செயலாற்றினர். 1299'ல் இரான் தம்போரைக் கைப்பற்ற முயன்று இரண்டு ஆண்டுகளில் அதில் வெற்றி கண்டார். அதற்கிடையில் அவருக்கு எதிராகச் சில கலகக்காரர் சூழ்ச்சிகள் செய்து வந்ததால், கிளர்ச்சியை எவ்வாற்றானும் ஒழிப்பதென்ற உறுதியுடன் செயலாற்றத் தொடங்கினர்.

## பகுதி 7

### உள்நாட்டு இயல் முறை

**அமைதியும் ஒழுங்கும் ஏற்படுத்தப்படுதல்.** ரான்தம் போரைக்கைப்பற்றிய பிறகு அலாவுதீன், தில்லிக்குத் திரும்பி, நாட்டுக் கலவரங்களின் அடிப்படைக் காரணங்களை ஆய்ந்து மேல் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதில் முனைந்தார். பொதுவாக, சுல்தானின் பொச்சாப்பு (கவனக்குறைவு), குடிப் பழக்கம் மிகுதி காரணமாக வளர்ந்த சோம்பேறித்தனம் முதலிய பல்வேறு குறைபாடுகளை உணர்ந்தார்; அவற்றை அறவே ஒழிக்கச் சட்டங்கள் இயற்றினர். கடுமையான வகையில் சொத்துக்கள் கைப்பற்றப்பெற்றன. அறவழியில் வழங்கப்பெற்ற நிலங்களையும் சுல்தான் பறிமுதல் செய்தார். வரிதண்டும் அதிகாரிகள் கூடியவரையில் மிகுதியான வரிகளை வாங்குமாறு ஆணையிடப்பெற்றனர். மக்கள், தமது வாழ்க் கைக்கு இன்றியமையாத் தேவைகளைத் தேடுவதிலேயே தங்கள் காலம் முழுவதையும் கழிக்கவேண்டியிருந்ததால், கலகத்தைப்பற்றிக் கருதவும் சூழ்நிலை இடந்தரவில்லை என்று அறிஞர் பரணி குறிப்பிடுகிறார்.[1] சுல்தான் அமர்த்திய ஒற்

1. H. M. Elliot and Dowson (E. & D.), The History of India as told by its own Historians (8 Volumes, 1867—77), III—p.179

றர்கள், நாட்டு மக்களைப்பற்றியும் அலுவலாளரைப்பற்றியும் உள்ள செய்திகளை அவருக்கு நன்கு அறிவித்து வந்தனர். இம்முறையின் கடுமை காரணமாக, அலாவுதீனின் ஆயிரக்கால் மாளிகை[1] போன்ற பெரிய அரண்மனைகளில்கூட பெருஞ் செல்வர்கள் உரக்கப் பேசுவதற்குத் துணிவற்றிருந்தனர். பேசவேண்டியவற்றை அறிகுறிகளால் அறிவித்தனர்.[2] குடிப் பழக்கம், வெறியூட்டும் சாராயம், இன்தேறல் முதலியவற்றை விற்றல், பகடைக்காயாட்டம் முதலியன தடைசெய்யப்பட்டன. அலாவுதீன் ஜஹாங்கீரைப்போலன்றி, தமது ஆணைகளின்படி தாமும் ஒழுகி பிறருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர், சிற்சில தனி இடங்களில் குடிப்பழக்கம் காணப்பட்டபோதிலும். பொதுவாக மது அருந்துதல் மறையலாயிற்று. சதித்திட்டங்கள் குறைந்தன. மக்களுரிமை கட்டுப்படுத்தப்பெற்றது. அரச னின் அனுமதியின்றி எந்தப்பெருஞ்செல்வரும் மற்ெருரு பெருஞ் செல்வரின் இல்லத்துக்குச் செல்வதும், அவர்கள் விருந்துகள் ஏற்பாடு செய்வதும், கூட்டங்கள் கூட்டுவதும், தமக்கிடையே கூட்டுறவுகள் அமைப்பதும், அயலாரைத் தமது இல்லங்களில் வரவேற்றலும் தடை செய்யப்பெற்றன.[3] இந்துக்களைப் பொறுத்தவரை, சொத்துக்கள், மிகமிகக் கடுமையாகக் கைப் பற்றப்பட்டன. வரிவாங்கும் அதிகாரிகளைக் கண்டால் பெருங் காய்ச்சலிலும் கடுமையானவர்களென்று அவர்கள் அஞ்சினர். கணக்கர்பதவி, (குமாஸ்தா) பெருங்குற்றமெனக் கருதப்பட்டது. எவரும் தம் மகளை ஒரு குமாஸ்தாவுக்கு மணம்புரிந்துகொடுக்க முன்வருவதில்லை. முகம்மதிய குரு வான காஜி, சுல்தானிடம் இந்துக்களைப்பற்றிய சட்டநீதியைக் கூறுகையில் "இஸ்லாம் அல்லது இறப்பு" என்று குறிப்பிட் டிருப்பது நோக்கற்பாலது. ஆனல், ஹனிபா (Hanifa) கோட்பாட்டு வகுப்பினர், ஜிஸியா வரியைச் செலுத்தும் இந்துக்கள் காப்பாற்றப்பட வேண்டியவர் என்னும் கருத்தை அறிவித்தனர். "அவர்கள் (இந்துக்கள்) கப்பம் செலுத்துபவர். வரி அதிகாரிகள், அவர்களை வெள்ளி வேண்டுமெனக்கூறின்,

1. S. H. Hodivala, Studies in Indo-Muslim History (1939) p. 276.
2. E. & D., III pp. 179—80,
3. E. & D. III, p. 181, 183.

அவர்கள் அடக்கத்துடன், பொன்னை அளிக்கவேண்டும்; அதிகாரிகள் அவர்கள் வாயில் தூசியைத்தூவுவார்களெனின் அதையும் மறுக்காமல் விருப்பத்துடன் அவர்கள் வாயை மேலும் அகலவிரித்து அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்."[1] இத்தகைய இயல்முறை நேர்மையானது என்பதற்கு அலாவுதீன் பின்வருமாறு காரணங் காட்டினர். "இந்துக்கள், ஏழ்மை நிலைக்குக் கொண்டுவரப் பட்டதால்தான், கீழ்ப்படிந்து அடங்குவர். ஆதலால் அவர்கள் எதையும் சேர்த்துவைத்துக் கொள்ளாதபடி, ஆணையிட்டுள்ளேன். கூலம் (நெல் முதலியன), பால், தயிர் முதலியவற்றிலும் போதுமானவற்றை மட்டுமே அவர்கள் வைத்துக்கொள்ளுமாறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன."[1] சுல்தான், தமது பொது இயல் முறையை விளக்குகையில் குறிப்பிடுவதாவது:— "ஆயிரக் கணக்கில் மக்கள் அழியும் புரட்சிக் கலகங்களைத் தடுப்பதற்காகவும் இராச்சியத்துக்கும் மக்களுக்கும் எது நலம் பயக்குமென நான் கருதுகிறேனே அதனை நிறைவேற்றுவதற்காகவும் ஆணைகள் பிறப்பிக்கிறேன். மக்கள் அதில் கருத்தூன்றுவதில்லை; மதிப்புக் குறைவாக நடக்கின்றனர்; என் ஆணைகளைப் புறக்கணிக்கின்றனர். ஆதலால், அவர்களைக் கீழ்ப்படியச் செய்ய நான் மிகவும் கடுமையாக மாறும்படி கட்டாயப்படுத்தப் படுகிறேன். நான் செய்வது சட்டமுறையானதோ அன்றோ அறியேன்: ஆனல் நெருக்கடிக்கு ஏற்றதென்றும் நாட்டுக்கு நலம் பயக்கக் கூடியதென்றும் நான் எதைக் கருதுகிறேனே அதனை விதிக்கின்றேன்"[1].

**படை அமைப்பு.** உள்நாட்டு அமைதியின் பொருட்டும் மங்கோலியரின் எதிர்ப்பைத் தடுக்கும் பொருட்டும், 1303'ம் ஆண்டிலேயே, அலாவுதீன், அரசியலாரே திரட்டி அவர்களே கண்காணித்துவரும் ஒரு பெரிய வலிமை வாய்ந்த நிலைத்த படையை அமைப்பதில் கருத்தைச் செலுத்தினர். வெளிநாட்டுக்காவல் என்ற பெரும் தொல்லை, மங்கோலியரை, ஒரு முறை முடிவாகத் தோற்கடிப்பதனல், தீர்ந்துவிடா தென்பதை

1. E. & D. III, p. 184, 185 & 188,

அவர் நன்கு உணர்ந்திருந்தார். ஆதலால் வடமேற்கு எல்லைப் புறத்தில் எப்போதும் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார். முக்கிய இடங்களில் அரண்கள் அமைக்கப் பெற்றன. தகுதியும் மிகுந்த தேர்ச்சியும் வாய்ந்த வீரர்கள் படைத் தலைவர்களாக அமர்த்தப் பெற்றனர். பார்வையிடும் காலத்தில், சூதாக ஒன்றையொன்று மாற்றி அமைக்காதவாறு, குதிரைகள் நன்கு சூட்டுக் குறிகளிடப்பட்டன. வாசப் (WASSAF) என்னும் அக்கால வரலாற்றறிஞர் கூறுவதாவது:— "இவ்வமயம், பேரரசுப் படை, பயிற்சிபெற்ற 475,000 முகம்மதியப் போர் வீரர்களைக் கொண்டுள்ளது. அவர்தம் பெயர்களை, அதிகாரிகள் குறித்துவைத்துக் கொள்கின்றனர். அவர்களுடைய ஊதியம், உணவுப் பங்கீடு முதலிய செய்திகளை உதவி உணவுப்பொருள் அதிகாரி குறித்து வைத்துக் கொள்கின்றார். அவர்கள் யாவரும் ஆணைகளுக்கு அடங்கிக் கீழ்ப்படிகின்றனர். தமது சமயத்திற்காகத் தம்மையே தியாகம் செய்யவும் அவர்கள் தயாராக உள்ளனர். அரசாங்கக் கொட்டில்களில் நானூறு போர் யானைகள் உள்ளன; செய்திப் போக்குவரத்துக்காக, விரைவாகச் செல்லும் நாற்பது ஒட்டகங்கள் பயன்படுகின்றன".[1] போர் வீரரின் ஊதியம், பணமாகச் செலுத்தப்பட்டது. அஃது நிலையாக உறுதிசெய்யப்பட் டிருப்பினும் அது தேவைக்குக் குறைவாக இருந்ததால், சுல்தான் விலைகளைக் கட்டுப்பாடு செய்து வந்தார்.

விலைக் கட்டுப்பாடு. தக்காணத்திலிருந்து வெள்ளியும் பொன்னும், மிகுதியாக வந்ததால், நாட்டில் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களின் விலைகள் உயர்ந்தன. ஆதலால் சுல்தான் விலைகளைக் கட்டுப்படுத்தலானார். கூலங்கள், சர்க்கரை, நெய், எண்ணெய், துணி முதலிய பொருள்களின் விலைகள், அவற்றின் உற்பத்திச் செலவுடன் சிறிது இலாபம் சேர்த்து, முடிவு செய்யப்பெற்றன. வாணிகக்களக்கட்டுப் பாட்டு அதிகாரி ஒருவர், அமர்த்தப்பட்டிருந்தார். அவருக்கு உதவியாளர் பலருண்டு. ஒற்றர்முறை, இத்துறையிலும் நிலவியது அரசியலாரின் கூலக் களஞ்சியங்களில் கூலங்கள்

1. Ibid. p. 50.

தொகுத்து வைக்கப்பெற்றன. சில நிலைகளில் நிலவரி, கூலங்களாகவே வாங்கிக்கொள்ளப்பட்டது. கூல வாணிக ரும் கூலங்களை எடுத்துச் செல்வோரும் அரசியலாரின் கட்டுப் பாட்டின்கீழ் இயங்கவேண்டியதாயிற்று: சுல்தான் கூலங்களைத் திரும்பவும் தேய்த்துப் பொடியாக்கும் முறையைத் தடைசெய் தார். உற்பத்தியான இடங்களிலேயே பொருள்கள் விற்கப் படவேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டது. நிலவரிவாங்கும் அதிகாரிகள் தம் தொழிலில் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தனர். வாணிகக்கள விலைகளை, சுல்தான், பல இடங்களிலிருந்து அவ்வப்போது அறிந்துவந்தார். அரசியலாணைகளை மீறியவர் கள், மிகக் கடுமையாகவும் நாகரிகமற்ற முறையிலும் தண் டிக்கப் பட்டனர் விளைவில் அரசியலாருக்குரிய பகுதி உடனுக் குடன் வாங்கப்பட்டதாலும், விவசாயிகள் தாமதமின்றித் தமது பொருள்களை விற்பனை செய்ய வசதிகளிலிருந்ததாலும், மக்க ளிடம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கே நாணயங்கள் வழக்கிலிருந்த தாலும், கடுமையான சுல்தானைக் கண்டு நடுங்கிய அலுவ லாளர் நேர்மையாக நடந்துகொண்டதாலும், சட்டங்கள் ஒழுங்காக நிறைவேற்றப்பட்டதாலும், அலாவுதீனின் பொரு ளாதார இயல்முறை வெற்றியடைந்ததென்று அறிஞர் பரணீ கூறுகிறர். "அக்காலத்தில் கூரிய அறிவுள்ள மக்கள் யாவரும் வாணிகக் களங்களில் விலை ஒரே சீராக இருப்பதைக்கண்டு வியப்புற்றனர் ... ... ... அலாவுதீன் ஆட்சிக் காலத்தில், பல ஆண்டுகளில் போதுமான மழை பொழியவில்லை என்பதை நாம் மனத்திற்கொள்ளல் வேண்டும். அத்தகைய நிலைமை யைச் சமாளிக்க வேறு எந்த அரசராலும் முடிந்திராது." (பரணி) [1]. அலாவுதீனின் பொருட்காவல் வரித்திட்டம், பெரிய தோர் பொருளாதாரத்தவறு என்று குற்றஞ் சாட்டப்பட்டிருக் கிறது. அதாவது, அவர் இயற்கையாக இயங்கும் பொரு ளியல் தேவை தருவிப்பு விதிகளை உணராமல், பொருளா தார அடிப்படைத் தத்துவங்களைப் புறக்கணித்தாரென்பதாம். வாணிகக் களங்களில் படை ஆட்சியை நிறுவுவது மிகவும் போற்றற்குரியதன்று. ஆயினும் இடைக்கால ஐரோப்பியரைப் போல அவர் தகுந்த விலையே நிலவவேண்டுமென்ற குறிக்

---

1 E & D., III p. 195.

கோளேப் பெற்றிருந்தார். ஆதலால் அவருடைய பொருளாதார இயல்முறை கேடுபயக்கக்கூடியதென்று கூறுவதற்கில்லே. ஆனால் அலாவுதீன், இதுபற்றி தீவிரக்கொள்கையையுடையவராயிருந்ததுடன், படைகளின் தேவைகளே நிறைவேற்றும் கடமையுடையவராகவுமிருந்தார். எவ்வாறிருப்பினும் அலாவுதீன் தம் முயற்சியில் வெற்றி கண்டார். அவருடைய ஆட்சிமுறையும் கட்டுப்பாடுகளும் அ வ ர் த ம் அமைப்புமுறை ஆற்றலேக் காட்டா நிற்கும்.

வருவாய் முறை. (Revenue System). பொது வருவாயை அதன் உச்ச அளவுக்குப் பெருக்கவேண்டுமென்பதும் தனிப்பட்டவரின் நலங்களே இயன்ற அளவு குறைக்கவேண்டுமென்பதும் அலாவுதீனின் வருவாய் முறையின் நோக்கமாகும். தனிப்பட்டோர் அக் கீழ்நிலேயில் இருந்தால்தான் க ல க ம் அல்லது புரட்சியைப்பற்றி சிந்திக்கமாட்டார்கள் என்பது அவர் கோட்பாடு. நிலங்களே அளத்தல், முதலிய செய்திகளிலும் அவர் கருத்தைச் செலுத்தினர். விளேவில் பாதியை அரசியலார் பெற்றனர். அடுத்த அறுவடைக்காலம் வரையில் குடிகளுக்கு இன்றியமையாததான கூலங்கள் அவர்களிடம் இருந்தால் போதுமானது என்பது அவர்தம் கருத்து. மே லு ம் வீட்டுவரி, மேய்த்தல் வரி முதலிய பலவகை வரிகள் விதிக்கப்பெற்றன. அவ்வாறிருந்தும் சுல்தானுக்குத் தேவையான செல்வம் கிடைக்கவில்லே. ஆதலால் தென்னிந்திய நாடுகளேக் கொள்ளேயிடும் தொழிலில் அவர் ஈடுபட்டிருந்தார். அவருடைய முதல் தக்காணப் படையெழுச்சியின் விளேவாக அவர் அரசியல் தேவைகளே எல்லாம் நிறைவேற்றும் ஆதாரங்கள் பெருகியதால் அரசைக் கைப்பற்ற அவருக்கு முடிந்தது என்பதை அவர் மறக்கவில்லே.

## பகுதி 8

### கில்ஜி பேரரசு முறை

எல்லேப்புற இயல்முறை. பால்பனின் வடமேற்கு எல்லேப்புறக்கொள்கை எவ்வாறு போர் விருப்பத்தை அடிப்

படையாகக் கொண்டிருந்ததோ அதேபோல், அலாவுதீனுடைய இயல்முறையும் அமைந்திருந்தது. தொடர்ந்து நிலவிய மங்கோலியப்பேரிடர் தில்லி சுல்தானிய வரலாற்றை மிகவும் பாதித்துள்ளது. இந்திய முஸ்லிம்களின் போர் ஆர்வம் மங்காமலிருந்ததற்கும் அதுவே காரணமாகும். அது பதின்மூன்றும் நூற்றுண்டில் இராச்சியத்தின் அளவைக் கட்டுப்படுத்தியதுடன் அலாவுதீன் தென்னிந்தியாவில் கொள்ளைகளடிக்கவும் ஓர் காரணமாயிற்று. அச்சுல்தான் கொள்ளையை ஓர் அருங்கலையாகப் போற்றினர். மங்கோலியப் படையெழுச்சி ஏற்படக் கூடுமென்ற அச்சம், மக்கள் பண்பாட்டில் மாறுதலைப் புகுத்தியது. பஞ்சாப் மக்கள் அதனுல் மிகவும் துன்புற்றனர். அலாவுதீன், ஆட்சித் தொடக்கத்திலேயே இந்நிலையை ஆழ்ந்து சிந்தித்து முழுநிறைவான வகையில் அதனைத் தீர்க்க முற்பட்டார். முதலில் தம்முடைய படை, செல்வம் முதலியவற்றைப் பெருக்கிக்கொண்டு எல்லைப் புறத்தில் பயன் விளைப்பதில் உறுதியான காவற்படைகளை அமர்த்தினர். கோட்டைகள் பழுதுபார்க்கப்பட்டதுடன் புதிதாகவும் பல அமைக்கப்பெற்றன. திறமையாளர்களான வீரர் அவற்றைக் காவல் செய்தனர். படைத்துறையில் முக்கியமான இடங்களில் அரண்கள் எழுந்தன. போர்க்கருவிகள் யாவையும் அரசியலாரே செய்து வந்தனர். 1297 முதல் பல மங்கோலியப் படையெழுச்சிகள் ஏற்பட்டன. 1299'ம் ஆண்டில் நிகழ்ந்த கொடிய பெரும் படையெழுச்சியின் பொழுது போரில் வெற்றிக்குப்பின் வீர மரணம் எய்திய முஸ்லிம் வீரன் சாபர்கான் (ZAFAR KHAN) என்பாருகும். காசி மாலிக் (பிற்காலத்தில் கயாசுதீன் துக்ளக் எனப் பெயர் பெற்றவர்) என்ற வீரனின் திறமை காரணமாக 1304, 1307 முதலிய ஆண்டுகளில் ஏற்பட்ட படையெழுச்சிகள், வெற்றியுடன் முறியடிக்கப்பட்டன. அதன் பிறகே மங்கோலிய இடரிலிருந்து சுல்தானியராட்சிக்கு விடுதலை கிடைத்தது. "மங்கோலியர் கண்ட கனவு பலிக்கவில்லை. அதற்குக் காரணம் இஸ்லாமியப் படை அவர்களிடையே விளைவித்த அச்சமே ஆம். அவர்கள் உறக்கத்திற்கூட இஸ்லாமியக்கத்தி தமக்கு மேலே தொங்கிக்கொண்டிருக்கக் கண்டு நடுங்கினர். ஆகவே (இந்நாட்டில்) எங்கும் கவலை

நீங்கிற்று. குடிகள், அமைதியாக உழவுத் தொழிலிலீடு பட்டனர்.'' (பரணி)[1]

**வட இந்திய அரசுகளை வென்று கைக்கொள்ளல்.** உலூகானும் நூஸ்ரத்கானும், அன்ஹில்வாட், சோமநாதபுரம், காம்பே முதலிய இடங்களைக் கைப்பற்றியதின் விளைவாக 1297'ல் குஜராத், அலாவுதீன் கைக்கு வந்தது. வாகேலா குலத்தைச்சேர்ந்த கரன் என்னுமரசர், அங்கிருந்து தேவலா தேவி என்ற தம் நான்கு வயது மகளுடன், தேவகிரிக்கு ஓடினர். அவர் மனைவி கமலாதேவி, வெற்றி வீரரால் கைப் பற்றப்பட்டு, அலாவுதீனின், மனைவி அல்லது காமக்கிழத்தி யாக்கப்பட்டாள். சோமநாதபுரத்தில், கசினி முகம்மதுவின் அழிவுபாடுகட்குப் பிறகு அமைக்கப்பட்டிருந்த இலிங்கம், தில்லிக்கு அனுப்பப்பெற்றது. காம்பேயில் வெற்றிவீரர், வணிகச் செல்வரைக் கொள்ளையடித்தனர். காபூர் (KAFUR) என்ற அழகிய இந்து பேடி (EUNUCH) ஒருவனை மிகுதியான பொருள் கொடுத்து வாங்கினர். அவன், பின்னர் சுல்தானின் அன்பைப்பெற்று உயர்நிலைக்கு முன்னேறினன். இரண்டு ஆண்டுகட்குப்பின், ராந்தம்பூர், முற்றுகையிடப்பட்டது. முஸ்லிம் தளபதி இறந்து விட்டதாலும் ராணாஹம்மீரா தாக்கிய தாலும் அப்பொழுதைக்கு முற்றுகை கைவிடப்பட்டது. ஆனல் 1301'ல் அக்கோட்டையை முகம்மதியர் தம் வசப்படுத்திக் கொண்டனர். ராணா மடிந்தார். 1303'ல் சித்தூரும், இரண்டு ஆண்டுகட்குப்பின் மாளவமும் கைப்பற்றப்பட்டன. 1305'ல் அலாவுதீன் வட இந்தியாவின் தலைவரானர்.

**புதிய முஸ்லிம்கள்.** 1297'ல் குஜராத்திலிருந்து படை திரும்பியவுடன், புதிய முஸ்லிம்கள் கலகம் செய்தனர். கலகம் கடுமையாக அடக்கப்பட்டது. கலகக்காரர், அவர் மனைவியர், குழந்தைகள் யாவரும் நாகரிகமற்ற முறையில் தண்டனைகள் பெற்றனர். கலகக்காரர், அரசியல் பதவிகளினின்று விலக வேண்டியதாயிற்று. அவர்தம் மானியங்கள் முழுமையுமோ ஓரளவோ கைப்பற்றப்பட்டன. சுல்தானைக் கொலைசெய்ய

---

1. E. & D., III p. 199.

அவர்கள் முயற்சி செய்ததால் 20,000க்குமேல் 30,000 வரை வெட்டி வீழ்த்தப்பெற்றனர் இக்கடுமையான நடவடிக்கைகளின் பயனாக மீண்டும் அவர்களால் இடர் ஏற்படவில்லை

**கில்ஜி பேரரசுமுறை.** அலாவுதீன், அவர் முன்னோரைப் போல வட இந்தியாவில் மட்டும் தம் கருத்தைச் செலுத்த விரும்பவில்லை. ஆனால் தம் பேரரசின் எல்லை தென்னிந்தியாவிலும் பரவி விரிவுறவேண்டுமென்பது அவர் விருப்பமன்று. தெற்கில் இந்து ஆட்சிக்குப் பதிலாக முஸ்லிம் ஆட்சி ஏற்பட வேண்டுமென்பதும் அவர் நோக்கமன்று. தென்னிந்தியப் படையெழுச்சிகளின் நோக்கம், கொள்ளையடிப்பதேயாம். கொள்ளைப் பொருள்களைக் கொண்டு வட இந்தியாவில் சுல்தானியராட்சியை வலிமையுறச் செய்யவேண்டுமென்பதே அவர் குறிக்கோள் ஆகவே, அலாவுதீனின் தேவகிரிப் படையெழுச்சியின் தொடர்ச்சியாக, மாலிக் காபூர் (Malik Kafur) தெற்கில் படையெடுத்தார். மேலும் தென்னாட்டு அரசர் பெருமக்கள், தம்முடைய வலிமையை உணரவேண்டுமென்பதும், தாம், வட இந்தியாவில் நிலைநாட்டிவரும் முஸ்லிம் ஆதிபத்தியத்திற்கு அவர்கள் இடையூறு செய்யாமலிருக்க வேண்டுமென்பதும் அலாவுதீனின் நோக்கங்களாம். அவர்; மாலிக் காபூருக்கு விடுத்த ஆணைகளிலிருந்து அவருடைய குறிக்கோள் புலனாகிறது. "அரசன் தனது பொருட்குவை, அணிகலன்கள், யானை, குதிரைகள் முதலியவற்றைத் தந்துவிடவும், அடுத்த ஆண்டிலும் யானைகளையும் பொருட்குவையையும் அனுப்பவும் ஒப்புக்கொண்டால், மாலிக்காபூர் ஒப்புக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லையேல் அவ்வரசன், தில்லிக்குக் கொண்டுவரப்பட வேண்டும்."[1] ஆகவே தென்னிந்திய நாடுகளைத் தம்முடன் இணைத்துக்கொள்ள வேண்டுமென்பது சுல்தானின் நோக்கமன்று. நன்கு ஆராயாமல் நாடுகளைக் கவர்ந்து கொண்டு செல்வதால், பகைமை, எதிர்ப்பு, கலகம் முதலியன பெருகும் என்பதை உணர்ந்த அலாவுதீனின் அரசியல் முறை சிறப்புடையது. இப்பண்பு அலாவுதீனின் பேரரசு

1 E. & D. III. p. 201

முறையினின்று முகம்மது பின் துக்ளக்கின் முறையை வேறு பிரிக்கிறது. [1]

தென்னிந்திய வீரச்செயல்கள். அலாவுதீன், 1305'ல் வட இந்தியாவில் தன்னுதிபத்தியத்தை நிலைநிறுத்தினுர். 1307'ல் மங்கோலியர் நசுக்கப்பெற்றனர். பெரும்பாலும் அதே ஆண்டில் மாலிக்காபூர் என்ற தளபதி தென்னிந்தியா விற்குப் புறப்பட்டார். தேவகிரி தாக்கப்பெற்றது. அதன் தலைவர் இராமசச்சந்திரன் முறியடிக்கப்பட்டார். குஜராத்தின் முன்னுள் மன்னரின் மகள் தேவலா தேவி அங்கு தங்கி யிருந்த செய்தி முன்னர் குறிப்பிடப்பெற்றது. அவள் மிகுந்த அழகுடையவள். அவள் கைப்பற்றப்பட்டனள். 1314'ல் அலாவுதீனின் மூத்தமகன் (கிஸர்கான்) அவளை மணந்தான். அவர்களுடைய காதல், அமீர் குஸ்ருவின் பாக்களில் சிறப்பிக்கப் பட்டுள்ளது. பின்னர் அவளை, சுல்தான் முபாரக்ஷாவும் குஸ்ருகானும் தமது உடமையாக்கிக் கொண்டனர். அந்த இந்து இளவரசியின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாகியது. இராமச் சந்திரன் தாம் இறக்கும்வரை தில்லி அரசுக்கு அடங்கி கீழ்ப் படிந்து நடந்தார். மாலிக் காபூரின் தேவகிரிப் படையெழுச்சி ஏற்பட்ட ஆண்டு, 1306 என்று பெரிஷ்டா Ferishta) கூறு கிருர்; 1307 என்று அமீர் குஸ்ருவும் 1308 என பரணியும் கூறுவர். 1309'ல் காபூர் காகதியத் தலைநகர் வாரங்கல்லை எதிர்த்துச்சென்று அதை முற்றுகையிட்டு, மன்னன் இரண் டாம் பிரதாபருத்திரனிடமிருந்து "கனிப்பொருள்கள், காய்கறி கள், விலங்குகள்" முதலிய யாவற்றையும் பெற்றுக்கொண்டு 1310'ல் ஆயிரம் ஒட்டகங்களின்மீது பொருட்குவையைச் சுமத்திக்கொண்டு தலைநகருக்குத் திரும்பினுர். அதே ஆண்டில் அத்தளபதி, ஹொய்சள நாட்டிற்படையெடுத்து மூன்ரும் வீர வல்லாளனை முறியடித்து அவரிடமிருந்த யாவற்றையும் (அவன் "பூனுலைத் தவிர்த்து") கைப்பற்றினர் பாண்டியநாட்டு அர சுரிமைப்போரே முஸ்லிம்களை அந்நாட்டுக்கு அழைத்தது. காபூர் மதுரை சென்றதும் அரசர் ஓட்டமெடுத்தார். இராமேச்

1 S. Krishnaswami Aiyangar, South India and Her Muhammadan Invaders (1921), pp 83-4

வரம்வரை, முஸ்லிம் தளபதி வெற்றிமுழக்கம்செய்துகொண்டு சென்றார். அங்கே ஓர் மசூதி கட்டப்பட்டதாக, பெரிஷ்டா கூறுகிறார். 1311'ல் மாலிக் மிகுந்த செல்வத்துடன் தில்லிக்குத் திரும்பினார். அடுத்த ஆண்டில் தேவகிரி மன்னன் சங்கரன் ஆண்டுக்கப்பத்தைச் செலுத்தத் தவறியதாலும், சுல்தானைப் பகைத்துக்கொண்டதாலும், கொல்லப்பட்டான். அப்படையெழுச்சிக்குப் பிறகு காபூரின் மதிப்பு உச்சநிலையை அடைந்தது. அலாவுதீனின் பேராட்சி நிலையும் அதன்மேல் எல்லையை எய்தியது.

## பகுதி 9

### ஆட்சித்துறையில் அலாவுதீன் ஒரு புது முயற்சியாளர்

அவர் தன்மை. அலாவுதீன் அவராட்சியின் இறுதி ஆண்டுகளில், மாலிக் காபூரின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட நேர்ந்தது. அத்தளபதி தன் தலைவனின் குடும்பத்தில் பகைமையைப் புகுத்தி, முடிவில் சுல்தானை அவருடைய மிக இளைய மகன் ஷிஹாப் உத்தீனுக்கு அரசை அளிக்கும்படி செய்தார். குஜராத், இராசபுதனம், தேவகிரி முதலிய பகுதிகள் அலாவுதீனை எதிர்க்கலாயின. மனமுடைந்த சுல்தான் 1316'ல் உயிர்நீத்தார். அவர், பின்விளைவுகளைப் பற்றி அஞ்சாது தம் விருப்பப்படியே எதையும் செய்துமுடிக்கும் மனத்திட்பமுடையவர். அவருடைய செயல்களில் சிலவற்றை மக்கள் விரும்பவில்லை என்பதை உணர்ந்தும் அவர் கலங்கினாரில்லை. இராணுவ வீரமும் பொது ஆற்றலும் கலந்து அவரிடம் விளங்கின. செயலாற்றும் திறமை அவரிடம் வீறிட்டிருந்தது. தம் நுண்ணறிவைக் கொண்டே எல்லாச்சிக்கல்கட்கும் விளக்கம்காண அவர் முயன்றார். அவர் சுல்தானாக அமர்வதற்குமுன் எழுதப்படிக்கத் தெரியாதவராயிருந்தபோதிலும், கலை, இலக்கியம் முதலியவற்றை ஆதரித்தார். அரசின் உண்மைத் தேவைகளை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அனல் கொடுமை அவரிடம் மிளிர்ந்தது. எத்தீமையையும் செய்ய அவர் தயங்கவில்லை. அவருடைய பேரவாவுக்கு வரையறையில்லாததால், இகழத்தக்க முறையில் கொலைகளை நிகழ்த்தி

வந்தார். கருணையின்றித் தென்னிந்தியாவில் அவர் கொள்ளை களை நிகழ்த்தியது அவர் மனச்சான்றைச் சிறிதும் உறுத்த வில்லை. ஜலாலுதீனைக்கைவிட்டு தம்மைச் சார்ந்தோரையும், அலாவுதீன், நம்பிக்கைமோசக் குற்றத்துக்காகத் தண்டித்தார். அக்கால மனப்போக்குக்கு ஒரு எடுத்துக்காட்டாக அவர் விளங்கினார். சிலபோது அவர் செயல்கள் கொடுமையும், அட்டூழியமும் நிறைந்திருந்தன. அவருடைய பெயரைச்சூழ்ந் துள்ள அத்தகைய தீய பண்புகளாகிய இருளுக்கிடையில், அவர், சிறந்த ஆட்சிமுறை ஆற்றலும் பலவகைப்பட்ட திறமைக்கூறுகளும் வாய்க்கப்பெற்றவர் என்ற ஒளி வீசுகிறது.

செயல்கள். அலாவுதீன், சட்ட எதிர்ப்புக் குற்றம் புரி வோரை நன்கு அடக்கி, நாட்டில் அமைதியையும் ஒழுங்கை யும் ஏற்படுத்தியிருந்ததால் உழவரும் வழிப்போக்கரும் போது மான காவலைப் பெற்றிருந்தனர். இன்றியமையாப் பொருள் களின் விலைகள் குறைக்கப்பட்டிருந்தன. மட்டுமீறிய குடிப் பழக்கம் ஒழிந்தது. சுல்தான், மங்கோலிய, இந்து, முஸ்லிம் கலகக்காரருக்கு நல்லபடிப்பினைகளைக் கற்பித்தார். 'அலாவுதீன் மிகச்சிறந்த சுல்தான்களில் ஒருவர்; மக்கள் அவரை வான ளாவப் புகழ்ந்தனர்'' என்று இபின்பதூதா குறிப்பிடுகிறார்.[1] பரணி, அலாவுதீனைப்பற்றிக் குறிப்பிடும் பின்வரும் மதிப்பீடு கருதுதற்குரியது. அலாவுதீனின் அமைச்சர்களும் தானைத் தலைவர்களும் அவர்களுடைய துணிவு, பற்றுறுதி, ஆற்றல் முதலியன காரணமாக, அரசை நிலைபெறச்செய்ததுடன் அக் காலத்திய அரசியல், ஆட்சிமுறைச் செய்திகளில் புகழத்தக்க மேன்மையையும் பெற்றனர். ... .... ... ... வேறு எக்காலத்தி லும், நாம் காணவும் கேட்கவும் முடியாத பல சிறப்புமிக்க நிகழ்ச்சிகளை அலாவுதீன் காலத்தில் காண்கிறோம்.

1. கூலம், துணி முதலிய பல இன்றியமையாப் பொருள் களின் மலிவு.

2. வெற்றிமேல் வெற்றி.

3. மங்கோலியர் ஓட்டமும் அழிவும்

---

1. E. & D., Op. cit., p. 599.

4. குறைந்த செலவில் நிறைவான படை அமைப்பு

5 கலகக்காரர் கடுமையாக நசுக்கப்பட்டு பொதுவாக அமைதி நிலவுதல்

6. எத்திசைகளிலும் சாலைகளில் காவல் அமைப்பு

7. வணிகரின் நேர்மை

8 மசூதிகள், சிறு கிளைக் கோபுரங்கள், கோட்டைகள் முதலியன புதுக்குதலும், அமைத்தலும்.

9. ஆட்சியின் இறுதியான பத்து ஆண்டுகளில் முகம் மதியர், நேர்மை, உண்மை, முறைமை, அடக்கம் முதலிய பண்புகளுடன் பொலிதல்.

10. கல்வியறிவாளர் பலர், சுல்தானின் ஆதரவு இன்றியே செழிப்புற்று வாழ்தல்."[2]

அலாவுதீனின் ஆட்சிக்காலத்தின் இறுதிப்பகுதி, அவருக்கும் அவர் மக்களுக்கும் மகிழ்ச்சியற்றதோர் காலமென்பதில் ஐயமில்லை. அவருடைய முரட்டுத்தனமான முறைகள் அரசியலிலும் ஆட்சிமுறையிலும் நிலையான வெற்றியை அளிக்கத் தக்கனவா என்ற கேள்வி பிறக்கலாம். தவறற்றதும் நீடித்திருக்கக் கூடியதுமானதோர் அரசியலமைப்பை அவர் ஏற்படுத்தியதாகக் கருதமுடியாது. ஆனால் அக்காலத்தில் தில்லி சுல்தானியத்திற்கு இன்றியமையாத் தேவைகளை ஆழ்ந்து உணர்ந்து அவற்றை ஆற்றலுடனும் ஆர்வத்துடனும் நிறைவேற்றிய பெருமை அவருக்கு உண்டு. மாறுபாடு இல்லாத குறிக்கோளை அமைத்துக்கொண்டு, அவர்தம் இயல் முறைக்கு ஊறுபாடு இல்லாமற் செய்துகொண்டார். ஐயப்பாடுகட்கு இடையே ஊசலாடும் தன்மை அவரிடமில்லை. அவருடைய அயல்நாட்டு இயல்முறை மாபெரும் வெற்றியாகும்.

**அமைதித்துறை வெற்றிகள்.** அலாவுதீன் அமைத்த அஞ்சல்முறை, கட்டடக் கலைக்கும் ஆட்சிமுறை வளர்ச்சிக்கும் அவராற்றிய பணிகள், அவர்தம் இலக்கிய ஆதரவு முதலிய அமைதித்துறைப் பணிகளில் அவர் வெற்றி கண்டார். தில்லி

2. Ibid. pp. 206-7

யில் அவரெடுத்த மசூதியில் இந்தியப் பண்புகள் இல்லை. முழுவதும் முஸ்லிம் முறையையே அது தழுவியுள்ளது. பல பள்ளிவாசல்களும் கல்லூரிகளும் பொதுநலத்திற்கான கட்டடங்களும் அவரால் அமைக்கப்பெற்றன. தில்லி சுற்றுப்புறத்தில் அரண்களுடன் அமைந்த 'சீரி' என்ற நகரத்தைச் சுல்தான் 1303'ல் தோற்றுவித்தார். பாவலர்களும் மதாச்சாரியர்களும் திரள் திரளாக அவரவைக்கு வந்தனர். "புலவரேறு" என்று புகழ்ப்பெற்ற அமீர்குஸ்ரு, அக்காலத்தில் மிகவும் புகழ்வாய்ந்த அறிஞராவர். இவை எல்லாவற்றையும்விட, அலாவுதீன் ஆட்சிவினைஞர் என்ற முறையில், பிரோஸ்துக்ளக், ஷெர்ஷா, அக்பர் முதலியவருடன் ஒப்பிடத் தக்க புகழ்பெற்றவர். முதல் முயற்சியாக அவர் எடுத்துக் கொண்ட செயல்கள் பல இடர்ப்பாடுகளுடன் கூடியவை. நேர் முறையிலும் எதிர்மறையிலும் அவராட்சி முறையின் படிப்பினைகள் முழுவதும் மறைந்துவிடவில்லை. ஆட்சிமுறை வளர்ச்சிக்கு அவராற்றிய தொண்டுகளில், நிலவரித்திட்டம், பொதுப்பணியாளருக்கு ஜாகீர் கொடுக்காமல் பணமாக ஊதியமளித்தல், பேரரசுப் படை அமைப்பு, அரசியலாரே அதனைக் கண்காணித்தல், குதிரைகளுக்குச் சூட்டுக்குறியிடுதல், போர்வீரர் பற்றிய செய்தித் தொகுப்பு (ஊழல்களை ஒழிக்கும் பொருட்டு) முதலியன குறிப்பிடத்தக்கன. மேலும் அவர் அரசியலைச் சமயத்தினின்றும் வேறு பிரித்தார். ஆயினும் அவர் இஸ்லாமின் வளர்ச்சியை ஆதரித்தாலும், அவருடைய இராணுவ வீரம் காரணமாகவும் வைதீகப் பற்றுள்ள முஸ்லிம்களும் அவரை அன்புடன் போற்றினர். சுல்தானியத்தின் அளலவப் பெருக்கி, தென்னிந்தியாவில் ஆதிக்கம் செலுத்தியதுடன், அலாவுதீன், இருபது ஆண்டுகட்கு மேலாக வட இந்தியாவில் புதியதோர் வலிமை உணர்ச்சியுடன் ஆட்சிநடத்தி வந்தார்.

## பகுதி 10

### அலாவுதீன்கில்ஜியின் பின்வந்தோர்

முபாரக்ஷா (1316—'20). அலாவுதீன் இறந்தவுடன் இராச்சியத்தில் முதன்மையானவனயிருந்த காபூர், சுல்தானின்

குமாரர்களில் இருவரின் (கிஸர்கான், ஷாதிகான்) கண்களைப் போக்கி, முபாரக்கான் என்ற மகனையும், அவன் தாயையும் சிறையிலடைத்துட்டு, ஆறு ஆண்டுகளே நிரம்பப் பெற்றிருந்த ஷிஹாப் உத்தீனைச் சுல்தானுக அமர்த்தி தானே அரசப் பிரதிநிதியாக ஆட்சி புரியலானுன். அலாவுதீனின் குடும்பத்தை முடிவுறச் செய்துவிட்டு, தான் அரசுரிமையைப் பெறவேண்டுமென்பதே மாலிக்காபூரின் நோக்கம். அலாவுதீனின் மனைவியை மணந்து கொள்ளவும் அவன் முயற்சித்தான். ஆனுல் முறையற்ற வகையில் அவன்பெற்ற ஆதிக்கக் களிப்பில் அவன் திளைத்தது 35 நாட்களே ஆம். அவன் இழிசெயல்களைப் பொருத பெருஞ் செல்வர்கள் ஒன்றுகூடி அவனையும் அவன் உடந்தையாளர்களையும் கொன்றனர். பழைய சுல்தானின் மற்ருெரு மகனுன குத்புதீன் முபாரக்ஷா 1316'ல் பட்டமேற்ருர். இவர் குடிப்பழக்கத்தைத் தடை செய்யும் சட்டத்தை நீக்கினுர். பறிமுதலான நிலங்களை ஓரளவுத் திருப்பி அளித்துச் சிலரை மகிழ்ச்சியுறச் செய்தார். குஜராத்தில் மீண்டும் பேரரசின் ஆட்சி நிறுவப்பெற்றது. தேவகிரி மன்னன் ஹரபாலன் கலகம் செய்ததால் 1318'ல் அவன் உடற்றோலைச் சுல்தானே உரித்தெடுத்தார். யாதவ நாடு, சுல்தானியத்தின் ஒரு மாகாணமாகியது. அதே ஆண்டில், குஸ்ருகான், மாலிக்காபூரைப் போலவே, வாரங்கல்லிலும், பாண்டிய நாட்டிலும் படையெடுத்தான் சுல்தான், சிற்றின்பத்தில் மூழ்கலானுர். அழகிய மகளிர்மீது பேரவாவுற்று, அதனுல் இளைத்துச்சிதறுண்ட மனமுடையவராய்ப் பலரையும் ஐயப்பட்டுவரும் அவரது அறிவிலா வாழ்க்கை அவலமாகவே முடிந்தது. தாழ்ந்த குலத்திற்றோன்றி முகம்மதிய மதத்தைத் தழுவிய மாலிக்குஸ்ரு என்ற அவர் நண்பரே அவரைக் கொலை செய்தார் (ஏப்ரல் 1320). இத்தகைய முபாரக்ஷா, "சமய முழுமுதற்றலைவர்", "விண்ணுலக மண்ணுலக ஆண்டவனின் பிரதிநிதி" என்ற பெரும் பெரும் பட்டங்களைச் சூடியிருந்தாரென்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

குஸ்ருகான் **(1320).** கொலைசெய்து அரசுரிமைபெற்ற குஸ்ருகான், குஜராத் நாட்டில் தோட்டி சாதியில்

தோன்றியவர். தேவலாதேவி உட்பட உவளக மாதரை அவர் மிகவும் துயருறுத்தினர். ஆனால் அவர் விலக்கப்பட்டசாதியைச் சேர்ந்தவர் என்பதற்குத் தக்க ஆதாரமில்லையென்றும், அவர் தேவலாதேவியின் மூன்றாவது கணவனாக இருந்தார் என்பது தவறு என்றும் கூறுவாரும் உண்டு[1]. அவர் மாளவத்தின் பரமார இரசபுத்திரனாக இருக்கக்கூடு மென்றும் கருதப்படுகிறது[2]. எவ்வாறிருப்பினும் அவர் தம் உறவினரை ஆதரித்தார்; மக்களுக்கு நன்கொடைகள் வழங்கினார். பெயரளவில் முகம்மதியராக இருந்துகொண்டு இந்து ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதே அவர் நோக்கம். அவர், குரானை இழிவுபடுத்தி வைதீக முஸ்லிம்களுக்குச் சினமூட்டினார். அங்கிலேயில் இஸ்லாமைக் காப்பாற்றும் உறுதியுடன், காசிமாலிக் என்ற வீரர், தில்லிக்குச் சென்று, ஓடிக்கொண்டிருக்கும் குஸ்ருவைக் கைப்பற்றிக் கொலை செய்தார். அலாவுதீனின் கால்வழி முடிந்தது. பெருஞ்செல்வர் அளித்த முடியை ஏற்றுக்கொண்டு காசிமாலிக், கயாஸ் உதீன் துக்ளக் என்ற பட்டத்துடன் 1320'ல் தம் ஆட்சியைத் தொடங்கினார். இவ்வாறு, 13'ம், 14'ம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் முஸ்லிம் அரசின் அடிப்படை உண்மைக் கொள்கையான "வலியவன் வாழ்வான்" என்பதே உறுதியாயிற்று.[3]

**கயாஸ் உதீன் துக்ளக் (1320—'25).** கயாஸுதீன், கரௌணத் துருக்கிய இனத்தைச் சேர்ந்தவர். இவர் தாய் ஒரு இந்து மங்கை. அலாவுதீன் ஆட்சிக் காலத்தில், ஸாபர் கான் இறந்த பிறகு, மங்கோலியரை எதிர்த்து வீரப்போர் புரிந்த பெருமை இவருக்கு உண்டு. குஸ்ருகானின் புகழற்ற ஆட்சியின் முடிவுக்குப்பின், கயாஸுதீன், அலாவுதீனுடைய உறவினரின் துயரங்களைத் துடைப்பதில் முனைந்தார். அமைதியும் ஒழுங்கும் மீண்டும் நிலவின. வாரங்கல்நாட்டு இரண்டாம் பிரதாபருத்திரன் செலுத்தவேண்டிய திறையைச் செலுத்தாததால் அவரைத் தண்டிக்க, 1321'ல் தம் மகன் உலூக்கானை (பிற்கால முகம்மது பின் துக்ளக்) சுல்தான் அனுப்

1 & 2. Hodivala, op. cit., pp 369 & XVIII.
3. Ishwari Prasad, op. cit.. p. 287.

பினர். வாரங்கல்நாட்டை முற்றுகையிட்ட முஸ்லிம் படை தொத்துநோய் பரவியதாலும் பருவகாலம் ஏற்றதாக இல்லாததாலும், பின்வாங்கித் தேவகிரிக்குச் சென்றது. இரண்டாண்டுகட்குப் பின்னர், காகதிய அரசர் ஒடுக்கப்பட்டார். சுல்தானின் ஆட்சிமுறை, நீதியும் நடுநிலையும்கொண்டு விளங்கியது. வரித்திட்டங்களில் போதுமான கருத்துச் செலுத்தப் பெற்றது. ஆனல் இந்துக்கள் மிகக் குறைவான அளவுக்கே நன்மைகள் பெறுமாறு செய்வதில், சுல்தான் கண்ணுங் கருத்துமாயிருந்தார். அலாவுதீனின் இராணுவக் கட்டுப்பாடுகள் செவ்வனே போற்றப் பெற்றன. 1324'ல் வங்காளத்தில் கலகம் தோன்றியதால் அங்கு சென்று, பின் தில்லிக்குத் திரும்பி வந்தவுடன் அவர் வாழ்வு முடிவதாயிற்று. அவர் மகன் முகம்மது கட்டிய கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததால் அவர் மாண்டார். பொதுவாக, மகனே தந்தையைக் கொலை செய்தானென்று கருதுவதுஉண்டு. ஆனல் அணிமைக்கால அறிஞரொருவர், தந்தையின் சாவுக்கு மகன் பொறுப்பானவனென்பதை ஐயுறுகிறார்.[1] கயாஸுதீன், இஸ்லாமையும், சுல்தானியராட்சியையும், 'தூய்மையற்றோனிடமிருந்து' (குஸ்ருகான்) காப்பாற்றியவர் எனப் புகழப்படுகிறார் அமீர்குஸ்ரு அவருடைய அறிவை வானளாவப் புகழ்கிறார். துக்ளக் புரட்சியின் தலைவர், ஒரு போர்வீரராகவும், ஆட்சி வினைஞராகவும், ஒழுக்கமாகவும் நற்பண்புமிக்க ஆண்மகனாகவும் விளங்கினார். தில்லி சுற்றுப்புறத்தில் துக்ளகாபாத் என்னும் நகரம் அவரால் அமைக்கப்பெற்றது. அவருடைய கல்லறை பயபக்தி ஊட்டும் சிறப்புடன் கூடியது.

## பகுதி II

### முஸ்லிம் வரலாற்றறிஞர்கள்:
### பரணி, இபின் பதூதா முதலியோர்.

சியா உதீன் பரணி (Zia-ud-din Barani), இபின் பதூதா (Ibn Batuta) என்னும் இரண்டு அறிஞர்களின் வரலாற்று நூல்கள், முகம்மது

---

1 A. M. HUSAIN, The Rise and Fall of Muhammad bin Tughluq (1938), p. 74.

பின் துக்ளக்கின் ஆட்சி (1325 — 51) யைப்பற்றி அறிய உதவும் அடிப்படைச் சான்றுகளாம். இருவரும் அச்சுல்தான் காலத்தவர். பரணியின் (1286 — 1359) தாரிக்கிபிரோஸ் ஷாஹி என்ற நூல், பால்பன் முதல் பிரோஸ் துக்ளக்கின் ஆருவது ஆண்டு ஆட்சிவரை உள்ள சுல்தான்களின் வரலாருகும். இறுதியாக உள்ள சுல்தான்களின் பெயரையே அது பெற்று விளங்குகிறது. பரணியோ, அரசர், வெற்றி வீரர் முதலியோரின் செயல்களைக் குறிப்பிடுவதுடன், ஆட்சிமுறைக் கட்டுப்பாடுகள், மங்கோலியப் படையெழுச்சிகள், தென்னிந்தியப் படையெடுப்புகள், அலாவுதீனின் பொருட்காவல் சட்ட முறை, முகம்மதுபின் துக்ளக்கின் நாணய முறை, அவர் தலைநகரை மாற்றுதல், நாடுகள் கைப்பற்றும் அவருடைய பேரவா, பிரோஸின் அமைதியான ஆட்சி முதலியனவற்றை விளக்குகிருர். வரலாற்றின் பயனையும் வரலாற்றறிஞன் கடமைகளையும் இந்த ஆசிரியர் நன்கு உணர்ந்திருந்தார். முகம்மதிய அரசர்கட்கு அறிவுரைகளடங்கிய மற்ருெரு நூலையும் அவர் எழுதினர். பால்பனைப்பற்றி அவர் தமது தந்தை, பாட்டன், சுல்தானின் அலுவலாளர் முதலியோரிடமிருந்து செய்திகளை அறிந்தார். அவரை ஆதரித்த முகம்மதுபின் துக்ளக்கைப் பற்றி அவர் நேரிலே அறிந்திருந்தார். அவர் தந்தை அலாவுதீனின் அலுவலாளராக அமர்ந்திருந்தார். இவ்வரலாற்றறிஞர், தாம் கூறுவதற்கு ஆதாரமாக அமீர்குஸ்ருவின் குறிப்புக்களை மேற்கோள் காட்டுகிருர். சுருக்கமாக, இவர் ஒரு நடுநிலை வழுவாத வரலாற்றறிஞர் எனலாம். தாம் குறிப்பிடுபவர்களின் நற்பண்புகளையும் குறைபாடுகளையும் எடுத்துக்காட்டுந் தன்மை வாய்ந்தவர். அவர் இறக்கும்பொழுது மிகவும் வறுமை நிலையிலிருந்தார். முகம்மது பின் துக்ளக் அவருடைய தந்தையைக் கொன்றதைப்பற்றி இவர் எதுவும் கூறவில்லை என்று பெரிஷ்டா இவரைப் பற்றிக் குறைகூறுகிருர். தம்மை ஆதரிக்கும் பிரோஸ்துக்ளக்கின் மனத்தைப் புண்படுத்தாதிருக்கவேண்டி, அச்செய்தியைக் குறிப்பிடாமலிருக்கக் கூடும். பரணி, பிரோஸை அளவுக்குமீறிப் புகழ்கிருர் அனைத்திற்கும் மேலாக இவர் காலவரண் முறையைப் பின்பற்றிச்செய்திகளைக் குறிப்பிடவில்லை.

இபின்பதூதா (1304—'78). சட்டப் பேரறிஞரான இவர் டாங்கியர் (Tangier)—(மொராக்கோ—ஆப்ரிக்கா; ஜிப்ரால்ட்டருக்கு எதிரில்) என்னுமிடத்தில் தோன்றியவர். 1325'ல் இவர் தமது பயணத்தைத் தொடங்கினார். வட ஆப்ரிக்கா, அரேபியா, பாரசீகம் முதலிய நாடுகளுக்குச் சென்று, பின் 1333'ல் இந்தியாவந்தடைந்தார். அடுத்த ஆண்டில் அவர் தில்லிக்குச் சென்றார் எட்டு ஆண்டுகள் அத்தலைநகரில் அவர் காசியாராக (முகம்மதியகுரு) விளங்கினார் முகம்மதுவின் ஆதரவை இழந்ததால் சிறையில் இருந்து, பின் 1342'ல் அவர் விடுதலை பெற்றுச் சீனாவுக்கு, சுல்தானின் அரசியல் தூதுவராகச் சென்றார். கப்பல் கவிழ்தல் காரணமாக அவர் மாலத்தீவுகளுக்குச் செல்லநேர்ந்தது. அங்கிருந்து ஈழத்துக்கும் மதுரைக்கும் போந்தார். அவர் சீனாவுக்குச் சென்றிருந்தால் குறுகிய காலத்துக்குத் தான் அங்கே தங்கியிருந்திருக்கக் கூடும் இபின்பதூதா, மலபாருக்குப் போய் அங்கிருந்து கப்பலில் தந்நாட்டுக்குப் பயணமாகி, 1349'ல் தம் ஊரைச் சேர்ந்தார். 1355'ல் அவர் தம் குறிப்பேட்டை எழுதிமுடித்து மொராக்கோ சுல்தானிடம் அளித்தார். குத்புதீன் ஐபெக் முதல் முகம்மது பின்துக்ளக் வரை உள்ள இந்திய சுல்தான்களைப் பற்றி அவர் தம் நூலில் விளக்குகிறார். மதுரை சுல்தானியத்தைப் பற்றியும் அவர் ஓரளவு குறிப்புக்கள் தருகிறார். அவர் தாம் நேரில் கண்ட மக்களையும் நிகழ்ச்சிகளையும் பற்றிக் குறிப்பிடும் செய்திகளை நாம் சிறிதும் ஐயுறுவதற்கில்லை. முகம்மது பின் துக்ளக்கைப்பற்றி இவர்தரும் செய்திகள், பரணி தரும் குறிப்புக்களுடன் முழுதும் ஒத்துள்ளன இந்த அயல்நாட்டு அறிஞருடன் ஒப்பிடுமிடத்து பரணி கல்வி யறிவில் குறைந்தவராகவே தோன்றுகிறார். இபின்பதூதா, இன்ப விருப்புடையவராயிருந்த போதிலும், கடவுட் பற்றும் பெருந்தன்மையும் வாய்ந்தவர். அவர் குறிப்புக்கள், உள்நாட்டுச் சான்றுகட்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

கயாசுதீன் துக்ளக் ஊக்கமளித்ததின் விளைவாக அமீர் குஸ்ரு, "துக்ளக்நாமா" என்ற நூலை எழுதினார். இஃது முகம்மதுவின் வாழ்க்கையின் முற்பகுதியைப் பற்றி அறிய

உதவும். முகம்மதுவே எழுதிய தன் வரலாற்றுச் சிறுபகுதி, சுல்தான் முகம்மதுவின் உளப்போக்கைப் பற்றிப் பரணிதரும் தெளிவற்ற குறிப்புக்களை நன்கு விளக்குந் தன்மை பெற்றுள்ளது.[1] ஐயம்போக்கி விளக்கும் வேறுபல செய்திகளும் அதிலுள்ளன. பாமனி சுல்தான் முதலாம் அலாவுதீனின் ஆதரவிலிருந்த இஸாமி, 1349'ல் எழுதியநூல் முகம்மதுவை ஆதரிக்காமல் அவருக்கு எதிராக அமைந்துள்ளது. 1328'ல் வாசப் (Wassaf) எழுதிமுடித்த வரலாறு பாரசீகத்திலிருந்த மங்கோலியரைப்பற்றிப் பேசுகிறது. அதில் இந்தியாவைப்பற்றிய குறிப்புக்களும் உள்ளன. சுல்தானின் காசுகளையும் கட்டடங்களையும் தவிர சில கல்வெட்டுக்களும் இருக்கின்றன. கல்வெட்டுக்களில் இரண்டு வடமொழியில் உள்ளன வேறு காலங்களில் வாழ்ந்த அறிஞர்கள் தரும் சான்றுகளில் சிறப்பாகப் பின்வருவன குறிப்பிடத் தக்கவை. 14'ம் நூற்றுண்டின் முடிவில் ஷாம்சி-சிராஜ் அபீப் (Shams-i-Siraj Atif) என்பாரால் இயற்றப்பெற்ற தாரிக்கி பிரோஸ் ஷாஹி, நைசாமுதீன் அஹமத், படௌனி ஆகிய இருவருடைய நூல்கள், அக்பர்கால வரலாற்று நூல்கள், பெரிஷ்டா, தபதபா (Tabataba) ஆகியோர் எழுதுய வரலாறுகள் முதலியன.

## பகுதி 12

### முகம்மதுபின் துக்ளக்கின் தன்மையும் ஆட்சி முறையும்

முகம்மதுவின் தன்மை. முகம்மது பின் துக்ளக், அக்காலத்திய அறிவுக்களஞ்சியம் என்று புகழத்தக்கவர். அவர் எழுதிய யாவும், குறிப்பாக அவர் கடிதங்கள் சொல்லமைதிக்கும் நடைக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அவர், செய்திகளை உருவகப்படுத்துவதிலும், உவமை அணியைப் பயன்படுத்துவதிலும் மிக்க தேர்ச்சிபெற்றவரென்று பரணி கூறுகிருர். அவர் எழுத்து நடையில் மிளிரும் விழுமிய கருத்துக்களையும் அவ்வரலாற்றறிஞர் குறிப்பிடுகிருர்.

1. Husain, op. cit. pp. XI.

வியத்தகு நினைவு ஆற்றலும் சொற்பொழிவுத் திறனும் அவரிடமிருந்தன. கணக்கு, மருத்துவம் என்ற துறைகளில் அவர் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்தார். விஞ்ஞானம் (Science) அவரால் விரும்பிப் போற்றப்பெற்றது. அவர், தருக்கம், அரிஸ்டாட்டிலின் தத்துவங்கள், பாரசீகக் கவிதைகள் முதலியவற்றையும் பயின்றார். அறிஞர்களுடன் சொல்லாடுவதில் அவருக்குத் தனிமகிழ்ச்சி உண்டு. "கல்வியறிவாளர், விஞ்ஞானிகள், பாவலர், சொற்கலைஞர், மருத்துவ அறிஞர், முதலிய யாவராயினும், அச்சுல்தானுடன் சொற்போர் செய்யும் துணிவைப்பெற்றிருக்கவில்லை. சொற்போர் செய்வோர் யாவரையும் திணரச்செய்து தம்முடைய கருத்தையே அவர் நிலைநாட்டுவர்"[1] என்று பரணி குறிப்பிடுகிறார். அழகுக்கலைகளை அவர் போற்றி வியந்தார். அவர் கையெழுத்து மிக அழகாக இருக்கும். வடமொழியில் அவருக்கு நாட்டமிருந்தது. சுருங்கக் கூறின் அவர் "அக்காலத்திய ஓர் விந்தை" (இபின்பதூதா). சமயப்பற்று மிக்க முகம்மது, எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். வழிபாட்டு முறைகளில் சிறிதும் அவர் தவறுவதில்லை. அவர் தனிப்பட்ட வாழ்க்கை தூய்மைபொருந்தியதாயிருந்தது. அளவுகடந்த பெருந்தன்மை அவரிடம் பொலிந்தது. தவிர அவர், வீரமும் தேர்ச்சியும் மிக்க படைவீரராகவும், நல்ல குறிக்கோளையுடைய ஆட்சியாளராகவும், அறத்தைப் போற்றுவோராகவும் விளங்கினார். சுருங்கக் கூறின் அவர் மனமுரம் வாய்ந்த தனித்திறமையாளர். ஆனால் இந்த உயரிய பண்புகளையெல்லாம் பாழ்செய்யும் வகையில் அவரிடம் கொடுமையும் விடாப்பிடியும் அமைந்திருந்தன. அடக்கமுடியாத அவர் மன நிலையும் பிறரை ஐயுறும் தன்மையும் மட்டுமிஞ்சிய கொலைகளுக்குக் காரணமாயின. "பேயுள்ளம் படைத்த துறவி, அல்லது துறவியின் உயிரைப் பெற்ற ஒரு பேய்" என்று அவரைப்பற்றி கூறப்பட்டுள்ள சொற்றொடர் அவர்தம் முரண்பாட்டு நிலையை விளக்குகிறது. முகம்மது, மற்ற யாவரையும்விட, பரிசுகள் வழங்குவதிலும் கொலைகள் புரிவதிலும் மிக்க ஆர்வமுள்ளவர் என்றும், சிறு குற்றங்களைப் பெரிய குற்றங்களாகக் கொண்டு தண்டிப்பவ

1 E. & D. Op. Cit. III, p. 236

ரென்றும், குற்றவாளிகள், கல்வியறிவாளராயினும் சமயத் தலைவராயினும், செல்வராயினும் அவரிடமிருந்து தப்பமுடியாது என்றும் இபின்பதூதா கூறுகிறார்.[1] முகம்மதுவின் முரண்பாட்டுத் தன்மையை, பரணி, பின்வருமாறு விளக்குகிறார்:- "வலிய உள்ளத்தினின்று வெளிப்பட்ட தத்துவக் கொள்கைகள் அவர் தன்மையை உருவாக்கின; தன்னடக்கமும் அன்பும் அடங்கிய தீர்க்கதரிசிகளின் சொற்களும், தூய சமயநூற் செய்திகளும் அவர் உள்ளத்தைத் தொடவில்லை."[2] சுல்தான் விதித்த தண்டனைகளை அவருடைய சொற்களே விளக்கும்:- "நான், கீழ்ப்படியாமை என்னும் சிறு குற்றத்துக்குக் கொலைத் தண்டனை அளிக்கிறேன். இதை நான் இறக்கும் வரையில் அல்லது மக்கள் கலகம் செய்தலையும் அவமதித்தலையும்விட்டு நேர்மையாக ஒழுகும் வரையில் செய்தே தீருவேன்."[3] மக்களைக் கொடுங்கொலை செய்ய அவர் சிறிதும் தயங்கினதில்லை. முறைவழங்கலில் இரக்கம்காட்ட வேண்டுமென அவர் கனவிலும் கருதியதில்லை. மேலும் அவர், பொறுமையற்றவர்; பொதுப்பண்பு மீறியவர்; தற்பெருமை படைத்தவர்; அறவுரையை ஏற்றுக்கொள்ளாதவர்; கொடுங்கோலர். அவரிடம் ஓரளவு பித்துப்பிடித்த தன்மை இருந்ததாக, சில அறிஞர் ஐயுறுவர். முகம்மது முரண்பாடுகளடங்கிய ஆடவரென்பதில் ஐயமில்லை. அவர் தன்மையே அவர்தம் பெருந் தோல்விக்குக் காரணமென்று கூறலாம். பரணியும் இபின்பதூதாவும் தரும் சான்றுகளைச் சிறப்பற்றன எனத் தள்ளிக்களைந்து முகம்மதுவின் மேன்மையை நிலைநிறுத்த அணிமைக்கால அறிஞர்கள் முயன்றுள்ளனர்.

**ஆட்சித் தொடக்கம்.** காலவரண்முறையில் இடைபாடுகளிருப்பினும், முகம்மதுவின் ஆட்சிமுறை, தோ-ஆப் பகுதித்துயர நிகழ்ச்சியுடன் தொடங்குவதாக நாம் கொள்ளலாம். தோஆப் மக்கள், அளவுக்குமீறிய வரிகளால் துன்புற்று, வறுமையால் வாடினராம். பரணி, தம்முடைய குறு

1 E. & D. Op. Cit. III. pp. 611—2.
2 Ibid., p. 236.
3 Smith, Oxford History p. 239.

நிலப்பகுதிப்பற்று காரணமாக (அவர், உத்தரப் பிரதேசத்தில் பராண் என்ற இடத்துக்குரியவர்.) நிகழ்ச்சியை மிகைப் படுத்திக் கூறியிருப்பினும், மக்கள் அங்கு ஆற்றொணாத் துய ரடைந்தன ரென்பதில் ஐயமில்லை. சுல்தானின் அத்தைமகன் பகாஉடீன், சுமார் 1326'ல் சாகர் என்னுமிடத்தில் (குல்பர்கா மாவட்டம், ஐதராபாத்) கலகம் செய்து தேவகிரியை எதிர்த் துச்சென்று அங்குத் தோல்வியுற்றதால் தன்னைக் காத்துக் கொள்ள துவாரசமுத்திரத்திற்கு ஓடினான். ஆனால் அவன் கைப்பற்றப்பட்டு தேவகிரிக்குத் திரும்பிச்செல்ல நேர்ந்தது. சுல்தான் அவன் தோலை உரித்து அதைச் சமையல் செய்ய ஆணையிட்டு அதனை அவன் மனைவிக்கும் குழந்தைகட்கும் அனுப்பிவைத்தார். பயனற்றதோல் பொது மக்கள் பார்வைக் காக வைக்கப்பட்டது. தவறிழைத்தல், கொள்ளையடித்தல் கொலைபுரிதல் முதலிய பண்புகள் நிறைந்த முகம்மதுவின் ஆட்சி இவ்வாறு தொடங்கியது.

**புதிய தலைநகர் (1327).** பேரரசுத் தலைநகர், தில்லியி லிருந்துதேவகிரிக்கு மாற்றப்பட்டமைக்கு பகாஉடீனின் புரட்சிக் கலகம் ஒரு காரணமாக இருக்கக்கூடும். 1327'ல் தேவகிரி, தௌலதாபாத் என்ற பெயரைப் பெற்றது. பேரரசின் எல்லை வளர்ந்து வந்ததாலும் சாலைகளில் போதுமான காவலில்லாத தாலும் அரசின் நடுப்பகுதியில் தலைநகர் இருப்பது சாலச் சிறந்தது என்று சுல்தான் கருதினார். மேலும், வட இந்தியா வில் நிலவிய வறுமையும்மக்களின் இடர்ப்பாடுகளும், முகம்மது வின் கருத்தை வலியுறச் செய்தன. பரணி அத்திட்டத்தைக் கண்டித்தபோதிலும் புதிய தலைநகர் நடுப்பகுதியில் அமைந் திருப்பதே அதன் சிறப்புக்குக் காரணமென்று கூறுகிறார். ஆனால் எழுதியோர் பெயர் வெளிப்படுத்தப் பெறாத பல கடிதங்கள் தில்லி மக்களிடமிருந்து தமக்கு வந்ததால் சுல்தான் வெகுண்டு, அந்நகரை அழித்துவிடுவதென்று முடிவு செய்ததாக இபின்தூதா குறிப்பிடுகிறார். தலைநகர் மாற்றம் சில நன்மைகளை அளிக்கக்கூடுமெனினும், வடமேற்கு எல்லைக்காவல் இன்றியமையாததாயிருந்த அக்காலத்தில், தீமை விளைவிக்கத்தக்கது என்றே கருதவேண்டும். தில்லி

முழுமையும் காலிசெய்யப் பெற்றது. "ஒரு பூனை அல்லது நாய்கூட அங்கு விடப்படவில்லை" (பரணி). தில்லியிலிருந்து 700 மைல்கள் தொலைவிலுள்ள தௌலதாபாத்திற்கு நலிவ ஒண்ணுத்துயருடன் நாற்பது நாட்கள் நடந்தனர் நல்வாய்ப்பற்ற மக்கள். இந்நிகழ்ச்சிக்குப் பதினேழு ஆண்டுகள் பின்னர்த் தேவகிரி, பேரரசுத் தலைநகர் அன்று என அறிவிக்கப்பட்டது. ஆனால் தேவகிரி தலைநகராகி எட்டு ஆண்டுகள் கடந்தபின் விரும்பினவர் திரும்பித் தில்லிக்குச் செல்லலாமென்று அரசர் ஆணை பிறப்பித்தார். சுல்தானின் ஆட்சிமுறை நடவடிக்கை, தண்டனை நடவடிக்கையாகிச் சீர்குலைந்தது வருந்தற்பாலது. இது பழைய தலைநகரையும் அதன் மக்களின் மகிழ்ச்சியையும் அழித்ததுடன் சுல்தானுக்குப் பகையாகக் கலக உணர்ச்சியை வலிமைப் படுத்தியது. இதனால் ஏற்பட்ட பொருட்கேட்டிற்கும் அளவில்லை. மக்களின் ஆற்றல் வீணாய்க் கழிந்தது.

நாணயச் சீர்திருத்தம் (1329—32). முகம்மது, ஆட்சித் தொடக்கத்திலேயே சிறந்த நாணயச் சீர்திருத்தங்களை ஏற்படுத்தினர். பிறநாடுகளின் முறையை உணர்ந்ததாலும், இராச்சியத்தின் பொருளியல் தேவைகளை அறிந்ததாலும் அச்சீர் திருத்தங்கள் இன்றியமையாதன என அவர் முடிவுசெய்தார். "கொடுக்கல் வாங்கலின் தலைவர்" (லேவாதேவிக்காரரின் பிரபு) என்றும் நாணயச் செலவாணித் துறை மேதை என்றும் அவர் புகழப்பட்டார். சீனத்தாள்நாணயமுறையைப் பின்பற்றி இவர், வெள்ளிக் காசுகட்குப் பதிலாகச் செப்புக் காசுகளை வழங்கினர். அரசியல் கருவூலத்தில் போதுமான பொருளின்மை இதற்கு ஓர்காரணமாகும். அவருடைய நோக்கம் சிறந்தது தான். ஏமாற்றும் நோக்கம் சிறிதும் அவரிடமில்லை. ஆனால் மிகுதியாக கள்ளக்காசுகள் அச்சடிக்கப்பட்டு பயன்படுத்தப்பெற்றதால் அரச நாணயங்களின் மதிப்பு குறைந்துவிட்டது. "மதிப்புக் குறைவான காசுகள் மதிப்பில் உயர்வான காசுகளைப் போக்கடிக்கும்" என்ற பொருளாதாரச் சட்டப்படி பழைய வெள்ளி நாணயங்கள் மறையலாயின. செப்புக் காசுகள் மதிப்பிழந்தன. நாட்டின் வாணிகத்துக்கு இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. தம்தோல்வியை உணர்ந்த சுல்தான், புதிய காசுகளை வாங்கிக்

கொண்டு அதற்குப் பதிலாகப் பொன், வெள்ளி நாணயங்களை அச்சடித்து வெளியிட்டார். இதனால் கருவூலத்தில் மிகுதியாகப் பொருள் குறைந்துவிட்டது. முகம்மதுவின் சினம் பெருகியது. கடும் நடவடிக்கைகளை எடுக்கலானார். மக்கள், கட்டுப்பாடுகளை மீறவும் துணிந்தனர். மக்கள் போலிக் காசுகள் அச்சடிப்பதைத் தடுக்க அரசியலாரால் இயலாமற் போனதே அத்திட்டத்தின் தோல்விக்குக் காரணமாகும். ஒவ்வொரு இந்துவின் வீடும் காசடிக்கும் தொழிற்சாலையாக மாறிவிட்டதாகப் பரணி குறிப்பிடுகிறார். புதிய நாணயத்திட்டம் வெற்றியடைய வேண்டுமானால் மக்களுக்கு அரசியலார்மீது நம்பிக்கை இருத்தல் இன்றியமையாததாம்.

**ஆட்சிமுறை அலுவல்கள்.** முகம்மது, உழவர்களுக்கு நன்மைகள் பல செய்ய விரும்பினார். எடுத்துக்காட்டாக, அவர்களுக்குக் கடன் வழங்கியதும், கிணறுகள் தோண்டித் தந்தமையும் குறிப்பிடலாம். ஆனால் அவருடைய நாடு கவரும் திட்டங்கள், இயற்கையிலவரிடம் அமைந்த தீய பண்புகள், அழிவுதரும் ஆட்சிமுறை நடவடிக்கைகள் முதலியன அவர்தம் பொருளமைப்புத் திட்டத்தைக் கொடுமையினும் கொடுமையாக மாற்றிவிட்டன. இது, அவரது அரசியலின் அடிப்படையையே ஆட்டங்கொடுக்கச்செய்தது. தோ-ஆப் பகுதியில் நிலவரியை உயர்த்தியதனை முன்னர் பார்த்தோம். 1333'ல் உழவர், நிலங்களைக் கைவிட்டுக் காடுகளுக்கு ஓடியதைக் கேட்ட சுல்தான், அவர்கள் சென்ற இடங்களுக்கு வீரரை அனுப்பி அவர்கட்குத் தண்டனை அளித்தார். சுல்தான், வேளாண்மையைப்பற்றி முன்னேற்றக்கருத்துக்களை அறிந்திருந்த போதிலும், நிலவளத்தைப் பெருக்க விஞ்ஞானமுறையில் முயன்றும், வேளாண்மைக்காக தனி அமைச்சரின்கீழ் ஒரு துறைக்களத்தை அமைத்திருந்தும், முடிவில் அவர் குறிக்கோள் நிறைவேறவில்லை. பட்டுநெசவு, சரிகை தயாரித்தல் முதலியன அவரால் ஆதரிக்கப் பெற்றன. முறைவழங்கலில் அவர் மிகுந்த ஆர்வம் காட்டினார். இந்துக்கள் துன்புறுத்தப் படவில்லை. சில இந்துக்கள் உயர் பதவிகளில் அமர்த்தப் பெற்றனர். சதி எனப்படும் உடன்கட்டை ஏறும் வழக்கம் அவரால் நீக்கப்பெற்றது.

# பகுதி 13

## துக்ளக் பேரரசு முறை

எல்லைப்புற இயல்முறை. 1328—9'ல் டிரான்ஸ் ஆக்ஸியானு பகுதியின் மங்கோலிய மன்னன், தார்மாஷிரின், தில்லிவரை உள்ள இந்திய நாடுகளைத் தாக்கி வந்தான். ஆனால் அவன் விரட்டப்பட்டான். பகைவர்களைத் திருப்பி அனுப்ப, சுல்தான் கைக்கூலி கொடுத்தாரென்று உள்ள செய்தி, அவருடைய தன்மைக்குப் பொருத்தமாக இல்லாததால், கொள்ளத்தக்கது அன்று. ஆனால் மங்கோலியர் இந்தியாவில் தங்குவதற்கும் அவர்கள் சில வசதிகளைப் பெறுதற்கும் முகம்மது இசைந்தார். இதனால் மேலும் அவர்கள் அடிக்கடி உட்புக வாய்ப்பு ஏற்பட்டது.

வெற்றிகள். 1327'ல் வாரங்கல் தாக்கப்பட்டு பேரரசுடன் இணைக்கப்பெற்றது. துவாரசமுத்திரம் அடியோடு அழிக்கப்பட்டது. சுல்தானின் ப்டை ஸ்ரீரங்கத்தைச் சூறையாடியதுடன் மதுரையையும் கைப்பற்றியது. மாபார் அல்லது மதுரையின் தலைவராக ஜலாலுதீன் ஆஸன்ஷா அமர்த்தப் பெற்ருர். பஞ்சாப், சிந்து நாடுகளிலிருந்து வங்காளம், தென்னிந்தியா வரையிலும் பரவிய முகம்மதுவின் பேரரசிலிருந்த இருபத்துமூன்று மாகாணங்களில் மதுரையும் ஒன்ருகும். 1330, 1333, 1334 ஆண்டுகளுக்குரிய பேரரசனின் காசுகள், மதுரையில் காணப்பட்டுள்ளன. "மக்கள் வாழக்கூடிய உலகப்பகுதிகள் முழுவதையும் தமது ஆணைக்கு உட்படச்செய்யும் மூன்று அல்லது நான்கு திட்டங்களைச் சுல்தான் தம் மனதில் வகுத்திருத்தார். ஆனால் இவற்றைப் பற்றி அவர் யாருடனும் கலந்து ஆலோசித்ததில்லை ... ... அவர், தம் திட்டங்களை நிறைவேற்ற முற்படுகையில் அவருக்கு உரிய பகுதிகள் அவராணையை மீறின. அவர் திட்டங்கள் மக்களுக்கு வெறுப்பை அளித்ததுடன் கருவூலத்தையும் பொருளற்றதாக்கியது" என்று பரணி கூறுகிருர்.[1] கொராசன் நாட்டை வெல்ல முகம்மது திட்டமிட்டார். ஆனல் பின்னர்

1. E. & D., III. p. 237

அது கைவிடப்பட்டது. எனினும் அம்முயற்சியால் மிகுதியான பொருட்கேடு உண்டாயிற்று. சீனுவையும் வெல்லச் சுல்தான் திட்டமிட்டதாக பெரிஷ்டா குறிப்பிடுகிருர். ஆனல் பரணியும் இபின்பதூதாவும், அவர் இமயமலைப்பகுதியில் ஒரு தலைவனை அடக்குவதற்காக எடுத்த முயற்சியே சீனப்படையெழுச்சியென்று தவருகக் கருதப்படுகிறது என்பர். அப்படையெழுச்சிக் காலத்தில் மிகுதியான மழையினுலும், படைவீரர் ஆணையை மீறி எல்லைப்புறத்துக்கு அப்பாலும் சென்று மலைவாசிகளிடம் சிக்கிக்கொண்டதாலும், அது தோல்வியில் முடிந்தது. ஒரு சிலரே தில்லிக்குத் திரும்பினர் (1337—8). இமயத்தை நோக்கிச் சென்ற படை, வழியில் நாகர்கோட் (கங்ரா—பஞ்சாப்) என்ற இடத்தைக் கைப்பற்றியது.

**எங்கும் புரட்சிக் கலகங்கள்.** முகம்மதுவை எதிர்த்து 22-புரட்சிக்கலகங்கள் தோன்றின. அவற்றில் ஏழு 1335-ம் ஆண்டுக்கு முன்னரும் அவ்வாண்டிலும் ஏற்பட்டவை. மற்றவை, பின்னர் ஏற்பட்டவை. முதல் ஆறு கலகங்கள் தனிப்பட்டவரால் தோன்றியவை. அவை நசுக்கப்பெற்றன. 1335'ம் ஆண்டு மதுரைக்கலகம், பல மாகாணக் கலகங்களைத் தோற்றுவித்தது. அதன் விளைவாக துக்ளக் பேரரசு சீர் குலையலாயிற்று. ஜலாலுதீன்ஆஸன்ஷாவைத் தண்டிக்கும் பொருட்டு முகம்மது தெற்கில் படையெடுத்து வந்தார். ஆனல் வாரங்கல் போய்ச்சேர்ந்ததும், வாந்திபேதித்தொத்து நோய், படையினரிடையே பரவியதால், தௌலதாபாத்துக்குத் திரும்பலானுர். வழியில் பல்நோய் காரணமாக சுல்தான் தம் பல் ஒன்றை இழந்ததாகவும், அப்பல்லை மிகவும் ஆடம்பரமான சடங்குகளுடன் புதைக்கச்செய்து அவ்விடத்தில் சிறப்பானதோர் நினைவுச்சின்னம்கட்ட ஆணையிட்டதாகவும் பெரிஷ்டா கூறுகிருர். "அச்சின்னம், சுல்தானின் பகட்டாரவாரம், அறிவின்மை முதலியவற்றின் நினைவுச்சின்னமாக இன்றும் நிலவுகிறது" (பெரிஷ்டா)[1]. ஆனல் அச்செய்கை முறையானதே என்று

1. Briggs, op. cit., I, pp. 423—4

சுல்தானின் வாழ்க்கை வரலாறு எழுதிய அறிஞர் கூறுகிறார்.[1] மதுரைப் படையெழுச்சி எண்ணியாங்கு நிறைவேறாததால் வெகுண்டெழுந்தார் சுல்தான். அவரிடம் பணியிலர்ந்திருந்த, மதுரைக்கலகத்தலைவனின் மகனான இப்ராஹிமை, வாளால் வெட்டித் துண்டாக்கினார். 1336'ல் தென்னிந்தியாவில் முகம்மதியருக்குப் பகையாக விசயநகரம் தோன்றியது. 1336—7'ல் பக்ருதீன் முபாரக்ஷா என்பானின் தலைமையில் கிழக்கு வங்காளம் கலகம் செய்து தன் உரிமை நாடாகியது. முகம்மது, வேறு செய்திகளில் கருத்துச்செலுத்தி வந்ததால் அவற்றை அடக்க முடியவில்லை. 1339'ல் அலிஷாவின்கீழ் மேற்கு வங்காளமும் உரிமை அறிக்கையை வெளியிட்டது. 1340—1'ல் அயோத்தித் தலைவர் அயினுல்முல்க் புரட்சி செய்தார். ஆனால் அது அடக்கப்பெற்றது. அவர் சுல்தானுக்கு முற்காலத்தில் சிறந்தசேவை செய்திருந்ததால், கடுந்தண்டனையைப் பெறவில்லை. சிந்து நாட்டில் குழப்பம் விளைந்தது. 1342'ல் அந்நாடு அடக்கப்பெற்றது. 1343—4'ல் இரண்டாம் பிரதாபருத்திரனின் மகன் கிருஷ்ணப்ப நாயக்கன் தில்லி ஆதிக்கத்தினின்று விடுதலை பெற்றான். விசயநகரில் முதலாம் அரிஹரன் தன் உடன்பிறந்தாரின் உதவியுடன் தன் அதிகாரத்தைப் பெருக்கி வந்தான். 1346'ல் நான்காம் வீரவல்லாளன் இறந்தபின், அரிஹரன் உரிமைபெறலானான். தவறிழைத்தலையும் கொலைபுரிதலையும் தம் இயல்முறையாகக் கொண்ட சுல்தானை எதிர்த்து தௌலதாபாத் பெருஞ்செல்வர்கள் (அமீர்கள்) புரட்சிக் கலகம் தொடங்கி 1347'ல் உரிமையடைந்தனர். குஜராத்தில் அதே ஆண்டில் தாகி என்ற ஒரு செம்மான் கலகம் செய்ததால், தௌலதாபாத் நிகழ்ச்சிகளில் சிந்தனை செலுத்திக்கொண்டிருந்த சுல்தான், அதனைவிடுத்து, கலகக்காரனை நோக்கிச் சென்றார். ஆனால் இடையில் தட்டா என்னுமிடத்தினருகில் 1351'ல் சுல்தான் சுரங்கண்டு இறந்தார். "அரசன், குடிகளிடமிருந்து விடுதலை பெற்றான்; குடிகள் அவனிடமிருந்து விடுதலை பெற்றனர்." (படௌனி)

---

1. Husain, op. cit. p. 243.

# பகுதி 14

## முகம்மதுபின் துக்ளக்கைப்பற்றிய நேர்மை விளக்கம்

இக்கால ஆசிரியர்கள் சிலர், முகம்மது ஒரு பெரிய மேதை என்று கருதுகிறார்கள். அவருடைய தன்மையும் இயல் முறையும் மிகச் சிறந்த அடிப்படையிலமைந்தவை என்பதை நிலை நிறுத்த அண்மையில் முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. மிகுதியான அளவுக்கு அம்முயற்சிகள் வளர்வது விரும்பத் தக்கதா என்ற கேள்வி எழுகிறது. கார்டினர் ப்ரௌனின் குறிப்பைப் பின்பற்றி ஈஸ்வரிபிரசாத், ஹுசெய்ன் முதலிய அறிஞர்கள், முகம்மதுவின் நேர்மையை நிலைநாட்டப் பல வகை விளக்கங்கள் கூறுகின்றனர். பொதுவாகப் பின்வரும் காரணங்கள் சுல்தானின் பெருமையை உயர்த்தும் வகையில் குறிப்பிடுகின்றனர். பரணியும் இபின்தூதாவும் சுல்தானைப் பற்றி நேர்மையான விளக்கங்களை வழங்கவில்லை. ஏனெனின் வைதீக முகம்மதியர்களான இவ்வறிஞர்கள், முஸ்லிம் மத குருமாரின் பகைவரும், பகுத்தறிவையொட்டி நடப்பவருமான முகம்மதுவை வெறுத்தனர்[1] என்பது அவர்கள் தரும் முதல் குறிப்பு. அடுத்து, சுல்தான், தோல்வியுற்றது அவருடைய தவறின் காரணமாகவன்று, எனவும் வாதிக்கின்றனர். நாட்டில் நிலவிய வறுமைநிலை, அவருடைய சிறந்த கொள்கைகளை உணர்ந்து கீழ்ப்படியாத மக்களின் செயல்கள், நன்றியுணர்ச்சியற்ற பெருஞ்செல்வர்களின் நடவடிக்கைகள், வைதீக முகம்மதியரின் எதிர்ப்பு முதலியனவே அவர் தோல்விக்குக் காரணங்களாம். முகம்மது உண்மையில் ஒரு பைத்தியக் காரரோ அல்லது இயல்பால் கொடுங்கோலாளரோ அல்லர்; அவர் சிறந்ததோர் கற்பனையாளர்; ஆனால் சூழ்நிலை அவருக்கு ஏற்றதாக இல்லை என்றும் அவர் "நல்வாய்ப்பைப் பெறாத ஒரு மன்னர்" என்றும் அவரை மக்கள் சரியானபடி உணர்ந்து கொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது. "அவர் வீண்கனவு காண்பவரன்று; செயலுக்கொவ்வாதவற்றைச் சிந்திப்பவரன்று இயல்பாகத் திறமையற்றவருமன்று; அவருடைய சிறந்த

1 Ishwari Prasad, A History of Qaraunah Turks in India I (1936), chapter VIII

திட்டங்கள் மக்கள் முயற்சிக்கு அப்பாற்பட்டவை அல்ல. ஆனால் அவர்காலத்திய மக்கள் உணரமுடியாத அளவுக்கு முன்னேற்றக்கருத்துக்கள் அவரிடமிருந்தன. இதுவே வரலாறு வழங்கும் தீர்ப்பு.''[1] மேலும், இக்கால அறிஞர் சிலர் சுல்தானின் நற்குணங்களை நன்கு வலியுறுத்தியும் தீய குணங்களைக் காரணங்காட்டி விலக்கியும் வருகின்றனர்.

பரணியும் இபின்பதூதாவும் தரும் குறிப்புக்கள், ஆய்வுக்குரியன என்பதும், இங்குமங்கும் திருத்தப்பட வேண்டியன என்பதும் மறுக்க முடியாத உண்மைகளே. ஆனால் சுல்தானைப்பற்றி அவர்கள்கூறும் அடிப்படைச்செய்திகள் தவறானவை என்று கூறுவதற்குத் தகுந்த காரணங்களில்லை. சுல்தான், சில செய்திகளில் திறமையுடன் ஆட்சி நடத்தினர். எனினும், அவருடைய சிலதிட்டங்கள் செயல்முறைக் கொவ்வாதன என்பதை மறுக்க முடியாது. நேர்மையும் நற்கருத்துக்களும் உடையவரெனினும் அவர் கொடுங்கோலாளர் என்பதையும் மறுக்கமுடியாது. பொறுக்க ஒண்ணாத கொடுமைகளை அவர் இழைத்தார் என்பதற்கு வரலாற்றுச்சான்றுகள் உள. அவர் ஒரு வல்லாட்சியாளரா யிருந்தாரென்பதற்காக நாம் அவலரக் குறை கூறவில்லை. ஆனால் நலந்தரும் வல்லாட்சியை அவர் அமைக்கவில்லை என்பதே அவரைப் பற்றிய குற்றச்சாட்டு. அவருடைய தோல்விக்குப் பெரும்பான்மையும் அவர் காரணமல்லர் என்று கூறப்படுகிறது. ஆனால், மக்களின் மனப்போக்கை உணர்ந்து செயல் முறையில் வெற்றிபெறத்தக்கவற்றை மேற்கொள்பவனே சிறந்த அரசியல் அறிஞன் ஆவான் என்பதை நாம் மனத்திற் கொள்ளவேண்டும். முகம்மது சிறந்த கருத்துக்களை உடையவராயிருந்தார். ஆனால் அவற்றை நிறைவேற்றுவதில் பெருந்தவறுகளிழைத்துவிட்டார். ஆகவே, அவற்றின் தோல்விக்கு அவர் பொறுப்பாளி அல்லர் என்று கூறிவிட முடியுமா? மக்கள் கலகம் செய்ததாலும், வறுமை வந்து வாட்டியதாலும், வைதீக முகம்மதியரின் எதிர்ப்பாலும், பிரபுக்களின் நன்றியறியாத் தன்மையாலும் இடர் விளைந்ததெனினும், இவை யாவற்றிற்கும் சுல்தான் பொறுப்பாளி

1. Husain, op. cit., p. 216.

அல்லர் என்று கூறிவிடமுடியாது. முகம்மதுவின் அடிப்படைக் கருத்துக்கள் சிறப்பானவை, போற்றத்தக்கன என்பது வற்புறுத்திக் கூறப்படுகிறது. ஆம்; அவர் கருத்துக்கள் நன்மை தரத் தக்கன என்பது உண்மையே. ஈண்டு ஒரு செய்தி நம் நினைவுக்கு வருகிறது. மக்கள் குற்றம்புரியக் கூடாதென்ற நல்லெண்ணத்துடன்தான் நரகம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் நரகம் கொடுமையற்றதெனக் கூறமுடியுமா? எனினும் சுல்தானின் அறிவாற்றலையோ நற்பண்புகளையோ யாரும் மறுக்கமுடியாது.

சுல்தானின் கட்டடக் கலைப்பணிகள் மிகுதியாக இல்லை. அவர், தில்லியின் சுற்றுப்புறத்தில் ஜகன்பனு எனப்பட்ட நகரத்தை நிறுவினர். அங்கு ஓர் அரண்மனையும், வேறுசில கோட்டைகளும் அவரால் எடுக்கப் பெற்றன. பரணி, மௌலானு உம்ராணி முதலிய புலவர் அரச அவையை அணி செய்தனர் இபின்தூதா, சிறிதுகாலம் சுல்தானின் ஆதரவைப் பெற்றுர். சுல்தான், கலீமாவையும் (அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை; முகம்மதுவே அல்லாவின் தீர்க்கதரிசி என்ற முஸ்லிம் கோட்பாடு) வைதீக கலீபாக்கள் நால்வருடைய பெயர்களேயும், தாம் வெளியிட்ட காசுகளில் பொறித்தார். அவர் எகிப்திய சுல்தானைக் கலீபாவாக ஏற்றுக்கொண்டு, தாம் அவருக்குக் கீழ்ப்பட்டவரென்று கூறிக்கொண்டார். 1340'ல் இந்திய, எகிப்திய அரசர்கள் தமக்கிடையே அரசியல் தூதுக்குழுவினரை அனுப்பிக்கொண்டனர். 1340 முதல் 1343 வரை வெளியிடப்பட்ட காசுகளில் சுல்தான்முகம்மதுவின் யெயருக்குப் பதிலாக அக்கால கலீபாவின் பெயர் பொறிக்கப்பெற்றிருந்தது. இவையாவும், முகம்மது, வைதீக மதப்பற்றுடையவர் என்பதற்குப் போதுமான சான்றுகளாம். இறுதியாகச் சுல்தான் உண்மையில் ஒரு பைத்தியக்காரர் என்று யாரும் கூறவில்லை. ஆனால் செயல்முறையில் அவர் நடவடிக்கையில் ஓரளவு பைத்தியக்காரத் தன்மை இல்லையா என்பதே ஆய்வுக்குரிய செய்தியாகும். எவ்வாறிருப்பினும் அவருடைய இயல்பில் தோன்றிய அடிப்படைக் குறைபாடுகள், அவர் தோல்விக்குச் சிறப்பான காரணங்களாம். சுல்தானின்

தோல்வியாகிய "சாதனைக்கு" பெரும்பான்மையும் அவரே பொறுப்பாவர்.

## பகுதி 15

## பிரோஸ் துக்ளக்கின் ஆட்சிமுறை (1351—88)

அரியணைபெறுதல். கயாஸுதீன் துக்ளக்கின் உடன் பிறந்தானுக்கும் ஒரு இரசபுத்திரப் பெண்மணிக்கும் பிறந்தவர் பிரோஸ் (Firoz). முகம்மது பின் துக்ளக், தம்முடைய ஒன்று விட்ட உடன்பிறந்தானை ஆதரித்துவந்தார். அவருக்கு உயர் பதவி அளித்ததுடன், தமக்குப்பின் அரசுரிமையைப்பெறுமாறும் ஆணையிட்டார். சிந்து நாட்டில் முகம்மது இறந்தபொழுது, பொறுப்பற்றிருந்த பிரோஸை, பிரபுக்கள் அரியணை பெறுமாறு தூண்டினர் அதற்காக அவர் தில்லியை நோக்கிச்சென்று கொண்டிருக்கையில் இறந்துபோன சுல்தானின் மகனோ மகனாக பலர் கருதிய ஒருவனோ[1]. அரசனுக்கப்பட்ட செய்தி பரவியது. ஆனால் முடிவில் சிறந்த ஆட்சிமுறைப் பயிற்சி பெற்றிருந்த பிரோஸ் வெற்றிபெற்று, தமது 46'வது வயதில் சுல்தானனார்.

போர்: வங்காளம், ஒரிஸ்ஸா, சிந்து. பிரோஸ், போரை வெறுத்தார் முந்திய ஆட்சியில் இழந்துபோன பகுதிகளைப் பற்றி அவர் கவலைகொள்ளவில்லை. விசயநகர அரசிடமிருந்து பாமனி சுல்தானுக்குப் பகையாக பிரோஸின் உதவியைநாடி ஒரு முறையீடு வந்ததாக பெரிஷ்டா குறிப்பிடுகிறார். ஆனால் தில்லி சுல்தான் அதை ஏற்க மறுத்துவிட்டார். தௌலதாபாத்தில் மீண்டும் தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும், கலகம் செய்த தென்னிந்தியநாடுகளை மீண்டும் பேரரசுக்குள் கொணரவும் அவர் விரும்பவில்லை. ஆனால் வட இந்தியாவில் தம் ஆதிக்கத்தை வலிமையுறச் செய்துகொள்வதில் அவர் முனைந்தார். 1353—4'ல் வங்காளத்திற்குச் சென்று, மக்களை

---

[1] C. H. I. III. p. 174.

மீண்டும் முன்புபோல் கீழ்ப்படியுமாறு அறிக்கை வெளியிட்டார். நலந்தரும் ஆட்சியை அங்கு நிறுவுவதாகவும் வாக்குறுதி அளித்தார். ஆனால் 1352'ம் ஆண்டிலேயே, அலி ஷாவின்பின் அரசேற்ற ஷாம்சுதீன், கிழக்கு வங்காளத்தையும் தன்னுடன் இணைந்துக்கொண்டு தானே வங்காள சுல்தானென்று பறை சாற்றியிருந்தான். பேரரசுப் படையுடன் போரிட முடியாத அவன் ஒரு கோட்டைக்குள் ஓடி ஒளிந்தான். பிரோஸ், முஸ்லிம்களின் குருதி சிந்தப்படுவதை விரும்பாது, முழு வெற்றி பெறுமல், வங்காளத்தைப் பேரரசுடன் இணைத்துக்கொள்ளாமல் தலைநகர் திரும்பிவிட்டார். 1359-60'ல் வங்காளத்துக்குப் பகையாக மற்றொரு படையெழுச்சி ஏற்பட்டது. வங்காளத்துக்குப் போகும் வழியில் பிரோஸ், ஜான்பூர் என்ற நகரைத் தோற்றுவித்தார். ஜூனு என்ற (பழைய) பெயரைக்கொண்ட முகம்மதுபின் துக்ளக்கின் நினைவுக்கு அறிகுறியாக அந்நகர் ஏற்பட்டது. வங்காளத்தில் ஷாம்சுதீனின் மகன் சிகந்தர் கோட்டையில் ஓடி ஒளிந்திருந்தான். தொடக்கத்தில் வெற்றி பெற்ற போதிலும் சிகந்தருடன் ஓர் நட்பு உடன்படிக்கை செய்துகொண்டு, தில்லிக்குப் பிரோஸ் திரும்பினர். வங்காளம் மறுபடியும் உரிமையுடன் விளங்கியது. பிரோஸ் திரும்புகையில் ஜான்பூரிலிருந்து ஜாஜ் நகருக்கு (ஒரிஸ்ஸா)ச் சென்று, பூரி ஜகன்னுதர் ஆலயத்தை அழித்துவிட்டு, ஒரிஸ்ஸா மன்னனைத் திறைசெலுத்தச் செய்துவிட்டு தில்லி சென்றுர். முகம்மதுபின் துக்ளக்கை முன்பு எதிர்த்துக்கலகம் செய்த நாகர்கோட் (கங்ரா) 1360-1'ல் முற்றுகையிடப்பட்டது. அதன் தலைவர் அடிபணிந்தார். தம் முன்னவர் ஆட்சியில் கலகம்செய்த சிந்து நாட்டை, 1362—3'ல் பிரோஸ் தாக்கினர். தொடக்கத்தில் தோல்வி ஏற்பட்டதால். சுல்தான் குஜராத்துக்குப் பின் வாங்கினர். முடிவில் முஸ்லிம்குருதி சிந்துவதை வெறுத்த பிரோஸ் ஓர் உடன்பாடு செய்துகொண்டார். அவர் தானைத்தலைவர்கள் வெற்றிகள் பெற்றபோதிலும், பிரோஸ் காலமுணராமல் தலையிட்டு, கருதிய நற்பயன்பெறுது உடன்படிக்கைகள் செய்துகொண்டு வந்ததால், மிகுந்த பொருட்செலவில் நடைபெற்ற போர்களின் விளைவாகப் பெரும் பயன்களேற்படவில்லை. இதனல் போர் வீரனுக்கு உரிய தகுதி அவரிடமில்லை என்பது விளங்குகிறது.

ஆட்சிமுறை. இராணுவத்துறையில் தோல்வி ஏற்பட்ட போதிலும் ஆட்சிமுறைத் துறையில் பிரோஸ் சிறப்பான வெற்றியை அடைந்தார். அவர் தன்மை, அமைதி நடவடிக்கை களுக்கு ஏற்றதாயிருந்தது அவரிடம் மதவெறி இருந்த போதிலும், சமயவேறுபாடு பாராது எல்லா மக்களும் நலம் பெற வேண்டுமென்றே அவர் உழைத்தார். அக்பருடன் அவரை ஒப்பிடுவது அத்துணைப் பொருத்தமுடையதன்று; எனினும் மக்கள் அவராட்சியில் நன்மை பெற்றனரென்பது உண்மை. முந்திய ஆட்சியில் காணப்பட்ட "புயல்" நீங்கி அமைதி ஏற்பட்டிருந்தமை, யாவராலும் விரும்பி வரவேற்கப் பட்டது. பிரோஸ், முகம்மதுபின் துக்ள்க்கிடம் அன்பும் மரியா தையும் கொண்டிருந்த போதிலும், அவருடைய கொள்கைகள் அனைத்தையும் அறவே கைவிட்டார். பிரோஸின் ஆட்சியின் சிறப்புக்களுக்கு முக்கிய காரணமா யிருந்தவர், அவருடைய முதல் அமைச்சரா யிருந்த கானி ஜஹான் மக்பூல் என்பவ ராவர். இவர் வாரங்கல்லைச் சேர்ந்த ஒரு இந்து. இஸ்லாம் மதத்தைத் தழுவினவர். முகம்மதுபின் துக்ளக்கின் நன்மதிப் பைப்பெற்று, ஆலோசனை சபையில் சிறப்பான இடத்தை அடைந்து 1370'ல் தாமிறக்கும் வரை பதவி வகித்தார். சுல்தான், பல இனத்தவரான 2000 மாதர்களடங்கிய பெரிய தோர் உவளகத்தை வைத்திருந்தது அவர் தன்மைக்கு ஒரு குறைபாடாகும்.

பிரோஸ் தம்முன்னவரின் காலத்தில் கொடுமை அடைந்த மக்களுக்கும் அவர்கள் பிரதிநிதிகளுக்கும் நீதிவழங்கினர். பொருளிழந்தோர் ஈடுசெய்யப் பெற்றனர். நட்டஈட்டுப் பொருள்களைப் பெற்றவர்கள், பெற்றுக்கொண்டமைக்கு அடை யாளமாகக் கொடுத்த சீட்டுகள் ஒரு பெட்டகத்தில் இட்டு முகம்மதுவின் கல்லறையில் வைக்கப் பெற்றன. கடவுள், முகம்மதுவைக் கருணையுடன் நடத்த வேண்டியதற்காக!

வருவாய்முறை. பிரோஸ், உழவரின் உண்மை நண்பன். முகம்மதுவின் வரி வசூல் முறையால் அவர்கள் பெற்றிருந்த கடன்கள் யாவும் நீக்கப்பெற்றன. நிலவரித்

திட்டம் நன்கு ஆராயப்பட்டது. நிலங்களைச் சுல்தான், அளந்து, செழிப்புத் தன்மைக்குத் தக்கவாறு வரி விதித்தார். பொதுவாக நிலவரி குறைக்கப் பெற்றது. மாகாணத் தலைவர்கள் மத்திய அரசுக்குச் செலுத்தவேண்டிய தொகைகள் பல நீக்கப்பட்டதால் குடிகள் நன்மைபெற முடிந்தது. வரிவசூல் அதிகாரிகள் கடுமையாக இல்லாதவாறு ஆணை பிறந்தது. நீர்ப்பாசன வசதிகள் பெருகியதால், உழவுத்தொழில் முன்னேறியது. உழவர், நல்வாழ்வு வாழ்ந்ததுடன் ஓரளவு செல்வ வாழ்க்கையையும் பெறமுடிந்தது. தரிசு நிலங்கள், வேளாண்மையின் கீழ்வந்ததால் அரசியலாரும் போதுமான வரிகளைப் பெற்று வந்தனர். தில்லிக்கு அண்மையில் 1200-க்கு மேற்பட்டப் புதிய தோட்டங்கள் அமைக்கப் பெற்றன. வரித்திட்டம், குரானின் முறைகளுக்கேற்ப மாற்றி அமைக்கப்பட்டது. 23-வரிகள் நீக்கப்பட்டதாக அறிகிறோம். நிலவரியுடன், விளைவில் பத்தில் ஒருபங்கை நீர்ப்பாசன வரியாக அரசியலார் பெற்று வந்தனர். அறம், பொதுக் காரியங்கள் முதலியனவற்றிற்குப் போதுமான பொருள், அரசியலாரிடம் இருந்து வந்தது.

**இந்துக்க்ளின் நிலை.** இந்துக்களின் பொருளாதார நிலை முன்னேறியபோதிலும் அவர்கள் ஜிஸியா என்ற தலைவரியைச் செலுத்தவேண்டி யிருந்தது. தொடக்கத்தில், இவ்வரி, படையில் சேராத முஸ்லிம் அல்லாதாருக்கு, இராணுவ சேவைக்குப் பதிலாக விதிக்கப்பட்ட வரியாயிருந்தது. பின், இந்துக்கள் யாவரும் இதைச் செலுத்தவேண்டியவர்களானார்கள். அந்தணர் தொடக்கத்தில் இதைச்செலுத்த வேண்டியதில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் பிரோஸ், அவர்களும் இதைச்செலுத்துமாறு ஆணையிட்டார். அந்தணர், உண்ணாநோன்பிருந்தும், தம்மைத் தீக்கிரையாக்கிக் கொள்வோம் என அச்சுறுத்தி முறையிட்டும், அமைதிப்போராட்டம் நிகழ்த்தியதின் விளைவாக, வரித்தொகை குறைக்கப்பட்டது. இந்து சமயம் குற்றத்துறையைச் சார்ந்ததாகக் கருதப்பட்டது. அச்சமயத்தவரை முகம்மதியராக மாற்றப் பலவகையில் அரசியலார் ஊக்கமளித்தனர். சமயப்பரப்புக் குழுவின் முயற்சிகளை

அரசியலே செய்துவந்தது. "இஸ்லாமில் நம்பிக்கையில்லாத என் மக்களை அம்மதத்தைத்தழுவும்படி ஆதரித்து வந்தேன்." என்று சுல்தானே கூறியிருப்பது நோக்கற்பாலது. பிழைப்புக் காகப் பலர் முகம்மதியராயினர். கோயில்கள் பல அழிக்கப் பட்டு அவ்விடங்களில் பள்ளிவாசல்கள் தோன்றின. முஸ்லிம் களுக்குப் பகையாக சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்துவோர், கொலைத்தண்டனை பெற்றனர். அத்தகைய குற்றத்துக்காகவும், முகம்மதிய மதத்தைத்தழுவ மறுத்ததற்காகவும் ஓர் அந்தணன் உயிருடன் எரிக்கப்பட்டான் என்ற குறிப்பு காணப்படுகிறது.

பொது வேலைகள். பொதுமக்கள் நலனுக்கான 845 செயல்களை, பிரோஸ் செய்து முடித்ததாகக் கூறப்படுகிறது. நகரங்கள் நிருமாணிப்பதில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. மாலிக்காஸி ஷாஹ்ன, அப்துல் ஹாக், என்ற இருவரும் சுல்தானின் சிறந்த கட்டடக் கலைஞர்களாகப்பணி யாற்றினர். அவர்கள் அமைக்கும் கட்டடம் ஒவ்வொன்றைப் பற்றிய திட்டம், பொருளமைச்சரிடம் காண்பிக்கப்பட்டு வந்தது. பிரோஸின் கட்டடங்கள், முதல் துக்ளக்மன்னன் காலத்திய நினைவுச் சின்னங்களைப் போலவே, வீரமும் வலிமையும் பொருந்தியவை. உண்மையான வேலைப்பாடு அவற்றில் உள்ளது. கலைமுறையில் ஏமாற்றுந்தன்மை இல்லை. ஆனால் இந்துக் கலைப்பண்புகள் அவற்றில் கிடையா. லோடி குலத்த வர், முன்னைய முகலாயர் ஆகியோர் காலங்களில் இந்துக் கலைஞர்களின் திறமையை நாம் காணமுடிகிறது. அத்தகைய சிறப்பை, பிரோஸ்காலக் கட்டடங்கள் பெற்றிருக்கவில்லை. துக்ளக்குல ஆட்சியில் பலகாரணங்களால், இந்துக்கலைஞரின் செல்வாக்கு அதன் மிதத்தாழ்ந்த அளவுக்குக் குறைக்கப்பட் டிருந்தது.[1] சுல்தான் அமைத்த பெரிய நகரங்களில், பிரோஸாபாத் (புதுதில்லி) தும் ஜான்பூரும் குறிப்பிடத்தக்கன. பிரோஸாபாத் நகரில் எடுக்கப்பட்ட அரண்மனைக்கோட்டை, மிகப்பெரியதோர் நினைவுச்சின்னம். அங்கு எட்டு பொதுப் பள்ளிவாசல்களிருந்தன. தோப்ரா, மீரட் என்ற இரு இடங் களிலுமிருந்த அசோகன் தூண்கள் இரண்டையும், (ஒவ்

1. C. H. I. III, pp 588—9.

வொன்றும் ஒரேகல்லாலாகியது) பிரோஸ் அவ்விடங்களி லிருந்து பெயர்த்து, ஒன்றை பிரோஸாபாத்திலும் மற்றதை தில்லிக்கு அண்மையிலும் நிறுவினர். இஃது மிகவும் கடின மான செயல் என்பது யாவருமறிந்ததே. ஷாம்சி சிராஜ் என்ற வரலாற்றறிஞர் அவ்வருஞ்செயல் எவ்வாறு நிகழ்ந்த தென்று சிறப்பிக்கின்றார். தூண் கல்வெட்டுக்களை விளக்கிக் கூறுமாறு, சுல்தான், சில சாஸ்திரிகளைக் கேட்டபொழுது, அவற்றை உணராத அப்பெரியோர், பிரோஸ் ஒருவரே, அத்தூண்களை அவற்றினிருப்பிடங்களிலிருந்து அப்புறப் படுத் துவார் என்று குறிப்பிட்டிருப்பதாகக் கூறினராம்! பிரோஸின் கல்லூரியும், கல்லறையும், கலை நுணுக்கத்தைப் பொறுத்தவரை அக்காலத்தில் மிகச்சிறப்பானவை என்று கருதப்படுகின்றன. முதலமைச்சர் மக்பூலின் கல்லறையும் குறிப்பிடத்தக்க ஒரு கட்டடமாகும். பழையகட்டடங்களைப் பழுதுபார்த்துக் காப்பாற் றும் ஆர்வம் சுல்தானிடமிருந்தது. குதுப்மினரில் சீர்திருத் தங்கள் செய்யப் பெற்றன. கால்வாய்கள் நான்கில், இரண்டு, யமுனை, சட்லெஜ் ஆறுகளின் நீரை நன்கு பயன் படுத்திக் கொள்வதற்காக வெட்டப்பட்டன. பொறியமைப் பாளர், நீர்ப்பாசன வேலைகளை நன்கு காப்பாற்றி வந்தனர். உழவர், ஆண்டுக்கு இரண்டு அறுவடைகளைப் பெறமுடிந்தது.

காசுமுறை. ஆறுவகையான பொற்காசுகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. பிரோஸ், தம் முன்னவரின் காசுமுறை யைக் கைவிட விரும்பவில்லை. கலீபாவின் பெயர் தொடர்ந்து காசுகளில் பொறிக்கப்பெற்றது. காசுகளில் சுல்தான், “சமயப் பற்றுடையோர் தலைவரின் (அதாவது கலீபா) வலக்கை” என்றும், “தலைவரின் துணைவர்” எனவும் சிறப்பிக்கப்படுகிறார். 1356’ல் எகிப்திய கலீபா, இந்தியாவுக்கு ஒரு தூதரை அனுப் பியதுடன், பிரோஸ் துக்ளக்கையும், பாமனி நாட்டு முதலாம் அலாவுதீனையும், சுல்தான்களென ஏற்றுக் கொண்டதாக அறி வித்தார்.

கல்வி. பிரோஸ், வரலாற்றில் விருப்ப முடையவர். அவர் காலத்திய வரலாற்றறிஞர்களில், பரணியும் ஷாம்சி

சிராஜ் என்பாரும் சிறப்பானவர். முப்பதுக்குக் குறையாத கல்லூரிகள் முஸ்லிம் கல்வியைப் பரப்பிவந்தன. மௌலானு ஜலாலுதீன்ரூமி போன்ற சமய வல்லுநர் பலரை அவை தோற்றுவித்தன. நாகர்கோட் கோயில் புத்தக நிலையத்தைக் கைப்பற்றியபின், சில வடமொழி நூல்கள், பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன.

அன்புப் பணி. குரானின் முறைகளுக்கேற்ப முறை வழங்கல் அமையப்பெற்றிருந்தது. கொடுங்கொலை முதலிய நாகரிகமற்ற தண்டனைகள் நீக்கப்பெற்றன. கொலைத்தண்டனை நீக்கப்பட்டதெனினும், அச் சீர்திருத்தத்தினல் முகம்மதியர் மட்டுமே நன்மை பெற்றனர். தில்லியில் இலவச மருத்துவக் கூடம் ஒன்று நிறுவப்பட்டது. அயல்நாட்டிலிருந்து வரும் வழிப் போக்கரின் வசதிகளுக்காகப்பல நன்கொடைகள் அரசியலாரால் வழங்கப்பெற்றன. இரவலர் நலன்களில் சுல்தான் தனிக் கருத்துச் செலுத்தினுர். வேலை இல்லாதாரை வேலையிலீடு படுத்தும் பணிதரு மனையகம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. முகம்மதியப் பெண்களுக்குச் சீர்வரிசைகள் கொடுப்பதற்காக, அரசியலார் நிதி ஒதுக்கியிருந்தனர்.

ஜாகீர் முறையும் அடிமை முறையும். அலாவுதீன் கில்ஜி விலக்கியிருந்த ஜாகீர் முறையைப் பிரோஸ் விரும்பிப் போற்றினுர். நில மானியத் திட்டத்தை ஒப்ப, இராணுவ அலுவலாளரும் பொதுப்பணியாளரும், மானியங்களைப் பெற்ற னர். இராணுவத் துறையில் சூதுமுறை ஒழிக்கப்பெற்றது. குதிரைப்படை நன்கு காக்கப்பட்டது. எனினும் படைத்துறை யில் திறமைக்குறைவு தோன்றியது. சுல்தான் பழைய போர் வீரரின் உறவினர்களை அவர்கள் பதவிகளில் அமர்த்தி அளவுக்குமீறி அருள்புரிந்தது அதற்கு ஒரு காரணமாகும். மங்கோலிய இடர் ஓய்ந்துவிட்டதாலும், பெரும்பாலும் அமைதி நிலவியதாலும், பிரோஸ் காலத்திய வளமான வாழ்க்கை நிலையாலும் அச்சுல்தானின் அறிவற்ற இராணுவச் சீர்திருத்தங் களாலும் சுல்தானியப்படை, வலிமையில் குன்றியது. இந்தி யாவில் முஸ்லிம் ஆட்சி, படைவலிமையை அடிப்படையாகக்

கொண்டது என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். சுல்தான், அளவு கடந்து அடிமைகளைப் பணித்துறையில் அமர்த்திக்கொண்டது, தீமைபயக்கத்தக்க மற்றொருசெயலாகும். அவர்களைக்கண்காணிக்க அரசியலில் ஒரு தனித்துறைக்களம் அமைக்கப்பெற்றது. இராணுவம், பொதுத்துறை, இரண்டிலும் அடிமைகள் அமர்த்தப் பெற்றனர். தலைநகர் அரண்மனையில் மட்டும் 40,000 அடிமைகள் பணிபுரிந்தனர். அவர்கள் முஸ்லிம் சமயத்தை ஏற்றுக்கொண்டதாக அறிவித்துவிட்டதால் உண்மையுடனும் பணிவன்புடனும் அவர்கள் அரசுக்குப் பணி புரிவர் என்று கருதிவிடுவது தவறு.

பின் வழியினர் சிக்கல். பிரோஸின் முதுமைப் பருவம் துயரம் நிறைந்ததாகியது. அவர் மகன் முகம்மது, தந்தைக்கு எதிராகச் சூழ்ச்சிசெய்த காரணத்தால் அவனை அரசுரிமை யினின்று நீக்க முதலமைச்சர் முயற்சி செய்தார். ஆனால் அம்மகன், சுல்தானின் மனதைக் கவர்ந்து அமைச்சரையே விலக்குமாறு செய்து விட்டான். ஆனால் முகம்மது மறுபடியும் முன்புபோலத் தீநெறியிற் செல்லலானான். அரசியல் குழப்பம் பெருகியது. பிரோஸ், தலையிட்டு நிலைமையை ஒழுங்குபடுத்தினர். முகம்மது ஓடிவிட்டான். அரச அலுவல்கள் என்னும் சுமையைத் தாங்க முடியாமல், பிரோஸ், தம் பெயரனை துக்ளக்ஷா (பத்கானின் மகன்) விடம் அரச அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு, தம் எண்பத்து மூன்றாவது வயதில் உயிர் நீத்தார்.

பிரோஸ்: தன்மையும் அருஞ்செயல்களும். நல்ல தன்மையே மேன்மை என்று கருதுவோமானல், பிரோஸ் மிகவும் மேன்மையானவர் என்று உறுதியாகக் கூறலாம். அவர் ஆட்சிமுறை நலம் பயக்கும் தன்மை வாய்ந்தது. அது மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. ஆனால் பிரோஸின் கடுமையற்ற தன்மையும் வரம்புமீறிய பெருந்தன்மையும் அரசாட்சியை மெலிவுறச் செய்தன. அவருடைய காலத்தில் அரசபீடத்திலிருப்போர் இராணுவ வீரப்பண்புகள் பெற்றவரா யிருத்தல் இன்றியமையாததா யிருந்தது. அத்தகையோரே ஆட்சி நிலைகுலையாமல் காப்பாற்றித் தம் நிலையையும் வலிமை

யுறுத்திக்கொள்ள முடியும். பிரோஸ், அறஞ்செய்யும் உள்ளம் படைத்தவர்; கருணை மிக்கவர்; இயன்றவரை குருதி சிந்தப் படுதலைத் தவிர்க்கவே முற்பட்டவர். ஆனால் உறுதியற்று ஊசலாடும் உள்ளம் படைத்த அவரது கொள்கைகள் எவ்வாறு தீமை பயக்கத்தக்கனவாயின என்பதை முன்னர்ப் பார்த்தோம். அவர் கடவுளிடத்தன்பும் அச்சமும் கொண்டவர். வைதீக முறையில் அவருக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. குரான், அவருக்கு வழிகாட்டி. ஆனால் குடிப்பழக்கம் அவரைவிட்டு நீங்கவில்லை. வேட்டையாடுதலில் மிகுந்த நாட்டம் அவரிட மிருந்தது. கட்டடங்களையும் தோட்டங்களையும் அவர் விரும்பினார். ஆனால் இந்துக்களையும் ஷியா முஸ்லிம்களையும் (வைதீக முறைக்கு மாறுபட்டோர்) வெறுத்தார். சமயப்பொறை அவரிடம் அணுவளவும் இல்லை. எளிய வாழ்க்கையை அவர் மேற்கொண்டார். உணவு அருந்தப் பொன், வெள்ளித் தட்டுகளைப் பயன் படுத்துவது ஆடம்பர முறையென்றும் அதனைக் கைவிடவேண்டு மென்பதும் அவர்கருத்து. பிரோஸ், கல்வியை ஆதரித்த போதிலும் சிறந்த அறிவாளரான முகம்மதுபின் துக்ளக்குடன் இத்துறையில் இவ்வரை ஒப்பிடுவதற்கில்லை. இவருடைய நாடு, அளவில் குறைந்திருந்தபோதிலும், அதனை உயர்வுறச்செய்ய ஆர்வத்துடன் உழைத்தார். உயர்ந்த ஆட்சியினர் என்ற தகுதிக்கு இவர் உரியவர் என்பதை ஏற்றுக் கொண்டபோதிலும், இவருடைய சில நடவடிக்கைகள், அரசதந்திர முறைக்கு ஏற்றன அல்ல என்பதையும் அவை தில்லி சுல்தானியத்தின் அழிவுக்குக் காரணமாயின என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. பொதுவில் இச்சுல்தானின் தன்மையும் ஆட்சிமுறைத் திறமையும் போற்றத்தக்கன. ஆனால் படைப் பண்பு இன்மை முதலிய சில குற்றங்கள் இவரிடமிருந்தன என்பதை நாம் பொருட்படுத்தாமல் இருப்பதற்கில்லை. பொதுவாக முகம்மது பின் துக்ளக்கின் இயல்முறைக்கு மாறானதாகப் பிரோஸின் இயல்முறை அமைந்தது போற்றற்குரியது. ஆனால் அவரைப்போலவே இவரும் சமயச் சார்பான அரசியலையே மேற்கொண்டிருந்தார். ஆயினும் பிற்கால விளைவுகளைக் கருதுமிடத்து, பிரோஸ்துக்ளக் மக்களுக்குச் செய்த நன்மைகள் காரணமாக, அவர் போற்றத்தக்கவரே எனலாம்.

# பகுதி 16

## தைமூரின் படையெழுச்சி

•

**பிரோஸ் துக்ளக்கின் பின்வந்தோர்.** பிரோஸுக்குப் பின், துக்ளக்ஷா (இரண்டாம் கயாஸுதீன் துக்ளக்) 1388'ல் பட்டம் பெற்றார். அவர் பழிக்கு அஞ்சாதவர். நேர்மையின்றி வாழ்க்கை நடத்தி வந்தார். தம் தந்தையின் உடன் பிறந்தானின் மகனை அபுபகர் என்பானைச் சிறையிலடைத்தார். 1389'ல் சுல்தான் கொல்லப்பட்டு அபுபகர் அரியணையேறினார். முகம்மது (பிரோஸின் மகன்) அவ்வாட்சியை எதிர்த்தார். முதலில் தோல்வியுற்றாரெனினும் பின்னர் அரசைக் கைப் பற்றிக்கொண்டு (1390) முகம்மது, நாட்டிலேற்பட்ட கலகங்களை அடக்கினார். 1394'ல் அவர் இறந்துபோகவே அவர் மகன் மாமூது பட்டமேற்றார். அதற்கிடையில் அவர் உடன் பிறந்தானும் சில நாட்கள் ஆட்சி நடத்தினான். இவ்வாறு குறுகிய காலத்தில் பல அரசர் தோன்றியதால் அரசியலில் குழப்பமேற்பட்டது. கட்சிப்போர் நிலவியது. மாகாணங்கள் உரிமை பெறலாயின. ஜான்பூர், குஜராத், மாளவம் முதலியன பேரரசினின்று பிரிந்தன. நூஸ்ரட்ஷா என்ற ஒருவனைச் சிலர் சுல்தானாக்கினர் (1394). ஆனால் இக்பல்கான் என்ற வீரன், அச்சுல்தானை விரட்டிவிட்டு (1397) மாமூதுவைப் பெயரளவில் சுல்தானாக அமர்த்திவிட்டுத் தானே எல்லா அதிகாரங்களையும் செய்து வந்தான்.

**தைமூரின் படையெழுச்சி.** தைமூர் (1336—1405) டிரான்ஸ் ஆக்ஸியானா பகுதியைச் சேர்ந்த ஒரு துருக்கியப் பெருஞ்செல்வர். அவர் கால் முடமாயிருந்த காரணத்தால் முடத் தைமூர் எனவும் அவர் குறிப்பிடப்படுவர். அவர் பாரசீகம், ஆப்கானித்தானம், மெசபொடேமியா முதலிய பல நாடுகளை வென்ற பின்னும் மனநிறைவு பெறவில்லை. 1394'ல் மாஸ்கோவை அவர் சூறையாடினார். ஆஸ்ட்ரகான் பகுதியும் அடுத்த ஆண்டில் தாக்கப் பெற்றது. இந்தியாவில் படையெடுக்க அவர் முடிவு செய்ததின் காரணம், சிறப்பாக, சமயத் துறையில் உயர்வு பெறுவதற்கேயாம். " புறச்சமயிகளைத்

தாக்கி இஸ்லாமில் அவர்களுக்கு நம்பிக்கை உண்டாக்கும் நோக்கத்துடன் தான், நான் இந்துஸ்தானத்தில் படையெடுக்கிறேன். முகம்மதுவின் ஆணைப்படி பல கடவுளர் வணக்கம், இஸ்லாமியத் தத்துவத்தில் நம்பிக்கை யின்மை முதலிய கேடுகள் நிறைந்த நாட்டைத் தூய்மையடையச் செய்வது என் கடமையாகும். கோயில்களையும் வழிபாட்டு உருவங்களையும் அழித்து, கடவுளின் வீரர்களாகவும் இஸ்லாமிய மதகுருமார்களாகவும் நாங்கள் அங்கே இருப்போம். மதப்போரில் கொள்ளையடித்தல் முகம்மதியர்களுக்கு இயற்கைத் தன்மை.'' என்ற தைமூரின் முழக்கம் நோக்கத்தக்கது. தில்லி சுல்தானியத்தின் குழப்பமானநிலை படையெடுப்பாளருக்கு வலிந்து வலிந்து துணைசெய்தது. பிரோஸ்துக்ளக்கின் ஆட்சிக்குப் பிந்திய பத்து ஆண்டுகளில் ஆறு அரசர்கள் ஆட்சி புரிந்ததைக் கண்டோம். அவர்களில் யாரும் திறமை பெற்றவரில்லை. ஆனால் அதற்கு மாருக இழிகுணங்களின் உறைவிடங்களாக அவர்கள் விளங்கினர். அரண்மனையில் அடிமைகளின் அதிகாரங்கள் பெருகின. இந்துத் தலைவர்களும் மாகாண அதிகாரிகளும் கலகம் விளைவித்து வந்தனர். தில்லியில் அரச அதிகாரம் பிளவுபட்டது. தைமூர், தம் பெயரனை பீர்முகம்மதுவின் மூலம், இந்தியாவின் நிலையை அறிந்திருந்தார். 1397'ம் ஆண்டின் முடிவில் பீர்முகம்மது பஞ்சாபுக்கு அனுப்பப்பட்டிருந்தான். அவன், ஊச், மூல்தான் முதலிய இடங்களைக் கைப்பற்றி யிருந்தான். தைமூர், 1398'ல் காபூலிலிருந்து அட்டோக் சென்று, பின் சிந்து ஆற்றைக் கடந்து, பீர்முகம்மதுவைக் கண்டபிறகு, சட்லெஜ் ஆற்றையுங் கடந்து, புகழ்பெற்ற பாட்னேர் (பிகானீர்) கோட்டையை (இராசபுதனம்)க் கைப்பற்றினர். ஒருமணி நேரத்தில் 10,000 மக்களை அவர் கொலை செய்தார். தில்லியின் அருகில் அவர்வரும் வரை அவருக்கு எதிர்ப்பே இல்லை. அங்கு தில்லி சுல்தானுடன் போர்தொடங்குகையில், தாம் கைப்பற்றி யிருந்த ஒரு லட்சம் இந்துக் கைதிகளை, தம் நலத்திற்காகக் கொன்று தள்ளினர். போரில் வெற்றிபெற்றபின், தலைநகரில் நுழைந்தார். மாமூதுவும் இக்பல்கானும் போர்க்களத்தில் ஓட்டமெடுத்தனர். தில்லிக் குடிகள் பணிந்து விட்டதால் மன்னிக்கப் பெற்றனர். ஆனால்

தைமூரின் வீரர்கள் இழைத்த கொடுமைகளைப் பொறுக்காது மக்கள் எதிர்க்கலாயினர். இதனால் சினங்கொண்ட தைமூர், ஐந்து நாட்கள் நகரைத் தாக்கிக் கொள்ளையிட்டார். அளவற்ற செல்வம் அவருக்குக் கிடைத்தது. மிகுதியான மக்கள் கைதிகளாயினர். பெண்டிரும் கல்தச்சர்களும் கடத்திச் செல்லப் பட்டனர். இரண்டு வாரங்கட்குப் பிறகு, 1399'ல் தைமூர், தில்லியைவிட்டு நீங்கி, மீரட், ஹரித்வார், ஜம்மு வழியாக சாமர்கந்த் சென்றார். வழியில் கொலைகளும் அழிவுபாடுகளும் வழக்கம்போல் நிகழ்த்தப்பெற்றன. அவருடன் ஒத்துழைத்த மூல்தான் தலைவர் கிஸிர்கானை, இந்தியாவில் தமது பிரதிநிதியாக அமர்த்தினார். தைமூர் எழுதிய தம் வரலாற்றில், இந்தியப் படையெழுச்சியைப் பற்றியும், தில்லி நகரைப் பற்றியும் தைமூர் விளக்கம் தருகிறார். பாபர் எழுதியுள்ள வரலாற்றுடன் ஒப்பிடுமிடத்து தைமூரின் வரலாறு மிகவும் தாழ்ந்ததாகும். அளவுகடந்த கொடுமைகளை இழைத்த தைமூர், முகம்மதியக் கல்வியை நன்கு கற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. இந்தியாவை விட்டகன்றபின், அவர் துருக்கிய சுல்தானை, 1402'ல் அங்கோரா (அங்காரா) வில் முறியடித்தார். இதுவே, அவருடைய வெற்றிகள் யாவற்றிலும் மிகப்பெரியதாக இருக்கலாம். இந்தியாவில் தில்லி சுல்தானியராட்சி சீர்குலைந்தது. ஜான்பூர், மாளவம், குஜராத், பகுதிகள் உரிமை பெற்றன. இந்துத் தலைவர்களும் விடுதலை பெற்றனர். துக்ளக்குகளின் வீழ்ச்சி விரைவுபடுத்தப் பெற்றது. நாடு, பொருளை இழந்தது. கலைஞர்களை இழந்தது; கலைச் சின்னங்களை இழந்தது; வறுமையும் தொத்துநோயும் மக்களை வாட்டின. பொன்னும் வெள்ளியும் அருகின. தில்லி அழிவுற்றது. அந்நகர், தன் பழைய உயர் நிலையை பின்வரும் முகலாயப் பேரரசர் காலத்தில்தான் பெற முடிந்தது.

துக்ளக்குலமுடிவு. 1399'ல் நூஸ்ரட்ஷா தில்லியைக் கைப்பற்றினார். ஆனால் அவரை விரட்டிவிட்டு, இக்பல்கான், 1401'ல் மாமூதுவையே பெயரளவில் சுல்தானாக அமர்த்தினார். இக்பல்கான், மூல்தானின் கிஸிர்கானுடன் போரிடுகையில் 1405'ல் இறந்தொழிந்ததால், பெருஞ்செல்வர்கள்,

தௌலத்கானின் தலைமையில், மாமூதுவையே சுல்தானுக வைத்திருந்தனர். அச்சுல்தான், சிற்றின்பத்தில் மூழ்கியிருந்து 1412'ல் உயிர் நீத்தார். இவரைப்பற்றி இவர் காலத்தவர் குறிப்பிடுவதாவது:- "உலகப் பிரபுவின் ஆட்சி தில்லியிலிருந்து பாலம் (தில்லியிலிருந்து 9-மைல் தொலைவிலுள்ளது) வரை ப்ரவியுள்ளது." இதுவே துக்ளக் குலத்தின் முடிவு. தௌலத்கான், பெருஞ்செல்வரின் உதவி யுடன், அரசியலை நடாத்தினுர். அரியணையில் யாரும் அமர வில்லை. 1414'ல் தௌலத்கான், கிஸிர்கானுக்கு அடிபணிந் தார்.

## பகுதி 17

### சையதுகுலம்

கிஸிர்கான் (**1414—21**). சையது என்ற பட்டம் முகம் மது நபிகளின் கால்வழியினரைக் குறிக்கும். ஆனுல் அக்கால் வழியில் வராதவர்கள்கூட அப்பட்டத்தைச்சூட்டிக்கொண்டனர். சையது பட்டத்தைச் சூட்டிக்கொண்ட கிஸிர்கான், நபிகள் நாயகத்தின் கால்வழியில் தோன்றியவன்தான் என்று உறுதி யாகக் கூறமுடியாது. அவனை, மூல்தானின் தலைவராக, பிரோஸ் துக்ளக் அமர்த்தியிருந்தார். 1395'ல் இக்பல்கானின் உடன்பிறந்தான் அவனைத் தாக்கிச் சிறைப்படுத்தினுன். ஆனுல் விரைவில், கிஸிர்கான், தன்னை விடுவித்துக்கொண்டு, தைமூரின் நண்பனுகி அவருடன் இணைந்து அவருக்கு உதவி புரியலானுன். தைமூரின் அதிகாரம் பெற்ற தலைவனுக இந்தியா வில் கிஸிர்கான் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினுன். 1405'ல் அவன் இக்பல்கானை வென்று, 1414'ல் தில்லியை, தௌலத் கானிடமிருந்து கைப்பற்றிக் கொண்டான். ஆனுல் தில்லியில் சுல்தானரசை மீண்டும் நிறுவுவதென்பது எளிய செயலாக இல்லை. தைமூர், இந்தியாவில் ஒரு இராச்சியத்தின் அழிவுக்குக் காரணமாயிருந்தாரே தவிர அந்த இடத்தில் வேருெரு இராச் சியத்தை ஏற்படுத்த எவ்வகை முயற்சியும் செய்யவில்லை. தில்லி அரசின் ஆதிக்கம் (பெயரளவில்) நிலவிய பகுதிகள் எங்கும் புரட்சிக் கலகங்கள் தோன்றி வந்ததால், அவற்றை அடக்கும் முயற்சியிலேயே, கிஸிர்கான் தன் ஆட்சிக்காலத்தைச்

செலவிட வேண்டியிருந்தது. அவனுக்குத் துணையாக இருந்து உண்மையுடன் உழைத்து வந்தவர், தாஜ்-உல்-முல்க் என்னும் தலைமை அமைச்சராவர். கிஸிர் கான், பாராட்டத்தக்க வாழ்க்கைநடத்தி, மக்களின் நன்மதிப்பைப் பெற்றான். அவன், அரசபட்டம் எதையும் சூட்டிக்கொள்ள வில்லை. தைமூரின் அதிகாரம்பெற்ற தலைவன் என்ற முறையிலேதான் ஆட்சி நடத்தினான். அவனும் அவன் அமைச்சரும் 1421'ல் இறந்தனர்.

முபாரக்ஷா (**1421—34**). கிஸிர்கானின் மகன், முபாரக்ஷா ஆட்சியிலும் கலகங்கள் பல ஏற்பட்டன. அவற்றைப் பற்றிய விளக்கங்களை, யாஹ்யாபின் அஹமத் என்பார் எழுதியுள்ள தாரிக்கி முபாரக்ஷாஹி என்ற நூலில் காணலாம். மீண்டும் மீண்டும் தோஆப் பகுதியில் துயரநிலை ஏற்பட்டு வந்தது. ஜான்பூருடனும் சுல்தான் போரிட வேண்டியிருந்தது. முடிவில் சர்வார் உல்முல்க் என்னும் அமைச்சர் குழ்ச்சிசெய்து சுல்தானைக் கொன்றுவிட்டார்.

முகம்மதுஷா (**1434—45**). வெற்றிபெற்ற அமைச்சர், கொல்லப்பட்ட சுல்தானின் வளர்ப்புப் பிள்ளையான முகம்மதுஷாவை அரியணையிலமர்த்தினர். சூழ்ச்சித் திட்டத்திற்கு உதவிபுரிந்தவர்கள் உயர் பதவிகளில் அமர்த்தப் பெற்றனர்; ஆனால் அமைச்சரை விலக்கச் சூழ்ச்சிகள் நடந்து அவர் விரட்டப்பட்டார். அரசியல் நிலைமை குழப்பம் நிறைந்ததாயிற்று. ஜான்பூரும் மாளவமும் வலுவந்தத் தாக்குதல்கள் மூலம் சுல்தானுக்கு இடையூறுகள் விளைவித்தன. லாகூரின் ஆட்சித் தலைவராயிருந்த பலால்லோடி, தில்லியைக் கைப்பற்ற முயன்றது பயனுறவில்லை.

ஆலம்ஷா (**1445—51**). முகம்மதுஷாவின் மகன் ஆலம்ஷா, சையது குலத்தின் இறுதிமன்னனவர். இவர், தமது அமைச்சர் ஹமீத்கானைக் கொல்ல முயற்சித்தார். அதனால் வெகுண்ட அவ்வமைச்சரின் தூண்டுதலால் பலால் லோடி, 1451'ல் தில்லியைக் கைப்பற்றிக் கொண்டார். சுல்தான், பதவி துறந்து, அரசியலிலிருந்து விலகி, 1478'ல் உயிர் நீத்தார்.

முபாரக்ஷா, முகமதுஷா, ஆகியோரின் கல்லறைகள், முந்தியக்காலக் கட்டடக் கலை முறையிலேயே அமைந்துள்ளன. ஆயினும் அவற்றின் மேலுள்ள நீலநிறக்கூரை, ஒரு புதிய பண்பாகும். சையதுக்கள், தம்மை தைமூரின் பிரதிநிதிகள் என்று சிறப்பித்துக்கொண்டு காசுகள் வெளியிட்டன ரென்ற கருத்து ஆராய்ச்சிக்குரியது. அவர்கள் காசுகள், சுல்தானியக் காசுகள் வரிசையில் அமையும்.

## பகுதி 18

### லோடி குலத்தினர்

பலால். *(1451 — 89)* பலால், ஆப்கானிய லோடி குலத்தைச் சேர்ந்தவர். தில்லி சுல்தானியராட்சியை மீண்டும் நிறுவ அவர் செய்த முயற்சியின் விளைவாய் இந்தியாவில் முதன்முதலாக ஆப்கானிய ஆட்சி அமைக்கப்பெற்றது. இவர், சிறிதுகாலம் ஹமீத்கானுடன் நல்லுறவு பூண்டிருந்து, பின் அவனுடைய அதிகாரம் வளர்வதைக்கண்டு, அவனைச் சிறையிலிட்டார். கீழ்ப்படியாமலிருந்த பலரை—சிறப்பாக தோ-ஆப் பகுதியினரை—தம் அடிப்படுத்தி ஆட்சியை வலுப்படுத்திக் கொண்டார். ஆட்சி முறையில் அவருக்கு நல்ல திறமை இருந்தது. லோடி குலத்தைச்சேர்ந்த பல ஆப்கானியர்களை வரவழைத்து அவர்களுடைய உதவியால் அரசியலைச் சிறந்த முறையில் அமைத்தார். ஆனால் பெருஞ் செல்வர்களை, நன் முறையில் நடத்தி வரையறை மீறுதபடி செய்திருந்தார். ஜான்பூருடன் இவர் நடத்திய போர், இவராட்சியில் மிகச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாகும். பலமுறைகள், லோடி சுல்தான், ஜான்பூர் ஷார்க்கி குல மன்னருடன் போரிட்டு முடிவாக அங்கு நிலவிய உரிமை ஆட்சியை ஒழித்துவிட்டுத் தம் மகனை அங்கு ஆட்சியாளனாக அமர்த்தினர். பலால், உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளைப் போற்றத்தக்க முறையில் அமைத்திருந்தார். தில்லி சுல்தானியராட்சி மீண்டும் செழிப்படையும் வழிகள் வகுக்கப் பெற்றன. சுல்தான், கடவுட் பற்றும் மக்களிடத்தன்பும், உண்மை, நேர்மை அறஞ்செய்வதில் விருப்பம் முதலிய பண்புகளும் வாய்க்கப் பெற்றிருந்தார்.

பயனற்ற ஆரவாரங்களை அவர் வெறுத்தார். தாம் ஓர் புலவ ஞக இல்லாத போதிலும், புலவர்களை அவர் போற்றினர். 1489'ல் அவர் இறந்தார்.

சிகந்தர் **(1489—1517)** பலாலின் இரண்டாவது மகஞன நைசாம்கான், சிகந்தர்ஷா என்ற பட்டத்துடன் அரியணை ஏறினர். அவர் தாய் ஒரு பொற்கொல்லனின் மகள் என்ற காரணத்தால் அவர் அரசுரிமை பெறுவதற்கு எதிர்ப்பு ஏற்பட்டது. பலாலின் மூத்தமகனும் (ஜான்பூரின் தலைவர்) பெயரனும் அவ்வெதிர்ப்புக்குச் சிறப்பான காரணமாயினர். ஆனல், சிகந்தர் முடிவில் வெற்றிபெற்ருர். 1495'ல் ஜான் பூரில், சுல்தான் தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்தித் தம் உடன் பிறந்தானைச் சிறையிலிட்டார். பீஹாரும் அவரால் வெல்லப் பெற்றது. தில்லிசுல்தான், வங்காள சுல்தானுடன் நேச உடன்பாடுசெய்து கொண்டார். கலகம் செய்த தலைவர்கள் யாவரும் அடக்கப் பெற்றனர். 1504'ல் சுல்தான், ஆக்ரா நகரைத் தோற்றுவித்தார். அடுத்த ஆண்டிலேற்பட்ட பூமி அதிர்ச்சியால் அந்நகர் நடுக்கமுற்றது. இந்து, முஸ்லிம் புரட்சிக் கலகங்களை அடக்குவதுடன், சிறுசிறு நிலப்பகுதிகளைக் கவர்தலும், சுல்தான் தொடர்ச்சியாக ஆற்றிவந்த செயல் களாம். அவர் பேரரசு, பஞ்சாபிலிருந்து பீஹார் வரை பரவி யிருந்தது. போர்ச்செயலில் மிகுதியாக ஈடுபட்டிருந்தபோதிலும், அவர், கணக்குமுறை, தணிக்கைமுறை, பொது வருவாயைத் தவருன வழிகளிற் செலவிடாமல் காப்பாற்றல் முதலிய செய்தி களிலும் ஊக்கமுடன் கருத்தைச் செலுத்திவந்தார். ஒற்றர்குழு திறமையுடன் பணியாற்றி வந்தது. வேளாண்மை, வாணிகம், சாலைகளை ஒழுங்குபடுத்தல், இரவலருக்கான ஏற்பாடு முதலிய பல செய்திகளில் சிகந்தர் கருத்தைச் செலுத்தினர். சுருங்கக் கூறின் அவரிடம் கூர்மையான ஆட்சித்திறமை இருந்தது. நெறி கெட்டவர்களை அவர் வெறுத்தார். பதவிகள் பெறுவதற்கு நற் குடிப்பிறப்பு சிறப்பானதோர் தகுதி என்பது அவர் கருத்தாகும். பாரசீகக் கல்வி அறிவு அவரிடம் நிறைந்திருந்தது. வடமொழி மருத்துவநூல் ஒன்றை பாரசீகத்தில் மொழிபெயர்க்க அவர் உதவினர். லோடி மன்னருள் மிகவும் சிறப்பு வாய்ந்த

மன்னர் இவரே. ஆனால் சமயப்பொறை இவரிடம் இல்லாதது ஒரு பெருங்குறையாகும். ஓர் அந்தணன், தன்னுடைய சமயம், முகம்மதிய மதத்தைப் போலவே சிறப்பு வாய்ந்தது என்று கூறியதற்காக அவன், "இஸ்லாம் அல்லது இறப்பு", இரண்டில் ஒன்றை ஏற்க வேண்டுமாறு வற்புறுத்தப் பெற்ற போது, அவன், இந்து சமயத்தைக் கைவிட மறுத்ததால் கொலை செய்யப்பட்டான். மதுராவிலிருந்த கோயில்களைச் சுல்தான் இடித்ததுடன் அவ்விடங்களிலிருந்த உருவச்சிலைகளை, இறைச்சிக் கடைக்காரர்கள் தங்கள் தொழிலுக்குப் பயன் படுத்திக் கொள்ளுமாறு, அவர்களுக்கு அளித்தார். யமுனைப் படித்துறைகளில் இந்துக்கள் குளிப்பது தடைசெய்யப்பெற்றது. மயிர் மழித்துக்கொண்டு புண்ணிய முழுக்காடுபவர்களுக்கு இடையூறு விளைவிக்கும்பொருட்டு, மயிர் வினைஞர், அவர்களுக் குத் தொழில் செய்யக்கூடாது என்று கட்டுப்படுத்தப்பெற்றனர். இவ்வாறு அவர், ஔரங்கசீப்பின் முன்னோடியாக விளங் கினர்.

இப்ரஹிம் **(1517—26)** சிகந்தரின் மூத்தமகன் இப்ரஹிம் தம்முடைய அரச அதிகாரத்தை வலிமையுறச் செய்துகொள் வதற்காக முயன்றதால், ஆப்கானியப் பெருஞ்செல்வரின் பகைமை அவருக்கு ஏற்பட்டது. சுல்தானின் இளவல் கலகம் செய்ததால், அவன், கொலைசெய்யப்பட்டான். மீவார் (உதயபுரி) மீது படையெடுக்கப்பட்டது. சுல்தான் வெற்றிபெற்றதாக முகம் மதியர் குறிப்புக்கள் கூறுகின்றன. ஆனால், ராணாசங்கா, சுல்தா னைத் தோற்கடித்து விட்டதாக இராசபுத்திரரின் குறிப்புக்களி லிருந்து அறியப்படுகிறது. இப்ரஹிம் இழைத்த கொடுமையான பல கொலைகள், பெருஞ்செல்வருக்கு அச்சத்தை எழுப்பியது. எங்கும் அவர்கள் கலகம் செய்யலாயினர். பீஹார் உரிமை பெற்றது. லாகூரின் ஆட்சித் தலைவராயிருந்த தௌலத்கான் லோடி, சுல்தானியராட்சியின் வருந்தத்தக்க நிலையைக்கண்டு, பாபரை, இந்தியாவில் படையெடுக்குமாறு அழைத்தார். முகலாயத் தலைவர் பாபர், 1526'ல் பானிப்பட்டுப் போரில் இப்ரஹிமை முறியடித்துக் கொன்றுவிட்டு, லோடி குலத்தையும் முடிவுறச் செய்தார். முகலாய ஆட்சி தொடங்கியது. லோடி

குலத்தின் இறுதி மன்னன், பெருஞ்செல்வரிடம் கடுமையாக நடந்துகொண்ட போதிலும், மக்கள் அவராட்சியில் நலங்களைப் பெற்றனர். நாட்டில் விளைவு மிகுதியாகவும் விலைகள் குறைவாகவு மிருந்தன.

**பண்பாடு.** சிகந்தர், குதுப்மினாரை, 1503'ல் சீர்திருத்தினர். இப்ரஹிமால், 1517-'18'ல் நிறுவப்பட்ட அவருடைய கல்லறை, பல வண்ணங்களால் மெருகிடப்பட்ட ஓடுகளைப் பெற்றுக் காட்சியளிக்கிறது. அஃது நுட்ப வேலைப்பாடுடையதாயிருப்பதுடன், அதற்குத் தனிச்சிறப்பை அளிக்கும் இரட்டை வளை மாடத்துடன் விளங்குகிறது. சிகந்தரின் முதலமைச்சருடைய பள்ளிவாசல் அக்காலத்திய பள்ளிவாசல்கள் யாவற்றிலும் மிகப்பெரியது. லோடி காலத்திய கட்டடக் கலையின் மிகச் சிறப்பான நிலையை அதிற்காணலாம். அக்குலத்தவரின் காசுகளில் உள்ள விளக்க வாசகங்கள் வைதீகப் பண்பைக் காட்டாநிற்கும். லோடி காலத்தில் இயற்றப்பெற்ற அனங்கரங்க என்னும் வடமொழிச் செய்யுள்நூல் நம் கருத்தைக் கவருகிறது. சிகந்தர்காலத்தில் சிறப்பான அலுவலாளர் ஒருவரை மகிழ்விக்கும் பொருட்டு கல்யாணமல்லர் என்பாரால் அது இயற்றப்பட்டதாம். காதல் சார்ந்த இந்நூல் பத்து இயல்களை உடையது. புத்தூக்கம்பெற உதவும் பல மருத்துவச் செடிகள், பொருள்கள் முதலியனவற்றைப் பற்றி இதுகூறும். சிகந்தர், ஆயுள்வேத நூல்களில் ஆர்வம் காட்டினர்.

## பகுதி 19

### சுல்தானியராட்சியின் தளர்ச்சியும் வீழ்ச்சியும்

தில்லி சுல்தானியராட்சிக்கு நிலையாக ஏற்பட்டிருந்த முப்பெரும் இடையூறுகள் வருமாறு :— (1) அயலவர் படையெழுச்சிகள் (2) மண்டலத் தலைவர்களின் கீழ்ப்படியாத் தன்மை (3) அடக்கப்பெருத அல்லது ஓரளவு அடக்கப் பெற்ற இந்துச்சிற்றரசர்களும் தலைவர்களும். இவற்றை அடக்கி வெல்லுந் திறமையைப் பொறுத்திருந்தது, சுல்தானியராட்சியின் நிலை. பால்பனும் அலாவுதீன் கில்ஜியும் முறையான

வழிகளைப் பின்பற்றினர். ஆனால் முகம்மதுபின் துக்ளக் வீழ்ச்சியை நோக்கும் வழியைப் பின்பற்றினார். அவர் தமக்கு முற்பட்டோரின் செயல்களைச் சீர்திருத்தி அமைக்கத் தவறியதுடன், அதுகாறும் வளர்ந்திருந்த நலங்களையும் பாழ்படுத்தினார். அவருடைய ஆட்சியில், 1335 முதல் தோன்றிய புரட்சிக் கலகங்கள், துக்ளக் பேரரசு வட இந்தியாவைக்கடந்து பெருகவொட்டாது தடுத்ததுடன், வங்காளம், சிந்து பகுதிகளில் அதனாதிக்கத்தையும் மெலிவடையச் செய்தன. பிரோஸ் துக்ளக், தென்னிந்தியாவில் இழந்ததை மீட்க முயற்சிசெய்தாரில்லை. மேலும், வங்காளம், பேரரசு ஆதிக்கத்தினின்று முழு விடுதலை பெறவும் அவர் காரணமாயிருந்தார். அவர் பின் வந்தோரின் ஆற்றலின்மை, ஜான்பூர், குஜராத், மாளவம் முதலிய மண்டலங்களின் தலைவர்களின் பேரவாவைத் தூண்டியது. அவர்கள், தைமூரின் படையெழுச்சிக்குப் பிறகு உரிமை பெற்றனர். இறுதியாகவந்த துக்ளக் மன்னனின்கீழ் தில்லியும் அதன் சுற்றுப்புறமும்தான், சுல்தானாட்சிக்குட்பட்டிருந்தது. அப்பகுதியில் நிலையற்ற ஆட்சியை முதலிரண்டு சையது மன்னர்கள் பெற்றிருந்தனர். அந்த அளவுக்குக்கூட அக்குலத்தின் இறுதியான இரண்டு அரசர்கள் அதிகாரம் செலுத்த இயலவில்லை. சுல்தானியராட்சி, மீண்டும், பலால், சிகந்தர் ஆகியோரால் நிறுவப்பட்டது. ஆனால் இப்ரஹிம் லோடியின் நுண் நயமுறை அற்ற கொடிய செயல்களால் நல் வாய்ப்புக்கள் பயன்படாமல் போய்விட்டன. சுல்தானியராட்சியை முடிவுறச்செய்யப் பாபர் வந்துசேர்ந்தார்.

காரணங்கள். தவறிழைத்தல், கொள்ளையடித்தல், கொலை புரிதல் முதலியவற்றைத் தம்மியல்முறையாகக் கொண்ட முகம்மதுபின் துக்ளக்கின் ஆட்சிமுறை சுல்தானியராட்சியின் வீழ்ச்சிக்குச் சிறப்பான காரணமாகும். முன் கூறப்பட்ட முப்பெருங் காரணங்களில் இரண்டின் பெருக்கத்திற்கு அச்சுல்தான் காரணமாவர். உள்நாட்டு அமைதியைக் குலைத்துவந்த மண்டலத் தலைவர்களின் இணக்கமற்ற தன்மையை அழிப்பதற்குத் தேவையான போரார்வம் பிரோஸ் துக்ளக்கிடமில்லை. குறுநிலத் தலைவர்கள் பிரிந்து செல்வ

தற்கு அவர் உடன்பாடு அளித்ததால் பேரரசின் பெருமை குன்றியது. மேலும் அவர் வரம்புகடந்த நிலையில் சில செய்திகளில் கடுமையற்றவராயிருந்ததால், அரச அதிகாரம் புறக்கணிக்கத்தக்க அளவுக்கு இழிவுற்றது. மங்கோலியரால் ஏற்பட்ட அச்சம் மறைந்தபின், முகம்மதியரின் இராணுவ ஆர்வம் குன்றியது. மேலும், ஜாகீர் முறை மீண்டும் கொண்டு வரப்பட்டதாலும், மிகுதியான அடிமைகள் வேலைகளில் இருந்ததாலும், நடு அரசின் வலிமை குன்றியது. பிரோஸ் ஓரளவு நற்செயல்கள் புரிந்தாரென்பது உண்மை. ஆயினும் சுல்தானியராட்சியின் வீழ்ச்சியை விரைவுறச் செய்ததற்கு அவர் பொறுப்பாளி அல்லர் என்று கூறமுடியாது. மேலும், இந்தியாவின் தட்ப வெப்பநிலை, அரச அவையைச் சார்ந்த பெருஞ்செல்வ வாழ்க்கை, உவளகச் செல்வாக்கு முதலிய காரணங்களால், முகம்மதியர் உடல் வலிமையிலும் ஒழுக்கத் துறையிலும் சீர்கேடுற்றனர். பிரோஸின் காலத்திலிருந்த அமைதியும் செழிப்பும் அச்சீர்கேட்டைப் பெருக்கின. தைமூரின் படையெழுச்சி, சுல்தானியராட்சியின் போலித் தன்மையை நன்கு வெளிப்படுத்தியதுடன், வீழ்ச்சியையும் விரைவு படுத்தியது. லோடி காலத்திய பேரரசின்மீட்சி, உள்நாட்டு வலிமையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. ஆதலால், பலாலும் சிகந்தரும் கலகங்களை அடக்கியபோதிலும்; செயற்றிறம் மிக்க பாபர் வந்தவுடன் அரசு கவிழ்ந்தது.

## அதிகாரம் 2

# தில்லி சுல்தானியர் ஆட்சி (தொடர்ச்சி)

## பகுதி I

### சுல்தானியர் காலத்திய ஆட்சி முறையின் தன்மை

வரையறைப்பட்ட முன்னேற்றம். முகம்மதிய இந்தியாவின் வரலாற்றில், பதின்மூன்றும் நூற்றுண்டில் ஆட்சிமுறை மிகுந்த சிறப்பு எய்தவில்லை. ஆனுல் அலாவுதீன் கில்ஜி,

ஆட்சிமுறை முன்னேற்றக் காலப் பகுதியைத் தொடங்கினர். அப்பகுதியில் பொது ஆட்சிமுறையைப் பற்றிய செய்திகளில் கருத்துச் செலுத்தப்பட்டது. அக்கால ஆட்சிமுறைக் கட்டுப் பாடுகளைப் பற்றி வரலாற்றறிஞர் குறிப்பிடுகிறார்கள். அலாவுதீன், ஆட்சி முறையைச் சீர்திருத்தினர். பிரோஸ் அதன் தன்மையை மேம்படுத்தினர். சிக்கந்தர் லோடியும் ஓரளவு அதில் கருத்தைச் செலுத்தினர். பதினைந்காம் நூற்றாண்டில் அமைதியான ஆட்சிமுறைக்கு ஏற்ற சில செயல்தேர்வுகள் நிகழ்ந்தன. ஷெர்ஷாவும் அக்பரும், ஓரளவு, சுல்தானியருக்கு அத்துறையில் கடப்பாடுடையவர் என்பது மறக்கப்பாலதன்று. ஆட்சிமுறை, அரசதந்திரம் முதலியவற்றைப் பொறுத்தவரை, முகலாயப் பேரரசு என்ற மரத்துக்கு வேராக அமைவது சுல்தானியராட்சி என்ற கருத்து[1] நோக்கற்பாலது. அவ்வாட்சி, போர்த்துறைத் தொடர்பானதே தவிர பண்பாட்டு அரசியலன்று என்று கூறி விடுவது தவறு. ஏனெனின் புது முயற்சியாளருக்கு ஏற்படக் கூடும் இடையூறுகளை நாம் கருத்திற் கொள்ளவேண்டும். முகம்மதியர் தாராள உளப்போக்குடன் ஆட்சிபுரிந்த காலப் பகுதி ஷெர்ஷா ஆணை செலுத்தத் தொடங்கிய பிறகே தொடங்குவதாகக் கொள்ளலாம். சுல்தானியராட்சியில் பெரும் பாலும் குறுகியமனப்பான்மையே காணப்பட்டது. அடிக்கடி மதச் சார்பான சட்டதிட்டங்களே ஆட்சிமுறையில் அமைந்திருந்ததைக் காண்கிறோம். முகலாயராட்சி, ஔரங்கசீப்பின் காலம்வரை, பெரும்பாலும் மதச்சார்பற்றதாக இருந்தது என்பது ஈண்டு சிந்திக்கத்தக்கது. மேலும் முகலாய அரசைப் போலன்றி சுல்தானியராட்சி, முகம்மதிய அரசாகவே இருந்தது; இந்திய அரசாக இல்லை. ஆட்சிமுறையில் உயர் பதவிகளை இந்துக் களுக்கு அளித்து இந்நாட்டவருடன் அமைதியான நல்லுறவை அமைத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்து முற்கால முகம் மதியரின் அறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். இந்தியாவி லாட்சி நடத்திய முகலாயர், சிறப்பாக, துருக்கிய இனக்கலப் புள்ளவரான போதிலும் அவர்களுக்கும் இந்தியச் சுல்தான் களுக்குமிடையே, சமயநோக்கம், பொது ஆட்சிமுறை முதலிய வற்றைப் பொறுத்தவரை, மிகுந்த வேறுபாடுகளிருந்தன.

---

1. Husain, op. cit., p 3.

மதச்சார்பான தன்மை. இல்டுட்மிஷ், முகம்மதுபின் துக்ளக், பிரோஸ்துக்ளக் ஆகியோர் தம்முடைய அதிகாரங் களுக்கு கலீபாவின் ஒப்புதலைப் பெற்றதுடன், அவர்களுடைய சில காசுகளில் அத்தலைவரின் பெயரும் பொறிக்கப்பெற்றது. சுல்தானியராட்சியில் முகம்மதிய மதகுருக்கள் மிகுந்த உரிமை பெற்றிருந்தனர். பெரும்பான்மையில் குரானுக்கு அவர்கள் கூறும் விளக்கமே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அலாவுதீன் புதிய தோர் வழியைப் பின்பற்றி, தம் கருத்திற்கிசைந்தவாறு நலம் செய்யும் அரசியலை அமைத்திருந்தார் முகம்மதுபின் துக்ளக், கலீபாவுக்கு அடங்கிய போதிலும், ஆகம அறிஞர்களைப் புறக் கணித்து, தன் மனம் போனவாறே செயலாற்றினர். ஆயினும் அவர் வைதீகப்பற்று உள்ளவர் என்பதில் ஐயமில்லை. பிரோஸ் துக்ளக், சிகந்தர்லோடி முதலியோரின் அரசியல் முழுமையும் சமயச் சார்புடையதே. முகம்மதிய குருமாரின் கருத்தே, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தது. பெரும்பான்மை யும் அக்காலத்தில் மதச்சார்பற்ற அரசியல் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. உரிமையுடன் செயலாற்றிவந்த அலாவுதீன் கில்ஜியும் மதகுருவைக் கலந்து ஆலோசித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிம்மியர் (ZIMMI) நிலை. முகம்மதிய இராச்சியத்தில் முகம்மதியரல்லாதார், "இஸ்லாம் அல்லது இறப்பு" இரண் டில் ஒன்றை ஏற்கவேண்டுமென்பது பொதுவான முகம்மதியச் சட்டமுறைமை. ஆனல் ஹனபி (Hanafi) வகுப்பினர், முகம்மதிய ரல்லாதாற்கு, அரசியலாருடன் ஓர் உடன்பாடு செய்து கொள்ளும் உரிமையை அளித்தனர். அதன்படி அவர் களுடைய சொத்தையும் உயிரையும் காக்கும் பொறுப்பு அரசிய லாருடையது. அதற்காக அவர்கள், அரசியலாருக்கும் முகம் மதியச் சட்டத்துக்கும் கீழ்ப்படிய வேண்டும். அந்த உடன் பாட்டுக்கு சிம்மா (Zimma) என்று பெயர். ஆதலால் அவ் வுடன்பாட்டின்படி காக்கப்பட்ட இந்துக்களுக்கு சிம்மியர் (காக்கப் பெறும் முகம்மதியரல்லாதார்) என்றுபெயர். இவர்கள் ஜிஸியா முதலிய பல வரிகளைச் செலுத்தவேண்டி யிருந்ததுடன் சில அரசியல், சமூகக் கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தப் பட்டனர்.

முகம்மதியரின் நலத்தின் பொருட்டு இவர்கள் தமது நலனை விட்டுக்கொடுக்க வேண்டும். அலாவுதீனின் மதகுருக்கள் இந்துக்களை "திறை செலுத்துவோர்" என்றும் அவர்களினத்தின் அடையாளம் "பணிவு" என்றும் குறிப்பிடுகிறார். "முகம்மதியரல்லாதார் தாழ்த்தப்பட்ட வகுப்பின் உறுப்பினராவர். அவர்தம் நிலை, சிறிது மாற்றப்பட்ட அடிமை முறையை ஒக்கும்............அவர்களின் வளர்ச்சி, முன்னேற்றம், அவர்கள் தொடர்ந்து வாழ்தல், யாவும், முகம்மதிய இராச்சியத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணானவை............குரான் சட்டங்களுக்குச் சொல்லுக்குச்சொல் சரியானபொருள் விளக்கங் கண்டமையால், ஆட்சியாளருக்கும் ஆளப்பட்டோருக்குமிடையே முற்றிய பகைமை ஏற்பட்டிருந்தது. இதன் விளைவாக கலப்பு மக்கட்டொகை யிடையே ஒவ்வொரு முகம்மதிய அரசும் சீர்குலைந்தது.[1] ஆனால் செயற்படு இயல்முறை காரணமாக சட்டம் மிகக் கடுமையாக்கப்பட்டிருந்தது. சுல்தானியராட்சி, மதச்சார்புள்ளதாக இருந்ததால், இந்துக்கள், முகம்மதியராக மறுத்தால், உயர் பதவிகளைப் பெறமுடியாதவர்களாயினர்.

## பகுதி 2

### பக்திமார்க்கம்: ராமானந்தர்: கபீர்: நானக்: வல்லபர்:

முகம்மதியத் தொடர்பின் விளைவுகள். சுல்தானியராட்சியில் சமயச்சார்பான அரசியற்றன்மை, முகம்மதிய சமயம் வலிமையும் பெருமையும் பெற்று விளங்குவதற்குக் காரணமாயிருந்தது. ஆட்சியாளரின் மதம், பல நல்வாய்ப்புக்களைப் பெற்றிருப்பதில் வியப்பில்லை. முகம்மதிய மதத்தைப் பரப்புவது அரசியலாரின் ஒரு கடமையா யிருந்தது. பிறப்பு, விரும்பியோ கட்டாயத்தாலோ எழுகிற மதமாற்றம், வெளிநாட்டிலிருந்து குடியேற்றம் ஆகிய மூவழிகளிலும் முகம்மதிய மக்கட்டொகை இந்தியாவில் சிறிது சிறிதாகப் பெருகியது. கடவுளின் ஒருமைத் தன்மை, ஒப்புணர்ச்சி முதலிய முகம்மதியக் கொள்கைகள்,

1. J. Sarkar, History of Aurangzib, III, 1928, pp. 251 and 264.

இந்துக்களின் மதமாற்றத்துக்குக் காரணங்கள் என்று கூற முடியாது. பதவி ஆசையினால் சிலர் அம்மதத்தைச் சார்ந்தனர். முகம்மதிய மதக்கொள்கைகள், இந்துச் சிந்தனையாளர் கருத்துக்களில் சிறிதளவு மாறுதலை விளைவித்தன. ஆனால், கடவுள் ஒருவரே என்ற கொள்கையை இந்துக்கள் அவர்களிடமிருந்து கற்றனர் என்று கூறுவதற்கில்லை. உபநிடதங்கள் காலத்திலிருந்து அவ்வுண்மை இந்நாட்டில் அறிந்திருந்ததே ஆம். பெரும்பான்மையினர் அதனை உணராமல் இருந்தபோதிலும் அக்கருத்து இந்தியாவில் நிலைத்து வழங்கியது என்பதை மறுப்பதற்கில்லை. அன்புவழியை (பக்தி மார்க்கம்)ப் பின்பற்றுவோர் அதனை வற்புறுத்திவந்தனர். பொதுமக்கள் பழைய மதமுறைகளைப் பின்பற்றி வந்தனர். பக்தி மார்க்கம் நாட்டில் பரவி வந்தது. அவ்வன்புவழிகளிற் சில, முகம்மதிய கருத்துக்களால் ஓரளவு மாறுதலடைந்தன.

**அன்புவழிபாட்டு முறை.** நாம் குறிப்பிட்டுவரும் காலப் பகுதியில் மிகுந்த ஆர்வத்துடனும், ஆற்றலுடனும், அன்பு வழிபாட்டுமுறை போதிக்கப்பட்டு வந்தது. பல துறவிகளும் தீர்க்கதரிசிகளும் அத்துறையில் உழைத்து வந்தனர். குறிப்பிட்ட பண்புகளையுடைய ஒரு கடவுள் உண்டு என்ற கொள்கையும் அவர் முன்னிலையில் சாதிமுறைக் கோட்பாட்டின் பொருளற்ற தன்மை, சமயச்சடங்கு முறைகளின் பயனற்ற தன்மை, முதலிய கோட்பாடுகளும் வற்புறுத்தப்பெற்றன. நிர்குணப்பிரம்மம் என்னும் அத்துவைதக்கொள்கை (கடவுள் குறிப்பிட்ட தனி இயல்புகள் எதுவுமில்லாதவர் என்ற கோட்பாடு) எதிர்க்கப்பட்டது. சகுணப்பிரம்மம் (கடவுளுக்குக் குறிப்பிட்ட சில பண்புகளுண்டு என்ற கொள்கை) என்ற தத்துவத்தை ஆதரிக்கும் கோட்பாடுகள் விரும்பிப் போற்றப் பெற்றன. அன்பு வழிபாட்டுமுறையை ஆர்வத்துடன் பரப்பி வந்த பெரியார்களுள் ஈண்டு இராமானந்தர், கபீர், நானக், வல்லபர் முதலியோரைப்பற்றிச் சிந்தித்தல் வேண்டும். ஞானேஸ்வரர், நாமதேவர், மத்வர், சைதன்யர் ஆகியோரைப் பற்றிப்பின்னர் குறிப்பிடப்பெறும். தென்னிந்தியாவிற் பிறந்த பெரியார்களும் வட இந்தியாவுக்குச்சென்று முகம்மதிய ஆட்சி

நிலவிய காலத்தில் தமது கொள்கைகளைப்பரப்பி வந்ததைக் காண்கிறோம்.

இராமதத்தர் அல்லது இராமானந்தர், அலகாபாத்தில் வாழ்ந்த ஒரு அந்தணர். ஆனால் சிலர், அவர் மைசூரில் பிறந்தாரென்று கருதுவர். அவர் காலத்தை வரையறைப் படுத்துதலில் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. (1299-1410 அல்லது 1400-1470). அவர் ஓர் அத்துவைதியாக இருந்து பின் வைணவரானார். சீதை இராமர்—வழிபாட்டு முறையை அவர் விளக்கிப் பலரும் பின்பற்றச்செய்தார். சாதிமுறை அவரால் வெறுக்கப்பட்டது. "யாரும் மற்றவரின் சாதி, குலங்களைப்பற்றிக் கேட்கக்கூடாது" என்பது அவர் கருத்து. பல சாதியினரும், ஆண், பெண் இருபாலாரும் அவர்கள் மாணவர்களாகக் காணப்பட்டனர். அவர்களில் மிகவும் சிறப்புடையவர் கபீர். இராமானந்தர், மக்களுடைய மொழியில் தமது கொள்கைகளைக் கற்பித்தார். காசியிலிருந்து, வட இந்தியாவின் பகுதிகள் யாவற்றிலும் அவர் தம் நற்செய்தியைப் பரப்பினார். அவரைப் பின்பற்றியோர் இராமானந்தியர் எனப் பெறுவர்.

கபீர் எங்குப் பிறந்தாரென்பதை உறுதியாகக் கூறுவதற்கில்லை. அவர் பிறப்பில் ஒரு அந்தணரா அல்லது முகம்மதியரா என்பதும் தெளிவாக அறியமுடியவில்லை. அவர் பிறந்து, மறைந்த ஆண்டுகளையும் உறுதியாகக்கூற முடியவில்லை. (1398—1518. அல்லது 1440—1518). அவர் ஒரு அந்தணக் கைம்பெண்ணின் மகன் என்றும் காக்கப்படாமல் விடப்பட்டார் என்றும் காசியிலிருந்த நெசவுத்தொழிலாளர் ஒருவர் அவரை வளர்த்தார் என்றும் கபீர் அத்தொழிலையே மேற்கொண்டு, மனைவியுடன் வாழ்க்கை நடத்தினாரென்றும் ஒரு செய்திக் குறிப்பு கூறுகின்றது. இந்துக்களையும், முகம்மதியரையும் ஒற்றுமைப்படுத்த வேண்டுமென்பது அவர் குறிக்கோளாயிருந்தது. "யாருடைய உள்ளத்தில் உண்மை உறைகிறதோ அங்கே கடவுள் வாழ்கிறார்" என்பது கபீரின் கோட்பாடு. இராமரை அவர் வழிபட்டார். ஆயினும் அவர், தம்மை, அல்லா, இராமர் ஆகிய இருவருடைய குழந்தை

என்று கூறிகொண்டார். இந்துக்களாயினும் முகம்மதியராயினும், யாவரும் "ஒரே களிமண்ணில் உருவாகிய பல குடங்களாவர்" என்பது அவர் கூற்று. "உளந் தூய்மையுடன் கடவுட்பற்றினைக் கைக்கொள்க" என்பது அவர் அறவுரை. புண்ணியநீராடுதல் முதலிய சடங்கு முறைகளை அவர் கண்டித்தார். நீரில் முழுகுவதால் ஒருவர் வீடுபெற முடியுமாயின் எப்பொழுதும் நீரிலுள்ள தவளைகள், வீடுபெறுகின்றனவா என்பது அவர்கேள்வி. கடவுட் கொள்கையைப்பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சியை அவர் விரும்பவில்லை. சாதிமுறை, உருவ வழிபாடு முதலியன வெறுக்கப்பட்டன. உலகம் உண்மையான ஒன்று என்பது அவர் கோட்பாடு. உபநிடதம் கூறும் 'தத்துவமஸி' க்கொள்கையை அவர் ஏற்கவில்லை. 1495'ல் ஜான்பூரில் அவர் சிகந்தர்லோடியைக் கண்டதாகக் கூறப்படுகிறது. வட இந்தியாவில் அவர் மிகுதியான அளவுக்குப் பல இடங்கட்குப் பயணம் செய்து வந்தார். அவருடைய முடிவுக் காலம் நெருங்கியபொழுது அவருடைய மாணவர்கள் அவரை காசிக்குச் செல்லும்படி வேண்டினர். ஆனல் அவர் 'இராமன் உள்ளத்தில் வீற்றிருப்பாரானல் காசி எதற்கு?' என்று அறவுரை கூறினரும். அவர் இறந்தவுடன், இந்துக்களும், முகம்மதியரும் அவருடலை எரிப்பதா, புதைப்பதா என்பதுபற்றி வாதாடலாயினர். ஆகவே இருசாராரின் ஆதரவையும் அவர் பெற்றிருந்தாரென்பது தெளிவு. அவர் எப்போதும் எதிலும் அடிப்படை உண்மையை உணர்ந்து ஆன்மீக உயர்வு எய்தினர். இந்தியாவில் அனுபூதிபெற்ற பெரியார்களுள் மிகவும் சிறப்புற்றவராக அவர் கருதப்படுகிறர். அவரைப் பின்பற்றியோர் கபீர் பந்தியர் ( பந்து-கூட்டம் ) எனப்படுவர். நானக் அவருடைய சிறந்த மாணவர்.

நானக்: **(1469—1538)** லாகூருக்கு அருகிலுள்ள ஓர் ஊரில் (Talwandi) வணிக சாதியிற் பிறந்த நானக், இந்து முகம்மதிய வேறுபாடுகளை ஒழிக்க முற்பட்டார். சாதிமுறை, புனித நீராடுதல் முதலியவற்றில் அவருக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை. வட இந்தியாவில் அவர் பல இடங்கட்குச் சென்றதுடன் ஈழத்துக்கும் அரேபியாவுக்கும் சென்றதாகவும் கூறப்

படுகிறது. இப்ரஹிம் லோடியும் பாபரும் அவருடன் தொடர்புகொண்டதாகத் தெரிகிறது. கபீரைப்போலவே இவரும் செயல்முறையான ஒழுக்கநெறிகளைக் கற்பித்தார். ஒவ்வொருவரும் தன் உள்ளத்தைத் தூய்மைபடுத்திக்கொள்ள வேண்டுமென்பதை வற்புறுத்தினர். உலகப்பற்று, கபடநாடகம், சமயத்தைப் பின்பற்றுவோர் மறைவில் நேர்மைக்கேடாக நடத்தல், சிற்றின்பத்துறையில் மெய்மறத்தல், இந்துத் துறவிகள் மேனி முழுவதும் திருநீறு அணிதல் சடை வளர்த்தல், முகம்மதிய முறைவர் வழிபாடு செய்து கொண்டே கைக்கூலி பெறுதல்[1] முதலியவற்றை நானக் கண்டித்தார். இந்து, முகம்மதியக் கருத்துக்களிடையே ஒற்றுமைகாண அவர் முயன்றுர். "உண்மைச் சமயப்பற்றுள்ளவர் கடவுளுக்கு அஞ்சவேண்டும், நற்செயல்கள் புரியவேண்டும்; யாவரையும் ஒப்புணர்ச்சியுடன் நோக்கவேண்டும்; உலகில் கேடுகளிருப்பினும் தாம் தூய்மையுடையவராயிருக்க வேண்டும்.' "கடவுள் ஒருவரே. அவரை அல்லாவென்றுவது இராமனென்றுவது வணங்கலாம்; உண்மையைக் கடைப்பிடித்து ஐம் புலன்களை அடக்கி, நற் கருமங்கள் புரிவதுடன் கடவுளின் திருநாமத்தை நாத்தழும்பேற உரைக்கவேண்டும்.'' இவைபோன்ற அறவுரைகள் அவரால் கூறப்பட்டன. நானக்கின் மாணவர்கள் சீக்கியர் (சிஷ்யர் என்பதிலிருந்து) எனப் பெற்றனர். அவர்களுடைய வேத நூலான "ஆதிகிரந்தம்'' நானக், கபீர் ஆகியோரின் பாசுரங்களடங்கியது. நானக்கின் பாடல்கள் சில, சீக்கியரின் அன்றுட வழிபாட்டு முறையில் ஓதப்பட்டு வருகின்றன.

வல்லபர் (1479 — 1531). ஆந்திரநாட்டிற் ருேன்றிய வல்லபர் விசய நகரில் கிருட்டினதேவராயரின் அவைக்குச் சென்றுர். பின் மதுராவுக்கும் வேறு பல வடஇந்தியப்பகுதிகட்கும் போனுர். காசியில் தங்கிக்கொண்டு அவர், பிரம்ம சூத்திரங்கட்கும், பகவத்கீதைக்கும் விளக்கவுரைகளியற்றினுர். அவருடைய தத்துவக் கோட்பாடு, சுத்தாத்வைதம் எனப் பெறும். அதாவது தூய ஒருமைக்கோட்பாடு. ஆன்மா வேறு,

1 J. E. Carpenter, Theism in Medieval India (1921), p. 477.

பிரமன் வேறு, என்ற கொள்கையை அவர் ஏற்காது இரண்டும் ஒன்றே என்பதை வற்புறுத்தினர். இரண்டுக்கும் வேறுபாடு எதுவுமே இல்லை என்பது அவர் வாதம். உலகப்பற்றை விடுத்து கண்ணனிடம் கனிவான அன்பு பூணுமாறு கற்பித்தாரவர். புஷ்டிமார்க்கம் (ஆன்மீகப் பேரின்பத்துக்கு வழி) என்னும் அவருடைய வழி, பேரின்பம் கடவுள் என்ற பெயர்களால் சிற்றின்பத்துக்கும் இடமளித்தாக பிற்காலத்தில் பொருள் விளக்கம் செய்யப்பட்டது. கண்ணனின் செயல்களை நாமும் பின்பற்ற வேண்டும் என்ற கருத்து அதிலுள்ளது. துயரமான வழிகள் ஆன்மீக இன்பத்தை அளிக்கமுடியாது என்ற கருத்து வற்புறுத்தப்பட்டது. ராதை வழிபாட்டுமுறை (ஏற்றுக்கொள்ளத் தகாத வகையிலும்கூட) இந்தியாவின் சில இடங்களில் சிறப்பெய்தியது. கண்ணன் வழிபாட்டில் தலைவன் தலைவிக் காதல் கற்பனைமுறை மிகுதியாக உள்ளது. கண்ணன் கோகுலத்தில் கோபியருடன் செய்த லீலைகளைப்பற்றிப் பாடல்கள் மிகுதியாக உண்டு. கண்ணனை இறைவனாகவும் கோபிகளை இறைவனோடு கலந்து பேரானந்தம்பெற விரும்பும் ஆன்மாக்களாகவும் கொள்ளவேண்டுமென்று கூறப்பட்டது. ஆனால் சிற்றின்ப உணர்ச்சிக்கும், பேரின்ப வேட்கைக்கும் இடையிலுள்ள வரம்பு மீறப்பட்டுவிடக்கூடும் என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். அதனால் தீமை ஏற்படுமென்பதும் நோக்கற்பாலது. ஆசிரியன்-மாணவன் உறவு கேடுற்றது. அன்புக்கொள்கையும் தான் என்பதை ஒழிக்கும் தன் மறுப்புக் கொள்கையும், தவருன முறையில் (நன்னெறியும் தன்மானமும் கேடுறும் வகையில்) செயலாற்றப்படலாயின.[1]

## பகுதி 3

### பொருளாதார நிலை

தில்லி சுல்தானியராட்சியில் பொருளாதார நிலையைப் பற்றிப் போதுமான அளவு முன்னர் குறிப்பிடப்பெற்றது. சிறப்பான உள்நாட்டு, வெளிநாட்டு இயல் முறைகள்மூலம்,

1 F. E. Keay, A History of Hindi Literature, (1920), pp. 19—30.

ஏற்ற அளவுக்குப் பொருளாதார முன்னேற்றத்திற்கான வழியை வகுத்த முதல் சுல்தான் பால்பன் ஆவர். ஜலாலுதீன் கில்ஜி, அவருடைய மக்களில் சிலர் வறுமையால்வாடித் துயருற்றபொழுது, அதனை மாற்ற எவ்வகைச் சீர்திருத்தத்தையும் செய்யவில்லை. ஆகவே பலர் தம்முடைய துயரத்தை அகற்றிக்கொள்ள யமுனையில் விழுந்து இறந்தனர். அலாவுதீனின் கடுமையான வரிகள் உழவர்களுக்குத் தீமை பயந்தன. உழவர், வணிகர் முதலியோர் தவிர மற்றய பொதுமக்களுக்கு நலமளித்த அவருடைய வாணிகக்களச் சட்டங்கள், அவர் இறந்தபின் பயனற்றுப் போயின. முகம்மதுபின் துக்ளக், உழவருக்குத் தந்த கடன், இரவலர் துயரஉதவி முதலிய வறுமைக்காலக் கொள்கைகளைப் போற்றற்குரிய வகையில் பின்பற்றினரெனினும், பொதுவாக அவருடைய ஆட்சி முறையும், பத்து ஆண்டுகள் நீடித்ததோர் பஞ்சமும், பொருளாதாரச் சீர்கேடுகளுக்குக் காரணமாயின. பட்டு நெசவும் ஜரிகை செய்தலும் அவரால் ஆதரிக்கப்பெற்றன. அயல்நாட்டு வாணிகமும் நடைபெற்று வந்தது. ப்ரோச், காம்பே ஆகிய இடங்கள் செழிப்பான நிலையிலிருந்தன. பிரோஸ் துக்ளக், பலவகைகளில் சிறப்பாக வருவாய்முறைச் சீர்திருத்தம், நீர்ப்பாசனமுறை முதலியவற்றால் மக்களுக்கு நன்மை புரிந்தார். தைமூரின் படையெழுச்சி, நாட்டின் நலத்தைக்குறைத்தது. சில மண்டலங்கள் மட்டும் செழிப்புற்றிருந்தன. 1406'ம் ஆண்டில் வங்காளத்தில் காணப்பெற்ற பொருளாதார முறைகளைப் பற்றி அக்காலத்திய சீன அறிஞரொருவர் குறிப்பிடுகிறார். லோடிகுல ஆட்சியில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. பொருள்களின் விலைகள் குறைந்திருந்தன.

## பகுதி 4

### சமூக வாழ்க்கை.

**முகம்மதியர்.** முகம்மதிய இனப் பெருக்கத்தைப்பற்றி முன்னர் கூறப்பட்டது. அவர்கள், அரசியலில் தனிப்பற்றுக்குரியவராயிருந்தது, மங்கோலியப் படையெழுச்சியின் முடிவு,

வாழ்க்கை வசதிகளை அவர்கள் மிகுதியாகப் பெற்றிருந்தமை, முதலிய காரணங்களால் முகம்மதியரிடையே சீர்கேடுகளேற்பட்டுவந்தன. பெரும்போக வாழ்க்கையுடன் தீய குணங்கள் பெருகின. அலாவுதீன், குடிப்பழக்கம் சூதாட்டம் முதலியவற்றை ஒழிக்க முயன்றதற்குக் காரணம் அரசியல் நோக்கமே அன்றிச் சமூக நன்னெறிக் கோட்பாடுகளல்ல. அடிமை முறையை மிகவும் சிறப்பாகப் பிரோஸ் ஆதரித்தார். நடனப் பெண்டிருக்கும் அலிகளுக்கும் தேவை மிகுதியாயிற்று. முதலிரண்டு துக்ளக்மன்னர்களின் கடுந் தூய்மைக் கொள்கை அக்காலத்திய முகம்மதியரின் தன்மைக்கு மாறுபாடாயிருந்தது. மத நம்பிக்கை குறைந்தது. மூடநம்பிக்கையும் சமய மாறுகோளும் வளர்ந்தன. இந்து முகம்மதிய கலப்பு மணவினை முறை, முகம்மதியர் அடக்கப்பட்ட மக்களிடம் கொண்டிருந்த பழைய கருத்தை மாற்ற உதவவில்லை. ஆட்சிமுறையை ஒட்டி அவ்விரு வகுப்பினரிடை சமூகத் தொடர்பு ஓரளவு நிலவியதெனினும் அதனால் சிறந்த பயனெதுவும் ஏற்படவில்லை. இந்திய முகம்மதியரின் தேவையின் பொருட்டு இந்தி மொழிக்கும் பாரசீக மொழிக்கும் இடையாக உருதுமொழி உருவாக்கப்பட்டது. ஆயினும், இந்துக்களும் முகம்மதியரும் செயல் வகையில் தனித்தே வாழ்ந்தனர். முகம்மதியராக மாறிய இந்துக்கள், தமது பழைய சமூகக் கருத்துக்களையும் பழக்க வழக்கங்களையும் கைவிடுவதென்பது இயலாததாயிருந்தது. அயல்நாட்டு முகம்மதியர் காலப்போக்கில், சிறிது சிறிதாக இந்தியப் பண்பைப் பெறலாயினர். முகம்மதியர் சமயம் பொது உரிமை ஆட்சித் தன்மையைப் பெற்றிருந்த போதிலும் ஆதிமுஸ்லிம் படையெடுப்பாளரிடை உயர்வு, தாழ்வு வேறுபாடுகள் இருந்தே வந்தது. சில சுல்தான்கள், உயர்குடிப் பிறப்பு, பதவிபெற ஒரு தகுதியென்று கருதியதும் நோக்கற்பாலது. காலப்போக்கில் இந்து சமூக முறையுடன் நீடித்திருந்த அவர்கள் தொடர்பு மேலும் வேறுபாடுகள் பெருக உதவியது. இந்துக்களும் முகம்மதியரும் கபீர், நானக் முதலிய பெரியோர்களைப் போற்றினரென்று முன்னர்க்கண்டோம் ஆயினும் இருவினத்தினரும் பல அடிப்படை வேறுபாடுகளைப் பெற்றிருந்ததாலும் இருவரிடையேயும் பகைமை உணர்ச்சி

பெருகியிருந்ததாலும், விரைவில் அவர்களிடையே நம்பிக்கை வளரவில்லை.

**இந்துக்கள்.** சிம்மியர் எனப்பட்ட இந்துக்கள், உயர் பதவி அளிக்கப்படாமலும், ஜிஸியா, செலுத்துமாறு கட்டாயப் படுத்தப்பெற்றும் வந்ததால், முகம்மதியரிடம் மிகுந்த வெறுப்பு அடைந்தனர்; மிலேச்சரை, மேலும் மேலும் இழிவாகக் கருதினர். இந்துக்கள் துன்புறுத்தப்படவேண்டுமென்பது செயல் முறையில் சட்டமாக இல்லை. ஆனால் முகம்மதியருக்கும் முகம்மதியராக மாறியவருக்கும் ஆதரவு மிகுதியாக அளிக்கப் பட்டதால், இந்து சமயம் தளர்ச்சியுற்றது. அயலார் சமயத் தைத் தழுவும் ஆர்வமும், அவர்களுடன் மணவினை உறவு கொள்ளும் அவாவும் பொதுவாக இந்துக்களிடம் காணப்பட வில்லை. அரசியலிலும் சமூக நிலையிலும் தாழ்த்தப்பட்டதால் தளர்ச்சியுற்றோர், சமயக்கொள்கைகளின்மூலம் ஆறுதல் பெற முனைந்தனர். அன்பு (பக்தி) வழிபாட்டு முறையினர், உருவ வழிபாட்டையும் சாதிமுறையையும், பயனற்ற சடங்குகளையும் எதிர்த்து வந்தபோதிலும், வைதீக இந்துப்பழக்க வழக்கங்கள் பொதுவாகக் கைவிடப்படவில்லை. சாதி முறையைப் பின்பற் ருத அயலாரின் வருகை, இந்து சமூகத்தில் சாதிப்பாகுபாடு களை மிகுதியாக்கியதேயன்றி, குறைக்கவில்லை. முகமூடி முறை பண்டைய இந்தியாவில் அறியப்படாத ஒன்ருக இல்லாத போதிலும், பெரும்பான்மையில் வழக்கிலில்லை. ஆனல் முகம்மதியத் தொடர்பினுல் அது மிகுதியாக வழக்கிற்குவந்து பரவியது. ஆணை செலுத்தும் பெருஞ்செல்வரிடமிருந்து பெண் டிர் தம்மை மறைத்துக்கொள்ளவும், உயர் வகுப்பினரிடை, மதிப்பான நிலையின் அறிகுறியாகவும், முகமூடி முறை அமைந் தது. இது முகம்மதியப் பழக்கத்தை ஒட்டியதேயாகும்.[1] பெண்டிர் மூக்குக்கு அணி செய்துகொள்ளும் வழக்கம் முகம் மதியருக்கு முன்பு இந்தியாவில் இல்லை. அது அவர்கள் தொடர்பால் ஏற்பட்டதாகும்.

---

1 A. S. Altekar, Ths Purda System (Proceedings of the Indian History congress, Allahabad 1938, pp 47—54.

# பகுதி 5

## இலக்கியம், கட்டடக்கலை, காசு முறை

இலக்கியம். அமீர் குஸ்ரு என்ற பெரும் பாவலரைப் பற்றியும், வரலாற்றறிஞர்களானமின்ஹாஜ் உன்சிராஜ், பரணி, ஷாம்சி சிராஜ் முதலியவர்களைப்பற்றியும் முன்னர்க் குறிப்பிட்டோம், அலாவுதீன், முகம்மதுபின் துக்ளக், பிரோஸ் ஆகியோரின் சிறந்த அலுவலாளராக இருந்த ஐனுல்முல்க் முல்ட்டானி என்பார் மிகச்சிறந்த இலக்கிய அறிஞர். அவருடைய நூல்கள் பொதுவாக வரலாறு கற்போருக்கு மிகவும் பயன்படும். உள்நாட்டு இலக்கியத்தில், சில சுல்தான்கள் ஓரளவு கருத்து செலுத்தனரெனினும் சிறப்பாக அதை ஆதரித்தவர்கள் உரிமை வாய்ந்த இந்து இராச்சியத் தலைவர்களே. வடமொழி இலக்கியத்தின் ஆக்கச் செழிப்புக்காலம், சுமார் 1200'ல் முடிவுற்ற போதிலும், அதன் பிறகும் இங்குமங்கும் சிறப்பான வடமொழி நூல்கள் தோன்றாமலில்லை. அன்புவழி பாட்டினர், தாய்மொழியின் சிறப்பை வற்புறுத்திவந்ததால், இந்தி இலக்கியமும் பிறவும் வளர்ச்சியடைய ஊக்கம் பெற்றன

கட்டடக்கலை. முகம்மதியக் கட்டடக்கலை இந்தியமுறையுடன் கலந்து புதியதொரு கலையாகத் தோன்றிப் பரிணமித்தது. இந்து முஸ்லிம் கலை என்று அதைக் கூறுகிறோம். தொழில் செய்வோர் பெரும்பாலும் இந்தியரேயாயினும், தமது தலைவர்களின்கீழ் பணியாற்றிய அவர்கள் அயலார் பண்புகளை உள்ளத்தில் பதித்துக்கொண்டனர். தொடக்கத்தில் தில்லியில் கோயில்கள் பள்ளிவாசல்களாக்கப்பெற்றன. அக்காலத்தில் உள்நாட்டுக்கலை தலைசிறந்ததாக அமைந்திருந்தது. ஆனால் விரைவில் முகம்மதிய கருத்துக்கள் மேலோங்கின. ஆயினும் இந்தியப் பண்புகளின் மேம்பாட்டை மாகாணக் கட்டடங்களில் காணலாம். இந்து - முஸ்லிம் கலையில், ஆற்றலும் அருளும் ஒன்றான முழு ஒருமைப்பாடு இந்துக்கலையின் சிறப்பாகப் போற்றப்படுகிறது. ஆனல், முஸ்லிம் பண்புகளான வளைவுகள், வளைமாடங்கள் (பண்டைய மெசபொடேமியப் பண்புகள்) தூபி, கிளைக்கோபுரம், காரைக்கட்டுவேலை வடிவுக்

கணக்கியலிற்கேற்ற திட்டங்கள், தூய்மையும் தூய்மையற்றது மான செய்திகளைப்பற்றி அழகிய எழுத்துக்களைப் பொறித்தல் முதலியன[1] அக்கலையின் பண்புகளிற் சிலவாம். கட்டடக் கலையில் வளைவு முறையைப் பண்டைய இந்துக்கள் அறியாம லில்லை. ஆனால் அதை அவர்கள் விரும்பி வளர்க்கவில்லை. கில்ஜியராட்சியில் முகம்மதியக்கலை மரபு தில்லியில் உறுதியாக ஏற்படுத்தப்பெற்றது. துக்ளக்குகளின் வருகைக்குப்பின் அணி செய்யும் நுட்ப வேலைப்பாடு மறைந்து எளிமையும் அமைதி யும் இடம்பெற்றன. அடிமை அரசர், கில்ஜி சுல்தானியர் ஆகியோரின் காலத்துக் கட்டடக்கலைத்தன்மை, 15'ம் நூற் றாண்டில் மீண்டும் ஓரளவு சிறப்பு எய்துவதைக் காண்கி றோம்.

காசுமுறை. இந்தியக் காசுமுறையில், முகம்மதியர் வருகைக்குப்பின் பெரியதோர் மாறுதல் ஏற்பட்டது. காசு களில், இஸ்லாம் தடைசெய்யும் உருவங்கட்குப் பதிலாக பெரும்பான்மையும் சுல்தானின் பெயர், அவர் பட்டங்கள், ஹிஜ்ரி ஆண்டுக்கணக்குப்படி (கி. பி. 622'ல் தொடங்குவது) காலக் குறிப்பு, காசு அச்சடிக்கப்படும் இடத்தின் பெயர், கலீமா முதலிய எழுத்துக்குறிப்புக்கள் பொறிக்கப்பட்டன. முகம்மதுகோரி வெளியிட்ட பொற்காசுகளில் இந்திய முறையை ஒட்டி இலக்குமி உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அதைத் தில்லி சுல்தானியர் பின்பற்றவில்லை. இல்டுட்மிஷ் தொடக்கத் தில் வெளியிட்ட வெள்ளிக் காசுகளில் தம் உருவத்தை அமைக்கச்செய்திருந்தார். அவருடைய பிற்காலக்காசுகளில் கலீபாவின் பெயர் காணப்படுகிறது. தில்லியும் லக்னௌட்டி யும் காசு அடிக்கும் இடங்களாகக் குறிக்கப்பட்டிருப்பதால் அவருடைய ஆட்சி எல்லையைப்பற்றி நமக்கு ஒரு குறிப்பு கிடைக்கிறது. பால்பனின் காசுகளில் அவருடைய பெயர், நாகரி, அரேபிய எழுத்துக்களில் உள்ளது. அலாவுதீன் கில்ஜி, தம் காசுகளில் கலீபாவின் பெயரைக் குறிப்பிடாமல், தம்மை "இரண்டாவது அலெக்சாந்தர்; கலீபாவின் வலக்கை" என்று சிறப்பித்துக்கொள்கிறார். முகம்மதுபின் துக்ளக்கின்

---

1 C. H. I., III, pp. 571—3.

காசுகள், "அழகிய கையெழுத்துக்கலையின் சிறப்பான தனிப் பெருமையின் எடுத்துக்காட்டுகள்"[1] என்று போற்றப்படு கின்றன. பிரோஸ்துக்ளக்கின் காசுகள் மக்களின் போற்றுத லுக்கு உரியனவாயின. சையது, லோடி குலத்தவர் காசுக ளைப்பற்றி முன்னர்க் குறிப்பிட்டோம்.

அதிகாரம் 3

## தில்லி சுல்தானியர் ஆட்சி (தொடர்ச்சி)

## பகுதி I

### காச்மீரம்

காச்மீரத்தில் 1339'வரை இந்து அரசாட்சி நிலவிய தென்றும், அவ்வாண்டில் முகமதிய அமைச்சர் ஷாமீர் தம் குலத்தை அரியணையிலமர்த்தினரென்றும் முதற் புத்தகத்தில் கூறப்பட்டன. அரசைக்கைப்பற்றி அவ்வீரன் ஷாம்சுதீன் என்ற பெயருடன், 1349'ல் தாம் இறக்கும் வரை ஆட்சிபுரிந்தார். நிலவரி குறைக்கப்பட்டது. விளைவில் ஆறில் ஒரு பங்கை மக்கள் செலுத்தினர். அவர் மகன் அலாவுதீன் (1350—'59) ஒழுக்கக்கேடான மனைவிக்கு அவள் கணவனின் சொத்தில் சிறிதும் பங்குகிடையாது என்ற சட்டத்தைப் பிறப்பித்தார். அவருடைய உடன்பிறந்தா ரான ஷிஹாபுதீன், படைத்திறமையும் ஆட்சிமுறை ஆற்றலும் பெற்றவர். அவர் பட்டத்துக்கு வந்து 1359'முதல் 1378' வரை ஆணை செலுத்தினர். சிந்து நாட்டுத் தலைவரும், ஆப்கா னியரும் அவரால் முறியடிக்கப்பெற்றனர். பின்போந்த சிகந்தர் (1394—1416), தைமூரின் தூதுவரை வரவேற்றார். ஆனால் அவ்வெற்றிவீரன், விரைவாகச் சாமர்கந்துக்குத் திரும்பிவிட்ட தால் அவரைப்பார்க்கும் வாய்ப்பை, மன்னர் இழந்துவிட்டார். சிகந்தர், பாரசீகத்திலிருந்தும், அரேபியாவிலிருந்தும் வந்த முகமதிய அறிஞர்களை ஆதரித்தார். இந்துக்களைத் துன்புறுத் தும் இயல் முறை அவரால் தொடங்கப்பெற்றது. அவர் கோயில்களை இடித்தார். "வழிபாட்டு உருவங்களை உடைப்ப

1. Smith, A History of Fine Art in India & Ceylon (1930) p. 188.

வர்'' என்பது அவருடைய புனைபெயர். முகமதிய மதத்தைத் தழுவ மறுத்த பலர் நாடு கடத்தப்பெற்றனர். அவர், காச்மீரில் முகமதிய மக்கட்டொகை பெருகுவதற்குச் சிறப்பான காரண மானார். சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம் தடை செய்யப்பட்டது. சிகந்தரின் இரண்டாவது மகனான ஸெயின்-உல்-அபிடின், (1420—'70) ''காச்மீரத்தின் அக்பர்'' என்று புகழப்பெற்றார். அவர், முகமதியராக மாறுவதற்கு மறுத்து நாடு கடத்தப்பட்டோரைத் திரும்ப நாட்டுக்கு அழைத்தார். பலர் திரும்பவும் இந்துக்களாக மாற அனுமதிக்கப்பெற்றனர். சமய உரிமை வழங்கும் ஆர்வத்தினால் அவர் 'சதி' என்னும் பழக்கத்தைத் தடுக்கவில்லை. ஜிஸியா வரி நீக்கப்பட்டது. அவர் அழிக்கப்பட்ட கோயில்களைப் புதுப்பிக்குமாறு ஆணை பிறப்பித்தார். குற்றவாளிகளை வேலை செய்யச்சொல்லிப் பல நீர்ப்பாசன வசதிகள் அமைக்கப்பெற்றன. விலைகளை ஒழுங்கு படுத்தியதுடன், அரசர், நாணய முறையையும் சீர்திருத்தினார். கல்வியறிவு பெற்றிருந்ததால் அவர் அறிஞர்களின் கூட்டுறவை நாடினார். மகாபாரதமும், இராசதரங்கிணியும் பாரசீகமொழியில் மொழி பெயர்ப்பதற்கு, அவர் ஆதரவு தந்தார். ''அஹிம்சை'' முறையை அவர் உள்ளம் நாடியது. வேட்டையாடுதலை விட்டொழித்து, வேந்தர், தீதற்ற பொழுதுபோக்குகளை மேற்கொண்டார். ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணந்துகொள்வதை அவர் வெறுத்தார். தவறாத ஒழுக்கம் அவரிடமிருந்தது. தில்லி, சிந்து, குஜராத் முதலிய பல இந்திய நாட்டுத் தலைவர்களுடனும், பல அயல்நாட்டு அரசருடனும் அவர், நட்பு உறவு பூண்டிருந்தனர். அவருடைய பிள்ளைகள் மூவரும் ஒற்றுமையற்றிருந்ததால் ஸெயின்-உல்-அபிடினின் இறுதிக்காலத்தில் அவர் மன அமைதியில்லாமல் உயிர் நீத்தார். அதன்பின் காச்மீரத்தில் மன்னரின் மாட்சி மங்கியது. பின்போந்த மன்னர், அமைச்சரின் சூழ்ச்சிகளினால் அவர்களுக்கு அடங்க வேண்டியதாயிற்று. 1541 முதல் 1551'வரை, மிர்ஸாஹைதர் என்ற வரலாற்றினர் (பாபரின் உறவினன்) காச்மீரின் மன்னராக அரசுபுரிந்தார். பெயரளவுக்கு ஹுமாயூனுக்கு (முகலாயப் பேரரசன்) அவர் அடங்கியிருந்தார். அவருக்குப் பிறகு ஆற்றலற்ற முடி

யாட்சியும் அமைச்சரின் ஆதிக்கமும் மீண்டும் அங்நாட்டில் தோன்றின. ஷாமீரின் குலம், 1561'ல் காசிம்கான் என்பவரால் கவிழ்க்கப்பட்டது. புதிய அரசு, 1586'ல் அக்பரால் முடிவுற்றது. அவ்வாண்டில் காச்மீரத்தை அக்பர் தம் அரசுடன் இணைத்துக்கொண்டார். ஸெயின்-உல்-அபிடின் காலத்திய கல்லறைகள் முகம்மதியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவை. ஸ்ரீநகரில் அவர் நிறுவிய பள்ளிவாசல் (சிறப்பாக மரத்தாலாக்கப்பட்டது) இந்து-முஸ்லிம் கலைமரபின் தொடர்ச்சியைக் காட்டாநிற்கும். அக்காலத்திய பொற்காசுகள் அரிதாக உள்ளன. காச்மீர சுல்தானியரின் சதுரமான வெள்ளிக்காசுகளில் "மிக வல்லமை வாய்ந்த சுல்தான்" என்ற அரசப்பட்டம் காணப்படுகிறது.

## பகுதி 2

### சிந்து. மூல்தான்

சிந்து (தென்பகுதி). இல்டுட்மிஷ் காலத்திலிருந்து சிந்துப்பகுதி, தில்லி சுல்தானியருக்கு உரியதாயிருந்தது. உள்நாட்டில் முகம்மதியக் கருத்துக்களைத் தழுவிய இராசபுத்திரக் குலம், தில்லி சுல்தானியரின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு ஆட்சிபுரிந்து வந்தது. துக்ளக் சுல்தான்களின் சிந்துநாட்டுப் படையெழுச்சிகளைப்பற்றி முன்பு பார்த்தோம். தைமூரின் படையெழுச்சிக்குப் பிறகு அப்பகுதி உரிமையுடன் விளங்கியது. 1522'ல் முகலாயகுலத் தலைவரொருவர் (அர்குணன்) சிந்துநாட்டைக் கவர்ந்து அங்கு நிலவிய ஆட்சியை முடிவுறச் செய்தார். 1528'ல் அவருக்குப் பின்போந்த அவர் மகனை ஷாஹுசேன் (1524—'56) மூல்தானைக் கைப்பற்றிச்சிறிது காலம் தமக்கு அடிப்படுத்தியிருந்தார். முகலாயப் பேரரசர் ஹுமாயூன் இவருடன் பகைமை பூண்டிருந்தார். ஆனல் அப்பேரரசர் 1540 முதல் 1543 வரை சிந்துநாட்டைத் தன் புகலிடமாகக் கொள்ள நேர்ந்தது. 1543'ல் இப்பகுதி ஷெர்ஷாவின்கீழ் வந்தது. 1591'ல் முடிவாக, அக்பர் சிந்துநாட்டைக் கைப்பற்றினர்.

மூல்தான். வட சிந்துவின் தலைநகரான மூல்தான், இல்டுட்மிஷ் காலத்திலிருந்து 14'ம் நூற்றுண்டின் முடிவுவரை தில்லி சுல்தானியராட்சியுடன் இணைக்கப்பட்டிருந்தது. அடுத்த நூற்றுண்டில் அதன் ஆட்சித் தலைவர்கள், செயல் முறையில் உரிமைவாய்ந்தோராக இருந்தனர். சையதுகுல முகமதுஷா, அங்குப் புதிய தலைவரெவரையும் அமர்த்தவில்லை. 1438'ல் மக்கள், ஷெய்க் யூசப் என்பாரை அரசராகத் தேர்ந்தெடுத்தனர். ஆனுல், 1440'ல் சரா என்னும் ஆப்கானியத் தலைவர், அவரை விரட்டிவிட்டுத் தம் குலத்தை ஆட்சிபீடத்திலமர்த்தினுர். அவ்வழியில் வந்த முதலாம் ஹுசெய்ன் (1456 — 1502), மூல்தானை, பலால்லோடியின் தாக்குதலிலிருந்து காப்பாற்றினுர். பின்போந்த முகம்மது (1502—'27), லாகூரின் ஆட்சித் தலைவராயிருந்த தௌலத்கான் லோடியால் தோற்கடிக்கப்பட்டார். 152/'ல் தெற்கு சிந்துவின் ஷாஹுசெய்ன், மூல்தானில் படையெடுத்துச் சிறிதுகாலம் அதைக் கைப்பற்றியிருந்தாரென்று முன்னர்ப்பார்த்தோம். பிறகு மூல்தான், லாகூரின் தலைவனும் ஹுமாயூனின் உடன்பிறந்தவனுமான காம்ரானுக்குப் பணியவேண்டியிருந்தது. இவ்வாறு மூல்தான், தில்லி ஆதிக்கத்தினின்று பிரிந்து சுமார் 90 ஆண்டுகள் (1438—1528) உரிமையுடன் விளங்கியது.

## பகுதி 3

### இராசபுதனம்

இராந்தம்பூர். 1194'ல் கோவிந்தராசர் என்ற சாகமான மன்னன், இராணுஸ்தம்பபுரா அல்லது இராந்தம்பூரில் தம் ஆட்சியை நிறுவிய செய்தி முதற் புத்தகத்தில் கூறப்பட்டது. அவருக்குப் பிறகு சில சிற்றரசர்கள் அங்கு ஆட்சி நடத்தினுர்கள். ஐபெக்கும் இல்டுட்மிஷும் இராந்தம்பூரைக் கைப்பற்றிய போதிலும், பின்போந்த ஆற்றலற்ற சுல்தான்கள் அதை இழந்தனர். இருமுறை பால்பன், அதைத்தாக்கினுர். சாகமானகுல இறுதி மன்னன் ஹம்மீரா என்பவராவர். (1283—1301) வீரகாவியப் பாவலர் சந்த் என்பாரின் கால்வழியிற்ருேன்றிய சாரங்தரரின் (14'ம் நூற்றுண்டு)

இந்திச் செய்யுட்களிலும், நயசந்திரரின் ஹம்மீர மகா காவியம் என்ற வடமொழி நூலிலும், ஹம்மீரா, பெரும் வெற்றிவீரர் என்று புகழப்படுகிறார். 1290'ல் ஜலாலுதீன் கில்ஜி, இராந் தம்பூரைக் கைப்பற்ற முயன்று தோல்வியுற்றார். இறுதியில் அலாவுதீன் கில்ஜி 1301'ல் அதனைக் கைப்பற்றிக்கொண் டார். வீரர் ஹம்மீரர் அழிந்தார், அவர் குலமும் முடிவுற்றது.

மீவார் (உதயபுரி.) குஹிலபுத்திரர் அல்லது குஹிலாட்டி யர் என்பார், மீவாரில் சுமார், கி. பி. 550'ம் ஆண்டிலே ஆட்சி தொடங்கிய பழைய குலத்தவராவர்.[1] பனிரண்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில், அக்குலத்தில் இரு பிரிவுகள் தோன்றின. அப் பிரிவினர், ராவல், ராணா என்ற பட்டங்க ளுடன் முறையே சித்தூர், சிசோடா என்ற நகரங்களில் தனித்தனி ஆட்சி நிறுவினர். சிசோடாவின் ராணாக்கள் சிசோடி யர் எனப்படுவர். சித்தூர் மன்னருள் இறுதியானவர் ரத்தின சிம்மர் என்பாராவர். 1303'ல் அஃது அலாவுதீனால் கைப் பற்றப்பட்டது. ரத்தின சிம்மரின் மனைவி பத்மினி மிகவும் அழகு வாய்ந்தவளென்றும், அவளை அடைவதற்காகவே அலா வுதீன் சித்தூரைத் தாக்கினர் என்றும், கூறப்படுகிறது. தந்திரமாக மன்னனைக் கைதியாக்கிய சுல்தான், பத்மினி, அவருடைய உவளகத்திற்கு வந்தால், அவள் கணவனை விடுதலைசெய்வதாக அறிவித்ததாகவும் அதற்கு ஒப்புக்கொண்ட பத்மினி, கணவன் விடுதலை பெற்றபின், தன்னைத் தீக்கிரை யாக்கிக்கொண்டதாகவும் அறியப்படுகிறது. ஆனால் இச்செய்தி உண்மையன்று என்று சிலர் கூறுவர். குஹிலகுல ஆட்சி, சிசோடியரின்கீழ்ச் செழிப்புற்றது. மகாராணா ஹம்மீரா (சுமார் 1326—'64) இலக்கன் (1382—'97) கும்பராணா (1433—'68) முதலியோர் சிறப்புவாய்ந்த மன்னர்களாவர். அக்காலப் பகுதிகளில், முகமதியரால் அழிக்கப்பட்ட கோயில் கள், மாளிகைகள் முதலியன புதுப்பிக்கப்பட்டன. நீர்ப்ப சன வசதிகள் அமைக்கப்பெற்றன. உதயபுரிக்கு அண்மை யில், ஈயம், துத்தநாகம், வெள்ளி முதலிய கனிப்பொருள்

1 H. C. Ray, The Dynastic History of Northern India, II, p. 1206.

கள் கிடைத்ததால் மக்களின் பொருளாதார நிலை உயர்ந்தது. கும்பராணு காலத்தில் பல கோட்டைகள் அமைக்கப்பெற்றன. சிறப்பாக, கும்பால்கார் கோட்டை குறிப்பிடத்தக்கது. மீவாரில் சித்தூர் கோட்டைக்கு அடுத்தபடியான பெருமை இதற்கு உண்டு. மேலும் அவர், மாளவ மன்னன் முதலாம் முகம்மதுவை வென்று அவ்வெற்றியின் அறிகுறியாகச் சித்தூரில் ஒரு கோபுரம் எடுத்தார். அவருடைய மகன் ஊடா அவரைக் கொலை செய்தார். ஊடாவின் உடன்பிறந்தானின் மனைவியான மீராபாய், இந்தி இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றவள். சுமார், 1470'ல் அவர், அன்பு வழிபாட்டுக் கொள்கையினர் குழுவிற்சேர்ந்து, கண்ணனைப்பற்றிய பல உருக்கமான பாடல்களைப் பாடத் தொடங்கினர். அன்புச் சுவை நனிசொட்டச் சொட்ட பாடிய அப்பாடல்கள் செவிக்கினிமை அளிப்பன. ராணசங்கராமா (1508—'29) என்ற மீவார் மன்னன், 1517'ல் மாளவத்தின் இரண்டாம் முகம்மதுவை முறியடித்தார். இப்ரஹிம் லோடியும் இவருடன் போரிட்டார். இருவரும் வெற்றிபெற்றதாகக் கூறிக்கொள்கின்றனர். பின்வந்த பாபர், 1527'ல் ராணவை, ஆக்ரா அருகில் தோற்கடித்தார். பலமாறுபடு நிலைகளுக்குப் பிறகு ராணசங்கராமின் மகன் உதயசிங் 1537'ல் அரியணைபெற்றார்.

மார்வார் (ஜோதிபுரி). மார்வார் அல்லது ஜோதிபுரியின் இராட்டிரகூடர், கன்னேசி காகடவாலரின் இறுதி மன்னன் செயசந்திரனின் கால்வழியினர் என்று கூறுப. காகடவாலர், இராட்டிரகூடரல்லர். ஆயினும் அண்மையில் நடைபெற்ற ஆராய்ச்சிகளின் முடிவாக கன்னேசியில் ஒரு இராட்டிரகூட குடும்பம் இருந்ததாக அறியப்படுகிறது. ஆகவே ஜோதிபுரி இராட்டிரகூடர், அக்குடும்பத்திலிருந்து தோன்றியவராகக்கருத இடமிருக்கிறது.[1] 13'ம் 14'ம் நூற்றுண்டுகளில் அவர்கள் சிறு தலைவர்களாக இருந்தனர். மீவார் மன்னருக்கும், ஜோதிபுரி மன்னருக்கும் இடையே நிலவிய திருமணவினை உறவு காரணமாக மீவார்ராணு லக்கனின் அவையில் இராட்டிரகூடர் செல்வாக்குப்பெற்றனர். இதைப் பயன்படுத்

1 Ray, Op. Cit. I, p. 552

திக்கொண்டு மீவார் அரசைக் கைப்பற்ற அவர்கள் செய்த முயற்சி பயனுறவில்லை. 1459'ல் ஜோதா என்பார் ஜோதிபுரி நகரைத் தோற்றுவித்தார். அவர் மகன் சுராஜ்மல் (1488—1516), முகமதியக் கொள்ளைக்காரரால் கடத்திச் செல்லப் பட்ட பல இரசபுத்திரப் பெண்களைக் காப்பாற்றினர். அம் முயற்சியிலீடுபட்டிருக்கையில் அவர் கொலையுண்டார். அவருக் குப்பின்போந்த அவர் பெயரனுன கங்கன் (1516—'32) பாபருக்கும் இராணு சங்கரர்மனுக்குமிடையே நடைபெற்ற போரில் பின்னவனுக்கு உதவி செய்தார். முகலாயராட்சிக் காலத்தில் மார்வார் சிறப்பான நிலையை எய்தியிருந்தது.

## பகுதி 4

### குஜராத்

அன்ஹில்வாட் சோலங்கியர். அன்ஹில்வாடின் பீம தேவர் II (1178—1241) 1178'ல் முகம்மதுகோரியைத் தோற்கடித்தார். 1195 முதல் 1197 வரை ஐபெக், பீம தேவருடன் போர் நிகழ்த்தி, அன்ஹில்வாடையும் கொள்ளை யடித்தார். மாளவமும் பீமதேவரைத் தாக்கியது. 1223'ல் அவர் தம் அரியணையை இழந்து சுமார் 1226'ல் மீண்டும் அதனைப்பெற்றார். சோலங்கியரின் மற்றொரு கிளை (வாகேலார் என்ற பெயரையுடையது) அன்ஹில்வாடின் அண்மையிலுள்ள வியாக்கிரபள்ளியில் லவணப்பிரசாதன் தலைமையில் சிறப்புப் பெற்று வந்தது. அவர் மகன் வீரதவலன், பீமதேவனின் ஆட்சியின் இறுதிப் பத்து ஆண்டுக்காலத்தில், சபர்மதியிலிருந்து நர்மதைவரை உரிமையுடன் ஆணை செலுத்தினர். லவணப் பிரசாதன், மன்னனின் தலைமை அமைசசராக இருந்தவர். தேவகிரியின் சிங்கணன் குஜராத்தில் படையெடுத்த காலத்தில், லவணப்பிரசாதன், இருநாடுகளிடை ஒரு உடன்பாடு ஏற்படுத் திக்கொண்டார். சோமேஸ்வரரின் கீர்த்திகௌமுதி என்ற அக்கால வடமொழி நூலில் வாகேலாகுல வரலாறு குறிப்பிடப்படுகிறது. வீரதவலனின் மகன் விசாலதேவன் (1244—'62), பீமதேவர் II இன் மரபை ஒதுக்கிவிட்டு

அரியணையைத் தாமே கைப்பற்றிக்கொண்டார். அவர் மாளவத்தையும், தேவகிரியையும் போரில் தோற்கடித்ததாக உரிமை கொண்டாடுகிறார். அவருக்குப் பின் அரசு பெற்ற அவருடைய உடன்பிறந்தானின் மகனான அர்ச்சுனதேவர் (1262—'75) முகமதியரையும் அவர் மதத்தையும் போற்றினார். அவர் மகன் சாரங்கதேவர் 1275 முதல் 1297 வரை ஆட்சிபுரிந்தபின் இரண்டாம் கர்ணதேவர் அரியணை பெற்றார். இவரே அனஹில்வாடின் வாகேலா குலத்தின் இறுதி இளவரசராவர். 1297-ல் அலாவுதீன் கில்ஜியின் படைத் தலைவர்கள் குஜராத்தில் படையெடுத்து அன்ஹில் வாடைக் கைப்பற்றியபொழுது, கர்ணதேவர், தம்முடைய மகள் தேவலா தேவியுடன் தேவகிரிக்கு ஓடிவிட்டார், அவர் மனைவி கமலாதேவி சுல்தானின் உவளகத்தில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்டாள்.

குஜராத் சுல்தான்கள். குஜராத் 1297 முதல் 1401 வரை தில்லியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. முகமதிய மதத்தைத் தழுவிய ஒரு இராசபுத்திரரின் மகனான ஸாபர் கான் என்பவர், குஜராத்தின் ஆட்சித் தலைவராக இருந்து வந்தார். 1401'ல் இவர் தில்லி ஆட்சியினின்று விலகி முஸாபர்ஷா என்ற பட்டத்துடன் உரிமை வாய்ந்த அரசரானார். அவர் பெயரன் ஆமத்ஷா I (1411—'41) அரசருக்கு நஞ்சு கொடுத்துக் கொன்றுவிட்டுத்தாம் பட்டமேற்றார். சபர்மதி ஆற்றங்கரையில் ஆமதாபாத் நகரம் அவரால் தோற்றுவிக்கப் பட்டது (1411). 1414'ல் இவர், கிர்னார் கோட்டையைக் கைப்பற்றினார். 1416, 1421, 1437 முதலிய ஆண்டுகளில் மாளவத்துடன் இவர் போர் புரிந்தார். மதவெறிகொண்ட இவரால் இந்துக்கள் மிகவும் துயருறுத்தப்பட்டனர். அவர்கள் கோயில்கள் பல அழிக்கப்பெற்றன. ஆனால் இவர் முறை தவறாதவர். கொலைக்குற்றம் புரிந்த இவருடைய மருமகனையே இவர் கொலை செய்யுமாறு ஆணையிட்டார். சிறந்ததானைத் தலைவராகவும், தேர்ந்த ஆட்சிமுறைத் தலைவராகவும் ஆமத்ஷா விளங்கினார். அவர் பெயரன், முகம்மது பீகாரா (1458—1511) அக்குலத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்த மன்னராவர்

இவருடைய துணைப்பெயர் பீகாரா அல்லது பேகடா (குஜ ராத்தியில் எருது என்னும் பொருளையுடையது) என்று அமைந் தமைக்குக் காரணம், இவருடைய மீசைகள். கீழ்மேலாகப் புரட்டப்பட்ட எருதின் கொம்புகள்போலக் காட்சியளித்தமை யாம்.[1] இவர், 1462—3'ல் மாளவத்துக்குப் பகையாக நிஸாம் பாமனிக்கு உதவினர்; 1470'ல் கிர்ஞரை இணைத்துக் கொண்டார்; 1471'ல் சிந்துநாட்டிற் படையெடுத்தார்; துவா ரகைக் கடற் கொள்ளைக்காரரைத் தண்டித்தார்; அங்கிருந்த கோயில்களை 1473'ல் இடித்தார்; 1484'ல் பரோடாவுக் கருகிலுள்ள சம்பனீர் என்ற இடத்தைக் கைப்பற்றினர்; சுமார் 1492'ல் சஞ்சன் என்னும் பார்சியர் பகுதியை (டாமனுக்கருகில்) த்தாக்கிக் கொள்ளையடித்தார்; போர்ச்சு கீசியருடன் பகைத்துக்கொண்டு எகிப்திய சுல்தானின் உதவி யுடன் அவர்களை 1508'ல் தோற்கடித்தார். முகம்மது நடத்திய நாவாய்ப்போரில் போர்ச்சுகீசிய அரசப்பிரதிநிதி ஆல்மெய்டாவின் மகன் இறந்தார். ஆனல் அடுத்த ஆண்டில் முகம்மதுவின் கடற் படை டையூ அருகில் தோற்கடிக்கப்பட்டது. முகம்மதுவை முஸ்லிம் ஆசிரியர்கள் "தனிச்சிறப்பின் ஒரு எடுத்துக்காட்டு" என்று புகழ்கின்றனர். ஆனல் அவரைப்பற்றி வியக்கத்தக்க செய்திகள் ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவ ருடைய நீண்ட மீசை தாடிகள், நச்சுப் பொருள்கள் அவரைத் துன்புறுத்துவதில்லை என்ற செய்தி, பெருந்தீனி உண்ணும் அவ ருடைய பழக்கம், பாம்புகளையும், தேரைகளையும் அவர் உண் பார் என்ற செய்தி முதலியவற்றைப்பற்றிய வியப்பான குறிப்புக்கள் ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவர் பெயரன் பஹதூர்ஷா (1526—37) பேரவாவும் வலிமையும் வாய்ந்த சுல்தானுவர். 1531'ல் மாளவமும் 1534'ல் சித்தா ரும் அவரால் கைப்பற்றப்பட்டன. முகலாயப் பேரரசர் ஹுமாயூனுடனும் இவர் போரிட்டார். முதலில் தோல்வி யுற்றபோதிலும் பின்னர் சுல்தான் தம் நிலையை உறுதிப் படுத்திக்கொண்டார். போர்ச்சுகீசியர், டையூவில் ஆலை ஏற்படுத்திக்கொள்ள உரிமை அளிக்கப்பட்டனர். தம் பகை

1 M. S. Commissariat, A History of Gujarat (1938), p. 232.

365



வர்களைத்தாக்க அவர்களுடைய உதவியை நாடிப் பஹதூர்ஷா அவ்வுரிமையை அளித்தார். அவ்விடத்தில் போர்ச்சுகீசியர் கோட்டைகள் கட்டிக்கொண்டு தம்மை வலிமைப்படுத்திக் கொள்ளமுற்பட்டதால், சுல்தான் அவர்களை வெளியேற்றிவிட முடிவு செய்தார். ஆனால் 1537'ல் சூழ்ச்சியால் அவர் கொல்லப்பட்டார். போர்ச்சுகீசியரின் அச்சூழ்ச்சியைப்பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. எனினும் பெரும்பான்மையான அறிஞர்கள், போர்ச்சுகீசியர் குற்றவாளிகளென்றே கருதுகின்றனர்.[1] பஹதூர்ஷாவுக்குப் பிறகு அரசியல் குழப்பம் மேலிட்டது. 1573'ல் அக்பர், அப்பகுதியைத் தம்முடனிணைத்துக்கொள்ளும் வரை அந்நிலை நீடித்தது.

முதலாம் ஆமத்ஷா, ஆமதாபாத்தில் இரண்டு பள்ளிவாசல்கள் எடுத்தார். ஜாமி மஸ்ஜிட் எனப்படும் பள்ளிவாசல் "உலகில் மிகச்சிறந்த மசூதிகளில் ஒன்று"[2] எனப் புகழப்பட்டிருக்கிறது. முகம்மது பீகாராவின் சம்பனீர் பள்ளிவாசல்கள் நுண்ணிய கலை வேலைப்பாடுகளையுடையனவாம்.[3] அவராட்சியில் குஜராத் கட்டடக்கலை மிகவும் சிறப்பான நிலையை அடைந்தது. இந்து-முஸ்லிம் கலை, மாகாணங்களில் அமைந்திருந்தமைக்கு அது ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். முகமதிய ஆட்சியாளர் உள்நாட்டுக்கலை மரபைத் தமக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தியுள்ளதை. அது விளக்கும். முகமதுவின் காசுகள் (சிறப்பாக வெள்ளிக் காசுகள்) கலைச் சிறப்புக்களுடன் விளங்குவன ஆகும். இவரும் முதலாம் ஆமத்ஷாவும் "மரபுவரிசைக் காசுகள்" அடித்தனர். அவை அரசர் குடிமுறையைக் குறிப்பிடுகின்றன.

## பகுதி 5

### மாளவம்

தார் பகுதியின் பரமாரர். மாளவம் நீண்ட காலமாக தார் பகுதியிலிருந்து ஆண்டுவந்த பரமார இராசபுத்திரர்

1. Ibid., pp. 374—83.
2. & 3. C. H. I. III, pp. 610 & 613.

களுக்குக் கீழ்ப்பட்டிருந்ததென்பது முதற் புத்தகத்தில் கூறப் பட்டது. அர்ச்சுனவர்மனின் காலத்தின் (1211—15) சிறப்பைப்பற்றியும் முன்னர் பார்த்தோம். அவருக்குப் பின் போந்த தேவபாலர் 1236 வரை ஆட்சி நடத்தினர். இல்டுட் மிஷ் 1234'ல் மாளவத்தையும், உச்சயினியையும் தாக்கிக் கொள்ளையடித்தார். தேவபாலரின் பின்வந்தோரைப்பற்றிய மிகுதியான செய்திகள் தெளிவற்றனவாக உள்ளன. 1292'ல் அலாவுதீன் பில்சாவையும் பிறகு ஜலாலுதீன் கில்ஜி மாண்டூ வின் அண்மையிலுள்ள பகுதியையும் கைப்பற்றினர். பின்ன வர், 1305'ல் மாளவத்தை வென்றார்.

மாளவத்தின் சுல்தான்கள். 1305 முதல் மாளவம் தில்லி சுல்தானியராட்சிக்குட்பட்ட ஒரு மாகாணமாயிருந்தது. அதன் ஆட்சித் தலைவராயிருந்த திலாவர்கான் கோரி, 1401'ல் தம் உரிமை ஆட்சியை அங்கு ஏற்படுத்தி, தார் நகரைத் தம் தலைநகராக்கினர். அவர் மகன் ஹோஷாங்ஷா என்பவர் (1405—34) தலைநகரை மாண்டூவுக்கு (தார் அருகில்) மாற்றினர். அவருக்குப்பின் அரசனை அவர் மகனை 1436'ல், முகம்மது கில்ஜி என்ற அவருடைய அமைச்சர் அரியணையினின்று அகற்றிவிட்டுத் தம் குலத்தை ஆட்சிபீடத்தில் நிலை நிறுத்தினர். முகம்மது கில்ஜி I எனப்பட்ட அவர் (1436—69) பல போர்கள் செய்து நாட்டின் எல்லையைப் பெருக்கினர். குஜராத், சித்தூர், பாமனிராச்சியம் முதலிய வற்றுடனும் அவர் போர் தொடுத்தார். ஆனல் தில்லியை நோக்கி அவர் முன்னேறியதைப் பலால்லோடி தடுத்து நிறுத்தினர். மாளவத்தின் சுல்தான்களில் மிகச் சிறப்பு வாய்ந்தவர் இம் முகம்மதுவே எனலாம். இந்துக்களும் முகமதியரும் அவராட்சியில் ஒத்துழைத்தனர். நாட்டின் புகழும் செழிப்பும் ஓங்கின. சுல்தான், வரலாற்றில் விருப்பமுடையவர் என்பதும் நோக்கத்தக்கது. அவருக்குப் பின்வந்த கியாஸ்-உத்-தீன் (1469—1500) தம்முடைய மகனல் விஷமிட்டுக் கொல்லப் பட்டபின், நாசிருதீன் என்ற பெயருடைய அம்மகனின் (1500—1510) கொடுங்கோன்மை நிலவியது. அச்சுல்தான் சிற்றின்பத்தில் ஈடுபட்டுக்காலங்கழித்தார். 15,000 பெண்டிர்

அவருடைய உவளகத்தில் இருந்தனர். எந்த அழகிய பெண்ணைப்பற்றி அவருக்குச் செய்திகிடைத்தாலும் உடனே அவளை எம்முறையிலாவது கொண்டுவரச் செய்வது அவர் வழக்கமாம். பின்போந்த முகம்மது II (1510—'31) மீவாரின் ராணு சங்கராமரால் கைப்பற்றப்பட்டு பிறகு விடுதலையடைந்தார். குஜராத்தின் பஹதூர்ஷா, மாண்டூவைக் கைப்பற்றிக்கொண்டு மாளவத்தைத் தந்நாட்டுடன் இணைத்தார். 1531'ல் மாளவ சுல்தானும் கொல்லப்பட்டார். அத்துடன் மாளவத்தின் கில்ஜி குலமும் உரிமை ஆட்சியும் முடிவுற்றன.

கலை. மாளவக் கட்டடக்கலை, குஜராத்தினுடையதைப் போலன்றி, தில்லிக் கட்டடக் கலைமுறையை ஒத்துள்ளது. ஹோஷாங்ஷா, மாண்டூவில் ஒரு பெரிய பள்ளிவாசலைக் கட்டத் தொடங்கினர். முதலாம் முகம்மது அதை முடித்தார். "தர்பார் மாளிகை" ஒன்றும் கல்லறை ஒன்றும் அவரால் தொடங்கப்பெற்ற கட்டடங்களாக இருக்கக் கூடும். "இந்தியாவில் அக்கல்லறையே முழுவதும் வெண்மைச் சலவைக்கல்லாலாகிய முதற் பெரும் கல்லறை" என்று சிறப்பிக்கப்பட்டிருக்கிறது.[1] முகமது I, தம் வெற்றியின் அடையாளமாக ஏழு அடுக்குகளையுடைய ஒரு கோபுரத்தையும் ஒரு கல்லூரியையும், மரபுக்குரிய ஒரு கல்லறையையும் இரு அரன்மனைகளையும் எடுத்தார். உவளகமாதர் உல்லாசமாக நீராட, கியாசுதீன், துருக்கிய முறையில் நீராடும் அறைகளை அமைத்ததாக நம்பப்படுகிறது. நாசிருதீனும் ஒரு அரன்மனையைக் கட்டினர். பிற்காலத்தில் பஸ் பகதூர் மாளிகை என இது அழைக்கப்பெற்றது. [பஸ் பகதூர், 1555 முதல் 1561'ல் அக்பரால் இணைத்துக்கொள்ளப்படும் வரையில் மாளவத்தின் ஆட்சியாளராயிருந்தவர்]. முகமது I, சதுரவடிவமான காசுகளை வெளியிட்டார். "இரண்டாவது அலெக்சாந்தர்" என்பது போன்ற பல அரசப் பட்டங்கள் அவற்றில் காணப்பெறும். கியாசுதீன் காலத்திலிருந்து காசுகளில் அணிகலன்கள் பொறிக்கப்பெற்றன. இறுதி சுல்தானின் காசுகள் மிகுதியான வேலைப்பாட்டுடன் கூடியன.

---

1 C. H. I. III. p. 620.

# பகுதி 6

## ஜான்பூர் ஷார்க்கியர்

தைமூரின் படையெழுச்சிக்குப் பிறகு தில்லிப் பேரரசினின்று விடுதலைபெற்ற நாடுகளில் ஜான்பூரும் ஒன்று. ஜான்பூர், 1359—60'ல் பிரோஸ் துக்ளக்கால் கும்தி ஆற்றங்கரையில், காசிக்கு வடமேற்கில் அமைக்கப்பெற்றது. அவர் அதற்குத் தம்அண்ணன் மகன் ஜூனே (முகம்மதுபின் துக்ளக்) வின் பெயரைக்கொண்டு ஜான்பூர் என்று பெயரிட்டார். அதைத் தலைநகராகக்கொண்டு கீழ் நாடுகளை மேற்பார்வை செய்ய பேடி (eunuch) ஒருவன் ஆட்சித் தலைவனாக அமர்த்தப்பெற்றான். குவாஜா-இ-ஜஹான் என்பது அவனது பட்டப்பெயர். முகம்மது துக்ளக் 1394'ல் பட்டமேற்றபின் குவாஜாவின் சிறப்பு மேலோங்கியது. சுல்தான் அவருக்கு "மல்லிக்-உஸ்-ஷார்க்" (கீழ்நாட்டுத்தலைவன்) என்ற பட்டப்பெயரை அளித்தார். கன்னோசியிலிருந்து பீஹார் வரை உள்ள பகுதியை, ஜான்பூரிலிருந்துகொண்டு ஆட்சிபுரியும் அதிகாரம் அந்த ஷார்க்கியத் தலைவனுக்கு அளிக்கப்பப்பட்டது. இவ்வாட்சித்தலைவன் தன் பகுதியிலேற்பட்ட கலகங்களை அடக்கி ஒழுங்கையும் அமைதியையும் ஏற்படுத்தி நற்பெயர் பெற்றான். வங்காளத்திலும் ஒரிஸ்ஸாவிலும் அவனுக்குச் சிறந்த மதிப்பு இருந்தது. தைமூரின் படையெழுச்சியை அவன் தன்னலனுக்காகப் பயன்படுத்திக்கொண்டான். அதுமுதல் அப்பகுதி உரிமையுடன் விளங்கியது. ஷார்க்கியர் குலம் நீக்ரோ இனத்தினின்று தோன்றியது. அக்குலத்தின் மன்னர்களுள் மிகச்சிறந்தவரான இப்ரஹிம்ஷா (1402—'36) கலையையும் இலக்கியத்தையும் போற்றியதால், கீழ்ப்பகுதியில் ஜான்பூர், மிகவும் மேலான கல்விக்கூடமாகக் காட்சியளித்தது. போர்த்துறையிலும் இப்ரஹிம் சிறப்பு வாய்ந்தவர். தில்லியையும் எதிர்த்து அவர் படையெடுத்தார். ஆனால் குஜராத் சுல்தான் அவரை எதிர்த்து முன்னேறிவந்த செய்தி கேட்டு தில்லிப் படையெழுச்சியைக் கைவிட்டார். 1409-க்கும் 1414-க்குமிடைப்பட்ட காலத்தில், சுல்தான், வங்காளத்தில் முகமதியரைத் துன்புறுத்திய இராசா கணேசர் என்பவரைத் தண்டிக்கப்

படையெடுத்து அக்குறிக்கோள் நிறைவேறப்பெற்றார். அவர் பின்போந்த முகம்மதுஷா (1436—'58), ஹுசெய்ன்ஷா (1458—'79) இருவரும் பலால் லோடியுடன் போரிட்டனர். முடிவாக லோடி சுல்தான், ஷார்க்கி குலத்தை முடிவுறச் செய்தார். ஹுசெய்ன்ஷா, வங்காளத்தில் புகலிடம் பெற்று அந்நாட்டுச் சுல்தானின் அன்பான ஆதரவைப்பெற்றிருந்தார். அவர், சிகந்தர் லோடியை முறியடிப்பதற்காகச் செய்த சூழ்ச்சிகள் பயனற்றுப்போயின.

ஷார்க்கியரது கட்டடக் கலையில் இந்துப் பண்புகளும் இஸ்லாமியப் பண்புகளும் கலந்து பொலிவதைக் காணலாம். இப்ரஹிம் கட்டிய (1403) அட்டாலா மசூதி (அட்டாலாதேவி கோயிலிருந்த இடத்திலுள்ளது) ஜான்பூர் கட்டடக்கலைச் சிறப்புக்கு ஒரு தக்க எடுத்துக்காட்டாகும். பழைய கோயிலின் கற்கள் புதிய கட்டடத்துக்குப் பயன்படுத்தப்பெற்ற போதிலும் அவை புதிய வகையில் மாற்றி மசூதிக்கு ஏற்ப அமைக்கப் பெற்றன. இக்குலத்தவரின் காசுகள், செம்பு, பொன், வெள்ளி முதலிய உலோகங்களில், தில்லி முறையையொட்டி அச்சடிக்கப்பட்டன. சுல்தானின் பெயர்களுடன் சில காசுகளில் குடிவழியும் குறிப்பிடப்படுகிறது. பொற்காசுகள் வங்காளக் காசுமுறையைப் பின்பற்றி அமைந்தவை.

## பகுதி 7

### வங்காள சுல்தான்கள்

முகம்மதுபின்பக்தியாரால் வெல்லப்பட்ட வங்காளம், பெயரளவுக்கு தில்லிக்குக் கீழ்ப்படிந்து இருந்து வந்தது. காலப்போக்கில் வங்காளத் தலைவர்கள் தம் விருப்பம்போல் செயலாற்றலாயினர்.

**இலியாஸும் அவர் பின்வந்தோரும்.** பதினான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை, இலியாஸ்ஷா என்பார் நிறுவிய குலம் வங்காளத்தில் அரசுபுரிந்து வந்தது. முகம்மதுபின் துக்ளக்

வங்காளத்தை மூன்று இராச்சியங்களாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் தனித்தனி ஆட்சியாளரை அமர்த்தியிருந்தார். ஆனால் அவர்கள் மூவரும் கலகம் செய்யவே, ஷாம்சுதீன் இலியாஸ் (1343—'57) அம்மூன்று இராச்சியங்களையும் ஒன்றுசேர்த்து 1352 முதல் தாமே தனித்தலைவராக ஆட்சி செலுத்தலானார். பண்டுவா என்ற புதிய தலைநகர் அவரால் அமைக்கப்பட்டது. 1410 முதல் 1414 வரை இலியாஸ்குல மன்னர்கள் ஆட்சி நடந்துகொண்டிருக்கையில், இராசா கணேசர் என்ற ஒரு சமீன்தார், அரச அதிகாரங்களைத் தாமே செயலாற்றி வந்தார். முகம்மதியரை அவர் துன்புறுத்தியதால், ஜான்பூரின் இப்ரஹிம் வங்காளத்திற் படையெடுத்த செய்தி முன்னர்க் கூறப்பட்டது. ஆனால் கணேசரின் மகன் முகமதிய மதத்தைத் தழுவினார். அவர் தம் தந்தை இறந்தபிறகு, ஜலாலுதீன் முகம்மது (1414—31) என்ற பெயருடன் அரசராக அமர்ந்தார். இவர் இந்துக்களை மிகவும் துயருறுத்திப் பலரை முகமதியராகும்படிக் கட்டாயப்படுத்தினார். இவருக்குப் பின்போந்த ஆமத்ஷா (1431 — 42), கொடுங்கோன்மை காரணமாகக் கொலை செய்யப்பட்டார். அக்கொலையைச் செய்தவர் இலியாஸ் குலத்தைச்சேர்ந்த நாசிர்கான் என்பாராவர். இவர் நாசிர்-உத்-தீன் முகம்மது என்ற பெயருடன் 1442 முதல் 1460 வரை ஆட்சி நடத்தினார். அவர் மகன் பார்பக் (1460-74) ஆப்ரிக்க அடிமைகளை மிகவும் ஆதரித்தார். 8000 அடிமைகளை பணித்துறையிலமர்த்தியிருந்தார். பின்போந்த யூசுப்ஷா (1474—81) கள்குடியை நாட்டில் தடைசெய்திருந்தார். அவரிறந்தபிறகு நாட்டில் குழப்பம் மேலிட்டது. சுல்தானைக் காவல்புரிய அமர்த்தப்பட்டிருந்தவர்களும் ஆப்ரிக்க அடிமைகளும் அச்சீர்கேடான நிலைக்குக் காரணமாவர். அக்குழப்பத்தை ஒழித்து வங்காளத்தில் புகழ்பெற்ற ஆட்சியை நிறுவிய பெருமை அலாவுதீன் ஹுசெய்ன்ஷா (1493—1518) என்பாரைச்சாரும். இவர் சையது குலத்தவர். பெருஞ்செல்வர்கள் இவரைச் சுல்தானாக அமர்த்துவதற்கு முன்பு இவர் அமைச்சராக இருந்து சிறந்த திறமைபெற்றிருந்தார். நாட்டுக்குத்தீமைபயந்துவந்த நிலையங்களை இவர் ஒழித்தார். குழப்பக்காலத்தில் இழக்கப்பட்டிருந்த நிலப்பகுதிகள்

மீண்டும் வெல்லப்பெற்றன. ஓரிஸ்ஸா எல்லைவரை நாட்டின் அளவு விரிவுற்றது. வங்காள சுல்தான்களில் இவரே மிகவும் சிறப்பு வாய்ந்தவர் எனலாம். மக்களின் நலத்திலும் கலைப் பண்பு முன்னேற்றத்திலும் ஹுசெய்ன், மிகுந்த கருத்துச் செலுத்தினர். சமயத்துறையில் பெருந்தன்மைக் கொள்கை நிலவியது. ஜான்பூர் சுல்தான் ஹுசெய்ன், வங்காளத்துக்கு ஓடிவந்தபொழுது வங்காள சுல்தான் அவரைப் பேரன்புடன் காப்பாற்றினர். இந்துக்களும் முகமதியரும் வங்காள சுல்தான் ஹுசெய்னைப் போற்றிப் புகழ்ந்தனர். அவருடைய பதினெட்டு மக்களில் மூத்தவரான நூஸ்ரத்ஷா, 1518 முதல் 1533 வரை ஆட்சி புரிந்தார். சிட்டகாங்கில் அவ்வமயம் தங்கி யிருந்த போர்ச்சுகீசியரின் செருக்கான செயல்கள் அச்சுல்தா னுக்குச் சினத்தை உண்டாக்கின. இதனல் அம்மேனுட்டார் தண்டனை பெற்றனர். போர்ச்சுக்கீசியர், அவ்விடத்தைத் தீக்கிரையாக்கினர். சுல்தான், கலை, இலக்கியம் முதலியவற் றின் வளர்ச்சிக்கு உதவினர். ஆனல் கொடுமையும் ஒழுக்கக் கேடும் நிறைந்த அவருடைய சில செயல்கள் காரணமாக அவர் கொல்லப்பட்டார். இறுதியாக ஆட்சிபுரிந்த மகமது (1533—38) ஷெர்கான் என்ற ஸுர்குலத் தலைவனல் முறியடிக்கப்பட்டார். தலைநகர் கவுர் 1538'ல் வெற்றிவீரரால் கைப்பற்றப்பட்டது. ஷெர்கான், வங்காள மன்னராக அமர்ந் தார். இவர் ஆப்கானிய இனத்தைச் சேர்ந்தவர். இவ்வாப்கானி யர், வங்காளம் 1576'ல் அக்பரால் கைப்பற்றப்படும்வரை, அப்பகுதியில் ஆட்சி நடத்தினர்.

## பகுதி 8

### கலை, இலக்கியம், சமயம். — சைதன்யர்

கலை: வங்காளக் கட்டடக் கலைமுறை, குறிப்பிடத்தக்க பண்புகளைப் பெற்றிருப்பினும் பொதுவாக மிகச்சிறந்த கலை முறை என்ற புகழுக்குரியதன்று. பண்டுவாநகரில் கட்டப்பட்ட அடினு மசூதி, வங்காளத்தில் மிகவும் சிறந்ததோர் கட்டட மென்று புகழப்பட்டது. அது 1368'ல் சிகந்தர்ஷாவால் நிறுவப்பெற்றது. அதே இடத்திலுள்ள ஜலாலுதீன் கல்லறை,

வங்கக் கல்லறைகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. பார்பக், யூசுப் காலங்களில் கட்டடங்கள் பல தோன்றின. ஹுசெய்ன்ஷா, கவுர் நகரில் எடுத்த பள்ளிவாசல்களும், கல்லறையும் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவை. சுல்தான்கள் வெளியிட்ட காசுகளில் "கலீபாவின் வலக்கை," "இஸ்லாமின் உதவியாளர்" போன்ற சொற்றொடர்கள் காணப்படுவது, அவர்களுடைய வைதீகப்பற்றைக் காட்டுகின்றது. பல காசுகள் கலை நுட்பமுறையில் குறைபாடுகளுடன் கூடினவாகவே உள்ளன.

**இலக்கியம் :** சுல்தான்கள், வங்காள இலக்கியத்தின் வளர்ச்சிக்கு உதவி புரிந்தனர். பதினைன்காம் நூற்றாண்டில் இராமாயணம், கிருத்திவாசர் என்பாரால் மொழிபெயர்க்கப் பட்டது. "வங்காளத்தின் மறைநூல்" என்று புகழப்படும் அளவுக்கு அம்மொழிபெயற்பே சிறப்புப்பெற்றது. அதே நூற்றாண்டில் மகாபாரதமும் 1480'ல் பாகவதத்தின் சில பகுதிகளும் வங்காள மொழியில் மொழிபெயற்கப்பட்டன ஹுசெய்ன்ஷாவின் முயற்சியின் விளைவாக, கவீந்திரபரமேச்வரர், மகா பாரதத்தின் இரண்டாவது மொழிபெயர்ப்பை அளித்தார். அதே காவியத்தின் மூன்றும் மொழிபெயர்ப்பு, நூஸ்ரத்ஷாவால் ஆதரிக்கப்பெற்றது. ஹுசெய்னின் அமைச்சராயிருந்த ரூப கோஸ்வாமி என்பார், விதக்த மாதவம், லலித மாதவம் என்ற இரு வடமொழி நாடகங்களை இயற்றினர். தருக்கநூலிலும் வங்காள அறிஞர்கள் மிகுந்த கருத்தைச்செலுத்தினர்.

சமயம். பதினைன்காம் நூற்றாண்டில் பண்டுவாவில் பல முஸ்லிம் துறவிகள் வாழ்ந்தனர். இந்துக்களையும் முகம்மதியரையும் வழிபாட்டுத் துறையில் இணைக்க ஹுசெய்ன் ஷா முயன்றார். இரு வகுப்பினரும் கடவுள் வணக்கத்தில் ஒன்று கூடும்படி சத்தியபீர் என்பார் செய்த அறவுரை இந்த அரசரின் ஆதரவைப்பெற்றது. புத்தசமயத்தின் மறைவு, வைணவசமயத்தின் வளர்ச்சிக்கு உதவியது. வீடுபெற சிற்றின்பப்பற்று உதவி செய்யும் என்று கூறி வந்த கோட்பாட்டினரும் காணப்பட்டனர்.

அக்கொள்கையை, பதினைன்காம் நூற்றுண்டில் சண்டிதாசர் விளக்கிக் கூறினர். ராதாகிருட்டின வழிபாட்டு முறை, சுமார், 1450'ல் வித்தியாபதி தக்கூர் என்பாரால் பரப்பப்பெற்றது. அக்காலத்தில் மிகச் சிறந்த சமய அறிஞராக இருந்தவர் சைதன்யர் என்பவராவர் (1485—1534). அவர் அந்தண மரபில் நதியா (வங்காளம்) என்ற ஊரில் தோன்றினர். தம்முடைய இருபத்துநான்காம் வயதிலேயே அவர் இல்லறத்தைத் துறந்து, திருமாலே உலகநாயகரென்று சொற்பொழிவுகளாற்றுவதில் தம் காலத்தைக்கழித்து வந்தார். அவருடைய அன்பர்கள் அவரை திருமாலின் திருப்பிறவியாகவே கருதி வணங்கி வருகிறுர்கள். அவர் அறவுரைகள் பலரால் பின்பற்றப்பட்டன. அவர்களிற் பெரும்பான்மையினர் எளிய மக்களே. புலால் மறுப்பு, கட்குடியாமை, விலங்குகளைப் பலியிடாமை, கடவுளிடத்தன்பு முதலிய கொள்கைகள் அவரால் வற்புறுத்தப்பெற்றன. எந்தசாதியைச் சேர்ந்தவராயிருந்தாலும் கடவுளிடத்தன்பு இருந்தால் அவர் தூய்மைபெற்று உயர்நிலையை எய்தலாம் என்பது அவர் அறவுரையாம். இந்தியா முழுவதிலும் அவர் சுற்றிவந்ததாகக் கூறப்படுகிறது. அவர் வாழ்க்கையில் இறுதியான பதினெட்டு ஆண்டுகளை அவர் பூரியில் கழித்தார். நிம்பார்க்கரின் பேதாபேத தத்துவம், சைதன்யரால் பின்பற்றப்பட்டது. கண்ணன் வழிபாடு அவரால் மிகுதியாக வற்புறுத்தப்பெற்றது. சடங்கு முறைகளை அவர் எதிர்த்தபோதிலும் உருவ வழிபாட்டையும் புண்ணியப் பயணங்களையும் ஆதரித்தார். அன்பு, சிற்றின்பத்துறையில் கலந்து விளக்கப்படுவதை அவர் கண்டித்தார். மக்களின் துயரங்களைக்கண்டு சைதன்யர் மனமுருகினர். பின் வரும் அவருடைய முறையீடு அவருடைய உள்ளக்கிடக்கையைத் தெளிவாக்கும். "மக்களின் துன்பங்கள் என் உள்ளத்தைப் பிளக்கின்றன. அவர்களுடைய தீவினைகளை என்மேல் சுமத்தி விடுங்கள்; அவற்றிற்காக நான் நரகத்தில் துயருற இணங்குகிறேன். மக்களின் இடுக்கண்களைப் போக்கிவிடுங்கள்"[1].

---

1. Ishwari prasad, op. cit., pp. 643—4.

# பகுதி 9

## நேபாளமும் அஸ்ஸாமும்

**நேபாளம்.** பதின்மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில் அரிமல்லதேவர் என்பார், மல்லர்குல ஆட்சியை நேபாளத்தில் தோற்றுவித்தார். வடகிழக்கு இந்தியாவிலிருந்த ஒரு கூட்டத்தினரான இம் மல்லர் என்பார், 9'ம், 11'ம் நூற்றுண்டுகளில் நிலவிய அரசியல் குழப்ப காலத்தில், புலம் பெயர்ந்து நேபாளத்துக்குச் சென்றவராக இருக்கக்கூடும். சுமார் 1290'ல் காசியர் என்ற மலை வகுப்பினர் நாட்டில் அழிவுபாடுகளை விளைவித்தனர். கருநாடகுல மன்னர் திர்ஹட் பகுதியினின்று நேபாளத்தில் 1324'ல் படையெடுத்து பாட்கான் (காட்மாண்டுவினருகில்) என்ற இடத்தில் தம் அதிகாரத்தை நிலைப்படுத்தினர். பழைய மல்லர்குலம் 1380'ல் முடிவுற்றது. அதை முடிவுறச்செய்த செயஸ்திதிமல்லர் என்பார் (1380–'94) கருநாடர்,மல்லர் ஆகிய இரண்டு குலங்களின் பிரதிநிதியாவர். திறமைவாய்ந்த அம்மன்னனின் வழிபாட்டுக் கடவுள் இராமபிரான் ஆவர். நேபாளத்தில் நிலவிய அரசியல் குழப்பத்தையும் இனக்குழப்பத்தையும் அவர் ஒழித்துச் சீர் திருத்தங்களைப் புகுத்தினர். சாதிமுறை மாற்றி அமைக்கப் பட்டது புதியமுறை நிறைகளும் அளவைகளும் கொண்டுவரப் பெற்றன. அவர் மகன் ஜோதிர்மல்லர் (1411'27) பேரரசப் பட்டங்களைச் சூடியிருந்தார். அவராட்சிக்காலத்தில் கருநாட குல அரிசிம்மனின் மரபினர் வலிமை இழந்தனர். இம் மரபினரை 1387 முதல் 1413 வரையில் மட்டுமே நேபாள அரசர்களென, சீனப் பேரரசர் ஏற்றுக்கொண்டிருந்தார். ஜோதிர் மல்லனின் மகனை யக்ஷமல்லன் (1427—74), நேபாளம் முழுவதிலும் தம் அதிகாரத்தை நிறுவியதுடன் வடக்கு பீகார், திபெத்தின் சிறுபகுதி முதலியவற்றையும் தம் ஆட்சியின்கீழ் கொண்டுவந்தார். ஆனல் அவர் தம்முடைய இராச்சியத்தைத் தம் மூன்று குமாரர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். சுமார் ஒரு நூற்றுண்டுக்குப் பிறகு அம் முப் பகுதிகளில் ஒன்று பாட்கான் அரசுடன் இணைந்தது. அதன் பின் பாட்கான் அரசும் காட்மாண்டு அரசும் தொடர்ந்து

வந்தன. இரு பகுதிகளுக்குமிடையே பகைமை தோன்றிய தால், பாட்கான், காட்மாண்டுவின் அண்மையிலுள்ள குர்க்கா வின் தலைவரான பிருதி விநாராயணரை உதவிக்கு அழைத்தது. குர்க்கா மலைசாதியினர் நேபாளத்திலிருந்த இரண்டு அரசுகளை யும் கவிழ்த்துவிட்டு 1768'ல் தம்முடைய ஆட்சியை அங்கு நிறுவினர்.

அஸ்ஸாம்: சுமார் 1215'ல் ஆஹோமர் [ஷான் கூட்டத்தினரில் ஒரு பிரிவினர்] என்பார் அஸ்ஸாம் நாட்டுக் குள் புகுந்தனர். பதின்மூன்றும் நூற்றாண்டில் அஸ்ஸாமில் வலிமைபெற்றிருந்த கச்சூரியருக்கு, புதிய மக்களின் வருகை யால் இடையூறுகளேற்படினும், அவர்கள் 1830'ல் ஆங்கிலே யர் அப்பகுதியைக் கைப்பற்றும் வரையில் அங்கு ஆட்சி நடத்திவந்தனர். ஆஹோமர், சிறிது சிறிதாக வலிமைபெற்று வந்தனர், முகலாயருக்கு அவர்கள் கீழ்ப்படியவில்லை. அவர்க ளுடைய உரிமை ஆட்சி, அவர்தம் இராச்சியம் 1816'ல் பர்மியரால் கைப்பற்றப்படும்வரை நீடித்திருந்தது. அம்மக்கள் இந்துப்பண்புகளை மேற்கொள்ளலாயினர். அஸ்ஸாமிய மொழியே அவர்களால் பின்பற்றப்பட்டது. மரச்சிற்ப வேலை யில் அவர்கள் சிறந்த திறமைபெற்றிருந்தனர். அவர்கள் செய்திக்கோவை வரலாற்றுக்கு மிகவும் பயன்படுகிறது. அஸ்ஸாமிலேற்பட்ட முகமதியப் படையெழுச்சிகள் பயனற் றவையாயின. அதனால் படையெடுப்பாளருக்குத்தான் தீமை ஏற்பட்டது. 1205'ல் முகம்மதுபின் பக்தியார் துயரத்துடன் அஸ்ஸாமிலிருந்து பின்வாங்கினர். வங்காள ஆட்சித்தலைவர் கள் அஸ்ஸாமை வெல்ல முயன்று தோல்வியடைந்தனர். வாய்ப்புக்கேடான இறுதிப் படையெழுச்சி 1662—3'ல் மீர் ஜம்லாவால் நிகழ்த்தப்பட்டது. அஸ்ஸாமில் படையெடுப்ப தென்பது இடையூறுகளடங்கிய ஒரு செயலாயிருந்தது. அந் நாட்டின் இயற்கை அமைப்பு, படையெடுப்பாளருக்கு ஏற்ற தாக இல்லை. மேலும் அந்நாட்டு மக்கள் மாயவித்தைக்காரரர் என்ற அச்சம் முகமதியரிடம் இருந்தது. இந்து, மங்கோலியக் கலைப்பண்புகள் அஸ்ஸாமில் ஒன்று சேர்ந்தன. சக்திவழி பாடும் தீவிரமான சமயப்பற்றும் அஸ்ஸாம் மக்களின் சிறப்புப் பண்புகளாம்.

## வட இந்தியா 1200-1526



அதிகாரம் 4

# தென்னிந்தியா (1200—1336)

## பகுதி I

### தேவகிரி யாதவர்

சிங்கணர். (1210—'47) பனிரண்டாம் நூற்றுண்டின் இறுதியில், பில்லமன், ஜெய்த்திரபாலன் ஆகியோரின் கீழ் யாதவ ஆட்சியின் தொடக்கத்தைப்பற்றி முன்னர் கூறப் பெற்றது. ஜெய்த்திரபாலனின் மகனுன சிங்கணர், பல போர்கள்புரிந்து தம் ஆட்சியை விரிவுறச்செய்து பேரரசர்க்குரிய பட்டங்களையும் பெற்றனர். இவரது வீரச் செயல்களில், சிறப்பாக, திரிபுரம், தார், வாரங்கல் ஆகிய இடங்களில் வெற்றிமாலைகள் சூடியதும், குஜராத் படையெழுச்சியும் ஹொய்சலரை முறியடித்ததும், சீலாஹார குலத்தை முடிவுறச் செய்து கோலாப்பூரை தம்முடன் இணைத்துக்கொண்டதும் குறிப் பிடத்தக்கவை. காச்மீர நாட்டவனுன சோதளன் இவ்வரசனிடம் தலைமைச்செயலாளனுகப் பணியாற்றி வந்தான். சோதளனின் மகன் சாரங்கதரன் இயற்றிய "சங்கீத ரத்னகரம்" என்ற இசை நூலுக்குச் சிங்கள மன்னன் விரிவுரை எழுதியுள்ளதாகக் கூறப்படுகிறது. பாஸ்கராசார்யர் எழுதிய "சித்தாந்த சிரோமணி" முதலிய பல அரிய வானநூல், கணிதநூல் முதலியவற்றைக் கற்பிக்கும் நோக்குடன் அவரது பெயரனுன சங்கதேவர் என்ற வானநூலறிஞர் அக்காலத்தில் ஒரு மடம் ஏற்படுத்தினர். ஆகவே சிங்கணர் பேரரசராக இருந்ததுடன், கலை, கல்வி இவற்றின் ஆதரவாளராகவும் தேவகிரி யாதவ குலத்துள் மிகவும் சிறந்தவராகவும் இருந்தாரென்பது புலப்படுகிறது.

கிருட்டினர் (1247—'60) மகாதேவர் (1260—'71). சிங்கணருக்குப்பின் அவர் பெயரனுன கிருட்டினர் முடிசூடினர். இவர், மக்களிடையே மங்கிவந்த வேதசமயச் சடங்குகளுக்குப் புத்துயிரளித்ததாகக் கூறப்படுகிறது. இலக்குமிதேவன்

என்பாரும் அவருக்குப்பின் அவர் மகன் ஜாலனனும் அரசனது அமைச்சராக இருந்தனர். ஜாலனன், வடமொழிச்செய்யுள் நூற்றிரட்டுஒன்றைத்தொகுத்தார். சங்கரரின் 'சூத்திரபாஷ்யத்துக்கு' விரிவுரையாக அமைந்த வாசஸ்பதிமிஸ்ரரின் 'பாமதி' என்ற நூலுக்குவிளக்கவுரையாக 'வேதாந்தகல்பதரு' என்றஅரியநூலை அக்காலத்தில் அமலானந்தர் என்பார் இயற்றியது குறிப்பிடத் தக்கதாகும். கிருட்டினருக்குப் பின்போந்த அவர் உடன் பிறந்தோரான மகாதேவர், அன்ஹில்வாட் சோலங்கியரையும், காகதியரையும், ஹொய்சலரையும், கொங்காணத்தையும் முறியடித்ததாக அறியக்கிடக்கிறது.

இராமச்சந்திரரும் (1271—1309) முஸ்லிம் படையெடுப்பாளரும். கிருட்டினரின் மகன் இராச்சந்திரரின் (அல்லது இராமதேவர்) ஆட்சி மைசூர் எல்லைகள் வரை பரவியிருந்தது. காகதீயரும் மாளவத்தின் பரமாரரும், அவருக்கு அடி பணிந்தனர். இவருக்கும் இவருக்கு முன்பு அரசாண்ட மகாதேவருக்கும் அமைச்சராக இருந்தவர் ஹேமாத்ரி (அல்லது ஹேமாத் பந்த்) என்போராவர். யாதவ நாட்டின் செல்வச் செழிப்பை அறிந்த, போரார்வம் மிக்க அலாவுதீன் கில்ஜி, ஆட்சி செய்துகொண்டிருந்த சுல்தானின் இணக்கமின்றி 1294'ம் ஆண்டில் தேவகிரியில் படையெடுத்தார். தாம் வெறுப்புக்கொண்டிருந்த தமது மனைவி, மாமி ஆகியோரிடமிருந்து விலகிப்போக, அலாவுதீன் அவ்வமயத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். அவர், காரா என்றவிடத்திலிருந்து புறப்பட்டுச் சந்தேரி அடைந்து, ஆண்டிருந்து மறைவாக எலிச்பூர் (பேரார்) சென்று, பின் தேவகிரியை நோக்கிச் சென்றார் தம்மை எதிர்த்த இராமச்சந்திரரை முறியடித்து, தேவகிரியை முற்றுகையிட்டனர். இராமச்சந்திரரும் அவர் மகன் சங்கரரும் தோல்வியுற்றனர். அலாவுதீன், எலிச்பூரையும் ஆண்டுதோறும் திறைப்பணத்தையும் பெற்றதுடன் இராமச்சந்திரரிடமிருந்து பின்வரும் பொருள்களும் பெற்றார். அவையாவன. "600-மணங்கு முத்துக்கள்; வைரம், சிவப்புக் கல், மரகதம், நீலக்கல் முதலியன இரண்டு மணங்குகள்; 1000-மணங்கு வெள்ளி; 4000-பட்டுத்துண்டுகள் முதலியன

வாம்.''[1] அலாவுதீன், நாட்டைச் சூறையாடியதுடன் சிறைப் பட்டிருந்த பலரைக்கொன்று வீழ்த்தினர். 1307'ம் ஆண்டில் மாலிக்காபூர் தேவகிரியில் படையெடுத்து போர்தொடுத்தார். இராமச்சந்திரர் மூன்று ஆண்டுகளாகத் திறை செலுத்தாம லிருந்தும், குஜாராத் மன்னன் கரன் என்பானுக்கும் அவன் மகளுக்கும் தம் நாட்டில் காப்பகம் அளித்ததுமே அப்படை யெழுச்சிக்குக் காரணங்களாம். அலப்கானின் உதவியுடன் காபூர், இராமச்சந்திரரை அடிபணியச்செய்தார். இராமச்சந்திரர் ஆறு மாதங்கள் தில்லியில் தங்கியபின் தம் நாடு திரும்பி ஒழுங்காகத் தம் அதிபருக்குத்திறை செலுத்தலானுர். அவர் ஆட்சி செய்த நாடும் சிறிது பெருக்கமுற்றது. குஜராத் இளவரசி தேவலாதேவி, சிறை பிடிக்கப்பட்டு தில்லிக்குச் சென்றுள்.

சங்கரரும் (1309—'12) ஹரபாலரும். இராமச் சந்திரர் மகன் சங்கரர் திறை செலுத்தத் தவறியதால், மீண்டும் மாலிக்காபூர், தேவகிரியில் படையெடுத்துத் தமது மானியக் காரரைக் கொன்றுர் (1312). குல்பர்காவும், ராய்ச்சூர் தோஆப் பகுதியும் கைப்பற்றப்பட்டன. 1316'ல் இராமச் சந்திரரின் மருமகன் ஹரபாலர் கலகம் செய்து முஸ்லிம் படைகளை வெளியேற்றினுர். ஆதலால் 1318'ல் முபாரக் ஷா, அவரைக் கொன்று, தேவகிரியை சுல்தான் ஆட்சிக்கு உட் படுத்தினர். யாதவ குலத்தவரின் காசுகளில் கருட உருவம் பொறிக்கப்பெற்றுள்ளது.

## பகுதி 2

### இலக்கியம். வடமொழியும் மராத்தியும்

ஹேமாத்ரி இயற்றிய ''சதுர்வர்க்க சிந்தாமணி'' என்பது, 4-பகுதிகளையுடைய மிகப்பெரியநூலாகும். இஃது, முறையே, சமயத்தொடர்பான உண்ணு நோன்பு, கொடை, புண்ணியப் பயணம், வீடு ஆகியவற்றைப் பற்றிப்பேசுகின்றது. இதனை நிறைவுசெய்யத் தோன்றிய ஒருநூல், பலகடவுளரைப்பற்றியும்,

1. Briggs:- History of the Rise of Mohomedan Power in India (1829, reprinted in 4 Volumes, 1908—'10) I p. 310.

வினைமுறைகள், சமயச் சடங்குகட்கு உரிய நற்காலங்கள், கழுவாய்ச் சடங்குகள் முதலியவற்றைப்பற்றியும் கூறுநிற்கும். மனிதனின் ஆன்மிக வளர்ச்சிக்காக, ஏறக்குறைய 2000 பயிற்சிகள் இதில் கற்பிக்கப்படுகின்றன. ஹேமாத்ரியின் தொகுப்பு, இந்திய உளப்பண்பை மிகுதியாக மாற்றி அறிவாற்றல் துறையில் முன்னேற்றத்தைத் தடுத்து, மக்களை ஆன்மீகவழியில் மிகுந்த தொடர்புகொள்ளச் செய்தது. முன் கூறப்பட்ட நூலின் முதற்பகுதியில் தேவகிரி யாதவரைப் பற்றிய பல சிறந்த வரலாற்றுச் செய்திகள் பேசப்படுகின்றன. ஓர் மருத்துவ நூலைப்பற்றிய விளக்க உரையையும் ஹேமாத்ரி அளிக்கின்றார். இவ்வமைச்சர், வைணவதத்துவ விளக்க நூல் ஒன்றுக்கு விரிவுரை வழங்கியுள்ளதும் நோக்கற்பாலது. கோயில், வீடு முதலியன எடுப்பதில் ஓர் புதிய (நடை) முறையை இவர் தோற்றுவித்தார். அம்முறை, இவர் பெயரால் வழங்கப் பெறுகிறது. நாகரி எழுத்துக்களை எழுதுவதில், ‘மோடி’ எனப்பெறும் புதிய வழியை வகுத்ததும் இவரே. “முக்த போதம்” என்ற இலக்கண நூலையும் வைணவ தத்துவம், மருத்துவம் ஆகியவற்றைப்பற்றிய வேறு சில நூல்களையும் இயற்றிய போபதேவர் என்பார் ஹேமாத்ரியினால் ஆதரிக்கப்பெற்றவராவர். பண்டரீபுரத் (ஷோலாபூர் அண்மையில் பீமநதிக்கரையில் உள்ளது) துறவிகளுள் முதல்வரான ஞானேஸ்வரர் (ஞானதேவர் அல்லது தியானதேவர் என்றும் கூறப்படுவர்) அந்தண குலத்தில் ஆலந்தி (பூனாவின் அண்மையில்) என்றவிடத்தில் பிறந்தவராவர். இவர் பத்தி வழிபாட்டு முறையை விளக்கி வந்தார். ஒரு எருமை, நான்கு வேதங்களையும் கூறுமாறு இவர் செய்தார் என கதை ஒன்று உண்டு. இவர் இயற்றிய பல நூல்களுள் சிறப்பாக மராத்தியில் 1290’ல் எழுதப்பெற்ற பகவத்கீதை விரிவுரை குறிப்பிடத்தக்கது. கடவுளைப் பொறுத்தவரை மக்களுள் உயர்வு தாழ்வு இல்லைஎன்பதை இவர் வற்புறுத்திவந்தார். இவர், அக்காலத்தில் வாழ்ந்த நாமதேவரின் (1270—1350) கருத்துக்களுக்கு வசப்பட்டது குறிப்பிடப்பாலது. 1300’ல் ஞானேஸ்வரர் இறந்தார். தையற்றொழிலாளர் வகுப்பைச்சேர்ந்த நாம

தேவர் இந்தியாவின் பல பாகங்களிலும் சுற்றிவந்தார். முகம்மதுபின் துக்ளக்கை இவர் சந்தித்ததாகவும் கூறப்படுகிறது. பண்டரிபுரத்தில் வாழ்ந்த இவரது அறவுரைகளில் சில வறுமாறு :— "கடவுள் ஒருவரே; அடிப்படைத் தத்துவத்தைப் பொறுத்தவரை இந்து சமயமும் இஸ்லாமிய சமயமும் வேறுபாடு உடையன அல்ல; யாவும் கடவுள் பக்தியில் அடங்கும்; சில உருவ வழிபாடு, புண்ணிய யாத்திரை, சாதி முறை முதலிய யாவும் பயனற்றவை; பாவ நீக்கத்திற்கு இரங்கிச் சீர்திருந்துவதன்றி சடங்குமுறை நல்வழியன்று," முதலியனவாம். இந்தி மொழியிலுள்ள ஒரு சிலவற்றைத் தவிர இவரது பாசுரங்கள் யாவும் மராத்தியில் எழுதப் பெற்றவை. இவர், திருமாலிடம் பத்தியை வளரச்செய்து பண்டரிபுர இயக்கம் தூய்மையுடன் பரவுமாறு செய்தார். நாமதேவர் என்பவர் கபீர், நானக், ஆகிய இருவரின் "முன்னோடி" என்று கூறுவது பொருந்தும்.

## பகுதி 3

### வாரங்கல்நாட்டு காகதீயர்

பனிரண்டாம் நூற்றுண்டின் பிற்பாதியில், II'ம் புரோலர், II'ம் பிரதாபருத்திரர் ஆகியோரின் கீழ்க்காகதீயரின் எழுச்சியைக்காண்கிறோம். அந்நூற்றுண்டின் முடிவில் கணபதி என்ற காகதீய இளவரசர் தேவகிரி யாதவ மன்னர் ஜெய்த்திரபாலரால் சிறைபிடிக்கப்பட்டுப்பின் முடிசூட்டப்பெற்றனர். கணபதியும் சிங்கணரும் 1235-க்கு முன்னர் ஒருவருடன் ஒருவர் போரிட்டு வந்தனர். கணபதி, சோழப்பேரரசின் சிதைவைப் பயன்படுத்திக்கொண்டு சுமார் 1250ல் காஞ்சியைக் கைப்பற்றினர். ஆனால், I'ம் சடையவர்மர் சுந்திரபாண்டியர் நெல்லூர்வரை முன்னேறி வந்ததால், காகதீய அரசரின் வெற்றி பயனற்றதாயிற்று. ஆயினும் அவர் வழியில் மிகச் சிறந்தவரான கணபதியின் நீண்டகால ஆட்சி வளம் நிறைந்ததாயிற்று. இவர் கல்வியைப் போற்றியதுடன், கோயில்கள் எடுத்தும், நீர்ப்பாசன வேலைகள் செய்தும் புகழ்பெற்ருர். இவரது சிறப்பான வாணிப முறைகள் போற்றற்குரியன.

1244—5'ம் ஆண்டுக்குரிய இவ்வரசரின், மோட்டுப்பள்ளி (குண்டூர் மாவட்டம்) தூண் கல்வெட்டு, அயல்நாட்டு வாணிபத்திலீடுபட்ட வணிகருக்குக் காப்பு அளிக்கும் ஒரு 'அபய சாசனத்தைக் குறிப்பிடுகிறது.

உருத்திராம்பாள்: (1261—'91) கணபதியின் மகள் உருத்திராம்பாள் தந்தையின் விருப்பத்திற்கிணங்க "மகாராசா அம்மையார்" என்ற பட்டத்தைச் சூடினர். ஒருசில கலகங்கள் அடக்கப்பட்டதைத் தவிர்த்து, அவராட்சியில் அமைதியும் செழிப்பும் நிலவின. மார்கோபோலோ என்ற வெனிஸ் யாத்திரிகன், இவராட்சியின் சிறப்பைப் போற்றி எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது. பிரதாபருத்திரர் இவரது பெயரர். (ஒரு கல்வெட்டின்படி மகன்). அவருக்கு வயதுவந்தவுடன், உருத்திராம்பாள் அரசினைத் துறந்தார்.

II'ம்பிரதாபருத்திரர்: 1291—1323. நெல்லூரில் ஏற்பட்டஒரு கலகத்தை இவர் அடக்கினர். முஸ்லிம் தாக்குதல்களால் இவராட்சி நிலைகுலையலாயிற்று. மாலிக்-பகர் உதீனின் பயனற்ற சில முயற்சிகளுக்குப்பின் 1309 இல் மாலிக்காபூர், வாரங்கல்லை எதிர்த்து முற்றுகையிட்டார். பிரதாபருத்திரர் எதிர்ப்பைக்கைவிட்டுக் கீழ்ப்படிய நேரிட்டது. தான் சேகரித்திருந்த பொருட் குவையையும் ஆண்டுதோறும் திறையையும் தருவதாக ஒப்புக்கொண்டார். முஸ்லிம் தளபதி 300 யானைகளையும், 7000 குதிரைகளையும், 1000 ஒட்டகங்கள் மீது ஏற்பட்ட மிகுதியான பொருள், அணிகலன்கள் முதலியவற்றையும் பெற்றதாக, பெரிஷ்டா கூறுகிருர். 1313 இல் திருவாங்கூரைச் சேர்ந்த இரவிவர்மன் குலசேகரன், நெல்லூர் வரை வெற்றி முழக்கத்துடன் சென்றனர். ஆனல் மூன்ருண்டுகளுக்குப்பின், முப்பிடிநாயக்கர் என்ற காகதீயத் தளபதி காஞ்சியைக் கைப்பற்றியதுடன் திருச்சிராப்பள்ளிவரைத் தம் ஆட்சியைப் பரப்பினர். 1318 இல் வாரங்கல், குஸ்ருகானல் முற்றுகையிடப்பட்டது. பிரதாபருத்திரர் அடிபணிந்தார். மிக்க பொருளுடன் முஸ்லிம் வீரர் தேவகிரிக்குத் திரும்பினர். 1321இல் உலூகான் (பின், 'முகம்மதுபின் துக்ளக் என்ற பெயரைப் பெற்றவர்), திறை செலுத்தப்படாத காரணத்தால்,

வாரங்கல்லை எதிர்த்துப் படையெடுத்தார். ஆனால் வசதியில்லாத பருவக்காலமும் தொத்துநோயும் காரணமாக அப்படை திரும்பிச்செல்ல நேரிட்டது. இறுதியில் 1323 இல் வாரங்கல், வீரமாக எதிர்த்துநின்றும் பகைவர்வசமாகியது. பிரதாபருத்திரர் தில்லிக்கு அனுப்பப்பட்டுச் செல்லுகையில் வழியில் இறந்தார். வாரங்கல், சுல்தான்புரம் என்ற புதிய பெயருடன் ஒரு முஸ்லிம் மாகாணத் தலைவனின்கீழ் வந்தது. 1327 இல் முகம்மதுபின் துக்ளக் தமது பேரரசுடன் அப்பகுதியை இணைத்துக்கொண்டார். 1323-க்குப் பிறகு காகதீய இளவரசர் வரலாறு தெளிவற்றதாகிறது.[1] 1343—'4 இல் முகம்மதுபின் துக்ளக்குக்குப் பகையாக இந்துக் கூட்டுறவைத் தோற்றுவித்து, தௌலத்தாபாத் தவிர மற்றெல்லா தக்காண நாடுகளையும், துக்ளக் இழக்குமாறு செய்தவர், பிரதாபருத்திரரின் மகனான கிருஷ்ணப்ப நாயக்கர் என்பது பெரிஷ்டாவின் கருத்து. கிருஷ்ணப்பரின் மகன் விநாயகதேவர் 1362 இல் பாமினி சுல்தான் முதலாம் முகம்மதுவால் கொலைசெய்யப்பட்டார். காகதீய காசுகளில், தலைநிமிர்ந்து கால்களின்மீது படுத்துள்ள காளை உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

## பகுதி 4

## இலக்கியம்: தெலுங்கும் வடமொழியும்

முதலாம் பிரதாபருத்திரர், தெலுங்கு இலக்கிய வளர்ச்சிக்குச்செய்த தொண்டைப்பற்றி முன்னர்ப்பார்த்தோம். பதின்மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில், இரங்கநாதரும் புத்த ராஜுவும் இராமாயணத்தை மொழிபெயர்த்தனர். அதர்வணர் என்ற சமண ஆசிரியர், வடமொழியில் தாம் எழுதிய இலக்கண நூலில், தெலுங்கு மொழியின் தொன்மையை நிலைநாட்டியுள்ளார். முப்பெரும் கவிகளுள் ஒருவரான திக்கண்ணர் (1220—1300) என்பார் தெலுங்கில், மகாபாரதத்தை எழுதினர். கணபதி மன்னரின் மானியக்

1 K. V. Subramania Aiyar, Historical Sketches of Ancient Dekhan (1917) pp. 267—309.

காரணுன, நெல்லூர்தலைவனின் ஆதரவுஅவருக்குக் கிடைத்தது. உருத்திராம்பாளுக்கு அடங்கிய குறுநிலத் தலைவஞன பெத்தண்ணு இயற்றிய பதினைந்து அதிகாரங்களைக் கொண்ட ஒரு அரசியல் நூல், "தெலுங்குப் பள்ளிக்கூடங்களில் மிகுதியாகக் கற்பிக்கப்பட்ட நீதிப்பாடப் புத்தகங்களில் ஒன்று"[1] எனப் புகழப்பெறும். திக்கண்ணனின் மாணவரான மாரணன் தமது "மார்க்கண்டேய புராணத்தை", II'ம் பிரதாபருத்திரரின் தானைத் தலைவனுக்கு உரிமையாக்கினுர். பதின்மூன்ரும் நூற்ருண்டின் இறுதியில், பாஸ்கரன் எழுதிய இராமாயணசப்பு என்ற நூலும் குறிப்பிடத்தக்கது. II'ம் பிரதாபருத்திரரின் ஆதரவைப்பெற்ற வித்தியாநாதர், "பிரதாபருத்ரியம்" எனப்பெறும் புகழ்பெற்ற வடமொழியாப்பிலக்கண நூலை இயற்றினர். மன்னனின் செயல்களைப்பற்றிய குறிப்புகள் அதில் காணப்பெறுகின்றன.

## பகுதி 5

### துவாரசமுத்திர ஹொய்சலர்

II'ம் நரசிம்மர் *(1220—'35)*. பனிரண்டாம் நூற்ருண்டின் முடிவில் II'ம் வல்லாளர் *(1173—1220)*, "மகாராசாதிராசன்" என்பது போன்ற பேரரசர்க்குரிய பட்டங்களுடன் புகழ் விளங்க ஆட்சிபுரிந்தார். பிற ஹொய்சல அல்லது வல்லாள மன்னர்கள் காலங்களில் காணப்பெருத அளவுக்கு, அவராட்சியில் கோயில்கள் மிகுதியாக எடுக்கப்பெற்றன. அவர் மகன் II'ம் நரசிம்மர், சுமார் 1224'ல் தேவகிரி யாதவருடன் போரிட்டு, கிருஷ்ணு, துங்கபத்திரை ஆறுகளுக்கிடைப்பட்ட நிலப்பகுதியை இழந்தனர். ஆனுல் சோழநாட்டில், ஹொய்சலர் தலையீடு பயன்தரத்தக்கதாயிற்று. பாண்டியர் சோழரை எதிர்க்கவும், சோழர் — ஹொய்சலர் மணவினை உறவு ஏற்படவும் அஃது காரணமாயிற்று. II'ம் வல்லாளரின் மனைவியருள் ஒருத்தி சோழ நாட்டு இளவரசி. நரசிம்மர், ஸ்ரீரங்கத்தையும், காஞ்சியையும் தம்வசப்படுத்திக்

1 P. Chenchiah & M. Bujanga Rao, A History of Telugn Literature (1928) p. 56

கொண்டு தெற்கில் இராமேஸ்வரம் வரை சென்று அங்கே வெற்றித்தூண் ஒன்றை நிறுவினர். சேந்தமங்கலக் குறுநிலத் (தென்னுற்காடுமாவட்டத்திலுள்ளது) தலைவனை கோப்பெருஞ் சிங்கனுல் சிறையிலடைக்கப்பட்ட III'ம் இராசராசனை விடுவித்த பெருமை நரசிம்மருக்கு உரியது. III'ம் இராச ராசனின், 1231–2'க்கு உரிய திருவேந்திபுரம் (தென்னுற்காடு மாவட்டம்) கல்வெட்டு மேற்படி நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. ஆகவே, "சோழர் அரசை மீண்டும் நிலைநாட்டியவர்" என்ற புகழ் நரசிம்மருக்குக் கிடைத்தது.

சோமேஸ்வரர். (1235—'54) நரசிம்மரது மகன் சோமேஸ்வரர், கண்ணனூரில் (திருச்சிராப்பள்ளி அருகில்) தம் ஆதிபத்தியத்தை நிறுவி, மங்கிவந்த சோழர் பேரரசில் தலையிட்டு வந்தனர். ஜம்புகேஸ்வரம் (ஸ்ரீரங்கம் அருகில்) சிவன்கோயில் முன்கோபுரத்தை எடுத்தவர் இவரே. I'ம் சடையவர்மர் சுந்தரபாண்டியர் இவரைப் போரில் முறியடித்துக்கொன்றூர். இவர் இறக்கும் முன்னரே தம் நாட்டை, III'ம் நரசிம்மர் (1254—'91), இராமநாதர் (1254—'95) என்ற தம் இரு மக்களிடை பங்கிட்டுக்கொடுத்தனர். இவ்விருவரிடை ஒற்றுமை இல்லை. 1276'ல் துவாரசமுத்திரத்தை எதிர்த்த தேவகிரி யாதவரை நரசிம்மர் புறமுதுகுகாட்டச் செய்தார். இவருக்குப்பின் III'ம் வல்லாளர் பட்டம்பெற்றூர். இராமநாதர் முதலில் கண்ணனூரையும் பின், குண்டணி (சேலம் மாவட்டம்) யையும் தலைநகராய்க் கொண்டிருந்தார். தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் அவருடைய பல கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. அவர் மகன் விசுவநாதனுக்குப் (1295—'97) பிறகு ஹொய்சல நாட்டுப் பகுதிகள் III'ம் வல்லாளரின் கீழ் மீண்டும் இணைக்கப்பட்டன.

III'ம் வல்லாளர் **(1291—1342).** வீர வல்ளாளர் எனப் புகழ்பெற்ற இவ்வரசர், ஹொய்சல குலத்தின் சிறந்த மன்னருள் இறுதியானவர். 1303'ல் இவர் துளுவநாட்டை (தென்கன்னடமும், வடகன்னட மாவட்டத்தின் ஒரு பகுதியும்) வென்று, தமது முன்னோரின் நோக்கத்தை நிறைவேற்றினர்.

அங்கே கி. பி. ஆரும் நூற்றுண்டுமுதல் ஆட்சிபுரிந்து வந்த ஆலுபர் குல ஆட்சி முடிவுற்றது. மேலைச் சாளுக்கியர், இராட்டிரகூடர், கதம்பர், பல்லவர், சோழர், பாண்டியர் முதலியோருடன் வல்லாளர் தொடர்புகொண்டார்.[1] 1305'ல் தேவகிரி யாதவருடன் எதிர்த்து நின்று. பின், பாண்டிய ராட்சியிலும் தலையிட்டு வந்தார். 1310'ல் மாலிக்காபூரின் துவாரசமுத்திரப் படையெழுச்சியின் விளைவாக வல்லாளர் முறியடிக்கப்பட்டார்; நாடும் சூறைபாடப்பட்டது. 1327'ல் துவாரசமுத்திரத்தை, முகம்மதுபின் துக்ளக், அழித்து ஹொய்சலநாட்டைத் தம் பேரரசுடன் இணைத்துக்கொண்டார். கண்ணனூரை இழந்த வல்லாளர், திருவண்ணுமலையை வலிமையுறச்செய்ய முற்பட்டார். மேலும் வல்லாளதேவர், தம் நாட்டு எல்லைப்புறத்தில் ஓர் நகரை நிறுவி, அதற்குத் தம் மகன் விசயனின் பெயரை அமைத்தாரென்றும் அதனல் அதற்கு விசயநகர் எனப் பெயர் ஏற்பட்டதெனவும் பெரிஷ்டா கூறுவர்[2]. கல்வெட்டுக்களும் இக் கூற்றை வலியுறுத்தும். III'ம் வல்லாளர் தங்கியிருந்த தலைநகர் விசய விருபாட்சபுரம் என்று அறிவிக்கும் 1339'ம் ஆண்டுக்குறிப்பு ஒன்று கிடைத்துளது. மேலும் அதற்கு அடுத்த ஆண்டுக்குரிய கல்வெட்டு ஒன்று, அவ்வரசரின் மகன் விசய விருபாட்சவல்லபரின் முடிசூட்டுவிழாவைப் பற்றிக் குறிப்பிடுகிறது. III'ம் வல்லாளர் தமது எண்பதாவது ஆண்டிலும் சுறுசுறுப்புள்ளவராகவும், மலையாளத்தை முழுவதும் கைப்பற்றும் பெருநோக்கம் கொண்டவராகவும் இருந்ததுடன், 20,000 முகம்மதியரைத் தம் படையில் சேர்த்துக்கொண்டாரெனவும் இபின்பதூதா கூறுகிறுர். 1340'ம் ஆண்டுக் கல்வெட்டு, ஆதம்பாலத்தி (Adams Bridge) னடிப்புறத்தில் அவ்வரசர் வெற்றித்தூண் நிறுவியதாகக் குறிப்பிடுகிறது. 1335 முதல் உரிமையுடன் தனியாட்சி

---

1. B. A. Saletore, Ancient Karnataka. I pp. 285 & 618.

2. Briggs, Op. cit., I P, 427

நடாத்திய மதுரை சுல்தானுட்சியைக் கவிழ்க்க வல்லாளர் முயன்று போர்கள் நிகழ்த்தி இறுதியில் 1342 இல் கண்ணனூரில் மதுரை கயாஸுதீனுடைய வாளுக்கு இரையானுர். பின் அரசுகட்டிலேறிய நான்காம் வல்லாளர் (1342—'46) தந்தையைப்போலவே மதுரை சுல்தானுடன் தொடர்ந்து போரிட்டு அதில் இறந்தார். சங்கமன் என்பாரின் குமாரர்களுள் முதல்வனுன அரிஹரர் தமது வீரத்திஞல் விசயநகரத்தில் தம் ஆதிபத்தியத்தை நிறுவி, ஹொய்சலர் ஆட்சியை அங்கே முடிவுறச் செய்தார்.

## பகுதி 6

### இலக்கியம்: வடமொழியும் கன்னடமும்.

மத்வர் : ((வாசுதேவர் எனவும் கூறுவர்). உடிப்பிக்கு அண்மையில் (தென்கன்னட மாவட்டம்) பெல்லே என்னுமிடத்தில் இவர் பிறந்தார். இவர் பிறந்த ஆண்டைக் குறித்து கருத்து வேறுபாடு இருப்பினும், 1238 முதல் 1317 வரை வாழ்ந்தவராகக் கருதுவது தகும்[1]. சங்கரர் அல்லது இராமானுஜருடைய வாழ்க்கையைப்பற்றி நாமறிவதைவிட மிகத் தெளிவாக, மத்வரின் வாழ்க்கை அறியக்கிடக்கிறது. தம் பதினுருவது ஆண்டில் துறவுபூண்டு, இவர் திருவனந்தபுரம், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், ஸ்ரீரங்கம் முதலிய பல இடங்கட்குச் சென்றுர். இருமுறைகள் வடநாட்டுப் பயணம் மேற்கொண்டார். இவர் தேவகிரி மகாதேவரையும், தில்லியில் பால்பனையும் சந்தித்திருக்கக்கூடும். 1290-க்குப் பிறகு இப் பெரியார் துளுவநாட்டிலேயே தங்கிச் செயலாற்றிவந்தார். ஆனுல் அங்கு ஆட்சிபுரிந்த ஆலுபர்குலத்தவரின் குறிப்புகள் இவரைப்பற்றிப் பேசவில்லை. இதற்குக் காரணம் அக்குலத்தவரின் மிகுந்த சைவசமயப் பற்றுக இருக்கக்கூடும். சைவ சமயத்தையும் 'அத்வைத'க் கோட்பாட்டையும் (ஒரு பொருள் வாதம்) மத்வர் கண்டித்தார். கண்ணனிடத் தன்பையும் 'துவைதக்' கோட்பாட்டையும் (இருபொருள் வாதம்) நிலை

1. Saletore, Op. cit., F. 439

நிறுத்த இவர் முயன்றுவந்தார். இவர், உடல்வலிமை மிக்கவரென்றும் மற்போரில் பலரைத் தோற்கடித்ததாகவும், நாளின் தலையூணுக்குப்பின் 200 வாழைப்பழங்களை உட்கொண்டதாகவும் கோயில் கொடிமரத்தையும், பெருங் கல்லையும் தூக்கிய தாகவும் கூறப்படுகிறது. பாரசீக மொழியைப் பயின்றிருந்ததாகவும் அறியக்கிடக்கிறது. இவர் பிரம்ம சூத்திரங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை ஆகியவற்றிற்கு விரிவுரைகள் எழுதியுள்ளார் உபநிடத விரிவுரையில், உயிர்வேறு, பிரம்மம் வேறு என்பதை வற்புறுத்துகிறார். "அத்வைதிகளும் பிற தீவினையாளரும் நரகத்திலிடர்ப்படுவர்" என்பது அவர் கருத்து. ஆகவே, அவர், கிறித்துவ சமயக் கருத்துக்களினால் பாதிக்கப்பட்டவரென ஒரு சில அறிஞர் கருதுவர். கடவுட் பக்தியுடன், தாழ்ந்தோரிடம் கருணையும், ஒத்த நிலையிலுள்ளோரிடம் அன்பும் உயர்ந்தோர் பால் அடக்கமும் மக்களுக்கு இன்றியமையாதன என்று அவர் கூறினார்[1]. உடிப்பியில் கண்ணன் ஆலயமும் எட்டு மடங்களும் இவரால் எடுக்கப்பெற்றன. இவரைப் பின்பற்றிய மத்வாயனர் என்ற பிரிவினர் இன்று சிறப்பாக, மைசூரிலும், கன்னட மாவட்டங்களிலும் காணப்படுகின்றனர். இவர் தம் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருப்பினும், இருபொருள் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு இவர்கள் செய்த தொண்டுகள் சிறப்பானவையாகும்.

கன்னட இலக்கியம். ஹொய்சலர்கலையைப்பற்றியும் பனிரண்டாம் நூற்றாண்டில் வல்லாளர்கன்னட இலக்கியத்தைப் போற்றி வளர்த்ததைப் பற்றியும் முன்னர் கூறப்பட்டது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பல சமண ஆசிரியர் வாழ்ந்தனர். ஜன்ன, ஆண்டய்யா, மல்லிகார்ச்சுனர் ஆகிய கவிகளும், கேசிராசா என்ற இலக்கண நூலறிஞரும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கோர். வீரசைவ வகுப்பைச் சேர்ந்த தேவகவி, சோமராஜா, என்ற புனைகதை ஆசிரியர்களும் அக்காலத்தவரே. உடிப்பி மடத்தைச் சேர்ந்த நரஹரி தீர்த்தர், 1281'ல் திருமாலைப் புகழ்ந்து கன்னடப் பாசுரங்கள் இயற்றினார்.

---

1 Carpenter. J. E., Theism in Medieval India, 1921 P. 411.

# பகுதி 7

## சோழப் பேரரசின் அழிவு

III'ம் இராசராசர். (1216—'46). 1216'ல் மாறவர்மர் I'ம் சுந்தரபாண்டியர் தாக்குதல் காரணமாக, III'ம் குலோத்துங்க சோழரின் ஆட்சி துயரமான முடிவை அடைந்தது. III'ம் இராசராச சோழர், அவரது முன்னோர் அல்லது பின்னோருடன் கொண்டிருந்த தெளிவான குல உறவு அறியப்படவில்லை. ஆற்றலற்ற இம் மன்னர் பல இடையூறுகளை எதிர்க்கவேண்டியிருந்தது. பாண்டியருடன் பகைத்துக்கொண்ட இம் மன்னர் அவரால் முறியடிக்கப்பட்டுத் தம் தலை நகரை இழந்தார். சிறை பிடிக்கப்பட்ட இவரை, ஹொய்சல மன்னன் II'ம் நரசிம்மர் விடுதலை செய்தாரென்று முன்னர் பார்த்தோம். பாண்டியரை ஹொய்சலர் வென்றபடியால், சோழப் பேரரசன், பின்னவரைச் சார்ந்திருக்க நேரிட்டது. சோழநாட்டில் ஆட்சிமுறை சீர்குலைந்தது, மானியக்காரர் உரிமை பெறலாயினர். அங்கே வல்லாளர் வலிமை ஓங்கியது.

III'ம் இராசேந்திரர் 1246—'79). தன் முன்னோனை விட ஆற்றல் மிகுந்த III'ம் இராசேந்திரர் நெல்லூரின் தெலுங்குச் சோடரின் உதவி பெற்று தம் ஆதிபத்தியத்தை வலிமையுறச் செய்ய முற்பட்டனர். II'ம் மாறவர்மர் சுந்திர பாண்டியரை இவர் முறியடித்திருக்கக் கூடும். அச் சூழ் நிலையில் வல்லாளர் சோழருடன் பகைத்துப் பாண்டிருடன் இணையலாயினர். ஆனால் விரைவில் நிலைமாறி ஹொய்சல சோமேஸ்வரர் இராசேந்திரருடன் நட்புப்பூண்டார். இவ்வாறிருக்கையில் காகதீய மன்னர் கணபதி 1250'ல் காஞ்சியைக் கைப்பற்றினர். சடையவர்மர் சுந்தரபாண்டியர் வீரமுழக்கத்துடன் நெல்லூர்வரை படையெடுத்துச் சென்று ஹொய்சலர், காகதியர், சோழர் யாவரையும் புறமுதுகு காட்டச்செய்தார். கோப்பெருச்சிங்கர், பாண்டியருடன் கூட்டுறவு செய்து கொள்ளுமாறு செய்யப்பட்டார். 1258 முதல் 1279 வரை, இராசேந்திரர் பெயரளவுக்கே அரசியலாதிக்கம் செலுத்தி வந்தார்.

சோழராட்சி முடிவு வரை, கங்கைகொண்டசோழபுரம் அவர் தம் தலைநகராயிருந்தது.

கோப்பெருஞ்சிங்கர். கோப்பெருஞ்சிங்கரின் எழுச்சி (1229—'78) சோழப்பேரரசின் வீழ்ச்சியைக் காட்டாநிற்கும். சோழரின் மானியக்காரராயிருந்து இவர் 1243'ல் தன்னுரிமையுடன் அதிகாரம் செலுத்தத்தொடங்கினர். ஹொய்சலர், 1252—'3ல் பெரம்பலூரில் (திருச்சி மாவட்டம்) இவரால் முறியடிக்கப்பட்டனர். I'ம் சடையவர்மர் சுந்தரபாண்டியர், கோப்பெருஞ்சிங்கரின் வலிமையை, 1255'ம் ஆண்டில் அடக்கினரெனினும், தாம் பின்னர் காகதீய கணபதியுடன் நிகழ்த்திய போரில் அவருதவியைப்பெற்றார். பெருஞ்சிங்கரின் கல்வெட்டுக்கள், மிகுதியாக தென்னார்க்காடு, வடார்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களிலும், ஓரளவு, தஞ்சை, கர்நூல், கோதாவரி மாவட்டங்களிலும் கிடைக்கின்றன. இவை அவருடைய அருஞ்செயல்களைக் கூறுநிற்கும். அவர், சோழர், ஹொய்சலர், பாண்டியர், காகதீயர் ஆகியோரை வென்றதாக முழக்கம் செய்கின்றார். சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு, கூடலூர், விருத்தாசலம், சிதம்பரம், காஞ்சி முதலிய இடங்களில் அவராதிக்கம் செலுத்தினர். தில்லைக் கூத்தப்பெருமானிடம் மிகுந்த பக்தியுடைய இவ்வரசரால், அப்பெருமான் ஆலயத்தின் கீழைக்கோபுரம் எடுக்கப்பெற்றது. அரசியல், இராணுவம், சமயம், இலக்கியம் ஆகிய துறைகளில் உயர்வைக்காட்டும் பல பட்டங்கள் இவருக்கு உண்டு. இவர் பல்லவர் கால்வழியில் வந்தவர் எனவும் காடவர் வகுப்பைச் சேர்ந்தோரெனவும் பேசப்படுகிறது. அமைதியின்மையும் குழப்பமும் மிகுந்த ஒரு காலத்தில் இவர் ஆதிக்கம் செலுத்தியது போற்றற்குரியது. வீழ்ச்சியுற்று வந்த சோழப் பேரரசின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்காக, பாண்டியர், ஹொய்சலர், காகதீயர் ஆகியோர் தமக்குள் நிகழ்த்திய போர்களினிடையே, பெருஞ்சிங்கரின் வீரச் செயல்கள் பெருமையும் சிறப்பும் வாய்ந்தன என்பதில் ஐயமில்லை.

# பகுதி 8

## தமிழ் இலக்கியம்: சைவசித்தாந்தம்

**சைவ சித்தாந்தம்.** சைவ சித்தாந்தக் கருத்துக்களை, மெய்கண்டார் என்ற பெரியாார், தாம் இயற்றிய "சிவஞான போதம்" (1223) என்ற நூலில் சூத்திரங்கள் மூலம் விளக்குகிறார். இவர் மாணவர் அருணந்தி என்பார் எழுதிய "சிவஞானசித்தியார்" என்பது சைவத்தைப் பற்றிய மிகச் சிறந்த நூலாகும். இதில் தம் ஆசிரியரின் கருத்துக்களை நன்கு விளக்குவதுடன், மற்ற சமயப்பிரிவுகள் பதினான்கின் தத்துவங்களை அருணந்தி ஆராய்கிறார். பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலும், அதற்கடுத்த நூற்றாண்டின் முற்பகுதியிலும், தில்லைக்கருகில் வாழ்ந்த உமாபதிசிவாசாரியர் என்பார், எட்டுச்சைவ சித்தாந்த நூல்கள் இயற்றியதுடன், சேக்கிழாரின் பெரியபுராணத்தை, 75 பாசுரங்களில் சுருக்கிப் பாடியுள்ளார். சைவசித்தாந்தம், சாதி சடங்குமுறை வேறுபாடின்றி, ஆதிபரம்பொருளாகிய சிவனை உண்மை அன்புடன் வழிபடவேண்டுமென வற்புறுத்துகிறது.

# பகுதி 9

## பாண்டியப்பேரரசின் ஆதிக்கம்: வாணிகமும் காசுமுறையும்

I'ம் மாறவர்மர் சுந்தர பாண்டியரும் (1216—'38) II'ம் மாறவர்மர் சுந்தர பாண்டியரும் (1238—'51). பதின்மூன்றாம் நூற்றாண்டு முழுவதும் நீடித்த பாண்டியப் பேரரசைத் தொடங்கச் செய்த பெருமை I'ம் மாறவர்மர் சுந்தரபாண்டியரைச் சாரும். இவர் பட்டமேற்றவுடன் சோழரைத் தாக்கி உறையூரையும், தஞ்சையையும் தீக்கிரையாக்கினார். III'ம் குலோத்துங்க சோழர், பாண்டியருக்கு அடங்கியே ஆட்சி நடாத்தினார். ஆனால் பின்போந்த III'ம் இராசேந்திரரால் II'ம் மாறவர்மர் சுந்தரபாண்டிர் அடக்கப் பட்டார்.

I'ம் சடையவர்மர் சுந்தரபாண்டியர் (1251—'68)

இம் மன்னரின் கல்வெட்டுக்கள், தமிழ்நாட்டின் பல பகுதிகளில் (நெல்லூர்வரை) கிடைக்கின்றன. திருவாங்கூர் அரசனை வென்றதும், கண்ணனூரைக் கைப்பற்றியதும் ஹொய்சலரை விரட்டியதும், சோழரை அடக்கியதும், கோப் பெருஞ் சிங்கரை ஒடுக்கியதும், கொங்குநாட்டை வென்றதும், தெலுங்குச்சோடன் கண்டகோபாலனைப் புறமுதுகு காட்டச் செய்ததும் காஞ்சியையும் நெம்லூரையும் தம் வசப்படுத்தியதும் ஈழமன்னரைக் கப்பம் கட்டச்செய்ததும், இப்பேரரசரின் குறிப்பிடத்தக்க அரிய செயல்கள். இயல்பாக வழக்கிலிருந்தப் பேரரசர் பட்டங்களைத்தவிர, "யாவரிலும் முதல்வன்", "வாளினுல் வழிவகுத்தவன்" என்ற புதிய பட்டங்களைக் கொண்டார். தில்லைக்கூத்தப்பெருமான் கோயிலில் பொன் வேய்ந்ததுடன் ஸ்ரீரங்கம் கோயிலுக்கும் 18 இலட்சம் பொற் காசுகள்வரை நன்கொடை கொடுத்தனர். இவருக்குப் பல முறை வீராபிடேகம் செய்யப்பட்டது. "கோயில் பொன்வேய்ந்த பெருமாள்" என்ற பெயர் இவருக்கு உரியது.[1] கல்வெட்டுக் களிலுள்ள ஜாதகக்குறிப்புகள் குடிவழி விளக்கத்திற்கு உதவ வில்லை.

மாறவர்மர் குலசேகர பாண்டியர். (சுமார் 1268—1310) பாண்டிய மரபின் சிறப்பான அரசருள் இறுதியானவர் இவரே. கொல்லம் பகுதியை வென்ற காரணத்தால் "கொல்லம் கொண்டார்" என்ற பட்டத்தை இவர் பெற்ருர். 1284 இல் ஈழம் இவரால் வெல்லப்பெற்றது. பெரும் பான்மையில் இவராட்சி அமைதியும் செழிப்பும் பெற்று விளங்கியது. வாஸப் என்ற இஸ்லாமிய வரலாற்றறிஞரால் "குலசேகர தேவன்" எனவும், மார்கோபோலோவினுல் "சேகரர்" என்றும், இருவராலும், 'மாபார் மன்னர்' எனவும் இவ்வரசர் பேசப்படுகிருர். 'மாபார்' என்ற சொல், அரேபிய மொழியில் "வழி" அல்லது "செல்லஉரிமை" எனப் பொருள்படும். பாண்டியநாட்டில் வெளிநாட்டு வாணிகத் துக்கு ஏற்ற வாய்ப்புகள் உள்ளதை இச்சொல் குறிக்கும்

1. Annual Reports on Epigraphy—1927, Part II Para 4.

# தென்னிந்தியா 1200-1336.



மார்க்கோபோலோ: சுமார் 1293'ல் மாபார் பகுதிக்குச் சென்ற மார்க்கோபோலோ என்ற வெனிஸ்நகரச் சுற்றுப் பிரயாணி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:- "பெரும் மாகாண மான மாபார், உலகிலேயே மிகவும் சிறந்த பகுதி என்று கூறத்தக்கது. (சுந்தரபாண்டியதேவன் ஆட்சி புரியும் இப் பகுதியில்) நேர்த்தியான பெரும் முத்துக்கள் காணப்படு கின்றன.[1] ... ... .. காயல் துறைமுகப்பட்டினம் (தாமிர வருணி ஆறு கடலில் சேருமிடம்) மிகுந்த உயர்வும் சிறப்பும் வாய்ந்த நகரம். மேற்கிலிருந்து வரும் கப்பல்கள் இங்கு கூடு கின்றன. அவை குதிரைகளையும் மற்ற பொருள்களையும் வாணிகத்துக்காக ஏற்றி வருகின்றன. ... ... ... இந்நகரின் வாணிகம் மிகவும் பெயர்பெற்றது. ... ... ... மன்னரிடம் மிகுதி யாக செல்வம் உண்டு. விலையுயர்ந்த அணிகலன்கள் இவரால் அணியப்படுகின்றன. பகட்டாரவாரமான அவையிலிருந்து அரசர், நேர்மையாக ஆட்சி புரிகிறார். வணிகருக்கும் அயல் நாட்டவர்க்கும் மிகுந்த உதவி அளிக்கப்படுவதால் அவர்கள் இந் நகருக்கு வருவதற்கு மிகவும் மகிழ்ச்சி கொள்கிறார்கள்.[2] மார்க்கோபோலோவின் குறிப்பிலிருந்து அரசருக்குப் பல மனைவியர் உண்டு எனவும், மக்களுக்குத் தையற்றொழிலாள ரின் தேவையில்லை (ஏனெனில் அவர்தம் உடை அத்தகை யது) என்றும், சதியென்னும் உடன்கட்டையேறும் வழக்க மிருந்ததெனவும், மக்களுக்குக் குறிநூல், சகுனங்கள் முதலிய வற்றில் நம்பிக்கை உண்டென்றும், கோயில்களில் நடனப் பெண்டிர் இருந்ததாகவும், அறியக்கிடக்கிறது. குதிரைகள் கூட்டங்கூட்டமாக இறக்குமதி செய்யப்பட்டதெனினும், மேற் பார்வைக் குறைவினாலும், இலாடம் அடிப்போர் இன்மையா லும் பெரும்பான்மையான குதிரைகள் விரைவில் இறந்து போனதால், பெருமளவில் பொருளழிவு ஏற்பட்டதென அவர் குறிப்பிடுகிறார். (அரசனிடம் யானை, குதிரை, தேர், காலாள் முதலிய படைகளிலிருந்த போதிலும்) போர்வீரரை "மிகவும் தாழ்ந்தவர்" என்று குறிப்பிடுகிறார்.

---

1 Yule and Cordier, Travels of Marco Polo, II (1921) p. 331.

2 ,, ,, ,, pp. 370—1.

வாசப் : (Wassaf) முகம்மதிய வரலாற்றறிஞர் வாசப் என்பாரின் குறிப்புக்களும் மிகவும் பயன் தருவன. "சீன, காண்டன், சிந்து முதலிய நாடுகளிலிருந்து அரும்பொருள்கள் கப்பல்களில் மலைகள்போல் வந்து குவிந்தன. ஈராக், கொராசான் முதல், துருக்கி, ஐரோப்பாவரை உள்ள நாடுகளில் காணப்பெற்ற அழகுக் கலைகட்கும், குறிப்பாக, பாரசீக வளைகுடாத் தீவுகளின் செல்வத்திற்கும் இந்தியாவின் மிகச் சிறப்பான பகுதியான மாபார் மூல காரணமாகும்[1]. ... ... மாபார் மன்னர் குலசேகர தேவர் (மாறவர்மர் குலசேகர பாண்டியர்) நாற்பது ஆண்டுகட்கு மேலாக செங்கோன்மை நடாத்தினர். அயலார் படையெழுச்சியினால் இடையூறு இல்லை. அரசர், ஆட்சிக் காலத்தில் பெரும் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருக்கவும் இல்லை. செல்வம் மிகுதியாக அவரிடமுளது. மதுரைக்கருவூலத்தில் 1200 கோடி பொற்காசுகள் இருந்தன. அன்றியும் முத்துச் செல்வமும், நவமணிகளும் அளவிடமுடியாத வகையில் நிறைந்திருந்தன[2]. ... ... பாண்டியரின் ஆலோசனை சபையில் அரேபிய வணிகர் சிலர் உயர்ந்த பதவியில் அமர்ந்திருந்ததாக, முஸ்லிம் ஆசிரியர் அளிக்கும் குறிப்பு சிறப்பாகநோக்கற்பாலது. அப்துர்ரஹிமான் என்பார் ஒரு முதலமைச்சராக இருந்ததாகவும் பின்னர் அப்பதவியில் அவரது மகனும் பெயரனும் அமர்த்தப் பெற்றனரெனவும் கூறப்படுகிறது.

முஸ்லிம் படையெழுச்சிகள் : மாறவர்மன் குலசேகரருக்கு முறைப்படி பிறந்த மகன் சுந்தரபாண்டியர். வீரபாண்டியர் என்பார் முறையற்ற வகையில் பிறந்தவர். வீரபாண்டியரைப் பட்டத்துக்குரியராக்கிய செயலுக்காக, தந்தையை, 1310-ல் கொன்றுவிட்டுச் சுந்தரபாண்டியர், அரியணையைக் கவர்ந்தார். ஆனால் இவர் மதுரையிலிருந்து நாடுகடத்தப்படவே, மாலிக்காபூரிடம் உதவிக்காக முறையிட்டனர். சுந்தரபாண்டியர் உதவிக்கு அழையாதிருப்பினும்,

---

1 Elliot and Dowson (E & D) The History of India as told by its own Historians. V. III p. 32.

2 Ibid. p. 52.

மாலிக்காபூர் மாபாரில் படையெடுத்திருப்பாரென்பது உறுதி. ஏனெனின், அலாஉதீன் கில்ஜி, மாபாரின் வளம், செல்வம், சிறந்த யானைப்படை முதலியவற்றால் தூண்டப்பட்டு அப் பகுதியைக்கைப்பற்ற ஆர்வம்கொண்டிருந்தார். மேலும் மாலிக் காபூருக்குப் பகையாக, வீரபாண்டியர் III'ம் வல்லாளருக்கு உதவியளித்தார். ஆகவே, தளபதி காபூர், ஜயங்கொண்ட சோழபுரத்தையும் (கங்கைகொண்ட சோழபுரத்துக் கருகில் உள்ளது) கண்ணனூரையும் கைப்பற்றி, சிதம்பரம், ஸ்ரீரங்கம் முதலிய இடங்களைத்தாக்கி, மதுரையை முற்றுகையிட்டு, இராமேச்வரம் வரை வெற்றியுடன் சென்று அங்கே ஓர் பள்ளிவாசலை எடுத்தார்.[1] அவர் கொள்ளையடித்த பொருள் களில், 512-யானைகள், 5000-குதிரைகள், (அரேபியக் குதிரைகளும், சிரியாக்குதிரைகளுமாக) விலையுயர்ந்த மணிக ளடங்கிய 500-மணங்கு அணிகலன்கள் முதலியன குறிப் பிடத்தக்கவை. நாடுமுழுவதும் சூறையாடப்பட்டது மதுரை யில் முஸ்லிம் படை ஒன்றும் நிறுவப்பட்டிருந்தது. இதன் பின்னர்க் குழப்பங்கள் மிகுதியாயின. 1313'ம் ஆண்டில் திருவிதாங்கூரிலிருந்து இரவிவர்மர் குலசேகரர் படையெடுத்து, சுந்தரபாண்டியரை வென்று வீரபாண்டியரையும் முறியடித்த தாக, அவர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. 1316'ல் முப்பிடி நாயக்கன் என்ற காகதீயத்தளபதி, காஞ்சியைக் கைப்பற்றித் திருச்சிராப்பள்ளிவரை படையெடுத்துச் சென்றதாக அறியப் படுகிறது. அச்சூழ்நிலையில் பாண்டியகுலப் பேரரசர் கொலை யுண்டார். 1318'ல் குஸ்ருகானின் மாபார் படையெழுச்சியும் பின்னர் 1327'ல் முகம்மதுபின் துக்ளக்கின் தாக்குதல்களும் ஏற்பட்டன. துக்ளக், மாபாரைத் தமது பேரரசின் 23 மாகாணங்களில் ஒன்றாகச்செய்தனர். ஜலால்உதீன்ஹாசன் அப்பகுதியின் தலைவராக்கப்பட்டார்.

**பாண்டியர் காசுகள்:** பாண்டிய நாட்டில், உரோமர் காசுகளுடன், உள்நாட்டுக்குரிய செம்பு, பொன் காசுகளும் காணப்படுகின்றன. ஏழாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டுவரை உள்ள காலப்பகுதிக்கு உரிய அவ்வுண்ணாட்

1. Briggs. op. cit. pp. 373—4.

டுக்காசுகளில், ஒற்றை அல்லது இரட்டை மீனுருவம் பொறிக்கப்பட்டுளது. சோழர் மீது வெற்றி கொண்டபின், சோழரின் புலி உருவமும், முரட்டுத்தனமான நிலையிலுள்ள மனித உருவமும் காசுகளில் இடம் பெற்றன. I'ம் மாறவர்மன் சுந்தரபாண்டியர், I'ம் சடையவர்மர் சுந்தர பாண்டியர் ஆகியோரின் காசுகளில் முறையே "சோழ நாட்டை வென்றவர்" "யாவரினும் முதல்வர்" என்ற விளக்கவுரைகள் இருப்பதாக அறியப்படுகிறது.

## அதிகாரம் 5

# மாபார் நாடும் பாமனி அரசும்
# (1335 — 1527)

## பகுதி I

### மாபாரில் சுல்தானியராட்சி (1335 — '78)

ஜலால்உதீன் ஹாசன்ஷா (1335—'40). 1327-ஆம் ஆண்டில், முகம்மதுபின் துக்ளக், மாபார் நாட்டைக் கைப்பற்றியபின், சயத் ஜலாலுதீன் என்பாரை அம்மாகணத் தலைவராக அமர்த்தியிருந்தார். 1330, 1333, 1334 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பெற்ற காசுகள், முகம்மதுவின் ஆதிக்கம் அங்கு நிலவியதைக் காட்டுகின்றன. ஆனல் 1335இல் ஜலாலுதீன், தில்லியை எதிர்த்துக் கலகம்செய்து மாபாரில் தம் உரிமையுடன் ஆட்சிநடத்தத் தொடங்கினர். அவருடைய காசுகள் அவ்வாண்டில் வெளிடப்பட்டுள்ளன. மாபார் சுல்தானரசு அல்லது மதுரை சுல்தானரசு என அவ்வாட்சி பெயர்பெறும். இபின்பதூதாவின் மாமனாராகிய ஜலாலுதீன் தாம், நபிநாயகத்தின் கால்வழியில்வந்தவரென்று கூறிக்கொண்டார். அலாவுதீன் உதௌஜி என்ற தம் பணியாளனொருவரால் இவர் கொலையுண்டார். உதௌஜிக்குப்பின் அவர் மருமகன் குத்புதீன் பிரோஸ் ஆட்சி நடத்தினர். இவரது 40 நாட்களாட்சிக்குப்பின் ஜலாலுதீனின் மருமகனை கியாஸ் உதீன் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டார்.

கியாஸ் உதீன் : *(1340—'42).* எண்பது வயதான III'ம் வல்லாளரை *1342*இல், **கண்ணனூரில்,** கியாஸ் உதீன் முறியடித்த வரலாறு முன்னர்ப் பேசப்பட்டது. இவர் மாலத்தீவுகளை வெல்ல அமைத்திருந்த தம் திட்டம் நிறைவேறு முன் இறந்தனர். இபின்பதூதா, இவ்வரசனது கொடுஞ் செயல்களை விளக்குகிறார். "மனிதஉருவில் உள்ளபேய்" என்று கியாஸ், குறிப்பிடப்படுவது நோக்கத்தக்கது. இபின்பதூதாவின் பின்வரும் குறிப்புகள், மாபாரில் முஸ்லிம் ஆட்சியின் தன்மையைக் காட்டாநிற்கும்:- "இந்தியக் கைதிகள் பலர் கொலையுண்டனர். ஆடவர் கழுவிலேற்றப்பட்டும், பெண்டிர் தலைமுடியினுல் கழுமரத்துடன் கட்டப்பட்டும், மக்கள், அவர் தம் தாய்களின் மார்பின்மீது வெட்டப்பட்டும் துயருறுத்தப் பெற்றனர். "இஃது மற்றெவ்வரசரும் புரியாத வெட்கக் கேடான செயல். கடவுள், பொருது இவர் விரைவில் இறந்துபோகுமாறு செய்தார்." (இபின்பதூதா)[1]. இந்தியரின் நற்பண்புகளை நன்கு உணர்ந்த ஆப்ரிக்க யாத்திரிகர் (இபின்பதூதா) கியாஸ் உதீனின் கொடுங்கோன்மையைக்கண்டு மனம் புழுங்கி, இயன்ற அளவு விரைவில், மதுரையைவிட்டு நீங்க விழைந்தார். கியாஸுக்குப்பின், நாஸிர் உதீன், *(1342—4)* அடில்ஷா *(1344—'59)*, முபாரக்ஷா *(1359—'68)*, சிகந்தர்ஷா *(1368—'78)* ஆகியோர் ஆட்சி நடத்தினர்.

காசுகள் : *1335* முதல் *1378* வரை வெளியிடப்பெற்ற செப்புநாணயங்களும், பொற்காசுகளும் (பொற்காசுகள் இரண்டு மட்டும்தான் அறியப்படுகின்றன) தில்லி நாணய முறையை ஒத்துள்ளன அவற்றில் இரு வகைகள் உள்ளன. ஒன்றில் சுல்தானுடைய பெயரும், வெளியிடப்பட்ட காலமும் அராபி மொழியில் காணப்படுகின்றன. மற்ருெரு வகையில் சுல்தானுடைய பெயருடன் "மிகவும் வல்லமை வாய்ந்த சுல்தான்" என்ற விளக்க வாசகமும் காணப்படுகிறது. அவ்வெழுத்து தென்னுட்டு நடையில் அமைந்துளது. இக்காசுகளின் வரலாற்றுச் சிறப்பு குறிப்பிடத்தக்கது.

---

1 S. Krishnaswami Aiyangar, South India and Her Muhammadan Invaders p. 237.

சுல்தானரசின் வீழ்ச்சி: குறைந்தகால வாழ்வைப் பெற்ற மதுரை சுல்தானரசின் வீழ்ச்சிக்கும் தென்னிந்தியாவின் பெரும்பகுதி மீண்டும் இந்து ஆட்சி முறையைப் பெற்றமைக்கும் காரணமாயிருந்தவர் குமார கம்பணர் (இரண்டாம் கம்பணர்) என்பாராவர். இவர் விசயநகரத்தின் I'ம் புக்கராயரின் இளைய மகன். இவரது "திக்கு விசயத்"தைப்பற்றி இவர் மனைவி, அரசி கங்காதேவி வடமொழியிலியற்றிய "மதுரா விசயம்" என்ற காவியம் சிறப்பிக்கின்றது. அவ்வம்மையார் தமிழ்நாட்டில் முஸ்லிம் படையெழுச்சியின் விளைவுகளைக் குறிப்பிடுகிறார். வியாக்கிரபுரி (சிதம்பரம்) உண்மையிலேயே புலிகள் வாழும் காடாகியதாம். ஸ்ரீரங்கம் கோயில் அழிவுற்று, அங்கு உள்ள கடவுள் இரங்கநாதரைக் காக்க, ஆதிசேடனின் படம் மட்டும் இருந்ததாக அறிவிக்கப்படுகிறது. ஜம்புகேஸ்வரம் கோயிலும் அழிவுற்ற நிலையை எய்தியது. நீர்ப்பாசன வேலைகள் கேடுற்றன. யாகப்புகை பரவிய இடங்களில், முகம்மதியர், புலால் சுடும் புகை பரவலாயிற்று. மதுரையில் தென்னை மரங்கள் பல வெட்டப்பட்டு அவ்விடங்களில், மனிதத் தலைகள் மாலைகளாக இணைத்து மாட்டப்பெற்ற உயர்ந்த சூலங்கள் நிறுவப்பட்டன. இவ்விறுதிச் செய்தியை இபின்பதூதாவும் உறுதிப்படுத்துவது நோக்கற்பாலது. மதுராவிசயம், செய்யுள் நூலாக இருப்பினும், அதில் கூறப்படும் முக்கியமான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை அல்ல. கம்பணர், மைசூரிலிருந்து புறப்பட்டு, காஞ்சியைக் கைப்பற்றிக்கொண்டு மதுரையில் சுல்தானை வென்று வீழ்த்தினர். "வல்லாளர் நாட்டை அழித்து, சோழரையும், பாண்டியரையும் கவிழ்த்தவனுடைய தலை, இறுதியில் மண்ணில் புரண்டது"[1]. பல வடமொழி, தெலுங்கு நூல்கள் மதுரை சுல்தான் இறந்த செய்தியை உறுதிப்படுத்துகின்றன. ஷாம்சிசிராஜ் குறிப்புகள், சுமார் 1351'ல் I'ம் புக்கர், மாபார்நாடு முழுமைக்கும் தலைவரானர் எனக்கூறுகின்றன. 1358'ம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று, முகம்மதியரின் வீழ்ச்சிக்குப்பின் நாட்டில் ஆட்சிமுறை சீர்செய்யப்பட்டதையும்

1. Ganga Devi, Madhura Vijayam (Edited by G. Harihara Sastri and V. Srinivasa Sastri, Trivandrum. (1916) p. 14.

கோயில்களில் வழிபாட்டு முறை நன்முறையில் அமையப் பெற்றதையும் குறிப்பிடுகிறது. கம்பணரின் செயல்கள், மைசூரிலிருந்து இராமநாதபுரம், கோயம்புத்தூர் வரை பரவியிருந்தன. மாபாரில் இவரது படையெழுச்சியும் வெற்றிகளும், 1344—'56 ஆகிய காலப்பகுதியில் ஏற்பட்டனவென்று கூறலாம். அக்காலத்துப் பகுதியில் சுல்தானின் காசுகள் காணப்படாதிருப்பதும் நோக்கத்தக்கது. சுமார் 1370'ல் ஸ்ரீரங்கம் மாலிக்காபூரின் தாக்குதலுக்கு முன்பிருந்த நிலைக்குப் புதுப்பிக்கப்பட்டது. பெயரளவில் 1378'வரை சுல்தானாட்சி தொடர்ந்து வந்ததாகத்தெரிகிறது. II'ம் கம்பணரின் செயலை, 'விசயநகர மன்னர் II'ம் அரிஹரர் முற்றுப்பெறச் செய்து உண்மையான பேரரசப்பட்டங்கள் சூட்டிக்கொண்டார்.

## பகுதி 2

### பெரிஷ்டாவும் தபதபாவும்

**பெரிஷ்டா:** பாமனி குலத்தின் வரலாற்றை அறிய நமக்கு மிகவும் உதவிசெய்வோர், பெரிஷ்டா, தபதபா என்ற இரு ஆசிரியராவர். முகம்மதுகாசிம் பெரிஷ்டா, (1570—1612) பாரசீகத்தைச்சேர்ந்த ஷீயா வகுப்பினர். இவர் தம் தந்தையுடன், I'ம் முர்ட்டாசா நிசாம்ஷா ஆட்சிக் காலத்தில் (1565 — '88) ஆமதுநகருக்குப்போந்தார். பின், 1589'ல் பீஜப்பூருக்குச்சென்று, படையிற்சேர்ந்து போரில் காயமுற்றுச் சிறைப்பட்டார். சிறையிலிருந்து தப்பி மீண்டும் பீஜப்பூருக்குச் சென்று, II'ம் இப்ரஹிம் அடில்ஷாவின் ஆதரவு பெற்று வரலாறு எழுதுவதற்கான செய்திகளைத் திரட்டலானார். இப்ரஹிம் அடில்ஷா (1580—1627) வரலாற்றில் மிகுந்த விருப்பமுள்ளவர் என்பது நோக்கற்பாலது. 1596'ல் பெரிஷ்டா, பீஜப்பூர் அரசர்களது வரலாற்றை எழுதிமுடித்தார். 1606'ல் இவ்வாசிரியர், ஜஹாங்கீரின் அவைக்கு அனுப்பப் பெற்றனர். சுமார் 1611'ல் தாறிக்-இ-பெரிஷ்டா எனப்பெறும் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியைப்பற்றிய அவரது நூல் எழுதி முடிக்கப்பட்டது. பெரிஷ்டாவின் வாழ்க்கைக் காலம் 1550 முதல் 1623 வரை என்பது சில அறிஞரின் கருத்து

அக்காலத்தில் சிறந்த 35-நூல்களை இவர் பயன்படுத்திக் கொண்டிருப்பதுடன் 20-நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டியுள்ளனர். இந்நூல் அடில்ஷாவுக்கு உரிமையாக்கப் பெற்றது. ஷாவின் விருப்பப்படியே, நூலில் தக்காணத்தில் முஸ்லிம் ஆட்சியைப்பற்றி சிறப்பாக அக்கரைகாட்டி உள்ளார். ஆசிரியர், தென்னிந்திய வரலாறு, நிலநூலறிவு ஆகியனபற்றி மிகுதியாக அறியாத காரணத்தால் நூல் ஓரளவு குறைபாடுள்ளதாக இருக்கின்றது. முஸ்லிம் என்ற முறையில் ஒருதலைச்சார்பு, பாமனி சுல்தான்களை மிகைப்படுத்திப்புகழ்தல், தம்மை ஆதரித்தவரை மகிழ்விக்கச் சில செய்திகள் விடப் பட்டமை முதலிய குறைகள், பெரிஷ்டாவின் நூலில் உள்ள போதிலும், பெரும்பான்மையும், உண்மை, நடுநிலை, சிறு செய்திகளையும் நன்கு விளக்கிக்கூறல் முதலிய சிறப்புக்கள் அதில் காணப்படுகின்றன. மேலும், அதேகாலத்துச்சமயவாதிகளிடமிருந்த அரசியல், மதம் பற்றிய தவறான எண்ணங்கள், இவ்வாசிரியரிடம் மிகுதியாக இல்லாதது போற்றற்குரியது. ஒருவர் தம் அதிகாரிகளின் குறைபாடுகளை விளக்கிக் கூறுவது முறையன்று என அவர் குறிப்பிடுவது வியப்புக்குரியது. அறிஞர் ஜான்சனும், பர்க் (Burke)-கும், பெரிஷ்டாவின் வரலாறு, பதினாறும் நூற்றாண்டில் ஒரு முகம்மதியனால் எழுதப் பட்டதென்பதை நம்புவது எளிதாக இல்லை என்று கூறியுள்ளது ஈண்டு சிந்திக்கத்தக்கது.

தபதபா: இரண்டாம் பர்ஹன்-நிஸாம்-ஷா என்ற அரசரின் (1591—'95) உதவிபெற்று, 1591'ல் அலிபின் அஸிஸ் உல்லா தபதபா, தம் வரலாற்று நூலைத்தொடங்கிய படியால், அதற்கு பர்ஹன்-இ-மாசீர் என்ற பெயர் அளிக்கப் பட்டது. இஃது, 1596'வரை ஆமது நகரின் நிசாம்ஷாஹியரின் வரலாற்றையே சிறப்பாகக் கூறுகிறது. பாமனியரசர் வரலாறு முன்னுரையாக அமைந்துளது. பெரிஷ்டாவின் நூலைவிட இது, நடையில் மிகுந்த பகட்டணியுடையதாக இருப்பினும், முன்னையதைப்போல், செய்திகளை முழுமையும் கூருததுடன், அரசியல், சமயம் ஆகியவற்றில் அத்துணை நடுநிலை கொண்டதாகவும் இல்லை. ஆனால் பல இடங்களில்

பெரிஷ்டா கூறுதவற்றை தபதபா விளக்குகின்றார். நிகழ்ச்சிகளும் மாற்றிக்கூறப்படுகின்றன. ஆட்சிபுரிவோர் பெயர்கள், காலவரையறை, முதலியவற்றைப் பொறுத்தவரை, இரு நூல்களிடையே உள்ள வேறுபாடுகளை நீக்கி, உண்மையை அறிய பாமனி நாணயங்கள் உதவுகின்றன. ஆனால் தபதபா, தம்மை ஆதரித்தோரையும் அவரது குலத்தையும் வானளாவப் புகழ்வதுடன், நிசாம் ஷாஹி குல முதல்வர், பாமனி மரபினரின் கால்வழியில் வந்தவரென்றும் கூறுகின்றார். ஆயினும், பாமனி ஆட்சியைப் பற்றியவரையிலும், தபதபாவின் நூல், பெரிய அளவுக்கு (குறையை) நிறைவுபடுத்துவதாகவும், ஓரளவுக்குத் தனிச் சிறப்புடனும் அமைந்துள்ளது. மேலும், பாமனி வரலாற்றையறிய காசுகள், நினைவுச் சின்னங்கள் முதலியவற்றை அன்றி 1470'ல் பீடாரில் தங்கியிருந்த நிகிதின் என்ற ருஷ்யநாட்டு வழிப்போக்கரின் 'குறிப்புக்களும் உதவுகின்றன.

## பகுதி 3

### பாமனி சுல்தானியராட்சியின் தோற்றம்

முகம்மதுபின் துக்ளக்கின் ஆட்சிமுறை, அவர் பேரரசின் எல்லாப்பகுதிகளிலும் கலகங்களைத் தோற்றுவித்தது. 1344'ம் ஆண்டளவில் தென்னிந்தியாவில், தௌலதாபாத் மாகாணத்தைத்தவிர மற்றய தம் நாடுகள் யாவையும் அவர் இழந்தாரென்று முன்னர்ப் பார்த்தோம். அவ்வாண்டின் இறுதியில், துக்ளக் தம் உடன் பிறந்தோரான, ஆற்றலற்ற நைஸாமுதீனை தௌலதாபாத் மாகாணத் தலைவராக அமர்த்தியவுடன், எங்கும் அமைதியின்மை மிகுதியாகப் பரவிக் குழப்பம் விளைந்தது. கலகங்கள் கடுமையாக அடக்கப்பட்டும், முடிவுறவில்லை. உயர்வகுப்பினர், கொடுங்கோன்மையைக் கண்டு வெகுண்டு மாகாணத் தலைவரைச் சிறைப்படுத்தினர். 1346'ல் மாலிக் இஸ்மெயில் என்பார் தக்காண மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுல்தானின் முயற்சிகள் பயனற்றன. வயது தளர்ந்த இஸ்மெயில் தாமாகவே பதவியிலிருந்து விலகியவுடன், புரட்சியில் சிறப்பான பங்கை மேற்கொண்ட ஹாசன்

என்பாரை, உயர்குலத்தோர் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். 1347'ல் அலாவுதீன் பாமன்ஷா என்ற பெயருடன் இவர் பட்டமேற்றார். தௌலதாபாத்தை இழந்ததால் பெரிதும் ஏமாற்றமுற்ற முகம்மதுபின் துக்ளக், வரலாற்றறிஞர் பரணி யுடன், வெற்றிக்கு, அச்சூழ்நிலையில் தக்க வழியைப்பற்றிக் கலந்து ஆலோசிக்கையில், அவ்வாசிரியர் சுல்தான் பதவியி லிருந்து விலகிவிடுவதே சிறந்த வழியென்று அறிவுரை கூறியது ஈண்டு குறிக்கற்பாலது. ஆனால், துக்ளக், பிற கலகங்களை அடக்குவதில் முனைந்தார்.

## பகுதி 4

### முதலாம் அலாவுதீனும் முதலாம் முகம்மதுவும்

முதலாம் அலாவுதீன் (1347—'58). (அலாவுதீன் பாமன்ஷா). தில்லி சுல்தான் அலாவுதீனின் பணித்துறையாள ரான அந்தணர் ஒருவரை உயர்விக்கும்பொருட்டு 'பாமன் ஷா' என்ற பட்டத்தை அவருக்கு அளித்ததாகப் பெரிஷ்டா கூறும் செய்தியை ஆதாரமாகக்கொண்டு, 'பாமன்' என்ற சொல் 'பிராமணன்' என்பதின் திரிபு என்று எழுந்த கருத்து பெரும் பான்மையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏனெனின், கல் வெட்டுச் சான்றுகளும், நாணயச் சான்றுகளும் அதனைப் புறக்கணிக்கின்றன. ஆகவே, பாரசீகத்தின் பாமன்ஷா என்ற மன்னனின் கால்வழியில் வந்தவனே, பாமனிகுல முதல்வன் என்று கருதப்படுகிறது. நடைபெற்ற கிளர்ச்சியில் அலாவுதீன் தம் திறமையால் வெற்றிபெற்றார். பட்டமேற்ற பின் இவர், கலகக்காரத் தலைவர்களை அடக்கி, வெயின் கங்கையிலிருந்து கிருஷ்ணா வரையிலும், கிழக்கு மேற்கில், போங்கீர் முதல், கோவா தாபோல் வரையிலும் தம் ஆட்சி யைப் பரவச்செய்தார். தமது அமைச்சர் செய்புதீன்கோரியி னுடைய அறிவுரையின்படி, விசயநகரத்தைத் தாக்கும் எண்ணத்தைக் கைவிட்டனரென்று கூறப்படுகிறது. ஆனால், வெல்லுதற்கரிய அலாவுதீனுடைய படையின் முன் I'ம் அரிஹரனும் அவருடன் பிறந்தோரும் வருந்தத்தக்க நிலையி

விருந்ததாகவும், திறை செலுத்துவதாக வாக்குறுதி அளித்த தாகவும் தபதபா சிறப்பிக்கின்றார். பெரிஷ்டாவும், 1357'க்கு முன்பு விசயநகர் படையெடுக்கப்பட்டு சூறையாடப்பட்டதென வும், விசயநகர மன்னர், விலைமதிக்க முடியாத சிவப்புக்கல் ஒன்றைச்சுல்தானுக்குப் பரிசாகக் கொடுத்தார் எனவும் அறிவிக் கிறார். மேலேகுறித்த ஆண்டில் அலாவுதீன், மாளவத்தையும் குஜராத்தையும் தாக்குவதற்குச் செய்த முயற்சி, அவரது உடல்நலக்குறைவு காரணமாகக் கைவிடப்பட்டது. குல்பர்கா, இவர் நாட்டின் தலைநகராகியது. நாடு, குல்பர்கா பீடார், தௌலதாபாத், பேரார் என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பெற்றது. 1356இல் எகிப்திய கலீபாவும் அலாவு தீனின் சுல்தான் பதவியை ஏற்றுக்கொண்டாராம். "II'ம் அலெக்சாந்தர்" என்ற பட்டப்பெயர் இவர் காசுகளில் காணப்படுகிறது.

முதலாம் முகம்மது: (1358—'73) அலாவுதீனின் மூத்த மகனை I'ம் முகம்மது ஆட்சியின் முற்பகுதியில் விசயநகரம், வாரங்கல் இரு நாடுகளும் இணைந்து முந்திய பாமனி சுல்தான் காலத்தில் கைப்பற்றப்பட்ட இடங்களைத் திரும்ப அடைவதற்கு முயன்றன. I'ம் புக்கராயர் (விசய நகர மன்னர்) ராய்ச்சூர் தோஆப் பகுதியை உரிமையுடன் தமக்குக்கேட்டு அனுப்பிய அரசியல் தூதுவரை, கோல் கொண்டாவில் 18-மாதங்கள் தங்கச்செய்து பின்னர், சுல் தான் போர் தொடுத்தார். போரில், இந்து மன்னர் தோல்வி யுற்று பகைவரால் சுமத்தப்பெற்ற கட்டுப்பாடுகளுக்கு இணங் கினர். வாரங்கல் இளவரசர் விநாயக தேவர், சுல்தான் வாங்குவதற்காக இருந்த சில குதிரைகளை, விலைக்குப் பெற்ற குற்றத்துக்காகக் கொலை செய்யப்பட்டனர். இதனால் ஏற் பட்ட போர் இரண்டு ஆண்டுகள் நீடித்தபின் முடிவில் வாரங் கல் கிருஷ்ணப்ப நாயக்கர் தோற்றார். 1365-க்கும் 1367-க்கு மிடையே, பாமனிக்கும் விசயநகருக்கும் நடந்த மற்றொரு போரிலும் முகம்மது வெற்றிகண்டு ஆயிரக்கணக்கான மக் களைக் கொலை செய்தனர். பின்னர் தான், போர்த்துறையில் இல்லாத மக்களைத் துன்புறுத்துவது தகுதியன்று என

உணர்ந்து உடன்பாடு செய்துகொண்டார். 1366இல் முகம்மது, தௌலதாபாத் அதிகாரியின் கிளர்ச்சியை அடக்கி வெற்றிபெற்றார்.

முகம்மது, ஆட்சித்துறை அமைப்பில் மிக்க ஊக்கம் செலுத்தினர். ஆயிரக்கணக்கான குற்றவாளிகளைக் கொலை செய்து நாட்டில் களவு ஒழியச் செய்தார். பொதுவிடங்களிலிருந்த சாராயம்வடிக்குமிடங்கள் யாவும் மூடப்பெற்றன. 1361இல் எகிப்திய கலீபா, இவரைத் தக்காண மன்னர் என்று ஏற்றுக்கொண்டார். குல்பர்காவில், மிகப் பெரியதும், உள்ளக்கிளர்ச்சியைத் தருவதுமான சிறந்த பள்ளிவாசல் ஒன்று 1367'ல் கட்டிமுடிக்கப் பெற்றது. மண்டலத் தலைவருக்கு அரசர்க்குரிய அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருந்தன. அவர், தமது மண்டலத்தில், தம்மால் சேர்க்கப்பட்ட வீரரைக்கொண்ட புதிய படையை நிறுவுதல், பல்வேறு துறைகளிலும் அலுவலாளரை அமர்த்தல், முதலிய வேலைகளைத் தாமே செய்து வந்தார். முமம்மது, மண்டலங்களில் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்து அவற்றின் தலைவர்கள் வரம்புமீறா வண்ணம் கட்டுப்படுத்தினர். அனைவற்றிற்கும் மேலாக எட்டு அமைச்சரடங்கிய ஓர் ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டிருந்தது. அவர்கள் வருமாறு: — படைத்தலைவர், மேற்பார்வை செய்யும் அமைச்சர், பொருளமைச்சர், முதலமைச்சர், அவருடன் ஒத்துழைக்கும் பீஷ்வா, காவல்துறை மேற்பார்வையாளர், அயல் நாட்டுத்துறை அமைச்சர், உதவிப்பொருளமைச்சர், முறை வழங்குவோரின் தலைவர், அறநிலைப் பாதுகாப்பாளர் ஆகியோராவர்.[1] பாமினி அரசின் வீழ்ச்சிக்குப் பிறகும், இக்குழு தக்காணத்தில் தொடர்ந்து நிலைபெற்று, பதினேழாம் நூற்றாண்டில் சிவாஜிக்கு ஒரு மேற்காட்டாக (Model) அமைந்தது. முகம்மது புரிந்த கொடுஞ் செயல்கள் பல. தபதபா அவர் சமயக்கேடான வாழ்க்கை வாழ்ந்து இறந்தார் என்று கூறுகிறார்.

---

1 Cambridge History of India, III P. 377.

# பகுதி 5

## முஜாஹித் சுல்தானும் அவர் பின்வந்தோரும்

முஜாஹித்: *(1373–'78).* I'ம் முகம்மதுவின் மகனான முஜாஹித், நாட்டின் எல்லை அமைப்பு காரணமாக விசய நகருடன் பகைத்துக்கொண்டார். துங்கபத்திரை ஆற்றைத் தமது நாட்டின் தெற்கு எல்லையாக்க முயன்றதை எதிர்த்த காரணத்தால், விசயநகருடன் போர் தொடுத்தார். போரில் இந்து மன்னர் இராமேஸ்வரத்திற்கு ஓடிப்பின் திரும்பியதாக, பெரிஷ்டா கூறுகிறார். முஜாஹித் விசயநகரத்தை ஓரளவு அழித்தபோதிலும் இறுதியில் தோல்வியுற்றதாகத் தெரிகிறது. விரைவில் உள்நாட்டில் சுல்தான் கொலையுண்டார். பின்னர், I'ம் அலாவுதீனுடைய நான்காம் மகனின் குமாரனான (II'ம்) முகம்மது பட்டமேற்றார்.

இரண்டாம் முகம்மது: *(1378—'97).* இவராட்சியின் தொடக்கத்தில், ராய்ச்சூரை முற்றுகையிட்டிருந்த விசயநகரப் படையைப் பின்னடையச் செய்து அதனைக் கலைத்தார். இவ ராட்சியினிறுதியில் சாகர் என்ற விடத்திலேற்பட்ட கிளர்ச்சி யைத்தவிர பெரும்பான்மையும் இ வ ர் ஆட்சிக்காலத்தில் அமைதி நிலவியது. 1387 முதல் 1395 வரை நாட்டிலேற் பட்ட வறுமையின் கொடுமை, அரசியலாரின் திறமையும் பெருந்தன்மையும் வாய்ந்த செயல்களால், ஓரளவு குறைக்கப் பெற்றது. ஆ னா ல் முகம்மதிய இன மக்களுக்குத்தான் நன்மை மிகுதியாகக் கிடைத்தது. குல்பர்கா, தௌலதாபாத் முதலிய சில ந க ர ங் க ளி ல் இலவச உணவு, தங்குமிடம் முதலிய வாய்ப்புக்களுடன் பெற்றோரையிழந்த குழந்தைகளுக் காகப் பள்ளிக்கூடங்கள் அமையப்பெற்றன. முகம்மதிய ஆசிரியர் மிக்க ஆதரவு பெற்றனர். சுல்தான், கல்வி, கலை களில் ஆர்வம் கொண்டமைக்கு, முறைவழங்கும் தலைமை அதிகாரியாயிருந்த ஓர் பாரசீகர் காரணமாயிருந்ததாக அறியப் படுகிறது. அக்கால நிலைக்கு மாறாக, முகம்மது தம் இராச்சி யத்தின் பொருள்கள் அனைத்திற்கும் தாம் ஒரு அறநிலையக் காவலர் என்ற கருத்தைக்கொண்டிருந்ததும் மிகுதியாகச்செலவு செய்தலைத் தடுத்துவந்ததும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

# பகுதி 6

## பிரோஸ் (1397—1422)

பட்டமேற்றல்:— இரண்டாம் முகம்மதுவின் மகன் கியாஸ்உதீன், பட்டமேற்ற. இரு மாதங்களுக்குள், துருக்கிய அடிமைகளின் தலைவருடன் பகைத்துக்கொண்ட காரணத்தால் அரியணையிலிருந்து விலக்கப்பட்டார். I'ம் அலாவுதீனின் மூன்ரு வது மகன் ஆமத்கான் என்பானின் குமாரரான பிரோஸ், அஹமத் என்ற இருவரும், அடிமைகள் தலைவர் துகால்சின் என்பவரை முறியடித்துக் கொன்றனர்.

போர் : பிரோஸ், 1398'ம் ஆண்டில், ராய்ச்சூர் தோ ஆப் பகுதியைத் தாக்கி கிருஷ்ணுநதிவரை படையெடுத்து வந்த விசயநகர மன்னர் II'ம் அரிஹரரை விரட்டி அவர் நாட்டைச் சூறையாடி மிகுதியான அடிமைகளுடன் தம் தலை நகரான குல்பர்காவுக்குத் திரும்பினுர். அதேஆண்டில் கெர்லா (வெயின் கங்கைக்கும் வார்தாவுக்கும் இடைப்பட்ட பகுதி) என்ற பகுதியில் படையெடுத்து அதன் தலைவரை அடக்கினர். பிரோஸ் 1401'ல் தைமூருடன் செய்துகொண்டஉடன்படிக்கைப் படி, தக்காணம், மாளவம், குஜராத் ஆகிய இராச்சியங் களின் ஆதிபத்தியத்தை அவரிடமிருந்து பெற்றதாகக் கூறப் படுகிறது. இதனுல் நிலைகுலைந்த மாளவம், குஜராத், காண் டெஷ் ஆகிய நாடுகளின் மன்னர் பிரோஸுக்குப் பகையாக விசயநகரத்துக்கு உதவியளிக்க வாக்குறுதி அளித்தனர். 1406இல் I'ம் தேவராயர் முட்கல் நகரிலிருந்த ஓர் அழகிய மங்கையைத் தூக்கிச்செல்ல முயன்று தோல்வியுற்ருர். அம் முயற்சியைக்கண்ட பிரோஸ் விசயநகரத்தை முற்றுகையிடச் செய்தார். அம் முற்றுகை பயனற்றதாகிய போதிலும், திரும்பு கையில் பங்கபுரியைத் (தார்வாருக் கருகில்) தாக்கிச் சூறை யாடி, அதனைக்கைப்பற்றி, துங்கபத்திரை ஆற்றைத் தம் இராச்சியத்தின் தெற்கு எல்லையாக்கினர். வாக்குறுதிப்படி மாளவம், குஜராத், காண்டெஷ் ஆகிய நாடுகிளிலிருந்து உதவி கிடைக்கப்பெருதபடியால் I'ம் தேவராயர் பிரோஸு டன் அமைதி உடன்பாடு செய்துகொண்டு, பங்கபுரியையும்

போர் இழப்பீட்டுத் தொகையையும் அளித்ததுடன் தம் மகள் ஒருத்தியை அச் சுல்தானுக்கு மணம்செய்தும் கொடுத்தார். 1419இல் பிரோஸ், விசயநகருடன் மூன்ருவது போரை நடாத்தி அதில் தோல்விகண்டார். இந்துக்கள் முஸ்லிம்களின் மீது பழி தீர்த்துக்கொண்டனர். சுல்தான், அதன்பின், படையெழுச்சிப் பேரவாவைக் கைவிட்டு, கடவுள் வழிபாடு முதலிய அறவழிகளிற்றன் காலத்தைக் கழிக்க முற்பட்டதாகத் தபதபா குறிப்பிடுகிருர். இறுதிக்காலத்திய வாய்ப்புக்கேடுகளால் அவர் மனமுடைந்து மாண்டார்.

சுல்தானின் குணவியல்பு: பீம நதிக்கரையில் பிரோஸாபாத், என்ற நகரை அமைத்து ஆங்கு, 800 பெண்டிரைக் கொண்ட ஒரு உவளகத்தை (மாதர்பகுதி) ஏற்படுத்தினர். அப் பெண்டிர், துருக்கியர், ஆப்கானியர், வங்காளியர், சீனர், ஐரோப்பியர் முதலிய பல இனங்களைச் சேர்ந்தோராவர். இவ்வினத்தோரின் மொழிகளில் முறையை அவரவருடன் சுல்தான் பேசி வந்ததாகக் கூறப்படுகிறது. தில்லியிலிருந்து குல்பர்காவுக்குச் சென்று தங்கியிருந்த ஜமால் உதீன் ஹுஸெய்ன் என்ற பெருமை வாய்ந்த ஓர் துறவியிடம், பிரோஸுக்கு மிகுந்த நன்மதிப்பு இருந்தது. இச்சுல்தான், போரார்வமும் இசையில் விருப்பமும், இறையன்பும் பெற்றிருந்தார். இவர், பழமைக்குக் கட்டுப்பட்ட ஒரு முகம்மதியரல்லர். பல அந்தணர் இவரால் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். விவிலிய நூலிலும் இவருக்குப் பயிற்சி உண்டு. ஆனல் சிறிது சிறிதாக, பிற்காலத்தில் இவரது நற்பண்புகள் மறையலாயின. ஆயினும், இவர் குலத்தில் இவரே மிகச் சிறந்த பேரரசர் என்று பெரிஷ்டா குறிப்பிடுகிருர்.

## பகுதி 7

### அஹமது முதல் நிசாம் வரை

அஹமது: (1422—'36) பிரோஸின் உடன்பிறந்தோரான அஹமது, விசயநகருடன் போர் தொடுத்து, தம் முன்னோரின் இறுதிக்காலத்திலேற்பட்ட இழிவை மாற்ற

முற்பட்டார். 1422—3'ல் நடைபெற்ற படையெழுச்சியின் விளைவாக, வாரங்கல்,-விசயநகர்ப்படைகள் சிதறடிக்கப்பட்டு மக்கள் கொலைசெய்யப்பட்டனர். கோயில்கள் இடிக்கப்பட்ட துடன், பசுக்களும் வாளுக்கிரையாயின. சுல்தான், மிகுந்த பொருள்களுடனும் அளவிறந்த கைதிகளுடனும் தம் நாடு திரும்பினர். அவருடன் சென்ருருள், அந்தண குலத்தவரான ஒருவர் முகம்மதியராகமாறிப் பதுல்லா என்ற பெயருடன் பின்னர், பேராரில் இமாத்ஷாஹி குலத்தைத் தோற்றுவித்தது ஈண்டு குறிப்பிடத்தகும். சிறைப்பட்ட மற்ருேர் அந்தணர், முகம்மதியராக்கப்பட்டு ஹாசன் என்ற பெயரைப்பெற்ருர். பாமனி இராச்சியத்தில் மிக உயர்ந்தபதவி எய்திய இவரது மகன் அஹமத், பின்னர் ஆமது நகரத்தில் நிசாம் ஷாஹி குலத்தைத் தோற்றுவித்தார். 1424'ல் தெலிங்கானம், பாமனியுடன் இணைக்கப்பட்டது. நான்கு ஆண்டுகளுக்குப் பின் மாளவத்தில் சுல்தான் வெற்றிபெற்ருர்.

உள்நாட்டுக்கலகங்கள்: அஹமது, மண்டல ஆட்சி ஒழுங்காக நடைபெற வழிகள் வகுத்தார். பல்வேறு பணியாளரின் கடமைகள், உரிமைகள் யாவும் தெளிவாக அறிவிக்கப்பட்டிருந்தன. படையில் அயல் நாட்டினர் பலர் அமர்த்தப்பட்டிருந்தனர். ஆனல் தக்காண மக்களுக்கும் அயலாருக்குமிடையே பகைமை வளரலாயிற்று. பாரசீகம், நடுஆசியா, அரேபியா முதலிய நாடுகளிலிருந்து ஈண்டுவந்த பாரசீகர், துருக்கியர், முகலாயர், அரேபியர் முதலிய வகுப்பினர், உயர்ந்த பதவிகளில் அமர்த்தப்பட்டிருந்ததால், உள்நாட்டவர் உரிமைகள் பாதிக்கப்பட்டன. மேலும், அயல் நாட்டினரில் பெரும்பான்மையானவர் 'ஷியா' பிரிவைச்சார்ந் தோர். தக்காண நாட்டு முகம்மதியரோ 'சன்னி' பிரிவைச் சேர்ந்தவராகவும், பழமைப்பற்றுமிக்க முஸ்லிம்களாகவும் இருந் தனர். சமயம், இனம் ஆகியன பற்றிய இப்பகைமை காரணமாகக் கலகங்கள் மூண்டன. பின்னர் பாமனி அரசின் வீழ்ச்சிக்கு இது ஓர் காரணமாகும்.

அஹமது-ஒரு ஒழுக்கசீலர்:! அஹமது, 1429'ல் தலை நகரைக் குல்பர்காவிலிருந்து பீடாருக்கு மாற்றினர். ஆனல்

# மாபார், பாமனி சுல்தானியராட்சி 1335-1527



இம்மாற்றம் இவருக்குப் பின் வந்தவரின் ஆட்சியில் ஏற்பட்ட தென்றும், பீடாரின் தட்ப வெப்ப நிலை தமக்கு மிகவும் ஏற்றதாயிருந்த காரணத்தால் அஹமது அங்கே தங்கியிருந்தா ரென்றும் ஒரு சிலர் கருதுவர். கல்வி, பண்புடைமை ஆகிய வற்றைப்பொறுத்தவரை, பிரோஸைவிட, அஹமது தாழ்ந்த வரே. அவர், தம் குல வரலாற்றை எழுதிய அஸாரி என்ற அறிஞருக்கு உதவி செய்தார். மதவெறியும் மூடநம்பிக்கை களும் நிறைந்த இச்சுல்தான், முஸ்லிம் துறவிகளை ஆதரித் தார். நாட்டில் வறுமை வாட்டிய ஓராண்டில் தமது துதிப் பாடல்களின் விளைவாக மழை பெய்ததாக நம்பிய அஹமது, தம்மை ஓர் ஒழுக்கசீலர் என்று கூறிக்கொண்டார்.

**இரண்டாம் அலாவுதீன்:** *(1436—'58)* அகமதுவின் மகன் அலாவுதீன், பட்டமேற்றவுடன் விசயநகருடன் போரிட்டு வெற்றிபெற்றார். 1437'ல் தென்கொங்காணத்தின் இந்தியத் தலைவரை அடக்கி அவர் மகளை மணம் செய்துகொண்டார். இம்மணவினையால் வெகுளிகொண்ட சுல்தானுடைய முதல் மனைவியின் தந்தை (காண்டெஷ்நாட்டு நாசிர்கான்) பேராரில் படையெடுத்து வந்தபோது தோற்கடிக்கப்பட்டார். 1443'ல் மீண்டும் விசயநகர மன்னர் II'ம் தேவராயருக்கும் அலாவுதீ னுக்கும் போர் மூண்டது. இதன் காரணம், முடிவு முதலியன பற்றிக்கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அலாவுதீன் இறைவனிடம் அன்பு கொண்டவர். குரான் சட்டங்களின்படி ஆட்சி செய்யவேண்டுமென்பது அவர் விருப்பம். குடிப் பழக்கத்தைத்தாம் கைவிடாதபோதிலும் பிறரை வற்புறுத்தி மதுவிலக்கைக் கைக்கொள்ளச் செய்து, குற்றவாளிகளைக் கொடுமையாகத் தண்டித்தார். கொள்ளையை ஒழிக்க கடு முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. நேர்மையான வாழ்க் கையை மேற்கொள்ளுமாறு மக்கள் தூண்டப்பெற்றனர். பீடாரில் இலவச மருத்துவ நிலையம் ஒன்றை அவர் அமைத் தார். அழிக்கப்பட்ட இந்துக் கோயில்களின் பொருள்களைக் கொண்டு பல பள்ளிவாசல்கள் எடுக்கப்பெற்றன. 'நீதிமான்' என்ற பட்டத்தை, அலாவுதீன் சூடிக்கொண்டார். ஆனால் ஆண்டுகள் செல்லச் செல்ல, இவரது குணவியல்பு மாறி, புலனடக்கமின்றித் தீயவழியில் செல்லலுற்றார்.

ஹுமாயூன் (1458—'61). II'ம் அலாவுதீன் மகன் ஹுமாயூன், தாம் அரியணையேறுவதைத் தடுக்க செய்யப் பட்ட முயற்சியைத் தோல்வியுறச் செய்து பட்டமேற்றார். அயல்நாட்டவர் இவராதரவைப் பெற்றனர். முகம்மதுகாவன் என்போர் துணைத்தலைவராக்கப்பெற்று, தலைசிறந்த பட்டங் களைப்பெற்றார். ஆனால் இச்சிறந்த அமைச்சர், ஹுமாயூனின் கொடுங்கோலாட்சியை மாற்ற இயலாத நிலையிலிருந்தார். இந்துக்களும், முகம்மதியரும் ஒருங்குசேர ஒடுக்கப்பெற்றனர். சுல்தான் தம் நாட்டின் பெண்டிர், சிறுவர் யாவரிடமும் விலங்குத் தன்மையுடன் நடந்து கொண்டார். கல்வியும், வீரமும் பொருந்தியிருந்தும் பேய்த்தனமாக செயலாற்றிய ஹுமாயூன், ஒரு "கொடுங்கோலன்" என்று குறிப்பிடப் படுகிறார்.

நிஸாம் (1461—'63). ஹுமாயூன் மரணத்தின் பொழுது அவர் மகன் நிஸாம் எட்டு ஆண்டுகளே நிரம்பிய வனாக இருந்ததால் முகம்மதுகாவன், குவாஜாஜஹான், இறந்த ஹுமாயூனின் மனைவி ஆகிய மூவரடங்கிய "பேராட்சிப் பிரதிநிதிக்குழு" ஒன்று அமைக்கப் பெற்றது. 1462'ல் ஓரிஸ்ஸா, தெலிங்கானா இராச்சியங்களின் இந்து மன்னரும், மாளவநாட்டு I'ம் முகம்மதுவும், சுல்தானரசை எதிர்த்துப் படையெடுத்தனர். காவன், தம் திறமையால் பகைவரை முறியடித்ததுடன், நிஸாமுக்குப் போர்ப் பயிற்சியும் அளித்து வந்தார். ஆனால் விரைவில் சுல்தான் இறந்துவிட்டார். இவர் தாய் மக்துமாஜஹான் அறிவாற்றல் நிறைந்தவர். குறுகியகால ஆட்சியில் தம் கணவரின் காலத்திலேற்பட்ட கேடுகளை மாற்றிச் சீர்திருத்த மிக்க முயற்சியெடுத்துக் கொண்டனர்.

## பகுதி 8

### மூன்றும் முகம்மதுவும் முகம்மது காவனும்

முகம்மது காவன். நிஸாமின் உடன் பிறந்தாரான முகம்மது (1463—'82) ஆட்சியைப் பெறுகையில் ஒன்பது ஆண்டுச் சிறுவனாயிருந்தபடியால், பேராட்சிப் பிரதிநிதிக்குழு

தொடர்ந்து செயலாற்றி வந்தது. குழுவிலொருவரான குவாஜா ஜஹான் பேராசை காரணமாகக் கொலையுண்டார். சுல்தான் பதினைந்து ஆண்டுகள் நிரம்பியதும், தாயரசி அரசியலிலிருந்து விலகினர். ஆகவே, முகம்மது காவன் அரசரின் தனித்த அமைச்சரானர். இவர் 1404'ம் ஆண்டில் பாரசீகத்திலுள்ள காவன் என்றவிடத்தில் அந்நாட்டுப்பண்டைய உயர்குல வகுப்பிலுதித்தவர். ஆண்டு ஆட்சிபுரிந்த மன்னன் மேல் வெறுப்புக்கொண்டு, ஒரு வணிகனுக மாறி 1447'ல் பீடாருக்கு வந்து சேர்ந்தார். I'ம் அலாவுதீனிடம் பணியிலமர்த்தப்பெற்றது முதல் இவரது சிறந்த ஆற்றலை உணர்ந்த ஹுமாயூன் இவரை முதல் அமைச்சராக்கினர். முகம்மதுவின் கல்வி வளர்ச்சிக்காக, காவன் மிக்க முயற்சி எடுத்துக் கொண்டார். அயல்நாட்டவரானபோதிலும் தக்காண மக்களை இவர் நேசித்தார்.

போர். காவன், தென் கொங்காணத்தில் போரிட்டு கெர்லா என்றவிடத்தைக் கைப்பற்றியதுடன் விசயநகரிடமிருந்து கோவாவையும் கைப்பற்றி தம் அடிப்படுத்தினர். இவர் காலத்தில் பாமனி இராச்சியம் கடலிலிருந்து கடல்வரை (கிழக்கு மேற்கில்) பரவி அதன் உச்சஅளவான எல்லைகளைப் பெற்றது. கலகம் செய்த பெல்காம் மன்னரை அடக்கி அந்நாட்டையும், காவன் இணைத்துக்கொண்டார். 1481'ல் சுல்தான், கோண்டபள்ளியிலிருந்து (பெசவாடா அண்மையில்) புறப்பட்டு விசயநகர இராச்சியத்தைக்கடந்து, காஞ்சிவரைச் சென்று ஆண்டிருந்த கோயில்களை இடித்து மசூலிப்பட்டணத்தையும் கைப்பற்றிக்கொண்டு திரும்பினர்.

நிகிதின். அதனேஷியஸ் நிகிதின் என்ற ருஷ்யநாட்டுப் பிரயாணி, 1470'ல் பீடார் வந்து சேர்ந்து 1474'வரை பாமனி இராச்சியத்தில் சுற்றிவந்தார். சுல்தானின் தலைநகர், மாளிகை, அவர் வேட்டைக்குச் செல்லும் காட்சிகள், அயல் நாட்டு உயர் வகுப்பினரால் ஆட்சி நடத்தப்பெறும் முறை முதலிய யாவும் அவரால் விளக்கப்படுகின்றன. மேலும், நாட்டில் மக்கட்டொகை மிகுதியெனவும் அவர்தம் நிலை வருந்தத்தக்கதெனவும், உயர் வகுப்பினர் மட்டில் பெருஞ்

செல்வ வாழ்க்கையுடனிருக்கின்றனர் எனவும் குறிப்பிடுகிருர். 1474'ம் ஆண்டில் தோன்றிய வறுமையும், தொத்துநோயும் மக்களை மிகவும் வருத்தியதாக அறியக்கிடக்கிறது.

காவனின் சீர்திருத்தங்கள். பாமனி இராச்சியம் அளவில் பெருக்கமுற்றதாலும், மண்டலத் தலைவர்கள் மிகுதியாக அதிகாரங்கள் பெற்றிருந்ததாலும், ஆட்சிமுறையைச் சீர்திருத்த விரும்பிய காவன், நான்கு மண்டலங்களாக இருந்த அரசை, எட்டு மண்டலங்களாக வகுத்தார். குல்பர்கா மண்டலம், குல்பர்கா, பீஜப்பூர் என இரண்டாகவும் தௌலத்தாபாத், ஜூன்னுர்—தௌலத்தாபாத் என இரண்டாகவும், பேரார், கவில்—மாகூர் என இரண்டாகவும், தெலிங்கானம், இராசமகேந்திரபுரம்—வாரங்கல் என இரண்டாகவும் பிரிக்கப்பெற்றன. பீடார், தனிப்பட்ட ஆட்சியைப்பெற்றது. மண்டலாதிபதி ஒவ்வொருவரின் கீழ் ஒரு அரண் அமைத்துவிட்டபின் மற்ற அரண்கள் யாவும், சுல்தானின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. இவ்வாறு மண்டலத் தலைவரின் அதிகாரங்கள் மிகவும் குறைக்கப்பெற்றன. எட்டு மண்டலங்களில் ஐந்து, தக்காணத்தலைவரின் கீழிருந்தபடியால், இச்சீர்திருத்தம், அயல் நாட்டவரின் நலத்துக்காக ஏற்பட்டதன்று என்பது தெளிவு. ஆனபோதிலும், தக்காணத்தைச் சேர்ந்த மாலிக் ஹாஸன் என்ற தெலிங்கான மண்டலாதிபதி, காவனின் முக்கியமான பகைவரானுர். பேரமைச்சரான காவனின் நிலவரித்திட்டம் சிறப்பு வாய்ந்தது. பிற்காலத்தில் தோடர்மால், மாலிக் ஆம்பர் ஆகியோரின் திட்டத்தைப்போல், நிலத்தை அளவிடல், வரியைத்திட்டம் செய்தல், வரியைப் பணமாகச்செலுத்தல் முதலிய முறைகளை அடிப்படையாகக்கொண்ட ஓர் புதிய திட்டம், உருவாக்கப்பெற்றது. மேலும் அவர் படைஅமைப்புமுறை முழுவதையும் மாற்றி ஒழுங்கு செய்தார். போர் வீரரின் ஊதியம் மிகுதியாக்கப்பட்டது. "1830'ல் ஆங்கிலேய உள்நாட்டுப் படையினரின் ஊதியத்தைவிடச் சிறந்த வகையில் 1470'ல் பாமனியப் படையினர் ஊதியம் பெற்றனர்"[1]. "இத்தகைய மிகச்சிறந்த சட்டங்கள் காரண

---

1. Meadows Taylor, A Student's Manual of the History of India (4th Edition, 1879) p. 176

மாக எங்கும் ஒழுங்கு நிலவியது. அரசியலார் வலிமை பெற்றனர். எல்லா வகுப்பினருக்கும் சிறந்த வகையில் நீதி வழங்கப்பெற்றது. ஆனல் நுண்ணிய இம்மேற்பார்வை, பேராசை மிக்க பல தலைவர்களுக்கு மிகவும் கெடுதலாக இருந்தது'' என பெரிஷ்டா குறிப்பிடுகிருர்.[1] காவனின் சீர் திருத்தங்கள், பொருளமைப்பு, முறைவழங்கல், கல்வி முதலிய துறைகளிலும் காணப்பெற்றன. ஆட்சியமைப்பின் எப்பகுதியும் அவர் கவனத்தைக் கவராமலில்லை. பீடாரில் ஒரு உயர்தரக் கல்லூரி நிறுவப்பெற்றது. தூய்மைக் கேட்டை அறவே அகற்றி, பொது நன்மையையும், திறமையையும் வளர்க்கவேண்டுமென்பதே அவரது சிறந்த குறிக்கோளாகும்.

குணவியல்பு. காவனின் குணங்களில் மிகச்சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது அவரது தந்நலமற்றசேவை உணர்ச்சியே ஆம். முப்பது ஆண்டுகட்கு மேலாக அவர் தமது நாட்டுக்கும், மன்னருக்கும் பணிவு உள்ளவராக உண்மையான தொண்டுகள் புரிந்தார். அவரது திறமையும் அவருக்குக்கிடைத்த வாய்ப்புக்களும் வேருெருவர் பெற்றிருந்தால், தமது குலத்தை ஆட்சிபீடத்துக்குக் கொணர முயன்றிருப்பாரென்று கூற முடியும். இவரது படையெழுச்சிகளும், சீர்திருத்தங்களும், இவர் படைத்தலைவராயிருந்ததுடன் அரசியல் அறிஞராகவுமிருந்தாரென்பதை நன்கு புலப்படுத்தும். தவிர, காவன், கணிதநூலில் வல்ல ஓர் சிறந்த அறிஞர். 3000-புத்தகங்களடங்கிய அவரது நூல் நிலையத்தை அவர் அடிக்கடிப்பயன்படுத்திக்கொண்டார். மேலும் அவர், ஒரு புலவராகவும் உரைநடை ஆசிரியராகவும் திகழ்ந்தார். இருநூல்களை அவரெழுதியதாகக் கூறப்படுகிறது. அனைத்திற்கும் மேலாக, தூய்மையான சீலத்தைக்கொண்ட இவ்வமைச்சர் தமது வருவாயில் பெரும் பகுதியை அறவழியிலும் பொதுநன்மையிலுல் செலவிட்டார். "அவர் ஒரு பாயில் படுத்துறங்கினுர் எனவும், உணவைத் தயார்செய்ய மட்பாண்டங்கள் தவிர வேறெதுவும் பயன் படுத்தப்படவில்லையெனவும்'' கூறப்படுகின்றன.[2] பல நற்

1. Briggs, op. cit. II, p. 505.
2. Meadows Taylor, op. cit. p. 178

பண்புகள் பொருந்திய காவன் சமயத்துறையில் மிகுதியான மதவெறி கொண்டிருந்தார். சுன்னி பிரிவைச்சார்ந்த இவர், சமயத்தைப் பொறுத்தவரை பிறர் கொள்கைகளைப்போற்ற மறுத்தார்.

**காவன் கொலைசெய்யப்படுதல்.** (1481) காவனின் மண்டலப் பிரிவினைச் சீர்திருத்தங்களால் சினங்கொண்ட மாலிக் ஹாசன் முதலியோர், 1481'ல் அவரை அழிக்கச் சதியாலோசனை செய்யலாயினர். காவன்மீது உண்மையற்ற பல குற்றங்களைச்சுமத்தி, சுல்தான்அவற்றை நம்புமாறுசெய்தனர். சுல்தான், குடிவெறியில் மூழ்கியிருந்தசமயத்தில் காவன் பெருங்குற்றவாளி என்று தந்திரமாக அறிவிக்கப்பட்டவுடன், ஆழ்ந்த ஆலோசனையின்றி அப்பேரமைச்சனைக் கொலை செய்யுமாறு சுல்தான் பணித்தார். பாமனி இராச்சியம் சிதறுமல் பாதுகாக்கவல்ல உண்மை ஊழியன் வருந்தத்தக்க வகையில் கொலையுண்டார்.

**சுல்தானின் இறுதிக்காலம்.** ஆராய்ந்துணராமல் தாம் செய்த தவற்றைப்பின்னருணர்ந்து, முகம்மது துயரத்திலாழ்ந்தார். அயல்நாட்டவரும், தக்காண மக்கள் சிலரும் அவரை வெறுக்கலாயினர். மாலிக் ஹாஸன் முதலமைச்சராக்கப்பட்டார். மண்டலத்தலைவர் சிலர் மன்னராணைகளைப் புறக்கணிக்கத் தலைப்பட்டனர். உயர்குடியினர் பலர் சுல்தானுடன் ஒத்துழைக்கவில்லை. இறுதியில், அளவு மீறிய குடியின் காரணமாக 1482'ல் முகம்மது இறந்தார். இறக்குந்தறுவாயில் காவன் தம்மைக் கொல்வதாகக் கதறிக்கொண்டு உயிர் நீத்தாராம். வீரமும், கல்வியும் நிறைந்த முகம்மதுவின் கேடுற்ற வாழ்க்கைக்குக் குடியே சிறப்பான காரணமாகும்.

## பகுதி 9

### சுல்தானரசின் சிதைவு

**முகம்மதுவும் அவர் பின்வந்தோரும்.** III'ம் முகம்மதுவின் பனிரண்டு வயது மகன் முகம்மது, (1482—1518) மாலிக்ஹாசனின் முயற்சியால் பட்டமேற்ருன். ஆனால்

ஹாஸனுக்குப் பகைவர் மிகுதியாகி வந்தனர். உள்நாட்டுக் கலகங்கள் மூண்டன. 1486'ல் ஹாஸன் கொலையுண்டார். சுல்தான் முகம்மது சிற்றின்ப வாழ்க்கையில் மூழ்கியிருந்த படியால், 1487'முதல் 1504'வரை, காசிம்பரீத் என்பாரே உண்மையில் ஆட்சிநடத்தி வந்தார். 1490'ல் மாலிக்ஹாசனின் மகன் மாலிக் அஹமத், (ஜுன்னர் மண்டலத்தலைவர்) பீஜப்பூர் தலைவர் யூசப் அடில்கான், பேராரின் பதுல்லா இமாத் உல்முக் ஆகியோர் உரிமையுடன் ஆட்சிபுரியலாயினர். பீடாரில் காசிம்பரீத்துக்குப் பின் அமீர்பரீத் என்ற அவர் மகனின் ஆட்சி (1504—'42) நிலவியது. 1512'ல் குலி சுல்தான் என்பாரின்கீழ் கோல்கொண்டா உரிமை பெற்றது. 1518'ல் முகம்மது இறந்தவுடன் அவர் மக்கள் நால்வரும் ஒருவர்பின்னொருவராக—அஹமத் (1518—'21), அலாவுதீன் (1521—'22), வாலியுல்லா (1522—'25), கலிமுல்லா (1525—'27)—பெயரளவுக்கு ஆட்சிநடாத்தினர். இறுதியாக வந்த பாமனி மன்னர், அமீர்பரீத்துக்குப் பகையாக, முகலாயப்பேரரசர் பாபரிடம் உதவிகோரினர். ஆனால் இதனால் பயன் விளையாததுடன், 1527'ல் பீடாரிலிருந்து சுல்தான் பீஜப்பூருக்கும், பின், ஆமத்நகருக்கும் ஓட்டமெடுக்கநேர்ந்தது. ஆகவே, அவ்வாண்டில் அமீர்பரீத் உரிமையுடன் ஆளத் தொடங்கினர். பாமனி குலம் முடிவுற்றது. இவ்வாறாக தக்காணத்தில் ஐந்து சுல்தான் இராச்சியங்கள் தோன்றின.

**சிதைவின் காரணங்கள் :** பாமனி அரசின் வீழ்ச்சிக்குரிய காரணங்களிற் சிறப்பாக, மண்டலத் தலைவர் தொடக்கம் முதல் பெற்றிருந்த மிகுதியான அதிகாரங்களும், உயர் வகுப்பினரிடை, இனம், வகுப்புக்காரணமாக ஏற்பட்ட பிரிவுகளும் குறிப்பிடத்தகும். இவ்வரசு தோன்றுவதற்கு, தக்கண அமீர்கள், தில்லிப் பேரரசை எதிர்த்துக் கலகங்கள் செய்து வெற்றிபெற்றதே காரணமானபடியால், அவர்கள் உரிமைகளைக் குறைப்பதென்பது இயலாத செயலாகும். இராச்சியம் பரவிவந்தபடியால் மண்டலத் தலைவர்களின் அதிகாரங்களால் விளைந்த கேடுகளும் பெருகின. காவனின் உயர்ந்த சீர்திருத்தங்கள் தொடக்கத்திலேயே, அவர் கொலை

யுண்டதின் காரணமாக அழிந்தன. 1466 முதல் அயல் நாட்டவருக்கும், தக்கண மக்களுக்கு மிடையே பகைமை மிகுதி யாகப் பெருகிவந்தது. காவனின் மரணம் அரசின் வீழ்ச்சியைப் பலவகைகளில் விரைவுறச்செய்தது. அவருக்குப்பின் இருகட்சி யினரிடையே அமைதி ஏற்படுவதென்பது இயலாததாயிற்று. இறுதியாக III'ம் முகம்மதுவின் ஆற்றலற்ற பின் வழியினர், இராச்சியம் பிளவுபடுமாறு செய்தனர்.

## பகுதி 10

### பாமனி சுல்தானியராட்சியின் தன்மை

சுல்தான்களின் குறைபாடுகள் : பாமனி சுல்தான் களின் பெருமையை மெடோஸ்டெய்லர் என்ற அறிஞர், மிகைப்படுத்தியும், V. A. ஸ்மித் என்பார், குறைவுபடுத்தியும் கூறியுள்ளனர். பெரும்பான்மையான சுல்தான்கள் மதவெறி கொண்டவர்கள். II'ம் முகம்மதுவின் அமைதித்தன்மையும் அறிவும் காரணமாக, பெரும்பான்மையும் முகம்மதிய மக்களே நலம் பெற்றனர். அக்காலத்துக்குரிய மதவெறி, காவனேயும் பீடித்தது. இந்துக்கள் கொலைசெய்யப்பட்டதன்றி அரசின் வெளிப்புறத்திலும் கொலைகள் நிகழ்ந்துவந்தன. ஹுமாயூ னின்கீழ்க் கொடுங்கோன்மை அதன் உச்ச நிலையை யெய்தி யது. அக்காலச் சூழ்நிலையைக் கடந்துநின்ற பெருமை காவன் ஒருவரையே சாரும். குடியும் தீயொழுக்கங்களும் பல சுல்தான் களின் இயற்கைக் குணங்களாக அமைந்திருந்தன. இந்துக் கள் துயருற்றனர். அவர்களுடைய சமயமும் நினைவுச்சின்னங் களும் கேடுற்றன. நிகிதின், மக்களின் வருந்தத்தக்க நிலை லையும் உயர் வகுப்பினரின் பெருஞ்செல்வ வாழ்க்கையை யும் குறிப்பிடுவதிலிருந்து அக்கால ஆட்சியாளரின் குறுகிய மனப்பான்மை தெளிவாகிறது. காவன்மட்டும் சிறந்த விதி விலக்காக அமைகிருர்.

ஆட்சி முறை : வறுமைக்காலமல்லாத பிறகாலங்களில் உழவுத்தொழிலாளர் உரிமையுடன் தம் அலுவல்களைக்கவ னித்து வந்தனர். அண்மை நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து,

பாமனிநாட்டு மக்கள், மிகுந்த அளவுக்கு அயலார் கொடுமைகளினின்று விடுதலை பெற்றிருந்தனரென்றே கூறவேண்டும். அடுத்திருந்த இராச்சியங்கள் கொள்ளையடிக்கப்பட்டதால், வரிச்சுமை மிகுதியாக இல்லை. மக்களின் தொகை மிகுதியைப் பற்றியும், பயிர்ச்செய்கைச்சிறப்பு, சாலைகளின் காவல், பிரயாண வசதிகள் முதலியன பற்றியும் நிகிதின் குறிப்பிடுகிறார். உள்நாட்டு நிலையங்களும், ஊர் மாவட்ட உரிமைகளும் காக்கப்பட்டன. தெலிங்கானத்தில் நீர்ப்பாசனம் நன்முறையில் கவனிக்கப்பட்டது.

பண்புடைமை : முகம்மதியரின் கல்வி புறக்கணிக்கப் படவில்லை. ஒவ்வொரு பள்ளிவாசலிலும் ஒரு முல்லா காணப் பட்டார். இவரே ஊரின் மதகுருவாகவும் ஆசிரியராகவும் தொண்டாற்றினர். சிறந்த நகரங்களில் உயர்தரக்கல்விக்கான கல்லூரிகள் அமைக்கப்பெற்றன. காசியர் என்பார், உயர்தரக் கல்வியை மேற்பார்வையிட்டு வந்தனர். அராபியும் பாரசீகக் கல்வியும் ஆதரவு பெற்றன. அயல்நாட்டவரின் ஆதிக்கம் காரணமாக, தக்காணம், பாரசீகத்துடனும் மற்ற அயல் நாடுகளுடனும் கலைப்பண்புத் தொடர்பு கொண்டது. இராணுவத்தொர்பான கட்டடக்கலை மிகுதியாக வளர்க்கப்பெற்றது. தௌலதாபாத், பீடார் முதலிய பலவிடங்களில் அரண்கள் எடுக்கப்பட்டன. படை அமைப்பு முறையில் பாமனியர் ஐரோப்பிய முறை வழியே இயங்கிவந்தனர். குல்பர்கா கல்லறைகளில் துக்ளக் கட்டடமுறையைக் காண்கிறோம். பிரோஸ் காலத்தில் இந்திய, பாரசீகக் கட்டடமுறைகள் போற்றப்பட்டன. 1472'ல் காவன் நிறுவிய கல்லூரி மூன்று அடுக்குகளும், விரிவுரை மன்றங்களும் பேராசிரியர் அறைகளும், புத்தக நிலையமும், மசூதி ஆகியவற்றையும் பெற்று விளங்கியது. பாரசீகக் கட்டடக்கலையின் மாண்பை மிகுதியாக அதிற் காணமுடியும். குல்பர்காவிலும் பீடாரிலும் காசு அச்சிடும் சாலைகளிருந்தன. பொன், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் தில்லி காசு முறையையொட்டி, காசுகள் வெளியிடப் பட்டன.

## பகுதி II

## காண்டெஷ் நாட்டு பருக்கியர் (FARUKIS)

தில்லி சுல்தானுட்சிக்குட்பட்ட மண்டலத் தலைவருள் ஒருவர், பிரோஸ் துக்ளக் இறந்தபின், உரிமைபெற்று தப்தி பள்ளத்தாக்கில் காண்டெஷ் என்ற சிறிய இராச்சியத்தைத் தோற்றுவித்தாரென்று நம்பப்படுகிறது. ஆனால் "மாலிக் அஹமத் (காண்டெஷ் நாட்டைத் தோற்றுவித்தவர்) தில்லி மன்னனுக்குப் பகையாகக் கலகம் செய்யவில்லை; தக்காண பாமனி குலத்தை எதிர்த்து உரிமைபெற்றார்."[1] என்ற கருத்தும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. 1365'ல் I'ம் முகம்மதுவை எதிர்த்துக் கலகம் செய்து 1382'ல் தப்தி ஆற்றங்கரையில் தால்நர் என்ற இடத்தைச்சுற்றிய பகுதியைத் தன்வசப்படுத்திய பராம் கான் என்பானுடன் மாலிக் அஹமத் ஒத்துழைத்தாரென்று அறிகிறோம். இவரும் இவர் பின்வந்தோரும் பருக்கியர் எனப் படுவர். இவர் இந்துக்களை மகிழ்ச்சியுறச்செய்து அவர்கள் நம்பிக்கையைப் பெற்றார். இவரிறந்தபின் இச்சிறுநாடு, நாஸிர், ஹாஸன் என்ற இவருடைய இரு மக்களிடையே பிரித்துக் கொள்ளப் பெற்றது. நாஸிர்கான், 1400'ல் பர்ஹன்பூரைத் தோற்றுவித்ததுடன் அசிர்கார் என்ற கோட்டையை இந்தியத் தலைவரொருவரிடமிருந்து வஞ்சகமாகக் கைப்பற்றினர். 1417'ல் தம்முடன்பிறந்தானுடன் போரிட்டு அவனைச் சிறைப்படுத்திக் காண்டெஷ் முழுவதுக்கும் தம்மை அரசராக்கிக்கொண்டார். 1429'ல் பாமனி சுல்தான் II'ம் அலாவுதீனுக்கு நாஸிர்கானுடைய மகள் மணம்செய்து கொடுக்கப் பட்டாள். இவள் தன் கணவன்மீது சாற்றிய குற்றங்கள் காரணமாக நாஸிர், பேராரின்மேல் இருமுறை படையெடுத்துத் தோல்வியுற்றனர். பின்னர் காண்டெஷ் மன்னராக I'ம் அடில்கான் (1437—'41) I'ம் முபரக்கான் (1441—'57) II'ம் அடில்கான் ஆகியோர் ஆட்சி நடாத்தினர். II'ம் அடில்கான், கொள்ளையை ஒழித்து நாட்டினருக்குப் பல நலங்கள் புரிந்தார். இராச்சியம் சிறிது பெருகி மிகவும் வலிமையுற்றது. இவரே காண்டெஷ் நாட்டின் சிறந்த அரசருள்

1 Cambridge History of India, III, p. 294.

இறுதியானவர். இச்சிறு நாடு பதினாறும் நூற்றாண்டு முழுவதும் நிலைத்திருந்து 1601'ம் ஆண்டில் முகலாயப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. பரூக்கியரின் கட்டடக்கலை முறையில் ஓரளவு தனித்த கற்பனைத்திறம் காணப்பட்டபோதிலும், மிகுதியாக மாளவ நாட்டு முறை பின்பற்றப்பட்டிருப்பதைக் காணலாம்.

## அதிகாரம் 6

## விசயநகரம் *(1336—1509)*

## பகுதி I

### விசயநகர வரலாற்றுக்குரிய அடிப்படைச் சான்றுகள் *(1336—1509)*

கல்வெட்டுக்கள். மன்னர் குடிவழி, ஆட்சிப்பகுதிகள், நன்கொடையாளரின் அருஞ் செயல்கள், அவர்தம் மூதாதையர், அவர்கள் ஆதரவாளர், நன்கொடை அளிக்கப்பட்ட காலம் முதலியனவற்றையறிய விசயநகரக் கல்வெட்டுக்கள் மிகவும் சிறப்பாக உதவுகின்றன. அச்சுப்பதித்த அடையாளங்கள், பழித்துரைச் செய்யுட்கள், வணக்க வழிபாட்டு வேண்டுகோள்கள் முதலியன வரலாற்றுக்கு மிகவும் பயன்படுவன. ஆனால் பொய்யான குறிப்புகள், போலியான குடிவழி, வழக்கமான புகழ்ச்சிஉரைகள், தம் முன்னோரின் பட்டங்களையும், அருஞ்செயல்களைப் பின்னோர் சூட்டிக்கொள்ளல் முதலியவற்றைப் பொறுத்தவரை, மிகவும் கவனமாக இருத்தல் இன்றியமையாததாகும். 1336'க்குரிய I'ம் அரிஹரனின் பாகிப்பள்ளிச் (கோலார் மாவட்டம்) செப்பேடுகளின் சிறப்பு [அவை போலி அல்ல எனின்] மிகுதியாகப் போற்றற்குரியது. 1356'ம் ஆண்டுக்குரிய II'ம் சங்கமனின் (I'ம் கம்பணரின் மகன்) பிட்ரகுண்டா (நெல்லூர் மாவட்டம்) சாசனம், குடிவழி வரலாற்றைக் குறிப்பிடுகிறது. I'ம் சங்கமனின் ஐந்து குமாரர்கள், விசயநகரத்தின் தோற்றத்துக்கு உதவிய வரலாற்று உண்மை அதில் விளக்கப்படுகிறது. வேதங்களுக்கு விரிவுரை வழங்கிய

சாயனர், II'ம் சங்கமனின் அமைச்சரென்பதும் அதினின்று அறியக்கிடக்கிறது. ஸ்ரவணபெல்கோலாவில் கிடைக்கப்பெற்ற 1368'ம் ஆண்டுக்குரிய கல்வெட்டு (இராமானுசக் கல்வெட்டு) I'ம் புக்கராயனைப்பற்றிக் கூறும். வைணவம், சமணம் ஆகிய இரண்டைப்பொறுத்தவரை, மன்னன், அசோகனின் உணர்ச்சிகளைப் பெற்றிருந்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பல கல்வெட்டுக்களும் செப்பேடுகளும், விசயநகர வரலாற்றைப்பற்றிய செய்திகள் பலவற்றைக் கூருநிற்கும்.

வடமொழி, தெலுங்கு இலக்கியங்கள். கங்காதேவியின் "மதுராவிசயம்" அவள் கணவர் குமார கம்பணரின் வெற்றிகளைக் குறிப்பிடுகின்றது. கங்காதரன் இயற்றிய "கங்காதசப்பிரதாப விலாசம்" என்ற நாடக நூலில் விசயநகரம், பாமனி சுல்தானால் II'ம் தேவராயனுக்குப்பின் முற்றுகையிடப்பட்டு அஃது பயனற்றுப்போன செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இவை போன்ற சில வடமொழி நூல்களைத்தவிர, வீரபத்திரரின் "ஜெய்மினி பாரதம்", நந்தி மல்லையா, கண்டசிங்கய்யா ஆகியோர் இயற்றிய "வராஹ புராணம்" முதலிய தெலுங்கு நூல்களும், சாளுவர், துளுவர் ஆகியோரைப்பற்றிய சில குறிப்புக்களை அளிக்கின்றன.

பெரிஷ்டாவும் தபதபாவும். இவ்விருவரைப்பற்றி முன்னர் கூறப்பெற்றது. விசயநகரத்துக்கும் தக்காண முஸ்லிம் அரசுக்குமிடையே நிலவிய தொடர்பைத் தொடக்கம் முதல் இவ்விரு ஆசிரியரும் விளக்குகின்றனர். ஆனால் சில சமயங்களில் விசயநகர மன்னர்களின் பெயர்களை, அவர்தம் தானைத்தலைவர் பெயர்களுடன் கலந்து குழப்பம் விளைவிக்கின்றனர். தவிர, விசயநகரத்தின் பெருமையைக் குறைத்துச் சுல்தான்களை மிகுதியாகப் புகழும் தன்மை இவர்களிடம் காணப்படுகிறது. விசயநகரம், பாமனி ஆட்சிக்கு அடங்கியிருந்ததாக இவர்கள் கூறுவதை, அயல்நாட்டு ஆசிரியர்கள் உறுதி செய்யவில்லை. சில செய்திகளைப் பொறுத்தவரை, பெரிஷ்டாவைவிட, தபதபா நம்பத்தக்க சிறப்பான பல குறிப்புகளைத் தருகின்றார். பொதுவாக, இவ்விரு ஆசிரியரும் விசயநகரத்தைப்பற்றி அறிய உதவுகின்றனர்.

அயல் நாட்டு வழிச் செலவினர். இபின்பதூதா, 1342'ல் மேலைக்கடலோரத்தில் I'ம் அரிஹரனுக்குட்பட்டிருந்த முஸ்லிம் மானியப்பகுதியைக் குறிப்பிடுகிறார். ஆனால் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க அயல்நாட்டு ஆசிரியர் நிகோலாகோந்தி என்பார் சுமார் 1420'ல் விசயநகரம் வந்தடைந்தனர். பின், மைலாப்பூர், ஈழம், ஜாவா முதலிய இடங்களுக்குச் சென்று 1444'ல் தம் நாடான வெனிஸ் போய்ச்சேர்ந்தார். விசயநகரத்தைப்பற்றிய இவரது குறிப்புக்கள் பயனுள்ளவை. இனி, அப்துர்ரஸாக் என்ற அரசியற்றூதர் (தைமூரின் மகனும் பாரசீகம், நடு ஆசியா ஆகிய நாடுகளின் மன்னனுமான ஷா-உருக் (1404—'47) என்பாரால், கள்ளிக்கோட்டை மன்னனிடம் அனுப்பப்பெற்றவர்) 1443'ல் விசயநகரம் சென்று அதனைப்பற்றிப் பல செய்திகளை எழுதிப்போந்தனர். அதனேஷியஸ் நிகிதின் என்ற ருஷ்ய ஆசிரியர் இந்நகரைப் பற்றிச் சிறப்பித்துக் கூறியுள்ளதும் ஈண்டு குறிப்பிடத்தகும். தவிர, வர்த்தேமன் என்ற இத்தாலிய அறிஞர் விசயநகரைப் பற்றிக் கூறுவதுடன், அதன் மன்னர் தாம் அறிந்தவரை மற்ற யாவரையும்விட மிகுதியாகச் செல்வம் பெற்றவர் எனக்குறிப்பிடுகிறார். இறுதியாக, நூனிஸ் என்ற போர்த்துகீசிய வணிகர் சுமார் 1537'ல் இந்நகரைப்பற்றிய வரலாற்றை எழுதிவைத்துள்ளனர். கிருட்டினதேவராயருக்கு முற்பட்ட காலச்செய்திகளை அறிய அவர் குறிப்புக்கள் உதவுகின்றன. ஹம்பியில் இப்பொழுது காணப்பெறும் நினைவுச் சின்னங்கள், பெரும்பாலும் பதினாறும் நூற்றாண்டுக்கு உரியன.

## பகுதி 2

### விசயநகரின் தோற்றம்

காரணக் கூறுகள் : பதின்மூன்றும் நூற்றாண்டில் தென்னிந்தியாவில், பல்வேறு மரபினரிடையே போராட்டம் நிலவிய போதிலும், பொதுவாக, ஆட்சிஇயல் மக்களின் நலனுக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் ஏற்றதாக அமைந்திருந்தது. முகமதிய வரலாற்றறிஞர்களும் மார்க்கோபோலோவும் இவ்

வுண்மையை விளக்குகின்றனர். தென்னிந்தியநிலே அக்காலத்தில் மிகவும் சிறப்பாக வாணிக முன்னேற்றத்துக்கும் தொழில் வளர்ச்சிக்கும் ஏற்றதாக இருந்தது. ஆனால் முகமதியர் தென்னிந்தியாவில் படையெடுத்ததால் ஏற்பட்ட விளைவுகள் என்ன? மிகுதியாக மக்கள் - பெண்டிர், குழவிகள் உட்பட அருளின்றிக் கொலே செய்யப்பட்டனர். நாடுகளும் நகரங்களும் கொள்ளையிடப்பெற்றன. சமய நிலேயங்களாகவும் கல்விக்கூடங்களாகவுமிருந்த கோயில்களும் மடங்களும் தாக்கி அழிக்கப்பட்டன. பெரும்பான்மையும் மக்கள் தாழ்ந்த நிலேயில் வைக்கப்பெற்றனர். முகமதிய மதம் சில நிலேகளில் மக்களின்மீது திணிக்கப்பெற்றது. இதனல் அரசியல், பொருளாதார, சமய, ஆன்மீக, கலேப்பண்புத்துறைகளில் அழிவுபாடும் குழப்பமும் ஏற்பட்டன. குழப்பத்தை நீக்க முகமதியப் படை பயன்படுத்தப்பெற்றது. படையெழுச்சிகளும் மக்களின் துயரங்களும் இந்துக்களின் எதிர்ப்பு ஆற்றலே வலிமையடையச் செய்தன. போரூக்கம்பெற்ற இந்துக்கள் எதிர்ப்பு முன்னணியை அமைக்க முற்பட்டனர். முகம்மதுபின் துக்ளக், அவருடைய மாநிலத் தலேவர்கள் முதலியோரின் ஆட்சிமுறை, மக்களின் நன்னம்பிக்கையை அழித்தது. 1335'ம் ஆண்டு மாபார் கலகம், துயருறும் மக்களுக்கு யாதொரு நலனேயும் செய்யவில்லே. மிலேச்சத்தனமும் குருதிவெறியும் தொடர்ந்து வந்தனவேயன்றி குறையவில்லே. அங்நிலேயில் தென்னிந்தியச் சிற்றரசர்கள், கலகஞ்செய்து சீரமைப்பு ஏற்படுத்திக்கொள்வதே, தமது விடுதலேக்கு வழியென்று உணரலாயினர். இவ்வுணர்ச்சியின் விளேவே விசயநகரின் தோற்றமாகும். துங்கபத்திரா, கிருஷ்ண ஆறுகளுக்குத் தெற்கில் உள்ள இந்தியப் பகுதியை, இராணுவக் கூட்டுறவு முயற்சியின் மூலம் காப்பாற்ற முயன்றனர் சில இந்துத்தலேவர்கள்.

நகரின் கால்கோள்: முன் நிகழ்ச்சிகள்: நூனிஸ், இபின்பதூதா ஆகியோர் தரும் குறிப்புக்களேக்கொண்டு, விசயநகரின் தோற்றத்தை விளக்கப்புகும் சீவெல் என்னுமறிஞர் பல்வேறு வகையான ஏழு கதைகளேக் குறிப்பிடுவதுடன் நிகழ்ச்சிகளின் வரலாற்றைப் பின்வரும் முறையில்

அமைக்கிறார்[1]. முகம்மதுபின் துக்ளக்கிற்கும் ஆனெகுந்தி (ராய்ச்சூர் மாவட்டம்) அரசனுக்கும் பகைமை நிலவியது. அதன் விளைவாக, முகம்மது, ஆனெகுந்தியைத் தம்முடன் இணைத்துக்கொண்டார். ஆனால் அப்பகுதியிலிருந்த தமது அலுவலாளர் அங்கு அமைதியை நிலைநாட்ட முடியாமற் போகவே, அரிஹரன், புக்கன் என்ற இருவருக்கும் அது கொடுக்கப்பெற்றது. அவ்விருவரும் அப்பகுதியில் முன்பு முறையே அமைச்சராகவும் பொருட்காவலராகவும்இருந்தவர்கள். புதிய அரசன் அரிஹரன், ஆனெகுந்திக்கு அண்மையில் துங்கபத்திரா ஆற்றின் தெற்குக் கரையில் விசயநகரை அமைத்தார். "பேரரசுநகரின் (விசய நகரம்) தாயகமாக ஆனெகுந்தி சிறப்பிக்கப்படுகிறது"[1]. மேலும் அரிஹரனும் புக்கனும், ஆனெகுந்திக்குச் செல்வதற்குமுன்னர், வாரங்கல் மன்னர் II'ம் பிரதாபருத்திரனின் கீழ் பணியிலமர்ந்திருந்ததாக, அறிஞர் சீவெல் (Sewell) கருதுகிறார். விசயநகரத்தின் தோற்றத்தைப் பற்றி அயலவர்தரும் சான்றுகளும் உள்நாட்டுச் சான்றுகளும் முரண்பாடுடையனவாயுள்ளன இதனின்று, அத்தோற்றம், பலருடைய கூட்டுமுயற்சியாலேற்பட்டது என்ற உண்மை புலப்படுகிறது. ஒவ்வொருவரும் தத்தமக்கு உரிய செய்தியைச் சிறப்பித்தும் வற்புறுத்தியும் கூறியிருக்கக்கூடும். அதனாற்றான் வேறுபாடான பல செய்திகள் நமக்குக் கிடைத்துள்ளன. ஆனெகுந்திக்கு, சுல்தான் உரிமையாட்சியை வழங்கியதாக உள்ளசெய்தி அச் சுல்தானின் இயல்புக்கு ஏற்றதொரு செயலாகத் தோன்றவில்லை. ஹொய்சல மன்னர் III'ம் வல்லாளர் விசயநகரத்தின் தோற்றத்திற்குக் காரணமாயினர் என்றும் அச்செய்தியைக் கல்வெட்டுக்கள் வலியுறுத்துகின்றன என்றும் முன்னர் கூறப்பட்டது. சிறப்புவாய்ந்த ஹொய்சல மன்னருள் இறுதியானவரே விசயநகரப் பேரரசை அமைத்தவர். அவருடைய மானியக்காரரும் அலுவலாளருமான I'ம் அரிஹரன் I'ம் புக்கன் I'ம் கம்பணன், மாறப்பன், முத்தப்பா முதலியோரின் செயல்கள் பேரரசின் தோற்றத்துக்கு உதவின. நூனிஸ் தரும் குறிப்புகளிலும் மேற்கூறிய செய்திக்குச் சான்றிருப்பதாக, விளக்கங்கொடுக்கமுடியும்.

---

1 & 2 R. Sewell, A Forgotten Empire (1900; Reprinted 1924,) pp. 16—23 & 83

காலம்: பெல்லாரி மாவட்டத்தில் ஹோஸ்பெட்டுக்கு அண்மையிலுள்ள ஹம்பி என்ற இடமே முற்கால விசயநகர மாகும். அந்நகருக்கு, விரூபாக்ஷபுரம், ஹோசப்பட்டினம், வித்தியாநகரம், விசயநகரம் முதலிய பல பெயர்கள் இருந்தன. III'ம் வல்லாளர், தாம் தங்கியிருக்கும் தலைநகரான விரூபாக்ஷ புரத்திலிருந்து மகிழ்ச்சியுடன் அரசியல் நடத்தியதாக, 1339'ம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. அவருடைய மகன் ஹோசப்பட்டினத்தில் முடிசூட்டிக்கொண்டதாகவும் குறிப்பு உளது. விரூபாக்ஷர் கோயில் கல்வெட்டொன்றிலிருந்து, ஹம்பி, ஹொய்சல நாட்டிற்குட்பட்டிருந்ததென அறிகிறோம். 1348'ம் ஆண்டுக்குரிய, முதலாம் அரிஹரனின் குறிப்பு, அவருடைய தலைநகரம் வித்தியாநகரம் என அறிவிக்கிறது. "ஹொய்சலப் பேரரசை உயர்வடையச் செய்த" முதலாம் புக்கன் துவார சமுத்திரத்திலிருந்து ஆட்சி புரிந்ததாக 1352'ம் ஆண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. அவருடைய தலைநகர் ஹோசப் பட்டினம் (புதிய நகரம்) என்று 1354'ம் ஆண்டுக் குறிப்பு அறிவிக்கிறது. 1355'ம் ஆண்டின் மற்றொரு குறிப்பி லிருந்து அவர், வித்தியாநகரத்திலிருந்ததாக அறிகிறோம். 1378'ம் ஆண்டின் கல்வெட்டு, அவர், "உலகை" வென்ற பிறகு, உலகிலே மிகச் சிறந்ததாக, அதாவது தலைநகராக விஜயம் என்ற நகரை அமைத்தனர் என்று குறிப்பிடுகிறது. ஆகவே, மூன்றும் வல்லாளர், 1339'ம் ஆண்டிலோ அல்லது அதற்கு முன்னரோ, விசயநகரத்துக்குக் கால்கோள் நாட்டி யிருக்கவேண்டும். ஆதலால் மரபுரையாக உள்ள 1336 என்ற ஆண்டு ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதேயாகும். வடக்கி லிருந்து ஏற்படக்கூடும் படையெழுச்சியின் நின்று தம் நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் மூன்றும் வல்லா ளர், விசயநகரை அமைத்திருந்ததாகத் தெரிகிறது. நகர் அமைந்துள்ள இடம், அந்நோக்கம் நிறைவேறுவதற்குத் தகுதி யானது என்பது, அந்நகரின் நில அமைப்பினின்று நன்கு புலனாகும். அப் பேரரசர், கண்ணனூரைப் பெறுவதற்காக, மதுரை சுல்தானுடன் போருக்கான முன்னேற்பாடுகள் செய்து வந்ததால், வடக்கு எல்லையை வலிமையுறச் செய்வது இன்றி யமையாததாகியது.

# விசயநகரப் பேரரசு 1336-1509



விசயநகரம் அமைந்த இடத்தின் சிறப்பு: அரசன் வேட்டைக்குப் போகையில், ஒரு முயல் வேட்டைநாய்களை எதிர்த்துக்கடித்த வியத்தகு நிகழ்ச்சியைக் கண்டதாகவும், துறவி வித்தியாரண்யரின் அறிவுரையின்படி, அந்நிகழ்ச்சி ஏற் பட்ட இடத்தில் ஒரு சிறப்பு இருப்பதாக நம்பி அங்கு ஒரு நகரை நிறுவியதாகவும், நூனிஸ், ஒரு கதையைக் குறிப்பிடு கிறார். பாமனி நாட்டின் தலைநகர், குல்பர்காவிலிருந்து பீடா ருக்கு மாற்றப்பட்டமைக்குக் காரணமாக, அதேபோன்ற கதை ஒன்று கூறப்படுவதும் நோக்கத்தக்கது. வீரகாவியம் சிறப்பிக் கும் கிஷ்கிந்தை, துங்கபத்திரா ஆற்றங்கரையில் ஹம்பிக்கு அண்மையிலிருந்ததாகப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். இராமாயணம் குறிப்பிடும் பம்பாசரஸ் (குளம்) ரிஷ்யமூக பர்வதம், மாதங்கமலை, மலையவந்தக்குன்று முதலிய சில பெயர் கள், நகரைச்சுற்றிய பகுதியில் இன்றும் நிலவி வருவதைக் காண்கிறோம். அப் பகுதியில் உள்ள குரங்குகள், வாலி, சுக்ரீவரின் மரபினர் என்றும் அங்கு மிகுதியாக உள்ள கற் பாறைகள், இராமாயணத்தில் கூறப்பெறும் பாலம் கட்டுவ தற்காகச் சேகரித்தவற்றுள் பயன்படுத்தப் பெருதவை என்றும் சில அன்பர்கள் நம்புகிறார்கள். அப்பகுதியில் அனுமான் சிறப்பு வாய்ந்த கடவுளாக வழிபடப்பட்டு வருவதையும் அவர் கள் குறிப்பிடுகிறார்கள். மன உணர்ச்சி மேலிடுதலின் காரணமாக தலைநகருக்கான இடங்களைத் தேர்ந்தெடுத்தலென் பது உலக வரலாற்றில் நாம் காணும் உண்மைச் செய்தி. எனினும் அஃது, விசயநகரைப்பொறுத்தவரை எத்துணை அளவு உண்மை என்பதை நாமறியோம். தீவக்குறை (Peninsular) இந்தியாவின் நடுப்பதியில் விசயநகரம் அமைந்தது. ஹம்பி யினருகில் துங்கபத்திரா ஆற்றின் ஓட்டம் விரைவாக இருப்ப துடன், நீர்வீழ்ச்சிகளும் அருவி பாய்ந்து உண்டான கெவி மலைப் பள்ளங்களும் உள்ளன. மழைக்காலத்தில் நீரில் இறங்கி ஆற்றைக்கடந்து செல்லமுடியாது. பெல்லாரி மாவட்டத்தில் மழையும் மிகக் குறைவு. வரட்சிக்காலத்திலும் செழிக்கக் கூடிய செடி கொடிகளும் பாறைக்கற்கள், முதலைகள், குரங்கு கள் முதலியனவும் அங்கு மிகுதியாக உள்ளன. முகம்மதிய ரின் குதிரைப்படை, குன்றுகளடர்ந்த அந்நிலப்பகுதியில் சிறப்

பாகச் செயலாற்ற முடியாது என்ற உண்மையும் ஈண்டு சிந்திக்கத்தக்கது. ஆகவே, தற்காப்புக்காக அமைந்த இந்துப் பேரரசு எல்லைப்புறத்தில் சிறந்த இயற்கை அரண்களுடன் கூடியதாக இருத்தல் இன்றியமையாதது என்ற நோக்கத் தால், தலைநகரங்களுக்குரிய இடம் இவ்வாறு தேர்ந்தெடுக் கப்பட்டிருக்க வேண்டும். "ஹம்பி, கருங்கற் குன்றுகள் நிறைந்த பகுதி. அவற்றில் சிறிதுகூட புல்லைக்காண முடியாது. நூற் றுக்கணக்கான கண்டிகள் எடையுள்ள பெரும்பாறைக் கற்கள் அங்குமிங்கும் குவிந்து கிடக்கக் காண்கிறோம். கண்ணுக் கெட்டிய வரையில் கற்பாறைகளின் காட்சிதான்! 250 அடி உயர அளவுக்குக்கூடக் கற்குவியல்கள் காணப்படுகின்றன. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட பழம்பொருட் சின்னங்கள், பெல்லாரி மாவட்டத்தில் காணக்கிடக்கின்றன. அவ்வுடை யாளங்களுள்ள எழுபத்துஏழு இடங்களை அறிஞர் R. புரூஸ் பூட் (Bruce Foote) குறிப்பிடுகிறார். அவற்றில் முப்பத்து ஆறு மிகவும் சிறப்பானவை. புதிய கற்காலத்துக்குரிய சீர் திருத்தப்பட்ட கற்கருவிகள் ஆக்குந் தொழிற்சாலையாக அப் பகுதி அமைந்திருந்தது. அப்பகுதியினர் சாதவாகனராட்சியின் தோற்றத்தைக் கண்டதாகச் சில அறிஞர்கள் கூறுவர். மேலைச் சாளுக்கியருடனும் ஹொய்சலருடனும் அப்பகுதி இணைக்கப் பட்டிருந்ததாகக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இணையற்ற புகழ்பெற்ற ஓர் தலைநகர் அப்பகுதியில் தோன்றிச் சீரும் சிறப்பும் ஓங்க உலகோர் கருத்தைக் கவரும் வகையில் ஒளி விட்டுத் திகழ்ந்தது என்ற செய்தி வியப்புக்குரியதே. நகரை அமைத்த பெருமக்கள், பாலைவனத்தைச் சோலைவனமாக்கும் அரிய ஆற்றல் பெற்றவர்கள் என்பது தெளிவு.

வித்தியாரண்யர். தலைநகருக்கு ஏற்ற இடத்தைக் குறிப் பிட்ட வித்தியாரண்யர், அந்நகரின் பிற்காலச் சிறப்பை முன்ன தாகவே அறிவித்ததாகவும் அவருடைய பெயரை ஒட்டியே நகருக்குப் பெயரிடப்பட்டதாகவும் அறிஞர் நூனிஸ் கூறுகிறார். நகருக்கு கால்கோள் நாட்டியது அத்துறவியே என்று சில கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. மாதவ வித்தியாரண்யர் என்னும் அப்பெரியார் (1302—'87) மாயனரின் மகனவர்.

சாயணர், போகநாதர் இருவரும் அவருடன்பிறந்தோர்கள். வித்யாரண்யர், சிருங்கேரி மடத்தின் தலைவராக விளங்கினர். அவர் "சிறந்த அரசியல் அறிஞர் என்றும் பேரரசு அமைப்பாளர்" என்றும்[1] புகழப்பட்டிருப்பினும், இந்து உரிமை இயக்கத்திற்கு அவர், ஒழுக்கம் சார்ந்த அறவுரை வழங்கியதன்றி, வேறெவ் வகையில் உதவிபுரிந்தாரென்பதைப்பற்றித் தெளிவாக எதை யும் நாம் கூறுவதற்கில்லை. சங்கம சகோதரர்கள் (சங்கமனின் குமாரர்களாகிய அரிஹரன் முதலிய ஐவர்) 1346—7'ல் சிருங்கேரி மடத்திற்கு உதவிப்பொருள் வழங்கினர்.

சங்கம மானியக்காரர். சங்கம சகோதரர்களை ஹொய் சலருடன் இணைக்கும் சான்றுகள் பலவுள. சிறப்பாகக் கல்வெட்டுச் சான்றுகள் குறிப்பிடத்தக்கன. I'ம் புக்கண், ஹொய்சல நாட்டில் ஒரு ஆட்சியாளரென்பதை அவருடைய காலத்தின் முற்பகுதிக் குறிப்புக்கள் அறிவிக்கின்றன. II'ம் கம்பணர், ஹொய்சல அரசனின்கீழிருந்த ஒரு அலுவலாளர் என்று அறியக்கிடக்கிறது. III'ம் வல்லாளர், விசயநகரின் தோற்றத்துக்குக் காரணமாவர் என்று பெரிஷ்டா உறுதியாகக் கூறுகிறார். அந்த ஹொய்சல மன்னருடன், வாரங்கல்நாட்டு கிருஷ்ணப்ப நாயக்கர், (பொதுப் பகைவரான முகமதியரை எதிர்த்து,) ஒத்துழைத்ததாகவும் அவ்வறிஞர் குறிப்பிடுகிறார். III'ம் வல்லாளரின் மானியக்காரராயிருந்த சங்கம சகோத ரர்கள், மன்னர் இறந்தபின் அவருடைய நோக்கத்தை தொடர்ந்து நிறைவேற்ற முற்பட்டனர். 1346'ல் IV'ம் வல்லாளர் இறந்தபின் அம்மானியக்காரர் உரிமைபெற்றனர்[2].

---

1. S. Srikantaya. Founders of Vijayanagara (1938) p. 157.

2. H. Heras, Beginnings of Vijayanagara History (1929), pp. 61—65. & 118 & 22; B. A. Saletore, Social and political Life in the Vijayanagara Empire, I (1934), pp. 23—39. Contra N. Venkataramanayya, Vijayanagara—origin of the city and the Empire (1933), p. 101.

# பகுதி 3

## முதலாம் அரிஹரனும் முதலாம் புக்கனும்

முதலாம் அரிஹரன் (1336—'55) III'ம் வல்லாளரின் கீழ் (I'ம்) அரிஹரன் பெற்றிருந்த பதவிநிலையைப்பற்றித் தெளிவாகக் கூறுவதற்கில்லை. எனினும் 1346'ல் அவர் உரிமைபெறுவதற்கு முன்னரே, ஹொய்சலநாட்டில்அவருடைய செல்வாக்குப் பரவியிருந்தது. அவரும் அவர்உடன்பிறந்தாரும் சிறப்பு எய்துவதற்கு முகம்மது துக்ளக்கின் படையெழுச்சியும் துவாரசமுத்திர அழிவுபாடும் (1327) வாய்ப்பு அளித்திருக்க வேண்டும். III'ம் வல்லாளர் மதுரை சுல்தானியருடன் போரிடுவதில் தம் முழுக்கருத்தையும் ஊன்றியிருந்ததால் வடக்கு எல்லையைக் காவல்செய்ய உதவும் "புதியநகரை"ப் பற்றிய பொறுப்புக்கள் அரிஹரனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கக் கூடும். அரிஹரனின் மானியக்காரரில் ஒருவன் பாதாமி கோட்டையைக் கட்டியதாக 1340'ம் ஆண்டுக்கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. மேலைக் கடலோரத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்த சுல்தானுயிருந்த ஜமால்-உத்தீன் முகம்மது, அரிஹரனின் மானியக்காரன் என்று இபின்பதூதா கூறுகிருர் (1342). அரிஹரன், கிருஷ்ணப்ப நாயக்கருடன் இணைந்து கொண்டு, தௌலதாபாத் நீங்கலாக உள்ள தக்கணத்தில் தில்லியின் ஆட்சியை அழித்தாரென்று பெரிஷ்டா எழுதுகிருர். (1343—4). 1346—7'ல் வழங்கப்பட்ட சிருங்கேரிமட நன்கொடைக்குறிப்பு, அரிஹரன், கிழக்குமேற்குக் கடற்பகுதிகளுக்கும் இடைப்பட்ட நாடுமுழுவதுக்கும் ஆட்சியாளர் என்று கூறுகிறது. 1348'ம் ஆண்டுக்கல்வெட்டினின்று அவருடைய தலைநகர் வித்யாநகரம் என்று அறியலாகும். இவை யாவும், IV'ம் வல்லாளர் இறந்த பிறகு அவருடைய (அரிஹரனின்) அரசியல் நிலை சிறப்புற்று வநதது என்பதைக் காட்டுகின்றன. குமார கம்பணர் (புக்கனின் மகன்) தம்முடைய பெரிய தந்தையின் ஆட்சிக்காலத்தில் விசயநகரப் படைகளை மதுரை வரை செலுத்திச் சென்ருர். அவ்வரசு தெற்கில் பரவியிருந்தமையை வலியுறுத்த அரிஹரனின் கோமல் (தஞ்சாவூர் மாவட்டம், மாயவரத்திற்கருகில்) செப்பேட்டின் சான்று உளது.

விசயநகரில் விருபாக்ஷர் கோயிலுக்கு அம்மன்னரின் உதவி கிடைத்தது. I'ம் அலாவுதீனின் வெல்லற்கரிய படையின் முன் அரிஹரன் புறமுதுகு காட்டினுரென்று தபதபா கூறுவதும், 1357'க்கு முன்னர் அச்சுல்தான், விசயநகரைத் தாக்கிச் சூறையாடியதாகப் பெரிஷ்டா குறிப்பிடுவதும் எத்துணை அளவுக்கு உண்மைச் செய்திகள் என்று முடிவு செய்வது எளிதன்று.

முதலாம் புக்கன். (1355—76) சங்கம அரசர் ஐவரில் மிகவும் சிறப்பு வாய்ந்த I'ம் புக்கனும் அவருடைய இளையமகன் குமார கம்பணரும், விசய நகர அரசின் பெருக்கத்துக்கு மிகுதியாக உழைத்தனர். முதலாம் அரிஹரன் இறக்கும் முன்னரே, புக்கன் அவருக்குப் பின் அரசு ஏற்குமாறு அமர்த்தியிருந்தபடியால் அவர் முறையின்றி அரசைக் கைப்பற்றிக்கொண்டார் என்ற கோட்பாடு ஏற்புடைத்தன்று. அவராட்சிக் காலத்தில் கம்பணர், மதுரை சுல்தானிய ராட்சியை முடிவுறச் செய்து மூல்பகாலுக்கும் (கோலார் மாவட்டம்) தமிழ்நாட்டுக்கும் அரசப்பிரதியாக அமர்ந்தார். அவர் மனைவி எழுதிய காவியம் (மதுராவிசயம்) அவர் கொங்குதேசத்தை வென்றதைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ஆனல் அச்செய்தி கோயம்புத்தூர் மாவட்டத்தில் கிடைக்கப் பெறும் 1373'ம் ஆண்டுக்குரிய அவருடைய கல்வெட்டுகளிலிருந்து அறியக்கிடக்கிறது. அடுத்த ஆண்டில் கம்பணர் (தம் தந்தை இறக்குமுன்னரே) இறந்துவிட்டார். புக்கன், ஒரிஸ்ஸாவை வென்றதாக நூனிஸ் கூறுகிருர். "மகாராசாதிராசன்" "இராச பரமேச்வரன்" "கிழக்கு, மேற்கு, தெற்கு மாக்கடல்கட்குத் தலைவன்" முதலிய பட்டங்களை அவர் சூடிக் கொண்டார். சமணர், வைணவர்மீது குற்றஞ்சாட்டி முறையிட்டுக் கொண்டதைப் புக்கன் கேட்டு இருதிறத்தாருக்கும் நல்லுறவு ஏற்படுத்தினர். அவ்வமயம் அவர் கூறிய அறிவுரையாவது:- சமணருக்குத் தீங்கு இழைத்தால் அது தமக்குச் செய்துகொண்ட தீங்கு என்று வைணவர்கள் உணர வேண்டும்; சமண சமயத்துக்கு வைணவர்கள் நன்மையைச் செய்வாராயின் அது தமது மதத்துக்குச் செய்துகொண்ட நன்மையாகும்." மேலும் அரசன் அவ்விரு பிரிவினரிடையே

உண்மையான வேறுபாடு இல்லை. ஆதலால் அவர்கள் யாவரும் ஒரே குழுவினர்தான் என்பதை வற்புறுத்திக் கூறினர். 1374'ல் அவர் த ம து அலுவலாளரையும் நஞ்சை மாற்றும் தன்மைபெற்ற மணிக்கல் ஒன்றையும் சீனப்பேரரசனுக்கு அனுப்பி வைத்தார். புக்கன், I'ம் முகம்மதுவுடன் இரு போர்கள் நிகழ்த்தினர். ஆனல் 1367'ம் ஆண்டு போரில் தோல்வியுற்றார். இவர் முஜாகித்துடனும் பொருதார். சுல்தான், இ வ ரை ராமேஸ்வரம் வரையிலும் அதற்குப் பின் விசயநகருக்கும் விரட்டிப் பின்தொடர்ந்து சென்று முடிவில் அவமதிப்புடன் த ன் ஞ டு போய்ச் சேர்ந்ததாக பெரிஷ்டா குறிப்பிடுகிருர். "விசயநகர அரசர்கள், பாமனியரை விட குறிப்பாக முஜாகித் காலத்தில், அதிகாரம், செல்வம், நாட்டின் எல்லைப்பெருக்கம் முதலியவற்றில் சிறப்பு வாய்ந்திருந்தனர்; துலிங்கான நாடு முழுவதும் பாமனியராட்சிக்கு உட்படவில்லை. கோவாத்துறைமுகமும் பெல்காம் கோட்டையும், கருநாடக நாட்டில் உட்படாத வேறுசில இடங்களும், துளு நாட்டின் பல மாவட்டங்களும் விசயநகர மன்னருக்கு உரியனவாய் இருந்தன. அவர் நாட்டில் மக்கள் மிகுதியாக அரசருக்குக் கீழ்ப்படிந்தே இருந்தனர். மலபார் ஈழம் முதலிய பல நாட்டு அரசர்கள் விசயநகர அரசரின் அவைக்கு அரசியல் தூதுவர்களை அனுப்பியிருந்தனர். ஆண்டுதோறும் மிகுந்த பரிசுகளும் அவ்வரசர்களால் அனுப்பப்பெற்றன."[1]

## பகுதி 4

### இரண்டாம் அரிஹரனும் அவர் பின் வந்தோரும்

இரண்டாம் அரிஹரன். (1376-1404) இம்மன்னர் ஆட்சிக்காலத்தில் மதுரை சுல்தானியராட்சி அடியோடு அழிவுற்றது (சுமார் 1378). 1378'ல் இவர் ராய்ச்சூரை முற்றுகையிட்டார். ஆ ஞ ல் II'ம் முகம்மது பட்டமேற்றவுடன் முற்றுகை கைவிடப்பட்டது. 1398'ல் இவர் பிரோஸுடன் நடாத்திய போர், தெ ளி வா ன முடிவை அளிக்கவில்லை. போருக்கு முன்பிருந்த நிலைமையே தொடர்ந்துவந்தது. அரி

---

1 Briggs, op. cit., II, pp 337-8.

ஹரனின் நல்லூர் நன்கொடைக் குறிப்பு (1399'ம் ஆண்டுக்குரியது) அவருடைய பல்வேறு பட்டங்களை அறிவிக்கிறது. அவை "சிறப்புவாய்ந்த மன்னர்க்கெல்லாம் மன்னர்; அரசர்க்கெல்லாம் தனிப்பெருந்தலைவன்; கிழக்கு, தெற்கு, மேற்கு,, வடக்கு (!) மாக்கடல்களின் தலைவன்; வேதவிளக்கவுரைகளை வெளியிடுவோன்; வேத ஆணைகளை நிறைவேற்றுந்தலைவன்." முதலியனவாம். ஈழத்தைப் பற்றி யாதும் குறிப்பிடப்படவில்லை. "ராஜவியாசர்" "ராஜவால்மீகி" என்னும் அவருடைய இலக்கியப் பட்டங்களைச் சில கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. சைவம், வைணவம், சமணம் ஆகிய மூன்று மதங்களும் அவருடைய உதவியைப் பெற்றன. அவர் திருக்காளத்தி, சீசைலம், சிதம்பரம், அஹோபிலம், திருப்பதி, சீரங்கம் முதலிய இடங்களிலுள்ள கோயில்களுக்கு நன்கொடைகள் வழங்கினார். அவருடைய அமைச்சரும் சிறந்த படைத்தலைவருமான இருகப்பா என்பார் ஒரு சமணர் 1385'ல் இவரால் தலைநகரில் ஒரு சமணக் கோயில் எடுக்கப்பட்டது. அமைச்சர், "நானார்த்த ரத்தினமாலா" என்னும் நிகண்டு ஒன்றைத் தொகுத்தார். ஒவ்வொரு சொல்லுக்கும் உள்ள பல பொருள்களை இதிற் காணலாம். வடமொழி இலக்கியத்தில் மிகச்சிறந்த நூல்களில் இதுவும் ஒன்றாகும். 1422 வரை இவ்வமைச்சர் சிறந்த முறையில் பணியாற்றிவந்தார். பதினான்காம் நூற்றாண்டினிறுதியில், துங்கபத்திரா, கிருஷ்ணா ஆறுகளுக்குத் தெற்கிலுள்ள இந்தியாவில் விசயநகரம் தலைசிறந்தநாடாக விளங்கியது. பேரரசில் தனித்தனி அரசப் பிரதிநிதிகளைக் கொண்ட ஆறு பெரும் பிரிவுகள் இருந்தன:- துளுராச்சியம் (தலைநகர்கள்: பாரக்பூர், மங்களூர்); மலைராச்சியம் (ஷிமோகா மாவட்டமும் வட கன்னடத்தின் ஒரு பகுதியும்; தலைநகர், வனவாசி); முலுவாயிராச்சியம் (பங்களூர், கோலார், மைசூர் மாவட்டங்கள்; தலைநகர், முல்பகால்); உதயகிரி ராச்சியம் (நெல்லூர், கடப்பை மாவட்டங்கள்; தலைநகர்கள், நெல்லூரும் உதயகிரியும்); பெனுகொண்டா ராச்சியம்; இராசகம்பீர ராச்சியம் (சோழ பாண்டிய நாடுகளையும் கொங்குதேசத்தையும் தன்னுட்கொண்ட பகுதி).

**விசயநகரின் வெற்றி:** விசயநகரின் முற்பகுதி அரசர்களின் வெற்றிகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. முகம்மதுபின் துக்ளக்கின் ஆட்சிமுறைக்குப் பகையாகத் தோன்றிய பொது எதிர்ப்பும், மாபார் கலகமும் அவ்வெற்றிகளுக்கு உதவின. முகம்மதியப் படையெழுச்சிக்காலங்களில் சிற்றரசர்களும் மக்களும் ஆற்ருெணுத் துயரத்துக்கு உட்பட்டிருந்ததால் நீண்டகாலமாகவே, முஸ்லிம் ஆட்சியின் நின்று விடுதலைபெறவேண்டுமென்னும் உணர்ச்சி தென்னிந்தியாவில் வலிமையடைந்து வந்தது. அதன் விளைவாக அமைந்த முன்னேற்பாடுகள் விசயநகரின் வெற்றிக்குக் காரணங்களாம். ஆயினும் ஆந்திர நாட்டிலும் தமிழ் நாட்டிலும் அவ்வாட்சிக்கு எதிர்ப்பு இருந்தது. இந்து உரிமை இயக்கத்துக்கு மூன்ரும் வல்லாளர் அளித்த ஊக்கம், புகழ்பெற்ற ஐந்து சகோதரர்களால் பெருக்கமுற்றது. குறிப்பாக "பஞ்சசங்கமரில் அர்ச்சுனன்" எனத்தக்க முதலாம் புக்கனும் அவர்மகன் குமார கம்பணரும் ஆற்றிய அருஞ் செயல்கள் குறிப்பிடத்தக்கன. விசயநகரின் எழுச்சி திடீரென ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியாயினும், மாலிக்காபூரின் படையெடுப்புக்காலத்திலிருந்து மக்கள் அடைந்துவந்த மாளாத் துயர், அவ்வெழுச்சிக்கு நீண்டகால முன்னேற்பாட்டைச் செய்துவந்தது.

இரண்டாம் புக்கனும் (1404 - 06)

முதலாம் தேவராயரும் (1406 – 22) II'ம் அரிஹரனின் மூத்த மகனை II'ம் புக்கனின் குறுகியகால ஆட்சிக்குரிய கல்வெட்டுக்கள், அம்மன்னரும் அவருடன் பிறந்தோரான I'ம் விருபாட்சர் I'ம் தேவராயர் ஆகியோரும் விசயநகரத்திலிருந்து ஆட்சி புரிந்ததாகக் குறிப்பிடுகின்றன. ஆனல் அரசுரிமைப்போட்டி யாதேனுமிருந்ததா என்பது பற்றித் தெளிவாக அறியப்படவில்லை. I'ம் தேவராயர், பிரோஸுடன் இருபோர்கள் நிகழ்த்தினர். 1406'ல் நடந்த முதற்போரில் தேவராயர் தோற்ருர். ஆனல் 1419'ல் நடைபெற்ற இரண்டாவது போரில் விசயநகரம் முடிவான வெற்றியைப் பெற்றது. தேவராயருடைய ஆட்சியைப்பற்றிய கல்வெட்டுக்கள் குறிப்பிடும் கால

முறை ஈண்டு பின்பற்றப்பட்டுள்ளது. விசயநகரை 1420'ல் நிகோலோகோந்தி பார்வையிட்டார். அஃது அறுபது மைல்கள் சுற்றளவுள்ளதாகவும், வலிமை வாய்ந்த 90,000 போர் வீரர்களைப் பெற்றிருந்ததாகவும் அவர் சிறப்பிக்கிருர். மேலும் அவர் கூறுவதாவது:- "பேரரசர், மற்ற இந்திய அரசர் யாவரையும்விட மிகுதியான வலிமை வாய்ந்தவர்." "அவருடைய உவளகம் 12,000 உறுப்பினரைக் கொண்டது". தீபாவளி, நவராத்திரி முதலிய விழாக்களைச் சிறப்பிப்பதுடன் அவ்வறிஞர், ஒரே காலத்தில் பல மனைவியரை ஏற்கும் முறை, சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம், சமயச் சார்பான தற்கொலை முறைகளிரண்டு, மூன்று கடுந்தேர்வு முறைகள், காகிதமின்மை, கடனைச்செலுத்த முடியாதவர்களைக் கடன்கொடுத்தோருக்கு அடிமைப்படுத்தும் கடுமையான கடன் சட்டங்கள், முதலியவற்றைக் குறிப்பிடுகிருர். அவர் தரும் குறிப்புக்கள் மிகவும் பொதுத்தன்மை வாய்ந்தனவாக இருப்பது ஒரு பெரும் குறைபாடாகும்.

விசயர் (1422—24). I'ம் தேவராயரின் மகனை விசயரின் கல்வெட்டுக்கள் 1408 முதல் 1424 வரை உள்ள காலப்பகுதிக்கு உரியன. ஆனல் 1422'ம் ஆண்டிலிருந்துதான் அவருக்குப் பேரரசப்பட்டங்கள் குறிக்கப்பட்டுள்ளன. 1410'ம் ஆண்டுக்குரிய அவருடைய தண்டபள்ளி (வடஆற்காடு மாவட்டம்) செப்பேடுகள் அவர், மூல்பகாலில் அரசப் பிரதிநிதியாக இருந்த காலத்தைக் குறிப்பிடுகின்றன. அம்மன்னன், குலகுரு கிரியாசக்தி என்பாரைப் பெருமைப்படுத்த கிரியாசக்திபுரம் என்ற இடத்தைத் தோற்றுவித்தார் என்று அறிகிருேம். சங்கம அரசர்களின் சைவசமயக்கோட்பாடுகளை அவர்தம் குறிப்புக்கள் அறிவிக்கின்றன. 1419'ல் ஏற்பட்ட தோல்விக்காக, விசயநகரின்மீது பழிதீர்த்துக்கொள்ள முற்பட்ட ஆமது சுல்தானல் விசயர்தோற்கடிக்கப்பட்டார்.

## பகுதி 5

### இரண்டாம் தேவராயர்

இரண்டாம் தேவராயர் (1424—47). விசயநகரப் பேரரசு, பதினைந்தாம் நூற்ருண்டின் தொடக்கத்திலிருந்ததை

விட மிகுதியான அளவுக்கு II'ம் தேவராயரின்கீழ் பரவி யிருந்தது. அவ்வளர்ச்சிக்கு II'ம் புக்கரும் I'ம் தேவராயரும் உதவியிருந்தனர். பேரரசு (1443'ல்) இலங்கைத் தீவின் எல்லையிலிருந்து குல்பர்காஎல்லைவரை (சுமார் 3000 மைல்கள்) பரவியிருந்ததாகவும், அதன் தானைத்தலைவன் இலங்கைக்குச் சென்றதாகவும்[1] ரஸாக் குறிப்பிடுகிறார். விசயநகரப் பேரரசு முழுவதிலும் பல இடங்களில் II'ம் தேவராயரின் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. முதற்குலத்தின் (சங்கம குலத்தின்) ஆட்சியில் இம்மன்னரின் காலப்பகுதி மிகவும் சிறப்புவாய்ந்ததாகும். இலக்குமீதரன் அல்லது லக்கண்ணு என்ற தலைமை அமைச்சரும் அவருடன் பிறந்தவரான மாதண்ணுவும் சிறந்த அறிஞர்கள். மன்னரின் வெற்றிக்கு அவர்கள் ஆற்றிய உதவி போற்றத்தக்கது. 1436'ல் பாமனி அரசு, விசய நகரைத் தாக்கியதால், இந்துப் பேரரசின் படை, 1442'ல் சீர்திருத்தி அமைக்கப்பெற்றது. முகமதியரும் படையில் சேர்க்கப்பட்டனர். குரான் நூலொன்று அரியணையின் முன்பு வைக்கப்பெற்றது. ஒரு பள்ளிவாசலும் கட்டப்பட்டது. முகம்மதியரைப் படையில் சேர்க்கும் முறை, III'ம் வல்லாளராலும் I'ம் தேவராயராலும் பின்பற்றப்பட்டதென்பதும் ஈண்டு நினைவு கூரத்தகும். II'ம் தேவராயர், தமது தானைத்தலைவர் உதவியால், II'ம் அலாவுதீனின் செருக்கை அடக்கியதாக அப்துர் ரஸாக் கூறுகிறார்.

விசயநகரைப்பற்றி அவர் தரும் குறிப்புக்கள் (1443). அப்துர்ரஸாக் (1413—'82), காட்சிகளைக் கண்டு வியப்புறுவதற்காகச் சுற்றிவரும் எளிய ஒரு ஆடவரல்லர். அவர் ஒரு புலமைவாய்ந்த முகமதியப் பாரசீக அரசியல் தூதர். II'ம் தேவராயரின்கீழ்ப் பேரரசும் நகரும் அடைந்திருந்த உயர்ந்த நிலையை அறிய அவ்வறிஞர் நமக்கு மிகவும் உதவுகிறார். அவர் எழுதிய பாரசீக வரலாறு என்னும் நூலில், விசய நகரின் நில அமைப்பு, ஆட்சிமுறை, சமூக வாழ்க்கை முதலியனவற்றைச் சிறப்பிக்கின்றார். இந்துப் பேரரசின் எல்லை அமைப்பு, பாமனி சுல்தானியருடன் கொண்டிருந்த

---

1. E. & D., op. cit., IV. P. 105

தொடர்பு, பேரரசரைக் கொலைசெய்ய நடந்த முயற்சி, தானைத் தலைவர் குல்பர்காவில் படையெடுத்தது, அவர் இலங்கை சென்றது முதலியன யாவும் அவரால் குறிப்பிடப்படுகின்றன. பேரரசில் 300 சிறந்த துறைமுகங்கள் இருந்தன என்றும் நாட்டில் வேளாண்மை செழிப்புற்றிருந்தது என்றும் மக்கட் டொகை மிகுதியாக இருந்தது என்றும் அறியக்கிடக்கின்றன. ஏழு கோட்டைச் சுவர்களைக்கொண்ட தலைநகரைப்பற்றியும் அதன் செழிப்பான நிலங்கள், தோட்டங்கள் வீடுகள், கடைகள், அரண்மனை, பொதுக் கட்டடங்கள், அரியணை, விழாக்காலங்களில் நகரின் கண்கொள்ளாக் காட்சிகள், முதலியவற்றைப்பற்றியும் அவ்வறிஞர் கூறியுள்ள செய்திகள் உள்ளத்தைக் கவரத்தக்கன. "விசயநகரைப்போன்ற ஒரு இடத்தை இந்நில உலகில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை."[1] என்ற அவர் கூற்று நோக்கற்பாலது. அவர், விசயநகர மன்னரின் வரம்பற்ற அதிகாரத்தையும், அந்தணர்களிடம் அவருக்கிருந்த நன்மதிப்பையும், தானைத்தலைவரின் ஆட்சி முறைச் செயல்களையும் விளக்கிக் கூறுகிறார். நகரில் 12000 காவலர் அமர்த்தப்பட்டிருந்தனராம். ஆயிரத்துக்கு மேற்பட்ட (மலையை ஒத்த) யானைகளிருந்தனவாம். போர்வீரர்கள், நான்கு மாதங்கட்கு ஒரு முறை பணமாக ஊதியம் பெற்றனர். பொது மகளிர் மனைகளிலிருந்து கிடைத்த வரித்தொகை நாடுகாவற்றொகுதியினருக்காகச் செலவழிக்கப்பட்டது. வாணிகச் சங்கங்கள் அமையப்பெற்றிருந்தன. மக்கள் மிகுதியாக அணிகலன்களை விரும்பி அணிந்துவந்தனர். "ரோசா மலர்கள் எங்கும் விற்கப்படுகின்றன. அவை மிகவும் இன்றியமையாதன என்று மக்களால் கருதப்படுகின்றன. அவர்கள், அம்மலர்களுக்கு உணவைப்போன்ற சிறப்பைஅளிக்கின்றனர்.[2] அரசியலாரின் பதிவேடுகள் தனித்த இடங்களில் வைத்துக் காக்கப்பெற்றன. ஓலைகளில் எழுத்தாணியால் மக்கள் எழுதி வந்தனர். சில காலங்களில் குற்றவாளிகள், யானைகளிடம் தள்ளப்பட்டனர். "பொதுமகளிர் மனைகளின் சிறப்பு, அவர் தம் அழகு, கடைக்கண் பார்வை, அவர்கள் தமது கலையாகிய

1. E. & D. op. cit. IV, pp, 106, 111.
2. Sewell, op. cit., p. 90.

இன்பநூலின் திறத்தால் பிறரை மயக்குதல் முதலியன வருணனைக்கு அடங்கா." [1] அரசனின் உவளகத்தில் அரசிளங்குமரிகளும் காமக்கிழத்திகளும் எழுநூறு பேரிருந்தனர். "அத்துணை பெரிய உவளகத்தின் மங்கையருக்கு மகிழ்ச்சி அளிக்க, ஊக்கத்தைப் பெருக்கும் வெற்றிலை, மன்னனுக்கு உதவியாயிருந்தது போலும்!" [2].

வரிவிதிப்பு. நன்செய், புன்செய் நிலங்கள், பாக்குத் தோட்டம், வேம்பு, தென்னை, வாழைமரங்கள், கரும்பு, மஞ்சள், இஞ்சி, மலர்கள், நெசவுத்தறி, எண்ணையாடுமிடங்கள், காளைமாடு, செம்மறியாடு, உயர்தரப்பசுக்கள், பாசனத்துக்கான நீர் முதலிய பலவும் வரி விதிப்புக்கு உட்பட்டவை என்று, II'ம் தேவராயரின் ஸ்ரீரங்கச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

## பகுதி 6

### முதல் (அல்லது சங்கம) குலத்தின் சிதைவு

மல்லிகார்ச்சுனர். *(1447-65)*. இரண்டாம் தேவராயருக்குக்குப்பின் அவருடைய மகன் மல்லிகார்ச்சுனர் பட்டமேற்றார். தேவராயர் இறந்தவுடன் விசயநகரின்மீது பாமனி சுல்தானும் ஒரிஸ்ஸா நாட்டு கஜபதியும் படையெடுத்ததாக அக்கால வடமொழி நாடகம் குறிப்பிடுகிறது. ஆனால் சில அறிஞர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. முற்றுகையிடப்பட்ட தலைநகரைக் காப்பாற்றி, மல்லிகார்ச்சுனர் வெற்றிபெற்ற செய்தியைப்பற்றி நாம் ஐயுற வேண்டியதில்லை. ஏனெனின் கபிலேந்திர கஜபதியின் ஆட்சி கீழ்க்கடலோரத்தில் மட்டும் அடங்கியிருந்தது. கிழக்கில் ஹூக்ளியிலிருந்து காவிரிவரை பரவியிருந்த கபிலேந்திரக் கஜபதிப் பேரரசில் விசயநகரம் உட்படவில்லை என்பது நோக்கத்தக்கது. ஆயினும் மல்லிகார்ச்சுனரின் படைத்திறமை குறைவுற்றிருந்த காரணத்தால் தான் ஒரிஸ்ஸா நாடு தெற்கில் பரவவும், சந்திரகிரியின்

1 E. & D. op. cit. IV, pp. 106, 111.
2 E & D., op., cit., IV P. 114.

ஆட்சித் தலைவராயிருந்த (சித்தூர் மாவட்டம்) சாளுவநரசிம்மர் தம் அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ளவும் வாய்ப்புக்களேற்பட்டன. மல்லிகார்ச்சுனர், இலக்கியம், சோதிடம் முதலியவற்றை நன்கு கற்றிருந்தார். கடவுட்பற்று அவரிடமிருந்தது. ''யானை வேட்டையாடுவோர்'', ''இம்மடி தேவராயர்'' (தந்தை தேவராயரைப்போல் இருமடங்கு பெரியவர்) முதலிய பட்டங்களை அவர் சூடியிருந்தார்.

இரண்டாம் விரூபாட்சர். *(1465-'85)* மல்லிகார்ச்சுனரின் இரண்டு குமாரர்களையும், விரூபாட்சர் விரட்டிவிட்டதாகத் தோன்றுகிறது. முறையற்றவகையில் பட்டம் பெற்ற இவருடைய சீசைலம் செப்பேடுகளும் (1465க்கு உரியன) சில கல்வெட்டுக்களும் இவர், வாள் கொண்டு வேந்தரானரென்பதை வெளிப்படுத்துகின்றன. மேலும் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வடமொழியில் ஆக்கப் பெற்ற வைணவ ஆசிரிய மரபு நூலொன்று (நூலின் பெயர் பிரபன்னாமிர்தம்) பின் வரும் செய்தியைக் குறிப்பிடுகிறது. விரூபாட்சர் மறைவாகத்தம் உறவினரைக்கொன்றுவிட்டு அரியணை பெற்றார். கொல்லப்பட்டவர்களுடைய ஆவி உருவங்கள் அரசரை அச்சுறுத்தி வந்தன. ஆதலால் அத்துயரத்தின் நின்று விடுபட அவர், தக்க ஆசிரியரை இராமாயணம் படிக்கச் செய்து கேட்டுப்பயனடைந்தார். பிறகு அவர் ஒரு வைணவரானார். விரூபாட்சரை வழிபட்டுவந்த அவர் ஸ்ரீ ராமரைப் போற்றத் தொடங்கினார். 1469'ல் பாண்டியர், காஞ்சியில் படையெடுத்தனர். முகம்மதுகாவன் கோவாவைக்கைப்பற்றியதுடன் விசயநகரைத் தாக்கவும் திட்டமிட்டிருந்தார். அந்நிலையில் விரூபாட்சர், ஆற்றலற்றிருந்த போதிலும் விசயநகரப் பேரரசில் சாளுவ நரசிம்மர் சுமார் 1480'ல் தம் அதிகாரத்தைப் பெருக்கிக்கொண்டு மிக வலிமை வாய்ந்தவராக இருந்தார். ஆயினும், அடுத்த ஆண்டில் சுல்தான் III'ம் முகம்மது, காஞ்சியைத் தாக்கினார். ஆனால் அவ்வாண்டில் காவன் கொலை செய்யப்பட்டதாலும் 1482'ல் சுல்தான் இறந்துவிட்டதாலும் பாமனி நாட்டில் குழப்பம் தொடங்கியது. விரூபாட்சர் ஆளுந்திறமையற்றவர். அவருடைய ஆட்சிமுறை

சாளுவ நரசிம்மரின் அதிகார வளர்ச்சிக்கு வாய்ப்பு அளித்தது. அராபிய வணிகர், விசயநகரப் பேரரசின் துறைமுகங்களை விட்டு நீங்கி அவ்வரசுக்கு வெளியே தமது குதிரை வாணிகத் தொழிலை நடத்தத் தொடங்கியதற்கும், விருபாட்சரே காரணமாயினர். குடி, கொலை, சிற்றின்ப நுகர்ச்சி முதலியவற்றில் தம் கருத்தைச் செலுத்தி வந்த அத்தீயோர், தம்முடைய மகனால் கொலை செய்யப்பட்டார். விருபாட்சர் தம் செயல்களால், சாளுவ குலத்தவர் அரசைக்கைப்பற்றிக்கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலையை அமைத்திருந்தார்.

## பகுதி 7

### சாளுவ நரசிம்மர்

சாளுவரின் தோற்றம். விசயநகர வரலாற்றில் பேசப்படும் வைணவ சாளுவர், புராணங்கள் குறிப்பிடும் (திருமாலின் பகைவர்களாம்) தென்னிந்தியக் குடிகளான சாள்வர் என்ற கூட்டத்தினரல்லர். சாளுவ நரசிம்மரின் காலத்தில் துளு நாட்டில் வாழ்ந்த சமண சாளுவரும் அவர்களல்லர். சாளுவா என்ற சொல், தெலுங்கிலும், கன்னடத்திலும், வேட்டையில் பயன்படுத்தப்பெறும் பருந்து போன்ற ஒரு பறவையைக் குறிக்கும். சாளுவ நரசிம்மரின் மூத்தபாட்டனார் (மங்கு என்ற பெயரையுடையவர்) குமார கம்பணரின் மதுரைப் படையெழுச்சியில் கலந்துகொண்ட காலத்தில், சாளுவா (வேட்டைப்பறவை) என்ற புகழ்தக்க பெயரைப் பெற்றார். அவரே சாளுவகுல முதல்வராவர். சாளுவகுலத் தலைவர்களின் குடிவழி நாடு, கல்யாணியும் அதைச்சுற்றிய பகுதியுமாகும். பாமனி சுல்தானியரின் எழுச்சியால் அத்தலைவர்கள் அப்பகுதியை இழக்க நேரிட்டது. பின்னர் அவர்கள், விசயநகரப் பேரரசுடன் ஒத்துழைத்தனர்.[1] சாளுவர், சங்கம அரசரின் மானியக்காரராயினர். சாளுவநரசிம்மரின் தந்தையின் உடன்பிறந்தாரான சாளுவ திப்பா என்பார், II'ம்

1. S. Krishnaswami Aiyangar, A Little Known chapter of Vijayanagar History (1916). p. 41.

தேவராயரின் தமக்கையை மணந்துகொண்டார். சந்திரகிரியில் அவர்களின் வழி வழி ஆட்சிஉரிமை நிலவியிருந்ததாகத் தோன்றுகிறது. தம் தந்தைக்குப்பின் சாளுவ நரசிம்மர் ஆட்சித் தலைவரானார்.

**நரசிம்மர் மேன்மையடைதல்.** சாளுவநரசிம்மர், ஏறத்தாழ 1450'ல் சிறப்பு எய்தியதாகத் தோன்றுகிறது. 1457'ம் ஆண்டுக் கல்வெட்டொன்று அவரை "மகா அரசு" என்று குறிப்பிடுகிறது. அவருடைய குறிப்புக்கள், பெரும்பான்மையும் விசயநகரப் பேரரசின் நடுப்பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் காணப்படுகின்றன. 1360'வரை மல்லிகார்ச்சுனரின் உயர் நிலையை சாளுவர் ஏற்றுக்கொண்டதாகத்தெரிகிறது. ஆனால் 1471'க்குப்பிறகு அவர்களுடைய கீழ்நிலைக்கான அடையாளக் குறிப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை. 1479—80'ம் ஆண்டுக்குரிய கல்வெட்டுச் சாளுவத்தலைவரை ராசாதிராசன் என்று குறிப்பிடுகிறது. அவர்தம் அதிகார வளர்ச்சியைப்பற்றிய கல்வெட்டுச் செய்திகள், முகமதிய வரலாற்றறிஞரால் உறுதிசெய்யப்பட்டிருக்கின்றன. கருநாடகத்துக்கும் துலிங்கானாவுக்கு மிடைப்பட்ட பகுதியில் சாளுவ நரசிம்மர் வலிமை வாய்ந்த அரசர் என்று (1480) பெரிஷ்டா கூறுகிறார். கீழ்க்கடலோரத்தில் மசூலிப்பட்டினம்வரை அவராட்சி நிலவியதாம்:[1] அவர் விசயநகரப்பேரரசில் பலபகுதிகளை வென்றார். பாமனி அரசுக்கும் அவரால் இடையூறுகளேற்பட்டன. தெலிங்கானா, விசயநகரம் ஆகிய பகுதிகளை ஆட்சி புரிந்தவர்கள் யாவரினும் நரசிம்மர் மிகச் சிறந்தவரென்றும் வலிமை வாய்ந்தவரென்றும் தபதபா கூறுகிறார். II'ம் விரூபாட்சரின் ஆற்றலின்மை காரணமாகக் கேடுற்று வந்த விசயநகரப்பேரரசைக் காப்பாற்றிய பெருமை நரசிம்மருக்கே உரியது.[2]

**அரசுரிமையைக் கைப்பற்றி ஆட்சிபுரிதல்.** (1485-93) நரசிம்மவர்மர், அரியணையை எவ்வாறு கைப்பற்றிக் கொண்

1 Briggs, op. cit., II. pp. 498 — 9.

I S. Krishnasuami Aiyangar, A History of Tirupati, I. (1940) P, P. 465-7.

டாரென்பதையும் அறிஞர் நூனிஸ் விளக்கிக் கூறுகிறார். விரு பாட்சரின் மகன் ஒழுக்கக் கேடான முறையில் ஆட்சிபுரியத் தொடங்கியவுடன், நரசிம்மர் பேரரசின் சிறப்பான அதிகாரி களுடைய உதவியுடன், தம்மை மன்னராக்கிக் கொண்டார். இப்புரட்சிப் பெரும்பான்மையில் யாவராலும் விரும்பிப்போற் றப்பட்டது. புரட்சிக்காலத்தில் உயிரழிவு மிகுதியாக ஏற்பட வில்லை. ஒருசில மகளிரே உயிரிழந்தனர். அப்புரட்சிக்கு நரசிம்மரின் தந்நலம் அல்லது குலப்பற்று காரணமல்ல; மக்களின் நலத்தின் பொருட்டும் பேரரசைக் காப்பாற்றும் நோக்கத்துடனும் அவர் அச்செயலைப் புரிந்தார். பேரரசி னின்று பிரிந்தபகுதிகள் மீண்டும் வெல்லப் பெற்றன. கல கங்கள் அடக்கப்பட்டன 1490'ல் மூட்கல், ராய்ச்சூர் முத லிய இடங்களை மன்னர் கைப்பற்றினர், அவருடைய துணை வர் நரசாநாயக்கர், பேரரசின் ஆதிக்கத்தைத் தெற்கில் பரப்பினர். பாண்டியநாட்டில் விஜயநகரின் ஆட்சி நிலைபெற் றது. ஒரிஸ்ஸா நாட்டுக் கஜபதியும், தோற்கடிக்கப்பட்டார். நரசர் பல இடங்களில் போர்புரிந்ததாக நூனிஸ் குறிப்பிடும் செய்தி, சில கல்வெட்டுக்களாலும் உள் நாட்டு இலக்கியத் தாலும் உறுதி செய்யப்படுகிறது.

ஆட்சிச் சிறப்பு. சாளுவ நரசிம்மரின் ஆட்சி, பேரரசைப் பலவகைகளில் வலிமைபெறச் செய்தது. அவ ருடைய பெயராலேயே, போர்ச்சுகீசியர் முதலிய அயலார் விசய நகரப் பேரரசைப் பிற்காலத்தில் குறிப்பிட்டனர். மக் களும் மன்னனைப் போற்றி வணங்கினர். இறக்குமதி செய் யப்படும் குதிரைகளில், வழியில் இறந்துபோனவற்றிற்காக அரசன் இழப்பீடு அளித்து வந்த பெருந்தன்மை அவ ருடைய புகழை மிகுதியாக்கிற்று. அவர் இறப்பதற்குச் சிறிதுகாலம் முன்னர், பேரரசின் சிறப்பான மூன்று இடங் களை (ராய்ச்சூர், உதயகிரி, கொண்டவீடு) இழக்கநேரிட்டது. அவைகளை மீண்டும் பெறவேண்டியது இன்றியமையாதது என்று கூறி அப்பொறுப்பை நரசா நாயக்கரிடம் ஒப்படைத்து விட்டு மன்னர் மாண்டார். அந்த நாயக்க அதிகாரியிடம் பேராட்சிச்சுமை ஒப்படைக்கப் பட்டிருந்தது. தம் இரு குமா ரர்களில் ஒருவரை அரசராக்குமாறும் நரசிம்மர் நரசாவிடம்

கூறியிருந்தார். அவராட்சிக்காலம் குறுகியதாயிருந்தபோதிலும் அவர் பேரரசைத் தாங்கும்தூண் எனப்புகழத்தக்க வகையில் ஒருதலைமுறை அருஞ்செயலாற்றி வந்தார். அவர் 44 ஆண்டுகள் அரசாண்டதாக நூனிஸ் கூறுகிறார். ஆனால் அவ்வாண்டுகள், நரசிம்மர் மாகாணத் தலைவராகவும் அரசராகவும் இருந்த இருகாலப் பகுதிகளையும் குறிப்பிடுவதாகவே நாம் கருதவேண்டும் (சுமார் 1450-'93). அவர் வைணவராயிருந்தபோதிலும், சிவராத்திரி புண்ணிய நாளன்று பூசை நிகழ்த்தியதுடன் நன்கொடையும் வழங்கினார் (1466). இராமபிரானைப்பற்றிய நூலொன்று அவரால் எழுதப்பெற்றது. அறிஞர் பலர் அவ்வரசனின் உதவியைப்பெற்றனர்.

## பகுதி 8

### துளுவ குலத்தினர் அரசைக் கைப்பற்றுதல்

துளுவரின் தோற்றம்: சாளுவரின் பட்டப்பெயர்களைத் துளுவரும் சூடிக்கொண்டிருந்தனர். இருகுலத்தவரும் வைணவ சமயத்தவர். ஆனால் துளுவர், சாளுவரின் உறவினரல்லர். இருகுலங்களுக்கு மிடையே திருமண உறவும் இல்லை. ஆனால் அரசியல் தொடர்புமட்டும் நிலவியது. சாளுவ நரசிம்மரின்கீழ், துளுவகுலத் தலைவர்கள் பணியாற்றி வந்தனர்.

நரசா நாயக்கர்: சாளுவ நரசிம்மர் இறந்தவுடன் பட்டமேற்ற அவருடைய மூத்த மகனை, ஒரு பகைவன் கொன்றுவிட்டான் என்று நூனிஸ் குறிப்பிடுகிறார். அரசைக் காப்பாற்றும் பொறுப்பைப்பெற்ற நரசா, அப்பகைவனைத் தண்டித்து நரசிம்மரின் இளைய மகனை மன்னனாக்கினார். இம்மடி நரசிம்மன் (அல்லது II'ம் நரசிம்மன்) எனப்பட்ட அப்புதிய மன்னர் பெயரளவுக்கே ஆட்சி புரிந்தார். உண்மையில் ஆட்சி அதிகாரம் நரசா நாயக்கரிடமிருந்தது. நரசா, பேரரசப் பட்டமெதையும் சூட்டிக்கொள்ளவில்லை. நந்தி மல்லைய்யா முதலிய தெலுங்குப் புலவர்களை அவர் ஆதரித்தார்.

வீரநரசிம்மர் (1506—'09). நரசாவின் மகனுன வீர நரசிம்மர் அரசுரிமையைத்தாமே கைப்பற்றிக் கொண்டதாகத் தோன்றுகிறது. 1506'ம் ஆண்டிலேயே அவர் பேரரசப் பட்டங்களைச்சூடிக்கொண்டார். அவராட்சியின் தொடக்கத்தில் பல கலகங்களேற்பட்டன என்றும் அவையாவும் அடக்கப் பட்டன என்றும் நூனிஸ் எழுதுகிருர். இத்தாலிய நாட்டுப் பிரயாணி வார்த்தீமா என்பார் விசயநகரத்தைப்பற்றிய தமது விளக்கக்குறிப்பில் 1506'ல் பேரரசன், போர்ச்சுக்கீசியருடன் போரிட்டதாகக் கூறுகிருர். மைசூர், துளு நாடுகளிலும் விசயநகரப்பேரரசர் படையெடுத்தார். கிருட்டினதேவராயரின் நெருங்கிய நண்பராக விளங்கிய சாளுவ திம்மா என்பார், வீரநரசிம்மரின் காலத்தில் "மகாபிரதானி" யாகப்பணியாற்றினுர். வீரநரசிம்மர், தமது ஒன்றுவிட்ட உடன்பிறப்பாளரான கிருட்டினதேவராயரைக் குருடராக்குமாறு ஆணையிட்டதாகவும் சாளுவதிம்மா அவ்வாணையை நிறைவேற்றவில்லை என்றும் அறிகிருேம். மரணப்படுக்கையிலிருந்த பேரரசரிடம், ஆட்டின் கண்களைக்காட்டி, கிருட்டினதேவரின் கண்கள் பிடுங்கப்பட்டன என்று, சாளுவதிம்மா, உண்மையை மறைத்துக்கூறி அவரை மகிழ்வித்தார் என்று தெலுங்கு மரபுரையில் குறிப்பு காணப் படுகிறது. வீரநரசிம்மரின் கல்வெட்டுக்கள், அவர் நற்குணங் களைச் சிறப்பிக்கின்றன. சீசைலம், அஹோபிலம், காளத்தி, காஞ்சி, திருவண்ணுமலை, சிதம்பரம், சீரங்கம், இராமேச்வரம் முதலிய இடங்களில் உள்ள கோயில்களுக்கு அவர் நன்கொடைகள் வழங்கினுர். 1509'ல் கிருட்டினதேவராயர் அரியணை ஏறியதிலிருந்து விசயநகர வரலாற்றில் மிகச்சிறந்த காலப்பகுதி தொடங்குகிறது.

## பகுதி 9

### இலக்கியம்:- வடமொழி, கன்னடம், தெலுங்கு, தமிழ்

விசயநகரம், அரசியல் காரணங்களுக்காகப் போரார்வம் மிக்க நாடாக இருந்ததெனினும், அங்குப் போற்றற்குரிய கலைப்பண்பு முன்னேற்றம் அடையக்காணப்பட்டது. ஆனுல்

அங்கு 14'ம் நூற்றுண்டில் நிலவிய பண்பாட்டு முன்னேற்றத்தைக்காட்டும் இலக்கியச் சான்றுகள் உள. வைணவ சமயத்தில் வடகலைப் பிரிவைத் தோற்றுவித்த வேங்கடநாதர் அல்லது வேதாந்ததேசிகர் (1268—1369), விசயநகரின் அவைக்கு அழைக்கப்பட்டபோதிலும், அவர் சீரங்கத்திலிருந்துகொண்டே, இலக்கிய, சமயத் தொண்டுகளாற்றுவதையே விரும்பினுர். வடமொழியிலும், தமிழிலும் அவர் சிறந்த ஆசிரியராயிருந்தார். "யாதவாப்யுதயம்" என்னும் அவருடைய நூல், கண்ணப்பெருமானைப்பற்றிய ஓர் மகாகாவியமாகும். "ஹம்சசந்தேசம்" என்ற மற்றெரு நூல், காளிதாசனின் புகழ்பெற்ற மேகசந்தேசத்தை ஒத்த சிறப்பு வாய்ந்தது. வேதாந்ததேசிகர் இயற்றிய "சங்கல்ப சூர்யோதயம்" என்னும் தொடர் உருவக நாடகம் (Allegorical drama), பத்துகளங்களைக் கொண்டது. இந்நூலில் பதினேராம் நூற்றுண்டில் வாழ்ந்த கிருட்டினமிஸ்ரர் எழுதிய "பிரபோதசந்திரோதயம்" என்ற அத்துவைத நூலுக்கு மாருக, விசிட்டாத்துவைதக் கொள்கை சிறப்பிக்கப்படுகிறது. மேலும், ஆசிரியர், அத்துவைதக் கொள்கைக்குத் தாம் கூறும் மறுப்புக்களைச் "சததூஷணி" என்ற நூலில் விளக்குகிருர். தத்துவமுக்தாகலாபம் என்ற அவருடைய மற்றெரு நூல், பல்வேறு சமய, மெய் விளக்கக்கருத்துக்களை விளக்கத்துடன் குறிப்பிடுகிறது. அவ்வாசிரியர் தமது இறுதிக் காலத்தில் "ரகஸ்யத்திரயசாரம்" என்னும் தமிழ் நூலை இயற்றினுர். வேதாந்ததேசிகரைப் போலவே மாதவ வித்யாரண்யரும் ஓர் தலைசிறந்த இலக்கிய மேதை ஆவர். மீமாம்ச தத்துவம் முழுவதையும் அவர் விளக்கி எழுதினுர். அவருடைய "பஞ்சதசி" என்னும் அத்துவைத நூல் பதினைந்து அதிகாரங்களைக் கொண்டது. பராசரமாதவீயம் என்னும் அவருடைய மற்றெரு நூலில் பராசரஸ்மிருதியைப் பற்றிய விரிவுரையைக் காண்கிறேம். மேலும், சர்வதரிசன சங்கிரகம் என்னும் அவருடைய நூலில், பதினுறு சமயங்களின் மெய்விளக்க முறைகளைப்பற்றிய ஆய்வுக்குறிப்புக்கள் உள்ளன. ஒருமைக்கோட்பாடும், புத்த, சமண தத்துவங்கள் முதலியனவும் அதிலடங்கும். அந்நூலைப் படிப்போர், அத்துவைதக் கொள்கையை ஏற்றுக்கொள்ள

வேண்டுமென்ற நோக்கத்தால் அது எழுதப்பட்டிருப்பினும் பிற சமயங்களைப்பற்றிய நேர்மையான விளக்கங்களை அதிற் காண்கிறோம். மாதவரும் அவருடன்பிறந்தோரான சாயணர் (II'ம் சங்கமனின் அமைச்சர்) போகநாதர் ஆகியோரும் விசயநகர மன்னரின் உதவியைப் பெற்றனர். சாயணர், "வேதபாஷ்யம்" என்னும் வேதவிரிவுரை நூலை இயற்றி அருளினர். வேதங்கள் முழுவதுக்குமான அத்தகைய விரிவுரை, தென்னாட்டு முப்பெரும் ஆச்சாரியார்களால்கூட எழுதப் படவில்லை என்பது நோக்கத்தக்கது. மேலும் சாயணர், மாதவரின் உதவியுடன், இலக்கணம், மருத்துவம், யாப்பிலக்கணம் முதலியவற்றைப் பற்றியும் எழுதியுள்ளார். போகநாதர் இரண்டு பாடல்கள் இயற்றியதுடன் இலக்கணச் சட்டங்களுக்கு எடுத்துக்காட்டுக்களடங்கிய ஒரு பட்டியலையும் தயாரித்தார். பிட்ரகுண்டா நன்கொடைச் செப்பேட்டை இயற்றியதும் இவ்வறிஞரே. இவர், களியாட்டம் முதலிய செய்திகளுக்கான அமைச்சர் என்று சிறப்பிக்கப்படுகிறார். கங்காதேவியின் வீரகாவியம், அதன் இலக்கியச் சிறப்புக்காகப் போற்றப்படுகிறது. சிருங்கேரி, உடிப்பி, மேல்கோட்டை (ஸ்ரவண பெல்கோலாவுக்கும் சீரங்கப்பட்டணத்துக்கு மிடையில் உள்ளது) முதலிய இடங்கள் சமயத்துறையிலும், இலக்கியத்துறையிலும் மிக்க சிறப்புப் பெற்று விளங்கின. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த II'ம் இராசநாததிண்டிமன், சாளுவாப்யுதயம் என்ற நூலையும், அவரை ஆதரித்த சாளுவ நரசிம்மர் ராமாப்யுதயம் என்னும் நூலையும் ஆக்கினர்.

பதினான்காம் நூற்றாண்டுக்குரிய சமண ஆசிரியர்களில், 1385'ல் தர்மநாதர் என்ற தீர்த்தங்கரரைப்பற்றிப் புராணமியற்றிய மதுரரும், சமண மதத்தின் மும்மணிகளைப்பற்றிக் கூறும் ரத்தினகரண்டகம் என்ற நூலை எழுதிய அயத்தவர்மனும் (சுமார் கி. பி. 1400) சிறப்பாகக்குறிப்பிடத்தக்கோராவர். பசவபுராணம் இயற்றிய (1369) பீமகவி ஒரு வீர சைவர். அந்நூலில், வீரசைவம் அல்லது இலிங்காயதக் கொள்கையைத் தோற்றுவித்தவர், நந்தியின் (சிவபெருமானுக்குரிய காளை) திருப்பிறவி என்று கூறப்படுகிறது. அதே

காலத்தில் வாழ்ந்த பத்மநங்கர் எழுதிய பத்மராச புராணத்தில், பனிரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஒரு வீரசைவப் பெரியாரைப்பற்றி மிகவும் புகழ்ந்து பேசப்படுகிறது. II'ம் தேவராயர் காலத்தில் கன்னட இலக்கியம் மிகவும் சிறப்பான நிலையிலிருந்தது. சாமராசர் என்ற வீரசைவ அறிஞர் தாமியற்றிய பிரபுலிங்க லீலை என்னும் நூலில், பசவருடன் பணியாற்றிவந்த ஒரு பெரியாரின் வாழ்க்கையை விளக்குகிருர். படைத் தலைவர் லக்கண்ண ஆக்கிய சிவதத்துவ சிந்தாமணியில் வீரசைவக் கொள்கைகளின் சுருக்கத்தைக் காணலாம். ஜக்கணரியர் என்னும் மற்றொரு பணியாளரும் வீரசைவ இலக்கிய வளர்ச்சிக்கு உதவினர். இலிங்காயதக் கொள்கையை விளக்கிக்கூறிவந்த குருபசவர், ஏழு காவியங்களியற்றி அருளினர். II'ம் தேவராயர் காலத்தில், ஏறக் குறைய 100-வீரசைவத்துறவிகள் செயலாற்றி வந்ததாகக் கூறப்படுகிறது. குமாரவியாசர் என்ற ஓர் வைணவர், மகா பாரதத்தில் ஒரு பகுதியை மொழிபெயர்த்தார். சுமார் 1470'ல் சித்தேச்வரர் என்ற சிறந்த வீரசைவ அறிஞர் வாழ்ந்தார். ஏறத்தாழ 1500'ல் குமார வால்மீகி, இராமாயணத்தையும் சிங்கிராசர், மகாபசவராசசரிதத்தையும் மொழி பெயர்த்தனர்.

பதினைன்காம் நூற்றுண்டில், எர்ரபிரகடா, ஸ்ரீநாதர் என்னும் சிறந்த தெலுங்கு எழுத்தாளர்கள் ரெட்டியார்களின் ஆதரவைப் பெற்றிருந்தனர். பீமகவி (முன்கூறிய கன்னட பீமகவி அல்லர்) என்பாரும் அதே நூற்றுண்டுக்குரியவராவர். I'ம் புக்கனின் அவைக்களப் புலவரில் நாச்சணசோமா என்பாரும் ஒருவர். பாகவதத்தைத் தெலுங்கில் மொழி பெயர்த்த போதன (1400—'75) அரசருடன் தொடர்பு கொள்வதை வெறுத்தார். ஜைமினி பாரதம், சிருங்கார சாகுந்தலம் முதலிய நூல்களை ஆக்கிய பீன வீரபத்திரர் (1450—'80) சாளுவநரசிம்மரின் ஆதரவிலிருந்தார். நரச நாயக்கர், தெலுங்கு வராக புராணத்தின் ஆசிரியர்களை ஆதரித்தார். வினுகொண்டவல்லபர், "கிருதாபிராமமு" என்ற, நாடகத்தை இயற்றி அருளினர். அஃது, "பிரேமாபிராமா'

என்ற வடமொழி நாடகத்தின் மொழிபெயர்ப்பாகும். ஆயினும் அது, தெலுங்கு இலக்கியத்தில் மிகவும் சிறப்புவாய்ந்த ஒரு நூலாகும். சிறந்த தமிழ் நூலான திருப்புகழை இயற்றிய அருணகிரிநாதர் என்ற சைவப்பெரியார், II'ம் தேவராயரின் ஆதரவைப் பெற்ருர். தமிழறிஞர் காளமேகப் புலவரை, மண்டலாதிபதி ஒருவர் ஆதரித்தார்.

## பகுதி 10

### கலை

பம்பாபதி அல்லது விருபாக்ஷர் கோயில், முதலாம் அரிஹரனல் செம்மையாக்கப்பெற்றது. பேரரசுத் தலைநகரின் கோட்டைக் கொத்தளங்களைக் கண்டு அப்துர் ரஸாக் விம்மிதமுற்றுரென்பது நோக்கற்பாலது. துங்கபத்திரை ஆற்றின் குறுக்கே அமைந்த துருட்டு அணைக்கட்டிலிருந்து பாறைவழியாகச் செல்லும் துருட்டுக்கால்வாய் வியப்புறத்தக்க சிறப்புவாய்ந்தது.[1] தலைநகரின் வடபகுதியைச் செம்மைப்படுத்த அக்கால்வாய் வெட்டப்பட்டது. இருகப்பர்கோயில், சமணர் கட்டடக்கலை முறையில் அமைந்தது ஆனல், துங்கபத்திரை ஆற்றினருகிலுள்ள சமணக்கோயிலில் வைணவ வழிபாட்டு உருவங்கள் உள்ளன. ஆனல் அவை, மூலக்கோயிலிலுள்ள (உட்பகுதி) தீர்த்தங்கரரின் உருவச்சிலைக்கு அடுத்தபடியான சிறப்பையே பெற்றுள்ளன. ஹம்பியில், இப்பொழுது காணப்பெறும், இந்து, இந்து-முஸ்லிம் கட்டடங்களிற் பெரும்பான்மையானவை, பதினரும் நூற்றுண்டில் எடுக்கப்பட்டவையாகும். அப்துர்ரஸாக், இரண்டாம் தேவராயரின் பொன், வெள்ளி செப்புக்காசுகளைக் குறிப்பிடுகிருர். விசயநகரக் காசுகளில், காளை, யானை, கருடன், ஞாயிறு, சந்திரன், சங்குசக்கரம், அமர்ந்த வடிவிலுள்ள ஆண்பெண் கடவுளர் (சைவ, வைணவப் பண்புகள் பொருந்தியவை), முதலிய உருவங்கள் உள்ளன. கன்னட, நாகரி எழுத்துக்கள் அவைகளில் பொறிக்கப்பெற்றுள்ளன.

[1] A. H. Longhurst, Hampi Ruins (1917), p. 57.

அதிகாரம் 7

# கடல்கடந்த இந்திய நாகரிகம் (Greater India) (1200 — 1500)

## பகுதி I

### இலங்கை (ஈழம்)

இரண்டாம் பராக்கிரமபாகு : (1234—69) நிஸ்ஸங்க மல்லனைப்பற்றி (1187—'96) முதற் புத்தகத்தில் கூறப் பட்டது. இலங்கையில் ஆட்சி புரிந்த முதல் கலிங்க மன்னர் அவரே. அவரிறந்தபின், 1215 வரை அரசியல் குழப்பம் நிலவியது. பிறகு மாகன் என்னும் கலிங்க இளவரசர், மலையாளப் போர்வீரரின் துணைபெற்று பொலொன்னருவாவில் தன் அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொண்டார். மாகன் (1215—'36) பௌத்தர்களைத் துன்புறுத்தியதாலும் கொடுங் கோலோச்சியதாலும் வெறுக்கப்பட்டார். III'ம் விசயபாகு என்ற உள்நாட்டுச் சிற்றரசன், சுமார் 1220'ல் நாட்டின் ஒரு பகுதியை வென்று தம்பதேனியா (வடமேற்கு மாநிலம்) என்னுமிடத்தில் தலைநகரை அமைத்துக்கொண்டார். புத்த சமயத்தை அவர் ஆதரித்தார். அவருடைய மகன், II'ம் பராக்கிரமபாகு (1234—'69), பொலொன்னருவாவைக் கைப்பற்றினர். 1254 முதல் 1256 வரை, வட இலங்கையை I'ம் சடையவர்மர்சுந்தரபாண்டியர் தம்அடிப்படுத்தியிருந்த தால், பாராக்கிரமபாகு அப்பகுதியை ஆட்சிபுரியவில்லை. ஈழ வேந்தர், சமயத்தையும் இலக்கியத்தையும் ஆதரித்தார். அவரே (பராக்கிரமபாகு) பல சமயக் கட்டுரைகளையும் செய் யுட்களையும் இயற்றினர். "மகாவமிசம்" (இலங்கைவரலாறு; கி. பி. ஆரும் நூற்ருண்டு) என்ற நூலைத் தொடர்ந்து 12'ம் நூற்ருண்டு வரை எழுதுவதற்கு அவர் உதவியளித்தார். சூள வமிசம் என்ற பெயர் அதற்கு அளிக்கப்பட்டது. பௌத்தத் துறவிகளைக் கூட்டி, சங்கம் தூய்மை யடைவதற்கான வழி வகைகள் அவரால் வகுக்கப்பெற்றன. அவர் பதவி துறந்த பின் அவர் மகன் IV'ம் விசயபாகு, பொலொன்னருவா

அனுராதபுரம் ஆகிய இரண்டு இடங்களையும் சிறப்புறச்செய்தார். அவர் தமது படைத்தலைவனால் கொல்லுண்டார்.

I'ம் புவனெய்க்கப்பாகுவும் அவர் பின்வந்தோரும்: விசயபாகுவின் உடன் உடன்பிறந்தவரான I'ம் புவனெய்க்கபாகு (1271—83), முன்னவனைக் கொலைசெய்தோனைக்கொன்று அரியணையைப் பெற்றதுடன், பாண்டியப்படையெழுச்சியையும் எதிர்த்து வெற்றிபெற்றார். இவர் தம் ஆட்சியின் இறுதி ஆண்டில் எகிப்திய சுல்தானுடன் ஒரு நேச உடன்படிக்கை செய்துகொள்ள முயன்றார். 1283 முதல் 1302 வரை அந்நாட்டில் அரசனில்லாக்காலம் நிலவியது. சுமார் 1284'ல், மாறவர்மர் குலசேர பாண்டியரின் தானைத் தலைவன் ஆரிய சக்கரவர்த்தி என்பான், இலங்கையில் படையெடுத்து ஒரு பௌத்தப்பற்சின்னத்துடன் திரும்பினன். ஏறத்தாழ 1292'ம் ஆண்டில் மார்கோபோலோ அத்தீவுக்குச் சென்றார். III'ம் பராக்கிரமபாகு (1302—10), பாண்டியப் பேரரசருக்கு அடங்கிப் பற்சின்னத்தைத் திரும்பப் பெற்றார். சுமார் 1325'ல் பட்டமேற்ற IV'ம் பராக்கிரமபாகு ஜாதக நூல்களைச் சிங்கள மொழியில் எழுதியதுடன் பல கோயில்களையுமெடுத்தார். சூள வமிசம், என்ற வரலாற்று நூலில் அக்காலம் வரையிலுள்ள நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டன. ஏறக்குறைய 1342'ம் ஆண்டில் இபின்பதூதா ஈழத்துக்குச் சென்றார். VI'ம் புவனெய்க்கபாகு (1345—54) தலைநகரை கம்போலாவுக்கு (கண்டிக்கு அண்மையில்) மாற்றினார். இரண்டு மடங்கள் அவரால் கட்டப்பெற்றன. III'ம் விக்கிரமபாகு ஆட்சிக் காலத்தில் (1357—'74), கொழும்புக்கு அருகில் கோட்டை என்ற அரண் நிறுவப்பெற்றது. (கொழும்பு, 10'ம் நூற்றாண்டில் தோன்றியிருக்கக்கூடும்.) யாழ்ப்பாணத்துத் தமிழரசரின் படையெழுச்சியையும் அம்மன்னர் எதிர்த்து வெற்றிபெற்றார். விசயநகர அரசர் III'ம் விருபாக்ஷரின் ஆலம்பூண்டி (தென்னாற்காடு மாவட்டம், செஞ்சிக்கருகில்) கல்வெட்டு, (1383'ம் ஆண்டுக்குரியது) அம்மன்னர் சிங்களத்தை வென்று கொள்ளைப் பொருளைத் தம் தந்தை II'ம் அரிஹரருக்குப்பரிசாக அளித்ததாகக் கூறுகிறது.

யாழ்ப்பாண அரசைத்தான் அது குறிப்பிடுகிறதா என்பது தெளிவாக அறியப்படவில்லை. VI'ம் விசயபாகு (1397—1409), அவர் தம் மனைவியர், குழந்தைகளுடன், சீன அரசியற்றூதர் சிங்ஹோவால் சீனவுக்குக் கொண்டுபோகப் பெற்றனர்.

ஆறும் பராக்கிரமபாகு (1412—'68). இம்மன்னர் யாழ்ப்பாண அரசைத் தம்முடன் இணைத்துக் கொண்டார். கோட்டைநகர் தலைநகராக்கப்பட்டது. பல கோயில்களும் மடங்களும் எடுக்கப்பெற்றன. சிங்கள இலக்கியத்தின் வளர்ச்சிக்கான முயற்சிகளை அரசர் எடுத்துக்கொண்டார். ராகுல தேரா முதலிய அறிஞர்கள் ஆதரிக்கப்பெற்றனர். அந்நாட்டில் II'ம் பராக்கிரமபாகுவின் காலத்துக்குப் பிறகு மக்கள் அடையப்பெருத சிறப்புக்கள் பலவற்றை இம்மன்னரின்கீழ்ப் பெற்றனர். பிற்காலத்திலும் அங்கு அதற்கு ஒப்பான ஆட்சி ஏற்படவில்லை.[1] 1505'ல் VIII'ம் பராக்கிரபாகுவின் ஆட்சிக் காலத்தில் (1484—1509) போர்ச்சுக்கீசிய அரசப்பிரதிநிதியின் மகனை ஆல்மெய்டா, கொழும்புக்குச் சென்று மன்னருடன் ஒரு நேச உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி அவர் இலவங்கப்பட்டை, யானைகள் முதலியவற்றைக் கப்பமாகப் பெற்றுக்கொண்டு கைம்மாருக ஈழவேந்தரை அவரின் பகைவர்களிடமிருந்து காப்பாற்றும் கடமையை ஏற்ருர்.

## பகுதி 2

### சுமத்திரா

உரிமையுடன் விளங்கிய மலாயு (ஜம்பி, சுமத்திரா) அரசு, ஏழாம் நூற்றுண்டில் ஸ்ரீவிசயப்பேரரசுடன் இணைக்கப் பட்டதும் பின்னர் சைலேந்திரப்பேரரசுக்கு அது உட்பட்டதும் முதற் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டன. சைலேந்திரப்பேரரசு சிதறுண்டகாலையில் ஜாவா நாட்டைச் சேர்ந்த கிருதனுகரர், மாலாயுவை சுமார் 1275'ல் வென்றனர். ஆனல் 1292'ல் அவர் இறந்தவுடன் மலாயு விடுதலை பெற்றது. அக்காலத்தில் அந்நாட்டின் வாணிகச்செழிப்பை மார்கோபோலோ சிறப்பிக்

1. H. W. Codrington, A Short History of Ceylon (1929), p. 93.

கின்றூர். மேலும், சுமத்திரா எட்டு இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்ததென்றும் அவற்றில் ஒன்று சுல்தானியராட்சியின் கீழிருந்ததென்றும் அதைத் தவிர மற்ற இராச்சியங்கள் ஏழும் பெயரளவுக்குச் சீன ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தனவென்றும் அவ்வறிஞர் கூறுகிருர். சுமத்திராவுக்கும் இந்தியாவுக்குமிடையே, (குறிப்பாக குஜராத்துடன்) வாணிக உறவு நிலவியதன் காரணமாக அத்தீவுக்கும் மலாயாசியாவின் மற்ற பகுதிகட்கும் முகம்மதிய சமயம் பரவியது. சுமார் 1345'ல் வடசுமத்திராவில் இஸ்லாமிய மதம் சிறப்பான நிலையிலிருந்ததாக இபின்பதூதா குறிப்பிடுகிருர். தாந்திராயன புத்தசமயத்தைச் சேர்ந்த ஆதித்தியவர்மரின்கீழ் (1347—'75) மலாயு மிகுந்த உயர்நிலையிலிருந்தது. அத்தலைவர் பெயரளவுக்கு மட்டில் ஜாவாவுக்கு அடங்கி நடு சுமத்திராவில் ஆதிக்கம் செலுத்திஞர். 1365'ல் சுமத்திராவின் மற்ற இராச்சியங்களும் ஜாவாவின் மேலான ஆதிக்க நிலையை ஏற்றுக்கொண்டன. ஜாவாவில் அவ்வமயம் மஜபாகிதப்பேரரசு ஏற்பட்டிருந்தது. அப்பேரரசின் சிதைவின் காரணமாக 15'ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் வடசுமத்திரா, சீஞவின் அரசியலதிகாரத்துக்கு உட்பட்டது. சிறிது சிறிதாக முகம்மதிய சமயம் அப்பகுதியில் பரவியது. பதிஞரும் நூற்ருண்டில் சுமத்திராவிலிருந்து போர்னியோ செலிபஸ் தீவுகட்கு இஸ்லாம் பரவியது. ஸ்ரீவிசயப் பேரரசின் காலத்தில், இந்தியாவுக்கும் சுமத்திராவுக்குமிடையே நிலவிய நேர் தொடர்பு காரணமாக சுமத்திராவின் வெண்கல உருவங்களிலும் கல்லாலாகிய புத்தர் சிலையிலும் குப்தர்காலக் கலைப்பண்புகள் பொலிவதைக் காண்கிருேம். சூரியா என்ற சிறந்த சுமத்திரா நாட்டுச் சிற்பி பதிஞேரும் நூற்ருண்டில் வாழ்ந்தார். மலாயுக் கலைகளில் ஜாவாவின் "செல்வாக்கை" (Influence) மிகுதியாகக் காண்கிருேம்

## பகுதி 3

### ஜாவா: சிங்கசாரி அரசு (1222—92)

1222'ல் கதிரி அரசு வீழ்ச்சி அடைந்த செய்தி முதற் புத்தகத்தில் கூறப்பெற்றது. பின் கீழ்ஜாவா, இராசசன்

என்பாரால் ஒற்றுமைப் படுத்தப்பெற்று சிங்கசாரியைத் தலை நகராகக் கொண்ட புதிய அரசு அங்கு தோற்றுவிக்கப்பட்டது. அனுஷநாதர் (1227—48) விட்ணுவர்த்தனர் (1248-'68) கிருதனகரர் (1268—'92) முதலியோர் அங்கு ஆட்சி நடாத்தினர். இறுதியாக உள்ளவர், மலாயு, மதுரைத்தீவு, பாலி, போர்னியோவிலும் மலாயாவிலும் உள்ள சில பகுதிகளையும் வென்றார். அவர் சீனாவின் மங்கோலியப் பேரரசர் குப்ளேகானை எதிர்த்து நின்றார். சீன அரசியல் தூதுவர் 1289'ல் ஜாவா மன்னரால் முடமாக்கப்பட்ட செய்தி குறிப்பிடத்தக்கது. அம் மன்னர், தாந்திர பௌத்த சமயத்தைச் சார்ந்திருந்தார். அப்பிரிவினரின் கொள்கைப்படி குடிப்பழக்கம் முதலிய ஐந்து இன்பங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கன. கிருதனகரர், நூலாசிரியராக இருந்ததுடன் பௌத்த தத்துவங்கள், இலக்கணம், இலக்கியம் முதலியவற்றை நன்கு கற்றவராகவுமிருந்தார். அவருடைய பெருமையையும் அவர் நாட்டின் பொருளாதார வளம், வாணிகப் பெருக்கம் முதலியவற்றையும் மார்கோபோலோ குறிப்பிடுகிறார். கதிரி அரசின் ஆட்சித் தலைவர் கலகம் செய்ததால், சிங்கசாரி இராச்சியம் வீழ்ச்சியுற்றது. ஆனால் அக் கலகக்காரரை, 1292'ல் குப்ளேகான் வென்று, கிருதனகரரின் மருமகனை விசயரை (கிருதராசசர்) 1294'ல் ஜாவாவின் அரசராக அமர்த்தினர். மஜபாகிதம் புதிய அரசின் தலைநகராகியது.

## பகுதி 4

### மஜபாகிதப் பேரரசு (1294—1478)

கிருதராசரும் அவர் பின்வந்தோரும்: கிருதராசர் (1294—1309) புத்தருக்கும் சிவபெருமானுக்கும் கோயில்கள் எடுத்துப் புகழ்பெற்று, அமைதியுடன் தாம் இறக்கும் வரை ஆட்சி புரிந்தார். அவர்பின்போந்த அவர் மகன் சயனகரர் (1309—'28) நாட்டில் தோன்றிய கலகங்களை அடக்கிப் புகழ்பெற்றார். 1323'ம் ஆண்டில் வெளியிடப்பெற்ற ஒரு கல்வெட்டு அவ்வரசரின் பணித்துறைச் சார்பான பெயர், ''சுந்தரபாண்டிய விக்கிரமோத்துங்க தேவர்'' என்று அறிவிக்

கிறது. அவர்தம் முத்திரை அடையாளம் இரண்டு மீன்களாகும். இச்சான்றுகள், பாண்டிய நாட்டுக்கும் ஜாவா தீவுக்குமிடையே நிலவிய நெருங்கிய தொடர்பை நன்கு வலியுறுத்துகின்றன. அம்மன்னர் மதுரைத்தீவு, போர்னியோ முதலியவற்றுடன் ஜாவா முழுவதையும் ஆட்சி புரிந்தார். சீனவுடன் அவர் நட்பு உறவு பூண்டிருந்தார். ஒரு அறுவை மருத்துவரின் மனைவியின் கற்பை அம் மன்னர் அழித்த காரணத்தால், அவ்வரசரின் நோயைத் தீர்க்கும்பொருட்டு அம் மருத்துவர் அழைக்கப்பட்டிருந்த பொழுது அரசரை அவர் கொன்றதாக அறியக்கிடக்கிறது. 1350 முதல் 1389 வரை ஆட்சி நடத்திய ரசசனகரர் 1365'ல் ஜாவாவின் ஆதிக்கத்தை மலாயாதீவுக்குழுவின் பெரும்பகுதியில் நிலைநிறுத்தினர். மேற்கு ஜாவாவிலுள்ள சுந்தாவும் பிலிப்பீன் தீவுகளும்அப்பேரரசுக்கு உட்படவில்லை.பேரரசுக்கு உட்பட்டு திறை செலுத்திவந்த நாடுகளின் உள்துறை உரிமை, பேரரசரால் கட்டுப்படுத்தப் படவில்லை. இந்தியாவுடனும், சீனவுடனும் நேச உறவு நிலவியது. "அவ்வரசரின் ஆட்சிக்காலத்தில் அமைதிகாணப் பட்டது; கலகங்கள் ஏற்படவில்லை. நாட்டில் வறுமை கிடையாது. சட்டங்கள் உறுதியாக நிறைவேற்றப்பட்டன. உடலைத் துன்புறுத்தும் தண்டனைகள் அளிக்கப்படவில்லை. ஆனல் சிறு குற்றங்கட்குக்கூட உயிர்த்தண்டம் விதிக்கப் பெற்றது. தீயோர், எந்த இடத்தில் ஒளிந்திருந்தாலும் தேடிக் கண்டுபிடிக்கப்பெற்றனர். நாட்டின் பட்டி தொட்டிகளிலுங்கூட மக்களும் அவர்தம் உடமைகளும் நன்கு காக்கப்பெற்றன. மக்கட்டொகை மிகுதியாக இருந்தபோதிலும் திருட்டுத்தொழில் பேரரசில் இல்லை என்று ஒரு சீனக்குறிப்பு அறிவிக்கிறது.[1] ஆனல் அம்மன்னர் இறப்பதற்கு முன்னரே உள்நாட்டுப் போருக்கான வித்து விதைக்கப்பட்டது.

பேரரசின் சிதைவு. ரசசனகரருக்குப் பிறகு அவருடைய மகனுக்கும் மருமகனுக்கும் போட்டி ஏற்பட்டதால் நாடு இரண்டாகப்பிரிக்கப்பட்டது. அவ்வுள்நாட்டுப்போர், பேரரசின்

1. E. S. De klerck, History of the Netherlands East Indies I (1938), p. 142.

நிலை குலைவுக்குக் காரணமாயிற்று. அதன் விளைவாக, அரசிய லாதிக்கம், சீனுவுக்கு மாறியது. 1411'ம் ஆண்டிலேற்பட்ட எரிமலை வெடிப்பும் 1426'ல் ஏற்பட்ட வறுமையும் ஜாவா மக்களை மிகவும் வாட்டின. குறுகியகால ஆட்சிகள் பல தோன்றி மறைந்து 1478'ல் மஜபாகிதப் பேரரசு வீழ்ச்சி யடைந்தது. நாம் அறிந்தவரை கிழக்கு ஜாவாவில் இறுதியான இந்து அரசர், கதிரி பகுதியைச்சேர்ந்த ரணவிசயர் என்பார் ஆகும். ஜாவாவிலிருந்து சீனுவுக்கு 1499'ல் இறுதி அரசியல் தூதுவன் அனுப்பப்பட்டான். பதினாறும் நூற்றாண்டின் முற் பகுதியில் ஜாவாவின் கடலோரத்திலிருந்த முஸ்லிம் தலைவர்கள் அப்பகுதியில் நிலவிய இந்து ஆட்சியை முடிவுறச்செய்தனர். பிறகு விரைவில் மதுரைத்தீவு முகம்மதிய சமயத்தைத் தழுவியது. அங்கு வெற்றிபெற்ற முஸ்லிம் வீரர்கள், மலபாரி லிருந்தும், சோழமண்டலக் கரையிலிருந்தும் சென்ற இந்திய ராக்கப்பட்ட முகம்மதியர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. பதினேழாம் நூற்றாண்டில்தான் அரேபியாவிலிருந்து நேரான முகமதியச் செல்வாக்கு தென்கிழக்கு ஆசியாவில் பரவியது. அதுவரை மலாய்த்தீவுக் கூட்டத்தில் இந்திய இஸ்லாம்தான் பரவி இருந்தது. ஜாவா, முகமதியரால் வெல்லப்பட்டபின் அந்நாட்டுத் தலைவர்களும், பெருஞ் செல்வர்களும் பாலித் தீவுக்கு ஓடி அங்கு இந்துப்பழக்க வழக்கங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

## பகுதி 5

### ஜாவாவின்கலை, இலக்கியம், சமயம், சமூகம், பொருளியல்

கலை. சண்டிசிங்கசாரி, சண்டிஜாகோ என்ற இரு பெரும் கோயில்கள் (கோபுரங்களுடன் கூடியவை) கீழ் ஜவாவில், பதின்மூன்றும் நூற்றாண்டில் சிறப்புற்றுவிளங்கின. பின்னையதில், விட்டுணுவர்த்தனரின் உருவம், ஒருபௌத்தக் கடவுளாக அமைக்கப்பட்டுள்ளது. ஜாவாவின் கிருட்டிணுயனம் என்ற நூலின் செய்திகளை விளக்கும் பலகைச்சித்திரங்கள் (Reliefs) அங்கு உள்ளன. முன்னைய கோயிலில், கணேசர், துர்க்கை, பிரமன் முதலிய கடவுளர் உருவங்கள் காணப்

படுகின்றன. பனதரன் என்ற இடத்தில் (கீழ்ஜாவா) 14'ம் நூற்ருண்டில் எடுக்கப்பட்ட சிவன் கோயில்கள் மிகவும் புகழ் வாய்ந்தவை. மூன்று தளங்களுடனமைந்த திருக்கோயில் 1350'ம் ஆண்டில் கட்டப்பெற்றது. கீழ்ஜாவாவில் இறுதியாகத் தோன்றிய பெரும் நினைவுச் சின்னம் அதுவே. ஆண்டுள்ள கட்டடங்கள், ஒருமைப்பட்ட கருத்துணர்வின் அடிப்படையிலமையாமல் ஒழுங்கற்றதாக உள்ளன.[1] மேல் தளங்களில், இராமாயணம், கிருட்டிஞயனம் ஆகிய நூல்களிலுள்ள நிகழ்ச்சிகளை விளக்கும் சித்திரங்கள் உள்ளன. ஜாவாவில் சில குகைக் கோயில்களும் காணப்படுகின்றன. வெங்கலத்தாலாகிய கடவுளுருவங்களில், பாலர் கலைப்பண்பும், தென்னிந்தியக் கலைப்பண்பும் செறிந்திருக்கக் காண்கிருேம். கீழ்ஜாவாவின் கலைகள், நடுஜாவாவினின்று பெறப்பட்டிருந்த போதிலும் இரு பகுதிகளின் கலைகளும் ஒன்றிெனென்று வேறுபடுகின்றன. நடுஜாவாவில் காணப்பட்ட கலைச்சிறப்பு கிழக்கு ஜாவாவில் இல்லை. இந்தியத் தொடர்பு குறையக் குறைய அந்நாட்டுக் கலைகளில் ஜாவாத்தன்மை மிகுதியாக இடம் பெற்றது. ஆனல், இந்தியத் தொடர்பு அறுந்த பிறகும் இந்தியத்தன்மை ஜாவாக் கலைகளில் எஞ்சியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.[2] நடுஜாவாவிலிருப்பதைவிடக் குறைந்த அளவுக்கே கீழ்ஜாவாவில் இந்துத்தன்மை காணப்படுகிறது. ஒரே தீவில் இத்தகைய வேறுபாடுகளிருப்பதை நோக்கும் பொழுது அங்கு இந்தியர் மேற்கொண்ட கடமையின் வலிமையை ஒருவாறு நாம் உணர்கிருேம்.[3]

**இலக்கியம்.** இராசசஞகரரின்கீழ் மஜபாகிதப் பேரரசைப் பற்றிய நகரகிருதாகமம் என்னும் செய்யுள் நூலை 1365'ல் பிரபஞ்சர் என்ற புலவர் இயற்றினர். பதினைந்தாம் நூற்ருண்டில், பொது அறிவுக்களஞ்சியம் என்று புகழத்தக்க நீதி சாத்திரம் என்ற நூல் இயற்றப்பெற்றது. அஃது சமஸ்கிருத மொழியிலுள்ள நீதி இலக்கியங்களைப் பின்பற்றியதாகும்.

---

1. A. K Coomaraswamy, History of Indian & Indonesiam Art (1927), p. 209.

2 & 3 R. C. Majumdar, Suvarnadvipa pt. II pp. 300 & 353.

இந்தியப் புராணக்கதைகளையும், வீரகாவியங்களையும் சிறப்பிக்கும் உரைநடை நூல்கள் பல தோன்றியுள்ளன. சட்டம், சமயம், வரலாறு முதலியனவற்றைப் பற்றிய ஜாவா உரைநடை நூல்களும் குறிப்பிடத்தக்கன. பதின்மூன்ரும் நூற்ருண்டிலிருந்து பதினைந்தாம் நூற்ருண்டுவரை ஜாவாவில் நிலவிய இந்து ஆட்சியைப்பற்றிய நூலொன்று ("அரசர்களின் நூல்") 1613'ல் எழுதப்பெற்றது. அதிலுள்ள சில செய்திகள் நம்பத்தக்கனவாக இல்லாத போதிலும் அந்நூல் பெரும் பான்மையும் பயனுள்ள ஒரு வரலாற்றுப் புத்தகமாகும். பாஞ்சிப்புராணப் பாக்களில் அடிப்படை வரலாற்றுண்மை உண்டு என்று சில அறிஞர் கருதுகின்றனர். கதைத்தலைவனை பாஞ்சி கதிரியின் 1'ம் காமேச்வரன் (1115—'30) தான் என்றும் கருதப்படுகிருர். இறுதியாக, தந்திரி எனப்படும் ஜாவா நீதிக்கதைகள், இந்தியாவிலிருந்து பஞ்சதந்திரம் என்ற நூல் அங்கு பரவியதைக்காட்டுகின்றன

**சமயம்.** ஜவாவில், சைவ சமயம் மிகவும் சிறப்புற்று விளங்கியதென்பதற்குக் கட்டடக்கலையும், உருவங்களை விளக்கும் நூல்களும் சான்றுகளாக உள்ளன. மகாதேவர், பைரவர், கணேசர், கார்த்திகேயர், பார்வதி, மகாகாளி, அர்த்தநாரி, சிவலிங்கம் முதலிய கடவுளுருவங்கள் மிகுதியாகக் காணப்பட்டுள்ளன. வைணவ சமயம் சிற்சில காலங்களில் மட்டுந்தான் சிறப்புற்றிருந்தது. குறைந்த அளவுக்கு, திருமால், இலக்குமி, கருடன், இராமர், கிருட்டினர், நரசிம்மர் முதலிய தெய்வ உருவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. பிரமன், சரஸ்வதி உருவங்கள், மேலும் அரிதாக உள்ளன. திரிமூர்த்தி (பிரமன், விட்டுணு, சிவன்) கொள்கையும் ஜாவாவில் அறியப்பட்டிருந்தது. ஞாயிற்றைச் சிவன் என்று மக்கள் வழிபட்டனர். இந்து சமய சடங்குமுறைகள் அத்தீவில் வேரூன்றின. சைவ சமயத்துக்கு அடுத்தபடியாக மகாயான புத்தசமயம், ஜாவாவில், சைலேந்திர அரசின் காலத்தில் பரவியது. அதன் சிறப்பான வெற்றியை போராபதூரில் காணலாம். இந்திய மகாயான சமயத்தின் வளர்ச்சிக்கூறுகளின் அறிகுறிகளை ஜாவா வரலாற்றில் 1200 முதல் 1500 வரை உள்ள காலப்பகுதி

யில் காணமுடியும். சிவன், அயக்ரீவன் முதலிய இந்துக் கடவுளர் மகாயானக் கடவுட் தொகுதியில் சேர்க்கப்பட்டமை, தவருன வகையில் மாற்றி அமைக்கப்பட்ட தாந்திரிக முறைகள், (இன்தேறல், மீன், இறைச்சி முதலியன உண்ணத் தக்கன என்ற கொள்கையும் பிறவும்) ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து மறைவாகப் புரியும் சில சடங்குகள் (சாதனச் சக்கரம்) முதலியன ஜாவாவிலும் காணப்பட்டன. சிவனையும் புத்தரையும் இணைத்தல், அரிஹரதத்துவம் முதலியனவும் ஜாவாவில் நிலைபெற்றன. மகாயானமும் தாந்திரிய சமயமும் வங்காளத்தில் வளர்ச்சியடைந்த முறையை ஒத்து ஜாவாவிலும் அமைந்திருப்பது நோக்கற்பாலது. "நம்பிக்கைகள், சமயப் பழக்கவழக்கங்கள் முதலியனவற்றைப் பொறுத்தவரை தாய் நாட்டுக்கும் தொலைவில் உள்ள கிழக்குக்குடியேற்ற நாடுகளுக்கும் பெரும்பான்மையும் ஒற்றுமையிருந்தது.[1]

**சமூகநிலையும் பொருளியலும்:** இந்தியாவில் உள்ளது போன்ற சாதிமுறை ஜாவாவிலும் காணப்பட்டது. அங்கு கைம்பெண் மறுமணமுறையும் பல மனைவியரை மணந்து கொள்ளும் பழக்கமும் நிலவின. பெண்டிர் முகமூடி அணியவில்லை. பெரும்பான்மையும் நெருங்கிய உறவினரிடை மணவினை தடைசெய்யப்படவில்லை. ஒருவன் தன் மாற்றாந்தாய் மகளை மணம் புரிந்துகொண்ட குறிப்பு ஒன்று காணப்படுகிறது. ஆடவன் தான் மணந்துகொள்ளும் பெண்ணுக்குப் பரிசு கொடுக்கும் முறை நிலவியது. பெண்டிர், தம் கணவரை நீக்கிக்கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர்; ஆனால் இல்லறம் நடத்துங் காலத்தில் அவர்கள், தமது கணவனுக்கு அடங்கியே நடக்கவேண்டும். ஆடவருக்குத் தம் மனைவியரைக் கோலினால் அடிக்கவும் உரிமை உண்டு. ஆனால் தலையில் மட்டும் அடிக்கக் கூடாது. மனுவின் சட்டங்கள் ஜாவாவில் நிலவின என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். பிறனில் விழையும் கேடு ஆதரிக்கப்படவில்லை. ஆனால் அக்குற்றத்துக்குரிய தண்டனை மனுதர்ம சாத்திரம் விதிப்பதுபோல அத்துணைக் கடுமையானதாக இல்லை. அரசன், அத்தகைய

1 Majumdar, op. cit., p. 99;

# தெற்கு ஆசியா 1200-1700



குற்றவாளிகளை நாய்களை ஏவிக் கடிக்கச்செய்து கொல்ல வேண்டுமென்று அந்நீதிநூல் கூறுவது ஈண்டு குறிப்பிடத் தக்கது. உடன்கட்டையேறும் வழக்கம், இந்தியா, ஜாவா, இரு நாடுகளிலும் இருந்ததெனினும் பெரும்பான்மையும் இந்தியப் பெண்டிரைவிட ஜாவாப் பெண்டிர் சிறந்த நிலையி லிருந்தனர். அத்தீவில், கணவனை இழந்த மகளிரின் தலை மயிர் வெட்டப்பட்டது. ஆனால் முழுவதும் மழிக்கப்படவில்லை. ஜாவா மக்கள் கற்பின் சிறப்பை மிகவும் போற்றினர். அங்கு அடிமைமுறை, சட்டங்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. குற்றத்துறைச் சட்டம், மனுவின் நீதிநூலை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் திருட்டு, கொலை முதலியனவற்றைப் பற்றி விளக்கமான குறிப்புக்கள் உள்ளன. இந்தியச்சட்ட அறிஞர், (மனு) குற்றம் செய்தவரின் குறிப்பிட்ட உறுப்புக்கள் வெட்டப்பட வேண்டுமென்று கூறியுள்ளதை ஜாவா மக்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனால் குற்றவாளிகள், அவரவர் சாதிக்குத் தக்கவாறு தண்டனைபெறும் (மனுவின்) முறையை அவர்கள் பின்பற்றவில்லை. ஆனால் பொதுவாக சாதிவேறுபாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. மக்களின் உணவு, ஆடைமுறை முதலியன மிக எளியனவாயிருந்தன. பெண்டிர், இடுப்புக்குமேல், ஆடை அணிந்துகொள்ளவில்லை. அரிசி உணவு, வெறியூட்டும் குடிவகைகள், வெற்றிலை முதலி யன மக்களிடை வழங்கின. வாள்போர் வல்லமைப்போட்டி, சேவல்போட்டி, சூதாட்டம், இசை, நடனம் முதலியன மக்க ளின் பொழுது போக்குக்களாம். மேலும் நிழலாட்டம்[1] ஜாவா மக்களால் மிகுதியாக விரும்பப்பட்டது. அவ்வாட்டம் இந்திய "சாயைநாடக"த்திலிருந்து தோன்றியதென்ற கருத்தைப் பல அறிஞர் மறுக்கின்றனர். மலபாரின் "பாவைக் கூத்தை" அஃது ஒத்திருப்பது நோக்கற்பாலது. பிணங்களை, எரித்தல், நீரிலிடல் திறந்த வெளியில் இடுதல் முதலிய மூன்று பழக்கங்களும் காணப்பட்டன. சுருங்கக் கூறின், சமயத்துறையிலுள்ளதை விடச் சிறிது குறைவாகவே சமூகத்துறையில், இந்தியக் கருத் துக்கள் ஜாவாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அத்தீவின் செழிப்புக்குப் பெரும்பான்மையும் ஆண்டுகாணப்பட்ட வாணிக

1. பொம்மலாட்டத்தில் ஒருவகை.

முன்னேற்றமும், நிலவளமும் சிறந்த காரணங்களாகும். ஜாவாவின் ஏற்றுமதிப் பொருள்களில் சிறப்பாக அரிசி, மிளகு, கிளிகள், வண்ணங்களுடன் அச்சடித்த பருத்தி ஆடைவகைகள் முதலியவை குறிப்பிடத்தக்கன.

ஜாவாமக்களின் தன்மை. இக்காலத்திய ஜாவாக்குடி மகனைப் பற்றிய பின்வரும் வருணனை, கடந்த காலத்தில் அத் தீவில் இந்துக்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் இயல்பை விளக்குந்தன்மை வாய்ந்தது. "ஜாவாக் குடிமகன், அருகிலுள்ள நாட்டவரினின்று வேறுபடுகிருன். அதற்குக் காரணம், அவர்களைவிட இவன் மிகுந்த அறிவுத்திறமையும், நாகரிக உயர்வும் மிக்க அடக்கமும் பெற்றவனுக இருப்பதேயாகும். இவன், மேல்நாட்டுக் கொள்கைகளையும் கருத்துக்களையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்வதில்லை. பெற்ருேரை இவன் அன்புடன் ஆதரிக்கிருன்; தன் தாய்நாட்டைப் போற்றுகிருன்; இவனுடைய முன்ளுேரின் பழக்க வழக்கங்களையும் அவர்தம் நிலையங்களையும் மிகுதியாக விரும்பும் காரணத்தால் இவன் தன் தாய்நாட்டைவிட்டுப் பிரிய விரும்புவதில்லை. இவனுடைய வாழ்க்கை, அமைதியும் அடக்கமும் நிறைந்தது. மீன், அரிசிச் சோறு, காப்பி முதலியன பெரும்பாலும் இவனுடைய அன்ருட உணவுகளாம். கள் குடித்தலை இவன் வழக்கமாகக் கொள்ள வில்லை. ஆனல் சூதாட்டம், சேவல்போட்டி முதலியன இவனுடைய பொழுதுபோக்கு முறைகளாம். பெரும்பான்மையும் இவன் சிக்கன வாழ்வை மேற்கொள்வதில்லை; இயன்ற அளவுக்கு உழைப்பைக் குறைத்துக்கொள்ள விரும்புகிருன். ஆயினும் இவனைச் சோம்பேறி என்று கூறுவது பொருத்த முடையதன்று."[1]

## பகுதி 6

### பாலி: அரசியல் வரலாறு, பண்பாடு, சமயம், சமூகம்.

அரசியல் வரலாறு. பாலி, பதின்மூன்ரும் நூற்ருண்டின் முற்பகுதியில் ஜாவாவின் ஆதிக்கத்தினின்று விடுதலைபெற்றது. ஆனல் 1284'ல் சிங்கசாரி மன்னர் கிருதனகரர் அதைவென்

ருர். 1292'ல் அவர் வீழ்ச்சிக்குப்பின், பாலி, பெயரளவில் சீனுவுக்கு அடங்கியிருந்தது. சிறிது சிறிதாக மஜபாகிதப் பேரரசு, அத்தீவில் தன்னுதிக்கத்தை வெற்றியுடன் செலுத்தியது. ஜாவா, பாலி, ஆகிய இரு தீவுகளின் அரசியலும், கலைப்பண்புகளும் ஒற்றுமை பெற்றன. 1478'ல் மஜபாகித அரசு வீழ்ந்தவுடன் அங்கிருந்து உயர்குடிமக்கள் பாலிக்குச் சென்றனர். இதன் விளைவாக ஜாவாவின் பண்பாட்டு வரலாறு பாலியின் பண்பாட்டு வரலாற்றுடன் இரண்டறக் கலந்தது. மஜபாகித இளவரசரின்கீழ் பாலி உரிமையுடன் விளங்கலாயிற்று. பதினேழாம் நூற்ருண்டில், முகம்மதியரின் வலுவந்தத் தாக்குதல்களைப் பாலி எதிர்த்து வெற்றிபெற்றது. அடுத்த நூற்ருண்டில் அத்தீவில் ஒன்றுடனென்று போரிட்டு வந்த ஒன்பது இராச்சியங்கள் தோன்றியிருந்தன. 19'ம் நூற்ருண்டில் டச்சுக்காரர் பாலியைக் கைப்பற்றினர். 1839'ல் டச்சு அதிகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கலையும், இலக்கியமும்.** பாலித்தீவின் கலைப்பண்புகள் 10'ம் நூற்ருண்டுவரை இந்தியா வழியே உருவானவை. அதன்பிறகு இந்திய-ஜாவானியப் பண்புகள் அங்குச் சிறப்புற்றன. சிறிது சிறிதாக உள்நாட்டுக் கலைமுறை பாலியில் வளர்ச்சியடைந்து வந்தது. மஜபாகித அரசுக் காலத்தில் ஜாவா இலக்கியத்தின் பெரும்பகுதி பாலியில் தோன்றியது. பாலித்தீவின் தனி இலக்கியமும் வளர்ந்து வந்தது.

**சமயம்.** பாலியின் சமயவரலாற்றில் 11'ம் நூற்ருண்டு வரை இந்தியாவின் செல்வாக்கையும், அதன் பிறகு ஜாவாவின் செல்வாக்கையும் காண்கிருேம். இந்து சமயமே, பாலியின் இன்றைய மதமாக விளங்குகிறது. சிவ வழிபாடு சிறப்பாகப் போற்றப்படுகிறது. சைவசமயமும், புத்தமதமும் ஒன்ருக்கப் பட்டுள்ளன. புத்தர், சிவனின் இளவலாகவும், பிரமனும், திருமாலும் சிவனின் அம்சங்களாகவும் அங்கு கருதப்படுகின்றனர். ஜாவாசமய வாழ்க்கையின் சிறப்பான கூறுகளில் பெரும்பாலானவை பாலியில் புகுத்தப்பட்டுள்ளன. கடவுளர், மூதாதையர், கொடிய தேவதைகள் முதலியோரின் அருளைப் பெற பல சடங்குகளை மக்கள் மேற்கொள்ள வேண்டுமென்பது

பாலித்தீவினரின் சமயக் கொள்கையாம். வீட்டு வழிபாட்டு முறையில் "சூரிய சேவனம்" (சிவனுகக் கருதப்படும் சூரியனை வணங்குதல்) சிறப்பாகப் போற்றப்படுகிறது. பிறப்பிலிருந்து இறப்புவரை ஒவ்வொருவரும் செய்யவேண்டிய வினைமுறைகளைப்பற்றி இந்து கிருஹய சூத்திரங்கள் விதித்துள்ள யாவும் பாலியில் பின்பற்றப்பெறுகின்றன. பிறசாதியினரும் பெண்டிரும் குருமாராக முடியும். ஆனல் சமஸ்கிருதத்திலும் பழைய ஜாவா மொழியிலுமுள்ள சமய நூல்களை ஒரு ஆசிரியரின்கீழ் அவர்கள் பயின்று, விதிக்கப்பட்டுள்ள பயிற்சிகளையும் பெற்றிருக்கவேண்டும். கோயிற்குரு, ஆசிரியராகவும், சோதிட அறிஞராகவும் பணியாற்றுவர்.

சமூக வாழ்க்கை. பாலித்தீவின் அந்தணர், இருவகையினர்; சைவஅந்தணர், பௌத்தஅந்தணர். முன்னவர் சிவனை வழிபடுவோர், பின்னவர் புத்தரை வணங்குபவர். பிறசாதியினருடன் கலப்பு மணம்புரிந்துகொண்டதன் விளைவாக சைவ அந்தணரிடை ஐந்து பிரிவினர் தோன்றினர். கலப்பு மணத்தின் விளைவாகப் பிறக்கும் குழந்தைகள் அவர்தம் தந்தையின் சாதியைச் சேர்ந்தவராகக் கருதப்படுகின்றனர். க்ஷத்திரியரில் ஐந்து பிரிவினரும், வைசியரில் மூன்று பிரிவினரும், சூத்திரரும் சமூகத்தில் காணப்படுகின்றனர். தீண்டத்தகாதோர் என்றவகுப்பு சமூகத்திலில்லை. ஆனல் அடிமைகள் உண்டு. பெரும்பாலும் அவர்கள் அன்புடன் நடத்தப்பெற்றனர். தொழில்களை அடிப்படையாகக்கொண்ட சாதிப்பாகுபாடு பாலியில் இல்லை. வேளாண்மைத் தொழில்புரிவோரிடை பல சாதியினரும் காணப்படுகின்றனர். ஆயினும் குற்றவாளிகள், தமது சாதிக்குத் தக்கவாறு தண்டனை பெறுவர். மணவினையில் "பிரதிலோமம்" ஏற்றுக்கொள்ளப்பட்டது; "அனுலோமம்" ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதாவது, கீழ்ச்சாதி பெண்ணுனவள் மேல்சாதி ஆடவனை மணந்துகொள்ளலாம். ஆனல் மேல்சாதிப் பெண் கீழ்சாதி ஆடவனை மணம்புரிந்துகொள்வது தவறு என்று கருதப்பட்டது. ஆயினும் செயல்முறையில் மேற்கூறிய சட்டம் புறக்கணிக்கப்படுவதுமுண்டு; உடன்கட்டையேறும் வழக்கமும் அத்தீவில் ஏற்றுக்கொள்ளப்

பட்டது. சாதிக்குத் தக்கவாறு சாவுத்தீட்டின் நாட்களின் எண்ணிக்கை வேறுபடுகிறது. இறந்தவரின் உடல்கள் விரிவான சடங்கு முறைகளுடன் எரிக்கப்பட்டு, எலும்புகள் கடலில் விடப்படுகின்றன.

**பாலி மக்களின் தன்மை.** இக்கால பாலித்தீவின் இந்துக்கள், "ஜாவா மக்களைவிட மிகுந்த வலிமையும், உயரமும், உளத்திட்பமும்வாய்ந்தவர்கள்; கவடம் அற்றவர், நேர்மையான நடத்தையுள்ளவர்; களியார்வம் மிக்கவர், நல்ல உள்ளம் படைத்தவர். உழைப்பாளிகள்; ஒழுங்கை நாடுபவர்கள். மரணத்தைப் பொருட்படுத்தாதவர்கள். சேவற்போட்டி முதலிய பந்தய விளையாட்டுகளில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்கள்."[1]

## பகுதி 7

### போர்னியோவும் மற்ற தீவுகளும்

**போர்னியோ.** பனிரண்டாம் நூற்றுண்டின் முடிவில் போர்னியோ, ஜாவாவின் ஆட்சியின்கீழ் கொணரப்பட்ட செய்தி முதற்புத்தகத்தில் கூறப்பெற்றது. பதின்மூன்றும் நூற்றுண்டின் முற்பாதியில் போர்னியோ, உரிமையுடன் விளங்கிய போதிலும், அதன் சில பகுதிகள், கிருதனகரரால் வெல்லப் பெற்றன. அடுத்த நூற்றுண்டின் முற்பகுதியில் மீண்டும் அத் தீவு ஜாவாவின் ஆட்சிக்கு உட்பட்டது. மஜபாகிதப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, பதினைந்தாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் போர்னியோ, சீனவுக்கு அடங்கியது. சுமார் 1408'ல் போர்னியோ மன்னர் சீனவுக்குச்சென்று அங்கேயே இறந்தனர். அவர் மகன், தம் தாயுடன், 1412'ல் சீன அரச அவைக்குச் சென்றனர். 1425 க்குப் பிறகு போர்னியோ சீனவுக்கு ஒழுங்காகத்திறை செலுத்தவில்லை. அத்தீவில் இந்துக்கள் குடியேறிய காலத்துக்குப் பிறகு தொடர்ந்து இத்தேயத்தவர் அங்குச் செல்லவில்லை. மிகுதியாக இந்துக்களின் அருஞ்செயல்களை அங்கு நாம் காண்பதற்கில்லை. உள்நாட்டுப் பண்புகள், அயல்நாட்டுக் கலைகளின் வளர்ச்சியைத் தடுத்தன.

1. De klerck, op. cit., p. 119.

கீழைப் போர்னியோவிலுள்ளள ஒரு குகையில் (Kombeng) காணப்பட்டுள்ள பல சின்னங்கள், பல நூற்றுண்டுகளைச் சேர்ந்தன ஆகலாம். மகாதேவனின் உருவம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அத்தீவில் சைவசமயம் மிகவும் சிறப்புற்றிருந்தது. அதற்கடுத்த நிலையை புத்தமதம் பெற்றிருந்தது.

**பிலிப்பீன் தீவுகள்.** பிலிப்பீன் தீவுகளில் செம்பினாலாகிய ஒழு சிவ உருவமும் பொன்னாலாகிய ஒரு பெண் கடவுளின் சிலையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் ஆண்டு நிலவிய சில மொழிகளில் சமஸ்கிருதச் சொற்கள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. செலிபஸ் தீவில் காணப்பட்டுள்ள வெங்கலத்தாலாகிய ஒரு புத்தர் சிலையில் குப்தர் கலைச்சாயலைக் காண்கிறோம். தவிர அத்தீவுகளின் மொழி, எழுத்து வடிவங்கள், சிவ வழிபாட்டுமுறை முதலியவற்றில் இந்தியப்பண்பு காணக்கிடக்கிறது. திரிமூர்த்தி, காலன் முதலியோரைக் குறிக்கும் கற்சிலைகள் திமோர் தீவுகளில் உள்ளன. சிவ வழிபாட்டின் அடையாளங்கள் நியூகினியிலும் காணப்படுவதால் அங்கும் இந்தியப் பண்பு பரவியதென்பது தெளிவு.

## பகுதி 8

### மலாக்கா சுல்தானியராட்சியும், மலாயாப் பண்பாடும்

பதின்மூன்ரும் நூற்றுண்டும், பதினன்காம் நூற்றுண்டும். சைலேந்திரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, பதின்மூன்ரும் நூற்றுண்டில், ஜாவா, மலாயாவில் படையெடுத்த செய்தி முதற்புத்தகத்தில் கூறப்பட்டது. பதினன்காம் நூற்றுண்டின் பிற்பாதியில் மலாயாவின் பெரும்பகுதி மஜபாகிதப் பேரரசின் (ஜாவாப் பேரரசு) ஆட்சிக்கு உட்பட்டது. அடுத்த நூற்றுண்டின் தொடக்கத்தில், மலாயாவில் ஜாவாவின் ஆதிக்கம் மறைந்து சீனுவின் ஆட்சி ஏற்பட்டது: ஆனல் உள்நாட்டில் உரிமையுடன் அதிகாரம் செலுத்திய பல தனி அரசர் தோன்றியிருந்தனர். அத்தகைய உரிமைப் பகுதிகளில் மலாக்காவும் ஒன்று.

**பதினைந்தாம் நூற்றாண்டு: மலாக்கா சுல்தானியராட்சி.** மலாக்காவின் தோற்றக்காலத்தை முழு உறுதியுடன் கூறுவதற்கில்லை. போர்ச்சுகீசியரின் குறிப்புப்படி அக்காலம், ஏறத்தாழ 1250. மலாய் மரபுரையின்படி, சுமத்திரா அல்லது ஜவாவில் வாழ்ந்த பரமேச்வரன் என்னும் ஒரு இந்து (1403—'14), சிங்கப்பூரிலிருந்து மலாக்காவுக்கு ஓடினதாகத் தெரிகிறது. அவர் பெயரளவில் சீனாவுக்கு அடங்கியிருந்த போதிலும் உண்மையில் உரிமையுடன் அங்கு ஆட்சி நடத்தினார். அவருக்குப் பின்போந்த சிகந்தர்ஷா (1414—'24) முகமதிய சமயத்தைத் தழுவினார். அவரும் அவருக்குப்பின் வந்தோரும் சையாமுடன் போரிட்டதுடன் மலாக்காவின் வாணிகமுன்னேற்றத்திற்குப் பெரிதும் பணியாற்றி வந்தனர். அவ்வரசின் ஆதிக்கம் விரிவடைந்தது. 1509'ல் மலாக்கா சுல்தான் போர்ச்சுகீசியருடன் பகைத்துக் கொண்டதால் இரண்டு ஆண்டுகட்குப்பிறகு, இந்தியாவில் போர்ச்சுகீசியரின் தலைவராக இருந்த ஆல்புகர்க், மலாக்காவைக் கைப்பற்றிக் கொண்டார். அத்துடன் மலாக்கா சுல்தானியராட்சி முடிவுற்றது. பதினைந்தாம் நூற்றாண்டில் அரசியலிலும், வாணிகத் துறையிலும் மலாக்கா மிகச்சிறந்த பகுதியாக விளங்கியது. முகமதிய சமயம் பரவுவதற்கும் அவ்வரசு உதவிபுரிந்தது. சுல்தானியரால் வெல்லப்பட்ட அரசர்கள் முகமதியராகும்படி கட்டாயப்படுத்தப்பெற்றனர். மதமாற்ற முயற்சிகள், சுமத்திரா ஜாவா முதலிய தீவுகளுக்கும் பரவின. 1430'ம் ஆண்டிலேயே முகமதிய வணிகர், மொலுக்கஸில் தமது மதத்தைப் புகுத்தினர். மலாக்காவின் மிகுந்தபொருள்வளம், மலாயாசியாவில் இஸ்லாம் பரவுவதற்கு ஒரு சிறந்த காரணமாயிற்று. இக்கால மலாயாவின் சுல்தான்களில் பெரும்பாலோர், தாம், மலாக்கா இந்து மன்னர் பரமேச்வரரின் கால்வழியினர் என்று கூறிக்கொள்கின்றனர்.

**கலையும் இலக்கியமும்.** பனிரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்துக்குரிய மலாயாவின் கலைச்சின்னங்கள், அங்கு, சைவம், வைணவம், பௌத்தம் முதலிய சமயங்கள் சிறப்புற்றிருந்தன என்பதைக்காட்டுகின்றன. புத்தர்சிலைகளைத் தவிர, தென்னிந்திய முறையிலமைந்த நடராசர் உருவமும்,

சில இந்துக் கோயில்களும் அங்குக் காணப்படுகின்றன. வெங்கலத்தாலாகிய கணேசர் உருவமும் குறிப்பிடத்தக்கது. மலாயாவின் ஆதி இலக்கியத்தில் இந்தியப் பண்பையும் இந்து-ஜாவாப் பண்புகளேயும் காணலாம். இராமாயண காவியம் அங்கே சில மாறுதல்களுடன் வழங்கியது. அதன்படி கைகேயி, இராமரின் உடன் பிறந்தவளாகவும், விபீடணனின் மனேவியாகவும் கருதப்படுகிருள். மேலும் சீதாதேவி, இராவணனின் உருவப் படத்தை வைத்திருந்த தால், இராமர் அவளே நீக்கிவிட்டதாகவும், சீதை, கைகேயி யின் பொருட்டே அப்படத்தை வரைந்ததாகவும் மலாய் இராமா யணம் கூறும். பல வேறுபாடுகளிருந்த போதிலும் தமிழ் இராமாயணத்தின் போக்கு மலாயாவில் பரவி இருந்ததென்று கருதப்படுகிறது. மகாபாரதக் கதையும் பல மாறுபட்ட உருவங் களில் அப்பகுதியில் வழங்கிவருகிறது. இந்தியக் கதைகளின் தொடர்பு மலாயாவின் நீதிக்கதை இலக்கியத்திலும் காணப்படு கிறது. மலாய் மொழியில் பல சமஸ்கிருதச் சொற்கள் இருப் பதும் குறிப்பிடத்தக்கது.

## பகுதி 9

### சையாம்

சையாம் அல்லது சையாமதேசம் (வெள்ளையானை நாடு) இந்திராதித்யரின் கீழ் (1237-சுமார் 1270) உரிமை பெற்றது. சுகோதை அதன் தலைநகராகியது. மூன்ருவது மன்னரான இராமகாமெர் (1276—1317) மக்களின் நலத்தைக் கருத்திற் கொண்டு பல சீர்திருத்தங்கள் புரிந்தார். நாட்டு மொழியின் வளர்ச்சிக்காகப் புதிய எழுத்து வடிவங்கள் இவரால் புகுத்தப் பெற்றன. அவர் ஒரு பௌத்தர். அவருடைய 1293'ம் ஆண்டுக் கல்வெட்டினின்று அவர், 1283-க்கு முன்னரே பட்ட மேற்றிருக்க வேண்டுமென்று அறிகிருேம். அவர் தாமே நேரில் மக்களுக்கு முறை வழங்கினர். குறைகளேயுடைய மக்கள், அரசரை அழைப்பதற்காக ஒரு மணி கட்டப்பட்டிருந்தது. பதின் மூன்ரும் நூற்ருண்டின் முடிவில் சையாம் அரசு, மேகாங் ஆற்றிலிருந்து பெகு வரையிலும் தெற்கில் மலாக்கா வரை யிலும் பரவியிருந்தது.

I'ம் தருமராசன் (1347 — சுமார் 1370) ஈழத்தி லிருந்து ஒரு பௌத்த துறவியைத்தமது அவைக்கு அழைத்துப் புத்த சமய-மும்மணிகளில் தமது நம்பிக்கையை வெளியிட்டார். அனுராதபுரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு போதிமரக் குச்சியை மன்னர், தம் நாட்டில் நட்டனர். ஜாதகக் கதைகளை விளக்கும் 51 விளக்கச் சித்திரங்கள் அவராட்சியில் கல்லின் மீது வரையப்பட்டனவாம். "மகாதரும ராசாதிராசன்" என்ற ஒரு பட்டம் அவருக்கிருந்தது. வேதங்களையும், வான நூலையும் அம்மன்னர் நன்கு கற்றிருந்தார். ஆண்டுக் குறிப்பேடு அவரால் சீர்திருத்தப் பெற்றது. பல கட்டடங்கள், அவரால் எடுக்கப் பெற்றன. சைவ, வைணவ சமயங்களும் அவரால் ஆதரிக்கப்பெற்றன. பரமேசுவரர், விட்ணு முதலிய கடவுளரின் சிலைகளும் அவரால் அமைக்கப் பெற்றன. சுகோதை குலத் தின் இறுதி மன்னர் அவரேயாவர். நாம் அறிந்தவரை அவ ரைப் பற்றிய இறுதி ஆண்டு 1362 ஆகும்.

மற்றொரு தாய்வழித் தலைவர் இராமாதிபதி (1350—'67) என்பார், மேனும் ஆற்றங்கரையிலுள்ள அயோத்தியாவைத் தலைநகராகக் கொண்டு சையாமில் தமது ஆட்சியை நிறுவினர். அவரும் அவர் பின்வந்தோரும் பௌத்த சமயத்தை ஆதரித் தனர். 1426—7'ல் சுகோதையில் புத்தபாதம் என்ற நினைவுச் சின்னம் அமைக்கப் பெற்றது. புத்தரின் திருவடிகளின்கீழ் எண் பது துறவிகள் வழிபட்டுக் கொண்டிருப்பதுபோல அச்சின்னம் அமைந்துள்ளது. பதினான்காம் நூற்றாண்டிலும் அதற்கு அடுத்த நூற்றாண்டிலும் சையாம், பெகுவையும் கம்போடியாவையும் வலியத்தாக்கியது. கம்போடியர் அங்கோர்தோம்நகரைவிட்டகன் றனர். பதினைந்தாம் நூற்றாண்டில் மலாக்காவையும் சையாமியர் எதிர்த்தனர். ஆனால் அச்சுல்தானரசு தன்னுரிமையைக் காப்பாற்றிக்கொண்டது. சுகோதையில் 1510'ம் ஆண்டுக் குரிய கல்வெட்டொன்று கிடைக்கப் பெற்றுள்ளது. சைவ சமயத்தையும், புத்தசமயத்தையும் வளரச்செய்யும் பொருட்டு சிவனுருவச்சிலை ஒன்று நிறுவப்பெற்றதாக அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. சையாமியர், பர்மாவைத் தாக்கியதால் 1548'ல் அயோத்தியாவில் பர்மியர் படையெடுத்தனர். சையாமுடன் ஐரோப்பிய நாட்டினரும் போரிட்டனர். சுமார்

1750'ல் இலங்கை வேந்தன் வேண்டுகோளுக்கிணங்கி அத்தீவின் சமயத்தைத் தூய்மையாக்கும்பொருட்டு ஒரு பௌத்த சமயக்குழுவைச் சையாமியர் அனுப்பினர். 1767'ல் பர்மியர் ஆருவது முறையாக அயோத்தியாவை முற்றுகையிட்டு அதை அழித்தனர். அதன் பிறகு தோன்றிய புதியகுலம் இன்றும் அங்கு ஆட்சிபுரிகிறது. 1782'ல் தலைநகர் பாங்காக் என்ற இடத்துக்கு (அயோத்தியாவின் தெற்கில் — மேனும் ஆற்றங் கரையில்) மாற்றப்பட்டது. அதுவே சையாமின் (தாய்லந்த்) இக்காலத் தலைநகராகும்.

இந்தியத் தொடர்பு. இக்காலம் வரை சையாமில் ஈனயான புத்த சமயம் தொடர்ந்து வந்துள்ளதால் இந்திய நாகரிகம் அந்நாட்டில் ஓங்கி வளர்ந்ததைக் காண்கிறோம். பதின்மூன்றும் நூற்றுண்டில் அங்கு இந்து சமயம் ஒதுக்கப் பட்டுவிட்டபோதிலும் இன்றும் அரசர் அவையில் சில அந்தணர்கள் உள்ளனர். முடிசூட்டுவிழா முதலிய சிறப்புக்கொண்டாட்டங்கள் நிகழும் காலங்களில் அந்தணர் சில சடங்குகளைப்புரிகின்றனர். மேலும் சோதிடர்களாகவும் அவர்கள் பணியாற்றுகின்றனர்.[1] பத்தொன்பதாம் நூற்றுண்டின் நடுப் பகுதிவரை சையாமிய மன்னர், பெரும்பாலும் பண்டைய இந்திய அரசரைஒத்த நிலையிலிருந்தனர். அவர்தம் பட்டங்கள் மிக நீளமானவை (அச்சில் அரைப்பக்கத்தை நிரப்பும்)[2]. சமயக் காப்பாளராகவும் அவர் கருதப்பட்டனர். அவருக்கு யாவரும் கீழேவிழுந்து வணக்கஞ்செலுத்துவர். அடிக்கடி புண்ணியப் பயணங்களை அவர்கள் மேற்கொள்வர். அவர்தம் அமைச்சரின் பட்டங்கள் பெரும்பாலும் இந்தியப் பெயர்களாகவே உள்ளன. இந்திய யுவராசனை ஒத்து அங்கே மகாஉபராசன் காணப்படுகிறுன். சட்டத்தொடர்பான இலக்கியங்கள், சட்டங்கள் முதலியனவற்றைப் பொறுத்தவரை இந்தியாவுக்கும் சையாமுக்குமிடையே மிகுந்த ஒற்றுமைப்பண்புகள் காணப் படுகின்றன. வட்டி, முதலைவிட மிகுதியாகப் பெருகக்கூடா தென்ற பழைய இந்துச்சட்டம் இன்றும் சையாமில் பின்பற்றப்

1 & 2 H. G Q. Wales, Siamese State Ceremonies (1931), Chap. V & P. 105

படுகிறது. பிறப்பு, இறப்புச் சடங்குகளிலும் இருநாட்டின ருக்கும் ஒற்றுமை உண்டு. பெண்வழிச் சீருடன் வராத மனைவியை விற்கும் உரிமை கணவனுக்கு உண்டு என்ற சட்டம் (இந்தியாவில் இல்லாத ஒன்று) சையாமில் உள்ளது. சையாமிய இலக்கியத்தில் இந்திய வீரகாவியக் கதைகள் காணப்படுகின்றன. பாங்காக் கோயிற் சுவர்களில் இராமா யணக்காட்சிகள் விளக்கப்பட்டுள்ளன. சையாமியமொழியில் பல இந்தியச்சொற்களிருப்பதும் குறிப்பிடத்தக்கது.[1] சையா முக்கும் இந்தியாவுக்குமிடையே ஓரளவு நேர்த்தொடர்பு இருந்தது. ஆனால் பெரும்பான்மையும், இந்தியக்கலைப்பண்பு களை ஏற்றுக்கொண்ட கம்போடியா, ஸ்ரீவிசயம் முதலிய நாடு களின் வழியாகவே சையாமுக்கு இந்திய நாகரிகம் பரவியது.

**வெள்ளையானை.** வெள்ளையானை என்பது உடல்முழு வதும் வெள்ளை வண்ணத்தைப் பெற்றதன்று. அதன் காது களின் ஓரத்திலும் துதிக்கையின் உச்சியிலும் மட்டுமே வெள்ளை நிறம் காணப்படும். இவ்வெள்ளை யானையைச் சையாமியர் மிகுந்த சிறப்புடன் போற்றினர். அரசருக்குரிய பெருமைச் சடங்குகள் இதற்குச் செய்யப்பட்டன. வெள்ளை யானைக்குட்டிகளைச் சில குறிப்பிட்ட பெண்டிர் தமது தாய்ப் பாலைக்கொடுத்து வளர்த்தனர். தாலாட்டுப்பாட்டுக்கள் பாடி அவற்றை உறங்கவைக்கும் வழக்கமும் இருந்தது.[2]

## பகுதி 10

### பர்மா: ஆவா, பெகு, தௌங்கூ

**ஷாண் ஆட்சி :** பதின்மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத் தில் அஸ்ஸாமில் ஆஹோமியர் (ஷாண்) ஆட்சி ஏற்பட்ட தென்றும், 1237'ல் சையாமில் தாய் (ஷாண்) குல ஆட்சி அமைந்ததென்றும், 1287'ய் பர்மாவில், பாகன்நகரைக் குப்ளேகான் அழித்த பிறகு அங்கு பாகன் குல ஆட்சி முடி

1 Phanindra Nath Bose, The Indian colony of Siam (1927) pp. 136—50.

2. Wales, op. cit,, P. 279.

வுற்றதென்றும் முன்னர் பார்த்தோம். பதின்மூன்றும் நூற்ருண்டின் முடிவில் பர்மாவில் ஷாண் குலத்தவர் தமது ஆட்சியை நிறுவினர். பர்மாவில் தோன்றிய சிறப்பான இராச்சியங்கள், ஆவா, பெகு, தௌங்கூ ஆராக்கான் முதலியனவாகும். இவ்வாறு பல இராச்சியங்கள் அங்கு தோன்றியதால் அரசியல் ஒற்றுமை சீர்குலைந்தது. சமயத் துறையிலும் பண்பாட்டிலும் சிதைவு ஏற்பட்டது. 14'ம் 15'ம் நூற்ருண்டுகளில் ஷாண் மக்கள், பர்மிய குலத்தவரையும் தலேங், குலத்தவரையும் வென்று, பர்மாவின் பெரும்பகுதியை ஆட்சி புரிந்தனர். பெயரளவுக்கு அவர்கள் சீனப் பேரரசுக்கு அடங்கியிருந்தனர்.

ஆவா : ஷாண் மரபைச் சேர்ந்த 'திகத்து' என்ற வீரர் (1312—24) ஆவாவின் அருகிலுள்ள பின்யா பகுதியில் உரிமைவாய்ந்த தமது ஆட்சியை நிறுவினர். அவர் ஒரு பௌத்தர். பௌத்தக் கோயில்கள் அவரால் எடுக்கப்பெற்றன. அவர் மரபினருள் ஒருவர் 1364'ல் ஆவா அரசைத் தோற்றுவித்தார். 1385 முதல் 1417 வரை, தொடர்ந்து ஆவாவுக்கும் பெகுவிற்குமிடையே போர் நிகழ்ந்தது. வெனிஸ் நகர அறிஞர் நிகோலோ கோந்தி 15'ம் நூற்ருண்டின் முற்பாதியில் ஆவாவுக்குச் சென்ருர். அவர், தாம் கண்ட சிலவற்றைப்பற்றிக் குறிப்புக்கள் எழுதியுள்ளார். பதினைந்தாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் பர்மிய இலக்கியம் உருவாகியது. அதற்கு முன்னர் பாலி இலக்கியமே அங்கு சிறப்புற்றிருந்தது. பதினைரும் நூற்ருண்டின் முற்பாதியில் வட பர்மாவில் ஒன்றுக்கொன்று மிகுந்த பகைமையுடன் போராடிவந்த பல ஷாண் இராச்சியங்கள் காணப்பெற்றன.[1] பர்மாவை ஒற்றுமைப்படுத்தும் முயற்சியிலீடுபட்டிருந்த பாயின்னௌங் என்பார் 1555'ல் ஆவாவைக் கைப்பற்றினர்.

பெகு : உ_வாரேறு என்னும் ஷாண் குலத்தவர் ஒருவரால் பெகுஅரசு நிறுவப்பட்டது. அவருடைய வீரச்செயல்களின் விளைவாக 1287'ல் தென்பர்மா கைப்பற்றப்பட்டது. இந்தியமனுதர்ம சாத்திரத்தை அடிப்படையாகக்கொண்ட 'தம்மதட்' என்ற

1. G. E. Harvey, History of Burma (1925) p. 106.

நூல் இயற்றப்படுமாறு அவ்வரசர் ஆணையிட்டார். அவர் பின்வந்தோர் காலங்களில் சையாமுடனும் ஆவாவுடனும் பெகு போரிட்டது. உள்நாட்டு வளர்ச்சியும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. பர்மாவுக்குச் சென்ற ஐரோப்பியப் பிரயாணிகள் சிலர் பெகுவைப்பற்றிப் பல குறிப்புக்களை அளித்துள்ளனர். உவாரேறுவின் குலம், 1539'ல் தௌங்கூ மரபினரால் விலக்கப்பெற்றது. 1423 முதல் 1539 வரை உள்ள காலப்பகுதி "தென்பர்மாவின் பொற்காலம்" என்று புகழப்படுகிறது. "நாகரிகமற்ற வட பர்மாவைவிடத் தென் பர்மாவின் நாகரிகம் மிகவும் உயர்ந்தது என்பதில் ஐயமில்லை. ......... பர்மிய வெற்றிவீரர், தாம் தாக்கிய எதையும் அழிக்காமல் திரும்பியதில்லை."[1]

தௌங்கூ: தௌங்கூ, 1280'ல் தோற்றுவிக்கப்பட்டது. ஆவாவின் ஷாண் இராச்சியத்திலிருந்து பல பர்மியக் குடும்பங்கள் அங்கே சென்றன. நீண்டகாலம் அங்கு அமைதியான நிலை ஏற்படவில்லை. இருநூறு ஆண்டுகளில் அங்குத்தோன்றிய இருபத்தெட்டு தலைவர்வர்களில் பதினைந்துபேர்கள் கொலையுண்டனர். அடிக்கடி தௌங்கூ, ஆவா அல்லது பெகு அரசைச் சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. 1539'ல் தௌங்கூவின் புகழ்பெற்ற மன்னர் ஒருவர் பெகுவைக் கைப்பற்றிக்கொண்டு, அதையே தம் இராச்சியத்தின் தலைநகராக்கினார். அதுமுதல் பர்மிய வரலாற்றில் புதியதோர் காலப் பகுதி தொடங்கியது.

## பகுதி II

### ஆராக்கானில் பௌத்த சுல்தானியராட்சி

பர்மாவின் ஆராக்கான் கடலோரப் பகுதியின் வடபாகம், 1287 வரை பாகன் குலத்தினராட்சிக்கு அடங்கியிருந்தது. மிண்தி (Minhti) (1279?—1374) என்ற ஆராக்கானிய மன்னர் முறைதவருமல் ஆட்சி புரிந்ததாகப் புகழப்படுகிறார். "வேலையாட்கள் புரியும் குற்றங்கட்கு அவர்தம்

1. Harvey op. cit, p. 121.

தலைவர்களும், மனைவியரின் குற்றங்கட்கு அவர்களுடைய கணவனும், குழந்தைகளின் தவறுகட்கு அவர்தம் தந்தையாரும், மாணவரின் குற்றங்கட்கு அவர்களுடைய ஆசிரியர்களும் தண்டனைகள் அளிக்கப்படவேண்டும்."[1] என்பது அவருடைய ஆணை. 1374 முதல் 1430 வரை ஆவாவும் பெகுவும் ஆராக்கானின் அமைதிக்கு இடையூறு விளைவித்தன. ஆராக்கானின் மன்னர், வங்காளச் சுல்தானிடம் அடைக்கலம் புகுந்து பின் அவருடைய உதவி பெற்று 1430'ல் தம் அரசைக் காப்பாற்றிக்கொண்டார். ஆராக்கானின் அரசர்கள், பௌத்தர்களாயிருந்தபோதிலும், 1434 முதல் முகம்மதியப் பெயர்களையும் பட்டங்களையும் சூடிக்கொண்டனர். 1459'ல் சிட்டகாங், கைப்பற்றப்பட்டது. ஆராக்கானுக்கும் வங்காளத்துக்குமிடையே நெருங்கிய உறவு இருந்துவந்தது. பதினாறும் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஒரு நூற்றாண்டுக் காலம் ஆராக்கான் போர்ச்சுக்கீசியருடன் நட்பு உறவு பூண்டிருந்தது. அவுரங்கசீப்பின் வங்காள அரசப்பிரதிநிதி ஷயிஸ்தாகான் 1666'ல் சிட்டகாங்கைக் கைப்பற்றும் வரையில் ஆராக்கான் வலிமைவாய்ந்த அரசாக விளங்கியது.

## அதிகாரம் 8

# முகலாயப் பேரரசு
## (1526—1605)

## பகுதி I

### பாபர் (1526—'30): வாழ்க்கை வரலாறு—பானிப்பட்டு காணுவா, கோக்ரா போர்கள்

**பாபர் வாழ்க்கையின் முற்பகுதி.** சாஹிருத்தீன் முகம்மது என்ற பெயரையுடைய பாபர், 1483'ல் பிறந்தார். அவருடைய தந்தை உமார்ஷயிக் மிர்ஸா என்பார், துருக்கியவீரன் தைமூரின் கால்வழியினர். பாபரின் தாய் மங்கோலியத் தலைவன் செங்கிஸ்கானின் குடும்பத்தைச் சேர்ந்தவள். மங்கோலியர், முகலாயர் என்ற இரு சொற்களும் ஒரே மூலத்திலிருந்து

தோன்றியவை. முகலாயர் என்ற பெயர் பாபரின் குலத்தினரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் படுகிறது. அது பெரும்பாலும் பொருத்தமுடையதன்று. எனினும் வழக்கத்தில் வந்துவிட்டது. தைமூர் பேரரசின் எஞ்சிய பகுதிகள், 1469'ல் அபுசயத்கானின் ஒன்பது குமாரர்களால் பகிர்ந்து கொள்ளப்பட்டன. ஐந்தாவது குமாரன், உமார்ஷயிக், டிரான்ஸ் ஆக்சியானு பகுதியிலுள்ள பர்கானுவைத் தம் பங்காகப் பெற்ருர். இவர் இறந்தவுடன் இவர் மகன் பாபர் அப்பகுதியின் தலைவர் ஆனர். 1504'ல் பாபர், காபூலைக் கைப்பற்றிக் கொண்டார். 1505'ம் ஆண்டிலும் 1507'ம் ஆண்டிலும் இந்தியா அவரால் தாக்கப்பெற்றது. பிந்திய ஆண்டில், மிர்ஸா அல்லது இளவரசன் என்ற பட்டத்தை விடுத்து பாதுஷா அல்லது பேரரசர் என்று தம்மைக் கூறிக்கொண்டார். அவ்வாண்டில் அவர் உறவினர் தமது நாடுகளை இழந்தனர். தைமூர் குலத்தில் பாபர் மட்டுமே அரச அதிகாரங்களைப் பெற்றிருந்தார். அவர், தமது முன்னேர்களின் நாடுகளைத் தம் வசப்படுத்தப் பல முயற்சிகள் எடுத்துக்கொண்ட போதிலும் அவை பயனளிக்கவில்லை. ஆனல் அவர் போர் நடத்தியதின் விளைவாக, காபூல், கசினி, படாக்ஷான் (இக்கால ஆப்கானித்தானத்தின் வடகோடிப் பகுதி) முதலியன அவருடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. 1518-வரை ஓரளவு அமைதியுடன் பாபர் ஆட்சிபுரிந்து வந்தார். அடுத்த ஆண்டில் அவர், இந்தியாவின் வடமேற்கு எல்லைப் புறத்திலுள்ள பஜௌர் என்ற இடத்தையும் ஜீலம் ஆற்றங்கரையிலுள்ள பேராவையும் கைப்பற்றிக் கொண்டார். அஃது அவருடைய மூன்ருவது இந்தியப் படையெழுச்சியாகும், ஆனல் அவர் அது தமது முதலாம் இந்தியப் படையெழுச்சி என்று கூறுகிருர். 1522'ல் அவர் காந்தாரத்தைக் கைப்பற்றினர். 1524'ல் தௌலத்கான் லோடியின் (பஞ்சாபின் தலைவர்) அழைப்பிற் கிணங்கிப் பாபர், நான்காவது முறையாக, இந்தியாவில் படையெடுத்தார். தில்லி சுல்தானின் கொடுங்கோன்மை, பெருஞ்செல்வரைக் கலகம் செய்யத் தூண்டியது. பாபர், லோடி அரசர் படையை முறியடித்து, லாகூரைக் கைப்பற்றிக்கொண்டு, தௌலத்கான் விரும்பாத சில ஏற்பாடுகளைச் செய்துவிட்டுக் காபூலுக்குத் திரும்பிவிட்டார். அவருடைய

ஐந்தாவதும் இறுதியானதுமான இந்தியப் படையெழுச்சி 1525'ல் நிகழ்ந்தது. அது, அதற்கு முற்பட்ட படையெழுச்சியின் தொடர்ச்சி என்றே கருதவேண்டும். அவ்வமயம், நடு ஆசியாவில் பாபரின் பேராசை நிறைவேருமை காரணமாக அவர் மனமுடைந்திருந்ததால் இந்தியப் படையெழுச்சியை ஆர்வத்துடன் மேற்கொண்டார்.

இந்தியாவின் அரசியல்நிலை. (1525) பதினாறும் நூற்றுண்டின் தொடக்கப்பகுதியில் இரண்டு பிரிவுகளாக அமைந்த முகம்மதிய நாடுகள் இந்தியாவில் காணப்பெற்றன. இரு பிரிவுகளேயும் பகைமை உணர்ச்சியுடன் முறையே அச்சுறுத்தி வந்த இரண்டு இந்து இராச்சியப் பிரிவுகளும் அக்காலத்தில் அமைந்திருந்தன. சிந்து,—மூல்தான்,—காச்மீரம் பஞ்சாபிலிருந்து பீஹார் வரை பரவியிருந்த (பண்டெல் கண்டு, வங்காளம் உட்பட) தில்லி ஆப்கானிய அரசு—ஆகிய இவை வடபிரிவு முஸ்லிம் ராச்சியமாகும். குஜராத், மாளவம் — காண்டெஷ் — தக்காண சுல்தானரசுகள் ஐந்து (பேரார், ஆமது நகர், பீஜப்பூர், பீடார், கோல்கொண்டா) ஆகிய இவை தென்பிரிவு முகமதிய நாடுகளாம். இரு பிரிவுகளுக்குமிடையே, இராசபுதனம், கோண்டுவாறு, ஒரிஸ்ஸா முதலிய இந்து நாடுகள் விளங்கின. கிருஷ்ணு ஆற்றின் தெற்கில் விசயநகரப் பேரரசு தோன்றியிருந்தது. மேலைக் கடலோரத்தில் போர்ச்சுக்கீசியர் தமது அதிகாரத்தைச் செலுத்திவந்தனர். பாபர் தமது வாழ்க்கைக்குறிப்பில், இந்தியாவின் தலைசிறந்த அரசர்களாக அவ்வமயம் இருந்தவர்கள், ஐந்து முகம்மதிய மன்னரும் இரண்டு இந்து அரசர்களுமே என்று கூறுகிறார். அவர்கள் வருமாறு:— தில்லி, குஜராத், மாளவம், வங்காளம், தக்காணம் ஆகிய பகுதிகளின் சுல்தான்கள், சித்தூர் ராணுசங்கா, விசயநகரப் பேரரசர் ஆகிய எழுவருமாவர்.

பானிப்பட்டுப் போர்: 1524'ல் பாபர் இந்தியாவை விட்டு அகன்றவுடன் ஆலம்கானும் (சுல்தான் இப்ராஹிம் லோடியின் உறவினன்) தௌலத்கானும் தில்லியைக் கைப்பற்றச்செய்த முயற்சி தோல்வியுற்றது. 1525'ல் காபூலினின்று

# வட இந்தியா 1526-1605



புறப்பட்ட பாபர், வழியில் தம் மகன் உமாயூனையும் கண்டு (1520 முதல் உமாயூன் பாடாக்ஷானின் தலைவராக இருந்தார்) அழைத்துக்கொண்டு, இந்தியாவுக்கு வந்தார். தௌலத்கான் அவருக்கு அடங்கினர். லாகூர், பாபரால் கைப்பற்றப்பட்டது. ஆலம்கானின் உதவியும் அவருக்குக் கிடைத்தது. தில்லியைநோக்கி வந்துகொண்டிருந்த பாபரை எதிர்க்க இப்ரஹிம்லோடியால் அனுப்பப்பெற்ற துணைப் படையை உமாயூன் தோற்கடித்தார். அதுவே உமாயூனின் முதல்வெற்றியாகும். பாபர், 1526'ல் (12—4—1526) தில்லிக்கும் தானேசரத்துக்குமிடையே உள்ள பானிப்பட்டு என்ற ஊருக்குச்சென்று தம் படையை அணிவகுக்கலானர். அம்மாதம் (ஏப்ரல்) இருபத்தோராம்நாள் நடந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அப்போரில், இப்ரஹிமை, பாபர் முடிவாக முறியடித்தார். வீரப்போர் புரிந்து உயிர் நீத்தார் இப்ரஹிம் லோடி. பாபரின் குதிரைப் படையும் பீரங்கிகளும் அவர் வெற்றிக்குச் சிறப்பான காரணங்களாம். லோடி சுல்தானிடம் யானைப்படை இருந்தபோதிலும், அளவில் அவர்தம் படை பெரியதாக இருந்தபோதிலும், பாபரின் போற்றற்குரிய போர்த் திறமையும், பகைவரை அழிக்க அவர் கையாண்ட போர்த் தந்திர முறைகளும் இறுதியில் அவரை வெற்றியடையச் செய்தன. போருக்குப்பின் வெற்றிவீரத் தலைவர் தில்லியைக் கைப்பற்றிக்கொண்டு, ஆக்ராவை வெல்ல, உமாயூனை அனுப்பினர். உமாயூன், குவாலியர் தலைவனின் குடும்பத்தினரை அருளாண்மையுடன் நடத்தியதால் அப்பெருந்தன்மைக்கு நன்றி அறிகுறியாக அளிக்கப்பட்ட ஒரு வைரத்தைப் பெற்றுத் திரும்பினர். அதுவே 'கோஹினூர்' என்னும் வைரம் என்று சிலரால் கருதப்படுகிறது. பாபர், தாமே இந்துஸ்தானத்தின் பேரரசர் என்று பறைசாற்றினர். முகமதுகசினி, முகமது கோரி ஆகியோர்பெற்றிருந்த வளங்களைக்காட்டிலும் குறைவான அளவுக்கே பாபர் அவற்றைப் பெற்றிருந்தார். அப்படியிருந்தும் இந்தியாவில் நிலையான வெற்றியைப் பெற்ற காரணத்தால், பாபர், தாம் ஆற்றிய அருஞ்செயல் அவ்விரு படையெடுப்பாளரின் வெற்றிகளைவிட மிகச்சிறந்ததென்று கருதினர். போர்க்கொள்ளைப் பொருள்களைப் பங்கிட்டுக் கொடுப்பதில்

பாபர், மிகுந்த பெருந்தன்மையுடன் செயலாற்றினர். அவர், ஆக்ராவைத் தம் தலைமை அலுவலகமாகக் கொண்டு இந்நாட்டிலேயே தங்கத் திட்டமிட்டார். வெளிநாடுகளிலிருந்து அவருடன் வந்த வீரர்களை, கருணையும் உறுதியுமுடைய முறைகளைக் கையாண்டு தமக்குப் பணி புரிந்துகொண்டு இந்தியாவிலே தங்குமாறு செய்தார். இந்திய வரலாற்றில் சிறப்புக்குரிய மாறுதல்கட்குக் காரணமான (பானிப்பட்டில் நடந்த) முப்போர்களில் (1526, 1556, 1761) முதற்போர் பாபரின் வெற்றியுடன் முடிந்தது.

ராணுசங்காவின் தோல்வி. பாபர், ஆக்ராவிலிருக்கையில், உமாயூன், ஜான்பூரையும் காசிப்பூரையும் கைப்பற்றினர். குவாலியர் கைப்பற்றப்பட்டபின், இப்ரஹிம்லோடியின் தாய், பேரரசனை நஞ்சுகொடுத்துக் கொல்லுவதற்குச் செய்த முயற்சி பயனற்றதாயிற்று. மேவாரின் இராசபுத்திரத் தலைவனான ராணுசங்கா (1508—'29) பாபரை எதிர்க்க முடிவு செய்தார். கத்திக் குத்தினலேற்பட்ட எண்பது தழும்புகள் அவருடலில் இருந்தன. ஒரு கையையும் ஒரு கண்ணையும் இழந்திருந்தார். ஒரு கால் முடமாகியிருந்தது. அவ்வாறிருந்தும் அவர் பாபருடன் போருக்குச் சென்றார். கானுவா (ஆக்ராவின் அண்மையில்) போர்க்களத்தில் முகலாயப் படையும் ராணுவின் படையும் போரிட்டன. பாபர் தம் வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு அரியதோர் சொற்பொழிவாற்றினர்.[1] மண்ணில் பிறந்த யாவரும் இறப்பது திண்ணம். அவ்விறப்பைப் போர்க்களத்தில் நாம் பெற்றால் குன்றாப்புகழ் நம்மிடம்வந்து குவியுமன்றோ என்று அவர் உணர்ச்சியுடன் கூறி போர் வீரரின் உள்ளத்தில் புத்துணர்ச்சியை எழுப்பினர். குறிசொல்லும் காபூல் அறிஞர், போரினல் பேரரசுக்கு அழிவு ஏற்படுமென்று கூறிய அறிவுரையை, பாபர் பொருட்படுத்தவில்லை. பானிப்பட்டில் கையாளப்பட்ட போர் முறைகள் கானுவாவிலும் மேற்கொள்ளப்பட்டன. கடுமையான பத்து மணி நேரப் போருக்குப்பின் பாபர் வெற்றிமாலை சூடினர். ராணு ஓடிச்சென்று, 1529'ல் இறந்தார். பாபர், காசி (Z) என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்.

1. L. King, Memoirs of Babur II (1921), p. 286.

கோக்ரா வெற்றி, 1528'ல் முகலாயப்படை, மேதினிராய் என்ற ராசபுத்திரத் தலைவரைத் தோற்கடித்து அவரது நாடாகிய சந்தேரியைக் கைப்பற்றியது. இராசபுத்திரர் வழக்கப்படி பகைவருக்கு அடிபணியாமல் மேதினிராய் போரில் மாண்டார். அடுத்த ஆண்டில், பாபர், கங்கையும் கோக்ராவும் கூடுமிடத்தில், இப்ராஹிம் லோடியின் உடன் பிறந்தானை முகம்மது லோடியைப் புறமுதுகு காட்டச் செய்தார். இதன் விளைவாக லோடி குலத்தவரின் இறுதி நம்பிக்கை அடியோடு அழிந்தது. ஆப்கானியத் தலைவரில் பெரும்பாலோர் அடக்கப் பெற்றனர். வங்காளத்தின் நூஸ்ரத்ஷாவுடன் பாபர் ஒரு நேச உடன்படிக்கை செய்து கொண்டார்.

பாபரின் சாவு. கானுவா போருக்குப் பிறகு பாடாக்ஷானுக்கு அனுப்பப்பெற்ற உமாயூன் அங்கு இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்தார். (1527—29) பின் ஆக்ராவுக்குத் திரும்பிய அவர், நோய்வாய்ப்பட்டு, அந்நோய் மருத்துவரால் தீர்க்கப்பட முடியாமல், வருந்தினர். பாபர், தம் மகனுக்காக ஆண்டவனிடம் உயிர்ப்பிச்சை வேண்டி அதற்காகத் தம் உயிரையே தியாகம்செய்ய முன்வருவதாகக்கூறி முறையிட்டதாகவும் அதன் விளைவாக உமாயூன், நோயினின்று விடுபட்டதாகவும் பாபர் இறந்ததாகவும், பாபரின் மகள் எழுதியுள்ள 'உமாயூன்நாமா' கூறுகிறது. ஆனல், பாபர், பத்துமாதங்கள் நோயுற்றுழன்று இறந்ததாகப் பெரிஷ்டா குறிப்பிடுகிருர். அப்பேரரசர், ஆக்ராவில் 1530'ம் ஆண்டின் முடிவில் உயிர்நீத்தார். முன்கூறப்பட்ட இயற்கைக்கு மீறிய நிகழ்ச்சி, பாபர் தம் மகன்பால் கொண்டிருந்த பேரன்பை வெளிப்படுத்துகிறது. அப்பேரரசர், தாம் இறப்பதற்கு முன்னர் தம் மூத்த மகனுக்குக்கூறிய அறவுரை வருமாறு:- "மகனே, கேள். இந்தியா, பல்வேறு மதங்கள் நிறைந்த நாடு. அதன் தலைமைப்பதவியை உனக்கு அளித்த ஆண்டவனைப் போற்றுவோமாக. உன் உள்ளத்தினின்று மத வெறுப்புணர்ச்சிகளை நீக்கிவிட்டு அவரவர்மதத்துக்குத்தக்கவாறு முறைவழங்க வேண்டியது உனது பொறுப்பாகும். குறிப்பாக, பசுவைக் கொல்லுவதை விட்டுவிடு; அவ்வாறு செய்வதால் மக்கள் மகிழ்ச்சியுற்று உனக்கு அடங்கி நடப்பர். அரசியல்

சட்டங்களுக்குக் கட்டுப்படும் எந்தச் சமுதாயத்தின், கோயில்களையும், தெய்விகத்தன்மைவாய்ந்த இடங்களையும் அழிக்காதே. இஸ்லாமைச் சிறப்புறச்செய்வது செங்கோன்மையே; கொடுங்கோன்மை அன்று.''[1] மேலும், உமாயூன், தம் உடன்பிறந்தாருக்குப் பகையாக எந்நிலையிலும் எதையும் செய்யக்கூடாதென்று பாபர் அறிவுறுத்தினர்.

## பகுதி 2

## பாதுஷாவின் தன்மை, பண்பாடு; இந்திய வரலாற்றில் பாபரின் சிறப்பு

தன்மை. சுன்னி (Sunni) பிரிவைச் சேர்ந்த பாபர், சமயத் துறையில் கொண்டிருந்த உளப்போக்கை, அவர், உமாயூனுக்கு அளித்த அறிவுரை நன்கு விளக்குகிறது. அவர் ஒரு வைதீக முஸ்லிம்; மூடநம்பிக்கைகள் பல அவரிடமுண்டு. ஆயினும் அரசர் தம் மதக்கருத்துக்களை மக்கள் பின்பற்றவேண்டுமென்று வற்புறுத்தக்கூடாது என்பது அவருடைய கருத்து. ஷீயா பிரிவைச்சேர்ந்த பாரசீகப்பேரரசன் ஷா இஸ்மெயிலுடன் நட்பு உறவு கொண்டதும், ஷீயா தலை அணி முறையைத் தாமும் பின்பற்றித் தம் போர்வீரரும் பின்பற்றச் செய்ததும் பாபரின் அரசியல் தந்திரமுறையையும் உளத்திட்பத்தையும் காட்டாநிற்கும். ஆயினும் ஷீயா பிரிவினரும் இந்துக்களும் புறச்சமயிகளானபடியால், அவர்களுடன் தூய்மைப் போர்புரியவேண்டியது தமது கடமை என்ற உணர்ச்சி அவரிடமிருந்தது. முகமதுகசினியைப் போலவே, போர்க்களத்தில் அடிக்கடி ஆண்டவனிடம் முறையிட்டுக் கொள்ளும் பழக்கம் பாபரிடமுண்டு. ஆனல் இம் முகலாய மன்னர், கொள்கை வெறியரோ அல்லது பிறரைத்தொல்லைப் படுத்துவரோ அல்லர். விரிநிலை தழுவிய பண்பாடும் கூர்ந்த அரசியலறிவும் இவரிடமிருந்தன. அதனற்ருன் தெளிந்த நிலையான மதக்கொள்கையைப் பின்பற்றுமாறு இவர், தம் மகனுக்கு அறிவுறுத்தினர். பாபர், சிற்சில காலங்களில்,

1. Sir M, Abbas Ali Baig in the London Times, 1926.

மங்கோலியரையும், துருக்கியரையும்போலக் கொடுமையாகச் செயலாற்றிய போதிலும், பகைவரிடமும் கருணை காட்டுந் தன்மை அவரிடமிருந்தது. தம் உடன்பிறந்தாரிடமும் போற்றற் குரிய வகையில் அன்புகொண்டு ஒழுகினர். அவர், உமாயூனுக்குக்கூறிய இறுதிச்சொற்கள், உடன்பிறந்தாரிடம் அன்பு பூண்டு ஒழுகுதலைப்பற்றியதாகும். பொதுவாகப் பாபரிடம் காணப்பெற்ற அருள்நோக்கும், சகிப்புத்தன்மையும் அவரிடம் பொலிந்த கவர்ச்சித்தன்மைக்குக் காரணங்களாம். வாழ்க்கையில் பற்றுமிக்க அவர், இன்பத்தையே எதிர்பார்க்கும் மனப்பான்மை பெற்றிருந்தார். சமூக வாழ்க்கையில் விட்டுக் கொடுக்கும் உளப்போக்கை அவர் பாராட்டினர். நண்பர்களிடம் வஞ்சனையற்ற முறையில் பழகி வந்தார். வெற்றி பெற நம்பிக்கைக் கேடான வகையிலுள்ள குறுக்கு வழிகளை அவர் அறவே வெறுத்தார். நட்பின் பெருமையையும் நன்றியறிதலையும் போற்றிப் பாராட்டினர் பாபர். தொடக்கத்தில் குடிப்பழக்கம் அவரிடமிருந்தது. ஆனல் அளவுக்கு மீறி அதை அவர் விரும்பவில்லை. கானுவா போருக்குப் பிறகு அப்பழக்கத்தை அறவே நீக்கிவிட்டார். மங்கோலியரும், துருக்கியரும் சிற்றின்பத் துறையில் கீழான நிலையை எய்தியிருக்கையில் பாபரின் விடாமுயற்சியான வாழ்க்கை அத்தகைய தாழ்நிலை அவருக்கு ஏற்பட வாய்ப்பளிக்கவில்லை. ஆண்மைக்குரிய வீரம் அவரிடமிருந்தது. பெண்டிர், தமது உரிமைகளை வற்புறுத்தி ஆணவங்கொள்வதை அவர் விரும்பவில்லை. தம் உடல் வலிமையைக் காப்பாற்றிக் கொள்வதில் அவர் மிகுந்த கருத்துச்செலுத்தினர். வேட்டையாடுதல், குதிரைச்சவாரி செய்தல், திறந்த வெளியில் தீரச்செயல் புரிதல் முதலியன மிகுதியாக அவரால் விரும்பப்பெற்றன. அவருடைய அரச வாழ்க்கையின் முற்பகுதியில் அவரடைந்த இன்னல்கள், அவர்தம் பிற்கால வாழ்கைக்கு ஒரு வழிகாட்டியாயிருந்தன. அவற்றல் அவர் மனம் தளரவில்லை. அவற்றின் விளைவாக இந்தியப் படையெழுச்சியில் பாபர் பேரார்வம் காட்டத் தொடங்கினர். இரு ஆடவரைத் தம் தோள்மீது தூக்கிக்கொண்டு மதில்மேல் ஓடக்கூடிய அளவுக்கு பாபர் உடல் வலிமைபெற்றிருந்ததாகக்

கூறப்படுகிறது. போர்வீரராயிருந்த அவர் நாட்டில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்தத் தவறவில்லை. நாட்டின் பொதுமக்களைத் தம் வீரர் தொந்தரை செய்யாமல் அவர் காப்பாற்றினர். பழைய போர் முறைகளை அவர் பின்பற்றினரெனினும் பீரங்கிகளைப் பயன்படுத்துவதில் அவரிடம் தனிச் சிறப்பு காணப்பட்டது. நுட்ப முறைகளுடன் கூடிய படைத் தலைமைத் திறமை பாபரிடமிருந்தது. மாக்கியெவெல்லி குறிப்பிடும் அரசதந்திர ஆற்றல் அவரிடமிருந்த காரணத்தால், ஆப்கானியப் பெருஞ் செல்வர்களை இப்ராஹிம் லோடியின் பகைவர்களாக மாற்ற அவரால் முடிந்தது. தம் நாட்டிற்குத் திரும்ப விரும்பிய தம்முடைய வீரர்களை பாபர் தம்முடைய ஆற்றல் காரணமாக, இந்தியாவிலேயே தங்குமாறு செய்த அருஞ் செயல் குறிப்பிடத்தக்கது.

பண்பாடு: தைமூரின் குலத்தவர், பண்பாட்டைப் போற்றி வளர்க்கும் இயல்பினர். அவர்தம் முயற்சியால் சாமர்கந்தும் பொகாராவும் சிறப்புப்பெற்று விளங்கின. பாபரின் நெருங்கிய உறவினரான மிர்ஸா ஹைதர், ஒரு வரலாற்றறிஞராயிருந்தார். பாபர் மகளின் நூலைப்பற்றி முன்னர் குறிப்பிடப்பெற்றது. முகலாயப் பேரரசர், இசையிலும் இயற்கையைப்பற்றி அறிவதிலும், தாவரங்கள், விலங்குகள் முதலியனவற்றைப்பற்றி ஆராய்வதிலும் மிகுந்த ஊக்கம் கொண்டிருந்தார். துருக்கிய, பாரசீக மொழிகளை அவர் நன்கு கற்றறிந்திருந்தார். அவருடைய செய்யுளியற்றும் ஆற்றல் போற்றற்குரியது. அவர் ஒரு போர்வீரராகவோ அல்லது அரசராகவோ இருந்திராவிடினும், புலமை காரணமாகவே அவர்தம் புகழ் ஓங்கியிருக்குமென்பது உறுதி. துருக்கிய மொழியில் அவர் எழுதிய "திவானி பாபர்" என்னும் உணர்ச்சிப் பாடல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. "ஜூலியஸ் ஸீஸர், (Xenophon) ஸனபன் முதலிய போர் வீரர் கல்வி அறிவாளர்களாக இருந்தனரென்பது உண்மை. ஆயினும் ஒரு பேரரசன், வெற்றிவீரனுகவும் சிறந்த கவிஞனுகவும் விளங்கும் எடுத்துக்காட்டுகள், வரலாற்றில் மிக மிக அருமையாகும்."[1]

---

1 C. H. I. IV. (1937), p. 19.

அவர் துருக்கிய மொழியில் சிறந்த உரைநடை ஆசிரியராகவு மிருந்தார் என்பதற்குச் சான்றாக, அவர்தம் வாழ்க்கை வரலாறான "பாபர்நாமா" என்னும் நூல் உளது. அஃது அதன் ஆசிரியரைத் தெளிவாக நமக்கு அறிவிக்கின்றது. தம்மிட முள்ள தீய பழக்கத்தையும் அதில் குறிப்பிட அவர் தவற வில்லை. அப்நூலில் இடை முறிவுகள் உள. 1508 முதல் 1519, 1520 முதல் 1525, 1529 முதல் 1530 முதலிய காலப் பகுதிகளைப் பற்றிய செய்திகள் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் உண்மைச் செய்திகளை அது கூறுவதால் அதன் சிறப்பு மிகவும் போற்றற்குரியது. "இவ்வரலாறு உண்மைச் செய்திகளைக் கொண்டிருக்க வேண்டுமென்பது எனது உறுதியான ஆர்வம்; ஒவ்வொரு நிகழ்ச்சியையும் உள்ளவாறே இதில் குறிப்பிட வேண்டுமென்பது என் நோக்கம். ஆகையால் தந்தை, தமையன், உறவினர், அயலார் முதலிய யாவரைப் பற்றியும் நல்லன, தீயன எல்லாவற்றையும் அறிந்ததை அறிந்தவாறே இதில் குறிப்பிட்டுள்ளேன்." இந்நூலின் வரலாற்றுச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் மிகவும் உயர்வானவை. எளிய நடையில் இது அமைந்துள்ளது. "கிடைக்கப் பெற்றுள்ள சுய சரித்திர நூல்களில் பாபரின் வாழ்க்கைக் குறிப்புகள் மிகவும் சிறப்பானவை; உண்மை நிறைந்தவை. கபடமான நோக்குடன் எழுதப் பெற்ற தைமூரின் குறிப்புக்களையும் பிறரைக் குறைவு படுத்தித் தம் பெருமையை நிலைநாட்டும் ஜஹாங்கீரின் வாழ்க் கைக்குறிப்புக்களையும் விட எல்லையற்ற வகையில் பாபரின் குறிப்புக்கள் சிறப்பு வாய்ந்தவை. இவை, ஸனபன், (Xenophon) ஸீஸர், ஆகியோரின் நூல்களுக்கு எவ்வகையிலும் தாழ்ந்ததல்ல.[1]

**இந்திய வரலாற்றில் பாபரின் சிறப்பு நிலை.** பாபர், போரிலும் அரசியலிலும் ஆழ்ந்திருந்த காரணத்தால், போதுமான அளவுக்கு ஆட்சி முறையிலே அவர் கருத்துச் செலுத்த வில்லை. ஆப்கானியராட்சியில் நிலவிய நிலமானிய முறையை அவர் நீடிக்கச் செய்திருந்தார். ஆனால் அவருடைய வலிமை, பண்புடைமை முதலியன காரணமாக அம்முறையில் ஓரளவு

1. E. & D., op. cit., IV. P. 218.

மாறுதல் புலப்பட்டது. மிதமிஞ்சிய அவர்தம் பெருந்தன்மை காரணமாக பொருளியல் இடையூறுகளேற்பட்டன. இந்தியாவில் தம் குலத்தை நிலைநிறுத்த அவர் முடிவுசெய்த போதிலும் பாபரின் உள்ளம் நடு ஆசியாவிலிருந்தது. இந்நாடும் இந்நாட்டு மக்களும் அவருக்குக் கவர்ச்சி அளிக்கவில்லை. அவர் வென்ற இந்நாட்டின் பெருமையை அவர் உணர்ந்ததாக அவருடைய சுயசரிதம் அறிவிக்கவில்லை. "இந்துஸ்தானத்தில் இன்ப வாய்ப்புக்கள் இல்லை. மக்கள் அழகு வாய்ந்தவரல்லர். அவர்கள், நட்புணர்ச்சியுடன் கூடிய சமூகத்தின் கவர்ச்சித் தன்மையை உணரவில்லை. அவர்களிடம் தனிச் சிறப்பு வாய்ந்த ஆற்றல் கிடையாது; வணக்க இணக்கமான தன்மை இல்லை. கட்டடக் கலைத்திறமை இல்லை; குதிரைகள், கொடி முந்திரி, முலாம்பழம் போன்ற சிறந்த பழங்கள், பனிக்கட்டிநீர் அல்லது குளிர்ந்த நீர், சிறந்த உணவு வகைகள், நீராடும் அறைகள், கல்லூரிகள், மெழுகு வத்திகள், தீப்பந்தம் முதலியன இவர்களிடமில்லை. குடியானவரும் தாழ்ந்த வகுப்பினரும் போதுமான ஆடையின்றி இருக்கின்றனர். இந்துஸ்தானத்தின் குறிப்பிடத்தக்கசிறப்பு, அதன் பெரிய அளவும் அங்குக்கிடைக்கும் மிகுந்தபொன், வெள்ளி முதலியனவுமாம். மாரிக்காலத்தில் தட்பவெப்பநிலை மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. ஒவ்வொரு தொழிலிலும் செயலாற்றுவோர் மிகுந்த அளவினராக இருக்கின்றனர்.[1] மேலும் சிலகாலம் பாபர் இந்நாட்டில் தங்கி யிருந்திருப்பின், அவர் இந்நாட்டவரைப் பற்றி முதலில் கொண்ட கருத்துக்களை மாற்றிக்கொண்டிருக்கக் கூடும். கட்டடக்கலை வளர்ச்சிக்கு அவர் மிகுந்த உதவி செய்யவில்லை. பானிப்பட்டு, சாம்பல், ஆக்ரா ஆகிய மூவிடங்களில் அவர் எடுத்த மூன்று பள்ளிவாசல்கள், அவருக்கு மன நிறைவை அளிக்கவில்லை. அவை இன்றும் உள்ளன. நடு ஆசியக்காசுகளை ஒத்த வெள்ளி நாணயங்களை பாபர் வெளியிட்டார். அவற்றில் கலீமாவுடன் முதல் நான்கு கலிபாக்களின் பெயர்களும் "சிறப்புமிக்க பேரரசர்"; "நாட்டையும் ஆட்சியையும் ஆண்டவன் காப்பாராக"; என்ற விளக்க வாசகமும் காணப்படுகின்றன. அவை, ஆக்ரா, தில்லி,

1. King, op. cit,, II, pp. 241-3.

லாகூர், காபூல் ஆகிய நான்கு இடங்களிலிருந்து வெளியிடப் பெற்றன. ஆப்கானிய அரசை அழித்து இராசபுத்திர இராச்சியங்களை மெலிவடையச்செய்து முகலாயப் பேரரசுக்கு அடிகோலிய பாபரின் செயல், இராணுவத்துறையில் அவர் தம் சிறப்பை நன்கு விளக்கும். பாபர் தொடங்கிய வேலையை அவர் பெயரன் அக்பர் முற்றுப்பெறச் செய்தார். இருவர் காலங்கட்குமிடையே தோன்றிய சூர்குல ஆட்சி, ஷெர்ஷாவின் தனித்திறமை காரணமாக ஏற்பட்டதாகும். பாபர் அமைத்த அடிப்படையை அவர் அழிக்கவில்லை.[1] சுருங்கக் கூறின், பாபர், மக்கள் வரலாற்றில் பல்வேறு துறைகளில் நிலையான அருஞ்செயல்களாற்றிய தனித்திறமை வாய்ந்தவர் எனலாம்.

## பகுதி 3

### உமாயூன் (1530—'40 & 1555—'56)

நாசிருத்தீன் முகம்மது உமாயூன் 1508'ல் பிறந்தார். அவர் தாய் பெரும்பாலும் ஒரு ஷியா மாதாக இருக்கலாம். 1520'ல் அவர் பாடாக்ஷானின் தலைவராக அமர்த்தப்பட்டார். பானிப்பட்டுப்போரில் தம் தந்தையுடன் அவர் ஒத்துழைத்து, ஆக்ராவைக் கைப்பற்றினார். தாம் பெற்ற கோஹினூர் என்னும் வைரத்தைத் தம் தந்தையிடம் அவர் கொடுக்கும் பொழுது அவரையே அதை வைத்துக்கொள்ளுமாறு தந்தை ஆணையிட்டார். பேரரசு மேலும் கிழக்கே பரவுவதற்கான முயற்சியை மேற்கொண்டபின், உமாயூன், கானுவா போரில் பங்குகொண்டார். 1527'ல் அவர் பாடாக்ஷானுக்குப் புறப் பட்டார். இரண்டாண்டுகட்குப்பின் ஆக்ரா திரும்பிய இவர், சாம்பல் என்னும் தமது ஜாகீர்ப் பகுதியில் தங்கியிருந்தார். மிகுந்த நோய்காரணமாக ஆக்ராவுக்கு அழைத்துச் செல்லப் பட்ட உமாயூன், அங்கே நோய் நீங்கப்பெற்றார்.

**இடையூறுகள் நிறைந்த நிலை.** உமாயூன் பட்டமேற்ற பின் பல இடையூறுகளை நீக்கிக்கொள்ளவேண்டிய பெரும்

1. S. Lane-poole, Mediaeval India under Mohammedan Rule (1903, Reprinted 1926) p. 193.

பொறுப்பு அவருக்கு ஏற்பட்டிருந்தது. பாபரின் மைத்துனனை (அல்லது மூத்த மருமகனை) அரசனாக்குவதற்காக முதலமைச்சர் செய்த முயற்சியைப் பயனற்றதாக்கித் தம்மையே தம் தந்தை அரசனாக அமர்த்துமாறு செய்து வெற்றிகொண்டிருந்த உமாயூனுக்குப்போட்டியாக தைமூரிய, மங்கோலிய குலங்களின் இளவரசர்கள் அரியணையைக் கைப்பற்றும் முயற்சிகளை மேற்கொண்டனர். இராணுவத்துறையில் அவ்வமயம் முகலாய அரசு மிகுந்த வலிமைபெற்று விளங்கியதாகக் கூறுவதற்கில்லை. இந்துஸ்தான், காபூல் சுல்தானியராட்சிக்கு உட்பட்ட ஒருபகுதியாகவே கருதப்பட்டது. மேலும் உமாயூனின் ஒன்றுவிட்ட உடன்பிறப்பாளர் கலகம் விளைவித்தனர். பாபர் ஐந்துமனைவியரையும், நான்கு குமாரர்களையும் பெற்றிருந்தார். முதல் மனைவியின் மகன் உமாயூன். காம்ரானும், அஸ்காரியும் இரண்டாம் மனைவியின் மக்கள். நான்காவது ராணியின் மகன் ஹிண்டால். சிறப்பாக காம்ரான் இடையூறுகள் பல விளைவித்தார். ஷெர்கான் என்ற தலைவனின்கீழ் ஆப்கானியர் முகலாய ஆட்சியை எதிர்த்தனர். இராசபுத்திரரும், முகமதிய ஆட்சியை அழிக்கத் திட்டமிட்டனர். ஆப்கானியத் தலைவனுக்கு உதவி செய்ய குஜராத் சுல்தான் பகதூர்ஷா பேரவாவுடன் முன் வந்தார்.

ஆட்சிக்காலத்தின் முற்பகுதி **(1530—36).** உமாயூன், தம் இருபத்திரண்டாம் அகவையில் பட்டமேற்றவுடன், காபூலையும் கண்டாஹாரையும், காம்ரானுக்கும், ஸாம்பல் பகுதியை அஸ்காரிக்கும், ஆல்வார் பகுதியை ஹிண்டாலுக்கும் அளித்து ஆட்சிபுரியச் செய்தார். 1531'ல் காலிஞ்சரைக் கைப்பற்றிக் கொண்டு ஜான்பூரைத் தம் அடிப்படுத்திய முகமதுலோடியை முறியடித்தார், உமாயூன். ஆனால் ஷெர்கானின் தலைமையில் ஆப்கானியர் எதிர்ப்புத் தொடர்ந்து வந்தது. 1533'ல் காம்ரான், லாகூரைக் கைப்பற்றிக்கொண்டார். பேரரசர் பஞ்சாபைக் கொடுத்து அவரை மகிழ்வித்தார். குஜராத் சுல்தான், மாளவத்தைத் தம் வசப்படுத்திக்கொண்டு தம் அதிகாரங்களைப் பெருக்கினார். ஆப்கானிய, முகலாயத்தலைவர் யாவரும் அவருடைய அவையில் கூடித் திட்டங்கள் வகுத்து வந்தனர். கலகக்காரரை ஆதரித்து வந்த பகதூர்ஷாவை

எதிர்த்து 1534'ல் உமாயூன் படையெடுத்தது பயனளிக்க வில்லை. தொடர்ந்து 1535 முதல் 1536 வரை உமாயூனுக்கும் பகதூர்ஷாவுக்கும் போராட்டம் நடந்தது. பகதூர்ஷா மாளவத்தின் தலைநகராகிய மாண்டுவில் தோல்வியுற்று, குஜராத்தின் வழியாக காம்பே என்னுமிடத்துக்கு விரட்டப்பட்டார். சம்பனீர் கோட்டையை, உமாயூன் வீரப்போர்புரிந்து கைப்பற்றினர். ஆனல் பிற கலகங்களை அடக்குவதற்காகப் பேரரசர் ஆக்ராவுக்குத் திரும்பியவுடன், மீண்டும் பகதூர்ஷா குஜராத்தில் தம் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டார் மனவுறுதியற்ற உமாயூனுக்குத் தாம் மேற்கொண்ட எச்செயலையும் முற்றுப்பெறும் வரை விடாமுயற்சியுடன் செய்யவேண்டுமென்ற கொள்கை கிடையாது. மாளவத்தில் அவர் உண்டு, குடித்து ஆடிப்பாடி மகிழ்ச்சியுடன் காலத்தைக் கழித்துவந்தது பகதூர்ஷாவுக்கு மிகவும் அனுகூலமாக முடிந்தது.

ஷெர்கானுடன் போர்: 1532'ம் ஆண்டு முதல் ஷெர்கானின் அதிகாரம் பெருகிவந்தது. அவர் ஆட்சிபுரிந்த பகுதிகளின் அளவு இருமடங்காகப் பெருகியது. ஆட்சிமுறையைச் சிறந்தவகையில் ஷெர்கான் ஒழுங்கு செய்தார். ஓராண்டுக் காலத்தை ஆக்ராவில் வீணக்கிவிட்டு உமாயூன் 1537'ல் ஷெர்கானை எதிர்த்துப் படையெடுத்தார். 1532'ம் ஆண்டில் ஷெர்கான் முற்றுகையிட்டபொழுது, அவ்வாப்கானியத்தலைவர் பெயரளவுக்குக் கீழ்ப்படிந்தவுடன் சூணரை அந்த நிலையிலேயே விட்டுவிட்டுத் திரும்பியது ஒரு பெரும் தவருகும். அடியோடு அப்பகைவரை அழிக்காததால் அவர்தம் வலிமை விரைவில் பெருகிவிட்டது. வங்காளத்திலும், பீஹாரிலும் அவருடைய அதிகாரம் வளர்ந்தது. 1537'ல் ஷெர்கானல் கைப்பற்றப்பட்ட சூணர்கோட்டையை ஆறுமாத முற்றுகைக்குப் பின்னர் உமாயூன் மீட்டார். ஆனல் அதற்கிடையில் ஷெர்கான் வங்காளத்தை வெல்லும் முயற்சியை மேற்கொண்டு, அதன் சுல்தான் முகம்மதுவை வென்ருர். வங்காளத் தலைநகரைத் தம் வசப்படுத்திக் கொண்டு அங்கிருந்த செல்வங்களைத் தந்திரமாக பீஹாருக்கு அனுப்பிவிட்டார். "உமாயூன், நேராக வங்காளத்தில் படையெடுக்காமல், சூணரை எதிர்த்ததால் தில்லியில் தம் அரியணையையே

இழக்க நேரிட்டது.''[1] என்ற கருத்து நோக்கற்பாலது. வங்காளத்தை அடைந்த பிறகும், உமாயூன், வழக்கம்போல் ஆறுமாதங்கள் இன்பத்தில் மூழ்கிக் கிடந்தார். அவ்வமயம் ஹிண்டாலும் காம்ரானும் அவருக்குப் பகையாகத் தில்லியைக் கைப்பற்ற முயன்று வந்தனர். ஷேர்கான், பீஹாரில் தம் நிலையை வலிமைப் படுத்திக்கொண்டு கன்னோசி வரை உள்ள இடங்களைத் தாக்கி வந்தார். வங்காளத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற உமாயூனை, சௌஸா என்ற இடத்தில் (பாட்னாவுக்கும் வாரணசிக்கு மிடையில்) எதிர்பாரா வகையில் 1539'ல் ஷேர் கான் எதிர்த்துத் தாக்கினார். பேரரசர் தப்பி ஓடினார். குதிரை மீது ஏறிக்கொண்டு அவர் கங்கையைக் கடக்கும்பொழுது அவர் உயிருக்கு ஏற்பட்ட பேரிடரினின்று அவரை அவருடைய உண்மை ஊழியனொருவன் காப்பாற்றினான். [அந்நன்றியை மறவாத பேரரசர், பின்னர் அவனை, இரண்டு நாட்களுக்கு அரியணையிலமரச்செய்து மகிழ்வித்தாராம்.] காம்ரானும் ஹிண்டாலும் அவ்வேளையிற்கூட உமாயூனுக்கு உதவவில்லை. ஆக்ராவுக்குத் தப்பியோடிவந்த பேரரசர் தம் உடன்பிறந்தாரை மன்னித்துவிட்டார். அதற்கிடையில் ஷேர்கான், வங்காளத்துக்குச் சென்று ஆண்டிருந்த முகலாய ஆட்சித் தலைவரை வென்று தம்மையே அரசராகச் செய்துகொண்டார். ஷேர்ஷா என்ற பட்டத்தையும் அவர் சூட்டிக்கொண்டார். 1540'ல் தம் பகைவனை எதிர்த்துவந்த உமாயூன் கன்னோசிக்கருகில் முடிவாக ஆப்கானிய வீரரால் தோற்கடிக்கப்பட்டார். தப்பி யோடிய பேரரசர், ஆக்ராவுக்கும் தில்லிக்கும் செல்லும் பொழுது ஆப்கானியப்படை அவரைப் பின்தொடர்ந்தது. பேரரசுத்தலைநகரைப் பகைவர் படை கைப்பற்றியது. காம்ரான், ஷேர்கானுக்கு உதவ முன்வந்தார். உமாயூன், லாகூருக்கு ஓடினார். அந்நிலையிலும் தம் உடன்பிறந்தோரைத் தண்டிக்கும் எண்ணம் உமாயூனுக்கு ஏற்படவில்லை. பிறகு அவர் சிந்து நாட்டுக்குச் செல்ல முடிவு செய்தார்.

**உமாயூன் பல இடங்களில் அலைந்து திரிதல்.** உமாயூன் மூன்று ஆண்டுகள் இராசபுதனத்திலும் சிந்து நாட்

1. K. R. Qanungo, Shershah (1921) p. 320.

டிலுமுள்ள பாலைவனப் பகுதிகளிற் சுற்றித்திரிந்து சொல்லரிய துயரங்களை அனுபவித்துக் காலங்கழித்தார். 1541'ல் அவர் ஹமீடாபீகம் என்ற பெண்ணை அவள் விருப்பமின்றி மணந்து கொண்டார். அதன்பின் சிந்து நாட்டு ஷாஹுசேய்னுக்கும் உமாயூனுக்கும் பகைமை பெருகியது. மெக்காவுக்குச் செல்லுவதென்று எண்ணிக் கொண்டிருந்த உமாயூனுக்கு, ஜோதிபுரியின் ராசா மால்தேவர் ஆறுதலும் நம்பிக்கையும் அளித்தார். 1542'ல் அவர் நாட்டுக்குச் சென்ற உமாயூன், விரைவில் அம் மன்னரின் மனம்மாறி விட்டதையும் அவர் அன்பு உண்மையானதன்று என்பதையு முணர்ந்தார். இறுதியாக உமர்கோட்டை (சிந்து நாட்டில்) ராணு, முகலாயத் தலைவரைத் தம்மிடத்துக்கு வரவேற்ருர். அவ்விடத்தில் ஹமீடாபீகம் ஒரு ஆண்மகவைப் பெற்ருள். பேரரசர் அக்பராகப் பிற்காலத்தில் புகழ்பெற்ற அக்குழந்தையின் பிறப்புக் கொண்டாட்டம், கடன் வாங்கப் பெற்ற சிறிதளவு பொருளைக் கொண்டு எளிய முறையில் நடத்தப் பெற்றது. பைராம்கானின் உதவி உமாயூனுக்குக் கிடைத்த போதிலும், அவர் நிலையில் முன்னேற்றம் தோன்றவில்லை 1543'ல் சிந்துவை விட்டகன்று காந்தாரத்துக்குச் சென்ற உமாயூன், வழியில் பல இன்னல்கட்கு உட்படுத்தப்பெற்ருர். அவற்றிற்கு அவருடைய ஒன்றுவிட்ட உடன்பிறந்தோரே சிறப்பான காரணமாவர். தம் மகனை காந்தாரத்தில் இருக்கச்செய்துவிட்டு உமாயூன் பாரசீகத்துக்குத் தப்பி ஓடினர். அந்நாட்டின் பேரரசர் (ஷீயா பிரிவினரானபடியால்,) சுன்னிவகுப்பைச்சேர்ந்த உமாயூனை ஷீயாவாக மாறும்படி செய்து அவருடன் உடன்பாடு செய்து கொண்டார். அதன்படி உமாயூன், இழந்த அரசைப் பெறப் பாரசீக ஷா உதவுவதாக வாக்குறுதி அளித்தார். 29—12—1544 என்று காலம் குறிப்பிடப்பெற்ற ஒரு பாரசீகக் கல்வெட்டில் உமாயூனின் வருந்தத்தக்கநிலை விளக்கப் பட்டுள்ளது. 1545'ல் பாரசீகத்தின் உதவியுடன் உமாயூன் காந்தாரத்தைக்கைப்பற்றினர். மீண்டும் அஸ்காரி தமையனின் மன்னிப்பைப் பெற்ருர். காந்தாரம், பாரசீக ஷாவுக்கு அளிக்கப்பெற்றது. பின்னர், காபூல், உமாயூனின் வசம் வந்தது. காம்ரான் ஓட்டமெடுத்தார். பாரசீகர் உதவி

யின்றியே உமாயூன் போரிடவேண்டி நேர்ந்தது. 1546க்கும் 1550-க்கு மிடைப்பட்ட காலத்தில் இ ர ண் டு முறைகள், காம்ரான் கா பூ லை மீட்டுக்கொண்ட போதிலும் முடிவாக உமாயூன், அதைத் தம் அடிப்படுத்தி வெற்றிகொண்டார். 1553'ல் கைப்பற்றப்பட்ட காம்ரானை, மு க லா ய அரசர், கொல்ல மனமின்றிக் குருடனுக்க முடிவுசெய்தார். காம்ரானும் அ ஸ் கா ரி யு ம் மெக்காவுக்குச் செல்ல அனுமதிக்கப் பெற்றனர். 1551'ம் ஆண்டு நடந்த போரில் ஹிண்டால் இறந்தார். உடன்பிறந்தாரால் ஏற்பட்டு வ ந் த இன்னல்களினின்று உமாயூன் விடுதலைபெற்றுர். அவர் தம் நிலையை வலிமையுறச்செய்துகொண்டு தில்லிப் பேரரசைக் கைப்பற்ற ஏற்ற காலத்தை எதிர்நோக்கியிருந்தார். ஆப்கானியராட்சியின் கீழ் இந்தியாவிலேற்பட்ட அரசியல் குழப்பம் அவருக்கு ஒரு நல்ல வாய்ப்பை அளித்தது. 1554'ம் ஆண்டினிறுதியில் காபூலினின்று புறப்பட்டு இந்தியாவில் படையெடுத்தார். வழியில் 'பைராம்கான்', அவருடன் இணைந்தனர். சர்ஹிந்த் (பாட்டியாலா ராச்சியம்—பஞ்சாப்) என்னுமிடத்தில் சூர்குல மன்னன் சிகந்தர்ஷாவை, உமாயூன், 1555'ல் முறியடித்து தில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றினுர். ஆனல் அதன் பின் ஆறுமாத காலந்தான் அவர் வாழ்ந்திருந்தார் தில்லியில் பேரரசர், தம் நூல்நிலையத்தின் மே ல டு க் கி ல், குறிநூல் வல்லுநருடன் கலந்து ஆலோசித்துவிட்டுக் கீழே இறங்கி வருகையில் இடறி விழுந்து உயிர் நீத்தார். ஆயுட்காலம் முழுவதும் இடர்ப்பட்டு வாழ்ந்த உமாயூன் (உமாயூன் என்ற சொல்லுக்கு நல்வாய்ப்பைப் பெற்றவர் எ ன் ப து பொருள்) இடறி விழுந்து உயிர்விட்டது வியப்புக்குரியதாகும்.

**உமாயூனின் தன்மையும் தோல்வியும் :** உமாயூனின் வாழ்க்கை வரலாறு அவரிடம் காணப்பட்ட இராணுவத்திறமை, அளவுகடந்த இரக்க உணர்ச்சி, பெருந்தன்மை, சிறப்பாக உடன்பிறந்தாரிடம் காட்டிய கருணை, இன்பவாழ்க்கையில் அவருக்கிருந்த விருப்பம், முதலியவற்றைக் காட்டுகிறது. அவர் தந்தை அவருக்கு உடன்பிறந்தவருடன் அன்புகொண்டு ஒழுகுமாறு கூறிய அறவுரையை இறுதிவரை (எத்தகைய இன்னல்கள்

அவர்களால் விளைந்தபொழுதும்,) உமாயூன் பின்பற்றிநடந்தார். உமாயூன், பண்பாடு உடையவர். செய்யுள்களில் அவருக்கு நாட்டமிருந்தது. கணக்கு, வானநூல், குறிநூல் முதலியன வற்றில் அவர் மிகுந்த கருத்தைச் செலுத்தி வந்தார். வானாராய்ச்சி நிலையமொன்றை அமைக்கும் எண்ணம் அவரிட மிருந்தது. அவர், தம் தந்தையின் காசுமுறையைப் பின்பற்றி, பொற்காசுகள் உட்பட்டநாணயங்களை வெளியிட்டார். இழந்த அரசை மீட்ட பிறகு சூர்குல மரபினரின் முறையையொட்டிய காசுகள் அவரால் வெளியிடப்பெற்றன. அம்மீட்சிக்குப்பிறகு அவர் ஆட்சிமுறைத் திட்டமொன்றை வரைந்தார். அவர் ஒரு கோழை அல்லர். ஒன்றன்பின்னொன்றாக அவருக்கு ஏற்பட்ட வாய்ப்புக்கேடுகள் அவரைத் தளரச்செய்யவில்லை. மேலும் மேலும் ஊக்கத்துடன் செயலாற்ற அவைகள் அவரைத் தூண்டின ஆனால் மன உறுதியுடன் தக்ககாலத்தில் இன்றி யமையாச் செயல்களை உணர்ச்சிகட்கு இடங்கொடுக்காமல் திறமையாக நிறைவேற்றாததாலும், காலந்தாழ்த்திச் செயல் புரிந்ததாலும் அவருக்கு இருந்த வெற்றி வாய்ப்புக்கள் அழிந் தன. அடிக்கடி அபினை உண்டு வந்ததால் அவர் உடல் நலம் கேடுற்றது. உடல் நலக்கேடு உள்ளத்தையும் கெடுத்தது. வருத்த உரை தெரிவித்த கலகக்காரரை எச் சூழ்நிலையிலும் மன்னித்துவிடும் அவர்தம் பண்பு, போற்றத் தக்கதன்று. நீர் சுமக்கும் ஒரு பணியாளை, தம் உயிரைக் காப்பாற்றிய காரணத்தால், அரியணையிலமர்த்திய அவர் செய்கை எள்ளி நகையாடத்தக்கது. அவர் இளவரசரா யிருக்கையில், மிகுதியான அளவுக்குத் தம் தந்தையிடமிருந்து செல்வத்தைப் பெற்றுக்கொண்டிருந்த போதிலும் 1527'ல் இராச்சிய கருவூலத்தைக் கொள்ளையடித்தார். அதற்காகப் பாபரால் கண்டிக்கப்பெற்றார். அவர் இழந்த அரசைமீண்டும் பெறுவதற்குப் பைராம்கான் அளித்த உதவி குறிப்பிடத் தக்கது. முடிவாக, உமாயூனின் தோல்விக்கு அவருடைய குணவியல்பில் காணப்பெறும் குறைபாடுகள் சிறப்பான காரணமாகும்.[1] அரசியல் தந்திரம், ஆட்சிமுறையில் சிறந்த திறமை, போர்செய்யுமாற்றல், முதலியன வாய்க்கப்பெற்ற

1. S. K. Banerji, Humayun Badshah (1938), p. 259

ஒருதலைவர் (ஷெர்கான்) உமாயூனுக்குப் பகைவராகத்தோன்றியது, அப்பேரரசரின் தோல்விக்குரிய மற்றொரு காரணமாகும்.

## பகுதி 4

### சூர்மரபினராட்சி: வரலாற்றுக்குரிய முதற் சான்றுகள்

இந்தியாவில் முகலாய ஆட்சியைப் பற்றிக்கூறும் பதினாறும் நூற்றாண்டின் முற்பாதிக்குரிய முதற்சான்றுகள், ஷெர்ஷாவைப் பற்றி நமக்கு அறிவிக்கின்றன. ஆனால் அவ்வீரன், பல நூலாசிரியர்களால் பகைமை உணர்ச்சியுடன் நோக்கப்பட்டதைக் காண்கிறோம். பெருந்தன்மைவாய்ந்த சிறந்த வரலாற்றறிஞனை அபுல்பாஸல்கூட ஆப்கானியகுல வரலாற்றைப் பொறுத்தவரை, விரிநிலை தழுவிய நோக்குடனிருக்கவில்லை. அவர், ஆப்கானிய வீரனை, கலகக்காரன் என்றும் அரசுரிமையை முறையின்றிக் கைப்பற்றியவனென்றும் கருதுகிறார். வரலாற்றில் தலைசிறந்த பெருமை வாய்ந்த சிலரைப்பற்றிய குறிப்புக்கள் பகைமை உணர்ச்சியுடன் விளக்கப்பட்டிருக்கின்றன. அத்தகையோருள் ஷெர்ஷாவும் ஒருவராவர் என்பது பெரும்பாலும் உண்மையானதாகும். மறைந்துவந்த ஷெர்ஷாவின் வரலாற்றைமக்கள் மீண்டும்அறியப்பெருந்தன்மை வாய்ந்த அக்பர் உதவினார். ஆப்கானியச் சான்றுகளோ அவ்வீரனை வானளாவப் புகழ்கின்றன. அவற்றில் மிகச் சிறந்தவை கூடப் பல குறைபாடுகளுடன் கூடியனவா யுள்ளன. ஆயினும் அவை சிறப்பானவை அல்ல என்று ஒதுக்கிவிடுவதற்கில்லை. ஆகவே முகலாயச் சான்றுகட்கும் ஆப்கானியச் சான்றுகட்குமிடையே உள்ள முரண்பாட்டை இயன்ற அளவு நீக்கி உண்மையை அறியவேண்டியது வரலாறு கற்போரின் கடமையாகும். அபாஸ்கான் என்ற ஆப்கானியப் பெருஞ்செல்வரொருவர், பதினாறும் நூற்றாண்டின் முடிவில் தரீகி-ஷெர்ஷாஹி என்ற நூலை இயற்றினார். அக்பரின் ஆதரவு அவருக்குக் கிடைத்தது. அதில் சிறப்பற்ற விளக்கங்களும் தவறுகளும் இருந்தபோதிலும், ஷெர்ஷாவின் பெருமையை அறிய அந்நூல் உதவுகிறது. ஷெர்ஷாவின் வரலாற்றுக்குத் "தோற்றுவாய்"

என்று புகழத்தக்க சிறப்பு அதற்கு உரியது. நிஸாமுத்தீன் தொடங்கி கபீகான் வரையுள்ள வரலாற்றறிஞர் யாவரும் அந் நூலுக்குக் கடப்பாடுடையவர்கள். ஷெர்ஷாவின் துணைவனாக இருந்த ஹாஸன் அலி எழுதிய செய்திக்கோவை (Tawarikh-i-Daulat-i-Sher Shahi), ஆப்கானியச் சான்றுகளிற் சிறந்த மற்றொரு நூலாகும். அவ்வீரரின் வாழ்க்கை முழுவதையும் நேரில் கண்டறிந்த அவ்வாசிரியர் தரும் குறிப்புக்கள் நமக்கு மிகப்பயனுள்ளவையாகும்.[1] ஷெர்ஷாவின் காசுகள், அவர் பேரரசின் பரப்பையும், நிகழ்ச்சிகளின் கால முறையையுமறிய உதவுகின்றன. அபுல்பஸலின் அக்பர்நாமா என்னும் நூலில் ஷெர்ஷாவைப்பற்றித் தவருன எண்ணத்தை உண்டாக்கும் வகையில் எழுதப்பெற்ற குறிப்புக்கள் உள்ளன. ஆயினும் அவ்வீரரின் பெருமை அதனுல் குன்றவில்லை. உமாயூனுக்கும் ஷெர்ஷாவுக்கு மிடையே நடைபெற்ற போராட்டத்தை அறியக் குல்படான்பீகம் (பாபரின் மகள்) எழுதிய "உமாயூன் நாமா" என்ற நூலும், ஜௌஹர் எழுதிய உமாயூன் வரலாறும் சிறந்த முதற் சான்றுகளாம். ஷெர்ஷாவின் வரித்திட்டத்தை அறிய, அய்னி அக்பரி என்னும் புள்ளி விவர நூல் (அபுல்பஸலால் ஆக்கப் பெற்றது) இன்றியமையாததாகும். நிஸாமுத்தீன்அஹமது எழுதிய அக்பர் வரலாறு (Tabakat-i-Akbari) பெரும்பாலும் அபாஸ்கானின் செய்திக் கோவையைச் சார்ந்த நூலாகும். செய்திகளை நடு நிலையுடன் குறிப்பிடுவதில் அபாஸ்கானையும் அபுல்பஸலையும் விட நிஸாமுத்தீன் சிறப்பானவர். "தாரிக்கி படௌனி," வைதீக முகம் மதியக் கருத்துக்களை வற்புறுத்தும் ஒரு வரலாற்று நூலாகும். ஆசிரியர் படௌனி அக்பரை வெறுத்தார். ஷெர்ஷாவை வியந்து புகழ்ந்தார். அவ்வீரனை அவர் "சமயக்காவலர்" என்று புகழ்வது பொருத்த முடையதன்று. உமாயூனின் உறவினரும் கன்னேசிக் கருகில் 1540'ல் நடந்த போரில் பங்கு கொண்டவருமான மிர்ஸாஹைதர் இயற்றிய தாரிக்கி ரஷீதி என்ற நூலும் நமக்குப் பயன் படுகிறது. பாபரின் சுய சரிதத்தில் இரண்டு இடங்களில் மட்டுமே ஷெர்ஷாவைப் பற்றிய

1, Indian Historical Records Commission, Proceedings, III; (1921), PP. 9-10.

குறிப்புகள் உள. எனினும் அந்நூலின் பொதுச் சிறப்புப் போற்றற்குரியது. இவற்றைத் தவிரப் போர்ச்சிக்கீசிய அறிஞர் தரும் வரலாற்றுக் குறிப்புகளும் நமக்கு ஓரளவு உதவுகின்றன.

## பகுதி 5

### ஷெர்ஷாவின் வீரச்செயல்கள்

ஷெர்ஷா உயர்நிலை பெறுதல் ( 1486 — 1530 ). ஆப்கானிய இனத்தின் சூர்மரபைச்சேர்ந்த ஹாஸன்கான் என்பாரின் மகனாகப்பிறந்த ஷெர்கான் (அல்லது ஷெர்ஷா) அரசகுடும்பத்தைச் சேர்ந்தவரல்லர். அவருடைய பாட்டன், குதிரை வாணிகத் தொடர்பான தொழிலை மேற்கொண்டிருந் தார். ஷெர்கான் பெரும்பாலும் 1486'ல் பிறந்திருக்கலாம். 1472'ல் பிறந்ததாகச்சிலர் கூறுவர். தில்லிக்கு அண்மையி லுள்ள ஓரிடத்தில் பிறந்த இவர், தம் தந்தை, பீஹாருக்கு மாற்றப்பட்டபின், குடும்பத்துடன் புதிய இடத்துக்கு அழைத் துச்செல்லப்பட்டார். மாற்றாந்தாயின் கொடுமை காரணமாக இவர், சுமார் 1501'ல் ஜான்பூருக்குச் செல்ல நேர்ந்தது. பதினைந்தாம் நூற்றாண்டில் ஜான்பூர், கல்வியும், கலைகளும் வளர்ந்தோங்கிச் சிறப்புற்ற பகுதியாகத் திகழ்ந்தது. ஷெர் கான், அங்கே, பீஹாரின் ஆட்சித்தலைவர் ஜமால்கானின் ஆதரவைப்பெற்று கல்விபயின்றார். ஊக்கத்துடன் உழைத்து விரைவில், அவர், அராபிய, பாரசீக மொழிகளிலும் வரலாற் றிலும் வல்லுநரானார். அவரை அறிந்தவர் அவர்தம் அறிவாற்றலைப்பற்றிப் புகழ்மாலைகள் புனைந்தனர். அவரை ஆதரித்த பெருமகனார், அவருக்கும் அவர் தந்தைக்கும் சுமார் 1511'ல் ஒற்றுமை உண்டாக்கினார். தந்தையின் ஜாகீர் தனயனுக்குக் கிடைத்தது. அப்பகுதியில் அவர் போற்றத் தக்க சீர்திருத்தங்களைப் புகுத்தினார். உழவரின் நலத்திற் கேற்ப வரி அமைப்பு முறையை ஒழுங்குபடுத்தினார்; கொள்ளை, கைக்கூலி கொடுத்தல் முதலிய தீமைகளைக் களைந்தார். கலகக்காரரை அடக்கினார். ஏறத்தாழ 1519'ல் மாற்றாந்தாயின் கொடுமை மீண்டும் அவரை வீட்டை விட்டு

விரட்டியது. ஆக்ராவுக்குச்சென்ற ஷெர்கான், தந்தை இறந்த பின் மறுபடியும் அவர் ஜாகீரைப் பெற்ருர். ஆனல் அவருடைய மாற்ருந்தாயின் மகனும் அவனைச் சேர்ந்தோரும் ஷெர்கானுக்கு இடையூறு விளைவித்தனர் (1520). அவ்வமயம் ஆட்சிபுரிந்துவந்த இப்ரஹிம்லோடியின் கொடுங்கோன்மை யின் விளைவாக, பீஹார், அதன் ஆட்சித் தலைவரின்கீழ் உரிமைவாய்ந்த நிலையிலிருந்தது. அதன் ஆட்சித் தலைவர், ஒரு ஆப்கானியர் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. 1522'ல் ஷெர்கான் அரசியலில் பணியாளராக அமர்த்தப் பெற்ருர். இவர், பீஹாரின் ஆட்சித்தலைவர் பஹார்கானுடன் சேர்ந்து வேட்டையாடும்பொழுது, ஒரு புலியைக் கொன்ருர். அவ்வீரச்செயலைப் புகழ்ந்து பஹார்கான், அவருக்கு "புலித் தலைவன்" அல்லது "ஷெர்கான்" என்ற பட்டத்தை வழங்கி ஞர். அக்காலம் வரை அவருடைய பெயர் பரீத் (Farid) என்பதாகும். 1526'ல் பானிப்பட்டுப் போரில் இப்ரஹிம் லோடி தோற்கடிக்கப்பட்ட பிறகு பஹார்கான், சுல்தான் முகம்மது என்ற புதிய பட்டத்துடன் உரிமைவாய்ந்தவரானுர். ஆனல் ஷெர்கான் அவரிடமிருந்து விலகி ஜான்பூருக்குச் சென்று, 1527'ல் முகலாயரிடம் பணியிலமர்ந்தார். அடுத்த ஆண்டில் பாபருக்கு உதவிசெய்து தமக்குரிய ஜாகீரை மீண்டும் பெற்ருர். பாபரின் கோக்ரா வெற்றிக்குப் பிறகு (1529) பீஹார் முகலாயருக்குக் கீழ்ப்பட்ட மானியப்பகுதி யாகியது. ஷெர்கான் துணைப்பகர ஆட்சியாளராக (Deputy Regent) அமர்த்தப்பெற்ருர். மிக விரைவில், பீஹாரின் ஆட்சிமுறை அதிகாரங்கள் யாவற்றையும் ஷெர்கான் பெற்ருர்.

**பீஹார், வங்காளம், ஜான்பூர் ஆகியவற்றின் அரச ராதல் (1530—'39).** ஷெர்கான், 1530'ல் சூனர்கோட்டை யைக் கைப்பற்றியது முதல் வலியத்தாக்கிப் போர் செய்யும் அவருடைய வாழ்க்கைநெறி தொடங்கியது. பீஹார் நிலமானி யத்தலைவர் ஜலால்கான், அளவற்ற அதிகாரங்களைப்பெற் றிருந்த தம் பணியாளரான ஷெர்கானை அடக்கிக் கட்டுட் படுத்த முயற்சிகள் செய்தார். ஆனல் அவை பயனற்றுட் போயின. ஷெர்கான், பீஹாரின் முடிசூடா மன்னராக விளங்கி

னர். 1536'ல் வங்காளத்தில் அவர் படையெடுத்துக் கொள்ளைப் பொருள்களுடன் திரும்பினர். அடுத்த ஆண்டில் அங்கு மீண்டும் படையெடுத்ததின் விளைவாக 1538'ல் ஷெர்கான், வங்காள மன்னரானர். அதே ஆண்டில் தம் சூழ்ச்சித்திறமையால் ரோட்டாஸ் என்னுமிடத்தைக் கைப்பற்றிக்கொண்டார். சில பண்புகளில் ஷெர்கானின் வரலாறு, மராட்டிய வீரர் சிவாஜியின் வரலாற்றை ஒக்கும். 1537'ல் உமாயூன், ஷெர்கானை எதிர்த்துப் போரிடப் புறப்பட்டார். ஆனல் அவர்கண்ட பயன் தோல்விதான். வாரணசியும் ஜான்பூரும் சூர்குல வீரரால் கைக்கொள்ளப்பெற்றன. 15ა9'ல் ஆக்ராவுக்குத் திரும்பி வருகையில், உமாயூன், சௌஸா என்ற இடத்தில் ஷெர்கானல் மறுபடியும் தோற்கடிக்கப்பட்டார். வெற்றிவீரர் வங்காளத்துக்குச்சென்று, கவுர் என்னுமிடத்தில் பரீத்உத்தீன் ஷெர் ஷா என்ற பட்டத்துடன், மன்னராக முடிசூட்டிக்கொண்டார். காசுகளையும் தம் பெயரால் வெளியிட்டார். ஆப்கானியராட்சி கன்னோசிப் பகுதியிலிருந்து கவுர், வங்காள விரிகுடாவரை பரவியது.

இந்துஸ்தானத்தின் பேரரசராதல்: (1539 — 45) முகலாயருடன் தொடர்ந்து போர்நடத்தத் திட்டமிட்ட ஷெர்ஷா, 1540'ல் வங்காளத்தினின்று புறப்பட்டார்.; உமாயூனைக் கன்னோசிக்கருகில் முறியடித்து முடிவான வெற்றியைப் பெற்றார். முகலாயப் பேரரசரைப் பின்தொடர்ந்து ஊச், லாகூர் வரை சென்ற ஆப்கானிய வீரர், காம்ரானைக் காபூலுக்கு விரட்டிவிட்டு பஞ்சாபைக் கைப்பற்றினர். ஜீலம் மாவட்டத்தில் ரோட்டாஸ் கோட்டையைக் கட்டியபின், காச்மீர மன்னர் மிர்ஸா இஸ்மெயிலைத் துரத்தமுயன்ற ஷெர்ஷா, அம்முயற்சியில் தோல்வியுற்ருர். 1541'ல் வங்காளத்திலேற்பட்ட கலகத்தை அடக்கியதுடன் அம் மாகாணத்தின் ஆட்சிமுறையைச் சீர்திருத்தினர். அடுத்த ஆண்டில் மாளவத்தையும் ரான்தம்போரையும் கைப்பற்றிக்கொண்டு ஆக்ராவுக்குச் சென்ருர். தக்காணத்திற் படையெடுக்குமாறு அவருக்கு ஆலோசனை கூறப்பட்டது. ஆனல் அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் சில வெற்றிகளையடைந்த ஷெர்ஷா, 1545'ல்

பண்டேல்கண்டில் காலிஞ்சரைக் கைப்பற்றியபின் உயிர் நீத்தார். அவர் பேரரசு சிந்து ஆற்றிலிருந்து கங்கையாறு கடலில் சேருமிடம் வரை பரவியிருந்தது. காச்மீரம், நேபாளம், அஸ்ஸாம் ஆகியன அதிலுட்படவில்லை. ஆனால் மூல்தான், சிந்து, இராசபுதனம், மாளவம், பண்டேல்கண்டு முதலியன அதற்குட்பட்டிருந்தன.

## பகுதி 6

### சூர் மன்னரின் ஆட்சி முறை

**ஷெர்ஷா அமைத்த பொது ஆட்சி முறை:** ஷெர்ஷா ஒரு சிறந்த போர்வீரராவதற்கு முன்பே புலவராகவும் ஆட்சி முறை வல்லுநராகவும் விளங்கினர். ஆட்சி முறை வெற்றிபெற இராணுவ வலிமை இன்றியமையாத தென்பதை உணர்ந்தபின் படைத்துறையில் அவர் தம் கருத்தைச் செலுத்தலாயினர். ஜூலியஸ்ஸீஸரைப்போல இவரும் வாழ்க்கையின் பிற்பகுதியிற்றன் மிகுந்த போரார்வத் தைப்பெற்றுர். 1511 முதல் 1519 வரை அவர் தம்முடைய தந்தைவழியாகப்பெற்ற ஜாகீர்ப்பகுதியை ஆட்சி செய்துகொண டிருந்தார். அக்காலத்தில் ஆட்சிமுறைச் சீர்திருத்தத்தில் பேரார்வம் அவருக்கு உண்டாயிற்று. தொடர்ந்து போர் வாழ்க்கையிலீடுபட்டிருந்த காலத்திலும் அவர் அமைதியான ஆட்சி முறைகளின் சிறப்பை மறந்ததில்லை. பெரும்பாலும், நாடுகளை வென்று கைக்கொண்டவுடன் நலந்தரும் ஆட்சி முறையை ஆங்காங்கு அமைப்பதைத் தம் கடமையாகக் கொண்டாரவர். அக்பரின் அரிய சீர்திருத்தங்களுக்கான முன் னேற்பாட்டை ஷெர்ஷா செய்தார் என்ற ஒரு கருத்து நிலவு கிறது. ஆனால் அதை ஏற்றுக் கொண்டால் அலாவுதீன்கில்ஜி முதலிய தில்லி சுல்தானியரின் அரசியல் அருஞ்செயல்களை அறவே புறக்கணித்தவர்களாவோம். ஆட்சிமுறை அடிப்படை அற்ற வெற்றிடத்திலா ஆப்கானிய அரசரின் ஆட்சி தொடங்குகிறது? இல்லை. அவர் இந்நாட்டில் தம் முன்னே ரின் அருஞ்செயல்களை அறியாதவரல்லர். ஆயினும் பிறிதின் சார்பற்ற அறிவுத்திறமை அவரிடமிருந்தது. அவர் ஒரு ஆப்

கானியராயிருந்த போதிலும், தம் அரசியலிலும் ஆட்சிமுறையிலும் புதிய கருத்துக்களைப் புகுத்தல், பரந்த அரசை அமைக்கும் மனப்பான்மை முதலியவற்றைப் பொறுத்தவரை ஆப்கானியப் பண்பு அவரிடமில்லை. ஆப்கானிய தேசீய உணர்ச்சி அவரிடமிருந்தபோதிலும் அம்மக்களின் அடிப்படைத் தவறுகளை உணர்ந்து அவற்றைக்களைய அவர் முற்பட்டார். அவர்களிடமிருந்த வெறுக்கத்தக்க மரபுரிமையை அவர் விரும்பவில்லை. ஆப்கானியரின் குறுகிய மனப்பான்மையும் நிலமானிய முறையில் அவர்களுக்கிருந்த பற்றும் தேசீய ஒற்றுமைக்குப் பெரும் இடையூறாக இந்தன. ஆப்கானியப் பெருஞ்செல்வர் தமது அதிகாரம் குறைக்கப் படுவதை விரும்பவில்லை. ஆகவே அந்நிலையில் நிலமானிய முறையை எதிர்த்து நாட்டில் ஒற்றுமையை வளர்க்க ஷெர்ஷா எடுத்துக்கொண்ட முயற்சி போற்றற்குரியது. அம்முயற்சிஎளிதான ஒரு செயலன்று.

மத்திய, மாநில ஆட்சிமுறை அமைப்புக்கள். ஷெர்ஷா ஆட்சிபுரிந்த குறைந்தகால அளவில், தனித்தனி அமைச்சர்களின் மேற்பார்வையில் ஒழுங்கு செய்யப்பட்ட துறைக்களங்களை (Departments) அமைப்பதென்பது இயலாத செயலாகும். காலப்போக்கில் பொறுப்பு வாய்ந்த அரசியல் அலுவல்களை ஏற்றுக் கொள்ளப் பணியாளருக்குத் தக்கபயிற்சி அளிக்கவேண்டிய சிறந்த கடமை அவருக்கிருந்தது. நாட்டின் அலுவல்கள் ஒவ்வொன்றையும் — பெரியதாயினும் சிறியதாயினும் — தாமே நேரில் மேற்பார்வை செய்வாரென்று ஷெர்ஷாவைப் பற்றி அபாஸ்கான் குறிப்பிடுகிறார் ஆதலால், அவருடைய அமைச்சர்கள், அவரிடம் தொழிலைப் பயின்று கொள்வோராக இருந்தனர். நாட்டின் பொதுக் கொள்கைகளும் அவற்றை நிறைவேற்றும் முறையின் விவரங்களும் ஷெர்ஷாவினால் ஆய்ந்து முடிவுசெய்யப் பெற்றன. அவர் அரசியல், நலந்தரும் தன்மை வாய்ந்ததாகவும் முன்னேற்றமடைந்ததாகவு மிருந்த போதிலும் அது தனிக்கோல் ஆட்சி என்பது குறிப்பிடத் தக்கது. அமைச்சர்களின் அதிகாரங்கள் பேரரசனைக் கட்டுப்படுத்த வில்லை. மாநில ஆட்சித்தலைவர்கள் அவரால் அமர்த்தப் பெற்றனர். ஆனால் மாநில ஆட்சிமுறை நன்கு வளர்ச்சியடைய வில்லை.

மாநிலப் படைத் தலைவர்களின் அதிகார நிலையைப்பற்றி ஷெர்ஷா கொண்ட அச்சமே அதற்குக் காரணமாகும். ஆயினும் சூழ்நிலை காரணமாக, பஞ்சாப், இராசபுதனம், மாளவம் ஆகிய பகுதிகளில் படை வீரரை ஆட்சித்தலைவர்களாக அமர்த்தவேண்டியதாயிற்று. சில மாநிலங்கள், மத்திய ஆட்சியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தன. மற்றவற்றில் பொருளமைப்பையும் முறைவழங்கலையும் மத்திய அரசியலார் கட்டுப்படுத்தி வந்தனர். ஆதலால் செயல்வகையில் ஆட்சி முறைப்பிரிவில் பெரியபகுதி, மாவட்டம் அல்லது சர்க்கார் என்றே கூறுவது பொருந்தும்.

தல ஆட்சி முறை (Local Administration). சர்க்கார் அல்லது மாவட்டத்தில் தலைமைஷேக்தார், தலைமை முன்சீப் என்ற இரு அதிகாரிகள், முறையே படைச் செய்திகளையும் பொது அலுவல்களையும் மேற்பார்வை செய்தனர். முனிசீப்புக்கு இப்பொழுது இருப்பதுபோல முறைவழங்கும் அதிகாரம் கிடையாது. இராணுவ வீரருக்குரிய தகுதி, தலைமை ஷேக்தாருக்கு இருந்தது. வழக்கமாகப் பெருஞ் செல்வரில் ஒருவரையே அப்பதவியில் அமர்த்தினர். அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதுடன் காவல் பொறுப்பையும் அவர் ஏற்றிருந்தார். இக்காலத்திய மாவட்டக் குற்றஇயல் நீதிபதிக்கு அவரை ஒப்பிடலாம். குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் தல மக்களின் பொறுப்பு மிகுதியாக வற்புறுத்தப்பெற்றது. காவல் முறை எளியதாகவும், திறமைவாய்ந்ததாகவுமிருந்தது. அபாஸ் கான், மிகைபடுத்திக் கூறியுள்ள ஒரு குறிப்பு வருமாறு:- "உடல் தளர்ந்தகிழவி, பொன்னணிகள் நிறைந்த கூடையைத் தலையிற் சுமந்துகொண்டு திருடர் அச்சமின்றி வழிச்செலவு செய்யக்கூடிய அளவுக்கு ஷெர்ஷாவின் காவல்முறை சிறப்புற்றிருந்தது.[1]" தலைமை ஷேக்தார், குற்ற இயல் வழக்குகளைக் கேட்டு முறைசெய்தார். தலைமை முனிசீபு, வருவாய்த்துறைத் தொடர்பான வழக்குகளைக்கேட்டு முறை வழங்கினர். அவர் பர்காண அதிகாரிகளை மேற்பார்வை செய்தார். (மாவட்டம் பல பர்காணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது) சிவில் வழக்கு

1. E. & D., op. cit., IV, P. 433.

களைக்கேட்டு முறைசெய்ய அவர் சுற்றுப்பிரயாணம் செய்து வந்தார். மாவட்டத்துக்கு அடுத்தபடியாக உள்ள தொகுதிக்குப் பர்காணம் (வட்டம்) என் று பெயர் (கிராமங்களின் தொகுதி). ஒவ்வொரு பர்காணமும், ஒரு ஷேக்தார், ஒரு முனிசீபு, ஒரு பொருளாளர், இரண்டு கணக்கர் முதலியோரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. முதலிரண்டு அதிகாரிகளும் பதவியில் ஒ த் த அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். மற்றையோர், பின்னவருக்கு அடங்கவேண்டும். தலைமைஷேக்தாரும் தலைமை முனிசீபும், மாவட்டத்தில் பெ ற் றி ரு ந் த உரிமை கடமைகளை, பர்காணத்தைப் பொறுத்தவரை, ஷேக்தாரும், முனிசீபும் பெற்றிருந்தனர். மேலும் முக்கடம் என்ற பெயரையுடைய ஊர் நீ தி ப தி க ள் (கிராம முனிசீபு) வரிவசூல் அதிகாரிகள் முதலிய அலுவலாளர், மக்களுக்கும் அரசியலாருக்குமிடையே ப ணி யா ற் றி வந்தனர். சர்க்கார்களிலும் பர்காணங்களிலும் அரசியல் அலுவலாளரை இரண்டு அல்லது மூன் று ஆண்டுகட்குமேல் ஒரே இடத்தில் பணிபுரிய விடுவதில்லை. ஷெர்ஷாவின் கு ல த் து ட ன் அவர் ஆட்சி முறை அமைப்பு அழிந்துவிடவில்லை. முகலாயர் அதைத்தொடர்ந்து போற்றினர். ஆங்கிலேயரும் ஓரளவு அதை நிலைநிறுத்தினர். இக்காலத்திலுள்ள கலெக்டர், (மாவட்ட ஆட்சித்தலைவர்) குற்ற இயல் நீதிபதி (மாஜிஸ்ட்ரேட்) ஆகியோர், ஷெர்ஷா காலத்திய ஷேக்தாரை ஒத்தவர்கள். தாசில்தார், அக்காலத்திய முனிசீபை ஒத்தவர்.

**வருவாய்த் திட்டம்.** ஷெர்ஷா ஒவ்வொருவரின் நிலத்தையுமளந்து அதற்குத்தக்கவாறு வரிவிதித்தார். விளைவில் நான்கில் ஒரு பங்கு அரசியலாருக்குச் செலுத்தப்படவேண்டும். ஆனால் பேரரசில் பெரும் பகுதியினர் விளைவில் மூன் றிலொரு பங்கை அரசனுக்குச் செலுத்தினரென் றும் மூல்தானும் வேறுசில இடங்களும் தனிச்சலுகைகள் பெற்றிருந்ததால், அவ்விடங்களில், நிலங்கள் அளக்கப்படவில்லை என்றும் நாலில் ஒரு பங்கையே வரியாகப் பெற்றனரென்றும் ஒரு கோட்பாடு நிலவுகிறது.[1]

1. W. H. Moreland, Sher Shah's Revenue System, J. R. A. S. (1926) . pp. 458—9.

வரி, பணமாகவும் கூலங்களாகவும் செலுத்தப்பட்டது. பண மாகச் செலுத்துவதையே அரசியலார் விரும்பினர். அலாவுதீன் கில்ஜி காலத்திய ஆட்சிமுறையே ஷேர்ஷாவால் மீண்டும் நிலை நிறுத்தப்பட்டதைக் காண்கிறோம். ஆனால் 14'ம் நூற்றாண்டுக்குரிய அச்சுல்தான், பின்னவரைபோலக் குடியானவருக்கு நலந்தரும் சீர்திருத்தங்களை ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முறையின்றி உழவரிடமிருந்து பொருள் பெறுவதை ஷேர்ஷா வெறுத்தார். உழவுசெய்கின்றவர் அரசியலாருக்கு அச்சாணி போன்றவர் என்ற உண்மையை அவர் உணர்ந்திருந்தார். ஆயினும் அவர்களிடமும் அளவுகடந்த அன்பைக் காட்டவில்லை. "வரி உறுதிசெய்யும் காலத்தில் உழவரிடத்து அன்பு காட்டுங்கள். ஆனால் வரி வாங்கும்பொழுது பரிவு காட்டாதீர்கள்" என்பது, ஷேர்ஷா அவருடைய பணியாளருக்கு விடுத்த ஆணையாகும். வறுமைக்காலங்களில் குடியானவருக்கு அரசியலார் கடன்கொடுத்துதவினர் ஜாகீர் வழங்கும் முறையை அகற்றியதால் ஷேர்ஷாவுக்கு மிகுந்த வருமானம் கிடைத்தது. லோடிகுலத்தினர் காலத்தில் முறையின்றிப் பல நிலப்பகுதிகள் மகுதிகளுடன் இணைக்கப் பெற்றன. அத்தகைய நிலங்களை, ஷேர்ஷா மீட்டார். "அப்பேரரசர், மேலும் பத்து அல்லது இருபது ஆண்டுகள் வாழ்ந்திருப்பின், ஜமீந்தார் வகுப்பு மறைந்திருக்கும்."[1] அவர் நிலவரித்திட்டம், பேரரசின் சில பகுதிகளில், உள் நாட்டுப்பழக்க வழக்கங்களுக்கேற்ப மட்டுப்படுத்தப் பெற்றது. அக்பர் அதைப்பின்பற்றினர். அதன் தொடர்ச்சியாக இக்காலத்தில் ரயத்துவாரிமுறையை (குடிவாரமுறை) நாம் காண்கிறோம்.

**படை அமைப்பு:-** ஷேர்ஷா, முகலாய இராணுவ அமைப்பை நன்கு கற்றறிந்திருந்ததால், அதன் குறைபாடுகள் தம் படை அமைப்பில் இடம்பெருவாறு செய்திருந்தார். மான்சப்தாரி முறையை (முகலாயரால் பிற்காலத்தில் போற்றிப் பெருக்கப்பட்டது) அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. படை வீரரை அமர்த்திக் கட்டுப்படுத்தும் பொறுப்பை மத்திய அர

1. Qanungo, op. cit., p. 380,

சியலார் ஏற்றிருந்தனர். படையை நிலமானிய முறையில் அமைக்காமல் பேரரசு முறையில்நிறுவிய அலாவுதீன்கில்ஜியின் இராணுவக்கொள்கையை ஷெர்ஷா பின்பற்றினர். படை அமைப்புத் துறையில் பல செய்திகளில் ஷெர்ஷாவின் முறைக்கும் சிவாஜியின் முறைக்கும் ஒற்றுமை காண்கிறோம். ஆனால் அத்தகைய ஒற்றுமை ஷெர்ஷாவுக்கும் அக்பருக்குமிடையே காணப்படவில்லை. ஷெர்ஷா, தாமே நேரில் போர்வீரர்களைப் படையிற் சேர்த்ததுடன் அவர்களுடன்நெருங்கிய தொடர்புகொண்டுமிருந்தார். ஒவ்வொரு போர்வீரனின் மாதஊதியத்தைப் பேரரசர், தாமே முடிவுசெய்து பணமாக நேரில் செலுத்துவது வழக்கம். இதனால் ஒவ்வொரு வீரனும் தனது வருங்கால நலங்களைக்கருதி மன்னரிடம் உண்மை அன்பு பூண்டு ஒழுகவழியேற்பட்டது. மேலும் படைவீரருக்குரிய ஊதியங்களைப் பணித்துறைஅலுவலாளர் உரிமையின்றிக்கைப்பற்றிக்கொள்ளும் கேடு இதனால் ஒழிந்தது. அடுத்துள்ள உயரதிகாரிகட்கு மட்டுமே கட்டுப்படுதல் என்ற நிலமானியக் கொள்கையைப் பேரரசர் அடியோடு போக்கினர். இராணுவத்துறையில், கீழ்ப்படியாமை என்ற பெருங்கேட்டை அவர் ஒழித்தார். அளவிற் பெரிய நிலையான படை அவரிடமிருந்தது. அதன் ஒரு பகுதி பேரரசில் தனிச் சிறப்பு வாய்ந்த இடங்களைக் காவல்செய்தது. அரசர், நாட்டிலுள்ள கோட்டைகளை வலிமைப்படுத்தியதுடன், ரோட்டாஸ் (பஞ்சாப்), தில்லி, கன்னேசி, பாட்ன முதலிய இடங்களில் புதிய கோட்டைகளையுமெடுத்தார். ஒவ்வொரு சர்க்காரிலும் ஒரு கோட்டையை அமைக்கவேண்டுமென்பது அவர் குறிக்கோள். அவரிடம் குதிரைப்படை, யானைப்படை, பீரங்கிகள், காலாட்படை முதலியன இருந்தபோதிலும், குதிரைப்படையே சிறந்த ஆதாரமாகக்கருதப்பட்டது. அப்படையின் திறமையைக் காக்கும்பொருட்டு குதிரைகளுக்குச் சூடுபோட்டுக் குறிகளிடப் பெற்றன. பேரரசரின் ஒற்றர்குழாம் ஒழுங்காகப்பணியாற்றி வந்தது. படைத்துறையில் ஒழுக்கத்தை நிலை நிறுத்துவதன் பொருட்டுக் குற்றவாளிகள் மிகக்கடுமையாகத் தண்டிக்கப் பெற்றனர். "யாரேனும் நிலத்துக்குக் கேடு செய்வதைக் கண்டால் அவர், உடனே தம் கையினாலேயே அவனுடைய காதுகளை வெட்டி படை தங்குமிடத்தில் அவனை இழுத்துச்

செல்வார்.'' குடியானவர்கள், பொதுமக்கள் முதலியோர் நலத்தில் ஷெர்ஷா மிகுந்த கருத்தைச்செலுத்தினர். ''அவர் களை நாம் விரட்டிவிட்டால் நாட்டைவென்றதால் நமக்கு யாது பயன்?'' என்று அவர் கூறுவது வழக்கமாம். அவருடைய அலுவலாளரிற் சிலர் இந்துக்கள். கன்னோசிப் போருக்குப் பிறகு உமாயூனைத் தொடர்ந்து சென்ற படைத்தலைவர், பிரமஜித் கவுர் என்ற இந்து வீரர் என்பது ஈண்டு குறிப்பிடத் தகும். சுருங்கக் கூறின் ஷெர்ஷா, மான்சப்தாரி முறையி லமைந்த படையின் குறைபாடுகளை நன்கு உணர்ந்து ஆற்றலில் முகலாயப்படையைவிடச் சிறந்ததோர் படையை அமைத்தார்.

**வாணிகம், பொதுப்பணிகள், காசுமுறை.** ஷெர்ஷா, எல்லைப்புறத்திலும், வாணிகத் தலங்களிலும் விதிக்கப்பட்ட வரிகளைத்தவிர மற்ற வாணிகவரிகளை நீக்கி, வாணிகமுன்னேற் றத்திற்கு ஊக்கமளித்தார். சாலைகளை அமைத்தும் விடுதிகளைக் கட்டியும், போதுமான காவலை ஏற்படுத்தியும், வணிகருக்கும் வழிப்போக்கருக்கும் நன்மை செய்தார். சாலைகளில் இரு மருங்கிலும் மரங்கள்நட்டு வளர்க்கப்பெற்றன. அவரமைத்த சாலைகளில் சிறப்பாக, வங்காளத்தைப் பஞ்சாப்புடன் இணைக்கும் சாலையும், ஆக்ராவை மாண்டூவுடன் சேர்க்கும் சாலையும், மார்வார்—சித்தூர் சாலையும், லாகூருக்கும் மூல்தா னுக்குமிடையே உள்ள சாலையும் குறிப்பிடத்தக்கன. அவர் கட்டிய சுமார் 1700 விடுதிகளில், இந்துக்களுக்கும் முகமதிய ருக்கும் தனித்தனியாக வாழ்க்கை நலங்கள் அமைக்கப்பட் டிருந்தன. அவை அஞ்சல் அலுவலகங்களாகவும் பயன் படுத்தப்பெற்றன. இத்தகைய ஏற்பாடுகள், பேரரசரின் ஆட்சி முறைக்கு மிகவும் உதவியாயிருந்தன. பல்வேறு இடங்களி லிருந்து விரைவில் ஒற்றர்கள் செய்திகளை அரசனுக்கு அறிவிக்க அவை அனுகூலமாயிருந்தன. ஷெர்ஷா, தில்லியில் புதிய நகரமொன்றை நிறுவினர். ஆனல் அது முற்றுப் பெறவில்லை. அதன் இரண்டு வாயில் வழிகளும் பள்ளிவாசலும் அதன் சிறப்புக்குச்சான்ருகும் நினைவுச் சின்னங் களாம். காசுமுறையில் அவர்செய்த சீர்திருத்தம், அவருக்கு இந்திய நாணயங்களின் வரலாற்றில் சிறப்பான இடத்தைத்

தருகிறது. 178 குன்றிமணியளவு எடையுள்ள வெள்ளி ரூபாய் நாணயம் அவரால் வெளியிடப்பட்டதென்பது சிறப்பாகக் குறிப்பிடத்தகும். இக்கால வெள்ளி ரூபாயின் தந்தை என்று ஷெர்ஷாவைக் கூறலாம். அவர் வெளியிட்ட ரூபாய் நாணயங்களில் கலீமாவுடன் முதல் நான்கு கலீபாக்களுடைய பெயர்களும், "முறைபிறழாத சுல்தான்; வெற்றியாளரின் தந்தை" என்ற விளக்கச் சொற்றொடரும் காணப்படுகின்றன. அரசனுடைய பெயர். நாகரி எழுத்திலும் அரேபிய மொழியிலும் உள்ளது. காசு அச்சிடும் சாலைகள் சில புதிதாகத் தோன்றின. அவர் காலத்தில் நாணயம் அச்சிடும் சாலைகள் இருபத்துமூன்றுக்குக் குறையாமலிருந்தன. சிறப்பாக ஆக்ரா, குவாலியர், உச்சயினி, லக்னௌ, ஷெர்கார், ஆபு, சக்கர்-பக்கர் (சிந்து) முதலிய இடங்கள் குறிப்பிடத்தக்கன. இப்பெயர்கள், பேரரசின் பரப்பை அறிந்துகொள்ள உதவுகின்றன. குறிப்பாக, சிந்து, பேரரசுக்குட்பட்டிருந்ததென்று இதனாலறிகிறோம். வேறு சான்றுகள் இதை அறிவிக்கவில்லை.

## பகுதி 7

### ஆப்கானியப் பேரரசர் ஷெர்ஷா.

ஷெர்ஷாவின் தன்மையில் தலைசிறந்த பண்பாகத் திகழ்வது முறைவழுவாமை. அவருடைய தனிவாழ்க்கை தூய்மை நிறைந்தது. ஒழுக்கக் கேடர், யாராயிருத்தாலும்-தம் மகனாக இருப்பினும்-அவர்களை அவர் வெறுத்தார். ஆக்ராவில் ஒருவனுடைய மனைவி நீராடிக்கொண்டிருக்கையில், ஷெர்கானின் மகன் அடில்கான் அம்மாதைத்தகாத முறையில் பார்த்ததாகவும், அதையறிந்த பேரரசர் தம் மகனின் மனைவியை அந்த ஆக்ரா மாதின் கணவன் அதேபோல் பார்க்குமாறு செய்து இளவரசனைத் தண்டித்ததாக ஒரு கதை வழங்குகிறது. "முறை தவறுத சுல்தான்" என்று காசுகளில் குறிப்பிடப்பட்டிருப்பது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. அரசியல் மேதைகட்கு ஒரு எடுத்துக்காட்டாக அவர் விளங்கினார். அவருடைய அரசியல் வாழ்க்கை நமக்கு அசோகனையும் ஹர்ஷனையும் நினைவூட்டு

கிறது. உழவருக்கும் கொடுமைப் படுத்தப் பட்டோருக்கும் பொதுவாக ஏழைமக்கட்கும் உதவி செய்யும் தீன்தயாளராக அவர் விளங்கினர். தம் மரபைச்சேர்ந்த ஆப்கானியரிடம் ஒருதலைப்பற்று அவருக்கிருந்தபோதிலும் பெருந் தன்மையும் ஈகைக்குணமும் அவரிடமிருந்தன. அவர், கடுமையான ஒழுக்க முறைக் கட்டுப்பாடுகளை அமைத்திருந்த போதிலும், போர் வீரர்கள் அவரிடம் அன்பு கொண்டிருந்தனர். அவருடைய படைத் தலைமைத்திறமும் போர்செய்யுமாற்றலும் போற்றற் குரியன. கொடுமை இழைப்பதிலும் குருதி சிந்துவதிலும் அவருக்கு மகிழ்ச்சி கிடையாது. அவர் அளித்துவந்த சில தண்டனைகள் இடைக்காலத்திற்குரியன. சிற்சில காலங்களில் நம்பிக்கைக்கேடான வகையில் அவர் நடங்கொண்டது உண்டு; தீமைசெய்யத் தயங்கியதில்லை என்பதும் உண்மை. ஆனல் அவருடைய நாட்டாரிடம் காணப்பட்ட தீயகுணங்கள் பல அவரிடமில்லை. அவரிடமிருந்த பரந்த நோக்கம், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. ஒருவன், தன் பகைவனு யிருந்தபோதிலும் அவனிடமுள்ள நற்பண்பைத் தாம் கற்றுக் கொள்ளும் சிறந்த பண்பாடு அவரிடமிருந்தது. "கற்க; கற்றபின் நிற்க அதற்குத்தக" என்ற அறவுரையை அவர் பின்பற்றினர். அவர் ஒரு வைதீக முஸ்லிமாக இருந்தபோதி லும் மதவேறுபாடுகளை அவர் சகிப்புத்தன்மையுடன் நோக்கி னர். அவர் காலத்திய சிகந்தர்லோடி மதவெறிகொண்டவ ரென்பதை நாம் ஈண்டு நோக்குதல் வேண்டும். ஷெர்ஷா, மதக்கருத்துக்களை அரசியலுடன் இணைத்துக் குழப்பவிரும்ப வில்லை. மதம், மக்களின் தனிவாழ்க்கையைப்பற்றிய செய்தி யென்பது அவர் கருத்து. ஆக்கமுறையில் அமைந்ததும், விரிநிலை தழுவியதுமான இஸ்லாமின் வரலாற்றைத் தொடங்கச் செய்தார் ஷெர்ஷா. அவர், அரசியலில் உண்மையான அறிவு பெற்ற மேதை. அவர் சீர்திருத்தங்கள் அவ்வுண்மைக்குச் சான்றுகும். ஷெர்ஷாவின் அரசியலில் புலப்படும் அறிவுக் கூர்மை, பிரிட்டிஷ் ஆட்சி உட்பட வேறெந்த அரசியலிலும் காணப்படவில்லை." (H. G. Keene). ஜஸியாவை நீக்காததும் இந்துக்களுக்குக் கவர்ச்சியாக அருஞ் செயல் எதையும் புரியாததும், இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவர் பண்பாட்டை

மற்றவர் வியக்குமாறு செய்யாததும் அவரிடமிருந்த குறைபாடுகள் என்று கருதலாம். ஆனால் இரு வகுப்பினரும் கூட்டுறவு முறையில் இயங்க அவர் வழிவகுத்தார் என்பதை நாம் சிந்திக்கவேண்டும். அரசியலை அவர், முறைப்படி நோக்கினார், ஆனால் அவரைவிடச் சிறந்த அக்பரோ செய்திகளின் அடிப்படையை நோக்கி, உணர்ந்து, செயலாற்றினார்.

# பகுதி 8

## ஷெர்ஷாவின் பின் வந்தோர்

ஷெர்ஷாவின் பின் வந்த அவர் மரபினர் ஆற்றலற்றவராயிருந்தனர். அவர் மகன் இஸ்லாம்ஷா 1545 முதல் 1554 வரை ஆட்சிபுரிந்தார். இவர் தம் தந்தையைப்போல் பண்பாடு பெற்றவரல்லர். ஆப்கானியரின் தீய குணங்கள் இவரிடம் நிறைந்திருந்தன. இவருடைய கொடுங்கோன்மை இப்ரஹிம் லோடியை நமக்கு நினைவூட்டுகிறது. இவருக்குப் பிறகு இவர் மைத்துனர் முகம்மது அடில்ஷா (1554—55) பட்டத்தைச் கைப்பற்றிக் கொண்டார். சிற்றின்ப நாட்டம் மிக்க இவர், அரசியல் பொறுப்புக்களை ஆற்றல் வாய்ந்த ஹேமு என்ற இந்து வீரனிடம் ஒப்படைத்துவிட்டு சுனாரில் தம் விருப்பம்போல் வாழ்க்கை நடாத்தி வந்தார். நாட்டில் குழப்பம் வளர்ந்தது. கலகங்கள் விளைந்தபொழுது மன்னரின் உறவினரான சிகந்தர்ஷா வெற்றிபெற்று முடிசூட்டிக் கொண்டார். அவ்வமயம், உமாயூன் இந்தியாவிற் படையெடுத்து, சிகந்தர்ஷாவை சர்ஹிந்தில் தோற்கடித்துத் தாம் இழந்த நாட்டை மீட்டுக்கொண்டார், தில்லியில் சூர்குல ஆட்சி முடிவுற்றது.

அதிகாரம் 9

# முகலாயப் பேரரசு 1526—1605

(தொடர்ச்சி)

## பகுதி I

### முகலாய வரலாற்றறிஞர்கள்: அபுல்பஸல், நிஸாம்-உத்-தீன்: பதௌனி முதலியோர்

அபுல்பஸல். பாபரின் வாழ்க்கைக் குறிப்புகளைப் பற்றியும் பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய முதற்சான்றுகளைப் பற்றியும் முன்னர்க் குறிப்பிட்டோம். பிந்தியவற்றுள் பெரும்பான்மையானவை அக்பர் காலத்துக்குரிய ஆப்கானிய, முகலாயச் சான்றுகளாம். ஏறத்தாழ 1595'ல் அபுல்பஸல் என்ற அறிஞரால் ஆக்கப்பெற்ற "அய்னி அக்பரி", பதினாறும் நூற்றாண்டின் முகலாயப் பேரரசைப்புள்ளி விவரங்களுடன் விளக்கும் சிறந்ததோர் நூலாகும். அரசியலாரின் பல்வேறு துறைக்களங்கள், வளவகைகள், வருவாய் முறை முதலிய பல செய்திகளை நாம் அதிற்காண்கிறோம். பலதிறப்பட்ட குறிப்புக்கள்-"மாநில வருவாய்க்கணக்கு முதல் அன்னாசிப் பழத்தின் விலை வரை, படை அமைப்பு, பெருஞ் செல்வர் கடமை ஆகியன முதல் மெழுகுவத்தித் தண்டின் வடிவம், குதிரை தேய்க்கும் சீப்பின் விலை வரை"[1] அதிலுள்ளன. பிறிதின் சார்பற்ற தன்மையையும் அதன் தலைசிறந்த வரலாற்றுப் பெருமையையும் யாரும் மறுப்பதற்கில்லை. "ஐரோப்பாவிற்கூட அணிமைக்காலம் வரை பலவகைச்சிறப்புக்களுடன் கூடிய அத்தகைய நூலைக் காண்பது எளிதாக இல்லை. அக்கால நிலையில் அந்நூலை மிகுந்த உழைப்புடனும் ஆற்றலுடனும் உருவாக்கித் தந்தமை காரணமாக அபுல்பஸலுக்குப் பிற்காலத்தவர் மிகவும் கடப்பாடுடையோராவர்."[2] அந்நூலில் செயல்முறைக்குப் பயன்படாத சாரமற்ற குறிப்

1. H. S. Jarrett, The Ain-i-Akbari, II (1891) P. V
2. V. A. Smith, Akbar the great Mogul (1919), PP. 4,& 387.

புக்கள் மிகுதியாக இருக்கின்றன எனக் குறைகூறுவாருமுளர். இந்துக்களின் பண்பாட்டை மிகவிரிவாகவும் பலகூறுகளாகவும் ஆசிரியர் அந்நூலில் விளக்குகிருர். ஆனல் அல்பரூனியின் நூலிலிருந்து செய்திகளை எடுத்தாண்டிருந்தும் அதை அபுல் பஸல் ஒப்புக்கொள்ளவில்லை. ஆதலால் கருத்தைத் திருடு பவர் என்ற குற்றச்சாட்டுக்கு உரியவராஞர். அக்பரின் மகிழ்ச்சிக்குரிய அவர் தம் உரைகளையும் அபுல்பஸலின் வர லாற்றையும் அய்னிஅக்பரியில் காணலாம். ஆசிரியரின் ஏழாண்டு உழைப்பின் விளைவாகத் தோன்றிய அந்நூல் சிறப்புடையதென்பதில் ஐயமில்லை. அபுல்பஸலின் மற்ருெரு நூலான அக்பர் நாமா (அல்லது அக்பர் வரலாறு) தைமூரி லிருந்து தொடங்கும் அக்பரின் மரபையும், உமாயூன் அக்பர் ஆட்சிகளைப் பற்றியும் சிறப்பிக்கின்றது. 1602'ம் ஆண்டுடன் அவ்வரலாறு முற்றுப் பெறுகிறது. அவ்வாண் டிற்ருன் சலீம் இளவரசனின் (பிற்காலத்திய ஜஹாங்கீர்) முயற் சியால் அபுல்பஸல் கொல்லப்பட்டார். காலமுறை பிறழாமல் செய்திகளை முழுவதுமறிய உதவும் "அக்பர் நாமாவை" ஆக் கிய அவ்வறிஞர், அக்காலத்தில் பெருந்தன்மை, திறமை முதலியனவற்றைப் பொறுத்தவரை, அக்பருக்கு அடுத்த நிலை யில் வைத்துச் சிறப்பிக்கத் தக்கவர். வரலாற்றறிஞன் என்ற முறையில் அவர் கூறுவன யாவும் உண்மைச் செய்திகள் தாஞ என்பது பற்றிக் குறிப்பிடத்தக்க அளவு கருத்துவேற் றுமை உளது. மிகுதியாக முகமன் கூறுதல், உண்மையை மறைத்தல், நேர்மையின்மை முதலிய குற்றங்கள் அவர் நூலில் உள்ளதாகப் பழித்துரைக்கப்படுகிறது. அக்பரின் பெருமைக்கு அத்தகைய நூல் ஏற்றதன்று எனவும் கூறப்படுகிறது. அத் தலைவருக்கு இயற்கையை மீறிய ஆற்றலிருப்பதாகப் புகழ்வ துடன் அவரைக் கடவுளெனவும் கற்பனை செய்கிருர் நூலா சிரியர். அரிசேனனும் பாணரும் முறையே சமுத்திரகுப்தனை யும் ஹர்ஷனையும் சிறப்பிப்பதுபோல அபுல்பஸல் அக்பருக் குப் புகழ்மாலை புனைந்தேத்துகிருர். மேலும் ஷெர்ஷாவைப் பொறுத்தவரை அவ்வாசிரியரின் நோக்கு நடுநிலை பொருந் தியதன்று. எனினும் அவர் சொற்றிறம் வாய்ந்த கலைஞரே யன்றி முகமன் கூறுபவர் அல்லர் என்றும் தலைசிறந்த

வீரனொருவனைச் சிறப்பிக்கும் கடமை பெற்ற அவ்வறிஞரைக் குற்றஞ்சாட்டக் கூடாதென்றும், அவருடைய ஒருதலைச் சார்பு, நுண்ணறிவுடன் கூடியதாதலால் அது பொறுக்கத்தக்கது எனவும், அப்பெரியாரிடம் வரலாற்றைத் தவருன வழியில் எழுதும் சிறுமதி இருக்க முடியாதென்றும் சில அறிஞர் வற்புறுத்துவர். எவ்வாறிருப்பினும் அக்பருடைய ஆட்சியை அறிய நமக்கு உதவும் சிறந்த சான்று, அவருடைய நெருங்கிய நண்பரான அபுல்பஸலின் நூலாகும்.

நிஸாம்-உத்-தீன் அஹமது. "அக்பர் வரலாறு" (Tabakat-i-Akbari) என்று சொல்லப்படும்நூல் நிஸாம்-உத்-தீனுல் ஆக்கப் பெற்றது. 1594'ல் அவர் இறந்து விட்டபடியால் 1593 வரையுள்ள இந்திய வரலாறுதான் அதில் கூறப்படுகிறது. அவர் அரண்மனையில் பணியாற்றியவர். பின்பு, குஜராத்தின் பக்ஷி (படைத்துறைச் செயலாளர்) யாக அமர்த்தப் பெற்றுர். அறிவுத்திறமை, நேர்மை, வரலாறு கற்பதன் சிறப்பைப் பற்றிய தெளிந்த கருத்து முதலிய பண்புகள் அவரிடமிருந்தன. அவர் வரலாற்று நூலை, படௌனியும், பெரிஷ்டாவும் பயன் படுத்திக் கொண்டனர். நிஸாம், "அக்காலத்தின் மிகச் சிறந்த வரலாற்றறிஞராக இருக்கலாம்"[1] என்று கருதப்படுகிறுர். அவர் அக்பரைக் கடவுளாகப் போற்றவுமில்லை, பகைவர்களைத் தூற்றவுமில்லை. அபுல்பஸலைவிட மிகுந்த அளவுக்கு உணர்ச்சிகளை அடக்கி எழுதும் தன்மை இவரிடமுண்டு. இவர் நூல், அபுல்பஸலின் நூலைவிடக் குறைவான அளவுக்கே நம்பத்தக்கது. சமயத் துறையில் அக்பர் புதிதாக ஆற்றிய அருஞ்செயல்களைப் பெரும்பாலும் இவர் குறிப்பிடவில்லை. பல செய்திகள் விடப்பட்டிருப்பது இவர் நூலின் முக்கிய குறைபாடாகும். இவர் குறிப்பிடும் சில செய்திகள், அபுல்பஸல்தரும் குறிப்புக்களினின்று மாறுபடுகின்றன.

படௌனி. படௌனி இயற்றிய தாரிக்கி-படௌனி என்னும் நூல் இஸ்லாமிய உலகத்தைப் பற்றிய பொது வரலா

1. W. Erskine, History of India under Baber and Humayun, II (1854), P. 242.

ருகும். 1595 வரை அக்பரின் ஆட்சியைப் பற்றியசெய்திகள் அதிலுள்ளன. ஆழ்ந்த புலமைபெற்ற இவர் அக்பரின் விருப் பப்படி சமஸ்கிருதத்திலுள்ள நூல்களைப் பாரசீக பாஷையில் மொழிபெயர்த்தார். விருப்பு வெறுப்பின்றி இவர் அஞ்சாமல் பேரரசின் தன்மையை விளக்குகிறுர். ஆகவே, புகழ்மாலைகள் நிறைந்த அபுல்பஸலின் நூலைத் திருந்திய முறையில் அறிந்து கொள்ள இவர் நூல் இன்றியமையாததாகும். பதௌனி, மதவெறிகொண்ட ஒரு சுன்னி. ஷியாப் பிரிவினரையும் இந்துக் களையும் அவர் வெறுத்தார். மேலும் தம் தகுதியை பேரரசர் உணரவில்லை என்ற மனக்குறை அவருக்கிருந்தது. ஆகவே அக்பரையும் அவரால் மிகவும் விரும்பப்பட்ட அபுல்பஸல் முதலியோரையும் பற்றிக் குறைகூறிவந்தார். அபுல்பஸலின் உடன் பிறந்தாரான பெய்ஸியின் சாவைப்பற்றிக் கூறுகையில் பதௌனி எழுவதாவது:- "அவர் இறக்குங் காலத்திற்கூட பழித்துரைப்பதை நிறுத்தவில்லை....... இறுதியில் நாயைப்போல் குரைத்தார். முகத்தினுருவம் கேடுற்றது. வாயிதழ்கள் கறுத் தன. பின்வரும் நரக தண்டனைக்கு அவை அறிகுறிகள் போலும்."[1] இஃது, மிகிரகுலனின் சாவைப்பற்றி யுவான் சுவாங் குறிப்பிடுவதை நமக்கு நினைவூட்டுகிறது. பதௌனி, செய்திகளை மிகைப் படுத்திக் கூறுவதுடன் மாறுபடுத்தியும் குறிப்பிடுகிறுர். அவர் அக்பரின் மதத்தையும் சமயக்கொள் கையையும் தன்னடக்கத்துடன் சிறப்பிப்பாரென்று நாம் எதிர் பார்ப்பதற்கில்லை. வைதீக முகமதியரான அவர் அக்பரின் நிலவரித்திட்டமொன்றின் விளைவாக உழவர் ஆற்றுணைத் துயரமுற்றனரென்று அங்கிலையை விளக்குகிறுர். பேரரசரை யும் அவருடைய துணைவரையும் பற்றிக் குறைகூறுதல் அவ ருடைய கொள்கையாயிருந்தது. ஷெர்ஷாவை "புறச்சமயி களை அழிப்பவர்" என்று அவர் குறிப்பிட்டிருப்பது நேர்மை யானதன்று. ஆனுல் அவருடைய ஆட்சிக்காலத்தில், தாம் பிறந்தது பற்றி (1540) மகிழ்ச்சியடைகிறுர். ஆகவே உள் ளத்தில் அவர் ஆப்கானியப் பேரரசனைப் போற்றுவதாகத் தோன்றுகிறது.

1. M. Elphinstone, The History of India (9th Edition 1905 reprinted 1916), pp. 537 & 522n.

ஜௌஹர், குல்படான், பெரிஷ்டா முதலியோர். உமாயூனுக்கு தண்ணீர் சுமப்பவராக இருந்த ஜௌஹரின் "தாரிக்கி உமாயூன்" என்ற நூலும் பாபரின் மகள் குல்படான் பீகத்தின். "உமாயூன் நாமா" என்னும் நூலும் அக்பரின் விருப்பப்பத்திற்கிணங்க இயற்றப் பெற்றவை. அவை அக்பர் வாழ்க்கையின் முற் பகுதியைப் பற்றி நமக்கு அறிவிக்கின்றன. 1587'ல் ஆக்கப்பட்ட ஜௌஹரின் நூல் மிகைப்படுத்தப் பெற்ற செய்திகளும் பயனற்ற குறிப்புகளும் நிறைந்தது. ஆனால் உமாயூனின் பகைவரைக் குறைத்துக் கூறும்வழக்கம் அவ்வாசிரியரிடமில்லை. "உமாயூன் நாமா"வில் காலவரலாற்றுத் தவறுகளிருந்தபோதிலும் அது உமாயூனின் தன்மையை அறிய உதவும் சிறந்த சான்ருகும். அக்காலத்தில் வாழ்ந்த பெரிஷ்டா, நிஸாம் உத்தீனின் வரலாற்றுநூலை நம்பிக்கையுடன் பின்பற்றுகிருர். "தாரிக்கி பெரிஷ்டா" என்னும் அவருடைய நூல், தக்காணச் செய்திகளைப் பொறுத்த வரை சிறப்புப் பெற்றிருப்பினும் இந்திய முகலாய வரலாற்றுக்குச் சிறந்த முதற்சான்ருகக் கொள்ளப்படவில்லை. ஏறக்குறைய 1650'ல் மாகாசா தக்கூர், என்பார், சமஸ்கிருதத்தில் இயற்றிய செய்யுளிடையிட்ட உடைநடை நூல் (சம்பு) அக்பர் ஆட்சியின் ஒரு பகுதியை விளக்குகிறது. அக்பர் காலத்திய நினைவுச்சின்னங்களும் காசுகளும் பண்பாட்டு வரலாற்றை விளக்குந் தகையன. ஆனால் அவராட்சியின் நினைவுச்சின்னங்களைச் சான்ருகக் கொண்டு அக்பரின் தன்மையையும் அரசியல் கொள்கைகளையும் எளிதில் புரிந்துகொள்ள முடியாதவகையில் விளக்கங்கூறும் சில அறிஞர்களின் முயற்சி சிறப்புடையதன்று.

அயல் நாட்டவர் தரும் சான்றுகள். ஜெசூட் பாதிரிமார் 1580'ம் ஆண்டு முதல் அக்பருடன் தொடர்பு கொண்டனர். கோவாவிலிருந்து அப்பேரரசரின் அவைக்கு மூன்று தூதுக்குழுவினர் அனுப்பப் பெற்றனர். முதல் தூதுக்குழுவைப்பற்றிய விளக்கம் 1582'ல் மோன்செரேட் என்ற பாதிரியாரால் எழுதப்பெற்றது. பிரெஞ்சு வரலாற்றறிஞரான டூ ஜார்ரிக் பாதிரியார், 1611'ல் வெளியிட்ட நூலில் அக்பரிடம்

அனுப்பப் பெற்ற மூன்று தூதுக்குழுக்களைச் சிறப்பிக்கின்றார். ஜெசூட் பாதிரிமார் எழுதிய முடங்கல்கள்பல அந்நூலுக்கு அடிப்படைச்சான்றாக அமைந்தன. அக்பரைப் பற்றியும் அவர் தம் சமயத் தொடர்பான செய்திகளைப் பற்றியும் அந்நூல் விளக்குகிறது. அக்பராட்சியின் இறுதிப்பத்தாண்டுக் காலத்தைப் பற்றி (பாரசீக நூல்களில் இடம்பெறாத பகுதி) நாமறிய ஜெசூட் குறிப்புக்கள் மிகவும் உதவுகின்றன. ரால்ப் பிட்ச் (Ralph Fitch) என்ற ஆங்கிலேய வழிப்போக்கர் 1585'ல் ஆக்ராவுக்கும் பாத்பூர் சிக்ரிக்கும் சென்றார். அவ்விரண்டுநகரங்களில் ஒவ்வொன்றும் லண்டனைவிட மிகப்பெரியதாகவும் மிகுதியான மக்கட்டொகையைக் கொண்டதாகவு மிருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். ஜான்மில்டென்ஹால் (John Milden hall) என்ற மற்றொரு ஆங்கிலேயர் 1603 முதல் 1606 வரை ஆக்ராவில் தங்கியிருந்தார். 1606'ம் ஆண்டில் அவர் எழுதிய முடங்கல் அவருடைய வாணிக அலுவல்களைப் பற்றியும் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கு மிடையே வாணிகம் பற்றி அக்பருடன் அவர் சொல்லாடியதைப் பற்றியும் குறிப்பிடுகிறது. டெர்ரி (Terry), ரோ, ஆகியோர் முதல் பெர்னியர், மனுசி ஆகியோர் வரையுள்ள பல பிற்காலத்திய ஐரோப்பியப் பேட்டியாளரும் வழிச்செலவினரும் அக்பரைப் பற்றிய சில குறிப்புக்களை அளிக்கின்றனர். ஆனால் அவை மிகுந்த சிறப்புப்பெற்றன அல்ல. அக்பரின் வரலாற்றறிஞர், அவர் காலத்திய பாரசீகச் செய்திக் கோவைகளையே பெரும்பாலும் நம்பவேண்டியவர்களாகின்றனர்.

## பகுதி 2

### அக்பர் (1556—1605): முடிசூடுதலும், ஆட்சிக்காலத்தின் முற்பகுதியும்.

அக்பர் முடிசூடுதல். 1542'ல் சிந்து நாட்டிலுள்ள உமர் கோட்டையில் ஜலால்-உத்-தீன் முகம்மது அக்பர் பிறந்ததைப் பற்றியும் இளமையில் அவருக்கு ஏற்பட்ட வாய்ப்புக் கேடுகளையும் முன்னர் பார்த்தோம். இளமையில் பல ஆசிரியர்கள் அவருக்குக் கல்வி கற்பித்தும் அக்பர் கல்வியறிவைப் பெற

வில்லை. ஆனால் விலங்குகளிடம் அவருக்கு மிகுந்த பற்று இருந்தது. உடற்பயிற்சியில் மிகுந்த கருத்துச் செலுத்தினார் மாடப்புரு பறக்க விடுதல் அவரால் விரும்பப்பட்ட பொழுது போக்காக இருந்தது. எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளாத போதிலும் நூல்களைப் பிறர் வாசிக்கக் கேட்டு மகிழ்ந்தார். இவர் உயிருக்குப் பலகாலங்களில் பெரும் இடையூறுகள் ஏற்பட்டன. யாவற்றினின்றும் அவர் தப்பியது நல் வாய்ப்பே ஆகும். ஹிண்டால் இறந்தபின் அவர் மகளை அக்பர் மணந்தார். பின்னர்க் கசினியின் ஆட்சித்தலைமை அவருக்குக் கிடைத்தது. 1555'ல் சர்ஹிந்த் வெற்றிக்குப்பிறகு அரசுக்குரியோராக அமர்த்தப் பெற்றார். பைராம் கானுடன் பஞ்சாப் நாட்டின் காவல் வீரராகப் பணியாற்றிவந்த அக்பர் 1556'ல் உமாயூன் இறந்தபின் அமிர்த சரசிற்கு அருகில் கலனௌள என்ற இடத்தில் முடிசூட்டிக் கொண்டார்.

**இந்தியாவின் அரசியல் நிலை (1556).** அக்பர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபொழுது இந்தியாவின் அரசியல் நிலை, பெரும்பான்மையும் முதல் பானிப்பட்டுப் போருக்குப்பின் (1526) இருந்த நிலையை ஒத்திருந்தது. வட இந்தியாவில் சிந்து, மூல்தான், காச்மீரம், இராசபுதனம், குஜராத், மாளவம், வங்காளம் முதலிய நாடுகள் உரிமையுடன் விளங்கின. அதேபோல் தெற்கில் கோண்டுவானா, ஒரிஸ்ஸா, காண்டெஷ், ஐந்து தக்காணச் சுல்தான்களின் அரசுகள், இராமராசரின் கீழ் இருந்த விசயநகரப் பேரரசு முதலியன தனி அதிகாரங்களுடன் விளங்கின. மேலைக் கடலோரத்தில் போர்ச்சுகீசியர் காணப்பட்டனர். இராசபுத்திரர் மீண்டும் அதிகாரம் பெற்றிருந்தனர். தில்லியில் சூர் சுல்தானியராட்சி காணப்பட்டது. அவ்வமயம் பைராம் கானையும் முகலாயப் படையையும் தவிர அக்பருக்கு வேறு பற்றுக்கோடு இல்லை.

**பானிப்பட்டுப் போர்:** (1556) சர்ஹிந்த் போருக்குப் பிறகும் சிகந்தர்ஷா மனஉறுதியை இழக்காமல் அரியணையை மீட்டுக் கொள்ளும் முயற்சியை மேற்கொண்டார். பஞ்சாபில் அவர் அலைந்து வந்தது பைராம்கானுக்கு மிகுந்த கவலையை அளித்தது. 1555-6'ல் தில்லியிலும் ஆக்ராவிலும் ஏற்பட்ட

வறுமையைப் பயன்படுத்திக்கொண்டு, ஹெமு முகலாயரிட மிருந்து அவ்விரு நகரங்களைக் கைப்பற்றிக்கொண்டார். பின்னர் அவர் விக்கிரமாதித்தியர் என்னும் பேரரசப் பட்டத்தைச் சூட்டிக் கொண்டு தம் பெயருடன் கூடிய காசுகளை வெளியிட்டார். பைராம்கான் ஹெமுவைத் தோற்கடிக்க முடிவுசெய்து பானிப்பட்டுப் போர்க்களத்திற்குச் சென்ருர். இந்துவீரர் ஹெமுவின் பீரங்கிப் படையை முகலாயர் கைப்பற்றினர். ஆயினும் அவ்வீரர் விடாமுயற்சியுடன் போரிட்டு அக்பரால் கொல்லப்பட்டார். இவ்விரண்டாவது பானிப்பட்டுப் போர் வடமேற்கு இந்தியாவில் அக்பரின் நிலையை வலியுறச் செய்தது. முகலாயப் பேரரசை மீண்டும் நிறுவிய பெருமை அக்பருக்கு உரியது. சூர் குலத்தவரின் நம்பிக்கை அழிந்தது. பைராம் கான் ஆக்ராவையும் தில்லியையும் கைப்பற்றிக் கொண்டபின் சிகந்தர்ஷாவுக்குப்பகையாகச்செயலாற்றிவந்தார். அதன் விளைவாக 1557'ல் சிகந்தர்ஷா அடிபணிந்தார். பெருந்தன்மையுள்ள பைராம்கான் அவருக்குப் பீஹாரில் ஒரு ஜாகீரை அளித்தார். 1559'ல் சிகந்தர் இறந்தார். அதற்கு முன்னரே அடில்ஷாவும் இறந்துவிட்டார். இப்ரஹிம் ஷா முகலாயருடன் போரிட விரும்பாமல் தனித்திருந்து 1567'ல் ஒரிஸ்ஸாவில் உயிர் நீத்தார். அத்துடன் சூர்குலம் முடிவுற்றது.

**பைராம்கான் வெளியேறுதல்:** (1560) 1558'ல் அக்பர் ஆக்ராவை அடைந்தார். அப்துல் லதீப் என்ற பாரசீக ஆசிரியர் அக்பருக்கு அமைதி, பொறுமை முதலிய பண்புகளைக் கற்பித்தார் என்று கூறப்படுகிறது 1559'ல் குவாலியரும் ஜான்பூரும் கைப்பற்றப்பட்டன. ஷீயா வகுப்பைச்சேர்ந்த பைராம்கான் தம் இனத்தவன் ஒருவனைச் சமயத்துறை அமைச்சராக அமர்த்தியதால் வைதீகக் கட்சியினர் வெகுண்டனர். 1560'ல் பைராமின் வீழ்ச்சிக்கு அதுவே காரணமாகும். அக்பருக்கும் காவலர் பைராம்கானுக்கும் கருத்து வேறுபாடுகள் பெருகின. பின்னவரின் பகைவர் அவர் அழிவுக்கான சூழ்ச்சியைச் செய்தனர். மன்னரின் விருப்பப்படி பைராம்கான் மெக்காவுக்குச் செலவை மேற்கொண்டார். ஆனல் வழியில் 1561'ல் அன்ஹில்வாட் என்ற இடத்தில் (பரோடா

ராச்சியம்) அவருடைய ஆப்கானியப் பகைவனொருவனல் கொல்லப்பட்டார். உமாயூனும் அக்பரும் அவருக்குக்கடப்பாடுடையவர் என்பது மறக்கப்பாலதன்று. அவருடைய மகனை சிறுவன் அப்துர் ரஹீம் என்பவனை அக்பர் காப்பாற்றி வந்தார்.

**அக்பரும் செவிலித் தாய்மாரின் செல்வாக்கும்.** இளமைப் பருவத்தில் அக்பர் பல இடங்களில் அலைந்து திரிந்த காரணத்தால் பல செவிலித்தாயரின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. அவர் பேரரசரான பின் அவர்கள் அக்பரின் அலுவல்களில் தலையிட்டதால் குறிப்பிடத்தக்க சில நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. 1560 முதல் 1564 வரை அக்பர், மாகம்அனகா முதலிய சிலமாதர்களின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்ததாக அறிகிறோம். ஆனல் அக்காலப்பகுதி "பெண்வழிச் செல்லும் ஆட்சி முறைக்காலம்" என்று சிலர் குறிப்பிடுவது மிகைப் படுத்திக் கூறுவதாகும்.

**இந்துக்களின் சார்பாக அக்பர் ஆற்றிய செயல்கள்:** 1568'ல் ஆச்மீரில் ஒரு முகம்மதியத் துறவியின் கல்லறைக்குச் சென்ற அக்பர், ஆம்பேர்நாட்டு (ஜெய்பூர்-இராசபுதனம்) பீஹாரிமால் என்பாரின் மகளை மணம் புரிந்துகொண்டார். அவளே பிற்காலத்தில் ஜஹாங்கீரைப் பெற்றவள். ஆம்பேர் அரசகுடும்பத்தைச் சேர்ந்த மான்சிங் முகலாயரின் பணியிலமர்த்தப்பெற்றார். அக்பர், பாரசீகத்திலிருந்து ஒரு தூதுக் குழுவை வரவேற்றார். போரில் கைதியானவரை அடிமையாக்கும் வழக்கத்தை ஒழித்தார். ஜோதிபுரிக் கோட்டையைக் கைப்பற்றினர். சிறந்த இசைவல்லுநரான தான்சென், பேரரசரின் ஆதரவைப் பெற்றார். புண்ணியப் பயணம் போவோரிடமிருந்து வாங்கப்பெற்ற வரியை 1563'ல் அக்பர் நீக்கினர். அதனல் அரசியலாரின் வருவாய் மிகுதியாகக் குறைந்ததை அவர் பொருட்படுத்தவில்லை. மக்கள், படைத்தவனைப் போற்றித் துதிப்பதற்காக அவர்களிடமிருந்து வரி வாங்குதல் ஆண்டவரின் விருப்பத்திற்கு முரணானது என்பது அவர் கருத்து. அடுத்த ஆண்டில், ஒரு ஷெய்க்கின் மனைவியைத் தாம் மணந்துகொள்ள விரும்பி, அவன் அவளை நீக்கிவிடுமாறு கட்டாயப்படுத்தினர். இதுபோலவே, தில்லியில் பல வீடு

களில் அமைதியின்மை விளைவிக்கக் கூடிய முயற்சிகள் செய்யப்பட்டன. இதனால் அக்பரைக் கொல்ல ஒரு முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அது வெற்றிபெறவில்லை. அதற்குப் பிறகு அப்பேரரசர், செங்கிஸ்கானின் கொடிய பழக்கம் தம்மிடமிருந்ததை அகற்றிவிட்டார். 1564'ல் ஜஸியா என்னும் வரியை நீக்கினர். அவர் தம் இருபத்திரண்டாம் வயதிலேயே போற்றற்குரிய முன்னேற்றக் கருத்துக்களைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. அபுல்பஸல் முதலிய அறிஞர், அக்காலத்துக்குப் பிறகே அவருடன் தொடர்பு கொண்டனர். ஆகவே அக்பருடைய கொள்கையை அவ்வறிஞர்கள் உருவாக்கினர் என்று கருதுவதற்கில்லை. நாம் குறிப்பிட்டு வரும் ஐந்து ஆண்டுக் காலத்தில் (1560—'64) அக்பருடைய செயல்களை நோக்குமிடத்து அக்காலப் பகுதியில் அவர் உவளக மாதரின் முழுச்செல்வாக்குக்கு உட்பட்டிருந்தாரென்ற கோட்பாடு ஏற்புடைத்தன்று.

## பகுதி 3

### முகலாயப் பேரரசின் வளர்ச்சி.

**கோண்டுவானு வெல்லப்படுதல்.** சந்தேலரைப் பற்றி முதற்புத்தகத்தில் கூறப்பட்டது. சந்தேலராணி துர்க்காவதியின் ஆட்சிமுறையை மக்கள் விரும்பிப் போற்றினர். வீர உணர்ச்சியுடன் அவரும் அவர் மகன் வீரநாராயணரும் தம் நாட்டைத் தாக்கியவருடன் விடாமுயற்சியுடன் போரிட்டும் அது பயனற்றதாகியது. 1564'ல் துர்க்காவதியிடமிருந்து முகலாயப்படை கோண்டுவானுவைக் கைப்பற்றிக்கொண்டது. அரசியார் தற்கொலை புரிந்துகொண்டார். அவர் மகன் வீர உலகு எய்தினன். 1564'ல் மாளவத்தில் ஊஸ்பெக்தலைவர் விளைவித்த கலகத்தையும் அக்பர் அடக்கிப் புகழ்பெற்றார்.

**இராசபுதனத்தில் படையெழுச்சி.** பிறநாடுகளை வென்று தம்முடைய நாட்டைப் பெருக்கிக்கொள்வது அக்பரது சிறந்த நோக்கங்களில் ஒன்றாகும். ஒருநாட்டைத் தாக்கவேண்டுமானல் அதற்காக ஒரு காரணத்தைக் கற்பித்துக்கொள்வது

அவருக்கு இயலாத செயலன்று. சிறப்புவாய்ந்த இராச புத்திரநாடானமேவாரை 1567'ல் அக்பர் தாக்கினர். அக்பரின் பேரவாவே அதற்குச் சிறப்பான காரணமாகும். சித்தூர்த் கோட்டை கைப்பற்றப்பட்டது. பல இராசபுத்திரர் தமது வழக்கப்படி உயிர் நீத்தனர். 1569'ல் ரன்தம்போரையும் காலிஞ்சரையும் அக்பர் இணைத்துக் கொண்டார். பின்னர் இரண்டாண்டுகளுக்குள் இராசபுதனம் முழுவதும் முகலாயப்பேரரசில் சேர்ந்துவிட்டது. ஆயினும் அதனேடு அச்செயல் முடிவுற்றதாகக் கூறமுடியாது. ஒரு சில தலைவர்கள் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் கலகம் விளைவித்து வந்தனர்· அக்பருடைய படைகள் அவ்வப்போது சென்று அக்கலகங்களை அடக்கவேண்டி யிருந்தது. அக்பர் மகப்பேற்றை விரும்பிச் சிக்ரியிலிருந்த ஷெயிக்சலீம் என்ற முஸ்லிம் துறவியின் அருளை நாடினர். 1569'ல் பேரரசருக்கு ஒரு ஆண்மகவு பிறந்தது· சலீம் (அத்துறவியின் பெயர்) என்றே அக்குழந்தைக்குப் பெயரிட்டனர். 1570'ல் மூராட் என்ற மற்றெரு மகனை அக்பர் பெற்ருர். 1572'ல் அவருக்குப் பிறந்த மகன், தானியல் (மற்றெரு பக்கிரியின் பெயர்) என அழைக்கப்பட்டான். 1569'ல் சிக்ரியில் பேரரசர் ஒரு நகரை நிறுவினர். அது தலைநகராக்கப்பட்டது. 1573'ல் அவர் குஜராத்தை வென்றபிறகு, சிக்ரிக்கு, பத்பூர் (Fathpur) என்ற அடைமொழி சேர்க்கப்பட்டது. வெற்றிநகர் என்பது அதற்குப் பொருள். 1585 வரை அது தலைநகராயிருந்தது.

குஜராத் வெல்லப்படுதல். பஹதூர்ஷா என்ற குஜராத் மன்னன் 1537'ல் இறந்தபின் அங்கு குழப்பம் நிலவியது. அக்பர் கையில் மானக்கேடடைந்த சில பெருஞ்செல்வர் அப் பகுதிக்குச் சென்று பேரரசருக்குப் பகையான சூழ்ச்சிகள் செய்துவந்தனர். அங்கே ஏழு தலைவர்களிருந்த ஒரு பகுதியில் மூன்ரும் முஸாபர் (1562—'72) என்ற சுல்தான் பெயரளவில் அதிகாரம் செலுத்திக்கொண்டிருந்தார். அத்தலைவர்களில் ஒருவரின் அழைப்பிற்கிணங்கி அக்பர் 1572'ல் குஜராத்தில் படையெடுத்தார். ஆமதாபாத்தில் முஸாபர் முகலாயருக்கு அடிபணிந்தார். காம்பேக்குச்சென்ற அக்பர் அப்பொழுதுதான்

கடலை முதன் முதலாகப் பார்த்தார். 1573'ல் சூரத்தைக் கைப் பற்றிக் கொண்டதுடன் அவ்வாண்டில் ஷேய்க்முபரக் என்னும் அபுல்பஸலின் தந்தையுடன் தொடர்பு கொண்டார். கங்ராவை (பஞ்சாபில்) க்கைப்பற்றும் முயற்சி தோல்வியுற்ற போதிலும் அதன் தலைவர் முகலாய நிலமானியக்காரராயினர். குஜராத் தின் மீர்சாக்கள் செய்த கலகத்தை அடக்கி வெற்றிகொண்ட அக்பர் அங்கு அமைதியை ஏற்படுத்த அவருடைய அமைச்சர் (இந்து) தோடர்மால் என்பவரைத் தக்க சீர்திருத்தங்கள் செய்யுமாறு ஆணையிட்டார். அம்மாநிலத்தில் 1574—5'ல் தோடர்மால் தீட்டிய பொருளமைப்புத் திட்டமே, பிற்காலத்தில் அக்பர் பேரரசு முழுவதும் அமைக்கப் பெற்ற வருவாய் திட்டத் தின் அடிப்படையாகும். மிகுந்த செல்வச் செழிப்பு வாய்ந்த குஜராத்தைப் பெற்றதால் அக்பருக்குப் பெரும் பொருள் கிடைத்தது. தோடர்மாலின் பொருளமைப்பு ஆற்றலைப் பெருக்கிக்கொள்ள அங்கே நல்லவாய்ப்பு இருந்தது. அங் கிருந்து அக்பருக்குச் செலவுபோக 50 லட்சம் ரூபாய் வருமா னம் கிடைத்தது. அப்பகுதியில் கடற்கரை வரை முகலாயப் பேரரசு பரவியதால் வாணிக முன்னேற்றத்திற்கான ஊக்கம் பெருகியது. மேலும் போர்ச்சுகீசியருடன் அக்பர் தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. அதன் பிற்கால விளைவுகள் குறிப்பிடத்தக்கன. மான் சப்தாரி முறைச் சீர்திருத்தம், குறி யிடும் சட்ட திட்டங்கள், ஜாகீர் முறைக்கு மாருக அரசியலார் நேராக வரிவாங்கும் முறை முதலிய ஆட்சிமுறைக் கொள் கைகள் 1573, 1574'ம் ஆண்டுகளில் உருவாயின.

**பீஹாரையும் வங்காளத்தையும் இணைத்துக்கொள்ளல்.** ஷெர்ஷா இறந்தபின் ஆப்கானியத் தலைவர்கள் வங்காளத் தில் அதிகாரம் செலுத்திவந்தனர். ஷெர்ஷாவால் பீஹாரின் ஆட்சித் தலைவராக அமர்த்தப்பெற்றிருந்த ஆப்கானியத் தலைவர் 1564'ம் ஆண்டின் கவுர் நகரில் தம்முடைய ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர். இரண்டாண்டுகட்குப் பிறகு ரோட்டாஸ் நகரைக் கைப்பற்ற அவர் முயற்சி செய்ததால் அக்பர் அவருடன் போர் தொடுத்தார். பீஹார், வங்காளப் பகுதிகளின் தலைவர், அக்பரு டைய தலைமை ஆதிக்கத்தை 1568'ல் ஏற்றுக்கொண்டார்.

1572'ல் அவர் இறந்தபின் அதிகாரநிலைபெற்ற தாவுத்கான் அக்பரின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன் அக்பருக்குரிய ஒரு இடத்தைக் கைப்பற்றிக்கொண்டு வலியப் போர்தொடுத்தார். வங்காள சுல்தானை தாவுத்கானை அக்பர், 1575'ல் துக்காராய் (வங்காளத்துக்கும், ஒரிஸ்ஸாவுக்கு மிடையிலுள்ள ஜலேஸ்வருக்கு அருகில் உள்ளது) என்னுடத்தில் முடிவாக முறியடித்தார். 1567'முதல் அக்பர் அவையை அணிசெய்து வந்த அபுல்பெய்ஸியின் உடன்பிறந்தாரான அபுல்பஸல் 1574'ல் முகலாயர் அவையில் இடம்பெற்றார். ஏறத்தாழ அதேகாலத்தில் பதௌனியும் அக்பரின் ஆதரவைப்பெற்றனர். வங்காளப் போருக்குச்சென்ற அக்பருடன் அவர் அவையினர் பலர் சென்றனர். தோற்கடிக்கப்பட்ட தாவுத்கானுக்கு இரக்கம் காட்டக்கூடாதென்று ராசா தோடர்மால் என்ற சிறந்த தானைத்தலைவர் கூறினர். ஆனால் தலைமைத்தளபதி, வங்காள சுல்தானை அன்புடன் நடத்தினர். அடுத்த ஆண்டில் தாவுத் கலகம் செய்தவுடன், மறுபடியும் அவரை ராஜ்மஹாலுக்கு அருகில் (பீஹாரில் பகல்பூருக்குக் கிழக்கில்) முகலாயப் படையினர் முறியடித்துக் கொன்றனர். அத்துடன் வங்காளத்தில் ஆப்கானிய சுல்தானரசு முடிவுற்றது. இவ்வாறு, அக்பர் தாம் பட்டத்திற்கு வந்தபின் இருபது ஆண்டுகளுக்குள் வட இந்தியாவிற் பெரும்பகுதிக்குத் தலைவரானார்.

மேவார்நாட்டு பிரதாப்சிங். மேவார்நாட்டு பிரதாப்சிங் அக்பருக்கு இடையூறுகள் விளைவித்து வந்தார். பேரரசத் தளபதி மான்சிங், 1576'ல் அவரை ஹால்டிகாட் கணவாயில் (உதயபுரியின் வடமேற்கில், கோகுண்டாவுக்கருகில்) தோற்கடித்தார். ஆயினும் அந்த ராணா தாம் இழந்த நிலப் பகுதிகளை மீண்டும் கைப்பற்றிக்கொண்டார். உண்மையான இராசபுத்திர வீர உணர்ச்சிகொண்ட அவர், அக்பருடன் எவ்வகையான மணவினைத்தொடர்பும் கொள்ள மறுத்துவிட்டார். 1597'ல் அவர் இறந்தவுடன் மேவார் வரலாற்றில் மிகச்சிறந்த காலப்பகுதி முடிவடைந்தது. மேவார்நாட்டுப் பிரதாப்சிங்கின் அருஞ் செயல்களைச் சிறப்பிக்க, தூஸிடிடீஸ் போன்ற ஒரு வரலாற்றறிஞரை அந்நாடு பெற்றிருக்கவில்லை என்பது நாம் வருந்துவதற்குரிய ஒரு செய்தியாகும்.

# பகுதி 4

## அக்பர் ஆற்றிய சில செயல்கள்

மதச்செய்திகளையும், தத்துவங்களையும் விவாதிக்க, அக்பர் 1575'ல் இபாதத்கான (வழிபாட்டுஇல்லம் அல்லது மாளிகை) என்ற கட்டடத்தை நிறுவினர். மெக்காவுக்கு யாத்திரை செய்வோருக்கு உதவினர். தானே அங்குச் செல்ல வேண்டுமென்ற எண்ணமும் அவரிடமிருந்தது. கிறித்தவ மதத்தைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் அவரிடமிருந்தது. ஆட்சிமுறைச் செய்திகளிலும் அவர் கருத்துச்செலுத்திவந்தார். அரச ஆணைகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்று அறிந்துகொள்வதில் அவருக்கு மிக்க ஊக்கமிருந்தது. பதிவுவைப்பறை (Record Room) ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. நிலத்தின் விளைவைப் பெருக்கும் நோக்கத்துடன் ஒரு செயல்தேர்வு நடைபெற்றது. அதன்படி புதிய முறையில் நிலங்களைப் பாகுபாடுசெய்து காரோரியர் (இக்காலத்திய குடியேற்ற முறை அலுவலாளரை ஒத்தவர்) பலர் அமர்த்தப்பெற்றனர். அத்திட்டம் வெற்றிபெறவில்லை. அறிஞர் பதௌனி அத்திட்டத்தின் தீமையைத் திறமையுடன் விளக்கியுள்ளார். 1577'ல் அக்பர் நாணயம் அச்சிடும் சாலையைத் திருத்தி அமைத்தார். அப்பணி அப்துல் சமாத் என்ற சிறந்த ஓவியக்கலைஞரிடம் ஒப்படைக்கப்பட்டது. 1578'ல் அக்பர், வியக்கத்தக்க மெய்ஞ்ஞான அனுபூதியைப் பெற்றதாக அறியக்கிடக்கிறது. ஏறத்தாழ அதேகாலத்தில் அவர் ஐரோப்பியத் தொழில் விளைபொருள்களில் நாட்டம் செலுத்தினர். வழிபாட்டு மாளிகையில் நடைபெற்று வந்த சொற்போர்கள் அக்பர் எண்ணியவாறு நற்பயனை அளிக்கவில்லை. முகம்மதிய மத சித்தாந்திகள் அங்கே நடத்திய போராட்டம் அக்பரின் மன அமைதியைக் குலைத்தது. பின்னர்ப்பேரரசர், ஸொராஸ்திரிய, கிறித்தவ, சமணப் பிரதிநிதிகளுடன் தொடர்புகொண்டார் (1582). 1579'ல் தலைமைப் பள்ளிவாசலில் அக்பர் சமய உரை ஆற்றினர். அதே ஆண்டில் பேரரசின் முஸ்லிம் மதகுருமார், சமயச்செய்திகளில் அக்பருக்குத் தனிநிலை உரிமையை வழங்கினர்

1580'ல் அக்பர் ஒரு இத்தாலிய ஜெசூட் பாதிரியையும் ஒரு ஸ்பானிய ஜெசூட் பாதிரியையும் ஆக்ராவுக்கு அழைத்தார். அதே ஆண்டில் அக்பரின் ஆட்சிமுறையையும், சமயக்கொள்கையையும் விரும்பாத சிலமுகம்மதியத் தலைவர்கள் பீஹாரிலும், வங்காளத்திலும் கலகம் செய்தனர். ஆனால் அடுத்த சில ஆண்டுகளில் அது அடக்கப்பட்டது. ஏறத்தாழ 1580'ல் தோடர்மாலின் மிகப்புகழ்வாய்ந்த பொருளமைப்புத்திட்டம்—ஸப்தி, (ஒழுங்குபடுத்தும் முறை)— நிறைவேற்றப்பட்டது. பேரரசு, காபூல், லாஹூர், மூல்தான், தில்லி, ஆஜ்மீரம். ஆமதாபாத், மாளவம், ஆக்ரா, அயோத்தி, அலஹாபாத், பீஹார், வங்காளம் என்று பனிரண்டு சுபாக்கள் அல்லது மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் ஆட்சிமுறை ஒழுங்கு செய்யப்பட்டது.

1581'ல் காபூலின் முகம்மது ஹகீம் பஞ்சாபில் படையெடுத்ததால் அவரை எதிர்த்து அக்பர் தம் படையுடன் புறப்பட்டார். அவருடன் அபுல்பஸல், மோன்ஸெர்ரேட் பாதிரியார், வரலாற்றறிஞர் நிஸாம்-உத்-தீன் அகம்மது, முதலியவர்களும் சென்றனர். வெற்றியுடன் திரும்பிய அக்பர் 1585'ல் முகம்மது ஹகீம் இறந்த பிறகு தம்முடைய ஆட்சியைக் காபூல் மாகாணத்திலும் நிறுவினார். 1532-ம் ஆண்டின் தொடக்கத்தில் அக்பர் பல் வேறு மதங்களிலும் சிறந்தவை எனக் கண்ட கொள்கைகளைத் திரட்டி ஒரு மதத்தை உண்டாக்கி அதற்கு தீன்-இலாஹி (தெய்வமதம்) எனப் பெயரிட்டார். போர்ச்சுகீசியர் தங்கி இருந்த டாமன், டையூ என்ற இரு இடங்களைக் கைப்பற்ற முகலாயர் செய்த முயற்சி தோல்வியில் முடிந்தது. பேரரசர், ஸ்பெயின் மன்னனுடனும் போப்புடனும் அரசியல் தொடர்புகொள்ளத் திட்டமிட்டார். ஜெசூட் தூதுக் குழுவினர் தாம் எதிர்பார்த்தவாறு பயன் அடையாததால் முகலாயத் தலைநகரிலிருந்து அகன்றனர். 1583'ல் அக்பர் அலஹாபாத் கோட்டையை நிறுவினார். அதே ஆண்டில் அவர் தாம் நேராகத் தலையிட்டு ஒரு இராசபுத்திரப் பெண்மணி உடன்கட்டை ஏறுவதினின்று தடுத்து அக்குற்றத்திற்குக் காரணமானோரைத் தண்டித்தார். 1585'ல் நியூபெரி, ரால்ப்பிட்ச், லீட்ஸ், ஆகிய

மூன்று லண்டன்மா நகர வணிகர் எலிசபெத் அரசியிடமிருந்து (1558—1603) பெற்ற முடங்கலுடன் ஆக்ராவுக்கும், சிக்ரிக்கும் போந்தனர். 1583'ம் ஆண்டுக்குரிய அம்முடங்கல் அக்பரைப் "பிறரால் வெல்லமுடியாத மிகச்சிறந்த இளவரசர்" என்று குறிப்பிடுகிறது. அக்பரின் சிறப்பு இங்கிலாந்தில் பரவியிருந்தமைக்கு இதுசான்ருகும். 1579'ல் கோவாவுக்கு வந்து 161ு'ல் தாம் இறக்கும் வரை இந்தியாவில் தங்கி யிருந்த ஜெசூட் பாதிரி தாமஸ் ஸ்டீவன்ஸ் என்னும் ஆங்கி லேயர் அக்பருடன் தொடர்புகொள்ளவில்லை. இந்தியாவில் வாழ்ந்த முதல் ஆங்கிலேயர் அவரே ஆவர். அவர் கொங்கணி இலக்கணத்தையும், கிறித்தவ புராணம் என்ற சிறந்த இலக்கிய நூலையும் ஆக்கினர்.

## பகுதி 5

### இராசா பீர்பாலும் இராசா தோடர்மாலும்

இராசா பீர்பால். இராசாபீர்பால் என்ற படைத்தலைவர் ஆப்கானியக் கூட்டத்தினருடன் போரிடுகையில் 1586'ல் உயிர் நீத்தார். தோடர்மாலும் மான்சிங்கும் பின்னர் அக்கூட்டத்தினரை அடக்கி வெற்றிகொண்டபோதிலும், பீர்பாலின் சாவு அக்பருக்கு நிறைவு செய்ய முடியாத ஒருபெரும் இழப்பாகும். பீர்பால் 1528'ல் ஒரு எளிய அந்தண குலத்தில் தோன்றினர். அவரு டைய அக்காலப்பெயர் மஹேஷ்தாஸ். அக்பர் ஆட்சியின் முற் பகுதியிலேயே அவர்பேரரசருடன் தொடர்புகொண்டார். சிறந்த கவியாகவும் இசைவல்லுநராகவும் இருந்த பீர்பாலை அக்பர் மிகுதியாக விரும்பிப்போற்றினர். அக்கவிஞரின் சொற்கலைத் திறமையை விளக்கும் சில கதைகள் உள்ளன. அவர் "கவிராய்" அல்லது "கவிகளுக்குத்தலைவன்" என்ற பட்டத் தைப்பெற்றிருந்ததுடன் ஒரு மான்ஸப்தாராகவும் இருந்தார். அக்பரின் "தெய்வீகமதத்தில்" அவருக்கு நம்பிக்கை இருந்தது. ஆனல் சீக்கிய மதத்திடம் அக்பர் கொண்டிருந்த விருப்பத்தைப் பீர்பால் வெறுத்தார். ஏறத்தாழ 1571'ல் சிக்ரியில் கட்டப்

பட்டிருந்த பீர்பாலின் சிறந்த மாளிகை, அக்பர் அவையில் அவர் பெற்றிருந்த சிறப்புக்குச் சான்ருகும்.

**காச்மீரம் வெல்லப்படுதல்.** 1551'ல் மீர்ஸாஹைதரின் ஆட்சி முடிந்த பிறகு காச்மீரத்தில் ஷா-மீர் குலம் மீண்டும் நிலைபெற்றது. 1579'ல் அங்குப்பட்டம் ஏற்ற யூசுப்கான் அக்பரின் ஆதிக்கத்தை ஏற்கமறுத்தார். அவருக்கு முன்பிருந் தோர் முகலாய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தனர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தகும். ஆகவே காச்மீரம் படை யெடுக்கப்பட்டது. போரை நடத்திய படைத் தலைவர்களில் ஜெய்பூர் இராசா பகவன்தாஸ் ஒருவராவர். 1586'ல் காச்மீரம் முகலாயப்பேரரசின் ஒரு பகுதியாகியது. பகவன் தாஸ் 1589'ல் இறந்தார். அவருடைய எடுப்பு மகனை மான்சிங் வங்காளத்தின் ஆட்சித்தலைவராக அமர்த்தப்பெற்ருர்.

**இராசாதோடர்மால்.** பகவன்தாஸ் இறந்தபின் சில நாட்களில் தோடர்மாலும் இறந்தார். இவர் அயோத்தியில் ஷெர்ஷாவின்கீழ்ப் பயிற்சி பெற்ருர். 1573'ல் குஜராத், பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டபின் அப்பகுதியில் பொருளமைப்புச் சீர்திருத்தங்கள் செய்த காரணத்தால் தோடர்மாலின் புகழ் ஓங்கியது. பீஹார், வங்காளம் முதலிய நாடுகளை அக்பர் கைப்பற்றிய காலத்தில் அவர் அருந்தொண் டாற்றினர். பின்னர் அவர் பொருளமைச்சராகவும், தலைமை அமைச்சராகவும் ஒருபெரும் மான்சப்தாராகவும் அமர்த்தப் பெற்ருர். 1580'ல் பேரரசில் அவர் அமைத்த பொருளமைப் புத்திட்டம் அவருடைய பணிகளில் தலை சிறந்ததாகும். வருவாய்க்கணக்குகள் பாரசீகமொழியில் எழுதப்பட்டமைக்கு அவரே காரணமாவர். சிறந்தபொருள் துறை வல்லுநராகவும், அஞ்சாத போர்வீரராகவும் இருந்ததுடன், ஒரு நேர்மையாள ராகவும் அவர் இருந்தார். பேராசை என்னும் தீய குணம் அவரிடம் இல்லை. அக்பரின் அலுவலாளரில் அபுல்பஸலுக்கு அடுத்த சிறப்பு நிலை இவருக்குரியது. முகலாய ஆட்சிமுறை யில் நிலையான ஒருதொண்டை செய்தபெருமை இவருக்குண்டு.

# பகுதி 6

## பேரரசு மேலும் விரிவடைதல்

சிந்து, ஒரிஸ்ஸா, பலுசித்தானம், கண்டாஹார் முதலிய நாடுகள் கைப்பற்றப்படுதல். சிந்து நாட்டுச்சுல்தான் அக்பரின் ஆதிக்கத்தை ஏற்கமறுத்ததால் 1591'ல் அந்நாடு முகலாயப்பேரரசுடன் இணைக்கப்பட்டது. அங்கு ஆட்சிபுரிந்த சுல்தானும், பின்னர் அவருடைய மகனும் அப்பகுதியின் ஆட்சித் தலைவராக அமர்த்தப் பெற்றனர். 1591'ல் அக்பர் காண்டெஷ், ஆமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய பகுதிகளுக்கு அரசியல் தூதுவரை அனுப்பித் தம்முடைய ஆதிக்க நிலையை ஏற்படுத்தினர். 1592'ல் அக்பர் கடந்த ஆயிரம் ஆண்டுகளில் இஸ்லாமின் வரலாற்றைப் பற்றிய நூல் ஒன்றை இயற்றச் செய்தார். அந்நிகழ்ச்சியைச் சிறப்பிக்கும் காசுகளும் வெளியிடப்பட்டன. மான்சிங் ஆப்கானியத் தலைவர்களிடமிருந்து ஒரிஸ்ஸாவைக் கைப்பற்றிப் புகழ்பெற்றார். காண்டேஷ் தவிர மற்ற தக்கண நாடுகள் அக்பரின் உயர்நிலையை ஏற்றுக் கொள்ளாததால் பேரரசர் தெற்கில் படையெடுக்க முடிவு செய்தார். அப்துர் ரஹீம் என்ற தானைத் தலைவரை ஆமது நகரைத் தாக்குமாறு அனுப்பினர். (1593). 1594'ல் நிஸாம் உத்தீன் அகமத் (புகழ்பெற்ற வரலாற்றறிஞர்) உயிர்நீத்தார். அதே ஆண்டில் பலுசித்தானம் முகலாயரால் வெல்லப்பட்டது. கண்டாஹா[illegible] பாரசீக ஆட்சித் தலைவர் 1595'ல் தாமாகவே அக்ப[illegible] சரண் புகுந்தார். அக்பரால் மிகவும் விரும்பப்பட்ட அந்[illegible]ர் 1622 வரை முகலாயர் ஆட்சியின் கீழ் இருந்தது. அவ்வாண்டில் பாரசீக மன்னர் ஷா-அபாஸ் (1587—1629) அந்நகரை ஜஹாங்கீரிடமிருந்து கைப்பற்றிக்கொண்டார். 1595'ல் பெய்ஸி மரணமடைந்தார்.

# பகுதி 7

## அக்பரும் தக்கணமும்

**பேரார் வெல்லப்படுதல்.** 1593'ல் ஆமது நகருடன் அக்பர் போர்செய்த செய்தி முன்னர்க் கூறப்பட்டது. பீஜப்பூருக்கும் ஆமது நகருக்கும் இடையே பகைமை நிலவியதால் அந்நாடுகள் ஒற்றுமைப்பட்டு வட இந்திய படையெடுப்பாளரை எதிர்க்க இயலவில்லை. 1595'ல் முகலாயப்படை ஆமது நகரத்தைத் தாக்கியபொழுது சந்த்பீபி என்னும் பெண்மணி கோட்டையைக் காத்துப் பகைவர் நுழையாமல் தடுத்தார். அவ்வம்மையும் ஆமது நகர் சுல்தான் குடும்பத்தில் பிறந்தவர் பீஜப்பூர் சுல்தானை அலி ஆதில்ஷாவை மணந்து கொண்டார். ஆமதுநகரச் சுல்தான் பதவிக்கு போட்டி ஏற்பட்ட காலத்தில் அவர் தம் தாய் நாட்டிற்கு வந்தார். முடிவில் 1596'ல் அவ் வீரப்பெண்மணி பேரார் நாட்டை முகலாயருக்குக் கொடுத்து அவர்களுடன் உடன்பாடு செய்துகொண்டார். ஆனல் அவருக்குப் பகையாயிருந்த உள்நாட்டுத் தலைவர்கள் அவ்வுடன்பாட்டை ஏற்றுக் கொள்ளாததால் மீண்டும் முகலாயருடன் போர் தொடங்கியது. 1597'ல் அப்துர்ரஹீம் ஆமது நகரத்தையும் அதைச் சேர்ந்த நட்பு நாடுகளையும் தோற்கடித்தார்.

**ஆமது நகரமும் அஸிர்காரும் கைக்கொள்ளப்படுதல்.** 1600'ல் அக்பர் தாமே தக்கணத்தில் போர்புரியப் புறப்பட்டார். காண்டெஷ் நாட்டின் தலைநகர் பர்ஹன்பூர் கைப்பற்றப்பட்டது. அடுத்தபடியாக அவர் முற்றுகையிட்ட அஸிர்கார் எளிதில் வெல்லப்படவில்லை. விடா முயற்சியுடன் பத்து மாதங்கள் முற்றுகையிட்டபின் 1601'ல் அப்பகுதி கைப்பற்றப்பட்டது. அங்கு ஆட்சிபுரிந்துவந்த பருக்கியர் குலத்தின் இறுதி மன்னன் பஹதூர்ஷா (1597—1601) ஆவர். அவர் குடும்பத்துடன் குவாலியரில் சிறைப்படுத்தப் பெற்றுர். அக்பர் தெற்கில் தாம் வென்ற பகுதிகளை மூன்று மாநிலங்களாக வகுத்து (ஆமதுநகர், பேரார், காண்டெஷ்) இளவரசன் தானியலைத் தக்கணத்திற்கும் மாளவம் குஜராத் பகுதிகளுக்கும் அரசப்பிரதிநிதியாக அமர்த்திவிட்டு ஆக்ராவுக்குத் திரும்பினர்

1600-ல் அவர் மகன் சலீம் கலகம் செய்ததால் அவர் விரைவாக வடக்கே செல்ல நேர்ந்தது. 1580'ல் பேரரசு பனிரண்டு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டதென்று முன்னர்ப் பார்த்தோம். அத்துடன் மூன்று மாகாணங்கள் இணைக்கப் பெற்றன. பின்னர் வெல்லப்பெற்ற காச்மீரம் லாகூருடனும், சிந்து, மூல்தானுடனும், ஒரிஸ்ஸா வங்காளத்துடனும் இணைக்கப்பெற்றன.

## பகுதி 8

### இளவரசர் சலீமும் அபுல்பஸலும்

தாம் பட்டம்பெற வேண்டுமென்ற பெரு விருப்பங்கொண்ட சலீம், அக்பர் விரைவில் இறக்காதது கண்டு பொறுமை இழந்து 1600'ல் கலகம் செய்து அடுத்த ஆண்டில் அலகாபாத்தில் தாம் அரசன் என்று அறிவித்ததுடன் தம் பெயரைக்கொண்ட காசுகளையும் வெளியிட்டார். அக்பரின் அன்பைப் பெற்றிருந்த அபுல்பஸலைக் கொலை செய்வதற்கான ஏற்பாட்டையும் சலீம் செய்தார். 1602'ல் கொலையுண்ட அபுல்பஸல் இயற்றிய இரண்டு நூல்களைப் பற்றி முன்னர்க் குறிப்பிட்டோம். ஷேய்க் முபரக்கின் மகனும் அபுல் பெய்ஸியின் இளவலுமான அவ்வறிஞர், 1574'ல் அக்பரைக் கண்டு அவருடன் தொடர்பு கொண்டார். அப்போது அவருக்கு வயது இருபத்து மூன்று. சிறந்த கல்வி அறிவு அவரிடமிருந்தது. ஒவ்வொரு மதத்தினரிடமும் காணப்பட்ட வைதீகத் தன்மையையும் சிறுமைத் தன்மையையும் அவர் வெறுத்தார். அக்பரின் கீழ் மிக உயர்ந்த பதவியை அவர் பெற்றிராத போதிலும் தலைமை அமைச்சரைவிட மிகுதியான அதிகாரம் அவரிடம் இருந்தது. அக்பர் அவரிடம் முழுநம்பிக்கை வைத்திருந்ததால் மிக நெருக்கமாக இருவரும் பழகினர். அக்பர் புதிதாக நிறுவிய மதத்தின் தலைமைகுருவாக அபுல்பஸல் விளங்கினர். மிகுந்த பகுத்தறிவு அவரிடமிருந்தபோதிலும் அக்பரை அவர் கடவுளுடனொத்தவராகக் கருதினர். அவருடைய தனி வாழ்க்கை தூய்மையானது. எப்பொழுதும் சுறுசுறுப்பாக அவர் செயலாற்றி வந்தார். ஒவ்வொரு நாளும் அவர் முப்பது ராத்தல் உணவுப் பொருள்களை உண்டதாகக் கூறப்படுகிறது. இவருடைய பசி

குஜராத்தின் முகம்மது பீகாராவின் பசிக்கு ஒப்பாகும். அவர் நான்கு பெண்மணிகளை மணந்து கொண்டார். அவ்வாறிருந்தும் பல மனைவியரைப் பெற்றவர்கள் அடையும் துன்பங்கள் அவருக்கு ஏற்படவில்லையாம். அந்நான்கு மனைவியருள் ஒருத்தி இந்துப் பெண், ஒருத்தி காச்மீர நாட்டவள், மூன்றுமவள் பாரசீகப் பெண்.

## பகுதி 9

### அக்பரின் இறுதிக்காலம்

அக்பர் வாழ்க்கையின் இறுதி ஐந்து ஆண்டுகளில் அவர் அதற்குமுன் துய்த்துவந்த நல்வாய்ப்புக்கள் மறைந்துவிட்டன. அவர் தவமிருந்து பெற்ற தனயன், தந்தையின் பகைவனுனன். அக்பர், "உடலிரண்டு உயிர் ஒன்று" என்ற முறையில் எந்த நண்பருடன் பழகிவந்தாரோ அவரை அமரருலகுக்கு அனுப்பியவனும் அத்தவப் புதல்வனேயாவன். தந்தை நீண்ட காலம் வாழ்கிறாரே என்று துயருற்றான் அவ்வருமருந்தன்ன மகன்! அக்பர் 1591'ம் ஆண்டிலேயே தமக்குச் சலீம் நஞ்சைக் கலந்து உணவு கொடுத்துவிட்டதாக ஐயுற்றார். அவருடைய மற்ற இரண்டு குமாரர்களில் மூராட், 1599'ம் ஆண்டிலும் தானியல் 1604'ம் ஆண்டிலும், அளவு கடந்த கட்குடி காரணமாக இறந்தனர். ஏறக்குறைய 1604'ல் அக்பரின் தாயார் தமது எழுபத்து ஏழாம் ஆண்டில் உயிர் நீத்தார். அவரிறந்தபின் அவருடைய மகனுக்கும் பெயரனுக்குமிடையே இருந்த பகை மிகவும் வலிமையுற்றது.

1601'ல் அக்பர், சலீமை எதிர்ப்பதற்குப் போர்ச்சுகீசியரின் உதவியை நாடி கோவாவுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பினர். ஆனல் அது பயன்தரவில்லை. போர்ச்சுக்கீசிய குருமாரை மகிழ்விக்கும்பொருட்டுப் பேரரசர், விருப்பமுடைய மக்களை கிறித்தவராக மாற்ற அவர்களுக்கு அதிகாரமளித்தார். ஆனல் சலீம், 1602'ல் போர்ச்சுக்கீசியரின் உதவியைத் தாம் பெறுவதற்காக, அப்பாதிரிமார்களுடன் நட்பு உறவு கொண்டார். சலீமை அக்பர் கைப்பற்றித் தண்டனை அளித்தபின்

தக்கணம், மாளவம், குஜராத் ஆகிய பகுதிகளின் அரசப் பிரதிநிதியாக அவரை அமர்த்தினர். தந்தை—மகன் போராட்டம் முடிவுற்றது. சலீமை அகற்றிவிட்டு அவர் மகன் குஸ்ருவைப் பேரரசனாக முடிசூட்ட வேண்டுமென்று இராசா மான்சிங்கூறிய அறிவுரையை அக்பர் ஏற்றுக்கொள்ளவில்லை. *1605*'ல் அக்பர் இறக்கும்பொழுது எம்மதத்தினர்க்குரிய துதிப்பாடலும் ஓதப்படவில்லை.[1] பகட்டார வாரமின்றி அவருடைய உடல் புதைக்கப்பெற்றது. *1691*'ல் ஜாட் கலகக்காரர் அவர் எலும்புகளைத் தோண்டியெடுத்துத் தீயிலிட்டனர்.

## அதிகாரம் 10

# முகலாயப்பேரரசு (1526—1605)

(தொடர்ச்சி)

## பகுதி I

### முகலாயர் ஆட்சி முறை

**தன்மை.** அக்பர், நாடுகளை வென்று கைக்கொண்ட வரலாற்றைக் கூறுகையில் அப்பேரரசர் அமைத்த ஆட்சி முறையைப்பற்றியும் சில குறிப்புக்களைக் கண்டோம். அவர் ஆட்சிமுறை அரசியலறிவுடன் தீட்டப்பட்ட திட்டப்படி அமைந்திருந்தது. அது பரந்தநோக்க அடிப்படையிலமைந்த தேசீய ஆட்சி எனலாம். மக்களால் விரும்பப்படும் இக்காலப் பண்புகள் பல அதிலுண்டு. ஆதலால் வரலாற்றுமுறையில் மட்டுமின்றிப் பிறவகைகளிலும் அதன் சிறப்பு போற்றற்குரியது. இக்கால அரசியல் மேதைகள் தமது அறிவுத்திறத்தாலுணரக் கூடிய சில பண்புகள் அவ்வாட்சிமுறையிலுண்டு. ஆயினும் அது தனி ஒருவரின் வல்லாட்சி என்பதும் குறிப்பிடத்தக்கது. மாநிலங்கள், மத்திய அரசியலாரால் போதுமான அளவுக்குக் கட்டுப்படுத்தபடவில்லை. அவ்வாட்சிமுறை, "இந்திய நிலைக் குத்தக்கபடி மாற்றியமைக்கப்பட்ட பாரசீக-அரேபிய முறை"

---

1. Smith, Akbar, p. 323.

என்று சிறப்பிக்கப்படுகிறது.[1] துறைக்கள அமைப்பு, (Departmental organisation) மத்திய அரசியலைச் சேர்ந்த திவானுக்குக் கட்டுப்பட்ட நிலையில் மாநிலத் திவான்களை மாநில ஆட்சித்தலைவருக்கு ஒப்பான நிலையிலமர்த்தியிருந்தமை முதலிய பண்புகள் அயல்நாட்டுத் தொடர்பால் எழுந்த சிலவாம். ஆட்சி முறையில் "குறுகிய, சிறப்பாகப் பொருள் தொடர்பான, பெரும்பாலும் இழிந்த நோக்கம் புலப்பட்டது.[2] ஆனால் உள்நாட்டுக்காவல், வரி வாங்குதல் ஆகியவற்றில் மட்டுமே அரசியலார் கருத்துச்செலுத்தினரென்று கருதிவிடக் கூடாது. பண்பாட்டுடன் கூடிய அரசுக்குரிய சிறப்பியல்புகள் ஆட்சி முறையிலிருந்தன. எடுத்துக்காட்டாக வாணிகம், தொழில், காசுமுறை, சாலைகள், மருத்துவநிலையங்கள், கலைப் பண்புகள், கல்வி முதலியவை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை.[3] பரந்த பேரரசில் அமைதியையும், ஒழுங்கையும் சிறந்த முறையில் ஏற்படுத்துவதென்பது எளிய செயலன்று அருஞ்செயல்களாற்றப்பட்டு வரும் இக்காலத்திய நிலையை பொது அளவுகோலாகக்கொண்டு முகலாயர் ஆட்சிமுறையை நாம் மதிப்பிடுவது தவறுகும். பதினாறு, பதினேழாம் நூற்றுண்டுகளில் ஐரோப்பா இருந்த நிலையைத்தவிர வேறெதையும் நாம் ஒப்புமைக்கு எடுத்துக் கொள்ளலாகாது. அரசாங்க அலுவல்பற்றிய முடங்கல் போக்குவரவு மிகுதியாக இருந்தமை, முகலாயர்அரசின் மற்றொரு பண்பாகும். ஆதலால் "எழுது தாளால் (Paper) ஆகும் அரசியல்" என்றும் அது சிறப்பிக்கப் படுகிறது. அலுவல்களில் அமர்த்தப்பட்டிருந்த பெருஞ்செல்வர், இறந்தபின் அவர்தம் உடமைகள் கைப்பற்றப்படும் வழக்கம் சம உடமை முறையை ஒட்டியது. ஆனால் அது அச் செல்வர்களை அளவுமீறிச் செலவு செய்யத் தூண்டியது. இறுதியாக, ஆட்சிமுறை, படைத்துறைச் சார்பானதென்று கூறத்தக்கது. ஏனெனின், பொது அலுவல்துறையும், படைத் துறையும் பேரரசில் இணைக்கப்பட்டிருந்தன. பெரும்பாலும் போர்வீரரே சிறந்த பதவிகளைப் பெற்றிருந்தனர். மான்சப் தார்களில் (பதவி அல்லது அலுவலைப்பெற்றோர்) 33-தர

1. & 2. Sarkar, Mughal Administration (1924), pp. 6 & 5.
3. Beni prasad, History of Jehangir (1922), pp. 92—94.

வரிசைகளிருந்தன. 10-முதல் 10,000-வரை அவ்வரிசை விரியும். அ தா வ து, பலதரப்பட்ட அலுவலாளர், மான் சப்தார்கள் என்னும் பொதுப்பெயரால் அழைக்கப்பெற்றனர். ஒவ்வொரு அலுவலாளரும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள குதிரை வீரர்களுக்குத் தலைவராக இருந்தார். 2000-குதிரை வீரர்களுக்குத் தலைவர், 500-குதிரை வீரர்களுக்கு தலைவர் என்று இத்தகைய பலதரப்பட்ட த கு தி க ளு ட ன் கூடிய அலுவலாளர் இருந்தனர். மிகக் கீழ்த்தரமான மான்சப்தார் 10-குதிரை வீரர்களுக்குத் த லை வ ரா க இருந்தார். ஒவ்வொரு மான்சாப்தாரும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை யுள்ள குதிரை வீரர்களுக்குத் தலைவர் என்று கருதப்பட்ட போதிலும் அவரிடமிருந்த குதிரை வீரர்கள் அந்த எண்ணிக் கைக்குக் குறைவாகவே இருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது. "500 குதிரை வீரர்களுக்குத் தலைவனை ஒரு மான்சப்தார், மாதமொன்றுக்குக் குறைந்தது 18,000 ரூபாய் பெறமுடியும். .........அத்தொகை 1914'ம் ஆண்டுக்கு முற்பட்ட காலத் தில், பண்டங்கள் வாங்கும் மதிப்பைப் பொறுத்தவரை ஒரு லட்ச ரூபாய்க்குச் சமமாகும்... பேரரசுப் பணித்துறையில் உயர்ந்த பதவிகளைப்பெற்றிருந்தோர், இக்கால இந்தியாவிலோ அல்லது உலகின் எப்பகுதியிலோ அளிக்கப்பட்டுவந்த ஊதி யத்தைவிட மிகத்தாராளமான அளவுக்கே, வருவாய் பெற்று வந்தனர்."[1] ஆதலால், மேற்கு ஆசியாவிலிருந்த து ணி வு வாய்ந்த வீரர்களை, இந்தியப் பணித்துறைக்களங்கள் கவர்ந் தன. அய்னி அக்பரியைப் படித்தால், அந்நூல் ஆக்கப்பெற்ற ஆண்டில் (ஏறத்தாழ 1595) மான்சப்தார்களில் நூற்றுக்குச் சுமார் எழுபதுபேர் அயலார் என்பதும் ஏறத்தாழ நூற்றுக் குப் பதினைந்துபேர் இந்திய முகம்மதியர் என்றும், எஞ்சி யோர் இந்துக்கள் என்றும் அவ்வெஞ்சியவரில் பெரும்பான்மை யினர் இராசபுத்திரரென்றும், அந்தணர் இருவர் மட்டுமே இருந்தனரென்பதும் (பீர்பாலும் அவர்மகனும்) பெறப்படும்.[2] 10000, 8000 என்ற பெரும் எண்ணிக்கையுள்ள குதிரை வீரர்களுக்குத்தலைவரான மான்சப்தார் பதவிகள் அரசகுலத்

1. W. H. Moreland, India at the Death of Akbar (1920) P. 68.
2. Ibid, pp. 69–70.

தனியுரிமையாயிருந்தன. தோடர்மால், மான்சிங் போன்ற இருவர் அல்லது மூவர் மட்டுமே 7000 குதிரை வீரர்களுக்குத் தலைவராயிருந்தனர். சாதாரணமாக மிக உயர்ந்த மான் சப்தார், 5000 குதிரை வீரரின் தலைவராகவே இருப்பார். 500 முதல் 2500 வரை உள்ள குதிரை வீரருக்குத் தலைவரான மான்சப்தார்கள் உமாரா (அமீர் என்பதின் பன்மை) அல்லது ஓம்ரா (பிரபு அல்லது செல்வர்) என்னும் பட்டம் பெற்றிருந்தனர். 3000 அல்லது அதற்குமேற்பட்ட வீரருக்குத்தலைவர், மாபெருஞ்செல்வர் எனப்பட்டார். (அமீரி ஆசம்) அமீர் உல் உமாரா, கான்கானன் போன்ற சில தனிச்சிறப்புப்பட்டங்களும் வழக்கிலிருந்தன.

மத்திய அரசு. மத்திய அரசாங்கத்தில் முதலமைச்சர், அல்லது வக்கீல், பொருளமைச்சர் அல்லது விசீர் (அல்லது திவான்), பக்ஷி அல்லது இராணுவ அதிகாரி, மதத்துறை அமைச்சர், (அல்லது சாதர்), தலைமைக்காஸி அல்லது தலைமை நீதிபதி, பேரரசரின் அலுவலாளர், உவளக அலுவலாளர் முதலியோர் அதிகாரம் வகித்தனர். தொழிற்சாலைகளையும் இடங்குகளையும் மேற்பார்வை செய்து வந்த மீர்சாமன், அக்பர் இறந்தபிறகு சிறப்புவாய்ந்த அலுவலாளராயினர். அக்பர், முதலமைச்சருக்குக் குறைவான அதிகாரங்களே அளித்திருந்தார். 1582'ல் மத்திய அரசாங்க மதத்துறை அமைச்சரைநீக்கிவிட்டு, அதற்குப்பதிலாக ஆறு மாகாண மதத்துறை அமைச்சர்களை அமர்த்தினர். இராணுவ அதிகாரங்களையும் பொது அதிகாரங்களையும் உண்மையில் பக்ஷியும் திவானுமே பெற்றிருந்தனர். அமைச்சுத்துறை அலுவலாளருக்குப் பணமாக ஊதியம் கொடுக்கப்படவில்லை. 2000 குதிரை வீரர்கொண்ட படைக்குத் தலைவர் திவானாக முடியும். அவரே அமைச்சர்களுள் உயர்ந்தவர். 5000 குதிரை வீரர் கொண்ட படைக்குத் தலைவர்கள் குறைந்த அதிகாரங்களைக் கொண்ட பிற அமைச்சர்களாக அமர்த்தப்படலாம். ஆகவே, கீழ்த்தரப் பதவியாளர் பெற்றுவந்த ஊதியத்தைக் காட்டிலும் குறைவான ஊதியத்தை உயர்ந்த பதவியிலிருப்பவர் பெற்றுவந்த ஒரு விந்தையை அக்பர் அரசியலில் காண்கிறோம். மான்சப்தார் ஒவ்வொரு

வரும் தமக்குக் கொடுக்கப்பட்ட ஜாகீரில் வரி வாங்கி அதைத் தாமே பயன் படுத்திக்கொள்ளும் உரிமை பெற்றிருந்தார். "தலைமையான அமைச்சர்களை, பேரரசைத் தாங்கும் தூண்களுக்கு ஒப்பிடலாம். ஆனால் தாஜ்மஹால்தூண்களுக்கு ஒப்புமை கூறுவது தான் பொருந்தும். ஏனெனில் அத்தூண்கள் அக்கட்டடத்தை அணிசெய்து அதற்குப் போற்றத்தக்க மாட்சிமையை அளிக்கின்றன. ஆனால் அக்கட்டட அமைப்பை அவை தாங்கி நிற்கவில்லை."[1] அக்பர் சில காலங்களில் ஆட்சிமுறைத் தொடர்பு இல்லாத அரசவையாரையும் பணி புரியுமாறு ஆணையிடுவதுண்டு. பேரரசருக்கு ஆட்சித்தொடர்பான அறிவுரை கூறுவதற்கு அமைச்சர்களும், பிற அலுவலாளரும், பெருஞ்செல்வரு மடங்கிய மஜ்லிஸ் என்னும் சபையொன்று இருந்தது. அச்சபை, ஆட்சிமுறைச் செய்திகள், இராணுவ அலுவல்கள், பொதுச்செய்திகள் ஆகியவற்றை ஆய்ந்து முடிவுசெய்ய மூன்று குழுஉக்களாகச் செயலாற்றியது. பொதுப் பேரவை கூடிய காலங்களில் அக்பர், அரசியல் முன்னேற்றத்திற்கேற்ற கருத்துக்களை அறிவிக்குமாறு அவையினரை அழைப்பது வழக்கம். மன்றத்தில் ஒரு சமயம், சலீம் இளவரசன், வயது வராதோர் திருமணத்தைத் தடைசெய்ய வேண்டு மெனவும், ராசாபீர்பால், துன்புற்றோரின் நிலையை ஆய்ந்து ஆவன செய்ய வேண்டுமென்றும், அபுல்பஸல், நகரங்களில் குடிக்கணக்கு எடுக்கவேண்டு மென்றும் தீயோரின் நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்க வேண்டு மெனவும் கருத்துக்கள் அறிவித்ததாகக் குறிப்புக்கள் உள. அச்சபையில் அக்பர் காலத்தில் 20-உறுப்பினர்கள் இருந்ததாக ஒரு குறிப்பு அறிவிக்கிறது. சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அர்த்தசாத்திரம் வரையறுக்கவில்லை என்றும், சூழ்நிலைக்குத் தக்கவாறு உறுப்பினரின் எண்ணிக்கை அமைய வேண்டுமென்ற அந்நூலினின்று பெறப்படுவதும் ஈண்டு சிந்திக்கத் தக்கன. அவ்வாலோசனை சபையின் முடிவுப்படி பேரரசர் ஒழுகவேண்டுமென்பதில்லை. "முகலாய அரசியல் ஒரு தனி ஆடவனின் ஆட்சியேயாகும். பேரரசர் இயங்காமலிருக்கும்

---

1. Ibn Hasan, The Central Structure of the Mughal Empire (1936), p. 351.

பொழுதுமட்டும் அமைச்சர் செயலாற்றுவர். அவர்கள், அரசர் விருப்பத்தை ஆட்சிமுறையில், விரிவாக நடத்திவைக்கும் செயலாளர்களாகத் தானிருந்தனர்.''[1]

மகாண ஆட்சி முறை. 1601'ல் மூன்று தக்கண மாகணங்கள் இணைக்கப்பட்டபின், முகலாயப் பேரரசில் 15-மாகாணங்கள் அடங்கியிருந்ததைக் காண்கிறோம். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இருந்த வடஇந்திய மாகாணம் ஒன்றின் ஏறத்தாழப்பாதி அளவில்தான் அக்பர் காலத்தில் மாகாணம் இருந்தது.[2] ஒவ்வொரு மாகாணத்தின் முழு நிர்வாகமும் சுபேதார் என்ற அரசப் பிரதிநிதியின் கீழிருந்தது. அவர் பேரரசரால் அமர்த்தப்பட்டு அவரிடமிருந்து நேராக ஆணைகளைப்பெற்று மாகாண ஆட்சியை நடத்தினர். இரண்டு, மூன்று ஆண்டுகட்கு அவர், இராணுவச் செய்திகளையும் பொது அலுவல்களையும் நிருவகிப்பார். "ஒவ்வொரு சுபேதாரும் தமது சுபாவில் பேரரசனைப்போல அதிகாரம் செலுத்த விரும்பினர்.[3] முறை வழங்கலில் — குறிப்பாகச் சீரியல் வழக்குகளில் — சுபேதாருக்கு காஸி உதவியளித்தார். மாகாணத்திலுள்ள திவான், மத்திய அரசியலைச் சேர்ந்த திவானால் அமர்த்தப்பெற்று அவருக்குக் கட்டுப்பட்டிருந்தார். பல்வேறு வகையான மாகாணச் செய்திகளைப்பற்றியும் மத்திய அரசியலாருக்கு அறிவிக்க ஒரு அலுவலாளர் இருந்தார்.[4]

தல ஆட்சி முறை. மாகாணம் ஒவ்வொன்றும் பல சர்க்கார்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சர்க்காருக்குத்தலைமை அதிகாரி பவுஜ்தார். கலகங்கள் ஏற்படாமல் அடக்குவதும், வரிகள் வாங்குவதும், பெரியசாலைகளைக் காப்பதும் அவரது கடமைகள். மாகாணத்தலைவரின்கீழ் இவர் வேலைபார்த்தாலும், இவரை அமர்த்துவதும், மாற்றுவதும் மத்திய அரசியலாரின் உரிமைகள். சர்க்கார், பல பர்காணங்களாகப் பிரிக்கப்பட்

1. Sarkar, Op. cit. pp. 17—18.
2. Beniprasad, op. cit., p. 103.
3. Sarkar, op. cit., p. 13.
4. Beniprasad, op. cit., p. 108.

டிருந்தது. பர்காணுவின் தலைவன் சௌதரி. பெரிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் "கொத்தவால்" என்ற நகரத்தலைவர் அமர்த்தப்பட்டிருந்தார். பண்டைய இந்தியாவிலிருந்த நகரக னுக்கு அவரை ஒப்பிடலாம். இக்காலத்தில் நகரசபைகள் செய்யும் வேலையையும், காவல் கண்காணிப்பார் (போலீசு சூப்பிரண்டு) ஆற்றும் வேலையையும் ஒருங்கே, அக்பர்காலத் துக் கொத்தவால் செய்து வந்தார். அசோகர் காலத்து முறைப்படி, அக்பரின் தனி ஆணைகளை நிறைவேற்றும் கடமையும் அவருக்கிருந்தது. "கொத்தவால்கள், ஒவ்வொரு வரைப்பற்றிய செய்தியையும் அறிந்திருக்கவேண்டுமென எதிர் பார்க்கப்பட்டனர்...... " ஊக்கமுள்ள கொத்தவால் ஓய்வின்றி உழைக்க முடியும்."[1] குற்றவாளிகளைத் தன் விருப்பம்போல் தண்டிக்க அவருக்கு அதிகாரமிருந்தது. கழுவிலேற்றுதல், தலையைக்கொய்தல், யானைகளைவிட்டு மிதிக்கச்செய்தல் முதலிய பல வகைத்தண்டனைகள், குற்றங்கட்குத்தக்கவாறு அவரால் விதிக்கப்பட்டன. ஒரு சமயம், இளவரசன் சலீம் குற்றவாளி யென்று ஐயுறப்பட்ட ஒருவனுடைய தோலை உரிக்குமாறு ஆணையிட்டார். மங்கோலியரிடம் காணப்பட்ட அத்தகைய கொடிய பழக்கங்களை அக்பர் வெறுத்தார். பாபர்கூட ஒரு குற்றவாளியின் தோலை உரிக்கச்செய்ததாக அறிகிறோம்.

## பகுதி 2

### நிலவரித்திட்டம்

அக்பருடைய சிறந்த நிலவரித்திட்டம் முழுவளர்ச்சியடைய உதவியவர்களுள் மிகவும் முக்கியமானவர் இராசாதோடர் மால். அவ்வமைச்சருடைய திறமையைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொண்ட பெருமை அக்பரைச்சாரும். நாட்டில் நிலவரித்திட்டம் பற்றித்தொடர்பான பல செயல் தேர்வுகள் நடந்தன. முடிவாகத்தோடர்மால், குஜராத்தில், 1574—'75'ல் கையாண்ட நிலவரி முறையுடன், அவர் 1579—80'ல் நிறைவேற்றிய பொருளமைப்புத் திட்டம் இணைக்கப்பட்டது.

1. Smith, op. cit., pp. 382—3.

அம்முறையின்படி நிலங்கள் ஒழுங்கான கருவிகளால் அளக்கப்பட்டன. இரும்பு வளையங்களால் இணைக்கப்பட்ட மூங்கில் கோல்கள், அளக்குங் கருவியாகப் பயன்படுத்தப்பெற்றன. அளக்கப்பட்ட நிலங்கள், மூன்று வகையாகப்பிரிக்கப்பட்டன. அப்பாகுபாடு, மண்ணின் தரத்தைப்பொறுத்ததன்று; பயிரிடப்படும் முறையைப்பொறுத்தது. குடியானவர்கள் தாம் பயிரிட்ட நிலங்களின் பரப்புக்கும், பயிரின் தன்மைக்கும் ஏற்றவாறு வரிப்பொருள் செலுத்த வேண்டியிருந்தது. விளைவில் மூன்றிலொருபங்கை அரசியலார் வரியாகப்பெற்றனர். பயிர் வளரத் தொடங்கியதும் பயிரிட்ட நிலங்களின் அளவையும், பயிர்களின் வகைகளையும் அரசியலார் குறித்துக்கொள்வர். யாருடைய நிலப்பகுதியிலேனும் சரியான விளைவு இல்லாதிருந்தால் அதற்கேற்றவாறு சலுகைகள் அளிக்கப்பெற்றன. குடியானவருடன் அரசியலார் நேர்த்தொடர்பு கொண்டதால் அக்பரின் நிலவரிமுறை, அரசுக்குடிபற்றிய (ரயத்துவாரி) நிலவரிமுறை என்று கருதப்படலாம். அரசியலாருக்குரிய பங்கை, கூலங்களாகச்செலுத்த விரும்பாவிட்டால், பணமாகச் செலுத்தலாம். ஆனால் கடந்த பத்து ஆண்டுகளில் நிலவிய விலைகளின் சராசரித் தொகையைக் கணக்கிட்டு அந்த அடிப்படையில் அவ்வரித்தொகை தீர்மானிக்கப்பட்டது. கரும்பு, கசகசா முதலிய சில பொருள்களைப் பொறுத்தவரை, வரியைப் பணமாகத்தான் செலுத்த வேண்டும். ஏழைக் குடியானவர்களுக்கு அரசியலார் முன்பணம் கொடுத்து, அதைச்சிறிது சிறிதாக வசூலிக்கும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. துன்பந் தருவனவாக இருந்த பல்வகை வரிகளை அக்பர் நீக்கினர். வரிவாங்கும் அதிகாரிகள் குடிகளைத்துன்புறுத்தாதபடி, பல கட்டுப்பாடுகளைப் பெற்றிருந்தனர். ஒவ்வொருவருக்குரிய நிலம் எவ்வளவு என்பதையும் அவரவர் அரசியலாருக்குச்செலுத்த வேண்டிய பாக்கி எவ்வளவு என்பதையும் தெரிவிக்கக் கணக்குகள் இருந்தன. "வரிகள் நடுநிலை நோக்குடன் விதிக்கப்பெற்றன. இக்காலத்திய நிலவரித்திட்ட அலுவலாளர் வைத்திருக்கும் குறிப்புக்களுக்கு அக்பர்காலத்தில் பாரசீகமொழியில் குறிக்கப்பெற்ற நிலவரிக்கணக்குகள் பெரும்பாலும் ஒத்துள்ளன ..... அரசியற் கருவூல அமைப்பு

முறையிலும் அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் ஒற்றுமை உளது. ......சுருங்கக்கூறின் அக்காலமுறை வியந்து பாராட்டற்குரியது. ஆனால் சிறந்த கொள்கைகள் நிலவியபோதிலும் எத்துணை அளவு அவை செயல் முறையில் நலம் பயக்கும் முறையில் நிறைவேற்றப்பெற்றன என்பது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு செய்தியாகும். அக்பர் காலத்தில் மேற்பார்வையிடுதல் கடுமையான முறையிலில்லை என்பது குறிப்பிடத்தக்கது."[1] அக்பரின் நிலவரிக் கொள்கைகள் போற்றற்குரியன. ஆனால் அவரே நேர்முறையில் அக்கொள்கைகளை நிறைவேற்றுவதென்பது இயலாத செயலாயிருந்தது. மூன்றிலொருபங்கு என்ற வரிவிகிதம், பண்டைய இந்திய முறையைவிட இரண்டுபங்கு அதிகமென்றும் நாலில் ஒருபங்கு என்ற ஷெர்ஷாவின் திட்டத்தைவிட மிகுதியானது என்றும் கூறப்படுகிறது. (ஷெர்ஷா, மூல்தான் போன்ற சில சிறப்பான இடங்களில் மட்டுமே விளைவில் நான்கில் ஒரு பங்கை நிலவரியாகப் பெற்றாரென்றும் மற்ற இடங்களில் மூன்றிலொரு பங்கு விகிதந்தான் நிலவியதென்றும் அறிஞர் மோர்லண்டு கருதுகிறார்.) பெயரளவுக்கு அக்பரின் வரிவிகிதம், மிகுதியாகத்தோன்றினும், உண்மையில் உழவருக்கு வேறு பல நலங்கள் அமைந்திருந்தன. ஜஸியாவும் வேறுபல வரிகளும் எடுபட்டுவிட்டன. நிலவரி மதிப்பு, வரவுசெலவு திட்டமதிப்பைக் காட்டுகிறதேயன்றி உண்மையில் சேமிக்கப்பட்ட தொகையைக் குறிப்பிடவில்லை என்பது சிலருடைய கருத்தாகும். எவ்வாறிருப்பினும், வரிவிதிப்புமுறை சிக்கலற்றதாக்கப்பட்டது. அரசியலார் ஆதாரமாகக் கொள்ளும் வகையில் வருவாய் மிகுதியாகப்பெற்ற தனிப்பட்ட மக்களே, வரிச்சுமையை ஏற்றனர். அக்பர் ஆட்சிக்கால முடிவில் நிலவரி மூலம் அரசியலார் 20,000,000 ஆங்கிலநாட்டுப் பொற்காசுகள் (பவுன்கள்) பெற்றதாக, அறிஞர் V. A. ஸ்மித் மதிப்பிடுகிறார்.[2] ஸப்தி (Zabti) முறை என்று சொல்லப்படும் அக்பர்கால நிலவரிமுறை, லாகூர், மூல்தான் (தென் சிந்து நீங்கலாக), தில்லி, ஆச்மீரம், ஆமதாபாத், மாளவம்,

1. Smith, op. cit. p. 376—8.
2. Do p. 379

ஆக்ரா, அயோத்தி, அலகாபாத், பீஹார் ஆகிய பத்து மாகாணங்களில் கையாளப்பட்டது. காபூல், தென்சிந்து, வங்காளம், தக்கண சுபாக்கள் ஆகிய பகுதிகளில் உள்நாட்டு நிலைமை தடைசெய்த காரணத்தால் அக்பரின் புதிய முறை அமைக்கப்படவில்லை.

## பகுதி 3

### மான்சப்தாரி படை

படை அமைப்பைப் பொறுத்த வரை, அசோகன், அலாவுதீன் கில்ஜி, ஷெர்ஷா முதலியவர்கள் கையாண்ட முறைகளை அக்பர் பின்பற்றவில்லை. ஏறத்தாழ 25,000 வீரர்களடங்கிய படை அக்பர் காலத்தில் நிலையான இராணுவமாக இருந்தது. அக்பர் தம்மிடம் அன்புகொண்ட சுமார் இருபது தலைவர்களையும் மான்சப்தார்களையுமே, படை வலிமைக்காக நம்பியிருந்தார். மான்சப்தார்களால் சேர்க்கப்பட்டு அவர்களால் கட்டுப்படுத்தப் பெற்ற பலவகைக் கூட்டத்தினர் முகலாயப் படையில் காணப்பெற்றனர். அத்தலைவர்களிடம் ஊதியம் பெற்ற அப்போர் வீரர்கள் அவர்களுக்கு அடங்கி ஒழுகினர். ஷெர்ஷாவின் படை, திறமை என்ற அடிப்படை நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருந்தது. அத்தன்மை அக்பருடைய படையிலில்லை. மான்சப்தார்கள் அரசியலாரை ஏமாற்றுவதும் உண்டு. எடுத்துக்காட்டாக ஆயிரம் குதிரை வீரர்களை வைத்திருக்க வேண்டிய மான்சப்தார் அதற்குக் குறைந்த எண்ணிக்கையுள்ள குதிரைகளை வைத்துக்கொண்டு ஆயிரம் குதிரைகளுக்குரிய ஜாகீரைப் பெற்றுக் கொள்வார். அரசியலார் சோதனை செய்ய முற்படுங் காலத்தில் வேறு ஒரு மான்சப்தாரிட மிருந்து வேண்டுமளவு குதிரைகளை அக்காலத்திற்கு வாங்கிக்கொண்டு கணக்கை ஒழுங்காகக் காட்டிவிடும் பழக்கமிருந்தது. இதனால் அரசியலாருக்குப் பொருளிழப்பு ஏற்பட்டது. அத்தீமையை ஒழிக்க அக்பர் பல முறைகளைக் கையாண்டார். ஆயினும் மான்சப்தார் முறையில் காணப்பட்ட தீமையை அறவே ஒழிக்க

அவரால் இயலவில்லை.[1] குதிரைகளுக்குச் சூட்டுக் குறியிடும் முறை உறுதியாக நிறைவேற்றப்பட்டது. ஜாகீர் முறையை இயன்ற அளவு அகற்றிவிட வேண்டுமென்பதே அக்பரின் நோக்கம், படைத் தலைவர்கள், தமது ஊதியத்தைப் பண மாகவே பெற்றனர். ஆயினும் பேரரசருக்கும் பெரும்பான்மை யான படை வீரருக்கும் நேரடியான தொடர்பு இல்லை. 17'ம் நூற்றாண்டில் அத்தீமையின் விளைவு நன்கு புலப்பட்டது. மாபத்கான், ஜஹாங்கீரைச் சிறைப்படுத்தியது, மான்சப்தாரி முறையின் விளைவேயாகும். அக்பர் படையில், குதிரை, காலாள், பீரங்கி, யானை முதலியன இடம்பெற்ற போதிலும் சிறப்பாக அப்படை சுமார் 250,000 குதிரை வீரர்களைக் கொண்ட ஒரு அமைப்பாகும். காலாட்படைக்குச் சிறப்பு அளிக்கப்படவில்லை. பீரங்கிப் படை மிக்க திறமை வாய்ந்த தாக இல்லை. யானைகள், போக்கு வரவுக்காகவும் காட்சிக் காகவும் பயன்படுத்தப் பெற்றன. படைகள் விரைவாகச் செல்வதால் ஏற்படக்கூடிய நன்மையை அனுபவத்தில் உணர்ந் திருந்தும், அக்பர், தம் படைகள் ஆடம்பரங்களுடன் புறப் பட்டுச் செல்வதைத் தடுக்கவில்லை. மேலும், படை உணவுத் துறையும் போக்கு வரவு ஏற்பாடும் அரசியலாரால் நிலையாக அமைக்கப்படவில்லை. பொதுவாகக் கூறுமிடத்து அக்பரின் படை அமைப்பு முறை சிறந்ததாயிருப் பினும் அதில் பல குறை பாடுகள் இருந்தன. எனினும் அக்பரின் வெற்றிக்கு அவரை எதிர்த்தவரின் படைகள் மிகவும் திறமையற்றிருந்தமை ஒரு சிறந்த காரணமாகும். மேலும் தம்மிடமுள்ளவற்றைக் கொண்டு— அவைகள் குறைபாடுகளுடையவாக இருப்பி னும்— காரியத்தைச் சாதித்துக்கொள்ளும் அரிய திறமை அக்பரிடமிருந்தது. "மராட்டியப் படையுடன் போரிடவேண்டிய வாய்ப்புக்கேடு அக்பருக்கு ஏற்பட்டிருப்பின், அவர், அவரு டைய கொள்பேரணைவிடச் சிறந்த முறையில் நிலைமையைச் சமாளித்திருப்பார் என்று கூறுவதற்கில்லை."[2]

---

1. W. Irvine, The Army of the Indian Moghuls (1903), P. 45

2. Smith, op. cit., P. 368.

# பகுதி 4

## அக்பரின் சமயக் கொள்கைகள் : தீன் இலாஹி

முதல்நிலை (1556—1579). *1579'ம்* ஆண்டுக்கு முன்னர் அக்பர் முகம்மதிய சமயத்தில் மிகுந்த பற்றுள்ளவராகத் தானிருந்தார். சுன்னிப் பிரிவைச் சேர்ந்த அவர் அல்லாவிடம் அன்புடன், சமயச் சடங்குகள் யாவற்றையும் செய்துகொண்டிருந்தார். பள்ளிவாசல்கள் கட்டினர்; துறவிகளை அணுகினர். மகப்பேறு வேண்டி அவர்தம் அருளை நாடினர். தம் மூன்று குமாரர்களில் இருவருக்கு பக்கிரிகளின் பெயர்களைச் சூட்டினர். மெக்காவுக்குப் புண்ணியச் செலவு செய்வோருக்கு உதவினர். தாமே அங்குச் செல்லும் விருப்பத்தையுங் கொண்டிருந்தார். சூபியக் கொள்கை (Sufism) யை அவர் பாராட்டிய போதிலும் செயல் முறையில் தம் வைதீகத் தன்மையைக் கைவிடவில்லை. அதுபோலவே, *1563—4'ம்* ஆண்டிலேயே இந்து சமயச் சார்பான கருத்துக்களை அவர் விரும்பிய போதிலும், வைதிக முஸ்லிமாகவே அவர் இருந்து வந்தார். *1575'ல்* சிக்ரியில் இபாதத்கானவை நிறுவி, சமயத்தொடர்பான தர்க்கங்கள் அங்கே நிகழுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். முதலில் இஸ்லாம் மதத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த அறிஞர்களை அங்கு வரவழைத்து அவர்களின் கருத்துக்களை வெளியிடச் செய்தார். ஷேய்க்குகள் (துறவி), சையதுக்கள் (நபிகளின் கால்வழியினர்) உலாமாக்கள் (மதச்சட்டங்களை ஆய்ந்து உணர்ந்த அறிஞர்கள்) அமீர்கள் (அவைக்களப் பிரபுக்கள்) முதலியோர் அவ்வாதங்களில் கலந்து கொண்டனர்: பேரரசர் தலைமை தாங்கினர். *1578'ம்* ஆண்டு முதல் இஸ்லாமல்லாத வேறு மதத்தினர் சொற்போரில் கலந்துகொள்ள அனுமதிக்கப் பெற்றனர். அவ்வாண்டில் அக்பர், ஜீலம் ஆற்றங்கரையில் தங்கியிருந்தபொழுது தம்மை மறந்த பரவச நிலையில் ஆண்டவனோடு ஒன்றிப் பேரானந்தம் அடைய இயலும் என்ற கொள்கையில் உறுதியான நம்பிக்கையைப் பெற்றார். அக்பரிடம் பகுத்தறிவுடன் இடையிடையே அறிவுக்கெட்டாத கருத்துக்கள் கலந்து பரிணமித்ததைக் காண்கிறோம். இரு வகுப்பினரான

முகம்மதிய சித்தாந்திகள் தமக்கிடையே ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டதைக் கண்ட பேரரசர், தம் கருத்தை, இந்துக்கள், சமணர், பார்சியர், கிறித்தவர் முதலிய மதத்தவர்பால் செலுத்தினர். பௌத்தர்களுடன் அவர் தொடர்பு கொள்ளவில்லை. சூரியனையும் தீயையும் வழிபடுவதில் அவருக்கு நாட்டமூட்டியவர்கள், சிறப்பாக பீர்பாலும் உவளக இந்து மாதர்களுமாவர். ஆனால் எந்தச் சமயமும் அக்பருக்கு மன அமைதியை அளிக்கவில்லை. ஆயினும் சிறந்த மதங்களின் சிறப்பான பண்புகளை அவர் பாராட்டினர். வழக்கத்திற்கு மாருக, 1579'ல் அவர் சிக்ரி பள்ளிவாசலில் சமயஉரை நிகழ்த்தினர். அப்பொழுது பெய்ஸி இயற்றிய சில பாக்களைக்கூறினர். அப்பாக்களின் முடிவுச்சொற்றொடர் "அல்லாகு அக்பர்" என்பதாகும். அதன் பொருள், "கடவுளே பெரியான்" அல்லது "அக்பரே கடவுள்" என்று அமையும்.

இரண்டாவது நிலை (1579—82): இஸ்லாமிய மதச் சட்ட வல்லுநர்களுக் கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள், சிக்கல்களை உண்டாக்கின. அந்நிலையில் 1579'ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மூன்றும் நாள் முஸ்லிம் மத குருமார் அக்பரிடம் ஒரு மகசர் அல்லது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தனர். அதன்படி, கருத்து ஒற்றுமை ஏற்படாத மதச் செய்திகளுக்கு ஒரு முடிவு கூறுமாறும், குரானுக்கு முரணுகாமலும் நாட்டு மக்களின் நலனுக்கு ஏற்றதாகவும் உள்ள இன்றியமையாத எத்தகைய ஆணையையும் தம்விருப்பப்படி பிறப்பிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறும் அக்பர் வேண்டிக்கொள்ளப் பட்டார். மன்னர் மதச் செய்திகளில் தவறிழைக்க மாட்டார் என்ற உறுதியான நம்பிக்கையுடன் வெளியிடப்பட்ட அச்சட்டம் (Infallibility Decree) அக்பரைப் பேரரசராகவும் தலைமை மதகுருவாகவும் உயர்த்தியது. அம்மகஜர் வேறு வகையாகவும் பொருள் கொள்ளப்படுகிறது. பாரசீகர், உதுமானியர் முதலியோரின் ஆதிக்கத்தினின்று முகலாய இராச்சியத்தைப் பிரித்துத் தனிப்படுத்தவும், ஷீயா, சுன்னி ஆகிய இரு இந்திய முஸ்லிம் பிரிவினருக்குந் தலைவராக அக்பரை உயர்நிலையி

லமர்த்தவும், அம்மகசர், அக்பரின் கட்டளைக் கிணங்க ஷேய்க் முபாரக்கால் உருவாக்கப்பட்டதென்று வேறு வகையாகப் பொருள்விளக்கங் கூறுவாருமுளர்.[1] பாரசீக ஷா, உமாயூனைத் தம் ஆணைக்குட்பட்ட ஒரு நவாப்பாகக் கருதினர். அக்பர் பட்டமேற்றதனையும் அவர் ஏற்றுக்கொண்டார். 1576'ம் ஆண்டுக்குப்பிறகு பாரசீகப் பேரரசின் சிறப்பு குன்றியதால் அக்பர், உரிமையுடன் ஆட்சிபுரியத் தொடங்கினர். அவர் இந்துக்களின் உதவியைப்பெற்று அயல் நாட்டுப் பிரபுக்களை அடக்கி நிலையான ஒரு இந்திய அரசை நிறுவ முற்பட்டார். செயல் முறையில் எவ்வாறிருந்தபோதிலும் அம்மகசரில் பேரரசருக்கு அதிகாரவரம்பு குறிப்பிடப்பட்டிருந்தது. அக்பர் பெற்ற புதிய அதிகாரம் பாரசீகம் கொண்டாடிய உரிமைக்கு ஊறுவிளைவித்தது. அக்பரின் அக்கொள்கையை 1853'ல் II'ம் பகதூர்ஷா (1837—'57) கைவிட்டு, பாரசீகமன்னரின் கீழாளாக இருக்க உடன்பட்டு அச்செய்தியை வெளிப்படுத்தாதிருந்தார். 1579'ம் ஆண்டு மகசர், அதிகார உரிமையையும் இஸ்லாமையும் பற்றியது. 1582'ல் அக்பர் வெளியிட்ட "தீன் இலாஹி", கொள்கை அல்லது சித்தாந்தத்தைப் பற்றியது. 1579'ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆச்மீரத்துக்கு அக்பர் யாத்திரை சென்றார். அடுத்த ஆண்டில், அவர், மெக்காவிலிருந்து கொணரப்பட்ட ஒரு நினைவுச் சின்னத்தை (நபிகள்நாயகத்தின் காலடி அடையாளங்களைக்கொண்ட கல்) தக்க சிறப்புக்களுடன் போற்றினர். 1580'ல் அவர் ஜெசுட் மதத்தூதுக் குழுவினரை (முதற்குழு) வரவேற்றார். பாதிரிமார் அவருக்கு அளித்த அச்சடிக்கப்பட்ட விவிலிய நூலொன்றை மிக்க அன்புடன் போற்றினர். 1582'ல் சமணத்துறவி ஒருவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர் கருத்துக்களில் ஆழ்ந்த சிந்தனை செலுத்தினர். அதே ஆண்டில் "தெய்வ மதம்" என்னும் புதிய கொள்கையை வெளியிட்டவுடன் வழிபாட்டு மண்டபத்தில் சொற்போர் முதலியன முடிவுற்றன.

**மூன்றும் நிலை: ஒரே கடவுளிடம் நம்பிக்கைக் கொள்கை (1582).** 1582'ம் ஆண்டின் முற்பகுதியில்

1. J. R. A. S. (1924), pp. 591—608.

அக்பர், அறிஞர்களும் பெருஞ் செல்வருமடங்கிய சபையைக் கூட்டி, அவர்களுடைய ஒப்புதல் பெற்று புதிய மதமொன்றை வெளியிட்டார். "தீன் இலாஹி" எனப்படும் ஒரே கடவுள் மதம், இஸ்லாம், இந்து சமயம், சமணம், ஸொராஸ்திரிய மதம், கிறித்தவம் முதலியவற்றின் சிற்சில பண்புகளைப் பெற்றது. கடவுள் ஒருவரே என்ற முகமதிய மதக்கொள்கை அதில் வற்புறுத்தப் பெற்றது. அத்தகைய ஒரே மதம், பேரரசை ஒற்றுமைப் படுத்த உதவுமென்று அக்பர் நம்பினர். அம்மதம், அரசியல் நிலையம் என்ற முறையில் அக்பரின் நம்பிக்கையை நிறைவேற்றியதாகச் சிலர் கருதுகின்றனர்.[1] ஆனல், பதௌனி, ஸ்மித் முதலிய அறிஞர்கள் அம்மதத்தைக் குறைபாடுகள் நிறைந்ததெனப் பழித்துரைப்பர். "அத்திட்டம் முழுவதும், இழக்கத்தக்க பகட்டின் விளைவு; வரம்பற்ற தனித் தன்னதிக்கத்தின் கொடிய வளர்ச்சி; ........ அது அக்பரின் அறிவீனத்தின் அடையாளமேயன்றி அறிவுக் கூர்மையின் அடையாளமன்று."[2] அக்பர் தம் மதத்தை வலுக்கட்டாய முறையில் பரப்பவில்லை. இராசாமான்சிங், 1587'ல் "இந்து சமயம் முகம்மதிய மதம் ஆகிய இரண்டைத் தவிர வேருெரு மதத்தை நான் அறியேன்" என்று கூறியுள்ளது சிந்திக்கத் தக்கது. அக்காலத்தில் அக்பர், வழிபாட்டு உரிமையை வழங்கினர் என்பது மிகவும் போற்றற் குரியது. "உலகில் மிகுந்த செல்வம் பெற்றிருந்த ஒரு பேரரசர், உலகில் மிகச் சிறந்த பேரரசைத் தம் கீழ் அமைத்திருந்த ஒரு வீரர், மக்களின் மதக் கோட்பாடுகளை மதித்து மத உரிமையைப் போற்றியது வியப்புக்குரியதே."[3] அக்பரின் மதம் சாதாரண மக்கள் உணர்ந்துகொள்ள முடியாத அளவுக்குக் கருத்தியலால் ஆனதாகவும் பண்பியல்பினதாகவுமிருந்தது. உண்மையை ஊடுருவி நாடாதவைதீகருக்கு அவர் மதம் விளங்காது. அக்பரின் ஆராய்ச்சி பலதிறப்பட்டது. உலோகத்தைப் பிரித்தெடுக்கும் தொழில் முதல் சமயம் வரை பலவற்றையும் அவர் ஆராய்ந்தார். எடுத்துக்காட்டாக ஒருவனுக்கு இயற்கையில். எவ்வாறு

1. E. B. Havell, History of Aryan Rule in India, (1918), P. 517.

2 & 3. Smith, Op. cit. PP. 222 & 148.

மொழியும் சமய உணர்ச்சியும் வளருகின்றன என்று ஆராயும் நோக்குடன், சில குழந்தைகளை சமூகத் தொடர்பின்றித் தனித்திருக்கச் செய்தார். அதன் விளைவாக அக்குழந்தைகள் ஊமையராய்ச் செவிடர்களாய் வளர்ந்தனர். ஒரு தீர்க்கதரிசியின் அறிவுக்கூர்மை அக்பரிட மிருந்ததென்பதை நாம் ஏற்றுக் கொள்ளாமலிருக்கலாம். ஆனால் அவருடைய உயர்ந்த குறிக்கோளையும், அவர் முயற்சியின் அடிப்படையிலமைந்த ஆர்வத்தையும் கண்மூடித் தனமாகக் கண்டிப்பது வைதீகப்பற்றையே காட்டும். அக்பர் அவர் முயற்சியில் தோல்வியுற்றுரென்பது உண்மை. அவருடைய மத அமைப்பு அவரிறக்கும்வரை நீடித்திருந்தபோதிலும் அதைப்பின்பற்றியோருள் ஒருசிலரைத்தவிர மற்றவர் உண்மையுடன் ஒழுகவில்லை. மகா அலெக்சாந்தர், மக்களிடை உடன்பிறந்தாருணர்ச்சியை வளர்த்தல் என்னும் குறிக்கோளைப் பெற்றிருந்தமைக்காக அவரைப் போற்றுகிரும். ஆன்மீக ஒற்றுமையை அமைக்கும் குறிக்கோளைக்கொண்ட அக்பரும் சிறப்புடன் பாராட்டத்தக்கவரே ஆம். யாரையும் அல்லது எதையும் அடியோடு அழிக்கும் ஆணைகளை அக்கணமே நிறைவேற்றும் வல்லரசர் வாழ்ந்த காலத்தில் அன்பின் அடிப்படையில் அமையும் உயர் குறிக்கோள் ஏற்புடையதன்று. பகுத்தறிவுடன் கூடிய உலகமதம் ஒன்றை அமைக்க முயலும் யாவரும் அக்பரின் செயல்தேர்வைப் புறக்கணிக்க முடியாது.

மதத்தைப்பொறுத்தவரை அக்பரின் உண்மை நிலை. ஜெசூட் பாதிரிமார் கூறும் சில குறிப்புக்களைக் கொண்டு, 1582'ம் ஆண்டுக்குப் பிறகு அக்பர் ஒரு முகம்மதியரல்லர் என்று அறிஞர் ஸ்மித் விளக்குகிருர். ஆனல் பாதிரிமாரின் குறிப்புக்களுக்கு சொல்லுக்குச் சொல் சரியான பொருள் கொள்ளவேண்டியது இன்றியமையாததன்று. அக்பரின் "இனிய மொழிகளில்", அவர், "முஸ்லிமல்லாத யான்" என்று குறிப்பிடுவதாகக் கூறப்படுகிறது. ஆனல் அது தவருன மொழிபெயர்ப்பென்றும் கருதப்படுகிறது. ஏனெனின் பிறிதோரிடத்தில் அவர் "நமது தீர்க்தரிசி" என்று நபிகள்

நாயகத்தைக் குறிப்பிடுகிருர். ஜஹாங்கீர், தமது வாழ்க்கைக் குறிப்புகளில் தம் தந்தை இறக்கும் வரை ஒரு முகம்மதிய ரென்றே கருதுவதாக அறியக்கிடக்கிறது. ஆனல் இது உறுதியான சான்ருக முடியாது. "அவர் உள்ளத்தில் முகம்மதிய உணர்ச்சியின் அறிகுறி சிறிதுமில்லே" என்று மட்டும் அக்பரைப்பற்றி பதௌனி குறிப்பிடுகிருர். இச் செய்தியைப்பற்றி கருத்தூன்றிக் கற்றறிந்த யூசுப்அலி கூறுவதாவது:- "அக்பர், முறைப்படி முகமதிய மதத்தைக்கைவிட்டு விடவில்லே. அவர் வெளியிட்ட "தீன் இலாஹி" முகம்மதிய சமயத்தின் ஒரு பிரிவு என்று கருதப்படவேண்டும். அக்பர் இறந்தபின் எட்டு அல்லது பத்து ஆண்டுகள் கழித்துப்பிறந்த ஒரு ஆசிரியர் அவ்வாறே கருதுகிருர். அக்பரின் புதிய அமைப்பு சிறப்பாக அரசியல் நோக்கத்தைப் பொறுத்தது. அரசியலாருக்கு அடங்கிய ஒரு மத நிலயத்தை நிறுவ அவர் விரும்பினுர். "அல்லாவைத்தவிரக் கடவுளில்லே; அக்பர் அவருடைய மதத்தைப் பரப்பும் தீர்க்கதரிசி." என்ற அவருடைய கொள்கை, முகமதியக் கொள்கைக்கு மாறுபட்டதன்று. இஸ்லாம் தோன்றி ஆயிரம் ஆண்டுகட்குப்பின் தனிப்பெருந் தலேவர் ஒருவர் அம்மதத்தினரிடை தோன்றி (மாதி) செயற் கருஞ் செயலாற்றுவார் என்ற முகம்மதியக் கொள்கைக்கு அக்பர் முரணுக நடக்கவில்லே. இஸ்லாமில் காணப்பட்ட எழுபத்திரண்டு பிரிவுகளேயும் இணேக்க முயன்ற அக்பர், முகம்மதியர் எதிர்பார்த்த தீர்க்கதரிசி, தாமே என்று கருதினுர். (அறிஞர் பதௌனிக்கும் "மாதி"யின் தோற்றத்தில் நம்பிக்கை இருந்தது.) அக்பர், முகம்மதியரல்லர் என்று கருதக்கூடாது. அக்காலத்தில் நிலவிய வைதீகத்தன்மை பயனற்றதென்று அவர் உணர்ந்தார். உள்ளுணர்ச்சியால் உந்தப்பட்டு ஒழுக்கக்கோட்பாடுகளே அவர் ஆராய்ந்தார். அரசியலேயும் மதத்தையும் திருத்தி அமைக்கும் கடமை அவருக்கிருந்தது. அவர் அவையிலிருந்த பகுத்தறிவுக்கோட்பாட்டினரும் தெய்வத்தன்மையை மறுத்து இறைமை ஏற்கும் கொள்கையினரும் (Deists) அவரை வானளாவப் புகழ்ந்து, அவர் மேற்கொண்ட செயலே ஊக்கத்துடன் நிறைவேற்றச் செய்தனர். அக்பரின் முன்னேற்றக் கருத்துக்கு ஒத்த

கோட்பாடுகளை ஆதரிப்போர் பிற சமயங்களிலும், இஸ்லாமிலும் காணப்பட்டனர் என்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். அக்பர் இஸ்லாமிய மதத்தைச் சீர்திருத்த விரும்பினரேயன்றி அதைவிட்டு வெளியேற விரும்பவில்லை ......... அவர் மத நிலையத்துடன் தாம் கொண்டிருந்த பழைய தொடர்பை அகற்றிக்கொண்டாரேயன்றி இஸ்லாமை மறுக்கவில்லை.[1] முகமதிய மதத்தைப் பொறுத்தவரை அவர் எந்நிலையிலிருந்த போதிலும், அக்பர் அவரறிந்த ஒவ்வொரு மதத்துக்குமுரியவர் என்று நாம் கருதலாம். ஆனல் எந்த மதத்தின் முழுக் கொள்கைகளையும் ஏற்றுக்கொள்ள அவருடைய பகுத்தறிவு இடங்கொடுக்கவில்லை. இஸ்லாம், இந்துமதம், சமணம், ஸொராஸ்திரிய மதம், கிறித்துவம் முதலியவற்றை அவர் ஓரளவு பாராட்டினர்; ஓரளவு ஏற்றுக்கொண்டார். ஆனல் அவற்றில் எதையும் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதலால் அவர் மதம் அக்காலத்தவருக்கு ஒரு புதிராக இருந்தது. ஒவ்வொரு சமயத்தவரும் தந்தம் மதத்தையே அக்பர் குறிப்பாக ஆதரிப்பதாக எண்ணினர். அக்பருக்கு ஞானவெளிப்பாட்டில் நம்பிக்கை இல்லை. கிறித்தவமத முத் தெய்வ உருவக் கொள்கையையும் மத குருமார் தொடர்பான வேள்வி முறையையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. கடவுளிடம் உறுதியான நம்பிக்கையும் உண்மை ஆன்மீக அறிவும் அவரிடமிருந்தன. "ஆன்மா உயர்ந்த பரம்பொருளிடம் கொண்ட இணைப்பை அறுக்க யார்தான் வல்லவர்?" என்ற அக்பரின் கூற்று நோக்கற்பாலது. கடவுள் நினைவுடன் அவர் இறந்தார். "கடவுள் ஒருவர் உண்டு. அவரைப்பற்றிய உண்மையை அவரே மக்களுக்கு உணர்த்துகிறார் என்ற கொள்கைதான் தீன் இலாஹியின் அடிப்படைத் தத்துவம். ......அதைப்பற்றிச் சரியானபடி விளக்கக்கூடிய தகுதியுள்ளவர்கள் தம்மைத் தவிர வேறு யாருமில்லை என்று அக்பர் கூறுகிறார்."[2]

---

1. Journal of the East India Association (1915), p. 301.
2. இந்திய வரலாற்றுச் சுருக்கம், (மோர்லண்டு, சாட்டர்ஜி, பெருமாள் முதலியார்) p. 283.

# பகுதி 5

## அக்பரின் அருளாட்சி

**அக்பரின் இணைவிணக்கக் கொள்கை. (Policy of toleration).** இந்துக்களை ஆட்சிபுரியவேண்டிய முறையைப் பற்றிய அக்பரின் கொள்கை முற்றிலும் அவராலேயே உருவாக்கப்பட்டது. தில்லி சுல்தானியரைப்போலன்றி அக்பர், இந்துஸ்தானம் இந்துக்களுடைய நாடு என்றே கருதினர். முகம்மதியரைவிட இந்துக்கள் மிகுதியான வரிகளைச்செலுத்த வேண்டுமென்ற கோட்பாடு அவருடைய மனச்சான்றுக்குப் பகையாக இருந்தது. 1562'ல் ஆம்பேர் நாட்டு இந்து இளவரசியை மணம் புரிந்துகொண்டதுடன் அவளுக்கும் தமக்கும் பிறந்த சலீமுக்குப் (ஜஹாங்கீர்) பிற்காலத்தில் அரசுரிமையையும் வழங்கினர். அவ்வாண்டில் மான்சிங்கைப் பணியிலமர்த்தியது முதல், ஆட்சி முறையில் இந்துப் பண்பைப் புகுத்தும் அக்பருடைய கொள்கை தொடங்கியது. அடுத்த ஆண்டில் புண்ணியச் செலவு செய்யும் (யாத்திரிகர்) இந்துக்களின் மீது விதிக்கப்பட்டிருந்த வரியும் 1564'ல் ஜஸியாவும் நீக்கப்பட்டன. அரசரின் இந்து மனைவியருடைய பட்டங்களும் வாழ்க்கை முறையும் மாற்றப்பட்டபோதிலும் அவர்கள் தமது மதத்தையே பின்பற்றும் உரிமையைப் பெற்றனர். வெல்லப்பட்ட தலைவர்கள், இஸ்லாமைப் பின்பற்றுமாறு வற்புறுத்தப்படவில்லை. ஆகவே அக்பர் இளமைப் பருவத்திலேயே, பிறர் தூண்டுதலின்றி, இந்துக் குடிகளை ஆதரிக்கும் துணிவு வாய்ந்த கொள்கையைத் தாமே அமைத்துக்கொண்டார். "காச்மீரத்தின் அக்பர்" எனப் புகழப்படும் செயினுலாபிதீன் (1420--'70), ஷெர்ஷா, ஹேமுவைத் தலைமை அமைச்சராகக் கொண்ட அடாலிசூர் முதலிய முகம்மதிய மன்னர்கள் அக்பருக்கு முன்னரே இந்துக்களை அன்புடன் ஆட்சிசெய்யும் கொள்கையைக் கடைப்பிடித்தனரெனினும் அக்பரின் அக்கொள்கை மிகுந்த சிறப்புப் பெற்றதாகும். அக்பரின் நீண்ட ஆட்சிக்காலமாகிய சுமார் ஐம்பது ஆண்டுகளில் அவரால் வலிமைப் படுத்தப்பெற்ற அக்கொள்கை அவரிறந்த பின்னும் தொடர்ந்து வந்தது.

பின்னர் அது ஷாஜஹானால் மட்டுப்படுத்தப்பெற்று அதன்பின் ஔரங்கசீப்பால் மாற்றப்பட்டது. எனினும் குரானை அடிப் படையாகக்கொண்ட சிகந்தர்லோடி காலத்திய ஆட்சிமுறையை முழுவதும் ஔரங்கசீப்பால்கூட மீண்டும் நிலைநாட்ட இயல வில்லை. அதற்கு அக்பரே சிறப்பான காரணமாவர். அக்பர் இந்துக்கள்பால் அன்பு செலுத்தியதற்கு அரசியற் காரணங்கள் இருந்தபோதிலும் அவர், இந்துக்களையும் அவர்தம் சமயம், பண்பாடு முதலியன வற்றையும் ஆதரித்தாற்றான் அற ஆட்சி அமைக்கமுடியும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார்.

உண்மையில் அருளாட்சிதானா?. "யாவரிடத்தும் அன்பு" என்னும் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு அமைந்த அருளாட்சியை அக்பர் உண்மையில் அமைக்கவில்லை என்பது அறிஞர் ஸ்மித்தின் கருத்தாகும். "அவர் தொடர்ச்சி யாக இயற்றிய பல சட்டங்கள் முகம்மதிய இனத்தவரின் உணர்ச்சிகட்கும் நம்பிக்கைகட்கும் மானக்கேடு செய்வதாக உள்ளன......... அம்மதத்தை அவர் துன்புறுத்தினார்."[1] குறைகூறும் அவ்வறிஞர் அக்பரின் பல ஆணைகள் முரண் பட்டவை என்று கூறுகிறார். அவர் குறிப்பிடும் ஆணைகள் வருமாறு: — குழந்தைகட்கு முகம்மதுவின் பெயரிட்டு அழைக் கக்கூடாது; புதிய பள்ளிவாசல்கள் கட்டுவதோ பழயன வற்றைப் பழுது பார்த்தலோ கூடாது; அராபிய மொழியைக் கற்பதும் அவ்வெழுத்துக்களைப் பயன்படுத்துவதும் குற்றங்கள்; மெக்காவுக்குப் புண்ணியச்செலவு செய்யக்கூடாது முதலியன யனவாம். மேலும் முகம்மதியர் விரும்பாத இந்துமத, சமண, ஸொராஸ்திரியமதப் பழக்க வழக்கங்கள் சிலவற்றை அவர் ஆதரித்தார். புலால், பூண்டு, வெங்காயம் முதலியவற்றை உட்கொள்ளல் பல நாட்களில் தடைசெய்யப் பெற்றது. பசுக் கொலை பெருங் குற்றமாகும். பேரரசனுக்குமுன் கீழேவிழுந்து வணங்குதல், தாடியை மழித்தல், அரச அவையில் சூரியனை யும் தீயையும் வணங்குதல் முதலியன வற்புறுத்தப்பெற்றன. இவையாவும் வைதீக முகம்மதியரின் மனத்தை மிகவும் துன்புறுத்தியிருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. ஆனால்

1. Smith, Oxford History, p. 360.

அக்பர் முகம்மதிய மதத்தைச் சீர்திருத்தமுற்பட்டாரா அழிக்க முயன்ருரா என்பதை நாம் சிந்திக்கவேண்டும். அவர், இஸ்லாமைச் சீர்திருத்த முயன்ருர் என்று யூசுப்அலி கூறுகிருர். அறிஞர் ஸ்மித்தும் மோன்செர்ரேட் பாதிரியாரும், அக்பர் அவருடைய முகம்மதியக் குடிகளால் கொல்லப்படாதிருந்தமையைப்பற்றி வியப்புறுகின்றனர். இந்துக்களையும், முஸ்லிம்களையும் ஒற்றுமைப் படுத்தும் நோக்கத்துடன், இந்துக்களின் சில பழக்கங்களை அவர் கண்டித்தார். இளமைப் பருவ மணவினை, மணமகன் மணமகள் இருவரின் உடன்பாடின்றி மணம் முடித்தல், கைம்பெண் மறுமணத்திற்குத் தடை செய்தல், உடன்கட்டை யேறுதல் முதலிய பழக்கங்கள், குற்றங்களாகும் என்று அக்பர் ஆணைகள் பிறப்பித்தார். இந்து, முஸ்லிம் சமூகத்தினர் தமக்கிடையே மணவினை உறவு அமைத்துக் கொள்வதற்காக, தாமே ஒரு எடுத்துக் காட்டாக நின்று கலப்பு மணம் செய்து கொண்டார். வைதீக இந்துக்களுக்கு அச்செயல்கள் வெறுப்பை அளித்திருக்க வேண்டும். அக்பர் மிகுதியாக முஸ்லிம் பழக்க வழக்கங்களில் தலையிட்டமைக்குக் காரணம், அவர், தேசீய ஒற்றுமையை விரும்பிய ஒரு முஸ்லிம் பேரரசராக இருந்ததேயாகும். அவ்வொற்றுமையை ஏற்படுத்த இரு இனத்தாரரிடமு மிருந்த வேறுபாடுகளை, அடியோடு அழிக்க முடியாவிட்டாலும், அவற்றை மிகக் குறைந்த அளவுக்குக் கொண்டுவர வேண்டுமென்பது அவருடைய முடிவு. முன்னர் குறிப்பிடப்பட்ட அக்பரின் ஆணைகள், தீன் இலாஹிக் கொள்கையின் விளைவேயாகும். புதிய மதத்தைப் பின்பற்றிய சிறப்புற்ற பதினெட்டுப் பேர்களில், இராசா பீர்பால் ஒருவரே இந்து இனத்தவர் என்பது நோக்கற்பாலது. அக்பர் செயலாற்றிய முறையைப் பற்றிய கருத்து எவ்வாறிருப்பினும், அவருடைய மதச்சீர்திருத்தங்கட்கு அடிப்படையாக இருந்த அவர் நல்லெண்ணத்தைப் பற்றி, குறிப்பாக சமூக ஒற்றுமையை ஏற்படுத்த அவருக்கிருந்த பேரார்வத்தைப் பற்றி நாம் குறை கூறுவதற்கில்லை.

**1582'க்குப் பிறகு அக்பர் ஆற்றிய செயல்கள்.** 1582'ம் ஆண்டு கோவாவுக்குத் திரும்பிய முதல் ஜெசூட்

மதத்தூதுக் குழுவினரும், 1591—2'ல் வந்த இரண்டாவது குழுவினரும் அக்பரை, கிறித்தவ மதத்திற்கு மாற்ற முயன்று தோல்வியுற்றனர். 1592'ல் முன் குறிப்பிட்டதுபோல் இஸ்லாமின் தோற்றத்திலிருந்து 1000-ஆண்டுகள் முடிவுற்றமைக்காக காசுகளும் நூலும் வெளியிடப்பட்டன. 1593—94'ல் அக்பர் பின்வரும் ஆணையைப் பிறப்பித்தார்:- "சமயத் தொடர்பாக ஒருவர் மற்றவர் செய்தியில் தலையிடக் கூடாது; யார், யார் எங்கெந்த மதத்திற்கு மாற விரும்புகின்றனரோ அதன்படியே அவர்கள் செய்ய உரிமை அளிக்கப்படுகிறது." 1595'ல் மூன்றுவது ஜெசூட் மதக் குழுவினரை, அக்பர் வரவேற்று அவர்களுக்கு மக்களை அவர்கள் மதத்திற்கு மாற்றிக்கொள்ளும் உரிமையை அளித்தார். அது கிறித்தவ சமயத்திற்குப் பெரும் வெற்றியாகும். ஆனல் அக்பர் கிறித்தவக் கொள்கைகள் சிலவற்றை ஏற்றுக்கொண்டனரேயன்றி அம்மதத்திற் சேரவில்லை. சீக்கிய குருமாருடனும் பேரரசர் நேச உறவு பூண்டிருந்தார். அவர்களுடைய கொள்கையை மன்னர் பாராட்டினர். இராசா பீர்பால், சீக்கியக் கொள்கையை வெறுத்தார். பேரரசர் இறக்கும்பொழுது அவர் எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் பின்பற்றுபவராக இல்லை. கடவுளின் வழியைப்பின்பற்றுபவராக இருந்தார். அவருடைய ஆன்மீகச் சிறப்பை, சமய சித்தாந்திகள் உணரமுடியாது; ஆனல் இக்காலத்து மெய் விளக்கத்துறை அறிஞர் உணர்வர். ஒவ்வொருவருடைய மதமும் அவரவர் உள்ளத்தைப் பொறுத்தது. அக்பருடைய சமயக் கோட்பாடுகள் அவருடைய பெருமையைக் காட்டுகின்றன.

## பகுதி 6

### பக்திமார்க்கமும் (அன்பு வழிபாட்டு முறையும்) நானக்கின் பின்வந்தோரும்

பக்தி மார்க்கம். கபீர், 1518'ம் ஆண்டிலும், வல்லபர் 1531'லும், 1534'ல் சைதன்யரும், 1538'ல் நானக்கும் உயிர்நீத்தனர். வல்லபரின் மகன் விட்டல்நாத் (1515—'85) தம் தந்தையின் சமயக்கட்சிக்குத் தலைவரானர். வல்லபரின்

மாணவர்கள் நால்வரும், விட்டல்நாத்தின் மாணவர்கள் நால்வரும் மேற்குப் பகுதி இந்தியாவை ஒரே திட்டப்படி அமைத்ததால் "அஷ்டசாப்" அல்லது எட்டு முத்திரைகள் எனப்பெயர் பெற்றனர். அவர்களுடைய சமய, இலக்கியத் தொண்டுகள் காரணமாக கண்ணன் வழிபாடு முன்னேற்ற மடைந்தது. அவர்களுள் மிகவும் சிறப்புவாய்ந்தவர், பதினாறும் நூற்றாண்டின் பிற்பாதியில் வாழ்ந்த சூர்தாஸ் என்பாராவர். "ஆக்ராவின் குருட்டுக்கவி" என்று அவர் குறிப்பிடப்படுகிறார். பிருந்தாவனத்தில் (உத்தரப் பிரதேசத்தில் மதுராவுக்கருகில்) ஏற்படுத்தப்பட்ட ராதாவல்லபி மதப்பிரிவைச் சார்ந்தோர், காதற்பண்பை வலியுறுத்துவதுடன், இராதை, கண்ணனைவிட உயர்ந்தவள் என்றும் கூறுவர். தயாளதாது (1544—1603) என்ற பெரியார், கபீரின் மாணவர். ஆமதாபாத்துக்கு உரிய அவர் பெரும்பாலும் இராசபுதனத்தில் வாழ்ந்தார். யாவரிடமும் மிகுந்த கருணை வாய்ந்தவராக இருந்ததால் தயாள என்ற அடை அவர் பெயருடன் சேர்க்கப்பட்டது. ஸ்ரீராமனை வழிபடுமாறு அவர் சமய உரைகள் ஆற்றினார். சாதிமுறையையும் உருவவழிபாட்டையும் அவர் வெறுத்தார். அவரைப் பின்பற்றியோர் தாதுபந்தியர் எனப்படுவர்.[1] இராமனிடத் தன்பு கொண்டவர்களில் மிகவும் சிறந்தவர் துளசிதாஸ் (1532—1623). ஏறத்தாழ 1575'ல் இந்தி மொழியில் அவர் எழுதிய இராமாயணம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. யமுனை ஆற்றை அடுத்த ஓரிடத்தில், அந்தணகுலத்திற்றோன்றிய துளசிதாஸ், வாரணாசியில் தொண்டாற்றி வந்தார். அக்பர் அவைக்கு அவர் சென்றதாகத் தெரியவில்லை. ஜஹாங்கீர், இராசாமான்சிங், அப்துர்ரஹீம் முதலியவர்களுடன் அவர் தொடர்புகொண்டிருந்தார். அவர், அன்பையும் ஒழுக்கத்தையும் கற்பித்து வந்தாரேயன்றித் தனித்த சமயப் பிரிவு எதையும் தோற்றுவிக்கவில்லை. அத்துவைதக்கொள்கை, சாதிமுறை, ஆகியவற்றையும் வேறுபல வைதீகக்கோட்பாடுகளையும் அவர் விரும்பிப்போற்றினார். விட்ணுவே இராமனாகப் பிறந்தார் என்பது அவர் நம்பிக்கை.[2] துளசிதாஸ், "இந்தியா

1. Tara Chand, Influence of Islam on Indian Culture (1936), pp. 182—8.
2. Keay, op. cit., pp. 51—7

வில் அக்காலத்தில் தலைசிறந்த ஒரு பெரியாராக இருந்தார்— அக்பரைவிட அவர்சிறந்தவர். ஏனெனின் அக்கவி,ஆயிரக்கணக் கானமக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அருஞ்செயல், அக்பர் பெற்ற வெற்றிகள் யாவற்றினும் பலவகைகளில் மிகச்சிறந்தது.[1]" அவரது இராமாயணம், இந்துஸ்தானத்தின் பெரும்பான்மையான மக்களின் (கல்வியறிவு பெற்றவர், கல்வி யறிவுபெருதவர் யாவரும்) ஒழுக்கத்திற்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது. (Sir G. Grierson)[2] சைதன்யரின் அன்புவழிக் கொள்கையை அவரைப் பின்பற்றியோர் வங்காளத்தில் பரப்பிவந்தனர்.

**நானக்கின் பின்வந்தோர்.** நானக்கின் மறைவுக்குப் பின் அவருடைய மாணவர் அங்காட் (1538—'52) குருவாக அமர்ந்து தம் ஆசிரியரின் பாக்களை நூலாக எழுதச்செய்தார். மூன்ருவது குருவான அமர்தாஸ் (1551—'74) 84-படிகளை யுடைய ஒரு புனிதக்கிணற்றை அமைத்து ஒவ்வொரு படியிலு மிருந்து ஜப்ஜி மந்திரத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வதின் சிறப்பை விளக்கினுர். அக்பர் சென்று அவரைக்கண்டார். அமர்தாஸின் மருமகன் ராமதாஸ் (1574—'81) அடுத்த குருவாக அமர்ந்தார். அவர் அக்பரிடம் ஒரு மனையிடத்தைப் பெற்று அங்கே ஒரு கோயில் கட்டத்தொடங்கினுர். அமிர்த ஸரஸிலுள்ள அக் கோயில் "பொற்கோயில்" எனப் புகழப் பெறும். அவருக்குப் பிறகு குருபீடம் அவருடைய மகன் அர்ஜுன் என்பவருக்குக் கிடைத்தது. அதிலிருந்து வழிவழி உரிமை முறை, பின்பற்றப்பட்டது. ஐந்தாவது குருவான அர்ஜுன் பொற்கோயிலைக்கட்டி முடித்தார். அங்கே வழிபட வேண்டிய முறைகள் ஒழுங்கு செய்யப்பட்டன. 1604'ல் ஆதிகிரந்தம் என்ற நூல் முற்றுப்பெற்றது. சீக்கியமதத்தின் சிறப்பு மிகுதியாகப்பரவியது. குருவின் செல்வ வளங்கள் பெருகின. நானக் முதல் அர்ஜுன் வரை உள்ள குருமார் யாவரும் முகலாயப் பேரரசருடன் நேச உறவு பூண்டு சமய

1. Smith, Akbar, p 417

2. Ishwari Prasad, A Short History of Muslim Rule in India (3rd Edition), p. 782.

வளர்ச்சியில் மட்டும் கருத்துச்செலுத்தி வந்தனர். 1606'ல் அர்ஜுன், ஜஹாங்கீரின் மகன் குஸ்ருவைக்கண்டு இரக்கம் கொண்டு அவருக்கு ரூ. 5000/- அளித்தார். தந்தைக்குப் பகையாகக் குஸ்ரு கலகம்செய்ததால் ஜஹாங்கீர் அதைஅடக்கி விட்டுக் குரு அர்ஜுனுக்கு இரண்டு லட்சம் ரூபாய் தண்டம் விதித்தார். குருவின் மாணவர்கள் அத்தொகையைச் செலுத்த முன்வந்தபோதிலும் அர்ஜுன் அதைத்தடுத்தார். அவ்வமயம் அவர் கூறியதாவது "நீதியற்ற வகையில் தண்டம் விதிக்கப் படுகிறது; என்னிடம் உள்ள பொருள் ஏழைகளுக்கும் திக்கற்றவர்களுக்கும் பயன்பட வேண்டும்." தண்டத்தைச் செலுத்த மறுத்ததால் லாகூரில் அவர் கொடுமையாகக்கொலை செய்யப்பட்டார். ஜஹாங்கீர் அரசியல் காரணங்களுக்காகவே அச்செயலைப்புரிந்தார். சீக்கியமதத்தைத் துன்புறுத்தவேண்டு மென்பது அவர் கருத்தன்று. பதினேழும் நூற்றாண்டு முழுவதும் சீக்கியர் அமைதியான சமய வாழ்க்கையையே மேற்கொண் டிருந்தனர். ஆருவது குருவான ஹரிகோவிந்த் (1606–'45) துறவறப்பண்பைவிட மிகுதியாகப் போர்வீரப்பண்பைப் பெற் றிருந்தார். அவர் காலம் முதல் சீக்கியர் வரலாற்றில் புதிய இயல் தொடங்குகிறது.

## பகுதி 7

### சமூகமும் பொருளாதாரமும்

மக்கட்டொகை. பதினேழும் நூற்றாண்டில் குடிக்கணக் கெடுக்கும் முறை இல்லை. ஆதலால் இந்தியாவில் அக் காலத்திலிருந்துவந்த மக்கட்டொகையை, வேளாண்மையின் பரப்பு, படைவீரரின் எண்ணிக்கை, நகரங்களிலிருந்த வீடு களின் எண்ணிக்கை முதலிய குறிப்புக்களைக்கொண்டு ஓரளவு அறியலாம். ஏறக்குறைய 7-கோடி வீடுகள் வடஇந்தியா விலும், 3-கோடி இல்லங்கள் தென் இந்தியாவிலும் இருந்த தாகக் கூறப்படுகிறது.[1] அயல்நாட்டு அறிஞர்கள் ஆக்ராவும் வேறுசில நகரங்களும் ஐரோப்பிய நகரங்களைவிடப் பெரிதாக இருந்தன எனக் கூறுகிருர்கள். பதினேழும் நூற்றாண்டின்

1. Moreland, India at the death of Akbar, (1920), pp. 20 & 22

முடிவில் லண்டன் பாரிஸ் நகரங்களின் மக்கட்டொகை முறையே 1,52,478 என்றும் 400,000 என்றும் அறியக் கிடக்கிறது. ஆதலால் அக்காலத்தில் வட இந்தியாவின் பெரிய நகரங்கள் ஒவ்வொன்றின் மக்கள் தொகை 2 லட்சம் முதல் 5 லட்சம் வரை இருந்திருக்கக்கூடும்.

சமூகமும் பொருளாதாரமும். சமூகத்தில், சீக்கியர் உட்பட்ட இந்துக்கள், உள்நாட்டு முகம்மதியர், பார்சியர், போர்ச்சுக்கீசியர், அபிஸீனிய அடிமைகள், சிறிதளவு யூதர்கள், சிறிதளவு ஆர்மீனிய இனத்தவர் முதலியோர் காணப்பெற்றனர். அயல்நாட்டு முகம்மதியருள் அராபியர், பாரசீகர் முகலாயரைப் பின்பற்றியோர் முதலியோர் அடங்குவர். பார்சியர் முதலில் வேளாண்மையில் ஈடுபட்டிருந்து சிறிது சிறிதாக வாணிகத்தில் கருத்தைச் செலுத்திவந்தனர். டையூ, டாமன் முதலிய இடங்களில் போர்ச்சுகீசியர் தங்கி இருந்தனர். அரசியல் பணிகளில் அமர்ந்திருந்தோர், சமய வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தவர், வேளாண்மைத் தொழில் புரிவோர், வணிகர், பணியாட்கள் அடிமைகள் முதலிய பல வகுப்பினர் சமூகத்தில் இருந்தனர்: மான்சப்தார்களில் பெரும்பான்மையினர் அயல் நாட்டவர். அவர்கள் பொருளாதார நிலை மிகவும் வளமுடையதாய் இருந்தது. நாட்டில் வழக்குறைஞர் தொழில் கிடையாது. இலக்கிய வல்லுநர், கலைஞர், மருத்துவர், முதலானோர் மான்சப்தார்களாக இருந்தனர். அல்லது வேறு வழிகளில் அவர்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. இந்து, முஸ்லிம் சமய நிலையங்களுக்கு அக்பர் நன்கொடைகள் வழங்கினர். ஏறக்குறைய 5000 பெண்டிர் பேரரசர் இல்லத்தில் இருந்தபடியால் பெருமளவில் பணியாட்கள் அவர்களுக்கு ஊழியம் புரிந்து வந்தனர். படைத்துறையில் செயலாற்றிவந்த போர்வீரன் ஒவ்வொருவனும் தன்கீழ் இரண்டு அல்லது மூன்று பணியாட்களைப் பெற்றிருந்தான். ஒவ்வொரு யானைக்கும் நான்கு பணியாட்கள் அமர்த்தப் பெற்றிருந்தனர். அரண்மனையில் உயர் இன்பவாழ்க்கை நிலவியது. பேரரசர் எங்கிருந்த போதிலும் கங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட நீரையே பயன்படுத்தினர். நாடோறும் மலைகளிலிருந்து பனிக்கட்டியும், காச்மீரம்,

காபூல், சாமர்கந்த் முதலிய இடங்களிலிருந்து பழங்களும், பாடாக்ஷானிலிருந்து முலாம் பழமும் பேரரசருக்குக் கொண்டு வரப்பட்டன. விளையாட்டுக்கள், பொழுது போக்குக்கள் முதலியவற்றிற்காகப் பல மக்கள் பணியில் அமர்த்தப்பட்டிருந் தனர். பல விலங்குகளும்—தவளைகள் உட்பட—போர்செய்வ தற்குப் பயிற்சி அளிக்கப்பட்டன. மான்சப்தார்கள் பேரரச ரின்உயரின்ப வாழ்க்கை முறையைப் பின் பற்றினர். ஒரு மான்சப்தார் 500 முன்னணித் தொண்டர்களைப் பெற்றிருந்த தாகவும் மற்றொருவர் ஒவ்வொருநாளும் 1000 தட்டு உயர்ந்த உணவு வகைகளை உண்டு களித்ததாகவும் குறிப்புகள் உள. அவர்கள், குதிரைகள், யானைகள், ஆடை அணிகலன்கள், பழ வகைகள், பனிக்கட்டி, பணியாட்கள் முதலியவற்றிற்காக ஒவ் வொருநாளும் அளவுகடந்து செலவு செய்து வந்தனர். ஒரு சாதாரணப் பணியாள் மாதம் ஒன்றுக்கு ரூ. $1\frac{1}{2}$ ஊதியம் பெற்றான். அக்காலத்தில் ஒரு அடிமைப் பெண்ணை ரூ. 50-க்கு வாங்கமுடியும். போரில் சிறைப்பட்டோரை அடிமையாக்கும் வழக்கத்தை, அக்பர் 1562'ல் ஒழித்தபோதிலும், சிலவகைக் குற்றங்களைப் புரிந்தோரும் வாங்கின கடனைத் தீர்க்க முடியாத வரும், அடிமைகளாக்கப் பெற்றனர் அடிமைகள் அன்புடன் நடத்தப்பட்டதால், வாழ்க்கையில் இன்னலுற்ற சிலர், தாமே விரும்பி அடிமைகளாக முன்வந்தனர். குழந்தைகளை விற்கும் பழக்கமிருந்தது. வங்காளத்தில் பேடிகளை (Eunuchs) உண் டாக்கும் தொழில் சிறப்புற்றிருந்தது. முடிவாக, பயனற்ற செய்திகளிலும் உயர் இன்பவாழ்க்கையின் பொருட்டும் மிகுந்த பொருள் செலவிடப்பட்டது.

## பகுதி 8

### வேளாண்மை, கைத்தொழில், வாணிகம்

அவுரி, கரும்பு, கசகசா, பருத்தி, கோதுமை, வாற் கோதுமை, நெல், எள்ளு, ஆளிவிதை, கொடிமுந்திரி, தினை, பருப்புவகைக் கூலம் முதலியன பயிரிடப்பட்டன. இவற்றில் முதல் நான்கும் கோதுமையைவிடச் சிறப்பாகக் கருதப்பட்டன.

சணற்பயிர் சிறப்பெய்தவில்லை. வங்காளத்தில் உள்நாட்டுத் தேவைக்காகமட்டும் அது பயிரிடப்பெற்றது. அக்பர் இறப்ப தற்குமுன்னரே, 1604—5'ல் புகையிலை முகலாயப் பேரரசில் பயிரிடப்பட்டது. சிறிய நிலப்பகுதிகட்கு உரிமையாளர் மிகுதி யாக இருந்தனர். அக்பரின்கீழ் குடியானவர் நிலை வருந்தத் தக்கதாக இல்லை. வரிகள் கடுமையான வகையில் வாங்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. "சாதாரணக் குடியானவர் நிலை இன்றிருப்பதைவிட மிகவும் கேடுற்றிருந்தது......"[1] ஆனால் கூலங்கள், புலால், பால் முதலியன குறைந்த விலைக்குக் கிடைத்ததால் நாளொன்றுக்கு 5-புதிய பைசாக்கள் (2-Dams) ஊதியமாகப்பெற்ற தேர்ச்சிபெருததொழிலாளிகூட பொதுவாக, இன்றியமையாத் தேவைகளைப்பெற்று வாழமுடிந்தது. உழவர் சிலகாலங்களில் தமது மனைவி, மக்களைக்கூட அடகுவைத்துக் கடன்வாங்கினர். 1555—'6, 1595—'8 ஆகிய காலங் களில் நாட்டிலேற்பட்ட வறுமைகாரணமாக மக்கள் ஆற்றொ ணுத்துயருற்றனர். "மக்கள் மக்களையே உண்டு வாழ்ந்தனர்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பருத்தி ஆடை, சமுக்காளம் முதலியன நெய்தல் மிகவும் சிறப்பு வாய்ந்த தொழிலாயிருந்தது சோணர்கான் (Dacca, Bengal) அக்காலத்தில், பிற்கால டாக்காவை ஒத்த பெருமை பெற்று விளங்கியது. வாரணசி, ஆக்ரா, பர்ஹன்பூர், மூல் தான், லாகூர் முதலிய நகரங்கள் தொழில் வளம் மிக்க இடங்களாயிருந்தன. இந்திய நெசவுத்துணிகள், அரேபியா, எகிப்து, மத்தியதரைக்கடற்பகுதி, பர்மா, மலாக்கா முதலிய நாடுகட்கும் சிறிதளவு, சீன, பிலிப்பீன்ஸ, ஜப்பான் நாடு கட்கும் அனுப்பப்பெற்றன. மெக்சிகோவுக்குக்கூட அனுப்பப் பட்டிருக்கக்கூடும். அயல்நாட்டு அறிஞரொருவர் சிறிது மிகைப் படுத்திக் கூறியிருக்கும் பின்வரும் குறிப்பு நோக்கத்தக்கது:- "நன்னம்பிக்கை முனையிலிருந்து சீனவரை, ஆடவர், பெண்டிர் ஒவ்வொருவரும் தலைமுதல் கால்வரை இந்திய நெசவுத்துணி களை அணிந்திருந்தனர்."[2] ஏற்றுமதியைப் பொறுத்தவரை,

---

1. Moreland, op. cit , pp. 138.
2. Do pp. 179

பட்டுநெசவுத் தொழில் மிக்க சிறப்படையவில்லை. ஆயினும் அது, குஜராத், காச்மீரம், முதலிய நாடுகளிலும் ஆக்ரா, லாகூர் ஆகிய நகரங்களிலும் ஒரு முக்கிய தொழிலாயிருந்தது. குறைவை நிறைவு செய்ய, சீனு, நடுஆசியா, பாரசீகம் முதலிய நாடுகளிலிருந்து சிலபொருள்கள் இறக்குமதிசெய்யப் பட்டன. கம்பளி ஆடையும் உரோமங்களாலான உடைகளும் இந்நாட்டில் மிக்க சிறப்படையவில்லை. வங்காளத்தில் சணல் ஆடையைப்பற்றி முன்னர்க்குறிப்பிட்டோம். படகு, கப்பல்கள் முதலியன செய்தல் ஒரு முக்கிய தொழிலாயிருந்தது. அணி கலன்கள், தந்தசாமான்கள்போன்ற உயர் இன்பப்பொருள்கள் செய்வதில் கலைத்திறன் காணப்பட்டது. இந்தியரின் தேவைக்கு வேண்டிய தோல்சாமான்கள் இந்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டன. சிறிதளவு தாள் (காகிதம்) செய்யப்பட்டது. வங்காளத்தில் சர்க்கரையும், பீஹார், மாளவம் ஆகிய பகுதிகளில் அபினியும், வங்காளம், குஜராத், காச்மீரம் முதலிய பல பகுதிகளில் இரும்பும் இராசபுதனத்தில் சிறிதளவு செம்பும், பஞ்சாப், இராசபுதனம், கடற்கரைப் பகுதிகள் முதலிய இடங்களில் உப்பும் தயாரிக்கப்பட்டன. "பெரும்பாலும் இந்தியர் தமக்கு வேண்டிய பொருள்களைத் தாமே உற்பத்தி செய்துவந்தனர்."[1] "தொழிலைப் பொறுத்தவரை, இந்தியா, மேற்கு ஐரோப்பாவுடன் ஒப்பிடுமிடத்து இன்றிருப்பதைவிட மிகுந்த முன்னேற்றமடைந்திருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை."[2]

நெசவு ஆடைகள், அவுரி, அபின் முதலியன ஏற்றுமதிப் பொருள்களாம். இறக்குமதிப் பொருள்களில் சிறப்பாக, பொன், வெள்ளி, செம்பு, பட்டுவகைகள், சரிகை, குதிரைகள், ஐரோப்பாவிலிருந்து இன்தேறல், ஆப்ரிக்காவிலிருந்து அடிமைகள் முதலியன குறிப்பிடத்தக்கவை. பேரரசில் சிறந்து விளங்கிய துறைமுகங்கள் வருமாறு:— லாஹரி பண்டர் (சிந்து நாடு) காம்பே, புரோச், சூரத், ஹூக்ளி, ஸ்ரீபூர் (டாக்காவுக்கருகில்.)

நாட்டின் பெருஞ்செல்வரில் பெரும்பான்மையினர் பல வகை இன்பங்களுக்காக அளவு கடந்து செலவு செய்து வந்த

1 & 2. Moveland, Op. cit. P. 142 & 155-6.

னர். ஏழைமக்கள், போதுமான அளவுக்கு உணவுப்பொருள்களைப் பெற்ற போதிலும் அவர்களுடைய வீடுகள், வசதிகளின்றி கீழ்த்தரமாக இருந்தன. அயல்நாட்டு அறிஞர்கள், இந்திய மக்கள் போதுமான ஆடை அணியவில்லை என்று குறிப்பிடுகின்றனர். மக்கள், திருமணவிழாக் காலங்களில் மிகுதியாகச் செலவு செய்தனர். புண்ணியச் செலவு செய்வதிலும் மிகுந்த கருத்துச் செலுத்தப்பட்டது. "உயர் வகுப்பினர் பெரும் போக வாழ்க்கையில் திளைத்திருக்கையில் பெரும்பான்மையான பொதுமக்கள் வருந்தத்தக்க அளவுக்கு ஏழைகளாக இருந்தனர்."[1] "பதினாறும் நூற்றாண்டின் முடிவில் இந்தியாவில் உற்பத்தி, போதுமான அளவுக்கு இல்லை. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் தவறான முறையில் பகிர்ந்து அளிக்கப்பட்டன. பொருளாதாரச் சூழ்நிலை, உற்பத்திப் பெருக்கத்திற்கான அறிகுறியைக் காட்டவில்லை. மேலும் பகிர்ந்தளித்தலில் இருந்த குறைபாடுகள் பெருகுவதற்கான அறிகுறி புலப்பட்டது......... அரசியல், பொருளாதார அழிவுபாடுகட்கான வித்து ஊன்றப்பட்டது."[2]

## பகுதி 9

### பாரசீக இலக்கியமும் இந்தி இலக்கியமும்

**பாரசீக இலக்கியம்.** முகலாயப் பேரரசுக்குரிய வரலாற்று இலக்கிய நூல்களைப்பற்றி முன்னர்ப் பார்த்தோம். அப்பேரரசில் தோன்றிய பாரசீக இலக்கியத்தைக் குறிப்பிடுகையில் அபுல்பஸல் நம் கருத்தை மிகவும் கவருகிறார். பல வகைகளில் அவர் சிறப்புக்குரியவர். அவர் ஒரு வரலாற்றறிஞராக மட்டுமின்றி, புள்ளி விவரக்கலை வல்லுநராகவும், கவியாகவும், குறைபாடுகளை ஆராயும் அறிஞனாகவும் விளங்கினார். சில சமஸ்கிருத நூல்களைப் பாரசீக மொழியில் பெயர்க்க அக்பர் உதவினார். பதெளனி, இராமாயண மகாபாரத நூல்களையும், இப்ரஹிம் சர்ஹிந்த், அதர்வவேதத்தையும், பெய்ஸி, லீலாவதி என்ற கணித நூலையும் மொழி

1 & 2. Ibid., pp. 254 & 299—300.

பெயர்த்தனர். பிற மொழிகளிலுள்ள புகழ்வாய்ந்த நூல்களும் பாரசீக பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டன. குறிப்பாக, துருக்கி மொழியிலிருந்த பாபரின் "வாழ்க்கைக் குறிப்புக்கள்" என்றநூல் மொழிபெயர்க்கப்பட்டது. அக்பர் அவையிலிருந்த சிறந்த கவிகள் கீஸலியும், பெய்ஸியுமாவர். பெய்ஸி 14'ம் நூற்றுண்டில் வாழ்ந்த அமிர்குஸ்ருவுக்கு அடுத்தபடியாக உள்ள சிறப்பு வாய்ந்த கவி என்று கருதப்படுகிருர்.

இந்திச்செய்யுளிலக்கியம். இந்தி இலக்கிய வரலாற்றில் அக்பரின் ஆட்சிக்காலம் மிகுந்த சிறப்புவாய்ந்த பகுதியாகும். பேரரசரும், மான்சிங், அப்துர்ரஹீம் போன்ற அவருடைய தலைமை அலுவலாளரும் இலக்கிய ஆசிரியர்களை ஆதரித்தனர். தோடர்மால் போன்ற அரசியல் பணித்துறை அலுவலாளர் சிலர் இந்திப்பாடல்களியற்றினர். நகைச்சுவையுடன் கூடிய சிறிய பாக்களாக்குவதில திறமைபெற்ற "கவிராய்" பீர்பால் மிகவும் புகழப்பட்டார். கவிஞனும், பன்மொழிப் புலவருமான அப்துர்ரஹீம், கங்காபிரசாத் அல்லது கங்கக்கவி என்ற அவைக்களப் புலவரியற்றிய ஒரு பாடலை வியந்து அவருக்கு 36-லட்ச ருபாய் பரிசளித்தார் என்று கூறப்படுகிறது. மான்சிங், தம் கருத்தைக்கவர்ந்த ஒரு பாடலின் ஆசிரியருக்கு ஒருலட்சருபாய் பரிசளித்தாராம். பெய்ஸி, இந்தியில் பல பாடல்களியற்றினுர். தான்சேன் என்ற இசை அறிஞர் ஒரு கவியாகவும் விளங்கினுர். பேரரசர் அவைக்குப் புறத்திலும் பல புகழ்பெற்ற ஆசிரியர்கள் வாழ்ந்து வந்தனர். கேசவ தாஸ் என்ற கவி யாப்பிலக்கணத்தில் ஒரு பெரும் மேதையாக விளங்கினுர். துளசிதாஸ் என்ற அறிஞரின் சமயத் தொண்டினைப்பற்றி முன்னரே குறிப்பிட்டோம். அவர் இயற்றிய பல நூல்களில் இராமாயணம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. "அது ஓர் சிறந்த நூலென்பதில் ஐயமில்லை; உலக இலக்கியங்களில் தலைமைச்சிறப்பு வாய்ந்த நூல்களில் ஒன்ருக அதை நாம் கருதலாம்."[1] "இலக்கியத் துறையில் இந்தியா முழுவதிலும் தலை சிறந்த அறிஞராக துளசிதாஸ்

1. Keay, op. cit., pp. 56

விளங்குகிருர்.''[1] என்பது சர் ஜார்ஜ்கிரீர்சன் என்பாரின்கருத்து. அவரெழுதிய இராமாயணத்தில் ஏழு காண்டங்கள் உள்ளன. இரண்டாம் பகுதியான அயோத்தியாகாண்டம், மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இவருடைய நூலில் காணப் பெறும் உவமை அணிகள் ''காளிதாசனின் சிறந்த உவமை களைவிடச் சிறப்பானவை. இந்திச் செய்யுளிலக்கியத்தில் துளசிதாசரே மேன்மைபெற்றவர் என்று பொதுவாகக் கருதப் பட்டபோதிலும் சிலர், சூர்தாசரைச் சூரியனுக்கும், துளசி தாசரைச் சந்திரனுக்கும் ஒப்பிடுவர். இலக்கியத் துறையில் சில பண்புகளில் சூர்தாசர் துளசிதாசரைவிட உயர்ந்தவர். ''சூர்சாகர்'', ''சூராவலி'' என்னும் நூல்கள், கண்ணனையும் ராதையையும்பற்றிச் சூர்தாசர் இயற்றிய உணர்ச்சிப் பாடல் களின் திரட்டுக்களாம். அவர் ''அஷ்டசாப்'' என்னும் குழு வின் தலைவராயிருந்தார். அன்புவழிக் கோட்பாட்டைப்பரப்பி வந்த வேறு சில அறிஞர்களும் பல நூல்களை இயற்றினர். பதினும் நூற்றுண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த மாலிக் முகம்மது ஜெயசி என்பார். ''பத்மாவதி'' என்ற உருவகத் தொடர்ச்செய்யுள் நூலை இயற்றினர். 1303'ல் அலாவுதீன் கில்ஜி சித்தூரைக் கைப்பற்றிய செய்தியை அது சிறப்பிக் கிறது. மேவார் நாட்டு அரசன் ரத்தினசிம்மனின் அழகிய மனைவி பத்மாவதி அல்லது பத்மினியைப்பற்றி அதில் கூறப் படுகிறது. அதன் வரலாற்றுச் சிறப்பைப்பற்றிக் கருத்து வேறுபாடு இருந்தபோதிலும், ''பிறிதின் சார்பற்ற தன்மையும் செய்யுள்நடை அழகும் அதில் பொலிகின்றன. இந்தி இலக் கியத்தில் தலைமைச் சிறப்பு வாய்ந்த படைப்புக்களில் இதுவு மொன்ருகும்.''[2] 24000 கையெழுத்துப் பிரதிகளடங்கிய ஒரு நூல் நிலையத்தை அக்பர் அமைத்திருந்தார். அந்நூல்களின் மதிப்பு ரூ. 6,463,731 என்று கூறப்படுகிறது. சுமார் 1550'ம் ஆண்டிலேயே கோவாவிலிருந்த ஜெசூட் பிரிவினர் இந்தியாவில் அச்சிடுங்கலையைத் தோற்றுவித்திருந்த போதிலும், அக்பர் அச்சடிக்கப்பட்ட நூல்களில் நாட்டம் செலுத்தவில்லை.

---

1. Smith, op. cit., p 420
2. Keay, op. cit., p. 32

# பகுதி 10

## கட்டடக்கலையும் ஓவியமும்

கட்டடக்கலை. அக்பர் ஆட்சிக்காலத்துக் கட்டடக்கலையில் பாரசீக, இந்துப் பண்புகளைக்காண்கிறோம். பேரரசரின் உள்ளத்தைக் கல்லிலும் காணமுடியும்.! 1569'ல் கட்டி முடிக்கப்பட்ட உமாயூனின் கல்லறை, பெரும்பான்மையும் பாரசீகப் பண்புகளையும், ஓரளவு இந்துத் தன்மையையும் பெற்றுள்ளது. புகழ் பெற்ற வளைமாடத்துடன் கூடிய அது "தனிச்சிறப்புவாய்ந்த ஒரு கட்டடம்."[1] ஏறக்குறைய அதே காலத்தில் குவாலியரில் கட்டப்பட்ட முகம்மது கவுஸின் கல்லறை இந்திய முறையில் அமைந்துள்ளது. ஜான்பூரில் எடுக்கப்பட்ட பாலத்திலும் கலைச்சிறப்பைக்காணலாம். ஆக்ரா, லாகூர், அலஹாபாத் ஆகிய இடங்களில் அரண்கள் அமைக்கும் பணியை அக்பர் தொடங்கினர். அவர் ஆக்ராவில் எடுத்த சிவப்புக் கற்களாலாகிய கட்டடங்கள், பின்னர் ஷாஜஹானல் சலவைக்கல் கட்டடங்களாக மாற்றப்பெற்றன. எஞ்சியுள்ளவற்றில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது, ஜஹாங்கீர் மஹால். இளவரசர் சலீம் தங்குவதற்காக அது கட்டப்பட்டது. அக்பரின் கட்டடங்கள் யாவற்றினும் மிகச்சிறந்தது, 9-வாயில்களையுடைய பத்பூர்சிக்ரியாகும்: புதுமை உணர்ச்சி அளிக்கும் கற்கட்டடமது. மிகவிரைவில் அவ்வேலை செய்து முடிக்கப்பட்டதாம். 1569 முதல் 1585 வரை அது பேரரசுத் தலைநகராகத் திகழ்ந்தது. ஜமிமஸ்ஜிட் அல்லது பெரும் பள்ளிவாசல் ஆண்டுள்ள சிறப்புவாய்ந்த கட்டடங்களில் ஒன்றும். ஜோதிபாய் மாளிகை என்ற மற்றொரு கட்டடத்தில் இந்துப் பண்புகளைச் சிறப்பாகக் காண்கிறோம். மதுராவுக்கு அண்மையிலுள்ள பிருந்தாவனத்தில் அமைந்த நான்கு கிருட்டினன் கோயில்களிலும், சிக்ரியிலுள்ள பீர்பாலின் இல்லத்திலும், இந்து முகம்மதியக் கலப்புப் பண்புகளைக் காண்கிறோம்.

ஓவியம். அக்பர் ஓவியக்கலையை விரும்பிப் போற்றினர். "ஓவியக்கலையை வெறுப்பவர் பலருண்டு; அவர்களை நான்

வெறுக்கிறேன். ஓவியக்கலைஞனுக்குக் கடவுளை உணர்வதற்கான தனி வாய்ப்புக்கள் இயற்கையில் அமைகின்றன.'' என்று அவர் கூறியிருப்பது நோக்கத்தக்கது. இந்து, பாரசீகக் கொள்கைகளை இணைக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சி போற்றத்தக்கது. சிறப்புவாய்ந்த பதினேழு ஓவியக் கலைஞரில் பதின்மூன்று பேர்கள் இந்துக்கள். அப்துஸ் சமாத், அவர் மாணவர் தசுவாந்த், பசவான் முதலியோர் சிறந்த ஓவியக் கலைஞர்களாகத் தொண்டாற்றி வந்தனர். சிலவற்றைத்தவிர (சிக்ரியில் பேரரசனின் படுக்கையறைச் சுவற்றிலுள்ள ஓவியங்கள் முதலியன தவிர) அக்காலத்திய ஓவியப் படைப்புக்கள் அழிந்துவிட்டன.

## பகுதி II

### இசையும் காசுமுறையும்

இசை. இசைக் கலையையும் அக்பர் நன்கு கற்றுணர்ந்திருந்தார். அவரைப் போலவே அப்துர்ரஹீம், மான்சிங் ஆகியோரும் அக்கலையை ஆதரித்தனர். அபுல்பஸல் முப்பத்து ஆறு இசைஞர்களைக் குறிப்பிடுகிறார். குவாலியர் பகுதியைச் சேர்ந்த தான்சேன் அவர்களுள் தலையானவர். இவர், முகம் மதியராக மாறிய ஒரு இந்து. 1589'ல் இவர் இறந்தார். அக்பரது அவைக்களக் கலைஞரான தான்சேனும் அவர் மரபினரும் வடநாட்டில் வழக்கத்திலுள்ள கருவி இசையையும் குரலிசையையும் வளர்த்தவர்களாவர்.

காசு முறை. அதிக எடையுள்ள பொன், வெள்ளிக் காசுகள் சிறப்பாகப் பரிசளிப்பதற்கென்றே செய்யப்பட்டன. தவிர, 170 முதல் 175 குன்றிமணி எடையுள்ள தங்க மோகர்கள் அக்பரால் வெளியிடப்பெற்றன. ஒரு மோகர் ஒன்பது ரூபாய்க்கு இணையாகும். மேலும் அக்காலத்திய செம்பு, வெள்ளிக் காசுகள், இப்பொழுதுள்ளதைப் போலக் குறியீட்டு (Token) நாணயங்களாக இல்லை. அவற்றின் தோற்ற மதிப்பும் உண்மை மதிப்பும் ஒன்றாக இருந்தன. முகலாயர் காசுகளில் உச்ச அளவான மதிப்புடையது, 178

குன்றிமணி எடையுள்ள ரூபாய் நாணயமாகும். ஷெர்ஷா காலத்து மரபுப்படி அது அமைந்துள்ளது. அதே முறையி லமைந்த டாம் (Dam) என்று சொல்லப்பட்ட செப்புக்காசு 330 குன்றிமணி எடையுள்ளது. அதன் மதிப்பு ரூபாயில் நாற்பதில் ஒருபங்காகும். 76 காசு அடிக்கும் சாலைகளை அக்பர் அமைத்திருந்தார். அவற்றில் மிகச் சிறப்பானவை, தில்லி, லாகூர், ஆமதாபாத், ஜான்பூர், பாட்னு, வங்காளம் முதலிய இடங்களிலிருந்தன. அக்பரின் காசுகள், அவர் காலத்து ஐரோப்பிய அரசர்களின் காசுகளைவிட மிக உயர்ந்தவை. "அவை பலதிறப்பட்டவை; தூய்மையான உலோகத்தாலாக்கப்பட்டவை; எடையில் குறைவில்லாதவை; கலைவேலைப்பாடுடன் கூடியவை; ஆகவே அக்பர், இத் துறையிலும் புகழ்ச்சிக்குரியவர்."[1]

## பகுதி 12

### அக்பரைப்பற்றிய மதிப்பீடு

உடலமைப்பு. அக்பர் என்ற சொல்லுக்கு மிகப்பெரிய வர் என்று பொருள். சிவாஜியைப்போலவே அக்பரும் நடுத் தரமான உயரத்தைப் பெற்றவர். ஒளிவீசும் கண்களையும், கட்டுறுதிவாய்ந்த நடுத்தரமான உடலமைப்பையும் கொண்ட அவரைப்பார்த்த யாரும் உடனே அவர் ஓர் அரசர் என்று மதிப்பிட்டு விடுவர் என்று மோன்செர்ரேட் பாதிரியார் குறிப் பிடுகிருர்[2]. அவருடைய நெற்றி, தோள்கள், மார்பு முதலியன அகன்றிருந்தன. இடை குறுகியிருந்தது, கைகள் நீளமாக இருந்தன. அவர் உடற்பயிற்சிகளால் உடலை வலிமையுறச் செய்திருந்தார். வேட்டையாடுதல், குதிரைமேலமர்ந்து பந்து விளையாடுதல், மாடப்புருக்களைப் பறக்கவிடுதல் முதலியன அவரால் மிகவும் விரும்பப்பெற்றன. நீண்டகால உழைப்புக் குப் பிறகும் அவர் உடல் தளர்ச்சியடையவில்லை. சலீம்

---

1. Ibid. p 157
2. Hoyland and Banerjee (Ed.), The Commentary of Fr. Monserrate (1922), pp. 196--7.

இளவரசர், அக்பர் இறக்காமலிருந்துவிடுவாரோ என்றுகூட அஞ்சினாராம்! இடரைப் பொருட்படுத்தாத வீரத்தில் அக்பர் மகாஅலெக்சாந்தருக்கு ஒப்பாவர்.

**பழக்கவழக்கங்கள்.** பிறரைக் கவரும்படியான உடை அணிந்து கொள்வதில் அக்பருக்கு ஆவல் உண்டு. ஐரோப்பிய ஆடை முறையை அவர் விரும்பினர். அளவாகவே அவர் உணவு அருந்தினர். கொடிமுந்திரிப் பழம், முலாம் பழம், மாதுளங்கனி முதலியவற்றை அவர் மிகுந்த விருப்பத்துடன் உண்டார். இறைச்சி உணவில் அவருக்கு நாட்டமில்லை. வாழ்க்கையின் பிற்பாதியில் அதை அறவே விட்டுவிட்டார். "மனிதன் தனது வயிற்றை விலங்குகளைப் புதைக்கும் பிணக் குழியாக்குவது முறையன்று." என்று அவர் கூறியிருப்பது நோக்கற்பாலது. இளமையில் கொடிமுந்திரித் தேறலையும் அபினையும் மிகுதியாக அருந்தியபோதிலும் பிற்காலத்தில் அதைக் குறைத்துக்கொண்டார். அவருடைய மக்கள் மூவரும் வெறியூட்டும் பொருள்களை அளவுகடந்து அருந்தினர்கள்.

**உளத்திட்பம்.** அக்பர் எழுதப்படிக்கத் தெரியாதவரா யிருந்தபோதிலும், வரலாறு, மெய்விளக்கநூல், சமயம், கலை முதலியவற்றைப்பற்றிப் பரந்த அறிவைப் பெற்றிருந்தார். செய்திகளின் அடிப்படையை ஆராயும் மனப்பாங்குடன் அவர் பல துறைகளில் செயல் தேர்வுகள் நடத்தினர். சலிப்பின்றி உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகிய உத்தமரவர். கேள்வி கட்கு மரபுமுறையாக உள்ள விடைகள், ஆராயும் தன்மை வாய்ந்த அவர் மனத்திற்கு அமைதியை அளிக்கவில்லை. பீரங்கி செய்தல் முதலிய இயந்திரக்கலைகளில் அவருக்கிருந்த ஆர்வத்தைப் பொறுத்தவரை அவரை ருஷ்யாவின் மகா பீட்டருக்கு ஒப்பிடலாம்.

**தூயஒழுக்கம்.** சிற்றின்பத்துறையில், 1564'ம் ஆண்டி லேயே அக்பர் தம்மை சீர்திருத்திக்கொண்டார். அதன்பிறகு மங்கையரின் பெருமையை அவர் மதித்து ஒழுகினர். அவருக்குப் பல மனைவியரும், பல காமக்கிழத்தியருமிருந்தனர்.

இச்செய்தியைப் பொறுத்தவரை அக்பர், ஒளரங்கசீப்புக்குக் கீழ்த்தரமானவரே. சிற்சில காலங்களில் அக்பர் தம் மன நிலையை இழந்து மிகுந்த சினங்கொள்வதுண்டு. ஆனால் பொதுவாக அவர் அன்பாகவும், நேர்மையாகவும் விட்டுக் கொடுக்கும் பண்புடனும் நடந்துகொண்டார். சிலசமயங்களில் இரக்கமின்றி யிருந்தபோதிலும், அக்பர், ஜஹாங்கீரையும், ஷாஜஹானையும்போல கொடுமை வாய்ந்தவரல்லர். "நான் குற்றமிழைத்துவிட்டால் பின் அதை உணர்ந்து ஆவன செய்வேன்." என்பது அவர் கூறிய மொழிகளில் ஒன்று. அரசியலில் நேர்மை வழியைக் கடைப்பிடிப்பதில்லை என்று அக்பர் குற்றஞ் சாட்டப்படுகிறார். ஓரளவு அதில் உண்மை இருந்தபோதிலும், "வஞ்சகம், வழக்கமாகப் பொய் பேசுதல் முதலியவற்றில், அதே காலத்திய இங்கிலாந்தின் அரசி எலிசபெத், அக்பரைவிட மிகவும் தேர்ச்சிபெற்றவர்."[1] மேலும், அக்காலத்திய மற்ற ஐரோப்பிய மன்னர்கள் அக்பரை விடச் சிறந்தவர்களல்லர். அக்பரின் ஒழுக்கமுறைப் பண்புகள் அவருடைய அரசியல் பேரவாவைக் கட்டுப்படுத்தவில்லை. ஆனால் வெற்றிக்குக்குப் பிறகு அவர் அளவான கொள்கையைப் பின்பற்றினார்.

ஆன்மீக உணர்ச்சி. அக்பர் ஒரு பகுத்தறிவாளர் எளிதில் அறியமுடியாத ஒரு உண்மைப் பொருள் உண்டு என்று அவர் நம்பினார். கடவுளைப்பற்றிய அவர் கொள்கை மிகத் தூய்மையானது. அவர் கூறியதாவது:- "ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்கேற்பப் பரம்பொருளுக்குப் பெயர் கொடுக்கின்றனர். ஆனால் உண்மையில், அறியமுடியாத பரம்பொருளுக்குப் பெயரிடுவது தருக்குடைய செயலே." அக்பர், கடவுளில்லை என்ற கோட்பாட்டினரென்றோ, கடவுளைப் பற்றி ஐயுறவுக் கோட்பாட்டினரென்றோ கூறுவது அவருடைய உயர்ந்த தூயநிலைக்குப் பொருந்தாத ஓர் இழுக்காகும். அவருக்குக் கடவுளிடம் உறுதியான நம்பிக்கை இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். சமய சித்தாந்திகளின் பிடிவாதக் கொள்கைகளையும் அறியாமை நிறைந்தவரின் சிறு

1. C. H. I. IV. p. 154

பிள்ளைத் தன்மையையும் ஏற்றுக்கொள்ள அவருடைய பகுத்தறிவு இடந்தரவில்லை. சமய ஒழுக்கத்தில் பரந்த நோக்கம் இன்றியமையாததென்பது அவர் கோட்பாடு. பின்வரும் அவருடைய அறவுரை அதை வலியுறுத்தும்:- "நீவிர் முகம்மதியராயிருப்பின், பிராங்கியருடன் (Franks) கலந்து கொள்ளுங்கள். யூதர்களாயிருப்பின் கிறித்தவருடன் இணைந்து கொள்ளுங்கள். உங்கள் மதம் எதுவாயிருப்பினும் அம்மதத்தினின்று வேறுபடுகிறவருடன் ஒற்றுமைப்படுமின். அவர்களுடன் நீவிர் ஒன்றுபடுவதுடன் அவர்களுடைய சமயஉரைகளால் சினமடையாதிருப்பீர்களாயின், அக்கணமே நீங்கள் அமைதி பெற்றவராவீர்கள்; யாவரிலும் நீங்களே உயர்ந்தவராவீர்கள்.

குறைபாடுகள். அளவுகடந்த பகட்டு, முஸ்லிம்களிடம் இணைவிணக்கமின்மை,மனநிறைவடையாத நாட்டாசை ஆகியன உயர்ந்த தன்மைபெற்ற அக்பரின் சில பெருங்குறைபாடுகள் என்று சில ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனல் இக்கண்டனத்தைப் பெரும்பாலும் மறுத்து விடையளிக்கமுடியும். அக்பரின் குறைபாடுகளை நன்கு ஆராயும் அறிஞர் ஸ்மித் கூறுவதாவது "அக்பரின் தவறுகளை முறையான நோக்குடன் பரிசீலனை செய்ய வேண்டும். அவை சூரியனிடத்திலுள்ள களங்கம் போன்றவைதான்." பலவகைகளிலும் அரசர்க்குரிய பண்பு அக்பரிடம் இருந்தது. திறமையுடன் ஆட்சிபுரியும் பேரரசனுக்கு இன்றியமையாத பண்புகள் யாவும் அவரிடம் இருந்தன.

வெற்றிவீரர். தக்கண சுல்தானரசுகளையும் நடுஆசியாவையும் வெல்ல வேண்டுமென்பது அக்பரின் குறிக்கோள். ஆனல் தக்கணத்தில் ஒரு சிறுபகுதியைத்தான் அவர் வென்றார். நடுஆசியாவைப்பற்றிய அவரது பேராசையும் நிறைவேறவில்லை. ஆனல் பொதுவாக அவர் ஆற்றிய அருஞ்செயல்கள் போற்றற்குரியன. தக்கணப்படையெழுச்சியை அவர் தொடங்காமல் இருந்திருப்பின் நலமாயிருந்திருக்கும். ஏனெனின் அவர் முறையை அவர் பின்வந்தோர் பின்பற்றியதால் தீய விளைவுகள் ஏற்பட்டன.

ஆட்சிவினைஞர். அக்பரின் ஆட்சி அமைப்புமுறை உலகிலேயே மிகவும் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. முகலாய்ப் பேரரசுக்கு அது வலிமையை அளித்தது. அக்ப ருக்குப்பிறகு ஒரு நூற்றாண்டுவரை பேரரசு நிலைத்திருந்தமைக்கு அக்பரின் ஆட்சிமுறைச் சிறப்பே காரணமாகும். "ஆட்சி வினைஞரின் அலுவல்களைப்பற்றிய அக்பரின் கொள்கை இக் காலத்துக் கோட்பாட்டை ஒத்ததாகும்."[1] அவருடைய ஆட்சி யின் குறைபாடுகள் முன்னர்க் குறிப்பிடப்பட்டன. நிலவரித் திட்டம், சமயப்பொறை, உள்நாட்டினர் ஆற்றலைப்பெருக்கல் முதலியனவற்றைப்பற்றி அக்பர்கொண்ட கொள்கைகள் பிற் காலத்து ஆங்கிலேயர் ஆட்சிக்கு உதவியாயிருந்தன.

சமய, சமூக, சீர்திருத்தக்காரர். அக்பர் தாமே ஒரு தீர்க்க தரிசியாக விளங்க முயன்றது பயனுறவில்லை. அவருடைய தீன் இலாஹிக்கொள்கை தோல்வியுற்றது. எனினும் அவர் அமைத்திருந்த சூழ்நிலை இளவரசர்களிடம் சமயத் துறையில் பரந்தநோக்கத்தை உண்டாக்கியது. ஜஹாங்கீரும், ஓரளவு ஷாஜஹானும் சமயப்பொறைக் கொள்கையை அக்பரிடமிருந்து அறிந்துகொண்டனர். ஔரங்கசீப், குரானை அடிப்படையாகக் கொண்ட அரசியலை அமைக்க இயலாமைக்கு அக்பரின் சீர் திருத்தங்கள் காரணமாகும். அக்காலத்து சூழ்நிலையில் சமயச் சார்பற்ற அரசியலை அமைப்பது எளிய செயலன்று. ஆகவே அக்பர் அதை அமைக்க முயன்றது மிகவும் போற்றற்குரிய தாகும். உலகமதம் ஒன்றை அமைக்க அக்பர் செய்த முயற்சி புகழத்தக்கது. அதன் காரணமாக அவருடைய பேரரசிலாவது ஒற்றுமை உறுதிப்படும் என அவர் நம்பினர்.

இலக்கியம் கலை, ஆகியவற்றின் புரவலர். அக்பர் கலை யையும் இலக்கியத்தையும் முழுவிருப்பமின்றிக் கடமைக்காக மட்டும் ஆதரிக்கவில்லை. அவற்றை ஆதரிப்பதின் சிறப்பை அவர் நன்கு உணர்ந்திருந்தார். கலைகளை வளர்க்கும் அவர் முயற்சியில் அவருடைய தேசீயக் கொள்கைகள் இணைந்திருப்

1. J. R. A. S., (1918), pp 345—6

பதைக் காண்கிரும். "இந்து முகம்மதிய கட்டடக் கலைகளி லுள்ள மிகச்சிறந்த பண்புகளை இணைத்து, உண்மையான தேசீய இந்தியக் கலைமுறை ஒன்றை அவர் தோற்றுவித்தார்." இக்காலத்து இந்தியக் கலைஞர்களுக்கும் அது ஒரு சிறந்த மேல்வரிச் சட்டமாக (Model) அமைந்துள்ளது என்று சிலரால் கருதப்படுகிறது. முகம்மதிய இந்திய திறமைக் கூறு களின் வளர்ச்சிக்கு அவர் மிகுந்த ஊக்கமளித்தார். இந்து இலக்கியங்களில் முகம்மதியர்களின் கருத்தை ஊன்றச்செய்த பெருமை அக்பருக்குரியது. 17'ம் நூற்றுண்டின் முற்பாதியில் காணப்பட்ட பண்பாட்டு முன்னேற்றம் அக்பர் அளித்த ஊக் கத்தை அடிப்படையாகக் கொண்டது. ஷெர்ஷாவைப் பற்றிய வரலாற்று இலக்கியத்தின் பெரும்பகுதி தோன்றக் காரணமா யிருந்தவர் அவருக்குப் பகையாயிருந்த குலத்தில் உதித்த பெருந்தன்மை வாய்ந்த அக்பர் ஆவர்.

**உயர்ந்த குறிக்கோள்.** அக்பர் சிறந்த குறிக்கோளுடன் கூடிய ஆட்சியை அமைத்திருந்தார். அவருடைய பெருமைக்கு அடிப்படையாக உள்ளது அவருடைய சிறந்த நோக்கமாகும். அக்பர் வெறும் கற்பனை நோக்கங்கள் கொண்டவரென்று கூறி விட முடியாது. அவர் தலைசிறந்த செயல்திறம் மிக்க வீரராகத் திகழ்ந்தார். அரசியலிலும் ஆட்சி முறையிலும் பண்பாட்டு முன்னேற்றத்திலும் அக்பர் தேசீய நோக்கங்களைப் புகுத்தினுர். மான்சப்தார்களில் மிகுதியான இந்துக்கள் காணப்படாமை, அவருடைய குறிக்கோளுக்கு முரணுன ஒன்று என்று கருதுவது தவறு. சிறிது சிறிதாகவே அக்பர் சீர்திருத்தங்களைப் புகுத்த விரும்பினுர். பொறுப்பு வாய்ந்த உயர்ந்த பணிகளில் இந்துக்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். இந்தியா இந்துக்களின் நாடு என்பதை உணர்ந்த அக்பர் முகலாயப் பேரரசை உண்மை யில் ஒரு இந்தியப் பேரரசாக அமைக்க விரும்பினுர். குரானை அடிப்படையாகக் கொண்ட ஆட்சிமுறை தவருனது என்பது அவரது கொள்கை. பெரும்பான்மையான மக்களின் கருத்துப் படி அவர் கொள்கை உருவாக்கப்பட்டிருந்தது. அரசன் மக்க ளின் தந்தையாக இருக்க வேண்டுமென்பது அக்பரின் குறிக் கோள்.

**அரசியல் வல்லுநர்.** அரசியலில் பிறிதின் சார்பற்ற தன்மை அக்பரிடம் ஓரளவு இருந்தது. அவருடைய தேசீயப் பண்பே அதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அபுல்பஸல், தோடர்மால், ஷெர்ஷா முதலியவர்களுக்கு அக்பர் கடப்பாடுடையவர் என்பதை மறுப்பதற்கில்லை. திறமை வாய்ந்தோரைத் தேர்ந்தெடுப்பதில் அவருக்கிருந்த ஆற்றல் போற்றத் தக்கது. தமது பணியாளரின் திறமையை அவர் நன்கு பயன்படுத்திக் கொண்டார். இப்பண்பைப் பொறுத்தவரை அக்பரை அகஸ்தஸிற்கு ஒப்பிடலாம்.

அதிகாரம் 11

# பதினாறும் நூற்றாண்டில் தென் இந்தியா

## பகுதி I

### ஒரிஸ்ஸாவும் காண்டேஷ் நாடும்

**ஒரிஸ்ஸா.** ஓரிஸ்ஸாவில், முதல் முஸ்லிம் படையெழுச்சி 1205'ம் ஆண்டில் ஏற்பட்டது. முகம்மதுபின் பக்தியார், திபெத்தில் படையெடுப்பதற்கு முன் ஓரிஸ்ஸாவைத்தாக்கினார். அதன் பிறகு பல படையெடுப்புக்கள் ஒன்றன்பின் ஒன்றாக அங்கு நடைபெற்றன. பதினைந்காம் நூற்றாண்டில், வங்காள சுல்தானியர், பிரோஸ்துக்ளக், விசயநகரத்தின் முதலாம்புக்கன் முதலிய பலருடைய படைகள் அந்நாட்டைத் தாக்கின. ஓரிஸ்ஸாவில் ஆட்சிபுரிந்துவந்த கீழைக்கங்க குலத்தின் இறுதி மன்னனான நான்காம் நரசிம்மர் (1379—1425), மாளவம், ஜான்பூர், பாமனி அரசு முதலிய நாடுகளின் தலைவர்களால் மிகவும் துன்புறுத்தப்பட்டார். நான்காம் பானுதேவர் என்பாரே இறுதியான கங்கமன்னர் என்றும் ஏறத்தாழ 1435'ல் கபிலேந்திரர் என்பார், முறையற்ற வகையில் அரியணையைக் கைப்பற்றிக் கொண்டாரென்றும் ஓரிஸ்ஸாவின் உள்நாட்டுச் செய்திக் கோவை குறிப்பிடுகிறது. ஆனால் பானுதேவரைப் பற்றிய கல்வெட்டு ஒன்றையும் காணோம். ஆதலால், கீழைக்கங்கரின் வீழ்ச்சிக்குப் பிறகு ஓரிஸ்ஸாவின் சிறப்பு மீட்கப்பட்டதுடன்

மேலும் விரிவாக்கப்பட்டமைக்குக் கபிலேந்திரரின் சூரியகுலம் காரணமாகும் என்று நாம் கூறலாம்.

கபிலேந்திரர் (ஏறத்தாழ 1435—70) கங்கமன்னரிடம் அமைச்சராயிருந்தவர். சுமார் 1435'ல் அரியணையேற்ற அவர், தம் பேரரசை ஹூக்ளியிலிருந்து கீழ்க்கடலோரத்தில் காவிரி வரை விரிவுறச் செய்தார். கஜபதி (யானைகளின் தலைவன்) என்று அவரால் சூட்டிக்கொள்ளப் பெற்ற பட்டம் ஓரிஸ்ஸா மன்னர் யாவருக்கும் பொதுவாகியது. கபிலேந்திரர், "கௌடேஸ்வரன் (வங்காள மன்னன்) கருநாடநாடு, குல் பர்கா ஆகியவற்றின் ஒன்பது கோடி மக்களுக்குத் தலைவன்" முதலிய பட்டங்களையும் பெற்றிருந்தார்.

புருஷோத்தம கஜபதியின் (1470—97) பின்போந்த அவர் மகனை பிரதாபருத்திரர் (1497—1541) காலத்தில் ஓரிஸ்ஸாவின் வீழ்ச்சி தொடங்கியது. அவருடைய தலைமை அமைச்சராயிருந்த ராமானந்த ராயர், 1510'ல் பதவியைத் துறந்துவிட்டு சைதன்யரின் மாணவரானார். கஜபதிகள், சைதன்யரைப் போற்றினர்.

ஓரிஸ்ஸா, விசயநகரத்துடன் போரிட வேண்டியதாயிற்று. போரில் வெற்றியடைந்த கிருட்டின தேவராயர், பிரதாபருத்திர ரைப் பெருந்தன்மையுடன், கிருஷ்ணா ஆற்றுக்கு வடக்கில் உள்ள பகுதி யாவற்றையும் ஆளுமாறு செய்தார். தோல்வி யுற்றவரின் மகளை வெற்றிபெற்ற மன்னன் மணந்துகொண்டார். விசயநகரப் பேரரசர், "கஜபதி சப்தாங்கஹரணம்" (கஜபதி யின் தலைமை அதிகாரத்தின் ஏழு அங்கங்களை அழித்தவர்) என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டார். ஏறத்தாழ 1522'ல் கோல்கொண்டா, ஓரிஸ்ஸாவைத் தாக்கித் துன்புறுத்தியது. பிரதாபருத்திரர், வைணவ சமயத்தை மீண்டும் சிறப்புறச் செய்து அதில் கருத்தூன்றியிருந்ததால் பேரரசு நன்கு காக்கப் படவில்லை என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். "ஓரிஸ் ஸாவின் உயர்வும் சிறப்பும் வீழ்ச்சியடைந்தமைக்கு அந்நாட்ட வர் சைதன்யரின் விழுமிய பக்தி மார்க்கத்தைப் பின்பற்றியது

முக்கிய காரணமாகும்."[1] முகுந்த ஹரிசந்தன என்ற இறுதி கஜபதி, 1568'ல் ஆப்கானியரால் முறியடிக்கப்பட்டார். வட ஒரிஸ்ஸாவை ஆப்கானியர் கைப்பற்றிக்கொண்டனர். 1592'ல் இராசாமான்சிங் அப்பகுதியை வென்றூர். ஆனல் ஜஹாங்கீர் ஆட்சிக்காலத்தில்தான் முகலாயர் ஆட்சி அங்கு நிறுவப்பெற்றது. தென் ஒரிஸ்ஸா, 1640'ல் கோல்கொண்டாவால் இணைத்துக் கொள்ளப்படும் வரை இந்துத் தலைவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

காண்டேஷ். இரண்டாம் அடில்கான், சிறப்புவாய்ந்த பருக்கி மன்னர்களில் இறுதியானவராவர், அவர் உடன் பிறந்தாரான தாவூத் (1501—8) ஆட்சிக்காலத்தில், காண்டேஷ் மாளவத்துக்கு அடங்கவேண்டியதாயிற்று. ஆமது நகரம், பேரார், குஜராத் முதலிய நாடுகள், காண்டேஷின் அலுவல்களில்தலையிட்டு வந்தன. குஜராத்துக்கும் கான்டேஷுக்கும் நெருங்கிய தொடர்பு நிலைத்தது, 1564'ல் அக்பரின் அதிகாரத்தைக் காண்டேஷ் ஏற்றுக்கொண்டது. இராசா அலிகான் (நான்காம் அடில்ஷா) (1577—97), என்ற காண்டேஷ் மன்னர் அக்பருக்குத் திறை செலுத்த மறுத்தார். முகலாயருக்குப் பகையாக தக்கணநாடுகளை ஒற்றுமைப்படுத்த வேண்டுமென்பது அவருடைய பேரவா. ஆனல் அவர் எதிர்பாரா வகையில் ஆமதுநகரத்துக்குப் பகையாக அக்பருடன் ஒத்துழைக்க வேண்டியது இன்றியமையாததாயிற்று. அவர் மகனை பகதூர்ஷா (1597—1601), உறுதியுடன், முகலாயர் முன்னேறுவதை முயன்று முன்னின்று எதிர்க்கமுற்பட்டார். ஆதலால் அக்பர், 1600'ல் பர்ஹான்பூரையும் அடுத்த ஆண்டில் அசிர்கார் கோட்டையும் கைப்பற்றிக்கொண்டார். காண்டேஷ் ஒரு முகலாய மாகாணமாக்கப்பட்டது. தானியல் இளவரசரைச் சிறப்பிக்கும் வகையில் அம்மாகாணம் தாண்டேஷ் என்ற புதிய பெயரைப் பெற்றது. பகதூர்ஷா, சமயப் பற்றும் இரக்க மனப்பான்மையும் பெற்றவரா யிருந்தபோதிலும் மிகுந்த சிற்றின்ப விருப்பமுள்ளவராகவும் பிடிவாதத்தன்மை

1. R. D. Banerji, History of Orissa, I, (1930), p. 336.

பெற்றவராகவு மிருந்தார்.[1] பருக்கியர், பதினைந்தாம் நூற்றுண்டிலிருந்தது போலவே பதினாறும் நூற்றுண்டிலும் கட்டடக் கலையில் கருத்துச் செலுத்திவந்தனர். தப்தி பள்ளத்தாக்கில் நீர்ப்பாசனத்திற்காகப் பல அமைப்புக்களை ஏற்படுத்தினர். தலைநகரில் பல மாளிகைகளை எடுத்தனர். அவற்றில் சிலவற்றை இன்றும் காணலாம். 1588'ல் இராசா அலிகானால் கட்டப்பட ஜம்மிமஸ்ஜிட் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க வேலைப்பாடுகளுடன் கூடியது.[2]

## பகுதி 2

### பேரார் இமாட்ஷாஹியர்

பாமனிப் பேரரசின் நான்கு மண்டலங்களில் ஒன்றான பேராரை, பிற்காலத்தில், காவன், வடபேரார், தென்பேரார் என்று இரண்டாகப் பிரித்தார். பேராரில் பத்துல்லா என்பார் இமாட்ஷாஹி குலத்தினாட்சியைத் தோற்றுவித்தார். முதலில் ஒரு அந்தணராயிருந்த அவரை, விசயநகரத்தில், அகமது என்ற துறவி கைதியாக்கினார் முகம்மதிய மதத்தைத் தழுவியபின் அவர் பேரார் ஆட்சித் தலைவரின் கீழ்ப் பணியாற்றி வந்தார். மூன்றும் முகம்மது என்ற பாமனி சுல்தானின் ஆட்சிக்காலத்தில், பத்துல்லாவுக்குப் பேராரின் தலைவர் பதவி கிடைத்தது. அவ்வமயம் இமாட்-உல்-முல்க் என்ற பட்டத்தையும் அவர் பெற்றார். 1480'ல் கவில் மாகாணத்தின் தலைமைப் பதவியும் அவருக்குக் கிடைத்தது. காவன், கொலைசெய்யப்பட்ட பிறகு, பத்துல்லாவுக்கு மத்திய அரசியலாரிடமிருந்த நம்பிக்கை மறைந்தது. 1490'ல் அவர் உரிமைபெற்றிருந்த போதிலும் அரசப்பட்டத்தைச் சூட்டிக்கொள்ளவில்லை. அவர் மகனான அலாவுதீன் (1504—'29) மாகூர் மாகாணத்தையும் தம் நாட்டுடன் இணைத்துக்கொண்டார். ஆமதுநகரத்துக்கும் பேராருக்கும் அடிக்கடி போர்நடந்து வந்தது. பேராருக்குரிய இரண்டு இடங்களை ஆமதுநகரம் கைப்பற்றிக்கொண்டது.

---

1 Indian Antiquary (1918), P. 183.
2. C H. I. IV, P. 575.

அலாவுதீனின் மகன் தார்யாவின் (1529—'62) ஆட்சிக் காலத்திலும் பக்கத்து நாடுகளுடன் போர் நடத்தவேண்டியது பேராருக்கு இன்றியமையாததாயிற்று. 1554'ல், பேரார், பீஜப்பூருக்குப் பகையாக ஆமதுநகருடன் இணைந்துகொண்டது. ஆனால் அந்த நட்புறவு தொடர்ந்து நீடிக்கவில்லை. 1564'ல் விசயநகரை அழிக்கும் நோக்கத்துடன் ஆமதுநகர், பீஜப்பூர், பீடார், கோல்கொண்டா ஆகிய நாடுகள் அமைத்த கூட்டுறவில், பேரார் சேரவில்லை. மேலும், விசயநகர மன்னருக்கு உதவியாக, பேரார், ஆமதுநகரில் படையெடுத்தது. அச் செயல்களுக்காக 1566'ல் ஆமதுநகரும் கோல்கொண்டாவும் பேராரில் படையெடுத்தன. ஆனால் கைக்கூலி கொடுக்கப் பட்டதால் பீஜப்பூர்படை அகன்றுவிட்டது. பர்ஹான் இமாட்ஷா (1562 - '74) ஆட்சிக்காலத்தில் துபால்கான் அமைச்சராகப் பணியாற்றிவந்தார். 1572'ல் ஆமதுநகரும் பீஜப்பூரும் மீண்டும் கூட்டுறவு அமைத்துகொண்டு, பேராரை ஆமதுநகரமும் கோல்கொண்டாவை பீஜப்பூரும் கைப்பற்றிக் கொள்ளத் திட்டமிட்டன. துபால்கான், பீடார், காண்டேஷ் நாடுகளின் உதவியை நாடினர். ஆனால் அம்முயற்சி பயனளிக்கவில்லை. 1572'ல் ஆமதுநகரம் பேராரில் படையெடுத்து 1574'ல் கவில் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டது. இமாட்ஷாஹிகுல இறுதி மன்னர் தம் குடும்பத்துடனும் துபால்கானுடனும் ஆமது நகரத்தில் சிறைப்பட்டிருந்து பின் அவர்கள் யாவரும் "இறந்தனர்". 1596'ல் ஆமதுநகர், பேராரை அக்பருக்கு வழங்கியது.

## பகுதி 3

### ஆமதுநகரத்தின் நிஸாம்ஷாஹியர்

ஆமதுநகரத்தின் நிஸாம்ஷாஹி குலத்தைத் தோற்றுவித்தவர் மலிக்ஆமது (1490—1509) என்பாராவர். அவர், மலிக் ஹாஸன் பஹ்ரி என்பாரின் மகனர். (மலிக்ஹாசன், விசயநகரத்துக்குச் சென்ற ஒரு அந்தணரின் மகன் என்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது.) காவன் கொலையுண்டபின்,

மலிக்ஹாசன், அரசியலில் மிக உயர்ந்த பதவியில் அமர்த்தப் பெற்றார். அவர் மகன் ஆமது, "நிஸாம் உல்மூல்க்" என்ற பட்டத்தையும் தௌலத்தாபாத் மண்டலத் தலைமைப்பதவி யையும் அடைந்தார். பிறகு அவர் தம் தந்தையால் பூனாவுக் கண்மையிலுள்ள ஜுன்னார் மாநிலத்துக்கு மாற்றப்பட்டனர். 1486'ல் தம் தந்தை கொலைசெய்யப்பட்டாரென்ற செய்தியை அறிந்த ஆமது, பாமனி சுல்தானிடம் வெறுப்புக்கொண்டார். 1490'ல், பீஜப்பூர், கவில் ஆட்சித்தலைவர்களைத் தம்முடன் சேர்ந்துகொண்டு உரிமை அறிக்கை வெளியிடுமாறு தூண்டி னார். 1494'ல் அவர் ஆமதுநகரை நிறுவினார். அதுவே புதிய நாட்டின் தலைநகராகியது. முதலில் ஜுன்னார் தலை நகராயிருந்தது. 1499'ல் தௌலதாபாத் கைப்பற்றப்பட்டது. ஆமதுவின் மகன் I'ம் பர்ஹான் (1509—'53) ஏழுவயதுச் சிறுவாரயிருக்கும்பொழுது பட்டமேற்றார். உண்மையில் ஆட்சி நடத்திய அவருடைய அமைச்சர் முகமல்கான், பேரார், ஆமதுநகரில் படையெடுத்ததைத் தடுத்து வெற்றிகொண்டார். பீஜப்பூரின் இஸ்மெயில் அடில்ஷாவின் உடன்பிறந்தாளை, பர்ஹான், 1524'ல் மணம்புரிந்துகொண்டபோதிலும் ஆமது நகருக்கும் பீஜப்பூருக்குமிடையே பகைமை உறவு நீடித்து வந்தது. 1525'ல் ஆமதுநகர், பேரார், பீடார் ஆகிய மூன்று நாடுகளும் பீஜப்பூரைத் தாக்கின. அடில்ஷாஹி குலத்தைப் போலவே நிஸாம்ஷாஹி குலத்தவரும் சூழ்ச்சிகளும் கலகங் களும் செய்துகொண்டு அண்டை நாடுகளுடன் போராட்டம் நிகழ்த்தி வந்தனர். பர்ஹானின் மகன் I'ம் ஹுசேய்ன் (1553—'65) பீஜப்பூருடனும் போர்ச்சுகீசியருடனும் போரிட் டார். 1558—9'ல் பீஜப்பூர், விசயநகரத்துடனும் கோல் கொண்டாவுடனும் இணைந்துகொண்டு ஆமதுநகரைத்தாக்கியது. விசயநகர மன்னர் இராமராயர் விதித்த கட்டுப்பாடுகளை, ஹுசேய்ன் ஏற்றுக்கொள்ள நேரிட்டது. 1562'ல் ஆமது நகர், கோல்கொண்டாவுடன் சேர்ந்துகொண்டு, பீஜப்பூரையும் விசயநகரையும் எதிர்த்துப் படையெடுத்தது. ஆனால் அப் போரில் வெற்றிகொண்ட விசயநகரம், 1563'ல் ஆமதுநகரை முற்றுகையிட்டது. அக்காலத்தில் இந்துக்கள், முகம்மதியரின் உள்ளம் கொதிக்கும் வகையில் அழிவுச் செயல்களாற்றினர்.

பள்ளிவாசல்கள் பாழாக்கப்பெற்றன. முகம்மதியப் பெண்டிர் மிகவும் இழிவாக நடத்தப்பெற்றனர். இராமராயர், அளவு கடந்து முகமதியரைத் துன்புறுத்தியதால் முஸ்லிம் நாடுகள் புத்துணர்ச்சிபெற்று ஒற்றுமையடைய முற்பட்டன. 1564'ல் ஆமதுநகரம், பீஜப்பூர், பீடார், கோல்கொண்டா ஆகியநாடுகள் ஒரு கூட்டுறவை அமைத்துக்கொண்டன. அக்காலத்தில் 1'ம் ஹுசேய்னின் மகள் சந்த்பீபீ பீஜப்பூரின் 1'ம் அடில்ஷாவை மணந்துகொண்டாள். முகமதியக் கூட்டுறவுநாடுகள், தலைக் கோட்டைப் போரில் (1565) விசயநகரத்தை முறியடித்து, வெற்றி பெற்றன. இந்துப் பேரரசுத் தலைநகர் ஆறு மாதங்கள் சூறையாடப்பட்டு அழிவுற்றது. ஹுசேய்ன், தாமே, இராம ராயரின் தலையை வெட்டினார். பழிதீர்த்துக்கொண்ட மன அமைதியுடன் சுல்தான் சில மாதங்களுக்குப்பின் இறந்தார்.

ஹுசேய்னின் மகனை முதலாம் முர்ட்டாஸா (1565-88), அரசியல் அலுவல்களில் கருத்துச் செலுத்த வில்லை. ஆதலால் ஆறு ஆண்டுக்காலம் அவருடைய தாயார் ஆட்சிமுறையை நடத்தினார். மீண்டும் பீஜப்பூருடன் அந்நாடு போர் நிகழ்த்தியது. போர்ச்சுகீசியருடன் ஆமதுநகரம் நடத்திய போரில் அந்த ஐரோப்பியர் வெற்றி பெற்றனர். அண்டை நாடுகளின் அலுவல்களில் மீண்டும் மீண்டும் ஆமதுநகரம் தலையிட்டு வந்தது. முர்ட்டாஸா மனமாருட்டம் அடைந்து தம் மகனின் ஆடைகளுக்குத் தீவைத்தார். தப்பிப்பிழைத்த அம் மகன் ஹுசேய்ன், தந்தையைக் கொலை செய்துவிட்டுத் தாம் பட்டம்பெற்றார். இவரும் மனமாருட்டமடைந்து தம்தந்தையைப் போலவே செயல் புரிந்ததால், 1589'ல் கொல்லப்பட்டார். முர்ட்டாஸாவின் உடன் பிறந்தானுடைய மகனாக இஸ்மெயில் (1589—91) பின்னர் சுல்தானானார். இஸ்மெயில், ஒரு போரில் முறியடிக்கப்பட்டபின் அவருடைய தந்தை இரண்டாம் பர்ஹான் (1591—5) அரசரானார். அவர், ஷீயா சமயப் பிரிவுக்கு ஏற்பட்டிருந்த இடையூற்றை நீக்கி அந்தச் சமயத்தை உறுதிப்படுத்தினார். 1594'ல் பீஜப்பூர் சுல்தான் அவரைத் தோற்கடித்தார். பர்ஹான், தபதபா என்ற வரலாற்றறிஞரை ஆதரித்தார். அச்சுல்தானுக்கும் ஒரு ஆப்ரிக்கப் பெண்ணுக்கும்

பிறந்த இப்ரஹிம் (1595) நான்கு மாதங்கள் ஆட்சிபுரிந்தபின், பீஜப்பூருடன் நடத்திய போரில் மாண்டனர். அதன் பின் ஆமதுநகரில் உள்நாட்டுக் குழப்பம் தோன்றியது.

சந்த்பீபீ (முதலாம் ஹுசேய்னின் மகள்; பீஜப்பூர் அலி அடில்ஷாவின் மனைவி) ஆமது நகரில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த முயன்ருர். நாட்டில் அவ்வமயம் நான்கு கட்சிகளிருந்தன. நால்வர் அரியணைக்காகப் போட்டியிட்டனர். சந்த்பீபீ, இப்ராஹிமின் மகன் பஹதூரை ஆதரித்தார். அவருக்குப் பகையான ஒரு கட்சியினர், முகலாயப் பேரரசரை அந்நாட்டு அலுவலில் தலையிடுமாறு அழைத்தனர். மூராட் இளவரசரும் அப்துர்ரஹீமும் 1596'ல் ஆமதுநகரை முற்றுகையிடத்தொடங்கினர். சந்த்பீபீ வீரப்போர்புரிந்து நாட்டைக் காப்பாற்ற முயன்ருர். சூழ்நிலைகாரணமாக, பேரார் நாட்டை முகலாயருக்கு அளிக்க அவர் இணங்கினர். ஆனல் அவ்வமைதி உடன்பாடு சிறிதுகாலமே நிலைத்திருந்தது. 1597'ல் ஆமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய மூன்றுநாடுகளையும், அப்துர்ரஹீம் சோனப்பேட்டை (ஐதராபாத் நாட்டில் உள்ளது) யில் முறியடித்தார். ஆமதுநகரில் உள்நாட்டுக் குழப்பம் பெருகியது. சந்த்பீபீயை அவரால் அமர்த்தப்பட்ட அதிகாரியே எதிர்த்துத் தாக்கினர். இறுதியாக 1600'ல் அவர் மீண்டும் ஆமதுநகரைக் காக்கும் நோக்கத்துடன் தானியல் இளவரசருடனும் அப்துர்ரஹீமுடனும் போரிட்டார். ஆனல் அவள் தோல்வியின் அறிகுறியைக் கண்டவுடன் பகைவரிடம் அடைக்கலமடைவது சாலச் சிறப்புடையதாகுமென்று அறிவுரை கூறினர். முகலாயருக்குச் சார்பாக நம்பிக்கைக்கேடான வகையில் அவள் செயலாற்றுவதாகக் கருதிய மக்கள் அவரைக் கொலைசெய்தனர். "தக்கண வரலாற்றில் மிகவும் மேன்மை வாய்ந்த வீரப்பெண்மணி அழிந்தார். உடலழகுடன் உள்ளத்தின் உயர்வும் அவரிடமிருந்தது. இளமையிலேயே கைம்பெண்ணன அவர் தம் பெருமைக்கு இழுக்கு தேடிக்கொள்ளவில்லை......... இணையற்ற பற்றுறுதி அவரிடமிருந்தது. அரசியல் நெருக்கடிகளேற்பட்ட காலங்களில் அவர் தம் கடமையை ஆற்றத்தவறியதில்லை.

அவருடைய வீரம் மிகவும் போற்றற்குரியது என்பதில் ஐயமில்லை. பலசமயங்களில் அவர் கடும் சோதனைகட்கு உட்படுத்தப்பெற்ருர். வருந்தத்தக்க அவர் முடிவு யாவரையும் மனமுருகச்செய்யும்.''[1] ஆமதுநகரம் விரைவில் கைப்பற்றப் பட்டது. 1596'ல் முடிசூடிய பஹதூரை, முகலாயர் சிறைப் படுத்தினர். ஆமதுநகரத்தின் ஒருபகுதி முகலாயப்பேரரசுடன் இணைக்கப்பட்டது. ஆமதுநகரைக் காப்பாற்ற சந்த்பீபீ போர் வீரரைப்போல் கவசமணிந்து கையில் உருவிய உடைவாளைத் தாங்கி, இரவு முழுவதும் இமைகொட்டாது கண்விழித்து, தம் படை வீரர்களுக்கு ஊக்கமளித்துக் கொண்டு நின்ற இடத்தை இன்றைக்கும் ஆமதுநகர மக்கள் மிக்க பெருமையுடன் குறிப்பிடுகின்றனர்.

## பகுதி 4

### பீஜப்பூர் அடில்ஷாஹியர்

**யூசுப் (1490—1510).** பீஜப்பூரின் அடில்ஷாஹியர் குலத்தைத் தோற்றுவித்த யூசுப் என்பார், பாரசீகத்தைத்சேர்ந்த ஒரு துருக்கியர் என்று நாம் கருதலாம். 1459'ம் ஆண்டில் அவர் இந்தியா வந்தடைந்தார். பீடாரில் முகம்மதுகாவன், அவரை விலைக்கு வாங்கினர். 1467'ல் அடில்கான் என்ற பட்டம் அவருக்குக் கிடைத்தது. சுமார் 1472'ல் அவர், தௌலத்தாபாத்தின் ஆட்சித் தலைவராக அமர்த்தப்பெற்ருர். காவன், கொலையுண்ட பின், யூசுப், "அயலவர்குழு"வின் தலைவரானர். II'ம் முகம்மதுவுடன் ஒத்துழைக்க அவர் மறுத்தார். தௌலத்தாபாத்தையும் விட்டு அகன்ருர். தம் தலைவர் காவனுக்குரியதாயிருந்த மானியப் பகுதிகளான பீஜப்பூரையும் பெல்காமையும் ஆட்சிபுரியத் தொடங்கினர். அக்காலத்தில் அவர், தாம் வென்ற மராட்டியத் தலைவனின் மகளை மணந்து கொண்டார் 1490'ல் பீஜப்பூரில் அவருடைய உரிமை ஆட்சி தொடங்கியது. யூசுப் அடில்கான், சிறந்த வீரமும்

1. Meadows Taylor, A Student's Manual of the History of India (1st Edition 1870, 4th Edition, 1879), pp. 315—6

அறிவுத்திறமையும் பெற்று விளங்கினர். ஷீயா மதமே அரசியலார் மதம் என்று அவர் அறிவித்தபோதிலும் சமயத்துறையில் அவர் பிறரைத் துன்புறுத்தவில்லை. இந்துக்களும் பொறுப்புள்ள பதவிகளில் அமர்த்தப் பெற்றனர். உள்நாட்டுச் செய்திகளும் கணக்குக் குறிப்புகளும் மராட்டிய மொழியில் எழுதப் பெற்றன. 1510'ல் போர்ச்சுகீசியரால் கைப்பற்றப்பட்டிருந்த கோவாவை, யூசுப், மீட்டுக்கொண்டார். ஆனல் யூசுப்பின் மரணத்திற்குப் பிறகு போர்ச்சுகியர், அப்பகுதியைத் தம்வசப்படுத்திக் கொண்டனர். யூசுப் அண்டை நாடுகளுடன் திறமையாகப் போர்கள் நிகழ்த்திப் பீஜப்பூரின் சிறப்பை உயர்த்தினர். "அரசியல் திறமை, அறிவாற்றல் பொருந்திய அவருடைய அருஞ்செயல்கள், வீரம் முதலியவற்றைப் பொறுத்தவரை அவருக்கு இணை வேறுயாரும் இல்லை. அவரை ஆதரித்த அவருடைய தலைவருடன் ஒப்பிடுமிடத்து அவருக்கு யூசுப் கீழ்த் தரமானவர் என்று கூறலாம்."[1]

**இஸ்மெயில் (1510—34).** யூசுப்பின் மகன் இஸ்மெயில் பட்டமேற்கும் பொழுது அவருக்கு வயது பதின்மூன்று. அவ்வமயத்தில் குழப்பம் விளைவிக்க முயன்ற பகைவர்களை அவருடைய தாயார் ஓரளவு அடக்கி ஆட்சியை உறுதிப்படுத்தினர். கிருட்டினதேவராயர் ராய்ச்சூர் தோ ஆப் பகுதியையும் (1511—2) போர்ச்சுகீசியர் கோவாவையும் (1510) கைப்பற்றிக் கொண்டனர். ஆனல். பீடார், கோல்கொண்டா, ஆமதுநகரம் முதலிய நாடுகளின் படைகள் படையெடுத்த காலை, பீஜப்பூர் வீரர் அவற்றை எதிர்த்து விரட்டி வெற்றி கொண்டனர். பீடாரிலிருந்த பாரசீக அரசியல் தூதுவருக்கு உதவி செய்தமைக்காக, இஸ்மெயிலை, பாரசீகத்தின் ஷா இஸ்மெயில் பாராட்டி, அவருக்கு அரசர் பட்டத்தை அளித்தார். தோ ஆப் பகுதியைத் திரும்ப அடைவதற்காக முயற்சிசெய்த இஸ்மெயிலை, கிருட்டினதேவராயர் 1520'ல் ராய்ச்சூரில் முறியடித்தார். மேலும் ராயர், குல்பர்காவை அழித்தார். இஸ்மெயிலின் உடன்பிறந்தாளை முதலாம் பர்ஹான்நிஸாம்ஷா மணம் புரிந்திருந்த போதிலும், ஆமதுநகர், பேரார் பீடார்

1. Ibid. pp, 198 - 9.

ஆகியன ஒன்றுசேர்ந்து 1525'ல் பீஜப்பூரின்மேல் படையெடுத்தன. ஆனால் அப்படையெழுச்சி தோல்வியில முடிந்தது. கிருட்டினதேவராயர் இறந்த பிறகு, 1530'ல் பீஜப்பூர் சுல்தான், ராய்ச்சூர் தோஆப் பகுதியைக் கைப்பற்றிக்கொண்டார். 1534'ல் இஸ்மெயில் பீடாரின் உதவியுடன் கோல்கொண்டாவின் மேல் படையெடுத்து வெற்றி கொண்டாரெனினும் அதே சமயத்தில் இறந்துவிட்டார். இஸ்மெயிலின் வாழ்க்கை வெற்றியுடன் கூடியதென்றே கூறவேண்டும். அவர் பல பண்புகளில் அவருடைய தந்தையை ஒத்திருந்தார். பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டாக அவர் விளங்கினர். ஓவியம், இசை, செய்யுள் இலக்கியம் முதலியவற்றில் அவருக்கு மிகுந்த தேர்ச்சி இருந்தது. அவர் அறிஞர்களை ஆதரித்தார். போர்த்திறமை மிக்க அவர், போர் வீரர்களின் அன்பைப் பெற்றிருந்தார்.

முதலாம் இப்ரஹிம் (1535—38). இஸ்மெயிலின் மூத்தகுமாரரான மல்லு (1534—5) நெறிகெட்டவரா யிருந்ததால் அரசுகட்டிலினின்று விலக்கப்பட்டார். ராய்ச்சூரில் அச்சுதராயர் அவரைத் தோற்கடித்ததும் குறிப்பிடத்தக்கது. பின்பட்டமேற்ற அவருடைய இளவல் இப்ரஹிம், சுன்னி மதத்தை அரசியலின் சமயமாக்கினர். மராட்டியும் கன்னடமும் அரசாங்க மொழிகளாயின. ஏறத்தாழ 1536'ல் இப்ரஹிம், விசயநகரத்தின் உள் துறைச் செய்திகளில் தலையிட்டு ராயரை அடிபணியச் செய்தார். மிகுந்த பரிசில்களையும் இந்து அரசரிடமிருந்து பெற்ருர். ஆமதுநகரம், பீடார், கோல்கொண்டா, விசயநகரம் ஆகிய நாடுகள் பீஜப்பூருக்குப் பகையாக 1543'ல் ஏற்படுத்திய கூட்டுறவை, இப்ரஹிம் அழித்தார் ஆனல் போர்ச்சுகீசியரை அடக்கி வெற்றிபெற அவரால் இயலவில்லை. அவருடைய நோயைக் குணப்படுத்த முடியவில்லை என்ற காரணத்தால் பல மருத்துவர்களை அவர் கொலைசெய்தது பெருங் கொடுஞ்செயலாகும். அவரைக் கண்டு அஞ்சிப்பலர் நாட்டைவிட்டு வெளியேறினர்.

அலி (1558—80). இப்ரஹிமின் மகன் அலி, மறுபடியும் ஷியா மதத்தை அரசியலாரின் சமயமாக்கினர். விசயநகருட

னும் கோல்கொண்டாவுடனும் ஒரு பெரும் கூட்டுறவை அமைத்துக்கொண்டு இவர் ஆமதுநகரைத் தாக்கினர். இராமராயர் அவ்வமயம் மசூதிகளை அழித்து முகம்மதியரை மிகவும் இழிவு படுத்தியதாக அறியப்படுகிறது. விசயநகரத்தவர் அங்கே இழைக்காத கொடுமைகளே இல்லை என்று பெரிஷ்டா குறிப்பிடுகிறர்.[1] 1564'ல் இந்துப் பேரரசுக்குப் பகையாக, பீஜப்பூர், ஆமதுநகர், பீடார், கோல்கொண்டா ஆகிய அரசுகள் ஒன்று சேர்ந்தன. மணவினை உறவு மூலமாகவும் அக்கூட்டுறவு வலிமையடைந்தது. சிறப்பாக, அலி, சந்த்பீபியை மணந்துகொண்டது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அவ்விணைப்புக்கு மூலகாரணம் ஆமதுநகர் என்று தபதபா கூறுகிறர். ஆனல், பீஜப்பூர்தான் என்று பெரிஷ்டா குறிப்பிடுகிறர். 1565'ல் விசயநகரம் அழிவுற்றது. 1572 முதல் 1578—9 வரை தம் நாட்டை தெற்கில் விரிவுறச் செய்வதில் அலி தம் கருத்தைச் செலுத்திவந்தார்.

II'ம் இப்ரஹிம் (1580—1627). பின் பட்டமேற்ற IIம் இப்ரஹிம், சுன்னி பிரிவைச் சேர்ந்தவரா யிருந்த போதிலும் சமயத் துறையில் உயர்வும் பெருந்தன்மையும் வாய்ந்த கொள்கையைப் பின்பற்றினர். 'ஜகத்குரு' என்ற பட்டத்தை இந்துக்கள் அவருக்கு அளித்தனர் என்பது குறிப்பிடத்தக்க ஒரு செய்தியாகும். அவர் நாட்டில் கிறித்தவசமயக் குழுவினருக்கு மத உரை நிகழ்த்த அநுமதி அளித்தார். அவருடைய தலையாய அலுவலாளர் பலர் இந்துக்களாயிருந்தனர். ஆட்சிமுறையில் அவர் தனிக்கருத்தைச் செலுத்தினர். தோடர்மாலின் வரித்திட்டத்தை ஒத்த ஒரு முறையைத் தம் நாட்டில் ஏற்படுத்தினர். போர்ச்சுகீசியருடன் அவர் நல்லுறவு கொண்டிருந்ததால் வாணிகம் செழிப்புற்றது. "இப்ரஹிம் அடில்ஷாவின் ஆட்சிக்காலத்தின் இறுதிப்பகுதி மிகவும் சிறப்புவாய்ந்த காலமாகும். ........அடில் ஷாஹிகுலத்தவரில் அவரே மிகவும் சிறப்பு வாய்ந்த மன்னராவர்........."[2] வழக்கம்போல் II-ம் இப்ரஹிம் காலத்திலும் பீஜப்பூருக்கும் பக்கத்திலிருந்த நாடு

1. Briggs, op. cit., III, p. 120.
2. Meadows Taylor, op. cit., p. 304.

களுக்கும் பலபோர்கள் நிகழ்ந்தன. தக்கணத்துக்கு முகலாயரால் ஏற்படக்கூடும் கேட்டை இப்ரஹிம் 1596'ல் நன்கு உணர்ந்தார். ஆகவே ஆமதுநகரம், முகலாயரை எதிர்த்த பொழுது அதற்கு உதவியாக ஒரு படையை அனுப்பினர். ஆனல் அது போய்ச் சேர்வதற்குள், சந்த்பீபீ, பேராரை முராட் இளவரசருக்குக் கொடுத்துவிட்டார். 1597'ல் பீஜப்பூரும் கோல்கொண்டாவும் அப்துர் ரஹீமால் தோற்கடிக்கப்பட்ட செய்தியை முன்னர்ப் பார்த்தோம். 1600'ல் ஆமதுநகரத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அக்பருடன் நட்பு உறவுகொள்ள விரும்பி இப்ரஹிம், தம் மகளை தானியலுக்கு 1604'ல் மணம் செய்வித்தார். ஜஹாங்கீருக்கு அவர் கப்பம் கட்டினர். 1619'ல் பீடார், பீஜப்பூருடன் இணைக்கப்பெற்றது. முடிவாக ஔரங்கசீபினல் அடில்ஷாஹி குலம் தோற்கடிக்கப்பெற்றது.

## பகுதி 5

### பீடார் பரீத்ஷாஹியர்

அமீர் காசிம் பரீத் (1487—1504). பரீத் ஷாஹி குலத்தைத் தோற்றுவித்த அமீர்காசிம் பரீத், 1482'ல் முகம்மது பாமனியை அரியணையிலமர்த்தியவர்களில் ஒருவராவர். அவர் ஒரு துருக்கியர் எனினும் தக்காணியர் கட்சியில் சேர்ந்தார். 1482—6'ல் மலிக்ஹாஸனை ஆதரித்தார். 1487'ல் அவருடைய இடத்தில் தாமே அமர்ந்தார். அதே ஆண்டில் பரீத்ஷாக்களின் உண்மையான உரிமை ஆட்சி தொடங்குகிறதெனலாம். ஆனல் ஷா என்னும் பட்டம் அக்குலத்தின் மூன்றுவது தலைவரால்தான் முதலில் சூட்டிக்கொள்ளப்பெற்றது. பீஜப்பூரின் அதிகார வளர்ச்சியைக் குறைத்துத் தம் நிலையை வலிமையுறச் செய்துகொள்வதே பரீத்ஷாவின் நோக்கமாயிருந்தது. அமீர்காசிம் விசயநகரத்துடனும் ஆமதுநகரத்துடனும் சேர்ந்துகொண்டு யூசுப் அடில்ஷாவுக்குப் பகையாகச் செயலாற்றினர். சிலசமயங்களில் அவருடன் ஒத்துழைத்தார்.

அமீர் அலி பரீத் (1504—42). அமீர்காசிமின் மகனை அலிபரீத் தீவிரமான மதப்பற்றுகொண்ட ஒரு சுன்னி (Sunni).

"தக்கணத்தின் குள்ளநரி" என்று அவரைக் குறிப்பிடுவர். யூசுப், தம் நாட்டில் ஷீயா மதத்தை நிறுவியதால் அவருக்குப் பகையாக ஒரு கூட்டுறவை அமைத்தார். ஆனால் முடிவில் அவர் நோக்கம் வெற்றி பெறவில்லை. 1514'ல் கோல் கொண்டா, ஆமதுநகரம் ஆகிய நாடுகளுடன் கூடிப் பீஜப்பூர் மேல் அவர் படையெடுத்தார். ஆனால் அது தோல்வியுற்றது. அவர், முகம்மது பாமனியைப் பெரும்பாலும் தம்முடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்குமாறு செய்திருந்தார். 1525'ல் அவர் ஆமதுநகரத்துடனும் பேராருடனும் சேர்ந்து பீஜப்பூர் மேல் படையெடுத்ததும் தோல்வியில் முடிந்தது. 1518'ல் முகம்மது இறந்தபின் பாமனி அரச உரிமையை ஒழுங்கு படுத்தி இரண்டு அரசர்களைக்கொன்றூர். 1527'ல் அவர் உரிமைவாய்ந்த ஆட்சித்தலைவராயினர். 1540'ல் பீஜப்பூரைத் தாக்கும் முயற்சியில் ஆமதுநகருக்கு அவர் உதவியளித்தார். அப்படையெழுச்சிக் காலத்தில் 1542'ல் அவர் வாழ்க்கை முடிவுற்றது.

முதலாம் அலி பரீத் ஷா (1542—79). அமீர் அலியின் மகனை அலிபரீத், ஆமதுநகர், கோல்கொண்டா, விசயநகரம் ஆகிய நாடுகளுடன் சேர்ந்து 1543'ல் பீஜப்பூரைத்தாக்கினர். ஆனல் பீஜப்பூர் அக்கூட்டுறவை முறியடித்துவிட்டது. பின் னர், அவர், 1562'ல் ஆமதுநகர், கோல்கொண்டா ஆகிய நாடுகட்குப்பகையாக, பீஜப்பூர், விசயநகரம், பேரார்முதலிய வற்றுடன் ஒத்துழைத்தார். இரண்டு ஆண்டுகட்குப் பிறகு, மற்ற முஸ்லிம் நாடுகளுடன் சேர்ந்து விசயநகரத்தைத் தாக்கினர். 1572'ம் ஆண்டு உடன்படிக்கையின்படி பீஜப் பூர் சுல்தான், பேராரையும், பீடாரையும் ஆமதுநகருடன் இணைக்க உடன்பட்டார். ஆனல் பின்னர் நிலைமை மாறி விட்டபடியால் ஆமதுநகரம் பீடாரை இணைத்துக்கொள்ள முடியவில்லை. அலிபரீத்துக்குப்பின் ஐந்து அரசர்கள் ஆட்சி புரிந்தபோதிலும் பீடாரின் சிறப்பே குன்றிவந்தது. 1591'ல் காண்டேஷ், ஆமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா முதலிய நாடுகட்குத் தூதுவரை அனுப்பிய அக்பர், பீடாரைச்சிறிதும் பொருட்படுத்தவில்லை. 1619'ல் பீஜப்பூர், பீடாரை இணைத்

துக்கொண்டது. பரீத்ஷாஹியரின் கல்லறைகள் கலைவேலைப் பாட்டுடன் கூடியவை.

## பகுதி 6

### கோல்கொண்டாவின் குதுப்ஷாஹியர்

சுல்தான் குலி (1512—43); ஜாம்ஷீத் (1543—50). கோல்கொண்டாவின் குதுப்ஹாஹி குலத்தைத் தோற்றுவித்தவர் சுல்தான்குலி (அரசனின் அடிமை) குதுப் உல்முல்க் என்ற ஒரு துருக்கியராவர். ஹமடான் (பாரசீகம்) பகுதியைச் சேர்ந்த அவர் 1495'ல் வாரங்கல்நாட்டு ஆட்சித் தலைவரானார். 1512'ல் அவர் உரிமை பெற்றார். 1514, 1530 ஆகிய ஆண்டுகளில் பீடாருக்கு உதவியாக அவர் பீஜப்பூருடன் போரிட்டார். அவருடைய மகன் ஜாம்ஷீத், 1543'ல் பீஜப்பூருடன் போரிட்டுத் தோல்வியுற்றார்.

இப்ரஹிம் (1550—80) முகம்மதுகுலி. (1580—1612). மாறிமாறி அமையும் அக்காலக் கூட்டுறவுகளில் இப்ரஹிம் பங்கு கொண்டார். விசயநகரத்துக்குப் பகையாக 1564'ல் ஏற்பட்ட கூட்டுறவுக்கு இவரே மூலகாரணம் என்று கோல்கொண்டா வரலாற்றறிஞர் ஒருவர் குறிப்பிடுகிறார். ஆனால் தபதபாவும் பெரிஷ்டாவும் வேறு வகையாகக் கூறுகின்றனரென்பதை முன்பு பார்த்தோம். தலைக்கோட்டைப் போரில் (1565) இப்ரஹிம் பங்கு பெற்றார். இவர் பொது ஆட்சி முறையில் நன்கு கருத்துச் செலுத்தினார். அவருடைய இந்துக் குடிகளின் ஆற்றலைச் சிறந்த வகையில் பயன்படுத்திக் கொண்டார். நீர்ப்பாசனமும் வாணிகமும் முன்னேற்ற மடைந்தன. அவருக்குப் பின் அரசரான அவர் மகன் முகம்மதுகுலி, தம் தந்தையின் கொள்கையைப் பின்பற்றி ஒழுகினார். 1589'ல் கோல்கொண்டாவுக்கு அண்மையில் அவர் ஒரு நகரை அமைத்தார். அவருடைய இந்து மனைவி பாக்மதியின் பெயரால் — பாக்நகர் என்று அது வழங்கப்பட்டது. அவளிறந்தபின் அவருடைய மகன் ஹைதரின் பெயர், அந்நகருக்கு அமைந்தது. (ஹைதராபாத்). 1596'ல் கோல்கொண்டாவும் பீஜப்பூரும் முகலாயருக்குப் பகையாக ஆமது நகருக்கு உதவி புரிந்தன. அடுத்த ஆண்டில் அப்துர்ரஹீம் அவற்றைத் தோற்கடித்தார்.

அதிகாரம் 12

# பதினாறும் நூற்றாண்டில் தென் இந்தியா

(தொடர்ச்சி)

## பகுதி I

### விசயநகர வரலாற்றுக் குரிய அடிப்படைச் சான்றுகள்

கல்வெட்டுக்கள். கிருட்டினதேவராயரின் ஹம்பி (பெல்லாரி மாவட்டம்) கல்வெட்டு (காலம் 1510) வடமொழியிலும் கன்னடத்திலுமுள்ளது. அவருடைய முடிசூட்டு விழாவில் அவர் அளித்த நன்கொடைகளைக் குறிப்பிடும் அக்கல் வெட்டில் கஜபதியுடன் நேர்ந்த பகைமையைப் பற்றியும் போஜனைப்போல் அருஞ் செயலாற்றுந் திறமை இலக்கியத் துறையில் கிருட்டின தேவரிடம் இருந்ததைப் பற்றியும் தெளிவற்ற குறிப்புக்கள் உள. அவருடைய அமராவதி (குண்டூர் மாவட்டம்) வடமொழிக் கல்வெட்டு (காலம் 1515—6), கொண்டவீடுவின் வீழ்ச்சி வரையிலும் படைத்துறையில் அவருடைய அருஞ்செயல்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறது. மங்களகிரி (குண்டூருக்கு அண்மையில்) தூண் கல்வெட்டு (1517—8) சாளுவ திம்மரின் உதவிப் பொருளையும் கலிங்கத்தில் அரசர் வெற்றித்தூண் நிலைநாட்டியதையும் அறிவிக்கிறது கொண்டவீடு தூண் கல்வெட்டின் (1520) தெலுங்குப்பகுதி பல வரிகளைப் பற்றித்தெரிவிக்கின்றது. அச்சுதராயரின் கடலடி (வட ஆற்காடு மாவட்டம்) செப்பேடுகள் (1530) அவர் அரியணை யேறியதைப் பற்றியுள்ள இடர்பாடுகள் சிலவற்றைத் தீர்த்ததைப்பற்றி அறிய உதவுகின்றன. சதாசிவராயரின் கல்வெட்டுக்கள், ராமராயரையும் மதுரை நாயக்கரையும் மிகுதியாகப் புகழ்வதுபோல அவரை (சதாசிவராயரை) அரசர் என்ற முறையில் குறிப்பிட வில்லை. 1'ம் வேங்கடரின் குறிப்புக்களின் முடிவில் "ஸ்ரீவெங்கடேசர்" என்ற சொல்லைக்காண்கிறோம். சதாசிவராயர் காலம்வரை, முடிவுரையில் "ஸ்ரீவிருபாட்சர்" என்ற சொல்லே பயன் படுத்தப்பட்டது. ஆகவே முற்கூறிய குறிப்புக்கள் வைணவ

சமயத்தின் வளர்ச்சியையும், சிறப்பையும் உணர்த்துகின்றன. விசயநகரின் மூன்ருவது, நான்காவது குலங்களின் குடி வழியை அறிய கல்வெட்டுக்கள் உதவுகின்றன. மேலும், வரலாற்று விவரங்களையும் ஆங்காங்கு அவை தருகின்றன. ஆனுல் இச்சான்றுகள், சிறப்பு வாய்ந்த பேரரசருக்கும் ஆற்ற லற்ற அரசருக்குமிடையே இருந்த வேறுபாட்டை அறியப் பயன்படவில்லை.

இலக்கியம்: சமஸ்கிருதமும் தெலுங்கும். கிருட்டின தேவராயர் காலத்தில் ஆக்கப்பெற்ற "ராயவாசகமு" என்ற நூலும் பதினேழாம் நூற்ருண்டிற்ருேன்றிய "கிருஷ்ணராஜ விஜயமு" என்ற நூலும், அப்பேரரசரின் தொடர்ந்த படைத் துறை வாழ்க்கையை நன்கு விளக்குகின்றன. மேலும் அவர் காலத்தில் திம்மண்ணு, பெத்தண்ணு ஆகியோர் இயற்றியவை. வரலாற்று நூல்களாக இல்லாதபோதிலும், வரலாற்றுச்செய்தி களை உள்ளடக்கியுள்ளன. அப்பேரரசர் எழுதியதாகக்கருதப் படும் "ஆமுக்தமால்யதா" எனற தெலுங்குப் பாடல் சில வரலாற்று விவரங்களையும், அவருடைய அரசியற்கொள்கை களையும் குறிப்பிடுகிறது. அக்கொள்கைகள், கௌடில்யரின் கொள்கைகளைச் சில பண்புகளில் ஒத்துள்ளன.[1] III'ம் ராசநாததிண்டிமன் என்னும் அவைக்களப் புலவர் இயற்றிய "அச்சுதராயாப்யூதம்" என்ற வடமொழிச்செய்யுள் முற்றுப் பெருத நிலையிலுள்ளது. அச்சுதராயரைப்பற்றி அதிலுள்ள செய்திகள், போர்ச்சுகீசிய ஆசிரியர் நூனிஸ் தரும் குறிப்புக் ளிலிருந்து வேறுபடுகின்றன. அப்பேரரசரின் அவைக்களப் புலவரான (பெண்) திருமலாம்பா, அவர், வரதாம்பிகாவைத் திருமணம் செய்து கொண்டதை "வரதாம்பிகா பரிணயம்" என்னும் வடமொழிச்சம்பு நூலில் சிறப்பிக்கிருர். அச்சுத ராயரின் பிறப்பு, இளமைப்பருவ வாழ்க்கை, துளுவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் முதலிய செய்திகளை அந் நூலில் காணலாம். இராமராயரால் ஆதரிக்கப்பெற்ற ராம அமாத்தியர் என்பார் வடமொழியில் "ஸ்வரமேள கலாநிதி" என்னும் இசைநூலை 1549'ல் ஆக்கினுர். விசயநகரில் ஆட்சி

1. Journal of Indian History (1926), pp. 61—88.

நடத்திய இராமராயரின் அருஞ்செயல்களைப்பற்றி அறிய அந் நூல் உதவும். அவருடைய அவைக்களப் புலவரின் "வசு சரித்திரமு" என்ற தெலுங்கு நூல் திருமலைராயரின் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பெற்றது. அது வரலாற்றுக்குப்புறம்பான தாக இருந்தபோதிலும் புகழ் பெற்ற மூன்று உடன்பிறந்தார் களைப்பற்றிச் சிறப்பிக்கின்றது. தென் இந்திய வைணவ ஆச்சாரியார்களைப்பற்றி பதினேழாம் நூற்றுண்டின் முற்பகுதி யில் எழுதப்பெற்ற "பிரபன்னமிர்தம்" என்ற நூலில் பேரரசர் களின் சமய நிலையைப்பற்றிய விளக்கத்தைக் காண்கிறோம். அந்நூற்றுண்டின் பிற்பாதியில் தோன்றிய "ராமராஜ்யமு" என்னும் வரலாற்று நூல் (தெலுங்கில் உள்ளது) விசயநகரின் நான்காவது குலத்தினரைப்பற்றிக் குறிப்பிடுகிறது.

முகம்மதியரின் நூல்கள். அறிஞர் பெரிஷ்டா, விசய நகரப் பேரரசின் வெளித்துறைக் கொள்கையைப்பற்றி மிகுதி யான செய்திகளைக் கூறிய போதிலும் அக்கொள்கையைப் பின்பற்றிய அரசர்களில் இராமராயரைத்தவிர மற்ற யாரையும் அவர் விளக்கிக் கூறவில்லை. பெரும்பான்மையான ராயர்களை அவர் ஒரே நிலையில் வைத்துப் பேசுகிருர். மேலும் அவர் அடிக்கடி அரசரின் செயல்களை அவர்க ளுடைய படைத் தலைவர்களின் செயல்களுடன் இணைத்துப் பேசுவதால் குழப்பம் விளைகிறது. பெரிஷ்டாவின் செய்திகளி லிருந்து கிருட்டினதேவராயரின் பெருமையைப் பற்றி நாம் அறிய முடியவில்லை. 1564'ம் ஆண்டில் விசயநகருக்குப் பகையாகத் தோன்றிய கூட்டுறவை அமைத்தவர் அடில்ஷா என்ற செய்தியைப் பொறுத்தவரை, தபதபாவும் உள்நாட்டு வரலாற்றறிஞ ரொருவரும் கூறுவதினின்று பெரிஷ்டாவின் கருத்து வேறுபடுகிறது. தலைக்கோட்டைக் கருகில் விசய நகரத்தின் தோல்விக்குக் காரணமாயிருந்த இரு முகம்மதியரின் நம்பிக்கைக் கேடான சூழ்ச்சியைப் பற்றிப் பெரிஷ்டா குறிப் பிடவில்லை. சீசர்பிரடெரிக் அதைக் குறிப்பிடுகிருர். ஆயினும் அம்முகமதிய வரலாற்றஞர், ராய்ச்சூர் போரிலும் (1520) இராமராசரின் உயர்நிலைக் காலத்திலும் ஏற்பட்ட முகம்மதிய ரின் தோல்விகளைக் குறிப்பிடத் தவறவில்லை. பெரிஷ்டா,

ராய்ச்சூர் போர் 1521'ல் நடந்தது என்று ஒரு ஆண்டு தவறு தலாகவும் நூனிஸ், 1522'ல் என்று இரண்டு ஆண்டுகள் தவறுக்வும் குறிப்பிட்டிருப்பது நோக்கற்பாலது. தபதபா, ராமராசரின் செயலைச் சதாசிவ ராயருடன் இணைத்து மாருட்ட மான வகையில் குழப்பம் விளைவிக்கிருர். தலைக்கோட்டைப் போருக்கு முன் ஏற்பட்ட முகம்மதிய நாடுகள் நான்கின் கூட்டுறவுக்கு நிஸாம்ஷாவே மூலகாரணமென்பது அவ்வறிஞரின் கருத்து. அப்போரைப் பற்றிய நீண்ட விளக்கத்தை அவர் தந்துள்ளார். இந்துவீரர் ராமராசர், அவருடைய எண்பதாம் வயதில் (போர்ச்சுகீசிய வரலாற்றறிஞர் கூட்டோ 96 வயது என்று கூறுவர்) பெற்றிருந்த ஊக்கத்தையும் வீரத்தையும், தபதபா சிறப்பிக்கையில், பெரிஷ்டா அப்போர்க் காலத்தில் அவ்வரசர் செயலற்றுக் கோழைத் தன்மையுடனிருந்ததாகக் குறிப்பிடுகிருர்.

அயலவர் அளிக்கும் சான்றுகள். அயல் நாட்டவர் விசயநகரைப் பற்றி எழுதிய குறிப்புக்கள் மிகுதியாக நமக்குக் கிடைத்துள்ளன. ஆதலால் அந்நகரைப் பற்றி எழுதும் வரலாற்றறிஞர் நல்வாய்ப்பைப் பெற்றவராகிருர். அத்தகைய நல்வாய்ப்பு, சோழநாடு முதலிய தென் இந்திய நாடுகளின் (சிவாஜியின் மராட்டிய ராச்சியம் நீங்கலாக) வரலாற்றறிஞர்களுக்கு இல்லை என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. பர்ராஸ், கூட்டோ, கோர்ரியா, கஸ்தான்ஹீடா முதலிய வரலாற்ருசிரியர்களும், விசயநகரை நேரில்கண்டு குறிப்புக்களெழுதிய பல வழிப்போக்கறிஞர்களும் நமக்கு மிகவும் பயன்படுகின்றனர். 1510'ல் அல்புகர்க்கால் விசயநகருக்கு அனுப்பப்பெற்ற லூயிஸ் என்ற துறவி, கிருட்டின தேவராயரின் ஒரிஸ்ஸா போருக்கு முன் அவருடைய போர்ச்செயல்களை விளக்கிக் கூறுகிருர். பார்போஸா (1504–14) அந்நகரைச் சிறப்பிக்கின்ருர். கிருட்டின தேவருடன் நேரில் தொடர்புகொண்ட பெயிஸ் ஏறத்தாழ 1522'ல் விசயநகரைப் பற்றி எழுதியுள்ளார். குதிரை வணிகராயிருந்த நூனிஸ், சுமார் 1537'ல் தாம் எழுதிய செய்திக் கோவையில், நகரின் தோற்றம் முதல் அதனரசர்களைப் பற்றி தாம் திரட்டிய குறிப்புக்களை விளக்குகிருர். அவ்விரு வாணிக வழிச்செலவு அறிஞர்கள் காரணமாக,

கிருட்டின தேவர், மற்றெந்த ராயரும் பெருத அளவுக்கு வரலாற்று நூல்களில் இடம் பெறுகிருர். அவர், தென்னிந்திய வரலாற்றில் பெற்றுள்ள தலைசிறந்த நிலையை, 300-க்கு மேற்பட்ட அவருடைய கல்வெட்டுக்களோ, அவர் காலத்திய உள்நாட்டு இலக்கியமோ, அல்லது பெரிஷ்டாவோ, போதுமான அளவுக்கு விளக்கவில்லை. 1567'ல் விசயநகருக்குச் சென்ற சீசர் பிரடெரிக், அழிவுற்ற அதன் பெருமையைச் சிறப்பிக்கின்ருர். பெயர் அறியப்படாத ஒரு ஜெசூட் அறிஞர் 1583'ல் பெனுகொண்டா பேரரசின் (அனந்தப்பூர் மாவட்டம்) வலிமையையும் விளக்கியுள்ளார். அவருடைய குறிப்பு, விசயநகரப் பேரரசு தலைக்கோட்டைப் போரில் அழிவுற்றதென்ற கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. வேறுசில ஜெசூட் மதத்தூதுவர்களும் நமக்குப் பயன்படுகின்றனர். பரதஸ் பாதிரியார், 1614'ல் I-ம் வேங்கடர் இறந்தபின் பேரரசு சிதறுறுவதற்குக் காரணமாயிருந்த சந்திரகிரியின் துயர நிகழ்ச்சிகளைப் பற்றி 1616'ல் குறிப்புகள் எழுதியுள்ளார்.

## பகுதி 2

### கிருட்டினதேவராயர் (1509—30): போர் வாழ்க்கை

முடிசூட்டிக்கொள்ளல். கிருட்டினதேவர், நரசநாயக்கரின் II-ம் மகனுராகவும், வீரநரசிம்மன், ரங்கன், அச்சுதன் ஆகியோரின் ஒன்றுவிட்ட உடன் பிறப்பாளராகவுமிருந்தார். அவர், சாளுவ திம்மரின் உதவியால், வீரநரசிம்மரின் இளைய மகனை ஒதுக்கிவிட்டு அரியணை ஏறினுர். அதற்குச் சில மாதங்கள் பின்னர், 1510'ம் ஆண்டின் முற்பகுதியில் அவருக்கு முடிசூட்டுவிழா நடைபெற்றது. அவர் பிறந்த ஆண்டு, தெலுங்கு மரபுரைகளின்படி 1465 என்றும் 1487 என்றும் இருவகையாக கூறப்படுகிறது. நூனிஸ், அவர் பட்டமேற்கும்பொழுது அவருக்கு சுமார் இருபது வயதுக்கு மேலிருக்கும் என்று கூறுகிருர். ஆனல் அவர், தம் மகனுக்கு இளவரசப் பட்டம் சூட்டியபொழுது (சுமார் 1525) கிருட்டினதேவர் முதுமைப் பருவமெய்திவிட்டதாகவும் ஓய்வை விரும்பியதாகவும் நூனிஸ் குறிப்பிட்டுள்ளது வியக்கத்தக்க வகையில் முரண்பாடாக

உள்ளது.! கிருட்டினதேவராயர் முடிசூட்டிக்கொண்ட பின் சில காலம் தலைநகரில் தங்கியிருந்தார். படை, பொருளமைப்பு முதலிய துறைகளில் சீர்திருத்தங்கள் செய்துகொண்டு அவர் அவ்வமயம் தம் நிலையை வலிமையுறச் செய்துகொண்டார். 1511'ல் அவர் காஞ்சிப் பகுதி காடவர் தலைவர்களை வென்று பின் உம்மத்தூர் (கிழக்கு மைசூர்) கங்கராசனைத் தோற்கடித்துவிட்டுச் சீரங்கப்பட்டணத்தையும் இக்கேரியையும் (ஷிமோகா மாவட்டம், மைசூர்) கடந்து பீஜப்பூரின் எல்லைப் புறத்துக்குச் சென்றார். பீஜப்பூரை முறியடித்த ராயர், முட்கல், ராய்ச்சூர், முதலிய இடங்களைக் கைப்பற்றிக் கொண்டார். அவர் பீஜப்பூரில் மற்றொரு படையெழுச்சி நிகழத்தத் திட்டம் வகுக்கையில், சாளுவதிம்மர், அடுத்தபடியாக கலிங்க நாட்டைத் தாக்குமாறு அறிவுரை கூறியதால் அவர்கள் 1512'ல் விசயநகருக்குத் திரும்பினர்.

கலிங்கத்துடன் போர் (1513—'16). கிருட்டின தேவராயர், கஜபதி ஆட்சியை அழித்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் கலிங்கத்தில் படையெடுக்கவில்லை. விசயநகரம் இழந்த பகுதிகளை மீட்டுக்கொள்ளவேண்டுமென்பதே அப்படையெடுப்பின் நோக்கமாகும். கிருஷ்ணா ஆற்றுக்கு வடக்கில் உள்ள நிலப்பகுதியைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டுமென்ற பேரவா கிருட்டினதேவருக்கு இல்லை. 1513'ல் முதற் படையெழுச்சி தொடங்கியது. உதயகிரியை, முற்றுகையிட்டு 1514'ல் கைப்பற்றியபின், பேரரசர் திருப்பதி (சித்தூர் மாவட்டம்) வழியாகத் தலைநகருக்குத் திரும்பினார். இரண்டாம் படையெழுச்சியின் விளைவாக 1515'ல் கொண்டவீடு, வெல்லப்பட்டது. சாளுவதிம்மர், போரை நடத்திக்கொண்டிருக்கையில் கிருட்டினதேவர், தம் இரு மனைவியருடன் சிசைலம், அஹோபலம் (கர்னூர் மாவட்டம்) ஆகிய இடங்கட்குச்சென்றபின் விசயநகருக்குத் திரும்பினார். ஒரிஸ்ஸாவை எதிர்த்து அவர் தொடுத்த மூன்றாவது போர் கொண்டபள்ளி (கிருஷ்ணாமாவட்டம்) முற்றுகையுடன் தொடங்கியது. 1516'ல் பேரரசர் தமது வெற்றிக்கு அறிகுறியாகச் சிம்மாசலத்தில் (விசாகப்பட்டினம் மாவட்டம்) ஒரு வெற்றித்தூண் நிறுவினார்.

அமைதி உடன்பாட்டை ஏற்றுக்கொண்ட ராயர், கிருஷ்ணு ஆற்றுக்கு வடக்கிலுள்ள நிலப்பகுதியில் மட்டும் கஜபதியின் ஆட்சி அமைந்திருக்குமாறு செய்தார். ஜகன்மோகினி அல்லது துக்கா என்ற கஜபதியின் மகளைக் கிருட்டினதேவர் மணம்புரிந்து கொண்டார். அவரைப் பேரரசர் புறக்கணித்து விட்டதாகவும் அவ்வம்மையார் தனி வாழ்க்கை நடத்துங்காலத்தில் வடமொழியில் ஐந்து பாசுரங்கள் இயற்றியதாகவும் ஒரு மரபுரை வழங்குகிறது. "துக்க பஞ்சகம்" என்னும் அச்செய்யுட்களில் அவர், தம் கணவனுல் கைவிடப்பட்ட துயரநிலையைப்பற்றிக் கூறுகிருர். கிருட்டினதேவரின் மற்ற இரு மனைவியரைப்பற்றி அக்காலத்திய கல்வெட்டுக்கள் சிறப்பிக்கின்றன. வெங்கலத்தாலாகிய அவர்கள் உருவங்கள் திருப்பதியில், பேரரசருடைய உருவச்சிலையுடன் வைக்கப்பட்டுள்ளன. கஜபதிக்கும் கிருட்டினதேவருக்குமிடையே பகைமை உறவு தொடர்ந்து நீடித்தமையே, துக்காவின் வருந்தத்தக்க நிலைக்குக் காரணமாகலாமென்று ஊகிக்கப்படுகிறது. 1520'ம் ஆண்டு கொண்டவீடு தூண் கல்வெட்டில் கஜபதி பழித்துரைக்கப்படுவதைக் காண்கிருேம். கிருட்டினதேவர், இரண்டாம் கலிங்கப்போரை நிகழ்த்தினுர் என்ற கோட்பாடு ஐயப்பாட்டுக்குரிய இலக்கிய, கல்வெட்டுக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அத்தகைய சான்றுகளும் போதுமானதாக இல்லை. அப்பேரரசர், சிம்மாசலப் படையெழுச்சிக்குப்பின் தம் அருஞ்செயலை விளக்கும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டதுடன் விசயநகரில் ஒரு வெற்றி மாளிகையையும் நிறுவினுர். சிம்மாசலம் கல்வெட்டுக்கள், பேரரசரின் வெற்றியை உறுதி செய்கின்றன. ஆனுல் அவருடைய பட்டத்தையும் வெற்றித் தூணையும் அவை குறிப்பிடவில்லை. பேரரசரின் இப்பெருந்தன்மை நமக்கு அசோகரின் தன்னடக்கத்தை நினைவூட்டுகிறது. அசோகரின் கலிங்கப் போரை விளக்கும் அவருடைய பதின்மூன்ரும் பாறைக்கல் ஆணை, கலிங்கத்தில் காணப்படவில்லை.

**ராய்ச்சூர் போர் (1520).** இஸ்மெயில் அடில்ஷா, ராய்ச்சூர் தோஆப் பகுதியை மீட்டுக்கொள்ள முயற்சித்ததால் கிருட்டினதேவர் பீஜப்பூருடன் இரண்டாவது போர் நடத்தினுர். அப்போர்

1520'ல் நடந்தது. (1521 அல்லது 1522'இல் அன்று.)[1] அப்போரைப்பற்றி நூனிஸ் விரிவாக விளக்குகிறார். அதன் பொருட் சுருக்கத்தை மறுப்பதற்கில்லை. அடில்ஷாவின் தோல்வி நிலை, கிருட்டினதேவரின் காலம் வரை மாறவில்லை. ராய்ச்சூரைக் கைப்பற்றிக் கொண்டபின், ராயர் பீஜப்பூரில் புகுந்து அதன் தலைநகரைச் சிறிதுகாலம் தம் வசப்படுத்திக் கொண்டு குல்பர்காவை அழித்தார். பாமனி சுல்தானிய ராட்சியை மீண்டும் நிறுவ அவர் செய்த முயற்சி பயனளிக்க வில்லை. ராய்ச்சூர் போர், நூனிஸின் செய்திக்கோவையில் சிறப்பான இடம் பெறுகிறது. விசயநகரின் படைகள் வியக்கத் தக்க வகையில் பெருமளவினதாக இருந்ததாம். "நரபதி" அல்லது "மனிதர்களின் தலைவன்" என்ற ராயர்பட்டத்தைக் காரணங்காட்டி விளக்கத்தக்கனவாக அப்படைகள் இருந்தன. சுல்தான்கள், "ஹயபதி" அல்லது "குதிரைகளின் தலைவன்" என்றும் கலிங்க மன்னர் "கஜபதி" அல்லது "யானைகளின் தலைவன்" என்றும் பட்டங்கள் சூடியிருந்தது ஈண்டு குறிப்பிடத்தக்கது. ராய்ச்சூர் போரைக் குறிப்பிடும் உள்நாட்டுச் சான்றுகள் மிகுதியாக இல்லை. ஒரே ஒரு கல் வெட்டு, ஆபத்சகாயர் என்ற அந்தணர், அரசருக்கு உதவியாக, ராய்ச்சூர், பீஜப்பூர் போர்களில் பணியாற்றினர் என்று மட்டும் குறிப்பிடுகிறது. ஆனல் கலிங்கப் போரைப்பற்றி இலக்கியக் குறிப்புகளும் கல்வெட்டுச் சான்றுகளும் மிகுதியாக உள்ளன. ராய்ச்சூர் தோஆப் பகுதியில் அடிக்கடி பல போர்கள் நிகழ்ந்த காரணத்தால் மேலே குறிப்பிட்ட போரை, வெளிநாட்டு அறிஞர் நோக்கியது போல உள்நாட்டு வரலாற்றறிஞர் நோக்கவில்லை போலும்! எனினும் இக்குறிப்பிட்ட வெற்றி மிகவும் சிறப்பு வாய்ந்தது என்பதில் ஐயமில்லை. இதனல் சாளுவ நரசிம்மரின் பேரவா, கிருட்டின தேவரால் நிறைவேற்றப்பட்டது. பேரரசின் பரப்பு, பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பாதியில் இருந்த அளவுக்குப் பெருகியது. ஆனல் கோவாமட்டும் போர்ச்சுகீசியர் ஆட்சிக்குட்பட்டுவிட்டது. ராய்ச்சூர் போரினலேற்பட்ட பெருமித நிலை, தலைக்கோட்டைப் போருக்கு ஒரு காரணமாகுமென்று அறிஞர் சீவெல் மிகைப்

1. Sewell, A Forgotten Empire, pp. 140—7.

படுத்திக் கூறுகிருர்.[1] ஆனல் விசயநகருக்குப் பகையாகப் பெருங்கூட்டுறவு ஏற்பட்டமைக்கு இராமராசரின் கொள்கையே காரணமாகும். கிருட்டினதேவராயரின் விசயநகரப் பேரரசு, ஒரு முக்கோண வடிவில் அமைந்தது. ஹனவர் அல்லது பட்கல் (வட கன்னட மாவட்டம்) பகுதியை உச்சியிற்கொண்ட அவ்வரசு கிருஷ்ண ஆற்றின் தெற்கில் உள்ள நிலப் பகுதியில் பரவியிருந்தது. திருவாங்கூர், மலபார் முதலிய சில நாடுகள் அதற்குக் கீழ்ப்படிந்திருந்தன.

கிருட்டினதேவர், அரசிருக்கை துறந்ததாகக் கூறப் படும் உறுதிப்படாத செய்தி (சுமார் 1525). கிருட்டின தேவர், தம் ஆறு வயது மகனுக்காக அரசிருக்கை துறந்து, முடி சூடிய அம்மகனின் அமைச்சராகப் பணியாற்றியதாக நூனிஸ் கூறுகிருர். அவர் மகன் திருமலை 1524--5 வரை வாழ்ந்தா ரென்பதையும், 1530 வரை கிருட்டினதேவராயரின் ஆட்சி தொடர்ந்து நீடித்ததென்பதையும் உறுதிசெய்யும் கல்வெட்டுச் சான்றுகள் உள. ஆகவே, நூனிஸ், திருமலைராயர் இள வரசப் பட்டத்தைப் பெற்றதையே குறிப்பிடக் கூடும். மேலும் அப்போர்ச்சுகீசிய அறிஞர், திருமலைக்கு நஞ்சு கொடுத்த குற்றத்திற்காக சாளுவதிம்மரின் மகனைத் தந்தை யுடன் சிறைப்படுத்தியதாகக் குறிப்பிடுகிருர். இளவரசன் இறந்ததைப்பற்றி யாதும் ஐயமில்லை. சாளுவதிம்மரின் இறுதிக்கல்வெட்டு 1524—5'க்குரியதாகும். நூனிஸின் இக் குறிப்பை உறுதி செய்யும் உள்நாட்டுச் சான்று கிடையாது. அரசிருக்கை துறந்தமைக்குக் காரணம் முதுமைப் பருவத்தில் ஓய்வுபெறவேண்டுமென்ற விருப்பமென்று கூறும் அச்செய்தி, பேரரசர் தம் மகனுக்கு அமைச்சராக இருந்தார் என்றும் குறிப்பிடுவது பொருத்தமானதாக இல்லை.

## பகுதி 3

### அப்பாஜி சாளுவதிம்மர்

சாளுவதிம்மர். சாளுவதிம்மர், சாளுவ குலத்தவர் அல்லர். அவர் கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த

1. Ibid., p. 155.

ஒரு அந்தணராவர். சாளுவர் அத்ரீய கோத்திரத்தைச் சேர்ந்தவர். மேலும் அந்தணரும் அல்லர். வீர நரசிம்ம ரின் கீழ் உயர்ந்த பதவியிலிருந்த சாளுவதிம்மர், கிருட்டின தேவர், அரியணைபெற உதவிசெய்தார். நன்றி மறவாத கிருட்டினதேவர், அவரை அப்பாஜி என்று அழைத்தார். மேலும் அவரைத் தலைசிறந்த முதலமைச்சராகவும் அமர்த்தி னார். திம்மரின் கல்வெட்டுக்கள், கிருஷ்ணா ஆற்றிலிருந்து ஸ்ரீரங்கம் வரையிலும், மேற்கில் தென் கன்னடம் வரையி லும் காணப்படுகின்றன. அம் முதியவர், அரசரின் தனிப் பற்றுக்குரியவ ரென்றும், அரண்மனையில் அவ்வமைச்சர் சொற்படியே யாவும் நடைபெறுகின்றன எனவும், அவருடைய ஆணை அரசரின் ஆணை போல் சிறப்பு வாய்ந்திருந்தது என்றும், அரசர் அவரைத் தம் தந்தையைப் போல் சிறப்பிக்கின்றாரென்றும், அப்பாஜி என்று அவர் அழைக்கப் படுகிறாரெனவும் பெயிஸ் குறிப்பிடுகிறார்.[1] போர்த் துறை யிலும் அரசியலிலும் அவருடைய பணிகளை முன்னர்க் கண் டோம். கிருட்டினதேவரின போர்க்கால வாழ்க்கையின் முற் பகுதியில் அவர் தலையாய பணிகளை ஆற்றினார். கலிங்கப் போரிலும் ராய்ச்சூர் படை யெழுச்சியிலும் அவர் பங்கு கொண்டார். கொண்ட வீடு கைப்பற்றப்பட்ட பின், கஜபதி யுடன் போரை முடித்துக்கொள்ளுமாறு திம்மர், அரசருக்கு அறிவுரை கூறினார். ஆனால் அரசர் அவ்வாறு செய்யாமல் சிம்மாசலத்தில் படையெடுத்தார். ஆயினும் அவ்வமைச்சர் பேரரசருடன் ஒத்துழைத்து அப்படை யெழுச்சியின் வெற்றிக்கு முழு மனதுடன் உதவினார். ஏறத்தாழ 1523'ல் அவர் கோவாவை அடுத்துள்ள பகுதியில் படையெடுத்தது பய னளிக்கவில்லை. அவர் அங்கும் இங்கும் எங்கும் காணப்பட்ட போதிலும் கொண்டவீடு மாகாணத்தின் அரசியல் பொறுப்பு அவரிடமிருந்தது. 1510 – 1'ல் பேரரசு முழுவதிலும் திருமண வரி நீக்கப்பட்டமைக்கு அவரே சிறப்பான காரணமாவர். அவர், அகஸ்தியரின் "பாலபாரதத்துக்கு" வடமொழியில் ஒரு விரிவுரை எழுதினார். அதில் தன்னை, "தண்டநாதர்" அல்லது படைத்தலைவர் என்று அவர் குறிப்பிடுகிறார். அவரு

1, Ibid., pp, 250

டைய வாழ்க்கையின் முடிவுப் பகுதியில் பேரரசர் அவருக்கு இழைத்த தீமையைப் பற்றிய செய்தி உறுதியாக்கப்பட வில்லை. கல்வெட்டுக்களில் அவருடைய பெயரின் பிற்சேர்க்கையாக அய்யகாரு, அய்யங்காரு என்ற சொற்கள் காணப்படுகின்றன.

போர்ச்சுகீசியருடன் தொடர்பு. 1509'ல் அல்புகர்க், போர்ச்சுகீசிய இந்தியாவின் "கவர்னராக" அமர்த்தப் பட்டார். அதே ஆண்டில்தான் கிருட்டின தேவராயரும் அரியணையேற்றார். அடுத்த ஆண்டில், கள்ளிக்கோட்டையில் போர்ச்சுகீசியர் தோல்வியுற்றதால், விசயநகரத்துடன் அவர்கள் உடன்பாட்டை விழைந்தனர். லூயிஸ் துறவி அதன் பொருட்டு விசயநகரத்துக்கு அனுப்பப் பெற்றார். கள்ளிக்கோட்டை "ஸாமொரின்" பீஜப்பூர் சுல்தானுன அடில்ஷா ஆகிய இரு வருக்கும் பகையாகப் போர்ச்சுகீசியர், கிருட்டினதேவராயரு டன் ஒரு கூட்டுறவை அமைத்துக்கொள்ள வேண்டினர். கைம் மாருகத்தம்மிடமிருந்து ராயர், அராபிய, பாரசீகக்குதிரைகளை வாங்கிக்கொள்ளும் தனி உரிமையை அளிப்பதாகவும் அவர்கள் அறிவித்தனர். ஆனல் கிருட்டினதேவர் அதற்கு யாதும் பதில் கூறவில்லை. அவ்வமயம் விசயநகர அரசில் உள்நாட்டு இடையூறுகளிருந்தமையும், தமக்குத்தீமைசெய்யாத கள்ளிக்கோட்டை இந்து அரசனுக்குப் பகையாகக் கூட்டுறவு அமைக்க அவ்வரசர் விரும்பாததும் பெரும்பாலும் அதற்குக் காரணங்களாக இருக்கலாம். அல்புகர்க், கோவாவை இறுதியாகக் கைப்பற்றிக்கொண்ட பிறகு, விசயநகர அரசியல் தூதுவர் அவ்விடத்திற்கு அனுப்பப்பெற்றனர். 1511'ல் லூயிஸ் துறவி, விசயநகரில் அடில்ஷாவின் துருக்கியச் செய லாளர் ஒருவரால் கொல்லப்பட்டார். பட்கல் பகுதியில் ஒரு கோட்டை கட்டிக்கொள்ள போர்ச்சுகீசியர், கிருட்டினதேவரின் உடன்பாட்டைப் பெற்றனர். ஆனல் 1514'ல் கிருட்டின தேவர், பேர்ச்சுகீசியரிடமிருந்து 1000-குதிரைகள் வாங்கிக் கொள்ளும் தனி உரிமையைவேண்டி அதற்காக 20,000 பவுன்கள் தருவதாகக் கூறியதை அல்புகர்க் ஏற்றுக்கொள்ள வில்லை. ஆயினும் அவ்விருவருக்குமிடையே நல்லுறவு நீடித்து வந்தது. கிருட்டினதேவரின் ஆட்சிக் காலம் முழுவதிலும்,

விசயநகரப் பேரரசில் போர்ச்சுகீசியர் மிக்க உரிமையுடன் வாணிகம் நடத்திவந்தனர். அவர்களுடைய வாணிக முன்னேற்றத்திற்குப் பேரரசின் செழிப்பு மிகவும் உதவியாயிருந்தது.

## பகுதி 4

### மதுரை நாயக்கராட்சி

விசயநகரப்பேரரசு செழித்திருந்த காலத்தில் சேய்மையிலிருந்த மாகாணங்கள் நாயக்கர் எனப்பட்ட அரசப்பிரதிநிதிகளால் ஆளப்பட்டுவந்தன. கிருட்டினதேவராயரின் ஆட்சிக் காலமுடிவில் விசுவநாத நாயக்கரின் ஆட்சி மதுரையிலேற்பட்டது. அவருடைய தந்தை நாகம நாயக்கர் கலகம்செய்ததால் பேரரசர் சினங்கொண்டு விசுவநாத நாயக்கரை அரசப்பிரதிநிதியாக அமர்த்தினர். மதுரையில் முதலில் இருந்த ஆளுநர் (கவர்னர்) பதவிக்கும் பின்னர் ஏற்பட்ட நாயக்கர் பதவிக்கும் வேறுபாடு உண்டு. அம்மாணத்தை ஆட்சிபுரிவதில் தனித்த இடையூறுகள் பல இருந்தன. சிறப்பாகப் பின்வரும் இடையூறுகள் குறிப்பிடத்தக்கன:- 1) பாண்டியத் தலைவர்களும், அவ்வாறு தம்மை கூறிக்கொண்டவர்களும் அப்பகுதியில் வாழ்ந்தனர். 2) அண்மையில் திருவாங்கூர் இருந்தது. 3) பேரரசின் தலைநகரிலிருந்து தொலைவில் அப்பகுதி இருந்தது முதலியனவாம். II'ம் விருபாட்சர் ஆட்சிக் காலத்தில் காஞ்சிப்பகுதியில் பாண்டியரின் ஆக்கிரமிப்பு ஏற்பட்டது (1469). நரச நாயக்கர், பேரரசின் ஆதிக்கத்தை மீண்டும் பாண்டிய நாட்டில் நிறுவினர். வீரநரசிம்மரின்கீழ் மாகாணக் கலகங்கள், தொத்து நோய்போல் பரவின. கிருட்டினதேவர், அரியணையிலமர்ந்தது முதல் 1520 வரை (ராய்ச்சூர் போர்) பெரும்பாலும் போர்களிலேயே ஈடுபட்டிருந்தார் என்பதும் ஈண்டு நினைவுகூரத்தக்கது. மதுரையில் அரசப்பிரதிநிதியாக அமர்ந்த நாகம நாயக்கர் என்பார் சிறந்த ஆட்சிமுறை அறிஞர். அம்மாகாணத்தைப் புதிய முறையில் அவர் அமைக்க முற்பட்டார். அம்முயற்சியின் விளைவாக அவருக்கும் பேரரசருக்குமிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டது.

பேரரசரையும் அவர் புறக்கணித்துவிட்டார். அவருக்குப்பின் வந்த அவர் மகன் விசுவநாதர், வலிமைபொருந்திய ஆட்சியை மதுரையில் அமைக்கவேண்டியது இன்றியமையாதது என்று கூறியதைப்பேரரசர் ஏற்றுக்கொண்டார். ஆதலால் விசுவநாத நாயக்கரின் கீழ் மதுரை ஆட்சித் தலைவரின் அதிகாரங்கள் பெருகின. அவருடைய பெருமை உயர்ந்தது. "தென்பகுதி அரியணைத் தலைவர்", "பாண்டியநாட்டுத் தலைவர்" என்னும் பட்டங்கள் விசுவநாதருக்கு வழங்கப்பெற்றன.[1] மதுரை நாயக்கராட்சியின் தோற்றம், அச்சுதராயரின் ஆட்சிக்கால முடிவிலோ[2] அல்லது தலைக்கோட்டைப் போருக்குப் பிறகோ[3] ஏற்பட்டிருக்கவேண்டுமென்று இரண்டு வகையாக அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் நாகமநாயக்கரின் கலகமும் அவர் மகன் தலைமைப் பதவி பெற்றதும் ஒரே காலத்தில் நிகழ்ந்தவை என்ற செய்தி புறக்கணிக்கத்தக்கதன்று. 1484'ல் நாகமர், சாளுவ நரசிம்மரின் தலைசிறந்த பணியாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மதுரையில் நாயக்கராட்சி, தொடக்கத்திலேயே உரிமை வாய்ந்ததாக இருந்தது என்ற தவறான கருத்தே சிக்கல்களுக்கு இடம் தருகிறது. விசுவநாத நாயக்கர் பேரரசருக்குக்கீழ்ப்படிந்த ஆளுநராகவே இருந்தார். ஆனால் பொதுமுறையான ஆளுநரைவிட அவருடைய நிலை உயர்ந்ததாகவே இருந்தது.

## பகுதி 5

## இலக்கியம்: சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், தமிழ்

கிருட்டினதேவராயர் சிறந்ததோர் இலக்கியப் புரவலராக இருந்ததுடன், சமஸ்கிருதத்திலும், தெலுங்கிலும் தாமே பல நூல்களையும் ஆக்கினார். அவருடைய சமஸ்கிருத நூல்களில், "ஜாம்பவதி கல்யாணம்", "உஷாபரிணயம்" என்ற இரு

1. R. Sathianathaier, History of the Nayaks of Madura (1924), pp. 48—51
2. H. Heras, The Aravidu Dynasty of Vijayanagara (1927), p. 131
3. N. Venkataramanayya, Studies in the History of the Third Dynasty of Vijayanagara (1935) Appendix B.

நாடகங்களே இப்பொழுது உள்ளன. கொண்டவீடு பகுதியைச் சேர்ந்த இலக்குமீதரர், மற்றொரு ஆசிரியருடன் இணைந்து "தெய்வஞானவிலாசம்" என்ற நூலை இயற்றினர். அதில் பல பொருள்கள் விளக்கப்படுகின்றன. இலக்குமி நாராயணர் என்பார், "சங்கீதசூர்யோதயம்" என்னும் இசை நூலை ஆக்கினர். சாளுவதிம்மரும் அவருடைய உறவினர் கோபாவும் சிறந்த வடமொழி அறிஞர்கள். முன்னவர் எழுதிய விரிவுரையைப் பற்றி முன்னர்க் குறிப்பிட்டோம். பின்னவர், கிருஷ்ணமிஸ்ரரின் பிரபோத சந்திரோதயத்துக்கு ஓர் பாஷ்யம் இயற்றினர். வியாசதீர்த்தர் அல்லது வியாசராயர் (1478 – 1539) துவைத தத்துவத்தைப் பற்றிய பல நூல்களை ஆக்கினர். அவற்றுள் சிறப்பாக "நியாயாமிருதம்" என்ற நூல் குறிப்பிடத்தக்கது. மத்வதத்துவத்தை நிலைநாட்டியவர்களில் இரண்டாவதாக எண்ணத்தக்க பெருமை பெரும்பாலும் இவருக்குண்டு.[1] கிருட்டினதேவரும், சாளுவ நரசிம்மர் முதல் அச்சுதராயர் வரை உள்ள பிற விசயநகரப் பேரரசர்களும் அவ்வறிஞரை ஆதரித்தனர். அவருடைய மாணவர்களில் பக்த புரந்தரதாசரும், வாதிராசக் கவியும் சிறப்பானவர்களாவர். கிருட்டினதேவரின் அவைக்கு வல்லபர் சென்றூர். பெரும்பாலும் சைதன்யரும் அங்குச் சென்றிருக்கக் கூடும். அப்பேரரசரின் ஆட்சிக்காலம் தெலுங்கு இலக்கியத்தின் பொற்காலமாகும். அவருக்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய மொழிபெயர்ப்புக்கள் இலக்கியத் துறையில் சிறந்த ஆக்கவேலைக்குப் பெரிதும் உதவின. கிருட்டின தேவரின் தெலுங்கு நூல்களில் "ஆமுக்தமால்யதா" அல்லது விஷ்ணுசித்தீயமு மட்டுமே இப்பொழுது உள்ளது. அது ஐம்பெரும் தெலுங்குக் காவியங்களில் ஒன்றும். அது, விஷ்ணுசித்தர் (பெரியாழ்வார்) என்றும் ஆழ்வாரின் வாழ்க்கையையும், அவருடைய வைணவ தத்துவ விளக்கத்தையும் அவருடைய வளர்ப்பு மகள் கோதை, இரங்கநாதப் பெருமானிடம் கொண்ட காதலையும் சிறப்பிக்கிறது. அஷ்டதிக்குக் கஜங்கள்

1. B. N. Krishnamurti Sarma, Sri Vyasaraya Svamin, A Volume of Eastern and Indian Studies presented to Prof. E. W. Thomas (1939), pp. 265—84.

அல்லது எட்டு யானைகள் எனப் புகழ்பெற்ற அல்லசானி பெத்தண்ணு, நந்திதிம்மண்ணு, ராமபத்ரா, தூர்ஜடி, மல்லண்ணு, சூரண்ணு, ராமராஜ பூஷணு, தெனலிராமகிருஷ்ணு ஆகிய எட்டு புலவர்கள் விசயநகர அவையை அணி செய்தனர். இவர்களில் இறுதியாக உள்ள மூவர் கிருட்டினதேவரின் காலத்தவரல்லர். அரசவைக் கவியான பெத்தண்ணு வடமொழியிலும் தெலுங்கிலும் வல்லவரா யிருந்தார். அவர் ஒரு அத்துவைதக் கொள்கையினர். அவருடைய "மனுசரிதம்" என்ற நூல் சுவாரோசிஷா என்னும் இரண்டாவது மனுவைப் பற்றிய புராணக் கதையைச் சிறப்பிக்கிறது. அக்கதை மார்க்கண்டேய புராணத்திலுள்ளது. பேரரசர் அவருக்கு "ஆந்திர கவிதாபிதாமகர்" (தெலுங்குக் கவிதையின் பாட்டன்) என்ற பட்டத்தை வழங்கினர். தம்மை ஆதரித்த அரசரிடம் அவர் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். பேரரசர் இறந்த பொழுது அவர் "கிருட்டினதேவரை வானுலகுக்குப் பின்தொடராமல், இந்தப் பாழும் உடலை நான் சுமப்பது, சீ, சீ, மிகக் கேவலம்" என்று கூறி வருந்தினராம். நீண்ட மூக்கைப் பெற்ற திம்மண்ணு ஒரு சைவர். அவருடைய "பாரிஜாதா பரிகரணமு" என்ற நூல், கண்ணபெருமான் வாழ்க்கையில் ஒரு பகுதியைச் சிறப்பிக்கின்றது. ராமபத்ரா இயற்றிய "சகலகதாசங்கிரகம்" என்ற நூல் பல புராணக் கதைகளின் சுருக்கத்தைக் கொண்டது. காளத்தி மகாத்மியம், ராஜசேகர சரித்திரம் ஆகிய நூல்களை முறையே ஆக்கிய தூர்ஜடி, மல்லண்ணு, இருவரும் சைவர்கள். அஷ்டதிக்குக்கஜங்களில் உட்படாத நிருசிம்மகவி, கவிகர்ண ரசாயனம் என்றநூலை இயற்றிப் புகழ்பெற்றார். கிருட்டினதேவர் ஆட்சியில் நல்லிசைப் புலமை மெல்லியலார் இருவர் விளங்கியதும் குறிப்பிடத்தக்கது. பதினாறும் நூற்றாண்டின் கன்னட அறிஞர்களில் மிகச்சிலரே விசயநகர மன்னரின் ஆதரவைப்பெற்றனர். ஹரிதாசர் என்னும் தமிழ்ப்புலவர் தமது "இருசமய விளக்கம்" என்னும் நூலில், சைவ, வைணவ மதங்களை ஒப்பிடுகிறார். குமார சரஸ்வதி போன்ற சில அறிஞர்கள், கிருட்டினதேவரின் ஆதரவைப்பெற்றதாகத் தோன்றுகிறது.

# பகுதி 6

## கலை

ஹம்பியில் இன்றுள்ள கட்டடங்கள், கிருட்டினதேவராயரின் ஆட்சிக்கலைச் சிறப்பை நன்கு விளக்குகின்றன. அப்பேரரசர், விரூபாக்ஷர் கோயில் சிறப்புறுவதற்கான வழிகளை வகுத்தார். விட்டலசுவாமிகோயில், முடிவுறாமலும் மிக அழிவுற்ற நிலையிலுமிருந்தபோதிலும், அது விசயநகர மன்னர் விரும்பிப் போற்றிய சிற்ப, கலைநுட்ப வேலைப்பாடுகளைக்காட்டும் சிறந்ததோர் நினைவுச் சின்னமாகும். அக்கோயிலில் ஒரே கருங்கல்லாலாகிய தூண்கள் நிறுவப்பட்டிருப்பது, காண்போர் கருத்தைக் கவரத்தக்கதாயுள்ளது. ஹஸாரா இராமர்கோயில், முக்கியமாக, பேரரசரின் வழிபாட்டுக்காகக் கட்டப்பட்டது. அங்கே உள்ள தூண்களிலும் இராமாயணக் காட்சிகள் சில விளக்கப்பட்டிருக்கின்றன. சிறப்பாக, இராமன், தாடகையைக் கொல்லுதல், இராமர், இலக்குமணர், சீதை ஆகியோர் கங்கையைக் கடத்தல்; ஜடாயுவின் வீரமரணம், அனுமன் இராவணனைக்கண்டு பேசுதல், இராவணவதம் முதலிய பல காட்சிகள் குறிப்பிடத்தக்கன. இதனல் ஓராயிரம் (ஹஸாரா) இராமசுவாமிகள் கோயில் என அது அழைக்கப்பட்டது. கிருட்டினசுவாமி கோயில் பெரியதாகவும் அழகாகவும் அமைந்துள்ளது. கிருட்டினதேவர், தம் தாய் நாகலாதேவியைச் சிறப்பிக்கும் வகையில் நாகலாப்பூர் (ஹோஸ்பெட்) என்ற ஒரு நகரைத் தலைநகரின் பக்கலில் நிறுவினர்; நீர்ப்பாசனத்துக்காகவும் பொது நலனுக்காகவும் ஒரு பெரிய குளத்தை அவர் வெட்டச் செய்தார்.

# பகுதி 7

## கிருட்டினதேவராயரைப்பற்றிய மதிப்புரை

கிருட்டினதேவராயரைப்பற்றிய மதிப்புரையில் அவருடைய மத ஆர்வமும் பரந்த நோக்கமும் முதலிடம் பெறுகின்றன. அவர், சிறந்த வைணவராயிருந்தபோதிலும் சிவபெருமானிட

மும் அன்புகொண்டிருந்தார். வைணவர்கள், சைவசமயத்த வர், மத்வரைப்பின்பற்றியோர், சமணர் ஆகிய யாவரும் அவர் ஆதரவைப் பெற்றனர். அவர் காலத்திய "திக்கு கஜங்கள்" ஐவரில் மூவர் சைவ மதத்தவர்; பெத்தண்ண துவைத முறையைச் சேர்ந்தவர். பேரரசர், விருபாட்சரை, "நகரின் கடவுள்", "பேரரசின் கடவுள்" என்று போற்றி வழிபட்டார். வைணவச்சாளுவரின் கொள்கையும் அதுவே யாம். தென்மராட்டிய நாட்டின் விட்டோபா அல்லது விட்டலா வழிபாட்டு முறையைத் தொடங்கியவர் கிருட்டினதேவராயரே. அவர் ஒரு கோயிலை எழுப்பி, அங்கே விட்டோபா என்னும் திருமால் உருவத்தை அமைத்தார். அவ்வேந்தர் விரும்பிப் போற்றிய கடவுள் வெங்கடேசரே என்று பெத்தண்ண தெளி வாகக் குறிப்பிடுகிறார். சமய முன்னேற்றத்தைப் பொறுத்த வரை, கிருட்டினதேவர், மற்ற விசயநகர மன்னர்கள் யாவரை யும் விஞ்சினர் என்பதில் ஐயமில்லை. கலிங்கப்போர் நிகழ்ந்த பொழுது அவர் செய்த புண்ணியப் பயணத்தைப் பற்றி முன் னர்க் குறிப்பிட்டோம். கஜபதியுடன் அமைதி உடன்படிக்கை செய்துகொண்ட பின் அப்பேரரசர், சோழநாட்டிலுள்ள பல திருக்கோயில்கட்குச் சென்று மகிழ்ச்சியுற்றார். 1517'ல் அவர், சிவன், திருமால் ஆகிய கடவுளரின் ஆலயங்களின் நன்மைக் காகப் பல வரிகளை நீக்கினர். கிருட்டினதேவர் ஆட்சிக் காலத் தில் பல ராயகோபுரங்களும், நூற்றுக்கால் மண்டபங்களும், ஆயிரக்கால் மண்டபங்களும் தோன்றின. பரந்த சமய நோக்கத்தைக் கொண்டிருந்த அவ்வரசர், மக்களின் நலத்தில் எப்பொழுதும் கண்ணுங் கருத்துமாகவே இருந்தார். "ஆமுக்த மால்யதா" என்ற அவருடைய நூல் அவருடைய கூர்ந்த அரசியல் அறிவை நமக்குத் தெளிவாக்குகிறது. அவருடைய அரசியல் கொள்கைகளில் ஓரளவு பிறிதின் சார்பற்ற தன் மையைக் காணலாம். அவை செயல் முறைக்கு ஏற்றவை; பலகருத்துக்கள் அவற்றில் அடங்கிஉள்ளன. ஆனல் அவற்றில் ஓரளவு வைதீகப்பற்றையும் கௌடில்யர் முறையையும் நாம் காண்கிறோம். கலை, இலக்கியம் முதலியவற்றின் முன்னேற் றத்தில் அவருக்கு இருந்த ஆர்வம் அளவிடற்கரியது. அரசிய லுக்கு ஊறு ஏற்படாத வகையில் அலுவலாளரை அடக்கி

ஆளும் ஆற்றல் அவரிடம் இருந்தது. உடற்பயிற்சிகள் செய்து அவர் தம் உடல் நலத்தைக் காப்பாற்றி வந்தார். அவருடைய போர்த் திறமையைப்பற்றி முன்னர் கண்டோம். அவர், கருணைப்பண்பு வாய்ந்த ஒரு போர் வீரராயிருந்தார். பிரதாப ருத்திரரை அவர் பெருந்தன்மையுடன் நடத்தியது ஈண்டு நினைவு கூரத்தகும். ராய்ச்சூரைக் கைப்பற்றிக்கொண்ட பிறகு அதைக் காவல் புரிந்திருந்த படையினரிடம் அவர் காட்டிய அன்பு அப்படையினரையே வியப்புறச் செய்திருக்கும். 1520'ம் ஆண்டில் விசயநகருக்குச் சென்ற பெயிஸ் என்னு மறிஞர், கிருட்டினதேவராயரைப் பற்றிக் கூறியுள்ள செய்திகள் அப்பேரரசரின் பெருமைக்குத்தக்க சான்றுகளாம். ......"அவர் (கிருட்டினதேவர்), எந்த அளவுக்கு ஒரு அரசர் குறைபா டில்லாமல இருக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைபா டற்றவரா யிருக்கிறுர்; பிறர் அஞ்சத்தக்க வலிமை அவரிட மிருக்கிறது. அவர் மன நிலையில் மகிழ்ச்சி நிறைந்திருக்கக் காண்கிறும். அயலவரைப் பெருமைப் படுத்தும் நாட்டம் அவரிடமுள்ளது. அவர்களை அவர் அன்புடன் வரவேற்று அவர்களைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்கிறுர். அவர் பெருமைசால் வேந்தர் என்பதில் ஐயமில்லை. நீதிவழுவா நெறிமுறையை அவரிடம் காண்கிறும்; ஆனல் திடீரென்று அவருக்குச்சினம் தோன்றிவிடுகிறது;......பெருஞ் செல்வர் யாவரிலும் அவர் சிறந்தவராயிருந்தபோதிலும் தம் உயர்நிலையை அவர் வெளியில் காட்டிக்கொள்ள விரும்ப வில்லை. (அதாவது—வெளிப்பகட்டை அவர் வெறுத்தார்) அத்தகைய செவ்விய வீரமும் நேர்மையும் அவரிட மிருந்தன......"[1] ஆனல் நூனிஸ் தரும் குறிப்புக்களைக் கொண்டு மூன்று குறைபாடுகள், கிருட்டினதேவரிடம் இருந் தன என்று அறிகிறும். அவை வருமாறு:- (1) சாளுவ திம்மரின் இறுதிக்காலத்தில் அவரைப் பேரரசர் நடத்திய முறை (2) கஜபதி இளவரசருக்கு ஏற்பட்ட அவல முடிவுக்குப் பேரரசர் காரணமாயிருந்தமை (3) ராய்ச்சூர் போருக்குப் பின், பல அழிவுபாடுகளைப்புரிந்து அடில்ஷாவைத் துயருறுத் தியது. இவற்றில் முதலாவதாக உள்ள குற்றச்சாட்டு ஏற்றுக்

1. Sewell, op. cit., p. 247

கொள்ளத்தக்கதன்று என்ற செய்தியைப்பற்றி முன்னரே நாம் குறிப்பிட்டோம். இரண்டாவதாக உள்ளது, வீரபத்திர இளவரசரைப்பற்றியது (கஜபதி). கொண்டவீடு என்னுமிடத்தில், 1515'ம் ஆண்டு ஜனவரி மாதம் வீரபத்திரர் சிறைப்பட்டார். சில மாதங்கள் சென்றபின் விசயநகரில் வாட்போரில் வல்ல ஒருவருடன் போரிட்டுத் தன்னுடைய திறமையைக்காட்டுமாறு அவ்விளவரசர் அழைக்கப்பட்டாராம். இளவரசருடன் போட்டியிடுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரன், அரச குலத்தவனல்லன். இவ்வாறு இழிவு செய்யப்பட்ட காரணத்தால் மனம்நொந்த வீரபத்திரர், தற்கொலைபுரிந்து கொண்டாராம். ஆனால் வீரபத்திரரைக் குறிப்பிடும் கல்வெட்டுச் சான்றுகளில் குழப்பம் இருப்பதால் சில அறிஞர்கள் மேற்கூறிய குற்றச்சாட்டை உண்மையென்று ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இனி மூன்ருவதாக உள்ள குற்றச்சாட்டை ஆராயுங்கால் அது ஓர் கடுங்குற்றம் அன்று என்பது தெளிவாகும். பகைவரை எவ்வகையாலும் அழித்துவிடுவதென்பது பாமனி சுல்தானியரும், அவர்களுக்குப்பின் வந்தோரும் கையாண்ட முறையாகும். ஆகவே, பொதுவாகக் கூறுமிடத்து அறிஞர் பெயிஸ் குறிப்பிடுவதுபோல, கிருட்டின தேவர் ஒரு "உயர் பண்பு உடைய மகான்" என்று நாம் முடிவு செய்யலாம். அப்பேரரசரின் வாழ்க்கையையும் அவருடைய பலதிறப்பட்ட செயல்களையும் நோக்குமிடத்து, அவர் காலத்தில் விசயநகரம், அளவில் பெருகி, செழிப்பிலும், புகழிலும் உச்சநிலையை எய்தி மிகச்சிறப்புற்றிருந்தது என்பது தெளிவாகும். அரசியல் துறையில் அவர் ஆற்றிய அரும்பணிகளின் விளைவாக, பேரரசில் பொருளாதார உயர்வும் கலைப்பண்பில் முன்னேற்றமும் ஏற்பட்டன. அல்புகர்க்குடன் அவர்கொண்ட தொடர்பின் விளைவாக விசயநகரப் பேரரசுக்கு நற்பயன் உண்டாயிற்று. சாளுவதிம்மரின் திறமை பேரரசரின் புகழை மங்கச் செய்யவில்லை. "கிருட்டின தேவர், வரம்பற்ற அதிகாரங்களைப் பெற்ற பேரரசர்;"[1] சுருங்கக் கூறின், II-ம் தேவராயருக்குப் பிறகு மெலிவுற்றுவந்த பேரரசை மீண்டும் வலிமையடையச் செய்த பெருமை

1. Ibid p. 121.

கிருட்டின தேவருக்குரியது. கிருட்டினதேவர், சாளுவ நரசிம்மரின் கொள்கைகளை ஒழுங்கு படுத்தி அவற்றை நிறைவேற்றினர். அவர் இறந்தபின் அவராற்றிய அரும்பணிகள் ஓரளவு அழிவுற்றன எனினும் அவருடைய மருமகனை இராமராயர், கிருட்டின தேவரின் முறையைப் பின்பற்றினர். விசயநகரப் பேரரசின் தலைசிறந்த மன்னரான கிருட்டின தேவர், தம் தன்மையும் அருஞ்செயல்களும் காரணமாக, தென்னிந்திய வரலாற்றில் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார். அயலவர் குறிப்புக்களும், தெலுங்கு, கன்னட, தமிழ் நூல்கள் சிலவும் அப்பேரரசரின் புகழைப் பறை சாற்றுகின்றன.

## பகுதி 8

### அச்சுத ராயர் (1530—42)

அச்சுதராயரின் தன்மை. அறிஞர் நூனிஸ், அச்சுத ராயரை. ஒரு குணக்கேடர் என்றும், கொடுங்கோலர் என்றும் கோழை என்றும் நேர்மையற்றவர் என்றும் இழிவாகக் கூறுகிருர். மேலும் நாட்டின் அக்காலத்தியப் பெருஞ்செல்வர், அவ்வரசரால் பேரரசுக்கு அழிவு ஏற்படக் கூடுமென்று கருதியதாகவும் குறிப்பிடுகிருர். அச்சுதராயர், நாட்டின் செல்வரையும் பிறரையும் துயருறுத்தி மிகுதியான பொருள்களை அவர்களிடமிருந்து பெற்ருர்; சிறப்புவாய்ந்த தலைவர்களைக் கொலை செய்தார். அதனல் அரசின் சிறப்பு குன்றியது. அடில்ஷா (பீஜப்பூர்), அடாத பழிச்சொற்களை ஆயிரக் கணக்கில் அள்ளிவீசி அரசர் அச்சுதரை அவமதித் தாராம்.[1] அச்சுதராயரின் தீச்செயல்களுக்கு அவருடைய இரு மைத்துனர்களே காரணமாவர் என்று நூனிஸ் கூறுகிருர். மேலும் இவ்வறிஞர், அடில்ஷாவுக்கு அச்சுதர் அடிபணிந்து அடங்கிய அவலநிலையை நமக்கு அறிவிக்கின்ருர். நூனிஸ், அச்சுதராயரின் ஆட்சிக் காலத்தின் நடுப்பகுதியில்தான் விசயநகருக்குச் சென்ருர் என்பதை நாம் மனத்திற் கொள்ள வேண்டும். அவ்வரசர், தம் ஆட்சியின் முற்பாதியில் பொதுச்

1. Ibid p. 369.

செயல்கள் பலவற்றை மேற்கொண்டாரெனினும், பின்னர் அவருடைய தன்மை மாறிவிட்டது. நூனிஸின் குறிப்புகளில் சிற்சில இடங்களில் நாம் உண்மையை உணரத்திருத்தங்கள் செய்துகொள்ளவேண்டும்; எனினும் பெரும்பாலும் அவருடைய கருத்துக்களை யாரும் மறுப்பதற்கில்லை.

முதற் பகுதி (1530—5). கிருட்டினதேவராயர், தமது ஒன்றுவிட்ட உடன்பிறப்பாளரான அச்சுதராயரைத் தமக்குப் பின் அரசராக அமர்த்தியிருந்தார். ஆனால் முன்னவரின் மகனை பதினெட்டுமாதக் குழந்தையைச் சிலர் அரியணையி லமர்த்தியதாகச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். எவ்வா றிருப்பினும் 1530'ம் ஆண்டில் அச்சுதராயர் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார். அதே ஆண்டில் அவரிடமிருந்து இஸ்மெயில் அடில்ஷா, ராய்ச்சூர் தோஆப்பைக் கைப்பற்றிக் கொண்டார். மேலும், சோழநாட்டு ஆட்சித்தலைவர், திருவாங் கூர் அரசருடைய உதவிபெற்றுக் கலகம் செய்யத் தொடங்கி ஞர். அச்சுதராயரின் மைத்துனர் அவ்விரு பகைவர்களையும் முறியடித்து வெற்றி கொண்டாரென்று, III'ம் இராசநாத திண்டிமரின் "அச்சுதராயாப்யூதயம்" அறிவிக்கின்றது. அச்சுத ராயர், ஸ்ரீரங்கத்திலிருந்து சீரங்கப்பட்டணத்திற்குச் சென்று உம்மத்தூரின் தலைவரை வென்று, பின்னர் ராய்ச்சூருக்குப் போய் அடில்ஷாவின் குலத்தவரைத் தோற்கடித்தாரென்று மேற்கூறிய நூல் கூறுகிறது. மேலும், 1534—35'ம் ஆண்டுக் குரிய கல்வெட்டொன்று அச்சுதராயர், கிருஷ்ண ஆற்றங் கரையில் தங்கியிருந்ததாக அறிவிக்கிறது. இதைக்கொண்டு, அப்பேரரசர் பீஜப்பூர் சுல்தான் மல்லுஅடில்ஷா (1534—5) வுடன் போரிட்டிருக்கக்கூடுமென்று ஊகிக்கலாம். ஆதலால் அச்சுதராயர், அவருடைய ஆட்சியின் முற்பகுதியில் பேரரசின் சிறப்பைக் காப்பாற்றும் முயற்சியை மேற்கொண்டிருந்தார் என்று நாமறிகிறோம். அவர் ஒரு கோழை என்ற கருத்து, கொள்ளத் தக்கதன்று. ஆனால் முற்கூறிய வடமொழிச் செய்யுள் நூலில் (அச்சுராயாப்யூதயம்) அவ்வரசனைப்பற்றி யுள்ள புகழுரைகள், மிகைப்படுத்தப்பட்ட சொற்றொடர்கள் என்பதில் ஐயமில்லை.

இரண்டாம் பகுதி (1536—42). அச்சுதராயர், தம் ஆட்சிக்காலத்தின் பிற்பாதியில் அவருடைய மைத்துனர்கள் இருவரின் அரசியல் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தார். மூத்த சலக்கராசு திருமலை, இளைய சலக்கராசு திருமலை எனப் பெற்ற அவ்விரு மைத்துனர்களும் அரசரைத் தமதுகைப்பாவை யாக்கினர்கள். அவர்களுடைய ஆதிக்கத்தை எதிர்த்துக் கிருட்டினதேவராயரின் மருமகனை இராமராயர் கலகம்செய் தார். கிருட்டினதேவரின் மனைவிமார் இருவரும் இராமராயருக்கு உதவிசெய்தனர். இராமராயரும், திருமலை, வேங்கடாத்திரி என்னும் அவருடைய இரண்டு உடன்பிறந்தாரும் ஒற்றுமைப்பட்டு உழைத்தனர். ஏறத்தாழ 1533'ல் கிருட் டின தேவராயரின் ஆண் குழந்தை இறந்துவிட்ட படியால், அச்சுதராயரின் உடன்பிறந்தாரான ரங்கனின் மகனை அரி யணையிலமர்த்த வேண்டுமென்பதே ராமராயரின் குறிக் கோளாயிற்று. விசயநகரின் உள்துறைச் சிக்கல்களில் பீஜப் பூர் சுல்தான் தலையிட முயன்றார். சுமார் 1536'ல் 1-ம் இப்ராஹிம் விசயநகரில் படையெடுத்து நாகலாப்பூரை அழித் தார். அச்சுதராயர், தம் மைத்துனரின் அறிவுரைப்படி படை யெடுப்பாளருக்கு அடங்கினர். அப்படையெடுப்பாளர் இராமராயருக்கு உதவி செய்யாமலிருப்பதற்காகவே அவ்வாறு செய்தாராம். அச்சுதராயர் வைணவ சமயத்தை ஆதரித்தார்; கோயில்களுக்கும் அந்தணர்களுக்கும் நன்கொடைகள் வழங் கினர்; போச்சுகீசியருடன் நட்புறவு பூண்டிருந்தார்.

## பகுதி 9

### இராமராயரின் ஆட்சி (1542—65)

1542'ல் அச்சுதராயர் இறந்தவுடன் அரசுரிமைப் போராட்டம் நாட்டில் வலிமையடைந்தது. அவருடைய மகன் வேங்கடருக்குச் சிலர் முடிசூட்டினர். வேறுசிலர் ரங்கனின் மகன் சதாசிவரை அரியணையிலமர்த்தினர். இதனல் குழப்பம் அளவுகடந்ததாயிற்று. பீஜப்பூர் சுல்தானும் விசயநகரின் செய்திகளில் தலையிட்டு வந்தார். இளைய சலக்கராசு, வேங்

கடரைக் கொன்றுவிட்டார்.[1] வெகுண்டெழுந்த இராமராயர் தம் பகைவர்களை முறியடித்துவிட்டுச் சதாசிவருக்கு (1542) மீண்டும் முடிசூட்டி, அரசியல் பொறுப்புக்களைத் தாமே ஏற்றுக்கொண்டு அரசப் பிரதிநிதியாகப் பணியாற்றத் தொடங்கினுர். அவர், தம்முடைய மாமனுரான கிருட்டின தேவராயர் 1530'ல் இறந்தது முதல் தாம் கொண்டிருந்த பேரவா நிறைவேறப்பெற்று மகிழ்ந்தார்.

இராமராயர், சாளுவ நரசிம்மரின்கீழ்ப் பணியாற்றி வந்த ஆரவீட்டுப்புக்கன் என்பாரின் கொள்பேரராவர். அவர்களுடைய ஊர் கடப்பை மாவட்டத்திலுள்ள ஆரவீடு என்பதாகும். ஆதலால் அம்மரபினர், ஆரவீடு குலத்தவர் எனப் பெறுவர். இராமராயர், கிருட்டின தேவர் காலத்தில் படைத் துறை ஆணையாளராக இருந்தார். திருமலாதேவி என்ற கிருட்டினதேவரின் மகளையும் மணம் புரிந்துகொண்டார். சதாசிவரின் பொருட்டுப் போராட்டம் நிகழ்த்தி முடிவில் தாமே எல்லா அரசியல் அதிகாரங்களையும் பெற்றுர். 1542 முதல் சுமார் 1550 வரை அவர் தம்முடைய உடன்பிறந்தார் இருவரின் உதவியுடன் அரசப் பிரதிநிதியாக ஆணை செலுத்தி வந்தார். சுமார் 1550'ல் அவர் சதாசிவரைச் சிறையிலடைத்துவிட்டு அதன்பின் ஆண்டுக்கொருதடவை அவரை மக்களுக்குக் காட்டிவந்தார். ஆனுல் சிறைப்பட்ட மன்னரை மன்னருக்குரிய சிறப்புடன் அவர் நடத்தி வந்தாராம். தம்முடைய உறவினர்பலரை உயர்பதவிகளிலமர்த்தி இராமராயர் தம்நிலையை வலிமைப்படுத்திக்கொண்டார். ஏறத்தாழ 1563'ல் அவர், ஆண்டுக் கொருதடவை அரசரை மக்களுக்குக் காட்டி வந்த பழக்கத்தை நிறுத்திவிட்டார் என்று அறிகிறோம். அவ்வமயம் இராமராயர் அரசுரிமையைக் கைப்பற்றிக்கொண்டதாகச் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.[2] அவர், பேரரசர்க்குரியபட்டங்களைச் சூட்டிக்கொண்டதுடன் தம் பெயருடன் கூடிய பொற்காசுகளையும் வெளியிட்டார். ஆனுல் அவர் முடிசூட்டிக் கொண்டார்ரென்பதற்கு மட்டும் சான்றில்லை.

---

1. Venkataramanayya, op. cit., p. 41.
2. Heras, op. cit., pp. 27—40.

**இராமராயரின் வெளித்துறைக்கொள்கை (1543-58).** சதாசிவராயர் பட்டமேற்றவுடனேயே இராமராயரின் பகைவர்கள் பொருமைகொண்டு அவருடைய ஆணைகளைப்புறக்கணிக்க முற்பட்டனர். சந்திரகிரிக்குத் தெற்கில் உள்ள நிலப்பகுதியில் குழப்பம் மேலிட்டது. திருவாங்கூர் நாட்டு மன்னர்கள் கலகம் செய்தனர்; பேரரசருக்குக் கப்பம் கட்டவும் மறுத்தனர். பேரரசுக்குட்பட்ட சில இடங்களையும் கைப்பற்றிக் கொண்டனர். மேலும் மேலைக்கடலோரத்தில் போர்ச்சுக்கீசியர் வலிமைபெற்று ஆக்கிரமிப்புக்கொள்கையைப்பின்பற்றி வந்தனர். கோவாவின் போர்ச்சுகீசியத் தலைவர், காஞ்சீபுரத்தின் சிறந்த கோயில்களைக் கொள்ளையடிக்கத் திட்டமிட்டதாகவும் அறிகிறோம். இத்தகைய நிலை காரணமாக இராமராயர் தெற்கில் தம் கருத்தைச்செலுத்த வேண்டியது இன்றியமையாததாயிற்று. அவர், விட்டலா, சின்னதிம்மர் என்னும் இரு தலைவர்களைப் படையுடன் தெற்கே அனுப்பினர். மதுரை விசுவநாத நாயக்கரும் அவர் மகன் கிருட்டினப்ப நாயக்கரும் விட்டலாவுக்கு உதவிபுரிந்தனர். திருவாங்கூரில் படையெடுத்த விசயநகரப்படை வெற்றிபெற்றது. திருவாங்கூர் மன்னர் தோல்வியுற்றார். பிரான்ஸிஸ் க்ஸாவியர் (Xavier) துறவி தலையிட்டு 1546'ல் திருவாங்கூருக்கும் விசயநகருக்குமிடையே அமைதி உடன்பாடு ஏற்படுத்தினர். அதன்படி இக்காலத் திருநெல்வேலி மாவட்டத்தையும் ஆண்டுதோறும் கப்பத்தையும் விசயநகருக்கு அளிக்கத் திருவாங்கூர் மன்னர் ஒப்புக்கொண்டார். கடலோரப்பகுதிகளிலும் விசயநகரத் தலைவர்கள் வெற்றிகள் பெற்றனர். தோல்வியுற்ற பகுதிகள் விசயநகருக்குத் திறை செலுத்த ஒப்புக்கொண்டன. இவ்வாறு விட்டலாவின் தென் இந்தியப்படையெழுச்சி வெற்றியுடன் முடிந்தது. இராமராயர் கன்னியாகுமரியில் வெற்றித்தூண்கள் நிறுவியதாக இலக்கியக் குறிப்பு உள்ளது. இலங்கை அரசியலார் விசயநகருக்குச் செலுத்த வேண்டிய திறையைச் செலுத்த மறுத்ததால் 1'ம் கிருட்டினப்ப நாயக்கர் அத்தீவின்மேல் படையெடுத்து வெற்றி கொண்டார். மேலும் 1564'ல் சதாசிவர் இலங்கையைத் தாக்கிக் கொள்ளையிட்டதாகக் கல்வெட்டுக் குறிப்பு உள்ளது. கிருட்டினதேவர், அச்சுதராயர் ஆகியோருடைய சில குறிப்புக்

களும், இலங்கை, விசயநகருக்கு அடங்கியிருந்ததை உணர்த்துகின்றன.

**போர்ச்சுகீசியருடன் தொடர்பு.** சதாசிவராயர் பட்ட மேற்றபின் விசயநகருக்கும் போர்ச்சுகீசியருக்குமிடையேநிலவிய நட்பு உறவு சிறிதுகாலம் மறைந்திருந்தது. பின்னர் 1547'ல் இருசாராரும் தமக்கிடையே ஒரு நேச உடன்படிக்கையைச் செய்துகொண்டனர். அதன்படி போர்ச்சுகீசியர், தமது குதிரைகளை விசயநகருக்கு மட்டுமே விற்பனை செய்வதென்றும் பீஜப்பூருக்கு விற்பதில்லை என்றும் ஒப்புக்கொண்டனர். விசய நகரத்தவர், இரும்பு, வெடியுப்பு, ஆடை வகைள் முதலிய வற்றைப் போர்ச்சுகீசியருக்கு ஏற்றுமதி செய்ய உடன் பட்டனர்.

**தக்காணச் சுல்தானியர்.** கிருட்டினதேவராயர் இறந்த பின் பீஜப்பூரின் அடில்ஷாஹியர், விசயநகர அலுவல்களில் தலையிட்டதைப் பற்றி முன்னரே ஆங்காங்குக் குறிப்பிட்டுள்ளோம். இராமராயர் தக்காணச் சுல்தானியரிடை நிலவிய போராட்டத்தைத் தம் நலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள முயன்ருர். அவர்களுடைய செய்திகளில் அடிக்கடி தலையிட்டு வந்ததுடன் வலியத்தாக்கும் போர் முறையையும் இராமராயர் பின்பற்றினுர். அச்செயல்களில் அவருடைய உடன்பிறந்தாரான வேங்கடாத்திரி அவருக்கு உதவிசெய்துவந்தார். 1543'ம் ஆண்டில் இராமராயர், ஆமதுநகர், கோல்கொண்டா, இவைகளை ஆளும் சுல்தான்களுடன் பீஜப்பூரை எதிர்ப்பதற்கு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். ஆனல் பீஜப்பூருக்கு ஏற்பட இருந்த அப்பேரிடரிலிருந்து, அந்நாட்டைக் காப்பாற்றிய பெருமை, அஸத்கான் என்னும் அதன் அமைச்சரைச் சாரும். 1558'ல் இராமராயர், ஆமதுநகருக்குப் பகையாகப் பீஜப்பூருடன் சேர்ந்துகொண்டார். அதனல் ஏற்பட்ட போரின் விளைவாகத் தோல்வியுற்ற ஆமதுநகரில் இராமராயர் அளவுகடந்த தீச்செயல்களைப் புரிந்தார். இதைப் பற்றி அறிஞர் பெரிஷ்டா பின்வருமாறு கூறுகிருர்:- "அலி அடில்ஷாவும் இராமராயரும், ஹுசேன் நிஸாம் ஷாவின் இராச்சியங்களைப் பங்கிட்டுகொண்டு போரந்திரிலிருந்து கைபர்

வரையிலும் ஆமதுநகரத்திலிருந்து தௌலதாபாத் வரையிலும் மக்கட் பூண்டே இல்லாவண்ணம் அவற்றைப் பாழாக்கினார்கள். அத்தகைய வாய்ப்பை விருப்பத்துடன் எதிர்நோக்கியிருந்த விசயநகர மக்கள், பகைவர் நாட்டில் செய்த அடாப் பழிச் செயல்களுக்கு எல்லையில்லை. அவர்கள் முகமதியப் பெண்மணிகளை மானக்கேடு அடையச்செய்து மசூதிகளை இடித்து, தூய குரானையுங்கூட இழிவுபடுத்தினர்.'' இவற்றையெல்லாங்கண்ட முகமதியத் தலைவர்கள் தங்களிடையே உள்ள பகைமையை ஒழித்துவிட்டுத் தாங்கள் ஒன்றுசேர்ந்து இந்து ராச்சியத்தை அழிக்கவேண்டுமென்று முடிவுசெய்தனர். விசயகரை முறியடிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆமதுநகர், கோல்கொண்டா, பீஜப்பூர், பீடார் ஆகிய நான்கு சுல்தானரசுகளும் ஒன்றுகூடி ஒரு சமஷ்டியை அமைத்துக் கொண்டன. பேரார் அதில் சேரவில்லை. அக்கூட்டுறவுக்கு முதற் காரணமாயிருந்த நாடு, ஆமதுநகர் என்று தபதபாவும், பீஜப்பூர்தான் என்று பெரிஷ்டாவும் கோல்கொண்டாவே என்று அந்நாட்டு வரலாற்றறிஞரும் மூன்றுவகையாகக் குறிப்பிடுகின்றனர். அறிஞர் கூட்டோ தபதபாவின் கருத்தை ஏற்றுக்கொள்கிறார். மேலும் ஆமதுநகரின் முதலாம் ஹுசேன்ஷா அப்போரில் (தலைக்கோட்டை) மிகவும் சிறப்பான பங்கைப் பெற்றிருந்தார் என்பதும் நோக்கத்தக்கது. ராய்ச்சூர் தோ ஆப் பகுதியைத் தமக்குக் கொடுத்துவிடுமாறு பீஜப்பூர் சுல்தான் கூறியதை இராமராயர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதலால் சமஷ்டி நாடுகளின் படைகள் தலைக்கோட்டை என்னும் இடத்தில் (பீஜப்பூர் மாவட்டம்) கூடின. தலைக்கோட்டை, கிருஷ்ணா ஆற்றுக்கு வடக்கில் இருபத்து ஐந்து மைல்கள் தொலைவில் உள்ளது.

## பகுதி 10

### தலைக்கோட்டைப் போர் (1565)

சுல்தானியரின் படைகள் போருக்குப் புறப்பட்டவுடன் விசயநகரின் படைகள் ராக்கசி - தங்கடி (இரண்டு ஊர்களின் பெயர்கள்) க்குச்சென்று அங்கே தங்கின. 1565'ம் ஆண்டு

சனவரி மாதம் 23'ம் நாள் இருசாராருக்கு மிடையே போர் மூண்டது. அப்போர் நடந்த இடம், கிருஷ்ண ஆற்றுக்கும் (அதற்குத் தெற்கில் உள்ள) முட்கல் என்னுமிடத்துக்கும் இடையே உள்ள ஒரு பகுதிதான் என்றும் தலைக்கோட்டை அன்று எனவும், நூறு ஆண்டுகட்கு முன்னமேயே அறிஞர்கள் அறிந்திருந்தனர். ஆயினும் சமஷ்டி நாடுகள் தலைக்கோட்டையில் ஒன்றுகக் கூடியதால் அதன்பின் நடந்த போருக்குத் தலைக்கோட்டைப் போர் என்ற பெயர் அமைந்தது. முகம்மதியர்களின் படை ஏறத்தாழ 50,000 குதிரைகளையும், 3000 காலாட்களையும் கொண்டிருந்தது. இந்துப் படையோ சுமார் 70,000 குதிரைகளையும் 90,000 காலாட்களையும் பெற்றிருந்தது. மேலும் இருசாராரும் யானைகளையும் பீரங்கியையும் பயன்படுத்தினர். சுமார் 6000 மராட்டியக் குதிரை வீரர்கள் முகம்மதியருக்கு உதவி செய்தனர். வேங்கடாத்திரி, இராமராயர், திருமலை ஆகிய மூவரும் விசயநகரப் படையின் தலைவர்களாக அமர்ந்து போர் நடத்தினர். முகம்மதியப்படை, I-ம் அலிபரீத்ஷா, இப்ராஹிம் குதுப்ஷா, I-ம் ஹுசேன்ஷா, I-ம் அலி அடில்ஷா ஆகிய நால்வரின் தலைமையில் போரிட்டது. இருசாராரும் மிக்க ஊக்கத்துடன் போரிட்டனர். முதலில் முகம்மதியப் படையினர் தளர்வெய்தினர். அவர்களிற் சிலர் தோல்வி ஏற்பட்டு விடுமென்று அஞ்சித் திரும்பிச் செல்லவும் முற்பட்டனர். ஆனல் ஹுசேன்ஷா மன உறுதிகுலையாமல் விடாமுயற்சியுடன் போரில் முழுக்கருத்தைச் செலுத்தலானர். அவருக்கு உதவியாக ஆசியா மைனரைச் சேர்ந்தவனும் ஐரோப்பாவில் போரிட்டு மிக்க அனுபவம் பெற்றவனுமான சாலபி ரூமி கான் பீரங்கியைப்பயன்படுத்திப் பகைவரின் அணி வகுப்பில் குழப்பத்தை ஏற்படுத்தினன். அவ்வமயம் இந்துப் படையிலிருந்த இரண்டு முகம்மதியப் படைத் தலைவர்கள் நம்பிக்கைக்கேடான வகையில் பகைவருக்கு உதவி செய்தனர். அதனல் விசயநகர் தோல்வியுறும் வகையில் போரின்போக்கு மாறிவிட்டதென்று சீஸர்பிரடெரிக் கூறுகிருர். இராமராயர் விடாமுயற்சியுடன் போரிட்டார். அவருக்கு அவ்வமயம் வயது 70 அல்லது 80 அல்லது 96 இருக்கலாம் என்று மூன்று வகையாக அறிஞர்கள்

கருதுகின்றனர். ஆயினும் முப்பது வயது ஆண்மகனைப்போல அவர் வீரப்போர் புரிந்தாரென்று அறிஞர் கூட்டோ அறிவிக்கிறார். அவ்வாறிருந்தும் அவர், போரில் காயமடைந்து சிறைப்பட்டு முடிவில் ஹுசேனுல் கொல்லப்பட்டார். வெட்டப்பட்ட அவர்தலையில் வைக்கோலைவைத்து அடைத்து அதை, வெற்றி வீரர்கள், பேராருக்கு ஓர் எச்சரிக்கையாக அனுப்பினராம். அதற்குப் பிறகு நீண்டகாலம்வரை ஒவ்வோராண்டும் அத்தலை மக்களுக்குக் காட்டப்பட்டதாம். அத்தலையைப்போல ஒரு கல்லுருவத்தைச்செய்து அதைச் சுல்தானியர் பீஜப்பூரில் வைத்தனர். அது இன்றும்உள்ளது. வேங்கடாத்திரி போர்க்களத்திலிருந்து ஓடிவிட்டாரோ அங்கேயே இறந்தாரோ அறியோம். திருமலை, தம் கண் ஒன்றை இழந்தார். விரைவில் விசயநகரத்துக்குச்சென்று இயன்ற அளவு பொருள்களை எடுத்துகொண்டு சதாசிவராயருடன் ஓட்டமெடுத்தார். பெரும்பாலும் அவர் திருப்பதிக்குச் சென்றிருக்கக்கூடும். வெற்றி பெற்ற வீரர்கள் விசயநகருக்குள் புகுந்து அலைதக்கொள்ளையிட்டனர். பின்வரும் குறிப்புக்கள் சிறிதளவு மிகைபடக் கூறப்பட்டிருப்பினும் பெரும்பான்மையும் உண்மையானவை:-

"..........அவர்கள் (விசயநகரில்) தீயினாலும் கத்திகளாலும் கடப்பாரைகளாலும் கோடாலிகளாலும் நாள்தோறும் அழிவுபாடுகளைச் செய்தனர். சீரும் சிறப்பும் தொழில் வளமும் பொருள் வளமும் கொண்டு களிப்புடனும் கம்பீரத்துடனும் காட்சியளித்துவந்த மகத்தான மாண்புடைய மாபெரும் நகர் ஒரேநாளில் கைப்பற்றப்பட்டு, ஒரேநாளில் சூறையாடப்பட்டு ஒரேநாளில்அழிக்கப்பட்ட அத்தகைய ஒரு கொடும் நிகழ்ச்சியை உலக வரலாற்றில் வேறெங்கும் நாம் காணமுடியாது. அங்கே நிகழ்ந்த மிலேச்சத் தன்மை வாய்ந்த கொலைகளையும் கொடுஞ்செயல்களையும் கூற நாவெழவில்லை. ஆற்ற ஒண்ணு அழிவுபாடுகளையும் கூற ஒண்ணுக்கொடுஞ் செயல்களையும் குறிப்பிடுவது எவ்வாறு இயலும்?[1] அந்த அணிநகர் அடியோடு அழிந்துவிடவில்லை என்பது அறிஞர் சீசர் பிரடெரிக்கின் கருத்தாகும். முகம்மதியர் அளவு கடந்த கொள்ளைப் பொருள்களைப் பெற்றனர். முதலாம் அலி அடில்ஷா

1. Sewell, op. cit., p. 208

கோழிமுட்டையை ஒத்த அளவை உடைய ஒரு வைரத்தைப் பெற்ருர். வெற்றிவீரர்கள் ஆறு திங்கள்களுக்குப் பிறகே விசயநகரை விட்டகன்றனர். ராய்ச்சூரும் முட்கலும் பகைவர் வசப்பட்டன. விசயநகரம், ராய்ச்சூர் தோஆப் பகுதியை முடிவாக இழந்தது. விசயநகரின் வீழ்ச்சியை நினைக்கும் பொழுது உரோமாபுரியின் வீழ்ச்சி நமக்கு நினைவுக்கு வருகிறது. உரோமின் அழிவு விசயநகரத்தின் சீர்குலைவைப் போல ஒரே நாளில் ஏற்பட்டதன்று. எனினும் உரோமின் அழிவுபாடுகள் அந்நகரின் சிறப்பை உணர்த்தின. அதேபோல் விசயநகரின் வீழ்ச்சியும் அழிவும் அதனுடைய உயர்வை உலகத்துக்குப் பறைசாற்றுகின்றன. சீரும் சிறப்பும் அழகும் அருளும் புகழும் பொருளும் பெற்று நினைக்குந்தோறும் நெஞ்சம் தழைக்கத் தக்க வகையில் கலைகளை வாரிவழங்கிய விசயநகரின் வரலாற்றை விளக்க ஹம்பியில் பல சின்னங்கள் இன்றும் உள்ளன.

**இராமராயரின் சிறப்பு.** அச்சுதராயர் ஆட்சிக்காலத்திலேயே இராமராயர் அரசியலில் சிறப்பு எய்தியிருந்தனர். கிருட்டினதேவராயர் இறந்தது முதல் (1530), 1565 வரை உள்ள காலப்பகுதியை "இராமராயரின் காலம்" என்று கூறுவது ஒருவகையில் பொருத்தமானதே. அச்சுதராயர் ஆட்சியின் பிற்பாதியில் நாட்டில் கேட்டை விளைத்து வந்த சலக்கராசு சகோதரர்களின் கொடுமையினின்றும் பேரரசை விடுவித்தபெருமை இராமராயருக் குரியது. சதாசிவர், பெயரளவில் மட்டும் ஆட்சி நடத்திஞரென்று நாமறிவோம். அக்காலம் முழுவதிலும் இராமராயர் போர்வீரராகவும் அரசியல் அறிஞராகவும் பணிசெய்து புகழ்பெற்ருர். தக்கண அலுவல்களைப் பொறுத்தவரை அவர் முதலில் பின்பற்றிய கொள்கை அவருக்கு வெற்றியையே அளித்தது. ஆனல் அவர்பால் வளர்ந்த அளவுகடந்த செருக்கு அவருக்குப் பகையாக ஒரு கூட்டுறவு அமையக் காரணமாயிற்று. தலைக்கோட்டைப் போரில் அவர் தோல்வியுற்றமைக்கு அவருடையகுற்றம்காரணமன்று; அவருடைய வாய்ப்புக்கேடே காரணமாகும். கிருட்டின தேவராயரின் ஆட்சிக்காலச் சிறப்பு, ஓரளவு இராமராயரின் காலத்திலும் இருந்தது. பின்னவர், தக்காண சுல்தான்களைத்

தமக்குப்பணியுமாறு செய்து அப்பகுதியில் இணையற்ற மாபெரும் வீரராகச் சிறிது காலம் விளங்கினர். ஆனல் அவர் சதாசிவ ராயரை இழிவாக நடத்தியது முறையற்ற செயலாகும். இராம ராயர், இலக்கியத்தையும் வைணவ சமயத்தையும் ஆதரித்தார்; இசையையும் கல்வியையும் விரும்பிப் போற்றினர். அவர், மரபு வழியான உள்நாட்டுக் கொள்கைகளேயே பின்பற்றினரென்று கல்வெட்டுச் சான்றுகளாலறிகிறோம். பல கல்வெட்டுகள் மயிர் வினைஞரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஒரு மயிர்வினைஞன், இராமராயருக்கும் சதாசிவராயருக்கும் மிகவும் நேர்த்தியான வகையில் மயிர்மழித்ததால் மகிழ்ச்சியடைந்த அவர்கள், பேரரசு முழுவதிலும் மயிர்வினைஞருக்கு வரி செலுத்துவதி னின்று விலக்கு அளித்ததாகக் கல்வெட்டு அறிவிக்கிறது.

**தலைக்கோட்டைப்போரின் விளைவுகள்.** விசயநகரப்பேர ரசு. தலைக்கோட்டைப் போர், "விசயநகரப் பேரரசின் வாட் டர்லூ போர்" என்று பொதுவாகச் சிறப்பிக்கப்படுகிறது. அதா வது, ஐரோப்பிய வரலாற்றில் 1815'ம் ஆண்டில் நெப்போலிய னின் பேரரசு வீழ்ச்சியுறக் காரணமாயிருந்த "வாட்டர்லூ போர்" எத்தகைய சிறப்பு வாய்ந்ததோ அத்தகைய சிறப்பு விசயநகர வரலாற்றில் தலைக்கோட்டைப் போருக்கும் உரிய தாகும் என்பதாம். ஆனல் இம் மதிப்புரை தவறானது என்ற கருத்துக்கு ஆதாரமாக உள்ள குறிப்புக்களைத் தருபவர் அறிஞர் பெரிஷ்டாவே. தலைக்கோட்டைப்போர் இந்துக்களது ஆதிக்கத்தை இறுதியாக ஒழித்துவிட்டது என்பது சிலர் கருத்து. ஆனல் வேறுசிலர், தென்னிந்தியாவில் இந்துக்களை அடியோடு அது அழித்துவிடவில்லை என்றும் விசயநகரம் அப் போருக்குப் பிறகும் ஆரவீடு குலத்தினரின்கீழ் ஓரளவுச் சிறப்பைப் பெற்றிருந்ததே அதற்குச் சான்ருகும் என்றும் கூறுவர். பின்வந்த ஆரவீடு குலத்தின் முதல் மூன்று மன்னர் கள் கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கை சிறப்பாகப் போற்றற்குரியது. 1580'ம் ஆண்டுவரை குண்டூர் மாவட்டத் திலும் 1592 வரை பெல்லாரியிலும் 1614 வரை, கர்னூல் கடப்பை, நெல்லூர் பகுதிகளிலும் விசயநகர அரசர்களின் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பீஜப்பூருக்கும் கோல் கொண்டாவுக்கும் பகையாகப் பல கலகங்களை விசயநகர

அரசியலார் தோற்றுவித்தனரென்றும் அறிகிறோம். 1565க்குப் பிறகு விசயநகரப்பேரரசில் பெருங்கலகமெதுவும் தோன்ற வில்லை. ஆதலால் தலைக்கோட்டைப்போர் விசயநகரை, தமக்கிடையே போராட்டம் நடத்திவரும் பல சிறுபகுதிகளாகச் செய்தது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. சிற்சில காலங்களில் கீழ்ப்படியாமை, பேரரசில் புலப்பட்டது. ஆனால் அதற்குத் தலைக்கோட்டைப் போர்தான் காரணம் என்று கூற வேண்டியதில்லை. 1570'ல் சதாசிவ ராயர் கொலையுண்டதை அதற்கு ஓர் காரணமாகக் கூறலாம். திருமலைராயர் அழிந்த தலைநகரைப் புதுப்பிக்க முயற்சி எடுத்துக்கொண்டார். தலைக் கோட்டைப் போரினாலேற்பட்ட அதிர்ச்சி அவருடைய அறிவை அழித்துவிடவில்லை என்பதை அம்முயற்சி அறிவிக்கின்றது. பேரரசில் பல இடையூறுகள் தோன்றியமைக்குச் சுமார், 1550 முதல் சிறைப்பட்டிருந்த அரசர் இரங்கத்தக்கவகையில் கொலையுண்டது, சிறப்பான காரணமாகும். தலைக்கோட்டைப் போர்விசயநகரப்பேரரசுக்கு ஒருபெரும் நெருக்கடியைத்தோற்று வித்ததென்பதில் ஐயமில்லை. நெருக்கடியின் வளர்ச்சிக்கு அப்பேரரசின் உள்துறைக் குறைபாடுகள் உதவின என்பது தும் நோக்கத்தக்கது. எனினும் அப்போருக்குப் பின் ஏறத்தாழ அரை நூற்றாண்டுவரை அப்பேரரசு ஓரளவு சிறப் புடன் நிலைபெற்றிருந்தது; முகம்மதியரை எதிர்க்கும் முயற்சி யும் கைவிடப்படவில்லை. அரசியல், கலைப்பண்புத் துறைகளில் விசயநகரத்தின் முதல் மூன்று குலத்தினர் ஆற்றிவந்த பணிகளில் நான்காவது குலத்தினரும் ஓரளவு கருத்துச் செலுத்திவந்தனர். எனினும், பேரரசு அதனுடைய பழைய பெருமையைப் பெற்றிருக்கவில்லை என்பது உண்மையாகும். "........ஆனால் தலைக்கோட்டைப் போருக்குப் பிந்திய ஐம்பது ஆண்டுகளில் விசயநகர இராச்சியத்தின் நிலைமையை ஆராயும் பேரறிஞர் R. சத்தியநாதய்யர், I-ம் வேங்கடருக்குப் பிறகே, மாகாண அரசியலார் மத்திய அரசியலாரின் ஆணையைமீறும் ஆற்றலை மிகுதியாகப் பெற்றனரென்று முடிவு செய்துள்ளார். இக்கருத்து அறிஞர் மெத்வோல்டு (Methwold) அவர்களின் கருத்துடன் ஒத்துள்ளது.[1] விசயநகர வரலாற்றில் தலைக்

1. W. H. Moreland (Ed), Relations of Golconda (1931) P. 2 n. 5.

கோட்டைப்போர் ஓர் நெருக்கடியை விளைத்தது என்று கூறலாம். ஆனால் தென் இந்தியாவில் இந்துக்களைத் தலை தூக்கமுடியாமற் செய்த பெரியதோர் நெருக்கடியை அப்போர் விளைவிக்கவில்லை.[1]

தக்கணச் சுல்தானியர் நிலை. தலைக்கோட்டைப் போர்க் காலத்திலேற்பட்டிருந்த முகம்மதியர் கூட்டுறவு சிறிது காலம் தான் நிலைத்திருந்தது. அதன் உறுப்பினரிடை நீடித்த ஒற்றுமை இல்லாததால் அது மெலிவுற்றது. அதனால் முகலாயப் படையெடுப்பாளருக்கு அவர்கள் அடங்கி ஒடுங்க வேண்டியதாயிற்று. தக்கணச் சுல்தானியர், தலைக்கோட்டைப் போரினால் சிறப்பான நன்மையைப் பெறவில்லை. தோஆப் பகுதி மட்டும் அவர்களுக்குக் கிடைத்தது. விசயநகர இராச்சியத்துக்குரிய நிலப்பகுதிகளைக் கவர்ந்துகொள்ள அவர்கள் செய்து வந்த முயற்சிகள் எதிர்பார்த்தவாறு பயனைத்தரவில்லை. அவர்கள் தெற்கில் சிறப்பான இடங்களைப் புதிதாகப்பெற்றது பதினேழாம் நூற்றுண்டில் தான். தலைக்கோட்டைப் போரில் மற்ற சுல்தான்களுடன் ஒத்துழைக்காத பேராரைத் தண்டிக்கும்பொருட்டு 1566'ல் ஆமதுநகரச் சுல்தானும் பீஜப்பூர் சுல்தானும் அந்நாட்டின் மீது படையெடுத்தனர். ஆனால் படையெடுத்த இருவருமே ஒத்துழைக்காததால் அம் முயற்சி வீணாயிற்று. ஆனால் பிறகு 1574'ல் ஆமதுநகர், பேராரை இணைத்துக்கொண்டது. தலைக்கோட்டைப் போர் பொதுவாக முகம்மதியர் ஆதிக்கத்தைத் தக்கணத்தில் உறுதியாக்கியதென்பது உண்மை.

போர்ச்சுகீசியர் நிலை. விசயநகரின் தோல்வி, இந் நாட்டில் போர்ச்சுகீசியரின் வாணிகச் சிறப்பு குன்றுவதற்குக் காரணமாயிற்று. துளுவ குலத்தின் எழுச்சியுடன் கோவாவின் எழுச்சி தொடங்கியது; அக்குலத்தின் வீழ்ச்சியுடன் கோவாவின் வீழ்ச்சியையும் காண்கிறோம்.[2] அல்புகர்க், விசயநகருடன் நட்பு உறவு பூண்டிருந்தாரென்பதை நாமறிவோம்.

1. R. Sathianathier, The climacteric of Talikota (Journal of Indian History, 1927, pp. 67—78.

2. Sewell, op. cit., p. 155

கூரிய அறிவுத் திறமையால் விளைந்த அச்செயலின் சிறப்பை அவருக்குப்பின் வந்த போர்ச்சுகீசியத் தலைவர்கள் போதுமான அளவுக்கு உணரவில்லை. அவர்கள், இந்துப் பேரரசின் வீழ்ச்சியைப் பொருட்படுத்தாம லிருந்துவிட்டனர். அதன் பயனாகக் கோவாவின் வாணிகம் குறைவடைந்தது. மேலும் 1569—70'ல் ஆமதுநகரும் பீஜப்பூரும் போர்ச்சுகீயருக்குப் பகையாக ஒன்று சேர்ந்தன. போர்ச்சுகீசியருடன் மிகுதியாக வாணிகம் செய்து வந்த விசயநகரப் பேரரசு அழிவுற்றபின், அந்த ஐரோப்பியர் இந்நாட்டில் பெற்றுவந்த வருவாய் மிகுதி யாகக் குறைந்துவிட்டது; கோவா மக்களின் வாழ்க்கை நல மும் குறைவுற்றது.[1] பாரசீகக் குதிரைகளை இந்தியாவில் இறக்குமதி செய்வதால் போர்ச்சுகீசியர் பெற்றுவந்த வருவாய் மட்டுமே நூற்றுக்குத் தொண்ணூற்று ஆறு பங்கு குறைந்து விட்டதாம்.

## பகுதி II

### ஆரவீடுகுலம் அல்லது நான்காவது குலம்
### திருமலையும் முதலாம் ஸ்ரீரங்கரும்.

திருமலை — அரசப்பிரதிநிதி (1565—70). தலைக் கோட்டைப் போர் முடிந்தவுடன், திருமலை, தம்மை அரசப் பிரதிநிதியாகத் தாமே அமர்த்திக்கொண்டு அரசருடன் விசய நகரை விட்டகன்றார். வெற்றிகொண்ட சுல்தான்கள் விசய நகரில் நீண்டகாலம் தங்கிவிட்டுத் தம் நாடுகட்குத் திரும்பிய பிறகு திருமலை, தலைநகருக்குச்சென்று அதை மீண்டும் சிறப் புறச் செய்யும் முயற்சியி லீடுபட்டார். அவர், 1566'ல் தம்மை எதிர்த்து வந்த அடில்ஷாவை முறியடித்து வெற்றிகொண்டார்; மேலும், பீஜப்பூருக்குப் பகையாக ஆமதுநகருடனும் கோல் கொண்டாவுடனும் இணைந்துகொண்டார். அவ்விணைப்பினால் அவருக்கு நற்பயன் எதுவும் ஏற்படவில்லை யாயினும், தலைக் கோட்டைப் போர் முடிந்தபிறகு அவருடைய நிலையை அறிய அந்நிகழ்ச்சி நமக்கு உதவுகிறது. அவரால் விசயநகரில் தம் ஆட்சியை அமைக்க இயலவில்லை; ஆதலால் 1567'ல் அவர்

1. Sewell, op. cit., p. 210.

தலைநகரை பெனுகொண்டாவுக்கு (அனந்தப்பூர் மாவட்டம்) மாற்றினர். அதே ஆண்டில் சதாசிவராயர், ஸ்ரீரங்கத்துக்குச் சென்று திரும்பினர். 1568'ல் அடில்ஷா, பெல்லாரி மாவட்டத்திலுள்ள அதோனிக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார். 1570'ல் திருமலையின் மகனொருவன் (வேங்கடன் என்பானாக இருக்கக்கூடும்) சதாசிவராயரைக் கொன்றான். பின்னர்த் திருமலை அரியணையிலமர்ந்தார்; பேரரசப் பட்டங்களையும் சூடிக்கொண்டார்.

**பேரரசர் திருமலை (1570—'2).** திருமலை, பேரரசரான பிறகு அவருடைய அரசியல் தொல்லைகள் மிகுதியாயின. ஆதலால் அவர் பேரரசை மூன்றாகப் பிரித்துத் தம் மூன்று குமாரர்களுக்கும் அளித்தார். அதன்படி உதயகிரியைத் தலைநகராய்க்கொண்ட பகுதியை ஸ்ரீரங்கரும் சீரங்கப்பட்டணத்தைத் தலைநகராய்க் கொண்ட பகுதியை இராமர் என்ற மகனும் சந்திரகிரியைத் தலைநகராய்க்கொண்ட நிலப்பகுதியை வேங்கடரும் ஆட்சிசெய்யலாயினர். திருமலை வடக்கு எல்லைப்புறத்தில் இடையூறு ஏற்படாவண்ணம் இராச்சியத்தைக் காவல்செய்து வந்தார். 1571'ம் ஆண்டின் முடிவில், திருமலைக்குப் பின் ஸ்ரீரங்கரே அரசுரிமை பெறுவாரென்று அறிவிக்கப் பெற்றது. அக்காலம் முதல் ஸ்ரீரங்கர், பெனுகொண்டாவிலிருந்து ஆட்சி புரிந்து வந்தார். திருமலை, அறிவுடையோருடன் கூடி இருத்தல் இன்பத்துக் கெல்லாம் இன்பம் என்ற கொள்கையைக் கொண்டிருந்தார். அவர் நூலாசிரியராகவும் கடவுளிடத்தன்பு கொண்டவராயும் இருந்தார். சதாசிவ ராயரைக் கொலைசெய்தவனுக்கு அவர் உதவியாயிருந்தார் என்ற கருத்து அவருடைய பெருமைக்கு ஒரு பெரும் இழுக்காயிருந்தது. பேரரசின் தலைநகர் முதலில் பெனுகொண்டாவுக்கும் பிறகு சந்திரகிரிக்கும் அதன்பின் வேலூருக்கும் மாற்றப்பட்டபோதிலும் பழைய தலைநகரான விசயநகரை ஒருவரும் மறக்கவில்லை. புதிய தலைநகரங்களை விசயநகரம் என்ற பெயராலேயே, உள்நாட்டு வெளிநாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டனர்.

**முதலாம் ஸ்ரீ ரங்கர்:** (1572—'85) இவர் ஒரு சிறந்த வைணவர்; போர் விருப்பம் மிக்கவர்; கருணை என்னும் நற்

பண்பு கொண்டவர். "விசயநகர மன்னர்களுள், இவர் மற்றவர்களை விட, அருளும் பிறருக்கு உதவிசெய்யும் தன்மையும் மிகுதியாகப் பெற்றிருந்தார்."[1] ஸ்ரீரங்கர் காலத்திலும் அரசியல் தொல்லைகள் நீடித்து வந்தன. பீஜப்பூரும் ஆமதுநகரும் விசயநகர ராச்சியத்தைத் தாக்கும் பொருட்டுத் தமக்கிடையே உடன்பாடு செய்து கொண்டன. அதனால் மீண்டும் போர் மூண்டது. 1580'ல் கோல்கொண்டா, குண்டூர் மாவட்டத்தையும் நெல்லூர், கடப்பை, கர்னூல், பெல்லாரி மாவட்டங்களில் சிற்சில பகுதிகளையும் கைப்பற்றிக்கொண்டது. ஆனால் அப்பகுதிகளில் சுல்தானாட்சியை எதிர்த்து அடிக்கடி கலகங்கள் தோன்றிவந்தன. விசயநகரமும் இழந்த பகுதிகளை மீட்டுக்கொள்ள முயற்சி செய்து வந்தது.

## பகுதி 12

### முதலாம் வேங்கடர்

முதலாம் வேங்கடர்: (1585—1614). திருமலையின் மகனான இவ்வேங்கடரை, II'-ம் வேங்கடர் என்றுச் சில அறிஞர்கள் கருதுவர். அவர்கள் அச்சுதராயரின் மகனை I'ம் வேங்கடர் என்று கொண்டமையே அதற்குக் காரணமாகும். வேங்கடரின் அண்ணன் மக்களான திருமலை, சீரங்கன் இருவரும் வயதில் மிக இளையவர்களாயிருந்ததால், நாட்டின் பெருஞ் செல்வர்களும் குருமாரும் வேங்கடரை மன்னராக்கினர். அரசர், 1592'ல் தலைநகரைச் சந்திரகிரிக்கு மாற்றினர். சதாசிவராயரைக் கொன்றவர் இவ்வரசரே என்று கருதப்பட்டதால் பேரரசில் கலகங்கள் தோன்றின. அரசர் அவற்றை அடக்கி வெற்றிபெற்றார். வேலூர் லிங்கம நாயக்கர், தமது உரிமை ஆட்சியை நிறுவ முயன்றது தோல்வியில் முடிந்தது. வேலூர், சிலகாலங்களில் இராச்சியத்தின் தலைநகராயிருந்தது. வேங்கடர், விசயநகரம் இழந்த பகுதிகள் பலவற்றை மீட்டுக்கொண்டார். இவருக்கு முன் அடில்ஷாவின் ஆக்கிரமிப்புக் கொள்கை பயனற்றதாகியது. அக்பர்,

1. Heras, op. cit., P. 278.

இரண்டு அரசியல் தூதுக்குழுவினரை வேங்கடரிடம் அனுப்பியதாகக் கூறப்படுகிறது. (கி. பி. 1600; 1604.) ஆனால் விசயநகர வேந்தர் அவர்களிடம் நம்பிக்கை கொள்ளாத காரணத்தால் அவர்களை ஆதரிக்கவில்லை.[1] வேங்கடர் சிறிதுகாலம் போர்ச்சுகீசியருடன் நட்பு உறவுகொண்டிருந்தார். இவருக்கும் சீரங்கப்பட்டணத்தில் அரசப் பிரதிநிதியாக இருந்த இவருடைய அண்ணன் மகன் திருமலைக்கும் இடையே பகைமை உறவு வளர்ந்து வந்தது. அவ்வமயம் மைசூரில் இராசா உடையார் என்ற தலைவரொருவர் தம்முடைய வீரத் தினால் வலிமை மிக்கவராக விளங்கினர். 1612'ல் அவர் சீரங்கப்பட்டணத்தைக் கைப்பற்றிக்கொண்ட செயலைப் பேரரசர் ஏற்றுக்கொண்டார். அந்த உடையார், உரிமையுடன் பேரரசரைப் பொருட்படுத்தாமல் தமது ஆட்சியை அப்பகுதியில் நிறுவினர். அணிமைக்காலம் வரை மைசூரில் ஆட்சி புரிந்துவந்த குலத்தைத் தோற்றுவித்தவர் அவரே ஆவர். ஆரவீடு குலத்தின் மிகச் சிறந்த அரசரென்று வேங்கடர் போற்றப்படுகிறார். உள்நாட்டு, வெளிநாட்டு இன்னல்கள் பலவற்றிற்கிடையில் அமைந்திருந்த அவர் ஆட்சிமுறை பெரும்பாலும் வெற்றி பெற்றதென்றே கூறவேண்டும். ஐரோப்பிய நாடுகளுடன் அவர் பெரும்பான்மையும் நல்லுறவு பூண்டிருந்தார். அவர் கல்வியையும் ஐரோப்பிய ஓவிய முறையும் விரும்பி ஆதரித்தார். வைணவ சமயப்பற்று மிகுதியாக அவரிடமிருந்தது. நன்கொடைக் குறிப்புகளின் முடிவுரையில் வழக்கமாக இருந்து வந்த "ஸ்ரீ விரூபாட்சர்" என்ற சொல்லுக்குப் பதிலாக, அவர், "ஸ்ரீ வேங்கடேசர்" என்பதை எழுதச்செய்தார். அவர் வாழ்ந்த காலம் சமயத்துறையில் குறுகிய உள்வகுப்புப் பற்று மிக்கதாயிருந்தது. எனினும் அம்மன்னர், பரந்த மனப்பான்மையும் சமயப் பொறையும் பெற்று விளங்கியதுடன் மதச்செய்திகளை ஆய்ந்து அறிந்துகொள்ளும் ஆர்வத்தையும் பெற்றிருந்தார். அவர் ஆறு மனைவியரைப் பெற்றிருந்தும் ஒரு மகனைக்கூடப் பெறவில்லை. 1614'ல் அவர் இறந்தவுடன் பெரியதோர் அரசுரிமைப் போராட்டம் நாட்டிலேற்பட்டுப் பேரரசு பிளவுண்டு மெலிவுற்றது.

1. Ibid., pp. 337—40.

## அதிகாரம் 13

# பதினாரும் நூற்றாண்டில் தென்இந்தியா

(தொடர்ச்சி)

## பகுதி I

### ஆட்சிமுறையும் சமயமும்

ஆட்சி முறை. நடு அரசு, பேரரசரின் முழு அதிகாரத்துக்கு அடங்கியிருந்தது. அவர், அமைச்சர்களுடனும் தமது தனிப் பற்றுக்குரியோருடனும், பொதுச் செய்திகளைக் கலந்து ஆலோசிப்பது வழக்கம். தலைநகரில் பேரரசர் இல்லாத காலங்களில் தலைமை அமைச்சர் அவருடைய பிரதிநிதியாகச் செயலாற்றுவார். படை அமைப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு, பேரரசு பல மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. சிறந்தகோட்டைகள் உள்ள இடங்களே மாகாணத் தலைநகரங்களாக விளங்கின. அரசியலார் சிறந்த இராணுவத்தலைவர்களையே மாகாண ஆட்சித் தலைவர்களாக அமர்த்தி வந்தனர். அவ்வாட்சித் தலைவர்கள், பெரும்பான்மையும் பேரரசுத் தலைநகரில் தான் தங்கியிருப்பது வழக்கம். அவர்களுடைய ஆணைகளை நிறைவேற்றத் துணைத்தலைவர்கள் மாகாணங்களில் இருந்தனர். எல்லைப்புறங்களில் மட்டும் ஆட்சித்தலைவர்கள் தாமே நேரில் ஆட்சி நடத்தினர். சோழர் காலத்திய ஊர்ப்பேரவைகள், நாம் குறிப்பிட்டு வரும் காலப் பகுதியில் மறைந்துவிட்டன என்றே கூறவேண்டும். "நிலங்கள் யாவும் அரசருக்கு உரியவை; அவரிடமிருந்து "அமர நாயக்கர்." எனப்பெற்ற தலைவர்கள் நிலங்களைப் பெற்று உழவர்களுக்குக் கொடுக்கின்றனர். உழவர்கள் நிலவருவாயில் பத்தில் ஒன்பது பங்கைத்தமது தலைவர்களுக்குச் செலுத்துவர், [1]. இருநூற்றுக்கு மேற்பட்ட அத்தகைய தலைவர்கள் விசயநகர 'இராச்சியத்தில் உள்ளனர்."[2] பெரும்பான்மையான ஊர்கள், அமரநாயக்கர்களின் மானியங்களாகவே இருந்

1. Sewell, op. cit. P. 379,
2. Ibid. P. 389.

தன. ஆனல் அவைகளில் அரசருக்குரிய நிலங்களையும் வரி விதிக்கப்பெருத நிலங்களையும் காணமுடியும். மானியங்கள் வழிவழி உரிமையாகவே அமைந்தன என்று கூறுவதற்கில்லை. நிலங்களைச் சிறுதுண்டுகளாக்கிச் சிறு மானியக்காரரை அமர்த்தும் முறை ஓரளவுக்கே காணப்பெற்றது. ஆதலால் அரசர், அமரநாயக்கர்களுடன் கொண்டிருந்த தொடர்பு, முழு நிலமானிய முறையை (Feudal System) ஒத்தது அன்று. ஆயினும், அமரநாயக்கர்கள், அரசனுக்குப் படைத்துறையில் பணியாற்றக் கடப்பாடுடையவராயிருந்தனர். மேலும் அவர்கள், மன்னருக்குத் திறை செலுத்தியும் சிற்சில காலங்களில் பரிசுகள் வ்ழங்கியும் வந்தனர். பெரும்பான்மையும் அவர்கள் தலைநகரில்தான் தங்கியிருந்தனர். அரசியலார், நீர்ப்பாசனத்துக்கான ஏற்பாடுகளைச் சிறந்த முறையில் செய்திருந்தனர்; நிலங்களை அளந்து, தரத்துக்குத் தக்கவாறு பிரித்து நிலவரியைத் தீர்மானித்தனர். அவர்கள் விளைவில் பத்தில் ஒன்பது பங்கை வரியாகப் பெற்றனர் என்று நூனிஸ் கூறுவது நம்பத்தக்கதாக இல்லை. பலவகை வரிகளை மக்கள் செலுத்தி வந்தனர். பேரரசு முழுவதும் நிலவியிருந்த திருமண வரியைச் சாளுவதிம்மர் நீக்கினர். பெரும்பான்மையும் பொருளமைப்பு முறை, உழவர்களுக்குத் தீமை பயப்பதாக இருந்ததாலும் மானியத்தலைவர்கள் மக்களைக் கொடுமைப் படுத்தியதாலும் பலர் வேறு இடங்கட்குச் செல்ல நேர்ந்தது. கிருட்டினதேவராயர் போன்ற செங்கோலர், கேடுகளிருப்பதாக அறிந்தால் உடனே அவற்றைக் களையத் தவறவில்லை. ஆனல் ஆற்றலற்ற அரசர்கள் அரியணையில் இருந்த காலங்களில் பெருஞ்செல்வர்கள் வரம்புமீறித் தம் விருப்பம்போல் கொடுமை யிழைத்து வந்தனர். எடுத்துக்காட்டாக அச்சுதராயரின் ஆட்சியைக் குறிப்பிடலாம். அரண்களை அமைத்து அவற்றை நன்கு காப்பாற்றுதல் இராணுவக்காவல் திட்டத்தின் ஒரு முக்கிய பண்பாக இருந்தது. விசயநகரம் ஏழு சுவர்களால் காக்கப்பட்டு வந்தது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தகும். படை மானிய முறை நிலவியதென்று முன்னர்க் கண்டோம். தவிர, பேரரசர், நேர்முறையில் பலரைப் படையில் அமர்த்தி அவர்களுக்குத் தாமே ஊதியம் கொடுக்கும் வழக்க

மும் நிலவியது. முகம்மதியரும் அவ்வாறு படையில் சேர்ந்த னர். காலாட் படையைவிடக் குதிரைப் படைக்கே மிகுந்த சிறப்பு அளிக்கப்பட்டிருந்தது. விசயநகர வேந்தரின் பீரங்கிப் படை, தக்கண சுல்தானியரின் பீரங்கிப் படையுடன் ஒப்பிடு மிடத்து, குறைபாடுகள் உள்ளனவாகவே இருந்தது. சுல் தானியர், அயல்நாட்டுத் தொழிலறிஞர்களின் உதவியைப் பெற்றிருந்தனர்.

**வைணவ மதத்தின் மிக உயர்ந்த நிலை.** கிருட்டின தேவராயர், திருமாலையும் (வேங்கடேசர், விட்டோபா) சிவனை யும் வழிபட்டார். ஆன்மீகத் துறையில் அக்காலத்தின் நிலை மையை நன்கு உணர்ந்த அறிஞரான துவார்ட் பார்போசா (1504–14) கூறுவதாவது:- "மக்கள், தம்விருப்பம்போல் எம் மதத்தையும் பின்பற்ற அரசர் அனுமதிக்கிறார். மக்கள், கிறித்தவ ராயினும் யூதராயினும் முகம்மதியராயினும் வேறுஎந்த மதத்தவ ராயினும் சமயக் கட்டுப்பாடின்றி நாட்டில் வாழலாம்......" அச்சுதராயர், மிகுந்த வைணவப் பற்றைக் கொண்டிருந்தா ரெனினும் காஞ்சியிலும், காளத்தியிலும் உள்ள சிவன்கோயில் களுக்கு நன்கொடைகள் வழங்கினர். அவரும் சதாசிவராய ரும் ஸ்ரீரங்கத்துச் சென்றனரென்பதை முன்னர் கண்டோம். அச்சுதரும், மற்றொரு சிறந்த வைணவரான இராமராயரும், சிதம்பரத்தில் கோவிந்தராசக் கடவுளின் உருவத்தை மீண்டும் நிறுவியதாகக் கூறப்படுகிறது. ஆனால் அப்புண்ணியச்செயலை 1370'ம் ஆண்டில் விசயநகரத்தளபதி கோபணர் ஆற்றின ரென்பது ஈண்டு நினைவுகூரத்தகும். முஸ்லிம் போர்வீரர்கள் தம்மை வணங்கும்பொழுது குரான் புத்தகத்தைத் தமக்கு முன் வைத்திருக்கும் பழக்கத்தை II'ம் தேவராயரும் இராம ராயரும் பின்பற்றினர். விசயநகரத்தில் முகம்மதியர் தமது மதச்சடங்கு முறைப்படி பசுக்களைக் கொல்வதை இராமராயர் தடுக்கவில்லை. அவருடைய உடன்பிறந்தாரான திருமலை அக் கொலைச்செயலை எதிர்த்தபோதிலும் இராமராயர் முகம்மதிய ரின் மதச்சடங்குகளில் தாம் தலையிடக்கூடாது என்று கூறி விட்டார். திருமலையும் I'ம் சீரங்கரும் திருமாலை அன்புடன் வழிபட்டனர். I'ம் வேங்கடர், தமது குருவான தாதாசாரி

யருடன் சேர்ந்துகொண்டு வைணவ மதத்தைப் பரப்பும் முயற்சியிலீடுபட்டிருந்தார். அக்காலத்தில் குறுகிய மனப் பான்மை காரணமாகச் சிதம்பரத்தில் மதப்போராட்டம் நிகழ்ந்ததையும் காண்கிறோம். அதே காலத்தில் சிவவழிபாட்டுக் கொள்கையைச் சிறந்த முறையில் அப்பய்ய தீட்சதர் என்ற வடமொழி அறிஞர் பரப்பிவந்தார். மத்வரின் கொள்கையைக் கற்பித்த வியாசதீர்த்தரும் அவரைப் போன்ற வேறுசில ஆசிரியர்களும் 16'ம் நூற்றுண்டின் முற்பாதியில் வாழ்ந்தனர். அக்காலத்தில் சைவ சமயத்தைவிட வைணவ சமயம் மிகுந்த முன்னேற்றமடைந்தது என்று கூறலாம். மானியக்காரர் குலங்களில், இக்கேரி நாயக்கர்களையும் வேலூர் நாயக்கர்களையும் வேறு சிலரையும்தவிர மற்ற யாவரும் வைணவர்களாயிருந்தனர். ஆனால் பேரரசின் மக்களில் பெரும் பகுதியினர் சிவபெருமானிடம் அன்புகொண்டவர்களாகவே இருந்தனர்.

## பகுதி 2

### சமூகநிலையும் பொருளாதார வாழ்க்கையும்.

அறிஞர் நூனிஸ் அந்தணர்களைப்பற்றிக் குறிப்பிடுவதாவது :— "அவர்கள், நேர்மையானவர்கள்; ஆற்றலும் ஊக்கமும் நிரம்பியவர்கள்; கணக்குகளில் மிக்க திறமைபெற்றுள்ளவர்கள்; அவர்களுடைய உடலமைப்பு நன்றாக உள்ளது. ஆனால் மெலிந்த உடலைப்பெற்ற அவர்களால் கடினமான உழைப்பை மேற்கொள்ள இயலவில்லை. அரசியல் அலுவல்கள் அந்தணர்களின் உதவியுடன் நடைபெறுகிறது.[1].. ...... "அந்தண குருமாரோ, செல்வச்செருக்கு முதலிய சிறப்பற்ற சில குணங்களைப் பெற்றிருந்தனர்.[2] இக்குறிப்பை எழுதிய போர்ச்சுக்கீசிய அறிஞர் இராயர்களை அந்தணர் என்று கூறுவது தவறுகும். சமூகத்தில் சாதிச்சண்டை இருந்ததால் அரசர்கள் அதில் தலையிட்டு அமைதியை ஏற்படுத்த வேண்டியது இன்றியமையாததாயிருந்தது.[3] அரசரும்

1 & 2 Ibid., pp. 390 & 379.

3 T. V. Mahalingam, Administration and Social Life under Vijayanagar (1940), pp. 250—3.

அவருடைய அலுவலாளரும் உயர் இன்ப வாழ்க்கை வாழ்ந்து வந்ததால் விசயநகரம் பகட்டாகக் காட்சி அளித்தது ஆனல் அந்த இந்துப்பேரரசின் மேன்மையை மதிப்பிடுகை யில் அங்கே, மிகச்சிறந்த காலப்பகுதியிற்கூட உழவர் பல இடையூறுகளைப் பெற்றிருந்தனர் என்பது மறக்கப்பாலதன்று. மக்கள் அணிகலன்களையும் வாசனைப் பொருள்களையும் விரும்பி னர். பெருஞ்செல்வர்கள் வெறியூட்டும் குடிவகைகளை நாடி னர். "இராயர்கள் குருவி வகைகளையும், எலிகளையும், பூனை களையும், பல்லிகளையும் உட்கொள்வர்; ஆனல் பசுவின் இறைச்சியையும் எருதின் இறைச்சியையும் உண்ணுர்[1] என்று அறிஞர் நூனிஸ் குறிப்பிடுகிருர். உயர்குடிப்பிறந்தோர் பல மனைவியரை ஏற்கும் கொள்கையை ஆதரித்ததால், விலை மகளிர் வீடுகளுக்கு அவர்கள் செல்வது இழிவாகக் கருதப் படவில்லை. கற்பு நெறியைப்பற்றிக் கவலைகொள்ளாத பெண் டிர், படையிலும் சேர்ந்து பணியாற்றினர். தலைநகரின் ஆட லணங்குகளைப்பற்றி அயல்நாட்டவர் மிகுதியாகக் குறிப்பிட் டுள்ளனர். ஆனல் இதைக்கொண்டு ஆடலணங்குகளின் ஆதிக்கம் நம் சமூகத்தில் காணப்பட்டதென்று கருதிவிடக் கூடாது. நற்பண்புகளைவிடத் தீயபண்புகள்தான் உலகில் மிகுதியாகப் பறைசாற்றப்படும். இந்தியாவைப்பற்றிக்குறிப்புக ளெழுதிய ஐரோப்பியர், இற்பிறப்பு, இரும்பொறை, கற்பு முதலியன களிநடம் புரியும் மாண்புடைய மாதரின் மனை கட்குச் சென்று அவர்களைப்பற்றி அறியவில்லை என்பதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும். அரச அவையில் அழகும் ஆற்றலும் அமையப்பெற்ற ஒரு ஆடலணங்கு, நல்வாய்ப் பிருந்தால் அரசியாகவும் அமரமுடியும் என்பதற்கு ஒரு எடுத் துக்காட்டாகக் கிருட்டினதேவர், சின்னதேவியை மணந்து கொண்டதைக் குறிப்பிடலாம். சமூகத்தில் உடன்கட்டையேறும் வழக்கம் நிலவியது. கைம்பெண்டிரின் கடுந்துயரைக் களையும் சீர்திருத்தம் எதுவும் ஏற்படவில்லை. வேட்டையாடுதல், சூதாட்டம், குதிரைமீது அமர்ந்து பந்தாடுதல், நாடகங்கள் பார்த்தல், சேவல்களைச் சண்டையிடச் செய்தல் முதலியன

---

1 Sewell, op. cit., p. 375.

மக்களின் பொழுதுபோக்குக்களாம்.[1] "வலிமைப் போட்டியின் பொருட்டு போரிடுதலை, மக்கள் மிக உயர்வாகக் கருதினர். அதில் இறந்தோருடைய சொத்துக்களை வெற்றிவீரர் பரிசாகப் பெற்றனர்[2] என்று நூனிஸ் கூறுகிருர். நாட்டின் குற்றத்துறைச்சட்டங்கள் மிகவும் கடுமையாக இருந்தன. திருட்டுக்குற்றத்துக்கு கை, கால் முதலிய உறுப்புக்களை வாங்குதலும், கொள்ளைக்குத் தூக்கிலிடுதலும், பெண்டிரை மானக்கேடு அடையச் செய்வோருக்குக் கொலையும் தண்டனைகளாக விதிக்கப்பட்டிருந்தன. செய்நன்றி கொன்ற துரோகிகள் கழுவிலேற்றப்பெற்றனர். ஆற்றலை வெளிப்படுத்துவதற்காகப் போட்டிப் போர் நிகழ்த்துவதில் ஒருவர் மற்றவரைக் கொன்ருல் அது குற்றமாகக் கருதப்படவில்லை. சில காலங்களில் குற்றவாளிகளைக்கொல்ல யானைகள் பயன்படுத்தப் பெற்றன. "அரசர் இறந்தால் அவருடைய உடலுடன் 400 அல்லது 500 பெண்டிரும் அரசனின் அன்புக்குரிய பல ஆடவர்களும் தீக்கிரையாயினர்" என்று பார்போசா கூறுகிருர். இப்பழக்கத்தை அபுல்பஸல் உட்பட்ட பல முகம்மதிய ஆசிரியர்களும் குறிப்பிடுகின்றனர். தானேசுவரத்தில் பிரபாகர வர்த்தனன் இறந்தபின் அவருடன் பல அமைச்சர்களையும் எரித்தனர் என்று கி. பி. 7'ம் நூற்ருண்டில் பாணர் கூறியிருப்பது ஈண்டு நினைவு கூரத்தகும்.

வேளாண்மை, பழச்செடிகளை வளர்த்தல், பருத்திநெசவு உப்புக் காய்ச்சல், இரும்பு தயாரித்தல், வைரம் எடுத்தல் முதலியன மக்களின் முக்கியத் தொழில்களாம். நாட்டில் வாணிகக் குழுக்களும் தொழிற்சங்கங்களும் சிறந்த முறையில் செயலாற்றி வந்தன. ஹொனவர், பாட்கல், மங்களூர், கள்ளிக்கோட்டை, கொச்சி, கொல்லம், காயல், நாகப்பட்டினம், செயிண்ட்தோம், பழவேற்காடு முதலிய துறைமுகங்கள் அக்காலத்தில் சிறப்புற்று விளங்கின. போர்ச்சுக்கீசியரும் அராபியரும் இந்தியரும் அயல்நாட்டு வாணிகத்தை நடத்திவந்தனர்.

---

1 Saletore, Social and Political Life in the Vijayanagara Empire (1934), II, chap. IX.

2 Sewell op. cit. p. 383.

சில காலங்களில் போர்ச்சுக்கீசியர் கடற்கொள்ளை நிகழ்த்து வதுமுண்டு.

## பகுதி 3

### இலக்கியம்: வடமொழி, தெலுங்கு, கன்னடம்

வடமொழி. கிருட்டினதேவராயர் காலத்து இலக்கிய முன்னேற்றத்தை முன்னர்க்கண்டோம். அச்சுதராயாப்யூதத்தையும் பாகவதசம்புவையும் இயற்றிய III'ம் இராசநாத திண்டிமர் என்பாரும் திருமலாம்பாள் என்ற கவியும் அச்சுதராயரின் ஆதரவைப்பெற்றனர். இராமராயர், இசை நூலாசிரியரான இராமய்யமாத்யர் என்பாரை ஆதரித்துவந்தார். பேரரசர் திருமலை, செயதேவரின் கீதகோவிந்தத்துக்கு ஓர் விரிவுரை எழுதியதாக அறிகிறோம். அப்பய்ய தீட்சிதர் என்னும் வடமொழி அறிஞர் (1554 – 1626), வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஆரணிக்கண்மையில் அடைப்பாலம் என்னுமிடத்தில் பிறந்தார். அவரை, வேலூர் சின்னபொம்மரும், தஞ்சாவூரின் செவ்வப்பரும் அச்சுதப்பரும், விசயநகரின் I'ம் வேங்கடரும் அன்புடன் ஆதரித்தனர். ஆழ்ந்து அகன்ற புலமை வாய்ந்த அப்பய்யர், மாதவவித்தியாரண்யர் அல்லது வேதாந்த தேசிகருடன் ஒப்பிடத்தக்க சிறப்புவாய்ந்தவராவர். அவர், ஸ்ரீகண்டரின் சைவ பாஷ்யத்துக்கு விரிவுரையாக எழுதிய 'சிவார்க்க மணி தீபிகம்' என்னும் நூல், பல சாத்திரங்களிலும் அவர் வல்லவர் என்பதைக் காட்டாநிற்கும். அவர், தமது 'சிவதத்துவ விவேகம்' என்ற நூலில் சிவபெருமானே அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகன் என்று விளக்குகிறார். 'பரிமளம்' என்னும் அவருடைய மற்றொருநூல் அத்துவைதக் கோட்பாட்டைச் சிறப்பிக்கின்றது. இராமாயணமும் மகாபாரதமும் சிவனை முழுமுதற்கடவுளாகக் கொள்கின்றன என்று அப்பய்ய தீட்சிதர் தாம் எழுதிய வீரகாவியச் சுருக்கத்தில் விளக்குகிறார். சமயக்கோட்பாடு எதையும் உறுதிசெய்யவோ, மறுக்கவோ அவருக்கு ஆற்றல் இருந்ததால் அவர், "சர்வதந்திர ஸ்வதந்திரர்" என்று சிறப்பிக்கப்படுகிறார். அவ்வறிஞர் மூன்று அலங்கார சாத்திரங்களை ஆக்கியுள்ளார்.

அவர், சாத்திர வல்லுநராக இருந்ததுடன் கவியாகவும் இருந்தாரென்பது நோக்கற்பாலது. சிறந்த சிவனடியாராகத் திகழ்ந்த இப்பெரியார், வேதாந்ததேசிகரின் யாதவாப்யூதயத் துக்கு (கண்ணன் வாழ்க்கையைப்பற்றியது) ஓர் விரிவுரை எழுதினாரென்பதும் குறிப்பிடத்தக்கது. இவருடைய தந்தை வழிப்பாட்டி, வைதீக வைணவ மதத்தைச் சார்ந்திருந்தார். அவ்வம்மையார் ஒரு ஸ்மார்த்தரை மணம்புரிந்து கொண்டா ரென்பதும் குறிப்பிடத்தக்கது.

தெலுங்கு. "அஷ்டதிக்கு கஜங்கள்" எனப்போற்றப் பெறும் அறிஞரில் ஐவர் கிருட்டினதேவராயரின் காலத்தவர்; மூவர், பதினாறும் நூற்றாண்டின் பிற்பாதிக்குரியவராவர். சூரண்ணா என்பார் இயற்றிய இரகுவீரபாண்டவீயம் என்னும் பாடல், இராமாயண, மகாபாரதக் கதைகளை ஒருங்கே பெற்றுள்ளது. அவரது காவியங்களை அறிஞர்கள் புகழ்கின்ற னர். அவை, தெலுங்கு இலக்கியத்தில் தலை சிறந்த நிலை யைப் பெற்றுள்ளன.[1] இராமராயரின் ஆதரவைப் பெற்ற பட்டுமூர்த்தி அல்லது இராமராயபூஷணர் என்பார் "வசு சரித்திரம்" என்ற நூலையும், நளன், அரிச்சந்திரன் ஆகியோ ரின் கதைகளடங்கிய செய்யுள் நூலொன்றையும் இயற்றி அருளினார். நகைப்பு விளைவிப்பவர் என்று அழியாப்புகழ் பெற்ற தெனாலி இராமகிருஷ்ணர், I'ம் வேங்கடரின் ஆதரவில் வாழ்ந்தவராவர். "பாண்டுரங்க மகாத்மியம்" என்னும் அவ ருடைய நூல் பண்டரிபுர விட்டோபாவைப் புகழ்ந்து சிறப்பிக் கின்றது. வேமனர் என்ற அறிஞர் ஆந்திரநாட்டில் மிகச் சிறப்பான வகையில் ஒழுக்க முறைகளை விளக்கி வந்தார். "சதகம்" என்ற அவருடைய நூல் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பழைய முறைகளைக் கண்மூடித்தன மாகப் பின்பற்றுவதை அவர் கண்டித்தார். சாதி முறை, உருவவழிபாடு, தனிப்பட்டோர் சொத்துரிமை முதலியவற்றை யும் பெண்டிரையும் அவர் வெறுத்தார்.

கன்னடம். துளு நாட்டில் பல சமண ஆசிரியர்கள் வாழ்ந்து வந்தனர். அங்கு போற்றற்குரிய இலக்கிய வளர்ச்சி

1. Chenchiah and Bhujanga Rao, op. cit., p. 80

காணப்பெற்றது. சர்வஞானமூர்த்தி என்பாரும் கிருட்டின தேவர் காலத்தில் வாழ்ந்த குப்பிமல்லனூர்யரும் வீரசைவ ஆசிரியர்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தோராவர். முன்னவர், வேமனரைப்போலவே, சாதிமுறை, உருவவழிபாடு, முதலிய வற்றையும் புண்ணியப்பயணம் செய்தலையும் மக்கள் விட்டொழிக்க வேண்டுமென்று கற்பித்து வந்தார். ஏறத்தாழ 1510'ல் திம்மண்ணு என்னும் வைணவ அறிஞர், மகா பாரதத்தைக் கன்னடத்தில் மொழி பெயர்த்து முடித்தார். அப்பணியைக் குமாரவியாசர், பதினைந்தாம் நூற்றாண்டில் தொடங்கினுரென்பது நினைவுகூரத்தகும். அம்மொழி பெயர்ப்புக்குக் கிருட்டினதேவராயர் ஆதரவு அளித்த காரணத்தால், திம்மண்ணு அந்நூலுக்கு "கிருட்டினராய பாரதம்" என்று பெயரிட்டார். சுமார் 1500'ல் இராமாயணமும், கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. விட்டலநாதர், ஏறத்தாழ 1530'ல் பாகவதபுராணத்தை மொழிபெயர்த்தார். கிருட்டின தேவரும் அச்சுதராயரும் அவருக்கு உதவி அளித்ததாகத் தெரிகிறது. அச்சுதராயர், சதாசிவர் ஆகியோர் ஆட்சிக் காலங்களில் பண்டரிபுர அடியார்களில் சிறந்தவரான புரந்தர தாசர், அடிக்கடி விசயநகருக்குச் சென்று வந்தார். அவர் இயற்றிய பத்திப் பாடல்கள் பல, கன்னட நாட்டில் மிகவும் சிறப்புப்பெற்று விளங்குகின்றன. கனகதாசர் (சுமார் 1550) என்னும் சிறந்த வைணவ கவி, வேடர் சாதியிலோ இடையர் குலத்திலோ பிறந்தவராவர். அவர் எழுதிய "அரிபக்தி சாரம்" என்ற நூலில், பக்தி, நல்லொழுக்கம், வைராக்கியம் (அல்லது உலக இன்பத்தை வெறுத்தல்), முதலிய பண்புகளின் விளக்கத்தைத் காணலாம்.

## பகுதி 4

### கலையும் காசுமுறையும்

கலை. இருட்டினதேவராயரைப்போலவே அச்சுதராயரும் கட்டடக்கலையில் கருத்தைச் செலுத்தினுர். முன்னவர் தொடங்கிய விட்டலர் கோயிற்பணியைப் பின்னவர் நிறைவேற்றினுர். ஹம்பியில் இப்பொழுது காணப்பெறும் மிகப்பெரிய கட்டடமான

பட்டாபிராமர் கோயில் அக்காலத்தில் எடுக்கப்பட்டதாகும். இசை அறிஞரான இராமய்யமாத்யர், இராமராயருக்காக ஒரு பெரிய அரண்மனையைக் கட்டினர். ஹம்பியில் உள்ள சில கட்டடங்கள், இந்து-முஸ்லிம் கலைக்கு எடுத்துக்காட்டுகளாகும். தாமரைமஹால், அரசியின் அரண்மனை, பள்ளிவாசல் முதலியன அத்தகைய கட்டடங்களிற் சிலவாம். இவை, தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு விசயநகரில் தக்கணச் சுல்தான்கள் நால்வரும் ஆறுமாதங்கள் தங்கியிருந்தபொழுது அவர்கள் கட்டடங்கள் நிறுவுவதில் ஈடுபட்டிருந்தனரென்று அறிவிக்கின்றன. இதை உறுதி பெய்யும் பாரசீகக் குறிப்பு ஒன்றும் கிடைத்துள்ளது.[1] விசயநகரக்கலையில் முகம்மதியப் பண்புகள் கலந்திருப்பதில் வியப்பில்லை. ஏனெனின் I'ம் தேவராயர் காலந்தொடங்கியே இராயர்கள், முகம்மதியரைப் படையில் சேர்த்துக்கொள்ளும் வழக்கத்தையும் மசூதிகள் கட்டித்தரும் பழக்கத்தையும் மேற்கொண்டிருந்தனர். ஆதலால் இந்து, முஸ்லிம் கலைமுறைகள் கலந்து பரிணமிக்க வாய்ப்பு ஏற்பட்டது. "விசயநகரக் கட்டடக்கலைமுறையின் மிகச் சிறப்பான பண்புகளை அனந்தப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த தாத்பத்ரி என்னுமிடத்திலுள்ள கோயிலில் காணலாம்."[2]

காசுமுறை. கிருட்டினதேவராயர் முதல், I'ம் வேங்கடர் வரை உள்ள பேரரசர்கள் வெளியிட்ட காசுகள் பல, அவர்களுடைய வைணவ மதப்பற்றை நன்கு விளக்குகின்றன. திருமால், இராமர், சீதை, இலக்குமணர் முதலிய பல உருவங்களை அவைகளிற் காணலாம்.

## பகுதி 5

### இக்கேரி; மைசூர்

இக்கேரி. மைசூரில் ஷிமோகா மாவட்டத்திலும் தென் கன்னடத்திலும் சிறப்புவாய்ந்திருந்த நாயக்கர்கள், தொடக்கத்தில் விசயநகரப் பேரரசரின் மானியக்காரராயிருந்தவர்களாவர். கேலடி என்னுமிடம் முதலில் அவர்தம் தலைநகரா

1. Heras, op. cit , pp. 227—8.
2. Smith, Fine Art, p. 137.

யிருந்தது. அங்கே சிறப்பு வாய்ந்த முதல் நாயக்கர் சதாசிவர் (1513—'60) என்பாராவர். அவர், தக்கணச்சுல்தானிய ருடன் இராமராயர் நடத்திய போர்களில் பங்குகொண்டு, கன்னட நாட்டின் கலகத்தலைவர்களில் சிலரைக்கைப்பற்றி மங்களூர்வரை வெற்றி முழக்கத்துடன் சென்றார். ஏறத்தாழ 1560'ல் இக்கேரி, நாயக்கர் தலைநகராயிற்று. அங்கே 1560 முதல் 1570 வரை ஆட்சிபுரிந்த சிக்க சங்கண்ணு என்பார் இலக்கிய வளர்ச்சிக்கு உதவிசெய்தார். பெருமை வாய்ந்த நாயக்கர்களில் அடுத்தபடியாக I'ம் வேங்கடப்பர் (1582—1629) குறிப்பிடத் தக்கவராவர். அவர் தமது தலைவர் I'ம் வேங்கடப்பேரரசரிடம் பணிவன்புடன் ஒழுகினார். அப்பேரரசர் இறந்தபின் வேங்கடப்பர் உரிமையுடன் தமது ஆட்சிப்பகுதியைப் பெருக்கிக்கொண்டார். போர்ச்சகீசியரும் அவருடைய நட்பை நாடினர். 1623'ல் இக்கேரிக்குச்சென்ற இத்தாலிய நாட்டு வழிப்போக்கர் (Pietro della Valle) அந்த நாயக்கரைப்பற்றிப் புக்ழ்ந்து பேசுகிறார்.

மைசூர். 1524'ல் சாமராசர் என்னும் ஒருவர் மகிஷாசூர் (எருமை-அசுரன்), அல்லது மைசூர் (எருமைஊர்) என்ற கோட்டையைக் கட்டினார். அவர் வழியில் வந்த மற்றொரு சாமராசர் (1571—6), சீரங்கப்பட்டணத்திலிருந்த விசயநகர அரசப்பிரதிநிதியுடன் பகைத்துக்கொண்டு உரிமையுடன் செயலாற்றலானார். மைசூர் அரச குலத்தினரில் தோன்றிய இராசா உடையார் (1578—1617) என்பார் ஆற்றலும் பேரவாவும் நிரம்பியவர். கன்னடநாடு முழுவதையும் தம்மடிப்படுத்த அவர் முயன்றார்; அண்மையிலிருந்த பகுதிகளைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டதுடன், பீஜப்பூர் தம்மை எதிர்த்த பொழுது அந்நாட்டைத் தோற்கடித்து வெற்றிமாலையும் சூடினார். 1610'ல் சீரங்கப்பட்டணம் அவர்வசமாகியது. இரண்டு ஆண்டுகட்குப் பிறகு I-ம் வேங்கடர் இராசா உடையாரின் புதிய நிலையை ஒப்புக்கொண்டார். மைசூர் தலைவரும் பெயரளவில் அப்பேரரசரின் தலைமை நிலையை ஏற்றுக்கொண்டார். அவர், 1614 முதல் 1617 வரை விசயநகரில் நடந்த அரசுரிமைப் போரில் பங்கு கொள்ளவில்லை.

# பகுதி 6

## வேலூரும் செஞ்சியும்

**வேலூர்.** விசயநகரப் பேரரசின் மானியக்காரர்களில் சின்ன பொம்ம நாயக்கர் என்பார் வேலூரில் புகழ்பெற்றிருந்தார். அவர் தந்தையின் பெயர் விரப்ப நாயக்கர் என்பதாம். அப்பய்ய தீட்சிதருக்குக் கனகாபிடேகம் செய்த பெருமை சின்ன பொம்மருக்கு உரியது. சின்னபொம்மர், வேலூரின் ஆட்சித் தலைவராக 1582 வரை இருந்திருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது. அக்காலத்தில் வேலூர், செஞ்சி நாயக்கருக்கு அடங்கியிருந்தது. வேலூரில் ஆட்சித் தலைவராக இருந்த லிங்கம நாயக்கர், உரிமைபெறும் நோக்கத்துடன் செஞ்சியையும் விசயநகரையும் எதிர்த்து 1603'ல் கலகம் செய்தார். மிகச் சிறந்த அரண்களைப் பெற்றிருந்த வேலூர் முற்றுகையிடப்பட்டது. லிங்கம நாயக்கரை நம்பிக்கைக் கேடான முறையில் அவர் பகைவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். வீரப்போர் புரிந்த வேலூர் வீரர்கள் 1604'ல் தோல்வியுற்றனர். வேலூரை வென்று வெற்றிக்கொடி நாட்டிய படைத்தலைவர் சென்ன நாயக்கர் என்பாராவர். அவருடைய மகன் தோற்றுவித்த நகரம்தான் சென்ன நாயக்கரின் பெயரால் சென்னைப் பட்டினம் என இன்று வழங்குகிறது. வேலூரில் நாயக்கராட்சி 1606'ல் முடிவுற்றிருக்க வேண்டும். அதே ஆண்டில் அந்நகர், பேரரசின் இரண்டாவது தலைநகராகியது.

**செஞ்சி.** விசயநகரப்பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த செஞ்சியின் சிறப்பும் செழிப்பும் நம் சிந்தையைக்கவரத் தக்கன. கோபண்ண என்னும் அதன் ஆட்சித்தலைவர், ஏறத்தாழ 1370'ம் ஆண்டில், சிதம்பரம் கோயிலில் ஸ்ரீகோவிந்த ராசப்பெருமாளின் திருஉருவத்தைப் புதிதாகப் பிரதிஷ்டை செய்து புகழ்பெற்றார். கிருட்டினதேவர் காலத்தவரான, I'ம் கிருட்டினப்ப நாயக்கர் செஞ்சியின் காவலை வலிமைப்படுத்தியதுடன் அங்குப்பல கட்டடங்களையும்எடுத்தார். சூரப்பநாயக்கர் என்னும் செஞ்சித்தலைவர், பதினெட்டு நாடகங்களையும் அறுபது செய்யுட்களையும் இயற்றியவராகப் போற்றப்பெறும் இரத்தின

கேத சீனுவாச தீட்சிதரை ஆதரித்தாரென்று அறிகிறோம். II'ம் கிருட்டினப்ப நாயக்கர் (1580—1620), விசயநகரப் பேரரசரான I'ம் வேங்கடருடன் பகைமைபூண்டதால், அவரால் சிறையிலடைக்கப்பெற்றார். பின்னர்த்தஞ்சை இரகுநாத நாயக்கர் தலையிட்டு அவரை விடுவித்தார். கிருட்டினப்ப நாயக்கர் தீட்சிதர்களின் வன்மையான எதிர்ப்பையும் பொருட்படுத்தாது சிதம்பரத்தில் கோவிந்தராசர் ஆலயத்திருப்பணியை நிறைவேற்றினர். (1597). எதிர்ப்பாளர் தற்கொலைபுரிந்து கொள்ளும் அளவுக்கு உறுதிகொண்டிருந்தபோதிலும் வைணவப்பற்று மிக்க நாயக்கரின் மனம் மாறவில்லை. பிமெண்ட்டா என்னும் ஏசுசங்கப் பாதிரியார் ஒருவர் சிதம்பரத்தில் கிருட்டினப்பரைக்கண்டு அவருடன் செஞ்சிக்குச் சென்றனர். அயல்நாட்டவரான அவர் செஞ்சியைப் பின்வருமாறுச்சிறப்பிக்கின்றார். "இந்தியாவில் நாம் பார்த்தவரை மிகப்பெரிய நகரம் இதுவே; போர்ச்சுகல் நாட்டில்கூட லிஸ்பன் நகரைத்தவிர வேறெந்த நகரமும் இத்துணைபெரியதாக இல்லை."[1] செஞ்சியின் சிறப்பைக்கண்டு வியப்புற்ற ஐரோப்பிய அறிஞர்கள் அந்நகரைக் "கீழ்நாட்டு ட்ராய் (Troy)" என்று புகழ்ந்துள்ளனர்.[2] கிருட்டினப்பர், வெள்ளாறு கடலுடன் கலக்குமிடத்தில் கிருட்டினப்பட்டினம் (பரங்கிப்பேட்டை) என்ற நகரை நிறுவினார். ஏசுசங்கப் பாதிரியார்கள் அங்கே ஒரு மாதாகோவிலைக் கட்டிக்கொள்ளவும் அவர் ஆதரவு அளித்தார். வேலூர் முதலிய சில இடங்களின் ஆட்சித்தலைவர்கள், கிருட்டினப்ப நாயக்கரின்கீழ் மானியக்காரர்களாயிருந்தனர். செஞ்சி நாயக்கரின் அதிகாரங்கள் ஓங்கவே அவர் 1607—8'ல் I'ம் வேங்கடருடன் போரிடவேண்டியதாயிற்று. ஆனல் பேரரசரை நாயக்கர் வெல்லமுடியவில்லை. கூடலூரில் டச்சுக்காரர் ஒரு தொழிற்சாலையைக் கட்டிக்கொள்ள நாயக்கர் அளித்த அனுமதியை 1609'ல் பேரரசர் நீக்கிவிட்டார். விசயநகரில்

1. Heras, op. cit., p. 405

2. "ஒருநாட்டின் அரணைப்பற்றிச் சிறப்பிக்கையில் திருவள்ளுவர் கூறுகிறார்:- "மணிநீரும் மண்ணும் மலையும் மணிநிழல்
காடும் உடைய தரண்."
இவையனைத்தும் செஞ்சியில் பொருந்தியிருந்தன."

1614'ல் ஏற்பட்ட உள்நாட்டுப்போரில் கலகக்காரருக்கு நாயக்கர் உதவிசெய்தார். ஆனால் 1617'ல் தோப்பூரிலும் (திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில்) பின்பு புவனகிரிக்கு அருகிலும் (சிதம்பரத்திற்கு அண்மையில்) அவர் தோல்வியுற்றார். அத்தோல்விகளுக்குப் பிறகு அவரைப்பற்றிய செய்தி எதையும் நாமறியோம்.

## பகுதி 7

### தஞ்சாவூர்

தஞ்சாவூர், கி. பி. ஏழாம் நூற்றாண்டிலேயே புகழுடன் விளங்கியதாதல் வேண்டும். பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை அதன் பெருமையும் சிறப்பும் போற்றத் தக்கனவா யிருந்தன. பிறகு 16'ம் நூற்றாண்டின் இடையில் தோன்றிய தஞ்சை நாயக்கர் ஆட்சியில்தான் அந்நகர் மீண்டும் பழைய சிறப்பை எய்துவதாயிற்று. மதுரை மண்டலத்திலிருந்து சோழநாடு பிரிந்ததின் விளைவாக அச்சுதராயருடைய ஆட்சிக்காலத்தின் (1530—42) முற்பகுதியில் தஞ்சாவூர் நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது. பேரரசரின் மனைவியின் தங்கை மணவாளரான சேவப்பர் என்பார் தஞ்சையில் ஆட்சித் தலைவராக அமர்ந்தார். முகம்மதியத் துறவிகளுக்கு அவர் நன்கொடை வழங்கியதை 1549'ம் ஆண்டுக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. சேவப்ப நாயக்கர், சிவகங்கைக் கோட்டையையும் சேவப்ப ஏரியையும் அமைத்தார்; நாகப்பட்டினத்திலிருந்த போர்ச்சுகீசியருடன் நல்லுறவு பூண்டிருந்தார். அவர், விசயநகர அரசுக்குப் பணிந்து அன்புடன் ஒழுகிவந்தாரென்பதை திருவக்குளம் (அண்ணாமலைநகர் தென்னாற்காடு மாவட்டம்) கல்வெட்டொன்று (1567'ம் ஆண்டுக்குரியது) அறிவிக்கிறது. 1572 வரை அவர் ஆட்சி புரிந்தாரென்பது தெளிவு. அவருடைய அவைக்களப் புலவரான விசயீந்திர தீர்த்தர் என்னும் மத்வ ஆசிரியர், துவைதக் கோட்பாட்டை வலியுறுத்தி வந்தார். அப்பய்ய தீட்சிதரின் கொள்கையையும் அவர் எதிர்த்தார். அப்பய்ய தீட்சிதரும் தஞ்சை அவையில் இடம்

பெற்றிருந்ததாக அறிகிறோம். சேவப்பரின் மகனை அச்சுதப்பர், டச்சுக்காரரை வெறுத்தார்; ஆனால் போர்ச்சுக்கீசியருடன் நட்புறவு பூண்டிருந்தார். இவருக்கும் இவருடைய மகனார் இரகுநாத நாயக்கருக்கும் அமைச்சராயிருந்த கோவிந்த தீட்சிதர் என்னும் புகழ்பெற்ற அறிஞர் எழுதியுள்ள நூல்கள் சிறப்பு வாய்ந்தவையாகும். 1614'ல் விசயநகரில் உள்நாட்டுப்போர் ஏற்பட்டபொழுது இரகுநாத நாயக்கர் பேரரசுக்கு உதவிசெய்து உண்மையுடன் ஒழுகினர்.

## பகுதி 8

### மதுரை

விசுவநாத நாயக்கர் (1529—'64) மதுரை மண்டலத்தைச் சீர்திருத்தி அமைத்தார் என்று முன்னர் கண்டோம். அவரும் அவருடைய அமைச்சர் அரியநாத முதலியாரும் இன்றியமையாதனவா யிருந்த இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி முதலிய இடங்களின் முன்னேற்றத்திற்கான வழிகளை வகுத்தனர். தஞ்சை, தனித்துச்சென்ற பிறகு விசுவநாதரின் ஆட்சி, திருச்சிராப்பள்ளியிலிருந்து கன்னியாகுமரி வரை நிலவியது. சேலம் கோயம்புத்தூர் பகுதிகளும் அதற்கு உட்பட்டிருந்தன. அந் நாயக்கர், பாளையமுறை ஆட்சியை அமைத்திருந்தார். அவ்வமைப்பின்படி, அவர், நிலத்தைப்பகிர்ந்து படைத்தலைவர்களுக்கு அளித்தார். அவர்கள் தம்தம் பகுதிகளில் காவற்பொறுப்பையும் முறைவழங்கும் அதிகாரத்தையும் பெற்றிருந்தனர். பாளையக்காரர்கள் தம்முடைய மானியப்பகுதிகளில் வழிவழி உரிமை பெற்றிருந்தனர். ஆனால் நிலங்களிலிருந்து அவர்கள்பெற்ற வருமானம் ஒப்பான மூன்று பங்குகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பங்கை அவர்கள் திறையாகச் செலுத்தவேண்டும். மற்றொரு பங்கு,படை அமைப்புக்காகப் பயன்படுத்தப் பெற்றது. எஞ்சிய பகுதியைப் பாளையக்காரர்கள் தமது ஊதியமாகப் பெற்றனர். படை மானியமுறை இயல்பால் பல குறைபாடுகளைப் பெற்றிருந்தபோதிலும் அக்காலத்திற்கு அதுவே ஏற்ற

தாக இருந்தது. நீண்டகாலம் வரை பாளையக்காரர்கள் பற்றுறுதியுடன் பணியாற்றி வந்தனர். உள்நாட்டுக்கு ஏற்றமுறையில் அவ்வேற்பாடு அமைந்திருந்தது. விசுவநாத நாயக்கரின் உள்நாட்டு ஆட்சி வலிமைவாய்ந்ததாக இருந்தபோதிலும் அவர் பேரரசருடன் ஒத்துழைத்தார். அவர் மகனுரான I'ம் கிருட்டினப்ப நாயக்கர் (1564—'72) தந்தையைப் போலவே பேராற்றல் மிக்கவராயிருந்தார். திருவாங்கூர்ப் படையெழுச்சியில் அவர் கொண்ட பங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்து. பாளையக்காரரின் கலகம் ஒன்றை அவர் அடக்கியதுடன் ஈழத்தின் மேலும் படையெடுத்து வெற்றிகொண்டார். அரியநாத முதலியார் 1570'ம் ஆண்டு வரை அவருடைய அமைச்சராக இருந்து அருஞ்செயல்களாற்றினுர் என்பது தெளிவு. தலைக்கோட்டைப் போரில் இராமராயருக்கு உதவி செய்ய, மதுரைநாயக்கர், அரியநாத முதலியாரைப் படையுடன் அனுப்பிவைத்தார். அந்த அமைச்சரின் அரசப்பற்றும் உண்மை ஊழியமும் போற்றற்குரியன. சதாசிவ ராயரின் குறிப்பு ஒன்றே அதற்குத் தக்க சான்ருகும். கிருட்டினப்பருக்குப்பின் வந்த அவர் மகன் I'ம் வீரப்ப நாயக்கர் (1572—'95), 1583'ம் ஆண்டில் விசயநகரை எதிர்த்துக் கலகம் செய்தாரென்றுச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனுல் அதற்குச் சான்ருகக்காட்டும் குறிப்புக்களுக்கு வேறுவகையாகப் பொருள் கொள்ளலும் ஏற்கும்.[1]. வீரப்பரின் மகன் II'ம் கிருட்டினப்ப நாயக்கர் (1595—1601), I'ம் வேங்கடருக்கு அடங்கி ஆட்சி நடத்தி வந்தார்.

அதிகாரம் 14

# பதினுரும் நூற்ருண்டில் தென் இந்தியா

(தொடர்ச்சி)

## பகுதி I

### போர்ச்சுகீசியர் வருகை

ஐரோப்பிய நாட்டவரில் கடல் வழியாக இந்தியாவுக்கு வந்து இந்நாட்டில் வெற்றிபெற்றுத் தமது ஆட்சிமுறையைச்

1. Sathianathaier, The Climacteric of Toli kota (Journal of Indian History, 1927, PP. 76-7.)

சில இடங்களில் முதன் முதலாக நிறுவியவர்கள் போர்ச்சுகீசியரே ஆவர். அவர்களுடைய வருகைக்கு முன்பு இந்தியாவுக்கும் மேற்கு நாடுகட்குமிடையே கடல் வாணிகத்தொடர்பு மட்டும் நிலவிவந்தது. போர்ச்சுகீசியர் இந்நாட்டுக்கு வந்தமைக்குக்காரணமும் வாணிக நோக்கமேயாம். ஆனால் சிறிது சிறிதாக வேறு நோக்கங்களையும் அவர்கள் கொள்ளலாயினர். இந்தியாவுக்கும் மேற்கு ஐரோப்பாவுக்குமிடையே நேரான வாணிகத் தொடர்பு ஏற்படுவதற்கு மிளகு தான் முக்கிய காரணமாகும்.[1] ஐரோப்பியர் மிளகை மிகுதியாகப் பயன் படுத்தினர். ஏழாம் நூற்றாண்டில் எகிப்தையும், பாரசீகத்தையும் அரேபியர் கைப்பற்றியது முதல் கீழ் நாட்டு நறுமணப் பொருள்களை அரேபிய வணிகர் மூலம் ஐரோப்பியர் வாங்கி வந்தனர். மேலைநாட்டில் மிளகின் விலை உயர்ந்து வந்தது. இந்தியாவிலோ அது மிகவும் மலிவாகக்கிடைத்தது. ஆகவே போர்ச்சுகீசியர், தாமே நேரில் இந்தியாவுடன் கடல்வழியாக வாணிகத் தொடர்புகொள்ள முற்பட்டனர். கப்பலோட்டும் ஹென்றி (1418—'60) எனப்புகழப்பெற்ற போர்ச்சுகீசிய இளவரசரும் அவருக்குப்பின் வந்தவர்களும் இந்தியாவுக்குக் கடல்வழிகாணும் முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தபொழுது அவர் முதலில் தாம் இந்தியாவைக் கண்டுபிடித்ததாகவே எண்ணினார். அதன் விளைவாகத்தான் "சிவப்பு இந்தியர்" "மேற்கு இந்தியத்தீவுகள்" என்னும் பெயர்கள் தோன்றின.

போர்ச்சுகீசியருக்கும் அரேபியருக்குமிடையே கள்ளிக்கோட்டையில் போராட்டமேற்பட்டமைக்கு மிளகு வாணிகமே முக்கிய காரணம். மேற்குத்தொடர்ச்சி மலைகளின் சரிவில் மிளகு மிகுதியாகப் பயிராயிற்று. கொச்சி முதலிய துறைமுகங்களுடன் போர்ச்சுகீசியர் வாணிகம் செய்யத்தொடங்கினர். வாஸ்கோடகாமா, 1498'ல் கள்ளிக்கோட்டை வந்து சேர்ந்த பின், போர்ச்சுகீசியரின் நீண்டகாலக் குறிக்கோள் நிறைவேறியதைக்காண்கிறோம். இந்தியாவின் கடல் வாணிகத்தில் தமக்கே தனி உரிமை வேண்டுமென்பதே அவர்களுடைய

1. Moreland, op. cit. p. 222

பேரவா. அதுவே அவர்களை இந்நாட்டில் புதிய இடங்களைக் கைப்பற்றச்செய்தது. அவர்களிடம் தொடக்கத்தில் வாணிகத்தைப் பெருக்கும் நோக்கம் மேலோங்கியிருந்ததே தவிரச் சமயத்தைப் பரப்பும் நோக்கம் முதலில் தோன்றவில்லை. முகம்மதியரான அரேபியருக்கும், கிறித்தவரான போர்ச்சுகீசியருக்குமிடையே வளர்ந்துவந்த பகைமையும், போட்டியும் பின்னவரின் சமய ஆர்வத்தைத்தூண்டின. வாணிகம், நாடு கவர்தல், மதமாற்றம் ஆகிய மூன்று குறிக்கோள்களும் தனித்தனியே தோன்றி போர்ச்சுகீசியர்பால் வளர்ந்தன. இந்தியாவில் அம்மக்களுடைய வரலாற்றின் பிற்பகுதியில் தான் அம்மூன்றும் ஒன்று கலந்து விளங்கியதைக் காண்கிறோம்.

**போர்ச்சுகீசியரின் அதிகார வளர்ச்சி நிலைகள்.** நறுமணப்பொருள்களை நாடி இந்தியாவுக்கு வந்த வாஸ்கோடகாமாவின் முதற் பயணத்தின் (1497—'8) விளைவாக அவருக்கும் கள்ளிக்கோட்டை அரசருக்குமிடையே நட்பு ஏற்பட்டது. 1500'ல் காப்ரல் (Cabral) என்ற போர்ச்சுகீசியர் கள்ளிக்கோட்டையில் வெற்றிபெருத போதிலும் கொச்சியில் கடற்கரைச் செயலாண்மை நிலையமொன்றை (Shore agency) அமைத்தார். கள்ளிக்கோட்டை அரசருக்கும் கொச்சி மன்னருக்குமிடையே பகைமை நிலவியதாகத் தெரிகிறது. காப்ரலைச் சேர்ந்தவர்கள் கள்ளிக்கோட்டையில் கொலையுண்டனர். அதனால் அவர் தமது வாணிகத் தலங்களைச் சிறந்த அரண்கள் கொண்டு காப்பாற்ற முற்பட்டார். நிலைமை, அமைதியான வாணிகத்துக்கு ஏற்றதாக இல்லை. போரிட வேண்டியதாயிற்று. இந்தியாவின் கடல் வாணிகத்தில் தனி உரிமையைப்பெறும் நோக்கத்துடன் வாஸ்கோடகாமா, மறுபடியும் இந்நாட்டுக்கு 1502'ல் வந்து சேர்ந்தார். முகம்மதியரிடமும், கள்ளிக்கோட்டை அரசரிடமும் அவர் நடந்துகொண்ட முறை மிகவும் கடுமையாக இருந்தது. கொச்சியில் ஒரு வாணிகக் களத்தை அவர் ஏற்படுத்தினர்.; மேலும் கண்ணனூரைச்சுற்றிச் சிறந்த காவற்படைகளை அமைத்தார். 1503'ல் அல்புகர்க் என்ற போச்சுகீசியத் தலைவர், கொச்சியின்மேல் படையெடுத்த கள்ளிக்கோட்டை அரசரை முறியடித்தார்.

கொச்சியைக் காக்கச் சிறந்த படையையும் அமைத்தார். 1505'ம் ஆண்டில் அல்மெய்டா என்பார் போர்ச்சுகீசிய அரசப் பிரதிநிதியாக இந்தியாவில் அமர்ந்து வாணிகத்தையும் கடற் படையையும் பெருக்கும் முயற்சியிலீடுபட்டார். அவருக்குப் பின் 1509'ம்ஆண்டில் அல்பான்சோ-டி- அல்புகர்க், போர்ச்சு கீசிய ஆட்சித்தலைவராகப் பணியேற்றார்.

## பகுதி 2

### அல்புகர்க் (1509—'15)

அரேபியர் இந்தியாவுடன் செய்துவந்த வாணிகத்தை அழிக்கவேண்டுமென்பதே அல்புகர்க்கின் முதல் குறிக்கோளா யிருந்தது. கோவா துறைமுகத்தை வென்றுத் தம்மடிப்படுத்த வேண்டுமென்பதும் அவர் திட்டமாகும். அவர், திறமையும் விடாமுயற்சியும் உள்ளவர். பாரசீக வளைகுடாவின் வாயிலைப் போன்ற ஆர்மஸ் தீவுக்கோட்டையை, 1509'ம் ஆண்டிலும், பீஜப்பூர் இராச்சியத்தைச் சேர்ந்த கோவாவை, 1510'ம் ஆண் டிலும் அல்புகர்க் கைப்பற்றிக் கொண்டார். 1511'ல் மலாக்கா அவர் வசமாயிற்று. ஏடன் துறைமுகத்தைக் கைப்பற்ற அவர் செய்தமுயற்சி பயனுறாதபோதிலும் இந்தியக் கடற்கரையில் உள்ள டையூ முதலிய சில இடங்கள் அவர் கைக்கீழ் வந்தன. போர்ச்சுகீசியர் தாம் குடியேறிய இடங்களில் கிறித்தவ மதத்தை நிறுவினர். தமது சமயத்தைப்பரப்பும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டனர். போர்ச்சுகீசியரின் வலிமையைக்கண்ட விசயநகரத்தரசர்களும் ஆமதுநகரச் சுல்தான்களும் அவர்க ளுடன் நட்புரிமை கொண்டாடலாயினர். அல்புகர்க் , பர்மா, சீனா, மலேயா, நறுமணத் தீவுகள் (Spice Islands) முதலிய நாடுகளின் அரசர்களுடன் நட்பு உறவு கொண்டு முகம்மதி யரின் வாணிகத்தை அழித்துவந்தார். நன்னம்பிக்கை முனை யிலிருந்து ஜப்பான் வரையில் போர்ச்சுகீசியரின் செல்வாக்குப் பரவியிருந்தது. அல்மெய்டாவின் கொள்கையை அல்புகர்க் ஏற் றுக் கொள்ளவில்லை. போர்ச்சுகீசியர், கடலாதிக்கம் பெறுவதி லேயே கருத்தைச் செலுத்த வேண்டுமென்பதும், இந்தியாவில் கோட்டைகளை மிகுதியாகக் கட்டிக்கொள்ளக் கூடாது என்

பதும் முன்னவர் கொள்கை. ஆனல், கடலாதிக்கமும் ஒரு சில கோட்டைகளும் இருந்தால் போதும் என்று கருதுவது தவருகும் என்பது பின்னவர் கொள்கை. நெருக்கடிக்காலங்களில் ஐரோப்பாவிலிருந்து பொருள்கள் வருவதை நம்பியிருத்தல் தீமை பயக்கக் கூடுமென்றும் போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்திற்குட்பட்ட பல கோட்டைகள் இந்நாட்டில் இருக்கவேண்டியது இன்றியமையாதது என்றும் அல்புகர்க் கருதினர். ஆதலால் வாணிகப் புகழ்பெற்ற சிறப்பான நகரங்களையும் தீவுகளையும் கைப்பற்றிக் கொள்ளும் முயற்சியில் அவர் ஊக்கங்காட்டினர். அவர் இந்தியா முழுவதையும் வென்று கைக்கொள்ளப் பேரவாக் கொண்டிருப்பதாக அவரை வெறுத்த அல்மெய்டா அவர்மீது குற்றஞ் சாட்டினர் கோவாத் துறைமுகத்தின் சிறப்பைப்பற்றி அல்புகர்க், போர்ச்சுகல் நாட்டு மன்னனுக்குப் பின்வருமாறு எழுதினர் என அறிகிறோம். "கடற்படை வலிமையை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட எந்த நாடும் நீடித்துச் சிறப்பு எய்த இயலாது; கோவாவைத் துருக்கியருக்குக் கொடுத்துவிட வெண்டுமென்று தாங்கள் முடிவு செய்தால் அது இந்தியாவில் போர்ச்சுகீசியரின் ஆட்சியையே முழுவதும் அழியச் செய்வதாகும்."[1] வாணிகத்துறையில் போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்தை இந்நாட்டில் நிலைநிறுத்துவதற்காகப் புதிய நிலப்பகுதிகளை வென்று கைக்கொள்ளுவது ஒரு சிறந்த வழியாகும் என்பது அல்புகர்க்கின் கோட்பாடு. அவருடைய முக்கிய கொள்கைகள் வருமாறு:— (1) கோவா முதலிய சிறப்புவாய்ந்த இடங்களைக் கைப்பற்றித் தமது அரசியலை அவ்விடங்களில் அமைத்தல் (2) போர்ச்சுகீசியருக்கும் இந்தியருக்கும் இடையே திருமண உறவை ஆதரித்தல் (3) அதன் விளைவாக இந்தியாவில் போர்ச்சுகீசியக் குடியேற்றங்களைப் பெருக்குதல் (4) தம் இனத்தாரின் ஒழுக்கத்தைக் காப்பாற்றுதல் (5) வெல்லவோ அல்லது குடியேறவோ முடியாத இடங்களில் கோட்டைகளை அமைத்தல் (6) போர்ச்சுகல் நாட்டு மன்னரின் ஆட்சியை ஏற்றுக்கொள்வதற்குத் தூண்டும் வகையில் இந்தியச் சிற்றரசர்களுடன் கூட்டுறவுகளை அமைத்தல் (7) விசயநகர அரசுடன் நட்புகொள்ளல்.

1. H. Morse Stephens, Albuquerque (1892) pp. 122 & 124.

அல்புகர்க், கோவாவில் ஏற்படுத்தியிருந்த ஆட்சிமுறை மிகவும் சிறப்பு வாய்ந்தது; பிற்காலத்தில் இந்நாட்டில் ஏற்பட்ட ஆங்கிலேயர் ஆட்சி முறையை ஓரளவு ஒத்தது என்று கூற லாம். வரிவாங்கும் அதிகாரமும் குற்றத் துறையில் நீதி வழங் கும் அதிகாரமும் அலுவலாளரிடம் இருந்தன. தொழிற்சாலை களைக் கண்காணிக்கும் பொறுப்பும் வரிவாங்கும் கடமையும் இந்து அலுவலாளரிடம் இருந்து வந்தன. மேல்நாட்டுக் கல்வியை இந்துக்கள் பெற்றனர். கோவாவில் இருந்த முப்பது ஊர்களில் நடந்துவந்த உள்நாட்டு ஆட்சிமுறையை அல்புகர்க் மாற்ற விரும்பவில்லை. அவ்விடங்களில் இந்தியக்காசு முறையே நிலவியது. ஆட்சி முறைக்கு உதவியாக இருக்கும்பொருட்டு இந்தியரின் பழக்க வழக்கங்கள்யாவும் (அல்புகர்க் இறந்தபின்) தொகுக்கப்பெற்றன. அல்புகர்க், உடன்கட்டை ஏறும் (சதி) பழக்கத்தை கோவாவில் ஒழித்தார். 1829'ம் ஆண்டில்தான் பெண்டிங்பிரபு அச்சீர்திருத்தத்தை தம் ஆட்சிக்கு உட்பட்ட இந்தியாவில் நிறைவேற்றினர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக் கது. அல்புகர்க் இந்தியாவில் ஒரு சிறு பகுதியில்மட்டுமே ஆதிக் கம் செலுத்தியபோதிலும் அவருக்கு இந்தியாவில் ஆட்சிசெய் தவர்களில் ஒருவர் என்ற புகழ் உண்டு. அது பொருத்தமா னதேயாகும். அவர் இறந்தபின் கோவாவிலேயே புதைக்கப் பெற்ருர். 1566'ம் ஆண்டில் அவ்வுடலம் போர்ச்சுகல் நாட்டிற்கு அனுப்பப்பெற்றது.

அல்புகர்க், போரிலும் ஆட்சிமுறையிலும் திறமைவாய்ந்த ஓர் அரச தந்திர அறிஞராவர். விசயநகரத்துடன் அவர் கொண்ட தொடர்பு அரசியல் துறையில் அவருடைய நுண் மாண் நுழைபுலத்தைக் காட்டாநிற்கும். அவர் கையாண்ட இனக்கலப்புக்கொள்கை எதிர்பார்த்தவாறு பயனளிக்காததால் அதைப்பற்றிச்சிலர் குறை கூறுகின்றனர். ஆனல் அவருடைய குறிக்கோள் நிறைவேற அதைவிடச் சிறந்தவழி இருப்பதாகத் தெரியவில்லை. இந்திய வீரர்களுக்குப் பயிற்சி அளித்தல், அவர்களை அலுவல்களில் அமர்த்தல், இந்திய அரசகுடும்பங் களின் அரசுரிமைச் சிக்கல்களில் தலையிடுதல் முதலாக அவர் கொண்ட கொள்கைகளைப் பிற்காலத்தில் டூப்ளே பின்பற்றி னுரென்பது ஈண்டு நோக்கற்பாலது. சுருங்கக் கூறின்

"போர்ச்சுகல்நாட்டு மன்னரின் புகழ் ஓங்குமாறு செய்தல், அந்நாட்டவரைப் பிறர் மதிக்கச் செய்தல், அவர்களைக்கண்டு பிறர் அஞ்சுமாறு செய்தல் முதலிய தொண்டுகளைப்பொறுத்த வரையிலும் மற்ற எந்த போர்ச்சுகீசியத் தலைவரும் செய்யாத அளவுக்கு அல்புகர்க் அருஞ்செயலாற்றினர்."[1] கருணையின்றிப் பல கொலைகளை அவர் நிகழ்த்தினர் என்பது உண்மையே; இழிவாகக் கருதப்படும் சில செயல்களைப்புரிந்தாரென்பதும் உண்மைதான். ஆனால் அவர் தமது அரசரிடம் பற்றுறுதி கொண்டு இறுதிவரை அவருக்காகப் பணிவன்புடன் உழைத்தார்.

## பகுதி 3

### அல்புகர்க்கின் பின்வந்தோர்

1524'ல் வாஸ்கோடகாமா அரசப்பிரதிநிதியாக இந்தியாவுக்கு வந்தார். ஆனால் வந்து சேர்ந்த சில தினங்களுக்குள் இறந்துவிட்டார். நுனே தா குன்ஹா (1529—'38) என்பார், தாம் ஆட்சித் தலைவராக இருந்த காலத்தில் போர்ச்சுகீசிய இந்தியாவின் தலைநகரைக் கொச்சியிலிருந்து கோவாவுக்கு மாற்றினர் (1530). அவர் குஜராத்தின் பஹதூர்ஷாவுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். உமாயூனுக்குப் பகையாக, பஹதூர்ஷா, போர்ச்சுகீசியரின் உதவியை நாடியதால் அவர்களுக்கு, 1534'ல் பாஸ்ஸீன் என்ற இடத்தை அளித்தார். மேலும் அடுத்த ஆண்டில் அவர்கள் டையூவில் தொழிற்சாலை அமைத்துக்கொள்ளவும் குஜராத் மன்னர் அனுமதி தந்தார். ஆனால் பிறகு பகதூர்ஷா, போர்ச்சுகீசியரைப் பொருட்படுத்தாமல் அவர்களுடன் பகைத்துக்கொண்டதால் 1537'ல் கொல்லுண்டார். டையூவைத் தாக்கியவர்களைப் போர்ச்சுகீசியர் முறியடித்தனர். 1540'ல் கோவாவிலிருந்த கோயில்கள் இடிக்கப்பெற்றன. 1542'ல் கோவாவுக்கு வந்துசேர்ந்த பிரான்ஸிஸ் ஸாவியர் (Xavier) என்ற புகழ்வாய்ந்த துறவி, 1552'ல் தாம் இறக்கும் வரையில் சமயத்தொண்டாற்றி வந்தார். 1545 முதல் 1548வரை

1. C. H. I. V (1929), p 12.

ஆட்சித் தலைவராக இருந்த டிகாஸ்ட்ரோ, டையூவுக்கு மறுபடியும் ஏற்பட்ட இன்னல்களினின்று அதை வீரத்துடன் காப்பாற்றினர். 1548'ல் பீஜப்பூருடன் உடன்படிக்கை செய்துகொண்டார். டி பிரகன்ஸா என்றபோர்ச்சுகீசியத்தலைவர் (1558-61), 1559'ல் டாமன் (பம்பாய்க்கும் சூரத்துக்கும் இடையில் உள்ளது) என்னுமிடத்தைப் பெற்ருர். அடுத்த ஆண்டில் கோவாவில் கிறித்தவ மதத்தின் காப்புக்காக இங்குவிசிஷன் என்னும் மத்விசாரணை மன்றம் (Inquisition Court) நிறுவப்பட்டது. அது இழைத்த கொடுமைகளுக்கு அளவே இல்லை. போர்ச்சுகீசியருக்கும் அக்பருக்கும் இடையே நட்பு உறவு நிலவியது. கோவாவிலிருந்து ஏசுசங்கப் பாதிரிமார் முகலாயரின் அரச அவைக்குச் சென்றனர் என்ற செய்தியை முன்னரே கண்டோம். 1580'ல் போர்ச்சுகல், ஸ்பெயினுடன் ஒன்ருகி விட்டதால், அச்சிறு நாட்டின் சிறப்பு குன்றத் தொடங்கியது. அக்காலத்திலேயே போர்ச்சுகீசியரின் கீழ்நாட்டு ஆதிக்கத்தின் வீழ்ச்சி தொடங்கியதாகக் கருதலாம். ஆனல் சில அறிஞர்கள் 16'ம் நூற்ருண்டின் இடைப்பகுதியிலேயே அவ்வீழ்ச்சி தொடங்கிவிட்டதென்பர்.

## பகுதி 4

### போர்ர்ச்சுகல் நாட்டின் வெற்றிச் சிறப்பு

மிகவும் சிறியநாடான போர்ச்சுகல், பதினரும் நூற்ருண்டின் முற்பாதியில் கீழ் நாடுகளில் குறிப்பிடத்தக்க வெற்றிகள் பெற்றமைக்கு உரிய காரணங்களை விளக்குவோம். 16'ம் நூற்ருண்டுக்கு முற்பட்ட மூன்று நூற்ருண்டுகளில் போர்ச்சுகல் நாட்டவர் வீரச்செயல்கள் புரிந்து தமது பிற்கால உயர்நிலைக்கு வழி வகுத்துக் கொண்டனர். உள்நாட்டில் வேளாண்மையை நடத்த ஆப்ரிக்க அடிமைகள் இருந்ததால், போர்ச்சுகீசியர் தம் நாட்டுப்பணியை வெளிநாடுகளுக்குச் சென்று ஆற்றும் வாய்ப்பைப்பெற்றனர். நிலநூல் ஆராய்ச்சி, கடல் வாணிகம், வெளிநாடுகளில் நிகழ்த்தும் வீரச்செயல்கள் இவற்றிலேயே அவர்களுடைய எண்ணம் சென்றது. கப்பற்கட்டுந் தொழிலில் அவர்கள் பிறரைவிட முன்னேறினர். நாட்டினரின் ஆற்றலை

யும் ஊக்கத்தையும் நல்வழியில் பயன்படுத்திய அரசர்கள் போர்ச்சுகலில் தோன்றினர். எம்மானுவல் (1495—1521) என்ற போர்ச்சுகீசிய மன்னர், படை எழுச்சிக்கு ஏற்ற தலைவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. அவர் தமது அலுவலாளர்கள் வெளிநாடுகளில் ஆற்ற வேண்டிய செயல்களில் மிக்க ஊக்கம் காட்டினர். அது இல்லையேல் கீழ்நாடுகளில் போர்ச்சுகீசியரின் வெற்றி எளிதாகவும் சிறப்பாகவும் இருந்திருக்க முடியாது.

"போர்ச்சுகீசியர் இந்தியாவில் வந்திறங்கிய காலமும் இடமும் அவர்களுக்கு நல்வாய்ப்புக்களை அளித்தன."[1] அக்காலத்தில் மலையாளக்கரை அரசுகள் இந்தியாவின் பிறபகுதியிலிருந்து தனிப்பட்டு நின்றன. சிறிய தலைவர்கள் பலர் அப்பகுதியில் ஆட்சி நடத்திவந்தனர். அவர்களில் மிக ஆற்றல் வாய்ந்தவர்களாக விளங்கயவர்கள் கள்ளிக்கோட்டை அரசரும் கொச்சி மன்னருமே ஆவர். அவர்கள் தனித்துப் போர்ச்சுகீசியரை எதிர்த்துப் போராடுவதென்பது இயலாத செயலாகும். மலையாளக்கரை, மேல்நாடுகட்கும் கீழ்நாடுகட்கும் இடையே வாணிகவழியாக விளங்கியதால், போர்ச்சுகீசியருக்கு ஏற்ற சூழ்நிலை அங்கே அமைந்திருந்தது. அப்பகுதியில், இந்துமதம் கிறித்தவ சமயம், இஸ்லாம் முதலிய பல மதங்கள் இருந்து வந்த காரணத்தால் சமய உரிமை மக்களின் இயல்பாகி விட்டது. முகம்மதியரின் வாணிக ஆதிக்கத்தின் மீது இந்துக்கள் கொண்டிருந்த பகைமை, போர்ச்சுகீசியருக்கு உதவியாயிற்று.

1498'ல் போர்ச்சுகீசியர் இங்குவந்து சேர்ந்தபொழுது முகம்மதுஷா (1482—1518) வின் கீழிருந்த பாமனி இராச்சியம் சிதறுண்டுபோகும் நிலையிலிருந்தது. தக்கணச் சுல்தானரசுகளோ அப்பொழுதுதான் உருவாகி வந்தன. விசயநகரத்தில் 1493'ல் சாளுவ நரசிம்மர் இறந்துவிட்டார். 1509'ல் கிருட்டினதேவர் அரியணை யேற்ற பின்னரே அந்நாடு சிறப்புற்றோங்கியது. வட இந்தியாவிலோ, லோடி சுல்தானியர் அரசு முதலிய பல அரசுகள் தனித்தனியே இருந்து வந்தன.

1, W. W Hunter, A History of British India, I (1899) P. 93

ஆனல் குஜராத், அதன் மிகச்சிறந்த சுல்தானன முகம்மது பிகாரா (1458—1511) வின் கீழிருந்து வந்தது.

போர்ச்சுகீசியர், தாம் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதை உணர்ந்து தமது படையில் இந்தியரைச் சேர்த்துக் கொண்டனர். மேல்நாட்டுக் குதிரைப்படை அவர்களிடமிருந்தது. ஆனல் அவர்களுடைய காலாட் படையில் பெரும்பான்மையும் இந்தியர் இருந்தனர். அவர்கள், கோவா, ஏடன், ஆர்மஸ் முதலிய இடங்களைக் கைப்பற்றியபொழுது அப்படை யெழுச்சிகளில் நாயர்களும் மலையாளப் பகுதிக் கிறித்தவர்களும் கலந்து கொண்டனர். மேலும் இந்திய நாடுகளின் உள்நாட்டு அலுவல்களிலும் அம்மேல்நாட்டார் தலையிட்டுப் பயன்பெற்று வந்தனர். எடுத்துக்காட்டாக 1510'ல் அல்புகர்க், தம் விருப்பப்படியே கொச்சியில் அரசனை அமர்த்தியதைக் கூறலாம். போர்ச்சுகீசியர், நேர்மை, தகுதி, எதையும் பாராமல் சூழ்நிலைக்குத் தக்கவாறு தமக்கு வெற்றி கிடைக்கும் வழிகளைப் பின்பற்றி வந்தனர்; பகைவர்களைக் கொலை செய்யவோ அவர்தம் உடல் உறுப்புக்களை சிதைக்கவோ அவர்கள் பின்வாங்கவில்லை. கண்ணனூரில் அல்மெய்டாவும் கோவாவில் அல்புகர்க்கும் இழைத்த கொடுமைகளை மறக்க முடியாது. கடற்கொள்ளைத் தொழிலையும் சில காலங்களில் அவர்கள் மேற்கொண்டனர். அனைவற்றிற்கும் மேலாக அவர்களுடைய முழுக்கருத்தும் எப்பொழுதும் வாணிகத்திலேயே இருந்ததால் அவர்தம் பொருளாதார வளங்கள் பெருகிவந்தன. அல்புகர்க் ஆற்றிய தொண்டுகள் யாவும் போர்ச்சுகீசியரின் வலிமையைப் பெருக்கின.

போர்ச்சுகீசியர் இந்நாட்டில் சிறப்பு எய்தியமைக்கு மற்ற ஐரோப்பிய நாட்டவரின் போட்டி அவர்களுக்கு ஏற்படாமலிருந்ததும் ஒரு காரணமாகும். 1493, 1506, 1514 ஆகிய ஆண்டுகளில் போப் வெளியிட்ட ஆணைகளும், ஸ்பெயின் நாட்டுடன் போர்ச்சுகல் செய்துகொண்ட உடன்படிக்கைகளும், கிழக்குத் திசையில் போர்ச்சுகீசியருக்குத் தனித்த வாணிக, அரசியல் உரிமைகளை அளித்தன. நீண்டகாலமாக ஒருவரும் போப்பின் ஆணையை மீறவில்லை. ஆங்கிலேயரும் டச்சுக்

காரரும், போர்ச்சுகீசியரின் வழியாகக் கீழ்நாட்டு வாணிகத்தின் பயனைத் துய்த்துவந்தனர்.

## பகுதி 5

### இலங்கை

போர்ச்சுகீசியர், *1505*’ல் இலங்கைத் தீவுடன் தொடர்பு கொண்டு கோட்டை என்னுமிடத்தைச் சேர்ந்த பராக்கிரமபாகு (*1484—1509*) வுடன் நேச உடன்படிக்கை செய்துகொண்டனர். *1518*’ல் அவர்கள் கொழும்புவில் ஒரு கோட்டையைக் கட்டினர். VII-ம் விசயபாகு (*1509—21*) அக்கோட்டையைத் தாக்கியது தோல்வியில் முடிந்தது. இலங்கையின் உள்நாட்டுப் போர்களில் — சிறப்பாக அரசுரிமைப் போராட்டங்களில் போர்ச்சுகீயர் தலையிட்டு அதனால் பயனடைந்து வந்தனர். தர்மபாலர் (*1550—97*) என்ற ஈழமன்னர், கிறித்தவராக மாறினர். மகப்பேறு இல்லாத அவர் தம்நாட்டின் அரசுரிமையை, *1580*’ல் போர்ச்சுகீசியருக்கு வழங்கிவிட்டார்; அவர் இறந்தபின், ஈழம், போர்ச்சுகீசியரின் அரசியல் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. அவர்கள், ஈழநாட்டுச் சட்டங்களையும் பழக்கங்களையும் ஒட்டியே ஆட்சி புரிவதாக உறுதி அளித்தனர்.

## பகுதி 6

### பர்மா

பதினாறும் நூற்றாண்டில் பர்மாவை ஒன்றுபடுத்திய பெருமை தௌங்கூ குலத்தவரான தபின்ஷுவேதி (*1531—’50*) என்பாரைச்சாரும். அவர், *1539*’ல் பெகுவையும், *1541*’ல் மார்ட்டாபனையும், *1542*’ல் புரோமையும், *1544*’ல் நடுபர்மாவையும் தம்மடிப்படுத்தினர். பர்மாவின் ஒற்றுமையைக் கருத்திற்கொண்டு அவர் தென் பர்மியருடன் நட்புபூண்டார். தென்பர்மாவின் மானியக்காரர்களே அப்பகுதியின் ஆட்சி முறையைக் கவனித்து வருமாறும் செய்தார். அவர் தமது ஆட்சியின் முடிவுக்காலத்தில் ஒரு போர்ச்சுகீசியருடன் தொடர்பு கொண்டு குடிகாரராக மாறினர். ஆட்சி அலுவல்களைத் தமது

# பதினாறாம் நூற்றாண்டில் தென்னிந்தியா



# வட இந்தியா 1605-1707





வளர்ப்பு உடன்பிறந்தாரான பாயின்னௌங்கிடம் ஒப்படைத்தார். அவருக்குப் பிறகு பாயின்னௌங் (1551—'81) அரசரானார். அவர் பல புதிய பகுதிகளைக் கைப்பற்றிப் பர்மா முழுவதுக்கும் தம்மை அரசராக்கிக்கொண்டார். ஆனால் தென்பர்மாவில்தான் அவருடைய நேராட்சி நிலவியது. அவருக்குக் கீழ்ப்பட்ட தலைவர்கள் பலர் மற்ற பகுதிகளில் ஆணை செலுத்தினர். பாயின்னௌங், "அரசருக்கெல்லாம் அரசர்" என்ற பட்டத்தைச் சூடிக்கொண்டார். அவர் ஏற்படுத்திய நாட்டு ஒற்றுமை மேலீடாக இருந்ததேயன்றி ஆழ்ந்துவேர்கொள்ளவில்லை. அவருக்கு 97 மக்கள் இருந்தனர்.[1] அக்பருடைய அவைக்கு அவ்வரசர் ஒரு தூதுக்குழுவை அனுப்பினராம். பாயின்னௌங், பௌத்த சமயத்தில் ஆழ்ந்த பற்றுக்கொண்டு சில பௌத்தக்கொள்கைகளைச் சட்டமாக்கினர். புத்தபிரானின் அடையாளமாகப் போற்றப்பட்டு வந்த பல் ஒன்றைப்பெற எட்டுலட்சரூபாய் தருவதாக அவ்வரசர் வாக்களித்தார். ஆனால் கோவாவிலிருந்த போர்ச்சுகீசியர் அவருக்குக் கொடுக்காமல் அதைப்பொது இடத்தில் தீக்கிரையாக்கினராம். நந்தபாயின் (1581—'99) (பாயின்னௌங்கின் மகன்) ஆட்சிக்காலத்தில் அரசியலார் கொடியமுறைகளைக் கையாண்டனர். 1600'ல் ஆராக்கானியர் பெகுவைத்தாக்கி அதைத் தீக்கிரையாக்கினர்; சையாமின் மன்னர், பர்மாவில் படையெடுத்துத் தௌங்கூவரை வெற்றியுடன் சென்றார். பர்மா மீண்டும் சிறு சிறு நாடுகளாகத் துண்டாடப்பெற்றது.

## அதிகாரம் 15

## முகலாயப் பேரரசு (1605—1707)

### பகுதி I

### பாரசீக வரலாற்று இலக்கியமும் ஐரோப்பியர் ஊர்ச்செலவு நூல்களும்

பாரசீக எழுத்தாளர்கள். பதினேழாம் நூற்றாண்டின் இந்திய முகமதிய வரலாற்றின் முதற்சான்றுகள் பெரும்

1 Harvey, op. cit., p. 174.

பாலும் இலக்கியக் குறிப்புக்களேயாம். அவற்றில் பாரசீக மொழியிலுள்ள உள்நாட்டுக் குறிப்புகளும் ஐரோப்பியப் பிரயாணிகள் முகலாய இந்தியாவைப் பற்றி எழுதியுள்ள செய்திகளும் அடங்கும். மேலே குறித்த பாரசீகக் குறிப்புக் களை, அரசியல் தொடர்பானவை, அரசியல் தொடர்பற்றவை, வரலாற்றுச் செய்திகள், முடங்கல்கள், சுயசரித்திரம், அலு வல்கள் பற்றிய வரலாறு முதலிய பலவகையாகப் பிரிக்கலாம். இவற்றுக்கு ஓரளவு உதவியாக அக்காலக் காசுகளின் சான்று களும் கல்லறைச் சான்றுகளும் உள்ளன. பேரரசர் ஜஹாங்கீர் எழுதியுள்ள "நினைவுக் குறிப்புகள்" (Tuzuk-i-Jahangiri = ஜஹாங்கீரின் நினைவுக் குறிப்புகள்) என்னும் நூலில் அவருடைய தன்மை, ஆட்சிமுறை, அக்காலப் பெருஞ் செல்வர்நிலை, முதலிய பல்வேறு செய்திகளைக் காணலாம். அவர் தாம் இளவரசரா யிருந்தபொழுது தம் தந்தையைப் பகைத்துக்கொண்டு கலகம் யெய்ததையும், இளவரசர் குஸ்ரு வுடனும் ஷெர் ஆப்கனுடனும் தாம் கொண்டிருந்த தொடர்பு களைப் பற்றியும் வெளிப்படையாகக் கூறவில்லை. ஆனால் அபுல்பாஸலின் கொலைக்குத் தாம் பொறுப்பாளியாயிருந்த உண்மையைக் குறிப்பிட்டுள்ளார். ஜஹாங்கீரின் தன்மையை அறிய அந்நூல் நமக்கு மிகவும் உதவுகிறது. அடுத்தபடியாக அப்பேரரசின் படைத்துறை அமைச்சராயிருந்த முதாமத்கான் எழுதியுள்ள "இக்பல் நாமா-இ-ஜஹாங்கீரி" என்ற நூல் ஷாஜஹான் பட்டமேற்கும் காலம் வரையுள்ள தைமூரியர் குல வரலாற்றைக் குறிப்பிடுகிறது. ஆனால், அவ்வாசிரியர் நூர்ஜஹானை வெறுத்தார்; ஷாஜஹானிடம் மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். ஆயினும் ஜஹாங்கீரின் இறுதிக்காலத்தைப் பற்றி அறிய அவரெழுதியுள்ள நூல் இன்றியமையாததாகும். இனி, ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தின் முதல் பத்து ஆண்டுகளைப் பற்றி அறிய, காஸ்வீனி என்பார் எழுதிய "பாதுஷா நாமா" வும் அடுத்த பத்து ஆண்டுகளைப் பற்றி அறிய அப்துல்ஹமீத் லாஹோரி எழுதிய பாதுஷா நாமாவும் அடிப்படைச் சான்றுகளாக உள்ள நூல்களாகும். அபுல் பாஸல் எழுதிய "அக்பர்நாமா" வின் நடையில் எழுதப்பெற்ற லாஹோரியின் வரலாற்றைப் பேரரசரே நன்கு பாராட்டினர்.

ஷாஜஹானுடை மூன்றுவது பத்து ஆண்டு அரசியலை வாரீஸ் என்பார் எழுதிய "பாதுஷாநாமா" விற்காணலாம். சாதிக்கி னுடைய "ஷாஜஹான்நாமா" வும் கம்புவினுடைய "அமாலி சாலி" என்ற நூலும் பேரரசருடைய முழு ஆட்சியின் வரலா றுகள் ஆகும். காசிம் என்பார் எழுதிய "ஆலம்கீர்நாமா" என் னும் நூல் அவுரங்கசீப்பின் முதல் பத்து ஆண்டு ஆட்சியின் வர லாற்றைக்கூறுவது. அப்பேரரசரின் உதவியுடன்தான் அது எழுதப்பபெற்றது. ஆயினும் அதைப்படித்தபிறகு அவுரங்கசீப் அதைத் தொடர்ந்து எழுத வேண்டாமென்று ஆணையிட்டார். தமது அரிய செயல்களைப் பகட்டாரவாரத்துக்காக வெளியிடு வதைவிட அகத்தில் உள்ள பக்தியைப்பெருக்குவதே மேலா னது என்று அவர் கொண்டிருந்த கொள்கையே அத்தகைய ஆணைக்குக் காரணமாம். மஸ்தாயித்கானுடைய "மாசிரி ஆலம்கிரி" என்ற நூல், 1710'ல் அவுரங்கசீப்பின் ஆட்சி வரலாறு ஆகும். ஆதலால் பணித்துறையாளரால் எழுதப் பெறும் வரலாறுகளில் உள்ள முகப்புகழ்ச்சியை அதிற் காண்பதற்கில்லை. மேலும், அவ்வாசிரியர் நாற்பது ஆண்டு கட்குமேலாக முகலாயர் அரசியலுடன் தொடர்புகொண்டவர். செய்திகளைத் தெளிவாக அறிந்துகொள்வதற்கான பல்வேறு வாய்ப்புக்கள் அவருக்கு இருந்தன. இனி, "மந்தாகாப்— உல் - லபாப்" என்பது பாபர்காலம் முதல் 1733'ம் ஆண்டு வரையிலுள்ள காலத்தைப்பற்றி ஓர் வரலாறுகும். அதை ஆக்கிய கபீகான், (Khafikhan) அவுரங்கசீப்பிடம் பணி யாற்றியவர். அவர் தமது பேரரசரை மிகப் புகழ்ந்தும் சிவாஜியை மிக இகழ்ந்தும் எழுதியுள்ளபோதிலும் பெரும் பாலும் அவர் கூற்றுக்கள் நம்பத்தக்கனவே. அவர் முன்ன வரின் ஆற்றல் குறைவையும், பின்னவரின் பெருமையையும் உணராமலில்லை. பர்ஹான்புரிக்கு உரிய பீம்சென் என்ற இந்து அறிஞர் 1656 லிருந்து 1709 வரையுள்ள பகுதி யைப்பற்றி எழுதியுள்ளார். குறிப்பாகத் தக்காணத்தைப்பற்றி புதியதும் விரிவானதுமாக அவர் தரும் கருத்துக்கள் வர வேற்கத்தக்கன. "பீம்சென் உண்மைச் செய்திகளை உணர்ந்த வர்; அவற்றை அவரால் கூறவும் இயலும்."[1] அவர்

1. Sarkar, Studies in Mughal India (1919), pp. 240—1

இயற்றிய "நூஸ்காயிதில்காஷா" என்ற நூல், அரசியல் அலுவலாளரால் எழுதப்பட்ட வரலாற்று நூல்களைப்போலன்றி, சமூகப்பொருளாதார வாழ்க்கையைக் கூறுவது. அவுரங்கசீப்பின் அவைக்களத்தைச் சேர்ந்த தலைமைக்காஸி (Zi) யிடம் பணியாற்றி வந்த ஈச்வரதாஸ் என்ற ஒரு குஜராத் அந்தணர், தாம் 1731'ல் எழுதிய நூலில் (Fatuhat-i-Alamgiri), 1657 முதல் 1698 வரை இராசபுதனத்திலும் மாளவத்திலும் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறார். "மாசிர்-உல்-உமாரா" என்னும் நூல், அக்பர் ஆட்சிலிருந்து விளங்கிய முகலாயப் பெருஞ்செல்வர்களின் பெயர்களடங்கிய வாழ்க்கை நிகண்டாகும். 1742'ம் ஆண்டில் ஷாநவாஸ்கான் என்பவர் அதை எழுதத் தொடங்கினார். 1780'ல் அது முடிவுற்றது. முகலாயர் வரலாற்றுக்கு முக்கியமாகவேண்டப் படும் அவுரங்கசீப்பின் முடங்கல்களின் சிறப்பு போற்றத் தக்கது என்பது வெளிப்படை. அவ்வகையைச் சேர்ந்த, அடாபிஆலம்கிரி என்னும் தொகுப்பு குறிப்பிடத்தக்கது. இறுதியாக, பீஜப்பூர் வரலாறு (Basatin-i Salatin) போன்ற உள்நாட்டு வரலாற்று நூல்கள், முகலாயருக்கும் தக்கணச் சுல்தான்களுக்குமிடையே இருந்த தொடர்புகளை விளக்கும்.

**ஐரோப்பியப் பிரயாணிகள்.** 1609 முதல் 1611 வரையில் ஜஹாங்கீரின் நண்பராக விளங்கிய ஹாகின்ஸ், முகலாயர் அவைக்களத்தைப்பற்றிய - சிறப்பாகப் பேரரசரின் அன்றாட வாழ்க்கையைப்பற்றிய - ஓர் அரிய குறிப்பை எழுதியுள்ளார். முகலாயரின் அவையில் 1616 முதல் 1618 வரை அரசியல் தூதுவராக இருந்த சர்தாமஸ்ரோ என்னும் ஆங்கிலேயர், அக்காலத்து அரசியல் சிக்கல்களைப்பற்றியும் ஜஹாங்கீர், நூர்ஜஹான், ஷாஜஹான் என்ற இவர்களுடைய பண்புகளைப்பற்றியும் சிறிது விளக்கந்தருகிறார். அவருடைய பணியாளராகிய தெர்ரீ என்பார், இந்நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களைப்பற்றி எழுதியுள்ள குறிப்புக்களும் நமக்குப் பயன்படுகின்றன. ஆக்ராவில் டச்சு வாணிகத்துறைப்பேராளாக இருந்த பேல்சார்ட் என்பார் 1620 முதல் 1627 வரை முகலாயப் பேரரசின் நிலையைப்பற்றி அறிவிக்கிறார். தாவர்னியர் என்ற ஒரு பிரெஞ்சு வணிகர் 1641க்கும் 1666க்கும்

இடைப்பட்ட காலத்தில் ஐந்து முறை இந்தியாவுக்கு வந்தார். சூரத்திலிருந்து, டாக்கா, மசூலிப்பட்டினம் வரையில். உள்ள பல இடங்களையும் அவர் சுற்றிப் பார்த்தார். ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் அவர் இந்நாட்டில் தங்கினார். வயிரக்கனி களில் அவர் மிகுந்த அக்கரை கொண்டிருந்தார். வருந்தத் தக்க நிலையிலிருந்த மண்டல ஆட்சி முறையைப்பற்றி அவர் தரும் குறிப்பு மிகவும் பொருள் பொதிந்ததாக உள்ளது. தேவநாத் என்ற மற்றொரு பிரெஞ்சுக்காரர் சூரத்திலிருந்து மசூலிப்பட்டினத்திற்குப் பிரயாணம் சென்றார். அவர் வரைந்த கோல்கொண்டா வருணனை மிகவும் மதிக்கத்தக்கது. வரலாறு, தத்துவம் இவற்றில் ஈடுபட்டவரும் மருத்துவ அறிஞரும் ஐரோப்பியப் பிரயாணிகளுக்குள் ஒரு இளவரசு போன்ற வருமான பெர்னியர் என்ற பிரஞ்சு அறிஞர் முகலாய அரசி யலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். 1658' லிருந்து 1667 வரையில் அவர் இந்தியாவிற் பிரயாணம் செய்து பஞ்சாப், காச்மீரம், வங்காளம், மசூலிப்பட்டினம், கோல்கொண்டா முதலியவற்றை நேரில் கண்டார். அரசுரி மைக்காக ஏற்பட்ட பெரிய போரைப்பற்றி அவர் ஒரு குறிப்பு எழுதியுள்ளார். தில்லி, ஆக்ரா முதலிய நகரங்களை யும் அவர் சிறப்பித்திருக்கிறார். பிரான்ஸ்நாட்டுப் பொரு ளமைச்சரான கோல்பர்ட் என்பாருக்குப் பெர்னியர் எழுதிய முடங்கலில் முகலாய அரசின் ஆட்சிமுறையை விளக்கிக் கூறியுள்ளார். ஆசிய நாடுகளின் வீழ்ச்சிக்குரிய அடிப்படைக் காரணங்களை ஆய்ந்துணர வேண்டுமென்பதே அவர் நோக்கமாகும். மனுச்சி என்பவர் 1656'ல் இந்நாட்டுக்கு வந்த ஓர் வெனிஸ் நகரவாசி. அவர் தாராஷுகோவின் கீழ் ஒரு இராணுவ அலுவலாளராக அமர்ந்தார். அவர் இறந்த ஆண்டு 1717. இத்தாலிய, போர்ச்சுகீசிய, பிரஞ்சு மொழி களில் எழுதப்பெற்ற அவருடைய நூலில் (Storia do Mogor) முகலாயரின் அரசியல், அவுரங்கசீப்பின் ஆட்சி, ஷாஜஹா னைப் பற்றிய சில குறிப்புக்கள் முதலியவற்றைக் காணலாம். மக்களைப்பற்றியும் பிறசெய்திகளைப் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ளும் நுண்ணறிவு அவரிடமில்லை; மேலும் அவர் எதையும் எளிதில் நம்பிவிடுபவர். ஆகவே சில சமயங்களில் வழிப்

போக்கரின் கட்டுக் கதைகளையும் ஊர்வம்புப் பேச்சுக்களையும் பொதுப் பணியாளரின் மனை வாழ்க்கையைப் பற்றிய சுவை யற்ற விவரங்களையும் குறித்துச் செல்கிறார். இந்தியாவின் மேற்கிலும் சோழமண்டலக் கரையிலும் பிரயாணம் செய்த பிரையர் (Fryer) என்றும் ஆங்கிலேய அறுவை மருத்துவர், அவுரங்கசீப்பின் மதவெறியையும் சிவாஜியின் பெருமையை யும் சிறப்பிக்கின்றார். இறுதியாக, நேபிள்ஸ் வழக்கறிஞ ரான காரேரி என்பவர், 1695'ல் பீஜப்பூருக்கு அருகில் பேரரசர் தங்கியிருந்த இடத்துக்குச் சென்று அவரைக்கண்டார். அவர் பேரரசரைப் பற்றியும் அவருடைய படையைப் பற்றி யும் விளக்கமாகக் குறிப்பிடுகிறார். படை அமைப்பின் சீர் கேடுகளை அவர் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

**ஒப்புநோக்கிய மதிப்பு.** நமக்குக் கிடைத்துள்ள சான்று களின் தன்மையை ஈண்டு நோக்குவோம். பாரசீகமொழி நூல்களில் செய்திகள் மிகுதியாக உள்ளன. அவைகளின் உதவிகொண்டுதான் முகலாயர்வரலாற்றை வரைய முடியும். ஆனால் அவ்வரலாறுகளில் அவற்றின் ஆசிரியர்கள் விரும்பாத விவரங்கள் விடப்பட்டுள்ளன. மேலும் அவ்வாசிரியர்கள் சாதாரண மக்களின் நிலையைப் பற்றிய செய்திகளைப் புறக் கணித்துள்ளனர். மற்றொருபுறம், வெளிநாட்டு வழிப்போக் கர்கள் இந்தியாவில் குறுகிய காலம்தான் தங்கியிருந்தனர். அக்காலப் பகுதியிலும் கூட அவர்கள் தமது அலுவல்களி லேயே மிகுந்த கருத்தைச் செலுத்தி வந்தனர். ஆகவே அங்கு மிங்குமாகச் சிதறிய வரலாறுகளையே தான் அவர்கள் தரக் கூடும். ஆனால் அவர்களிற் சிலர் இந்தியாவில் பல இடங் கட்குச் சென்றனர்; சிறப்புவாய்ந்த மக்களுடன் தொடர்பு கொண்டனர்: பெரிய நகரங்களையும் பல திருவிழாக்களையும் ஊர்வலங்களையும் கண்டார்கள். சிறப்பாகக் குடியானவர் களின் நல்வாழ்க்கை அவர்கள் கருத்தில் படாமல் இல்லை. இனி உள்நாட்டு ஆசிரியர்களைக் கருதுமிடத்து, 'அவர்கள், இந்நாட்டு வரலாறு எழுதுவதற்கு மிகுந்த தகுதி உடைய வர்கள் என்பது விளங்கும். ஏனெனின் அவர்களிற் பெரும் பாலோர், நிகழ்ச்சிகளைக் கண்ணுற்கண்டு கொண்டிருந்த

அரசியல் அலுவலாளர் ஆவர். வேண்டும்பொழுது வேண்டிய குறிப்புக்கள் யாவையும் பெறும் வாய்ப்பு அவர்களுக்கு இருந்தது. ஐரோப்பியப் பிரயாணிகள் பலர் இத்தகைய வாய்ப்பின்றி வருந்தினர். மேலும் அவர்களுக்குப் பாரசீக மொழி தெரியாது; அல்லது ஓரளவு மட்டுமே அறிந்திருந்தனர். ஆதலால் அரசியல் ஆயப்பதிவேடுகளை அவர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள இயலாதவர்களா யிருந்தனர். தலைமை நிலையில் இருந்த பெரியோரிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவர்களுக்கு மிகக் குறைவாகவே இருந்தது. சிறப்புரிமைகளை நாடிவந்த அவர்களுக்கு மிகுந்த வாய்ப்புக்கள் இல்லாமலிருந்ததில் யாதும் வியப்பில்லை. அவர்களிற் பலர் எதையும் எளிதில் நம்பும்தன்மை பெற்றிருந்தனர். அரசியலிலும் நேர்முகமான அனுபவம் அவர்களுக்கில்லை. அவர்கள், இந்நாட்டு மக்களுடன் நெருங்கிய பழக்கம் உடையவர்களுமல்லர். ஆதலால் திருத்தமான குறிப்புக்களை அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதற்கில்லை. ஒருவகையில் மக்களுக்குப் பொதுவாக உணர்ச்சி ஊட்டும் குறிப்புக்களையும் தம் நாட்டவருக்கு வியப்பு அளிக்கும் செய்திகளையும் கூறவேண்டுமென்ற விருப்பம் அவ்வறிஞர்களிடம் எத்துணை அளவுக்கு இருந்தது என்பதைப் பொறுத்தே அவர்தம் நூல்களை மதிப்பிட வேண்டும். இந்திய முகம்மதிய ஆசிரியர்களோ, சில செய்திகளை மிகைப்படுத்தியும், சிலவற்றைக் குறிப்பாகவும், சிலவற்றை மறைத்தும் கூறியிருக்கக் காண்கிறோம். ஒருதலைச்சார்பான செய்திகளும் குறிக்கப்பட்டுள்ளன. பல ஆசிரியர்கள் நூர்ஜஹானை வெறுத்ததால் அவ்வம்மையாரைப்பற்றிய குறிப்புக்களில் நேர்மையான விளக்கத்தை நாம் காண்பதற்கில்லை. ஷாஜஹானிடமும் அவுரங்கசீப்பிடமும் பல ஆசிரியர்கள் தனிப்பற்றுக் கொண்டிருந்ததும் நோக்கற்பாலது. பாரசீக வரலாற்றிஞர்கள் சிவாஜியிடம் வெறுப்புக்கொண்டிருந்தனர் என்பது வெளிப்படை. அவர்கள் பேரரசின் சார்பாகவே எழுதிச்சென்றனர். சமயத்தொடர்பான அல்லது கட்சிச்சார்பான பெருமையை நிலைநாட்டும்பொருட்டு வரலாற்று உண்மை மறைக்கப்பட்டிருப்பதையும் நாம் காண்கிறோம். ஆனல் இத்தகையகுறைபாடு, பொதுவாக அயல்நாட்டிலிருந்து வந்த ஆசிரியர்களிடம்

இருப்பதற்கில்லை. ஆகவே ஐரோப்பியப் பிரயாணிகளால் உள்நாட்டு வரலாற்றுக் குறிப்புக்கள் திருத்தமடையக்கூடும்.

## பகுதி 2

### ஜஹாங்கீரும் (1605—'27) நூர்ஜஹானும்

ஜஹாங்கீரின் தொடக்க வாழ்க்கையும் அரசுகட்டில் ஏற்றமும். இளவரசர் சலீம் (பிற்கால ஜஹாங்கீர்) 1569'ல் பிறந்தார். துறவி ஷேக்சலீமின் பெயர் அவருக்கு இடப்பட்ட செய்தியை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். இவரது மனம் சிறந்த கல்வியால் விரிந்தது; அறிவு பெருகிற்று. இவர். பாரசீக, துருக்கிய, மொழிகளைக் கற்றார்; வரலாற்றிலும், நில நூலிலும் (Geography) கருத்தினை மிகச்செலுத்தினர் இயற்கை விஞ்ஞானத்திலும், கலையிலும் இவருக்குத் தனித்த விருப்பமுண்டு. வேட்டையாடுதல், சுடுதல், கத்திவிளையாட்டு என்ற இவைகளில் சலீமுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. 1585'ல் அவருக்குக் குடிப்பழக்கம் ஏற்பட்டது.. 1594'ல் பெரும் குடிகாரராகிவிட்டார். 1585'ல் ஆம்பர் பகுதியைச் சேர்ந்த மன்பாய் என்ற அம்மையாரை அவர் திருமணம் புரிந்துகொண்டார். அவளிடத்தில் அவருக்கு மிகுந்த பற்று இருந்தது. அவர்களுக்கு 1587'ல் குஸ்ரு என்னும் மகன் பிறந்தான். பார்விஸ் என்ற மற்றொரு மகனை 1589'ல் அவர்கள் பெற்றனர். சலீமின் மற்றொரு மனைவி ஜகத் கோசெய்ன் 1592'ல் குர்ரம் (பிற்காலத்து ஷாஜஹான்) என்பானைப் பெற்றனள். 1597'ம் ஆண்டுக்குள் சலீம் இருபது மனைவிமாரை மணந்தார். 1605'ல் ஷாரியர் என்ற மற்றொரு மகனுக்கு அவர் தந்தையானர். சலீம், தம்தந்தை அக்பரைப் பகைத்துக்கொண்டு கலகம் செய்ததைப்பற்றி முன்னரே குறிப்பிட்டோம். அரசுரிமையை நாடிச் சலீமும், குஸ்ருவும் போட்டியிட்டனர். முடிவில் முன்னவர் தம்தந்தையின் அன்பைப் பெற்று 1605'ல் அரியணை ஏறினர். நூர்-உத்-தீன் முகம்மது ஜஹாங்கீர் என்பதே அவருடைய பட்டப்பெயர். இஸ்லாமைக் காப்பாற்றுவதாகவும் குஸ்ருவை மன்னிப்பதாகவும் அவர் வாக்குறுதி அளித்தார்.

குஸ்ரு கொலைசெய்யப் படுதல். ஜஹாங்கீருக்குக் குஸ்ருவின்மீது முழுநம்பிக்கை ஏற்பட்டதால் அம்மகனை ஆக்ரா கோட்டைக்குள்ளேயே இருக்கச் செய்தார். ஆனால் அவர் தப்பி ஓடிப் பல இடங்கட்குச் சென்று பலருடைய உதவியையும் பெற்றார். சீக்கிய குரு அர்ச்சுனரும் அவருக்கு மிகுந்த உதவிசெய்தார். அக்குற்றத்துக்காகப் பேரரசர், அர்ச்சுனரைக் கொலை செய்தார். சீக்கியர் முகலாயரை வெறுக்கலாயினர். குஸ்ரு, தம் தந்தையைக் கொல்லச் சூழ்ச்சி செய்தாரென்ற காரணத்தால் அரசராணைப்படி குருடாக்கப் பெற்றார். பின்னர் அவர் ஓரளவுக்குக் கண்பார்வையைப் பெற்றதாக அறியக் கிடக்கிறது. 1616'ல் இளவரசர் குர்ரம் தமது மேற்பார்வையின் கீழ் குஸ்ருவைக் காவலில் வைத்திருக்க வேண்டுமென்ற அரச ஆணை பிறந்தது. அவ்வாறு வைக்கப்பட்டிருந்த குஸ்ருவை 1622'ல் குர்ரம் கொலை செய்துவிட்டு, அவர் குடல்வலி நோயினால் இறந்துவிட்டதாக அரசியல் குறிப்பில் எழுதிவைத்தார். கொலைக்குப் பொறுப்பாளி குர்ரம் தான் என்பதில் ஐயமில்லை.[1] குஸ்ருவிடம் பல நற்பண்புகள் இருந்தன. அவருடைய ஒரே மனைவியிடம் அவர் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். மக்கள் அவர்மீது இரக்கம் காட்டினர். குஸ்ருவின் உடல் அலகாபாத்துக்கு அருகில் குஸ்ருபாக் என்னுமிடத்தில் புதைக்கப்பட்டது.

நூர்ஜஹான். மிஹிருன்னிஸா (பெண்கள் நாயகம்) என்பாள், கியாஸ்பெக்கின் மகள்; கியாஸ்பெக் ஒரு பாரசீகர்; சிறந்த அறிஞர்; பண்பாடு உடையவர்; 1577'ல் முகலாயரின் அவைக்கு வந்தார்; அக்பரிடம் பணியில் அமர்ந்தார். ஜஹாங்கீர் பட்டமேற்றவுடன் அவர் நிலைமை உயர்வடைந்தது. அவர்மகள் மிஹிருன்னிஸா காந்தாரத்தில் 1577'ல் பிறந்தாள். 1594'ல் அலிகுலி என்ற ஒரு பாரசீக இளைஞனை மணந்தாள். 1599'ல் அலிகுலி, சலீமின் அலுவலாளராக அமர்ந்தார். அவர் ஒரு புலியைக் கொன்ற வீரத்துக்காக "ஷெர் ஆப்கன்" (அல்லது-புலியைக் கொன்றவர்) என்ற பட்டத்தைப்பெற்றார். 1607'ல் அவர் இறந்தபின் கைம்பெண்ணான மிஹிருன்னிஸா

1. Beni Prasad, op. cit., pp. 337-8,

வை ஜஹாங்கீர் 1611'ல் மணந்து கொண்டார். "நூர் மஹால்" (அரண்மனையின் ஒளி) என்ற பெயரை அவள் பெற்றாள். பிறகு 1616'ல் அவளுடைய பெயர் "நூர்ஜஹான்" (ஜகஜ்ஜோதி) அல்லது "உலகின் ஒளி" என்று மாற்றப்பட்டது. அக்பர் காலத்திலேயே ஜஹாங்கீர், நூர்ஜஹானைக் காதலித்தார் என்றும் அதை விரும்பாத அக்பர், அவளை ஷெர்ஆப்கனுக்குத் திருமணம் செய்விக்க ஏற்பாடு செய்து விட்டாரென்றும், மனமுடைந்த ஜஹாங்கீர் பட்டம் பெற்றதும் சூழ்ச்சிசெய்து ஷெர் ஆப்கனைக் கொலை செய்து விட்டாரென்றும், நான்கு ஆண்டுகள் நூர்ஜஹான், பேரரசரின் வற்புறுத்தலுக்கு உடன்படாமலிருந்து இறுதியில் அவரை மணந்து கொண்டாள் என்றும் நிலவுகிற கூற்றுக்கு அக்காலத்து வரலாற்றுக் குறிப்புகளில் சான்றில்லை.[1] விரைவில் நூர்ஜஹான், ஜஹாங்கீரையும் அரசியலையும் தம்வசப்படுத்திக் கொண்டார். அவளது உயர்நிலை 1611 முதல் 1622 வரை தொடர்ந்து நீடித்தது. ஆனால் அதன் பிறகு அதற்கு எதிர்ப்பு ஏற்பட்டு முடிவில் 1627'ல் வீழ்ச்சியடைந்தது. நூர்ஜஹான், தம் தந்தையுடனும், உடன்பிறந்தானாகிய அபுல் ஹாசனுடனும் (ஆசப்கான்) இளவரசன் குர்ரத்துடனும் சேர்ந்துகொண்டு தம் விருப்பப்படியே அரசியலை நடத்தத் தொடங்கினாள். 1612'ல் இளவரசர் குர்ரம், ஆசப்கானின் மகளை மணந்துகொண்டார். அப்பெண்மணியே பிற்காலத்தில் மும்தாஜ்மஹால் என்று பெயர்பெற்றாள். நூர்ஜஹானுடைய ஆதிக்கம் என்பது உண்மையில் மேற்கூறிய நால்வரின் அதிகாரம்தான்."[2] ஜஹாங்கீரின் நிலைமை என்ன என்பதைப் பின்வரும் அவருடைய கூற்றே விளக்குகிறது. "நான் அரசியல் ஆதிக்கத்தை நூர்ஜஹானிடம் ஒப்படைத்துவிட்டேன்; எனக்கு வேண்டுவது ஒரு புட்டி சாராயமும் அரைத்துண்டு இறைச்சியும்தான்!" மேற்கூறிய நால்வரின் அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொள்வதற்கான வகையில் அலுவல் உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்பட்டு வந்தன. அவர்கள் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கு அரசியலில் ஒரு கட்சி உருவாகி

1. Beni Prasad, op. cit. pp. 177—8.
2. Beni prasad, op. cit., p. 193

வந்தது. எதிர்ப்பாளர், குஸ்ருவுக்கு வாரிசு உரிமை கிடைக்க வேண்டுமென்று கூக்குரலிட்டனர். மகளிர் ஆதிக்கத்தினின்று விடுவித்துக்கொள்ளுமாறு மாபத்கான் என்ற படைத்தலைவர் எவ்வளவு கூறியும் மன்னர் கேட்கவில்லை.

மேவார் (உதயபுரிப்) போர். அக்பருக்கு மிக்க இடையூறுகள் அளித்து வந்த மேவார் மன்னராகிய பிரதாபசிங் இறந்தபின் 1597'ல் அவரது மகன் அமார்சிங் பட்டத்திற்கு வந்தார். அவருக்கும் முகலாயருக்குமிடையே 1606'ல் மீண்டும் போர் தொடர்ந்தது. மாபத்கான் உட்பட பலப்பலர் தானைத்தலைவர்களாக ஒருவர்பின் ஒருவராக அமர்த்தப்பெற்றனர். போரில் இருதிறத்தாரும் முடிவான வெற்றியைக் காணவில்லை. 1613'ல் ஜஹாங்கீர் ஆச்மீரில் தங்கியிருந்தார். இளவரசர் குர்ரம் வியப்புக்குரிய வகையில் வீரத்துடன் போரிட்டு இராணுவை உடன்பாட்டுக்கு இணங்கச்செய்தார். தோல்வியுற்ற மேவார் மன்னன்மீது பேரரசர் கருணைகாட்டினார். அமார்சிங், முகலாயரின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட மானியக்காரராக ஆனபோதிலும் உள்நாட்டு அலுவல்களில் அவருக்கு உரிமை வழங்கப்பட்டது. முகலாயத்தலைநகருக்கு வரவேண்டிய கடமையினின்று அவருக்கு விடுதலை கிடைத்தது. தவிர முகலாயருடன் மணத்தொடர்பு கூடாது என்ற இராணுவின் அரண்மனை வழக்கத்திற்கு எவ்வித இடையூறும் செய்வதில்லை என்று பேரரசர் அறிவித்தார். அவ்வாறிருந்தும் தோல்வியால் மனமுடைந்த அமார்சிங், தம் பதவியைத் துறந்துவிட்டு தம் மகன் கரன் என்பாரை அரசராக்கினர். இராசபுதனத்திலேயே முதன்மையாக இருந்த நாடு தம் அடிக்கீழ் வந்தது, பேரரசருக்குப் பெருமகிழ்வைத் தந்தது. அக்பரால் நிறைவேற்றப்படாது இருந்த செயலைத் தாம் நிறைவேற்றி விட்டதாக எண்ணிக் களிப்புற்றார் ஜஹாங்கீர். அவர் அமைதியான முறையில் மேவாருடன் உடன்பாடு செய்து கொண்டதால் முகலாய அரசியலின் வலிமைக்கும் அது காரணமாயிற்று. அந்நாடு பேரரசருடன் ஒத்துழைக்க முன் வந்தது. இந்நிலை, 1680'ல் அவுரங்கசீப் அந்நாட்டுடன் போர் தொடுக்கும் வரையில் தொடர்ந்திருந்தது.

**மாலிக் ஆம்பர்.** சலீமின் கலகம் காரணமாக அக்பர், 1601'ல் தக்கணத்தைவிட்டுப் புறப்பட நேர்ந்தது என்று முன்னர்ப் பார்த்தோம். நிஸாம்ஷாஹியர் குலத்தை மாலிக் ஆம்பர் மீண்டும் நிறுவினர். மராட்டியரின் உதவிபெற்றுத் தம் நிலைமையை வலுப்படுத்திக் கொண்டார். 1608'ல் முகலாயரின் படையெழுச்சி மீண்டும் தக்கணத்தில் தொடங்கியது. ஆனால் எளிதில் வெற்றிபெறமுடியவில்லை. 1610'ல் இளவரசர் குர்ரம் படைத் தலைமையை ஏற்றுக்கொண்டார். 1617'ல் அவர் பீஜப்பூருடன் செய்துகொண்ட உடன்பாட்டின்படி அந்நாடு பேரரசருக்குத் திறை செலுத்த இணங்கிற்று. மாலிக்ஆம்பர், ஆமதுநகர் உட்படத் தாம் அண்மையில் கைப்பற்றிய இடங்களை முகலாயருக்குக் கொடுத்துவிட்டார். வெற்றிவீரர் குர்ரம், "ஷாஜஹான்" (உலகப் பேரரசர்) என்னும் பட்டத்தைப்பெற்றுர். ஆனால் தக்கணத்தில் முகலாயரின் வெற்றிகள் போலிவெற்றிகளாக முடிந்தனவே அன்றி உண்மையானவையாக அமையவில்லை என்பதைப் பிற்கால நிகழ்ச்சிகள் காட்டின. 1620'ல் மாலிக்ஆம்பர், பீஜப்பூருடனும், கோல்கொண்டாவுடனும் சேர்ந்துகொண்டு தாம் முன்னர்க்கைவிட்ட பகுதிகளை மீண்டும் கைப்பற்றிக்கொண்டதுடன் புதிதாக வேறு சில இடங்களையும் தாக்க முற்பட்டார். ஆனால் ஷாஜஹான் அக்கூட்டு நாடுகளைத் தோற்கடித்து 1621'ல் வெற்றிமாலை சூடினர். இழந்த பகுதிகளை மீட்டுக்கொண்டதுடன் 50-லட்ச ரூபாய் கப்பத்தையும் தக்கண நாடுகளிடமிருந்து அவர் பெற்றுர்.

**மேலும் வெற்றிகள்.** அக்பருக்கு இடையூறுகள் விளைத்து வந்த வங்காளநாட்டு ஆப்கானியருள் இறுதியானவர் உஸ்மான்கான். அவரை 1612'ல் முகலாயர் முறியடித்தனர். அவர் இறந்தபின் அவரைப்பின்பற்றியோர் அடங்கிவிட்டனர். அவர்களை எல்லாம் ஜஹாங்கீர் கருணையாகவே நடத்தினர். வடகிழக்கு எல்லைப்புறத்தில் அஸ்ஸாமில் சில இடங்களை 1612'ல் முகலாயர் கைப்பற்றிக் கொண்டனர். 1615'ல் பீஹாரில் கோகரா என்ற இடம் (வைரக்கனியை உடையது) பேரரசர் வசப்பட்டது. 1617'ல் பூரி உட்பட்ட குர்தாப்பகுதி

(ஒரிஸ்ஸாவில்) கைப்பற்றப்பட்டது. 1620'ல் முகலாய வீரர், கிஷ்துவார் (காச்மீரம்) கங்ரா (பஞ்சாப்) ஆகிய இடங்களைப் பேரரசுடன் இணைத்தனர். இறுதியாக கூறப்பட்ட வெற்றி, பேரரசருக்கு அளவற்ற மகிழ்வை விளைத்தது. ஏனெனின் அவர் தந்தை உள்பட பல முகமதியப்பேரரசர் முயன்றும் கங்ராவைக் கைப்பற்றமுடியாமற் போனதே ஆம்.

போர்ச்சுகீகியருடன் தொடர்பு. ஜஹாங்கீர், ஐரோப்பியருடன் நட்பு உறவுகொள்ளவே முதலில் விரும்பினர். 1607'ல் கோவாவுக்கு ஒரு நட்புத்தூதுக்குழுவை அனுப்பினர்; 1609'ல் ஹாக்கின்ஸ் என்ற ஆங்கிலேயரை அன்புடன் வரவேற்ருர். ஆனல் அவர் ஆங்கிலேயரிடம் அன்புகாட்டியதைப் போர்ச்சுகீசியர் விரும்பவில்லை; பேரரசர்மீது அவர்கள் சினங்கொண்டதால் அவர், 1609'ல் தாம் அனுப்பியிருந்த தூதுக்குழுவை மீட்டுக்கொண்டார். 1613'ல் முகலாயரின் கப்பல்கள் சிலவற்றைப் போர்ச்சுகீசியர் கைப்பற்றிக்கொண்டதால் இருதிறத்தாருக்குமிடையே போர் மூண்டது. பேரரசர், டாமனை முற்றுகையிடச்செய்தார். பேரரசில் இருந்த போர்ச்சுகீசியர் காவலில் வைக்கப்பெற்றனர். பாதிரிமார்கள் சமய உரைகள் நிகழ்த்தக்கூடாது என்று அரச ஆணை பிறந்தது. ஆங்கிலேயரோ அன்புடன் நடத்தப் பெற்றனர். 1615'ல் போர்ச்சுகீசியரை ஆங்கிலேயர் ஒரு கடற்போரில் முறியடித்ததால் முன்னவர், ஜஹாங்கீருடன் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

ஆங்கிலேயருடன் தொடர்பு. இந்தியாவில் வாணிகம் செய்ய வெண்டுமென்ற நோக்கத்துடன் இங்குவந்த ஆங்கிலேயர் ஜஹாங்கீரின் உதவியை நாடினர். வில்லியம் ஹாக்கின்ஸ் என்னும் ஆங்கிலேயர் 1608'ம் ஆண்டில் சூரத்திற்கு வந்து இறங்கி அங்கிருந்து ஆக்ராவுக்குச் சென்று ஜஹாங்கீரைக் கண்டு அவரால் அன்புடன் வரவேற்கப் பெற்ருர். அவரை இந்நாட்டுக்கு அனுப்பிய ஆங்கிலேய மன்னர் I-ம் ஜேம்ஸ் என்பாராவர். 1609 முதல் 1611 வரை முகலாயரின் அவைக்களத்தில் ஹாக்கின்ஸ் தங்கியிருந்தார். முகலாயப் பேரரசர் அவரை 400 குதிரை வீரர்களுக்குத் தலைவ

ரான மான்சப்தாராக அமர்த்தினர். போர்ச்சுகீசியப் பாதிரிகள் ஆங்கிலேயருக்குப் பகையாகச் செயலாற்றி வந்தபடியால் ஹாக்கின்ஸ் தாம் விரும்பியவாறு வாணிகச் சலுகைகளைப்பெற இயலவில்லை. பின்னர், சர்தாமஸ்ரோ என்பாரை I-ம் ஜேம்ஸ், இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார். அத்தூதர் 1615 முதல் 1619 வரை இந்நாட்டிலிருந்தார். ஆயினும் இங்கிலாந்துடன் வாணிக உடன்படிக்கை செய்து கொள்வதற்கு ஜஹாங்கீரை இணங்கவைக்க அவரால் முடியவில்லை. எனினும் அவருடைய முயற்சியால் இந்தியாவில் ஆங்கிலேயரின் வாணிகத்துக்கான சில உரிமைகளை அவர் பெற்றார். ஆங்கிலேயர் தமக்கென உரிமையாகக் கட்டடம் எடுத்துக்கொள்ள, பேரரசர் இணங்காதபோதிலும் வாடகைக்குக் கட்டடங்களைப் பயன் படுத்திக்கொள்ள அவர்கள் உரிமை பெற்றனர். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கூட்டுக்குழுவின் வரலாற்றில் ரோவின் இந்திய வருகை மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். அமைதியான முறையில் வாணிகம் செய்ய வேண்டுமென்பதே அவருடைய நோக்கம். அவருக்குப் பின்னரும் நீண்டகாலம் வரை அந்நோக்கத்தை ஆங்கிலேயர் கடைப்பிடித்தனர். அவர் விரும்பியவாறு பல உரிமைகளைப் பெற முடியாமைக்குப் போர்ச்சுகீசியரும் ஷாஜஹானும் காரணமாயினர்.

**நூர்ஜஹானின் போராட்டம்.** அபினலும் சாராயத்தாலும் ஜஹாங்கீரின் உடல்நலம் கெட்டுவந்தது. 1618' லிருந்து அவர் உடல்நிலை கவலைக்கிடமாயிற்று. அவர் இறந்து ஷாஜஹான் பட்டமேற்றல் தமது ஆதிக்கம் குறைந்து விடுமென்று அஞ்சிய நூர்ஜஹான் மிகுந்த கருத்துடன் தம் கணவனரின் உடல் நலத்தைக் காத்துவர இயன்றனவெல்லாம் செய்து வந்தார். சாராயம் குடிப்பதைக் குறைத்துக் கொள்ளுமாறு ஜஹாங்கீரை வற்புறுத்தி அம்முயற்சியில் வெற்றியும் பெற்றார். குடிகளைத் தம்வசப் படுத்திக்கொள்வதற்காகச் செங்கோலாட்சியை அமைத்தார். சிறந்த முறையில் நீதி வழங்கினர். அவர் தம'து முதல் கணவன் வழியில் தமக்குப்பிறந்திருந்த மகளை ஜஹாங்கீரின் நான்காவது மகனை ஷாரியருக்கு மணம் செய்வித்தார்.

தம் மருமகனுன அவரை அரியணையிலமர்த்துவதற்கான முன்னேற்பாடுகளையும் செய்து வந்தார். ஆனால் அவர் உடன் பிறந்தாரான ஆஸப்கான், தம் மருமகனுன ஷாஜஹானுக்குப் பட்டம் கிடைப்பதற்கான சூழ்ச்சிகளைச் செய்து வந்தார். தம்மை வெறுத்த அரசியை எதிர்த்து ஷாஜஹான் கலகம் செய்தார். நூர்ஜஹான், மாபத்கான் என்ற படைத்தலைவரை அனுப்பி அவரை அடக்கினுர். மாபத்கான், ஷாஜஹானைப் பின்தொடர்ந்து மாளவத்தின் வழியாகத் தக்கணத்திற்கும், பின்பு தெலிங்கானுவின் வழியாக வங்காளத்திற்கும் விரட்டி வெற்றிபெற்ருர். மாபத்கானின் புதிய செல்வாக்கைக் கண்டு அஞ்சிய நூர்ஜஹான் ஷாஜஹானை மன்னித்து அவரைத் தங்கியிருக்க அனுமதித்தார்.

மாபத்கான், பார்விஸ்ஸை (ஜஹாங்கீரின் இரண்டாவது மகன்) அரியணையிலமர்த்த விரும்பியதால் நூர்ஜஹான் அப் படைத்தலைவரை வெறுக்கத் தொடங்கினுர். குடிகளைத்துன் புறுத்தல், பொருளைக்களவாடல் முதலிய குற்றங்களை அவர் மீது சாட்டி அவ்வம்மையார் அவரை அழிக்கப்பல முயற்சிகள் செய்தார். மாபத்கான் பெரும்படையுடன் சென்று ஜஹாங் கீரைக் கைது செய்தார். அவ்வமயம் அப்பேரரசர் ஜீலம் ஆற்றங்கரையில் தங்கியிருந்தார். நூர்ஜஹான் அரசரை விடுவிக்க வீர முயற்சி செய்தும் அது பயனற்றதாயிற்று. போரினுல் ஆற்றமுடியாத செயலை அவ்வம்மையார் தந்திரத் தால் நிறைவேற்றினுர். நூர்ஜஹான், மாபத்கானிடம் அடைக் கலம் அடைந்துவிட்டதாக அறிவித்துத் தந்திரமாக அவர், கைதியான தம் கணவருடன் சேர்ந்துகொண்டார். பின்பு அங்கே பல வீரர்களைத் தம் வசப்படுத்திக்கொண்டு வலிமை வாய்ந்த ஒரு கட்சியை ஏற்படுத்திவிட்டார். தக்கசமயம் பார்த்து ஜஹாங்கீரை, மாபத்கானிடமிருந்து மீட்டும் விட்டார். மாபத்கானின் ஆதிக்கம் அழிந்தது. அவர் மீவாருக்கு ஓட நேர்ந்தது. 1626'ல் பார்விஸ் இறந்துவிட்டார். மாபத் 1627'ல் ஷாஷஹானுடன் நட்பு உடன்பாடு செய்துகொண் டார். அதைக் கேள்வியுற்ற நூர்ஜஹானின் மன அமைதி மீண் டும் குலைந்தது.

**தக்கணத்தின் நிலை.** மாபத்கான் தக்கணத்திலிருந்து அழைக்கப்பட்டபிறகு அங்கே முகலாயரின் ஆதிக்கம் ஆட்டங் கொடுக்கத் தொடங்கியது. அவருக்குப் பின் வந்த காஞ்ச ஹான்லோடி அவரைப்போல் ஆற்றல் வாய்ந்தவரல்லர். ஆனால் 1626'ல் ஆமதுநகரின் மாலிக் ஆம்பர் இறந்ததால் முகலாயருக்கு இருந்த ஒரு பெரிய இடையூறு நீங்கிவிட்டது. அவர் மகனார் பாத்கான், முகலாயருக்கு அடங்கிவிட்டார். ஆனால் ஆமதுநகரில் பின்னர் மிகுந்த வலிமைபெற்ற ஹமீத் கான், காஞ்சகானுக்குக் கைக்கூலிகொடுத்துப் பல இடங்களைத் தம் வசப்படுத்திக் கொண்டார். இவ்வாறு ஜஹாங்கீரின் தக் கணவெற்றிகள் பயனற்றவாயின.

**நூர்ஜஹானின் வீழ்ச்சி.** 1627'ல் ஜஹாங்கீர் காச்மீரத் துக்குச்சென்றார். அங்கும் அவரது உடல்நலம் சிறக்கவில்லை. லாகூருக்குத் திரும்பும்பொழுது அவர் இறந்தார். ஆஸப்கான் ஷாஜகானுக்கு முடிசூட்டவேண்டுமென்ற நோக்கத்துடன் விடா முயற்சி கொண்டு செயலாற்றிவந்தார். ஷாரியர் அரியணையைக் கைப்பற்ற முயன்று தோல்வியுற்று சிறைப்படுத்தப் பெற்றுப்பின் இறந்துவிட்டார். நூர்ஜஹானின் அரசியல் வாழ்வு முடிந்தது. ஷாஜஹான் அவருக்கு ஆண்டுதோறும் இரண்டு லட்சரூபாய் கொடுத்து வந்தார். கைம்பெண்ணான அவ்வம்மையார் கைம் பெண்ணான தம் மகளுடன் வாழ்ந்து 1645'ல் உயிர்நீத்தார்.

நூர்ஜஹான் உடல் நலம் வாய்ந்தப் பாரசீகப் பேரழகி. ஆடவருக்குரிய ஆற்றல் அவ்வம்மைக்கு இருந்தது. இடை விடாமுயற்சியே அவரது வாழ்க்கையின் சிறப்புப்பண்பு ஆகும். குதிரைச்சவாரியிலும் வேட்டையாடுதலிலும் அவருக்கு அளவு கடந்த ஆர்வம் இருந்தது. துப்பாக்கியைப் பயன் படுத்துதலி லும் அவருக்கு இருந்த திறமை வியத்தற்குரியது. சிறந்த அறி வாற்றலுடன் உயர்ந்த பண்பாடும் அவரிடமிருந்தது. இலக் கியத்திலும் நுண் கலையிலும் அவருக்குப் பற்று உண்டு. சிறிய செய்திகளிற் கூட அவரது மனம் தீவிரமாக வேலைசெய்யும். "அப்பெண்மணி ஆடை அணிகலன்கள் அணிவதில் ஒரு பெரிய மாறுதல் ஏற்படக் காரணமாயிருந்தார்."[1] தீவிரமான

1, Ibid p. 185

உணர்ச்சி அவரிடம் நிரம்பியிருந்தது. "அடைந்தால் பேரரச நிலையை அடைய வேண்டும்; இல்லையேல் எதுவுமே வேண்டாம்" என்ற முறையில் அவர் உள்ளப்போக்கு அமைந்திருந்தது. ஜஹாங்கீரிடம் அவருக்கு உண்மையான அன்பு இருந்தது. அவர் மரணம் அவ்வம்மைக்குப் பேரதிர்ச்சியாகிவிட்டது. அவர் அடக்கி ஆண்டது தம் கணவனை மட்டுமன்று; பலவகைப்பட்ட மனப்பான்மையுடைய பல ஆடவர்களையும்தான். அவர் பல ஆண்டுகள் பதவியிலமர்ந்திருந்தமைக்கு அவருடைய அரசியல் தந்திர முறையே சிறப்பான காரணமாகும். அப்பெண்மணி எளியோர்க்கு நன்மை செய்தார்; நண்பர்களுக்கு உதவிசெய்தார். ஆனால் பகைவருக்கு அச்சம் விளைவித்தார். அவரது ஆணவம் காரணமாக அல்லல் பட்டோர் பலருண்டு. அவரது சமயக் கருத்து மும்தாஜ் மஹாலையும் அவள் மூலம் ஷாஜஹானையும் பற்றியது. "அவரது ஆதிக்கத்தின் விளைவாக, முகலாயருடைய பழமையான இராணுவ ஊக்கம் குன்றியது; ஆற்றல் வாய்ந்த மகன் ஷாஜஹான் கலகம் செய்யலானார்; மண்டல ஆட்சிமுறையில் கேடுகள் பெருகின; கொள்ளைகள் மிகுதி ஆயின."[1] நூர்ஜஹான் தமது உறவினருக்குப் பல உரிமைகள் வழங்கியதும் பொதுவாக அவரது பேராசையும் அமைதியின்மைக்கே காரணங்களாயின. ஆயினும் அவர் தக்கவர்களையே ஆலோசனையாளராகத் தேர்ந்தெடுத்து வந்தார். அவர் ஆட்சியிலேற்பட்ட கேடுகளுக்கு அவர் மட்டுமே காரணமாவர் என்று கூற முடியாது. பொதுவாக முகலாயர் ஆட்சிமுறையின் சில குறைபாடுகளும் அரசுரிமை பற்றிய சட்டத்தின் சீர்கேடுகளும் தீமையை விளைவித்தன என்பதை நாம் மறக்கலாகாது. உள்துறை வெளித்துறைக் கொள்கைகளில் அவ்வம்மையார் அக்பரைப் பின்பற்றி வந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அப்பேரரசரின் எல்லைப்புறக் கொள்கையை நூர்ஜஹான் பின்பற்றவில்லை. அவர் 1622 முதல் 1627 வரை, பல போர்களும் கொலைகளும் ஏற்படக் காரணமாயிருந்த போதிலும் 1611 முதல் 1622 வரை அவருடைய ஆதிக்கம் சிறப்பு வாய்ந்திருந்தது.

1. Lane-poole, Aurangzib (1924 Edition) pp. 13—14.

**ஜஹாங்கீரின் தன்மை.** ஜாஹாங்கீரின் தன்மையை அவரே எழுதியுள்ள நினைவுக் குறிப்புகள் தெளிவாகக் காட்டுகின்றன. இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறும் ஆர்வம் அவரிடமிருந்தது. காச்மீரத்துக்கு அவர் அடிக்கடி சென்று வந்தார். அவர் கலைத்துறையிலும் மிகுந்த ஊக்கம் காட்டினர். அவர் வெளியிட்ட காசுகளே அதற்குச் சான்ருகும். சிறப்பாக ஓவியக் கலையை அவர் விரும்பிப் போற்றினர். கட்டடக்கலை, இசை முதலியவற்றை நுணுகி ஆய்ந்து குறைகளை எடுத்துக் காட்டும் ஆற்றல் அவருக்கு இருந்தது. "ஜஹாங்கீர், ஒரு இயற்கை வரலாற்று அரும் பொருட்காட்சிச் சாலையின் தலைவராக இருந்திருப்பின் அவருடைய வாழ்க்கை மிகச்சிறந்ததாகவும், மேலும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருந்திருக்கக் கூடும்."[1] அவர் மதச் செய்திகளில் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டார்; மரபாக வந்த சமயக் கொள்கைகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றவில்லை. முறை வழங்குவதில் நேர்மையைக் கடைப்பிடித் தொழுகினர். வழக்குகளை முறையிட வருவோரின் நன்மைக்காக அவர், கோட்டை வாயிலில் மணியொன்று கட்டுவித்தார். அது ஒரு பொன் சங்கிலியால் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. மணி ஓசை கேட்டதும் நூர்ஜஹான் வெளியேவந்து வழக்கைக் கேட்டு நீதிவழங்குவாராம். அம்மணி மக்களால் பயன்படுத்தப் பட்டதோ இல்லையோ அறியோம். எனினும் மன்னர் அத்துறையில் கொண்டிருந்த ஊக்கம் போற்றற் குரியது. பேரரசர் தமது பணியாட்களிடம் எப்பொழுதும் அன்புடன் பழகிவந்தார். தமது உடை, உணவு முதலிய செய்திகளில் அவர் மிகுந்த கருத்தைச் செலுத்தினர். அவருடைய அரசியல் சீர்திருத்தங்கள் அவருடைய உயர்பண்புகளை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. ஆனல் அவர் தந்தையின் சிறப்பியல்புகளான பண்புடைமையோ, சமயப்பற்ருே பெரிய சீர்திருத்தங்களில் அவருக்கிருந்த பற்ருே ஜஹாங்கீருக்கில்லை. குற்றவாளிகளைத் தோலுரிப்பது போன்ற ஜஹாங்கீரின் கொடுந்தன்மை அக்பரிடம் ஒரு சிறிதும் இல்லை. சில சமயங்களில் ஜஹாங்கீர் சிறு பிள்ளைகளைப்போல நடந்து கொள்வதுண்டு. குடிப்பழக்கம்

1. Rogers and Beveridge, Memoirs of Jahangir, II (1914), P. V.

அவர் நலத்தை அறவே கெடுத்தது. குடிக்கக்கூடாது என்று பிறருக்கு எடுத்துச் சொல்லுவார். ஆனால் அவர் ஒரு குடிகாரர். குடிவெறியால் அரசியல் அலுவல்களைக்கூட அவர் புறக்கணித்த துண்டு. பெருமைசால் பேரரசர் ஷா அபாஸ் செய்ததுபோல இவரும் புகை பிடிக்கக்கூடாது என்றுச் சட்டமியற்றினர். அவர் காலத்தில் இங்கிலாந்தில் மன்னராயிருந்த I-ம் ஜேம்ஸ் (1603—'25) புகை பிடித்தல் கூடாது என்று ஒரு கட்டுரையே எழுதினரென்பது ஈண்டு நோக்கற்பாலது. ஆனல் ஜஹாங்கீர் அந்த அளவுக்குச் செல்லவில்லை. தம்முரிமையை வற்புறுத்திக்கூறும் பண்பு அவரிடமில்லை. அவர் இளவரசராக இருந்த காலத்தில் அவர் தமது நண்பர்களின் கைப்பாவையாக இருந்தார்; அரசரான பிறகு நூர்ஜஹானுக்குக் கட்டுப்பட்டிருந்தார். முடிவாகக் கூறினல் ஜஹாங்கீர், வியக்கத்தக்க ஒருவர்தான் எனலாம். ஆனல் கவர்ச்சித்தன்மை அவரிடமில்லை.

**சமயம்.** தம் தந்தையின் சமயக்கோட்பாட்டைப் போலவே ஜஹாங்கீரின் மதக்கொள்கையும் அவர் காலத்து மக்களுக்கு எளிதில் புரிந்துகொள்ள முடியாத ஒரு செய்தியாகவே இருந்தது. அவர், மிகுந்த சமயப்பற்றைப் பெற்றிராத போதிலும், கடவுள் இல்லை என்ற கோட்பாட்டினரல்லர். ஆண்டவனிடமும் அவருக்கு அன்பு இருந்தது. முகம்மது ஓர்தீர்க்கரிசி என்ற கொள்கை அவருக்கு உடன்பாடன்று. அவர் குரானை மொழிபெயர்க்கச் செய்தார்; மக்கள் உருவங்களைப் பரிசீலனை செய்து காசுகளில் பொறித்தார்; கிறித்தவர்களுக்குப் பன்றிகளைப் பரிசாக அளித்தார். இத்தகைய செயல்கள் வைதீக முகம்மதியரின் மனத்தைப் புண்படுத்தின. கடவுள் பிறவி எடுக்கிறார் என்னும் இந்துமதக் கொள்கையை அவர் குறை கூறினர். "இத்திய கருத்துப்படி எவ்விதமான வரையறைக்கும் உட்படாத உலகின் முதற்காரணனுக்கு நீளம் அகலம், கனம் ஆகியன கற்பித்தல் வேண்டும்" என்பது அவர் கூற்று. வேதாந்தம் சூபிஸம் என்ற இவைகளை அவர் ஏற்றுக் கொண்டார் தாம் பட்டம் பெறுவதற்கு உதவியவர்கள் பொருட்டு ஆட்சித் தொடக்கத்தில் இஸ்லாம் மதத்திற் சிறிது

நம்பிக்கை காட்டினர். காசுகளில் கலீமா பதிப்பதை மீட்டும் கையாண்டார். ஏசு சங்கப் பாதிரிமார்களின் தொடர்பை அறுத்துக்கொண்டார். ஆனல் விரைவில் சமயத்தொடர்பான அவரது விரிநிலைக் கொள்கை வன்மைபெற்றது; அத்துறையில், தாம் தந்தைக்கேற்ற மகனேஎன்பதை விளங்கவைத்தார்;வெளி நாட்டுப் பாதிரிமார்களுக்கு அனுகூலம் காட்டினர்; சமய உரைகள் ஆற்றவும் மதமாற்றம் செய்யவும் அயலவருக்கு உரிமை அளித்தார். ஜஹாங்கீர் அக்பரைவிட விரிவான நோக்கத்துடன் பாதிரிமார்கட்குப் பேராதரவு அளித்தார் என்று பெர்னியர் எழுதுகிருர்.[1]. கிறித்தவ ஓவியங்களில் ஜஹாங்கீருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. குரு அரச்சுனரை அவர் தூக்கிலிட்டது, சீக்கிய மதத்தை அவர் வெறுத்ததாலன்று. அவர் கலகத்துக்கு உதவினர் என்று கருதி அவ்வாறு செய்தார். ஆயினும் அச்செயல், அரசியலைக் கருதுங்கால் தகுதியற்றதே. குஜராத்தின் சுவேதாம்பரரை அவர் துன்புறுத்தியதும் அவருக்குச் சமணமதத்தின் மேலிருந்த பகைமையாலன்று; சமணர் தலைவர் இரண்டு ஆண்டுகளில் முகலாயப் பேரரசு வீழ்ச்சி அடையும் என்று கூறியதின் விளைவேயாகும். இரண்டு ஷேக்குகளை அவர் சிறையிட்டதற்குக் காரணம் அவர்களுடைய போதனைகளும் செயல்களும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்துமென்று அவர் கருதியதேயாம். மேற்கூறிய சில செயல்கள் ஜஹாங்கீரின் பரந்த பொதுநோக்கக் கொள்கைக்கும் சமயப்பொறைக் கொள்கைக்கும் முரணனவை அல்ல. "யாவருக்கும் ஒப்பான வாய்ப்புக்கள் அளித்தல் வேண்டும்" என்ற அக்பருடைய கொள்கையை எதிர்த்து, அப்பேரரசர் இறந்தபின் கிளர்ச்சி தோன்றியது. ஆனல் ஜஹாங்கீர் காலத்தில் அக்கிளர்ச்சி வளரவில்லை. அவர் இறந்தபின் வளர்ச்சியுற்றது.

## பகுதி 3

### ஆட்சிமுறை, கலை, சூதுமுறை

**ஆட்சிமுறை.** அக்பர் முறையை பின்பற்றியே ஜஹாங்கீரும் நூர்ஜஹானும் ஆட்சி நடாத்தினர். ஆனல் அலுவ

1. Constable and Smith, Bernier's Travels in the Mogul Empire. (1916), P. 287,

லாளர் மாற்றம் காரணமாக நிர்வாகத்திறமை குன்றியது. இன்பப் பொருள்களில் நாட்டமும் அளவுகடந்த செலவுகளும் பெருகின. அக்காலத்துப் பெருஞ்செல்வர் பெற்று வந்த ஊதியத்தைக் கருதும் பொழுது இக்காலத்தில் மிக உயர்ந்த அலுவலாளர்கள் பெறும் ஊதியம் மிக மிகச் சிறியதொகை என்பது நன்கு விளங்கும்.[1]. மிகவும் செலவுக் குட்படுத்திய தக்கணப் போர்களினுல் கருவூலத்தில் செல்வம் குறைந்தது. இராச்சியத்தில் வருமானமோ பெருகவில்லை. புரட்சிக்கலகங்களும் செல்வம் அழிவதற்குக் காரணமாயிருந்தன. ஜஹாங்கிர் சிறிய சீர்திருத்தங்கள் செய்வதில் திறமைசாலி. வங்காளத்தில் பேடிகள் உண்டுபண்ணும் தொழிலே அவர் தடைசெய்தார். அது ஒரு பெருங் குற்றமாகியது. ஆனுல் அக்காலத்தில் பேரரசர்களுக்கும் பெருஞ் செல்வர்களுக்கும் பேடிகள் தேவைப்பட்டனர். ஆதலால் அச்சீர்திருத்தம் பயனளிக்கவில்லை. தொடக்கத்தில் மட்டும் சில குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். வெறியூட்டும் சில பொருள்களை விற்றலும், சூதாடுதலும் குற்றங்கள் என்று அரசர் சட்டமியற்றினுர். சில இடங்களில் முகம்மதியர், உடன்கட்டை ஏறும் வழக்கத்தையும் பெண்குழந்தைகளைக் கொல்லும்பழக்கத்தையும் மேற்கொண்டிருந்ததால் அவை தடை செய்யப்பெற்றன.படை வீரர்களின் போக்குவரவினுல் குடியானவர்களுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஜஹாங்கிர் ஈடு செய்தார். போக்குவரவு, சுங்கவரிகள் சிலவற்றை நீக்கினுர். சிலவற்றைக் குறைத்தார். ஆனுல் அவற்ருல் முழு நன்மை ஏற்பட்டதா என்பது ஐயப்பாட்டுக் குரிய செய்தியாகும்.

கலே. சிகந்தரா (ஆக்ரா மாவட்டம்) வில் உள்ள அக்பரின் கல்லறையும் ஷாதரா (லாகூருக்கருகில்) விலுள்ள ஜஹாங்கிரின் கல்லறையும் பின்னவர் காலத்தில் எடுக்கப்பட்டவை. நூர்ஜஹான் தம் கணவரின் கல்லறையைக் கணவர் திட்டப்படியும், தம் தந்தையின் கல்லறையை (ஆக்ராவில்) த் தம் திட்டப்படியும் சமைத்தார். காச்மீரநாட்டு ஷாலமர்பாக் போன்ற முகலாய நந்தவனங்கள், ஜஹாங்கிரின் கலே உணர்ச்சியைக் காட்டும் சான்றுகளாம். அவர் காலத்தில்

1. Smith, Oxford History, P. 390

முகலாயர் ஓவியக்கலை அதன் உச்சநிலையை எய்தியது. உண்மையான இந்திய முறையில் ஓவியங்கள் தீட்டப்பட்டதைக் காண்கிறோம். அதற்கு ஜஹாங்கீரின் முயற்சிகளே காரணமாகும். அவர் இறந்தபின் அக்கலை சிதைவுற்றது. அபுல்ஹாசனும் உஸ்தாத்மன்சூரும் அக்காலத்தில் மிகச் சிறந்த ஓவியக் கலைஞர்களா யிருந்தனர். மலர்கள், பறவைகள், விலங்குகள் முதலியனவற்றைச் சித்திரத்தில் தீட்டி அவர்கள் தமது ஆற்றலை வெளிபடுத்தி வந்தனர். ஜஹாங்கீர், இசைக் கலைக்கும் பேராதரவு அளித்தார்.

காசுமுறை. வகைவகையாக நன்கு அணி செய்யப்பட்ட ஜஹாங்கீர் காலத்துப் பொன், வெள்ளிக் காசுகள், முகலாயக் காசுகள் யாவற்றிலும் மிகவும் நேர்த்தியானவை.[1] அக்பர் காலத்தில் காசுகளில் பொறிக்கப் பெற்ற ஈரடிச் சொற்றொடரைத் தமது காசுகளிலும் வெளியிட்டார் ஜஹாங்கீர். ஆயினும் புதியனவற்றைப் புகுத்தும் ஆர்வமும் அவரிடமிருந்தது. இராசிமண்டலங்களின் அடையாளங்கள் அவைகளுக்குரிய உருவங்களால் ஜஹாங்கீரின் சில காசுகளில் குறிக்கப் பெற்றன. அப்பேரரசர் தம் வலக்கையில் சாராயக் கிண்ணத்தை வைத்துக்கொண்டிருப்பதைப் போன்ற உருவத்தை சில காசுகளில் காண்கிறோம். ஐந்து ஆண்டுகள் நூர்ஜஹானின் பெயர் பொறிக்கப்பெற்ற காசுகள் வெளியிடப்பட்டன.

## அதிகாரம் 16.

## முகலாயப்பேரரசு

(தொடர்ச்சி)

## பகுதி I

### ஷாஜஹான் (1628—'58)

குர்ரம் இளவரசின் வாழ்க்கையும் முடிசூட்டு விழாவும்: (1592—1628). "மகிழ்ச்சி" என்ற பொருளைக்கொண்ட குர்ரம் என்னும் இளமைப் பருவப் பெயரைப் பெற்றிருந்த ஷாஜஹான்

1. C. J. Brown, The coins of India, p. 95.

லாகூரில் 1592'ல் பிறந்தார். அக்பர் அப்பேரனிடம் மிகவும் பற்றுக்கொண்டிருந்தார். குர்ரம் பாரசீக இளவரசி ஒருத்தியை 1610'ம் ஆண்டிலும் இரண்டு ஆண்டுகட்குப் பின் அர்ஜுமன் பானு என்பாளையும், பிறகு 1617'ல் மற்றொரு பெண்மணியையும் மணம் புரிந்துகொண்டார். இரண்டாம் மனைவி 1628'ல் மும்தாஜ்மஹால் (அரண்மனையின் அணிகலம்) என்ற பெயரைப் பெற்றாள். 1613'க்கும் 1631'க்கும் இடைப்பட்ட காலத்தில் அவள் மூலம் குர்ரம், பதினான்கு குழந்தைகளைப் பெற்றார். ஆனால் அவர்களில் எழுவர் குழந்தைப் பருவத்திலேயே இறந்து விட்டனர். மற்றவர்களின் பெயர்கள் வருமாறு:- ஜஹனரா, தாரா, ஷுஜா, ரோஷனரா, அவுரங்கசீப், முராத் பக்ஷ், கௌஹராரா. இவர்கள் பிறந்த ஆண்டுகள் முறையே 1614, 1615, 1616, 1617, 1618, 1624, 1631 என அமையும். குர்ரம், உதயபுரியிலும் (1614'-15) தக்கணத்திலும் (1616-'7; 1620-'1) வெற்றிகள் பெற்ற செய்தியை முன்னர்க் குறிப்பிட்டோம். அவர் 1616'ல் ஷா என்ற பட்டத்தையும் பெற்றார். 1622'ல் அவர் தமது உடன்பிறந்தாரான குஸ்ருவைக் கொலைசெய்து விட்டார். ஷாஜஹானின் வரலாற்றை 1659'ல் எழுதி முடித்த கம்பு என்ற ஆசிரியர் அக் கொலையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 1622'ம் ஆண்டுக்கும் 1625'க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் செய்த கலகத்தைப் பற்றி முன்னர்க்கண்டோம். தமது ஒன்றுவிட்ட உடன் பிறந்தாரான பார்விஸ்ஸின் சாவுக்கு ஷாஜஹான்தான் பொருப்பாளியா என்பது பற்றி நாம் உறுதியாகக் கூறுவதற்கில்லை. ஆனால் பிற்காலத்தில் அவுரங்கசீப் அச்சாவுக்கு ஷாஜஹானே பொருப்பாளி என்று கூறியதாக அறிகிறோம். ஜஹாங்கீர் இறந்தபின் ஷாஜஹான், அவருடைய மாமனார் ஆசப் அலி, மாமத்கான் முதலியோருடைய உதவி காரணமாக அரியணையைக் கைப்பற்றிக்கொண்டார். அவருக்குப் போட்டியாக இருந்தவர்கள் கொலையுண்டனர். 1628'ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நான்காம் நாளில் ஷாஜஹானின் முடிசூட்டு விழா நடைபெற்றது.

**ஆட்சிக்காலத்தின் முற்பகுதி (1628—'31).** ஷாஜஹானின் ஆட்சியின் முதல் ஆண்டில், விலை உயர்ந்த மயிலா

சனம் செய்வதற்கான முயற்சி தொடங்கியது. 1635'ம் ஆண்டில் அது செய்து முடிக்கப்பெற்றது. அதைச்செய்ய ஒரு கோடி ரூபாய்க்குமேல் செலவாயிற்றும். ஷாஜஹான் பட்டமேற்றபின தமக்குப் பகையாகக் கலகம் செய்து வந்த பண்டேலாவின் தலைவனுன ஜுஜ்ஹார்சிங்கின் நாட்டை எதிர்த்துப் படையெடுத்தார். ஜுஜ்ஹார் 1629'ல் ஷாஜஹானுக்குக் கீழ்ப்படிந்தார். பேரரசரின்கீழ் தக்கணத்தில் பணியாற்றி வரவும் அவர் உடன்பட்டு 1634 வரை அவ்வாறே பணியாற்றி வந்தார். அதற்கிடையில் கான்ஜஹான்லோடி (மாபத்கானுக்குப் பிறகு தக்கணத்தில் படைத்தலைமை பெற்றவர்) பேரரசருக்குப் பகையாக ஆமதுநகரச் சுல்தானுடன் சேர்ந்துகொண்டு கலகம் செய்யலானுர். முதலில் அவர் வெற்றிபெற்ற போதிலும் முடிவில் ஷாஜஹான் அவரைத் தோற்கடித்தார். (1630). கான்ஜஹான்லோடி தாம் அழிந்ததுமல்லாமல் ஆமது நகரின் அழிவுக்கும் காரணமானுர். ஆமது நகரத்துக்கும் முகலாயருக்கும் போர் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. முகலாயர், சில தோல்விகளையும் பல வெற்றிகளையும் பெற்று வந்தனர். 1631'ல் மும்தாஜ்மஹால் இறந்துவிட்டார். அச்சாவு ஷாஜஹானை மிகவும் துன்புறுத்தியது. அதன்பின் இரண்டு ஆண்டுகள் அவர், அழகிய உடைகள், அணிகலன்கள், வாசனைப் பொருள்கள் முதலியவற்றை அணிந்துகொள்ளவே இல்லையாம். 1594'ல் பிறந்த அவ்வம்மை தம் பதினுன்காவது மகப்பேற்றின் விளைவாக உயிர் நீத்தாள். அவளது அழகினுலும் அன்பினுலும் கவரப்பட்ட ஷாஜஹான் அவளுடைய ஆலோசனையை அடிக்கடி கேட்டு வந்தாராம். அவர் தம் கணவரைப் பின்தொடர்ந்துச் சென்று பலகாலங்களில் அவருடைய துன்பங்களில் பங்கு கொண்டனர். அவருடைய மதப்பற்று ஷாஜஹானின் மனத்தையும் மாற்றியது. மும்தாஜ்மஹால் இறந்தவுடன் பர்ஹான்பூரில் அடக்கம் செய்யப்பட்டார். பிறகு அவ்வுடல் ஆக்ராவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தம் மனைவியின் கல்லறையின்மீது ஷாஜஹான், உலகத்திலேயே மிகச்சிறந்த கட்டடங்களில் ஒன்று எனக் கருதப்படும் தாஜ்மஹால் என்ற நினைவுச் சின்

னத்தைக் கட்டுவித்தார். "உலகில் வேறு எந்தப் பெண் மணிக்கும் அத்தகைய நினைவுச் சின்னம் ஏற்பட்டதில்லை.''[1]

தக்காண நிகழ்ச்சிகள். ஆமதுநகரின் ஆற்றல்வாய்ந்த அமைச்சர் மாலிக் ஆம்பர் இறந்துபோகவே அவருடைய மகனார் பத்திகான் அரசியலை நடத்தி வந்தனர். நிஸாம்ஷாஹி குலத்தின் இறுதிச் சுல்தானான ஹுசேன்ஷா, ஆளும் திறமையற்றவராதலால் அவர் தம்முடைய அமைச்சருக்கு அடங்கியிருந்தார். ஷாஜஹான் அவரை முறியடித்துத் தமக்கு அடங்கி இருக்குமாறு செய்தார். (1633). ஷாஜஹான், 1635'ல் பீஜப்பூரின் மீது படையெடுத்துச் சென்றபொழுது அந்நாட்டுச் சுல்தான் பேரரசரோடு அமைதி உடன்படிக்கை செய்து கொண்டு அவருக்கு இருபது லட்ச ரூபாய் செலுத்தவும் ஒப்புக்கொண்டார். கோல்கொண்டா சுல்தானும் ஷாஜஹானைப் பேரரசராக ஏற்றுக்கொண்டார். ஷாஜஹான் பீஜப்பூருடன் செய்து கொண்ட உடன்படிக்கை 1636 முதல் 1656 வரை நீடித்திருந்தது. தக்கணத்தில் ஷாஜஹானின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ளாதவர் ஷாஜியைத் தவிர வேறு ஒருவருமில்லை. ஆமது நகரில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த ஷாஜிபான்ஸ்லே என்ற மகாராட்டிரத் தலைவர் (சிவாஜியின் தந்தை) இயன்ற வரை முகலாயரை எதிர்த்து நின்றார். அவருடைய அளவுகடந்த செயல்களை அடக்குவது தம் பொறுப்பென்று பீஜப்பூரின் அடில்ஷா, ஷாஜஹானுக்கு வாக்குறுதி அளித்த பின்புதான், அப்பேரரசர் தம் மகன் அவுரங்கசீப்பைத் தக்கணத்தில் தமது பிரதிநிதியாக அமர்த்தி விட்டுத் தில்லிக்குத் திரும்பினார் (1636). அவுரங்கசீப்பின் ஆட்சிக்குட்பட்டிருந்த தக்கணம் நான்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையாவன:— காண்டெஷ், பேரார், தெலிங்கானா, (பேராருக்கும் கோல்கொண்டாவுக்கு மிடைப்பட்ட பகுதி) தௌலதாபாத். இவற்றின் தலைநகர், அவுரங்காபாத்.

ஷாஜஹானின் மற்ற இராணுவ முயற்சிகள். பதாக்ஷான், பால்க் முதலிய மலைநாட்டு மாகாணங்களைக் கைப்

1. Smith, Oxford, History, P. 395.

பற்றி அதன் மூலம் சாமர்கந்தையும் வெல்ல வேண்டுமென்பது ஷாஜஹானின் நோக்கமாயிருந்தது. ஆகவே அவர் முராத் இளவரசர், பாரசீகப் படைத் தலைவராகிய அலிமர்தன் கான் இவர்களின்கீழ் முகலாயப் படையை அனுப்பி அப்பகுதிகளை 1646'ல் வென்றார். 1647'ல் அவுரங்கசீப், அப்பகுதிகளுக்கு அரசப் பிரதிநிதியாக அமர்த்தப்பெற்றார்.

பாரசீக மன்னரின்கீழ்க் காந்தாரத்துக்குத் தலைவராக இருந்துவந்த அலிமர்தன்கான் என்பார் 1638'ல் தம் பேரரசரை வெறுத்துத் தம் நாட்டை ஷாஜஹானிடம் ஒப்படைத்து, தில்லியிலேயே தாம் ஒரு பணியை மேற்கொண்டு சிறப்பான நிலையில் இருக்கலானார். காந்தாரத்தை வெல்லுவதற்குப் பாரசீகர் மிக்க முயற்சி எடுத்துக் கொண்டனர். அவர்களுடைய படையெழுச்சியை அடக்குவதற்கு அவுரங்கசீப்பை, முகலாயப் பேரரசர் அனுப்பினார். ஆனால் 1649'ல் ஔரங்கசீப் தீவிரமாகப் போரிட்டும் பாரசீகப் படையை வெல்ல முடியவில்லை. முடிவாக, காந்தாரத்தை முகலாயர் இழந்தனர். முகலாயருடைய பீரங்கிப் படையைவிடப் பாரசீகரின் பீரங்கிப்படை சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. அத்தோல்வி, முகலாயப் பேரரசின் நிதி நிலைமையையும் பெருமையையும் மிகுதியாகக் குறைத்தது.

## பகுதி 2

### அவுரங்கசீப்பின் கீழ்த் தக்கணம்

அவுரங்கசீப் 1618'ல் பிறந்தார். ஷாஜஹான், முடிசூட்டிக்கொள்ளும் முன்னரே ஆஸப்கான், அவுரங்கசீப்பை நூர்ஜஹானிடமிருந்து பிரித்து ஆக்ராவுக்கு அழைத்துச் சென்றார். மீர்முகம்மது ஹஷீம் என்பார் அவுரங்கசீப்புக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியரானார். அவுரங்கசீப் 1633'ல் ஒரு யானையுடன் வீரப்போர் புரிந்ததால் "பஹதூர்," (வீரர்) என்ற பட்டத்தை அவருக்கு ஷாஜஹான் அளித்தார். அடுத்த ஆண்டில் அவர் 10,000 குதிரை வீரர்களுக்குத் தலைவரான

"மான்சப்தாராக அமர்த்தப் பெற்ருர். 1635'ல் அவர், ஜுஜ்ஹர்சிங்கை எதிர்த்துப் பண்டல்கண்டின் மேல் படையெடுத்தார். 1636'ம் ஆண்டு உடன்படிக்கைக்குப் பிறகு அவரே தக்கணத்தின் அரசப் பிரதிநிதியாக அமர்ந்தார். ஷாஜி பான்ஸ்லேயை அடக்கிய பெருமை அவுரங்கசீப்புக்கு உண்டு. தக்கணத்தில் அவர் முதல்முறை அரசப்பிரதிநிதிப் பதவியை வகித்தகாலம் 1636 முதல் 1644 வரை ஆகும். அக்காலத்தில் அவருக்கு ஏற்பட்ட இடையூறுகள் பல. அவருக்கு முன்னரே அப்பகுதியில் பொருள்நிலைமை மிகவும் கேடுற்று இருந்தது. பேரரசரின் ஆதரவும் அவருக்குக் கிடைக்கவில்லை. ஷாஜஹான் அவரை 1645'ல் குஜராத்தின் ஆட்சித் தலைவராக அமர்த்தினர்; 1647'ல் அவுரங்கசீப் பால்க் மாகாணத்தின் தலைவரானர். 1648 முதல் 1652 அவர் மூல்தானுக்கும் சிந்து நாட்டுக்கும் தலைவராக இருந்தார். 1649, 1652 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் அவர் காந்தாரத்தை வெல்வதற்குச் செய்த முயற்சிகள் தோல்வியுற்றன.

**இரண்டாம் முறை அரசப்பிரதிநிதி (1652—8).** காந்தாரப் படையெழுச்சியின் தோல்விக்குப் பிறகு ஔரங்கசீப், இரண்டாம் முறையாகத் தக்கணத்தின் அரசப்பிரதிநிதியாக அமர்த்தப் பெற்ருர். அவர், மீண்டும் இடையூறுகளுக்கு ஈடு கொடுக்கும் பொறுப்பை ஏற்ருர். நீண்டகாலமாகவே அப்பகுதியில் பொருளாதாரச் சீர் கேடுகள் காணப்பட்டன. 1630—2'ம் ஆண்டுகளில் ஏறபட்ட கொடிய பஞ்சம் பல தீமைகளுக்குக் காரணமாயிற்று. பல ஆண்டுகளாகப் பருவமழை பொழியவில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் பசியால் வருந்தி இறந்ததாக அறிகிருேம். மக்கள், மக்களைக் கொன்று உயிர்வாழ முயன்றனராம். சீர்கேடுகளைக் களைந்து ஒழுங்கை நிலைநாட்ட, மாகாணதிவான் மூர்ஷித்குலீகான் என்ற பாரசீகர் அவுரங்கசீப்புக்கு உதவினர். சிலகாலங்களில், அரசியலார் விதித்திருந்த வரித்தொகையில் பத்தில் ஒருபங்கைக்கூட மக்களிடமிருந்து வாங்க முடியவில்லையாம். குலீகான், தோடர்மாலின் நிலவரித் திட்டத்தைத் தக்கணத்தில் அமைத்தார். அதனல் ஓரளவு நற்பயன் ஏற்பட்டது. செலவுகளைக் குறைப்

பதற்கும் ஆட்சிமுறையைச் செம்மைப் படுத்தவும் அரசியலார் பல முயற்சிகளை மேற்கொண்டனர்.

**கோல்கொண்டா, பீஜப்பூர்.** அவுரங்கசீப்புக்கு மீர் ஜம்லா என்ற நெருங்கிய நண்பர் ஒருவர் இருந்தார். பாரசீகத்திலிருந்த அவர் ஏறத்தாழ 1630'ல் தக்கணத்துக்கு வந்தார். வைரவாணிகத்தின் மூலம் அவருக்குப் பெருஞ்செல்வம் கிடைத்தது. அவர் கோல்கொண்டாவின் அப்துல்லாகுதுப்ஷா (1626—72) வின் முதலமைச்சராகப் பெற்றார். அவர் தெற்கில் பல இடங்களைக் கைப்பற்றி அழித்து வந்தார்; கோயில்களைக் கொள்ளையடித்தார். செப்பு உருவங்களை உருக்கிப் போர்க்கருவிகளாக வார்த்துக் கொண்டார். அவர், தமது படையில் ஐரோப்பியரையும் அமர்த்தியிருந்தார். தென்னாட்டில் அவருடைய ஜாகீர்களிலிருந்து அவருக்கு ஆண்டு தோறும் 40 லட்ச ரூபாய் கிடைத்ததாம். அவரிடம் 20 மணங்கு வைரம் இருந்ததாம். அளவுகடந்த அதிகாரத்தைப் பெற்றிருந்த அவரைக்கண்டு அரசர் அப்துல்லாவே அஞ்சினார். மீர்ஜம்லாவின் அதிகாரத்தைக் குறைக்கக் கோல்கொண்டா சுல்தான் முயன்றார். அவருடைய குற்றங்கள் சிலவற்றிற்காகத் தண்டனை விதித்தார். ஆனால் மீர்ஜம்லாவுக்கு அவுரங்கசீபும் ஷாஜஹானும் ஆதரவு அளித்தனர். கோல்கொண்டாவிலிருந்து ஒழுங்காகத் திறைப்பொருள் வந்து சேராததால் அவுரங்கசீப் குதுப்ஷாவுடன் பகைத்துக் கொண்டார். அவுரங்கசீபும் அவர் மகன் முகம்மது சுல்தானும் கோல்கொண்டாவை முற்றுகை யிட்டனர். அதற்கிடையில் ஷாஜஹான், கோல்கொண்டாவுடன் அமைதி உடன்படிக்கை செய்துகொள்ளுமாறு அரசப் பிரதிநிதிக்கு ஆணையிட்டார். அதன்படி கோல்கொண்டா சுல்தான் தாம் தரவேண்டிய திரைப்பொருள்கள் யாவற்றையும் தந்ததுடன், தமது மகளையும் முகம்மது சுல்தானுக்கு மணம்செய்து கொடுத்தார். மேலும், போர்ச்செலவுத் தொகையும் ஒரு மாவட்டமும் கோல்கொண்டா சுல்தானிடமிருந்து அவுரங்கசீபுக்குக் கிடைத்தன. மீர்ஜம்லா தில்லியில் முதலமைச்சராக அமர்ந்தார். ஷாஜஹான், அவ்வமயம் மீர்ஜம்லாவிடமிருந்து கோஹினூர்

(ஒளியில் மலையை ஒத்தது) என்ற விலைமதிப்பற்ற வைரத்தைப் பரிசாகப் பெற்ருர். பல மாறுதல்களுக்குப் பிறகு இறுதியில் அவ்வைரம் ஆங்கில மன்னனின் மணிமுடியில் அமைக்கப் பெற்றது. மீர்ஜம்லா, 6000 குதிரை வீரர்களுக்குத் தலைவரான மான்சப்தாராக அமர்ந்தார்.

பீஜப்பூர். 1636'ல் முகலாய அரசரோடு அமைதி உடன்படிக்கை செய்துகொண்ட பீஜப்பூரின் முகம்மது அடில்ஷா (1656—'72) பட்டத்துக்கு வந்தார். அவருடைய அரசுரிமையைப்பற்றிக் கலகங்கள் தோன்றின. அவுரங்கசீப் அச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பீஜப்பூரில் படையெடுத்தார். பீஜப்பூரின் உள்நாட்டு அலுவல்களில் தலையிட முகலாயருக்கு உரிமை கிடையாது. எனினும் அச்செயல் நிகழ்ந்தது. மீர்ஜம்லாவும் அவுரங்கசீப்புக்கு உதவிசெய்ய தில்லியிலிருந்து வந்தார். 1657'ல் முகலாயர் படை, பீடாரையும் கல்யாணியையும் கைப்பற்றிக் கொண்டது. மேலும் வெற்றி கிடைக்கக்கூடிய தருணத்தில் ஷாஜஹான் போரை நிறுத்தி உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார். அவ்வாறே போர் முடிந்தது. பீடார், கல்யாணி, பரேண்டா, என்னும் பகுதிகளையும் ஒருகோடி ரூபாயையும், முகலாயப் பேரரசர் பீஜப்பூரிடமிருந்து பெற்றுக்கொண்டார். பீஜப்பூருடன் நடந்த போரில் மராட்டிய வீரர் சிவாஜியும் முகலாயரை எதிர்த்துப் பின் அவுரங்கசீபுக்கு அடங்கினுர். 1658'ல் அவுரங்கசீப் அரியணையைக் கைப்பற்றிக்கொள்ளும் நோக்கத்துடன் தில்லிக்குத் திரும்பிச் சென்ருர்.

## பகுதி 3

### அரசுரிமைப் போர்கள்

1657'ம் ஆண்டில் ஷாஜஹான் நோய் வாய்ப்படவே அவருடைய நான்கு மக்களும் அரியணைக்காகத் தமக்கிடையே போராட்டம் நிகழ்த்தலாயினர். ஷாஜஹானின் மனதுக்கிசைந்த மூத்த மகன் தாரா, பஞ்சாபுக்கும் வடமேற்கு மண்டலங்கட்கும் அரசப் பிரதிநிதியாக இருந்தார். அவர் ஆற்றல் வாய்ந்தவராயிருந்தபோதிலும் சினமும் செருக்கும் நிரம்பப்பெற்றவர்.

இரண்டாவது மகனுன ஷுஜா வங்காளத்தின் பிரதிநிதியாயிருந்தார். அவர் ஆற்றலற்றவர். மதத்துறையில் ஷீயாப் பிரிவைச் சார்ந்திருந்தார். மூன்ரும் குமாரரான அவுரங்கசீப் மற்றவர்களை விட மிகுந்த திறமை பெற்றவர். 4'ம் மகன் முராத், இழிவான ஒழுக்கத்தை மேற்கொண்டவர். ஷாஜஹான் 1657'ல் ஆக்ராவுக்குச் சென்றுவிட்டார். தமது அருமை மனைவியின் சமாதியின் முன்பு தாம் இறக்கவேண்டுமென்பதே அவருடைய அவா. தாரா, தந்தையுடனிருந்தார். அவுரங்கசீப், தாராவை வெறுத்துவந்தபடியால் முராத்துடன் பேரரசை பங்கிட்டுக்கொள்ள ஒரு உடன்பாடு செய்துகொண்டார். குரானுக்கு உரியசிறப்பை அளிக்காத தாராவை அரியணையில் அமரவிடாது தடுப்பதே தமது நோக்கமென்று அவுரங்கசீப் அறிவித்தார். சூழ்ச்சித் திட்டத்தை உணராத முராத் அவரை நம்பித் தம் படைகளை அவருடைய படைகளுடன் இணைத்தார். தமக்குப்பகையாக மீர் ஜம்லா எதையும் செயயாமலிருப்பதற்காக அவுரங்கசீப் அவரைக் கைதியாக்கியதுடன் அவருடைய பெரும் செல்வத்தையும் தமக்குப் பயன்படும் வழிகளை முன்னேற்பாடாக வகுத்துக் கொண்டார். பெரும் தளபதியான மீர் ஜம்லா அவுரங்கசீப்பினுல் ஏமாற்றப்பட்டார் என்று அறிஞர் பர்னியர் குறிப்பிடுகிருர்.

அவுரங்கசீப்பின் படைகளும் முராத்தின் படைகளும் உச்சயினிக்கு அருகில் கூடின. அதற்கிடையில், தாரா, 70,000 இராசபுத்திர வீரர்களடங்கிய படை ஒன்றை ஐஸ்வந்த்சிங் தலைமையில் அவுரங்கசீபை எதிர்க்க அனுப்பிவைத்தார். ஆனுல் அப்படையை 1658'ல் தார்மத்என்ற இடத்தில் (உச்சயினிக்கு அருகில்) அவுரங்கசீப் தோற்கடித்தார். 10,000 பேர் வீரர்களுக்குமேல் போர்க்களத்தில் மாண்டனர். அப்போருக்குச் சிலமாதங்கள் முன்னர், ஷுஜா வங்காளத்திலிருந்து ஒரு பெரும் படையுடன் தில்லிக்கு வந்து தாமே பேரரசர் என்று அறிவித்தார். தாரா, ஆயிரக்கணக்கான வீரர்களடங்கிய ஒரு படையைத் தம் குமாரன் சுலைமான் தலைமையில் ஷுஜாவை எதிர்க்கும்படி அனுப்பியிருந்தார். சுலைமான், ஷுஜாவை, பஹதூர்புரியில் (வாரணுசிக்கு அரு

கில்) தோற்கடித்தார். ஆனால் தாரா, அவுரங்கசீப்பை முறியடிக்கப் பல முறைகள் முயன்றும் அது பயனளிக்கவில்லை. ஆக்ராவுக்கு அருகிலுள்ள சமூகர் என்ற இடத்தில் (1658) தாராவுக்கும் அவுரங்கசீபுக்கும் முடிவான போர் நடந்தது. பின்னவர் வெற்றிமாலை சூடினார். முராத், அவுரங்கசீபுக்குத் தக்க சமயத்தில் உதவிசெய்தார். அவ்வெற்றிகளுக்குப் பின் அவுரங்கசீப் ஆக்ராவுக்குச் சென்று அதை முற்றுகையிட்டார். உள்ளே இருப்பவர்களுக்குக் குடி தண்ணீர் செல்லும் குழாய்கள் வெட்டப் பெற்றன. பேரரசர் ஷாஜஹானுக்குக் கூட அருந்த நீர் கிடைக்கவில்லை. வேறுவழியின்றி, பேரரசர், கோட்டை வாயிலைத் திறந்து விடுமாறு ஆணையிட்டார். உட்புகுந்த வெற்றிவீரர் ஷாஜஹானைக் கைதியாக்கினர். உடன்பிறந்த மக்கள் நால்வரும் பேரரசைத் தமக்கிடையே பங்கிட்டுக் கொள்ளுமாறு தன் இளவலுக்கு ஜஹனாரா அறவுரை கூறினாள். ஆனால் அது ஆட்சிப்பேரவா நிரம்பப் பெற்ற அவுரங்கசீபின் மனத்தை மாற்றவில்லை. தம்மோடு செய்துகொண்ட உடன்பாட்டின்படி ஒழுகும் எண்ணம் அவுரங்கசீபுக்கு இல்லை என்பதை முராத் விரைவிலேயே உணர்ந்தார். ஆதலால் அவர், தமது உரிமையை வலியுறுத்துவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கையில் மதுராவுக்குச் சென்ற அவுரங்கசீப், மிகவும் தந்திரமாக அவரைக் கைதியாக்கிவிட்டார். 1661'ல் முராத் கொலையுண்டார். தாரா, லாகூருக்கு ஓடிவிட்டார். அவுரங்கசீப் தில்லிக்குச் சென்று ஆலம்கீர் (உலகை வெல்லுபவர்) காஸி என்ற பட்டத்தைப் பெற்று அரியணையிலமர்ந்தார். அவருடைய முதல் முடிசூட்டுவிழா 1658'ம் ஆண்டு சூலை மாதம் 31'ம் நாள் நடந்தேறியது. ஷாஜஹான் ஆக்ராவில் கைதியாகவே இருந்து 1666'ல் உயிர்நீத்தார்.

## பகுதி 4

### ஷாஜஹானின் தன்மை, சமயம், ஆட்சிமுறை

தன்மை. இளவரசராக இருந்தபொழுது ஷாஜஹான் புரிந்த செயல்கள், அவருடைய ஆற்றல், பேரவா, ஊக்கம்,

இராணுவத்திறமை முதலியவற்றைக் காட்டுகின்றன. தெளிவும் தீரமும் நிறைந்த அவர், தமது கொள்கைகளைத் தாமே உருவாக்கிக் கொண்டார். மாலிக் ஆம்பரை இருமுறைகள் வென்றதுடன் தக்கண நாடுகளின் நிலைமையை 1636'ம் ஆண்டிலேயே ஒழுங்குபடுத்திய பெருமை அப்பேரரசருக்கு உரியது காந்தாரத்தை அவர் இழந்தார் என்பது உண்மை; நடு ஆசியாவில் அவருடைய கொள்கை வெற்றி பெறவில்லை என்பதும் உண்மை. ஆனால் தனிப்பட்ட முறையில் ஷாஜஹானே அத்தோல்விக்குக் காரணமென்று கூறுவது அறிவுடைமை ஆகாது. பேரரசின் இராணுவ நிலையே அத்தோல்விக்குக் காரணமாகும். அக்குறைபாட்டுக்கு ஷாஜஹான் ஒருவர் மட்டுமே பொருப்பாளி என்று கூறுவதற்கில்லை. சிலருக்கு அதிகாரம் கைக்கு வந்தவுடன் ஆணவம் பெருகும். ஆனால் ஷாஜஹானுக்கோ, அதிகாரம் வளர வளர அவர் தன்மை சிறப்புற்றோங்கியதைக் காண்கிறோம். பல பண்புகளில் அவர் ஜஹாங்கீரினும் வேறுபட்டு விளங்குகிறார். அவர் பிறருடைய கைப்பாவையாக மாறியதில்லை; குடிவெறியருமல்லர். தம் தந்தையைப் போலவே இவரும் கலை ஆர்வம் பெற்றிருந்தார். இசை, நடனம், முதலிய அருங்கலைகளையும் கட்டடக்கலையையும் அவர் விரும்பிப் போற்றினார். மும்தாஜ்மஹாலிடம் அவருக்கு இருந்த அளவுகடந்த அன்பு அவருடைய தன்மை உயர்வடைய ஒரு காரணமாயிற்று. ஆனால் குஸ்ரு முதலிய பல இளவரசர்களை அவர் கொலைசெய்த கொடுமை, அவர் தம் நலத்தின் பொருட்டு அருளற்ற முறையிலும் நடந்துகொள்ளக் கூடியவர் என்பதைக் காட்டுகிறது. பேரரசர், தம்மகன் தாராவிடம் வரம்புகடந்த அன்பு வைத்திருந்தார். மற்ற குமாரர்கள் அதுகாரணமாவே, தந்தையையும் தாராவையும் வெறுத்தனர். தந்தையின் அன்பு தாராவுக்கு அழிவைத்தான் தேடித்தந்தது. தம் தந்தையைப்போலப் பெண்டிரால் அடக்கியாளப் படவில்லை எனினும், ஷாஜஹான், சிற்றின்பத் துறையில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார். அவர் தமது மகள் ஜஹநாராவுடன் தகாத முறையில் கூடியிருந்தார் என்ற ஒரு கதை உண்டு. ஆனால் சில அறிஞர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.[1].

1. Saksena, op. cit. PP. 338—42.

சிற்றின்பத்துறையில் அவர் எளியராயிருந்தது அவர் பெருமைக்கு இழுக்காயிற்று. குற்றம் புரிந்தோரை கொடிய முறையில் ஷாஜஹான் தண்டித்தார். அவர்களைக் கடிக்க நச்சுப் பாம்புகள், தேள் முதலியன ஏவப்பட்டன என்று மனுச்சி குறிப்பிடுகிறார்.

**சமயம்:** ஷாஜஹான், ஒரு இராசபுத்திரப் பெண்ணுக்குப் பிறந்தவர். அவர் உடலுக்குள் ஓடிய குருதியில் பாதிக்குமேல் இந்து ரத்தம் எனலாம். அவ்வாறிருந்தும் சமயத்துறையில் ஜஹாங்கீரிடம் காணப்பட்ட விரிநிலைக் கொள்கை ஷாஜஹானிடம் கிடையாது. மும்தாஜ்மஹாலின் வைதீக மதப்பற்று அவர் கணவனுரையும் பற்றியது. அவரை "மதக்காவலர்" என்று லாஹோரி சிறப்பிக்கின்றார். முகலாய அரசர்களில் இவர்தான் முதன்முதலாக முகம்மதிய மதக் கொள்கைகளைப் பின் பற்றி ஆட்சி புரிய முனைந்தவராவர். 1632 முதல் 1635 வரை அவர் கிறித்தவரைத் துன்புறுத்தினர். ஏசு சங்கப்பாதிரிமார் ஆற்றொணுத் துயரத்துக்குட்படுத்தப் பெற்றனர் என்று பெர்னியர் குறிப்பிடுகிறார். அவுரங்கசீபைப்போல ஒரு மதவெறியரல்லர் ஷாஜஹான். எனினும் இந்துக்கோயில்களை இடிக்கும் பணியை மேற்கொண்டார்! "கிறித்தவரையும் இந்துக்களையும் அவர் நடத்தியமுறை, அவருடைய (ஷாஜஹானுடைய) பெருமைக்கு ஒரு பேரிழுக்காகும். அவர் தந்தையும் பாட்டனும் சிறந்ததொரு சமயக்கொள்கையைப் பின்பற்றி வழி காட்டியிருப்பினும் ஷாஜஹான் அதைப் பின்பற்றுதது விந்தையே. ஆயினும் அத்துறையில் அக்காலத்து ஐரோப்பிய மன்னர்கள் பலரைவிட ஷாஜஹான் சிறந்தவர்தான்."[1] இந்துக்கள் முகம்மதியராக மாறுவதை அவர் ஆதரித்தார். சிலரைக் கட்டாயப் படுத்தியதாகவும் அறிகிறோம். ஷாஜஹானின் வைதீக மதப்பற்று பெரும்பான்மையும் அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையில்தான் வெளிப்பட்டது. எனினும் அது அரசியலில் ஓரளவு இடம்பெற்றதை நாம் புறக்கணிப்பதற்கில்லை. அவராட்சியில் முகம்மதியர் ஆளும் வகுப்பினர்

---

1. H. G. Keene, A Sketch of the History of Hindustan, (1885), P. 217.

என்ற உயர் நிலையைப் பெற்றிருந்தனர். ஆனால் தம் மகன் தாரா, இந்துக்களுடனும் கிறித்தவருடனும் தொடர்புகொள்ள, பேரரசர் அனுமதித்திருந்தார். அவைக்களத்தில் சிறப்புவாய்ந்த இந்துக்கள் பேரரசரின் ஆதரவைப் பெற்றனர்.

ஆட்சிமுறை. அக்பரின் சாவுக்குப் பின் அரைநூற்றாண்டுக் காலத்திற்குள் முகலாயர் ஆட்சிமுறை சிலபண்புகளில் மாறுதலடையவில்லை. முர்ஷித்குலிகான், ஸப்தி முறையை தக்கண மாகாணங்களுக்குப் பரப்பினார்; ஷூஜா அதை வங்காளத்தில் ஏற்படுத்தினார். ஆனால் ஜாகீர்முறை பெருகிவந்தது. வரிவாங்கும் அதிகாரம் குறிப்பிட்ட ஒரு சிலரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்ததால் அரசியலாருக்கும் குடியானவருக்கும் தொடர்பு அற்றிருந்தது. நிலத்தின் மொத்த விளைவில் மூன்றில் ஒரு பங்கை அரசியலார் பெற்றுவந்த முறைமாறிப் பாதிப்பங்கைப் பெறலாயினர். ஊர்த் தலைவர்களுடன் கலந்து வரித்தொகை முடிவு செய்யப்பட்டதே தவிர, குடியானவர்களுடன் கலந்து முடிவுசெய்யப்பட வில்லை. நிலத்தை ஒழுங்காக அளந்து கணக்கிடும் முறைக்குப் பதிலாக தோராயமாகக் கணக்கிடும் பழக்கம் தோன்றியது. இதனால் அரசியலாருக்கு மொத்த வருமானம் உயர்ந்தது. ஆனால் நிலவரித் திட்டம் சீர்கேடுற்றது. ஷாஜஹான் குடியானவரின் நிலத்தில் கருத்துச் செலுத்தாமலில்லை. அலுவலாளர்களை ஓரளவு கட்டுப்படுத்தியும் அவர்கள் குற்றம் புரிந்தால் கடுமையாகத் தண்டித்தும் வந்தார். மான்சப்தாரி முறையில் பேரரசர் சில சீர்திருத்தங்களைச் செய்தார். ஒவ்வொரு மான்சப்தாரின் படை அளவை உறுதியாக்கினார், உயர் அதிகாரங்களின் ஊதியம் குறைக்கப் பெற்றது. போர் வீரரின் எண்ணிக்கை மிகுதியாயிற்று. ஆனால் அவர்களுடைய ஆற்றல் குன்றியது. சிறிது சிறிதாகப் பல தீமைகள் படையினரிடம் வளரலாயின. முந்திய ஆட்சியில் இருந்ததைவிட மிகுதியாக, ஷாஜஹானின்கீழ் பரிசுகள் வழங்கும் முறையும் கைக்கூலி கொடுக்கும் பழக்கமும் பெருகின. பேரரசரின் வைதீகப்பற்று அரசியலையும் ஓரளவு மாற்றியது என்று முன்னர் கண்டோம். அவருடைய நீதிவழங்கும் முறையை உள்நாட்டு அறிஞர்

களும் சில வெளிநாட்டு ஆசிரியர்களும் புகழ்கின்றனர். ஆயினும் தண்டனைகள் கொடுமையாக இருந்தன. சிலகாலங்களில் நாகரிகமற்ற முறையிலும் இருந்தன. பிரெஞ்சுப் பிரயாணி பெர்னியர், குடியானவர்களின் நலக் குறைவைப் பற்றிக் கூறியிருக்கும் செய்திகள் புறக்கணிக்கத் தக்கன வல்ல.

## பகுதி 5

## இந்தியாவில் முகலாயர் ஆட்சியின் பொற்காலம்

**கலை:** ஷாஜஹான் பல நகரங்களில் பல கட்டடங்களை எடுத்துள்ளபோதிலும் அவருடைய கட்டடக் கலை ஆர்வத்தை தில்லி, ஆக்ரா, கட்டடங்களே நன்கு எடுத்துக்காட்டுகின்றன. 1638-முதல் 1648-வரையுள்ள காலத்தில் தில்லியில் அவர் ஷாஜஹானுபாத் என்ற நகரை நிறுவினார். அதுவே பேரரசுத் தலைநகராகத் திகழ்ந்தது. அங்கே அரண்மனையில் பேரரசர், "இந்நிலவுலகில் ஒரு விண்ணுலகம் இருக்குமானல் அது இதுவே; அது இதுவே; அது இதுவே;" என்னும் எழுத்துக்களைப் பொறித்திருக்கிறார். அது பொருத்தமானதே. ஜும்மா மசூதி, "இந்தியாவிலேயே மிகவும் பெரியது; மிகவும் சிறப்பு வாய்ந்தது."[1]. ஷாஜஹானின் சிறப்புவாய்ந்த கட்டடங்களில் ஆக்ராவிலுள்ள மோதி மசூதி (முத்து மசூதி) ஜும்மா மசூதி, தாஜ்மஹால் (1632—53) முதலியவை குறிப்பிடத்தக்கன. மும்தாஜ்மஹால் என்ற பெயர் தாஜ்மஹால் என்று மாறியது. அக்கட்டடத்தில் முகலாயக் கட்டடக்கலை அதன் உச்ச அளவை எய்தியிருக்கக் காண்கிறோம். அதை எடுப்பதற்கு இந்தியக் கலைஞர்களுடன்,பாரசீக,நடுஆசியச்சிற்பிகளும் ஒத்துழைத்தனர். பெரும்பாலும் முகம்மதியர் அக்கட்டடத்தின் அமைப்பு வேலையையும் இந்தியர் அணிசெய்யும் வேலையையும் மேற்கொண்டிருந்தனர். சூரிய சந்திர ஒளிகளின் தன்மைக்கேற்ப தாஜ் மஹாலின் வண்ணம் மாறுதலடைந்து காட்சி தருவதை நாம் இன்றும் காண்கிறோம். ஷாஜஹான் அக்கட்டடத்தை எடுக்கத் தம் முன்னவர்களின் முறைப்படி மணற் கற்களைப் பயன்

---

1 C. H. I., IV, P. 558.

படுத்தவில்லை. மக்ரானுவிலிருந்து (இராசபுதனத்தில் சாம்பார் ஏரியின் அண்மையில்) சலவைக் கற்களைக் கொணர்ந்தார். தாஜ்மஹால் பல வகைகளில் கலை அறிஞர்களால் புகழப்பட்டுள்ளது. "ஷாஜ்ஹானின் கட்டடங்கள், புலனுணர்வாற்றலைப் பெருக்கும்; இன்ப வாழ்க்கைக்கு மிகவும் ஏற்றவை." [2]. ஓவியம், அழகிய எழுத்துக்கலை, இசை முதலியவற்றை அப்பேரரசர் ஆதரித்தபோதிலும் அவருக்குத் தம் உயிர்நாடியைப் போலிருந்தது கட்டடக் கலையே. ஆசப்கானும் தாராவும் ஓவியக்கலையைப் போற்றி வளர்த்தனர். ஜகந்நாதர் என்ற இந்து இசைவாணர், ஷாஜஹானிடமிருந்து "மகாகவி ராய்" என்னும் பட்டத்தைப் பெற்றூர்.

**காசுமுறை:** ஷாஜஹான் வெளியிட்ட பல காசுகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க புதிய கலைப்பண்பு எதுவும் இல்லை. அவரது பொன், வெள்ளிக் காசுகளில் கலீமாவும் கலீபாக்களின் பெயர்களும் பொறிக்கப் பெற்றன. இவை அவருடைய வைதீக மதப்பற்றைக் காட்டாநிற்கும். "நலந்தரும் (கோள்களின்) சேர்க்கையாலுதித்த இரண்டாவது தலைவர்" என்ற ஷாஜஹானின் பட்டமும் காசுகளில் காணப்படுகிறது. (அச்சொற்றொடரை முதலில் அமைத்தவர் தைமூர்; அவர் தம்மை முதல் தலைவர் என்று கூறிக்கொண்டார்.

**பொற்காலம்:** ஷாஜஹான் காலத்தில்முகலாயர் ஆட்சியின் சிறப்பு அதன் உச்ச நிலையை எய்தியதாகக் கருதப்படுகிறது. கட்டடக் கலையைப் பொறுத்தவரை அது ஒரு பொற்காலம் என்பதில் ஐயமில்லை. சலவைக் கற்கட்டடங்கள் பலவற்றை எடுத்துப் புகழ்பெற்ற ஷாஜஹானை, "முகலாய அகஸ்தஸ்" என்று போற்றலாம். கலைத்துறையின் மற்ற பண்புகளிலும் அவர் கருத்தைச் செலுத்தினர். அவர் பின் வந்தோர் கலையின் அழிவுக்குக் காரணமாயினர் என்பதும் ஈண்டு சிந்திக்கத் தக்கது. பொற்காலத்தை நினைக்கும்பொழுது நாட்டில் பலஆண்டுகள் வறுமையால் மக்கள் வாடினர் என்பதை மறக்க முடியாது. பெர்னியரின் குறிப்புக்கள் கருதத்தக்கன. முகலாயர் பாரசீகத்துடன் போரிட்டுத்

2. C. H. I, IV P. 554.

தோல்வியுற்றனரெனினும் உள்நாட்டில் தமது ஆணையை உறுதியாகச் செலுத்தி வந்தனர். சமயத்துறையில் பொறையின்மை நிலவியபோதிலும் அவுரங்கசீப் காலத்தில் ஏற்பட்டதைப்போன்ற மதவெறிப் போர் நாட்டில் எழவில்லை. பேரரசின் புகழ் உலகத்தவரின் கருத்தைக் கவர்ந்தது. கட்டடங்களும் மயிலாசனமும் கோஹினூரும் அவர்களை வியப்படையச் செய்தன. (கோஹினூரை 1739'ல் நாதிர்ஷா, பாரசீகத்திற்கு எடுத்துச் சென்றார்.) முகலாயரின் அரசியல் அவையை பாரசீக, இந்தி, சமஸ்கிருத அறிஞர்கள் பலர் அணிசெய்தனர். ஷாஜஹான், ஆற்றல் வாய்ந்த பல சிறந்த அலுவலாளரின் உதவியைப் பெற்றுவந்தார். எடுத்துக்காட்டாக, மாபத்கான், ஆசப்கான், சாதுல்லாகான், மீர்ஜம்லா அலிமர்தன்கான் முதலியோர் குறிப்பிடத் தக்கவர். ஐரோப்பிய வணிகருடனும் பேரரசர் தொடர்பு கொண்டார். ஷாஜஹானிடம் குறைபாடுகள் இருந்தபோதிலும் அவருடைய ஆற்றல் போற்றத்தக்கதே.

## பகுதி 6

### அரசுரிமைப் போர் (தொடர்ச்சி)

சமூகர் போர்க்களத்தில் (ஜூன், 1658) அவுரங்கசீப் பெற்ற வெற்றி அவருக்குப் பேரரசப் பதவியை அளித்தது. ஆயினும் தம் தமையன்மார் உயிருடன் இருந்ததால் அவருக்கு மன அமைதி இல்லை. ஆகவே அவர்களை அழிக்கும் நோக்கத்துடன் அவுரங்கசீப் புறப்பட்டார். தாரா லாகூரிலிருந்து முல்தானுக்கும் பிறகு சிந்து நாட்டுக்கும் ஓடினார். அவுரங்கசீப் தலைநகரில் இல்லாததால் அவ்வமயத்தைத் தம் நலனுக்குப் பயன்படுத்திக்கொள்ள ஷுஜா முயன்றார். அச்செய்தியைக் கேட்ட ஔரங்கசீப், தாம் மேற்கொண்ட படையெழுச்சியைத் தக்க தலைவர்களிடம் ஒப்படைத்துவிட்டு முல்தானிலிருந்து தில்லிக்குத் திரும்பினார். பிறகு அவர் கோரா (ஃபதேபூர் மாவட்டம் உ. பி.) வுக்குச் சென்று, தமது மகன் முகமது சுல்தானுடனும் மீர்ஜம்லாவுடனும் சேர்ந்து கொண்டு ஷுஜாவை முறியடிக்க, காஜ்வா (கோராவுக்

கருகில்) என்னுமிடத்துக்குச் சென்றார். அங்கு ஏற்பட்டபோரில் (ஜனவரி 1659) ஷுஜா தோல்வியுற்று ஓட்ட மெடுத்தார். அதற்கிடையில் தாரா, ஆமதாபாத்துக்குச் சென்று தமது படையை வலிமைப் படுத்திக்கொண்டு ஆச்மீருக்குப் போய்க் கொண்டிருந்தார். அவுரங்கசீபின் படை தியோராய் (ஆச்மீருக்கருகில்) என்னுமிடத்தில் தாராவைத் தாக்கியது. 1659'ம் ஆண்டு மார்ச்மாதம் அங்கு நடந்த கடும் போரில் தாரா தோல்வியுற்று ஓடநேர்ந்தது. அவுரங்கசீப் தில்லிக்குத்திரும்பி இரண்டாம் முறை, மிகவும் பகட்டான வகையில் முடிசூட்டிக் கொண்டார் (ஜூன் 1659). அவ்விழாவின் நினைவுக்கறிகுறியாகக் காசுகளையும் வெளியிட்டார். தாரா பல இடங்கட்குச்சென்றும் யாரும் அவருக்கு உதவிசெய்ய முன் வரவில்லை. அவுரங்கசீபைப் பகைத்துக்கொள்ள ஒருவரும் விரும்பாததே அதற்குக் காரணம். பல துன்பங்களுக்கிடையே உழன்று சிந்து நாட்குச் சென்றார். காந்தாரத்துக்கு ஓடிவிட வேண்டுமென்பது அவர் நோக்கம்; ஆனால் அவர் மனைவி அங்கு நோய்வாய்ப் பட்டதால் அவ்வாறு செய்ய இயலவில்லை. அது ஒரு வாய்ப்புக்கேடே ஆகும். மனைவியும் இறந்தாள். தாரா, முன்னொரு சமயம் ஷாஜஹான் விதித்த கொலைத் தண்டனையிலிருந்து ஒரு ஆப்கானியத் தலைவனைக் காப்பாற்றியிருந்தார். அத்தலைவனின் உதவியை நாடி அவரிடம் சென்ற தாராவை அவன், முகலாய அலுவலாளர் ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு கைக்கூலி பெற்றுக்கொண்டான். பின்னர், பகைவர்கள் கையில் சிக்கிய தாரா தில்லிக்கு அனுப்பப்பெற்றார். அவுரங்கசீப், அவருக்குக் கொலைத் தண்டனை விதிக்க வேண்டுமென்று செய்தமுடிவை அலுவலாளர் யாவரும் (பெர்னியரின் நண்பரான தனிஷ்மந்த்கான் ஒருவரைத் தவிர) ஏற்றுக்கொண்டனர். உடன் பிறந்தவளான ரோஷநாராவும் ஏற்றுக்கொண்டாள். தாரா, இஸ்லாமின் பகைவன் என்று அவர்கள் கருதினர். தில்லியின் தெருக்களில் தாரா இழுத்துச் செல்லப்பட்டுப் பின் கொலையுண்டார் (செப்டம்பர் 1659).

தாரா, பண்பாடும் விரிந்தநோக்கமும் அமையப்பெற்றவர். ஆனால் இராணுவ வீரமும் அரசியல் திறமையும் போது

மான அளவுக்கு அவரிடமில்லை. பிறரை நன்கு உணர்ந்து கொள்ளும் ஆற்றலும் அவரிடமில்லை. பலநற்பண்புகள் அவரிடமிருந்தன. ஆனால் அவர் அவுரங்கசீபுக்குப் பதிலாக அரசாண்டிருந்தால், முகலாயப் பேரரசு வீழ்ச்சி அடைந்திருக்காது என்று கருதுவது தவறாகும். எனினும் அவுரங்கசீப், இந்துக்களைப் பகைத்துக் கொண்டதுபோல் தாரா, நடந்திருக்க மாட்டார் என்று உறுதியாகக் கூறலாம். ஆகவே முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குரிய பல காரணங்களில் அக்காரணம் மட்டும் இருந்திராது. தாரா, முகம்மதிய மதத்தில் பற்றில்லாதவரல்லர். இஸ்லாமின் பகைவன் என்று அவர்மீது சுமத்தப்பட்ட குற்றம் அவுரங்கசீபின் அரசியல் சூழ்ச்சியின் விளைவு எனலாம். வேதாந்த, சூபி இலக்கியங்களையும் கிறித்தவரின் "புதிய ஏற்பாடு" என்ற நூலையும் தாரா நன்கு கற்றிருந்தார். பாரசீக மொழியில் பல நூல்களை அவரே எழுதியுள்ளார். இஸ்லாமையும் இந்து சமயத்தையும் ஒப்பிட்டு "இருகடல்களின் கலப்பு" என்ற நூலை அவர் ஆக்கினார். 52 உபநிடதங்களைப் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார். அப்பணியில் அவருக்கு உதவிசெய்யக் காசியிலிருந்து அறிஞர்கள் சென்றனர். அரசியல் துறையில் அவர் தோல்வியுற்ற போதிலும் அறிவாற்றல் துறையில் அவர் புகழ் ஓங்கி நிற்கும். பல அறிஞர்கள் அவருடைய உதவியைப் பெற்றனர். இந்துக்களையும் முகம்மதியரையும் சமயத் துறையில் இணைக்க வேண்டுமென்பது அவருடைய பேரவா. இக்காலத்தவர் தாராவைப் பாராட்டாமலிருக்க முடியாது.

## அதிகாரம் 17.

## முகலாயப் பேரரசு

(தொடர்ச்சி)

### பகுதி I

### அவுரங்கசீப்பின் ஆட்சித் தொடக்கமும் அவர் நிகழ்த்திய போர்களும்

**ஆட்சித் தொடக்கம்:** ஒரு ஆண்டுக் காலத்துக்குள்ளாகவே நான்கு கடும்போர்களில் (தார்மத், சமூகர், காஜ்வா,

தியோராய்) வெற்றிகள் பெற்றுத் தமக்கு இருந்த இடையூறுகள் யாவற்றையும் தம் வலிமையால் தகர்த்தெரிந்து தாமே அரியணையைக் கைப்பற்றிக் கொண்ட அவுரங்கசீபின் ஆற்றலுக்குச் சான்று வேறென்னவேண்டும்? அவரை எதிர்த்து வந்த ஷுஜா, 1661'ல் கொலையுண்டார். தாராவின் மகனை சுலைமான் ஷுகோ (1635'ல் பிறந்தவர்) 1662'ல் கொல்லுண்டார்.

அவுரங்கசீப், குரான் விதிக்கும் நான்கு மனைவியர்களுக்கு மேல் மணந்துகொள்ளவில்லை. அந்நான்கு மனைவியரின் பெயர்களாவன:— தில்ராஸ் பானுபீகம், நவாப் பாய், அவுரங்கபாடி மஹால், உடுப்பூரி மஹால். இந்நால்வரும் பத்து மக்களைப் பெற்றனர். அவர்களில் ஐவர் ஆடவர். முகம்மது சுல்தான், முவாஸாம் (ஷா ஆலம்), ஆஸாம், அக்பர், காம்பக்ஷ் என்ற அவ்வைவரும் முறையே, 1639, 1643, 1653, 1657, 1667, ஆகிய ஆண்டுகளிற் பிறந்தனர்.

1659'ல் இரண்டாம் முறை முடிசூட்டிக் கொண்டபிறகு அவுரங்கசீப், சில உடனடிச் சட்டங்களைப் பிறப்பித்தார். அவருடைய "சுன்னி" மதப்பற்றை அவை விளக்குகின்றன. காசுகளில் "கலீபா" பொறிப்பதை நிறுத்தினர். தூய சொற்கள், காசுகளில் பதிக்கப்பட்டால் அவை மாசுறும் என்று அவர் கருதியதே அச்சட்டத்துக்குக் காரணமாகும். பாரசீகப் புத்தாண்டு கொண்டாடப்படுவதை நிறுத்தினர். வெறியூட்டும் பொருள் தயாரிக்க உதவும் ஒருவகைப் பயிர் இந்தியாவில் பயிர்செய்வதைத் தடைசெய்தார். முகம்மதியர், குரானுக்கு முரணாக ஒழுகாமல் அவர்களைக் கண்காணித்து வருவதற்காகப் பெரிய நகரங்களில் முதாசீப்புகள் என்னும் அலுவலாளரை அமர்த்தினர். அவர்கள் குடிப்பழக்கம், சூதாடுதல், பெண்டிருடன் கூடா ஒழுக்கம், சமய மாறுகோள் முதலிய குற்றங்கள் நிகழாவண்ணம் காவல் செய்துவந்தனர். ஆனால் நாட்டில் குடிகாரரும், சூதாடுபவரும், விலைமகளிரும் மறைந்துவிடவில்லை. அவுரங்கசீப், சட்டத்தினால் மட்டும் ஒழுக்கத்தை நிலைநிறுத்திவிட முடியாது என்பதை உணரவில்லை. அவர்

பழைய மசூதிகளைப் புதுக்கினர்; புதியனவற்றைக் கட்டினர்• இஸ்லாமின் சார்பான சட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்தார். உணவுப்பொருள்கள் சிலவற்றின்மீது இருந்த வரிகளை ஓரளவு நீக்கினர். அச்செயல், அரசுரிமைப் போர்களால் அவதியுற்றுவந்த மக்களுக்கு ஓரளவு ஆறுதல் அளித்தது.

மீர்ஜம்லாவின் பெருமை: வங்காளத்திலிருந்து ஷுஜா, 1660'ல் வெளியேறியவுடன் அங்கு அரசப் பிரதிநிதியாக அமர்ந்தார் மீர்ஜம்லா. அவர் 1661'ல் கூச்பீஹாரை (வங்காளத்தில் கூச்பீஹார் நாட்டில் உள்ளது) க்கைப் பற்றிக்கொண்டு அடுத்த ஆண்டில் அஸ்ஸாமில் படையெடுத்தார். கூச்பீஹார் அஸ்ஸாம் இவைகளின் அரசர்கள், அரசுரிமைப் போர் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் முகலாயருக்குரிய இடங்களில் கொள்ளையடித்ததே அப்படை யெடுப்புகளுக்குக் காரணமாகும். பல இடையூறுகளுக்குப் பிறகு அஸ்ஸாமியப் படையெழுச்சி வெற்றி பெற்ற போதிலும் மீர்ஜம்லாவின் படையினர், மழை, சுரம், வயிற்றுப் போக்கு முதலிய பல தொந்தரவுகள் காரணமாகத் துயருற்றதால் முடிவில் அஸ்ஸாமுடன் ஒரு அமைதி உடன்படிக்கை செய்துகொண்டனர். அதன்படி தர்ராங் மாகாணத்தின் பெரும்பகுதி முகலாயருக்குக் கிடைத்தது. ஆனால் மீர்ஜம்லா, டாக்காவுக்குத் திரும்புவதற்குள் இறந்துவிட்டார் (1663). அதற்கிடையில் கூச்பீஹாரை முகலாயர் இழந்தனர். 1667'ல் ஆஹோம் அரசர், முகலாயருக்கு அளிக்கப்பட்ட நிலப்பகுதியைத் திரும்பக் கைப்பற்றிக் கொண்டார். 1676 வரை போர் தொடர்ந்தது. ஆனல் பயன் எதுவு மில்லை. தவிர முகலாயர் தமக்குரிய கூர்ஹாஜோ என்னும்பகுதியையும் 1681'ல் இழந்துவிட்டனர். கூச்பீஹார் அரசர், 1664'ல் ஷயிஸ்தாகான் என்ற முகலாயத்தலைவருக்கு அடங்கினர். 1687'ல் கூச்பீஹார் நாட்டின் ஒருபகுதி முகலாயர் வசம் வந்தது. மீர்ஜம்லா, சிறப்புவாய்ந்த தலைவர்களில் ஒருவராவர். அவுரங்கசீப்பும் அவரைக் கண்டு அஞ்சினர். ஆயினும் அவரைத் தக்கமுறையில் பயன்படுத்திக் கொண்டார். அவர்கள் நட்பு இந்துஸ்தான் வரலாற்றில்

மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும், என்றும் அவுரங்க சீப்பின் உயர்நிலைக்கு அவ்விருவரின் இணைப்பு வழி வகுத்தது என்றும் அறிஞர் பெர்னியர் கூறுகிறார்.[1] அவுரங்கசீப் மீர் ஜம்லாவின் மகனிடம் பின் வருமாறு கூறினாராம். "அன்புள்ள தந்தையை இழந்து நீ வருந்துகிறாய்; எனது நண்பர்களில் மிக வலிமை வாய்ந்தவரும் இடர் விளைவிக்கக் கூடியவருமான ஒருவரை இழந்து நான் வருந்துகிறேன்."[2] மீர்ஜம்லாவின் போர்த்திறமையை அவருடைய பல படையெழுச்சிகள் நன்கு காட்டுகின்றன. அவர் எப்பொழுதும் சில கட்டுப்பாடுகளைப் பின்பற்றி வந்தார். தமது போர்வீரர்கள், குடியானவர்களுக்கும் பெண்டிருக்கும் இடையூறு விளைவிக்கக் கூடாது என்பது அவருடைய ஆணை. "பணியாளர்களில் ஓர் அணிகலம்; ஆடவர்களில் ஒரு அரசன்; போரில் பெருமை பெற்றவர்; ஆலோசனை கூறுவதில் மிகுந்த ஆற்றல் பெற்றவர்" என்று அவர் பலவாறாகப் புகழப்படுகிறார்.[3] ஆனால் தென்னிந்தியாவில் அவர் கோயில்களை இடித்தார் என்பதை நாம் மறக்க முடியாது.

சிட்டகாங் வெல்லப்படுதல்: (1666). அவுரங்கசீபின் மாமனான ஷயிஸ்தாகான், 1664 முதல் 1677 வரையிலும் பிறகு 1680 முதல் 1688 வரையிலும் வங்காளத்தின் ஆட்சித்தலைவராக அமர்த்தப்பட்டிருந்தார். அம்மாகாணமும் அதன் தலைநகர் டாக்காவும் சிறப்படைய அவர் அரும்பாடு பட்டார். பதினாறும் நூற்றாண்டின் பிற்பாதியிலும் 17'ம் நூற்றாண்டின் முற்பாதியிலும் ஆராக்கான், போர்ச்சுகீசியருடன் சேர்ந்து கொண்டு வலிமைபெற்று விளங்கியது. ஆராக்கனியரும் போர்ச்சுகீசியக் கடற்கொள்ளைக் காரரும் சிட்டகாங்கைத் தலைமை இடமாகக் கொண்டு வங்காளியரைத் துன்புறுத்தி வந்தனர். ஷயிஸ்தாகான் மூன்று கடற்போர்கள் நிகழ்த்தி முடிவாக 1666'ல் சிட்டகாங்கைக் கைப்பற்றிக் கொண்டார். அடிமைப் பட்டிருந்த பல வங்காளியர் விடுதலைபெற்று உய்ந்தனர்.

---

1 & 2. Constable and Smith, op. cit., PP. 22 & 173.
3. Sarkar, History of Aurangzib I, P. 372.

பாரசீகமும் வடமேற்கு எல்லைப்புறமும். அவுரங்கசீப், மேற்கு ஆசியாவிலும் நடு ஆசியாவிலும் இருந்த முகம்மதிய நாடுகள் பலவற்றுடன் அரசியல் தொடர்பு கொண்டிருந்தார். அபிசீனியாவுக்கும் அரசியல் தூதுவர் அனுப்பப்பட்டிருந்தார். பாரசீகப் பேரரசர், இரண்டாம் ஷா அபாஸ் மிகவும் வலிமை வாய்ந்தவர். அவருக்கும் அவுரங்கசீபுக்கு மிடையே பகைமை தோன்றி வளர்ந்து வந்தது. ஆனால் ஷா அபாஸ் 1667'ல் இறந்தார். அதன்பின் பாரசீகத்திலிருந்து அவுரங்கசீபுக்கு இடையூறு ஒன்றும் இல்லை.

அவுரங்கசீப் 1667 முதல் 1675 வரை இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்தில் மிகுந்த கருத்தைச் செலுத்த வேண்டியிருந்தது. ஆப்கானியக் கூட்டத்தினர் முகலாயருக்கு இடையூறுகள் விளைத்து வந்ததே அதற்குக் காரணமாகும். சில தோல்விகளை முகலாயர் முதலில் பெற்றபோதிலும் 1675'ம் ஆண்டின் முடிவில் முகலாயர் ஆட்சி வடமேற்கு எல்லைப்புறத்தில் வலிமையாக நிறுவப் பெற்றது. அலிமர் தன்கானின் மருமகனை அமீர்கான், 1678 முதல் 1698 வரை காபூலில் அரசப்பிரதிநிதியாக அமர்த்தப்பட்டிருந்தார். அவரும் அவர் மனைவியும் போற்றத்தக்க முறையில் செயலாற்றிக் கலகங்களை அடக்கினர். முகலாயர், பிரித்தாளும் கொள்கையைப் பின்பற்றி பட்டாணியர் அல்லது ஆப்கானியக் கூட்டத்தினரை அடக்கி விட்டனர். ஆப்கானியப் போர்கள், அவுரங்கசீப்பின் கருவூலநிதி மிகுதியாகக் குறைவதற்குக் காரணமாயின. மராட்டிய வீரர் சிவாஜி 1677–8'ல் கர்னடகத்தை வெல்லுவதற்கும் அந்நிலைமை உதவியாயிருந்தது. மேலும் 1679'ல் தோன்றிய இராசபுத்திரர் போரில் அவுரங்கசீபுக்கு எல்லைப்புற மக்களின் உதவி கிடைக்கவில்லை.

இராசபுத்திரர் போர். இனி, அவுரங்கசீப், மார்வார் (ஜோதிபுரம்) மீவார் (உதயபுரம்) இராசபுத்திரர்களுடன் செய்த போர்களைப் பற்றி குறிப்பிடுவோம். மார்வார்நாட்டு ஜஸ்வந்த் சிங், முகலாயப் பேரரசின் போர்த்துறைப் பணியிலீடுபட்டுப் பற்றுறுதியுடன் உழைத்து வந்தார். அவர் இறந்தவுடன்

1678'ல் ஔரங்கசீப், மார்வாரை எளிதில்கைப்பற்றிக்கொண் டார்; ஜிஸியாவரியையும் மீண்டும்விதித்தார். மார்வாரில் இராச புத்திர குலத்தைக் காப்பாற்றும் நோக்கத்துடன் துர்க்காதாஸ் என்ற வீரர் வீரப்போர் புரிந்து, ஜஸ்வந்தின் மனைவிமார்கட்கு ஏற்பட்டிருந்த கொடுமைகளினின்று அவர்களைக் காப்பாற்றிய துடன் முகலாய வீரர்களையும் எதிர்த்து நின்றார். அவுரங்க சீபின் படை துர்க்காதாஸரையும் அவருடன் இருந்தவர்களை யும் புஷ்கர ஏரிக்கு அருகில் (ஆச்மீரத்துக்கு அண்மையில்) தோற்கடித்தது. வெற்றி வீரர்கள் நாட்டைக் கொள்ளை யிட்டனர். கோயில்களை இடித்தனர். இராசபுத்திரர் கொரில்லாப் போர்புரிந்து வந்தனர். மார்வாரை யடுத்திருந்த மீவார், மார்வாருக்கு உதவிசெய்ததால் அந்நாட்டின் பேரிலும் முகலாயர் படை யெடுத்தனர். உதயபுரியும் சித்தூரும் பேர ரசர் வசப்பட்டன. அப்பகுதியின் இராணா மலைப்பகுதிக்குச் சென்று மறைந்துகொள்ள நேர்ந்தது. ஆயினும் இராச புத்திரர் கொரில்லாப் போர் முறையைக் கைவிடவில்லை. அதனால் முகலாயப் படையினர் மிகவும் துன்பமுற்றனர். அந்த சமயத்தில் எதிர்பாரா நிகழ்ச்சி ஒன்று ஏற்பட்டது. அவுரங்கசீபின் மகனான அக்பர் இளவரசர், இராசபுத்திரரைத் தாக்கிய முகலாயப் படையின் ஒரு பகுதிக்குத் தலைவரா யிருந்தார். அவர் திறமையாகப் போர் புரியவில்லை என்று அவுரங்கசீப் அவரை இழித்துக் கூறவே அக்பர், தம் தந்தை யிடம் வெறுப்பையும் வெகுளியையும் அடைந்தார். அதனால் அவர் தந்தைக்குப் பகையாகக் கலகம் செய்து இராசபுத்திரர் களுடன் இணைந்துகொண்டு தாமே முகலாயப் பேரரசர் என்று முடிசூட்டிக் கொண்டார். தகவூர்கான் என்பார் அவரது தலைமை அமைச்சரானார். அவ்வமயம், ஆச்மீரிலிருந்த அவு ரங்கசீபிடம் போதுமான படையில்லை. எனினும் தம்மை எதிர்த்துவரும் படையைத் தாக்க முயன்று கொண்டிருந்தார். ஆனால் அக்பர், ஆச்மீரத்தை உடனே தாக்காமல் காலந் தாழ்த்திக்கொண்டிருந்ததால் நிலைமை வேறுவிதமாக மாறி விட்டது. அவுரங்கசீப், பொய்க் கையெழுத்திட்ட முடங்கல் தயாரித்து அனுப்புதல் முதலிய தந்திரமான சூழ்ச்சிகளைக் கையாண்டு இராசபுத்திரருக்கும் அக்பருக்குமிடையே பிளவு

ஏற்படுமாறு செய்துவிட்டார். அதனல் இராசபுத்திர வீரர் அக்பருக்கு உதவிசெய்ய மறுத்தனர். அக்பரின் தலைமையி லிருந்த முகலாயப் படையினர் அவுரங்கசீபுடன் சேர்ந்துகொண் டனர். அக்பர் ஒருசில துணைவர்களுடன் தப்பியோடினர். அதற்கிடையில் அவுரங்கசீப் தங்களை ஏமாற்றிவிட்டார் என்று உணர்ந்த இராசபுத்திரர் அக்பருக்கு அடைக்கலந்தந்து அவரைத் தெற்கே அழைத்துச் சென்று மகாராட்டிரரிடம் சேர்த்தனர்.

அவுரங்கசீப் விரைவில் மீவாருடன் அமைதி உடன் படிக்கை செய்துகொண்டார். 1680'ல் அந்நாட்டு மன்னர் இராசசிங் இறந்தவுடன் பட்டமேற்ற செயசிங் என்பார், மூன்று பர்காணங்களை, முகலாயப் பேரரசுக்கு அளித்தார். மீவா ரில் ஜிஸியா விதிப்பதில்லை என்ற வாக்குறுதியை அவுரங்கசீப் அளித்தார். 1682'ம் ஆண்டிலிருந்து பேரரசர் தக்காணத்தில் தம் கருத்தைச் செலுத்த வேண்டியிருந்தது. ஆகவே மார்வார், 1681 முதல் கொரில்லாப் போர் முறையைக் கையாண்டு முகலாயருக்கு இடையூறுகள் விளைவித்தது. 1687 முதல் 1707 வரை துர்க்காதாஸ், அஜித்சிங், ஆகிய இருவரின் தலைமையில் இராசபுத்திரர் போரிட்டு வந்தனர். அவுரங்கசீப் இறந்தவுடன் 1707'ல் அஜித்சிங் முகலாயரிடமிருந்து தம் நாட்டை மீட்டுக்கொண்டார். அக்பர் இளவரசர் சிலகாலம் மகாராட்டிரருடன் தங்கியிருந்துப் பின் பாரசீகம் சென்று விட்டார். அதன் பிறகு அவர் இந்தியாவுக்கு வரவில்லை. அவுரங்கசீபின் தவருன கொள்கையின் விளைவாக இராச புத்திரரின் பகைமை அவருக்கு ஏற்பட்டது. பேரரசில் பல கலகங்கள் ஏற்படுவதற்கு அது ஒரு சிறந்த காரணமாகும். முகலாயப் பேரரசின் தூண்களாக விளங்கக்கூடிய பலர், அதன் கொடும் பகைவர்களாக மாறியதற்கு அப்பேரரசரின் மதக்கொள்கை முக்கிய காரணமாகும்.

### சிவாஜியுடன் போர்

**ஷயிஸ்தாகான் — சிவாஜி போர் (1660—4).** ஷாஜி பான்ஸ்லேயின் மகனை சிவாஜியின் தலைமையில் மகாராட்

டிரர் விரைவில் முன்னேறி வந்தனர். சுமார் 1646'ம் ஆண்டு முதல் தென்பூனு மாவட்டத்தில் சிவாஜியின் அதிகாரம் சிறிது சிறிதாக விரிவடைந்து வந்தது. 1658'ல் முகம்மது அடில்ஷா இறந்துவிட்டதாலும் 1659'ல் பீஜப்பூரின் அப்ஸல்கானை சிவாஜி கொலை புரிந்ததாலும் மகாராட்டிர வீரரின் நல்வாய்ப்புக்கள் மேலும் மேலும் பெருகின. அவுரங்கசீப், தம் தாய் மாமன் ஷயிஸ்தாகானை, 1660'ல் தக்கணத்தின் அரசப் பிரதியாக அனுப்பினர். சிவாஜி அவருக்குப் பலவகை இடையூறுகளை விளைத்து வந்தார். பூனவை ஷயிஸ்தாகான் கைப்பற்றிக்கொண்ட போதிலும் அவர் பிறகு தோல்வியுற நேர்ந்தது. அவருடைய மகனும் போரில் இறந்தான். (1663) துயரம் தாங்கமுடியாமல் அவர் அவுரங்காபாத்துக்குப் பின் வாங்கினர். 1664'ம் ஆண்டின் தொடக்கத்தில் பேரரசர் அவரை வங்காளத்துக்கு மாற்றினர். சிவாஜி, சூரத் பகுதியைத் தாக்கி மேலும் புகழ்பெற்றார். அவர் அக்காலத்தில் கொள்ளையடித்த பொருள்களைப் பற்றிக் குறிப்புகள் உள. ஷயிஸ்தாகானுக்குப் பிறகு முவாஸாம் இளவரசர் தக்கணத்தின் அரசப்பிரதிநிதி ஆனர்.

## செயசிங், சிவாஜியுடனும் பீஜப்பூருடனும் போரிடுதல்.

சிவாஜியின் தடையுரு முன்னேற்றம் அவுரங்கசீபின் அமைதியைக் குலைத்தது. ஜெய்ப்பூர் நாட்டு இராசபுத்திரத் தலைவரான செயசிங் 1617'ம் ஆண்டு முதல் பேரரசரின் பணியில் ஈடுபட்டு உழைத்துவந்தார். அவர் போர்த் துறையில் மிகுந்த ஆற்றல் வாய்ந்தவர். அவுரங்கசீப் அவரையே தக்கணத்தின் படைத் தலைவராக அமர்த்தினர். அவ்வீரருக்கு அவ்வமயம் வயது 56 எனினும் இளமை ஊக்கத்துடன் அவர் செயலாற்றி வந்தார். சிவாஜியின் பகைவர்கள் யாவரையும் ஒன்று சேர்த்து அம்மகாராட்டிர வீரரைத் தாக்க முயற்சிகள் செய்யலானர். பூன மாவட்டத்திலுள்ள புரந்தர் கோட்டையை அவர் முற்றுகையிட்டார். தென்பகுதிக் கோட்டை கைப்பற்றப் பட்டது. சுற்றியிருந்த பகுதிகளையும் செயசிங் சூறையாடினர். முரார்பாஜி பிரபு என்னும் புகழ் வாய்ந்த மராட்டியவீரர் போரில்மாண்டார். 1665'ல் சிவாஜி

செயசிங்குக்கு அடங்க நேர்ந்தது. புரந்தர் என்னுமிடத்தில் இருவரும் செய்துகொண்ட உடன்பாட்டின்படி, சிவாஜி தம் கோட்டைகள் பலவற்றை - புரந்தர் உட்பட - முகலாயருக்கு அளித்ததுடன் பீஜப்பூருக்குப் பகையாகச் செயசிங்குக்கு உதவுவதாகவும் வாக்களித்தார். சிவாஜி அடங்கியது அக் காலத்தில் ஆங்கிலேயர் உட்பட்ட பலரை வியப்புறச் செய் தது. பகைவருக்குப் பணிந்து போகவேண்டிய தோல்விநிலே சிவாஜிக்கு அவ்வமயம் ஏற்படவில்லே. எனினும் முற்றுகை யிடப்பட்டிருந்த கோட்டைக்குள் பல தலேசிறந்த மராட்டியப் பெண்டிர் அடைபட்டிருந்ததால் அவர்கள் இழிவு படுத்தப் படுவதை விரும்பாத அம்மராட்டிய வீரர் உடன்பாட்டுக்கு இசைந்தார் என்று பெரும்பாலும் கருதப்படுகிறது. செயசிங் கின் போர் ஆற்றலும் சிறப்பிக்கத் தக்கதே.

பீஜப்பூர் சுல்தானியர் முகலாயப் பேரரசரிடம் மீண்டும் பகைமை கொண்டனர். அதன் விளேவாக, செயசிங், சிவாஜி யின் உதவி பெற்று 1666'ல் பீஜப்பூர் கோட்டையைத் தாக் கினர். ஆ ஞ ல் அதைக் கைப்பற்ற முடியவில்லே. அவர், மிகுதியான பொருள்களே இழந்து, புகழை இழந்து அவுரங்கா பாத்துக்குப் பின்வாங்கினர்.

ஷாஜஹானின் சாவு: *(1666)*. *1658'*ல் அவுரங்கசீப், ஆக்ராவைக் கைப்பற்றிக்கொண்டு ஷாஜஹானேச் சிறையில் வைத்தாரென்று முன்னர்ப்பார்த்தோம். காலம் செல்லச்செல்ல அவர் நிலேமை வருந்தத் தக்கதாகிவந்தது. 1666'ல் அவர் தமது 74'ம் வயதில் உயிர் நீத்தார். ஜஹனராவின் வேண்டு கோளின்படி அவர் தம் மகன் அவுரங்கசீபை இறுதிக்காலத் தில் மன்னித்தார். அவுரங்கசீப், தம் தந்தையிடம் நடந்து கொண்ட முறை அவருடைய தன்மைக்கு ஒரு பெரிய இழுக்காகும்.

### சிவாஜி ஆக்ராவில் நிகழ்த்திய வீரச்செயல்.

செயசிங், சிவாஜியை அவுரங்கசீப்பிடம் செல்லுமாறு தூண்டினர். அவருக்கு எத்தீங்கும் விளேயாதென்றும் உறுதி

கூறினர். பேரரசர் தம்முடைய நட்பை விரும்புவதாகவே சிவாஜி கருதி 1666'ல் ஆக்ராவுக்குச் சென்ருர். அவர் மகன் சாம்பாஜியும் உடன் போனர். ஆனல் பேரரசரின் அவை யில் எதிர்பாராவிதமாக சிவாஜியும் அவர் மகனும் கைதிக ளாக்கப் பெற்றனர். சிவாஜி சிறையிலிருந்து மூன்று மாதங் களுக்குப் பின் தம் மகனுடன் தந்திரமாகத் தப்பி ஓடிவிட்டார். அவர் தப்பிய விதம் வியப்புக்குரியது, பழக்கூடைகளில் தனித்தனியே சிவாஜியும் சாம்பாஜியும் மறைந்திருக்க வெளியே கொண்டுபோகப்பட்டார்கள். சிவாஜி ஒரு துறவியைப்போல வேடந்தரித்து 25 நாட்கள் பயணம் செய்து மதுரா, அலகா பாத், காசி, கயை, கோண்டுவாளு, கோல்கொண்டா முதலிய இடங்கள் வழியாகத் தம்நாடுசேர்ந்தார். மதுராவில் தங்கியிருந்த சாம்பாஜி, நாடு திரும்புவதற்குத் தனி ஏற்பாடுகளையும் அவர் செய்திருந்தார். சிவாஜி திரும்பியவுடன் அவர் புகழ் மேலும் வளர்ந்தது. அவுரங்சீபின் மறைமுகமான உதவியின்றி சிவாஜி தப்பியிருக்கமுடியாது என்று பெர்னியர் கூறுவது கொள்ளத் தக்கதன்று. ஏனெனின் அப்பேரரசரே அவர் இறுதிக்காலத் தில் கூறுவதாவது. "ஒரு கணநேரம் கடமையிலிருந்து தவறி விட்டால் அது நீண்டகால இழிவுக்குக் காரணமாகிறது; சிவாஜி என்ற தீயோன் என் கவனிப்பின்மை காரணமாகத் தப்பி யோடிவிட்டான். அதன் விளைவாக நான் (மராட்டியருடன்) என் முடிவுக் காலம் வரை போராட வேண்டியதாயிற்று." [1] தப்பிவிட்ட சிவாஜியின்மீது கடுங்கோபம் கொண்ட செயசிங் அவரைச் சூழ்ச்சிசெய்து கொல்ல முயன்ருர். ஆனல் அது பயனுறவில்லை. 1667'ல் செயசிங் திரும்ப அழைக்கப்பட்டுச் செல்லுகையில் பர்ஹன்பூரில் இறந்தார்.

மீண்டும் சிவாஜிடன் போர். ஆக்ராவிலிருந்து திரும்பிய சிவாஜி (1666) அடுத்த ஆண்டில் முகலாயருடன் அமைதி உடன்படிக்கை செய்துகொண்டு 1667 முதல் 1669 வரை தம் நிலையை வலிமையுறச் செய்துகொள்வதில் முனைந்திருந் தார். அவரை ஓர் அரசர் என்று 1668'ல் அவுரங்கசீப் ஏற்றுக்கொண்டனர். 1670'ல் சிவாஜி மீண்டும் முகலாய

1. Sarkar op. cit., V (1924), P. 267.

ருடன் போர் தொடங்கி, தாம் முன்னர், புரந்தர் உடன்படிக் கையின்படி இழந்த கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டார். சிவாஜியின் இராச்சியம் அளவில் பெருகியது. பல போர் களில் முகலாய வீரர் தோல்வியுற்றனர். சூரத் பகுதியையும் சிவாஜி வெற்றியுடன் தாக்கினர். 1670, 1671 ஆகிய ஆண்டுகளில் பேரரசப் படையினர் புறமுதுகுகாட்டி ஓடினர். சூரத் மக்களிடமிருந்து சிவாஜி, சௌத் (நில வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு) என்னும் வரியை விதித்தார். அங் கிருந்த முகலாய ஆட்சித் தலைவருக்கு சிவாஜி விடுத்த முடங்கல் வருமாறு:— "எமது நாட்டைக் காவல் செய்யப் படையை அமைக்க வேண்டுமென்று நமது பேரரசர் எம்மை வற்புறுத்துகிறார்; ஆகவே அப்படைக்குரிய செலவுகளை அப் பேரரசரின் மக்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் (1672)."[1] 1674'ல் சிவாஜியின் முடிசூட்டுவிழா மிகவும் சிறப்பாக நடந்தேறியது. முகலாயருடன் போர் தொடர்ந்து நடந்தது. குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. அவர் 1677—8'ல் கர்நாடகத்தைத்தாக்கி அதைவென்று மிகுதி யான பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டுபோனர். ஆங்கிலேய வணிகரின் குறிப்புக்கள், சிவாஜியை, ஸீஸ ருடனும் ஹன்னிபாலுடனும் அலெக்சாந்தருடனும் ஒப்பிட்டுப் புகழ்கின்றன. ஆனல் சிவாஜி தாம் பிறந்த சிவநேர் என்னு மிடத்தைக் கைப்பற்ற இருமுறை முயன்றும் முகலாயரிட மிருந்து அதைக் கைப்பற்ற முடியவில்லை. 1678'ம் ஆண் டின் முடிவில் சாம்பாஜி தந்தையைப் பொருட்படுத்தாமல் முகலாயரிடம் சென்று அவர்களுடன் சேர்ந்துகொண்டார். ஆனல் அடுத்த ஆண்டின் முடிவுக்குள் அவர் தம் நாடு திரும்பிவிட்டார். 1680'ல் சிவாஜி இறந்தார். முடிவாகக் கூறுமிடத்து சிவாஜியின் வாழ்க்கையின் இறுதிப்பத்து ஆண்டுக் காலத்தில் அவருடைய முன்னேற்றத்தைத் தடை செய்ய முகலாயரால் இயலவில்லை எனலாம்.

**சாம்பாஜி கொலைசெய்யப்படுதல்.** சிவாஜி இறந்ததும் அவர் மகன் சாம்பாஜி (1680—9) மகாராட்டிர மன்ன

1. Sarkar, Ibid, P. 317.

ரானர். இவரும் முகலாயரைத் தாக்கும் முயற்சியை மேற் கொண்டு 1681'ல் பர்ஹறன்பூரைச் சூறையாடினர். தெளி வற்ற கொள்கையைப் பின்பற்றிவந்த அவுரங்கசீபால் 1683 வரை எதையும் நிறைவேற்ற முடியவில்லை. அவ்வாண்டில் சாம்பாஜிக்கும் போர்ச்சுகீசியருக்கு மிடையே போர் மூண்டது. அச்சூழ்நிலையை முகலாயப் பேரரசர் தம் நலத்திற்குப் பயன் படுத்திக்கொண்டார். சாம்பாஜி ஆற்றலற்றவர். மங்கையர் மோகத்திலும் மதுவின் மயக்கத்திலும் அவர் மயங்கி இருந் தார். மகாராட்டிரரிடை ஒற்றுமை குலைந்து பிளவுகள் தோன்றுவதற்கு அவுரங்கசீப் வழிவகுத்தார். பல மகாராட் டிரத் தலைவர்களை முகலாயர் கைக்கூலி கொடுத்துத்தம் முடன் சேர்த்துக் கொண்டனர். அவுரங்கசீப் பீஜப்பூருடனும் கோல்கொண்டாவுடனும் போரிட்டுக் கொண்டிருந்த சமயத்தில் தக்கண நாடுகளின் பொது நோக்கத்தை உணராத சாம்பாஜி பீஜப்பூர் நாட்டின் சில பகுதிகளைத் தாம் கைப்பற்றிக்கொண் டார். மேலும் சாம்பாஜி தம்மை அழிக்க அவுரங்கசீப் செய்துவரும் ஏற்பாடுகளைச் சிந்தியாது கோவாவைக் கைப் பற்றுவதற்காக மிகுதியான பொருள்களை வீணாக்கி வந்தார். பேரரசரின் மகன் அக்பர் தம்முடைய காவலில் இருந்துவந்த போதிலும் சாம்பாஜி அச்சூழ்நிலையைத் தக்கவகையில் பயன் படுத்திக் கொள்ளத் தவறிவிட்டார். இந்தியாவில் தமக்கு உதவி கிடைக்காது என்று உணர்ந்த அக்பர் மனமுடைந்து 1687'ல் பாரசீகத்துக்குச் சென்றுவிட்டார். 1689'ல் தம் முடைய அரண்மனையில் சிற்றின்பத்தில் மூழ்கிக்கிடந்த சாம் பாஜியை முகலாயர் சிறைப்பிடித்தனர். சாம்பாஜி முகம்மதி யராக உடன்பட்டால் அவரை மன்னித்து விடுதலை செய்வ தாக அவுரங்கசீப் அறிவித்தார். ஆனால் சாம்பாஜி பேரரசர் தம் மகளைத் தமக்கு மணஞ் செய்வித்தால் முகமதியராக இணங்கினர். இதைக் கேட்டு வெகுண்ட முகலாய அரசர் சாம்பாஜியைப் பலருடைய முன்னிலையில் இழிவுபடுத்தி உறுப்புக்களைக் களைந்து கொடிய முறையில் கொலை செய் வித்தார். அக்கொலை மகாராட்டிரருக்கு முகலாய அரசர்மீது முன்னிலுமதிகமான சினம் உண்டாக்கியது. அவர்கள், சாம்பா ஜியின் குறைபாடுகளை மறந்து அவருடைய வீரமரணத்தைப்

புகழ்ந்து பேசித் தமக்கிடையே இருந்த வேற்றுமைகளை அகற்றி முகலாயரை எதிர்த்துப் பொருவதற்கு ஒன்றுசேர்ந்தனர். சாம்பாஜியின் மகன் சாஹூவும் அவன் தாயும் முகலாயரால் கைப்பற்றப்பட்டுச் சிறையிலடைபட்டனர். அவுரங்கசீப் தம் பேரவா நிறைவேறி விட்டதாக மகிழ்ச்சியடைந் திருக்கலாம். ஆனால் அதன்பிறகே அவருக்கு இடையூறுகள் மிகுதியாயின. 1689 முதல் 1708 வரை மகாராட்டிரத்தில் அரசப் பிரதிநிதி ஆட்சி நிலவிய பொழுது சிறப்பாகக் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் பல ஏற்பட்டன.[1] சாம்பாஜி சிந்திய குருதி மராட்டியரிடம் புதிய உணர்ச்சியை உண்டாக்கியது. அவுரங்கசீப், சாம்பாஜியைக் கொலை செய்தது ஒரு பெருந்தவறுகும். மராட்டியருக்கு அது மறைமுகமாக நன்மையை அளித்தது.

மராட்டிய மக்களுடன் போர்: சாம்பாஜியின் இளவல் இராசாராம் என்பார் அரசப்பிரதிநிதியாக மராட்டிய நாட்டை ஆளத்தொடங்கினர். ரெய்காட் என்னுமிடத்தில் மராட்டியத் தலைவர்களடங்கிய கூட்டத்தில் அவர் கூறியதாவது:- "நான் இளவரசனின் பணியாளே. நீங்கள் எனக்கு அடங்கி நடக்க வேண்டும்; ஆனால் உங்கள் பற்றுறுதியை எம் தலைவரான சாஹூவிடம் வைத்திருங்கள். இவ்வாறு நீங்கள் செய்வீர்களாயின் நம் நாட்டை நாம் காப்பாற்ற முடியும். நமது தேவியின் (வருங்காலத்தைப்பற்றிய) அருள்மொழியும் நிறைவேறும். தேவியின் அருள்மொழியாவது சிவாஜியோ அல்லது சாஹூவோ, அட்டாக்கிலிருந்து இராமேச்வரம் வரை உள்ள இந்தியாவை வெல்லுவர் என்பதாம். முகலாயர், ரெய்காடைக் கைப்பற்றிக் கொண்டபின்னர் இராசாராம் செஞ்சிக்குச் சென்று அப்புதிய தலைநகரிலிருந்து முகலாயரை எதிர்த்து வந்தார். மகாராட்டிரத்திலும் கருநாடகத்திலும் முகலாயருக்கு வன்மையான எதிர்ப்பு இருந்தது. அரச ஆதிக்கம் பிரித்துப் பரப்பப் பட்டிருந்தது. நிலமானிய முறையின் மூலம் மராட்டியத் தலைவர்களின் நிலை உயர்ந்தது. கொரில்லாப் போர்முறையையே அவர்கள் பின்பற்றி வந்தனர். 1689 முதல் 1697 வரை இராமச்சந்திர பாவ்தேகர் என்பாரே உண்மையில் மகாராட்

1 Sarkar, History of Aurangzib, IV (1930) P. 484.

டிரத்தின் சர்வாதிகாரியாக விளங்கினர். இராசாராமருக்கு அவர் உதவி செய்தார். முகலாயரின் நாட்டின்மேலும் படையெடுத்தார். சாந்தாஜி கோர்படே என்பாரும், மராட்டியரின் உரிமைப் போரில் சிறந்த பங்கு கொண்ட வீரர்களாவர். 1690 முதல் 1698 வரை செஞ்சியை முகலாயர் முற்றுகையிட்டிருந்தனர். ஆனல் சதாராவில் முகலாயப்படை 1690'ல் தோல்வியுற்றது. மராட்டியர் பல கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டனர். ஆயினும் சாந்தாஜி, தானஜி இருவரும், 1696'ல் தமக்கிடையே பகைமை கொண்டதால் மிகுதியான வெற்றிகளைப் பெற முடியவில்லை. 1698'ல் செஞ்சியை முகலாயப்படைத் தலைவர் கைப்பற்றிக் கொண்டவுடன் இராசாராம் மகாராட்டிரத்துக்குத் தப்பிச் சென்ருர். பின்னரும் போரைத்தொடர்ந்து நடத்திப்பலவெற்றிகளைப் பெற்று 1700'ல் அவர் இறந்தார். அவர் மனைவி தாராபாய், தமது மகன் மூன்றும் சிவாஜி (சாஹூவை இரண்டாம் சிவாஜி என்பர்) யின் பிரதிநிதியாகத் தம்மை அமர்த்திக்கொண்டார். தம் சக்களத்தி இராசாஸ்பாய் என்பவரையும் அவருடைய மகன் இரண்டாம் சாம்பாஜியையும் சிறையிலடைத்தார். அட்டாக்கிலிருந்து இராமேச்வரம் வரையுள்ள இந்தியாவை வெல்லப்போகும் சிவாஜி தமது மகனே என்று மக்களுக்குக் கூறி அவர்களுடைய ஊக்கத்தைப் பெருக்கினர்.[1]. பெரிய அலுவலாளர்களுடைய உதவியையும் அவர் தமது ஆற்றலினல் பெற்ருர். அவருடைய தலைமையில் மராட்டியரின் எதிர்ப்பு வலிமையடைந்தது. அவுரங்கசீப், மகாராட்டிர நாட்டிலிருந்த பல கோட்டைகளை ஒன்றன்பின் ஒன்ருகக் கைப்பற்றும் வேலையில் ஈடுபட்டிருந்தார். சிறப்பாக அவர் 1700'ல் சதாராவையும் 1701'ல் பான்ஹாலாவையும் 1702'ல் கேல்ணவையும் (கோலாப்பூருக்கும் இரத்தினகிரிக்குமிடையில்) 1703'ல் சிங்காட் என்ற கோட்டையையும், 1704'ல் தோர்ணவையும் (இறுதியான இரண்டும் பூனவுக்கருகில் உள்ளன) கைப்பற்றினர். அவர் கைக்கூலி கொடுக்காமல் கைப்பற்றிய

---

1 C. A. Kincaid and D. B. Parasnis, A History of the Maratha People (1931), P. 178.

கோட்டை தோர்ணு ஒன்றுதான்.[1] கோட்டைகளை இழந்த போதிலும் மராட்டிய மக்கள் பகைவருக்கு அடங்கவில்லை. 1705'ல் அவர்கள் நர்மதை ஆற்றைக்கடந்து நடு இந்தியப் பகுதிகளிலும் படையெடுத்தனர். தாராபாய் ஓர் ஆண் வீரனைப் போல மன உறுதி குலையாது போரில்ஈடுபட்டு மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக நின்று வெற்றிக்கான வழிகளைவகுத்து வந்தார். 1706'ல் மராட்டியர் சிறப்பான பல வெற்றிகளைப் பெற்றனர்; இழந்த கோட்டைகள் பலவற்றை மீட்டனர். ஆமது நகரிலிருந்த பேரரசப் படையினரையும் அச்சுறுத்தினர். 1707'ல் அவுரங்கசீப் இறந்தவுடன் பூனாவையும் கைப்பற்றிக் கொண்டனர். இவ்வாறு அவுரங்கசீப் தெற்கில் நிறைவேற்றிய செயல்கள் பயனற்றுப் போயின.

## அவுரங்கசீபின் தக்கணக் கொள்கை

**பீஜப்பூர்:** 1665—6'ல் செயசிங், பீஜப்பூரில் தோல்வியடைந்த செய்தி முன்னரே குறிப்பிடப்பெற்றது. நான்கு வயதுக் குழந்தை சிகந்தர் (1672—86) பீஜப்பூர் சுல்தானாக அமர்ந்தவுடன் அங்கே உள் நாட்டுக் குழப்பம்தோன்றி வளர்ந்தது. அமைச்சராட்சி ஏற்பட்டதையும் பீஜப்பூரின் வீழ்ச்சி தொடங்கியதையும் காண்கிறோம். ஆயினும் 1676, 1679, 1682 ஆகிய ஆண்டுகளில் முகலாயர் அங்கே நிகழ்த்திய படையெழுச்சிகள் தோல்வி யடைந்தன. பீஜப்பூர், சிலசமயங்களில் மராட்டியருக்கும் உதவியது. 1685'ல் முகலாயப்படை பீஜப்பூரை முற்றுகையிட்டது. அவுரங்கசீப் தாமே நேரில் சென்று 1686'ல் அந்நகரைக் கைப்பற்றினார். சிகந்தர், கான் என்ற பட்டத்தையும் 1700'ல் தாம் இறக்கும் வரை ஓய்வுக்கால ஊதியத்தையும் முகலாயப் பேரரசரிடமிருந்து பெற்றார். அவுரங்கசீப், பீஜப்பூரைத் தம் பேரரசுடன் இணைத்துக்கொண்டு, அந்நாட்டிலிருந்த ஷீயா கல்வெட்டுக்கள், தமது சமயக் கொள்கைகட்கு முரணாக இருந்த படங்கள் முதலியவற்றை அழித்தார். அங்கிருந்த கலைஞர்கள், புலவர்கள், தொழிலாளிகள் யாவரும் துயருற்றனர்.

1. C. H. I. IV. P. 298.

கோல்கொண்டா. அபுல்ஹாஸன் (1672—87) என்ற கோல்கொண்டா சுல்தான், சிற்றின்பத் துறையில் எளியராகி அரசியல் அலுவல்களை மாதண்ணு என்னும் தலைமை அமைச்சரிடம் ஒப்படைத்திருந்தார். குதுப்ஷா, பெயரளவில் முகலாயரின் நண்பராக இருந்தபோதிலும் பீஜப்பூருக்கும் மகாராட்டிரருக்கும் உதவி அளித்து வந்தார். மாதண்ணு 1677'ல் சிவாஜியுடன் கூட்டுறவு அமைத்துக் கொண்டார். மேலும், அபுல்ஹாஸன் தம் நாட்டில் இந்துக்களை ஆதரித்துவந்தார். இதனுல் அவுரங்கசீப் மிகுந்த சினங் கொண்டார். அவர் அபுல்ஹாஸனிடம் மிகுந்த வெறுப்புக் கொண்டிருந்தார் என்பதை அவர் எழுதிய ஒரு முடங்கல் நன்கு விளக்குகிறது. பீஜப்பூரை வென்றபின் அவுரங்கசீப் கோல்கொண்டாவுக்குச் சென்று 1687'ல் அதை முற்றுகையிட்டார். கைக்கூலி கொடுத்து முடிவில் அந்நாட்டைப் பேரரசர் தம்மடிப்படுத்தினுர். சுல்தான் தௌலதாபாத்தில் சிறைப்பட்டிருந்தார். முகலாயர் அவருக்கு ஓய்வுக்கால ஊதியம் அளித்து வந்தனர்.

அவுரங்கசீப், பீஜப்பூரையும் கோல்கொண்டாவையும் வென்று மகாராட்டிரர் மீதும் வெற்றிகள் கொண்டபோதிலும் அவருடைய தக்கணக் கொள்கை வெற்றிபெற்றதாகக் கூறுவதற்கில்லை. அவர் செயல்கள், மேலும் மேலும் போருக்கு வழிவகுத்தன. சுன்னிப் பிரிவினரான அவருடைய மதவெறிதான் அவருடைய தக்கணக் கொள்கையை உருவாக்கியிருந்தது. அவர் தக்கணத்தில் கருத்தூன்றி யிருந்ததால் வட இந்தியாவில் அவருடைய ஆதிக்கம் ஆட்டங் கொடுக்கத் தொடங்கியது. தக்கணத்தில் மட்டுமின்றித் தென் இந்தியாவில் வேறு சில இடங்களிலும் பேரரசரின் கருத்துச் சென்றது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மைசூர் முதலிய பகுதிகள் அவருக்கு அடங்கின. ஆனுல் அவற்றைத் தம் பேரரசுடன் இணைத்துக்கொள்ள அவர் முயலவில்லை. வட இந்தியாவிலும் நடு இந்தியாவிலும் அமைதி குலைந்தமைக்கு அவுரங்கசீபின் தக்கணக் கொள்கை ஒரு முக்கிய் காரணமாகும். ஜாட் கலகம், பொருளாதார நெருக்கடி, முதலிய இடையூறுகள் அவுரங்கசீபுக்கு நீடித்த அல்லலைக் கொடுத்

தன. பொதுவாக, அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகியோரின் தென் இந்தியக் கொள்கையையே இவரும் பின்பற்றினரெனினும் ஒரு சிறப்பான வேறுபாடு நோக்கற்பாலது. அவுரங்கசீபின் தக்கணக் கொள்கை சமயச் சார்பானதாகவும் இருந்தது. சமயமாறுகோளரை அழிக்கவேண்டுமென்பது அவர் நோக்கம். சுல்தானியரையும் மராட்டியரையும் எதிர்க்க வேண்டிய பெரும் பொறுப்பை அவர் ஒரே காலத்தில் மேற்கொண்டிருந்தார். அவர் தமது படைத் தலைவர்களை நம்பாமல் தாமே அவ்வப்போது ஆணைகளைப் பிறப்பித்து வந்ததால் பல இடையூறுகளை அவர் அடைய நேர்ந்தது. முகலாயப் படையில் பல குறைபாடுகளிருந்தன. சிறப்பான இராசபுத்திர நாடுகளின் உதவியையும் பேரரசர் பெறமுடியவில்லை. மராட்டியரின் படை அமைப்பு முறையோ மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. முடிவாக, "தக்கணத்தின் இடையூறுகள் அவுரங்கசீபின் அழிவுக்குக் காரணமாயின."[1]

## புரட்சிக் கலகங்கள்

அவுரங்கசீபின் மதக்கொள்கை நாட்டில் வெறுப்பை வளர்த்தது. அதனால் பல கலகங்கள் ஏற்பட்டன. 1669'ல் வடமதுரைக் கருகிலிருந்த ஜாட்சாதிக் குடியானவர்கள் கலகம் செய்தனர். அம்முதற் கலகம் ஓராண்டு நீடித்தது. அதைப் பேரரசர் அடக்கிவிட்டார். மூன்றாண்டுகள் சென்றபின், மதப்பற்று வாய்ந்த சாத்னமிகள் என்ற இந்துக்கள் புரட்சிக் கலகம் செய்தனர். தொடக்கத்தில் அது வெற்றிபெற்றபோதிலும் இறுதியில் அவர்கள் கடுமையாக அடக்கப்பெற்றனர். அவுரங்கசீபின் கொள்கைகளில் மிக்க வெறுப்புக் கொண்டு அவரை எதிர்த்தவர்களுள் பஞ்சாபிலுள்ள சீக்கியர் சிறப்பானவர்கள். அரிகோவிந்தர் (1606—45) என்ற ஆறாவது சீக்கிய குருவை, ஜஹாங்கீர் பன்னிரண்டு ஆண்டுகள் சிறைப்படுத்தி யிருந்தார் என்பது ஈண்டு நினைவுகூரத் தக்கது. தெக்பஹதூர் (1664—75) என்னும் ஒன்பதாவது குரு அவுரங்கசீபை எதிர்த்தார். சீக்கியரின் கோயில்களை

1. Sarkar, History of Aurangzib, IV, P. 484.

இடித்ததுடன் அவுரங்கசீப், குருவின் தூதர்களையும் துன் புறுத்திவந்தார். தெக்பஹதூரை முகலாயர் சிறைப்படுத்தி அவரை முகம்மதியராக்க முயன்றனர். அவர் அதற்கு உடன்பட மறுக்கவே 1675'ல் அவருடைய உறுப்புக்களை வெட்டிக் கொடுமையாகக் கொலைசெய்தனர். அக்குரு, முக லாயப் பேரரசு, ஐரோப்பியரால் அழிவுறும் என்று முன் கூட்டியே அறிவித்தாராம். இறுதியாக உள்ள, பத்தாவது குரு கோவிந்தசிங் (1675—1708) சீக்கியரின் படை வலி மையை மிகவும் பெருக்கினர்; முகலாயரை அழிக்கும் நோக்கத்துடன் அவர் தீவிரமாக முயற்சிகள் செய்துவந்தார். அடிக்கடி, பேரரசரின் படைகளுடன் அவர் பொருதநேர்ந் தது. அப்போராட்டத்தில் தமது நான்கு மக்களையும் இழந் தார். 1705'ல் அவர் தக்கணத்துக்குச் சென்று அவுரங்க சீப் இறந்தபின் தம்நாடு திரும்பினர். 1708'ல் ஐதராபாத் தில் ஒரு ஆப்கானியன் அவரைக் கொன்றான். சீக்கியரின் படை வலிமை பெருகுவதற்கு அவுரங்கசீபின் மதக்கொள் கையே காரணமாகும்.

பண்டல்கண்டு நாட்டின் சம்பத்ராய், 1642 முதல் 1658 வரை பேரரசரின் பணியிலமர்ந்திருந்தார். அதன் பிறகு அவர் அவுரங்கசீபை எதிர்த்துக் கலகம் செய்து தோல்வியுற்று 1661'ல் தற்கொலை புரிந்துகொண்டார். அவர் மகன் சத்ராசால் (1650—1731), தொடக்கத்தில் முகலாய ருடன் ஒத்துழைத்தார். ஆனல் அவுரங்கசீபின் மதக் கொள்கை அந்த இந்து வீரரின் உளத்தை மிகுதியாகப் புண் படுத்திவந்தது. பண்டல்கண்டு, மாளவம் ஆகிய நாடுகளின் இந்துக்களுடைய பிரதிநிதியாக அவர் முகலாயரை எதிர்க்கத் தொடங்கினர். 1670—1'ல் சிவாஜியுடன் அவர் நட்புக் கொண்டார்; முகலாயப் பேரரசில் சில இடங்களைச் சூறை யாடினர். கலிஞ்சரையும் கைப்பற்றிக் கொண்டார். 1705'ல் பேரரசர் அவரை மகிழ்விக்க எண்ணங்கொண்டு அவரை 4000 குதிரை வீரர்களுக்குத் தலைவரான மான்சப்தாராக ஆக்கினர். ஆனல் அவ்வீரர் பண்டல்கண்டின் உரிமைக் காகவும் சமய உரிமைக்காகவும் மீண்டும் பேரரசருடன் போர்

தொடங்கினர். மராட்டியவீரரான முதலாம் பாஜிராவுடன் சேர்ந்துகொண்டு சத்ராசால் முகலாயரைத் தாக்கலானார். அவர் இறக்கும் முன்னரே, பண்டல்கண்டில் முகலாயர் ஆட்சி அழிந்துவிட்டது. சத்ராசால் ஒரு புலவர். பூஷண் திருபாதி என்ற இந்திக் கவியை அவர் ஆதரித்தார். அவருடைய அவைக்களப் புலவராக விளங்கிய லால்கவி "சத்திர பிரகாசம்" என்ற நூலை ஆக்கியுள்ளார். பண்டல்கண்டின் அரசர்களைப் பற்றி அந்நூல் குறிப்பிடுகிறது.

இரண்டாவது ஜாட் கலகம்: மதுரா மாவட்டத்தைச் சேர்ந்த ஜாட் குடியானவர், 1685'ல் மறுபடியும் கலகம் செய்தனர். இராசாராம் ஜாட் என்பார் அக்கலகத்தின் தலைவராக விளங்கினர். அவுரங்கசீப், எவ்வளவு முயன்றும் கலகங்களை அடியோடு நிறுத்தமுடியவில்லை. மாளவம், கோண்டுவானு, பீஹார், முதலிய பல இடங்களில் கலகங்கள் தோன்றிவந்தன.

ஆங்கிலேயருடன் தொடர்பு: ஆங்கிலேயர், 1651'ம் ஆண்டிலேயே வங்காளத்தில் ஹூக்ளி பகுதியில் சிலவாணிக உரிமைகளைப் பெற்றிருந்தனர். ஆனால் முகலாயர் அச்சலுகைகளை அடிக்கடி மாற்றிவந்ததையும் அவை நிலையானவை அல்ல என்று அறிவித்ததையும் ஆங்கிலோயர் விரும்ப வில்லை. இதனால் முகலாயருக்கும் அவர்களுக்கும் போராட்டம் விளைந்தது. 1686'ல் மூன்று ஆங்கிலேயர் கைதியாக்கப்பட்டதால் முகலாயக் கப்பல் ஒன்றை ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டனர். வங்காளத்தில் அரசப்பிரதிநிதியாக இருந்த ஷயிஸ்தா கான் ஆங்கிலேயத் தொழிற்சாலைகளைத் தம் வசப்படுத்திக் கொண்டார். ஆங்கிலேயர் வங்காளத்தை விட்டு வெளியேறிச் சென்னைக்கு வரத் தொடங்கியவுடன் அவுரங்கசீப், அவர்களுடன் அமைதி உடன்படிக்கை செய்துகொள்ள விழைந்தார். கடல் வலிமைபெற்ற அம்மக்கள், மெக்காவுக்குச் செல்லும் முகம்மதியருக்கு இடையூறு விளைக்கக்கூடும் என்று அஞ்சிய அவுரங்கசீப், 1690'ல் ஆங்கிலேயரே மீண்டும் வங்காளத்தில் தங்கி வாணிகம் செய்ய அனுமதித்தார். ஆண்டுக்கு 3000 ரூபாய் வரி மட்டுமே அவர்கள் செலுத்தவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அவ்வயல் நாட்டவரின்

வாணிகத்தால் கிடைத்த லாபத்தை இழக்க முகலாயருக்கு விருப்பமில்லை. ஹூக்ளி ஆற்றங்கரையில் ஒரு சிறு ஊரில் ஆங்கிலேயர் தமது வாணிக நிலையத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அச்சிறு ஊரே இப்பொழுது கல்கத்தாவாக வளர்ந்துள்ளது. சூரத் பகுதியிலும் ஆங்கிலேயருக்கும் முகலாயருக்குமிடையே போராட்டம் விளைந்தது. முடிவில் 1690'ல் அங்கும் இரு சாராரும் ஓர் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டனர். முகலாயப் பேரரசுடன் ஆங்கிலேயர் போர் தொடுத்தது குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். ஆனால் அப்போர்முறை தகுதியுடையதன்று என்று அக்கொள்கையைக் கைவிட்டு மேலும் சில ஆண்டுகள் அமைதியான கொள்கையை ஆங்கிலேயர் பின்பற்றலாயினர்.

**அவுரங்கசீபின் இறுதிக்காலம்:** வடஇந்தியாவிலிருந்து அவுரங்காபாதுக்கு 1682'ல் வந்து சேர்ந்த அவுரங்கசீப், ஆமது நகரம், ஷோலாப்பூர், பீஜப்பூர், கோல்கொண்டா, கொரீகான் முதலிய பல இடங்களுக்குச் சென்றுகொண்டிருந்தார். 1695'ல் அவர் பிரம்மபுரிக்குச் (இஸ்லாம்புரி என்ற புதியபெயர் அதற்குக் கொடுக்கப்பட்டது) சென்று அங்கே நான்கு ஆண்டுகட்குமேல் தங்கினார். பிறகு 1699'ல் பல கோட்டைகளுக்குச் சென்று 1706'ல் மீண்டும் ஆமதுநகரம் போய்ச் சேர்ந்தார். மகாராட்டிரரை அடக்கும் பயனற்றமுயற்சியில் அவர் பல ஆண்டுகளைக் கழித்திருந்தார். அவருடைய இறுதிப்படையெழுச்சி 1705'ல் வாகின்கிரா என்னுமிடத்தில் நிகழ்ந்தது. ஐதராபாத்தில் குல்பர்கா மாவட்டத்தில் சாகருக்கு அண்மையிலுள்ள அவ்விடத்தில் முகலாயருக்குப் பகையாகக் கலகமேற்பட்டதே அப்படையெழுச்சிக்குக் காரணமாகும். அங்கு ஆட்சி புரிந்து வந்த நாயக்கமன்னர், மராட்டியரின் உதவியைப் பெற்றிருந்தார். பல இடையூறுகளுக்குப் பின் அக்கோட்டையைப் பேரரசர் தம்மடிப்படுத்தினர். ஆனால் விரைவில் அவர் நோய் வாய்ப்பட்டு அவதியுற்றார். 1706'ல் ஆமதுநகருக்குத் திரும்பிய அவர் 1707'ல் உயிர் நீத்தார். தௌலதாபாத்துக்கு அருகில் அவர் உடல் புதைக்கப்பெற்றது.

அவுரங்கசீப் தமது இறுதிக் காலத்தில் தமது செயல்களுக்காக மனம் வருந்தினர். அவருடைய அரசியல் கொள்கை தோல்வியுற்றதென்பதையும் அவர் அக்காலத்தில் உணர்ந்தார். அவருடைய மூத்த மகள் 1702'ல் இறந்துவிட்டார். மகன் அக்பர் பாரசீகத்தில் (1704 அல்லது 1706'ல்) இறந்தார். அவர் மகண் ஆஸம் தன் உடன் பிறந்தானை காம்பக்கைஷ வெறுத்து அரசப் பதவிக்காகப் போட்டி யிட்டு வந்தான். முவாஸாம் என்ற மகன், காபூலில் அரசப் பிரதிநிதியாக இருந்தான். காம்பக்க்ஷ் அரியணையை நாடி மாராட்டியருடன் சேர்ந்துகொண்டு சூழ்ச்சிசெய்துகொண்டிருந்தார். தம் மக்களுக்கு அவுரங்கசீப் பல அறவுரைகள் கூறி முடங்கல்கள் எழுதினர். ஒற்றுமையாக இருக்கும்படி வேண்டினர். அவர் இறுதிக் காலத்தில் தாம் தனித்திருப்பதாக உணர்ந்து தமது சாவுக்குப்பின் தமக்கு என்ன நேருமோ என்று அஞ்சியதாக அறிகிறோம். அவர் எழுதியுள்ளதாவது:- "நான் தனியாக இம்மண்ணில் பிறந்தேன்; தனியாகவே இதை விட்டுப் பிரியப்போகிறேன்; எதிர்காலத்தில் எனக்கு நம்பிக்கை மறைந்துவிட்டது. பாதரசத்தைப்போல் இப்பொழுது நான் நிலை குலைந்திருக்கிறேன். என் உள்ளம் நடுங்குகிறது. நான் பிறந்தபொழுது ஒன்றையுங் கொண்டுவரவில்லை; ஆனால் இப்பொழுதோ என் பாபங்களைச் சுமந்து செல்கிறேன். எனக்கு ஆண்டவன் யாது தண்டனை விதிக்கப்போகிறாரோ அறிகிலேன். கடவுளின் கருணையில் எனக்கு நம்பிக்கை உண்டு; எனினும் நான்புரிந்த செயல்கள் எனக்குக்கவலையைத் தருகின்றன."[1]

## பகுதி 2

### அவுரங்கசீபின் மதக்கொள்கை

அவுரங்கசீப் அரசராக அமர்ந்தபின் இருபது ஆண்டுக் காலத்தில் (1659—'79) முகம்மதியருக்குச் சார்பாகவும், இந்துக்களுக்குப் பகையாகவும் பல உடனடிச் சட்டங்களைப் பிறப்பித்தார். அவை, மக்களின் அமைதியான சமூக

1. Sarkar, History of Aurangzib, V (1924) pp. 259—60.

வாழ்க்கைக்கும், சமய வாழ்க்கைக்கும் இடையூறு விளைவிக்கத் தக்கனவாயிருந்தன. முடிசூட்டுவிழாக் காலத்திய உடனடிச் சட்டங்களை முன்னர் கண்டோம். விரிநிலை மனப்போக்குக் கொண்ட முகமதிய குருமாரை அவர் வெறுத்தார். ஒவ்வொரு மதத்திலும் உண்மை உண்டு என்ற கொள்கை உடையோ ரையும், தாராவிடம் அன்புகொண்டவர்களையும் அவர் கொலை செய்தார். 1659'ல் புதிய கோயில்களைக் கட்டக்கூடாது என்று ஆணை பிறப்பித்தார். ஆனால் அவ்வமயம் பழைய கோயில்களை இடிக்க அவர் விரும்பவில்லை. 1664'ல் கோயில் களைப் புதுக்குவது குற்றம் என்று அறிவித்தார். அவ்வாண்டில் சதி என்னும் பழக்கத்தைத் தடை செய்ய அவர் முயன்றது பயனுறவில்லை. அடுத்த ஆண்டில் இந்துக்களுக்கு மட்டும் வாணிக வரியை 2½-சத வீதத்திலிருந்து 5-சத வீதத்திற்கு உயர்த்தினர். 1667'ல் முகம்மதியர் தாம் செலுத்தி வந்த 2½-சதவீத வரியினின்றும் விலக்குப் பெற்றனர். இதனல் அரசியலாரின் வருமானம் மிகவும் குறைந்துவிட்டது. அவுரங்கசீப், 1668'ல் நாட்டில் இசை வளர்ச்சியைத் தடுப்பதற்கான சட்டங்களை நிறைவேற்றினர். இந்து சமயப் பழக்கவழக்கங்கள் சில தடைசெய்யப்பெற்றன. குழந்தைகளை விதையடிக்கும் வழக்கத்தை நிறுத்த பேரரசர் அவ்வாண்டில் முயன்றது பயனுறவில்லை. 1669'ல் அவர், ஆட்சித்தலைவர் களுக்கு, தம் தம் வரையறைக்குட்பட்ட பகுதிகளிலிருந்த இந்துக் கோயில்களை இடித்து விடுமாறு ஆணையிட்டார். தரோகோ எனப்பெறும் தனி அலுவலாளரை அமர்த்திப் பேரரசர் தமது ஆணைகள் நிறைவேறுவதற்கான ஏற்பாடும் செய்தார். அழிவுற்ற கோயில்களில் காசி, மதுரா, சோமநாத புரம் ஆலயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. எரியுந்தீயில் எண்ணெயை ஊற்றுவதுபோலக் கோயில்கள் இடிக்கப்பட்ட முறையும் இந்துக்களின் மனத்தை மிகவும் புண்படுத்தியது. அதே ஆண்டில் தீபாவளி, ஹோலி, முகரம் முதலிய விழாக்கள் அரசியலாரின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப் பெற்றன. சபைகளில் இந்து முறைப்படி வணக்கமொழி கூறுவதை அவுரங்கசீப் 1670'ல் மாற்றிவிட்டு 'சலாமாலேகும்' (நீவிர் அமைதிபெறுவீர்) என்று கூறும் வழக்கத்தைத் தொடங்

கினர். பேரரசரின் பிறந்தநாள் கொண்டாட்டங்களையும் அறவே நீக்கினர். அரசியலாரின் நிலங்களில் வரிவாங்கும் அலுவலாளர்கள் முகம்மதியர்களாகவே இருக்கவேண்டுமென்று 1671'ல் சட்டம் பிறப்பித்தார். மேலும் பேரரசு முழுவதிலும் தலைமைக்கணக்கர்களாக இருந்த இந்துக்கள் பதவிகளினின்று விலகி அவர்கள் இடங்களில் முகம்மதியர் அமரவேண்டு மென்றும் ஆணை பிறந்தது. ஆனால் தகுதி வாய்ந்த முகம்மதி யர்கள் போதுமான அளவுக்குக் கிடைக்காததால் 50 சதவீதமே அலுவலாளர் மாற்றப்பட்டனர். 1675'ல் பேரரசர், குறி நூல் அறிஞர்கள், நாட்கோட் குறிப்பைத் தயார் செய்யக் கூடாது என்று ஆணையிட்டார். இரண்டு ஆண்டுகட்குப் பிறகு ஆண்டுதோறும் நடைபெற்றுவந்த முடிசூட்டுவிழா நினைவுக் கொண்டாட்டம் தடைசெய்யப் பெற்றது. 1679'ல் பேரரசு முழுவதிலும் முகம்மதியரல்லார் மீது ஜிஸியா வரியை மீண்டும் அவுரங்கசீப் சுமத்தினர். அதற்கு ஏற்பட்ட எதிர்ப்பை அவர் பொருட்படுத்த வில்லை. பேரரசரின் அக்கொள்கை குரானுக்கே முரணனது என்பதை சிவாஜி, அவுரங்கசீபுக்கு எழுதிய முடங்கலில் விளக்கியுள்ளார். ஜிஸியாவரி விதிக்கப் பட்டமுறை அவுரங்கசீபின் அரசியலில் ஒரு தவருகும்; நெறி முறைக்கும் அது ஏற்றதன்று; தவிர, பொருளாதாரத் துறை யிலும் அதனல் தீயவிளைவே ஏற்பட்டது. மிக எளிய நிலை யிலிருந்த மக்கள், அவ்வரியினல் மிகமிகத் துன்பமுற்றனர். 1687'ல், பேரரசர் மக்களுக்குக் காட்சிதருதல் போன்ற வழக்கங்களை அவுரங்கசீப் ஒழித்தார். பொதுவாக அவர் இந்துப் பழக்க வழக்கங்களை வெறுக்கலானர். முகம்மதிய ராகமாறும் இந்துக்களுக்குப் பல வகைகளில் உதவி அளித் தார். இந்துக் குற்றவாளிகள் முகம்மதியராக உடன்பட்டால் மன்னிக்கப் பெறுவர் என்றும் மன்னர் அறிவித்திருந்தார். இந்துக்களில் இராசபுத்திரர் மட்டுமே பல்லக்கில் போவதற் கும், யானை, குதிரைகளின் மீது செல்வதற்கும், போர்க் கருவிகளை வைத்துக்கொள்வதற்கும் உரிமை பெற்றவராவர் என்று 1695'ம் ஆண்டின் சட்டம் கூறியது. அவுரங்கசீப் "சுன்னி" பிரிவைச் சேராத முகம்மதியரையும் வெறுத் தார். முகம்மதியர் முகம்மதியரைத் தாக்குவது இஸ்லாமியர்

கொள்கைக்கு முரணுனது என்று தலைமைக்காஜி கூறியதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. தாம் செய்தனவெல்லாம் தம் சிறந்த கடமைகள் எனக்கருதி அவற்றை அவர் செய்ததால் அவற்ருல் விளையும் தீமைகளைப் பொருட்படுத்தவில்லை. இராசபுத்திரர், சீக்கியர் முதலியோருடைய பகைமையை அவர் பெற்றமைக்கு அவருடைய தீவிரமான மதக்கொள்கையே காரணமாகும். பேரரசிலும் அடிக்கடி கலகங்கள் தோன்றிவந்தன. அவருடைய மதவெறி, முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குரிய பல காரணங்களில் ஒன்ருகக் கருதப்படலாம்.

## பகுதி 3

### அவுரங்கசீபின் தன்மையும் தோல்வியும்

தன்மை. அவுரங்கசீபின் தனிப்பட்ட வாழ்க்கையில் பலநற்பண்புகள் இருக்கக் காண்கிருேம். கடமைகளை ஊக்கத்துடன் செய்யும் இயல்பு அவரிடமிருந்தது. சிற்றின்பத்தையும் மது மாமிசங்களையும் அவர் விரும்பவில்லை. உணவு, உடை முதலியவற்றில் குரானின் கட்டுப்பாடுகளை அவர் மீறவில்லை. தம்பொருட்டு அரசியல் கருவூலத்திலிருந்து பணத்தைச்சிறிதும் செலவு செய்ய அவர் விரும்பவில்லை. தாமே தொழில் செய்து அதனுல் பெறும் ஊதியத்தையே அவர் தமக்கென செலவழித்துக் கொண்டார். அவர் சாகுந்தறுவாயில் அறிவித்த ஆணைகள் வருமாறு:—" நான் குல்லாய் தைத்ததினுல் கிடைத்த ரூபாய் நான்கும் அணு இரண்டும் இருக்கிறது. அதைக்கொண்டு நான் இறந்ததும் என் சவத்தை மூடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். என்னுடைய சிலவுக்கென, ரூபாய் 305, பணப்பையில் வைத்திருக்கிறேன். குரானைப் படியெடுத்ததற்காக நான்பெற்ற கூலி அது. நான் இறக்கும் நாளில் அத்தொகையைப் பக்கிரிகளுக்கு (தொண்டர்)க் கொடுங்கள். பகட்டான இசை முதலிய சடங்குகளின்றி என்னைப்புதையுங்கள்." மிகவும் உயர்நிலையிலிருந்த அவருடைய இல்லற வாழ்க்கை தூய்மை நிறைந்ததாயிருந்தது. அவர் ஒரு துறவியாகவும் ஒருவீரராகவும்

விளங்கியது நோக்கத்தக்கது. இளமையிலிருந்தே அவரிடம் அமைதியும் வீரமும் பொலிந்தன. அவர் தமது தந்தையிடமும் உடன்பிறந்தாரிடமும் பழிக்கத்தக்க வகையில் நடந்துகொண்ட போதிலும் அவருடைய வெற்றிகள், அவருடைய படைவீரத் திறமையை நன்கு காட்டுகின்றன. தாம் விதிக்கும் கட்டுப் பாடுகளைச் சிறிதளவும் மீற அவர் இணங்கியதில்லை. அரச னின் கடமைகளை அவர் நன்கு உணர்ந்திருந்தார். மக்களுக் காக அரசன் தன்னை தியாகம் செய்ய முன்வரவேண்டு மென்ற உணர்ச்சி அவரிடமிருந்தது. அரசபதவியென்பது பணிபுரிதலேயன்றி இன்ப வாழ்வு அன்று என்பது அவர் கோட்பாடு. அவர் தமது முதுமைப் பருவத்தில்கூட விடா முயற்சியுடன் செயலாற்றினர். செய்திகளை நினைவிற் கொள் ளும் அவருடைய ஆற்றல் பாராட்டத்தக்கது. முதுமைப் பருவத்திற்கூட கண்களுக்குக்கண்ணுடி போட்டுக்கொள்ளாமல் தாமே விண்ணப்பங்களில் குறிப்புக்கள் எழுதி வந்ததை அறிஞர் கரேரி குறிப்பிட்டுள்ளார். அவுரங்கசீப், அரேபிய, பாரசீக மொழிகளில் ஒரு அறிஞராக விளங்கினர். துருக்கிய மொழியையும், இந்தி மொழியையும் அவர் அறிந்திருந்தார். குரான் அவருக்கு மனப்பாடம். சமய நூலறிவிலும், முறை வழங்கலிலும் அவருக்கு மிக்க ஆற்றலிருந்தது. முகம்மதியச் சட்டங்கள் தொகுக்கப்படுவதை அவர் ஆதரித்தார். சுருங்கக் கூறின் அவருடைய அறிவாற்றல் போற்றத்தக்கதே. அரச தந்திர முறையிலும் அவுரங்கசீப் வல்லுநராக விளங்கினர். "அரசியலாருக்குச் சூழ்ச்சித்திறம் இன்றியமையாதது; பொது வாக அது வெறுக்கப்பட்டபோதிலும் குரான், அம்முறையைக் குற்றம் என்று கூறவில்லை."[1] என்று அவரே கூறியுள்ளார். பாசாங்கு செய்யும் கலையில் அவுரங்கசீப் மிகவும் தேர்ச்சி பெற்றவரென்று அறிஞர் பெர்னியர் குறிப்பிடுகிருர்.[2] அவ ருடைய தாழ்மை உணர்ச்சி, முறை வழங்கும் ஆற்றல் முதலியவற்றை கபீகான் விளக்குகிருர்.[3] சில பண்புகளில் அவுரங்கசீப், அக்பரைவிட உயர்ந்தவர். "அவுரங்கசீபும்,

1. Sarkar, Anecdotes of Aurangzib, pp. 96—7.
2. Constable and Smith, op. cit., p. 10
3. E & D. V11, p. 386

சிவாஜியும் மானிட வரம்பு கடந்த திறலோர்; ஆனால் தன்மையில் இருவரும் மாறுபட்டவர்கள்.''[1] அவுரங்கசீப், தமது கடமைகள் என்று சிலவற்றை உறுதியுடன் கடைப்பிடித்ததால் சகிப்புத்தன்மையற்ற சமயக் கொள்கையை மேற்கொள்ள வேண்டிய நிலையிலிருந்தார். அவர் ஒருவரையும் நம்புவதில்லை. ''உமது குமாரர்களை நீங்கள் நம்பாதீர்கள். அவர்களுடன் நெருங்கிய தொடர்பும் கொள்ளாதீர்கள். உலகியல் சார்பான மக்கள் யாவரும் சூழ்ச்சிக்காரர்கள். அவர்களை நம்பி எதையும் செய்யவேண்டாம்.'' என்று அவர் தமது குமாரர்களுக்கு, இறுதிக்கால அறவுரை கூறினர்.[2] நம்பிக்கையற்ற அத்தன்மை அவருடைய குமாரர்களுக்கும், அலுவலாளருக்கும் தீமையையே அளித்தது. அளவு கடந்த கட்டுப்பாடுகள் அலுவலாளர்மீது விதிக்கப்பட்டிருந்தன. திறமை வாய்ந்த பணியாளரைவிடத் தீமையற்ற பணியாளரையே அப்பேரரசர் விரும்பினர். அவர் தமது பகைவரிடம் சிறிதும் அன்புகாட்டியதில்லை. மக்கள் அச்சத்தால் அவருக்கு அடங்கினரேயன்றி அன்பாலன்று. கலை, இசை, செய்யுள், முதலியவற்றை அவர் வெறுத்தார். வரலாறு எழுதுவதையும் அவர் தடைசெய்தார். பல நற்குணங்கள் அவுரங்கசீபிடம் இருந்தன என்பது உண்மை. ஆனால், முகம்மதியரல்லாதார் மிகுதியாக உள்ள ஒரு பேரரசை ஆளவேண்டிய முறையை அவர் உணரவில்லை.

சிறப்புவாய்ந்த அலுவலாளர்கள். இராசா ரகுநாதர் என்பார் 1658 முதல் 1663 வரை திவானகப்பணியாற்றினர். நேர்மையை அவர்மனம் நாடியது; குடியானவர்களிடம் அன்பு பாராட்டினர். 1663-முதல் 1670-வரை முதலமைச்சராக இருந்தஜாபர்கான் (மும்தாஜ்மஹாலின் தங்கை மணாளன்) குறிப்பிடத்தக்க மற்றொரு அலுவலாளராவர். தலைமைக்காஜியாகப் பணியாற்றிய ஷெயிக்-உல்-இஸ்லாம் (1676–83) கல்வியிலும் பண்பாட்டிலும் சிறப்பு வாய்ந்தவர். முகம்மதிய நாட்டுடன் போர்தொடுப்பது தகாத செயல் என்று பேரரசருக்கு அவர் துணிவுடன் அறிவுரை கூறினர். தம் கருத்தைப்

1. Sarkar, Shivaji and His Times, p. 354
2. Sarkar, History of Aurangzib, V. pp 266 & 261

பேரரசர் விரும்பவில்லையென்றுணர்ந்தவுடன் மெக்காவுக்கு யாத்திரை செல்ல விரும்புவதாகக் கூறி அவர் தம் பதவியினின்று விலகிக் கொண்டார்.

**ஆட்சிமுறை:** அக்பரின் ஆட்சிமுறை சிதறுறுவதற்கு அவர் பிறப்பித்த மதச்சட்டங்களே காரணமாயின. பேரரசு விரிவடைந்து வந்தது. ஆனால் மன்னர் தம்மிடமே எல்லா அதிகாரங்களையும் வைத்திருந்தார். தொடர்ந்து அவர் நிகழ்த்தி வந்தபோர்கள் நாட்டின் அமைதியையும் பொருளாதார அமைப்பையும் குலைத்தன. அலுவலாளரிடைக் கைக்கூலி கொடுத்தல் முதலிய தீய பழக்கங்கள் பரவின. உழவரின் நிலை கேடுற்றது. மிகுதியான பொருள்கள் போர்களுக்காகச் செலவிடப்பட்டதால் நிதி நிலைமை கேடுற்றது. பேரரசில் இருபத்து ஒரு மாகாணங்கள் இருந்தன. அவற்றில் ஆறு-காண்டெஷ், பேரார், அவுரங்காபாத் அல்லது ஆமது நகரம், பீடார், பீஜப்பூர், கோல்கொண்டா அல்லது ஐதராபாத் ஆகியன-தக்கணத்தில் உள்ளவை. மற்ற பதினைந்து மகாணங்களாவன:— காபூல், காச்மீரம், லாகூர், முல்தான், சிந்து, ஆச்மீர், தில்லி, ஆக்ரா, அலகாபாத், அயோத்தி, பீஹார், வங்காளம், ஒரிஸ்ஸா, மாளவம், குஜராத். ஏறத்தாழ 1580'ல் பனிரண்டு மாகாணங்களே பேரரசில் இருந்தன. பிறகு அவற்றுடன் காச்மீரம், சிந்து, ஒரிஸ்ஸா ஆகிய மூன்றும் சேர்க்கப் பெற்றன. 1601'ல் அக்பர், காண்டெஷ், ஆமது நகரம், பேரார் ஆகிய மூன்று மகாணங்களைப் பேரரசுடன் இணைத்தார். பீடார், பீஜப்பூர் கோல்கொண்டா ஆகிய மூன்றையும் அவுரங்கசீப் இணைத்தார். தக்கணத்தின் பல பகுதிகளில் அவுரங்கசீபின் அதிகாரம் பெயரளவுக்குத்தானிருந்தது. மகாராட்டிரம், மேலைக்கருநாடகம், கீழைக்கருநாடகம் முதலிய பகுதிகளில் முகலாயருக்கு எதிர்ப்பு இருந்ததென்பதை முன்னர் பார்த்தோம். பேரரசின் நிலவருமானம் சுமார் 33கோடி ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அக்பர் காலத்தில் சுமார் 13 கோடி ரூபாய்தான். அவுரங்கசீபின் கீழ் ஜாகீர்களின் எண்ணிக்கை பெருகியது. 27 கோடி ரூபாய் ஜாகீர்தார்களிடமிருந்து கிடைத்தது. மான்சப்தார்களின் எண்ணிக்கை

1596'ல் 1803; 1647'ல் 8000; 1690'ல் 14449. ஆட்சிமுறை சீர்கேடுற்றுவந்ததை இவை காட்டுகின்றன.

## பேரரசின் வீழ்ச்சிக்கு அவுரங்கசீப் பொறுப்பாளியா?

அவுரங்கசீப், அரசியலைப் பொறுத்தவரை நிலையான வெற்றியைப் பெறவில்லை என்றே கூறவேண்டும். அவர் குறிக்கோள் பெருந்தோல்வியில் முடிந்தது. அரசனின் கடமைகளைப் பற்றி உயர்ந்த கருத்துக்கள் அவ்ரிடமிருந்தன. ஆனால் அவர் முடிவுக்காலம் துயர் நிறைந்ததாகவே இருந்தது. அவருடைய பேரரசு அவர் தந்தையின் பேரரசைவிட அளவில் பெரியதுதான் எனினும் அவுரங்கசீப் முடிவில்கண்டதுதோல்விதான். அவர் புதிதாக இணைத்துக் கொண்ட பகுதிகளால் அவருக்கு நற்பயன் எதுவும் விளையவில்லை. அன்றியும் முதலில் இருந்த பேரரசுக்கே அவை இடையூறு விளைத்தன. பேரரசரின் மதக்கொள்கை நாட்டின் ஒற்றுமையைக் குலைத்துப் பேரரசின் ஆதிக்கத்திற்கு எதிர்ப்பை மிகுதியாக்கியது. ஆட்சி முறையில் கேடுகள் பெருகவே, நாட்டில் ஒழுங்கீனம் ஓங்கியது. பொருளாதார நிலை கேடுற்றது. மராட்டியரின் எதிர்ப்பும் சீக்கியரின் கலகமும் அவுரங்கசீபின் கொள்கையின் விளைவுகளேயாம். கலை, பண்பாடு முதலிய துறைகளில் சிறிதும் முன்னேற்றம் தோன்றவில்லை. வரலாற்று இலக்கியத்தைக் கூட அவுரங்கசீப் தடுத்தார். முகலாயர் கட்டடக் கலை அவர் காலத்தில் மெலிவுற்றது. அவருடைய காசுகளும் சிறப்பு வாய்ந்தனவல்ல. அப்பேரரசரின் தோல்வியைக்கண்டு கபீகான் வியப்புறுகிறார். பேரரசர் மிகவும் கடுமையற்றவராக இருந்ததால் அவருடைய அலுவலாளர்கள் தம் தலைவரின் நற்குணத்தைத் தம் நலனுக்குப் பயன்படுத்திக் கொண்டனர் என்றும் அவ்வறிஞர் குறிப்பிடுகிறார். மேலும் அவர் கூறுவதாவது:— "அவுரங்கசீப் தொடங்கிய எத்திட்டமும் நற்பயனை அளிக்கவில்லை......"[1] அவுரங்கசீபின் முன்னவர்கள் காலத்திலேயே பேரரசின் வீழ்ச்சிக்கான வித்து ஊன்றப் பெற்றது. அவ்வீழ்ச்சிக்கு அப்பேரரசர் பலவகைகளில்

1. E. & D., VII, P. 387

காரணமாயிருந்தார். ஆயினும் இவர் ஒருவரே, அவ்வீழ்ச்சிக்குக் காரணமாவர் என்று கூறமுடியாது. தொடக்கத்திலேயே இருந்த தீமைகள் வளர்ச்சியடையவும், புதிய கேடுகள் உண்டாகவும் அவுரங்கசீப் உதவினர். இந்திய முகலாயர் வரலாற்றில் அக்பருக்கு அடுத்த இடத்தை ஔரங்கசீப் பெறுகிறர். பொதுவாகக்கூறுமிடத்துத் தம்முன்னேர் காலத்து ஆட்சிமுறையை அவுரங்கசீப் மாற்றவில்லே. ஆனல் அதன் உள்வலிமையைப் பொறுத்தவரை பதினேழாம் நூற்ருண்டின் பிற்பாதியில் பெரிய மாறுதலேக் காண்கிறேம். பல பண்புகளில் அக்பரைவிட அவுரங்கசீப் கீழ்த்தரமானவர் என்று கூறலாம்.

## பகுதி 4

### சமயம், சமூகம், பொருளாதாரநிலே, கலே, இலக்கியம் முதலியன

இஸ்லாம். அக்பர் இறந்தவுடன் அவருடைய "தீன் இலாஹி"யும் மறைந்து விட்டது. வைதீக முகம்மதியர் அச்சீர்திருத்த முயற்சியை எதிர்த்து வீறுகொண்டெழுந்தனர். ஆனல் ஜஹாங்கீர் அவர்களுக்கு உதவி செய்யவில்லே. அக்பரின் விரிநிலேக்கொள்கை ஓரளவு ஜஹாங்கீரிடமுமிருந்தது. ஷாஜஹான் "மதக்காவலாராகப் பணியாற்றிஞரென்று முன்னர்க் குறிப்பிட்டோம். அவுரங்கசீப் வைதீக முகம்மதியக் கொள்கைகளுக்குத் தனிச்சிறப்பு அளிப்பதையே தம் முக்கிய கடமையாகக்கொண்டார். ஒரு முகம்மதியப் பேரரசை நிறுவ அவர் செய்த முயற்சி முகலாயப்பேரரசையே அழிக்க வழி வகுத்தது.

சீக்கிய மதம். சீக்கிய மதம் பதினரும் நூற்ருண்டில் அமைதியாக முன்னேறியது; அடுத்த நூற்ருண்டில் முகலாயருக்கும், சீக்கியருக்கும் பகைமை ஏற்பட்டது. அரிகோவிந்தர் (1606—'45) சீக்கியரின் இராணுவ வலிமைப்பெருக்கத்திற்கான ஏற்பாட்டைச் செய்தார். ஜஹாங்கீரும், ஷாஜஹானும் அவருடன் பகைத்துக்கொண்டனர். அவர் பேரன் அரிராய்

(1645—'61) என்னும் ஏழாவது குரு தாராஷுகோவால் பாராட்டப்பெற்றார். ஆனால் அவுரங்கசீப் அவரை விரும்ப வில்லை. தெக்பஹதூர் (1664—'75) என்ற ஒன்பதாவது குரு (அரிகோவிந்தரின் II'ம் மகன்) பேரரசரின் சார்பாக அஸ்ஸாமில் போரிட்டார் (1668). பஞ்சாபிலுள்ள ஆனந்தபுரி அவருடைய தலைநகராகியது. அவுரங்கசீப் கோயில்களை இடிக்கும் வழக்கத்தை எதிர்த்ததால் தெக்பகதூர் 1675'ல் கொலையுண்டார். இறுதிக்குரு கோவிந்தசிங் (1675—1708) (தெக்பஹதூரின் மகன்) முகலாயரை எதிர்த்துப் போர் புரிவதில் முனைந்தார். சீக்கியரிடை சாதி வேற்றுமையை அவர் போக்கினார். அவர்கள் ஒரே வகையான உடையை அணியுமாறு செய்தார். அவர்களைச் சிறந்த போர் வீரர்க ளாக்கினார். முகம்மதியரை எதிர்ப்பது தமது கடமை என்பதை அவர்களுக்கு அறிவுறுத்தினார். "கால்சா" (கடவுளால் தேர்ந் தெடுக்கப்பட்டது) என்ற புதிய படையின் உறுப்பினராக அமர்ந்த சீக்கியர் ஊக்கமும் உறுதியும் கொண்டு முன்னேறு வதற்கான வழியை அவர் வகுத்தார். அம்மதத்தினருக்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பெற்றன. குருமாரின் கடமை முடிந்துவிட்டதென்றும் அவர்களுடைய "கிரந்தமும்" கால் சாவுமே அவர்களுக்கு இனி வழிகாட்டுமென்றும் அவர் அறிவித்தார். கோவிந்தர், இந்தியிலும், பஞ்சாபியிலும், பார சீகமொழியிலும் இயற்றிய பாசுரங்கள் 1734'ல் ஒன்று சேர்க்கப்பட்டு பத்தாவது குருவின் கிரந்தம் என்று போற்றப் பட்டன.

சிறிய சமயப் பிரிவுகள். சாத்னாமியர் என்ற பிரிவினர் கடவுள் ஒருவரே என்ற கோட்பாட்டினராவர். தலையிலும் கண்புருவங்களிலும் மயிரை மழித்துக்கொள்வது அவர்தம் வழக்கம். அவர்களில் பெரும்பான்மையினர் உழவர்களா கவோ, வணிகர்களாகவோ இருந்தனர். கொடுமையைப் பொறுத்துக்கொள்ள அவர்கள் இணங்கவில்லை. ஆதலால் 1672'ல் முகலாயரின் ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்த னர். பதினாறும் நூற்றாண்டிலிருந்த பக்திமார்க்கப் பிரிவினர் அடுத்தநூற்றாண்டிலும் சிறப்புற்று விளங்கினர். தாதுபந்தியர், வல்லபாசாரியர், இராதாவல்லபியர் முதலியோரைத் தவிர

சில புதிய பிரிவினரும் தோன்றியிருந்தனர். 16'ம் நூற்றுண்டின் முடிவிலும், 17'ம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் அரிதாஸ், சைதன்யரின் கொள்கைகளைப்பின்பற்றி பிருந்தாவனத்தில் சமயத்தொண்டாற்றி வந்தார். இராசபுதனத்தில் ஆழ்வார் என்னுமிடத்தில், 17'ம் நூற்றுண்டின் முற்பாதியில் வாழ்ந்த லால்தாசர் இராமநாமத்தை மீண்டும் மீண்டும் கூறுவதால் ஏற்படும் நன்மைகளை விளக்கிவந்தார். அவுரங்கசீப்காலத்தில் அலகாபாத்திற்கு அருகில் பிறந்த மாலுக்தாஸ் என்பார் இராமபிரானை வழிபடும் ஒரு சமயக்கூட்டத்தை அமைத்தார். அவரும் அவரைப் பின்பற்றியோரும் துறவிகளல்லர்.

**சமூக வாழ்க்கை.** முகலாயப்பேரரசில் பணித்துறையில் தொடர்புகொண்ட பெருஞ் செல்வர்கள் உயரிய இன்ப வாழ்க்கையில் திளைத்திருந்தனர். பாரசீக, நடுஆசிய மன்னர்கள்கூட அத்தகைய உயர்ந்த வாழ்க்கை இன்பங்களைப் பெற்றதில்லை என்று கூறலாம். "பால்க்நாட்டின் அரசரின் வருமானம் முகலாயப் பேரரசிலிருந்த மூன்றும்தரச்செல்வரின் வருமானத்தைவிடக் குறைவாகவே இருந்தது."[1] முகலாயப் பெருஞ்செல்வர்கள் இறந்தவுடன் அவர்களுடைய பொருள்கள் அரசியலாருக்கு உரியன என்ற சட்டமிருந்ததால் அவர்கள் தமது விருப்பம்போல் வீண் செலவு செய்து வந்தனர். கைக்கூலி கொடுத்தல் போன்ற தூய்மையற்ற செயல்கள் நாட்டில் இருந்தன. அவுரங்கசீபே, பட்டம் விரும்பிய ஒருவரிடம், பட்டம் தருவதானல் எவ்வளவு பொருள் கொடுப்பீர் என்று கேட்டதாக அறிகிறேம். பெரும்பான்மையும் பெருஞ் செல்வர் குடும்பங்களில், ஆண், பெண் ஒழுக்கக்கேடுகள் காணப்பட்டபோதிலும் பொதுவாக அவற்றை யாரும் பொருட்படுத்தவில்லை. உவளகம் அமைத்துக்கொள்ளும் முறை நிலைபெற்றிருந்ததால் இல்லறவாழ்க்கை இனிதே நடைபெறவில்லை. பேடிகளும் பணிப்பெண்களும் இளஞ்செல்வர்களால் பயன்படுத்திக்கொள்ளப் பெற்றனர். குடி, சிற்றின்பம், முதலிய கேடுகள் பெருஞ் செல்வரின் வாழ்க்கையில் மிகுதியாக இடம் பெற்றிருந்தன. நாட்டில் ஏழை மக்களும் தொழில்

1. Sarkar, History of Aurangzib, V p. 459

புரிவோரும், பெருஞ்செல்வர் இன்பத்தில் திளைத்திருக்க உதவியாயிருந்தனர். அவுரங்கசீபின் கீழ் இந்துக்களின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாக இருந்தது. அவர்கள் தமது மத உரிமையை இழந்திருந்தனர்; அரசியலிலும் அவர்கள் உயர் நிலைபெறமுடியாது. நாட்டில் அடிக்கடி ஏற்பட்ட போர்களாலும் வறுமையினாலும் தொத்து நோய்களாலும் அதிகார வகுப்பினரின் கொடுமைகளாலும் எளிய உழவர்களின் வாழ்க்கை மிகவும் துயரம் நிறைந்ததாயிற்று. அடிமைகளின் எண்ணிக்கை மிகுதியாகிவந்தது. அதனால் ஒழுக்கக்கேடுகள் பரவியதுடன் சமூக முன்னேற்றமும் தடையுற்றது. "தாஜ் மகாலேயும் மயிலாசனத்தையும் பார்த்துவிட்டு முகலாய இந்தியாவில் பொதுமக்கள் வாழ்க்கை மிக உயர்நிலையிலிருந்த தென்று கூறிவிடுவது தவறு. பொதுமக்கள் எவ்வித உரிமையு மற்று, கொடுமைப் படுத்தப்பட்டநிலையில் இருந்தனர்."[1]

**பொருளாதாரநிலை.** இந்தியாவில் 17'ம் நூற்றுண்டில் புகையிலை உற்பத்தி முன்னேற்ற மடைந்தது. கரு நீலச் சாயம், பருத்தி, பட்டு, காலிகோ (கள்ளிக்கோட்டையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு வகைத்துணி) முதலிய இந்தியப் பொருள்களை அயல்நாட்டவர் மிகுதியாக விரும்பினர். கீழ்க் கடலோரத்திலிருந்தும் பீஹாரிலிருந்தும் 17'ம் நூற்றுண்டில் வெடியுப்பு மிகுதியாக ஏற்றுமதியாயிற்று. டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் இந்நாட்டுக்கு வந்திருந்ததால் ஏற்றுமதி வாணிகம் பெருகியது. ஆனால் இந்தியாவில் கப்பற்கட்டுந் தொழில் சிறப்பிழந்தது. 17'ம் நூற்றுண்டின் முடிவில் இந் நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருள்களில் பட்டுத்துணி வகைகளும், ஜரிகைகளும் சிறப்பானவை. ஆங்கிலேயத் தொழில் வல்லுநரின் உதவிகாரணமாகச் சாயத்தொழிலும் பட்டுநெசவும் முன்னேற்றமடைந்தன. கீழ், மேல்கடலோரங் களில், போர்கள் காரணமாகப் பருத்தித்தொழிலின் வளர்ச்சி தடையுற்றது. ஆகவே வங்காளம் அத்துறையில் முன்னேற்ற மடைந்தது. இந்தியர் இறக்குமதி செய்துவந்த பொருள்களில், வெள்ளி, பொன், செம்பு, ஈயம், உயர்ந்தவகைக் கம்பளிகள்,

1. Ibid, pp. 479—80.

வாசனைப் பொருள்கள், உயர்தரப் புகையிலை, இன்தேறல், ஐரோப்பிய விந்தைப்பொருள்கள், குதிரைகள் முதலியன சிறப்பானவை. அபிசீனிய அடிமைகளும் இறக்குமதி செய்யப் பெற்றனர். முகலாயர் ஆட்சிக்காலத்தில் நாட்டில் பல சமயங்களில் வறுமை ஏற்பட்டது. 1630-முதல் 1632-வரை நீடித்த பெரும்பஞ்சம் அக்காலத்திய அறிஞர்கள் பலருடைய கருத்தைக்கலக்கியது. வறுமைக்காலங்களில் மக்கள் அடைந்த ஆற்றொணுத் துயரத்தைப்பற்றிப் பல குறிப்புக்கள் நமக்குக் கிடைத்துள்ளன. முகலாயர் ஆட்சிமுறையின்கீழ் நாட்டின் வளங்கள் பெருகுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று பெர்னியர் குறிப்பிடுகிருர். அவுரங்கசீபின்கீழ் நிலைமை மேலும் கேடுற்றது. நாட்டிலேற்பட்ட போர்கள், கலகங்கள், வரி வாங்கும் கொடியமுறைகள் முதலியன, வேளாண்மையையும் தொழில் வளத்தையும், வாணிகத்தையும் அழித்தன. பெர்னியர் முதலிய ஐரோப்பிய அறிஞர் கூறுவதைப் பொதுவாக பீம்சென் என்னும் இந்து வரலாற்றறிஞரும் ஏற்றுக்கொள்கிருர்.

## கலையும் இலக்கியமும்

கலை. ஜஹாங்கீர் காலத்திலும் ஷாஜஹான் காலத்திலும் முன்னேறி வந்த கலை அவுரங்கசீபின்கீழ்ச் சிதைவுற்றது. ஜஹாங்கீரின் காசுகள், ஷாஜஹான், அவுரங்கசீப் ஆகியோரின் காசுகளினின்று பெரிதும் வேறுபடுகின்றன. பொதுவாக முகலாய குலத்தினரின் காசுகள், மிகவும் சிறப்புவாய்ந்தவை என்பதில் ஐயமில்லை. அக்பர் காலம் முதல் ஷாஜஹான் காலம் வரை கலைப்பண்புத்துறையில் முகலாயரின் பெருமை போற்றத்தக்கதே. உலகக்கலைப்பண்பு வரலாற்றில் முகலாயருக்கு உயர்ந்த இடம் உண்டு என்பதில் ஐயமில்லை.

இலக்கியம் : சமஸ்கிருதமும் இந்தியும். வரலாற்று இலக்கியத்தின் சிறப்பைப்பற்றி முன்னர் குறிப்பிட்டோம். அந்நூல்களில் குறைபாடுகளிருப்பினும் அவற்றின் பொதுச் சிறப்பு போற்றற்குரியதே. அந்த அளவுக்கு இந்து இலக்கியம் அக்காலத்தில் சிறப்படையவில்லை என்பதும் நோக்கத்தக்கது. தாராஷுகோ, வடமொழி இலக்கியத்தை ஓரளவு ஆதரித்தார்.

முகலாயர் அவையில் ஜகந்நாத பண்டிதர் சிறப்புற்று விளங்கினர். கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த அவர் பல சமஸ்கிருத நூல்களியற்றினர். 17'ம் நூற்றுண்டின் முற்பாதியில் அவர் ஆற்றிவந்த இலக்கியத் தொண்டு போற்றத்தக்கது. அப்பய்ய தீட்சிதரையும் அவர் குறை கூறினர். சீலமில்லாத ஒருவருடைய புலமை பயனற்றது என்பது அவருடைய கருத்தாகும். ஆசப்கான், தாராஷுகோ முதலியவர்களைப் புகழ்ந்தும் அவர் நூல்கள் ஆக்கியுள்ளார். ரசகங்காதரம் என்னும் நூல் அவருடைய சொற்கோப்புக்கலைத் திறனைக்காட்டா நிற்கும். கங்கை, யமுனை முதலிய ஆறுகளையும் இலக்குமியையும் வியந்து உணர்ச்சிப் பாடல்கள் பல அவர் இயற்றியுள்ளார். பாமினிவிலாசம் என்ற அவருலடய நூல் காதலைப்பற்றியதாகும். அரசுரிமைப் போரில் அவுரங்கசீப் வெற்றிபெற்ற பின் ஜகந்நாதபண்டிதர் முகலாயர் சபையினின்று வெளியேறிவிட்டார். கூச்பீஹாரின் பிரண நாராயணர் 1658 முதல் 1666வரை அவ்வறிஞரை ஆதரித்திருக்கக்கூடும். பண்டிதர், 1674'ல் மதுராவில் இறந்தாரென்றுகூறப்படுகிறது. அவர் அக்பர் காலத்தில் அவரால் ஆதரிக்கப்பட்டு வந்தார் என்பது சிலருடைய கூற்று. 17'ம் நூற்றுண்டில் வட இந்தியாவில் சிறப்புற்றிருந்த மற்ெருரு சமஸ்கிருத அறிஞர், காசியைச்சேர்ந்த காகபட்டர் என்பாராவர். அக்காலத்தவர் அவரை "பிரம்மதேவர்" என்றும் "வியாசர்" என்றும் புகழ்ந்தனர். தக்கணத்தின் அந்தணர்கள் சிவாஜியை "க்ஷத்திரியர்" என்று ஏற்றுக்கொள்ள மறுத்துவருகையில் காகபட்டர், அம்மராட்டிய வீரர் ஓர் க்ஷத்திரியரே என்று வற்புறுத்தியதுடன் அவருக்கு வைதீகமுறையில் முடி சூட்டு விழாவையும் நடத்திவைத்தார். ஷாஜஹான் காலத்தில் மகாகவிராசராக விளங்கிய சுந்தர் என்ற அறிஞர் இந்தியாப்பிலக்கணத்தைப்பற்றி எழுதியுள்ளார். சிந்தாமணி, நீலகண்டர், பூஷணர், மாதிராம் ஆகிய நான்கு இந்திக்கவிகள், கான்பூருக்கு அருகே வாழ்ந்தனர். சிவாஜியும், சத்ராசாலும் பூஷணரை ஆதரித்தனர். அவ்வறிஞர் சிவாஜியைப் புகழ்ந்து "சிவராஜ பூஷணம்" என்னும் நூலை ஆக்கித் தந்தார். குவாலியரைச் சேர்ந்த பிஹாரிலால்சௌப் (1603—'63)

என்னும் புலவர் ஆம்பர்நாட்டுச் செய்சிங்கின் ஆதரவைப் பெற்றிருந்தார். கண்ணன் — இராதை காதலை விளக்கும் அவருடைய நூல் (1662) சிறப்புவாய்ந்தது. மார்வார்நாட்டு ஜஸ்வந்த்சிங், சொற்கோப்புக் கலையைப்பற்றி சிறந்ததோர் நூல் எழுதியுள்ளார். மார்வார், மீவார் மன்னர்கள் இந்திப் புலவர்களை அன்புடன் வரவேற்றனர். லால் கவியைப்பற்றி முன்னர் குறிப்பிட்டுள்ளோம்.

## பகுதி 5

### முகலாயப் பேரரசின் வீழ்ச்சி

நிலைகள். அக்பர் முதல் அவுரங்கசீப் வரை உள்ள நான்கு பேரரசர்களும் 150-ஆண்டுகட்கு மேல் ஆட்சி செய்தனர். நீண்ட ஆட்சிக் காலம், நன்மையையே தரக்கூடியது என்று கூறுவதற்கில்லை. ஜஹாங்கீர், ஷாஜஹான் காலங்களிலேயே பேரரசின் சிதைவுக்கான கேடுகள் தோன்றியிருந்தன. எனினும் பேரரசு தொடர்ந்து வந்தது. கொடிய அரசுரிமைப்போர் (1658—'60) பேரரசின் சிதைவு தொடங்கியதைக் காட்டாநிற்கும். ஆயினும் அவுரங்கசீபின் ஆட்சிக் காலத்தின் முற்பாதியில் நாட்டில் அமைதி குலையவில்லை. அவருடைய சமயக்கொள்கைகள், இராசபுத்திரப் போர்கள் ஏற்படக் காரணமாயின. ஜிஸியா வரியை அவர் மீண்டும் விதித்ததாலும் தக்கணத்தில் தொடர்ந்து போர்களேற்பட்டதாலும் பேரரசின் சிதைவு உறுதியாகியது. அவர் இறந்தபின் மேலும் மேலும் கேடுகள் பெருகி அரசு நிலை குலைந்தது.

காரணங்கள்: அரசியல். முகலாயப் பேரரசின் வீழ்ச்சியை ஆராயும் அறிஞர்கள் அதற்குரிய காரணங்கள் பலவற்றை விளக்கிக் கூறுவர். ஈண்டு நாம் பொதுச் சிறப்புவாய்ந்த பெரும் காரணங்களை மட்டும் குறிப்பிடுவாம். முகலாயர் அரசியல் ஒரு தனித்தன்னுதிக்க ஆட்சி என்பது நோக்கற்பாலது. வழி வழியாக வரும் பெருஞ் செல்வர் குழுவோ, மக்கட் பிரதிநிதிக் குழுக்களோ அவ்வாட்சியைக் கட்டுப்படுத்தவில்லை. வரம்பற்ற அதிகாரங்கள் பெற்றிருந்த

முடியாட்சியின் வளர்ச்சியை வரையறைப்படுத்தும் முயற்சி எதுவும் நாட்டில் கிடையாது. அந்த அளவுக்கு உள்நாட்டுத் தாபனங்கள் வளர்ச்சியடையவில்லை. பெருஞ்செல்வர்களின் அதிகார வளர்ச்சி பேரரசரின் விருப்பத்தையே பொறுத்ததாயிருந்தது. அவர்களுடைய செல்வத்தை அரசர் பயன்படுத்திக்கொள்ள இயலும். அவர்கள் இறந்தபின் அவர்தம் பொருள்கள் அரசருக்கே உரியன. அத்துணைப் பேரதிகாரங்கள் அரசருக்கு இருக்கையில் அப்பதவியை வகிப்போர் ஆற்றலற்றவர்களாகவோ, வெறுக்கத்தக்க கொள்கைகளைப் பின்பற்றுபவர்களாகவோ இருந்தால் முடியாட்சி வீழ்ச்சியுறுவதில் வியப்பில்லை. படைவலிமை ஒன்றைமட்டுமே அடிப்படையாகக்கொண்ட ஆட்சிமுறை நீண்ட காலம் நிலைத்திருக்காது. கட்டுப்பாடற்ற வல்லாட்சியில் வரம்பற்ற முறையில் செயல்களாற்றப்படும். அச்செயல்களே அவ்வாட்சியை வேரறுத்துவிடும். பேரரசின் அளவு பெருகப்பெருக அதிகாரங்களும் மேலும் மேலும் மையத்தில் குவிகின்றன. அதனுல் விளைந்த தீமைகள் பலப்பல. ஔரங்கசீபின் காலத்தில் அவற்றை நாம் மிகுதியாகக் காணலாம். குறிப்பாக அவருடைய தக்கணப் படையெழுச்சியின் விளைவுகள் நோக்கற்பாலன. மேலும் அவர், அக்பர் பின்பற்றிய தேசீயக்கொள்கைகளை அறவே விட்டொழித்தார். நாட்டில் பெரும்பான்மையினரின் விருப்பு வெறுப்புக்களைப்பற்றி அவர் கருதவே இல்லை. அவருடைய மதக்கொள்கையின் விளைவாக நாட்டின் செல்வம் வீணுகியது; பேரரசில் ஒற்றுமை குலைந்தது. மேலும் ஔரங்கசீப் வரம்புகடந்து அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி வந்தார். அவருடைய தக்கணக்கொள்கை, பொருளமைப்புச் சீர்கேடுகள் முதலியன வீழ்ச்சியை விரைவுறச்செய்தன. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான வழிகளைப் பற்றி அவர் நன்கு சிந்திக்கவில்லை. தம் முன்னவரின் குறைபாடுகளை நீக்கி ஆட்சிபுரியாததுடன் ஔரங்கசீப் அவற்றைப் பெருக்கிக் கேடுகளை மிகுதிப்படுத்தியும் வந்தார்.

**பொருளாதாரக் காரணங்கள்.** பேரரசில் பொருளமைப்பு முறை நன்கு ஒழுங்கு செய்யப்படவில்லை. மிகுதி

யான அளவுக்குச் செல்வத்தை அரசியலார் வீணாக்கி வந்தனர். பெரும் ஜாகீர்கள் வழங்கப்பட்டன. ஊதியம் அளிப்பதில் ஊதாரித்தனம் தாண்டவமாடியது. தக்கணத்திலும் இந்தியாவுக்கு வெளிப்புறத்திலும் பயனற்ற படையெழுச்சிகளுக்காக அளவற்ற பொருள்கள் செலவழிந்தன. பொருளாதாரச் சீர்கேடுகள் பதினேழாம் நூற்றாண்டில் பெருகியிருந்தன என்பதற்கு ஐரோப்பிய அறிஞர்கள் பல சான்றுகளைத் தருகின்றனர். உள்நாட்டு அறிஞர் பீம்சென் கூறுவதாவது:- "பௌஜ்தார்கள், தேஷ்முக்குகள், சமீந்தார்கள் முதலியோர் இழைத்த கொடுமைகட்கு அளவே இல்லை; எக்காரணம்பற்றியாவது அவர்கள் குடியானவர்களிடமிருந்து பொருள்களைப் பறித்துவந்தனர். ஜிஸியா வரியை வாங்குவதற்காக அமர்த்தப்பெற்றிருந்த அமீனாக்கள் இழைத்த கொடுமைகளை எழுதி முடியாது; கூறுவதற்கும் நாக் கூசுகிறது. மக்களைக்கசக்கிப் பிழிந்து அவர்கள் மிகுதியான பொருளை வாங்குகின்றனர். ஆனால் அதில் ஒரு சிறு பகுதியைத்தான் அரசியலாரின் கருவூலத்தில் சேர்ப்பிக்கின்றனர்......கொள்ளைக் காரரின் எண்ணிக்கை பெருகி வருகிறது...... வேளாண்மை அழிவுறுகிறது. ......ஜாகீர்களைப்பெற்ற முகலாய அலுவலாளர்கள் துணைப்படைகளை வைத்திருக்கப் போதுமான வசதியின்றித் துன்புறுகின்றனர்."[1] அக்பர் காலத்திய ஸப்திமுறை, ஜஹாங்கீர், ஷாஜஹான் காலங்களிலேயே மாறிவிட்டது. சமீந்தார்கள் தோன்றவே, அரசியலாருக்கும், குடியானவருக்குமிடையே நிலவிய நேர்த்தொடர்பு அடியோடு அறுந்துவிட்டது. உழவர், நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு துன்பங்கட்கு உள்ளாயினர். நாட்டில் போதுமான உற்பத்தி இல்லை. உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் பெருகவில்லை. மக்களின் நாட்டம் பணித்துறை அலுவல்களை நோக்கிச் சென்றது. பெருஞ்செல்வர் இன்ப வாழ்க்கையில் திளைத்திருக்கையில் உழவர் துன்பத்தில் உழன்று வந்தனர். வரிகள் மிகுதியாக வாங்கப்பெற்றன. ஆகவே பொருளாதாரச் சீர்கேடுகளும் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாயின என்று கூறலாம்.

---

1. J. B. O. R. S. (1923), p. 368

படை அமைப்பு. அக்பரின் படை அமைப்பு முறையி லேயே சில குறைபாடுகள் இருந்தன என்று முன்னர்ப் பார்த்தோம். ஆனால் அப்பேரரசர் தமது ஆற்றல் காரண மாகத் தம் படையைச் சிறந்த முறையில் பயன் படுத் திக்கொண்டார். அவருக்குப்பின் அக்குறைபாடுகள் பெருகின. ஜஹாங்கீர் ஆட்சிக் காலத்தில் தக்கணப்படை யெழுச்சிகள் ஒழுங்கான முறையில் நடைபெறவில்லை. முகலாய அலுவலாளர்கள் சீர்கேடான முறைகளைப் பின் பற்றியதே அதற்குக் காரணமாகும். அவர்களிடை ஒற்றுமையு மில்லை. மாலிக் ஆம்பரை எதிர்த்த முகலாயப்படை தோல்வி யுற்றதை நாமறிவோம். ஷாஜஹான் கலகம் செய்ததும், மாபத்கான் ஜகாங்கீரைச் சிறைப்படுத்தியதும், ஒழுங்குப் பயிற்சி புறக்கணிக்கப்பட்டு வந்தமைக்குச் சான்றுகளாம். பால்க், காந்தாரம் முதலிய இடங்களில் முகலாய வீரர் தோல்வியுற்றமை, அவர்களுடைய உடல் வலிமையும் ஒழுக்க மும் கேடுற்றுவந்தன என்பதற்கு ஒரு அறிகுறியாகும். அவுரங்கசீப், தலையாய இராசபுத்திர நாடுகளுடன் பகைத்துக் கொண்டார். முகலாயரின் படை அமைப்பில் பல குறை பாடுகள் இருந்தன. விரைவான போக்குவரவுக்கு ஏற்ற வகையில் படை அமையவில்லை. படையினர் தங்குமிடங் ளில் இன்ப வாழ்க்கைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. படையின் உணவுத்துறை நன்முறையில் அமையவில்லை. படையினரிடம் கட்டுப்பாடும் ஒற்றுமையும் கிடையாது. பீம் சென் கூறுவதாவது:— "பொருளாசைமிக்க படைத்தலைவர் கள், தமது அடிமைகளைக் குதிரைகளில் அமர்த்திப் போர் வீரர்களென்று அனுப்பிவிடுகின்றனர்".[1] மான்சப்தாரிமுறை யின் கேடுகளை அது காட்டுகிறது. அத்தகைய படை மராட்டியருக்கு முன் நிற்க முடியுமோ? சிவாஜி, முகலாயப் படை அமைப்பின் குறைபாடுகள் தமது படையில் ஏற்படாத வாறு கண்காணித்து வந்தார். போர்ச்சுகீசியருடனும் ஆங்கி லேயருடனும் முகலாயர் நிகழ்த்திய போராட்டத்திலிருந்து முகலாயர், கடற்படை வலிமையையும் பெற்றிருக்கவில்லை என்பது நன்கு புலனாகும்.

1 Ibid., p. 368.

அரசுரிமைப் போராட்டம்: அரசுரிமை பெறுவதைப் பொறுத்த சட்டத்தின் குறைபாடுகளும் இங்கேக் குறிப்பிடத் தக்கவை. மூத்த மகன்மட்டுமே பட்டத்துக்கு உரியவர் என்று சட்டம் கூறவில்லை. ஆதலால் அடிக்கடி பேரரசில் குழப்பமேற்பட்டது. உமாயூனுக்கும் அக்பருக்கும் தம் உடன்பிறந்தோரால் இடையூறுகள் விளைந்தன. ஜஹாங்கீரும் ஷாஜஹானும் இளவரசர்களாயிருந்தபொழுது சட்டத்தைமீறிக் கலகம் செய்தனர். அவுரங்கசீப் தாமே அரியணை பெறுவதற்காக இழைத்த கொடுமைகளையும் நாமறிவோம். இவையாவும் பேரரசில் பிளவை உண்டுபண்ணின. அரசியலில் அழிவுபாடுகளை விளைத்தன; மக்களுக்கு மாளாத்துயரை அளித்தன. அவுரங்கசீப் காலம் வரை, சிறப்புவாய்ந்தவர், வெற்றியுடன் அரியணையிலமர்ந்தனர். ஆனால் அவருக்குப் பிறகோ நிலைமை வேறு வகையாக மாறியது. பதினெட்டாம் நூற்றாண்டில் உள்நாட்டுக் குழப்பத்துடன் அயலவர் ஆக்கிரமிப்புக்களும் சேர்ந்துகொண்டன. ஆனால் "முகலாயப் பேரரசை அழிப்பதற்கு ஒரு பெரும் பாரசீக வீரரோ, ஆப்கானியப் படையெடுப்பாளரோ, ஒரு நாதிர்ஷாவோ, ஒரு அகமதுஷா அப்தலியோ சிறந்த ஐரோப்பிய வீரரோ, ஒரு டூப்ளேயோ ஒரு கிளைவோ தேவை இல்லை. இவ் வீரர்கள் எவரும் இந்தியாவில் தோன்றுவதற்கு முன்னரே முகலாயப் பேரரசு வீழ்ச்சியுறத் தொடங்கிவிட்டது. அயல்நாட்டு வீரர்கள் தோன்றியிராவிடின் ஒரு மராட்டியத் தலைவரோ ஒரு சீக்கியரோ, தில்லி அரியணையில் அமர்ந்திருப்பாரென்று உறுதியாகக் கூறலாம்"[1]

1 Irvine, The Army of the Indian Moghuls, 1903. p. 296

அதிகாரம் 18.

# பதினேழாம் நூற்றுண்டில் தென் இந்தியாவின் வரலாறு.

## பகுதி I

### ஆமதுநகரம், பீஜப்பூர், கோல்கொண்டா (தொடர்ச்சி)

**ஆமது நகரம்:** பதினும் நூற்றுண்டின் தக்கணவர லாற்றில் ஆமது நகரம் சிறப்பான நிலையைப் பெற்றிருந்தது. ஆனல் 1600'ல் சந்த் பீபீ கொல்லப்பட்டபின் அந்நாடு வீழ்ச்சியடைந்தது. அதன் சிறப்பை மீண்டும் நிலை நிறுத்த மாலிக் ஆம்பர் என்னும் அபிசீனிய அடிமை ஒருவன் பாடு பட்டான். இவன் முயற்சியின் விளைவாக I'ம் பர்ஹானின் மகனை II'ம் முர்த்தாஸா, (1600—31) தௌலத்தாபாத் தில் பட்டமேற்றூர். ஆனல் மாலிக் ஆம்பரே ஆட்சியை உண்மையில் நடத்தி வந்தான். அவன், மராட்டியரின் உதவி பெற்றுத் தன் நாட்டைச் சீர்திருத்தி அமைத்ததுடன் 1610'ல் ஆமதுநகரை முகலாயரிடமிருந்துக் கைப்பற்றிக் கொண்டான். ஆனல் 1617'ல் இளவரசர் குர்ரம் இவனை முறியடித்தார். ஊக்கங்குன்றுத மாலிக்ஆம்பர் விடாமுயற்சியுடன் போரிட்டு 1624'ல் முகலாயரையும், பீஜப்பூர் சுல்தானையும் தோற்கடித் தான். 1626'ல் அவன் இறந்தது முகலாயருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அவர்கள் தெற்கில் தம் விருப்பம் போல் பரவிவருவதைத் தடுத்து அதற்கு ஒரு வரையறையை அமைத்த பெருமை மாலிக் ஆம்பருக்கு உரியதாகும். மேலும் அவன் தோடர்மாலின் நிலவரி அமைப்பை ஒத்த ஒரு ஏற் பாட்டை ஆமது நகரில் ஏற்படுத்தினுன். கொரில்லாப் போர் முறையில் அவன் மிக்க தேர்ச்சி பெற்றிருந்தான். "வேறு எந்த அபிசீனிய அடிமையும் மாலிக் ஆம்பர் அடைந்ததைப் போன்ற உயர்நிலையை அடையவில்லை." [1] அவனுடைய

1. E. & D., op. cit. VI, PP. 428—9.

மகனுன பத்கான், முகலாயருடன் நட்புக் கொண்டிருந்தான். அக்கொள்கையை வெறுத்த ஹமீத்கான் என்ற மற்ருெரு அபிசீனிய அடிமையும் அவனுடைய மனைவியான வீரப்பெண் மணி ஒருத்தியும் அரசரைத் தம் கட்டுப்பாட்டின் கிழ் இருக்கச் செய்து அரசியலை நடத்தி வந்தனர். ஆனுல் பத்கான், தான் இழந்திருந்த அதிகாரத்தை 1631'ல் மீண்டும் பெற்றதுடன் அரசர் முர்த்தாஸாவையும் கொலைசெய்தான். அவருடைய மகனுன III'ம் ஹுசேன் (1631—3) என்ற சிறுவனை பத்கான் அரியணையிலமர்த்தினுன். நாட்டில் குழப்பம் மிகுந்து வந்தது. இறுதியாக அரியணையிலமர்ந்த III'ம் முர்த்தாஸா (1633—6) என்ற நிஸாம்ஷாஹி குலமன்னன் முகலாயருக்கு அடிபணிய நேரிட்டது. 1636'ம் ஆண்டு உடன்பாட்டின்படி முகலாயப் பேரரசர் ஷாஜஹானும் பீஜப்பூர் அடில்ஷாவும் தமக்கிடையே ஆமதுநகரைப் பிரித்துக் கொண்டனர்.

**பீஜப்பூர் அடில்ஷாஹியர்:** மேலே குறிப்பிட்டுள்ள உடன்பாட்டைச் செய்துகொண்ட பீஜப்பூர் சுல்தான், முகம்மது அடில்ஷா என்பாராவர். இவர் II'ம் இப்ராஹிமின் மகன்; 1627 முதல் 1656 வரை சுல்தானுக இருந்தார். இவருக்கு, ஷாஜஹான், 1648'ல் "ஷா" என்ற பட்டத்தை வழங்கினுர். அக்காலத்தில் பீஜப்பூரின், அதிகாரம் இக்கேரியிலிருந்து செஞ்சிவரை பரவியிருந்தது. விசயநகரப் பேரரசு அதனுல் இன்னலுற்றது. முகம்மதுவினுடைய ஆட்சிக் காலத்தின் இறுதிப்பகுதியில், பீஜப்பூருக்குப் பகையாகச் சிவாஜி தமது அதிகாரத்தைப் பெருக்கி வந்தார். II'ம் அலி (1656—72) பீஜப்பூரின் சுல்தானுக இருந்த காலத்தில், சிவாஜி கலகங்கள் விளைத்துவந்தார். பீஜப்பூர் தளபதி அப்ஸல்கானை 1659'ல் அவர் கொன்ருர். அலியின் மகன் சிகந்தரின் (1672—1686) ஆட்சிக் காலத்தில் பீஜப்பூரில் உள்நாட்டுக் கலகங்களும் முகலாயப் படையெழுச்சிகளும் ஏற்பட்டுவந்தன. சிற்சில காலங்களில் பீஜப்பூர் அரசியலார் தம் உதவிக்கு மராட்டியரையும் சேர்த்துக் கொள்ள.வேண்டியிருந்தது. முடிவாக 1686'ல் ஔரங்கசீப் அந்நாட்டைக் கைப்பற்றிக்கொண்டு அதன் சுல்தானைச் சிறையி

லடைத்தார். சிகந்தர், பதினான்கு ஆண்டுகள் சிறையிலிருந்து பின் தமது 32'ம் வயதில் உயிர்நீத்தார். பீஜப்பூரின் அடில்ஷாஹியர் கலைவளர்ச்சிக்கு அரிய தொண்டாற்றினர். தனிப் பண்புகள் வாய்ந்த கட்டடக்கலையைப் பீஜப்பூரில் காண முடியும். உதுமானியக் கலைப்பண்புகளைக் கொண்ட பீஜப்பூர் கட்டடங்கள், மற்ற தக்காணச் சுல்தானியரின் நாடுகளில் உள்ள கட்டடங்களைவிடச் சிறப்பு வாய்ந்தவை. "கண்கவரும் அழகு வாய்ந்த இந்திய நகரங்களில் பீஜப்பூரும் ஒன்று" [1] அடில்ஷாஹியர் வெளியிட்ட செப்புக் காசுகள் யாவும் மிக்க அழகு வாய்ந்தவை.

கோல்கொண்டா: முகம்மது குலி (1580—1612) யின் பின்வந்த முகம்மது குதுப்ஷா (1612—'26), மாலிக் ஆம்பருக்குப் பொருள் உதவி அளித்து வந்ததுடன் தம்நாட்டைப் பெருக்கும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தார். அவர் மகன் அப்துல்லா (1626—72) சிற்றின்பத்தில்மூழ்கிக் காலங்கழிக்கலானார். ஐதராபாத், அவர் காலத்தில், "இந்தியாவின் பாபிலன்" என்று சிறப்பிக்கத்தக்க வகையில் அணிசெய்யப் பட்டிருந்தது. அப்துல்லாவின் தாயாரே 1667'ல் தாம் இறக்கும்வரை ஆட்சி அலுவல்களை நடத்திவந்தார். 1636'ல் ஷாஜஹான், கோல்கொண்டாவை ஒரு அடிமை நாட்டின் நிலைக்குக் கொண்டுவந்தார். ஆனால் பிறகு முகலாயரிடமிருந்து இன்னல் இல்லாத காரணத்தால், மீர்ஜம்லா என்னும் தலைமை அமைச்சரின்கீழ்க் கோல்கொண்டா சிறப்புற்று விளங்கியது. அவ்வமைச்சர் கர்னடக நாட்டில் பல வெற்றிகள் பெற்றதால் கோல்கொண்டா இராச்சியத்தின் எல்லைகள் விரிவுற்றன. அந்நாட்டின் நிலச்செழிப்பும், தொழில் வளமும், (நெசவு, எஃகுத்தொழில், வைரவேலை முதலியன) வாணிக முன்னேற்றமும் அதன் உயர் நிலைக்கு உதவியாயிருந்தன. மசூலிப்பட்டணத்தின் மூலம் கோல்கொண்டா மக்கள் பெரிய அளவுக்கு அயல் நாட்டவருடன் வாணிகத்தை மிகுதியாக நடத்தி வந்தனர். அத்துறைமுகத்தை ஆங்கிலேயரும், டச்சுக் காரரும் மிக விரும்பி அங்குச் சென்றனர்.

---

1 C. H. I. IV P. 570

அப்துல்லாவுக்குப் பின் அவருடைய மருமகன் அப்துல் ஹாசன் (1672—'87) அரியணையிலமர்ந்தார். சிற்றின்பத் துறையில் எளியராயிருந்த அவர், தமது வாழ்நாட்களை, இசை இன்பத்தைத் துய்ப்பதிலும், அழகுக்கலைகளைக் கண்டுகளிப்பதிலும், புலன்களுக்கான இன்பத்தை நாடுவதிலும் கழித்தார். ஏறத்தாழ 1673'ம் ஆண்டில் சூர்யபிரகாசராவ் என்ற பட்டத்தையுடைய மாதண்ணா என்பார் அரசரின் முதலமைச்சராக அமர்ந்தார். அவர் ஒரு வைணவ அந்தணர். அவருடைய உடன்பிறந்தாரான அக்கண்ணா, படைத்தலைவராக்கப் பெற்றார். அவருடைய உறவினரான கோபண்ணா அல்லது இராமநாதசுவாமி (சிவாஜியின் குருவாக இருந்த இராமதாசரல்லர்) பத்ராசலத்தில் (கிழக்குக் கோதாவரி மாவட்டம்) அரசிறை அலுவலாளராக இருந்தார். சிறந்த இராமபக்தரான அவர் அரசாங்கப்பொருளைக்கொண்டு அரசர் அனுமதியின்றி பத்ராசலத்தில் இராமருக்கு ஆலயம் எடுத்தார். அதைக் கண்ட சுல்தான் இராமதாசரைச் சிறைப்படுத்தித் துன்புறுத்தினார் என்றும் இறுதியில் ஸ்ரீராமரும் இலக்குவரும் மானிட உருவில் வந்து சுல்தானுக்குச் சேரவேண்டிய பொருளைக் கொடுத்துவிட்டுத் தம் அன்பரைக் காப்பாற்றினார்கள் என்றும் ஒரு கதை வழங்குகிறது. மாதண்ணாவின் ஆட்சி முறை கொடுமை நிறைந்ததாயிருந்தது. சிவாஜியுடன் அவர் நேச உறவுபூண்டிருந்தார். அவருடைய ஆட்சிமுறையை வெறுத்த கோல்கொண்டாவின் முகம்மதியப் பெருஞ் செல்வர்கள் 1677'ல் அவரையும், அவர் உடன் பிறந்தாரையும் கொலை செய்தனர். அடுத்த ஆண்டில் ஔரங்கசீப் கோல்கொண்டாவைக் கைப்பற்றிக் கொண்டார். சிறைப்பட்ட அப்துல் ஹாசன், "ஆண்டியாயிருந்த என்னை அரசனாக்கிய ஆண்டவன் மீண்டும் இன்று என்னை ஆண்டியாக்கிவிட்டான். அவனுடைய அடிமைகளுக்கு அவரவருக்குத் தக்க வழிகளை வகுக்க அவன் தவறுவதில்லை" என்று கூறினாராம்.[1] அச்சுல்தானிடம் நற்பண்பு அறவே இல்லை என்று கூறுவதற்கில்லை. ஒருசமயம் அவருடைய அவைக்கு வந்திருந்த முகலாயப் பிரதிநிதி ஒருவன், சுல்தான் தன்னைத் தன் நாட்டின் பாதுஷா (அல்லது பேரரசன்) என்று கூறிக்கொண்டதை மறுத்தானாம். அதற்குச்

சுல்தான் "நாங்கள் பாதுஷாக்களாக இல்லாவிட்டால் ஔரங்கசீப், தம்மை "பாதுஷாக்களுக்கு எல்லாம் பாதுஷா" என்று எவ்வாறு கூறிக்கொள்ள முடியும்?" என விடையிறுத்தாராம்.[2]

கலை. முகம்மதுகுலி ஆண்ட காலத்தில் ஜம்மிமஸ்ஜிட், சார்மினர் அல்லது நான்கு கிளைக்கோபுரங்கள் முதலிய கட்டடங்கள் கோல்கொண்டாவில் தோன்றின. அந்நாட்டு அரசர்களின் கல்லறைகளில் குறிப்பிடத் தக்க சிறப்புக்கள் உள்ளன. பிறிதின் சார்பற்ற உள்நாட்டுக்கலை முறையை அவற்றில் காணலாம். "குறுகிய அடிப்பாகத்தையும் புதிய வகையிலமைந்த உருவத்தையும் உடைய வளைமாடங்கள் அக்கட்டடங்களுக்கு அழகைத்தருகின்றன."[3]

## பகுதி 2

### மராட்டியரின் வளர்ச்சியைத் தூண்டிய காரணக் கூறுகள்.

**நில அமைப்பு:** பெரும்பான்மையும் மராத்தி மொழி பேசும் மக்களைக் கொண்ட இக்காலத்து மராட்டிய நாட்டுக்கும் பதினாறும் நூற்றாண்டிலிருந்த மராட்டிய நாட்டுக்கும் நில அமைப்பில் வேறுபாடு உண்டு. அக்காலத்திலிருந்த மராட்டிய நாட்டில் நாசிக், பூனா, சதாரா மாவட்டங்கள், ஆமது நகர மாவட்டத்தின் சில பகுதிகள், ஷோலாப்பூர் மாவட்டத்தின் சில பகுதிகள், கொங்கணத்தின் ஒரு பகுதி முதலிய இடங்கள் அடங்கின. அந்நாட்டை, (1) பம்பாயின் வடக்கு, தெற்கு கடற்கரைப் பகுதிகள் அல்லது கொங்கணம் (2) சயாத்ரி மலைத்தொடர்ப் பகுதி (1) அதற்குக் கிழக்கில் உள்ள ஆற்று வெளிப்பகுதி, என்று முப்பகுதிகளாகப் பிரிக்கலாம். மலைப் பகுதியில் ஊற்றுக்கள் பல சிறந்த தண்ணீரைக் கொடுத்தன. வலிமையுள்ள கோட்டைகளைக் கட்டிக் கொள்ள அப்பகுதி ஏற்றதாயிருந்தது. பகைவர்கள் அக்கோட்டைகளில் எளிதில் புகமுடியாது. ஆற்றுப் பகுதிகளில் மாரிக்காலத்தில். சிற்றாறுகளைக்கூட யாரும் கடக்கமுடியாது. அப்பகுதியில் அக்காலங்

1 & 2 Sarkar, History of Aurangzib, IV, p. 455.
3. Smith, Fine Art, p. 176

களில் வீசும் காற்று வெளிநாட்டவரின் உடல் நலத்தைக் கெடுத்துவிடக் கூடியதாயிருந்தது. சுருங்கக் கூறின், இராணுவ நோக்கத்தில் மராட்டியர் நாட்டைவிடச்சிறந்த வேறெருநாட்டை உலகில் நாம் காண்பதரிது.[1]. பகைவர் எளிதில் தாக்க முடியாத குன்றுகளும், பல பள்ளத்தாக்குகளும் மலைச்சாரல் களில் மரம் அடர்ந்த காடுகளும் அந்நாட்டில் குதிரைப்படை யின் போக்கு வரவைத் தடைசெய்தன. அந்நாட்டவர் உடல் வருந்த உழைத்து உயிர் வாழ வேண்டியிருந்ததால் உடல் வலிமையும் விடாமுயற்சியும் பெற்றிருந்தனர். சிறுகச் செலவு செய்யும் பழக்கம் அவர்களிடமிருந்தது. மராட்டியரிடம் உரிமை விருப்பமும் தாய்நாட்டுப் பற்றும் மிகுதியாக வளர்வதற்கு நில அமைப்பே சிறப்பான காரணம். மலைகளும் காறுகளும் சூழ்ந்த அந்நாட்டில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குச் செல்லும் வழிகளை அயலார் கண்டறிய முடியாது. ஆதலால் மராட்டியர் பகைவர்க்கஞ்சாமல் வாழ்க்கை நடத்திவந்தனர். ஆனல் அத்தகைய நில அமைப்பையும் எதிர்த்து முகம்மதியர் படையெடுத்தனர் என்பது நோக்கற்பாலது. மராட்டியரிடம் காணப்பெறும் சில சிறப்புப்பண்புகளுக்கு அவர்தம் நாட்டின் அமைப்பு காரணமாகுமெனினும், பதினேழாம் நூற்றுண்டில் ஏற்பட்ட அயலார் ஆதிக்கமே மராட்டியரின் விடுதலை இயக் கத்துக்கு ஊக்கமளித்தது. ஆதலால் நில அமைப்பைவிட மராட்டியரின் சமூகப் பண்பு சிறப்பு வாய்ந்ததாகும்.

சமயப்பண்பு: பதினைந்து, பதினாறும் நூற்றுண்டுகளில் மகாராட்டிரத்தில் பரவிய சமய இயக்கங்கள் மக்களிடை ஒப் புணர்ச்சியை உண்டாக்கின. பண்டரிபுர சமய இயக்கம் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. பிறப்பினல் உயர்வு தாழ்வு இல்லை என்ற கருத்தைப் பல பெரியார்கள் வற்புறுத்தி வந் தனர். பக்தி மார்க்கத்தைப் பறைசாற்றிவந்த தலைவர்களில் பல்வேறு சாதியினரையும் காண்கிறோம். அத் தலைவர்களில் அந்தணர்கள் மிகுதியாக இல்லை; தையல் தொழிலாளிகள் தச்சர், குயவர், தோட்டவேலை செய்வோர், வணிகர், மயிர்

---

1. J. C. Grant Duff, History of the Mahrattas (revised by S. M. Edwardes), I, (1921) P. 8

வினைஞர், தோட்டிகள், முதலிய பல சாதிகளைச் சேர்ந்த தலைவர்கள் அன்பு வழியை ஆர்வத்துடன் பரப்பிவந்தனர்.[1] புகழ்பெற்ற துறவியான துக்காராம் ஒருவணிகரும் இராமதாசர் ஒரு அந்தணரும் ஆவர். மகாராட்டிரர் பண்டரிபுரக்கண்ணனை (விட்டலா அல்லது விட்டோபா) உருக்குமணியின் பதியாகப் போற்றினர்; இராதையின் காதலனுகக் கருதவில்லை. இதனுல் மகாராட்டிர வைணவ சமயத்தின் தூய தன்மை புலனுகிறது. அந்நாட்டு மக்கள் "பக்தி மார்க்கத்தை" மிகவும் விரும்பிப் போற்றினர். அவ்வழியைப் பின்பற்றியவர்கள், தாழ்ந்த நிலையிலிருந்த பெண் இனத்தைச் சிறப்புக்குரிய நிலைக்கு உயர்த்தினர். "பண்டரிபுர இயக்கத்தை ஐரோப்பிய மதச் சீர்திருத்த இயக்கத்துக்கு ஒப்பிடலாம்.[2] மகாரட்டிரத்தில் வளர்ச்சி அடைந்த அவ்வியக்கம், தாய்மொழியின் சிறப்பையும் பெண்டிரின் பெருமையையும் அன்பின் உயர்வையும் மக்கள் உணர்வதற்குக் காரணமாயிற்று. இயக்கத் தலைவர்கள், பல மனைவியரை ஏற்றுக் கொள்ளல், சடங்கு முறைகளுக்குச் சிறப்பளித்தல் முதலிய பழக்கங்களைக் கைவிடுமாறு மக்களுக்கு அறவுரைகள் கூறிவந்தனர். ஆயினும் மராட்டியரின் அறிவுத்திறமை ஓங்கி வளர அவ்வியக்கம் உதவிபுரிந்ததா என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும்; மிகுதியாக உதவிபுரியவில்லை என்ற கருத்து நிலவுவது குறிப்பிடத் தக்கதாகும். உளத்தைப் பண்படுத்துவதற்கான வழிகள் பின்பற்றப்படவில்லை. நாட்டில் பெரும் பான்மையினர் அறிவுவிளக்கம் பெருமல் மூட நம்பிக்கைகளில் மூழ்கி இருந்தனர்.

வரலாற்றுத் தொடர்பான காரணங்கள்: மராட்டிய வீரர் சிவாஜியின் காலத்தில் அவர்தம் நாட்டு உரிமைப் பற்று வலிமையடைவதற்கு அவர்களுடைய வரலாற்றில் காணப்பெறும் அரசியல் பொருளாதார அமைப்புக்கள் அடிப்படையாக இருந்தன என்று கூறலாம். அவற்றில், பஞ்சாயத்து முறை, உழவரது நில உரிமை முறை முதலியன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

---

1& 2 Ranade, op. cit. P. 10 & chap VIII. P, 149

**அரசியலும் படை அமைப்பும்.** அக்பர், ஷாஜஹான் முதலிய முகலாயப் பேரரசர்களின் **தக்கணக் கொள்கை,** மராட்டிய நாடு உட்பட்ட தென்இந்திய அரசுகளை விழித்துக் கொள்ளச் செய்தது. ஔரங்கசீப்பின் மதக்கோட்பாடுகளும் மராட்டியரின் எதிர்ப்பை வலிமையுறச் செய்தன. தக்கணச் சுல்தானியர் நாடுகளில் மராட்டியர் பல்வேறு வகையான பணிகளை ஆற்றிவந்ததை முகலாயர் வெறுத்தனர். முகலாயரால் அச்சுறுத்தப்பெற்ற மராட்டியரிடம் இன உணர்ச்சி வளர்ச்சியடைந்ததில் வியப்பில்லை. ஆகவே சிவாஜியின் காலத்திற்கு முன்னரே, மராட்டிய தேசீயம் உருவாவதற்கு இன்றியமையாதப் பண்புகள் காணப்பெற்றன. அவற்றை ஒற்றுமைப்படுத்தி வலிமையடையச் செய்த பெருமை சிவாஜிக்கு உரியது.

## பகுதி 3

### ஷாஜி பான்ஸ்லே (சுமார் 1602—'64)

**வாழ்க்கை.** பாபாஜி என்பாரின் பேரனும் மாலோஜியின் மகனுமான ஷாஜி, ஏறத்தாழ 1602'ல் பிறந்தார்.[1] (1594'ல் பிறந்ததாகக் கூறுவாருமுண்டு.) ஷாஷரீப் என்ற முஸ்லிம் துறவியின் பெயர் அவருக்கு இடப்பட்டது. 1620'ல் அவர் திருமணம் செய்துகொண்ட ஜீஜாபாய் என்னும் அம்மையார், நிஸாம்ஷாவின் அலுவலாளராக இருந்த ஜாதவ் ராவ் என்பாரின் மகளாவர். ஜாதவ்ராவ் தேவகிரி யாதவ குலத்தின் ஒரு கிளையில் தோன்றியவர். ஷாஜி, 1620'ல் தம் மாமனுருடன் சேர்ந்து, முகலாயருக்குப் பகையாக மாலிக் ஆம்பருக்கு உதவிசெய்தார். முதலில் அவர் ஆமதுநகரத்தின் சார்பிலும், அதன்பின் முகலாயர் சார்பிலும், இறுதியில் பீஜப்பூர் இராச்சியத்தின் சார்பிலும் பல போர்களில் பங்கு கொண்டார். நிஸாம்ஷாவிட (ஆமதுநகர்) மிருந்து ஷாஜி பூனவை ஜாகீராகப்பெற்றார். ஆனல் 1625'ல் அவர், தமது பெருமையை ஆமதுநகர சுல்தான் உணரவில்லை என்று

1. Balkrishna, op. cit., (1932) I, pt. p. 58

வெகுண்டு அவரைவிட்டு அகன்று பீஜப்பூர் சுல்தானின்கீழ்ப் பணியிலமர்ந்தார். ஆயினும் தமது ஜாகீரை, மாலிக்ஆம்பரின் தாக்குதல்களினின்று காப்பாற்றிக்கொள்ளத் தவறவில்லை. பீஜப்பூரின் அடில்ஷா, ஷாஜிக்கு "மகாராசன்" என்ற பட்டத்தை வழங்கி அவரைச் சிறப்பித்தார். 1628'ல் ஷாஜி, மீண்டும் ஆமதுநகரத்துக்குச் சென்று அங்கே பணியிலமர்ந்தார். பீஜப்பூரின் முகம்மது அடில்ஷாவுக்கும், அவருக்கும் ஏற்பட்ட பகைமையே அந்நிகழ்ச்சிக்குக் காரணமாம். 1630'ல் ஜாதவ் ராவ், ஆமதுநகரில் கொலையுண்டதைக்கண்டு ஷாஜி, நிஸாம் ஷாவை எதிர்த்துக் கலகம் செய்யலானார். அவ்வமயத்தைப் பயன்படுத்திக் கொண்ட முகலாயப் பேரரசர் ஷாஜஹான், அவரை, 5000 குதிரை வீரர்களுக்குத் தலைவரான மான் சப்தாராகத் தமது பணியிலமர்த்திக் கொண்டார். 1630'ல் (1627'ல் என்று கூறுவாருமுண்டு) ஷாஜிக்கு ஒரு மகன் பிறந்தான். அக்குழந்தைக்கு சிவாஜி என்று பெயரிட்டனர். 1632'ல் முகலாயரின் பணியிலிருந்து ஷாஜி விலகிக்கொண்டார். 1633'ல் ஆமதுநகரில் நிஸாம்ஷாஹி குலம் வீழ்ச்சியடைந்ததால், அவர் அந்நாட்டின் சில பகுதிகளை கைப்பற்றிக் கொண்டு III'ம் முர்த்தாஸாவைச் சுல்தானாக்கினார். ஆனால் ஷாஜஹானின் எதிர்ப்பு காரணமாக, ஷாஜி, ஆமதுநகரில் நிலைபெற்றிருக்க முடியாமற்போயிற்று. 1636'ல் பீஜப்பூருக்குச் சென்ற ஷாஜி 1664'வரைத் தொடர்ந்து அடில்ஷாவுத்குத் துணையாகப் பணியாற்றி வந்தார். அவருடைய ஜாகீர்ப் பகுதிகள் பெருகின. அவர் புகழ் ஓங்கியது. பீஜப்பூர், கருநாடகத்தை வெல்லுவதற்காக நிகழ்த்திய போர்கள்யாவற்றிலும் அவர் சிறப்பான பங்கைப்பெற்றார். அவர் ஜீஜாபாயைத் தவிர வேறொரு மனைவியையும் மணந்திருந்ததால் முதல் மனைவியையும், சிவாஜியையும் மிகுதியாகக் கவனிக்கவில்லை என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர். உண்மையில் பல ஆண்டுகள்வரை அவர் சிவாஜியைப் பார்க்கவேயில்லை. சிவாஜியின் தமையனாரான சாம்பாஜி (1623'ல் பிறந்தவர்) 1658'ல் இறந்துவிட்டார். ஷாஜியின் ஜாகீர்களான பங்களூர் முதலிய கருநாடகப் பகுதிகள், அவருடைய இரண்டாம் மனைவியின் மகனான வெங்காஜிக்குக் கிடைத்தன.

**ஷாஜியும் சிவாஜியும்.** பீஜப்பூர் சுல்தான் கருநாடகத்தை வெல்லுவதற்கு ஷாஜி முக்கிய காரணமாயிருந்தார். பூனு, பங்களூர் ஜாகீர்கள் அவருக்குக் கிடைத்தன. விசயநகரப் பேரரசின் முடிவான அழிவுபாட்டுக்கும், தஞ்சாவூர் அரசின் மெலிவுக்கும் அவருடைய வெற்றிகளே காரணமாகும். அவரைப்பின்பற்றியே அவர் மகன் வெங்காஜி, 1675'ல் தஞ்சாவூரைக் கைப்பற்றிக் கொண்டார். சுருங்கக் கூறின் சுதந்திர மகாராட்டிரத்திற்கு வித்து ஊன்றியதும் கருநாடகத்தில் மராட்டிய இராச்சியத்தைத் தோற்றுவித்ததும் ஷாஜியின் அருஞ்செயல்களாம். அவர் தமது வாழ்க்கையின் பிற்பகுதியில், கலை அழிவுபாடுகளை விளைத்து வந்த முகம்மதியரை அடக்கியும், வீழ்ச்சியுற்றுவந்த இந்துச்சிற்றரசர்களுக்குச் சிற்சில காலங்களில் உதவிபுரிந்தும் தொண்டாற்றி வந்தார். மேலும், நாடுகளை இழந்த குறுநிலத் தலைவர்களுக்குக் கருநாடகத்தில் ஒழுங்காகப் பண்படுத்தப் பெருமலிருந்த நிலங்களைப் பகிர்ந்தளித்து வேளாண்மையைப் பெருக்கினுர். மராட்டிய நாட்டு நிலவரித் திட்டத்தைக் கருநாடகத்திலும் நிலைபெறச் செய்தார். அவருடைய அவைக்களப் புலவராயிருந்த செயராமர் என்பார் வடமொழி நூல்கள் இரண்டை இயற்றினுர். அவற்றில் ஒன்ருன "இராதா மாதவ விலாசசம்பு," அக்காலத்திய பங்களூர் இலக்கியத்துறையில் அடைந்திருந்த சிறப்பை விளக்குகிறது. மற்றயது ஒரு செய்யுள் நூல். அது, சிவாஜியின் வாழ்க்கையில் 1670 முதல் 1673 வரை உள்ள காலப் பகுதியைச் சிறப்பிக்கின்றது. அக்கவி, ஷாஜியை ஷாஜஹானுடன் ஒப்பிட்டுப் புகழ்ந்து பேசுகிருர். ஷாஜி பங்களூரைத் தலைநகரமாகவும் நந்தி (கோலார் மாவட்டம்—மைசூர்) என்னுமிடத்தைக் கோடைக் காலத்தில் தாம் தங்கும் இடமாகவும் கொண்டிருந்தார். பொதுவாக அவருடைய வாழ்க்கை நெறி அவர் மகன் சிவாஜிக்கு ஒரு வழிகாட்டி ஆயிற்று. ஷாஜி, தமது ஜாகீரை மேற்பார்வை செய்துவந்த தாதாஜி கோண்டதேவ் என்பாருடைய கண்காணிப்பில் சிவாஜியை விட்டிருந்தார். "ஷாஜியை ஹமில்கார் பார்க்காவுக்கும், சிவாஜியை ஹன்னிபாலுக்கும் ஒரு வகையில் ஒப்பிடலாம்; அதாவது பிந்திய இருவரும் தமது தந்தையரின் புகழ் குன்றும் அளவுக்

குத் தாம் மிக்க புகழ் அடைந்தனர்.''[1] (ஹமில்கார் பார்க் காவின் மகனான ஹன்னிபால் கி. மு. மூன்றும் நூற்றாண்டில் உயர்நிலை எய்திய கார்த்தசீனியத் தலைவனாவன்.) ஷாஜி, சிவாஜியின் நலத்தில் கருத்தைச்செலுத்தவில்லை என்ற கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று.

## பகுதி 4

### சிவாஜியைப்பற்றிய வரலாற்றுச் சான்றுகள்

மராத்தி : மராத்தி, இந்தி, பாரசீகமொழி, ஆங்கிலம், பிரெஞ்சு, டச்சு, போர்ச்சுகீசியமொழிமுதலிய எட்டுமொழிகளில் உள்ள குறிப்புகளைக்கொண்டு சிவாஜியின் வரலாறு அறியப் பட்டுள்ளது (சிவாஜியின் காலம் 1630 முதல் 1680 வரை.) மராட்டிய செய்திக் கோவைகளும் மராட்டியத் தலைவர்கள் தமக்கிடையே எழுதிவந்த முடங்கல்களும் குறிப்பிடத்தக்க சான்றுகளாக அமையும். செய்திக் கோவைகளில் சிறப்பாக சபாசத் பக்கர் என்ற நூல் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தது. அதை 1696'ல் கிருஷ்ணாஜி அனந்த் சபாசத் என்பார் செஞ்சியில் தம் தலைவர் இராசாராமரின் விருப்பத்திற்கிணங்க இயற்றினார். சிவாஜியின் வாழ்க்கை வரலாற்று நூல்களில் இதுவே மிகச்சிறந்தது; மிகவும் சுருக்கமானது; காலத்தால் முற்பட்டது. இதன் ஆசிரியர் இயன்றவரை நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றி இந்நூலை ஆக்கியுள்ளார். பிற்கால நூலாசிரியர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாயிற்று. அடுத்தபடியாக, சிவாஜியின் உதவியாளராயிருந்த கானோஜி ஜேதேயின் குடும்பத்தினர், குறித்துவைத்திருந்த பொது நிகழ்ச்சிகளின் பதிவேடு, ஜேதே சகாவளி எனப்பெறும். அது 1618 முதல் 1697வரை உள்ள காலப்பகுதியைப்பற்றியதா கும். மராட்டியரின் செயல்களைக் காலமுறைப்படி அயறி அந்நூல் உதவுகிறது. அதை நிறைவுபடுத்தும் வகையில் அமைந்துள்ள ஜேதே கரீணா என்ற நூல் சிவாஜி வாழ்க்கையின் முற்பகுதி நிகழ்ச்சிகளை விளக்கும். சிவாஜி, தம் ஒன்றுவிட்ட உடன் பிறப்பாளர்க்கும் தந்தைக்கும் எழுதிய முடங்கல்கள் மிகுந்த

1. Kincaid and Parasnis, op cit. p. 68.

வரலாற்றுச் சிறப்புவாய்ந்தவை. அவை அவ்வீரரின் உள்ளத்தைத் தெள்ளெனக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக 1677'ல் சிவாஜி, மாலோஜி கோர்படேக்கு எழுதிய முடங்கல், மராட்டியர் யாவரையும் ஒன்றுசேர்க்கும் அவருடைய குறிக்கோளை நன்கு விளக்குகிறது. இறுதியாக இராமச்சந்திர பந்த் 1716'ல் இயற்றிய இராசநீதி என்ற மராட்டியநூல் சிவாஜி காலத்து நிலையங்களை அறிவிக்கின்றது.

**வடமொழியும் இந்தியும் :** பரமானந்தர் என்பாரின் "சிவபாரதம்" என்னும் வடமொழி நூலில் 2,262 செய்யுட்களைக்கொண்ட 31 அதிகாரங்கள் அடங்கியுள்ளன. முற்றுப்பெருத அக்காவியம், மாலோஜி முதல் 1661 வரையிருந்த பான்ஸ்லேக்களைப்பற்றிய விளக்கத்தைக் கால முறைப்படி குறிப்பிடுகிறது. வீரகாவியங்களில் இருப்பதைப்போன்ற புகழுரைகள், அந்நூலிலும் உள்ளன. சிவாஜி, திருமாலின் (சிவனின் என்று சபாசத் கூறுவர்.) திருப்பிறவியென்று அந்நூல் குறிப்பிடும். ஆயினும் அந்நூலின் வரலாற்றுப்பகுதி ஏற்றுக்கொள்ளத் தக்கதே. அப்ஸல்கான் கொலையுண்ட காலத்தை அது தெளிவாகக் குறிப்பிடுகிறது. இந்நூலிலும் ஜேதே சகாவளியிலும் சிவாஜியின் பிறந்த ஆண்டு 1630 என்ற குறிப்பைப் பெறுகிறோம். முடிவாக, நிலத்திணை விவரம், காலவரண்முறை, வரலாறு முதலியவற்றைப் பொறுத்தவரை, சிவபாரதத்தின் சிறப்பு போற்றற்குரியதே. செயராமர் வடமொழியில் இயற்றிய பர்ணல காவியத்தைப் பற்றி முன்னர் குறிப்பிட்டோம். 1673'ல் சிவாஜி பான்ஹாலாவைக் கைப்பற்றிய நிகழ்ச்சியை அது சிறப்பிக்கும். இராசாராமர் காலத்தில் இயற்றப்பெற்ற "இராசாபிடேகக் கல்பதரு" என்ற நூல், சிவாஜி இரண்டாம் தடவை முடிசூட்டிக் கொண்டதை விளக்குகிறது. "இராச்சிய வியவகார கோசம்" என்னும் பாரசீக சமஸ்கிருத அகர வரிசை நிகண்டு, அரசியல் சொற்களைக் கொண்ட ஒரு செய்யுள் நூலாம். இரகுநாத ஹன்மந்தி என்பார், சிவாஜியின் விருப்பத்திற்கிணங்க அதை இயற்றினர். அமரகோசம் என்ற நூலுக்கு அதை ஒப்பிடலாம். ஆட்சிமுறைத் தொடர்பான பல்வேறு துறைக்களங்களைப் பற்றி அது அறிவிக்கின்றது. பூஷணர் என்னும் இந்திக்கவி

சிவாஜியை அளவுக்கு மீறிப் புகழ்ந்துள்ளார். லால்கவி என்ற மற்றொரு இந்திக் கவி, 1670—1'ல் சத்ராசால், மராட்டியரின் அரசியல் அவைக்குச் சென்றதைப்பற்றிச் சிறப்பிக்கின்றார்.

பாரசீக நூல்கள்: பாரசீக மொழியில் பல உள்நாட்டு வெளிநாட்டு நூல்கள் உ ள. அவற்றில் கபீகான் (Khafi-khan) பீம்சென் ஆகிய இரண்டு அறிஞர்கள் எழுதியுள்ள வரலாற்று நூல்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. கபீகான் சிவாஜியுடன் நேரான தொடர்புகொண்டவரல்லர். பின்னவரின் சாவுக்கு ஐ ம் ப து ஆண்டுகள் பின்னரே, கபீகான் தம் நூலை ஆக்கினார். அவர் அவ்வீரரைப் பின்வருவனபோன்ற வசைச் சொற்களால் மட்டுமே குறிப்பிடுகிறார்:- நெறிகெட்டவர், பேய்மகன், சூதின் உறைவிடம், சூழ்ச்சி நோக்குள்ள கயவன், குருதி வெறிகொண்ட கொலைஞன், நம்பிக்கை மோசம் செய்வோன், பதடி, அஞ்சாத கொள்ளைக்காரன், ஏமாற்று வித்தையில் கைதேர்ந்தவன்; முதலியன.[1] இத்தகைய அடைமொழிகளால் சிவாஜியைக் குறிப்பிடும் அவ்வாசிரியர், அவ்வீரரின் நற்பண்புகளையும் கூறத்தவறவில்லை. சிவாஜி, பெண்டிரிடம் நன்மதிப்பு கொண்டு ஒழுகுபவர் என்றும், மக்கள்பால் அன்பு கொண்டவரென்றும், கு ரா னை யு ம், பள்ளிவாசல்களையும் போற்றுபவர் என்றும் குழந்தைகளை மிகவும் நேசிப்பவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளது நோக்கற்பாலது.[2] ஆனால் கபீகான் முடிவுரையில் 'நம்பிக்கைக் கே டா க நடந்து கொண்டவன் (சிவாஜி) நரகத்துக்குச் சென்றான்'' என்று கூறுகிறார். பீம்சென், 1709க்குப் பிறகு எழுதிய வரலாற்று நூல், சில தவறான செய்திகளைக் கூறினும், சிவாஜியைப் பற்றிய அவ்வாசிரியரின் மதிப்புரை ஏற்றுக்கொள்ளத்தக்கதேயாம். "இணையில்லாத போர்வீரர், அரசியல் ஆற்றல் மிகுதியாகப் பெற்றவர் ; நல்லாரின் நண்பர், மதத்தில் விருப்பமுடையவர்.'' என்று பீம்சென் சிவாஜியைப் புகழ்கிறார்.[3]

---

1. E & D., op-cit.. VII, PP. 254—61.
2. Patwardhan and Rawlinson, op. cit, P. 169.
3. E & D., op-cit., VII, pp. 260 & 305.

**ஆங்கிலம்:** சிவாஜியைப் பற்றிய ஆங்கிலக் குறிப்புக்கள் யாவும் 1659'ம் ஆண்டுக்குப் பிற்பட்டவை. அவற்றில் நிகழ்ச்சிகள் நிகழ்ந்தவாறே குறிப்பிடப் பட்டுள்ளன. ஆங்கிலேயரின் தொழிற்சாலைகளிலிருந்து எழுதப்பெற்ற முடங்கல்கள் யாவும் வாணிக நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டவை. எனினும் பெரும்பான்மையும் அவற்றை நாம் தக்க சான்றுகளாகக் கொள்ளலாம். நிகழ்ச்சிகளின் காலங்களை அறிய அவை பெரிதும் உதவுகின்றன. சிவாஜிக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே நிலவிய நேர்த்தொடர்புபற்றிய செய்திகளை அவைவிளக்கமாக அறிவிக்கின்றன. ஆனால், அப்ஸல்கான் ஷயிஸ்தா கான், செயசிங் ஆகியோருக்கும் சிவாஜிக்குமிடையே நடந்த போராட்டம் முதலிய நிகழ்ச்சிகளைப்பற்றிய ஆங்கிலக் குறிப்புகள் மிகக் குறைவாகவே உள்ளன. சிவாஜியின் வாழ்க்கை வரலாற்றையும் அவருடைய சிறந்த உதவியாளரைப்பற்றியும் அறிய அவை பயன்படவில்லை. மேலும் அவை சிவாஜியின் வாழ்க்கையில் 1659'ம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியைப்பற்றி எதையுமே கூறவில்லை. அவ்வீரரை ஆங்கிலேயர் அலெக்சாந்தருடனும் ஹன்னிபாலுடனும் சீசருடனும் ஒப்பிட்டுப் புகழும் குறிப்புக்கள் உள்ளன. ஆயினும் அவருடைய சில குறைபாடுகளையும் அவை காட்டுகின்றன. 1675'ம் ஆண்டுக்குரிய சூரத் முடங்கல், சிவாஜியை "எமது (ஆங்கிலேயரது) உயர்தரமான பகைவர், ஆயினும் பெரும்பான்மையும் அவர் எமது நண்பரே." என்று குறிப்பிடுகிறது.

**பிரெஞ்சு:** அபீகர்ரே என்னும் அறிஞர் இருமுறைகள் (1668 முதல் 1671 வரை; 1673) இந்தியாவுக்கு வந்தார். அவர் எழுதிய "சிவாஜியின் வரலாறு" என்னும் நூல், சில குறைபாடுகளுடன் கூடியதாயிருப்பினும் அவ்வீரரின் பெருமையை நமக்கு உணர்த்துகிறது. அவ்வாசிரியர் சிவாஜியை ஸ்வீடன் நாட்டு மன்னனை கஸ்தாவஸ் அடால்பஸ்ஸுக்கு (1611—'32) ஒப்பிடுகிறார்.[1] புதுச்சேரியைத் தாபித்த மார்த்தின் எழுதியுள்ள "நினைவுக் குறிப்புக்கள்" நமக்கு மிகவும் பயன்படுகின்றன. சிவாஜி, கிழக்கு கருநாடகத்தை வென்று அங்குத்தம் ஆட்சியை நிறுவியதும் அவர்

1 Ibid., p. 206

தஞ்சாவூர் வெங்காஜியுடன் தொடர்புகொண்டதும் அக் குறிப்புக்களில் நன்கு விளக்கப்படுகின்றன. மதுரையில் இருந்த பிரெஞ்சு தூதுக்குழுவினர், 1659, 1662, 1676, 1678, 1682, 1683 முதலிய ஆண்டுகளில் எழுதிய முடங்கல்கள், ஷாஜி, சிவாஜி, வெங்காஜி, ஆகியோரின் செயல்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. 1678'ம் ஆண்டு முடங்கல், சோழமண்டலக்கரையில் சிவாஜி ஆற்றிய செயல் களைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. தவர்னியர், பெர்னியர், தெல்லோன், மனுச்சி முதலிய அறிஞர்களின் குறிப்புக்கள் நமக்கு மிகுதியாகப் பயன்தரவில்லை.

டச்சு, போர்ச்சுகீசிய நூல்கள் : படேவியாவில் டச்சு மொழியில் எழுதப்பட்டுள்ள டாக் (Dagh) நாட்குறிப்பேடு, 1665'ம் ஆண்டு வரை உள்ள மாராட்டியர் வரலாற்றை அறிய உதவும். இந்தியாவில் டச்சுக்காரரின் தொழிற்சாலைகளி லிருந்த முடங்கல்களும், டி கிராப் (De Graaf) முதலிய டச்சுப் பிரயாணிகள் சிலருடைய குறிப்புக்களும் நமக்கு ஓரளவு பயன்படுகின்றன. டச்சுக்குறிப்புக்கள் யாவும் பிற சான்றுக ளால் அறியப்படும் செய்திகளை உறுதி செய்வனவாகவே உள்ளன. பெரும்பான்மையும் அவை சிவாஜியைப் புகழ்வ தைக் காணலாம். போர்ச்சுகீசிய அறிஞரான தா குவார்தா (Da Guarda) என்பார் எழுதிய "சிவாஜியின் வாழ்க்கை" (1695) என்ற நூல், பல குறைபாடுகளுடன் கூடியதாயிருப்பினும், அவ்வீரரின் பெருமையையும் அவர் படையின் சிறப்பையும் முகலாயர் படையின் குறை பாடுகளையும் எடுத்துக் காட்டுகிறது. கோவாவில் உள்ள குறிப்புக்கள் சிவாஜியின், அரசியல், படை அமைப்பு, நாவாய்ச் சிறப்பு முதலியவற்றை விளக்குகின்றன. சௌத் என்று சொல்லப் பெறும் வரியின் தோற்றம், தன்மை ஆகியன பற் றியும் அவற்றினின்று நாமறிகிறோம். முடிவாகச் சிவாஜியைப் பற்றி அறிய பல்வேறு மொழிகளில் சான்றுகளிருப்பினும் சிறப்பாக மராட்டிய, பாரசீக, ஆங்கில நூல்கள் அடிப்படை யானவை என்று அறிகிறோம்.

# பகுதி 5

## சிவாஜியின் வாழ்க்கை வரலாறு

**சிவாஜியின் சாதியும் பிறந்த ஆண்டும்:** சிவாஜி இராசபுத்திர குலத்தின் சிசோடியப் பிரிவைச்சேர்ந்த தூய க்ஷத்திரியர் என்று சபாசத் கூறுகிறார். பாமினி, பீஜப்பூர் குறிப்புக்களில் சிவாஜியின் மரபினர் இராணுக்கள் என்று குறிக்கப்பெறுகின்றனர். 1659'ல் எழுதப் பெற்ற ஆங்கில முடங்கல் ஒன்று சிவாஜியை ஒரு சிறந்த இராசபுத்திரர் என்று அறிவிக்கிறது. கபீகான் பான்ஸ்லேக்களை சித்தூர் இராணுக்களுடன் இணைத்துப் பேசுவர். ஆனால் அவர்களில் ஒருவர் ஒரு கீழ்சாதிப் பெண்ணுடன் சேர்ந்ததால் அவர்கள் அதன் விளைவாக தக்கணத்துக்கு வந்தனர் என்றும் அவர்களுடைய மரபினர் மராட்டியப் பெண்டிரை மணம்புரிந்து கொண்டனரென்றும் விளக்குகிறார். இவ்விளக்கத்தை பீம்சென், பெரிஷ்டா, மனுச்சி ஆகியோரும் குறிப்பிடுகின்றனர். சிவாஜி, தாம் மாண்டல்-தி-மென்ஸீஸ் என்பாரின் மகன் என்று ஒரு ஊரலர் பஸ்ஸீனில் பரவியிருந்ததென்று அறிஞர் குவார்தா குறிப்பிடுகிறார். சிவாஜியின் தந்தையின் பாட்டன் ஓர் உழவர் என்று சில செய்திக் கோவைகளில் குறிப்பு உளது. ஆகவே பான்ஸ்லேக்கள் க்ஷத்திரியர் தானா என்பது ஒரு சிக்கலான கேள்வியாகும். சிவாஜி, 1674'ல் முடிசூட்டிக் கொள்வதற்குச் சில நாட்கள் முன்புதான் "உபநயனம்" செய்துகொண்டார் என்பதும் இங்கே சிந்திக்கத்தக்கது. அப்பொழுது அவருக்கு வயது 44. மேலும் காகபட்டர், சிவாஜியை ஒரு க்ஷத்திரியர் என்று ஏற்றுக்கொண்டதால் இடர்ப்பாடு ஒருவாறு நீங்கியது. ஜாபர் கான் என்னும் முகலாய அமைச்சருக்கு செயசிங் எழுதியமுடங்கலில் பின் வருமாறு எழுதியுள்ளார்:- "சிவாஜியின் மரபும் சாதியும் மிகமிகக் கீழ்த்தரமானவை. அவன் கையால் தொட்ட உணவைக்கூட என்னைப்போன்றோர் உண்ணார்."[1] சிவாஜியின் குடிவழி 1674'ல் ஆராயப்பட்டதென்றும் அதன் விளைவாக அவர் சிசோடியா குடும்பத்தைச் சேர்ந்த க்ஷத்திரியர் என்று

1. Sarkar, Shivaji and His Times, P, 154.

அறியப்பட்டதென்றும் சபாசத் செய்திக்கோவை அறிவிக்கிறது.[1] இதன் உண்மை ஆராயப்படவேண்டிய ஒன்றும். பான்ஸ் லேக்கள், இராசபுத்திர குலத்தவர் என்ற கருத்து நன்கு உறுதி செய்யப்பட்டதாகக் கூறுவதற்கில்லை. இனி, சிவாஜியின் பிறந்த ஆண்டைப் பற்றியும் கருத்து வேறுபாடு உண்டு. பிற் கால மராட்டியச் செய்திக்கோவைகள் அவர் 1627'ல் பிறந்தா ரென்று அறிவிக்கின்றன. சபாசத், காலத்தைக் குறிப்பிட வில்லை. ஜேதேசகாவளியும் சிவபாரதமும், அவர் 1630'ல் பிறந்ததாகக் கூறும். அறிஞர் தேவினுட் 1664'ல் எழுதும் பொழுது சிவாஜிக்கு 35 வயதுக்குமேல் இராது என்று குறிப்பிடுவதும் சிந்திக்கத்தக்கது. 1660'ம் ஆண்டில் அவ ருக்கு வயது 29 என்று அறிஞர் தா குவார்தா கூறுவர். மேலும் ஜெய்பூர் (இராசபுதனம்), பூனு, கோலாப்பூர், தஞ்சாவூர் முதலிய இடங்களிலிருந்து கிடைத்த குறிப்புக்களும் சிவாஜி பிறந்த ஆண்டு 1630 தான் என்று உறுதி செய்கின்றன.

வாழ்க்கையின் முற்பகுதி: சிவாஜி, 1630'ல் சிவநேர் என்னுமிடத்தில் ஷாஜிக்கும் ஜீஜா பாயிக்கும் இரண்டாவது மகனுகப் பிறந்தார். அக்கோட்டையை, ஷாஜி, 1636'ல் ஷாஜஹானிடம் ஒப்படைத்துவிட்டபடியால், சிவாஜி, தம்தந்தை யின் ஜாகீர்ப்பகுதியான பூனுவுக்குச்செல்ல நேர்ந்தது அங்கே அவர் தாதாஜி கோண்டதேவ் என்பாரின் பாதுகாப்பில் இருந்துவந்தார். தந்தையிடமிருந்து பிரிக்கப்பட்ட சிவாஜி, தாயிடம் மிகுந்த பற்றுக்கொண்டு, உரிமையான வகையில் தம் வாழ்க்கை நெறியை வகுத்துக்கொண்டார். ஜீஜாபாய் அவருக்குக் கூறிவந்த வீரகாவியக் கதைகள் சிவாஜியின் வீர உணர்ச்சியைப் பெருக்கின. தாதாஜியின் பூனுஜாகீர் ஆட்சி முறை, சிவாஜியின் நிலையை வலிமையுறச் செய்தது. 1646 முதல் பீஜப்பூரின் முகம்மது அடில்ஷா நோய்வாய்ப் பட்டிருந்ததை சிவாஜி, தமது நலத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு தோர்னு கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டார். 1647'ல் தாதாஜி இறந்தபின் புரந்தரையும் அவர் கைப்பற்றி னூர். இதனுல் சினங்கொண்ட அடில்ஷா 1648–ல்'

1. Patwardhan and Rawlinson, op. cit. P. 123.

ஷாஜியைச் சிறைப்படுத்திப் பின் விடுதலை செய்தார். 1656'ல் சிவாஜி, சூழ்ச்சிசெய்து சதாரா மாவட்டத்திலுள்ள ஜாவளி என்னுமிடத்தைத் தம் வசப்படுத்திக்கொண்டார். அவ்விடத்துக்கு அருகில் பிரதாபகார் என்னும் கோட்டையையும் தமது கடவுள் பவானி தேவிக்கு ஒரு ஆலயத்தையும் எடுத்தார். அதே ஆண்டில் (1656) ரெய்காட் கைப்பற்றப்பட்டது. பிற்காலத்தில் அது சிவாஜியின் தலைநகராகியது. 1657'ல் முகலாயர் இராச்சியத்திலும் அவர் கொள்ளையடித்தார். ஜுன்னரில் அவர் வெற்றிபெற்றார்; ஆனால் ஆமது நகரில் அவருக்குத் தோல்விதான் கிடைத்தது. பீஜப்பூர், அவுரங்கசீபுக்கு அடங்கியபின், அவருடன் சிவாஜி அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார். பீஜப்பூரில் உள்நாட்டுக் குழப்பம் நிலவியதைக்கண்ட மராட்டியத் தலைவர் 1658'ல் கல்யாண் முதலிய பல இடங்களைத் தம்மடிப்படுத்தினார். இவ்வாறு 1659'ம் ஆண்டில், பூனா, சதாரா மாவட்டங்களுடன் சிவாஜி பல புதிய இடங்களை இணைத்துக்கொண்டார்.

**அப்ஸல்கானின் படையெழுச்சி (1659).** சிவாஜியின் செயல்கள் பீஜப்பூர் தலைவர்களின் சினத்தைப் பெருக்கியது. அவரைத் தண்டிக்க அப்ஸல்கான், பீஜப்பூரிலிருந்து புறப்பட்டார். துல்ஜாப்பூர் (ஷோலாப்பூருக்கருகில்) பவானி கோயிலைத் தாக்கிச் சூறையாடினார். சிவாஜியும் அப்ஸல்கானும் போருக்கு முன்பே அமைதியைப்பற்றி ஆலோசிக்க இருவரும் சந்திப்பதென்று ஒரு ஏற்பாடு செய்துகொண்டனர். சிவாஜி அவ்வேற்பாட்டில் ஏதோ சூழ்ச்சி இருக்கக்கூடுமென்று ஐயுற்றுத் தற்காப்புக்காகத் தம் உடலுக்கு இருப்புக் கவசமணிந்து அதை மறைக்க ஒரு நார்ப்பட்டு ஆடையை அணிந்து கொண்டார். வாக்நக் (வியாக்கிர நகம்) என்ற புலிநகத்தைப் போன்ற ஒரு இரும்புக் கருவியையும் அவர் தம்மிடம் மறைத்து வைத்திருந்தார். பிரதாப்கார் என்ற கோட்டையினருகில் அவர்கள் சந்திப்பு நிகழ்ந்தது. சிவாஜி போதுமான தற்காப்பு ஏற்பாட்டுடன் சென்றிராவிட்டால் அப்ஸல்கானால் தந்திரமாகக் கொலைசெய்யப்பட்டிருக்கக் கூடுமென்பது பல அறிஞர்களுடைய கருத்து. சந்திப்பில் இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொள்ளும்

பொழுது அப்ஸல்கான் தம்மைக் கொல்ல முயன்றதை உணர்ந்த சிவாஜி அவருடைய பிடிப்பிலிருந்து கணப்பொழுதில் தப்பித்துக்கொண்டு அப்ஸலைத் தாக்கி அவருடைய வயிற்றை வாக்நக் என்னும் கருவியால் கிழித்து அவரைக் கொன்றுர் என்று சபாசத் குறிப்பிடுகிறுர்.[1] அப்ஸல் இறந்தவுடன், சிவாஜி அறிகுறி காட்டி மறைந்திருந்த மராட்டியப் படையினரை பீஜப்பூர் படையின்மீது பாய்ந்துத் தாக்கச் செய்தார். கபீகானும் ஐரோப்பிய அறிஞர்கள் சிலரும், சிவாஜி வஞ்சகமாக அப்ஸலைக் கொலை செய்தார் என்று கூறுவர். ஆனல் சிவாஜியைக் கொல்லும் நோக்கத்துடனே அல்லது உயிருடன் கடத்திச்செல்லும் நோக்கத்துடனேதான் அப்ஸல், படையெடுத்து வந்ததாகவும், தந்திரமாகச் சூழ்ச்சி செய்து சிவாஜியை ஏமாற்ற அபஸல்கான் ஏற்பாடு செய்திருந்தார் என்றும் சபாசத் கூறுவதை, ஆங்கிலேயரும், டச்சுக்காரரும் தரும் சான்றுகள் உறுதி செய்கின்றன. சிவாஜி, தம்மைக் காத்துக்கொள்ளும் பொருட்டுதான் அக்கொலையை நிகழ்த்தினுரென்று அறிஞர் பர்க் குறிப்பிடுகிறுர்.[2] அவ்வெற்றியால் சிவாஜியின் புகழ் ஓங்கியது. அவர் மராட்டியப் படையைச் சீர்திருத்தினுர். தாம், தென்கொங்கணத்திலும், கோலாப்பூரிலும் கைப்பற்றிய பொருள்களை, படையினைத் திருத்தியமைத் தற்கே பயன்படுத்தினுர். பீஜப்பூர் படையை முறியடித்த அருஞ்செயல், மராட்டியரிடம் புத்துணர்ச்சியைப்பெருக்கியது. சிவாஜியின் செயல்கள் யாவும் ஐரோப்பியரின் கருத்தையும் கவரத்தொடங்கின. இந்தியரும், அயலவரும் சிவாஜியின் பெயரைக் கேட்டாலே நடுக்கமுற்றனர். அவர் ஒரு மாய வித்தைக்காரரோ என்றும் ஐயுற்றனர்.

## சிவாஜி, மேலும் மேலும் போர்களில் ஈடுபடுதல்

1659'ம் ஆண்டின் முடிவில் சிவாஜி, பீஜப்பூரிடமிருந்து பான்ஹாலாவையும், சீதிகளிடமிருந்து (Siddis; பம்பாயின் தெற்கில் இருந்த சஞ்சிரா அபிசீனியர்) தண்டராசபுரியையும்

1. Surendranath Sen, Shiva chhatrapati (1920,) P, 21.
2. Sarkar, op. cit., p, 73

கைப்பற்றினர். அதே ஆண்டில் அவர் ஒரு கப்பற்படையையும் தயார் செய்தார். 1660'ம் ஆண்டில் ஆங்கிலேய வணிகக் குழுவினருக்கும் சிவாஜிக்கும் முதல் போராட்டம் தொடங்கியது. இராசபுரியைத் தாக்கிய சிவாஜி, பான்ஹாலாவில் முற்றுகையிடப்பட்டுப் பின்னர் தப்பினர். அதே ஆண்டில்தான் ஷயிஸ்தாகானும் சிவாஜியை எதிர்த்துவந்தார். 1661'ல் முகலாயரைத் தோற்கடித்த சிவாஜி, பீஜப்பூரிடமிருந்து இரத்தினகிரி மாவட்டத்தின் பெரும் பகுதியைக்கைப் பற்றிக்கொண்டார். ஆங்கிலேயர், பீஜப்பூருக்கு உதவிசெய்த காரணத்தால் சிவாஜி, இராசபுரியை இரண்டாம் முறை தாக்கினர்; நான்கு ஆங்கிலேயரை அவர் சிறைப்பிடித்து, அவர்களை இரண்டு ஆண்டுகள் சென்ற பிறகே விடுதலை செய்தார். 1663'ல் சிவாஜி ஷயிஸ்தாகானின் படையைத் தாக்கியதன் விளைவாக, அவுரங்கசீப், ஷயிஸ்தாகானைத் திரும்ப அழைத்துக்கொள்ள நேர்ந்தது. 1664'ல் சூரத்தில் சிவாஜி பல கொள்ளைகளைப்புரிந்தார். ஒருகோடி ரூபாய்க்குமேல் அவருக்குக் கிடைத்தது. அந்த இடத்தின் வாணிகம் ஓரளவு அழிவுற்றது. அதன்பிறகு சில நாட்களில் ஷாஜி இறக்கவே, சிவாஜி, அரசன் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். அதே ஆண்டில் பாஜிகோர்படேயையும் (1648'ல் ஷாஜியைக் கைதியாக்கியவர்) அவருடைய குடும்பத்தினர் பலரையும் சிவாஜி கொலை செய்தார். அந்நிகழ்ச்சி "கோர்படேக்களின் கொலை" எனப்பெறும். அடுத்தபடியாகச் சிவாஜி கோவாவின் வடக்கிலுள்ள ஒரு இடத்தை இணைத்துக்கொண்டதுடன் இரத்தினகிரி மாவட்டத்திலும், ஹூப்ளியிலும் கொள்ளையடித்தார். 1665'ல் அவருடைய கப்பற்படை, பார்ஸிலோர் (தென்கன்னடம்) என்னுமிடத்தைத் தாக்கி வெற்றிபெற்றது. மிகுந்த கொள்ளைப் பொருள்களை வெற்றி வீரர் பெற்றனர். ஆனல் திரும்புகையில் போர்ச்சுகீசியர் நோவா கோவாவுக்குத் தெற்கில் சிவாஜியை முறியடித்தனர். குவார்தா கூறும் அச் செய்தியை லிஸ்பன் குறிப்புக்கள் உறுதி செய்கின்றன. செயசிங், புரந்தரில் படையெடுத்த நிகழ்ச்சியை நாம் முன்னர் குறிப்பிட்டுள்ளோம். சிவாஜி ஆக்ராவுக்குச் சென்று திரும்பிய செய்தியையும் முன்னர் கண்டோம். 1667'முதல் 1669'வரை

சிவாஜி மிகுதியான போர்களில் ஈடுபடவில்லை. 1668'ல் அவர் கோவாவைக் கைப்பற்றுவதற்குச் செய்த முயற்சி, போர்ச்சுகீசியர் விழிப்புட னிருந்ததால் பயனுறவில்லை. இரண்டு ஆண்டுகட்குப்பின் அவர் மீண்டும் முகலாயருடன் போரைத் தொடங்கி, முன்னர்த்தாம் இழந்திருந்த கோட்டைகளைக் கைப் பற்றிக் கொண்டார். சிவநேரிலும் சஞ்சிராவிலும் அவர் வெற்றி பெருத போதிலும் 1670'லும் 1672'லும் முகலாயரைப் பல இடங்களில் தோற்கடித்தார். நாசிக் மாவட்டத்தின் வடக்கிலும் மேற்கிலும் உள்ள இடங்கள், சிவாஜியின் கீழ் வந்தன. பான்ஹாலா, சதாரா, முதலியனவும் அவராட்சிக்கு அடங்கின.

சிவாஜி முடிசூட்டிக் கொள்ளல்: 1670 முதல் 1674 வரை சிவாஜி பெற்ற வெற்றிகளின் விளைவாக 1674'ம் ஆண்டு ஜூன் மாதம் ஆரும் நாளில் அவர் முடிசூட்டிக்கொண் டார். விசயநகரக்காசை ஒத்த பொற்காசு சிவாஜியால் வெளி யிடப் பெற்றது. ''சத்திரபதி மகாராசா'' என்னும் பட்டத்தை அதில் காண்கிருேம். 1672'ல் விசயநகரின் மூன்ரும் ஸ்ரீரங்கர் இறந்த செய்தியும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. காசியி லிருந்து வந்த காகபட்டர், சிவாஜி ஒரு க்ஷத்திரியரே என்று அறிவித்து வேதமுறைச்சடங்குகளுடன் அவருக்குமுடிசூட்டினர். ஏறத்தாழ 50 லட்ச ரூபாய் செலவில் ரெய்காடில் நடைபெற்ற அவ்விழாவுக்கு ஆங்கிலேய வணிகக் குழுவின் பிரதிநிதியாக ஹென்றி ஆக்ஸின்டென் என்பார் சென்றிருந்தார். முடிசூட்டு விழா ஆண்டு வரிசை ஒன்றும் தோற்றுவிக்கப்பெற்றது. அவ்விழாவுக்குச் சில நாட்கள் பின்னர் ஜீஜாபாய் இறந்தார். அதற்கு முன்னரே காகபட்டரின் மூக்குக்கு எதிர்பாராவித மாகத் தீங்கு ஏற்பட்டது. மேலும் பிரதாபகாரில் குதிரைக் கொட்டில்கள் தீக்கிரையாயின. சின்காராவில் அரசாங்க யானை ஒன்று இறந்துவிட்டது. அத்தீய அறிகுறிகளைக்கண்ட சிவாஜி 1674'ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24'ம் நாளில் மீண்டும் முடிசூட்டிக்கொண்டார். 1675'ல் கோலாப்பூர், போண்டா (Phonda) முதலிய இடங்களை அவர் வென்ருர்.

## சோழமண்டலக்கரையில் படையெழுச்சி (1677—8)

1675'ம் ஆண்டிலேயே சிவாஜிக்கு, கிழக்குக் கருநாடகத்தை (அல்லது சோழமண்டலக் கரையை)த் தம்மடிப்படுத்த வேண்டுமென்ற பேரவா இருந்தது. அங்கே கொள்ளையடிக்க வேண்டுமென்பது மட்டும் அவருடைய நோக்கமன்று. முகலாயரைத் தாக்குவதற்குச் செஞ்சி மிகவும் ஏற்ற இடம் என்பதும் அவருடைய. கருத்தாகும். விசயநகர மன்னரான III'ம் ஸ்ரீரங்கருக்குப் பிறகு அவருடைய வாரிசாகத்தாம் உயர்நிலைபெறவேண்டுமென்ற எண்ணமும் சிவாஜிக்கு இருந்திருக்கக்கூடும். சோழமண்டலக்கரைப் படையெழுச்சியைத் தாமே தொடங்கினர். தக்கணத்திலும், கருநாடகத்திலும் இருந்த சூழ்நிலை மராட்டிய வீரருக்கு ஏற்றதாகவே அமைந்திருந்தது. செஞ்சியின் நாசிர் முகம்மதுவும், வாலிகண்டபுரத்தின் (திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெரம்பலூருக்கருகில்) ஷெர்கான் லோடியும், பெயரளவுக்கே பீஜப்பூருக்கு அடங்கியிருந்தனர். முகலாயரின் தாக்குதல்களாலும் உள்நாட்டுப் போரினாலும் பீஜப்பூர் மிகவும் மெலிவுற்றிருந்தது. வெங்காஜியும், சொக்கநாதரும் முறையே தஞ்சாவூரிலும், திருச்சிராப்பள்ளியிலும் உரிமை பெற்றிருந்தனர். அவர்களிடை பகைமை நிலவியது. இருவரும் புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடி வந்தனர். சிவாஜி கைக்கூலி கொடுத்து முகலாய அரசப்பிரதிநிதி, நொதுமல் (Neutral) கொள்கையைப் பின்பற்றுமாறு செய்துவிட்டார். மேலும் அவர், கருநாடகத்தில் படையெடுப்பதற்காகக் கோல்கொண்டாவுடனும் நட்புஉறவுகொண்டார். 1677'ல் ரெய்காடிலிருந்து புறப்பட்டுச் சென்ற சிவாஜிக்கு ஐதராபாத்தில் சிறந்த வரவேற்புக் கிடைத்தது. செஞ்சியை அவர் விரைவில் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் அவருடைய வேலூர் முற்றுகை ஓராண்டுக்குமேல் நீடித்தது. அப்பொறுப்பைத் தமது துணைத் தலைவரிடம் ஒப்படைத்துவிட்டு சிவாஜி திருவதியில் (கூடலூருக் கருகில்) ஷெர்கானுடன் போரிட்டு அவரை வென்று விரட்டினர். சிதம்பரத்துக் கண்மையிலுள்ள புவனகிரியையும் மராட்டியத் தலைவர் கைப்பற்றிக்கொண்டு, தெற்கே சென்று

கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள திருமலாவதியில் (தஞ்சைக் கருகில்) தங்கினர். வடக்கு கொள்ளிடப் பகுதிகளைத் தம்மடிப் படுத்தியபின்னர், சிவாஜி சாந்தாஜியை (ஷாஜிக்கு முறையற்றவகையில் பிறந்த மகன்) செஞ்சியின் அரசப் பிரதிநிதியாக அமர்த்திவிட்டுத் தலைநகருக்குத் திரும்பினர். புதுச்சேரியில் பிரெஞ்சுத் தலைவராக இருந்த மார்த்தினையும் நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றுமாறு சிவாஜி செய்திருந்தார். கருநாடகத்தில் சிவாஜியின் வெற்றிகளை ஆங்கிலேயக் குறிப்புகள் புகழ்ந்து சிறப்பிக்கின்றன. "வந்தேன்; பார்த்தேன்; வென்றேன்" என்று கூறிய ஜூலியஸ்ஸீஸருடனும், கிரேக்க வீரர் அலெக்சாந்தருடனும், செர்ட்டோரியஸ்ஸூடனும் ஹன்னிபாலுடனும் ஒப்பிட்டுச் சிவாஜியை அக்குறிப்புக்கள் புகழ்கின்றன.[1] அவர் திரும்புகையில் 1678'ம் ஆண்டின் தொடக்கத்தில் பெல்வாடி (பெல்காமுக்கருகில்) கோட்டையில் அவரை எதிர்த்து நின்ற கைம்பெண் சாவித்திரிபாய் ஒருமாத காலம் வீரப் போர் புரிந்தாள். ஆனல் இறுதியில் அவள் தோல்வியுற்றபின், அவளை வீரர்கள் இழிவுபடுத்தினர். அதை அறிந்த சிவாஜி அக்கொடுஞ்செயலுக்குக் காரணமாயிருந்தவன் கண்களைக் குருடாக்கினர்.

சிவாஜியின் இறுதிக்காலம்: (1678—'80). 1678'ல் சிவாஜி சிவநேரைக் கைப்பற்ற முயன்று மீண்டும் தோல்வியுற்ருர். அவர் மகன் சாம்பாஜி முகலாயருடன் சேர்ந்துகொண்டார். 1679'ல் அவுரங்கசீபுக்குத் தாம் எழுதிய முடங்கலில் சிவாஜி சமயப்பொறை இன்றியமையாதது என்று தெளிவுபடுத்தினர். சாம்பாஜி, தம் நாடு வந்து சேர்ந்தபோதிலும் சிவாஜிக்கு அடங்காமலே இருந்து வந்தார். 1680'ல் சிவாஜி வயிற்றுக்கடுப்பு நோயின் விளைவாக உயிர் நீத்தார். குவார்தா, அவருடைய இறுதிக்கால ஆணைகளைக் குறிப்பிட்டுள்ளார். ஒரு பசுவின் வாலைத் தம் கையில் பிடித்துக்கொண்டே தாம் இறக்க வேண்டுமென்றும் தம் சவத்தை பாரசீக நாட்டுப் பன்னீரால் கழுவ வேண்டுமெனவும், அதில் சந்தனம் பூசி நெய்யில் ஊறிய வாசனைக் கட்டைகளைக் கொண்டு அதை எரிப்பதுடன்

1. English Records on Shivaji (Poona 1931) Pt. II. pp. 149-50, 153, 157.

தம் மனைவியர் உடன்கட்டை ஏறுவதைத்தடைசெய்யக் கூடாது என்றும், தம் உடல் எரிந்து எஞ்சிய சாம்பலைக் கங்கையில் கரைக்கவேண்டுமென்றும் அவர் ஆணைகளிட்டாராம்.

**ஆங்கிலேயர், போர்ச்சுகீசியர், சீதிகள் (Siddis) முதலியோருடன் தொடர்பு:** இராசபுரியிலிருந்த ஆங்கிலேய வணிகர் முரட்டுத்தனமாக நடந்துகொண்டதால், 1660'ல் அவர்களுக்கும் சிவாஜிக்கும் போராட்டம் ஏற்பட்டது. மராட்டியர் இராசபுரித் தொழிற்சாலைகளைத் தாக்கிக் கொள்ளையிட்டனர். அதன்பிறகு போருக்கான சூழ்நிலை பல காலங்களிலிருந்த போதிலும் அமைதியான ஏற்பாடுகள் இரு சாராரும் தமக்கிடையே செய்து கொண்டனர். ஆங்கிலேயத் தூதுக்குழுவினரும் சிவாஜியிடம் அடிக்கடி சென்றனர். போர்ச்சுகீசியருடனும் சிவாஜி பெரும்பாலும் அமைதியான உறவையே நாடினார். ஆயினும் சிற்சில காலங்களில் போராட்டமேற்பட்டது. 1667ம் ஆண்டிலும் 1670'ம் ஆண்டிலும் அவர்களுடன் சிவாஜி உடன்படிக்கைகள் செய்து கொண்டார். சீதிகளின் இடங்கள் சிலவற்றைச் சிவாஜி கைப்பற்றிக்கொண்டார். இருசாராருக்கும் நீண்ட போராட்டம் நிலவியது, சஞ்சிராவை அவர்களிடமிருந்து கைப்பற்றப் பல முயற்சிகள் செய்தும் அவை பயனுறவில்லை. அந்த அபீசீனியக் கூட்டத்தினரின் கப்பற்படை சிவாஜியின் கப்பற்படையை விட வன்மை பெற்று இருந்தமையே அதற்குக் காரணமாகும்.

**ஜீஜாபாயும் தாதாஜிகோண்டதேவும்.** ஷாஜியின் மனைவி ஜீஜாபாய் வாழ்க்கையில் பல துன்பங்களை அடைந்திருந்தார். அவர் கணவனார் அவரைப் பிரிந்திருக்க நேரிட்டதால், சிவாஜியின் முன்னேற்றத்தில் அவர் தம் முழுக் கருத்தையும் செலுத்திவந்தார். வீர உணர்ச்சியைத் தம் மகனிடத்தில் உண்டாக்கிய பெருமை அவருக்குரியது. இந்து மதத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற பேரார்வத்தையும் அவர் தம் மகனிடம் உண்டாக்கினார். தாதாஜி கோண்டதேவ், 1637 முதல் 1647'ல் தாம் இறக்கும் வரை தமது ஆற்றலின் காரணமாகப் பூனா ஜாகீர்ப் பகுதியில் பான்ஸ்லேக்களின் அதிகார வளர்ச்சியைப் பெருக்கினார். குழப்பமான

நிலையை முடிவுறச்செய்து அப்பகுதியில் மாலிக் ஆம்பரின் நில வரித்திட்டத்தைப் புகுத்தினர். சிவாஜிக்கு நன்னெறி உண்டாவதற்கான கல்வியைக் கற்பித்தார். மரபு ஒழுக்கத்திலும் வேளாண்மையிலும் சிவாஜிக்கு மிக்க விருப்பமிருந்தமைக்குத் தாதாஜி ஒரு முக்கிய காரணமாவர்.

துக்காராமும் இராமதாசரும். துக்காராம், ஏறத்தாழ 1600'ல் பிறந்த பெரியாராவர். பக்திக்குத் தூய உள்ளமும் உயர்ந்த ஒழுக்கமும் துணை செய்யும் என்பது அவருடைய கருத்து. "மராட்டியக் கபீர்" எனவும் அவரைப் புகழ்வர். அவர், ஒழுக்க முறையையும் சமயத்தையும் பகுத்தறிவால்தான் உணர வேண்டுமென்று கூறினர். உருவவழிபாடு, அத்துவைதக் கொள்கை, இராதாகிருட்டின வழிபாட்டு முறை முதலியவற்றை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. நூற்றுக் கணக்கான துதிப்பாடல்களை அவர் இயற்றி உள்ளார். அவற்றில் எளிய நடை, உணர்ச்சியை எழுப்பும் தன்மை, இரக்கப் பண்பு, முதலியவற்றைக் காண்கிரும். மக்களின் வாழ்க்கை நிலையற்றது; புலன்வழிச் செல்வதால் தீமையே வரும்; பற்றற்ற வாழ்க்கையே சிறந்தது.—இத்தகைய கருத்துக்களை அப்பாசுரங்கள் விளக்குகின்றன. இவையாவும் சிவாஜியின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. தமக்கு விளையக்கூடிய இடையூறுகள் எதையும் பொருட்படுத்தாது, சிவாஜி துக்காராமின் சொற்பொழிவுகளைக் கேட்க ஆர்வத்துடன் செல்வது வழக்கம். ஆனல் இருவரும் நெருங்கிப் பழக வாய்ப்பு ஏற்படவில்லை. அப்பெரியார் 1649'ல் இறந்துவிட்டார். சிவாஜியின் குருவான இராமதாசர் (1608—81) "தாசபோதம்" என்னும் அரியநூலில் மதம், மெய்யுணர்வு, அரசியல் முதலிய பல செய்திகளை விளக்கிக் கூறுகிருர். மகாராட்டிரர் ஒன்றுகூடி மராட்டியர் அறத்தைக் காப்பாற்ற முற்பட வேண்டுமென்று பல அதிகாரங்களில் அவர் அறை கூவுகிருர். அவர் கூறுவதாவது:— "மராட்டியரே ஒன்று சேருங்கள்; மதம் மறுபடியும் நிலவ வழி வகுங்கள்; நமது முன்னேர் வானுலகிலிருந்துகொண்டு நம்மைப் பார்த்து எள்ளி நகைக்கின்றனர்!...... அளவுகடந்து செல்லவேண்டாம்; அமைதியைப் போற்றுங்கள்; அறிவாளி

பிடிவாதமாக இருக்கமாட்டான்; பகுத்தறிவே மிகச்சிறந்த பண்பாகும்; வாழ்க்கைக் கடலைக் கடக்கப் பகுத்தறிவு இன்றியமையாதது.''[1] சிவாஜி, இராமதாசருடன் எப்பொழுது தொடர்புகொள்ளத் தொடங்கினு ரென்பது பற்றியும் அப்பெரியார் எத்துணை அளவுக்கு சிவாஜியின் மனத்தை உருவாக்கினுரென்பது பற்றியும் கருத்து வேறுபாடுகள் உள. ஏறத்தாழ 1672'ம் ஆண்டுக்குப் பின்னரே அவர்களின் தொடர்பு தொடங்கியிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம். தமது இராச்சியத்தை சிவாஜி, தமது குருவிடம் ஒப்படைத்து விட்டுத் தாம் அவருடைய பிரதிநிதியாகவே ஆட்சிபுரிந்ததாக ஒரு கதை வழங்குகிறது. சிவாஜி, சிவந்த மஞ்சள் நிற (ஆரஞ்சு)க் கொடியை ஏற்றுக்கொண்டதுடன் "ராம்! ராம்!" என்று வணக்கமொழிகூறும் பழக்கத்தையும் பின்பற்றலானுர். அமைச்சர்களுடைய பணித்துறைச் சார்பான பெயர்களை வடமொழியில் அமைத்தார். இராமதாசர், அரசியல் ஒழுக்க முறைச்சார்பாக அறவுரை கூறிவந்தார்; ஆனுல் அரசியலில் தலையிடவில்லை. அவர் கற்பித்த செய்திகள் சிவாஜியின் கருத்தை உருவாக்கி யிருக்குமென்பதில் ஐயமில்லை.[2]

## இந்துக்களிடம் ஒற்றுமை உணர்ச்சி எழுப்பும் சிவாஜியின் குறிக்கோள்

சிவாஜியின் குறிக்கோள் உருவாவதற்கு விசயநகர இராச்சியம் ஒரு வழிகாட்டியாக இருந்ததென்று சில அறிஞர்கள் கூறுவர். ஆனுல் விசயநகரப் பண்புகள் எந்த அளவுக்கு அவருக்குதவின என்பதற்குத் தெளிவான சான்றுகளில்லை. சிவாஜி, விசயநகரக் காசுமுறையைப் பின்பற்றினு ரென்று முன்னர்ப் பார்த்தோம். ஆனுல் அவரோ, அவர் தந்தையோ விசயநகருடன் நட்புக்கொள்ளவில்லை. மேலும் ஷாஜி, அப்பேரரசு அழிவுறவும் ஓரளவு உதவினுர். பங்களூரில் ஷாஜியும், தஞ்சாவூரில் வெங்காஜியும் ஓரளவு விசயநகரக் கலைப்பண்பு மரபை வளர்த்தனர் என்பதில் ஐயமில்லை.

1. H: G. Rawlinson, Shivaji tne Maratha (1915) pp. 120-2
2. C. H. 1,. IV. p. 427

பொதுவாகக் கூறுமிடத்து, 17'ம் நூற்றுண்டில் மகாராட்டிரத்தில் தோன்றிய இன எழுச்சி, முகம்மதியரைப் பொறுத்த வரை விசயநகரத்தவர் கொண்டிருந்த நோக்கத்தின் தொடர்ச்சியே என்று கருதலாம். சிவாஜி, மராட்டிய நாட்டினரின் உரிமையைப்பற்றி மட்டுமே அக்கரை கொண்டிருந்தாரென்று கூறுவது தவறு என்றும் இந்துக்கள் யாவரையும் ஒற்றுமைப் படுத்தவேண்டுமென்பதே அவருடைய குறிக்கோள் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.[1] ஆனால் அதற்குக் கூறப்படும் சான்றுகள் தெளிவற்றதாக உள்ளன. பிற்காலத்திய மராட்டியச் செய்திக்கோவைகள், I'ம் பாஜிராவின் பரந்தகொள்கையுடன் சிவாஜியின் குறிக்கோளை இணைத்துக் குழப்பம் விளைவிக்கின்றன. சிவாஜி ஒரு மராட்டிய தேசீய இராச்சியத்தைத் தோற்றுவிக்க முயன்றுரென்பதற்குத் தெளிவான சான்றுகள் உள்ளன. மராட்டியரின் உரிமையையே இந்துக்களின் உரிமை என்று அவர் கருதியதாகப் புலப்படுகிறது. 1677'ல் அவர் மாலோஜி கோர்படேக்கு எழுதிய முடங்கல் இதைத் தெளிவாக்கும். சிவாஜி, செயசிங்குக்கு அடங்கியதும், ஆக்ராவுக்குச் சென்றதும் அவர் மராட்டியருக்கும் இராசபுத்திரருக்குமிடையே நேசஉடன்படிக்கை செய்து கொள்வதற்காகச் செய்த முயற்சிகள் என்று கருதுவது பொருத்தமுடையதன்று. ஏனெனின் அதற்குத் தக்க, தெளிவான, சான்றுகளில்லை. அதுபோலவே இந்துக்களை ஒற்றுமைப்படுத்தும் எண்ணத்துடன் தான் அவர் கருநாடகத்தில் படையெடுத்தார் என்று கூறுவதும் வலிவுடையதன்று.

## பகுதி 6

### மராட்டியரின் படை அமைப்பு

சிவாஜியின் படை அமைப்பு. தொடக்கத்திலிருந்தே மராட்டியர் வீர உணர்ச்சியும் சகிப்புத் தன்மையும் வாய்ந்தவர்களாயிருந்தனர். 17'ம் நூற்றுண்டின் முற்பாதியில் தக்கணச் சுல்தானியரின் கிழ் அவர்கள் போர்த் தந்திரக்கலையில் சிறந்த

1 Sardesai, G. S. The Main Currents of Maratha History (1949) pp. 69—75.

பயிற்சி பெற்றனர். இனம், மொழி, மதம் முதலியவற்றில் அவர்களிடம் ஒரே தன்மையைக் காண்கிறேம். பக்தி வழி பாட்டு முறை அவர்களிற் சில பிரிவினருக்கு மிகுந்த ஆற்றலை அளித்தது. ஷாஜஹானும் அவுரங்கசீபும் தமது வைதீக மதத்தைப் பின்பற்றி வந்ததை நேரில் கண்டுகொண்டிருந்த மராட்டியர் தமது மதச் செய்திகளில் ஊக்கங் கொள்ளாதிருப்பரோ? ஆனல் அவர்கள் ஜாகீர்களை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டும் தமக்கிடையே கலகங்கள் விளைத்துக் கொண்டும் நாட்டுப் பற்று, நாட்டுணர்ச்சி எதுவுமில்லாதவராயும் காலங்கழித்து வந்தனர். அவர்களுடைய முன்னேற்றத்துக்கு ஜாகீர் முறை தடையாயிருந்து வந்தது. ஆகவே சிவாஜி அவர்களிடம் சமய அடிப்படையில் இன ஒற்றுமை உண்டாக்க எண்ணங் கொண்டார்.[1] அவருடைய முறையீடு நற்பயனை அளித்தது. பெரும்பான்மையும் மானியங்கள் வழங்கும் பழக்கத்தையும் பணித்துறையில் வழி வழி உரிமை நிலவுவதையும் அவர் ஒழித்தார். பணமாகவோ அல்லது பொருள்களாகவோ ஊதியம் கொடுக்கும் வழக்கத்தை அவர் தொடங்கினர். நிலமானிய உரிமைகளையும் பெரும்பாலும் நீக்கினர். சிறப்பாகப் பணி செய்பவருக்குப் பட்டங்கள் வழங்கல், தனி உரிமைகள் அளித்தல், பரிசுகள் வழங்குதல், சிலருக்கு ஓய்வுக்கால உதவி அளித்தல் முதலிய வழக்கங்கள் அவரால் தொடங்கப்பெற்றன.

## காலாட்படை, குதிரைப்படை, பீரங்கி முதலியன

சிவாஜியின் படையில் குதிரைகளைவிட மிகுதியாகப் போர்வீரர்களே காணப்பெற்றனர். குதிரைப் படையில், அரசியலார் கண்காணிக்கும் குதிரைகளே மிகுதியாக இருந்தன. அரசியலாரின் குதிரைப்படை முழுவதற்கும் சரினௌபத் என்ற அதிகாரி தலைவராயிருந்தார். இருபத்தைந்து குதிரை வீரர்களுக்குத் தலைவராக இருந்த அதிகாரியின் பெயர் ஹவல்தார் என்பதாகும். காலாட்படை முழுவதற்கும் காலாட்படை "சரினௌபத்" தலைவராயிருந்தார்.

1. Sen, Military System of the Marathas (1928), p. 6.

ஒன்பது போர்வீரர்களுக்குத் தலைவராயிருந்த கீழ்த்தர அலுவலாளரே "நாயக்" என்பவர். சிற்சில காலங்களில் மட்டும் நிலமானியப் பண்புகள் மேற்கொள்ளப்பெற்றன. பீஜப்பூரில் பணியாற்றி வந்த சுமார் 700 பட்டாணியர் சிவாஜியின் படையில் சேர்ந்திருந்தனர். போர்வீரர்களை சிவாஜி தாமே நேரில் ஆராய்ந்து படையில் சேர்த்துக்கொள்வது வழக்கம். அவர்களுடைய நல் நடத்தைக்காக ஏற்கனவே பணியிலுள்ளவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். மான்சப்தாரி முறையின் குறைபாடுகளைச் சிவாஜி நன்கு உணர்ந்திருந்தபடியால் அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. குதிரைப் படையினர் காலாட்படையினரைவிட மிகுதியான ஊதியம் பெற்றுய்ந்தனர். ஊதியம் காலதாமதமின்றி ஒழுங்காகக்கொடுத்து வரப்பெற்றது. மலைப்பகுதி வீரர்கள், படையில் சிறப்பான இடம் பெற்றிருந்தனர். சிவாஜியின் ஒற்றர் திறமையுடன் செயலாற்றி வந்தனர். போர்வீரர்கள் பகட்டாரவாரமின்றிச் சென்று வந்தனர். கொள்ளிட ஆற்றங்கரையில் மராட்டிய வீரர்கள் தங்கியிருந்த இடத்தைப் பின்வருமாறு மார்த்தின் சிறப்பிக்கின்றார்:- "ஆரவாரம் கிடையாது; பெண்டிர் கிடையாது; மூட்டை முடிச்சுக்களும் இல்லை. சிவாஜி, அவருடைய தலைமை அமைச்சர், ஆகிய இருவருக்கு மட்டுமே இரண்டு எளிய கூடாரங்கள் உள்ளன."[1] மராட்டியர் பின்பற்றிவந்த கொரில்லாப் போர் முறை அவர்கள் நாட்டின் அமைப்புக்கு ஏற்றதாகவே இருந்தது. பீஜப்பூர் படையிலிருந்த துருக்கியக் குதிரை வீரர்களிடமிருந்து மராட்டியர் அம்முறையை நன்கு கற்றனர். சிவாஜியின் பீரங்கிப்படை சிறப்புவாய்ந்ததாக அமையவில்லை. இந்தியாவில் செய்யப்பெற்ற துப்பாக்கிகள் உயர்வு உடையன அல்ல. ஆகவே ஐரோப்பியரின்–சிறப்பாகப் பிரெஞ்சுக்காரரின்–துப்பாக்கிகளை விரும்பி அவற்றைப் பெற முயன்று வந்தார். அவருடைய பெரும் படையின் செலவு கொள்ளைப் பொருள்களால் ஈடு செய்யப்பட்டு வந்தது. போர்வீரர்கள், கடுமையான ஒழுங்குக்குக்கட்டுப்பட்டிருந்தனர். பெண்டிரை ஒருவரும் இழிவுசெய்யக்கூடாது. போரில் ஈடுபடாத மக்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது. படையினர்

1 Sen, Foreign Biographies of Shivaji, pp. 306 & 316

உள்ள இடங்களுக்குப் பெண்டிர் செல்லக்கூடாது. கொள்ளை யடிக்கப்பட்ட பொருள்களை வெற்றி வீரர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வழக்கம் நிலவியது. 1673'ல் சிவாஜி தமது படைத்துறை அதிகாரிகளுக்கு எழுதிய முடங்கலில் பலகட்டுப்பாடுகள் விதித்திருப்பதைக் காண்கிரோம்; உழவர், வணிகர், பெண்டிர், அந்தணர் முதலியோருக்கு ஒருவரும் தீங்கு செய்யக்கூடாது என்றும் பசுக்களைக் காப்பாற்றுவதும் அவர்தம் கடமை என்றும் அவர். அதில் அறிவித்துள்ளார்.

கோட்டைகள். சிவாஜியின் இராச்சியத்திற்கு அடிப்படை வலிமையை அதிலிருந்த கோட்டைகள் அளித்தன. ஆகவே அவற்றை வலிமையுறச் செய்வதில் அவர் போதிய கருத்தைச் செலுத்தி வந்தார். ஒவ்வொரு கோட்டையும், ஹவல்தார், ஸப்நிஸ், ஸரினௌபத் என்ற மூன்று அதிகாரிகள் வசம் இருந்தது. மூவரும் மூன்று சாதியினர். அம்மூவரும் தம்கீழுள்ள கோட்டையைக் காப்பாற்றும் கூட்டுப் பொறுப்பைப் பெற்றிருந்தனர். கோட்டையின் சாவிகள் ஹவல்தாரிடமிருந்தன. அந்தணரான ஸப்நிஸ் என்பாரின் கடமை, கணக்குகளை ஒழுங்காகக் குறித்துவைத்தல்; சுற்றிவந்து காவல்செய்யும் பணியை "ஸரினௌபத்" மேற்கொண்டிருந்தார். ஒவ்வொரு கோட்டையும் நீண்டகாலம் முற்றுகையைத் தாங்கும்படி, உணவுப்பொருள்களும் போர்க்கருவிகளும் போதுமான அளவுக்கு அதனுள் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. அலுவலாளர்கள், ஒரு கோட்டையிலிருந்து மற்றொரு கோட்டைக்கு மாற்றப்பட்டு வந்தனர். அலுவலாளரிடம் வழிவழிப் பதவி உரிமை நிலைபெறுவதை சிவாஜி தடுத்துவந்தார். அவருடைய 240 கோட்டைகளும் பலவிதமான வசதிகளையும் பெற்றிருந்தன. மராட்டியர் கோட்டைகளில் மிகச்சிறந்ததான ரெய்காட் கோட்டை அயலவரின் கருத்தையும் மிகுதியாகக் கவர்ந்தது. 1673'ல் அங்கே சென்ற தாமஸ் நிக்கோல்ஸ் என்னும் ஆங்கிலேயத் தூதுவர், அக்கோட்டையை எத்தகைய பகைவரிடமிருந்தும் ஒரு சிலரே காப்பாற்றிவிட முடியும் என்று குறிப்பிடுகிறார். சிறப்பாகக் குறிப்பிடத்தக்க பொறித்தொழில் வேலைப்பாடு எதுவும் கோட்

டைகளில் கிடையாது. எனினும் தற்காப்புக்கு அவை ஏற்றவையாயிருந்தன. பொதுவாக, வெடிகுண்டுகள், உருண்டு விழும் கற்பாறைகள் முதலிய கருவிகளைப் பயன்படுத்திவந்த 500 வீரர்கள் கோட்டைகளைக் காவல் செய்து வந்தனர்.

**படை அமைப்பில் முகம்மதியர் கருத்துக்கள்:** சிவாஜியின் படை அமைப்பிலுள்ள சில பண்புகள் நமக்குப் பண்டைய இந்திய முறையை நினைவூட்டுகின்றன. எனினும் பண்டைய முறையைச் சிவாஜி பெரும்பாலும் மாற்றியிருந்தார்; யானைக்குப் பதிலாகக் குதிரையைப் பயன்படுத்தி வந்தார். முகலாயரின் மான்சப்தாரி முறையை அவர் ஏற்றுக்கொள்ளாதபோதிலும், அவருடைய படை அமைப்பில் முகம்மதியக் கருத்துக்கள் சில ஏற்றுக்கொள்ளப்பட்டதைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, போர் வீரரைச் சேர்த்துக் கொள்வதன் முன்னர் அரசரே அவர்களைப் பார்வையிடுதல், நல் நடத்தைக்காகப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளச் செய்யும் வழக்கம், பணித்துறையில் சிறந்தவருக்குச் சில உரிமைகள் வழங்குதல், குதிரைகளுக்குச் சூட்டுக் குறியிடுதல், கொரில்லாப் போர்த்தந்திரங்கள், கொள்ளையின் பொருட்டுப் படையெடுத்தல் முதலியன குறிப்பிடத்தக்கவை. பீஜப்பூரின் படை அமைப்பை விடச் சிவாஜியின் படை முறை சிறந்தது என்பதில் ஐயமில்லை.

**இராணுவத் துறையில் சிவாஜியின் தனித் திறமை.** தமது நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்ற போர்முறை கொரில்லா தந்திரமுறையே என்பதை சிவாஜி உணர்ந்து அதற்கேற்பச் செயலாற்றினர். வியக்கத்தக்க படைத்தலைமைத் திறம் அவரிடமிருந்தது. விரைவாகவும் பிறர் அறியாதவாறும் தம் படைகளை அவர் செலுத்திப் பகைவர்களை ஏமாறச் செய்வதில் அவருக்கிருந்த ஆற்றல் போற்றற்குரியது. "அவரை யாரும் எதிர் பார்க்க முடியாத இடத்தில் தான் அவர் எப்பொழுதும் இருந்து வந்தார்."[1] என்று உள்ள குறிப்பு நோக்கத்தக்கது. (Abbe Carre). பிறரைத் தம்பால் கவர்ந்துகொள்ளும் ஆற்றல் அவரிடமிருந்தது. ஒழுக்கமுறையில் அவர் கடுமையாக இருந்

1 Sen, Foreign Biographies of Shivaji, p 246.

தார். போர் வீரர்களைப்பற்றி அவர் மிகுந்த அக்கரை கொண்டிருந்தார். பெரும்பாலும் அவருடைய செயல்களில் தந்நலப் பண்பு கிடையாது. இக்குணங்கள் காரணமாக அவரைப் பிறர் மதித்தனர்; அவரிடம் அன்பும் கொண்டனர். ஒரே சீரான அமைப்பை அவருடைய படையில் காண்கிறோம். படை வீரர்களுக்கு அவரே பயிற்சி அளித்து வந்தார்; அயலவரைக் கொண்டு அன்று. இனத்தொடர்பான அவருடைய முறையீடுகள் மக்களின் மனத்தில் புதிய ஊக்கத்தை உண்டாக்கின. இக்காரணங்களால்தான் சிவாஜி, முகலாயராலும் பீஜப்பூர் வீரர்களாலும், சீதிகளாலும், போர்ச்சுகீசியராலும் எதிர்க்கப்பட்டு வந்தபோதிலும் இராணுவத் துறையில் வெற்றி பெற முடிந்தது. தப்தி முதல் கொள்ளிடம் வரை அவர் வீரச் செயல்கள் புரிந்து வந்தார். படைத்துறையில் அவருடைய புகழைநிலைநாட்ட அவருடைய கருநாடகப்படையெழுச்சி ஒன்றே போதும். "தனிமனிதரின் செயல்களைப் பொறுத்தவரை குறிப்பிடப்பட்டுள்ள படை வீரர்கள் யாவரையும் விட சிவாஜி உயர்வானவர்" (Orme 1782)[1]. சிவாஜி போர் நுட்பங்களை நன்கு உணர்ந்திருந்தார்."[2] என்று அறிஞர் மார்த்தின் புகழ்கிறார்.

மராட்டியரின் கடற்படை. 1659'ம் ஆண்டில் சிவாஜி தமது கடற்படையைத் தோற்றுவித்தார். அதில் அவருடைய நோக்கங்களாவன: — (1) சீதிகளிடமிருந்து தமது மக்களையும் துறைமுகங்களையும் காப்பாற்றல். (2) நிலவழிகளில் இடையூறுகளேற்பட்டால் கடல் மூலம் தமக்கு வேண்டியனவற்றைப் பெறுதல். (3) முகலாயரின் பொருள்களைக் கொள்ளையிடல். (4) அயலவர் (சிறப்பாக அரேபியாவுடன்) வாணிகத்திற் பங்குகொள்ளல். சுமார் 200 கப்பல்களை அவர் தயார் செய்தார். அவை ஐந்து வகையினவாகும். தௌலத்கான் போன்ற முகம்மதியர் அவற்றைக் கண்காணிக்க அமர்த்தப்பெற்றனர். ஆனால் சிவாஜியின் கடற்படையில் பல குறைபாடுகளிருந்தன. அதனால் அவருக்குப் பல தோல்விகளும் கிடைத்

1. Kincaid and Parasnis, A History of the Marathapeople 1931 p. 447.
2. Sen, Foreign Biographies of Shivaji, p, 289.

தன. மிகக் குறுகிய காலத்தில் ஒரு சிறந்த கப்பற்படையை அமைப்பது எளிதான செயலன்று என்பதை நாம் கருத்திற் கொள்ளவேண்டும். சிவாஜியின் கப்பற்படை அவருடைய நிலப்படையைப் போல் ஒரு தேசீய அமைப்பு அன்று என்பதும் நோக்கற்பாலது. ஆனால், கடற்படையின் சிறப்பை அவ் வீரர் உணர்ந்திருந்தார் என்பது பாராட்டத்தக்கது. "கடல் வலிமை பெறுவிட்டால் நிலப்பகுதியில் தாம் அடைந்திருக்கும் உயர்நிலைக்கும் இடையூறு ஏற்படும் என்பதை சிவாஜி நன்கு உணர்ந்திருந்தார்."[1] மராட்டியரின் கப்பற்படைத் துறையில் சிவாஜி ஒரு புதுமுயற்சியாளர். "மராத்திய ஆல்ப்ரெட்" என்றும் அவர் புகழப்பெறுவர். (ஆல்ப்ரெட் 871—899 இங்கிலாந்தின் மன்னர்; அங்கு கப்பற்படையைத் தோற்றுவித்தவர்) "சிவாஜி இறந்து பல ஆண்டுகட்குப் பின்னர் அவருடைய கப்பற்படைக் கொள்கையால் சிறந்த பயன்களேற்பட்டன."[2]

## பகுதி 7

### பொது ஆட்சிமுறை

**சிவாஜியின் இராச்சிய எல்லைகள்.** சிவாஜியின் இராச்சியத்தைத் தெளிவாகக் குறிப்பிடுவது எளிய செயலன்று. அவருடைய "சுயராச்சியம்" (தமக்கே உரிமையான நாடு) வடக்கில் இராம்நகரிலிருந்து தெற்கில் கங்காவதி ஆறுவரை-அங்கே இருந்த போர்ச்சுகீசியப் பகுதிகள் நீங்கலாக — பரவியிருந்தது. கிழக்கில் பக்லாண (நாசிக் மாவட்டம்) பகுதியிலிருந்து தெற்கில் சதாரா, கோலாப்பூர் மாவட்டங்களைத் தன்னுட்கொண்ட அவர் நாட்டின் எல்லைக்கோடு நாசிக், பூனா மாவட்டங்களின் வழியாகச் சென்றது.[3] அந்நாடும் பெல்காமிலிருந்து துங்கபத்திரையின் வடகரை வரையில் (ஹோஸ்பெட்டுக்கு எதிரில்) உள்ள பகுதியும், சிவாஜியின் ஆட்சிக்குட்பட்டன. அவை மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்

1. Sarkar, op. cit., p 247.
2. Sen, Administrative System of the Marathas (1926) p. 163.
3. Sarkar, op. cit., p. 340.

டிருந்தன. மைசூர் நாட்டின், வடக்கு, கிழக்கு, நடுப் பகுதிகளையும், பெல்லாரி, சித்தூர், வட ஆற்காடு, தென்னுற்காடு மாவட்டங்களின் சில பகுதிகளையும் சிவாஜி தம்மடிப்படுத்தியிருந்தார். வட கன்னடம், தார்வார், ஷிமோகா மாவட்டங்களின் சில பகுதிகளில் அவருடைய ஆதிக்கம் வலிமை வாய்ந்ததாக அமையவில்லை. மகாராட்டிரரின் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடு அடிக்கடி பெருகிக் கொண்டும் சுருங்கிக் கொண்டும் இருந்தது.

**பொது ஆட்சி முறை.** சிவாஜி, நிலமானிய முறைக் குழப்பம் நாட்டில் நிலவுவதை விரும்பவில்லை; அதிகாரங்கள் யாவற்றையும் மிகுதியான அளவுக்கு மையப்படுத்துவதையும் அவர் வெறுத்தார். அமைதியான ஆட்சி முறை முன்னேற்ற மடைவதற்கு ஏற்ற வகையில் ஜாகீர்தார்களின் தம்நலப் போக்கைக்குறைக்க அவர் முயன்ருர். தொடக்கத்தில் உள் நாட்டு நிலைமை மிகமிகக் கேடுற்று இருந்தது. தாதாஜி கோண்டதேவ், நிலைமையைச் சீர்படுத்தும் முயற்சியை மேற்கொண்டு ஓரளவுதான் வெற்றி பெற்றிருந்தார். நிலமானியப் பண்புகளை அறவே ஒழிப்பதென்பது எளிதான செயலாக முடிய இல்லை. சிவாஜியைப் பின்பற்றியோரும் போர்கள் நிறைந்த சூழ்நிலையிலிருந்ததால் அமைதியின் பெருமையைப் பற்றி நன்கு உணரவில்லை. சிவாஜியிடம் போருக்கான சாதனங்கள் மிகுதியாக இருந்தன; ஆனுல் அமைதியான ஆட்சிமுறைக்குரிய சாதனங்கள் போதுமான அளவுக்கு இல்லை. மானியங்களைப் பெற்றிருந்தோர் அவைகளுக்குரிய அதிகாரியையே சிறப்பாகக் கருதி வந்தனர்; நாட்டைப்பற்றி அக்கரை கொள்ளவில்லை. அத்தகைய சூழ்நிலையில்தான் அமைதி, ஒழுங்கான ஆட்சிமுறை, முன்னேற்றம் முதலியவற்றை ஏற்படுத்தும் பொறுப்பைச் சிவாஜி மேற்கொண்டார். செயலுக்கொவ்வாத குறிக்கோள்களைப்பற்றி அவர் சிந்தித்துக் காலத்தை வீணுக்கவில்லை. செயல் முறையில் இயன்றதையே அவர் மேற்கொண்டார்.

**"அஷ்டப்பிரதான்".** சிவாஜிக்கு ஆலோசனை கூறும் ஆட்சிக்குழுவில் 1647'ம் ஆண்டுக்கு முன்னர் நான்கு

அமைச்சர்களும், 1674'ம் ஆண்டு அளவில் எட்டு அமைச்சர்களும் இடம் பெற்றிருந்தனர். அஷ்டப்பிரதானக்குழு என்று அதற்குப் பெயரமைந்தது:- (1) பேஷ்வா அல்லது "முக்கியப் பிரதான்" பொது ஆட்சி முறையில் கருத்துச் செலுத்தி வந்தார்; அரசர் இல்லாத காலங்களில் அவருடைய பிரதிநிதியாக அவர் செயலாற்றினர். (2) அமாத்தியர் அல்லது கணக்கர், அரசியலாரின் கணக்குகளை மேற்பார்வை செய்து வந்தார். (3) "மந்திரி" எனப்படும் அமைச்சர் அரச அவையில் வரலாற்று அறிஞராகவும், அரசரின் தனிமுறைச் செயலாளராகவும் பணிபாற்றினர். (4) சுருநவிஸ் அல்லது சச்சீவ் என்பார் அரசியல் முடங்கல்களைக் கண்காணித்து வந்தார். (5) தபீர் அல்லது சுமந்த் என்பார் அயல்நாட்டு அலுவல்களின் செயலாளராக விளங்கினர். (6) சரினௌபத் அல்லது சேனதிபதி, படைத்தலைவராகப் பணியாற்றினர். (7) தானதியாக்ஷா அல்லது பண்டிதராவ், சமயம், அறம் முதலியவற்றை மேற்பார்வை செய்து வந்தார். (8) காஜி-உல்குஜாத் அல்லது நியாயதீஷ் என்பார் முறை வழங்கும் தலைமை அதிகாரியாவர். படைத் தலைவர் நீங்கலாக உள்ள அமைச்சர்கள் எழுவரும் அந்தணர்கள். முதல் ஆறு அமைச்சர்களும் இராணுவத்தொடர்பான பணிகளையும் மேற்கொண்டிருந்தனர். சிவாஜி ஆங்கிலேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் எட்டு அமைச்சர்களும் கையொப்பமிட்டனர்; எனினும் பொதுவாக முதல் ஐவரின் கையொப்பங்களே போதும் எனக் கருதப்பட்டது. சிவாஜியின் அமைச்சர்கள் தனித்துறைக்களங்களின் தலைவர்கள் அல்லர். இக்காலத்தில் அமைச்சர்கள் அதிகாரங்களைப் பிரித்துக்கொண்டிருப்பதைப் போன்ற முறை அக்காலத்தில் இல்லை. சத்திரபதியின் உடன்பாடின்றிச் சமயத்துறை அமைச்சர்கூட எதையும் செய்ய முடியாது. தலைமை அமைச்சர் என யாரையும் சிவாஜி அமர்த்தவில்லை. ஆனல் மற்ற அமைச்சர்களின் நிலையைவிடப் பேஷ்வாவின் நிலை உயர்வானது. ஆயினும் பேஷ்வா, மற்ற அமைச்சர்களைத் தம் கூட்டாளிகளாகக் கொண்டனரேயன்றித் தமக்கு உதவி செய்வோராகக் கொள்ளவில்லை. அமைச்சர்களுக்கு உதவி செய்வோரை அரசரே அமர்த்திவந்தார். மூன்று அமைச்சர்கள் தமது அலுவல்களுடன் மாகாண அரசியல் செய்திகளை

யும் மேற்பார்வை செய்துவந்தனர். மூன்று மாகாணங்கட்கும் தனித்தனியாக மூன்று அரசப்பிரதிநிதிகள் அமர்த்தப்பட்டிருந் தனர். பிராந்த் அல்லது மாவட்டத்தின் நடுவில் கோட்டை அமைந்திருந்தது. அவ்வாறு பதினொன்கு மாவட்டங்கள் இருந் தன. ஆட்சிமுறையின் கீழ்ப்பகுதி ஊர் அல்லது கிராமம். அங்கே மரபுவழி ஆட்சிமுறை நிலவியது. அலுவலாளர் வழி வழியாகப் பதவிபெறும் முறையைச் சிவாஜி ஏற்றுக்கொள்ள வில்லை. தகுதியை நன்கு ஆராய்ந்தபிறகே அலுவலாளர் அமர்த்தப்பெற்றனர். தகுதியற்றவர்களைப் பதவிகளிலிருந்து உடனுக்குடன் விலக்கிவிடச் சிவாஜி சிறிதும் தயங்கினரில்லை. குற்றம்புரிந்த பொதுப்பணியாளரை, அவர் எச்சரித்தும் அவர் கள் தம்மைச் சீர்திருத்திக்கொள்ள வாய்ப்பளித்தும் வந்தார். ஜீவாஜி விநாயக் என்ற பணியாளர் 1674'ல் கப்பற்படை யினருக்குத் தேவையான பொருள்களை அனுப்பவேண்டிய தமது கடமையினின்று வழுவியதால் அவருக்கு சிவாஜி பின் வரும் செய்தியை அனுப்பியதாக அறிகிறோம்:- "உம்முடைய நடத்தை பெரிய நம்பிக்கைக்கேடான செயலாகும்...நீர் அந்தண ராயிருக்கும் காரணத்தால் இப்பெரிய குற்றத்தைப் பொருட் படுத்தாமலிருந்துவிட முடியுமா? உம்மீது, வருங்காலத்தில் குற்றஞ்சாட்டப்பட்டால் அதை மன்னிக்கவே முடியாது என் பதை அறியவும்."[1]

**நிலவரி ஏற்பாடு:** மாலிக் ஆம்பரின் நிலவரி ஏற்பாட்டை நன்கு அறிந்திருந்த தாதாஜி அதன் சிறப்பான பண்புகளைத் தம்நாட்டிலும் புகுத்தினர். அத்திட்டத்தின் குறைபாடுகள் சில வற்றை நீக்கும் வகையில் சிறந்த முறையில் நிலங் களை அளப்பதற்கான ஏற்பாட்டை 1678'ல் மராட்டிய அரசி யலார் செய்தனர். சிவாஜி 1680'ல் இறந்தபொழுது நிலங்களை அளவிடும் புதிய முறை முழுவதும் நிறைவேறவில்லை. நில வருமானத்தில் 33 சதவீதத்தை அரசியலார் முதலில் பெற்று வந்தனர் பிறகு சில வரிகள் நீக்கப்பட்டதால் நிலவரி 40 சத வீதமாக்கப்பட்டது. சிவாஜி நிலமானியப் பிரதிநிதிகளை நீக்கி விட்டு அரசியலாருக்கும் உழவருக்கும் நேர்த்தொடர்பை ஏற் படுத்தினர். நிலமானிய அதிகாரிகளின் கொடுமைகளினின்று

1. Sardesai, Shivaji Souvenir, p. 153.

உழவருக்கு விடுதலை கிடைத்தது. பயிரிடுவோருக்குக் கடன்கள் கொடுத்து அவற்றைச் சிறிது சிறிதாக அரசியலார் அவர்களிடமிருந்து திரும்பப் பெற்றனர். வேளாண்மையைப் பெருக்குவதன் பொருட்டு, புதிதாகப் பண்படுத்தப்படும் நிலங்களில் சிறிது சிறிதாகவே வரியை உயர்த்திவந்தனர். அத்தகைய நிலங்களில் எட்டு ஆண்டுகட்குப்பிறகே முழுவரியையும் வாங்கினர். இத்தகைய கொள்கைகள் சிறப்புடையன என்பதில் ஐயமில்லை. சிவாஜியின் தறிக்கோளும் முறையும் போற்றத்தக்கன. ஆனால் சிவாஜியின் நிலவரி ஏற்பாடு அவருடைய காலத்திலேயே வியத்தகு பயன்களை அளித்துவிட்டதென்று கூறுவது தவறாகும். நீண்டகாலமாக நிலவிவந்த கேடுகளைச் சிறிதுசிறிதாகத்தான் நீக்கமுடியும் என்பதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும். வட கன்னடக் கடலோரப் பகுதிகளில் நிலைமை மிகவும் கேடுற்றிருந்ததென்று பேரறிஞர் பிரயர் (Fryer) விளக்கிக் கூறியுள்ளார்.[1] ஆனால் அப்பகுதியைச் சிவாஜி 1675'ம் ஆண்டில்தான் வென்றார் என்பதையும் அங்கு நிலைமை ஒழுங்குபடுத்தப்படவில்லை என்பதையும் நாம் மனத்திற்கொள்ளவேண்டும்.

**சௌத், சர்தேஷ்முகி.** சிவாஜி, தமக்குத் தேவையான பொருளைப் பெறுவதன் பொருட்டும் தமது பகைவரை மெலிவுறச் செய்யும் நோக்கத்துடனும் தாம் வென்ற சில இடங்களில் தீர்மானிக்கப்பட்ட நில வருமானத்தில் நான்கில் ஒரு பங்கை வரியாகப் பெற்றுவந்தார். அதுவே சௌத் எனப்பெறும். இம்முறையைத் தோற்றுவித்தவர் சிவாஜி அல்லர். 1579 முதல் டாமனிலிருந்த போர்ச்சுகீசியர் இராம்நகர் அரசருக்குச் சௌத் செலுத்திவந்தனர். ஆனால் அதை விரிவான முறையிலும் கொடுமையாகவும் வசூலித்தவர் சிவாஜி. அவர் கொள்ளையிடத் திட்டமிட்ட பகுதிகளில் அவர் மேலும் அச்செயலைப் புரியாமலிருப்பதற்காக அப்பகுதியினரிடமிருந்து அவ்வரியைச் சிவாஜி பெற்றுவந்தார். ஆனால் சௌத் வரியைச் செலுத்தியவரை அயலவரிடமிருந்து காப்பாற்றும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. முகலாயரின் நாடுகளிலிருந்து

1. Patwardhan and Rawlinson. op Cit., pp. 220-1.

தாம் அவ்வரியை வாங்குவது முறையானதே என்று அவரே விளக்கிக் கூறியிருக்கிறார். சுமார் 1660'ம் ஆண்டில்தான் முதன்முதலாக அவ்வரியை அவர் விதித்தார். 1670'க்குப் பிறகு காண்டெஷ், பேரார் நாடுகளிலும் 1676'ல் பெட்னூரிலும் அவ்வரி விதிக்கப்பெற்றது. இதற்குஇணையாக அமெரிக்காவில் ஜார்ஜ்வாஷிங்டன் விதித்தசில கட்டாய வரிகளைக் குறிப்பிடுகின்றனர். சிவாஜியைப் பின்பற்றி சத்திராசால் பண்டேலாவும் இவ்வரியை விதித்தார். சர்தேஷ்முக்கி என்பது நிலவருமானத்தில் பத்தில் ஒரு பங்கு வரியாகும். மகாராட்டிரத்தின் மரபாக வந்த சர்தேஷ்முக் அல்லதுவரிவாங்குவோர் சிவாஜியே என்ற முறையில் அவர் அவ்வரியை விதிக்கத் தமக்கு உரிமை உண்டு என்று கூறிவந்தார். 1648'ல் ஷாஜஹானிடமிருந்தும் அவ்வரி கோரப்பெற்றது. தோன்றிய முறையிலும் தன்மையிலும் சௌத், சர்தேஷ்முகி என்ற இரு வரிகளும் வேறுபடுகின்றன. சௌத் வரிமுறையை வெல்ஸ்லியின் துணைப்படை முறைக்கு ஒப்பிடுவது முற்றிலும் பொருத்தமானதன்று. ஏனெனின் சௌத் வரி செலுத்தியோரைக் காப்பாற்றும் பொறுப்பைச் சிவாஜி ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் துணைப்படை ஒன்றை நிறுவவுமில்லை. தவிர, சௌத் செலுத்துவோர் தமது நாட்டு உரிமையை இழந்துவிட வேண்டுமென்றும் அவர் கூறவில்லை. முகலாயப் பேரரசரின் உடன்பாடின்றியே அவர் முகலாயரின் இடங்களில் அவ்வரியை விதித்திருந்தார். தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் வலிமையற்ற பகுதிகளைத் தமக்கு உதவி செய்யுமாறு கட்டாயப்படுத்தும் வகையில் சிவாஜியின் முறையும் வெல்ஸ்லியின் முறையும் ஒப்பானவை.

**முறைவழங்கலும் கல்விக்கு ஆதரவும்.** மராட்டியரின் நீதி வழங்கும் முறை எளியதாயிருந்தது. ஆனால் தொடக்க காலத்தைச் சேர்ந்ததாக இருந்தது. பஞ்சாயத்தார்களே சச்சரவுகளைத் தீர்த்து வைத்தனர். கடுந்தேர்வு முறைகளையும் அவர்கள் விதித்து வந்ததைக் காண்கிறோம். முறை வழங்கும். பிரதானிடம் (அமைச்சர்) முறையீடுகள் செய்து கொள்ளப்பட்டன. தானதியாக்ஷர், பண்டிதர்களின் தகுதி அறிந்து பரிசுகள் வழங்கினர். சிவாஜி அறிஞர்களையும் பெரியோர்களையும் அன்புடன் ஆதரித்தார். துறவிகளின் நலத்

தில் கருத்தைச் செலுத்தி வந்தார்; கோயில்களுக்கும் பள்ளி வாசல்களுக்கும் நன்கொடைகள் வழங்கினர். பரமானந்தர், செயராமர், பூஷணர் முதலிய கவிகள், சிவாஜியின் உதவியைப் பெற்றனர். அரசியல் சொற்களடங்கிய பாரசீக சமஸ்கிருத நிகண்டு ஒன்றை ஆக்கித்தருமாறு சிவாஜி ஆணையிட்டிருந்தார்.

சிவாஜியின் கருத்துக்களில் பிறர் பண்புகளின் தன்மை. வீரகாவியம் கூறும் தசரதர் எட்டு உறுப்பினரடங்கிய ஆலோசனை சபையை அமைத்திருந்தார். மனு, ஏழு பேர் அல்லது எட்டு பேரடங்கிய குழுவே சிறப்புடையதென்று கூறுவர். எனினும் சுக்கிர நீதியையே சிவாஜி பின்பற்றினரென்று கருதப்படுகிறது. அந்நூலிலும் எட்டு அல்லது பத்து உறுப்பினரடங்கிய ஆலோசனைக் குழு சிறப்பிக்கப்படுகிறது. ஆனல் சுக்கிரநீதி கூறும் புரோகிதர், பிரதிநிதி ஆகியோர் மராட்டியரின் ஆலோசனைக் குழுவில் இடம்பெறவில்லை. பிற்காலத்தில் இராசாராமர்தான், பிரதிநிதி என்ற ஒருவரை அமர்த்தினர். மேலும் சிவாஜியின் அமைச்சர்களுடைய அலுவல்களும் சுக்கிரர் கூறும் ஆலோசனையாளரின் செயல்களும் வேறுபடுகின்றன. அர்த்த சாத்திரம் குறிப்பிடும் செயலாளருக்கும், சிவாஜியின் செயலாளருக்கும் ஒப்புமை கூறமுடியும். சிவாஜி காலத்திய ஊராட்சி முறையும் நகர அமைப்பும் சில பண்புகளில் பண்டைய இந்திய முறையையொட்டி உள்ளன. ஆனல் பழைய இந்திய முறையை மீண்டும் கொணர வேண்டுமென்ற ஆர்வம் எத்துணை அளவுக்குச் சிவாஜியிடம் இருந்தது என்பதைக் கூறுவது எளிதன்று. பாமனி நாட்டில் எட்டுப் பேரடங்கிய குழு இருந்ததென்று முன்னர்ப் பார்த்தோம். அம்முறை 16, 17'ம் நூற்றுண்டுகளில் தக்கணச் சுல்தானியரிடமும் பரவியது. சிவாஜியின் எட்டு அமைச்சர்களும் ஒரே காலத்தில் அமர்த்தப்படவில்லை என்பதும் நோக்கற்பாலது. தக்கண நாடுகளின் பழக்கத்தை யொட்டி அவர் ஒருவர் பின்னெருவராக அவர்களை அமர்த்தி இறுதியில் தமது முடிசூட்டுவிழாக் காலத்தில் எட்டு அமைச்சரடங்கிய குழுவை அமைத்திருந்தார். நில வரித்திட்டத்தைப் பொறுத்தவரை மாலிக் ஆம்பரின் முறையை

மராட்டியர் பின் பற்றினர். ஆனல் அதில் சீர்திருத்தங்கள் புகுத்தப் பெற்றன. பெரும்பாலும் அலுவல் துறைக் களங்கள் முகம்மதியரின் முறையை ஒட்டியே அமைந்தன. ஆனல் பீரங்கிப் படைத்துறை மட்டும் போர்ச்சுக்கீசியரின் முறையில் அமைந்திருந்தது. உடை, பழக்க வழக்கங்கள், அவைக்களச் சிறப்புக் கொண்டாட்டங்கள் அணி செய்தல் முதலிய வற்றில் முஸ்லிம் கருத்துக்கள் மேற்கொள்ளப் பட்டன. அரசர் அமரும் இடத்தில் புலித்தோலும் மென் பட்டும் விரிக்கப்பட்டிருந்தன.[1]

## பகுதி 8

### சிவாஜியின் அரசியல் திறமை, பண்பு, சிறப்பு முதலியன

அரசியல் திறமை. சிவாஜி, 1667 முதல் 1669 வரை உள்ள காலப்பகுதியில்தான் ஆட்சிமுறையில் சிறப்பாகக் கருத்தைச் செலுத்தமுடிந்தது. இந்து முஸ்லிம் பண்புகளை அவர் ஒன்று சேர்த்தார். அவர் மேற்கொண்ட பெருஞ்செயலின் தன்மையையும் அதற்கு இடையூருக இருந்த சூழ்நிலையையும் நாம் மனத்திற்கொண்டு நோக்குவோமானல் அவர் செயல் முறைக்குக் கொண்டு வந்த பொது ஆட்சி அமைப்பின் சிறப்பை நன்கு உணரமுடியும். சிவாஜி வாழ்ந்த காலம் 50 ஆண்டுகளே. அக்குறுகிய காலத்தில் தொடர்ந்து போரிலீடுபடவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டிருந்தது. அவ்வாறிருந்தும் அவர் ஆற்றிய அருஞ்செயல்கள் பலப்பல. ''சிவாஜியும் ஷெர்ஷாவும் தன்மையிலும் தனித்திறமையிலும் ஒப்பானவர்கள்.''[2] முன்னவரின் நிலையங்கள் 17'ம் நூற்ருண்டு முழுவதும் பழுதுருமல் தொடர்ந்து வந்தன. பிற்காலத்தில் அவை மாற்றப்பட்டமை சிவாஜியின் குற்றமன்று; ஆயினும் 18'ம் நூற்ருண்டிலும் மராட்டியர் அவற்றைவியந்தனர். சிவாஜி கண்மூடித்தனமாகப் பிறரைப் பின்பற்றுபவரல்லர். ஆனல் புதிது புதிதாக நிலையங்கள் அமைக்கவேண்டுமென்ற ஆர்வமும் அவரிடமில்லை. தமது தேவைகளுக்குத் தக்கவாறு

1. Sarkar, op. cit., p, 206
2. Sarkar, op. cit. p. 20

இந்துப் பண்புகளையும் முகம்மதியப் பண்புகளையும் அவர் ஏற்றுக் கொண்டார். அமைதியான பொது ஆட்சிமுறையின் சிறப்பை அவர் உணர்ந்திருந்தார். செயலாற்றக்கூடிய குறிக் கோள்களே அவரிடமிருந்தன. ஆட்சிமுறையில் குறிப்பிடத் தக்க வெற்றி அவருக்குக் கிடைத்தது. அரசியல், சமய, உரிமைகளுக்காக அவர் போராடினார். "அமைப்புத் திறமை யிலும் போர்த்தொழிலிலும் சிவாஜி சிறப்புடையவரே; எனி னும் அரசியல் வல்லுநர் என்ற முறையில் அவர் உச்ச நிலையை எய்துகிறார்.[1]

தன்மை. சிவாஜியின் தனிநிலை வாழ்க்கை நல் ஒழுக்கம் நிறைந்த ஒன்றாம். தூய வாழ்க்கையை மேற்கொண்ட அவர் அளவுக்குமேல் செலவு செய்வதில்லை. "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனுஞ் சொல்" என்னும் திருக்குறளுக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கினார் சிவாஜி. தம் தந்தையிடம் அவருக்கு மிக்கபணிவு இருந்தது. "பெருந்தன்மையற்ற தம் தந்தையிடம், 1662'ல் சிவாஜி அவருடைய (தந்தையின்) செருப்புகளைக் கையில் ஏந்திக்கொண்டு கீழ்த்தரப்பணியாட்களுடன் சேர்ந்து நின்றார்", என்று பீம்சென் குறிப்பிடுவது நோக்கற்பாலது.[2] உயர்ந்த குறிக்கோள் வாய்ந்த தந்தை என்ற முறையிலும் சிறந்த கணவன் என்ற முறையிலும் சிவாஜியின் நடத்தை போற்றத்தக்கது. ஆனால் தமது ஒன்றுவிட்ட உடன் பிறப் பாளனை வெங்காஜியை அவர் எதிர்த்தார். ஆயினும் அவன் தமக்கு அடங்கியவுடன் அவனிடம் கருணை காட்டினார். தந்தையிடமும் உடன் பிறந்தாரிடமும் அவுரங்கசீப் நடந்து கொண்ட முறையை நாம் ஈண்டு நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் தனி நிலை வாழ்க்கைத்தூய்மையில் சிவாஜி யைவிட அவுரங்கசீப் உயர்ந்தவர் என்று கூறலாம். சிவாஜி எட்டு மனைவியரைப் பெற்றிருந்தார். ஆனால் ஒழுக்கக்கேடான வாழ்க்கையை மேற்கொள்ளவில்லை. பெண்டிரைப் பற்றி அவர் கொண்டிருந்த கோட்பாடு அக்கால நிலையை மனத்திற் கொண்டு நோக்கும்போது மிக மிக முன்னேற்றம் வாய்ந்த

1. Kincaid and Parasnis. op. cit, P. 113.
2. Patwardhan and Rawlinson, op. cit. PP. 165 & 203

தாகும். அக்காலத்தவரின் கருத்துக்குமாருக சிவாஜி பெண்டிரின் பெருமையைப் போற்ற முற்பட்டார். "பெரும்பாலும் ஒருவேளை தான் அவர் உண்டி அருந்தினர்; அவர் உடல் நலம் சிறந்திருந்தது."[2] அவருடைய கல்விஅறிவைப்பற்றி அறிஞர்களிடையே கருத்துவேறுபாடு உண்டு. அதைப்பற்றித் தெளிவான சான்றில்லை. சிவாஜியே கையொப்பமிட்ட முடங்கலை டச்சு ஆயப்பதிவேடுகள் குறிப்பிடுகின்றன. அவரிடம் சமயப்பற்று மிகுதியாக இருந்தது. மரபாக உள்ள பழக்கங்களைப் போற்றிய போதிலும் அவருடைய சமயஉரிமைக்கோட்பாடு இக்காலத்திய முறையை ஒத்ததாகும். அவுரங்கசீப் குறுகிய மனப் பான்மையுடன் வைதீகப்பற்று மிக்கவராயிருக்கையில், சிவாஜி குரானையும் முஸ்லிம்துறவிகளையும் பள்ளிவாசல்களையும் விரும்பிப்போற்றினர். இந்துக்கோயில்களை இடித்துவந்த அவுரங்கசீபின் காலத்தவரான சிவாஜி பள்ளிவாசல்களுக்கு நன்கொடைகள் வழங்கியமை சிறப்பாகப் பாராட்டத்தக்கது. சிவாஜியின் சமயக்கொள்கை உண்மையில் உயர்ந்த பண்பாட்டுடன் விளங்கியது என்று கபீகான் சான்றுகளுடன் விளக்குகிருர்.[1] பிறரைக் கவருந்தன்மை அவரிடமுண்டு. மக்களின் தன்மையை அவர் எளிதில் உணர்ந்துகொண்டார். தமது அலுவலாளரை அவர் தேர்ந்தெடுத்துக்கொண்ட ஆற்றல் போற்றற்குரியது. அவர் வீண்கனவு காண்பவரல்லர். செயல்முறையை நன்கு உணர்ந்த அரசியல் வல்லுநராகவும் சிறந்த இராணுவத் தலைவராகவும் தூய்மையும் அன்பும் உயர்ந்த குறிக்கோளும் பெற்ற ஒரு தனிப்பெருந் தலைவராகவும் அவர் திகழ்ந்தார். மாக்கிவெல்லியின் முறையைப் பின்பற்றி அவர் தமது பகைவர்நாட்டின் மக்களுக்குத் துன்பமிழைத்தாரென்பது உண்மையே. ஆனல் அவரை ஒரு கொள்ளைக்காரன் என்ருே அவர் நாட்டை, கொள்ளைக்காரர் நாடு என்ருே கூறுவது அறிவுடைமை ஆகாது. அவ்வாறு கூறுதல் சிவாஜியின் அருஞ்செயல்களைப் புறக்கணிப்பதாகும். வரலாற்றில் எந்தக் கொள்ளைக்கார நாடும், சிவாஜியும் மராட்டியரும் ஆற்றியதைப்போன்ற அருஞ்செயல்களை நிறைவேற்றியதில்லை. இங்கிலாந்தின் அரசி முதலாம் எலிசபெத் கடற்கொள்ளை

1. E & D. op Cit., VII, pp. 260 & 305

வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்; அவர்களுடைய தவறுகளை மன்னித்தார். அதனால் அவரைக் கடற்கொள்ளை அரசியார் என்று கூறுவது முறையன்று அல்லவா?

சிறப்பு. அரசியல், இராணுவப் பண்புகளுடன் கூட, ஒரு நாட்டை உருவாக்கும் ஆற்றலும் சிவாஜியிடமிருந்தது. சிவாஜியின் மக்கள் அவர்கள் காலத்திய இந்தியாவின் பிற நாட்டு மக்களைவிடச் சிறந்த முறையில் ஆளப்பெற்றனர். தம் நாட்டு மக்களிடம் ஒற்றுமையான இனப்பண்பினை வளரச்செய்தார் சிவாஜி. அதுவே அவுரங்கசீபின் பேரரசையைச் சிதற அடித்தது. 18'ம் நூற்றுண்டின் இந்திய அரசியலில் மராட்டியர் சிறப்புற்றமைக்கும் அதுவே காரணமாகும். அம்மக்களிடம் புதிய ஊக்கத்தை உண்டாக்கிய பெருமை சிவாஜிக்கு உரியது. அறிஞர் அபீகர்ரே சிவாஜியை ஸ்வீடன் நாட்டுவீரர் இரண்டாம் கஸ்தாவஸ் அடால்பஸ் ஸூடன் (1611—'32) ஒப்பிட்டுப் புகழ்வது தகுதியுடையதே. பகட்டாரவாரமானதும் எளிதில் இயங்க முடியாததுமான பேரரசுப் படைக்கு நேர்மாருக எளிதில் இயங்கும் காலாட்படையை அமைத்துப் போர் முறையில் ஒரு புரட்சியை உண்டாக்கிய பெருமை கஸ்தாவஸுக்கு உரியது என்பது நெப்போலியனின் கருத்தாகும். கஸ்தாவஸ், கொள்ளைப் பொருள்கள் மூலம், தம் நாட்டின் குறைந்த வளப்பத்தை நிறைவு செய்தார்; முப்பதாண்டுப் போரில் (1618—'48) சிறந்த படைத்தலைவர்களை முறியடித்தார்: பொது ஆட்சி முறையில் கருத்தைச் செலுத்தினர்; சமயப்பற்று மிக்கவராயிருந்தும் அவரிடம் இணைவிணக்கம் இருந்தது. வீரராகிய அவர் எளிய வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தார். உரிமைக்காகவும் உண்மைக்காகவும் அவர் போராடினர். அழிக்க முடியாத புத்துணர்ச்சியை அவர் தம் நாட்டவருக்குக் கற்பித்தார். அவர் இறக்கும்பொழுது அவருக்கு வயது 38. சிவாஜியை ஒத்த அவ்வீரரைக்கூட ஒரு கொள்ளைக்காரர் என்று சிலர் கூறுவர்!

# பகுதி 9

## சா ம் பா ஜி

**வாழ்க்கையின் முற்பகுதி.** சாம்பாஜி அல்லது சாம்பூஜி, சிவாஜியின் மூத்தமகனுவர். (சிவாஜிக்கு இரண்டு ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் இருந்தனர்—சாம்பாஜி, இராசாராம், சக்குபாய், அம்பிகாபாய், இராசகுமாரிபாய்). அவர் அன்னையான சாய்பாய், சிவாஜியின் மூத்த மனைவி. 1657'ல் பிறந்த சாம்பாஜி 1665'ல், 5000 குதிரை வீரர்களுக்குத் தலைவரான முகலாய மான்சப்தாராக ஆக்கப்பெற்ருர். 1666'ல் அவர், தம் தந்தையுடன் ஆக்ராவுக்குச் சென்ற செய்தியை முன்னர்க் குறிப்பிட்டுள்ளோம். 1679'ல் ஒழுக்கக் கேடு காரணமாக அவர் பான்ஹாலாவில் சிறைப்பட்டுப் பின் திலீர்கானிடம் ஓடிப் பிறகு 7000 குதிரை வீரர்களுக்குத் தலைவராஞர். அவுரங்கசீப் அவரை மன்னித்துவிட்ட போதிலும் அவரிடம் நம்பிக்கை கொள்ளவில்லை. இறக்குந்தறுவாயிலிருந்த தம் தந்தையைக் காண ரெய்காடுக்கு அவர் ஒட்டகத்தின் மீது விரைந்துசென்றும் தந்தையை உயிருடன் காணமுடியவில்லை. அதனுல் ஒட்டகத்தின்மீது சினங்கொண்ட சாம்பாஜி அதன் தலையை வெட்டிவிட்டு தலையற்ற ஒட்டகத்தின் உருவம் ஒன்றைக் கோட்டை வாயிலில் வைத்தார். ஒட்டகங்கள் எல்லாவற்றிற்கும் அது ஓர் எச்சரிக்கைபோலும்!

**அரசுரிமைப் போராட்டம்:** சாம்பாஜியின் தாய் 1659'ல் இறந்துவிட்டாள். அவருடைய மாற்ருந்தாயான சோராபாய் ஷர்க்கி, தமது மகன் இராசாராமரை அரசராக்க முயன்ருர். அமைச்சர்களும் அவருக்கு உதவினர். ஆனுல் போர்வீரர்களின் உதவியைப்பெற்ற சாம்பாஜி போரில் வெற்றிபெற்று அரியணையைக் கைப்பற்றிக்கொண்டுத் தம் மாற்ருந்தாயின் மீதும் அவருக்கு உதவி செய்தவர்மீதும் பழி தீர்த்துக் கொண்டார். அவ்வம்மையாருடைய உறவினரான ஷர்க்கியர் கொடுமையாகக் கொல்லப்பட்ட நிகழ்ச்சி "ஷர்க்கியர் கொலை" எனச் சிறப்பிக்கப்படுகிறது. தமது முடிசூட்டுவிழாவுக்குச் சாம்பாஜி இராமதாசரை 1681'ல் நேரில் சென்று

அழைத்தார். ஆனால் அரசரின் கொடுமைகள் காரணமாக அப்பெரியார் அவ்வழைப்புக்கு இணங்கவில்லை. அவரைப் பார்க்கக்கூட இராமதாசருக்கு விருப்பமில்லை. பின்னர் அவருக்கு எழுதிய முடங்கலில் இராமதாசர் குறிப்பிடுவதாவது. "மக்களை ஒன்றுபடுத்துங்கள்; மிலேச்சர்களை (முகமதியர்) எதிர்க்கும் வீர உணர்ச்சியை அவர்கள் மனதில் புகுத்துங்கள்; நீர் ஒரு ஆடவர் என்று கூறிக்கொண்டால் 'சிவாஜியை விடச் சிறந்த முறையில் செயலாற்றவேண்டும்"[1]. 1681'ல் தம்மைக் கொலைசெய்துவிட்டு முகலாய இளவரசர் அக்பரை அரியணையிலமர்த்த ஒரு சூழ்ச்சித்திட்டம் தயாராகிவருவதை, இளவரசர் அக்பரிடமிருந்தே அறிந்துகொண்ட சாம்பாஜி, சதிசெய்தோரைக் கொலை செய்தார்.

**அயலவருடன் தொடர்பு:** முகலாய இளவரசர் அக்பர் தம்மிடம் அடைக்கலம் புகுந்திருந்த சூழ்நிலையைத் தக்கவகையில் பயன்படுத்திக்கொள்ள சாம்பாஜி தவறிவிட்டார். ஏமாற்றமடைந்த அக்பர் 1687'ல் பாரசீகத்துக்குச் சென்று பின்னர் அங்கேயே இறந்தார். சாம்பாஜி, அவுரங்கசீபிடம் கொண்ட தொடர்பைப்பற்றியும் அதன் முடிவைப்பற்றியும் முன்னர்க் குறிப்பிட்டோம். அவுரங்கசீபுக்கு ஏற்பட்டிருந்த இடையூறுகளைத் தமது நலத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளாமல் சாம்பாஜி சீதிகளைத் தாக்குவதிலும் போர்ச்சுகீசியரை எதிர்ப்பதிலும் காலத்தை வீணுக்கிவந்தார். அவர், அச்செயல்களால் எந்த நன்மையையும் பெறவில்லை.

**சாம்பாஜியின் தன்மையும் தோல்வியும்:** 1689'ல் சாம்பாஜி கொலையுண்ட செய்தியைக் கண்டோம். அவர் வீரம்பொருந்திய படைத்தலைவர் என்பதில் ஐயமில்லை. 1680 முதல் 1684 வரை இராணுவத்துறையில் அவர் புரிந்த செயல்கள் குறிப்பிடத்தக்கவை. வால்மீகி இராமாயணத்தை அவர் முறையாகப் படித்துவந்தார். காதல் சார்ந்த இரண்டு இந்திச் செய்யுட்களையும் அவர் இயற்றினர். சிவபெருமானிடம் அவருக்கு மிகுந்த அன்பு உண்டு. கோயில்கள் அழிவுறுவதை அவர் தடை செய்தார். மதம் மாறியவர்கள்

1. Kincaid and Parasnis. op-Cit. pp. 117—8..

மீண்டும் இந்து சமயத்துக்கு வருவதை ஆதரித்தார். ஆனால் அவர் கொடுமையாக நடந்துகொண்டார்; பழிவாங்கத் தவறு வதில்லை. அவரிடம் தன்னடக்கம் கிடையாது. பிடிவாதத் தன்மை மிகுதியாக இருந்தது. விளைவுகளைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்காமல் அவர் தமது அலுவலாளர்களையும் மக்களையும் பகைத்துக்கொண்டார். மாதர்மையலும் குடியும் அவரைக் கெடுத்துவிட்டன. வீண் முயற்சிகளில் அவர் தமது செல் வத்தை அழித்தார். சிவாஜி, இராமதாசர், இரகுநாத் ஹன் மந்த், ஹம்பிராவ் மோர் ஹி தே முதலியவர்கள் அவருக்குக் கூறிய அறிவுரைகளை அவர் மதிக்கவில்லை. கவி கலசம் என்ற நண்பரின் தொடர்பு அவருக்குத் தீமையையே அளித்தது. கவி கலசம் (கவிகளில் கலசம் போன்றவர் அல்லது உயர் வானவர்) சமயத்துறை அமைச்சராக இருந்திருக்கக்கூடும். மற்ற அமைச்சர்களைவிட அவர், நிலையில் உயர்ந்தவரா யிருந்தார்.

கவிகலசம். கன்னோசி நாட்டிலிருந்து வந்த கவிகலசம் என்ற அந்தணர் மந்திர நூல்களிலும் தந்திர நூல்களிலும் சிறந்த பயிற்சி பெற்றிருந்தார். இழிவான சூழ்ச்சிகள் செய் வதில் அவருக்கு மிகுந்த திறமை இருந்தது. இளவரசர் அக்பருடன் சூழ்ச்சிசெய்து முகலாயப் பேரரசில் உயர்நிலை எய்த அவர் முயன்றார். அவர் பேராசைக்கு அளவே இல்லை. தீமைசெய்ய அவர் தயங்குவதும் இல்லை. மராட்டிய நாட்டின் நலத்தில் அவருக்கு அக்கரை கிடையாது. சிற்றின்பத்தில் மிகுந்த விருப்பமுள்ள அழகிய பெண்டிர் பலரை அடிக்கடி சாம்பாஜி அடையுமாறு செய்து அம்மன்னரை அவர் கெடுத்து வந்தார். அரசருக்கும் அவருடைய உண்மையான ஊழிய ருக்குமிடையே பெரிய பிளவை அவர் ஏற்படுத்திவிட்டார். கருநாடகத்தில் மராட்டியராட்சிக்கு இடையூறுகள் ஏற்பட்ட மைக்கும் அவர் காரணமாவர். ஹம்பிராவ் என்னும் படைத் தலைவர், கவிகலசத்தின் போக்கை மாற்ற முனைந்தார்; ஆனால் அவர் 1687'ல் இறந்துவிட்டதால் சாம்பாஜி மேலும் மேலும் ஒழுக்கக்கேடான முறைகளைப் பின்பற்றலானார். முகலாயர் சாம்பாஜியைக் கைப்பற்றிக்கொண்ட சமயத்தில்கூட அவர்

" மாயவித்தைக் காரரான கவிகலசம் தமது மந்திர தந்திரங்களால் என் பகைவர்களை அழித்துவிடுவார்" என்று கூறினாராம்.[1] அக்கொடிய அமைச்சர், அவுரங்கசீபின் முன்னிலையில் சாம்பாஜியைப் பார்த்து "அரசரே, உம்மைக் கண்டவுடனே ஆலம்கீர் அரசர் தம்முடைய இருக்கையைவிட்டிறங்கிவந்து உமக்கு மரியாதை செய்வார். பாருங்கள்" என்று புகழ்ந்தாராம்.[2] ஆனால் அவுரங்கசீப், அந்த அமைச்சரின் நாக்கைத் துண்டாக்கி சாம்பாஜியுடன் அவரையும் கொலை செய்தார். சாம்பாஜியைத் தம் கைப்பாவையாக்கிய கவிகலசம், நாட்டில் பல கேடுகளுக்குக் காரணமாயிருந்தார். ஆனால் அவருடைய தொடர்பு ஏற்படுவதற்கு முன்பே சாம்பாஜியிடம் தீயகுணங்கள் இருந்தன என்றும் அவ்வரசரின் அழிவுக்கு அவ்வமைச்சர்தான் பொறுப்பாளி என்று கூறுவது முறையாகாது என்றும் வாதிக்கப்படுகிறது.[3] சிவாஜி, இராமதாசர் முதலியவர்களால் கூட சாம்பாஜியை நல்வழிக்குக் கொணர முடியவில்லை என்பதும் நோக்கற்பாலது. ஆயினும் அவருடைய தீயகுணங்கள் அவ்வமைச்சரின் தொடர்பால் பெருகின. கவிகலசத்தை செஜானஸ்ஸுக்கு ஒப்பிடலாம். செஜானஸ் உரோமப் பேரரசர் தைபீரியஸ் (கி. பி. 14–37) ஸின் நம்பிக்கைக்குரிய அமைச்சராவர். பல ஆண்டுகள் அரசரை அவர் தம்மதிகாரத்துக்குட் படுத்தியிருந்தார்.

## பகுதி 10

### அரசப்பிரதிநிதி ஆட்சிக்காலம்

இராசாராம் (1689—1700). சாம்பாஜி இறந்தவுடன் அவருடைய இளவல் இராசாராம், சாம்பாஜியின் மகனார் சாஹு அல்லது II'ம் சிவாஜியின் பிரதிநிதியாக ஆட்சிபுரியத் தொடங்கினார். இளவரசரின் பணியாள் என்றே அவர் தம்மைக் கூறிக்கொண்டார். 1689'ல் ரெய்காடை முகலாயர் கைப்பற்றிக் கொண்டவுடன் அவர் செஞ்சிக்கு ஓடிவிட்டார். முகலாயரை அவர் எதிர்த்து வந்த செய்தியை முன்னரே

1 & 2 Ibid., pp. 146 & 148.
3. Sarkar, History of Aurangzib, IV, p. 291.

குறிப்பிட்டுள்ளோம். 1698'ல் செஞ்சியையும் முகலாயர் தம் வசப்படுத்திக் கொண்டதால் மகாராட்டிரத்துக்குத் திரும்பிய இராசாராம், 1700'ல் தாம் இறக்கும் வரை அப்பகைவர்களை எதிர்த்துப் போர்புரிந்து வந்தார். அவரிடம் சமயப்பற்று மிகுதியாக உண்டு; தீய குணங்கள் மிகுதியாக இல்லை. நாட்டுப்பற்றும் போர் ஆற்றலும், இனைவிணைக்கப் பண்பும், விரிநிலைப் போக்கும் அவரிட மிருந்தன. பொது ஆட்சி முறையில் கருத்தைச் செலுத்த அவரால் இயலாத போதிலும் அவர், பல போர்களில் ஈடுபட்டுத் தமது ஆற்றலை வெளிப்படுத்திவந்தார். ஆனால் அவர், நெருக்கடியைச் சமாளிக்கத் தாம் ஒருவரே போதாது என்பதை நன்கு உணர்ந்திருந்தார். சிவாஜியின் காலத்தில் அரசரிடம் மையப்படுத்தப்பட்டிருந்த அதிகாரங்கள் இராசாராம் காலத்தில் பிரிவுற்றன. மாறி வரும் அரசியல் சூழ்நிலையே அதற்குக் காரணமாகும். அக்காலத்தில் இராசாராமைத் தவிர வேறு சில மராட்டியத் தலைவர்களும் உரிமையுடன் செயலாற்றி வந்தனர். சிறிது சிறிதாக மீண்டும் நிலமானிய முறையை மகாராட்டிரர் பின்பற்றலாயினர். ஜாகீர்கள் வழங்கப் பெற்றன. குழப்பம் நிலவிய அக்காலத்துக்கு ஜாகீர் முறை நற்பயனை அளித்தது. ஆனால் பிறகு ஜாகீர்தார்களின் பின் வழியினர் ஜாகீர்களின் பயனைத் துய்த்துக் கொண்டு நடு அரசியலாருக்குப் பணி செய்ய மறுத்தனர்; தகுதியற்றவர்களுக்கும் ஜாகீர் உரிமை கிடைத்தது. அதனால் பல கேடுகள் விளைந்தன. இராசாராம் காலத்தில் கொரில்லாப் போருக்கு மிகுந்த சிறப்பு அளிக்கப்பட்டிருந்தது முகலாயருக்குப் பல இடங்களில் தோல்வி கிடைத்ததற்கு அப்போர் முறை முக்கிய காரணமாகும். இராசாராமின் முயற்சிகள், நாட்டின் பொருள் வளம் பெருகுவதற்கும் அரசனில்லாத நாடு காப்பாற்றப் படுவதற்கும் உதவின. ஆற்றல் வாய்ந்த அரசியல் வல்லுநரும் படைத் தலைவர்களும் நாட்டைக் காப்பாற்றுவதில் இராசாராமருடன் ஒத்துழைத்தனர். இத்தகைய வீரர்களில் சாந்தாஜி கோர்படேயும் தானாஜி ஜாதவ் என்பாரும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள். படைத்தலைவரா யிருந்த சாந்தாஜி 1690'ல் அஷ்டப்பிரதான் குழுவில் சேனாபதி என்னும் அமைச்சரானார்.

1692, 1695, 1696 ஆகிய ஆண்டுகளில் அவர் பல இடங்களில் முகலாயரை முறியடித்துப் புகழ்பெற்ருர். அக் காலத்தில் புகழ்பெற்று வந்த தானுஜி ஜாதவ் என்ற மராட்டிய வீரருக்கும் சாந்தாஜிக்கும் பொருமை காரணமாகப் போர் மூண்டது. காஞ்சீபுரத்துக்கு அருகில் முன்னவரைப் பின்னவர் தோற்கடித்தார். ஆனல் அடுத்த ஆண்டிலேயே சாந்தாஜி மகாராட்டிரத்தில் கொல்லுண்டார். தானுஜியே அதற்கு முக்கிய காரணமாவர் என்று கூறலாம். ஏழு ஆண்டுகள் முகலாயரை நடுங்கச் செய்துவந்த பெருமை சாந்தாஜிக்கு உரியது. அவுரங்கசீப் அவ்வீரருடைய ஆற்றலை நன்கு உணர்ந்திருந்தார். தம்மால் அவரை எதிர்க்க முடியாது என்றும் ஒருசமயம் அப்பேரரசர் கூறினராம்.

தாராபாய். (பிறப்பு 1675—இறப்பு 1761). இராசாராம் 1700'ல் இறந்தபின், அவருடையமகன் III'ம் சிவாஜியை (1691'ல் பிறந்தவர்) அரசராக முடிசூட்டிவிட்டுத் தாராபாய் (இராசாராமின் மனைவி) தாமே அரசப் பிரதிநிதியாக அமர்ந்தார். அவ்வம்மையார் ஆட்சித் தலைமையைப் பெற்றமைக்கு அவருடைய அரசியல் ஆற்றலும் வீரமுமே காரணமாகும். அவர் கணவனர் ஆட்சிபுரிந்த காலத்திலேயே அவருக்குத் தாராபாய் சிறந்த முறையில் உதவிசெய்து வந்தார். பல காலங்களில் முகலாயப் படையை அவர் முறியடித்துப் புகழ் பெற்றுள்ளார். அவுரங்கசீபும் அவருடைய ஆற்றலைக்கண்டு அஞ்சினர். 1700 முதல் 1708 வரை அரசப் பிரதிநிதியாக தாராபாய் அருஞ்செயலாற்றி வந்தார். அவருடைய அறிவுக் கூர்மையையும் போர் வீரத் திறமையையும் கபீகான் புகழ்ந்து பேசுகிருர். அவுரங்கசீபிடமிருந்து மராட்டியர் நாட்டைக் காப்பாற்றிய புகழ் அவ்வம்மையாருக்கு உண்டு. 1707'ல் அவுரங்கசீப் இறந்த பிறகு விடுதலை பெற்ற சாஹு, தாராபாயை எதிர்த்துப் போர் தொடங்கினர். அதனல் தம் நிலையைக் காப்பாற்றிக் கொள்ளும் பெரிய பொறுப்பு அவருக்கு ஏற்பட்டது. சிவாஜியால் அமர்த்தப்பெற்ற இராசாராமின் கால்வழியினருக்கே அரசு உரியது என்று அப்பெண்மணி வாதாடினர். அதனல் போர் விளைந்தது. தாராபாயின் படைத் தலைவராயிருந்த

தானுஜி ஜாதவ் அவரைக் கைவிட்டுச் சாஹுவின் பக்கம் சேர்ந்துகொண்டு 1708'ல் அவருடைய படைத் தலைவராக பணியாற்றத் தொடங்கினர். 1707'ம் ஆண்டிலேயே பூனு மாவட்டத்திலுள்ள கேட் (Khed) என்னுமிடத்தில் சாஹு வின் கட்சியினர் தாராபாயைத் தோற்கடித்தனர். சாஹு, சதாராவைக் கைப்பற்றிக் கொண்டு 1708'ம் ஆண்டின் தொடக்கத்தில் முடிசூட்டிக் கொண்டார். தாராபாய் பின் பற்றிய கொள்கை உள்நாட்டுப் போர் ஏற்படக் காரண மாயிற்று. 1712'ம் ஆண்டில்தான் அவ்விரு கட்சியினரின் போராட்டம் முடிவுற்றது. அதன் விளைவாகப் பான்ஸ் லேக்கள் வீழ்ச்சியுற்றனர்; பேஷ்வாக்கள் உயர்வு எய்தினர். அச்செய்திகளைப் பற்றிய விளக்கத்தை மூன்றும் புத்தகத்தில் காணலாம்.

## அதிகாரம் 19

# 17'ம் நூற்றுண்டில் தென்னிந்தியாவின் வரலாறு

(தொடர்ச்சி)

## பகுதி I

### விசயநகரப் பேரரசின் பிற்காலம்

I'ம் வேங்கடரின் பின் வந்தோர். I'ம் வேங்கடரின் (1585–1614) ஆட்சியைப்பற்றி, பனிரண்டாம் அதிகாரத்தின் பனிரண்டாம் பகுதியில் குறிப்பிட்டுள்ளோம். அவர் இறந்த பின் நாட்டில் ஏற்பட்ட துயரநிலையை அறிய நமக்கு உதவும் அடிப்படைச் சான்றுகளாவன:- (1) பரதஸ் பாதிரியார் 1716'ல் எழுதிய முடங்கல்;[1] (2) தஞ்சாவூர் அரசியலார் ஆக்கித்தந்த வடமொழி, தெலுங்கு நூல்கள்; (3) உள்நாட்டு இலக்கியக்குறிப்புக்கள். வேங்கடருக்கு மகனில்லை. ஆதலால் நாட்டில் அரசுரிமைப் போராட்டம் ஏற்பட்டது. பட்டமேற்ற II'ம் ஸ்ரீரங்கரையும் (வேங்கடரின் அண்ணன் மகன்) அவரு டைய மனைவி, இரண்டு குமாரிகள், மூன்று குமாரர்கள்

1. Sewell, A Forgotten Empire, pp. 222—31

ஆகியோரையும் அவர்களுக்குப் பகைவர்களான ஜக்கராயரின் கட்சியினர் கொலை செய்தனர். II'ம் ஸ்ரீரங்கரின் மகன் இராமதேவர் என்பாரை எச்சம நாயக்கர் காப்பாற்றினர். உள்நாட்டுப்போர் மூண்டது. அதில் தோல்வியுற்ற எச்சம நாயக்கர் தெற்கே சென்று செஞ்சி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களின் நாயக்கர்களுடன் சேர்ந்துகொண்டு ஜக்கராயரை மீண்டும் எதிர்த்தார். அப்போரில் மைசூரும் இக்கேரியும் கலந்துகொள்ளவில்லை. 1617'ல் தோப்பூர் (தஞ்சாவூர் மாவட்டம்) என்னுமிடத்தில் இருசாராரும் போரிட்டதன் முடிவாக ஜக்கராயர் இறந்தார் கும்பகோணத்தில் இராமதேவரின் (II'ம்ஸ்ரீரங்கரின் மகன்) முடிசூட்டுவிழா நடந்தேறியது. எனினும் பேரரசு வலிமையில் குன்றியிருந்தது. படை மானியத் தலைவர்கள் பல இடங்களில் உரிமையுடன் செயலாற்றி வந்தனர். எல்லா வகைகளிலும் பேரரசின் புகழ் குன்றிவிட்டது. நாட்டின் பொருளாதாரநிலை கேடுற்றது. சில இடங்களில் தொடர்ந்து போர் நடந்துவந்ததால் மக்கள் வறுமையால் வாடினர் என்றும், குழந்தைகளை, ஒன்று 2 ஷில்லிங் 6 பென்ஸ் வீதம் விற்கவும் மக்கள் துணிந்துவிட்டனரென்றும் மசூலிப்பட்டணத்திலிருந்த வில்லியம் மெத்வோல்டு (1618—'22) என்னும் ஆங்கிலேயர் குறிப்பிட்டுள்ளார்.

இராமதேவர் (1617–'30); II'ம் வேங்கடர் (1630–'42). பேரரசின் தலைநகர் வேலூரிலிருந்து சந்திரகிரிக்கு மாறியது. பெயரளவுக்கு இராமதேவர் 1630'வரை அரசாண்டார். அவருக்குப்பின் II'ம் வேங்கடர் (இராமராயரின் பெயரர்)பட்டமேற்றார். அவர் அமைதியை நாடியபோதிலும் பேரரசு சிதைவுற்று வந்தது. 1633'ல் மைசூருக்கும், மதுரைக்குமிடையே போர் ஏற்பட்டது. அதைத்தடுக்கப் பேரரசரால் இயலவில்லை. சென்னைக் கடற்கரைப்பகுதியில் அதிகாரம் செலுத்திவந்த வேங்கட நாயக்கர், 1639'ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22'ம் நாளில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டைப்பகுதியை ஆங்கிலேயருக்கு (பிரான்ஸிஸ்டே (Day) என்பாருக்கு) அளித்தார். II'ம்வேங்கடர் அச்செயலை உறுதி செய்தார். மேலே குறிப்பிட்டுள்ள வேங்கட நாயக்கரின் உடன் பிறந்தார்தான்

சென்னப்பட்டினத்தைத் தாபித்தார். அவருடைய தந்தை சென்னுவின் பெயரால் அந்த இடம் (சென்னப்பட்டினமென்று) அழைக்கப்படுகிறது. அரசியல் முன்னேற்றத்தின்பொருட்டும் இறக்குமதி வாணிகப்பெருக்கத்தின் பொருட்டுந்தான் செயிண்ட் ஜார்ஜ் பகுதியில் கோட்டை கட்டிக்கொள்ளத் தமக்கு நாயக்கர் அனுமதி தந்தார் என்று பிரான்ஸிஸ் டே குறிப்பிடுகிறார்.

விசயநகரின் இறுதிப்பேரரசர்: III'ம் ஸ்ரீரங்கர். II'ம் வேங்கடரின் தம்பி மகனுரான III'ம் ஸ்ரீரங்கர் (1642—'72), 1645'ல் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயருக்கு மேலும் பல உரிமைகளை வழங்கினுர். அவராட்சிக்காலத்தின் முற்பாதியில், தம் நிலையை வன்மையாக்கிக் கொள்ளவும் நாயக்கர்களின் வரம்பு கடந்த செயல்களைத் தடுக்கவும் அவர் பல முயற்சிகளை மேற்கொண்டார். அதனுல் விளைந்த போர்களில் மைசூரும் பெட்னூரும் பேரரசருக்கு உதவிபுரிந்த போதிலும் அவர் இரண்டு முறைகள் காட்டுக்கு ஓட நேர்ந்தது அவர் சிற்சில வெற்றிகளையடைந்த போதிலும் அவற்றுல் நிலையான பயன் அவருக்கு ஏற்படவில்லை. 1653, 1655 ஆகிய ஆண்டுகளில் அவர், தக்கணச் சுல்தான்களுக்குப் பகையாக ஷாஜஹானிடம் உதவி கோரினுர். ஆனுல் தம் முடைய அச்செயலை அவர் வெளியிடவில்லை. 2½-கோடி ரூபாய், 200-யானைகள், தமது அணிகலன்கள், ஆண்டு தோறும் கப்பம்முதலிய யாவற்றையும் முகலாயப்பேரரசருக்குக் கொடுக்க ஸ்ரீரங்கர் முன்வந்தார். தவிர, இன்றியமையாததானுல் தாம் முகம்மதியராக மாறி விடுவதாகவும் கூறினுர். தம்மை ஒரு முகலாய ஜாகீர்தாராக அமர்த்தும்படியும் வேண்டினுர். ஆனுல் அவ்வேண்டுகோள்களை ஏற்க ஷாஜஹான் மறுத்துவிட்டார். ஸ்ரீரங்கரின்நிலைமை அவ்வாறிருந்தது! பேரரசு இல்லாத ஒரு பேரரசராக அவர் ஆட்சி நடத்தினுர். ஏறத்தாழ 1670'ல் பெட்னூர், தஞ்சாவூர், மதுரை ஆகிய மூன்று பகுதிகளும் பேரரசருக்கு உதவியாக மைசூரை எதிர்த்தன. ஆனுல் ஈரோடில் நடந்த அப்போரில் மைசூர் வெற்றிபெற்றது. ஸ்ரீரங்கரின் இறுதியான நம்பிக்கையு மழிந்தது. ஆங்கிலக் குறிப்பு ஒன்றினின்று அவர் 1672'ல்

இறந்தார் என்று அறிகிறோம். அவருக்குப்பின் தம்மை அரசர் என்று கூறிக்கொண்ட கோதண்டராமர், பெயரளவுக்கே ஆட்சி புரிந்தார். அரசியல் சிறப்பு எதையும் அவர் பெறவில்லை. விசயநகரின் நான்காவது குல வரலாற்றைப் பற்றிய இராம ராச்சியமு என்ற தெலுங்குநூல் கோதண்டராமருக்கு உரிமை யாக்கப்பட்டது. III'ம் ஸ்ரீரங்கர் ஆற்றல் வாய்ந்தவரல்லர் என்று கூறிவிடமுடியாது. அவர் காலத்திய ஜெசூட் பாதிரி யார்கள் தமது குறிப்புக்களில் அவரைப் புகழ்ந்துள்ளனர். அவருடைய சில குறைபாடுகளும், சூழ்நிலையும் அரசின் வீழ்ச்சிக்குரிய காரணங்களாகக் கூறலாம்.

## பகுதி 2

### மைசூர் (தொடர்ச்சி)

மைசூரின் இராசா உடையாரைப் பற்றி (1578-1617) 13'ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளோம். அவருக்குப் பின் வந்த சாமராசர் (1617—'37) பங்களூர் மாவட்டத்திலுள்ள சன்னப்பட்டணத்தைக் கைக்கொண்டதுடன் (1630) மதுரை அரசியலாருடனும் போரிட்டும் வந்தார். (1633). பின்போந்த கண்டீரவ நரசா (1638—'59) பீஜப்பூருடனும் மதுரை யுடனும் போர்புரிந்து வந்தார். பகைவர்களுடைய மூக்கை அறுப்பது அவருடைய வழக்கமாம். கண்டீரவர் புரிந்த ஒரு போரை "மூக்குகள் அறுபடும் போர்" என்றே ஜெசூட் எழுத் தாளர்கள் குறிப்பிடுகின்றனர். அப்போரில் கண்டீரவரும் தம் மூக்கை இழந்தார்!; தோல்வியுமடைந்தார். சிறிது காலத் துக்கு அவர் III'ம் ஸ்ரீ ரங்கருடன் நட்பு உறவு கொண்டிருந் தார். அடுத்தபடியாக அரியணைபெற்ற தொட்டதேவர் (1659-72) மதுரையைத் தோற்கடித்துவிட்டுத் தம் இராச்சியத்தைப் பெருகச் செய்துகொண்டார். மைசூரின் புகழ்பெற்ற அரசர் களில் ஒருவரான சிக்கதேவராயர் (1672—1704), புதிய கால மைசூர் நாட்டை அமைத்துப் புகழ்பெற்றார். அவருடைய நாட்டின் எல்லைகள் வருமாறு: — வடக்கில் தும்கூர்; தெற்கில் பழனிமலையும் ஆனைமலைக் குன்றுகளும்; மேற்கில் குடகும் பேலூரும்; கிழக்கில் சேலம். அவர் மதுரையுடனும் பெட்னூ ருடனும் அடிக்கடி பொருதார்; 1687'ல் தஞ்சாவூர்பான்ஸ்லே

யிடமிருந்து பங்களூரை மூன்று லட்ச ரூபாய் கொடுத்து வாங்கினர். தக்கணத்திலிருந்த அவுரங்கசீபிடமும் அவர் 1699'ல் ஒரு தூதுக்குழுவை அனுப்பிப் பெருமை பெற்றார். 1610' லிருந்து மைசூரின் தலைநகராயிருந்த சீரங்கப்பட்டணம் செழித்தோங்குவதற்கான வழிகளைச் சிக்கதேவர் வகுத்தார். அவர் சிறந்தஆட்சிமுறை வல்லுநர். தம்நாடுமுழுவதும் அவர் அஞ்சல் முறையை (Postal System) ஏற்படுத்தினர். பல புதிய வரிகளை அவர் வாங்கியதால் அவரிடம் மக்கள் வெறுப்புக்கொண்டனர். அக்காலத்தில் திருச்சிராப்பள்ளியை ஆண்டு வந்த மங்கம்மாளின் தாராள மனப் போக்கையும் சிக்கதேவரின் கஞ்சத்தன்மையையும் ஒப்பிட்டு மக்கள் பின்னவரை இகழ்ந்து பேசினர். சிக்கதேவர், நீர்ப்பாசனத்துக்காக காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு அணை கட்டி அதன்மூலம் தஞ்சாவூருக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் இடையூறுகளை விளைத்தார். ஆனால் பெரிய மழையினல் அந்த அணை அழிந்தது. சிக்கதேவரின் முயற்சி தோல்வியுற்றதெனினும் அவர் அன்று வகுத்த திட்டம் இக்காலத்தில் நிறைவேற்றப்பட்டு இன்று கண்ணம்பாடி அணையாக விளங்குவதைக் காண்கிறோம். சிக்கதேவர், ஒரு நூலாசிரியராகவும் இருந்தார். கன்னடக் கல்வி வளர்ச்சிக்காகத் தொண்டாற்றினர். திருமலைராயர் என்பார் அவருடைய அமைச்சராகவும் அவைக்களப் புலவராகவுமிருந்தார். அவர் இயற்றிய "சிக்கதேவராய வமிசாவளி" சிறந்ததோர் வரலாற்று நூலாம். சொற்கோப்புக்கலையைப் பற்றியும் அப்புலவர் எழுதியுள்ளார். அவருடைய உடன்பிறந்தாரான சிங்கராயர், தானேசுவரத்தின் ஹர்ஷர் எழுதிய இரத்தினவளியைக் கன்னடத்தில் மொழிபெயர்த்தார். அணிமைக்காலம் வரை கன்னட இலக்கியத்தில் அது ஒன்றைத் தவிர வேறு நாடகம் இல்லை.[1] சிக்கதேவரின் மற்றொரு அமைச்சரான சிக்கூபாத்தியாயா என்பார் வைணவ சமயத்தைப் பரப்புவதற்காகப் பல நூல்களை எழுதினர். சிறப்பு வாய்ந்த சிக்கதேவருக்குப் பிறகு ஆற்றலற்ற அரசர்கள் தோன்றியதால் முடிவில் 1761'ல் ஐதர் அலி, அரசைத்தாமே கைப்பற்றிக்கொள்ள நேரிட்டது.

1. E. P. Rice, A History of Kanarese Literature (1921) P. 91

# பகுதி 3

## நாயக்கராட்சி

### (பெட்னூர், செஞ்சி, தஞ்சாவூர்.)

பெட்னூர். இக்கேரி நாயக்கர்களைப் பற்றி முன்னரே அறிந்துகொண்டோம். வீ ர ப த் தி ர நாயக்கர் (1629—45) என்பார் தலைநகரை இக்கேரியிலிருந்து பெட்னூருக்கு மாற்றினார். அவருக்குப் பின் வந்த சிவப்ப நாயக்கர் (1645—60) பெட்னூரைச் சிறப்புறச் செய்ததுடன் அதன் அதிகாரத்தையும் பெருகச் செய்தார். மேலும் விசயநகரின் III'ம் ஸ்ரீரங்கருக்கு உதவி செய்துப் புகழடைந்தார். பீஜப்பூருடனும் மைசூருடனும் அடிக்கடி போர்களும் நிகழ்த்தினர். I'ம் சோமசேகரர் (1663—71) ஆட்சிக்காலத்தில், பெட்னூரின் முக்கியத் துறைமுகமான பார்ஸிலோரில் சிவாஜி கொள்ளையடித்தார். 1670ல் சோமசேகரர் ஈரோடுப் போரில் பங்கு கொண்டு மைசூரை எதிர்த்துத் தோல்வியுற்றார். அவர் நாட்டின் பெருஞ்செல்வர்கள் அவரைக் கொலை செய்தனர். அவர் ம னை வி யா ன சென்னமாஜி 1671'லிருந்து 1697 வரை ஆட்சி நடத்தினர். அவ்வம்மையார் 1676 முதல் சிவாஜிக்கு சௌத் வரியைச் செலுத்தி வந்தார். அவருடைய எடுப்பு மகனான I'ம் பாஸப்பர் (1697—1714) "சிவதத்துவ ரத்தினாகரம்" என்னும் வடமொழிச் செ ய் யு ள் நூலை 1709'ல் இயற்றினர். பல பொருள்களைப் பற்றி அது குறிப்பிடுகிறது. கேலடி, இக்கேரி, பெட்னூர், ஆகிய இடங்களின் நாயக்கர்களைப் பற்றிய செய்திகளும் அதில் உள்ளன. பெட்னூரில் நாயக்கர் குல ஆட்சியை 1763'ல் ஐதர் அலி அ ழி த் தா ர். ஐதர், பெட்னூரைக் கைப்பற்றிக் கொண்டு அங்கிருந்த இராணி வீரம்மாஜியைச் (1756—63) சிறைப்படுத்தினர்.

செஞ்சி. செஞ்சியின் II'ம் கிருட்டினப்ப நாயக்கரைப்பற்றி முன்னர் படித்தோம். அவர் இறந்த ஆண்டு தெளிவாகத் தெரியவில்லை. அவருக்குப்பின் வந்தோரும் அவரைப்போலவே விசயநகரப் பேரரசுடன் பகைமை பூண்டிருந்தனர். மதுரைத்

திருமலை நாயக்கருடன் சேர்ந்துகொண்டு III'ம் ஸ்ரீரங்கரைத் தோற்கடிக்க உதவினர். 1648'ல் பீஜப்பூர், செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றிக்கொள்ளும்வரை செஞ்சி நாயக்கர்கள் உரிமையுடன் விளங்கினர்.

தஞ்சாவூர். தஞ்சாவூரின் இரகுநாத நாயக்கரைப் (1597—1640) பற்றி முன்னர்க்குறிப்பிட்டுள்ளோம். விசயநகரில் நடந்த உள்நாட்டுப் போரில் அவர் இராமதேவருக்கு உதவிசெய்து அவரை அரியணையிலமர்த்தினர். அவர் ஒரு சிறந்த புலவராகவும் விளங்கினர். கோவிந்த தீட்சிதருடன் சேர்ந்து அவர் "சங்கீதசுதா" என்னும் நூலை இயற்றினர்.[1] சமஸ்கிருதத்திலும், தெலுங்கிலும் அவர் பல நூல்களை ஆக்கியுள்ளார். இரகுநாதர் பல அறிஞர்களுக்கு உதவி செய்தார். கோவிந்த தீட்சிதரின் மகனுரான யக்ஞநாராயண தீட்சிதர், "சாஹித்திய ரத்திஞகரம்" என்ற வடமொழிச் செய்யுள்நூலை இயற்றியுள்ளார். விசயநகரப் பேரரசின் உள்நாட்டுப் போரைப்பற்றிய செய்திகளையும் அந்நூல் குறிப்பிடுகிறது. அவ்வாசிரியருடன் நல்லிசைப்புலமை மெல்லியலார்களான இராமபத்திராம்பாள், மதுரவாணி முதலியோரும் தஞ்சாவூர் அரண்மனையில் சிறப்புற்றிருந்தனர். இராமபத்திராம்பாள் ஆக்கியுள்ள "இரகுநாதாப்யூதயம்" என்னும் வடமொழி நூலில் தோப்பூர்ப் போரைப்பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. மதுரவாணி, இராமாயணத்தைத் தழுவிய செய்யுள் நூல் ஒன்றை ஆக்கியுள்ளார். இவர்களைத் தவிர வேங்கடேச்வர மகி, (கோவிந்த தீட்சிதரின் மற்றொரு மகன்) இராசசூடாமணி தீட்சிதர் முதலியோரும் தஞ்சையில் வாழ்ந்தனர். இரகுநாதர், 1620'ல் டேனர்களைத் தரங்கம்பாடியில் தங்கச்செய்தார். ஆங்கிலேயர் அவர் நாட்டில் வாணிகம் செய்வதையும் அவர் விரும்பினர். ஆனல் அவ்வாறு ஆங்கிலேயர் தம் நாட்டுக்கு வராத காரணம் விளங்கவில்லை என்று 1622'ல் இரகுநாதர் வியப்படைந்தார்.

1. P. P. S. Sastri, A Descriptive Catalogue of the Sanskrit MSS. in the Tanjore Maharaja Serfoji Saraswati Mahal Library, XIX (1934) P. XXII

**விசயராகவ நாயக்கர் (1640—73).** இரகுநாதரின் மகனான விசயராகவர், சமயத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். ஜெசூட்டுகளும் அவரை நாடினர். அவர் தாம் எழுதிய "இரகுநாதாப்யூதயம்" என்ற தெலுங்கு நாடகத்தில் தமது தந்தை, விசயநகரப் பேரரசரான இராம தேவருக்கு உதவிசெய்ததைச் சிறப்பித்துள்ளார். விசயராகவர், தமதுபோர்க்கொள்கையைத் துணிவுடனும் திறமையுடனும் பின்பற்ற வில்லை; அதனால் அவர்நாட்டு மக்கள் துயருற்றனர். கோல்கொண்டாவுக்கும் பீஜப்பூருக்கும் அவர் அடங்கினார். 1659'ம் ஆண்டில் போர்ச்சுகீசியரிட மிருந்த நாகப்பட்டினத்தை டச்சுக்காரர் கைக்கொண்டனர். மதுரைச் சொக்கநாத நாயக்கருக்கும் தஞ்சை விசயராகவருக்கும் 1673'ல் போர் தொடங்கியது. தஞ்சாவூரைப் பகைவர் முற்றுகையிட்டனர். விசயராகவர் போரில் இறந்தார். அந்நிலையில் பீஜப்பூர் சுல்தான் வெங்காஜியை (சிவாஜியின் ஒன்றுவிட்ட உடன் பிறந்தார்) த் தஞ்சாவூருக்கு அனுப்பி, செங்கமலதாஸ் என்ற தஞ்சை நாயக்க இளவரசரை அங்கே அரசராக்குமாறு செய்தார். 1675'ல் வெங்காஜி, தமக்கிடப்பட்ட ஆணையை நிறைவேற்றினார்; ஆனால் அடுத்த ஆண்டில் தாமே தஞ்சை அரசைக் கைப்பற்றிக் கொண்டார்.

## பகுதி 4

## தஞ்சாவூரில் பான்ஸ்லேக்களின் ஆட்சி

### வெங்காஜியும் II-ம் ஷாஜியும்

**வெங்காஜி பான்ஸ்லே (1676—'85).** ஷாஜிபான்ஸ்லேயின் மகனான வெங்காஜி (துக்காபாயின் மகன்; சிவாஜிக்கு இளையவன்) 1664'ல் தம் தந்தையின் கருநாடக ஜாகிருக்குத் தலைவரானார். அவருடைய அரசரான அடில்ஷாவுக்கு உதவியாக அவர் சிவாஜியுடனும் போரிட்டார். தஞ்சாவூரில் செங்கமல தாசரின் ஆற்றலின்மை காரணமாக அவரே அந்நாட்டின் அரசராக (1676'ல்) அமர்ந்தார். அவ்ருடைய ஆட்சி பல வகைகளில் சிறப்புற்றிருந்ததாக ஜெசூட்டுகளின் 1676'ம் ஆண்டுக் குறிப்புகள் அறிவிக்கின்றன. புதுச்சேரி

யிலிருந்த பிரெஞ்சுக்காரருடன் உடன்படிக்கை செய்துகொள்ள வும் அவர் முயன்ருர். 1677'ல் அவர் சிவாஜியுடன் போரிட வேண்டியிருந்ததையும் அப்போரில் வெங்காஜியின் தோல்வி யையும் முன்னரே பார்த்தோம். பிற்காலத்தில் அவர் ஆட்சி கொடுமை நிறைந்ததாக மாறிவிட்டதென்பதையும், 1682, 1683'ம் ஆண்டுகளின் ஜெசூட் குறிப்புக்கள் அறிவிக்கின்றன. எனினும் தஞ்சை நாயக்கர்கள் வளர்த்து வந்த கலைப்பண்பு களைக் காப்பாற்றவும் ஓரளவு அவற்றை முன்னேறச் செய்யவும் வெங்காஜி உதவி செய்தார்.

II'ம் ஷாஜி. (1685—1712). வெங்காஜியின் மூத்த மகன் II'ஆம் ஷாஜி, 1685'ல் அரியணையிலமர்ந்திருக்க வேண்டும். அவர், 1687'ல் பங்களூரை, மைசூர் அரசருக்கு விற்றுவிட்டார். 1694'ல் முகலாயர், தஞ்சாவூரைத் தமக்குக் கட்டுப்பட்டிருக்கச் செய்தனர். ஏறத்தாழ 1700'ல் திருச்சி ராப்பள்ளியின் மங்கம்மாள் ஷாஜியை முறியடித்தார். II'ஆம் ஷாஜி, கிறித்தவரைத் துன்புறுத்தி வந்ததாக மனுச்சி குறிப் பிடுகிருர். கலைப்பண்பு வரலாற்றில் ஷாஜி சிறப்பான நிலையைப் பெறுகிருர். வடமொழி ஆசிரியரான அவருக்கு "அபிநவபோஜர்" என்ற பட்டமுமுண்டு. பல புலவர்கள் அவருடைய ஆதரவைப் பெற்று வந்தனர்.[1] இராமபத்திர தீட்சிதர் என்கிற அய்யா தீட்சிதர் அவ்வாசிரியரின் அவைக் களப் புலவர்களில் ஒருவராவர். அவர், "ஜானகிபரிணயம்" என்ற நாடகத்தையும், "பதஞ்சலி சரித்திரம்" என்னும் செய்யுள் நூலையும், வேறு பல சிறந்த நூல்களையும் ஆக்கி யுள்ளார். அவருட்பட்ட 46-பண்டிதர்களுக்காக, ஷாஜி, ஷாஜிராஜபுரம் (கும்பகோணத்திற்கருகிலுள்ள திருவிசலூர்) என்ற ஊரை நன்கொடையாக வழங்கினர். அப்பகவி, தாமெழுதிய "சிருங்காரமஞ்சரி சஹஜீயம்" என்னும் நாடக நூலில் தமது அரசரின் பண்புகளைச் சிறப்பிக்கின்ருர். II'ம் ஷாஜியின் பின்வந்தோர் காலங்களிலும், தஞ்சாவூரின் கலைப் பண்புச்சிறப்பு மங்காமல் தொடர்ந்து வந்தது. அவர் மரபு 1855'ல் முடிவுற்றது.

1. P. P. S. Sastri, op. cit.. PP. XXVII—XXXVII; K. R. Subramanian, The Maratha Rajas of Tanjore. PP. 29—35

# பகுதி 5

## நாயக்கர் ஆட்சி — (மதுரை, திருச்சிராப்பள்ளி)

III'ஆம் கிருட்டினப்ப நாயக்கரும், II'ஆம் வீரப்ப நாயக்கரும்: முன்னர்க் குறிப்பிடப்பெற்ற II'ஆம் கிருட்டினப் பருக்குப் பிறகு 1601'இல் III'ஆம் கிருட்டினப்ப நாயக்கர் (1601—'9) மதுரையின் அரசரானுர். அவர் ஆட்சிக்காலத் தில்தான் (1605'ல்) சேதுபதிகளின்கீழ் மறவர்நாடு அல்லது இராமநாதபுர இராச்சியம் அமையப்பெற்றது. 1606'ல் மதுரை யில், ராபர்ட் டி நொபிலி (Robert de Nobili) என்னும் இத்தா லியர் தமது சமயத் தொடர்பான தொண்டுகளைத் தொடங் கினுர். 1610'ல் ஜெசூட் பாதிரியார் எழுதிய ஒரு முடங்கல் அக்காலத்து மதுரையின் கல்விநிலையைப்பற்றிய சில குறிப்பு களைத் தருகிறது. அவை வருமாறு:- "மதுரையில் 10,000 மாணவர்களுக்குமேல் கல்வி பயில்கின்றனர். ஒவ்வொரு வகுப்பிலும் 200 முதல் 300 வரை மாணவர்கள் உளர்,...... இம்மாணவர்கள் யாவரும் அந்தணர்களே; ஏனெனில் அச் சாதியினருக்கு மட்டுமே உயர்ந்த கல்வியைப் பெறும் உரிமை உண்டு. இம்மாணவர்கள் கல்வியிலேயே ஊக்கங்கொண்டி ருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன், அவர்களுடைய வாழ்க் கைத் தேவைகளை நிறைவேற்ற விசயநகர மன்னரும் நாயக்க ரும் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் போதுமான வருமானம் கிடைக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன."[1] II'ஆம் வீரப்ப நாயக்கர் (1609—23), பேரரசின் உள்நாட்டுப்போரில் (1614—7) பங்குகொண்டு தம் கூட்டாளிகளுடன் தோப்பூரில் தோல்வி யுற்ருர். 1616'ல் அவர் தமது நாட்டின் தலைநகரை மதுரை யிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு மாற்றினுர். அவ்வமயம் மைசூர், மதுரையை எதிர்த்துப் போர் தொடுத்தது. டி நொபிலி, இந்தியரைக் கிறித்தவராக்கும் முயற்சியிலீடுபட்டிருந்தார். அதற்காக ஒரு புதிய முறையையும் அவர் கையாண்டார். இந்தியத் துறவியைப்போல் தாம் ஒழுகியும், தம்மை உரோ மானிய அந்தணர் என்று கூறிக்கொண்டும் சில இந்துப் பழக்க

1. Sathianathaier, History of the Nayaks of Madura, p. 257.

வழக்கங்களை ஏற்றுக்கொண்டும் வடமொழியையும் மக்கள் பேசிவந்த மொழியையும் தாம் பயின்றும், இந்நாட்டு மக்களைத் தம்பால் ஈர்க்க அவர் முனைந்தார்; ஆனால் அவருக்குப் பல இடையூறுகளேற்பட்டன.

திருமலை நாயக்கர்: *(1623—59)*. ஏறத்தாழ 1633'ல் திருமலைநாயக்கர் மைசூருடன் போரிட்டார். அடுத்த ஆண்டில், அவர், தலைநகரை மதுரைக்கு மாற்றினார். 1634-5'ல் அவர் நிகழ்த்திய திருவாங்கூர் படையெழுச்சியும், இரண்டு ஆண்டுகளுக்குப்பின் அவர் சேதுபதியைத் தாக்கியதும் வெற்றியில் முடிந்தன. III'ம் ஸ்ரீரங்கரை அவர் பகைத்துக்கொண்டார். அதனால் பெரும்போர் மூண்டது. முடிவில் 1656'ல் அவருக்குத் தோல்விதான் கிடைத்தது. 1656 முதல் 1659 வரை மதுரைக்கும் மைசூருக்குமிடையே ஏற்பட்ட போர் "மூக்குகள் அறுபடும் போர்" எனக் குறிப்பிடப்படுகிறது. இறுதியில் திருமலைநாயக்கர் வெற்றிபெற்றார். அவருடைய மானியக்காரரான சேதுபதி அவருக்கு உதவி செய்ததால்தான் திருமலைக்கு வெற்றி கிடைத்தது. மதுரை நாயக்கர், போர்ச்சுகீசியருடன் பெரும்பான்மையும் நட்பு உறவே பூண்டிருந்தனர்; ஆனால் டச்சுக்காரருடன் பகைமை கொண்டனர். 1658'ல் தூத்துக்குடியைப் போர்ச்சுகீசியரிடமிருந்து டச்சுக்காரர் கைப்பற்றிக்கொண்டனர். டி - நொபிலி, சேலம் வரையிலுள்ள மாவட்டங்களில் தமது சமயப்பணிகளை ஆற்றிவந்தார். 1656'ல் அவர் இறந்தார். அவருடைய இலக்கியப்பணிகள் விரிவானவை. திருமலை நாயக்கர், கிறித்தவ சமயத்தவரிடம் அன்புகொண்டொழுகினார். அவர் தமது பேரவாவின் காரணமாக விசயநகரை எதிர்த்துக் கலகம் செய்துவந்தார். அவர் நிகழ்த்திய போர்கள் அவர் நாட்டின் பொருள் வளம் குறைவதற்குக் காரணமாயின. அவரிடம் குறைபாடுகளிருந்தபோதிலும் அவருடைய சிறந்த குணங்களை நாம் மறக்க முடியாது. ஜெசுட் குறிப்புக்களும் அவரைப் புகழ்கின்றன. மதுரையில் பல பொதுக்கட்டடங்களை எடுத்து அவர் புகழ்பெற்றார். "அவர் கட்டிய அரண்மனை தீப்ஸ் நாட்டுக் கட்டடங்களை நமக்கு நினைவூட்டுகின்றன"[1] (தீப்ஸ்,—பண்டைய

கிரீஸில் சிறப்புற்றிருந்த ஒரு நாடு) என்று ஜெசூட்டுகள் எழுதியுள்ளனர். திருமலை, நீலகண்ட தீட்சிதர் என்ற வட மொழி அறிஞரை ஆதரித்தார். அக்கவி பல நூல்களை இயற்றியுள்ளார். சிறப்பாக "சிவலீலார்ணவம்" "கங்காவதரணம்" "நளசரித நாடகம்" "நீலகண்ட விசயம்" ஆகியன குறிப்பிடத்தக்கவை. இறுதியாக உள்ள நூல் (சம்பு) கடலைக் கடைந்த நிகழ்ச்சியைச் சிறப்பிக்கின்றது. அதை அவர் 1638'ல் ஆக்கினார். தஞ்சாவூர் அரசரான II'ஆம் ஷாஜியின் ஆதரவைப்பெற்ற இராமபத்திர தீட்சிதர், நீலகண்ட தீட்சிதரின் மாணவரே.

சொக்கநாத நாயக்கரும், IV'ம் வீரப்ப நாயக்கரும். I'ம் சொக்கநாதர் (1659—'82) திருமலை நாயக்கரின் பெயரர். (திருமலையின் மகன் சில மாதங்களே ஆட்சி நடத்தினார்) இவர் 1665'ல் தலைநகரைத் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றினார். தஞ்சாவூரை இவர் வென்றார். ஆனால் அங்கே மராட்டியரின் ஆட்சி ஏற்பட்டுவிட்டதென்பதை முன்னரே குறிப்பிட்டோம். மைசூரின் தாக்குதல் காரணமாக இவர் சேலத்தையும், கோயம்புத்தூரையும் இழந்தார். சுமார் 1678'ல் ரூஸ்தம்கான் என்ற முகம்மதிய வீரன் வலியத்தாக்கி நாயக்கரின் அரசைக் கைப்பற்றிக்கொண்டு நாட்டில் கொடிய ஆட்சியை ஏற்படுத்தினான். ஆனால் அவனாட்சி இரண்டு ஆண்டுகளே நீடித்தது. சொக்கநாதர் ஆட்சியின் இறுதிப்பகுதியில் மைசூர் அரசர் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டார். ஆனால் தஞ்சாவூரின் மராட்டியரும், செஞ்சி மன்னரும் தலையிட்டதால் மைசூர் படை பின்வாங்கிவிட்டது. அக்காலத்தில் இராமநாதபுரத்தில் அதிகாரம் செலுத்தி வந்த "கிழவன்" சேதுபதி சிறந்த ஆட்சிமுறை வல்லுநர். அவருடைய மைத்துனரான இரகுநாதர் புதுக்கோட்டை இராச்சியத்தை அமைத்தார். சொக்கநாத நாயக்கர், கிறித்தவசமயத்தவரிடம் அன்புகாட்டி வந்தார். அவருக்கும் அவர் மனைவி மங்கம்மாளுக்கும் பிறந்த IV'ஆம் வீரப்பர் (1682—'9) சிறந்த முறையில் ஆட்சி புரிந்து உள்நாட்டுச் சீர்கேடுகளை ஒழித்தார்.

மங்கம்மாள். *(1689—1706).* IV'ஆம் வீரப்பர் இறந்தபின் அவருக்கு மகனுகப் பிறந்த II'ஆம் சொக்கநாதரின் பிரதிநிதியாக மங்கம்மாள் ஆட்சிபுரிந்தார். தஞ்சாவூர், மைசூர் அரசர்களைப்போலவே, மங்கம்மாளும் அவுரங்கசீபுக்குப் பணிந்தார். மைசூர் தளபதி திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டது வெற்றிபெறவில்லை. மங்கம்மாள், 1697'ல் திருவாங்கூரையும், 1700'ல் தஞ்சாவூரையும் எதிர்த்து வெற்றிகள் பெற்ருர். "கிழவன்" சேதுபதி இரகுநாததேவர், தம் விருப்பம்போல் ஆட்சி நடத்தி வந்தார்; கிறித்தவர்களைத் துன்புறுத்தினர். ஜான் டி பிரிட்டோ (John de Britto) என்ற மதத்தூதுவரையும் கொலை செய்தார். தம்மை எதிர்த்து வந்த மங்கம்மாளின் படையையும் தோற்கடித்தார். ஏறத்தாழ 1702'ல் அவர் தமது உரிமை ஆட்சியை அமைத்தார். மறவர் நாட்டைச் சுமார் 36-ஆண்டுகள் ஆட்சிபுரிந்த அவர் 1710'ல் உயிர் நீத்தார். மங்கம்மாளின் சமயக் கொள்கை மிகவும் முற்போக்கு வாய்ந்ததாயிருந்தது. "சிலர் அரிசிச்சோற்றை உண்கின்றனர்; சிலர் இறைச்சியை உண்கின்றனர். அது அவரவர் விருப்பம். அதுபோலவே ஒவ்வொருவரும் தம் விருப்பம் போல் சமயக்கொள்கைகளைப் பின்பற்றுவதே முறையாகும்." என்று மங்கம்மாள் கூறியதாக மனுச்சி குறிப்பிட்டுள்ளார்.[1] கிறித்தவ சமயத்தவரிடம் அவ்வம்மையார் அன்பு பாராட்டினர். அவருடைய தலைமை அமைச்சரான நரசப்பய்யா சிறந்த முறையில் பணியாற்றி வந்தார். மங்கம்மாளின் அறப்பணிகள் மிகவும் புகழ் வாய்ந்தவை. சாலைகளைச் செப்பனிட்டு அமைத்தல், நீர்ப்பாசனம், வழிப்போக்கர்களுக்கு வசதிகள் செய்து தருதல் முதலிய பல தொண்டுகளால் அவருடைய புகழ் ஓங்கியது. சேதுபதியால் அவர் முறியடிக்கப் பட்டபோதிலும் அவருடைய ஆற்றலும், அறிவுத்திறமையும் போற்றத்தக்கன. நாயக்கராட்சியை வலிமையடையச் செய்ய அவ்வம்மையாரின் பண்புகள் உதவின. அவர் இறந்தபின் II'ஆம் சொக்கநாதரின்கீழ் *(1706—'32)* இராச்சியம் நலிவுற்றது. அவ்வரசர் சமயத்துறையில் மிகுந்த ஆர்வம் காட்டினர். ஆனல் தமது அரசியல் கடமைகளைப் புறக்கணித்து

1. Irvine, Storia Do Mogor by Manucci III (1907), p. 333.

விட்டார். அமைச்சர்கள் ஒழுங்கற்ற முறையில் அரசியலை நடத்தி வந்தனர். அவருக்குப்பின் அவர் மனைவி மீனுக்ஷி (1732—'6) பட்டமேற்ருர். சந்தாசாகிப் நம்பிக்கைக்கேடான வகையில் மீனுக்ஷியைச் சிறைப்படுத்திவிட்டுத் தாமே அரசைக் கைப்பற்றிக் கொண்டார். அவ்வம்மையார் தற்கொலைபுரிந்து கொண்டார்.

## அதிகாரம் 20.

# 17'ம் நூற்ருண்டில் தென்னிந்தியா

(தொடர்ச்சி)

## பகுதி I

### போர்ச்சுகீசியரின் தளர்ச்சி

**நிலைகள்.** 1580'ல் போர்ச்சுகல் ஸ்பெயினுடன் ஒன்ருகியது. அது முதல் கீழ்நாடுகளில் போர்ச்சுகீசியரின் சிறப்பு குன்றலாயிற்று. அவர்கள், 17'ம் நூற்ருண்டில் மேலும் மேலும் தளர்ச்சியுற்றனர். அதற்குக்காரணம், டச்சுக்காரர், ஆங்கிலேயர் முதலிய மேல் நாட்டவரின் போட்டியே ஆம். போர்ச்சுகீசியரை 1612, 1615 ஆகிய ஆண்டுகளில் சூரத்துக்கருகில் பெஸ்ட் (Best) டௌண்டன் (Downton) என்ற இரண்டு ஆங்கிலேயக் கடற்படைத் தலைவர்கள் முறியடித்தனர்; 1622'ல் ஆங்கிலேயரும் பாரசீகரும் அவர்களிடமிருந்த ஆர்மஸ்ஸைக் கைக்கொண்டனர்; 1632'ல் ஹுக்ளியிலிருந்த போர்ச்சுகீசியக் குடியேற்றப்பகுதியை ஷாஜஹான் அழித்தார். இச்செயல்கள் யாவும் போர்ச்சுகீசியரின் பெருமையைக் குறைத்தன. மேலும், அவர்களிடமிருந்த நறுமணத்தீவுகளை டச்சுக்காரர்கள் கைப்பற்றிக்கொண்டதுடன் 1641'இல் மலாக்காவையும் வென்றனர். 1641'ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி போர்சசுகீசியர் நறுமணப் பொருள் வர்ணிகத்தில் தமக்கு இருந்த தனி உரிமையை (ஏகபோக உரிமை) இழந்தனர்; டச்சுக்காரரின் வெற்றிகளையும் ஏற்றுக்கொண்டனர்.

அவர்களுக்கு உரிய (போர்ச்சுகீசியருக்கு) கீழ்நாட்டுப்பகுதி களில் வாணிகம்செய்யும் உரிமையை ஆங்கிலேயர் 1654'ல் பெற்றனர். போர்ச்சுகீசியரிடமிருந்த பம்பாய் 1663'ல் ஆங்கி லேயருக்குக் கிடைத்தது. 1661'ல் இலங்கையையும், சோழ மண்டலக் கரையிலும் மலையாளக்கரையிலும் இருந்த போர்ச்சு கீசியர் குடியேற்றங்கள் பலவற்றையும் (கொச்சியையும்) டச்சுக்காரர் கைப்பற்றிக்கொண்டனர்; இன்று இந்தியாவில் போர்ச்சுகீசியருக்கு உரியதாக உள்ள ஒருசில இடங்களையும் பஸ்ஸீனையும் தவிர மற்ற குடியேற்றங்கள் யாவற்றையும் இழந்துவிட்டனர் என்றே கூறலாம். பஸ்ஸீன 1739'ல் மராட்டியர் கைக்கொண்டனர்.

**காரணங்கள்:** போர்ச்சுகீசியரின் கீழ்நாட்டுப் பேரரசு அழிவுற்றமைக்குப் பல காரணங்களுண்டு. விரைவாக அவர் களை வெற்றியடையச்செய்த சூழ்நிலையின் மறைவு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அவர்களுடைய கடலாதிக்கத்தை டச்சுக் காரரும் ஆங்கிலேயரும் அழித்தனர்; 16'ம் நூற்றுண்டின் முதற்பாதியில் அவர்களுக்கு இந்நாட்டில் மற்ற ஐரோப்பியரின் போட்டியில்லை. ஆனல் பிறகு நிலைமை மாறிவிட்டது. போர்ச்சு கீசியரின் கொள்கையும் முறைகளும் அவர்களுக்குப் பகை யான நிலைமையைத் தோற்றுவித்தன. இந்தியாவின் அரசியல் நிலைமையும் மாறிவிட்டது. கடல்சார்ந்த போர்ச்சுகீசியப் பேரர சின் எல்லை வளைந்து வளைந்து செல்லும் ஒரு அரை வட்டத் தைப்போல் ஓர் ஒழுங்கற்றிருந்தமை நோக்கற்பாலது.[1] அதன் அளவு 15000 மைல்களுக்கு மேலாகும். நேட்டால், அதற்கு வடக்கிலுள்ள ஆர்மஸ், அதற்குத் தென்கிழக்கில் கன்னியா குமரி, அதன் வடகிழக்கில் வங்காளம், மறுபடியும் தென் கிழக்கில் மலாக்கா, ஜாவா, நறுமணத்தீவுகள் — இவ்வாறு வளைந்து வளைந்து வரும் ஒரு பேரரசை ஆட்சிபுரிவது பகை வர்கள் சூழ்ந்துள்ள நிலையில் எளிதன்று என்பது குறிப்பிடத் தக்கதாகும். போர்ச்சுகல் ஒரு சிறிய நாடு என்பதையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும். அதன் மக்கள் 30 லட்சத்துக் குக் குறைவானவர்களே. அந்நாட்டின் ஆற்றலை குடியேற்ற

1. Hunter, A History of British India, V, p. 134.

நாடான பிரேஸிலும் உறிஞ்சி வந்தது. முற்பகுதியில் கீழ்நாடு களில் போர்ச்சுகலின் ஆட்சி எளிதாக ஏற்பட்டுவிடவில்லை; பல மக்கள் அதன்பொருட்டு உயிர் துறந்தனர்; வாந்திபேதி, முறைக்காய்ச்சல், வயிற்றுக்கடுப்பு முதலிய பல நோய்கள் காரணமாகப் பல போர்ச்சுகீசியர் இறக்க நேரிட்டது. போது மான ஆள்வலிமையைப் பெற்றிராத காரணத்தால் போர்ச்சு கீசியர், அடிமைகளை இறக்குமதி செய்துவந்தனர்; மேலும் தண்டனைபெற்ற போர்ச்சுகீசியக் குற்றவாளிகளையும், பயிற்சி இல்லாத இளைஞர்களையும் பணித்துறையில் அமைத்துக் கொள்ளலாயினர். கீழ்நாட்டுப் பேரரசைக் காப்பாற்றுவதற் குத் தேவையான வீரர்களை அனுப்பப் போர்ச்சுகலால் இயல வில்லை. அந்நாட்டில் அடிமைமுறை நிலவியது. வெளிநாடு களில் போர்ச்சுகீசியர் கலப்புமணவினை முறையைப் பின் பற்றினர். இவை காரணமாக அவர்களுடைய தேசியப்பண் பும் உடல்வலிமையும் கேடுற்றன. போர்ச்சுகலின் வரலாற் றில் வீரப்பண்புக்காலத்துக்குப்பிறகு அடிமை மனப்பான்மை பெருகியது. அம்மக்களின் ஒழுக்கச் சிதைவைக் காட்டும் சான்றுகள் பல உள. அந்நாட்டில் பெரியோர் அருகினர்; ஆட்சிமுறைக்கேடுகள் பெருகின. தகாத முறையில் ஆதரவு அளிக்கப்பெற்றது. போர்ச்சுகீசியப் பெண்களுக்கு (பெண் வழிச்) ச்சீராக இந்தியப் பணித்துறையில் வேலைகள் கொடுக் கப்பட்டன! ஊதியம் குறைவாகவும் மேல்வரும்படி மிகுதி யாகவுமுள்ள தீய பழக்கம் போர்ச்சுகீசியப் பணித்துறையில் காணப்பெற்றது. மலாக்கா தலைவரின் ஆண்டு ஊதியம் 300 பவுன்கள். ஆனல் அவருடைய மொத்த வருமானமோ 20,000 பவுன்கள்! போர்ச்சுகீசிய அரசியலாரின் வாணி கத்துக்கும் போர்ச்சுகீசியத் தனியார்துறை வாணிகத்துக்குமே போட்டி இருந்து வந்தது. பொதுவாக அரசியலார் நடத்தும் வாணிகத்தில் இயல்பாக இருக்கக்கூடிய தீமைகள் யாவும் போர்ச்சுகீய வாணிகத்தில் இருந்தன. அந்நாட்டவர் பொருள் களை விற்றுப் பணமாக்கினர். ஆனல் அச்செல்வம், சிறந்த முறையில் உற்பத்தியைப் பெருக்கப் பயன்படுத்தப்பட வில்லை. அவர்களுடைய மூலதனம், போரிலும் ஆடம் பர வாழ்க்கையிலும் வீணகியது. ஆனல் மற்ற ஐரோப்பிய

நாட்டினர், போர்ச்சுகீசியரிடமிருந்து சரக்குகளை வாங்கிக் கொண்டு தமது தொழில்களைப் பெருக்கி வந்தனர். போர்ச்சுகல், யூதர்களை வெளியேற்றியது. அவர்களுக்கு இடந்தந்து அவர்கள் உதவியைப் பெற்ற ஆண்ட்வெர்ப் (Antwerp) (பெல்ஜியத்திலுள்ள துறைமுகம்) பொருளாதாரத் துறையில் சிறப்புற்று முன்னேறியது. முதலில் டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் போர்ச்சுகீசியரின் வழியாக இந்திய வாணிகத்தின் பயனைப் பெற்று வந்தனர். ஆனல் பின்னர் அவர்கள் இந்நாட்டுடன் நேர்த் தொடர்புகொள்ள முடிவு செய்துவிட்டனர். 1565'ல் விசயநகரம் அழிவுற்றதால் கோவாவின் வாணிகம் எவ்வாறு கேடுற்றது என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். போர்ச்சுகீசியர் இந்நாட்டில் சமயப்பொறைக் கொள்கையைப் பின்பற்றவில்லை. 1560'ல் " இங்குவிசிஷன் " எனப்படும் கொடிய விசாரணை சபையை அவர்கள் கோவாவில் நிறுவினர். அது இழைத்த கொடுமைகள் பலப் பல. அதன் விளைவாக இந்தியர் அவர்களை வெறுத்தனர். கடற்கொள்ளை முதலிய விரும்பத்தகாத முறைகளைப் போர்ச்சுகீசியர் பின்பற்றி வந்ததால் அவர்களுக்குப் பல பகைவர்கள் தோன்றினர். அவர்கள், டச்சுக்காரரையும் ஆங்கிலேயரையும் வரவேற்று அவர்களுடன் ஒத்துழைத்தனர். இந்தியாவின் அரசியல் நிலைமை மாறிவந்ததால், போர்ச்சுகீசியர், முகலாயருடனும் மராட்டியருடனும் பீஜப்பூருடனும் தொடர்புகொள்ள நேர்ந்தது. போர்ச்சுகல் 1580 முதல் 1640 வரை ஸ்பெயினுக்குக் கட்டுப்பட்டு அடங்கியிருந்தது. அந்த 60 ஆண்டுக் காலத்தில், போர்ச்சுகீசியர் மேலும் மேலும் நலிவுற்றனர். அவர்களுடைய நாட்டு உணர்ச்சி மங்கியது; சிறந்த தலைவர்கள் அவர்களிடையே தோன்றவில்லை. ஸ்பெயினின் பேரரசரான II'ம் பிலிப் தாம், டச்சுக்காரருடனும் ஆங்கிலேயருடனும் நடத்திய போர்களில், போர்ச்சுகல் நாட்டுச் செல்வத்தைப் பாழாக்கினர். ஸ்பெயின்நாட்டு அரசர் அவையில் இந்தியப் பணித்துறை இடங்கள் விற்கப்பட்டன. . மேலும் ஸ்பெயினின் பகைவர்கள், போர்ச்சுகலுக்கும் பகைவர்களாயினர். ஹாலந்து, முதலில் இந்தியாவுக்குக் கடல்வழி காண முயன்று தோல்வியுற்றது. அங்

நாட்டவர் தமது உரிமைக்காக ஸ்பெயினுடன் நீண்டபோராட்டம் நிகழ்த்தி இறுதியில் வெற்றி பெற்றனர். புத்துணர்ச்சி கொண்ட அவர்கள், கிழக்கில் போர்ச்சுகீசியப் பகுதிகளில் படையெடுத்தல் தமது கடமையே என்று கருதினர். அச் செயல் ஐரோப்பாவில் ஸ்பெயினுடன் தாம் நடத்திய போராட்டத்தின் தொடர்ச்சியே என்பது அவர்கள் கருத்து. பிராடஸ்டண்டு (Protestant) நாடான இங்கிலாந்து, போர்ச்சுகீசியருக்குக் கிழக்கு நாடுகளில் வாணிகத் தனிச் சிறப்புரிமையை வழங்கிய போப்பின் ஆணைகளை மதிக்க விரும்பவில்லை. கடலும் வானும் ஒருவருக்கும் தனி உடைமைகள் ஆக முடியாது என்று அரசி எலிஸபெத் அறிவித்தார். ஹாலந்தைப் போலவே இங்கிலாந்தும் இந்தியாவுக்குப் புதிய வழிகாண முயன்று தோல்வியுற்ற நாடுதான். 1588'ல் ஆங்கிலேயர், ஸ்பெயினை முறியடித்தனர். அதன் பிறகு அவர்களுடைய கடலாதிக்கம் பெருகத் தொடங்கியது. போர்ச்சுகீசியரின் கீழ்நாட்டு வாணிகத் தனியுரிமையை அழிக்க இரண்டு பிராடஸ்டன்ட் நாடுகளும் (இங்கிலாந்தும் ஹாலந்தும்) தமது கப்பற்படைகளைப் பயன்படுத்தி வெற்றி பெற்றன.

## பகுதி 2

### கீழ் நாடுகளில் டச்சுக்காரர்

மலாய்தீவுக் குழு. கோவாவில் 1583 முதல் 1589 வரை வாழ்ந்த லின்ஸ்சோடென் (Linschoten)என்ற டச்சுக்காரரின் வெளியீடுகள், டச்சு வணிகர் கிழக்கு நோக்கி, வீரப் பயணம் மேற்கொள்ள ஒரு வழிகாட்டியா யிருந்தன. கார்னீலியஸ் ஹௌட்மேன் (Cornelius Houtman) என்பாரின் தலைமையில் டச்சு வணிகர்குழு (1595—7) நன்னம்பிகை முனை வழியாக ஜாவா சென்றது. ஆம்ஸ்டர்டாம் வணிகரின் அத்துணிகரச் செயல், பிற டச்சுக்காரருக்கும் ஊக்கமளித்தது. மிளகு இலவங்கப்பட்டை, இலவங்கம், சாதிபத்திரி, சாதிக்காய் முதலிய நறுமணப் பொருள்கள் கிழக்கு நாடுகளில் கிடைத்ததால் அந்நாடுகளுடன் வாணிகம் செய்யும் ஊக்கம்

அவர்களிடம் மேலும் மேலும் பெருகியது. அதன் விளைவாக பல வாணிகக் குழுக்கள் தோன்றின. 1602'ல் அவை யாவற்றையும் இணைத்து அரசியலார் ஒரு ஐக்கிய வாணிகக் கூட்டுக் குழுவை ஏற்படுத்தினர் 21 ஆண்டுகளுக்கான ஒரு உரிமைப் பத்திரத்தையும் அதற்கு வழங்கினர். அவ் வாணிகக் குழு கீழ்நாடுகளில் வாணிகத் தனி உரிமையைப் பெற்றது. சட்டமியற்றவும் ஆணைகளை நிறைவேற்றவும் முறை வழங்கவும், அதற்கு அதிகாரமுண்டு. போர் தொடுக்கவும் புதிய இடங்களை வெல்லவும் அரசியலார் அக்குழுவைத் தம் கருவியாகக் கொண்டனர்: அரசியலாருக்கும் வாணிகக் குழு விற்குமிடையே பதினேழு உறுப்பினரடங்கிய சபை ஒன்று ஹாலந்தில் செயலாற்றி வந்தது. வெளிநாட்டில் டச்சு வாணிகக்குழு, தலைமை ஆளுநராம் கவர்னர்செனரல் (Gever-nor General) ஒருவருக்குக் கட்டுப்பட்டிருந்தது. அவருடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாம். அவருக்கு ஆலோசனை கூற ஒரு குழு உண்டு. அதன் உறுப்பினர்களுக்குத் தலைமை ஆளுநரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கிடையாது; ஆலோசனை கூறவே அதிகாரமிருந்தது. முக்கியமான செய்தி களில் தலைமை ஆளுநரின் ஆணைகளை மாகாணத் தலைவர் களும் மீறமுடியாது. அவருக்குச் சிறப்பானரி அதிகாகளிருந்த காரணத்தால் ஐக்கிய டச்சு வாணிகக் கூட்டுக்குழு விரைவில் முன்னேறியது. சிறந்த ஆற்றல்வாய்ந்தவர்களே தலைமை ஆளு நராக அமர்த்தப்பெற்றிருந்தனர். முதலில் 1618 முதல் 1623 வரையிலும் பின்னர் 1627 முதல் 1629 வரையிலும் தலைமை ஆளுநராக இருந்த ஜான் பீட்டர்சூன் கோயன் (Jan Pietersoon Coen), மலாய்த்தீவுக் குழுவில் ஒரு டச்சுப்பேரரசை அமைத்தார் என்றே கூறவேண்டும். ஜாவாவில் அவர், படேவியா (Batavia) என்னும் நகரைத் தோற்றுவித்து அதையே பேரரசின் தலைநகராக்கினர். வாணிகத்துக்குப் படையெழுச்சியும் இன்றியமையாதது என்ற கொள்கையை அவர் ஆதரித்தார். அவர், தம்திட்டத்தை நிறைவேற்ற நாகரிகமற்ற முறைகளேயும் கையாண்டார். கட்டாயப்படுத்திப் பலரைத் தொழிலில் ஈடுபடச் செய்தார். குற்றம் புரியாத மக்களையும் தகாத வகையில் அடிமைப்படுத்தினர். வான்

உணர்ந்திருக்க முடியாது. டச்சுக்காரர்மீது பழிவாங்க இங்கிலாந்து முற்படவில்லை. அந்நாட்டின் அரசர் I'ம் ஜேம்ஸ் ஹாலந்துடன் நட்பு உறவுகொள்ள விரும்பியதே அதற்குக் காரணமாகும். பிற்காலத்தில் இங்கிலாந்தில் ஆட்சி நடத்திய கிராம்வெல், 1654'ல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கூட்டுக்குழுவுக்கு 85000 பவுன்களை நட்ட ஈடாக வாங்கிக்கொடுத்தார். மேலும் அம்பாய்னுவில் கொலையுண்ட ஆங்கிலேயரின் பின்வழியினருக்கு டச்சுக்காரர் நட்டஈடு அளிக்குமாறும் செய்தார்.

## இந்தியாவிலும், இலங்கையிலும் டச்சுக்காரர்

டச்சுக்காரர் 1605'ல் மசூலிப்பட்டினத்திலும் ஐந்து ஆண்டுகட்குப்பிறகு பழவேற்காட்டிலும் (புலிக்கட்) வாணிகத் தொழிற்சாலைகளை அமைத்தனர். பின்னைய தொழிற்சாலையை 1612'ல் போர்ச்சுகீசியர் அழித்தனர். ஆகவே அடுத்த ஆண்டில் கெல்டிரியா (Geldria) கோட்டையை டச்சுக்காரர் நிறுவினர். மலாய்தீவுக் குழுவினருக்குத் தேவையான பருத்திச் சரக்குகளைப்பெறுவதே, அவர்களுடைய இந்திய வாணிகத்தின் முக்கிய நோக்கமாகும். கிழக்கிந்தியத்தீவுகளுக்கு அடுத்த படியாகத்தான் அவர்கள் இந்தியாவைக் கருதினர். சூரத்தில் அவர்களது தொழிற்சாலை 1617'ல் அமைந்தது. பின்னர், ஆக்ரா, சின்சுரா (வங்காளத்தில்) முதலிய இடங்களில் டச்சு வாணிகக் களங்களேற்பட்டன. 1638 முதல் 1658வரை உள்ள காலப்பகுதியில் இலங்கையைப் போர்ச்சுகீசியரிடமிருந்து டச்சுக்காரர் கைப்பற்றிக் கெண்டனர். 1658'ல் அவர்கள் தூத்துக்குடியையும், 1659'ல் நாகப்பட்டினத்தையும், 1661'ல் கொல்லத்தையும், 1662'ல் கிராங்கனூரையும், 1663'ல் கொச்சி, கண்ணனூர் ஆகிய இடங்களையும் கைக்கொண்டனர். மலையாளக்கரையிலிருந்த அவர்களுடைய இடங்கள் கொச்சியின் தலைமைக்குட்பட்டன. சோழமண்டலக்கரையில் நாகப்பட்டினமே டச்சுத் தலைநகராயிற்று (1689). 1631 முதல் 1641 வரை பழவேற்காட்டில் வாழ்ந்த ஆப்ரஹாம் ரோஜர் என்ற டச்சு மதபோதகர், பர்த்ருஹரியின் நீதி, வைராக்கிய சதகங்களை மொழிபெயர்த்தார். ஐரோப்பியர் அறிந்த முதல் சமஸ்கிருதக் கவி பர்த்ருஹரியே.

## டச்சுக்காரரின் வெற்றிக்குக் காரணங்கள்

டச்சுக்காரரின் வாணிக முயற்சி தேசியத் தன்மை பொருந்தியதாகும். அதுவே அவர்களுடைய வெற்றிக்கு முதற் காரணமாம். போர்ச்சிகீசியப் பேரரசை அழிப்பது தாம் நடத்திவந்த உரிமைப் போரின் தொடர்ச்சியே என்ற கருத்து அவர்களிடையே நிலவியது. மேலும், வாணிகம், கப்பற்படை, தொழில், பொருளாதாரம், அறிவு ஆற்றல் முதலிய பல துறைகளிலும் ஹாலந்து அதன் பகைவர்களைவிட மிக மிக உயர்ந்த நிலையிலிருந்து வந்தது. ஐக்கிய வாணிகக்குழுவின் அமைப்பு அவர்களுக்குக் கிழக்கில் வலிமை வாய்ந்த நிலையைக் கொடுத்தது. தொடக்கம் முதல் அவர்கள், தமது குறிக்கோள், முறைகள் முதலியவற்றைத் தெளிவாக உருவாக்கி வந்தனர். "டச்சு அல்புகர்க்" எனப் புகழ்பெறும் கோயன் என்பாரும் வான் டைமெனும் ஆற்றிய அருஞ் செயல்களும் அவர்களுடைய முன்னேற்றத்திற்குரிய காரணங்களாம். மலாய் தீவுக்குழுவில் டச்சுக்காரரை எதிர்க்கக்கூடிய வலிமையுள்ள உள்நாட்டு அரசு எதுவுமில்லை. தவிர போர்ச்சுகீசியரின்கீழ்த் துயருற்றுவந்த மக்கள், டச்சுக்காரரை விருப்பத்துடன் வரவேற்றனர். போர்ச்சுகீசியரும் மிகவும் தளர்ச்சியடைந்த நிலையிலிருந்தனர். ஆங்கிலேய வணிகக் குழுவின் எதிர்ப்பும் வலிமை வாய்ந்ததாக இல்லை. அக் குழுவுக்கு இங்கிலாந்து மன்னரின் உதவியோ அல்லது மக்களின் உதவியோ கிடையாது. இங்கிலாந்தில் ஸ்டூவர்ட் குல ஆட்சியின் முற்பகுதியில் அந்நாட்டின் வெளித்துறைக் கொள்கை கிழக்கிந்திய வணிகக்குழுவுக்கு இடையூறு விளைவிப்பதாகவே இருந்தது. ஆங்கிலேயர் தமது அரசருடன் போராடி வந்தனர். அரசரால் அமைக்கப்பட்ட வாணிகக் குழுவை ஆதரிக்க அவர்கள் விரும்பவில்லை. மேலும் நறுமணப் பொருள்களை இங்கிலாந்தில் இறக்குமதிசெய்தும் பொன்னையும் வெள்ளியையும் அந்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்தும் வந்த வாணிகர் குழுவின் செயல் தீமைபயக்கக்கூடியது என்ற கருத்து (இங்கிலாந்தில்) நிலவியது. ஆகவே ஆங்கிலேயரின் கீழ்நாட்டு வாணிகக் கூட்டுக்குழுவுக்குப்பல இடையூறுகளேற்பட்டிருந்தன. அச்சூழ்நிலை டச்சுக்காரருக்கு நல் வாய்ப்பாக அமைந்தது.

# பகுதி 3

## இந்தியாவில் டேனரும் பிரெஞ்சியரும்

தரங்கம்பாடியும் செராம்பூரும். 1616'ல் அமைந்த டேனரின் கிழக்கிந்திய வாணிகக்குழு, தஞ்சாவூரின் இரகு நாத நாயக்கரின் ஆதரவைப் பெற்றது. தரங்கம்பாடியில் டேனர் குடியேற அவர் உரிமை அளித்தார் (1620). கிரேப் (Crape) என்ற டேனர் தரங்கம்பாடியைப் பெற்ருர். அவருக்குப்பின் வந்த கெட்டே (Gedde) என்பார், நாயக்க ருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். டேன்ஸ்பர்க் என்ற கோட்டைக்கு அடிகோலியவரும் அவரே.[1] மலாய் தீவுக்கூட்டத்திற்கு இந்தியச் சரக்குகளை எடுத்துச் செல்வதும் அங்கிருந்து நறுமணப் பொருள்களைக் கொண்டுவருவதுமே டேனர் கூட்டுக்குழுவின் முக்கிய செயலாயிருந்தது. வரை யறைக்குட்பட்டிருந்த அவர்கள் வாணிகம் செழிப்புறவில்லை. டேனரின் ஊக்கமும் குறைந்தது. பாலாசோரிலிருந்த (ஓரிஸ்ஸா) டேனர் தொழிற்சாலையை 1642'ல் உள்நாட்டு ஆட்சித்தலைவர் அழித்துவிட்டார். 1676'ல் செராம்பூரில் (ஹௌராவுக்கும் ஹூக்ளிக்குமிடையில்) ஒரு தொழிற்சாலையை டேனர் அமைத்தனர். ஆனல் ஆங்கிலேயர் இந்நாட்டில் சிறப்பு எய்தவே, அவர்களிடம் 1845'ல் தரங்கம்பாடி, செராம்பூர், பாலாசோரில் ஒருபகுதி ஆகியனவற்றை $12\frac{1}{2}$-லட்ச ரூபாய்க்கு டேனர் விற்றுவிட்டனர்.

புதுச்சேரியும் சந்திரநாகூரும். பிரான்ஸில் XIV'ம் லூயியின் ஆட்சிக்காலத்தில் அமைச்சராயிருந்த கோல்பர்ட்டின் முயற்சியின் விளைவாகச்சிறப்பு வாய்ந்த பிரெஞ்சு கிழக்கிந்திய வாணிகக் கூட்டுக்குழு (கம்பெனி) 1664'ல் ஏற்பட்டது. 1668'ல் சூரத்திலும், அடுத்த ஆண்டில் மசூலிப்பட்டினத் திலும் பிறகு பாண்டமிலும் (Bantam, ஜாவாவில்) பிரெஞ்சுத் தொழிற்சாலைகள் தோன்றின. டச்சுக்காரருக்கும் பிரெஞ்சிய ருக்கும் போட்டி ஏற்பட்டது. 1674'ல் மார்த்தின் என்ற

1. J. F. Fenger. History of the Tranquebar Mission (1842) Edition of 1906, p. 5

பிரெஞ்சுத்தலைவர், ஷெர்கான்லோடியிடம் ஒரு நிலப்பகுதியைப் பெற்று அங்கே புதுச்சேரி என வழங்கும் நகரைத்தோற்று வித்தார். சிவாஜி, 1677'ல் சோழமண்டலக்கரையில் படையெடுத்து வந்தபொழுது அவர் மார்த்தினை, நடுநிலைக்கொள்கையைப்பின்பற்றுமாறு செய்தார். மராட்டிய அலுவலாளர்கள் புதுச்சேரி மக்களுக்கு இடையூறு தந்து அவர்களிடமிருந்து செல்வத்தைப் பெற்றனர்; புதுச்சேரியின் வாணிகப்பெருக்கத்திற்காக மார்த்தின் மிகுதியாக உழைத்தார். ஏறத்தாழ 1690'ல் சந்திரநாகூரில் ஒரு பிரெஞ்சு தொழிற்சாலை ஏற்பட்டது. 1693'ல் டச்சுக்காரர் புதுச்சேரியைக் கைப்பற்றிக் கொண்டனர். 1699'ல் தான், பிரெஞ்சியர் அதை மீட்டுக் கொள்ள முடிந்தது. தாய்நாட்டின் உதவியின்றியே, பல்வேறு இடையூறுகளையும் பொருட்படுத்தாது, மார்த்தின் புதுச்சேரியை ஒரு சிறந்த குடியேற்றமாக்கினர். 40,000 மக்கள் அங்கே வாழ்ந்தனர். சூரத், மசூலிப்பட்டினம், பாண்டம் (Bantam) ஆகியனவற்றை பிரெஞ்சியர் இழந்தனர். 38 ஆண்டுகள் தமது நாட்டுக்காக இந்தியாவில் அரிய பணிகளாற்றிய மார்த்தின் 1706'ம் ஆண்டின் முடிவில் இறந்தார். பின்வந்த தியூப்ளேயின் திட்டங்களின் சிறப்பை, மார்த்தின் முன்கூட்டியே உணர்ந்திருந்தாரென்று கூறப்படுகிறது. 1706 முதல் 1720 வரை இந்நாட்டில் பிரெஞ்சியரின் முன்னேற்றம் தடையுற்றிருந்தது.

## பகுதி 4

## ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கூட்டுக்குழுவின் (கம்பெனி) ஏற்றத்தாழ்வுகள்

**1600, 1609'ம் ஆண்டுகளின் உரிமைப் பத்திரங்கள்.** கீழ்நாட்டு வாணிகத்துறையில் ஆங்கிலேயரின் அக்கரையை ஓரளவு முன்னரே பார்த்தோம். கோவாவில் வாழ்ந்து வந்த ஆங்கிலேய ஜெசூட் பாதிரியாரான தாமஸ் ஸ்டீபன்ஸ் 1591'ல் எழுதிய முடங்கல்களும், டச்சுக்காரரின் சில வெளியீடுகளும், கிழக்குநாட்டு வாணிகத்தில் ஆங்கிலேயருக்கிருந்த ஊக்கத்தைப்பெருக்கின. அதன் விளைவாக 1600'ம்

ஆண்டு டிசம்பர் மாதம் 31'ம் நாள், லண்டன் நகர வணிகர் அந்நகரசபைத் தலைவரது தலைமையில் கூடிக் கிழக்கிந்திய வாணிகக் கூட்டுக்குழுவை நிறுவி, I'ம் எலிஸபெத் அரசி (1558 — 1603) யாரிடமிருந்து இந்தியாவோடு வாணிகஞ் செய்யும் தனியுரிமையைப் பெற்றனர். நன்னம்பிக்கைமுனை யிலிருந்து மெகல்லன் சலசந்திவரை பதினைந்து ஆண்டுகட்கு வாணிக உரிமை அளிக்கும் பத்திரத்தை அக்குழுவினர் பெற்றனர். ஆனால் இரண்டு ஆண்டுக்கால முன்னறிவிப் புடன் உரிமை நீக்கப்படலாமென்பது பத்திரத்தில் குறிப்பிடப் பெற்றிருந்தது. ஆட்சித்தலைவர், துணைத்தலைவர், பொருளாளர் ஆகியோரடங்கிய ஆட்சி அமைப்பு முறை ஏற்பட்டது. 24 உறுப்பினரடங்கிய குழு ஒன்றையும் அரசர் நியமித்தார். இதுவே பிற்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 24 உறுப்பின ரடங்கிய இயக்குநர் சபை (Court of Directors) யாக மாறி யது. வாணிகக்குழுவின் பங்கு ஒன்றின் மதிப்பு 500 பவுன்கள். பங்குதாரர்களும் சாதாரண உறுப்பினர்களுமடங்கிய பொதுச்சபை (பிற்காலத்திய உரிமையாளர் சபை—(Court of Proprietors), மேலே கூறிய 24 பேரடங்கிய குழுவைக் கட்டுப்படுத்தி வந்தது. 1609'ல் I'ம் ஜேம்ஸ் புதிய உரிமைப்பத்திரத்தை வழங்கினார். அது வாணிகக்குழுவின் நிலையை மேலும் வலிமைப்படுத்தியது. வாணிகத் தனி உரிமைக்குக் காலவரையறை எதையும் அது குறிப்பிடவில்லை. ஆனால், இந்திய வாணிகம் இங்கிலாந்துக்கு நன்மையை அளிக்காவிட்டால் மூன்று ஆண்டுக்கால முன்னறிவிப்புடன் உரிமைகள் யாவும் நீக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது.

வாணிகமுறை. தொடக்கத்தில் வாணிகக்குழுவின் தனி உறுப்பினர்கள் சிறு கூட்டங்களாகச் சேர்ந்துகொண்டு நறு மணப்பொருள்கள் விளையும் தீவுகளுக்குச் செல்லலாயினர். ஒரு வாணிகக் கூட்டத்தினர் திரும்பியதும் மற்றொரு கூட்டம் அமைக்கப்பட்டது. இவ்வாறு மூன்றும் முறை கடற்பயணம் செய்தவர்களின் கப்பல்களே இந்தியாவின் கடற்கரையில் இறங் கின (1608). இத்தகைய தனிப்பயணங்கள் 1600 முதல் 1612 வரை நடந்தன. ஒவ்வொரு பயணம் முடிந்ததும்,

பணம் கொடுத்து உதவியவர்கள் தமக்கிடையே இலாபத்தைப் பங்கிட்டுக் கொண்டனர். இம்முறையில் பல குறைபாடுகள் புலப்படலாயின. போட்டிகள் மிகுந்தன. ஒரு பயணத்தில் கிடைத்த இலாபத்தை மற்றொரு பயணத்தில் கிடைத்த நட்டத்திற்கு ஈடுசெய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. போதுமான மூலதனம் கிடைக்கவில்லை. ஆகவே 1612 முதல் 1661 வரை உள்ள காலப்பகுதியில் "கூட்டுப் பங்குகள் முறை" கையாளப்பட்டது. மூன்று அல்லது நான்கு பயணங்கள் செய்யும்பொருட்டுப் பங்குகளைச் சேர்த்தனர். ஆயினும் தனிப்பயண முறை முழுவதும் நின்றுவிடவில்லை. 1661'ம் ஆண்டில்தான் தனிப்பயணமுறை மறைந்தது; இக்காலமுறையில் நிலையான பங்கு முதலீட்டுக்குழு (Permanent Joint-Stock) செயலாற்றத் தொடங்கியது.

ஸ்டுவர்ட்குல ஆட்சியின் முற்பகுதி. I'ஆம் ஜேம்ஸ் (1603—'25) I'ஆம் சார்லஸ் (1625—'49) ஆட்சிக்காலங்களில் கிழக்கிந்திய வாணிகக்குழுவின் நிலைமை வலுவற்றிருந்தது. தனி உரிமைகளைக்கண்டு இங்கிலாந்தின் பொதுமக்களே வெறுப்புக்கொண்டிருந்தனர். அரசரின் தனிச்சிறப்பு உரிமைகளின் விளைவாகத் தோன்றிய வாணிகக் குழுவிடம் அரசரை எதிர்த்து வந்த மக்களுக்கு நம்பிக்கை இல்லை. வாணிகக் குழுவினர் மேற்கொண்டிருந்த முறைகளிற் பலவற்றை — எடுத்துக்காட்டாக இங்கிலாந்திலிருந்து பொன்னை ஏற்றுமதி செய்து நாட்டின் செல்வத்தைக் குறைத்தல் போல்வன — மக்கள் எதிர்த்தனர். ஆதலால் வாணிகக்குழுவினர், அரசரின் உதவியையே நம்பியிருக்கவேண்டியதாயிற்று. ஆனால் I'ஆம் ஜேம்சும், I'ஆம் சார்லசும் தம்முடைய தனி நன்மைக்காக வாணிகக்குழுவைப் பயன்படுத்திக்கொண்டிருந்தனர். அவர்கள் பின்பற்றிய வெளித்துறைக் கொள்கையும் வாணிகக்குழுவுக்குத் தீமை பயப்பதாக இருந்தது. மேலும், சர்வில்லியம் கோர்ட்டன் ஒரு சங்கத்தை அமைத்து, 1635'ல் கீழ்நாடுகளில் வாணிகம் செய்வதற்கான உரிமையை அரசரிடமிருந்து பெற்றார். அக்கழகத்தின் செயல்கள் பழைய வாணிகக் குழுவை அழிக்கும் வகையில் அமைந்தன. 1649'ல் தான் இரு கூட்டத்தினருக்குமிடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டது.

**கிராம்வெல் ஆட்சிக்காலம்.** கிராம்வெல் (1653—8) இந்திய வாணிகத்தைத் தேசிய உடைமையாகக் கருதினர். அவருடைய அரசியல் ஆற்றலும் சிறப்பு வாய்ந்த வெளிநாட்டுக் கொள்கையும் கிழக்கிந்திய வாணிகக் குழுவின் இடையூறுகளை ஒருவாறு நீக்கின. அவர் முயற்சிகளால்தான் ஆங்கிலேய வாணிகக் குழுவினர் அம்பாய்னுப் படுகொலைக்கு ஈடு பெற்றனர். அவர் போர்ச்சுகலுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி போர்ச்சுகீசியர் கிழக்கில் தம்வசமுள்ள இடங்களில் ஆங்கிலேயர் வாழவும் தடையின்றி வாணிகஞ் செய்யவும் இணங்கினர். கிராம்வெல், இந்திய வாணிகத்தை ஒரு ஐக்கிய நிரந்தரக் கூட்டுப்பங்குடைய தனி உரிமைக்குழுதான் நடத்தவேண்டுமென்று முடிவு செய்து அக்குழுவுக்குச் சிறந்த உரிமைப் பத்திரமொன்றை 1657'ல் அளித்தார். அப்பத்திரம் அவ்வாணிகக் குழுவுக்கு புத்துருவையும் கொடுத்தது. "இடைக்கால வாணிகச் சங்கத்தினின்று சிதறிப்போன ஒருசிறு பகுதி என்னலாம்படிகிடந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கூட்டுக் குழு, அவரது பத்திரத்தால், இக்காலத்தில் கூட்டுப் பங்கு முறையில் நடைபெறும் குழுக்களுக்கு முன்னேடியாய் இலங்கியது."[1]

**ஸ்டூவர்ட்குல ஆட்சியின் பிற்பகுதி.** II'ம் சார்லஸ் மன்னர் (1660—85) வாணிகக் கூட்டுக்குழுவுக்கு ஆதரவு அளித்தார். 1661, 1669, 1677, 1683 ஆகிய ஆண்டுகளில் அவர் தந்த உரிமைப் பத்திரங்களும், II'ம் ஜேம்ஸ் (1685-8) 1686'ல் கொடுத்த பட்டயமும், கிழக்கிந்திய வாணிகக் கூட்டுக்குழுவுக்குச் சிறப்பான நிலையை அளித்தன. வாணிகமும் செழிப்புற்றோங்கியது. பங்குதாரர்கள் ஆண்டுக்கு 25 சதவீதம் பங்கு ஊதியம் பெற்றனர்.

கிழக்கிந்திய வாணிகக்குழுவின் வாணிகம் பெருகவே அதற்குப்பல பகைவர்கள் தோன்றினர். பிறவணிகர்கள் அக்குழுவின் மேல் பொறாமையுற்றனர். கள்ளத்தனமாக வாணிகம் செய்யவும் சிலர் தலைப்பட்டனர். ஆங்கிலெயர் குடியேறி

---

1. Hunter, A History of British India, II, p. 141

யிருந்த இடங்களில் சிலர்குழப்பம்விளைத்தனர். வாணிகத்தனி உரிமை எந்த சட்டத்தினடியாகத் தோன்றியது? என்று கள்ள வணிகர் கூப்பாடு போட்டனர். 1681 முதல் 1687 வரை ஆட்சித்தலைவராக இருந்த (Governor) சர் ஜோசியா சைல்டும் சர்ஜான் சைல்டும் (பம்பாயில் ஆட்சித் தலைவர் 1682-90) பகைவர்களை அடக்கும் முயற்சியிலீடுபட்டதால் எதிர்ப்பு மேலும் வலிமையடைந்தது. வாணிகக் குழுவினர் அவுரங்கசீபுடன் போரிட்டு 1690'ல் அப்பேரரசருக்கு அடங்கவேண்டியிருந்ததால், அத்தோல்வியை எதிர்ப்பாளர் தமது நலனுக்குப் பயன்படுத்திக்கொண்டனர். பழைய வாணிகக்குழு (லண்டன் குழு) வுக்கு வலிமையான எதிர்ப்பு ஏற்பட்டு வந்தது. அதன் செயல்கள் இங்கிலாந்தின் பொருளாதார வளர்ச்சியைத்தடை செய்யுமென்ற (தவறான) கருத்தைப்பலர் உறுதியாகப் பிரசாரம் செய்து வந்தனர். மேலும் அக்குழுவினால் இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்பட்டு வந்த காப்பிக் கொட்டை பயனற்ற பொருள் என்றும் கூறிவந்தனர். பலர் குழுவின் அமைப்புமுறையைக் குறைகூறினர். பகைவர்கள் 1690'ல் டௌகேட் (Dowgate) சங்கத்தை அமைத்துச் சட்டசபையின் உதவியை நாடினர். சர் ஜோசியாசைல்ட் கைக்கூலி கொடுத்து, பழைய வாணிகக்குழுவுக்கு 1693'ல் புதிய உரிமைப் பத்திரமொன்றை அரசரிடமிருந்து பெற்றார். ஆனால் இங்கிலாந்தின் சட்டசபை, "கிழக்கித்தியத் தீவுகளில் வாணிகம் செய்ய ஆங்கிலேயர் யாவருக்கும் உரிமை உண்டு; சட்டசபைதான் உரிமையைக் கட்டுப்படுத்த முடியும்" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. சர் ஜோசியா சைல்டின் முயற்சி வீணாகியது. 1695'ல் பழைய வாணிகக் குழுவின் சீர்கேடுகள் வெளிப்படுத்தப்பெற்றன. 1698'ல் டௌகேட் சங்கம் ஒரு கூட்டமைப்பாக மாறி பொதுச்சங்கம் (General Society) என்ற பெயரைப்பெற்றது. அதில் பங்குதாரர்களாகச் சேர்ந்தவர்களில் பெரும்பான்மையினர் சேர்ந்து பங்கு முதலீட்டுக் கூட்டுக்குழு (Joint Stock Company) வை அமைத்தனர். கிழக்கிந்தியத் தீவுகளுடன் வாணிகம் செய்யும் ஆங்கிலேயக்கூட்டுக்குழுஎன்று அரசியலார் அதைஏற்றுக்கொண்டனர். பழைய வாணிகக்குழுவுக்கும் புதிய குழுவுக்குமிடையே

போட்டிகளேற்பட்டன. இரு சாராருக்கும் அதனல் இடையூறுகள் விளைந்தன. ஆதலால் 1702'ல் அவ்விரு கூட்டத்தினரும் ஒரு உடன்பாட்டிற்கு வந்தனர். அவ்வுடன்பாடு 1708'ம் ஆண்டு பார்லிமெண்ட் சட்டத்தினுல் உறுதியாகியது. இணைப்புபற்றிய விவரங்களை கொடால்பின் பிரபு (Godolphin) என்பார் தயாரித்தார். அதன்படி 1709'ல் "கிழக்கிந்திய நாடுகளுடன் வாணிகஞ் செய்யும் ஆங்கிலேய வணிகரின் கூட்டுக்குழு" உருவாகியது. 1600'ம் ஆண்டில் தோன்றிய வாணிகக்குழுவின் ஏற்றத்தாழ்வுகள் தாய்நாட்டில் முடிவுற்றன.

பாண்டம் (Bantam). ஆங்கிலேய வாணிகக் கூட்டுக்குழு கிழக்கு நோக்கிச் செய்த முதல் கடற்பயணத்தின் (1601—'3) விளைவாக பாண்டம் (Bantam) நகரில் (ஜாவாவில்) தொழிற்சாலை ஏற்பட்டது. டச்சுக்காரருக்கும் அக்குழுவினருக்குமேற்பட்ட பகைமை அம்பாய்னுப் படுகொலைக்குக் காரணமாயிற்று (1623). பின்னர் ஆங்கிலேய வணிகர் இந்தியாவை நோக்கித்தம் கருத்தைச்செலுத்தலாயினர். பாண்டமும் சுமத்திராவிலுள்ள பென்கூலன் (Bencoolen) என்ற இடமும் முறையே 1682, 1824, ஆகிய ஆண்டுகள் வரை ஆங்கிலேயக் குடியேற்றங்களாக இருந்தன.

## பகுதி 5

### சூரத்; பம்பாய்

சூரத். வில்லியம் ஹாக்கின்ஸ், ஜஹாங்கீர் காலத்தில் வாணிக உரிமைகளைப் பெறும்பொருட்டு ஆக்ராவுக்குச் சென்று 1609 முதல் 1611 வரை அங்கேயே தங்கியிருந்தார். ஆனுல் சூரத்தில் ஆங்கிலேயர் வாணிகத் தொழிற்சாலையை அமைத்துக்கொள்வதற்காக அவர் விடுத்தவேண்டுகோளைப் பேரரசர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனுல் 1612'ல் காப்டன் பெஸ்ட் போர்ச்சுகீசியரைக் கடற்போரில் வென்றபின் நிலைமாறியது. அடுத்த ஆண்டில் சூரத்தில் ஆங்கிலேயர் வாணிகத் தொழிற்சாலையை அமைத்தனர். 1615'ல் டௌண்டன் (Downton) என்ற ஆங்கிலக் கப்பற்படைத் தலைவர்

போர்ச்சுகீசியக் கடற்படையை முறியடித்தார். அதனால் டையுவிலிருந்து கோவாவுக்குப் போக்கு வரவு தடையுற்றது. அவ்வாறிருக்க, 1616'ல் 1'ஆம் ஜேம்ஸின் அரசியல் தூதுவராக இந்தியாவுக்கு வந்த ஸர் தாமஸ் ரோ 1618 வரை முகலாய அரச அவையில் தங்கியிருந்தார். ஆங்கிலேயரின் வாணிகத்திற்கான சில உரிமைகளையும் அவர் பெற்றார். அவர் தாம் தொடர்புகொண்ட யாவரிடமும் போற்றத்தக்க முறையில் பழகி ஆங்கிலேயரின் பெருமை உயர்வதற்கான வழிகளை வகுத்தார். சர் ஜோசியா சைல்ட், ஸர் ஜான் சைல்ட் ஆகியோர் காலம் வரை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கூட்டுக்குழு பின்பற்றிவந்த கொள்கையை உருவாக்கிய பெருமை ரோவைச்சாரும். "கடல் வாணிகத்தில் கருத்தைச் செலுத்தி நற்பயன்பெற முயலுங்கள்; உள்நாட்டில் போர் ஏற்படும் வகையில் நீங்கள் நடந்துகொண்டால் அது தவறாகும்" என்று ஆங்கிலேய வணிகருக்கு அவர் அறிவுரை கூறினார். ரோவின் அறிவுத்திறமையால் முகலாயர் ஆங்கிலேயரிடம் வைத்திருந்த மதிப்பு பன்மடங்கு பெருகியது. புரோச், ஆமதாபாத், ஆக்ரா முதலிய இடங்களில் ஏற்பட்ட ஆங்கிலேயத்தொழிற்சாலைகளை சூரத் நிலையம் மேற்பார்வை செய்து வந்தது. சூரத்தின் ஆங்கிலேயத் தலைவரின் அதிகாரங்கள் பெருகின. 1620'ல் பாரசீகக் கடலோரத்தில் ஆங்கிலேயர் ஒரு கப்பற்படையுடன் சென்று பாரசீகஷா, ஆர்மஸ்ஸைப் போர்ச்சுகீசியரிடமிருந்து கைப்பற்றிக்கொள்ள உதவினர். இவையாவும் ஆங்கிலக் கூட்டுக்குழுவின் வாணிகத்தைப் பெருகச்செய்தன. ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் இணைந்து போர்ச்சுகீசியரை 1625'ல் ஆர்மஸ்ஸுக்குஅருகிலும் 1626'ல் பம்பாயிலும் முறியடித்தனர். பம்பாயில் போர்ச்சுகீசியரின் குடியேற்றம் அழிந்தது. இறுதியாக 1630'ல் சூரத்திற்கு அருகில் உள்ள ஸ்வாலி நிலப்பகுதியில் மீண்டும் போர்ச்சுகீசியர் தோல்வியுற்றனர். ஐந்து ஆண்டுகட்குப் பிறகு, சூரத் தலைவரான வில்லியம் மெத்வோல்டு கோவாவுடன் ஒரு அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார். ஆங்கிலேயரின் வாணிகம் சிந்துநாட்டுக்கும் பரவியது. கோர்ட்டன் சங்கத்தார் இராசபுரி, கார்வார், பட்கல் ஆகிய இடங்களில். தொழிற்சாலைகளை அமைத்தனர்.

பம்பாய். இங்கிலாந்தின் மன்னர் II'ஆம் சார்லஸ் போர்ச்சுகீசிய மன்னரின் உடன்பிறந்தாளை மணந்துகொண்ட பொழுது அவருக்குப் பெண்வழிச்சீராக பம்பாய் கிடைத்தது. (1661). அவர் அதை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கூட்டுக்குழுவுக்குக்கொடுத்து (1668) ஆண்டுக்கு 10-பவுன் வாடகையைப் பெற்றுக்கொண்டார். சூரத்தின் தலைவரும் பம்பாயின் ஆட்சித் தலைவருமான (1669—77) கெரால்ட் ஆங்கியர் (Gerald Aungier) பம்பாய் அமைந்துள்ள இடத்தின் சிறப்பை நன்கு உணர்ந்து அதன் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்தார். அதன் மக்கட்டொகை மூன்று மடங்காகப் பெருகிற்று (60,000). பம்பாயின் உண்மைத்தாபகர் அவரே என்று கூறலாம். சிவாஜி ஆங்கிலேய வணிகக்கூட்டுக்குழுவினரிடம் கொண்டிருந்த தொடர்பைப்பற்றியும் 1679'ல் அவர்களிடை ஏற்பட்ட கடற்போரைப்பற்றியும் முன்னர்க் குறிப்பிட்டுள்ளோம். சூரத்தின் தலைவராகவும் பம்பாயின் ஆட்சித் தலைவராகவுமிருந்த சர்ஜான் சைல்ட் (1682—'90) போர்த்தொடர்பான நடவடிக்கைகளில் நம்பிக்கைகொண்டு செயலாற்றினர். இவரும் ஆட்சித்தலைவர் சர்ஜோசியாசைல்டும் கிழக்கிந்தியக் கூட்டுக்குழுவின் நிலையை வலிமைப்படுத்திக் கொள்ளப்பல முயற்சிகளைச் செய்துவந்தனர். பம்பாயிலும், சென்னைப்பட்டினத்திலும் சிறந்த அரண்களை அமைக்க அவர்கள் முயன்றனர். சென்னையிலும், வங்காளத்திலும் கூட்டுக்குழுவின் செயல்களைக் கட்டுப்படுத்தும் சிறப்பான பல அதிகாரங்களை சர்ஜான் பெற்றிருந்தார். 1687'ல் பம்பாய், மேற்கு இந்தியாவில் கூட்டுக்குழுவின் தலைநகராகியது. அதே ஆண்டில் சென்னையிலிருந்த ஆங்கிலேயர் தாய்நாட்டிலிருந்து ஒரு முடங்கலைப் பெற்றனர். அதில் இந்தியாவில் என்றும் நிலைத்திருக்கக்கூடிய ஒரு இராச்சியத்தை அமைப்பதே கூட்டுக்குழுவின் நோக்கம் என்று உள்ள குறிப்பு நோக்கத் தக்கது. சர் ஜோசியா சைல்ட் பின்பற்றிவந்த புதிய கொள்கையை அக்குறிப்பே காட்டுகிறது. வங்காளத்திலும், பம்பாயிலும் 1686 முதல் 1690 வரை முகலாயருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே நிகழ்ந்த போரட்டத்தைப்பற்றி முன்னர்க் குறிப்பிட்டோம். அப்போராட்டம் ஆங்கிலேயருக்குத்

தீமையையே விளைவித்தது. அதன் பின்னரே அவர்கள் ஸர் தாமஸ் ரோ வகுத்த கொள்கையினின்றும் தாம் வழுவியது தவறு என்பதை உணர்ந்து வருந்தினர். இந்தியக்கடற் பகுதிகளில் ஆங்கிலேயக்கடற் கொள்ளைக்காரர்கள் கொடுமைகளை இழைத்து வந்தனர். அதற்குக் கிழக்கிந்தியக் கூட்டுக்குழுவே காரணமென்று கருதிய முகலாயர், அக்குழுவினருக்கு இடையூறுகள் விளைவிக்கலாயினர். 1683'ல் தெளிச்சேரியிலும் (மலபார் கடற்கரை) 1694'ல் அஞ்செங்கோவிலும் (திருவனந்தபுரத்துக்கருகில்) ஆங்கிலேயத் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. 17'ம் நூற்றாண்டின் முடிவில் பழைய கூட்டுக்குழுவுக்கும் புதிய குழுவுக்குமிடையே போராட்டம் விளைந்து வந்தது.

## பகுதி 6

### செயிண்ட் ஜார்ஜ் கோட்டை; வில்லியம் கோட்டை

செயிண்ட்ஜார்ஜ் கோட்டை. கிழக்குக் கரையில் முதன் முதலேற்பட்ட ஆங்கிலேயப் பண்டகசாலை மசூலிப்பட்டினத்திலாகும் (1611). 1626'ல் அவர்கள் ஆர்மகானிலும் குடியேறினர். மசூலிப்பட்டினத்து வாணிகக் குழுவின் ஆலோசனைச் சபை உறுப்பினரான பிரான்ஸிஸ் டே (Day) 1639'ல் சென்னைப்பட்டினத்துக் கருகில் ஒரு நிலப்பகுதியைப் பெற்று அங்கே ஒரு கோட்டை கட்டத் தொடங்கினர். ஆர்மகானிலிருந்ததைவிடப் புதிய பகுதியில் துணி வகைகள் குறைந்த விலைக்கு ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. ஆர்மகானிலிருந்த தொழிற்சாலை புதிய கோட்டைக்கு மாற்றப்பட்டது (1640). 1641'ல் கோட்டையை முழுவதும் கட்டி முடித்தனர். இங்கிலாந்திலிருந்த ஜார்ஜ் துறவியின் பெயரை அக்கோட்டை பெற்றது. டேயின் செயலைத் தாய்நாட்டு அரசியலார் விரும்பி ஆதரிக்கவில்லை. எனினும், சோழமண்டலக் கரையிலிருந்த ஆங்கிலேயரின் தலைமை அலுவலகமாகச் செயின்ட் ஜார்ஜ்கோட்டை விளங்கத் தொடங்கியது. கோல்கொண்டாவின் தலைமை அமைச்சரான மீர்ஜும்லா, 1647'ல் சென்னைப் பட்டினத்தின் அருகிலுள்ள சில இடங்களை வென்றார். ஆனால்

ஆங்கிலேயரின் உரிமைகளை அவர் உறுதிப்படுத்தினர். ஐந்து ஆண்டுகட்குப் பிறகு கூட்டுக்குழுவின் கிழக்குநாட்டுக் குடியேற்றப் பகுதிகள் யாவற்றிற்கும் தலைமை அலுவலகமாகச் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை விளங்கத் தொடங்கியது. 1655'ல் அந்நிலை மாறியபோதிலும் பிறகு, 1661'ல் மீண்டும் ஜார்ஜ் கோட்டை பழைய சிறப்பைப்பெற்றது. ஜார்ஜ் பாக்ஸ் கிராப்ட் (George Foxcroft) என்பாரே செயிண்ட் ஜார்ஜ்கோட்டையின் முதல் ஆட்சித் தலைவராக (Governor) அமர்த்தப் பெற்றார். அதற்குமுன் அவருடைய பதவிப்பெயர் ஏஜண்டு அதாவது முகவர் (Agent) என்பதாயிருந்தது. சுமார் 1670'ல் சென்னையின் மக்கள் தொகை ஏறத்தாழ 40,000. சிவாஜி, சோழமண்டலக் கரையில் படையெடுத்து வந்தகாலத்தில் ஆங்கிலேயத் தலைவர் வில்லியம் லாங்கோர்ன் (1672—8) அவருடன் நட்பு உறவுகொண்டார். அவரும் அவருக்குப் பின்வந்த ஆட்சித் தலைவரான சர் ஸ்ட்ரேன்ஷாம் மாஸ்டர், (Streynsham Master) (1678—81) என்பாரும் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை வலுப்படுத்தினர். பின்னவர், நீதி வழங்கும் முறையைத் திருத்தி அமைத்தார். ஆங்கிலேயர், 1681'ல் கூடலூர், பரங்கிப்பேட்டையிலும், 1682'ல் விசாகப்பட்டினத்திலும் குடியேறினர். 1688'ல் சென்னையில் ஒரு நகராண்மைக் கழகம் அமைந்தது. மேயர் என்னும் தலைவரும் பன்னிரண்டு நகர மூப்பர்களும் (Aldermen) நகரச் செய்திகளை மேற்பார்வை செய்யத் தொடங்கினர். முகலாயர், கோல்கொண்டாவை வென்ற பிறகு 1690'ல் ஆங்கிலேயரின் உரிமைகளை முகலாயத் தளபதி உறுதிப்படுத்தினர். அவ்வாண்டிலேயே கூடலூருக் கருகில் அவர்கள் செயிண்ட் டேவிட் கோட்டையைக்கட்டிக்கொண்டனர், 1693'ல் மூன்று ஊர்கள் சென்னை நகருடன் சேர்க்கப்பட்டன. தாமஸ் பிட் (Pitt-1698—1709) மேலும் ஐந்து ஊர்களைச் சேர்த்தார். பழைய கூட்டுக் குழுவுக்கும் புதிய கூட்டுக் குழுவுக்கும் இடையே ஏற்பட்ட போராட்டத்தினால் சென்னை நகருக்கும் சில இடையூறுகளேற்பட்டன.

**வில்லியம் கோட்டை.** ஆங்கிலேயர், 1633'ல் ஹரிஹர்பூர், பாலாசோர் ஆகிய இடங்களிலும் (ஒரிஸ்ஸா)

1651'ல் ஹுக்ளியிலும், பிறகு பாட்ன, காசிம்பஸார் (வங்காளம்) ஆகிய இடங்களிலும், 1668'ல் டாக்காவிலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினர். வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா ஆகிய பகுதிகளிலிருந்த ஆங்கிலேயத் தொழிற்சாலைகளுக்குத் தலைமை அலுவலகம் சென்னை நகரில் அமைந்தது (1661). 1686 முதல் 1690 வரை கூட்டுக் குழுவுக்கும் அவுரங்கசீபுக்கு மிடையே ஏற்பட்ட போராட்டத்தைப் பற்றி முன்னரே படித்தோம். 1690'ல் ஜாப் சார்னக் (Job Charnock) என்ற ஆங்கிலேயர் கல்கத்தா நகரை நிறுவினர். 1696'ல் அதைச்சுற்றி அரண்கள் அமைந்தன; இங்கிலாந்தின் அரசர் மூன்ரும் வில்லியத்தின் (1689–1702) பெயர் அந்நகருக்கு இடப்பட்டது. (வில்லியம் கோட்டை). 1700'ல் சர் சார்லஸ் அயர் (Eyre) அதன் முதல் ஆட்சித் தலைவராகப் பணியேற்ருர்.

## பகுதி 7

### இலங்கை

1597'ல் தர்மபாலர் இறந்தபின் போர்ச்சுகீசியர் இலங்கையில் அரசியல் ஆதிக்கத்தைப் பெற்றனர். ஆனல் கண்டி (நடுமாகாணத்திலுள்ளது) யின் அரசரான I-ஆம் விமலதர்ம சூரியர் (1590–1604) அவர்களை எதிர்த்துவந்தார். டச்சுக்காரரின் உதவியைப் பெற அவர் முயன்றது (1602—3) பயனுறவில்லை. அவருக்குப் பிறகு சேனரத் (1604—35) பட்டமேற்ருர். 1611'ல் போர்ச்சுசீசியர் கண்டியைத் தீக்கிரையாக்கினர். சேனரத் டச்சுக்காரரின் உதவியை நாடினர்; மீண்டும் அது பயனுறவில்லை. 1620'ல் டேனர்கள் அவ்வரசருக்கு உதவிபுரியச் சென்று தோல்வியுற்றனர். 1629'ல் மீண்டும் போர்ச்சுகீசியர், கண்டியை அழித்தனர். ஆனல் அடுத்த ஆண்டில் அவர்கள் தோல்வியுற்றனர். 1633'ல் இருசாராரும் அமைதி உடன்படிக்கை செய்துகொண்டனர் சேனரத்தின் மகன் II-ஆம் இராசசின்ஹா (1635—87) டச்சுக்காரரின் உதவியைப் பெற்ருர். டச்சுக்காரர் சில இடங்களைப் போர்ச்சுக்கீசியரிட மிருந்து (கீழ்க்கடலோரத்தில்

வென்றபோதிலும் விரைவான முன்னேற்றம் ஏற்படவில்லை. ஏனெனின், டச்சுக்காரருக்கும் இராசசின்ஹாவுக்கு மிடையே கலகம் மூண்டது. மேலும் 1641 முதல் 1651 வரை ஹாலந்தும் போர்ச்சுகலும் அமைதியான நட்பு உறவு கொண்டிருக்க வேண்டுமென்று இருநாடுகளும் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தன. 1655'ல் டச்சுக்காரர் கொழும்புவை முற்றுகையிட்டு அதை அடுத்த ஆண்டில் கைப்பற்றினர்; 1658'ல் யாழ்ப்பாணத்தையும் அவர்கள் கைக்கொண்டதுடன் போர்ச்சுகீசியப் பகுதிகள் யாவும் டச்சுக்காரரின் கீழ் வந்தன. இராசசின்ஹா, டச்சுக்காரரின் பகைவராயிருந்தார். போர்ச்சுகீசியரை டச்சுக்காரர் வென்றதால் தமக்கு ஏற்பட்ட கேடுகளை நினைந்து அவர் மனம் வருந்தினர். பிரஞ்சுக் கடற்படைத் தலைவர் ஒருவருடன் 1672'ல் அவர் உடன்பாடு செய்துகொள்ள முயன்றும் அதுபயனுறவில்லை. அவருடைய பின்வழியினர் (1687—1707) டச்சுக்காரருடன் சீர்திருந்திய முறையில் தொடர்பு கொண்டிருந்தனர். 1766'ம் ஆண்டில் தான் டச்சுக்காரர் கண்டி அரசருடன் சிறந்ததோர் உடன்படிக்கையைச் செய்து கொண்டனர்.

## பகுதி 8

### பர்மா

1600'ல் பெகு வீழ்ச்சியுற்றவுடன் பர்மாவில் பல சிறு நாடுகள் தோன்றியதால் நாட்டின் ஒற்றுமை குலைந்தது என்று முன்னர்க் குறிப்பிட்டோம். அனௌக்பெட்லூன் (1605—'28) என்ற தௌங்கூ குல மன்னர், மீண்டும் தமது குலத்தைச் சிறப்புறச்செய்ய முயன்று வெற்றிபெற்றார். அவர், 1607'ல் புரோமையும், 1610'ல் தௌங்கூவையும், 1613'ல் சிரியாமையும் (ரங்கூனுக்கருகில்) கைப்பற்றிக் கொண்டார். அவருக்குப்பின்போந்த தாலூன் (1629—'48) 1635'ல் தலைநகரை பெகுவிலிருந்து ஆவாவுக்கு மாற்றினர். அவராட்சியில் அமைதி நிலவியது; பல சீர்திருத்தங்களேற்பட்டன, 1638'ல் ஒரு நிலவரித்திட்டத்தையும் அவ்வரசர் ஏற்படுத்தினர். பர்மாவின் வரலாற்றில் ஏற்பட்ட சிறப்பு

வாய்ந்த முதல் நிலவரித்திட்டம் அதுவே. சுமார் 1627'ல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கூட்டுக் குழுவினர், சிரியாம், ஆவா, பாமோ ஆகிய இடங்களில் கிளை நிலையங்களை ஏற்படுத்தினர்; ஆனல் 1677'ல் அவற்றை மூடிவிட்டனர். 1709'ல் சிரியாம் கிளை நிலையம் மட்டும் செயலாற்றத் தொடங்கியது. ஆனல் அங்கிலேயக் கட்டடங்களை 1743'ல் தென் பர்மாவிலிருந்து சென்ற தலேங் கூட்டத்தினர் அழித்து விட்டனர். மேலும் அக்கூட்டத்தினர் ஆவாவைக் கைப்பற்றிக் கொண்டு 1752'ல் தௌங்கூ குல ஆட்சியை முடிவடையச் செய்தனர்.